தமிழ் இலக்கியங்களில் ஊர்ப் பெயர்கள்



இரண்டாவது பன்னாட்டுக் கருத்தரங்கம்

25 செப்டம்பர் 2011

பதிப்பாசிரியர்கள்

முனைவர்.கு.இராசரத்தினம்

முனைவர்.கே.கண்ணாத்தாள்

முனைவர்.சோ.முத்தமிழ்ச்செல்வன்

வெளியீடு

தமிழ்சக்தி ஆய்வுமன்றம்

2, சுப்பிரமணியபுரம்

வடக்கு விரிவு

காரைக்குடி

தமிழ்த்துறை

தேசியக் கல்லூரி (தன்னாட்சி),

திருச்சிராப்பள்ளி

தமிழ் இலக்கியங்களில் ஊர்ப் பெயர்கள்

இரண்டாவது பன்னாட்டுக் கருத்தரங்கம்

25 செப்டம்பர் 2011

பதிப்பாசிரியர்கள்

முனைவர்.கு.இராசரத்தினம்

முனைவர்.கே.கண்ணாத்தாள்

முனைவர்.சோ.முத்தமிழ்ச்செல்வன்

வெளியீடு

தமிழ்சக்தி ஆய்வுமன்றம்

2, சுப்பிரமணியபுரம்

வடக்கு விரிவு

காரைக்குடி

தமிழ்த்துறை

தேசியக் கல்லூரி (தன்னாட்சி),

திருச்சிராப்பள்ளி

நூலின் பெயர்	:	தமிழ் இலக்கியங்களில் ஊர்ப் பெயர்கள்
பதிப்பாசிரியர்கள்	:	முனைவர் கு. இராசரத்தினம் முனைவர் கே. கண்ணாத்தாள் முனைவர் சோ. முத்தமிழ்ச்செல்வன்
விலை	:	₹. 300
பக்கங்கள்	:	424 + 16
பதிப்பகம்	:	முத்தமிழ்ப் பதிப்பகம் 1/196 H1, குரு காலனி தேவர்குளம் ரோடு சிவகாசி
வெளியீடு	:	1) தமிழ்சக்தி ஆய்வுமன்றம் 2, சுப்பிரமணியபுரம் வடக்கு விரிவு காரைக்குடி 2) தமிழ்த்துறை தேசியக் கல்லூரி (தன்னாட்சி) திருச்சிராப்பள்ளி

பதிப்புரை

"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த குடி தமிழ்க்குடி" என்னும் சிறப்பைப் பெற்ற மொழி, செம்மொழியாம் நம் தமிழ் மொழி. ஒல்காப்புகழ் பெற்ற தொல்காப்பியம் முதலான எண்ணற்ற இலக்கண, இலக்கிய நூல்களை உடையது நம் செம்மொழி. அதனாலே, 'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்' என்று பாரதி கூறியுள்ளார்.

இத்தகைய தமிழ்மொழி, சங்க காலம், அறநெறிக் காலம், காப்பிய காலம், பக்தி இலக்கியக் காலம், சிற்றிலக்கியக் காலம், இக்கால இலக்கியம் எனக் காலந்தோறும் தம்மைப் புதுப்பித்துக் கொண்டு பல்வேறு வளர்ச்சி நிலைகளைக் கண்டுள்ளது. அவ்வகையில், நம் அருந்தமிழ் இலக்கியங்களில் காணலாகும் ஊர்ப் பெயர்கள், அவற்றிற்கான காரண-காரியங்கள், பின்புலங்கள் ஆகியன குறித்து ஆய்வதாக "தமிழ் இலக்கியங்களில் ஊர்ப் பெயர்கள்" என்ற தலைப்பில் ஆய்வு நடைபெறும் இக்காலம், தமிழ்ச் செம்மொழி என்னும் உயர்நிலையை அடைந்துள்ள காலம் ஆகும். அத்துடன் காலஞ்சென்ற தமிழறிஞர் முனைவர் இரா. பாலசுப்பிரமணியன் அவர்களின் படைப்புகளில் காணலாகும் ஊர்ப் பெயர்களை அறியும் முகத்தான பல்வேறு ஆய்வுகளை வெளிக் கொணரும் கட்டுரைகளையும் இந்தப் பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வு நூலில் வெளியிடுவதில் பெருமை கொள்கிறோம்.

இந்தக் கருத்தரங்கை நடத்த வேண்டும் என்ற எங்கள் விருப்பத்திற்கு முழுமையான ஒத்துழைப்பும், நல் ஆசியும் வழங்கி தமிழ்த்துறையின் வளர்ச்சிக்குப் பெருந்துணை புரியும் திருச்சிராப்பள்ளி, தேசியக் கல்லூரியின் நிர்வாகத்தினருக்கு நெஞ்சார்ந்த நன்றி. கருத்தரங்கிற்கு அனைத்து நிலைகளிலும் ஊக்கமூட்டியும் உற்சாகமூட்டியும் உந்து சக்தியாகவும் விளங்கும் கல்லூரியின் முதல்வர் முனைவர் கு. அன்பரசு அவர்களுக்கும் நன்றி. தன்னுடைய இல்லத்து நிகழ்ச்சி இருந்தபோதிலும், இக்கருத்தரங்கும் என் இல்ல நிகழ்ச்சியே எனக் கூறி, அயராது தன்னை ஈடுபடுத்திக் கொண்டு நல்வழிப்படுத்திய தேசியக் கல்லூரித் தமிழாய்வுத் துறைத்தலைவர் முனைவர் கு. இராசரத்தினம் அவர்களுக்கும், அவருக்குப் பக்கபலமாக நின்று தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட தேசியக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர்களுக்கும் எங்களது நெஞ்சம் நிறைந்த நன்றிகள்.

இக்கருத்தரங்க நிகழ்வுகளைப் பொறுப்புடன் நடத்திக் கொடுக்கும் காரைக்குடி தமிழ்சக்தி ஆய்வு மன்றப் பொறுப்பாளர்களான திருமதி. கே. கண்ணாத்தாள் அவர்களுக்கும், ஆய்வுக்கட்டுரைகளைப் பெற்று நூலாக்கப்பணி செய்த மன்றத்தின் உறுப்பினரும் கருத்தரங்க ஒருங்கிணைப்பாளருமான ஓய்வறியா உழைப்பாளி முனைவர் சோ. முத்தமிழ்ச்செல்வன் அவர்களுக்கும் நன்றி. இலங்கை யாழ்ப்பாணத்திலிருந்து கட்டுரை வழங்கிய திருமதி. முனைவர் ஜெயலட்சுமி ராஜநாயகம் அவர்களுக்கும் நன்றி.

வாழ்த்துரை வழங்கிய நல் உள்ளங்களாம் முனைவர் ச.வே. சுப்பிரமணியன், முன்னைத் துணைவேந்தர் க.ப. அறவாணன், பாண்டிச்சேரிப் பல்கலைக் கழகப் பேராசிரியர் முனைவர் அ. அறிவுநம்பி, தேசியக் கல்லூரிச் செயலர், கா. இரகுநாதன், மூதறிஞர் இரா. இளங்குமரன், அ.கி. இராமசாமி ஆகியோருக்கும் மற்றும் அமர்வுத் தலைவர்களாகப் பணியாற்ற இசைவு தெரிவித்த பேராசிரியர்கள், உடன் உழைத்த பேராசிரியர்கள், கட்டுரை வழங்கிய தமிழாய்வு அறிஞர்கள் அனைவர்க்கும் நன்றியை உரித்தாக்குகிறோம்.

அச்சுப்பிழை திருத்தத்திலும் ஆய்வுக்கட்டுரை நூல் வடிவமைப்பதிலும் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட முனைவர் பட்ட ஆய்வாளர்களான ம. பிரசன்னா, க. கந்தசாமிபாண்டியன் ஆகியோருக்கும் எங்கள் நன்றிகள். நூலாக்கப் பணியில் ஒத்துழைத்த திரு. ச. செல்லத்திருமாறன், அச்சு வடிவம் மற்றும் நல் முறையில் கட்டமைப்பு செய்த அச்சகத்தாருக்கும் எங்கள் நன்றி. இப்பணிகளில் எங்களுக்கு உறுதுணையாய் இருந்த எம்.ஃபில்., பிஎச்.டி. பட்ட ஆய்வு மாணவ, மாணவியருக்கும் நன்றி.

பதிப்புக்குழு

NATIONAL COLLEGE

(Nationally Accredited with 'A' Grade by NAAC)

Dindigul Road, Tiruchirapalli - 620 001, Tamilnadu, India.

Tele Fax : +91-431-2480055

+91-431-2481997 (OFF)

e-mail ; nationalcollege_trichy@yahoo.com

K. RAGHUNATHAN, B.Sc., B.L.
SECRETARY

25.08.2011

பெறுநர்

முனைவர் சோ. முத்தமிழ்ச்செல்வன்
தமிழ் உதவிப் பேராசிரியர்,
அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி,
சிவகாசி - 626 124.

அன்புடையீர்,

வணக்கம். தங்களின் கடிதம் கிடைத்தது. எங்கள் கல்லூரியுடன் இணைந்து இக்கருத்தரங்கினை நடத்திட முன்வந்தமையைப் பெரிதும் பாராட்டுகிறேன். நன்றியினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் மொழியின் சிறப்புக்கள் எனப் பற்பலவற்றைச் சுட்டுவர். அவற்றுள் தமிழின் இடப்பெயர்களும் குறிப்பிடத்தக்கன. இருப்பிடத்தோடும், ஊர் அமைப்போடும், தொழிலோடும், மக்கள் வாழ்க்கை முறையோடும் ஊர்ப் பெயர்கள் தொடர்புடையனவாய் இடம்பெற்றுள்ளன என்பதைச் சங்க காலம் தொடங்கி இன்றுவரை உறுதி செய்து வருகின்றனர். தமிழ்த் தாத்தா உ.வே.சாமிநாத ஐயர் தொடங்கிப் பலரும் ஊர்ப் பெயர்களுக்கான காரணங்களைத் தத்தமது நூல்களில் குறித்துச் சென்றுள்ளனர். ஊரும் பேரும் என்ற தமது நூலில் ரா.பி.சேதுப்பிள்ளை அவர்கள் ஊர்ப் பெயர்களின் இன்றியமையாமையையும், சிறப்பையும் தெளிவாக விளக்கியுள்ளார். இன்றைய நாட்டுப்புறவியல் ஆய்வாளர்கள் இத்துறையில் பெரிதும் நாட்டம் செலுத்துகின்றனர். இந்நிலையில் "தமிழிலக்கியங்களில் ஊர்ப் பெயர்கள்" என்னும் பொருளில் தமிழ் சக்தி ஆய்வுமன்றம் தேசியக் கருத்தரங்கினை நடத்தவுள்ளதைப் பெரிதும் பாராட்டுகிறேன். பண்பாட்டோடும், வாழ்க்கையோடும் தொடர்புபடுத்தித்தான் மொழியைத் தமிழன் வளம்பெறச் செய்துள்ளான் என்பதை இக்கருத்தரங்கம் உறுதிசெய்யும் என நம்புகின்றேன். மேலும் சமுதாயத்திற்குப் பயனுடையதாக இக்கருத்தரங்கம் அமைய வேண்டும் என்ற விருப்பத்தினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேசிய அளவில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கம் மலைக்கோட்டை மாநகரில் பழமையும், பெருமையும் தன்னகத்தே கொண்டு திகழும் பாரம்பரியம் மிக்க எங்கள் கல்லூரியில் நடைபெறவுள்ளது குறித்து மிகவும் மகிழ்கிறேன். இத்தேசியக் கருத்தரங்கம் வெற்றிகரமாகவும், பயனுள்ளதாகவும் நடைபெற மனம் கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். கருத்தரங்க அமைப்பாளர்கள், கட்டுரையாளர்கள், பங்கேற்பாளர்கள் ஆகிய அனைவரும் எல்லா வளங்களுடன் நீண்டு, புகழுடன் வாழ எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கா. ரகுநாதன்

கா.ரகுநாதன்
செயலாளர்.

அமரர் இரா. பாலுவை நினைவுகூரும் முயற்சி வெல்க!

க.ப. அறவாணன்
முன்னாள் துணைவேந்தர்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

அமரர் இரா. பாலசுப்பிரமணியன் பெயரில் உள்ள தமிழ் சக்தி ஆய்வு மன்றமும் திருச்சி தேசியக் கல்லூரியும் இணைந்து தமிழ் இலக்கியங்களில் ஊர்ப் பெயர்கள் எனும் தலைப்பில் தேசியக் கருத்தரங்கம் ஒன்றை நடத்த இருப்பது மகிழ்ச்சிக்குரியது. தமிழ்நாட்டைப் போல ஊர்ப்பெயர்கள் சுவரொட்டியை மாற்றி மாற்றி ஒட்டிக் கொள்ளும் சுவர்களைப் போல மாற்றிக்கொண்ட நாடு இருக்க முடியாது. தம்மை ஆளுகின்ற அரசியல் வல்லாண்மைக்கு ஏற்பவும், கட்சி அரசியலுக்கு ஏற்பவும் சமய ஆதிக்கத்திற்கு ஏற்பவும் தமிழக ஊர்களின் பெயர்கள் காலந்தோறும் மாற்றப்பட்டு வந்துள்ளன. இம்மாற்றம் தமிழுக்கும் பெருமை சேர்க்காது; தமிழருக்கும் பெருமை சேர்க்காது. ஃபிரான்சு நாட்டில் வாழும் அரபு நாட்டைச் சேர்ந்தவர்கள் தங்கள் பழக்கவழக்கத்தைப் பின்பற்றுவது கூட குற்றம் என்று இந்நூற்றாண்டில் தடை செய்யப்பட்டுள்ளது. கி.பி. 14, 15ஆம் நூற்றாண்டில் ஜப்பான் நாட்டுத் துறைமுகங்களில் கப்பல்களில் வந்து இறங்கிய ஐரோப்பியக் கிறிஸ்துவத் துறவிகள் தங்கள் கடவுளைப் பற்றிப் பரப்புரை செய்ய அனுமதி கேட்டபோது, ஜப்பானிய அரசர்கள் மறுத்தார்கள். மறுத்ததுடன் அவ்வாறு கேட்டவர்களை வெளியேற்றினார்கள். வெளியேற மறுத்தவர்களைத் தூக்கிலிட்டுக் கொன்றார்கள். எவ்வளவு தொலைநோக்கு? ஆசிய ஆப்பிரிக்க, அமெரிக்க ஆஸ்திரேலியக் கண்டங்கள் அனைத்தும் ஐரோப்பியக் கிறித்துவ நாடுகளுக்கு அடிமையாகிப் போனபோது ஜப்பான் மட்டும் ஐரோப்பியர் எவருக்கும் அடிமை ஆகாத நாடாகவே அன்றும் இருந்தது; இன்றும் இருக்கிறது.

தமிழக ஊர்ப் பெயர்கள் இன்று உள்ளது போலவே நாளையும் இருக்கவும் தொடரவும் இந்தக் கருத்தரங்கு நம் உள்ளத்திற்கு உரம் சேர்க்கவேண்டும்.

வாழ்த்துகள்.

முனைவர்
அ. அறிவுநம்பி
பேராசிரியர்
சுப்பிரமணிய பாரதியார் தமிழியற்புலம்
புதுவைப் பல்கலைக்கழகம்
புதுச்சேரி - 605 014.

DR. A. ARIVUNAMBI
PROFESSOR OF TAMIL
SUBRAMANIA BHARATHI SCHOOL OF
TAMIL LANGUAGE & LITERATURE
PONDICHERRY UNIVERSITY
PUDHUCHERRY - 605 014.

வாழ்த்துரை

காரைக்குடி, தமிழ் சக்தி ஆய்வு மன்றமும், திருச்சிராப்பள்ளி, தேசியக் கல்லூரியும் இணைந்து "தமிழிலக்கியங்களில் ஊர்ப்பெயர்கள்" என்ற தலைப்பில் தேசியக் கருத்தரங்கம் நடத்துவது மிகவும் பாராட்டுக்குரியது.

* தெய்வத்திரு. முனைவர் இரா. பாலசுப்பிரமணியன் அவர்களை நினைவு கூறவும், அவரின் வழியில் தமிழ்ப்பணி புரியவும் இக்கருத்தரங்கு பெருந்துணை புரியும்.

* கருத்தரங்கின் வழியாகத் தமிழ் இலக்கியங்களை ஆழமாகக் காணும் போக்கினைத் தமிழ் ஆர்வலர்களுக்கு இனிதே வழங்கியுள்ளனர், அமைப்பாளர்கள். அவர்களுக்கு அகம் நிறைந்த பாராட்டுக்கள்.

* யாரும் அணுகத் தயங்கிய ஊர்ப்பெயராய்வைக் கருதிய முனைவர் சு. இரத்தினம் தலைமையிலான தேசியக் கல்லூரித் தமிழ்த்துறையினர் பாராட்டுக்குரியவர்கள். நன்றிக்குரியவர்கள்.

* இக்கருத்தரங்கு பயனையும் பொலிவையும் வழங்கும் என்பது திண்ணம். கட்டுரைகளை நல்கியோருக்கும் ஆய்வுக் கோவையைக் கொணர்ந்த அன்பர்களுக்கும் உளமார்ந்த பாராட்டுக்கள். வாழ்த்துக்கள்.

09.09.2011
புதுவை.14

அன்புடன்,
அறிவுநம்பி

பணியிடம் (O) 0413 - 2654464 இல்லம் (R) 0413 - 2256699 அலைபேசி (M) 94431 17769

முனைவர் க. பஞ்சாங்கம்
முதன்மை ஆய்வாளர்
யு. ஜி. சி. பெருந்திட்டப் பணி
தமிழ் இணைப் பேராசிரியர் (பணி நிறைவு)
காஞ்சி மாமுனிவர் பட்ட மேற்படிப்பு மையம்,
தமிழாய்வுத் துறை,
புதுச்சேரி – 605 008.

புதுச்சேரி-8.
26. 08. 2011

அன்புடையீர்!

வணக்கம். காரைக்குடி தமிழ் சக்தி ஆய்வு மன்றமும் திருச்சிராப்பள்ளி தேசியக் கல்லூரியும் இணைந்து 'தமிழ் இலக்கியங்களில் ஊர்ப்பெயர்கள்' என்னும் தலைப்பில் தேசியக் கருத்தரங்கம் நடத்த இருப்பதை அறிந்து பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன். கருத்தரங்கையொட்டி ஆய்வுக்கோவை ஒன்றை வெளியிடத் திட்டமிட்டிருப்பதும் பெரிதும் பாராட்டிற்குரியது. பொதுவாகப் பெயரிடுதல் என்பதே மனிதச் செயல்பாட்டில் மனிதர்களுக்கான அதிகாரத்தை நிலைநிறுத்துவதற்கான முதல் படியாகும். ஒவ்வொரு பெயருக்குப் பின்னாலும் ஓர் அரசியல் இருக்கிறது. ஒரு வரலாறு இருக்கிறது. ஒரு சமூகத்தின் பண்பாடு இருக்கிறது. அதுவும் ஊர்ப்பெயர்களை ஆராயும் பொழுது தமிழர்களின் பண்பாட்டு ஆவணமாகவே அமைவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அத்தகைய பெரும் முயற்சியில் ஈடுபட்டுள்ள கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்கள் அனைவரையும், ஆய்வுக்கோவையின் பதிப்புக் குழுவினரையும் நெஞ்சு நெகிழ வாழ்த்துகிறேன். வணங்குகிறேன்.

பெருகும் அன்புடன்

(க. பஞ்சாங்கம்)

பெறுநர்:-
திரு முனைவர். சோ. செந்தமிழ்ச் செல்வன் அவர்கள்
சிவகாசி.

29/08/2011

வாழ்த்துரை —

சிலம்பு நா. செல்வராசு
புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம்
புதுச்சேரி

காரைக்குடி தமிழ்ச்சக்தி ஆய்வு மன்றமும்
திருச்சிராப்பள்ளி தேசியக் கல்லூரியும் இணைந்து நிகழ்த்தும்
'தமிழ் இலக்கியங்களில் ஊர்ப் பெயர்கள்'
எனும் கருத்தரங்கு பற்றிய செய்திகளை அறிந்து
பேருவகை கொண்டேன்.

ஆற்றல் சான்ற பேராசிரியராக விளங்கி
அரும் சாதனைகள் நிகழ்த்திய அன்புக்குரிய பேராசிரியர்
அமரர் இரா. பாலசுப்பிரமணியனார் பெயரின் அடிப்படையில்
இயங்கும் அறக்கட்டளையும்
கல்விப் பணியிலும் ஆய்வுப் பணியிலும் புகழ் பெற்று விளங்கும்
கல்லூரியும் இணைந்து இக்கருத்தரங்கை நடத்துவது
மகிழ்ச்சிக்கும் பாராட்டுதலுக்கும் உரியது.

'ஊரும் பேரும்' எனும் புகழ்பெற்ற நூலுக்குப் பிறகு
இக்கருத்தரங்குதான் தமிழக ஊர்ப் பெயர்களை வெளிக்
கொணர்கின்றது. ஊர்ப் பெயர்களை ஆராய்வதும் நூலாக
வெளியிடுவதும் தமிழக வரலாற்றில் பெரும் சிறப்பு
நிலைகளைத் தெளிவுபடுத்துபவை. ஊர்ப் பெயர் ஆய்வுகள்
வரலாற்றுத் திருப்பங்களைச் செய்துள்ளமையை ஆய்வின்
மூலம் உணர்ந்தவன் என்ற முறையில் இக்கருத்தரங்கை
வாழ்த்துவதோடு உரை வழங்கவும் செய்கிறேன்.
கட்டுரை வழங்கி உள்ள மூத்த பேராசிரியர்களுக்கு என் வணக்கங்கள்!
இளையோர்க்கு வாழ்த்துகளும் பாராட்டுகளும்!

அன்பன்
[signature]

திருவள்ளுவர் தவச்சாலை,
அல்லூர் 620101,
திருச்சி மாவட்டம்
07.09.2011.

பேரன்பீர்,

வணக்கம். வாழிய நலனே!

"தமிழ் இலக்கியங்களில் ஊர்ப் பெயர்கள்" என்னும் தலைப்பில் ஆய்வரங்கம் நிகழ இருப்பத் தெரிந்து மகிழ்கின்றேன். ஊர்ப் பெயர்கள் வரலாற்றுப் பெட்டகம்; மக்கள் வழங்கும் வழக்கு மாறினும் மாறா ஆவணமாகத் தமிழக முந்தையர் பெயரீட்டு மாண்பை உணர்த்துவது! ஊர்ப் பெயராய்வு உவகையும் உண்மையும் ஊற்றமும் தவழ நிகழ்வதாக!

இன்ப அன்புடன்,
இரா. இளங்குமரன்.

முனைவர் ச. வே. சுப்பிரமணியன்
(மேனாள் இயக்குநர், உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்)
மதிப்புறு இயக்குநர்
உலகத்தமிழ்க் கல்வி இயக்கம்
தமிழூர் – 627 808
அடைக்கலப் பட்டணம் அஞ்சல்
திருநெல்வேலி மாவட்டம்

தமிழூர்
25. 08. 2011

வாழ்த்துரை

என்னுடைய மாணாக்கர் **தமிழ்த்திரு. இரா. பாலசுப்பிரமணியன்** அவர்கள் நினைவைப் போற்றும் வகையில் ஆண்டுதோறும் கருத்தரங்கு நடத்தும் அவருடைய மாணாக்கர் முனைவர். முத்தமிழ்ச் செல்வன், முனைவர் கே. கண்ணத்தாள் இவர்களை மிகவும் பாராட்டுகிறேன்.

இவர்களைப் போன்ற மாணாக்கர்களைப் பெற்ற என் மாணக்கர் பாலசுப்பிரமணியத்தை எப்போதும் நினைக்கிறேன்.

இவ்வாண்டு திருச்சிராப்பள்ளி தேசியக் கல்லூரியோடு இணைந்து தேசியக் கருத்தரங்கம் ஊர்ப்பெயர்கள் பற்றி நடத்துவது மிகவும் மகிழ்வதற்குரியது. நான் உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் இருக்கும்போது, ஊர்ப்பெயர்கள் பற்றி பல நூல்களை வெளியிட்டுள்ளோம். ஊர்ப்பெயர் ஆராய்ச்சியால் தமிழ்ச் சமுதாயத்தின் வாழ்க்கைத் தெளிவாகப் புலப்படும். இச்செயலை ஊக்கத்தோடும், ஆக்கத்தோடும் செய்து வருகின்ற நண்பர் முத்தமிழ்ச்செல்வனை மிகவும் பாராட்டி மகிழ்கின்றேன்.

கருத்தரங்கு நாள் அன்று நூல்கள் வெளியிடவேண்டும் என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு நடத்தியவன் நான். அதே குறிக்கோளில் என் மாணக்கரின் மாணாக்கர் இருப்பதை அறிந்து பெரிதும் மகிழ்கின்றேன்.

கருத்தரங்கு எல்லா நிலைகளிலும் சிறப்புற நடைபெற வாழ்த்துகின்றேன்.

அன்பன்
ச.வே.சுப்பிரமணியன்
(ச. வே. சுப்பிரமணியன்)

1. அகநானூற்றில் ஊர்பெயர்கள்

முனைவர் சு.அழகியநம்பி
இணைப் பேராசிரியர்,
இளங்கலைத் தமிழ்த் துறைத் தலைவர்(பணிநிறைவு),
அய்யநாடார் ஜானகி அம்மாள் கல்லூரி
சிவகாசி.

முன்னுரை

சங்கத் தொகை நூல்களுள் ஒன்றான அகநானூற்றில் இடம் பெறும் ஊர்ப் பெயர்களைக் கூறுவதே இவ் ஆய்வுக் கட்டுரையின் நோக்கம் ஆகும்.

வளமும் காவலும்

வளமும் காவலும் நிறைந்தவைகளாகப் பல ஊர்களைப் புலவர்கள் அகநானூற்றில் அமைத்துப்பாடியுள்ளனர் என்பதைக் காணமுடிகின்றது. சான்றாக உறையூரின் வளத்தை,

“மழைவளம் தரூஉம் மாவண் தித்தனன்
பிண்ட நெல்லின் உறந்தை ஆங்கண்
குழைநலை பெறாஅக் காவிரி''

- அகநானூறு 6: 4-6

எனவும் அழும்பில் என்ற ஊரின் வளத்தை,

“அழும்பில் அன்ன அறாஅ யாணர்''

- மேலது 44:15

எனவும் குழுமூரின் வளத்தை,

“நல்ஆன் பரப்பின் குழுமூர் ஆங்கன்''

- மேலது 168: 4

என்று அமைந்துள்ள பகுதிகளைக் குறிப்பிடலாம். அழும்பில் என்ற ஊர் இக்காலத்தில் அம்புக் கோயில் என்ற பெயரில் வழங்கப்படுகின்றன. மேலும் சிறுகுடியை அகநானூறு 117: 15 – 19, நெடுங்காடு 91: 10 – 12, இடையாற்றுமங்கலம் 141: 23 – 26, ஆமூர் 159: 13 – 21, வேளூர் 166: 1 – 4, காவிரிப்பூம் பட்டினம் 181: 20 – 22, 205: 10 – 13, வஞ்சி 263: 11 – 13, நீடூர் 266: 10 – 11, உம்பற்காடு 357: 9 – 10, வல்லம் 356: 11 – 14, பொறையாறு: 100: 13 – 14 ஆகிய பாடல்களிலும் வளம் பொருந்திய ஊர்களாகப் புலவர்கள் பாடியுள்ளார்.

வலிய அரண்களையும் காவலையும் உடையவனாகப் பல ஊர்களை அகநானூறு குறிப்பிடுகிறது. சான்றாகப் பாழி ஊரின் காவலை அகநானூறு

“சூழி யானைச் சுடர்பூண் நன்னன்
பாழி யன்ன கடியுடை வியனகர்”

- மேலது 15: 10 – 11

எனவும் ஊணூரின் அரண்வலிமையைத்,

“தூங்கல் பாடிய ஓங்குபெறு நல்லிசைப்
பிடிமதி வழுதுணைப் பெரும்பெயர்த் தழும்பன்
கடிமதில் வரைப்பின் ஊணூர்''

- மேலது 227: 16 – 18

எனவும் பாடியுள்ளதைக் குறிப்பிடலாம். மேலும் மாங்காடு என்ற ஊரின் காவலை அகநானூறு 288: 14 – 17 இல் காணமுடிகிறது.

தலைவியின் உடல் உறுப்புகளுடன் ஒப்பீடு

தோள்களும் பற்களும்

ஆய் என்ற வள்ளலின் தலையாறு என்னுமித்தில் உள்ள மூங்கில் கணுக்களின் நடுவிடம் போலத் தலைவியின் தோள்கள் அமைந்துள்ளன என்பதை அகநானூறு,

“மாஅல் யானை ஆஅய் கானத்துத்
தலையாற்று நிலைஇய சேயுயர் பிறங்கல்
வேயமைக் கண்ணிடை புரைஇ''

- மேலது 152: 21 – 23

ஏ ன்று குறிப்பிடுகின்றது. மேலும் தலைவியின் தோள்களைக் குறிப்பிடும் போது ஒப்பீடுகளாக அகநானூறு 206: 13 – 16 இல் வீரை யையும் 271: 12 – 71இல் கள்ளில் என்ற ஊரையும் 366: 11 – 13இல் நிழல் என்ற ஊர்ப் பெயர்களும் குறிப்பிடப்படுவதைக் காணமுடிகிறது.

தலைவியின் பற்களை ஒப்பிடும் போழுது கொற்கை முத்துக்கள் உவமையாகக் காட்டப்பெற்றுள்ளமையை,

“மறப்போர்ப் பாண்டியர் அறத்தின் காக்கும்

கோற்கையம் பெருந்துறை முத்தின் அன்ன
நகைப்பொலிந்து இலங்கும் எயிறுகெழு துவர்வாய்''
- மேலது 27: 8 – 10

என்ற பகுதிகளின் வழி உணர முடிகிறது.

தலைவியின் மார்பகங்களுடன் ஊர்ப்பெயர்கள் ஒப்பீடு

தலைவியின் மார்பகங்களை குடவாயில் என்ற ஊருடன் ஒப்பிட்டு அகநானூறு,

"தண்குட வாயில் அன்னோள்
பண்புடை ஆகம்''
- மேலது 44: 18 – 19

எனவும் வியலூரைப் போன்றவை அவை என்பதை,

"நறவுமகிழ் இருக்கை நன்னன் வேண்மான்
வயலை வேலி வியலூர் அன்னநின்
அவர்முலை ஆகம்''
- மேலது 97: 12 – 14

எனவும் கூறுவதைக் காணமுடிகின்றது.

இளமையும் அழகும்

தலைவியின் அழகுக்குக் கழாஅர் என்ற ஊரை உவமைப்படுத்தி அகநானூறு,

"பல்வேல் மத்தி கழாஅர் அன்னஎம்
இளமை''
- மேலது 6: 20 – 21

எனவும் தொண்டி நகரைப் போன்ற அழகு என்பதைப்,

"பழந்திமில் கொன்ற புதுவலைப் பரதவர்
மோட்டமணல் அடைகரைக் கோட்டுமீன் கொண்டி
மணங்கமழ் பாக்கத்துப் பகுக்கும்
வளங்கெழு தொண்டி அன்ன இவள்நலனே''
- மேலது 10: 10 – 13

எனவும் கூறுவதைக் காணமுடிகின்றது.

மேலும் தலைவியின் அழகைக் குறிப்பிடும் பொழுது வேம்பியை அகம் 249: 9 – 10இலும், தழுமலத்தை 270: 8 – 10இலும் பவத்திரியை 340: 6 – 7இலும் வெளியம் என்ற ஊரை 359: 6 – 7இலும் குறிப்பிடுவதுடன் பரத்தையஜன் அழகை ஒப்பிடும் போழுது மாந்தையை 376: 17 – 18இலும் காமக்கிழத்தியின் அழகைக் குறிப்பிடும் பொழுது, வஞ்சியை 396: 18 – 19இலும் அகநானூறு குறிப்பிடுவதை அறியமுடிகிறது.

வளையல், நெற்றி, கூந்தலுடன் ஒப்பீடு

அள்ளூர் என்ற ஊருடன் தலைவியின் வளையல் சிறப்பை உவமைப்படுத்திஅகநானூறு,

"... செறுநர்
களிறுண்ட அருஞ்சமம் ததைய நூறும்
ஒளிறுவாட் டானைக் கொற்றச் செழியன்
பிண்ட நெல்லின் அள்ளூர் அன்னஎன்
ஒண்தொடி''
- மேலது 46: 11 – 15

எனக் குறிப்பிடுவதைக் காணமுடிகின்றது.

தலைவியின் நெற்றி மதுரையில் உள்ள நாலங்காடியைப் போல மணமிக்கது என்பதை அகநானூறு,

"அரண்பல கடந்த முரண்கொள் தானை
வாடா வேம்பின் வழுதி கூடல்
நாளங் காடி நாறும் நறுநுதல்'' - மேலது 93: 8 – 10

எனவும் காமூரில் உள்ள வேங்கை மலர் நாறும் தன்மையுடையது தலைவியின் கூந்தல் என்பதை அகநானூறு,

"மாவண் கழுவுள் காமூர் ஆங்கண்
பூதம் தந்த பொரியரை வேங்கைத்
தண்கமழ் புதுமலர் நாறும்
அஞ்சில் ஓதி ஆய்மடத் தகையே'' - மேலது 365: 11 – 14

எனவும் குறிப்பிடுவதன் வழி அறியமுடிகின்றது.

தலைவியின் மொழியும் கண்ணும்

பண்ணனின் சிறுகுடி என்ற ஊரிலுள்ள நெல்லிக் காயைத் தின்ற பின் நீர் பருகினால் இனிப்பதைப் போலத் தலைவி இனிய மழலை மொழி பேசுபவள் என்பதை அகநானூறு,

"தனக்கென வாழாப் பிறர்க்குரி யாளன்
பண்ணன் சிறுகுடிப் படப்பை நுண்ணிலைப்
புன்காழ் நெல்லிப் பைங்காய் தின்றவர்
நீர்குடி சுவையின் தீவிய மிழற்றி"

- மேலது 54: 13 – 16

எனக் குறிப்பிடுவதன் வழி அறியமுடிகிறது.

கடலன் என்பவனுடைய விளங்கில் என்னும் ஊரைப் போன்று அழகும் இன்பமும் நிறம்பியவை தலைவியின் கண்கள் என்பதை அகநானூறு,

"மாவண் கடலன் விளங்கில் அன்னஎம்
மைஎழில் உண்கண்"

- மேலது 81: 13 – 14

எனவும் திருப்பரங்குன்றச் சுனையில் பூத்த நீல மலர்களைப் போன்றவை தலைவியின் கண்கள் என்பதை அகநானூறு,

"ஓடியா விழவின் நெடியோன் குன்றத்து
வண்டுபட நீடிய குண்டுசுனை நீலத்து
எதிர்மலர்ப் பிணையல் அன்னஇவள்
அரிமதர் மழைக்கண்"

- மேலது 149: 16 – 19

எனவும் கூறுவதன் வழி அறியமுடிகின்றது.

தலைநகர்களும் துறைமுகங்களும்

சோழரின் தலைநகர் உறையூரை அகநானூறு 93: 4 – 5இலும், 137: 5 – 6 இலும் குறிப்பிடுகின்றன. சேரனின் தலைநகரான கருவூரை அது,

"கடும்பகட்டு யானை நெடுந்தேர்க் கோதை
திருமா வியல்நகர்க் கருவூர்"

- மேலது 93: 20 – 21

இலும் குறிப்பிடுவதைக் கணமுடிகின்றது.

கொற்கை துறைமுகம் பற்றி குறிப்பை அகநானூறு,

"பேரிசைக் கொற்கைப் பொருநன் வென்வேல்
கடும்பகட்டு யானை நெடுந்தோச் செழியன்"

- மேலது 296: 10 – 11

எனவும் தொண்டி துறைமுகத்தை அந்நூல்,

"வெண்கோட்டு யானை விறற்போர்க் குட்டுவன்
தொண்டிரைப் பரப்பின் தொண்டி முன்துறை"

- மேலது 290: 12 – 13

எனவும் முசிறி துறைமுகத்தை அது,

"கொய்சுவற் புரவிக் கொடித்தேர்ச் செழியன்
முதுநீர் முன்துறை முசிறி"

- மேலது 57: 14 – 15

எனவும் கானலம் பெருந்துறையை அகநானூறு,

"இரங்கு நீர்ப்பரப்பின் கானலம் பெருந்துறை
தனந்தரு நன்கலம் சிதையத் தாக்கும்
சிறுவெள் இறவின் குப்பை"

- மேலது 152: 6 – 8

எனவும் குறிப்பிடுவதன் வழி உணரமுடிகிறது.

வென்றி தலைமையுடன் தொடர்புபடுத்தல்

கரிகால் சோழன் பகைவரை வென்ற இடமான வெண்ணிவாயில் என்னும் இடத்தை அகநானூறு,

"காய்சின மொய்ம்பின் பெரம்பெயர்க் கரிகால்
ஆர்கலி நறவின் வெண்ணிவாயில்"

- மேலது 246: 8 – 9

எனவும் பாண்டியன் நெடுஞ்செழியன் தலையாலங்கானம் எனுமிடத்தில் பெற்ற வெற்றியை அகநானூறு,

"பொன்னணி நெடுந்தேர்த் தென்னர் கோமான்
எழுவுறழ் திணிதோள் இயல்தேர்ச் செழியன்
நேரா எழுவர் அடிப்படக் கடந்த
ஆலங் கானத்து"

- மேலது 209: 3 – 6

எனவும் குறிப்பிடுவதுடன், சோழர் இரும்பெரும் வேந்தரை வென்ற இடமாக பருவூரை 96: 13 – 16இலும் கரிகாலன் ஒன்பது மன்னரை வென்ற இடமாக வாகையூரை 125: 17 – 20 இலும் குறிப்பிடுவதைக் காணமுடிகிறது.

பிற ஊர்கள்

மாங்காட்டை 288: 14 – 17இலும் வேம்பியை 249: 9-10 இலும் பாடலிபுரத்தை 265: 4-6 இலும் குறுங்கையை 45: 9-12 இலும் திருச்செந்தூரை 266: 20-21இலும் குறிப்பிடுவதைக் காணமுடிகிறது. வேண்மணி 211: 9-17, தகடூர் 212: 13-14, கள்ளூர் 256: 14-17 ஆகியவை அகநானூற்றில் இடம் பெறுவதைக் காணமுடிகிறது. ஆக மொத்தம் அகநானூற்றில் 63 ஊர்களின் பெயர்களின் இடம் பெறுவதுடன் பூழி நாடு, பாண்நாடு, துளுநாடு ஆகிய ஊர்களின் பெயர்களும் வையை, தொழுநை (யமுனை), காவிரி ஆகிய ஆற்றின் பெயர்களும் இடம் பெறுவதை அறியமுடிகிறது.

புலவர்களின் பெயர்களில் இடம்பெற்ற ஊர்கள்

அகநானூற்றில் புலவர்களின் பெயர்களுடன் மதுரை 29, கருவூர் 6, ஆவூர் 4, உறையூர் 2, ஒக்கூர் 2, எருமைவெளி, காவிரிப்பூம்பட்டிணம் 2, பொதும்பில் 2, ஆகிய எண்ணிக்கையுடன் அந்தியூர், அள்ளூர், ஆமூர், ஆர்க்காடு,ஆலங்குடி, இறங்குடி, ஈழம், உம்பற்காடு, மேட்டூர், தொண்டி, கோடிமங்கலம், கானாடு, சாதல், தண்கால்(திருத்தங்கல்), பிசிர், பெருங்குன்று, மோசி, வேம்பற்றூர் ஆகிய ஒவ்வொரு புலவர்களின் ஊர்களளாகவும் ஆக மொத்தம் 98 புலவர்கள் ஊர்ப்பெயர்களுடன் இடம்பெறுகின்றனர் என்பதை அறியமுடிகிறது.

முடிவுரை

அகநானூற்றில் தமிழகம் முழுவதும் பல்வேறு பகுதிகளிலுள்ள புலவர்களின் பாடல்களைப் பாடியிருப்பதுடன் பல ஊர்களின் பெயர்களும் இடம் பெறுகின்றன. இவ்வூர்ப் பெயர்களைப் பெயராய்வு செய்வதால் பல வரலாற்றுத் தகவல்கள் ஆய்வுலகிற்குக் கிடைக்கும் என்பதில் அய்யமில்லை எனலாம்.

2. தேவாரத் தலங்களை முன்வைத்து ஊர்ப்பெயர்கள் – ஒரு முன்னாய்வு

மு.சு.அருண்குமார்,
முனைவர்பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
பெரியார் பல்கலைக்கழகம்,
சேலம்–636 011.

தமிழில் புராணங்கள் என்பவை பெரும்பாலும் தலபுராணங்களாகவே அமைந்துள்ளன. இவை கோயிலில்உறையும் இறைவனை மையமாகக் கொண்டவை. "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்பது ஔவையார் வாக்கு. ஊர் பற்றிக் குறிப்பிடும் போது "ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்'' எனும் சொல்லாடலை / பழமொழியைக் கையாள்கின்றனர். இவற்றை ஒருங்கிணைந்து நோக்கும்போது ஆறு–ஊர்–கோயில்–தலம்–புராணம் எனும் வளர்ச்சி நிலையினை நம்மால் உணரமுடியும். 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' (தொல்.சொல்.152). பெயரைக் காரணப்பெயர், இடுகுறிப்பெயர் என வகைப்படுத்துகிறது இலக்கணம். திருக்கோயில் தலங்களின் ஊர்பற்றிய ஒருவித (மாறுபட்ட) நோக்கை இக்கட்டுரை முன்வைக்கிறது.

தேவாரப்பாடல் பெற்ற தலங்கள் ஆற்றங்கரை ஓரங்களில் அமைந்திருப்பவையாகவே அறியப்படுகின்றன. நீர்வளம்மிக்க வேளாண் பகுதிகளை மையமாகக் கொண்டு புதிய எழுச்சிமிக்க ஒரு சமயத்தைக் கட்டமைக்க வேண்டிய தேவையின் அடிப்படையில் உருவானவை தேவாரப்பாடல்கள். இக்கருத்தைக் இங்கு கவனத்தில் கொள்வது அவசியம்.

ஒட்டுமொத்த தமிழகத்தைப் பொறுத்தவரை காவிரிபாயும் சோழநாட்டில் தான் மிக அதிகமானப் பாடல்கள் / தலங்கள் உள்ளன. தேவாரப் பதிகங்கள் / பாடல்கள் வழி காவிரியின் வடகரைப் பகுதியில் 63 ஊர்களையும் தென்கரைப் பகுதியில் 127 ஊர்களையும் அறியமுடிகிறது.

"ஆதித்தன், முதற்பராந்தகன் ஆட்சிக்காலக் கல்வெட்டுக்கள் சில, காவிரிக் கரையைக் 'கரிகாலக் கரை' என்று கூறுகின்றன. இக்கல்வெட்டுக்களால் அவ்வேந்தர்களின் காலமாகிய கி.பி. 9, 10ம் நூற்றாண்டுகளில் காவிரியாற்றின் வடகரையைக் 'கரிகாலக்கரை' என்றே மக்கள் வழங்கிவந்தார்கள் என்பது தெள்ளிதிற் புலனாதல் காண்க'' டி.வி. சதாசிவப்பண்டாரத்தார், (மா.ராசமாணிக்கனார் நூலிலிருந்து, 2010:415) இதன்வழி காவிரியின் வடகரையான கரிகாலக்கரையில் அமைந்த தலம் / ஊர் பெயர்களைக் காணும் போது அவற்றில் 17 ஊர்களின் / தலங்களின் பெயர்கள் "திரு'' எனும் முன்மொழி இன்றி உள்ளன. எஞ்சிய 46 ஊர்களின் / தலங்களின் பெயர்கள் "திரு'' எனும் முன்மொழியோடே அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

தேவாரப் பாடல் வைப்புத் தலங்களாக க.வெள்ளைவாரணன் (2008:644–665) சுட்டும் 237 ஊர் / தலங்களில் பெரும்பான்மை "திரு'' எனும் முன்மொழியின்றி உள்ளதை அறியமுடிகிறது. இது ஆராயத்தக்கது.

திரு (எனும் சொல்லின்) பொருள் விளக்கம்

"1. இலக்குமி, 2. செல்வம், 3. சிறப்பு, 4. அழகு, 5. காந்தி (Brilliance), 6. பொலிவு, 7. பாக்கியம், 8. தெய்வத்தன்மை (திருச்சிற்றம்பலம்), 9. நல்வினை, 10. சோதிடங்கூறுவோன், 11. மாங்கலியம், 12. பழைய தலையணிவகை, 13. மகளிர் கொங்கை மேல் தோன்றும் வீற்றுத்தெய்வம்'' (1982:1896) என சென்னைப்பல்கலைக்கழகத் தமிழகராதி பொருள் விளக்கம் தருகின்றது.

II

1. திருநல்லூர்ப் பெருமணம், 2. திருச்சாய்க்காடு, 3. திருநாரையூர், 4.ஓமாம்புலியூர் எனும் நான்கு தல/ஊர்ப் பெயர்களைக் குறித்த விளக்கங்களை இங்கு காணலாம்.

1.திருநல்லூர்ப் பெருமணம்

தலபுராணத்தின்படி, திருஞானசம்பந்தர் மற்றும் அவர்மனைவி, திருமணத்திற்கு வந்திருந்தோர் என அனைவரும் ஒருசேரச் சோதியுள் கலந்து முத்தி பெற்றனர் (வாழ்வியற் களஞ்சியம் –10, 1998:419) என அறிகிறோம். இக்காலத்தில் இது ஆச்சாபுரம் / ஆச்சாள்புரம் என வழங்கப்படுகிறது.

திருமணத்திற்கு வந்தவர்களுக்கெல்லாம் முத்தியளித்த பெருமையை நினைத்து, துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் தாம்பாடிய நால்வர் நான்மணி மாலையில் 'சம்பந்தர்

திருமணத்தின்போது பந்தற் காலைப் பிடித்துக் கொண்டாவது நிற்கும் நிலை கிடைத்திருந்தால் எளிதாக முத்திப்பேறு சித்தித்திருக்குமே' என நயம் அமையப்பாடி ஏங்குகிறார். (மேலது)

மகாவித்வான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை இத்தலத்து அம்பாள்மீது 'வெண்ணீற்றமை பிள்ளைத்தமிழ்' பாடியுள்ளார் (கைவல்யம்.2005:96).

"அன்புறு சிந்தையராகி அடியவர்
நன்புறு நல்லூர்ப் பெருமண மேவிநின் " — சம்பந்தர்

2. திருசாய்க்காடு / சாயா வனம்

சீர்காழி–பூம்புகார்ச் சாலையில் திருவெண்காட்டிலிருந்து 3 கி.மீ தொலைவில் இது உள்ளது. தற்போது இது சாயாவனம் என அழைக்கப்படுகிறது. அகநானூற்றின் 226ம் பாடல் குறிப்பிடும் ஊராக இது இருக்க வாய்ப்பு உள்ளது.

சிலம்பு கூறும் சம்பாதியம்மன் திருக்கோயில் இதுவே. (பி.ரா.நடராசன், 2004:76) எனக் கூறுவதும் மணிமேகலை சுட்டும் ஐவேறு வனங்கள் (3:44–62) என்பதும் இங்கு நோக்கத்தக்கது.

போய்க் காடே மறைந்துறைதல் புரிந்தாலும் பூம்புகார்ச்
சாய்க் காடே பதியாக உடையானும் விடையானும் (7:1:2, 1,2)

காட்டிற்குச் சென்று மறைந்து வாழும் தன்மை உடையவனும், பூம்புகாரின் புடை விளங்கும் சாய்க்காட்டுப் பதியில் உறைபவனும் என இத்தலத்து இறைவன் இவ்வூர்ப் பெயரான சாயாவனேஸ்வரராக அடையாளப்படுத்தப்பட்டுள்ளார்.

3. திருநாரையூர்

திருமுறைகளைக் கண்டெடுத்து அதைத் தொகுக்கும் வேலையைச் செய்த நம்பியாண்டார் நம்பிகள் அவதரித்த ஊராக இவ்வூர் அறியப்படுகிறது. அப்பர், திருஞான சம்பந்தர் ஆகியோரால் பாடல் பெற்றத் தலமாக அறியப்படுகிறது.

காம்பினை வென்ற மென் தோளி பாகம் கலந்தான் நலம் தாங்கு
தேம்புனல் சூழ்திகழ் மாமடுவின் திருநாரையூர்மேய (33:2:1,2)

4. ஓமாம் புலியூர்

கொள்ளிடக் கரையில் உள்ள ஊராக இது அறியப்படுகிறது. இப்பெயர் திரு ஓமாம் புலியூர், ஓமாம் புலியூர் என வழங்கப் பெறுகிறது. பதிகப் பாடல்களில் ஓமாம் புலியூர் என்றே பதிவாகியுள்ளது. ஆனால் திரு ஓமாம் புலியூர் எனப் பெயர் சுட்டப்படுகிறது. இக்கோயிலுக்கு வடதளி என்னும் பெயரும் உண்டு.

உம்பர்கள் ஏத்தும் ஓமமாம் புலியூர்
உடையவர் வடதளி யதுவே (30:2:4)
ஓங்கிய மறையோர் ஓமமாம் புலியூர்
உடையவர் வடதுளி யதுவே (30:2:4)

ஓமம் என்றால் வேள்வி என்று பொருள். வேள்விச் சிறப்புடைய ஊர் என (சுவாமி, கைவல்யம் (2005:124) தம் நூலில் குறிப்பிடுகிறார். இங்கு தெ.பொ.மீனாட்சி சுந்தரம் கூறும் கருத்து நோக்கத்தது.

"ஒய்மான் புலியூர் என்பது ஒய்மான் என்ற வள்ளல் பெயரால் வழங்கிய ஒய்மான் நாட்டில் உள்ள ஒரு புலியூர். அஃது ஓமான் புலியூர் என மருவியதும் அவர்கள் (கோயில் குருக்கள், புராணங்களைப் பாடியோர்) ஓமம் வளர்த்த கதையினையும் கட்டிவிடுகின்றனர் (2007:907).

III

"சுற்றோட்டம் என்ற பொதுக் கொள்கையானது, தொழில் சார்ந்த வட்டாரங்களை உருவாக்குகிறது. 'நீரோட்டம்' மற்றும் 'நகர்தல்' என்ற கருத்து தற்கால சமூக அறிவியல் கோட்பாட்டில் பயன்படுத்தி, பொருளாதார வட்டாரங்கள் நிர்ணயிக்கப்படுகின்றன.'' (2007:45) என சுந்தரேசன் கூறுவது நோக்கத்தக்கதாக உள்ளது. நீர்வழிகளை மையம் வைத்து உருவான தலங்கள், அதன் வழி அறியப்படும் இறைவன் பெயரும், அந்தப் பெயரே ஊருக்கும் வழங்குவது என ஒரு சுழற்சி முறையை நாம் காணலாம்.

துணைநூற்பட்டியல்

1. கைவல்யம், சுவாமி. திருமுறைத் திருத்தலங்கள், 2005, ஸ்ரீ துர்க்கா பப்ளிகேஷன், சென்னை.
2. சண்முகசுந்தரம் (தொ.ஆ.), சமயத்தமிழ், 2007, காவ்யா, சென்னை.
3. ராசமாணிக்கனார்.மா, சங்கஇலக்கிய வரலாறு, 2010, காவ்யா, சென்னை.
4. சுந்தரேசன்.துரை., புராணம் – வரலாறு, 2007, ஜோதி லட்சுமி பப்ளிஷர்ஸ், சென்னை.
5. நடராசன், பி.ரா., (உ.ஆ.), தேவாரம் தொகுதி–1, 2004, உமாபதிப்பகம், சென்னை.
6. பாலுச்சாமி, நா, வாழ்வியற் களஞ்சியம், தொகுதி பத்து, 1998, தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
7. வெள்ளைவாரணன், கா., பன்னிருதிருமுறை தொகுப்பு வரலாறு, 2008, கௌராபுத்தக மையம், சென்னை.
8. தமிழ் லெக்சிகான்–தொகுதி–3, 1982, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.

3. ஐந்திணைகளில் ஊர்ப் பெயர்கள்

மோ. அருணாம்பிகா
முனைவர் பட்ட ஆய்வாளர்(முழுநேரம்)
பச்சையப்பன் கல்லூரி
சென்னை.

தொல்காப்பியம் தலைவனுடைய ஊர் பற்றி தரும் எண்ணமாக அமைவது,

'ஊரும் பெயரும் உடைத்தொழிற்கருவும்
யாரும் சார்த்தி அவையவை பெறுமே....' (தொல். பொருள். 619)

மக்கள் நிலையாகக் கூடிவாழுங் குடியிருப்பே ஊர். மக்கள் பிறந்து வளர்ந்து உறைந்து வாழும் ஊர்கள் அவர்கள் வாழ்க்கையோடு பல்லாற்றானும் தொடர்புடையன. மக்களின் நாகரீக பண்பாட்டு கூறுகள் அனைத்திலும் மண்ணின் மணம் உண்டு. அவ்வாறே ஊர்களுக்குச் சூட்டப்பெற்ற பெயர்களெல்லாம் அவ்வவ்வூர் வாழ்மக்களின் மனவுணர்வுகளைச் சுமந்து கொண்டிருப்பவை; பல்வேறு வகையில் அவர்தம் அடையாளங்களாகத் திகழ்பவை.

மக்கள் தாங்கள் வாழ்ந்த இயற்கை அமைப்பு, சுற்றுப்புறச் சூழல் போன்றவற்றைக் கொண்டு இயல்பாகப் பெயர் அமைத்த நிலையே முதலில் தோற்றம் பெற்றது.

வரலாற்றை அறிய உதவும் மூலங்களுள் ஊர் பெயராய்வும் ஒன்று. காலந்தோறும் தொடர்ந்து வரும் ஊர்ப் பெயர்கள் அந்தந்தக் கால மக்கள் வாழ்வியலை நாம் அறிந்துகொள்ளப் பெரும் பயனாக அமைகிறது. ஊர்ப் பெயர்கள் பழமையின் எச்சங்கள் என்று கூறப்படுகின்றன. இப்பழமையினைச் சங்கஇலக்கியங்களின் வாயிலாக நாம் அறிய முடிகின்றது. இச்சங்க இலக்கியங்களில் காணப்படும் ஐந்திணைகளான குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகியவற்றில் காணப்படும் ஊர்ப் பெயர்களின் சிறப்புக்களை நாம் இங்கு காண்போம்.

குறிஞ்சி

கற்குடி:

இன்று உய்யக் கொண்டான் மலை என்ற பெயரில் அமையும் இத்தலம் திருச்சி மாவட்டத்தில் உள்ளது. கோயில் மலையின்மீது உள்ளது. மூவர் பாடலும் பெற்ற தலம் இது. மலைத்தலம் என்பதனை ஞானசம்பந்தர் பாடல் விளக்கங்கள் காட்டுகின்றன.

போர கலந் தருவேடர் புனத்திடையிட்ட விறகில்
காரகிலின் புகை விம்முங் கற்குடி மாமலை யாரே (42-3)
வண்டிசை யாயின பாடநீடிய வார்பொழில் நீழல்
கண்டமர் மாமயிலாடும் கற்குடிமாமலையாரே (43-9)

கற்குடி என்ற ஊர்ப்பெயர் மட்டுமே திருநாவுக்கரசர் பாடலில் அமைகிறது. (285-3) சுந்தரர் பூம்பொழில்கள் (27-1) சோலைகள் (27-2) கரும்பாரும் வயல்கள் (29-9) போன்றவை சூழ்ந்து காணப்படும் இவ்வூர் வளத்தினைச் சிறப்பிக்கின்றார். இந்நிலையில் மலைப் பகுதியைச் சார்ந்த ஊர் காரணமாக 'கற்குடி' என்ற பெயர் அமைந்து இருக்கும் எனத் தோன்றுகிறது; பின்னர் இறைவன் சிறப்பு காரணமாக 'உய்யக் கொண்டான் மலை' என்று வழங்கத் தொடங்கிற்று எனக் கருதலாம். கல்வெட்டு இரண்டு பெயரையும் சுட்டுகிறது.

கொடுங்குன்றம்:

இன்று பிரான்மலை என வழங்கும் பகுதி இராமநாதபுர மாவட்டத்தைச் சார்ந்து அமைகிறது. சம்பந்தர் பாடல் பெற்ற இத்தலம் பெயரிலேயே காரணத்தையும் கொண்டு அமைகிறது. வளைந்த மலைப்பகுதி காரணமாக இப்பெயர் அமைந்திருக்கக் கூடும். பாரி வள்ளலின் பறம்பு மலையே இது என்பர். பறம்புமலை என்ற பெயரே பிரான் மலை ஆகிவிட்டதோ எனத் தோன்றுகிறது. பாடல் பெற்ற கோயில் மலையடிவாரத்தில் உள்ளது. மலை மீதும் மற்றொரு கோயில் உள்ளது எனக் காண்கிறோம் இம்மலையின் சிறப்பு ஞானசம்பந்தர் பாடல்கள் முழுவதும் மணக்கிறது. குன்றம் என்ற பகுதியின் வளம் சிறப்பாக இவண் தெரிகிறது.

வானிற் பொலிவெய்தும் மழை மேகம் கிழித்தோடிக்
கூனற்பிறை சேருங்குளிர் சாரற் கொடுங்குன்றம் (14-1)
மயில் புல்கு தண்பெடையோடு உடனாடும் வளர்சாரல்
குயிலின்னிசை பாடுங்குளிர் சோலை கொடுங்குன்றம் (14-2)

சாரல் என்ற சொல்லினின்றும் மலைப்பக்கத்தில் இருந்த ஊர் என்பது தெளிவாகிறது. முதலில் திருக்கொடுங்குன்றம் என்று சுட்டப்பட்ட தலம் விஜய நகராட்சியில் பிரான் மலைச் சீமை என வழங்கப்பட்டதாகத் தெரிகிறது.

முல்லை

அகரப்பாடி:

பண்டைக் காலத்தில் முல்லைநிலப் பகுதியில் அமைந்த ஊர்கள் 'பாடி' என்று பெயர் பெற்றன. ஆயர்பாடி, இடையர்பாடி என்னும் ஊர்ப்பெயர்கள் குறிப்பிடத்தக்கன. முல்லைநிலப் பகுதியில் ஆட்டுப் பட்டி, மாட்டிப்பட்டி எனப் பட்டிகள் இருந்தமையால் இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம். ஆயர்கள் பாடிக்கொண்டே தங்கள் தொழிலை மேற்கொண்டதாலும் இப்பெயர் வழங்கியிருக்கலாம். தொடக்கத்தில் முல்லை நிலப் பகுதியில் ஏற்பட்ட ஊர்களுக்கு அமைந்த இப்பெயர் பிறகு மன்னன், குறுநில மன்னன் முதலானோரின் படைவீடுகளையும் குறித்தது. படைவீடுகளைச் சுற்றிச் சிற்றூர்களும் பேரூர்களும் தோன்றிய போது அவ்வூர்களுக்கும் இது பெயராக அமைந்துவிட்டது. அதியமானின் படைகள் இப்பகுதியில் தங்கியதால் 'அதியமான் பாடி' என்று பெயர் பெற்றுப் பின்னாளில் இஃது அகரப்பாடி என்று வழங்கி வருகின்றது.

சங்ககாலத்தில் தமிழ்நாட்டை ஆண்ட சேர சோழ பாண்டியரைப் போலப் பல குறுநில மன்னர்களும் தமிழ்நாட்டை ஆண்டுள்ளனர். தலையானங்கானத்துச்செரு வென்ற நெடுஞ்செழியனை இருபெரும் மன்னரும் வேளிர் ஐவரும் எதிர்த்துப் போரிட்ட செய்தி உறுதி செய்கின்றது. இவ்வகையில் பார்க்கும் பொழுது சிற்றரசர்கள் பெரும்படை பலத்துடன் விளங்கிய வரலாறு இவ்வூர்ப் பெயர் ஆய்வால் புலப்படுகின்றது.

ஆலங்காடு:

செங்கற்பட்டு மாவட்டத்தில் காணப்படும் ஆலங்காடு திருவாலங்காடு என்று அழைக்கப்பெறுகிறது பெயரிலேயே ஊர்ப் பெயர்க்காரணத்தை உள்ளடக்கிய இவ்வூர் பழையனூர் பக்கத்தில் இன்றும் உள்ளதைக் காணலாம். இதனைப் 'பழனமூதூர் நிலவிய ஆலங்காடு' (பெரிய. காரைக்-61) என்றும் 'பழையனூர் ஆலங்காடு' (திருஞான. பதி.65) என்றும் பழையனூரின் ஒரு பகுதியாக ஆலங்காடு இருந்தது என்பது தெரிகிறது பின்னர் இங்குள்ள சிவன்கோயில் சிறப்புற்று இத்தலம் தனியே 'திருவாலங்காடு' எனச் சிறப்பு பெறும் பெருமை பெற்றது என்பதை உணரக் கூடுகின்றது. காரைக்காலம்மையாரால் முதலில் சிறப்புற்ற இத்தலம் பின்னர் மேலும் பலரால் சிறப்பிக்கப்படும் பெருமை பெற்றது என்பதையும் காண்கின்றோம். திருவாலங்காடு மூத்த திருப்பதிகத்தையே காரைக்காலம்மையார் தந்து இங்குள்ள இறைச் சிறப்பை வெளிப்படுத்தக் காணலாம்.

ஆய்ப்பாடி:

'ஆர்வநன் மொழி ஆய்' எனச் சிறுபாணாற்றுப் படையில் 'ஆய்' என்ற கடையேழு வள்ளலுள் ஒருவனைக் காண்கின்றோம். மேலும் 'ஆய்' என்பது இடையர்களையும் குறியும். எனவே ஆயர்கள் வாழ்ந்த இடம் ஆய்ப்பாடி என்பது பொருத்தமாக அமைகிறது. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் ஆழ்வார்கள் இதனைப் பாடுகின்றனர்.

மருதம்:

அள்ளூர்:

அள்ளூர் என்பது பாண்டி நாட்டில் சிவகங்கை வட்டத்திலுள்ள ஓர் ஊர். நன்முல்லையார் என்ற சங்ககாலப் புலவர் ஒருவர் இவ்வூரினராதலின் அள்ளூர் நன்முல்லையார் என ஊராற் பெயர் பெற்றார்.

இவர்பாடல்கள் குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு ஆகிய சங்க இலக்கியங்களில் இடம்பெற்றன.

பாண்டியனின் அள்ளூர் நெற்குவியலையுடையது என்றும் அவ்வூர் போன்ற நலமுடையவர் தலைவி என்றும் பெண்ணின் நலம் பாராட்டப் பெற்றுள்ளது.

ஆள் என்ற சொல் செறிவு என்னும் பொருளது. செறிந்த ஊர் அள்ளூர் எனப்பெயர் பெற்றிருக்கலாம். "பிண்ட நெல்லின் அள்ளூர்"- என்ற சங்க இலக்கியத் தொடர் இதை வலியுறுத்தும்.

இதே பெயர் கொண்ட ஊர் ஒன்று சோழநாட்டில் தஞ்சை மாவட்டத்திலும் உள்ளது. குறுந்தொகை 32, 67, 68, 93, 96, 140, 157, 202, 237 ஆக பாடல்களும் , அகநானூற்று 46 ஆம் பாடலும் புறநானூற்று 306 ஆம் பாடலும் அள்ளூர் நன்முல்லையார் என்ற பெண்பாற் புலவர் பாடியவை, "ஒளிறுவார் தானைக் கொற்றச் செழியன்

பிண்ட நெல்லின் அள்ளூர் அன்னஎன்

ஒண்டொடி நெகிழினும் நெகிழ்க" (அகம்.46:13-15)

ஆவூர்:

ஆ என்பது பசுவையும் ஆச்சாமரத்தையும் குறிக்கும் சொல். எனவே விலங்குப் பெயர் அல்லது மரப்பெயர் அடிப்படையில் தோன்றிய ஊராக வேண்டும்.

சங்கப்புலவர்களின் பெயர்களோடு இணைத்துக் கூறப்படுவதால் நாம் அறியும் ஊர்ப் பெயர்களுள் ஆவூரும் ஒன்று. இதே பெயருடன் ஒன்றற்கு மேற்பட்ட ஊர்கள் உள்ளன. கண்ணனார் காவிதிகள் சாதேவனார், கிழார் மூலங்கிழார் , மூலங்கிழார் மகனார் பெருந்தலைச் சாத்தனார் ஆகியோர் இவ்வூரைச் சேர்ந்த புலவர்கள்.

நற்றிணையில் 265 ஆம் பாடலும் அகநானூற்றில் 13, 24, 156, 159, 202, 224 ஆகிய பாடல்களும் புறநானூற்றில் 38, 40, 166, 177, 178, 196, 261, 301, 322 ஆகிய பாடல்களும் அப்புலவர்கள் பாடியவை.

கூடலூர்:

ஆறுகள் கூடும் இடம் கூடல் எனப் பெயர்பெற்று, அங்கே அமைந்த ஊரும் கூடலூர் எனப் பெயர் பெற்றிருக்கலாம்.

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள கடலூர் கெடில நதியும் உப்பனாறும் கூடும் இடத்தில் அமைந்துள்ளது. கடலூர் என்றும் இன்று வழங்கப்படுகிறது. இந்த ஊர் கடல் அருகே அமைந்துள்ள காரணத்தால் கடலூர் எனப் பெயர் பெற்றதாகக் கூறப்படும் கருத்து அவ்வளவு ஏற்புடையதல்ல. கூடலில் அமைந்த ஊர் கூடலூர் எனப் பெயர் பெற்று அப்பெயரே கடலூர் என மருவி வழக்கில் வந்திருக்க வேண்டும் எனக் கூறுவதே பொருத்தமாகும்.

கூடலூர் என்ற பெயருடன் மலைநாட்டில் ஒரு கூடலூர் இருந்ததாகத் தெரிகிறது. இன்றைய ஊட்டி மலைத் தொடரில் மைசூர் செல்லும் வழிலுள்ள கூடலூர் இது போலும்.

மதுரைக் கூடலூர் கிழார் என்ற தொடர் மதுரையை அடுத்து இருக்கும் கூடலூரைக் குறிப்பதாகக் கொள்ளலாம். இன்றைய மதுரை மாவட்டகம்பங் கூடலூர் போலும்.

நற்றிணையில் 200, 380 ஆகிய பாடல்களையும் , புறநானூற்றில் 299 ஆம் பாடலையும் பாடிய கிழாரும் கூடலூரைச் சேர்ந்தவர்கள்.

முதுமொழிக் காஞ்சியை இயற்றியவரும் ஐங்குறு நூறு தொகுத்தவருமான கிழார் என்ற புலவர் கூடலூரைச் சேர்ந்தவரே.

உறையூர்:

உறந்தை, உறையூர், கோழி, நாச்சியார் கோவில் ஆகிய நான்கு பெயர்கள் இவ்வூருக்கு உண்டு. உறந்தை என்னும் முதலில் அமைந்த பெயராகும். சுங்கஇலக்கியங்களில் உறந்தை என்னும் சொல்லாட்சியே மிக்கிருக்கின்றது.

வளங்கொழிக்கும் காவிரியாற்றின் கரையில் சோழர்களின் தலைநகராய்ப் பண்டைக் காலத்தில் உறையூர் அமைந்திருந்ததாக அறிய முடிகின்றது.

'ஊர் எனப்படுவது உறையூரே" எனப் பாராட்டுமளவிற்குப் புகழ் பெற்ற நகராக விளங்கியிருக்கிறது. உறப்பு என்னும் சொல் செறிவு என்னும் பொருளுடையது. மக்கள் செறிந்திருந்த அதாவது உறைந்திருந்த ஊர் உறையூர் என்று பெயர் பெற்றுள்ளது.

நெய்தல்

காவிரிப் பூம்பட்டினம்:

கடற்கரையில் உண்டாகும் நகரங்கள் பட்டினம் என்று பெயர் பெறும்.

"முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும்" (புற.218)

தமிழர் பழம் பெருமையை நிலைநாட்டிக் கொண்டு இருந்த பெரு நகரங்களுள் காவிரிப்பூம்பட்டினம் ஒன்று. புகார், பூம்புகார் போன்றன பிற பெயர்கள். சங்ககாலத்தில் 'காவிரிப்பூம்பட்டினம்' என்ற பெயரையும் புகார் என்ற பெயரையும் காண்கின்றோம். சோழ நாட்டின் துறைமுகப்பட்டினமாகவும் தலைநகராகவும் இருந்தது.

வெண்பாக்கம்:

கடற்கரையை அடுத்த பெருமணற் பகுதியில் கடல் வளத்தை நம்பி வாழும் மக்கள் உறைந்தனர். இங்குள்ள ஊர்கள் கடலையடுத்தும் உப்பங்கழியையடுத்தும் தாழைவேலிகளுடன் காணப்பட்டன. இந்த ஊர்களைப் பாக்கம் என்பர்.

சென்னை மாவட்டத்துள் இருந்த தலம் 'சென்னைக்கருகில் உள்ள பூண்டி நீர்த் தேக்கத்துள் மூழ்கியது. நீர்த் தேக்கக் கரையில் புதிய கோவிலொன்று கட்டப்பட்டுள்ளது என்ற எண்ணம் இதனைக் குறித்து அமைகிறது. சுந்தரர் பதிகம் இதனைக் குறித்தமைகிறது.

'ஏராரும் பொழினிலவு வெண்பாக்கம் இடம் கொண் காராரு மிடற்றான்' எனப் பாடுகின்றார் இவர் (சேக்கிழார் வழியில் சிவதலங்கள். 99-41).

பாலை

இங்கு வாழும் மக்கள் மறவர் , எயினர் எனப்படும் இவர்கள் வாழும் ஊர் 'குறும்பு' எனப்படும். "கடுங்கண் மறவர் கல்கெழு குறும்பின்" (அக.87-7) எனக் கற்கள் நிரம்பியப் பகுதியில்

‘குறும்பு’ அமைந்திருந்தமையை இந்த அகநானூற்றுப் பாடலடி தெரிவிக்கிறது. சங்க காலத்தையும் இடைக்காலத்தையும் கொண்டும் இன்று காணப்படும் , இன்று புதிதாகச் சூட்டப்படும் பெயர்களையும் காண ஊர்ப் பெயர் வரலாறு பற்றிய எண்ணம் ஒன்றையும் நாம் பெற இயலுகிறது. தமிழர் வாழ்வில் இயற்கைப் பெயர்களே முதல் பெயராக அமைந்திருக்க முடியும் என்பதும் , சங்ககாலத்தில் குடியிருப்புப் பெயர்களும் மிகுந்த பயிற்சி பெற்றன என்பதும் இடைக்காலத்தில் இயற்கையோடு பக்தி மிகுந்த இடம் பெற்ற நிலையையும் நாம் கண்டோம்.

4. மணிமேகலையில் ஊர்ப்பெயர்கள்

ம. அரும்பு,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழாய்வத்துறை,
பிஷப் ஹீபர் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி-17.

முன்னுரை

இரட்டைக்காப்பியங்கள் எனப்படும் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் பழங்காலத் தமிழகத்தை எடுத்துக்காட்டுகின்ற சீரிய காப்பியங்களாகும். சீத்தலைச்சாத்தனார் இயற்றிய மணிமேகலைக் காப்பியத்தில் தமிழகத்தின் ஊர்களை அவர் குறிப்பிட்டுக் காட்டுவதோடு, பலவகையான மதத்தைச் சார்ந்தோர் வாழ்ந்த பிறதேசத்தின் ஊர்களையும் குறிப்பிட்டுக் காட்டுகின்றார். அங்ஙனம் மணிமேகலையில் காணப்படும் ஊர்ப்பெயர்களை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஊர்ப்பெயர் - விளக்கம்

மனிதனது அடிப்படைத் தேவைகளாகிய உணவு, உடை, இருப்பிடம் என்பனவற்றுள் இருப்பிடம் என்பது மனிதன் வாழ்வதற்குரிய இடத்தைக் குறிப்பதாகும். தொடக்கக்காலத்தில் நாடோடியாக வாழ்ந்த மனிதன் நாகரிகம் வளர வளர தனக்குரிய இடத்தைத் தேர்ந்தெடுக்க ஆரம்பித்தான். தான் தேர்ந்தெடுத்தப் பகுதியைப் பிறர் கண்டறிந்து வரவும், தன் இருப்பிடத்தைப் பிறர்க்குக் குறித்துச் சுட்டவும் ஏதேனும் ஓர் அமைப்பில் அதனை ஒரு பெயரிட்டு அழைக்க ஆரம்பித்தான். இவ்வாறு அழைக்கப்பட்ட பெயரே ஊர்ப்பெயராகும்.

மணிமேகலையில் தமிழக ஊர்கள்

காவிரிப்பூம்பட்டினம்

காவிரியாறு கடலோடு கலக்குமிடத்தில் காவிரிப்பூம்பட்டினம் உள்ளது. இது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் சோழர் தலைநகராகச் சிறந்து விளங்கியது. காவிரிப்பூம்பட்டினம், பூம்புகார், புகார் நகரம் எனப் பல்வேறு பெயர்களைப் பெற்றிருந்தது. இவ்வூர் பற்றி மணிகேலை,

> ''**காவிரிப்பட்டினங்** கடல் கொளு மென்றவத்
> தூவுரை கேட்டு துணிந்தவ ணிருந்தது'' (கச்சிமாநகர் புக்ககாதை.135)

எனக் குறிப்பிடுகின்றது. காவிரிப்பூம்பட்டினம் சிறந்த துறைமுக நகரமாகும். இவ்வூர் மருவூர்ப்பாக்கம் (புறநகர்) பட்டினப்பாக்கம் (அகநகர்) என்னும் இருபிரிவுகளைப் பெற்றிருந்தது.

> ''**காவிரிப்** படப்பை நன்னகர் புக்கேன்''
> (ஆபுத்திரனோடு மணிபல்லவம் அடைந்த காதை.16)

> ''கவேரக் கன்னிப் பெயரொடு விளங்கிய
> தவாக்களி மூதூர்ச் சென்று பிறப்பெய்தி''
> (பீடிகைகண்டு பிறப்புணர்ந்த காதை.52)

இத்தகைய சிறப்புப் பெற்ற காவிரிப்பூம்பட்டினம் இன்றைய நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ளது.

காகந்தி

சோழ மன்னனுக்கு கணிகை வயிற்றில் உதித்தவன் ககந்தன் என்பவன் ஆவான். பரசுராமனுக்கு அஞ்சிப் புகார் நகரை விடுத்துச் செல்ல இருந்த தன் தந்தையின் ஆணையால் அவன் அப்பதியைக் காத்தான். ககந்தனால் காக்கப்பட்டதால் அவ்வூருக்கு காகந்தி எனப் பெயரிட்டான் சோழ மன்னன். இதனை,

> ''துயர் நீங்கு இளவியின் யான் தோன்றளவும்
> ககந்தன் காத்தல் **காகந்தி** யென்றே
> இயைந்த நாமம் இப்பதிக்கிட்டு'' (சிறை செய் காதை.36-38)

இவ்வடிகள் விளக்குகின்றன.

மணிமேகலையில் பிறநாட்டு ஊர்கள்

அங்கநாடு

கங்கைநதியால் வளம்பெறும் நாடு அங்கநாடாகும். முற்பிறவியில் மணிமேகலையின் தமக்கையராகிய தாரை, வீரை என்பவர்களைக் கச்சய நகரத்தை ஆண்ட வீரக்கழணிந்த துச்சயன் என்னும் பெயருடைய ஒருவன் மணந்தான் என்பதை,

"இன்னும் கேளாய் இலக்குமி! நீ : நின்
தவ்வையர் ஆவோர், தாரையும் வீரையும்
ஆங்க அவர்தம் **அங்கநாட்டு** அகவயின்
கச்சயம் ஆளும், கழல்கால் வேந்தன்,
துச்சயன் என்போன் ஒருவன் கொண்டனன்" (மந்திரங்கொடுத்தகாதை 10:50-54)

என்ற அடிகளால் அறியலாம்.

அசோதரம்

கடல் ஒளி போன்ற முழக்கத்தையுடைய அசோதரம் என்னும் நகரத்தையாளும், இரவிவர்மனுடைய ஒப்பற்ற பெருந்தேவியாகிய அமுதபதி என்பவள் வயிற்றில் இலக்குமி என்னும் பெயருடைய மகளாக மணிமேகலை முற்பிறவியில் பிறந்திருக்கிறாள். இச்செய்தியை,

அரவக் கடலொலி **அசோதரம்** ஆளும்
இரவிவன்மன் ஒருபெருந்தேவி அமுதபதி வயிற்று
இலக்குமி யென்னும் பெயர் பெற்றுப் பிறந்தேன்"
(பீடிகை கண்டு பிறப்புணர்ந்த காதை 9:38-41)

என்ற அடிகள் விளக்குகின்றது.

அரிபுரம்

கோவலன் முற்பிறவியில் செய்த தீவினையால் பெற்ற சாபத்தை மணிமேகலை கூறுகின்றது. கோவலன் முற்பிறவியில் சங்கமன் என்னும் பெயரோடு வாழ்ந்தான் எனவும் சங்கமன் அரிபுரம் சென்று அணிகலன் விற்றான் எனவும் கூறப்பெற்றுள்ளது. அரிபுரம் என்று மணிமேகலை கூறுவது சிங்கபுரமாகும். அரி என்பதும் சிங்கம் என்பதும் ஒரே பொருளுடையன இது கலிங்க நாட்டில் இருந்ததாகக் கூறப்பெற்றுள்ளது. இச்செய்தி மணிமேகலையில் பின்வருமாறு இடம் பெற்றுள்ளது.

"யாவரும் வழங்கா விடத்திற் பொருள் வேட்டுப்
பல்கலன் கொண்டு பலரறியாமல்
எல்வனை யாளோ **டரிபுர** மெய்திப்
பண்புக் கலம் பகர் சங்கமன் தன்னை" (வஞ்சிமாநகர் புக்க காதை.26:20-23)

அவந்தி

மணிமேகலையில் அவந்தி என்னும் நாடு குறிப்பிடப்பட்டுள்ளது. அவந்தி நாட்டு மக்கள் நகை செய்யும் கொல்லர் தொழிலை உடையவர் என்று மணிமேகலைக் குறிப்பிடுகின்றது. இதனை,

"மகத வினைஞரும் மராட்டக் கம்மரும்
அவந்திக் கொல்லரும் யவனத் தச்சரும்" (சிறைச்செய் காதை.13:1-2)

என்ற அடிகளால் அறியலாம்.

இரத்தின தீவம்

மணிபல்லவத்திற்கு அருகில் இரத்தின தீவம் இருப்பதாகவும், இரத்தின தீவத்தில் சமந்தம் என்ற மலை இருப்பதாகவும், சாது சக்கரன் என்பவன் இரத்தின தீவம் சென்று தருமசக்கரம் உருட்டி வந்துள்ளதாகவும் மணிமேகலை கூறுகிறது.

"சாது சக்கரன் மீவிசும்பு திரிவோன்
தெருமர லொழித்தாங் **கிரத்தினத்** தீவத்துத்
தருமசக்கரம் உருட்டினன் வருவோன்" (மந்திரங்கொடுத்த காதை 10:24-26)

மணிமேகலை தன் முற்பிறப்பினை அறிந்த தன்மையை உணர்ந்தவள் தீவதிலகை. அவள் மணிபல்லவத்தின் அருகில் உள்ள இரத்தின தீவினை காக்கும் தொழிலை மேற்கொண்டவள் ஆவாள்.

"தீவதிலகை செவ்வன முரைக்கும்
ஈங்கித நயலகத்து இரத்தின தீவத்து
ஓங்குயர் சமந்தத்துச்சி மீமிசை" (பாத்திரம் பெற்ற காதை 11:20-22)

என்ற அடிகள் விளக்குகின்றன.

இலங்காதீவம்

இலங்கையையே இலங்காதீவம் என்று மணிமேகலை கூறுகின்றது. ஈழநாட்டில் சிறந்த மணிகள் கிடைத்தனவென்றும், மணிகள் கிடைத்த தீவையே மணிமேலை மணி பல்லவம் என்று அழைத்தாகவும் தெரிகிறது.

"இலங்காதீவத்துச் சமனொளியென்னும்
சிலம்பினையெய்தி வலங்கொண்டு மீளும்
தரும சாரணர் தங்கிய குணத்தோர்" (கச்சி மாநகர் புக்க காதை 28:107-109)

கபிலபுரம்

கோவலனின் முற்பிறப்பைப் பற்றிக் கூறும்பொழுது கபிலபுரம் என்ற ஊர் கூறப்பெற்றுள்ளது. கலிங்க நாட்டில் இவ்வூர் உள்ளது. மணிமேகலையில் கபிலை எனக் கூறப்பெற்றுள்ளது. இதனை,

"காசில் பூம்பொழில் கலிங்க நன்னாட்டுத்
தாயமன்னர் வசுவுங் குமரனும்
சிங்கபுரமும் செழுநீர்க் கபிலையும்
அங்காள்கின்றோ ரடற்செருவுறு நாள்"

(வஞ்சி மாநகர் புக்க காதை 26:15-18)

என்ற அடிகளால் அறியலாம்.

மகதநாடு

மறந்தும் மழை பெய்தலை மறக்காத மகத நன்னாட்டிற்கு ஒப்பற்ற பெரிய திலகம் போன்றது என அறிஞர்களால் பாராட்டப்பெறும் சிறப்பினை உடையது மகத நாடு.

"முறந்தும் மழைமாறா மகத நன்னாட்டுக்
கொரு பெருந்திலகமென் றுரவோருரைக்குங்
கரவரும் பெருமைக் கபிலையம் பதியின்"

(வஞ்சிமாநகர் புக்க காதை 21 :174-176)

மணிபல்லவம்

மணிபல்லவம் என்பது ஒரு சிறிய தீவு. தன்னை வணங்கியவர்களுக்கு பழம்பிறப்பின் செய்தியைத் தெரிவிக்கும் புத்த பீடிகை யொன்றும், கோமுகி என்னும் பொய்கையும் இத்தீவில் இருந்தன. கடலால் சூழப்பட்ட மணிப்பபல்லவத்தீவில் மணிமேலையை வைத்துவிட்டு மணிமேகலாத் தெய்வம் மறைந்த செய்தியும் கூறப்பட்டுள்ளது.

"அந்த ரமாறா ஆறைந்தி யோசனைத்
தென்றிசை மருங்கிற் சென்று திரையுடுத்த
மணிபல்லவத்திடை மணிமேகலா தெய்வம்
அணியிழை தன்னை வைத்தகன்றது"

(சக்கரவாளக்கோட்ட முரைத்த காதை 6:211-214)

முடிவுரை

மணிமேகலையில் தமிழ்நாட்டு ஊர்களை விட பிறதேசத்து ஊர்களே அதிகம் காணப்படுகின்றன. மணிமேகலை குறிப்பிடும் ஊர்களின் மூலம் அவ்வூர்களின் பெருமைகளையும் வரலாற்றுக் குறிப்புகளையும் அறிய முடிகின்றது.

துணைநின்ற நூல்கள் :

1. கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனாரின் மணிமேகலை மூவமும் உரையும் - ந.மு.வேங்கடசாமி நாட்டார் ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை
2. மணிமேகலை - அ. மாணிக்கனார்
3. தமிழக ஊர்ப் பெயர்கள் - கே. பகவதி
4. தஞ்சை மாவட்ட ஊர்ப்பெயர்கள் - சந்திரசேகரன்
5. இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள் - ஆளவந்தார்

5. அகநானூற்றில் ஊர்ப் பெயர்கள்

முனைவர். க. அழகர்,
இணைப்பேராசிரியர் &
தமிழ்த்துறைத் தலைவர்,
இராஜுக்கள் கல்லூரி,
இராஜபாளையம்.

முன்னுரை :

சங்க கால மக்களின் வாழ்வியல் நிலைகளைப் படம் பிடித்து காட்டுவன எட்டுத்தொகை நூல்களாகும். அவற்றுள் ஒன்று அகநானூறு ஆகும். இந்நூல் 400 பாடல்களால் ஆனது. இந்நூலை 158 புலவர்கள் பாடியுள்ளனர். இந்நூலில் உள்ள பாடல்கள் 1 முதல் 120 வரை களிற்றியான நிரை எனவும், 121 முதல் 300 வரை மணிமிடைப்பவளம் எனவும், 301 முதல் 400 வரை நிலத்திலக்கோவை எனவும் மூவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இந்நூல் மன்னர்கள், குறுநில மன்னர்கள், ஊர்ப்பெயர்கள், வள்ளல்கள், வரலாற்றுச் செய்திகள், இயற்கை வர்ணனை, உள்ளுறை, இறைச்சி போன்ற செய்திகளைக் காட்டுகின்றன. அவற்றுள் அகநானூற்றில் காணும் ஊர்ப்பெயர்களை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

ஊர்ப்பெயர் - பொருள் விளக்கம் :

ஊர் என்னும் சொல்லுக்கு, கிராமம், நகரம், இடம, ஊர்தல், நகர்தல், தினபெடுத்தல், பரிவேடம், ஏறிச்செல் எனப் பொருள் கூறுகிறது தமிழ் அகராதி (ப.200). இக்கருத்தையே க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி,

"மக்கள் வசிக்கும் எல்லைகளை வரையறுக்கப்பட்ட இடம்" எனப் பொருள் கூறுவதை அறியலாம். (ப.165). பெயர் என்னும் சொல் ஒருவரிடமிருந்து, மற்றொருவரை அல்லது ஒன்றிலிருந்து மற்றொன்றை வேறுபடுத்தித் தெரிந்து கொள்ளவும், பேச்சில் குறிப்பிடவும் பயன்படுத்தும் அடையாளச் சொல் பெயர் ஆகும். பெயர் என்றும் சொல்லுக்கு நாமம், புகழ், ஆள், பெருமை பொருள் உணர்வதைத் தமிழ் அகராதி கூறுவதிலிருந்து அறியலாம். (ப.762)

அகநானூற்றில் ஊர்ப்பெயர்கள் :

<u>பொதினி</u> - இது ஆவியின் மலையாகும். இது இ·து பழனி என்னும் ஊராகும். இக்கருத்தையே அகநானூறு,

"முருகன் நற்போர் நெடுவேள் ஆவி" (பா.1)

என்றும்,

"நெடுவேள் ஆவிப் பொன்னுடை
நெடுநகர்ப் பொதினி" (பா. 81)

என்றும் கூறுவதை அறியலாம்.

<u>உறையூர்</u> - வெண்ணெல்லும் மதிலும் நாற்புறமும் வேலியாகச் சூழப்பெற்ற தித்தன் என்னும் சோழ மன்னனின் ஊர் உறையூர் ஆகும்.

"மழைவளம் தருஉம் மாவெண் தித்தன்
பாண்ட ரெல்லின் உறந்தை ஆங்கன்" (பா. 6)

<u>தொண்டி</u> - இது சேர நாட்டின் கடற்கரைக்கண் உள்ள ஒரு ஊர் ஆகும்.

"மணம் கமழ்பாக்கத்துப் பகுக்கும்
வளம் கெழு தொண்டி" (பா.10)

"செங்கோற் குட்டுவன் தொண்டி அன்ன" (ஐங், பா.178)

<u>பாழிநகரம்</u> - இது நன்னனின் நகரம் ஆகும். இக்கருத்தையே அகநானூறு,

"பாழி அன்ன கடியுடை வியல் நகர்ச்
செறிந்த காப்பு இகழ்ந்து" (பா-15)

<u>கொற்கை</u> - இது பாண்டிய நாட்டில் தாமிரபரணியின் உலக முகத்தில் அமைந்த பழைய துறைமுகப் பட்டினம் ஆகும். பாண்டியர்களின் தலை நகரங்களுள் ஒன்றாகும் என்பதை அகநானூறு சுட்டும்.

"மறப்போர்ப் பாண்டியர் அறத்தின் காக்கும்
கொற்கை அம்பொரும் துறைமுகத்தின் அன்ன" (பா-27)

<u>கொல்லிமலை</u> - சேர பரம்பரைக்கு உரிய மலையாகும். இக்கருத்தையே அகநானூறு சுட்டும்.

"முள்ளூர் மன்னன் கழல் தொடிக் காரி
செல்லா நல்லிசை நிறுத்த வல்வில்
ஓரிக் கொன்று சேரலற்கு ஈத்த
செவ்வேர்ப் பலவின் பயங்கெழு கொல்லி" (பா-209)

<u>கோவலூர்</u> - இது பெண்ணை ஆற்றங்கரையிலுள்ள நகரம் ஆகும். இது ஒரு காலத்தில் அதிமான் நெடுமான் அஞ்சியால் வெல்லப்பட்டது. முள்ளூர்க்குத் தலைவன் திருமுடிக் காரி ஆகும்.

"துஞ்சா முழவின் கோவற்கோமான்
நெடுந்தேர்க்காரி கொடுங்கால முன்துறை
பெண்ணை அம் பேரியாற்று நுண் அறல்கடுக்கும்" (பா-35)

<u>ஆலங்கானம்</u> - இவ்வூர் தலையாலங்கானம் என்னும் ஊராகும். தொண்டை நாட்டிலுள்ள தேவாரப் பாடல் பெற்ற தலம் ஆகும். சேரன், சோழன், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோ வேண்மான், பொருநன், ஆகிய ஏழு அரசர்களை பாண்டியன் வென்றான். இவன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டிய நெடுஞ்செழியன் என அழைக்கப்படுகிறான்.

"கொய் சுவல் புரவிக் கொடித்தேர்ச் செழியன்
ஆலங்கானத்து அகன் தலை சிவப்ப" (பா-36)

<u>குடவாயில்</u> - இது சோழ நாட்டிலுள்ள ஒரு மூதூர் ஆகும். சோழ மன்னர்கள் பிற நாட்டு மன்னர்கள் தந்த அரும் பொருள்களை, இவ்வூரிலுள்ள கருவூலத்தில் வைத்துப் பாதுகாத்தனர் என்பதை அகநானூறு காட்டும்.

"தண்குடவாயில் அன்னோன்" (பா-44)

"கொற்றச் சோழர் குடந்தை வைத்த நாடுதரு
நிதியினும் செறிய, அருங்கடிப் படுக்குவன் அறனிலயாயே" (அகம், பா.60)

<u>கழுமலம்</u> - இவ்வூர் சேரநாட்டின் கண் உள்ள ஓர் ஊராகும்.

"தின்சேரர்க்க கணையின் அகப்பட கழுமலம் தந்த" (பா-44)

<u>அழும்பில்</u> - குடவாயிலின் வளர்த்திற்கு அழும்பில் என்னும் ஊரைச் சுட்டுவதை அறியலாம்.

"அழும்பில் அன்ன அறாஅ யாணர்" (பா-44)

<u>குறுக்கை ஊர்</u> - அன்னி என்பவன் குறுக்கைப் போர்க்களத்தில் திதியன் என்பானது புன்னை மரத்தைத் துணித்தான் என்பதை அகநானூற்று சுட்டும்.

"அன்னி குறுக்கைப் பறந்தலை திதியன்
தொல்நிலை முழுமுதல் துமியப் பண்ணி
புன்னை குறைத்த ஞான்றை" (பா-45)

<u>முசிறி</u> - இது சேர நாட்டின் கண் அமைந்த ஊராகும். சுள்ளி என்பது இதன் பழைய பெயராகும்.

"முதுநீர் முன்துறை முசிறி முற்றி" (பா-57)

"சேரலர் சுள்ளியம் பேரியாற்று வெண்நுரை கலங்க
யவனர் தந்த வினைமான் நன்கலம், பொன்னொடு
கூறியோடு பெயரும் வளங்கெழு முசிறி, வந்து" (பா-149)

<u>திருப்பரங்குன்றம்</u>

மதுரைக்கு மேற்கிலுள்ள திருப்பரங்குன்றம் முருகப் பெருமாளின் அறுபடை வீடுகளுள் என்றாகும். இதனை அகநானூறு,

"சினம் மிகு முருகன் தண் பரங்குன்றத்து" (பா-59)

குழுமூர் - இது உதியின் சேரல் என்பவனுடைய ஊராகும்.

"நல்ஆன் பரப்பின் குழுமூர் ஆங்கன்" (பா-168)

<u>விளங்கில்</u> - இஃது கடலன் என்ற குறுநில மன்னனின் ஊராகும்.

"ஒளிறுவேல் அழுவம் களிறு படக்கடக்கும்

மாவண் கடலன் விளங்கில அன்ன" (பா-81)

வேங்கடம் - இது திரையனின் மலையாகும்.
"வென்வேல் திரையின் வேங்கட நெடுவரை" (பா-85)

நியமம் - இவ்வூர் கோசருடைய ஊராகும்.
"கருங்கட்தோசர் நியமம் ஆயினும்" (பா-90)

கருவூர் - இது சேரரது பழைய தலைநகரம் ஆகும்.
"திருமாவியல் நகர்க் கருவூர் முன்துறை" (பா-93)

புறந்தை - இ∴து பெரியன் வள்ளலின் ஊராகும்.
"பரியுடை நல்தேர்ப் பெரியன் விரி இணர்ப்
புன்னை அம்கானல் புறந்தை முன்துறை" (பா-100)

சிறுகுடி - காவிரியின் வடபால் உள்ள இவ்வூர் வாணன் என்பானுக்கு உரியது. இக்கருத்தை அகநானூறு,
"காய்நெற் படப்பை வாணன்
சிறுகுடித் தண்டலை" (பா-204)

இடையாறு - இது இடையாற்று மங்கலம் என்னும் ஊராகும்.
"வெல்போர்ச் சோழன் இடையாற்று அன்ன" (பா-141)

ஆமூர் - இவ்வூர் முக்காவல் நாட்டில் உள்ளது. இதனை அகநானூறு,
"சேண்விளங்கு சிறப்பான் ஆமூர் எய்தினும்" (பா-159)

தேம்முதுகுன்றம்
தேன் மணக்கும் முதுகுன்றமாகிய இவ்வூர் இந்நாளில் விருத்தாசலம் என அழைக்கப்படுகிறது.
"தேம்முது குன்றம் இறந்தனர் ஆயினும்" (பா-197)

முடிவுரை :

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய சங்க இலக்கியமான அகநானூற்றில் ஏராளமான ஊர்ப்பெயர்கள் காணப்படுகின்றன. குறுநில மன்னர்கள் ஆண்ட நாடு, நகரம், ஊர் போன்ற செய்திகளை இவ்வாய்வின் மூலம் தெளிவாக உணர முடிகிறது.

6. தமிழ் ஊர்ப் பெயர்கள் சமஸ்கிருதமாக மொழிமாற்றம் செய்யப்பட்டமை

க.ப.அறவாணன்
முன்னாள் துணைவேந்தர்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்.

சம்பந்தர், சுந்தரர், அப்பர், மாணிக்கவாசகர் எனும் சைவ நாயன்மார்களும் பெரியாழ்வார் முதலான பன்னிரண்டு ஆழ்வார்களும் முறையே தமிழக சிவத்தலங்களும் வைணவத் தலங்களும் நெடுந்தொலைவு நடந்தும் பல்லக்கிலும் பயணம் செய்து ஆங்காங்கு கோயில் உறையும் கடவுளரைப் பாடினர். அவர் தம் பாடல்கள் பிற்காலத்துத் தேவாரங்களாகவும், திருவாசகமாகவும், திவ்வியப்பிரபந்தமாகவும் தொகுக்கப்பட்டன. அக்காலச் சூழலில் இஃது அரும்பணியாகும். இவ்வாறு தொகுக்கப்பட்டத் தேவாரப் பாடல்கள் தில்லைச் சிற்றம்பலத்தில் பாதுகாக்கப்பட்டதாகவும், அவற்றை முதல் இராசராச சோழன் (கி.பி.11 ஆம் நூற்றாண்டு) மீட்டெடுக்க முயன்ற போது அவற்றுள் பெரும்பாலானவை கரையானால் அழிக்கப்பட்டிருந்ததாகவும் தமிழ் பக்தி இலக்கிய வரலாறு தெரிவிக்கிறது. ஓலைச்சுவடிகளில் நானூறு ஆண்டுகளுக்கு மேல் அவை இருப்பது என்பது அரிய செயல். தேவாரப் பாடல்களைக் கோயில் தோறும் ஓதுவார் பாடுவதற்கு முதல் இராசராசனும் இன்னபிற பிற்காலச் சோழ மன்னர்களும் தத்தம் காலத்தில் ஆக்கம் செய்துள்ளனர்.

இவ்வாக்கம் பக்தி இலக்கியத்திற்குச் செய்யப் பெற்ற மிகப்பெரும் நன்றிச்செயல் என்பதில் ஐயமில்லை. இவ்வாக்கத்தின் ஊடே பாடல் பெற்ற தலங்களின் தனித்தமிழ்ப் பெயர்களும் அங்கிருந்த இறைவனின் தனித்தமிழ்ப் பெயர்களும் இறைவியின் தமிழ்ப் பெயர்களும் தாம் பெற்றிருந்த தமிழ் வடிவத்தை இழந்து சமஸ்கிருத வடிவம் பெற்றன. இது தானே நிகழ்ந்த நிகழ்வன்று.

திருத்தலப் பெயர்களில் தமிழ் சமஸ்கிருத மாற்றத்திற்கு சோழர்காலத்தில் மிகுந்த ஆதிக்கம் பெற்றிருந்த உள்ளூர்ப் பிராமணர்களும் வெளியூர்ப் பிராமணர்களுமே காரணம் ஆவர் என்பதை சோழர்கால அரசியல் வரலாறும் சமுதாய வரலாறும் உறுதிப்படுத்துகின்றன.

சோழர், சமஸ்கிருதம் மட்டுமே அறிந்த பிராமணர்களை வட இந்தியாவில் இருந்தும் காஷ்மீரில் இருந்தும் தம் ஆட்சி இடமான தமிழகத்தில் குடியேறி உள்ளனர். அவ்வாறு குடியேற்றப்பட்ட பிராமணர்கள் மட்டும் அல்லாமல் தொடர்ந்து தானாக வந்த பிராமணர்களும் தமிழகத்தில் குடியேறினர். சோழர்காலத்தில் அவர் காலத்திற்கு முன்பிருந்த செங்கற்கோயில்களும் மண சுவர்க் கோயில்களும் கருங்கற்களால் செய்யப்பெற்ற கற்றளிகள் ஆக்கப்பெற்றன. சோழ அரசர்கள் மட்டுமின்றி அவர்தம் அரசியரும் அவர்தம் குடும்பத்தாரும் இவ்வாறு கற்றளிகள் ஆக்கிய தொண்டில் ஈடுபட்டனர். குறிப்பாக முதல் இராசராச சோழனின் வளர்ப்புத் தாயான அவனது தமக்கை குந்தவை தேவி, பின் வந்த செம்பியன்மாதேவி ஆகியோர் இத்தகு பணியில் முன்னின்றனர். கோயில்கள் மிகப்பெரிய அளவில் சோழர்காலத்தில் எடுப்பிக்கப்பட்டன. முன்பே நாயன்மார்களும் ஆழ்வார்களும் பாடப் பெற்ற கோயில்கள் அனைத்தும் சோழர் காலத்தில் கற்றளிகள் ஆக்கப்பெற்றன. அக்கோயில்களில் கருவறையில் நுழைந்து பூசை முதலானவற்றைச் செய்வதற்கு சமஸ்கிருதம் மட்டுமே அறிந்த சிவ பிராமணர்கள் அனுமதிக்கப்பட்டிருக்க வேண்டும். சிவ பிராமணர்கள் சோழர்கள் காலத்தில் கருவறையில் நுழைந்து பூசை முதலானவற்றைச் செய்வதற்காக அனுமதிக்கப்பட்டார்கள் என்ற குறிப்பு கல்வெட்டுக்களில் பேசப்படுகிறது. சமஸ்கிரும் மட்டுமே அறிந்தவர்களும் சமஸ்கிருதத்தையும் தமிழையும் அறிந்தவர்களும் கோயிலுள் நுழைந்தமையால் இறைவனைப் பூசை செய்யும் மொழியாக சமஸ்கிருதம் சோழர்காலத்தில் எள்தாக இடம்பெற்றது. ஏனைய ஒடுக்கப்பட்ட சாதியார் கோயிலுல் நுழைய அனுமதிக்கப்படுவதில்லை. கருவறை மூலவரை அருகு இருந்து வழிபட அனுமதிக்கப்பட வில்லை என்பதற்குத் தில்லை சிற்றம்பலக் கோயிலில் நடராசரை வணங்க நந்தன் என்ற ஒடுக்கப்பட்ட குலத்தினருக்கு அனுமதி மறுக்கப்பட்டமை சான்றாகும். நந்தனின் போராட்டத்தைப் பெரிய புராணத்தை எழுதிய சேக்கிழார் திரு நாளைப் போவார் நயினார் வரலாறு எனும் புராணத்தில் வருணித்துள்ளார். ஆக, சோழர்காலத்தில் சிவள்

கோயில்களில் கருவறை பிராமணர்களுக்கு மட்டுமே பூசை செய்ய அனுமதிக்கப்பட்டது என்பதும் இறைவனை வழிபடும் மொழியாக சமஸ்கிருதம் ஆயிற்று என்பதும் தெளிவு.

சோழருக்கு முன்பு நாட்டை ஆண்ட பல்லவர், ஆந்திராவிலிருந்து வந்த தெலுங்கு குலத்தினர் எனினும் அவர் காலத்திலேயே வட இந்திய குப்தர் காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட வேதங்களும் வைதீக முறைகளும் தமிழ்க் கோயில்களில் நுழைந்துவிட்டன. இவை சோழர் காலத்தில் பேராதிக்கம் பெற்றன. சோழர் காலத்தில் வாழ்ந்த பிராமணர்கள் குறிப்பிட்ட இடத்தில் வாழ்ந்து வந்தனர். அவர்கள் வேதங்களைக் கற்கவும் கோயில் பணி செய்யவும் அரசர்களால் நிலங்கள், மானியமாக வளங்கப்பெற்றன. பிரம்மதேயம் எனும் அருட்கொடைக்குப் பெயரிட்டு பல ஊர்கள் வரியிலி நிலமாக ஆக்கப்பட்டு பிராமணர்களுக்கு வழங்கப்பட்டன. பிரம்ம என்றால் பிராமணர். தேயம் என்றால் நாடு. பிராமணருக்கு உரிய நாடு என்பது பொருள். ஆரசன் தன் ஆட்சிக்கு உதவும் முகமாக நன்கு கற்ற பிராமணர்களைப் பிரம்மதேயத்திடம் கேட்டு பெற்றுக்கொள்ளவது உண்டு. எனவே அரசியலில் பிராமணர்களின் பங்கு மிகக் கணிசமாக இருந்தது. கி.பி. 10 ஆம் நூற்றாண்டில் சோழ நாட்டை ஆண்ட சுந்தர சோழனின் மூத்த மகன் ஆதித்த கரிகாலனை அமைச்சரவையில் பொறுப்பு வகித்த இரண்டு பிராமண அதிகாரிகள் கொன்று விட்டனர். அவர்களை அடையாளம் கண்டு பின்னாளில் அரசனாகப் பொறுப்பேற்ற முதல் இராசராச சோழன் மரண தண்டனை விதித்துள்ளான் என்பது வரலாறு. பிரம்மதேயங்களுக்கு அரசன் செய்யும் மிகக் கூடுதலான சலுகைகள் மக்களிடையே சீற்றத்தை உண்டாக்கி உள்ளன. மூன்றாம் இராசராசன் காலத்தில் (1223) தலைச்சங்காடு என்ற பிரம்மதேயக் கிராமத்தில் அவ்வூர் மக்களால் அங்கிருந்த நிலவுரிமைப் பத்திரங்களும் புத்தகங்களும் அழிக்கப்பட்டு கிளர்ச்சி செய்யப்பட்டது.

தமிழ்க் கல்விக்குத் தம் நானூறு ஆண்டுகால ஆட்சியில் எந்தச் சிறு முயற்சியும் செய்யாத சோழ மன்னர்கள் நூற்று எழுபத்தோரு பிரம்ம தேயங்களை மானியங்கள் கொடுத்து உதவி செய்ததோடு ஆங்காங்கே சமஸ்கிருதத்தில் எழுதப்பட்ட ரிக் முதலான நான்கு வேதங்களையும் உபநிடதங்களையும் வியாகரணங்களையும் பிராமணப் பிள்ளைகள் குழந்தைப் பருவத்தில் இருந்து கற்க கடிகை எனும் கல்லூரி வசதி செய்து தந்திருந்தார்கள். தமிழருடைய பண்பாடிற்குப் பொருந்தாத திரௌபதி கதையைக் கொண்டுள்ள மகாபாரதத்தைத் தமிழிலே மொழிபெயர்க்க ஏற்பாடு செய்தார்கள். அம்மட்டுமின்றி ஊர் நடுவே உள்ள அம்பலத்தில் மகாபாரதத்தை நன்கு கற்ற வேத பிராமணர் ஒருவர் சமஸ்கிருத மொழி வழியே எடுத்துச் சொல்ல மானியம் வழங்கிஅ து தொடர்ந்து நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மறுதலையாகத் தமிழில் உள்ள சங்க இலக்கியங்கள், திருக்குறள், திமுமந்திரம், சிலப்பதிகாரம் முதலானவற்றைக் கதையாகச் சொல்லவோ, சமஸ்கிருத மொழியில் மொழிபெயர்க்கவோ எவ்விதம் முயற்சியும் செய்யப்பெறவில்லை. காஞ்சிபுரத்தில் கடிகை என்ற பெயருடைய ஒரு சமஸ்கிருத பல்கலைக்கழகமே பல்லவர் காலத்தில் இருந்து நடத்தப்பட்டது.

ஆக, சோழஅரசியலும் சோழ அரசரிடமும் அருகு இருந்த பெரும் செல்வாக்கைப் பெற்று முன்பே கட்டப்பட்டிருந்த சைவக் கோயில்களுக்கு உள் பூசை செய்யும் உரிமையுடன் சென்ற சமஸ்கிருதம் மட்டும் அறிந்த பிராமணர்கள் அந்தக் கோயிலின் பெரையும் கோயில் மூலவர் பெயரையும் கோயில் இருந்த ஊரின் பெயரையும் மாற்றி இருக்க வேண்டும்.

துமிழகத்தில் உள் சமஸ்கிருதமாக்கப்பட்ட ஊர்கள் ஒரு காலத்தில் தனித் தமிழ்ப் பெயரைக் கொண்டிருந்தன என்பதும் இன்னும் சொல்லப் போனால் சைவ நாயன்மார்களாலும் ஆழ்வார்களாலும் பாடப்பெற்ற அவ்வூர்ப் பெயர்கள் மூலவர்கள் பெயர்கள் தூய தமிழிலே இருந்தன என்பதும் அவை சோழர் காலத்தில் தான் மாற்றத்தைப் பெற்றிருக்க வேண்டும் என்பதும் எளிதாக ஊகிக்கத்தகும். இவை இவ்வாறு மாற்றம் பெற்றன என்பதற்கு ஓரிரு சான்று: உலகப் புகழ்பெற்ற நடராசர் உருவத்தை மிகப் பழங்காலம் தொட்டுப் பெற்றிருக்கும் கோயில் திருநல்லம் என்ற பெயருடையதாகும். இந்த அழகான ஊர்ப்பெயர் பின்னர் கோனேரி ராஜபுரம் என்று மாற்றம் பெற்று இன்றுவரை தொடர்கிறது. காவிரி ஆற்றுத் தென்கரையில் உள்ள ஊர் திரு ஆவூர் என்பதாகும். இவ்வூர் பசுபதீஸ்வரம் என்று மாற்றப்பட்டு இறைவனின் பெயர் பசுபதீஸ்வரர் என்றும் இறைவி மங்கள நாயகி என்றும் மாற்றம் பெற்றன. தென்னார்க்காடு மாவட்டத்தில் திருஞானசம்பந்தரால் பாடப்பெற்ற திருமுதுகுன்றம் எனும் பெயர் விருத்தாசலம் என்று

ஆயிற்று. இறைவனின் பெயர் விருத்தகிரீஸ்வரர் என்றும் இறைவியின் பெயர் விருத்தாம்பிகை என்றும் என்றும் மாற்றம் பெற்றன. காவேரி; தென்கரையில் உள்ள சேரி நாட்டுத் திருமறைக்காடு வேதாரண்யம் என்று மாற்றப்பட்டது. திருஞானசம்பந்தரின் தேவாரத்தில் மறைவனம் என்றே இவ்வூர் குறிக்கப்படுகிறது. இவ்வூரில் உள்ள இறைவனின் பெயர் வேதாரண்யீஸ்வரர். இறைவியின் பழந்தமிழ்ப் பெயர் யாழைப் பழித்த மொழியம்மை. அப்பெயர் வேதாரண்ய ஈஸ்வரி என்று மாற்றப்பெற்றது. ஞானசம்பந்தரால் பாடப்பெற்ற பாண்டிய நாட்டு ஊர் திருப்புத்தூர். இவ்வூர் ஸ்ரீதலீஸ்வரர் என்றும் அம்மனின் பெயர் சிவகாமி அம்பாள் என்றும் மாற்றம் பெற்றன. சம்பந்தரின் தேவாரம் திருப்புத்தூர் இறையாரை (272) என்பதாகும். குாவிரித் தென்கரையில் உள்ள திரு சோற்றுத் துறை மாற்றம் பெற்று அவ்வூர் அம்மன் அன்னபுரணி என்று ஆக்கப்பெற்றார்.

"ஒப்பர் ஒப்பர் பெருமான் ஒளி வெண்ணீற்று
அப்பர் சோற்றுத்துறை சென்று அடைவோமே"

என்பர் ஞானசம்பந்தர் (பா.294). புகழ் பெற்ற மயிலாடுதுறை இறைவன் மயூரநாதர் என்று மாற்றம் பெற்றார். அம்மனின் பெயர் அபயாம்பிகை என்று மாற்றம் பெற்றது. சம்பந்தர் இவ்வூரில் உள்ள இறைவன் மேல் பாடிய தேவாரப்பா பல, மயிலாடுதுறை என்றே முடிகிறது. (பா. 404 – 413) சிதம்பரம் அண்ணாமலை நகரை அடுத்துள்ள திருவேட்களம் எனச் சம்பந்தரால் பாடப்பெற் திருத்தலம். சம்பந்தர் இங்குள்ள இறைவனை வேட்கள நன்னகராரே எனத் தேவார எண் 415 முதல் 424 வரை பாடுகிறார். வேட்கள நன்னகரார் என்ற திருப்பெயர் பாசுபதேஸ்வரர் என்றும் அம்மன் பெயர் சற்குணாம்பாள் என்றும் மாற்றப் பெற்றன. திருமுதுகுன்றம் எனும் பெயர் ஞானசம்பந்தரால் பாடல் தோறும் முதுகுன்றே முதுகுன்றே என்று (570 இல் இருந்து 578) பாடப்பெற்றது. இப்பெயர் விருத்தாசலம் என்று இறைவனின் பெயர் வேதகரீஸ்வரர் என்றும் மாற்றப்பெற்றன. தொண்டை நாட்டில் உள்ள திருவோத்தூர் எனும் திருத்தலக் கடவைள ஓத்தூர் சடையீர் (581), ஓத்தூர் நாட்டீர் (583) எனத் திருப்பித் திருப்பி சம்பந்தர் பாடியிருப்பார். இப்பெயர் வேதபுரீஸ்வரர் என்னும் அம்மையின் பெயர் பால குசலாம்பிகை என்றும் மாற்றம் பெற்றன. சென்னைக்கு அண்மையில் உள்ள திருவேற்காட்டு இறைவனை ஞானசம்பந்தர் 'வேற்காடு உயர்ந்தார்' என்று பாடுவார். இப்பெயர் வேதபுரீஸ்வரர் என இறைவனுக்கும் பாலாம்பிகை என்று இறைவிக்கும் பிற்காலத்து மாற்றப்பெற்றன. சிவஞான போதம் எழுதிய மெய்கண்டதேவரின் ஊர் திருத்தூங்கானை மாடம் என்பதாகும். இப்பெயரை ஒவ்வொரு பாடலிலும் சொல்லி சம்பந்தர் பாடியுள்ளார் (634-644). திருத்தலத்தின் பெயர் பிரள காளேஸ்வரர் என்றும் அம்மனின் பெயர் கடந்தைநாயகி என்றும் மாற்றம் பெற்றன.

கிட்டத்தட்ட பெரும்பான்மைத் தலங்கள் தேவார காலத் தமிழ்ப் பெயரை இழந்து சமஸ்கிருத பெயரை எய்தவைக்கப் பெற்றன. ஊர்ப் பெயரையும் உள்ளூர் இறைவனின் பெயரையும் இறைவியின் பெயரையும் நூற்றாண்டுகளாகச் சொல்லிச் சொல்லி வழிபட்ட தமிழ் மக்கள் முற்றும் வேற்று மொழியில் சமஸ்கிருதத்திற்கு மாற்றம் செய்யப்பட்ட போது எப்படி பொறுத்துக் கொண்டார்கள்? என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. தமிழர்கள் தமக்கு இழைக்கப்படும் ஆதிக்கச் செயல்களையும், தம் மொழிக்கு இழைக்கப்படும் அழிவுச் செயலையும் எதிர்க்க ஆற்றல் அற்ற கோழைகளாக இருந்தனர் என்பதையே இச்செய்திகள் நமக்கு எடுத்துரைக்கின்றன. இவர்கள் இத்தகு அஞ்சி அடங்கும் அடிமைகளையும் பிரம்மதேயமாகப் பெற்றுத் துய்த்தனர் என்பதற்கு நிறைய சான்றுகள் உள்ளன. ஒரு சமயம் அரசன் அறிவித்த பிரம்மதேய கிராமங்களின் எல்லையில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து கொண்டிருந்த உழுகுடிகளின் வீடும் நிலமும் இருந்தன. ஊரிமை பெற்ற அம்மக்களின் ஒப்புதல் பெறாமலே சோழ மன்னன் அவர்களது நிலத்தையும் வீட்டையும் பிரம்மதேய அந்தணருக்கு நன்கொடையாக வழங்கி ஊர்க்கோயில் கல்வெட்டிலும் வெட்டச் செய்துவிட்டான். ஆதனால் பாதிப்படைந்த அவ்வூர் மக்கள் வாய் திறக்கவே இல்லை. அப்படியே ஏற்றுக்கொண்டு அங்கு புதிய எஜமானர்களான பிராமணர்களின் நிலத்தில் உழுகுடியாக வேலை செய்தார்கள்.

7. புறநானூற்றில் ஊர்ப்பெயர்கள்

திருமதி.வி.அன்னபாக்கியம்,
விரிவுரையாளர், தமிழ்த்துறை,
எஸ்.எப்.ஆர்.மகளிர் கல்லூரி(தன்னாட்சி)
சிவகாசி.

முன்னுரை :

எட்டுத்தொகை நூல்கள் தமிழகத்தின் நாகரிகத்தினை உலகம் முழுமைக்கும் எடுத்துக்காட்டும் இணையற்ற நூல்களாகும். நம் முன்னோர்களின் காதல் வாழ்வையும், வீர வாழ்வையும் அழகுற படம் பிடித்துக் காட்டுகின்றன. மூன்றடி முதல் பல அடிகளைப் பெற்ற பாடல்களைத் தன்னகத்தே பெற்று விளங்கும் இத்தொகை நூல்களில் 'புறநானூற்றில் இடம் பெற்றுள்ள ஊர்ப்பெயர்களைப் பற்றி ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

தொல்காப்பியத்தில் 'ஊர்' என்ற சொல் :

மனித இனம் ஓரிடத்தில் நிலைத்து வாழத் தொடங்கிய காலத்திலேயே இடப்பெயர்களும் தோற்றம் பெற்றிருக்கலாம். இவ்விடப்பெயர்கள் மக்களின் வாழிடம், வாழ்க்கை முறை இவற்றைப் பொறுத்து அமைந்துள்ளன. சங்கப்பாடல்களில் இடம் பெற்றுள்ள ஊர்ப்பெயர்களின் பொருள் சில நேர்முகமாகவும் சில மறைமுகமாகவும் விளங்குமாறு புலவர்கள் பாடியுள்ளனர்.

தொல்காப்பியம் மக்கள் வாழுமிடத்தை 'ஊர்' என்றே குறிப்பிட்டு உள்ளதைக் கான முடிகிறது. முப்பெரும் பிரிவையுடைய இவ்விலக்கண நூல் மொத்தம் எட்டு இடங்களில் ஊர்ப்பெயர்களைக் குறிப்பிட்டுள்ளது. அவை அனைத்தும் மூன்றாவது பிரிவாகிய பொருளதிகாரத்தில் தான் இடம் பெற்றுள்ளன.

வ.எண்	தொல்காப்பியத்தில் இடம் பெற்றுள்ள சொற்கள்	இடம் பெற்றுள்ள இயல்கள்	நூற்பா எண்
1.	பேரூர்	அகத்திணையியல்	37வது நூற்பா
2.	ஊரது சார்வும்	அகத்திணையியல்	40வது நூற்பா
3.	ஊர்க்கொலை	புறத்திணையியல்	3
4.	ஊர்ச்செரு	புறத்திணையியல்	13
5.	ஊரொடு தோற்றம்	புறத்திணையியல்	30
6.	ஊரும் பெயரும்	களவியல்	11
7.	ஊரும் அயலும்	செய்யுளியல்	159
8.	ஊரும் பெயரும்	மரபியல்	6

தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர் ஊர்ப்பெயர்களின் பின்னொட்டாக அமைந்த சொற்கள் குறிப்பிட்ட நிலத்திற்கு உரியவை என ஆய்ந்து கண்டறிந்து வெளியிட்டுள்ளார்.

1. முல்லை நிலத்திற்குரியவை - பாடி, சேரி, பள்ளி
2. குறிஞ்சி நிலத்திற்குரியவை - சிறுகுடி, குறிச்சி
3. மருத நிலத்திற்குரியது - ஊர்
4. நெய்தல் நிலத்திற்குரியவை - பட்டினம், பாக்கம்
5. பாலை நிலத்திற்குரியது - பறந்தலை

இவற்றின் அடிப்படையிலேயே ஊர்ப்பெயர்கள் அமைந்திருக்கும் முறையைச் சங்கப்பாடல்கள் சுட்டும்.

சான்று:

1. முல்லை - ஏணிச்சேரி, இலவந்திகைப்பள்ளி
2. குறிஞ்சி - சிறுகுடி, குறுங்குடி, ஆலங்குடி
3. மருதம் - முனையூர், விரியூர்
4. நெய்தல் - மருவூர்ப்பாக்கம், பட்டினப்பாக்கம்
5. பாலை - வெண்ணிப்பறந்தலை

முதலிய பல ஊர்ப்பெயர்களையெல்லாம் சங்கப்பாடல்களில் காணலாம்

புறநானூற்றில் ஊர்ப்பெயர்கள் :

பொதுவாக ஊாப்பெயர்கள் அனைத்தும் இடுகுறிப்பபெயராகவோ, காரணப்பெயராகவோ, காரணப்பொதுப்பெயராகவோ, காரணச்சிறப்புப்பெயராகவோ அமைந்திருக்கக் காணலாம். அந்த வகையில் அவ்வூர்ப் பெயர்கள் இன்றும் தொடர்ந்து வழக்கில் இருக்கின்றனவா, அப்பெயர் தாங்கிய ஊர்களின் தற்கால இருப்பிடங்கள் எவை, அவற்றின் பெயர்கள் என்ன மாற்றங்களைப் பெற்றிருக்கின்றன என்பதனைப் புறநானூற்றில் இடம் பெற்றுள்ள ஊர்ப்பெயர்களைக் கொண்டு நாம் இக்கட்டுரையில் ஆராய்வோம்.

அம்பர்: சோழநாட்டில் அம்பர் என்ற பெயருடன் ஓர் ஊர் உள்ளது. தஞ்சை மாவட்டத்தில் பூந்தோட்டம் புகைவண்டி நிலையத்திற்குத் தென்கிழக்கே சுமார் நான்கு கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. அவ்வூரை அடுத்து அம்பர் மாகாணம் உள்ளது. அம்பர் என்னும் ஊர் அருவந்தை என்ற வள்ளலுக்கு உரியதாக இருந்தது என்பதை அம்பர்கிழான் அருவந்தையைக் கல்லாடனார் பாடிய புறநானூற்றுப்பாட்டு ஒன்று தெரிவிக்கிறது.

புலவர் பெயர் ஊர்ப்பெயருடன் இணைத்துக் கூறப்பட்டதைப் போல வள்ளல் முதலியோரின் பெயரும் ஊர்ப்பெயருடன் இணைத்துக் கூறப்பட்ட மரபும் இருந்தது என்பதற்கு இது **ஒரு சான்று.**

"காவிரி அணையும் தாழ்நீர்ப் படப்பை
நெல்விளை கழனி அம்பர் இழவோன்
நல் அருவந்தை வாழியர்...." (புறம்.385 : 8-10)

அழும்பில் :

அகநானூறு, புறநானூறு, மதுரைக்காஞ்சி, சிலப்பதிகாரம் ஆகிய இலக்கியங்களில் அழும்பில் என்ற ஊர்ப்பெயர் குறிக்கப்பெற்றுள்ளது.

மானவிறல்வேள் என்ற குறுநில, மன்னனுக்குரியது அழும்பில் என்று மதுரைக்காஞ்சி கூறுகிறது. அழும்பில் ஒழியாத புதுவருவாயினையுடையது என்றும் சென்னிக்குரியது என்றும் அகநானூறு கூறுகிறது.

புதுக்கோட்டைச் சீமையிலே உள்ள அம்புக்கோயில் என்ற ஊரே பழைய அழும்பில் என்ற கருத்தும் உள்ளது. இவ்வூரில் உள்ள சிவன்கோயில் 'அழும்பிற் கோவில்' என வழங்கி அதுவே நாளாடைவில் அம்புக்கோயில் என மருவி ஊர்ப்பெயராயிற்று என்பார் ரா.பி.சேதுப்பிள்ளை அவர்கள்

சங்க இலக்கியப் பாடல்களிலும் சோழ நாட்டு ஊராகக் கூறப்பெற்றிருப்பதால் ரா.பி.சேதுப்பிள்ளையின் கருத்து பொருத்தமானதாகத் தோன்றுகிறது.

"மாறுகொள் முதலையொடு ஊழ்மாறு பெயரும்
அழும்பிலன் அடங்கான் தகையும் என்றும்" (புறம்.283:5-6)

ஆமூர் :

ஐங்குறுநூறு, அகநானூறு, புறநானூறு, சிறுபாணாற்றுப்படை ஆகிய சங்க இலக்கியங்கள் நமக்கு உணர்த்தும் ஊர்ப்பெயர்களுள் ஆமூர் என்பதும் ஒன்று.

அழகிய குளிர்ந்த கிடங்கினையும் அரியகாவலையும், அகன்ற அகங்களையும், நிறைந்த அந்தணர்களையும் உடையது ஆமூர் என்று சிறுபானாற்றுப்படை கூறுகிறது.

சோழரின் ஆமூர் அன்ன நலமுடையவள் தலைவி எனத் தலைவியின் நலம் பாராட்டுகிறது ஐங்குறுநூறு.

கொடுமுடி என்னும் மன்னனால் பாதுகாக்கப்பெறுவதும் நெடுந்தொலைவிலும் விளங்கித் தோன்றுவதும் ஆகிய சிறப்பினையுடையது ஆமூர் என்று அகநானூறு கூறுகிறது. இந்த ஆமூர் குறும்பொறை மலையின் கீழ்ப்பாலுள்ள பாலை நிலத்தது.

கவுதமன் சாதேவனார் என்ற சங்ககாலப்புலவர் இவ்வூரினர். ஆகவே ஆமூர்க் கவுதமன் சாதேவனார் எனப்பெயர் பெற்றார்.

ஆமூரைச் சேர்ந்த மல்லன் ஒருவனைச் சோழன் போர்வைக் கோப்பெருநற்கிள்ளி வென்றபொழுது சாத்தந்தையார் என்ற புலவர் பாடியபாடல் ஒன்று புறநானூற்றில் இடம் பெற்றுள்ளது.

"இன்கடுங் கள்ளின் ஆமூர் ஆங்கண்
மைந்துடை மல்லன் மதவலி முருக்கி
ஒருகால் மார்பு ஒதுங்கின்றே: ஒருகால்
வருதார் தாங்கிப் பின் ஒதுங்கின்றே" (புறம்.80:1-4)

இன்றைய மாமல்லபுரம் இருக்கும் பகுதி ஆமூர் நாடாக இருந்திருக்க வேண்டும்.

ஆய்குடி :

ஆய் என்ற குலத்தில் வந்த ஆய் அண்டிரன் என்னும் வள்ளலின் ஊரே ஆய்குடி என்பது. இவ்வூர் பொதியமலை நாட்டைச் சார்ந்தது. பொழிய மலைச்சாரலில் இன்றும் இவ்வூர் உள்ளது.

ஆய் அண்டிரன் காலத்தில் சிறந்திருந்த ஓர் ஊர் ஆய்குடி எனத்தெரிகிறது. அண்டிரன் ஆயர் குடியினை இவனுடைய குலத்தினராகிய ஆயர்கள் வாழந்த பகுதியாக இது இருந்திருக்கலாம். எனவே ஆயர்குடி என்பது ஆய்குடி என்ற பெயரைப் பெற்றிருக்கலாம்.

"தென் திசை ஆஅய்குடி இன்றாயின்

பிறழ்வது மன்னோ, இம் மலர்தலை உலகே" (புறம்.132:8-9)

ஆலங்கானம்: ஆலங்கானம் என்ற இவ்வூர்ப்பெயர் அகநானூறு, புறநானூறு, மதுரைக்காஞ்சி, ஆகிய சங்க இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளது. கலை இலக்கியங்களில் ஆலங்கானம் என்றும் தலையாலங்கானம் என்றும் குறிக்கப்பெற்றுள்ளது.

ஊர்களின் அமைப்பு கருதி தலை, இடை, கடை என்ற முன் ஒட்டுகளில் ஒன்று ஊர்ப்பெயர்களோடு இணைத்துக் கூறும் முறையையொட்டி ஆலங்கானம் என்ற ஊர்ப்பெயர்களோடு தலை என்ற அடைமொழியுடன் தலையானங்கானம் என வழங்கப்பெற்றுள்ளது.

பாண்டியன் நெடுஞ்செழியன் தன்னை இளையன் என எண்ணி இகழ்ந்து தன் மீது படையெடுத்த சேர, சோழ, வேளிர், ஐவர் ஆக எழுவரைப்போரில் வென்ற இடம் ஆகும். இப்போரில் சேர, சோழர்கள் கொல்லப்பட்டனர் என்றும் தெரிகிறது. பெற்ற வெற்றியின் காரணமாகத் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் எனப்பட்டான்.

"இமிழ்கடல் வளைகிய ஈண்டு அகன் கிடக்கை
தமிழ்தலை மயங்கிய தலையாலங் கானத்து
மன் உயிர்ப் பன்மையும் கூற்றத்து ஒருமையும்
நின்னொடு தூக்கிய வென்வேற் செழிய" (புறம்.19:1-4)

ஈரந்தை :

ஈரந்தை என்ற இடம் தோயன் மாறன் என்ற வள்ளலுக்குரியது எனத் தெரிகிறது. கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக்குமரனார் இவனைப் பாடியுள்ளார்.

ஈரம் என்ற சொல் நீர்ப்பற்று என்னும் பொருளுடையது. நீர்பற்று அமைந்த பகுதியில் உள்ள ஊர் என்பதால் இப்பெயர் பெற்றிருக்கலாம்.

'ஈர்ந்தையோனே பாண்பசிப் பகைஞன்" (புறம் 180:7)

எயில் :

எயில் என்பது கோட்டை எனப்பொருள்படும் சொல்லாயினும் ஊர்ப்பெயராகவும் அமைந்திருந்தமை சங்க இலக்கியங்கள் மூலம் நாம் அறியும் செய்தியாகும்.

பாண்டிநாட்டு ஊர்களுள் ஒன்று எயில் என்னும் பெயருடையது. பூதப் பாண்டியனின் நண்பனாகிய ஆந்தை என்ற சிற்றரசன் இவ்வூரை ஆண்டதாகத் தெரிகிறது.

செஞ்சியின் அருகில் எய்யல் என்னும் பெயருடைய ஊர் ஒன்று உள்ளது. எயில் என்ற ஊர்ப்பெயரே எய்யல் என ஆகி இருக்கலாம். என்று கருத இடம் உள்ளது.

"பொய்யா யாணர் மையற் கோடான்
மாவனும் மன்னயில் ஆந்தையும், உரைசால்
அந்துவஞ் சாத்தனும் ஆதன் அழிசியும்
வெஞ்சி இயக்கனும் உளப்படப் பிறரும்
கண்போல் நண்பின் கேளிரொடு கலந்த" (புறம்.71:11-15)

துறையூர் :

துறையூர் ஓடைகிழார் என்ற புலவர் ஒருவர் பாடிய சங்க இலக்கியப் பாடல் ஒன்றில் 'தண்புனல்' வாயில் துறையூர் இடம் பெற்றுள்ளது. இப்புலவர் ஊரால் பெயர் பெற்றுள்ளார்.

நாள்தோறும் குளிர்ந்த நீர் ஓடுகின்ற நீர்த்துறையின் கண் அமைந்திருக்க வேண்டும் என சங்க இலக்கியம் கூறுகிறது. துறையூர் என்ற பெயருடன் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் விழுப்புரம் வட்டத்தில் ஓர் ஊரும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் லால்குடி வட்டத்தில் ஓர் ஊரும் முசிறி வட்டத்தில் ஓர் ஊரும் உள்ளன.

"நினக் கொத்து நீ நாடி
நல்கினைவிடுமதி பரிசில் கல்கலும்
தண்புனல் வாயில் துறையூர் முன்றுறை
நுண்பல மணலினும் ஏத்தி
உண்குலம் பெரும நீ நல்கிய வளனே'' (புறம்.136:23-27)

நாஞ்சில் :

நாஞ்சில் என்பது மலையின் பெயர் அம்மலையை உள்ளடக்கிய நாடும் அப்பெயர் பெற்றது. மதிலுறுப்பு என்னும் பொருளுடைய நாஞ்சில் என்னும் சொல் மதிலோடு கூடிய கோட்டை அமைந்த மலைக்குப் பெயராய் அமைந்துள்ளது.

நாஞ்சில் நாடு முன்னர்த் திருவிதாங்கூர் இராச்சியத்தின் ஒரு பகுதியாக இருந்து 1956 முதல் தமிழ்நாட்டைச் சேர்ந்திருப்பதாகவும் அப்பகுதியே இன்றைய கன்னியாகுமரி மாவட்டமாகும் எனவும் கலைக்களஞ்சியம் காட்டுகிறது.

"செவ்வரைப் படப்பை நாஞ்சில் பொருந'
சிறுவெள்ளருவிப் பெருங்கல் நாடனை" (புறம்.137:12-13)
"உயர்சிமைய உழாஅ நாஞ்சில் பொருந" (புறம்.139:7)

சிகரங்களை உடைய மலையைப் புறநானூறு குறிப்பதைக் காணலாம்.

பிசிர் :

கோப்பெருஞ்சோழனின் ஆருயிர் நண்பராகிய ஆந்தையார் என்ற சங்ககாலப்புலவர் இவ்வூரைச் சார்ந்தவர்.

"தென்னம் பொருப்பன் நன்னாட்டுள்ளும் பிசிரோன்" (புறம். 215) என்ற கோப்பெருஞ்சோழனின் கூற்று 'பிசிர்' என்னும் ஊர் பாண்டி நாட்டது என்பதைக் காட்டுகிறது.

இப்பொழுது இவ்வூர் இராமநாதபுரம் மாவட்டத்தில் பிசிர்க்குடி என்று வழங்கப்பெறுவதாக ரா.பி.சேதுப்பிள்ளை தம் ஊரும்பேரும் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

"பெருங்கோக் கிள்ளி கேட்க இரும்பிசிர்
ஆந்தை அடியுறை எனினே, மாண்டநின்
இன்புறு பேடை அணிய, தன்
அன்புறு நன்கலம் நல்குலனி நினக்கே" (புறம்.67:11-14)

பிசிர் என்ற சொல்லுக்கு நீர்த்துளி அல்லது ஊற்றுநீர் என்று பொருள் இருப்பதால் நல்ல ஊற்று நீர் கிடைக்கும் ஊராய் இருந்து நீர்நிலையால் இவ்வூர் 'பிசிர்' எனப்பெயர் பெற்றதா என்ற கருத்து மேலும் ஆய்விற்குரியதாக உள்ளது.

மையல் :

வையை ஆற்றுக்கருகில் பொய்யாத புது வருவாயினையுடையதாக அமைந்திருந்தது மையல் எனும் ஊர் என்று புறநானூறு குறிப்பிடுகிறது.

"வையை சூழ்ந்த வளங்கெழு வைப்பிற்
பொய்யா யாணர் மையல் கோமான்" (புறம். 71:10-12)

செல்வம் முதலியவற்றால் வரும் செக்கு என்று பொருள் படும் மையல் என்னும் சொல் வையையாறு பாய்ந்து வளம் கொழித்த ஓர் ஊருக்குப் பெயராய் அமைந்திருக்கலாம் என்பது ஆய்வாளர் கருத்து.

வேங்கடம் :

"வடவேங்கடந் தென்குமரி
ஆயிடைத் தமிழ்கூறும் நல்லுலகம்" (தொல்.எழுத்து.சிறப்புப்பாயிரம் :1-3)

என்பது தொல்காப்பியம். இங்கு வேங்கடம் எனக் குறிக்கப்படுவது இப்பொழுது திருப்பதி என வழங்கும் மலைநாட்டு ஊர். வைணவத்தலம் வேங்கடம் தமிழ்நாட்டின் வடஎல்லையாக அமைந்திருந்தது.

"வேங்கட வரைப்பின் வடபுலம் பசித்தென
எங்கு வந்து இறுத்த என்இரும் போர்ஒக்கல்" (புறம்.391:7-8)

தொண்டை நாட்டை ஆண்ட சங்ககாலப் புல்லி என்ற தலைவனின் மலையாக வேங்கடத்தை அகநானூறு (61,85,209,393) கூறுகின்றன.

முடிவுரை :

"எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" என்பர் தொல்காப்பியர் சங்ககாலத்தலரும் ஏதேனும் ஒரு பொருளை அடிப்படையாகக் கொண்டே மேற்கண்ட ஊர்ப்பெயர்கள் வைக்கப்பட்டிருக்க வேண்டும். சங்கப்பாடல்களில் இடம் பெற்றுள்ள ஊர்ப் பெயர்களைக் காணுங்கால் பழந்தமிழரின் இயற்கையோடு இயைந்த இன்பியல் வாழ்வே நமக்கு நினைவுக்கு வருகிறது. அந்த அடிப்படையில் சங்ககாலத்தவர் தாம் வாழும் சூழலைத் தேர்ந்தெடுத்து, அதற்கு அழகுணர்ச்சியோடுப் பெயரிட்டுள்ளனர்.

8. "தேவாரத்தில் திருப்பாசூர், திருவெண்பாக்கம்"

செல்வி. மு.க.அனிதா
முனைவர் பட்ட ஆய்வாளர் (முழு நேரம்)
தமிழ்த்துறை, இராணிமேரி கல்லூரி, சென்னை - 04

"ஊரும் பெயரும் உடைத்தொழில் கருவியும்" (தொல்.நூ 1575) என்று ஊர் என்ற சொல்லாட்சியைத் தொல்காப்பியர் கையாண்டுள்ளார். சங்க இலக்கியங்களில் ஊர் என்ற சொல்லாட்சி பல இடங்களில் இடம் பெற்றுள்ளது.

"சான்றோர் பலர் யான் வாழும் ஊரே" (புறநானூறு பா.எண்: 191) என்ற புறநானூற்றுப் பாடல் வரியாலும் ஒரு தலைவன் **'ஊரன்'** என்று குறிக்கப்படும் முறையாலும் சங்ககாலத்தில் 'ஊர்' எனும் சொல்வழக்கு மக்களிடையே இருந்ததை உணரமுடிகிறது.

வரலாறும் ஊர்ப்பெயரும்:

"ஒரு நாட்டின் பழங்கால வரலாற்றையோ, பண்பாட்டையோ அறிந்துகொள்ள இலக்கியங்கள், சாசனங்கள், பழங்காசுகள், பிற நினைவுச் சின்னங்கள். எந்த அளவுக்குத் துணை புரிகின்றனவோ, அந்த அளவு துணை புரியும் தன்மையும், பெருமையும் ஊர்ப் பெயருக்கு உண்டு. ஆகவே தான் ஊர்ப்பெயரும் பழமையான எச்சங்கள் என்று கூறப்படுகின்றன" என்று ஆளவந்தார் (கல்வெட்டுகளில் ஊர்ப்பெயர்கள் ப-2) குறிப்பிட்டுள்ளார். காலந்தோறும் தொடர்ந்து வரும் ஊர்ப்பெயர்கள் அவ்வக்கால மக்கள் வாழ்வியலை அறிந்துக்கொள்ளப் பயன்படுகின்றன.

"இந்தியாவில் இடப்பெயராய்வுகளைப் பற்றிய ஆய்வுகள் தலபுராணங்கள் போன்ற நூல்களில் காணமுடிகின்றது" என்று நாச்சிமுத்து (தமிழ் இடப்பெயராய்வு ப-2) என்ற நூலில் கூறியுள்ளார்.

தமிழக ஊர்ப்பெயர்களை அறிய பழைய இலக்கியங்களும் புராணக்கதைகளுமே உதவுகின்றன. திருவள்ளூர் மாவட்டத்தில் பூண்டி ஒன்றியத்தில் அமைந்த திருப்பாசூர், திருவெண்பாக்கம் ஆகிய இரண்டு தலங்களும் தேவாரத்தில் சமயக்குரவர்களான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவராலும் சிறப்புப் பெற்றுள்ளது. மேலும் ஆய்வாளரின் ஒன்றியமாக இருப்பதாலும் **"தேவாரத்தில் திருப்பாசூர், திருவெண்பாக்கம்"** என்ற தலைப்பில் ஆய்வுக்கட்டுரை அமைகின்றது.

தேவாரப் பாடல் பெற்ற ஊர்கள்:

கி.பி. 6ம் நூற்றாண்டின் இறுதியில் சைவசமயம் தழைக்க அரும்பாடுபட்டவர்கள் அறுபத்து மூவர் ஆவர். இவர்களில் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் மற்றும் மாணிக்கவாசகர் ஆகிய நால்வர் சிறப்புக்குரியவர்கள். இவர்கள் அனைவரும் திருக்கோயில்கள் தோறும் சென்று அந்தந்தத் தலத்து இறைவனை வணங்கி, வழிபட்டுப் பாடல்களை அருளிய அருளாளர்கள். அப்படிப்பட்ட பாடல்களைப் பெற்ற தலங்கள் தேவாரப் பாடல் பெற்ற கோயில்களாகக் குறிப்பிடப்படுகின்றன.

திருவள்ளூர் மாவட்ட தேவாரப் பாடல் பெற்ற தலங்கள் மூன்று ஆகும். அவை கூவம், திருப்பாசூர், திருவெண்பாக்கம்(பூண்டி). வைப்புத்தலம் இரண்டு அவை, இருளஞ்சேரி, தொடுகாடு ஆகும். இங்கு பாடல் பெற்ற தலங்களான திருப்பாசூர், திருவெண்பாக்கம் ஆகிய இரண்டு ஊர்கள் மட்டுமே ஆராயப்படுகின்றன.

திருப்பாசூர்:

திருப்பாசூர் திருவள்ளூர் வட்டத்தில் பூண்டி ஒன்றியத்தில் அமைந்த ஊராகும். பாசு என்னும் சொல்லுக்கு மூங்கில் என்பது பொருள். இம்மூங்கில் இத்தலத்து விருட்சமாக இருந்தாலும் இம்மூங்கிலில் இத்தலத்து இறைவர் முளைத்தமையாலும் இத்தலம் பாசூர் என்னும் பெயரைப் பெற்றது. இவ்வூர் நீர்வளம், நிலவளம் காரணமாகப் பசுமையோடு இருத்தலின் பாசூர் என்று பெயர் பெற்றது என்றும் கூறுவர். இது சம்பந்தரால் பாடல் பெற்ற திருத்தலம் ஆகும்.

மூங்கில் புதர்களை மரம் வெட்டும் கருவியான கோடரி கொண்டு அழிக்கும்போது கோடரி வெட்டை இலிங்கத்திருவுருவில் பெற்று சுயம்புவாகத் தோன்றிய தலமாகத் திருப்பாசூர் அமைந்துள்ளது.

"பாரும் பலரும் பரவப்
படுவாய் பாசூர் அம்மானே" (தேவாரம் சுந்தரர்: 481)

என்று பாடியுள்ளார்.

இரட்டைப் புலவர்களான முதுசூரியன், இளஞ்சூரியன் பாசூர் கோயிலைப் பற்றியும் பாடியுள்ளனர். உலகம் முழுவமுதும் பரவியுள்ள ஈசனின் திருமேனியை ஓர் இடையன் வெட்டிய காரணம் என்ன? என முதுசூரியன் வினவ, அதற்கு இளஞ்சூரியன் தமக்குச் சொந்தமான இடத்தில் வாடகையின்றி அவர் தங்கியிருந்தால் எவ்வளவு நாள் தான் அந்த இடையன் பொறுத்திருப்பான்? எனவே தான் திருமேனியில் தழும்பு விழும்படி வெட்டினான் என நகைச்சுவை ததும்பப் பாடியுள்ளார். அப்பாடல் பின்வருமாறு,

"வேயீன்ற முத்தர் தமை வெட்டினா னோரிடையன்
தாயீன்ற மேனி தழும்புபட – பேயோகேள்
எத்தனை நாளானாலு மிடையன் பொறுப்பானோ
அத்தனையும் வேண்டுமவற்கு" (திருப்பாசூர் தல விளக்கம் ப-7)

பாசூர் ஊரின் அழகும் சிறப்பும்:

திருஞானசம்பந்தர் திருப்பாசூர் கிராம இயற்கை அழகு பற்றியும் அதன் சிறப்புகளைப் பற்றியும் (தேவாரம் 1-3 பதிகம் 196;1-11) பாடியுள்ளார். பின்வருமாறு,

"பைந்தண் மாதவி சோலை சூழ்ந்த பாசூரே"
"பாரின் மிசைவூர் பாடல் ஓவாப் பாசூரே"
"பைவாய் நாகம் கோடல் ஈனும் பாசூரே"
"பைங்கால் முல்லை பல்லரும் பீனும் பாசூரே"
"பாடற் குயில்கள் பயில்பூஞ்சோலைப் பாசூரே"
"பால்வெண் மதிதோய் மாடம் சூழ்ந்த பாசூரே"
"பண்ணின் மொழியார் பாடலோவாய் பாசூரே"
"பாசித்தடமும் வயலுஞ் சூழ்ந்த பாசூரே"
"பகுவாய் நாரை யாரல் வாழும் பாசூரே"
"பாவைக் குரவம் பயில்புஞ் சோலைப் பாசூரே"
"தேனும் வண்டும் இன்னிசை பாடும் திருப்பாசூர்"

என்று திருப்பாசூரின் வளத்தை இனிதாகப் பாடியுள்ளார்.

திருப்பாசூர் திருநாவுக்கரசராலும் சிறப்பிக்கப்பட்டுள்ளது. விண்ணுலகமும், மண்ணுலகமும் போற்றும் தலம் என்று கூறியுள்ளார். மேலும், இத்தலத்து இறைவரைப் பாசூர் மேய பரஞ்சுடர் என்று போற்றி அத்தகைய பரஞ்சுடரை நான் கண்டு உய்ந்தேன் என்றும் பாடிப் பரவசம் உற்றுள்ளனர்.

"பாண முலையாள் பாகனைஎம் பாசூர் மேயி
பரஞ்சுடரைக் கண்டடியேன் உய்ந்த வாரே" (திருத்தாண்டகம் 5ம் திருமுறை)

என்று பாடியுள்ளதின் மூலம் திருப்பாசூரின் பெருமையை அறியமுடிகின்றது.

மேலும் நாட்டுப்புற மக்களும் தங்கள் பாடலில்**"பாசூருக்கடுத்த பாக்கம் கிராமத்திலே"** என்று கூத்துப் பாடலில் தங்கள் ஊர்ப்பெயரை இணைத்துப்பாடியுள்ளதை அறியமுடிகின்றது.

திருவெண்பாக்கம்:

இவ்வூர் பதிகத்தில் வெண்கோயில் என்று குறிக்கப்பட்டுள்ளது. "வெண்கோயில் இங்கு இருந்தாயோ? என்று சுந்தரர் தாம் பாடிய பதிகத்தில் குறிப்பிட்டுள்ளார். திருவுளம்புதூர், திருவிளம்பூர் என்றும் இத்தலத்தை மக்கள் கூறுவர். இத்தலத்து இறவைர் வெண்பாக்கநாதர், இறைவியார் கனிவாய்மொழி அம்மை இங்குள்ள தீர்த்தம் கைலாய தீர்த்தம். இத்தலம் சுந்தரர் காலத்தில் இருந்த இடத்திலேயே இருந்தது. பின்னர் சென்னைக்குக் குடிநீர் வசதிசெய்ய மேயர் சத்தியமூர்த்தி பூண்டி நீர்த்தேக்கம் அமைத்ததால் இக்கோயில் ஏரிக்குள் மூழ்கிவிட்டது. இத்தலத்திலிருந்து விக்கிரகங்களை எடுத்து வந்து இப்பொழுது அழைக்கப்படும் பூண்டியில் வைத்துள்ளனர். பூண்டி நீர்த்தேக்கத்தின் கரையிலிருந்து பார்த்தால் கோவிலின் மதிலும் கோபுரமும் நீரில் மூழ்கி காட்சி தருவதைக் காணலாம்.

இறைவர் சுந்தரருக்கு ஊன்றுகோல் அளித்ததனால் ஊன்றீஸ்வரர் என்றும் அழைக்கப்பெறுவர். இறைவியார் சுந்தரர் காஞ்சியம்பதி வரையில் செல்லும் அளவும் மின்னல் போலத் தோன்றி ஒளிகாட்டிச் சென்றமையின் மின்னல் ஒளி அம்மை என்றும் கூறப்பெறுவர். இத்தலத்து விருட்சம் இலந்தை மரம். இத்தலம் இப்பொழுது பூண்டி ஊர்ப்பெயரைப் பெற்றுள்ளது.

இத்தலம் சுந்தரருடைய வரலாற்றுத் தொடர்புடையது. சுந்தரர் திருஒற்றியூர் வந்துற்றுச் சங்கிலியாரை மணக்கின்றார். மணக்கும்போது "நான் திருஒற்றியூரை விட்டுப் பிரியேன்" என்று சத்தியம் செய்கின்றார். ஆனால் சத்தியத்தைத் தவறி எல்லைக் கடக்கும்போது அவரது இரு கண்களின் பார்வை மறைகிறது. இதனால் வருந்திப் புறப்பட்டுத் திருவெண்பாக்கம் வருகின்றார். இறைவர் தமக்குத் தோழர் ஆதலின் அந்த உரிமையில் இறைவா என் கண்ணைக் கெடுத்தும் கோவிலில் இருக்கிறாயோ என்று வினவும்போது இறைவர் அவர் கேட்ட வினாவிற்கு விடையாக "உளோம் நீர்வந்த வழியே திரும்பிப்போம்" என்று கூறுகிறார். ஆனால் கோவிலில் ஓர் ஊன்றுகோலை வைத்தருளுகிறார். சுந்தரர் கோபத்துடன் அதனை வீசி எறியும்பொழுது அக்கொம்பு நந்தியின்காதைச் சிதைக்கிறது. இந்நந்தி இவ்வாறு காதை இழந்து இப்போது நீரில் மூழ்கி உள்ளது. நந்தி தேவருக்கு அருகே சுந்தரர் ஊன்றுகோலுடன் விளங்கும் உருவம் உள்ளது. இதையே பாடலில்,

"ஈன்றவனே வெண்கோயில் இருந்தா யோஎன்ன
ஊன்றுவதோர் கோலருளி உளோம் போகீர் என்றானே: (தேவாரம் பா.711)

எனவே கண்பார்வை இழந்த சுந்தரருக்கு ஊன்றுகோல் கொடுத்த கோயில் என்று இத்தலம் போற்றப்படுகின்றது.

இப்பதிகத்தில் இறைவரைப் பற்றி "உய்ய அருள் செய்ய வல்லான்", "உம்பர் தனித்துணை"; "பார்நிலவும் மறையோரும், பக்தர்களும் பணி செய்யத் தார் நிலவு நறுங்கொன்றைச் சடையன்"; "உலகமெலாம் நின்றவன்" என்று குறிப்பிட்டுள்ளன.

திருவெண்பாக்கம் அழகிய சோலையையுடையது என்பதை,

"ஏராரும் பொழினிலவு வெண்பாக்கம் இடம் கொண்ட
காரரும் மிடற்றான்" (தே.பா.99 ப.41)

எனப் பாடுகின்றார்.

திருவெண்பாக்கம், திருவிளம்பூதூர், திருவிளம்பூர் என்று சுந்தரரால் பாடப்பெற்ற இவ்வூர்கள் இப்பொழுது பூண்டி என்ற பெயரில் உள்ளது. நாட்டுப்புறப் பாடலிலும் பல்சுவையில் **"காடு நிறைஞ்ச பூண்டி குட்டி சிங்காரி" "என்றும் பூண்டி வண்டி வரும் – ஏராசா"** என்று ஒப்பாரியில் பாடுவதின் மூலமும் கிராமப்புற மக்கள் தங்கள் ஊர்பெயர்களைப் பாடியுள்ள முறையை அறியமுடிகின்றது. பூண்டியில் அமைந்துள்ள சத்தியமூர்த்தி நீர்த்தேக்கத்தினால் சென்னை மக்களுக்கு குடிநீர் வழங்கப்படுகின்றது. கற்கால மனிதர்கள் வாழ்ந்த இடமாக அட்டிரம்பாக்கம், குடியம் உள்ளது. கூதால்மாந்தர் அகழ்வாய்கம் அவர்கள் பயன்படுத்திய பொருட்களும் அருங்காட்சியகத்தில் வைத்துப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இது ஒரு சுற்றுலாத்தலமாகவும் விளங்குகின்றது.

முடிவுரை:

தொண்டை நாட்டின் வழிவந்த திருவள்ளூர் மாவட்டத்தில் பூண்டி ஒன்றியத்தில் அமைந்த இவ்வூர்கள் பண்பாட்டுச் சின்னங்களான கோயில்களைப் பெற்று சிறப்புக்குறியதாகத் திகழ்கின்றது. பக்தி இலக்கியம் மிகுந்த பூமியாகவும் உள்ளது. திருப்பாசூர் இப்பொழுதும் தன் பெயரைக் கொண்டே உள்ளது. ஆனால் திருவெண்பாக்கம் மட்டும் மருவி பூண்டி என்ற பெயரில் உள்ளது. வழிபாட்டுத்தலத்தோடு, சுற்றுலாத்தலமாகவும், மனதிற்கு அமைதியைக் கொடுக்கும் இடமாகவும் இவை இருக்கின்றன.

துணைநூற் பட்டியல்:

1. சுப்பிரமணியன் சா.வே. - தொல்காப்பியர் தெளிவுரை, மணிவாசகர் பதிப்பகம். சென்னை முதற்பதிப்பு – 2005.
2. புறநானூறு. ஔவை. துரைசாமிப்பிள்ளை – தொகுதி-I கழகவெளியீடு, சென்னை – 18 பதிப்பு – 2007.
3. ஆளவந்தார்.ஆர் - கல்வெட்டில் ஊர்ப்பெயராய்வு, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி முதற்பதிப்பு – 1983.
4. நாச்சிமுத்து. கி – தமிழில் இடப்பெயராய்வு, சோபாதம் பதிப்பகம், சென்னை முதற்பதிப்பு – 1983.
5. முரளி அரூபன்(மொ.ஆ) – திருப்பாசூர் தலவிளக்கம், திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் – 1999.
6. தேவாரத்திருப்பதிகங்கள் - ஞானசம்பந்தன் அச்சகம், தருமபுரம் பதிப்பு – 1954.

9. புறநானூற்றில் அறியலாகும் ஊர்கள்

ப. அனுசுயா,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
பிஷப் ஹீபர் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி-17.

முன்னுரை

தமிழ் இலக்கியங்கள் வாயிலாகத் தமிழரின் புலமையையும் சிறப்பையும் வாழ்வியல் முறைகளையும் நமக்குப் புலனாகின்றது. ஓர் ஊர் பெயரை நோக்கும் போது அந்த ஊர்ப் பெயர்த் தொடர்பான எண்ணங்களைத் தெரிய முடிகிறது. இலக்கியங்களை ஆராய்ந்தால் ஊர்ப்பெயர்க்கும் அதன் பழமைக்கும் வரலாற்றுத் தொடர்பிற்கும் ஏற்ப பல செய்திகள் புலனாகும்.

சங்க இலக்கியப் பாடல்களை இயற்றிய புலவர்கள், அவர்கள் வாழ்ந்த ஊர், மன்னர் வென்ற ஊர்கள், வளமான ஊர்கள் என பல ஊர்களில் பெயர்களை ஆங்காங்கே குறிப்பிட்டுள்ளார். அவ்வூர்களில் சில மருவி இன்று மாற்றம் பெற்றுள்ளன. சங்க பாடல்களின் காணப்படும் ஊர்களையும் அவ்வூர் சிறப்பைப் பற்றியும் அங்கு ஆண்ட மன்னர்கள் பற்றிப் குறிப்பையும் காணலாம்.

தமிழரின் சங்க கால ஊர் பெயர்களை நோக்கும் போது அலைவாய் ஆடுதுறை, காஞ்சி, புகார், வஞ்சி, கூடல் என பலப் பெயர்களைக் காண்கிறோம்.

தகடூர் – தருமரி

சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும் பொறையைக் காண வந்த மோசிகீரனார் என்னும் புலவர். அறியாது அரண்மனையில் இருந்த முரசுக் கட்டிலில் படுத்து உறங்கி விட்டார். கொலைத் தண்டம் பெறத் தக்க இதைச் செய்திருந்தும் அவர் தமிழ் கற்ற புலவர் என்ற மேன்மை கருதி அவரைத் தண்டிக்காது விட்டதோடு, அவருக்கு அருகே நின்று சாமரமும் விசீனான் சேரமான். அப்படிப்பட்ட சிறந்த தகடூர் இன்றைய தருமரி ஆகும்.

கானப்பேரெயில் - காளையார் கோயில்

வேங்கை மார்பன் என்னும் குறுநில மன்னனுக்கு உரியதாயிருந்த கானப்பேரெயியை வென்றதன் சிறப்புக் கருதி, பெருவழுதி என்னும் இப் பாண்டிய மன்னன் கானப்பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதி என்று சிறப்பிக்கப்படுகிறார். அன்றைய கானப்பேரெயில் இன்று காளையார் கோவில் என வழங்கப் பெறுகிறது.

பறம்பு நாடு

பாரியின் பறம்பு மலைப்பற்றியும் அவரது கொடைச் சிறப்பு பற்றியும் சங்கப் பாடல்கள் பலச் சுட்டுகின்றன. இருப்பினும் புறநானூற்றில் பல பாடல்கள் பாரியின் வரலாற்றை எடுத்து இயம்புகின்றன். மண்ணில் கிடந்த முல்லைக் கொடிக்குத் தன் தேரையே தந்து நெகிழ்ந்தவன் பறம்பு நாட்டு மன்னன் பாரி. இதனை,

> *"ஊருடன் இரவலர்க்கு அருளித் தேருடன்*
> *முல்லைக்கு ஈத்த செல்ல நல்லிசை*
> *படுமணி யானைப் பறம்பின் கோமான்*
> *நெடுமாப் பாரி"*

என்று புறநானூறு குறிப்பிடுகின்றது.

முதிரமலை – பழனிமலை

இம்முதிர மலை பழநிமலைத் தொடரில் உள்ள ஒரு மலை குமணன் தன் தம்பியான இளங்குமணனால் காட்டுக்கு விரட்டப்பட்டு அங்குத் தன்னைக் காண வந்த பெருந்தலைச் சாத்தனாரிடம் தன் தலையைத் தந்து தம்பியிடம் பரிசில் பெறச் சொன்ன தயாள சிந்தையும், வள்ளன்மையும் உடையவன்.

> *'அதிரா யாணர் முதிரத்துக்கிழவ"*

எனப் புறநானூறு சுட்டுகிறது.

மா இலங்கை – திண்டிவனம்

ஓய்மா நாடு என்பதை இன்று திண்டிவனம். பகுதி என்றும் மா இலங்கை, வேலூர் எயிற்பட்டினம், இடங்கில் ஆமூர் ஆகிய பகுதிகளைக் கொண்ட ஊர் என்பர். நல்லியங் கோடன் வாழ்ந்த ஊர்

"பெருமா இலங்கைத் தலைவன் சீறியாழ்"
எனப் புறநானூறு குறிப்பிடுகின்றது.

அழும்பில் ஊர்

".....முதலையொடு ஊழ் மாறு பெயரும்
அழும்பிலன் அடங்கான் தகையும்"

என்று நாயும் முதலையும் ஒன்றோடு ஒன்று போட்டி போட்டுக் கொண்டு போராடும் அழும்பில் என்னும் ஊருக்குத் தலைவன் இவன். இங்கு கூறியுள்ள அழும்பில் என்னும் ஊர் புதுக்கோட்டைக்கு அருகே உள்ள அம்புக் கோயில் என்ற ஊராகும்.

பரணர் பாடிய ஊர்கள்

புறநானூற்றில் பரணர் பாடிய பாடல்களில் ஊனூர் முசிறி உறையூர் ஆகிய ஊர்களைப் பற்றியக் குறிப்புகள் இடம் பெறுகிறது.

ஊனூர்

"வாய்மொழித் தழும்பன் ஊணூரன்ன
தப்பாத மொழியினையுடைய தழும்பன்"

என்பது ஊர் ஊனூர் ஆய்வூர் குளத்தில் பூக்கும் குவளை மலர் போன்ற கண்களையுடையவன் இப்போருக்குக் காரணமான பெண் என்று அவனுடைய ஊரையும் இணைத்தும் பாடியுள்ளார்.

முசிறி

"……………………………….குட்டுவன்
முழுங்குகடன் முழவின் முசிறி யன்ன
நலஞ்சால் விழுப்பொருள் பணிந்துவந்து கொடுப்பினும்"

முற்காலத்தில் முசிறி ஊர் சிறந்த துறைமுகப் பட்டினமாகவும் ஏற்றுமதி இறக்குமதி நிறைந்தும் வணிகத்தில் சிறந்த நகரமாக இருந்தமையை அறிய முடிகின்றது.

உறையூர்

'உறந்தையன்ன உரைசானன் கலம்"

உறையூர் தித்தனுக்கு உரியதாயிருந்தது. உறையூர் புலவர் பாடும் புகழ்படைத்தால் அப்புகழுடைமை, வெளிப்பட, "உறையூர் நன்கல" என விதற்று கூறினார்.

கபிலர் பாடலில் ஊர்

"அளிதோ தானே பேரிருங் குன்றே"

இரங்கத் தக்கது பாரியின் இப்பெரிய கருங் குன்றம். பறம்பு மலையைப் போரில் வெல்ல இயலாது. பாடிப் பரிசாகப் பெறலாம் எனக் கபிலர் புறநானூற்றில் பறம்பு மலை என்னும் ஊரை சுட்டுகிறார்.

புலவர் பெயரும் ஊர் பெயரும்

ஒரே பெயரில் பல புலவர்கள் இருப்பதாலும், ஊரின் பெயரையும் தன் பெயரைச் சேர்த்து கூறுவது வழக்கமாக இருந்தது என்பதை புறநானூற்றின் வழி அறிகிறோம்.

உறையூர்

உறையூரில் வாழ்ந்ததாலும் உறையூரில் தங்கியதாலும் தனது பெயருக்கு முன் உறையூர் என்னும் பெயர் நிலை பெற்றது.

உறையூர் மருத்துவன் தாமோதரனார்

இவரது இயற்பெயர் தாமோதரனார். இவர் சோழரின் தலைநகரமான உறையூரில் தங்கி மருத்துவத் தொண்டு செய்ததால் 'ஆர்' என்னும் சிறப்பு விகுதி சேர்க்கப்பட்டு உறையூர் மருத்துவன் தாமோதரனார் எனப்பட்டார்.

உறையூர் முதுகண்ணன் சாத்தனார்

உறையூரில் வாழ்ந்த முது கண்ணன் என்ற புலவரின் மகன் முதுகண்ணன் சாத்தனார். தன் தந்தை வாழ்ந்த ஊரையே தனது பெயருக்கு முன்னால் இட்டு உறையூர் முதுகண்ணன் சாத்தனார் என அழைக்கப்பட்டார்.

ஆவூர்கிழார்

ஆவூர் திருவண்ணாமலைக்கு அருகில் உள்ளது. இவருடைய இயற்பெயர் தெரியாது. ஆதலால் கிழார் என்பது அறிவிலும் வயதிலும் முதிர்வுற்ற ஒருவரைச் சிறப்பாக அடைமொழியோடு கிழார் என்பர். பின் ஊர் பெயரோடு சேர்த்து ஆவூர்கிழார் என்றார்.

மோசி சாத்தனார்

மோசி என்னும் ஊரில் வாழ்ந்தவர் சாத்தனார். சாத்தனார் எனப் பல புலவர்கள் இருப்பதால் அவரை அவ்வூரின் பெயரையும் சேர்த்து மோசி சாத்தனார் என்று அழைக்கத் தொடங்கினர். மோசி என்ற ஊர் இன்று மதுரைக்கு அருகிலுள்ள ஓர் ஊர் என்று கூறப்படுகிறது.

வட மோதங்கிழார்

இன்று உள்ள திருத்தணிக்கு அருகில் மாதம் என்னும் ஊரே அன்றைய மோதம். தெற்கே மதுரைக்கு அருகில் மோதம் என்று ஓர் ஊர் இருந்ததால் இது வடமோதம் என்றழைக்கப்பட்டது. இவ்வூர் புலவரை வடமோதங்கிழார் என ஊர் பெயரோடு சேர்த்து அழைத்தனர்.

நெடுங்களத்துப் பரணர்

நெடுங்குளம் திருச்சிக்கு அருகில் உள்ள சிற்றூர் அவ்வூரில் வாழ்ந்தவர் பரணர். பரணர் என பலப் புலவர் இருப்பதால் வாழ்ந்த ஊர் பெயரைச் சேர்த்து நெடுங்குளத்துப்பரணர் என மருவி வந்தது என்பதனை அறிகிறோம்.

மதுரை கள்ளிற் கடையத்தன் வெண்ணாகனார்

கள்ளில் என்பது தொண்டை நாட்டில் உள்ள ஓர் ஊர் கடையத்தன் மகன் வெண்ணாகனார் மதுரையில் வாழ்ந்தமையால் மதுரைக்கள்ளில் கடைத்தன் வெண்ணாகனசர் என்று அழைக்கப்பட்டதாகக் கூறுவர்.

வீரைவெளியனார்

வெளியன் என்பது இவரது பெயர். வீரை இவரது ஊர். இவ்வூர் புதுச்சேரிக்கு அருகிலுள்ள வீராம் பட்டினம் என்றும் நெல்லைக்கு அருகிலுள்ள வீரவ நல்லூர் என்றும் கூறுவர். இவர் புறநானூற்றில் ஒரு பாடல் பாடியுள்ளார்.

ஆடுதுறை

பண்டையக் காலத்திய ஊர் பெயர்களில் ஆடுதுறை என்றதொரு ஊரினைக் காண்கின்றோம். இது ஆற்றுத்துறை என்பது இலக்கியத்தில் ஊர் பெயராக வழங்கப்பட்டு வந்துள்ளன.

ஆடுதுறை என்ற ஊர்ப் பெயர் மாசாத்தனார் என்ற சங்ககாலப் புலவர் பெயரோடு சேர்த்துக் கூறப்பட்டுள்ளது. சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் இறந்த பொழுது வருந்தி ஆடுதுறை மாசாத்தனார் பாடியுள்ளார்.

காவிரியாற்றின் வடக்கில் ஒன்றும் தெற்கில் ஒன்றும் வடவெள்ளாற்றங் கரையிலொன்றும் ஆக மூன்று ஊர்கள் ஆடுதுறை என்றும் பெயருடன் இருக்கின்றன. ஆறுகளில் மக்கள் இறங்கி

நீராடுதற்கேற்ற இடமாகிய துறை என்னும் பெயரால் ஆற்றையடுத்துள்ள ஊர்கள் ஆடுதுறை எனப் பெற்றிருக்கலாம்.

முடிவு

தகடூர், தலையாலங்கானம், கானப்பேரெயில், உறையூர், முசிறி, முதிர மலை, பறம்புமலை, வெண்ணிப்பறந்தலை போன்ற பல ஊர் பெயர்கள் இடம் பெற்றுள்ளன.

போரில் வெற்றி கொண்ட மன்னன் தன் பெயருக்கு முன் வெற்றி பெற்ற ஊரின் பெயரையும் சேர்த்துக் கொள்வர்.

ஒரே பெயரில் பல புலவர்கள் இருப்பின் அவர் வாழும் ஊரின் பெயரை முன் சேர்த்து கூறிக் கொண்ட செய்தியை அறிகிறோம்.

துணை நின்ற நூல்கள் :

1. புறநானூறு மூலமும் உரையும்

2. தமிழக ஊர்ப் பெயர்கள் - முனைவர் கே. பகவதி

3. இலக்கியங்களில் ஊர்ப் பெயர்கள்

10. அகம் காட்டும் வேங்கடம்

ப.அனுராதா
முதுகலைத் தமிழ்த் துறைத் தலைவர்,
தமிழ் உயராய்வு மையம், பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

மனித வாழ்க்கையின் அகவொழுக்கத்தை அழகுபடச் சொல்பவை அகவிலக்கியங்கள். ஒருவனுக்கும் ஒருத்திக்கும் இடையேயான காதல் ஒழுக்கத்தை ஓராயிரம் பாடல்களில் சுவை குன்றாமல், கூறியது கூறலாகாமல் இல்லது புனையாமல் உள்ளது உள்ளபடியே உணர்ந்ததை உணர்ந்தபடியே உரைத்துள்ளனர் அகப்புலவர்கள். முதல், கரு, உரி என்னும் பின்னணியில் அவர்கள் காட்டியுள்ள அகக்காட்சிகள் பலப்பல. அவற்றைத் தீட்டுகையில் தாம் உணர்ந்ததைப் படிப்போரிடத்தும் ஊட்ட தம் பாடல்களின் ஊடே சில புறச்செய்திகளையும் பின்புலமாய் மெல்லிதாய் வண்ணம் தீட்டியுள்ளனர். அவற்றில் ஒன்று ஊர்ப்பெயர்கள் பற்றிய குறிப்புகளாகும்.

அகவிலக்கியங்களில் அகநானூறு மற்றையவற்றை விடச் சற்று அதிகமாகப் புறச்செய்திகளை உள்ளடக்கி இருப்பதால் அதன் வழியே காணலாகும் ஊர்ப்பெயர்கள் ஆய்விற்குக் கொள்ளப்படுகின்றன.

அதன்படி ஆய்கையில் மூவேந்தர்க்கும் உரியனவற்றோடு வேறு பல ஊர்ப்பெயர்களும் அவற்றிற்கு உரிமை பூண்டிருந்த குறுநில மன்னர்களின் பெயர்களும் அறியப் பெறுகின்றன.

இவற்றுள் மத்தி என்பவனின் கழாஅர் (பா:6)

நன்னனின் ஒழில் (பாடல்:15) தித்தன் வெளியனின் கானலம் பெருந்துறைப்பட்டினம் (பா:152), கொடுமுடியின் ஆமூர் (பா:159), உதியனின் குழுமூர் (பா:168) வாணனின் சிறுகுடி (பா:204) தழும்பனின் ஊனூர் (பா:227), அவியனின் கள்ளில் (பா:271) போன்ற சில குறிப்பிடத்தக்கவையாம். இவற்றோடு, ஏறக்குறைய 16 பாடல்களில் இடம் பெறும் வேங்கடம் என்னும் மலையூர் பற்றிய குறிப்பும் சுட்டத்தக்கது.

"வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுலகம்"

எனத் தொல்காப்பியம் சுட்டிய வேங்கடம் இதுவேயாகும்.

தமிழகத்தின் வட எல்லையாய்த் தொல்காப்பியம் வரையறுத்த இவ்வூரினை அகநானூறு பலவிடங்களில் காட்டுகிறது. அவ்வடிப்படையில் இம்மலையூர் பற்றிய செய்திகள் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றன.

I. மலையமைப்பு :

வேங்கடம் மிக நீண்ட, உயர்ந்த மலையாகும். மூங்கில் காடுகள் நிறைந்திருந்த அதில் இடையிடையே வெள்ளருவிகள் காணப்பட்டன; எனினும், நீர் தேவைக்காகக் கிணறுகளும் தோண்டப்பட்டிருந்தன.

"காம்புடை நெடுவரை வேங்கடத்து உம்பர்"[1]

"............ முரம்பு இடித்து

அகல்இடம் குழித்த அகல்வாய்க் கூவல்

ஆறுசெல் வம்பலர் அசைவிட ஊறும்

.... குன்றம்"[2]

என்னும் வரிகள் இதை வெளிப்படுத்துகின்றன.

II. விலங்கு முதலாயின :

வேங்கடம் யானைகள் நிறைந்த மலையாகும். பண்ட மாற்றிற்குத் தந்தங்கள் பயன்படுமளவு யானைகள் நிறைந்திருந்தன. நிறைந்த பசுக் கூட்டங்களையும் அது பெற்றிருந்தது. பூத்திருந்த குருந்த மரத்தையும் நிறைந்த மலர்களால் மணம் சிறந்த வேங்கை மரங்களையும் அங்கே காண முடிந்தது.

"......... வேங்கட நெடுவரை

நல்நாள் பூத்த நாகு இள வேங்கை

நறுவீ சூடிய பொறிவரி மஞ்ஞை

நனைப்பசுங் குருந்தின் நாறுசினை இருந்து

துணைப்பயிர்ந்து அகவும் துணைதரு தண்கார்"[3]

என்பது உயர்ந்த வேங்கடமலையில் பூத்துள்ள வேங்கையின் மகரந்த தாதுக்கள் தன்மேல் படிந்த கோலத்தில் குருந்த மரத்தில் இருந்து மயிலொன்று தன்துணையை அழைக்கும் குளிர்ச்சி பொருந்திய கார்காலக் காட்சியாகும். இது மேற்குறித்ததற்கான சான்றுமாகும். இவற்றோடு இலக்கியங்களில் அரிதாய் இடம்பெறக் கூடிய ஆளி என்னும் விலங்கு குறித்தும் தெரியலாகிறது.

"ஆளி நல்மான் அணங்குடை ஒருத்தல்

மீளி வேழத்து நெடுந்தகை புலம்ப

ஏந்தல் வெண்கோடு வாங்கி, குருகு அருந்தும்"[4]

என்னும் வரிகள் ஆண்யானையாகிய களிற்றையும் வெல்லும் ஆற்றல் பெற்றிருந்த ஆளியைக் காட்டுகின்றன.

இனி, அதில் வாழ்ந்திருந்த மக்கள், தெய்வம் குறித்த செய்திகள் வருமாறு:

III. மக்கள், தெய்வம் :

வேங்கடம் குறிஞ்சியும் முல்லையும் இணைந்த பகுதி. அதாவது, மலையும் காடுகளும் நிறைந்திருந்த பகுதி. ஆதலால் அவை வறண்ட போது பாலை நிலமானதால் அதற்குரிய வேட்டைத் தொழிலில் வல்ல மக்களே அங்கு நிறைந்திருந்தனர். ஆறலைக் கள்வராய் விளங்கிய அவர்கள் 'வடுகர்' என அழைக்கப்பட்டுள்ளனர். "வம்பவடுகர்"[5] எனக் குறுந்தொகை முதலிய இலக்கியங்களிலும் ஒரோவிடத்து அறியப்பட்டிருந்த அவர்கள் "கல்லா நீள்மொழி கதநாய் வடுகர்"[6] எனப் பலவாறு அழைக்கப்பட்டவராய் வேங்கடத்தின் வடபகுதியில் வாழ்ந்திருந்தனர். அவர்கள் கொலைத் தொழிலன்றி வேறு தெரியாதவர்கள். தம் வேட்டைத் தொழிலுக்குத் துணையாக நாய்களை உடன் வளர்த்திருந்தனர். இவ்விடத்து நமக்குக் கிடைத்துள்ள நடுகற்களில் பழமையானவற்றில் வீரனோடு இறந்த நாயும் பொறிக்கப்பட்டிருக்கும் காட்சி நினைவு கூரத்தக்கது.

இத்தகைய வடுகரோடு, மலையிலே வரகை விதைத்து, விளைந்த அரிசியால் அடுப்பை ஏற்றி கூழாக்கிப் பாலொடு கலந்து வழிப்போக்கருக்கு மிக்க விருப்புடன் கொடுத்து விருந்தோம்பிய ஆயர்களும் அம்மலையின் ஒரு பகுதியில் வாழ்ந்திருந்தனர்.

"...............

ஆறுசெல் வம்பலர் காய்பசி தீரிய

....

வரகின் கால்தொகு பொங்கழி

....

களிபடு குழிசிக் கல்அடுப்பு ஏற்றி

....

குடவர் புழுக்கிய பொங்கவிழ்ப் புன்கம்"[7]

என்னும் வரிகள் இதை உரைக்கின்றன. வேங்கடம் உயர்ந்த மலைப்பகுதியாதலால் அவ்விடத்து வரும் புதியோருக்கு உணவு கிடைத்தல் மிக அரிதாக இருந்திருக்க வேண்டும். அதைப் போக்கும் வகையில் அம்மக்களின் ஒரு பகுதியினர் விருந்தோம்பலில் சிறந்திருந்ததற்கு மேலும் ஒரு சான்று வருமாறு :

"வருவழி வம்பலர்ப் பேணி கோவலர்
மழவிடைப் பூட்டிய குழாஅய்த் தீம்புளி
செவியடை தீரத் தேக்கிலைப் பகுக்கும்"[8]

மேற்காட்டிய வரிகளில் ஆயர்கள் வழிப்போக்கருக்கு எருதுகளின் கழுத்தில் மாட்டியிருந்த மூங்கில் குழாய் உள்ளிருந்து புளிச்சோறு எடுத்துத் தேக்கிலையில் வைத்துக் கொடுத்து அவர்தம் பசி தீர்த்த விருந்தோம்பல் புலனாகிறது. இதன் வழி ஆறலைக்கள்வரும் ஆயர்களும் அப்பகுதியில் வாழ்ந்திருந்தமை தெரிகிறது. இம்மக்களின் வாழ்க்கை முறையைப் பற்றிய வேறொரு செய்தியும்

அறியலாகிறது. அது அவர்கள் கடைபிடித்த பண்டமாற்று வாணிக முறையாகும். வேங்கடம் யானைகள் நிறைந்தது. ஆதலால், இளையோர் பலர் யானைக் கன்றுகளை இழுத்துச் சென்று கள்ளுக்கு விலையாக நிறுத்தி பெற்றதைப் பாடல்கள் கூறுகின்றன.

"களிற்றுக்கன்று ஒழித்த உவகையர்...
....
..... அழுந்துபடப் பூட்டி
நெடுங்கொடி நுடங்கும் நியம மூதூர்
நறவுநொடை நல்இல் பதவுமுதற் பிணிக்கும்
கல்லா இளையர்"[9]

என்பதாகும் அது. அவ்வாறே யானைத்தந்தங்களைக் கொடுத்து நெற்குவியல்களையும் பெற்றுள்ளனர். இதனை,

"அண்ணல் யானை வெண்கோடு கொண்டு
நறவுநொடைநெல்லின்...."[10]

என்னும் வரிகள் உணர்த்துகின்றன. இனி, அவர்கள் வழிபட்ட தெய்வம் பற்றிய சிந்தனை எழுகிறது. "திருப்பதி மலைவாழும் வெங்கடேசா" என இன்றும் பலரால் துதிக்கப்படும் தெய்வம் உறையும் அம்மலையில் அன்றிருந்த தெய்வத்தை ஆய்ந்தால், அதில் தெய்வம் உறைந்ததாகவோ அது திருமால் என்றோ எப்பாடலிலும் குறிப்பில்லை. சூர்புகல் அடுக்கம் (பா:395) எனத் தெய்வம் விரும்பி உறையும் மலைப்பகுதி என்ற குறிப்பு இருப்பினும் அது திருமாலைச் சுட்டவில்லை எனத் தெரிகிறது. "நேமியஞ்செல்வன்" (பா:175) எனத் திருமாலைச் சுட்டும் வரிகூட அவன் அங்குதான் உறைந்துள்ளான்' எனக் காட்டவில்லை. இங்கு,

"வீங்கு நீர் அருவி வேங்கடம் என்னும்
ஓங்கு உயர் மலையத்து உச்சி மீமிசை
பகை அணங்கு ஆழியும் பால்வெண் சங்கமும்
.... தாமரைக் கையில் ஏந்தி
....
செங்கண் நெடியோன் நின்ற வண்ணமும்"[11]

எனச் சிலம்பு நின்ற வண்ணமாய் காட்சி தரும் திருவேங்கடத்தானைக் காட்டுதல் குறிப்பிடத்தக்கது. ஆயின், அகநானூற்றில் அக்குறிப்பு ஏதுமில்லை. இனி, அப்பகுதியை ஆண்டோர் பற்றி இடம் பெறுகிறது.

IV. ஆண்டோர்

வேங்கடத்தின் பரப்பு மிகுதியால் அது ஒன்றுக்கு மேற்பட்ட பகுப்புகளைக் கொண்டு மன்னர்கள், குறுநில மன்னர்கள் ஆகியோரின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. இதனையும் பாடல் வரிகள் காட்டுகின்றன.

"வேங்கடம் பயந்த வெண்கோட்டு யானை

மறப்போர்ப் பாண்டியர் அறத்தின் காக்கும்"[12]

என்னும் வரிகள் பாண்டியருக்குத் திறையாக யானைத் தந்தங்களைச் செலுத்திய பெயர் அறியப்படா குறுநில மன்னரைக் குறித்தல் அறியலாகிறது.

"வென்வேல் திரையன் வேங்கட நெடுவரை"[13]

"........யானை விறல்போர்த் தொண்டையர்

.... நெடுங்கோட்டு

ஓங்குவெள் அருவி வேங்கடத்து உம்பர்"[14]

ஆகிய வரிகளால் தொண்டை நாட்டார் வேங்கடத்தை ஆண்டிருந்ததும் பெறப்படுகிறது. இவர் தம்மோடு புல்லி என்னும் குறுநில மன்னனை வேங்கடத்திற்கு உரியவனாகப் பாடல்கள் காட்டுவதும் குறிப்பிடத்தக்கது.

".......... புல்லி

.... நல்நாட்டு வேங்கடம்"[15]

"..... மாவண் புல்லி

விழவுடை விழுச்சீர் வேங்கடம்"[16]

என்னும் பாடல்கள் வேங்கடத்தில் புல்லி திருவோலக்கம் செய்திருந்ததையும் அவன் மலையின் செல்வ வளத்தையும் அவன் வள்ளன்மையையும், காட்டுகின்றன. இவற்றினின்று பலர் ஆண்டிருப்பினும் புல்லி என்றும் குறுநில மன்னனே வேங்கடத்திற்கு உரியவனாய்ப் போற்றப்பட்டான் என்பது தெரியலாகிறது. இனி பாடிய புலவர் பற்றிய குறிப்பு இடம் பெறுகிறது.

V. புலவர்கள் :

வேங்கடத்தை அகநானூற்றில் மதுரைக் கணக்காயனார், கல்லாடனார், காட்டூர் கிழார் மகனார் கண்ணனார், தாயங்கண்ணனார், இறங்கு குடிக்குன்றநாடன், மதுரை இளங்கௌசிகனார் எனப் பல புலவர்கள் பாடியுள்ளனர். இவர் தம்மோடு ஏழிற்கும் மேற்பட்ட பாடல்களில் இம்மலையை மாமூலனார் என்பவர் பாடியுள்ளதும் குறிக்கத்தக்கது. மேலும், இவர் புல்லியையும் சிறப்பித்து அதோடு இணைத்துப் பாடியுள்ளார் எனவும் தெரிகிறது. மேற்காட்டிய புலவர்தம் பாடல்கள்யாவுமே பாலைத் திணையில் அமைந்திருத்தல் மிகக் குறிக்கத்தக்கதாகிறது.

பொருள் தேடி தன் நாடு, ஊர் கடந்து வெகு தொலைவு செல்லும் தலைவன் பற்றியதாய் அமைந்த அப்பாடல்கள் அவன் செல்லும் இடைசுரத்து எதிர்ப்பட்ட வேங்கட மலையையே மேற்சுட்டியவாறு பலவாறு குறிப்பிடுகின்றன.

VI. தமிழக எல்லை :

இதிலிருந்து தமிழகத்தின் வடஎல்லையாய் வேங்கடம் விளங்கியது தெரிகிறது. மேலும், வேங்கடத்தைத் தாண்டி வேற்றுமொழி வழங்கும் பகுதிகளைத் தலைவன் கடந்து சென்றுள்ளான் என்பதைப் பல பாடல்களில் காணப்படும்.

"மொழிபெயர் தேஎம்"[17]

என்ற தொடர் சுட்டுகிறது. இப்பகுதிகள் வேங்கடத்தின் வடஎல்லையிலேயே அமைந்திருந்தன என்பதும் அப்பகுதியில் வாழ்ந்திருந்த வடுகரும் வேற்றுமொழியாளரே என்பதும் அறியப்படுகின்றன. வடநாட்டினரான மோரியர் தென்னகத்திற்கு வர முற்பட்ட போது அவர்கள் தமக்குத் தெற்கிலிருந்த வேங்கடமலையைப் பிளந்து பாதையமைத்தனர் என்பதைக் காட்டும்,

".... மோரியர்

தென்திசை மாதிரம் முன்னிய வரவிற்கு

.... பனி இருங் குன்றத்து

.... திகிரி உருளிய குறைத்த"[18]

என்னும் வரிகள் தமிழகத்தின் வட எல்லையாய் வேங்கடம் விளங்கியதைத் தெளிவுபடுத்துகின்றன. இவ்வாறு அகநானூறு காட்டும் ஊர்ப்பற்றிய ஆய்வில் வேங்கடம் கொள்ளப்பட்டு முதல், கரு, உரி என்ற பகுப்புகளில் அதைப் பற்றிய பல்வேறு செய்திகள் பெறப்பட்டன. அவற்றில் வேங்கடம் தமிழகத்தின் வடஎல்லையாய் திகழ்ந்ததும் வேற்றுமொழிப் பேசுவோர் அப்பகுதியில் வாழ்ந்திருந்ததும் இன்று போல் அன்று மலைக்குரிய தெய்வமாய் வேங்கடத்தான் பெரிதும் போற்றப்படவில்லை என்பதும் யானைகள் மிகுந்திருந்த தன்மையே அம்மலையூருக்கான பெயர்க்காரணம் என்பதும அறியப்பட்ட சிலவாகும்.

அடிக்குறிப்புகள்

1. அகநானூறு, பாடல் : 209:9
2. மேலது, பா:295:10-13
3. மேலது, பா:85:9-13
4. மேலது, பா:381:1-3
5. குறுந்தொகை, பாடல்:11
6. அகம், பாடல்:107:11
7. மேலது, பா:393:3-17
8. மேலது, பா:311:9-11
9. மேலது, பா:83:6-9
10. மேலது, பா:61:9-10
11. சிலம்பு, காடுகாண் கதை, வரி:41-51

12. அகம், பா:27:7-8
13. மேலது, பா:85:9
14. மேலது, பா:213:1-3
15. மேலது, பா:83:9-10
16. மேலது, பா:61:12-13
17. மேலது, பா:295:17
18. மேலது, பா:281:8-11

11. இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள்

பி. அனுராதா
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை, இராணிமேரி கல்லூரி, சென்னை.

பண்டைய தமிழர் வரலாற்றையுணர்ந்து கொள்ள மிகுதியான மூலங்கள் நம்மிடம் இல்லை. தொல்காப்பியம், சங்க இலக்கியம், பதினெண்கீழ்க்கணக்கு, சிலப்பதிகாரம், மணிமேகலை என இலக்கியங்களே நமக்கு வரலாற்றையுணர்த்தும் நிலையில் அமைகின்றன. ஊர்ப்பெயர் நிலையிலும் இவை மிகுதியான பெயர்களையுணர்த்தவில்லை எனினும், கிடைக்கும் பெயர்கள் வழி நின்று, அன்றைய நிலையில் ஊர்ப்பெயர்களின் நிலையையும், பெயரிடும் முறையையும், வாழ்வியலையும் புரிந்து கொள்ள இயலுகிறது. இடைக்கால நிலை என எடுத்துக்காணின், பக்தி இலக்கியங்களையும், தவிர கல்வெட்டுகளும் மிகுதியாகத் துணை செய்கின்றன. இந்நிலையில் தமிழரின் ஊர்ப்பெயர் வரலாற்றுக்கு இம்மூலங்களின் துணை இன்றியமையாத தேவையாகும். அத்தகைய ஊர்களின் பெயர்க்காரணம், ஊரமைப்பு, சிறப்புகள் இவற்றை இலக்கியங்களின் வழி நின்று இவ்வாய்வு ஆராய்ந்து செல்கின்றது.

கூடல்

சங்க இலக்கியங்களில் கூடல் என்ற பெயரே பல இடங்களில் காணப்படுகிறது. அடைமொழியுடன் நான்மாடக் கூடல் எனவும் வழங்கப்படுகிறது, மதுரை என்ற அருகியே இடம் பெறுகிறது. கூடி இருத்தல் என்ற பொருளில் கூடல் எனப் பெயர் பெற்றிருக்கலாம் எனத் தோன்றுகிறது. சங்கப் புலவர்கள் கூடி இருந்து தமிழாய்ந்தமையை நாம் அறியமுடிகின்றது. இதனை,

"நான்மாடக்கூடல் மகளிரும் மைந்தரும்
தேன் இமிர் காவில் புணர்ந்திருந்து ஆடுமார்
ஆனாவிருப்பொடு அணி அயர்ப" (*கலித் : 92.65-67*)

என்ற கலித்தொகை அடிகள் விளக்குகின்றன.

கொடுகூர்

அக்கரை கண்ணிக்கொடுகூரை எறிந்தான் கடல் பிறக் கோட்டிய செங்குட்டுவன் என்ற செய்தி கொடுகூர் அக்கரையில் இருந்தமையைப் புலப்படுத்துகிறது.

ஒடுங்குதல் அல்லது பொருந்துதல் என்னும் பொருளையுடைய கொடுகு என்ற பகுதியைப் பெற்ற கொடுகூர் என்ற ஊர்ப்பெயர், அக்கரையில் பொருந்தியிருந்தமையால் பெற்ற பெயரோ என எண்ண இடமளிக்கிறது.

"அக்கரை நண்ணிக் கொடுகூ ரெறிந்து
பழையன் காக்குங் கருஞ்சினை வேம்பின்
முழாரை முழுமுதல் துமியப் பண்ணி (*பதிற் : 5.12-14*)

என்ற பதிற்றுப்பத்து அடிகள் விளக்குகின்றன.

கொடும்பை

இவ்வூர் பாண்டி நாட்டின் கண்ணது. சிலப்பதிகாரக் காலத்தில் உறையூரிலிருந்து மதுரைக்குச் செல்லும் வழியிலிருந்ததென்று தெரிகிறது. கொடும்பை என்பது குளம் என்னும் பொருளையுடைய சொல்லாதலின் இவ்வூர்ப் பெயர் நீர்நிலையால் பெயர் பெற்றதாகக் கருதலாம். இதனை,

"நெடும் பேரத்த நீந்திச் சென்று
கொடும்பை நெடுங்குளம் கோட்டகம் புக்கால்"
(*சிலப். காடு. 69-70*)

என்ற அடிகள் உணர்த்துகின்றது.

கொல்லி

கொல்லி என இலக்கியங்களில் இடம்பெற்ற ஊர்ப்பெயர் மலைப்பகுதி ஊராகும். ஊரின்பெயர் அவ்வூர் அமைந்த மலைப்பகுதிக்கோ மலைப்பகுதியின் பெயர் அங்கே அமைந்த ஊருக்கோ பெயராக அமைந்திருக்க வேண்டும். கொல்லி மலைப்பகுதியில் அமைந்தது இவ்வூர்.

கொல்லிமலை ஓரி என்ற வள்ளலுக்குரியது. கொல்லிமலை சேலம் மாவட்டத்தில் நாமக்கல், ஆத்தூர் வட்டத்திலுள்ள ஒரு குன்றுத் தொடர். இம்மலையில் கொல்லிப்பாவை என்று

ஒரு தெய்வப்படிமம் செய்துவைக்கப்பட்டிருந்தது. அது ஒரு பூதத்தால் அமைக்கப்பட்ட அழகிய பாவை என்று சங்க நூல்கள் கூறுகின்றன.

"மாரி வண்மகிழ் ஓரிக் கொல்லிக்
கலிமயில் கலாவத்தன்ன இவள்
ஒலிமென் கூந்தல் நம் வயினானே" *(நற்: 265. 7-9)*
"கொல்லிக் கண்ணன்.......... *(குறுந்: 34)*
"கொல்லி ஆண்ட வல்வில் ஓரியும் *(புறம்: 158. 5)*

என்ற பாடல்களினால் அறியமுடிகின்றது.

கோவல் (கோவலூர்)

இவ்வூர் கோவல் என்றும் கோவலூர் என்றும் சங்க இலக்கியங்களில் குறிக்கப் பெற்றுள்ளது. முலையமான் திருமுடிக்காரி முதலியோர் ஆண்ட ஊர். ஒரு காலத்தில் அதியமான் நெடுமான் அஞ்சியால் வெல்லப் பட்ட ஊர். தென்னார்க்காடு மாவட்டத்தில் தென்பெண்ணையாற்றின் கரையின் கண்ணுள்ளது.

"துஞ்சா முழவிற் கோவல் கோமான்
நெடுந்தேர்க் காரி கொடுங்கால் முன்துறை
பெண்ணை யம்பேரியாற்று நுண் அறல் கடுக்கும்"
(அகம்: 35. 14-16)

"முரண்மிகு கோவலூர் நூறின் நின்
அரணடு திரி ஏந்திய தோளே" *(புறம்: 99.13-14)*

என்ற பாடல் மூலம் உணரமுடிகிறது.

சிறுகுடி

தஞ்சை மாவட்டத்தில் பேரளத்துக்கு அருகே சிறுகுடி என்ற பெயருடன் ஓர் ஊர் உள்ளது. மதுரை மாவட்டத்தில் நத்தத்துக்கு அருகேயும் இப்பெயருடன் ஓர் ஊர் உள்ளது. குடி என்னும் சொல் ஊர்ப்பெயர்களில் அமைந்து குடியிருப்பை உணர்த்துவதாகும். உறவு முறையையுடைய பல குடும்பத்தார் ஒரு குடியினராகக் கருதப்படுவர். இத்தகைய குடியினர் சேர்ந்து வாழும் இடம் குடியிருப்பு என்றும், குடி என்றும் சொல்லப்படும். அத்தகைய குடியிருப்புகள் பரப்பின் சிறுமையால் சிறுகுடி எனப் பெயர் பெற்றிருக்கலாம்.

"வாணன் சிறுகுடி அன்ன" *(நற்: 340.9)*
"கிள்ளி வளவன் நல்இசை உள்ளி
நாற்ற நாட்டத்து அறுகாற் பறவை
சிறுவெள் ஆம்பல் ஞாங்கர் ஊதும்
கைவள் ஈகைப் பண்ணன் சிறுகுடி" *(புறம்: 70.10-13)*

என்ற அடியினால் உணரலாம்.

தகடூர்

அதியமான் நெடுமான் அஞ்சி என்ற வள்ளலின் தலை நகராய் இருந்த ஊர் தகடூர். சேலம் மாவட்டத்திலுள்ள இன்றைய தருமபுரியே தகடூர் என்று கருதுகின்றனர் தருமபுரி சேலம் மாவட்டத்தில் ஓமலூர் ஓசூர் வட்டங்களுக்கு இடையிலுள்ள ஒரு வட்டம். இங்கு 9-10 ஆம் நூற்றாண்டு முதல் கல்வெட்டுகள் கிடைக்கின்றன. அக்காலத்து இதனை நுளம்ப பல்லவர்கள் ஆண்டனர் என்று தெரிகிறது.

"பல் பயன் நிலைஇய கூறுடைய வைப்பின்
வெல் போர் ஆடவர் மறம்புரிந்து காக்கும்
வில் பயில் இறும்பின், தகடூர் நூறி" *(பதிற்: 78. 7-9)*

என்ற மேற்கோள் இதைத் தெளிவாக விளக்குகிறது.

துறையூர்

துறையூர் ஓடைகிழார் என்ற புலவர் ஒருவர் பாடிய சங்க இலக்கியப் பாடல் ஒன்றில் "தண்புனல் வாயில் துறையூர்" இடம் பெற்றுள்ளது. ஊரால் பெயர் பெற்றார் போலும் இப்புலவர். நீர்த்துறையின்கண் அமைந்த ஊர் துறையூர் எனப் பெயர் பெற்றிருக்க வேண்டும்.

"நாள்தோறும் குளிர்ந்த நீர் ஓடும் வாய்த்தலைகளையுடைய துறையூர்" என்று சங்க இலக்கியம் கூறுகின்றது.

"நினக் கொத்தடி நீ ராடி
நல்கினைவிடுமதி பரிசில் அல்கலும்
தண்புனல் வாயிற் றுறையூர் முன்றுறை

நுண்பல மணலினு மேத்தி
உண்குவம் பெரும நீ நல்கிய வளனே" *(புறம்: 136. 23-24)*

என்ற அடிகளினால் அறிந்து கொள்ள முடிகின்றது.

முசிறி

முசிறி என்பது மேலைக்கடற்கரையில் அமைந்த கடற்கரை நகரம். சேரர்களுக்குரியது. ஊர் என்றும் பட்டினம் என்றும் அமையும் கடற்கரை நகரங்களின் அமைப்பு மரபையொட்டி அமைந்த கொடுங்கோளூரும், மகோதைப் பட்டினமுமாகிய பகுதியாகிய கடற்கரை நகரமே முசிறியாகும் எனத் தெரிகிறது.

முசுறுப்புல் என்பது ஒருவகைப்புல். இக்கடற்கரைப் பட்டினத்தை அடுத்து இந்த வகைப்புல் மிக்கு விளையும் இயல்பிருந்து, அதனையொட்டி முசிறி எனப்பெயர் பெற்றதோ என எண்ண இடமளிக்கிறது.

"சுள்ளியம் பேரியாற்று வெண்ணுரை கலங்க
யவனர் தந்த வினைமாணன் காலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
வளங் கெழு முசிறி" *(அகம். 149. 8-9)*

என்ற அடிகள் விளக்கும்.

மையல்

வையை யாற்றுக்கருகில் பொய்யாத புது வருவாயினையுடையதாக அமைந்திருந்தது. 'மையல்' என்றும் ஊர் என்று சங்க இலக்கியம் கூறுகிறது. செல்வம் முதலியவற்றால் வரும் செருக்கு என்று பொருள்படும் மையல் என்னும் சொல் வையையாறு பாய்ந்து வளம் கொழித்த ஓர் ஊருக்குப் பெயராய் அமைந்தது போலும்.

பாண்டியன் வஞ்சினம் கூறும்போது இந்த ஊர்ப்பெயரும், இவ்வூர்த்தலைவன் மாவனின் பெயரும் இடம் பெற்றிருப்பதையறிலாம்.

"பாண்டி நாட்டகத்து ஊராக இருந்திருக்கலாம்
வையை சூழ்ந்த வளங்கெழு வைப்பிற்
பொய்யா யாணர் மையல் கோமான்" *(புறம்: 71.10-12)*

என்ற பாடலின் மூலம் அறியலாம்.

உஞ்சேனை

உஞ்சேனை என்பது உச்சயினி நகரமே. அவந்தி என்றும் உஞ்சை எனவும் வழங்கும். அவந்தி நாட்டிலுள்ளது. பிரச்சோதனனின் தலைநகர்,

"அமரர் தலைவனை வணங்குவதும் யாமெனச்
சிமையத் திமையமும் செழுநீர்க் கங்கையும்
உஞ்சையம் பதியம் விஞ்சத் தடவியும்" *(சிலம்பு: 6. 27-29)*

என்ற அடிகள் உணர்த்துகின்றன.

அம்பர்

சோழ நாட்டில் அம்பர் என்ற பெயருடன் ஓர் ஊர் நிலையத்திற்குத் தென் கிழக்கே சுமார் நான்கு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இவ்வூரை அடுத்து அம்பர் மாகானம் உள்ளது.

"காவிரி அணையும் தாழ்நீர்ப் படப்பை
நெல்விளை கழனி அம்பர் கிழவோன்
நல் அருவந்தை வாழியர்" *(புறம்: 385. 8-10)*

எனப் புறநானூறு உணர்த்துகின்றது.

திரையனூர்

பெரும்பாணாற்றுப்படையின் பாட்டுடைத் தலைவனாக விளங்குகின்ற தொண்டைமான் இளந்திரையன் காஞ்சி மாநகரிலிருந்து ஆட்சி புரிந்தவன் ஆவான். இளந்திரையன் தன் பெயரோடு அமைந்த திரையனூர் என்ற ஊர்ப்பெயரைத் தாங்கியவன். இளந்திரையன் பெயரில் அமைந்த ஊர்தான் திரையனூர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது எனலாம். இதனை,

"பல்வேல் திரையற் படர்குவிர் ஆயின்
கேள் அவன் நிலையே, கெடுகநின் அவலம்" *(பெரும்: 37-38)*

என்ற பெரும்பாணாற்றுப்படை அடிகள் விளக்குகின்றன.

12. திருஞானசம்பந்தர் தேவாரத்தில் ஊர்ப்பெயர்கள்

முனைவர். ச.ஆதிசக்தி
தமிழ்த்துறை விரிவுரையாளர்.
மீனாட்சி இராமசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தத்தனூர்.

முன்னுரை:

மக்கள் வாழும் இடங்களில் நடைபெற்ற சிறப்பான நிகழ்வுகள், இயற்கைவளம், கோயில்கள், இறைவனுடைய சிறப்பு என்ற பல நிலைகளைக் காரணமாகக் கொண்டு ஊர்களுக்கு பெயர்கள் சூட்டப்பட்டன. தமிழ் இலக்கியங்களில் மிகுதியான இலக்கியங்கள் பக்தி இலக்கியங்களே. அவற்றில் சைவ இலக்கியமான திருஞான சம்பந்தர் தேவாரத்தில் எடுத்தாளப்பட்ட ஊர்களின் பெயர்களும், அப்பெயருக்கான வரலாறும் இவ்வாய்வுக்கட்டுரையில் இடம் பெற்றுள்ளது.

சீர்காழி :

ஞானசம்பந்தர் தம் பாடலில் இவ்வூரினுடைய பெயரை பலவாராக குறிப்பிட்டிருக்கிறார். குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு பெயரும் இத்தலத்தில் உரையும் பெருமானுடைய சிறப்புக்களால் பெயர் பெற்றது. **பிரமாபுரம்** நான்முகன்(பிரமன்) வழிபட்டதால் இப்பெயரை பெற்றது. **தோணிபுரம்** பிரளய காலத்தில் இறைவன் தோணியில் காட்சி தந்தமையால் இப்பெயர். புறவம் புறா வடிவில் வந்த அக்னியால் சிபி நற்கதி அடைந்தான் என்ற வரலாற்று நிகழ்வால் இப்பெயர் பெற்றது. **கழுமலம்** மலத்தொகுதி நீங்க உரோமச முனிவர் வழிபட்டதால் (மலம்கழுவும்தலம்- கழுமலம்) இப்பெயர் பெற்றது. இவ்வாறாக சீர்காழி என்ற ஊர் பலபெயர்களில் அழைக்கப்படுகின்றது.

"காவாய் என நின்று ஏத்தும் காழியார்" திரு-1:24:1
"பெயர் இலங்குபிற மாபுரமேவிய
பெம்மான் இவன் அன்றே" திரு-1: 1:8
"கலைமரு வியபுறவு அணிதரு கழுமலம்" திரு-1:19:5

திருவலம்புரம்(மேலப்பெரும்பள்ளம்):

திருமால் இத்தலத்திலுள்ள இறைவனிடம் வலம்புரிச்சங்கு பெற்றமையினால் இவ்வூர்பெயர் திருவலம்புரம் ஆயிற்று. இன்று **மேலப்பெரும்பள்ளம்** என்று அழைக்கப்படுகிறது.

"வார் உறு சோலை மணம் கமழும்
வலம்புர நன்னகரே" – திரு-3:361:9

திருக்குருகாவூர் வெள்ளடை(திருக்கடவூர்):

இத்தலத்திற்கு வெளியே **பால்கிணறு** எனும் தீர்த்தம் தை அமாவாசையில் சுவாமி தீர்த்தம் கொடுக்கும் சமயத்தில் பால் நிறமாக மாறுதல் மிக அற்புதமான நிகழ்வு . குருகாவூர் என்பது ஊர். வெள்ளடை என்பது கோயிலின் பெயர், ஆகவே குருகாவூர் வெள்ளடை எனப்பெயர் பெற்றது. இன்றைய வழக்கு **திருக்கடவூர்** என்று அழைக்கப் படுகிறது.

திருப்பழுவூர்(கீழப்பழுவூர்):

பழமரம் - ஆலமரம் ஆலமரம் தலவிருட்சமானதால் இவ்வூர் பழுவூர் எனவாயிற்று. இப்பொழுது **கீழப்பழுவூர்** என்று அழைக்கப்படுகிறது.

" அந்தணர்கள் ஆகுதியில் இட்ட அகில் மட்டார்
பைந்தொழிநன் மாதர் சுவடு ஏற்று பழுவூரே" திரு-2:170:7

திருவாழ்கொளிபுத்தூர் (திருவாளப்புத்தூர்):

இறைவன் அருச்சுனனின் வாளைப் புற்றில் ஒளித்தமையால் வாள் ஒளி **புத்தூர்** எனப்பட்டது. பின்னர் மருவி வாழ்கொளிப்புத்தூர் ஆயிற்று. இவ்வூர் இன்று **திருவாளப்புத்தூர்** என்று வழங்கப்படுகின்றது.

"வரைகெழு மங்கையது ஆகமொர் பாகம்
ஆயவன் வாழ்கொளிப்புத்தூர்" திரு-1:40:2

திருக்கண்ணார் கோயில்(குறுமாணக்குடி):

இவ்வூர் இன்று குறுமாணக்குடி என்று அழைக்கப் படுகின்றது. இந்திரனின் சாபம் நீங்கி உடலில் ஆயிரம் கண்கள் பெற்றமையால் இவ்வூருக்கு **கண்ணார் கோயில்** என்று பெயர் வழங்கப்படுகிறது.

புள்ளிருக்கு வேளூர் (வைத்தீஸ்வரன் கோயில்):

புள் என்றால் பறவை (சடாயு) ''இருக்கு'' என்றால் இருக்கு வேதம், வேள் என்றால் முருகன், ஊர் என்றால் சூரியன் ஆகியோர் புசித்த சிறப்பு மிக்கத்தலம் **ஆதலால்** **இதற்கு** புள்ளிருக்கு வேளூர் என்று பெயர் வழங்கப்படுகிறது. வழக்கில் இன்று **வைத்தீஸ்வரன் கோயில்** என்று அழைக்கப்படுகிறது.

''போதத்தால் வழிபட்டான்
புள்ளிருக்கு வேளூரே'' திரு-2:179:5

நண்டாங்கோயில் (திருதேவன்குடி):

நண்டு இறைவனை பூசித்து முக்தி பெற்றமையாலே இவ்வூர் இப்பெயர் பெற்றது. இன்றைய வழக்கு திருதேவன்குடி.

தென்குரங்காடுதுறை (ஆடுதுறை):

ஆடுதுறை என்றது இன்றைய வழக்கு முற்காலத்தில் இவ்வூர் பெருமாள் கோயிலில் வாலி, சுக்கிரீவன் என்று சொல்லக்கூடிய குரங்கின தலைவர்கள் வந்து வழிபட்டமையால் இவ்வூர் **குரங்காடுதுறை** எனப் பெயர் பெற்றது.

நாககிரி (திருச்செங்கோடு):

இயற்கையான பெரிய மலை, மலை செங்குத்தானது. செங்குத்தாக உள்ளதால் செங்கோடு ஆயிற்று. (கோடு – மலை) மலை செம்மையாக இருத்தலின் செங்கோடு **ஆயிற்று**. "திரு" என்பது காரணமின்றி சிறப்பிற்காக வழங்கப்படுவது. இவ்வூர் நாககிரி, நாகமலை, சர்ப்பகிரி என்ற வேறு பெயர்களும் உண்டு. நகரின் மேல் பகுதியில் இருந்து பார்த்தால் மலை நாகம் போல் தோன்றுவதால் நாககிரி என்கின்றனர்.

மூக்கீச்சுரம் (கோழியூர்):

கோழி ஒன்று தன்மை எதிர்த்து வந்த யானை ஒன்றினை தன் மூக்கால் கொத்தி வென்றமையால் மூக்கீச்சுரம் எனப் பெயர் பெற்றது என்பர். இதனைக் **கோழியூர்** என்று இப்பொழுது வழங்குகின்றனர்.

திரு அவள் இவள் நல்லூர் (திருஅவளிவ நல்லூர்):

சிவாச்சாரியார் ஒருவர் தான் தன் ஆதிசைவ குலத்தில் தோன்றிய மூத்த மகள் ஒருத்தியைத் திருமணம் செய்து கொண்ட பின்னர் தீர்த்த யாத்திரை சென்றார். பின்னர் திரும்பி வரும் போது அவர் மனைவி அம்மை நோய் கொண்டு கண்களை இழந்திருந்தார். வந்த சிவாச்சாரியாரோ மூத்தவளின் தங்கையே தன்மனைவி எனச் சாதித்தார். பெருமான் உண்மையை உரைக்க 'உன்மனைவி அவளே இவள்' எனச் சான்று கூறி அவளின் கண்ணொளியை மீண்டும் கொடுத்தருளினார். இவ்வழக்கால் இவ்வூர் அவள் இவள் நல்லூர் என வழங்கலாயிற்று.

''ஆமையோடு பூணும் அடிகள் உறைவது
அவள் இவள் நல்லூரே'' திரு-3:340:2

ஆவூர் :

பசுபதீச்சுரம்- கோயிலின் பெயர். பசுக்கள்(ஆ) வந்து பூசித்த தலம் ஆகையால் இவ்வூர் **ஆவூர்** எனப் பெயர் பெற்றது.

திருவலஞ்சுழி :

ஏரண்ட முனிவர் ஒருவர் பிலத்திற்கு சென்று விட்ட காவிரியாறு வெளிப்படுவதற்கு தம்மையே பலி கொடுத்தார். அந்நிலைகண்டு ஆறு மேலேயெழும்பி வலமாக சுழித்துக்கொண்டு வந்த காரணத்தால் இவ்வூர் **திருவலஞ்சுழி** எனப்பட்டது.

''வாரல் வெண்டிரை வாயிரை தேரும் வலஞ்சுழி'' திரு-2:138:2

திருகோழம்பம் (குழம்பியம்):

ஆடுதுறையிலிருந்து சூரியனார் கோவிலுக்குச் செல்லும் திசையில் உள்ளது **குழம்பியம்.** அவ்வூரில் உள்ள இறைவன் மீது பசுவின் குளம்பு பட்ட வடு திருமேனியில் காணப்படுவதால் இவ்வூர் பெயர் பெற்றது.

''கூற்றானைக் குளிர்பொழிற் கோழம்ப மேவிய''

திருநாகேச்சரம் (திருநாகேஸ்வரம்):

அரவரசனாகிய ஆதிசேடன் இவ்வூரிலுல்ல சிவ தலத்தில் வழிபாடு நடத்தியமையினால் இவ்வூருக்கு திருநாகேச்சரம் என்று பெயர் வழங்கலாயிற்று. இது இன்று மருவி **திருநாகேஸ்வரம்** எனவாயிற்று.

"நலமாகிய நாகேச்சர நகருள்" திரு-2:160:5

திருஅழுந்தூர் (தேரழுந்தூர்):

ஊர்த்து வரதன் என்னும் அரசனுடைய தேர் இவ்வூரில் மேற்கொண்டு செல்லாமல் அழுந்தினமையால் தேர் அழுந்தூர் எனப் பெயர் பெற்றது. அகுது மருவி **தேரழந்தூர்** எனலாயிற்று.

சிக்கல் :

காமதேனு எனும் பசுவின் பால் பெருகி எங்கும் வெண்ணையாய் உறைந்தன. அவ்வெண்ணெய் அனைத்தையும் எடுத்து வசிட்ட முனிவர் லிங்கமாக்கி பூசித்தார். அந்த லிங்கத்தை வேறிடத்தில் வைக்க எடுக்கும் போது அது வராமல் சிக்கிக்கொண்டதால் இவ்வூருக்கு **சிக்கல்** எனப் பெயர் உண்டாயிற்று.

"திடங்கொள் மாமறையோரவர் மல்கிய சிக்கல்" திரு-2:144:2

செங்காட்டாங்குடி:

கஜமுகாசுரன் என்ற அசுரனை வினாயகர் கொன்ற போது அவ்வசுரனின் குருதி பெருகி செங்காடாய் இருந்ததால் இவ்வூருக்கு **செங்காட்டாங்குடி** எனப் பெயர் வந்தமையை உணரலாம்.

"............தவிரா நோய் தந்தானே
செங்காட்டாங்குடியே சிறுத்தொண்டன்" திரு-3:321:1

திருவாஞ்சியம் :

திருமால் தன்னை விட்டு பிரிந்த இலட்சுமியைப் பெறுவதற்காகச் சிவபிரானைப் பூசித்து வாஞ்சையுடன் பெற்ற ஊர் ஆகையால் இவ்வூர் **திருவாஞ்சியம்** எனப் பெயர் பெற்றது.

" தென்ன வென்றுவரி வண்டிசை
செய்திரு வாஞ்சியம்" திரு-2:143:1

திருகைச்சினம் (கச்சனம்):

இந்திரன் மணலினால் லிங்கம் செய்து தாபணம் செய்து பூசை முடிந்த பின்பு லிங்கத்தைக் கையினால் எடுத்து அப்புரம் வைக்கும் பொழுது இந்திரனின் கைச்சின்னம்(கைக்குறி) அதில் பொருந்திட இவ்வூருக்கு கைச்சினம் என்று பெயர் வந்தது. அதுவே மருவி **கச்சனம்** ஆயிற்று.

"கையுடையான் மேவியுறை கோயில் கைச்சினமே" திரு-2:181:1

திருநெல்வேலி :

வேதசர்மா என்ற அந்தணர் இறைவனின் திருவமுதிற்காக யாசித்து பெற்று வந்த நெல்லை உலர வைத்திருந்தார். மழை வரும் குறிகளைக் கண்ட அந்தணர் காயும் நெல் மணிகளை மழை நீரினின்று காக்க இறைவனை வேண்டிட பெருமானும் அந்நெல்மணிகளை வெள்ளம் அடித்து போகாவண்ணம் வேலிகட்டி காத்தருளினார். இக்காரணத்தால் இவ்வூருக்குத் **திருநெல்வேலி** என பெயர் வழங்கலாயிற்று.

"செறிபொழில் தழுவிய திருநெல்வேலி" திரு-3:350:3

திருவாடானை :

வருணனின் புதல்வாரன வாருணி என்பவன் துருவாச முனிவருக்கு மரியாதை செய்யாததால் முனிவன் கோபம் கொண்டு அவனை ஆட்டுத்தலையும் ஆனையின் உடலுமாக வடிவம் எய்தும் படி சாபமிட்டார். இச்சாபம் நீங்க அவன் இத்தலம் வந்து இறைவனை வழிபட்டமையால் சாப விமோச்சனம் பெற்றான். அதனால் (ஆடு,ஆனை) ஆடானை திரு சேர்க்கைப் பெற்று **திருவாடானை** ஆயிற்று.

"மாதோர் கூறுகந்து ஏறது ஏறிய
ஆதி யானுறை ஆடானை" திரு-2:248:1

திருமயிலை (மயிலாப்பூர்):

அன்னை கற்பகாம்பிகை மயிலுருவாய் இருந்து கபாலிச்சுரனை தொழுததால் இவ்வூருக்கு **மயிலாப்பூர்** எனப் பெயர் பெற்றது.

"மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலை" திரு-2:183:1

திருஆப்பனூர் :

சோழந்தகன் எனும் பாண்டிய மன்னனுக்காக சிவனார் ஓர் ஆப்பினிடத்தில் தோன்றி காட்சியளித்தமையால் இவ்வூர் **ஆப்பனூர்** என்று வழங்கப்பட்டது. திரு என்பது சிறப்பிற்காக வழங்கப் பட்ட அடைமொழியாகும்.

" அரவம் அணிந்தானை ஆப்பனூரானை" திரு-1:88:2

திருப்பாதிரிப்புலியூர்(கடலூர்):

வியாக்கிரபாதர் பூசித்தமையால் இது புலியூர் என பெயர் பெற்றது. இதன் இன்றைய வழக்கு **கடலூர்** ஆகும்.

"புன்னை நின்று கமழ் பாதிரிப் புலியூருளான்" திரு-2:257:1

திருகுரங்கணில் முட்டம்:

குரங்கு – வாலி, மற்றும் அணில், முட்டம் -காகம் ஆகிய மூன்றும் இத்தலத்தில் வழிபாடு நடத்தியமையால் இவ்வூருக்கு **குரங்கணில் முட்டம்** எனப் பெயர் வழங்கப்படுகிறது.

"கொழுநீர் வயல் சூழ்ந் தகுரங் கணில் முட்டம்" திரு-1:31:1

திருப்பாசூர் (திருப்பாச்சூர்):

பாசூ என்றால் மூங்கில் என்று பொருள். இறைவன் மூங்கில் அடியில் தோன்றியமையால் **திருப்பாசூர்** என்று இவ்வூருக்கு பெயர் வந்தது.

"பைவாய் நாகம் கோடல் ஈனும் பாசூரே" திரு-2:196:3

முடிவுரை:

உலகிலுள்ள ஒவ்வொரு இனத்திற்கும் ஒரு வரலாறு உண்டு. அது போல தமிழ்இலக்கியங்களில் வழங்கக் கூடிய ஊர்களுடைய பெயர்களுக்கும் சில காரணங்கள் அடிப்படையிலே பெயர்கள் வழங்கப்பட்டன. திருஞானசம்பந்தர் தம்முடைய தேவாரப்பாடல்களில் இடம்பெற்ற ஊர்களின் பெயர்கள் அனைத்தும் புராண வரலாறுகள் அடிப்படையில் பெயர் பெற்றன என்பதனை மேற்கூறிய சான்றுகளைக் கொண்டு இக்கட்டுரையில் நிருபித்துக் காட்டப்பட்டுள்ளது.

துணை நின்ற நூல்கள்:

1.**திருஞானசம்பந்தர் சுவாமிகள் தேவாரம்** - 1,2,3 திருமுறைகள்.
(உ.அ) புலவர். பி.ரா.நடராசன். உமா பதிப்பகம்,சென்னை.

13. சிறுபாணாற்றுப்படையில் கிடங்கில்

கா. இரமேஷ்,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை, இராணிமேரிக் கல்லூரி, சென்னை – 4

பண்டைத் தமிழ் இலக்கியம் என்பது பாட்டும் தொகையும் ஆகும். பத்துப்பாட்டுள் நல்லூர் நத்தத்தனார் இயற்றியது சிறுபாணாற்றுப்படையும், புறநானூற்றில் நன்னானார் இயற்றிய 176 ஆம் பாடலும் ஒய்மான் நாட்டு நல்லியக்கோடன் பற்றிக் குறிப்பிடுகின்றது. இவன் ஒய்மா நாட்டை ஆட்சி செய்துள்ளான்.
இந்த நாட்டில் எயிற்பட்டினம், வேலூர், ஆமூர், கிடங்கில், மாவிலங்கை போன்ற பகுதிகள் இருந்தன என்று சிறுபாணாற்றுப்படை கூறுகின்றது. இப்பகுதிகள் ஒய்மா நாட்டின் தலைநகராமாக கிடங்கில் மற்றும் மாவிலங்கை விளங்கின. கிடங்கில் பற்றிக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

நல்லியக்கோடன்:

"மாவிலங்கையை ஆண்டவருள் நல்லியக்கோடன் சிறந்தவன். குற்றமற்ற வாளினை உடையவன். புலிபோல் வலிமையானவன். ஓவியர் குடியில் தோன்றியவன். பெண் யானைகளைப் பரிசாகத் தரும் பண்பினன். கைமாறு கருதாத மழை போன்ற பெரும் கொடையன். பல்வகை இசைக் கருவிகளை இயக்கும் கூத்தரைப் பாதுகாப்பவன். பெரும் புகழை உடையவன்"[1] என்று நல்லியக்கோடனை சிறுபாணன் வாயிலாக அறிமுகப்படுத்துகின்றார் நத்தத்தனார்.
இத்தகு சிறப்புடன் அறிமுகப்படுத்தப்படும் நல்லியக்கோடன் "நாகர் மரபைச் சார்ந்தவன்"[2] ஓவியர் குடியில் பிறந்தவன்"[3] என வி.கனகசபையும், மா.இராசமாணிக்கனாரும் எடுத்துறைக்கின்றனர். இவனது மரபினர் "ஒய்மான் வில்லியாதன், ஒய்மான் நல்லியாதன்"[4] ஆவர்.

கிடங்கல்:

நல்லியக்கோடன் ஆண்ட ஒய்மாநாட்டின் தலைநகரான கிடங்கலின் பகுதி திந்திரிவனம். அது இன்று திண்டிவனம்[5] என்றழைக்கப்படுகின்றது. திண்டிவனத்திற்கு வடக்குப்புறம் சுமார் ஒரு கிலோ மீட்டர் தொலைவில் கிடங்கில் உள்ளது.

அகராதிகள் குறிப்பிடும் பொருள்கள்:

பள்ளமானப் பகுதியைக் கிடங்கு என்பர் மக்கள். இதை "அகழி, குழி, குளம் என்கிறது வெள்ளிவிழா பேரகராதி மற்றும் செந்தமிழ் அகராதி"[6] பண்டக சாலை, சிறைச்சாலை, பொருளறை என்கிறது மெய்யப்பன் தமிழ் அகராதி"[7]. "பொக்கிஷ வீடு என்கிறது யாழ்ப்பாண தமிழ் அகராதி"[8]. "பொருள்களைப் பெருமளவில் சேர்த்து வைக்கும் இடம், பள்ளம் என்கிறது நர்மதா தமிழ்ப் பேரகராதி"[9]. கிட்டங்கி என்கிறது வின்சுலோவின் தமிழ் - ஆங்கில் அகராதி"[10]. இவ்வாறு கிடங்கு என்ற சொல் குறித்து பல்வேறு தமிழ் அகராதிகள் பல பொருள் சுட்டுகின்றன. ஆனால் செந்தமிழ் அகராதி மட்டுமே கிடங்கில் என்பது நல்லியக்கோடன் நகர் எனக் குறிப்பிடுகின்றது. வேறெந்த அகராதியும் கிடங்கில் என்னும் சொல்லைக் குறிப்பிடவே இல்லை.

ஆகவே மேலே கூறியுள்ள அகராதிகளின் பொருளிலிருந்து கிடங்கில் என்ற பெயர் கிடங்கு என்னும் சொல்லில் இருந்து உருவாகி இருக்க வேண்டும். "அகழி சூழ்ந்த கோட்டையைக் கிடங்கில் என்றும் கூறுவதுண்டு"[11] என்கிறார் ரா.பி.சேதுப்பிள்ளை. சிறுபாணாற்றுப்படை சுட்டும் கிடங்கில்: கிடங்கால் என்றும் தற்போது கிடங்கல் என்றும் சுட்டப்பெறுகிறது.

நல்லியக்கோடன் ஆயுதங்களையும், செல்வங்களையும் பாதுகாக்க பள்ளத்தாக்கானப் பகுதியைத் தேடியிருக்கலாம். அவனது பார்வைக்கு இவ்விடம் தெரியவே அங்கு பெரும் கோட்டை எழுப்பி இருக்கலாம் என்று முடிவு செய்யலாம்.
இப்பொழுது கிடங்கில் கிடங்கல், ஒன்று, கிடங்கல் இரண்டு, என அழைக்கப்படுகின்றது.

கிடங்கல் ஒன்று:

இந்த சிறிய இடத்திற்கு வடக்கில் ஏறத்தாழ அரைக்கல் தொலைவில் சிவன் கோயில் உள்ளது. அதில் இருக்கும் கல்வெட்டுகளில் ஞானசம்பந்தர் பாடல்கள் இடம் பெற்றுள்ளது. இக்கல்வெட்டுக்கள் சோழர் காலத்தது. இதன்காலம் கி.பி. மூன்றாம் நூற்றாண்டு. இக்கால கட்டத்தைச் சார்ந்தவன் தான் நல்லியக்கோடன்.

இன்றைய நிலையில் சென்னையிலிருந்து சுமார் 3 மணி நேரம் பயணத் தொலைவில் திண்டிவனம் அமைந்துள்ளது. திண்டிவனம் நெடுஞ்சாலைக்கு வலது புறம் 15 அடி தூரத்தில் ரயில்பாதை மேம்பாலம் உள்ளது. பாலத்திற்கு அடியிலிருந்து தான் கிடங்கல் ஒன்றுக்குச் செல்ல முடியும் என்ற நிலை இருந்துள்ளது. தற்போது அப்பகுதிக்கு தார்ச்சாலை போடப்பட்டுள்ளது. ஊரின் நுழைவாயிலுக்குச் சற்றுத் தொலைவில் கிராம நிர்வாக அலுவலகம் உள்ளது. அதன் அருகிலேயே மசூதி உள்ளது.

கிடங்கல் ஒன்றில் உள்ள தெருக்கள் தெற்கு வடக்காக அமைந்துள்ளது. தெற்கே முத்துகிருஷ்ணன் பிள்ளை தெரு, வடக்கே சுந்தர முதலி தெரு, சேஷாசல தெரு, ரயில்வே நிறுத்தம், (Railway station) ஒத்தவாட சரிவு ரயில் நிறுத்தம் என தெருக்கள் அமைந்துள்ளன.

சாதி பிரிவுகளும் மக்கள் தொகையும்:

இங்கு வன்னியர் 5பேர், ஆதிதிராவிடர் 15 பேர், சலவைத் தொழிலாளர் குடும்பத்தவர் 3பேர், முடிதிருத்தும் தொழிலாளர் குடும்பத்தவர் 125பேர், முதலியாளர்கள் 1500பேர் என மொத்தம் 2035பேர் வசித்து வருகின்றனர். நல்லியக்கோடன் காலத்திலும் சில பத்து வருடங்களுக்கு முன்பும் ஆதிதிராவிடர்க்ள கிடங்கல் ஒன்றுக்குள் நுழையும் பொழுதே காலணிகளைக் கையில் பிடித்தும், தோள்த் துண்டை கக்கத்தில் செருகியும் தான் வரவேண்டும் என்ற கட்டுப்பாடு இருந்ததாகக் கூறப்படுகின்றது.

கோயிலகள்:

ஊரின் நுழைவாயில் இருந்து சுமார் 200அடி தொலைவில் பிள்ளையார் கோவில் உள்ளது. கிடங்கல் பகுதியின் வடக்கு கடைசியில் சிவன் கோவில் உள்ளது. கிடங்கல் பகுதியின் வடக்கு கடைசியில் சிவன் கோவில் உள்ளது. இதில் தான் 13 கல்வெட்டுக்கள் உள்ளன. 2008 இல் இருந்த அரசு இக்கோவிலைப் புதுப்பித்து இருக்கின்றது. இதற்கான கல்வெட்டு அங்கு பொறிக்கப்பட்டுள்ளது. தனிநபர் கட்டுப்பாட்டில் இருந்த இக்கோவில் தமிழ்நாடு அரசு அறநிலைத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. இதன் வலதுபுறத்தின் சற்று தொலைவில் காளியம்மன் கோவில் உள்ளது. கட்டிடம் கட்டுவதற்காக மண் தோண்டப்பட்ட போது இச்சிலை கண்டு பிடிக்கப்பட்டது. இதனை பிரிட்டிசார் தங்களது நாட்டுக்கு எடுத்துச் செல்ல முற்பட்டு அனுமதி கிடைக்காததால் விட்டுச் சென்றனர் என்று அவ்வூர் மக்கள் கூறுகின்றனர்.

அகழி:

சிவன் கோயில் பின்புறம் அகழியொன்று உள்ளது.இதனைக் கிடங்கல் ஏரியிலிருந்து வருகின்ற நீர்தான் நிரப்பும். தற்போது அகழி ஆக்கிரமிக்கப்பட்டு பராமரிப்பு இன்றி புல், முள் செடிகள் முளைத்தும் நிறைந்து காணப்படுகின்றது. அதனால் அகழி மறைந்து காணப்படுகின்றது.

கிடங்கல் ஏரி:

இதே சிவன் கோவில் பின்புறம் சுமார் 5014 அடி பரப்பளவு கொண்ட ஏரி உள்ளது. இதன் பெயர் கிடங்கல் ஏரி. இதற்கு பெலாகுப்பம், ரயில்வே நான்கு கண் பாலம் கிடங்கலின் வடக்குப்பக்கம் உள்ள சிறு சிறு ஏரிகளிலிருந்து வருகின்ற நீர்தான் கிடங்கல் ஏரியை நிரப்பும். ஏரியும் கொஞ்சம் கொஞ்சமாக ஆக்கிரமிக்கப்பட்டு வருவதாகவும் இதைத்தடுத்து நிறுத்தி ஆக்கிரமிப்பாளர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுப்பதற்கு எந்த அரசும் முன்வருவதில்லை என்று அப்பகுதி மக்கள் வருத்தம் தெரிவிக்கின்றனர்.

நிலம்:

கிடங்கல் ஒன்றில் சுமார் 23,000 ஏக்கர் பரப்பளவில் விவசாய நிலம் உள்ளது. இதில் 13,000 ஏக்கர் நன்செய் நிலமாகவும் 10,000 ஏக்கர் புன்செய் நிலமாகவும் காணப்படுகின்றது. நன்செய் நிலத்திற்கு கிடங்கல் ஏரிதான் நீராதரமாக இருக்கின்றது. இவ்விரு வகை நிலத்திலும் நெல், வாழை, தென்னை, வேர்க்கடலை, கம்பு, சோளம், சவுக்கை போன்றவைகள் விளைவிக்கப்படுகின்றன.

நல்லியக்கோடன் கோட்டை:

கிடங்கலில் உள்ள நல்லியக் கோடானின் அரண்மனை 30 வருடங்களுக்கு முன்பு மிகுந்த இடிபாடுகளுடன் காணப்பட்டதற்கான தடயம் இருந்தது. ஆனால் இன்று அத்தடயம் முற்றிலும் அழிக்கப்பட்ட நிலையில் அப்பகுதியை இசுலாமியர்களால் ஆக்கிரமித்து வீடுகள் கட்டப்பட்டு உள்ளன.

கிடங்கலில் எல்லை:

- நல்லியக்கோடன் கோட்டையிலிருந்து ஜக்காம் பேட்டை ரயில்வே காலனி புதுமசூதி தெரு வரை கிடங்கல்.
- ராஜாங்குளம் இடது புறத்திலிருந்து கிடங்கல் வரை கிடங்கல்.
- செஞ்சி சாலை முதல் இடதுபக்கம் பெலாக்குப்பம் வரை கிடங்கல்.
- முத்துக்கிருஷ்ணன் முதலி தெருவிலிருந்து பூதேரி ராமன் குளம் வரை கிடங்கல்.
- ராமன் குளம் கிழக்குப்பக்கம் ரயில்வே நான்கு கண் பாலம் வரை கிடங்கல்.
- ஜக்காம் பேட்டையிலிருந்து கர்ணாவூர்ப் பேட்டை வரை மரக்காணம் ரோடு, பாண்டி ரோடு, வீராங்குளம் வரை கிடங்கல்.
- நல்லியக்கோடன் நகர், கர்ணாவூர் பேட்டை, ஜெயபுரம் வரை கிடங்கல்
  இந்த மொத்தப் பகுதியும் மேலே குறிப்பிட்டுள்ள கிராம நிர்வாக அலுவலகத்தின் கீழ் செயல்பட்டு வருகின்றது.

கிடங்கல் இரண்டு:

கிடங்கல் இரண்டாம் பகுதியானது சென்னையிலிருந்து திண்டிவனம் வரையிலான தேசிய நெடுஞ்சாலைக்கு இடது புறமாக உள்ளது. இங்கு ராஜன் தெரு, டாக்டர் அம்பேத்கார் தெரு, நல்லியக்கோடன் நகர் உட்பட பதினொரு தெரு உள்ளது. நல்லியக்கோடன் நகர் என்பது பெயரளவில் தான் உள்ளது. அவன் பெயரிலே குளம் ஒன்று உள்ளது. இதுவும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு வருகின்றது. இப்பகுதியில் சுமார் 50 குடும்பத்தைச் சேர்ந்த நரிக்குரவர்கள் வாழ்கின்றனர். இவர்களின் மூதாதையர்கள் நல்லியக் கோடன் காலத்தில் பல்வேறு இழிதொழில் செய்து வந்தனர் என்று கூறப்படுகின்றது. இன்றும் அப்பகுதி ஒதுக்குப்புறமாகத்தான் இருக்கின்றது. இருப்பினும் காதல் செய்து கலப்புத் திருமணங்கள் நடைபெற்ற வண்ணம் இருக்கின்றது.

சுமார் 1800 பேர் வசிக்க கூடிய இப்பகுதியில் இருக்கும் வீடுகள் பெரும்பாலும் கூரை வேயப்பட்ட நிலையில் தான் காணப்படுகின்றன. ஆதிதிராவிடர்களும், நரிக்குரவர்களும் பொருளாதாராம், கல்வி வளர்ச்சி குறைந்தவர்களாக இருக்கின்றனர்.

தற்போதைய நல்லியக்கோடன் நகரில் அவனது ஆட்சிக்காலத்தில் போது கிடங்கல் பகுதியின் நுழைவாயிலாக ஒரு வளைவு (Arch) இருந்ததாக கூறப்படுகின்றது. அது இன்றளவில் முற்றிலும் அழிக்கப்பட்டு அதற்கான தடயமே காணப்படவில்லை.

இவ்வாறு சிறுபாணாற்றுப்படையில் குறிப்பிடப்பட்டிருக்கும் கிடங்கில் (கிடங்கல்) பகுதி ஒரு வரலாற்றுத் தளமாக இருந்துள்ளது. ஆனால் அந்த வரலாற்றுத் தளமும் அங்கு காணப்பட்ட தடயங்களும் பாதுகாக்கவும் பராமரிக்கப்படாமலும் போனதால் வரலாற்றுச் சான்றுகள் அழிந்து வருகின்றன. இது தடுத்து நிறுத்தப்பட வேண்டும் காரணம்[12] வரலாறு நம்மை விடுதலை செய்யும்.

கிடங்கல் பற்றி பல தகவல்கள் கூறிய கிடங்கல் கிராம நிர்வாக அலுவலக உதவியாளர் சிவமூர்த்தி, ஓய்வு பெற்ற ஆசிரியர் ஆர்.பாசுகரன், துறவி உண்ணாமலை அம்மை என் நன்றிகுரியவர்கள்.

1. சிறுபாணாற்றுப்படை, 199-122
2. பத்துப்பாட்டு ஆராய்ச்சி, மா.இராசமாணிக்கனார் பக் - 151
3. 1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகம் வி.கனகசபை, தமிழாக்கம் க.அப்பாத்துரை – 372.
4. புறநானூறு – 376,379.
5. திந்திரிவனம் என்பது புளியங்காடு என்று பொருள்படும் என அப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.
6. சங்கரலிங்க முதலியர், வெள்ளிவிழா பேரகராதி பக் - 386, ந.சி.கந்தையா பிள்ளை, செந்தமிழ் அகராதி- பக்-186.
7. ச.வே.சுப்பிரமணியன் பதிப்பாசிரியர், மெய்யப்பன் தமிழ் அகராதி பக் - 362.
8. சந்திரசேகர பண்டிதர், சரவணமுத்துப் பிள்ளை, யாழ்ப்பாணத் தமிழ் அகராதி – பக் - 271.
9. நர்மதா தமிழ் அகராதி – பக் - 269.
10. வின்சுலோ தமிழ் - ஆங்கில அகராதி
11. ரா.பி.சேதுப்பிள்ளை, ஊரும்பேரும். பக்.75
12. இது கியூபா முன்னாள் அதிபர் ஃபிடல்காஸ்ட்ரோவின் புகழ் பெற்ற வாசகம். கியூபாவில் நடைபெற்றுக் கொண்டிருந்த நிலப்பிரத்துவ ஆட்சியை எதிர்த்து சேகுவாரா, ஃபிடல்காஸ்ட்ரோ தலைமையில் பலர் போராடினர். அப்போது ஃபிடலை அந்த அரசு கைது செய்து நீதி மன்றத்தில் நிறுத்தியது. நீதி மன்றத்தில் வாதாடிய போது அவர் வரலாறு என்னை விடுதலை செய்யும் என்றார்.

14. திருமுருகாற்றுப்படையில் அறுபடைவீடு – சமற்கிருதமயமாக்கம்

முனைவர் சு.இராசாராம்
இணைப் பேராசிரியர்,
தமிழ்த் துறை, அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி.

சமற்கிருதமயமாக்கம் என்பது சமூகவியல் சார்ந்த கருத்தாக்கம். இந்திய சமூக மாற்றத்தை விளக்குவது. இது இந்தியச் சூழலுக்குரிய பொதுப்பண்பாக விளங்கினாலும் தமிழகச் சூழலுக்கும் பொருந்துவதாகும். "இந்தியப் பண்பாட்டின் தலையூற்றாய் விளங்குவது சமற்கிருத மொழிவழிப்பட்ட பண்பாடு. அதனுடைய தாக்கத்தினாலேயே இந்தியா முழுமையும் நாகரிகமும் பண்பாடும் வளர்ச்சியுறத் தொடங்கியது எனும் கருத்தை நிலைநாட்ட முயலுவதே சமற்கிருதமயமாக்குதலின் அடிப்படை நோக்கமாகும்" (சமற்கிருத ஆதிக்கம், ப.7) என்பர் க.த.திருநாவுக்கரசு. பொது நிலையில் இவ்விளக்கம் அமைந்திருந்தாலும் சிறப்பு நிலையில் சமற்கிருத மொழிவழிப்பட்ட கருத்தியல்கள் (Idiologies) தமிழகத்தில் ஏற்படுத்திய தாக்கத்தைக் கண்டறிவதாக இதனைக் கொள்ளுதல் பொருத்தமாகும். அவ்வகையில் பத்துப்பாட்டு இலக்கியங்களுள் ஒன்றான திருமுருகாற்றுப்படையில் அறுபடைவீடு என்னும் கருத்தியல் உரைகளின் வழிக் காலந்தோறும் சமற்கிருதமயமாக்கப்பட்டுள்ள பாங்கை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சமற்கிருதமயமாக்கம்

சமற்கிருதமயமாக்கம் என்னும் சமூகவியல் சிந்தனை 1952இல் எம்.என்.ஸ்ரீநிவாஸ் என்னும் சமூக மானிடவியல் அறிஞரால் தோற்றுவிக்கப்பட்டு வளர்க்கப்பட்டதாகும். சமூக அடுக்கமைவில் கீழ்நிலையில் உள்ள சாதியினரின் மேல்நோக்கிய நகர்வு சமற்கிருதமயமாக்கம் எனப்படும். உயர்சாதி மக்களின், குறிப்பாக, பிராமணர்களின் நம்பிக்கைகள், சடங்குகள், வாழ்க்கைமுறை, பண்பாட்டுக்கூறுகள் போன்றவற்றைக் கீழ்நிலையில் உள்ள சாதி மக்கள் உயர்வானதாகக் கருதித் தமதாக்கிக் கொள்ளும் நிகழ்வு சமற்கிருத மயமாக்கம் எனத் தொடக்கத்தில் கருதினர். பின்னர், இச்சிந்தனை, கீழ்நிலை சாதியினர் அல்லது பழங்குடி மக்கள் அல்லது பிற குழுவினர் தங்களின் பழக்கங்கள், சடங்குகள், கருத்தியல், வாழ்க்கை முறை போன்றவற்றை இருபிறப்பாளராகிய சாதியினரின் வழியில் உயர்த்திக் கொள்ளும் நிகழ்வு சமற்கிருதமயமாக்கம் எனப்படும் என மறுவரையறை செய்யப்பட்டது. முதல் வரையறையில் உணவுப்பழக்கங்கள், சடங்குகள், சமயநடைமுறைகள் என்பன பேசப்பட்டன. அடுத்த வரையறையில் வினை, அறம், பாவம், புண்ணியம், துறக்கம் முதலிய கருத்தியல்களைப் போலச்செய்தலும் சமற்கிருத மயமாக்கமாகக் கருதப்பட்டன. (Ram Ahuja, PP.352-353). எனவே சமற்கிருத மொழிவழிப்பட்ட கருத்தியல்கள் தமிழ்வழிப்பட்ட கருத்தியல்களில் ஏற்படுத்திய தாக்கத்தைச் சமற்கிருதமயமாக்கம் என வரையறுப்பது பொருந்துவதாகும்.

திருமுருகாற்றுப்படையில் அறுபடைவீடு

முருகவழிபாடு தமிழரின் தொன்மையான வழிபாடாகும். தொல்காப்பியர், "சேயோன்மேய மைவரையுலகமும்"(தொல்.951) எனக் குறிஞ்சி நிலத்துக்குரிய தெய்வமாகச் சேயோனைச் சுட்டுவர். சேயோன் என்பது முருகனைக் குறிக்கும். இம் முருகனைப்பாடும் இலக்கியங்களுள் தலைமை சான்றது திருமுருகாற்றுப்படை. நக்கீரர், இதில் முருகன் உறையும் ஊர்களாகத் திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம் என்னும் நான்கினைக் குறிப்பிடுவர். பிற்காலத்தில் அறுபடைவீடு என்னும் கருத்தியல் உருவான நிலையில் உரையாசிரியர்கள் அவற்றைத் திருமுருகாற்றுப்படையில் கண்டு விளக்க முற்பட்டுள்ளனர். அறுபடை வீடு என்னும் கருத்தியல் சமற்கிருத மொழிவழிப்பட்ட சிந்தனையாகும்.

முருகனின் அறுபடைவீடு

திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய் (திருச்செந்தூர்), திருவாவினன்குடி (பழநி), திருவேரகம்(சுவாமிமலை), குன்று தோறாடல் (திருத்தணி), பழமுதிர்சோலை ஆகிய ஆறு தலங்களும் முருகப்பெருமானின் அறுபடை வீடுகளாகப் போற்றிக் கூறப்படுகின்றன. இவற்றுள் திருப்பரங்குன்றம் சூரபன்மனுடன் போர் புரிந்து வெற்றிபெற்ற நிலையில் கந்தப்பெருமான் தேவயானையைத் திருமணம் புரிந்து கொண்ட தலமாகக் கருதப்படுகிறது. திருச்சீரலைவாய் என்னும் திருச்செந்தூர், தேவர்களைச் சிறைவைத்துப் பலருக்கும் கொடுமை புரிந்த சூரபதுமனிடம், வீரவாகுத்தேவரைத் தூதுவராக அனுப்பித் தேவர்களை விடுவிக்கும்படி வேண்டுகோள் விடுத்தும் கேளாமையால் கந்தப் பெருமான் போர்புரிந்து அவனை அழித்து வந்து, வெற்றிவிழாக் கொண்டாடிய தலமாகக் கருதப்படுகிறது. "கந்தப்பெருமான் விசயாபிடேகம் செய்து கொண்ட

தலமாதலின் திருச்செந்தூர் ஜயந்தி என வழங்கப்பெற்று, அதுவே செந்தி, செந்தில், செந்தூர் என மரூஉப் பெயர்கள் கொண்டது" என்பர் (செ.வைத்தியலிங்கன், ப.467)

திருவாவினன்குடி எனப்பெறும் பழநி, சிவபெருமான் கையிலிருந்த வியத்தகு மாம்பழத்தைப் பெறுவதில் விநாயகருடன் நடந்த போட்டியில் பழம் தனக்குக் கிடைக்காமற் போகவே முருகப்பெருமான் சினங்கொண்டு நின்றபோது அவரைச் சமாதானப்படுத்தி இருத்திய தலமாகக் கருதப்படுகிறது. இங்கு முருகன் ஆண்டிக்கோலத்தில் உள்ளார்.

திருவேரகம் எனப்பெறும் சுவாமிமலை, திருமுருகனே தன் தந்தை சிவபெருமானுக்குக் குருவடிவாய் எழுந்தருளிப் பிரணவத்தின் உட்பொருளை உள்ளவாறு உபதேசித்த தலமாகக் கருதப்படுகிறது.

குன்றுதோறாடல் எனப்பெறும் திருத்தணிகைக் கந்தப்பெருமான் திருச்செந்தூரில் சூரனை வதம் புரிந்து அவன் கொள்ளையடித்து வைத்திருந்த சங்கநிதி, பதுமநிதி முதலிய நிதியங்களை அனுப்பி வைத்த தலமாகவும் கந்தப்பெருமான் தம் படைகளுடன் திருப்பரங்குன்றம் சென்று தேவேந்திரன் மகள் தேவயானையை மணந்து கொண்டு தேவருலகு சென்று அங்கு யாவற்றையும் ஒழுங்குப்படுத்திவிட்டுச் சினம் தணிந்து வந்து தங்கிய தலமாகவும் கருதப்படுகிறது.

முருகனின் ஆறாம் படைவீடாகிய பழமுதிர்சோலையைத் திருமாலிருஞ்சோலை எனவும் அழகர்மலை எனவும் வழங்கப்பெறுவதாகக் கொள்வர். புராணத்தோடு இத்தலத்தைத் தொடர்புபடுத்தவில்லையாயினும் இங்கு சரவணப்பொய்கை என்ற பெயரோடு ஒரு குளம் இருந்ததாகவும், அதைப் புண்ணிய சரவணம் என்று வழங்கினர் என்றும் கருதுவர். (செ.வைத்தியலிங்கன், ப.478)

திருமுருகாற்றுப்படை உரைகளில் அறுபடை வீடு

முருகப்பெருமானின் அறுபடைவீடுகளாகக் கருதப்பெறும் கருத்தியல் திருமுருகாற்றுப்படை உரைகளில் வலியுறுத்தப்பட்டுள்ளமை ஆராயத்தக்கதாகும். நச்சினார்க்கினியரிடம் இக்கருத்தியல் இல்லை. அவர் நான்கு ஊர்களையே தம் உரைகளில் குறிப்பிடுகிறார். திருப்பரங்குன்றத்தை "திருப்பரங்குன்றிலே நெஞ்சமர்ந்திருத்தலுமுரியன்" (உ.வே.சா.ப.45) என்று கூறுகிறார். திருச்சீரலைவாயை "நாமனூரலைவாய் என்னும் திருப்பதியேற எழுந்தருளுதலும் அவற்கு நிலைபெற்ற குணம்" (உ.வே.சா.ப.52) என்று சுட்டுகிறார். திருவாவினன்குடியை, "ஆவினன்குடியென்னும் ஊரிலே சிலநாள் இருத்தலுமுரியன்... இனிச்சித்தன் வாழ்வென்று சொல்லுகின்றவூர் முற்காலத்து ஆவினன்குடியென்று பெயர்பெற்றதென்றுமாம்.... சித்தனென்பது பிள்ளையாருக்குத் திருநாமம்"(உ.வே.சா.ப.60) என்று விளக்குவர். இங்கு பிள்ளையார் என்பது முருகக்கடவுளைக் குறிக்கும். திருவேரகத்தை, "ஏரகமென்கின்ற ஊரிலே இருத்தலுமுரியன்... ஏரகம்-மலைநாட்டகத்தொரு திருப்பதி" உ.வே.சா.ப.62) என்பர். குன்றுதோடலை, "மலைகடொறுஞ்சென்று விளையாடுதலும் தனக்கு நிலை நின்ற குணம்"(உ.வே.சா.ப.66) எனப் பொதுப்படச் சுட்டுவாரேயொழிய தனி ஊராக நச்சினார்க்கினியர் குறிப்பிடவில்லை. பழமுதிர்சோலை என்பதற்கும் இவ்வாறே "பழம் முற்றின சோலைகளையுடைய மலைக்கு உரிமையையுடையோன்" (உ.வே.சா.ப.78) எனப் பொதுவாகவே சுட்டுவர்.

பத்துப்பாட்டு மூன்றாம் பதிப்பின் முகவுரையில் திருமுருகாற்றுப்படை பற்றிக் குறிப்பிடும் உ.வே.சா., "இது, முருகக்கடவுள் எழுந்தருளியிருக்கும் திருப்பரங்குன்றம் முதலாகிய ஆறுபடை வீடுகளைப் பாராட்டும் ஆறு பகுதிகளாகப் பகுக்கப்பட்டுள்ளது"(ப.xiii) எனக் கூறுவது சுட்டத்தக்கது. திருமுருகாற்றுப்படை ஆறு படைவீடுகளையும் பாடுவது என்னும் தோற்றத்தை இவ்விளக்கமும் திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்சோலை எனப்பகுத்துப் பதிப்பித்த பாங்கும் புலப்படுத்தும்.

நச்சினார்க்கினியர் உரைக்கு எழுதிய குறிப்புரையில் ஏரகம் என்பதற்கு உ.வே.சா., "இதனைச் சோழ நாட்டிலுள்ள சுவாமிமலையென்னும் தலமென்று கொள்வர் அருணகிரிநாதர் முதலியோர் 'சீர்கெழு செந்திலுஞ் செங்கோடும் வெண்குன்றும், ஏரகமு நீங்கா விறைவன்' (சிலப்.குன்றக்.) என்பதன் உரையினால் ஏரகம் சுவாமிமலையினும் வேறான ஒரு தலமென்று அரும்பதவுரையாசிரியர் கருதுவதாகத் தெரிகின்றது" (உ.வே.சா.ப.62) என்பர். குன்றுதோறாடல், பழமுதிர்சோலை என்பதற்கு ஊர்ப்பெயர் பற்றிய எவ்வித விளக்கமும் கூறவில்லை.

பொ.வே.சோமசுந்தரனார் திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய் ஆகிய ஊர்களுக்கு முந்தைய உரையாசிரியர்கள் கருத்தையே உடன்படுவர். திருவாவினன்குடியைப் பழனி எனச் சுட்டும் சோமசுந்தரனார், நச்சினார்க்கினியர் சுட்டும் பெயரையும் எடுத்துக்காட்டி, "நக்கீரர்

காலத்தினாதல் நச்சினார்க்கினியர் காலத்தினாதல் இது பழனி என வழங்கப்படவில்லை. திருவாவிநன்குடி எனத் தந்நகரமிட்டு எழுதுவாரும் திருவாவினன்குடி என றன்னகரமிட்டு எழுதுவாரும் என இருதிறத்தாரும் உளர். திருவாவிநன்குடியாயின் அழகிய வாவியை உடைய நல்ல குடியினையுடைய ஊரென்க. திருவாவினன்குடியாயின், திரு ஆ இனன்குடி எனக் கண்ணழித்துச் செல்வமாகிய ஆனினங்கள் மிக்க குடி என்க. பண்டைக்காலத்தே இது பொதினி என்னும் பெயருடைத்தாய் ஆவி என்னும் வேளிர் தலைவனுக்கு உரியதாயிருந்தது என வரலாற்றாசிரியர் கூறுவர். எனவே ஆவிநன்குடி – ஆவி என்பானுக்குரிய நன்குடியை உடைய ஊர் என்றாலே சாலப் பொருந்துதல் அறிக" (பொ.வே.சோமசுந்தரனார்,ப.88) என விளக்குவர். இதில் வரலாற்றுக் கண்ணோட்டத்தோடு கூறியிருக்கும் விளக்கம் குறிப்பிடத்தக்கதாகும்.

திருவேரகம் என்பதற்கு முந்தைய உரையாசிரியர்களின் கருத்தை அடியொற்றி, "ஏரகம்- திருவேரகம் என்னும் ஊர். இதனை மலை நாட்டகத்தொரு திருப்பதி என்றார் நச்சினார்க்கினியர். சிலப்பதிகார அரும்பத உரையாசிரியர் வெண்குன்றத்தைச் சுவாமிமலை எனலால் ஏரகம் மற்றொரு திருப்பதி என்று கருதினாராதல் வேண்டும். அருணகிரியார் சோழ நாட்டிலுள்ள சுவாமிமலை என்னும் தலமே ஏரகம் என்று கொண்டனர்" (பொ.வே.சோமசுந்தரனார்,ப.92) என்பர். குன்றுதோராடலை எந்த ஊர்ப் பெயராகவும் பொ.வே.சோமசுந்தரனார் சுட்டவில்லை. இவர் பழமுதிர்சோலை குறித்து, "இனி பழமுதிர்சோலை என்பது. முருகப்பெருமானுடைய ஆறுபடை வீடுகளுள் ஒன்றென்றும் அஃது இக்காலத்தே திருமால் திருப்பதியாக விளங்கும் (மதுரைக் கண்மையிலுள்ள) திருமாலிருஞ்சோலையேயாம் என்றும் சிலர் கூறுவர். அங்ஙனம் கூறுவோர் அது பண்டு முருகன் திருக்கோயிலாக இருந்ததற்குரிய சில சான்றுகளும் காட்டா நிற்பர். இச்செய்தி இன்னும் நன்கு ஆராய்ந்து முடிவு செய்யற்பாலது" (பொ.வே.சோமசுந்தரனார்,ப.129) என விளக்குவர்.

இவற்றால் முருகனின் அறுபடைவீடு என்னும் கருத்தியலையொட்டியே பிற்கால உரையாசிரியர்கள் விளக்கம் கண்டிருப்பது தெளிவாகும். குன்று தோராடலைத் திருத்தணி என்று குறிப்பிடுவது மட்டும் இவ்வுரைகளில் காணப் பெறவில்லை.

முடிவுரை

படைவீடு என்பதற்கு சேனைகள் அல்லது படைகள் தங்கும் இடம் என்பது பொருளாகும். முருகன் சூரபன்மாவுடன் போர்புரிந்த புராணக்கதைகள் சமற்கிருத மொழிவழிப்பட்ட கருத்தியலாகும். இதனையடுத்து அறுபடைவீடு என்னும் கருத்தியல் தோன்றியிருக்க வேண்டும். முருகன் குன்றுதோறும் உறைபவன்; மலைகளுக்கெல்லாம் கிழவன் என்னும் தமிழர் கருத்தியலில் சமற்கிருத மொழிவழிப்பட்ட கருத்தியல் ஆதிக்கம் செலுத்திய நிலையில் திருமுருகாற்றுப்படையில் அது பொருத்திப் பார்க்கப்பட்டுள்ளது. திருமுருகாற்றுப்படைப் பாடல் பகுதிகளை ஆறு தலங்களாகப் பகுத்து விளக்கும் போக்கு தோன்றியுள்ளது. இருப்பினும் குன்றுதோறாடல், பழமுதிர்சோலை என்னும் இரண்டையும் தனித்தனி ஊர்ப்பெயர்களாகக் கொள்வதில் உரையாசிரியர்கள் திணறுவது தெளிவாகிறது. இதில் தமிழர் கருத்தியல் தனித்து வெளிப்படுகிறது.

துணைநூற்பட்டியல்

1. உ.வே.சாமிநாதையர் (தொ.ஆ) (1961) பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியருரையும், மறுபதிப்பு, தமிழ்ப்பல்கலைக்கழக வெளியீடு.

2. பொ.வே.சோமசுந்தரனார் (உ.ஆ), 2007, பத்துப்பாட்டு மூலமும் உரையும் தொ.1, கழக வெளியீடு.

3. க.த.திருநாவுக்கரசு (1985), சமற்கிருத ஆதிக்கம், பண்பாடு சமற்கிருத மயமாக்கப்படுதல் (கட்.) பெரியார் திறந்த பல்கலைக்கழக வெளியீடு.

4. செ.வைத்தியலிங்கன், தமிழ்ப்பண்பாட்டு வரலாறு, பாகம்-2

5. Ram Ahuja, (2008), Indian Social System, Reprint, Rawat Publication.

15. மகாபாரதக் கதைகளில் ஊர்ப் பெயராய்வு

நா. இளஞ்செழியன், எம்.ஏ., எம்.ஃபில்
துணைப்பேராசிரியர்
பிஷப் ஹீபர் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி – 620 017

இலக்கியப் படைப்புகளின் உண்மைத் தன்மைக்கு அதன் பின்னணிகளான நாடு, நகரம் போன்ற இயற்கைச் சூழல் முதன்மையான ஒன்றாகும். தமிழில் சங்க இலக்கியப் படைப்புகளிலிருந்து காப்பியங்கள் உள்ளிட்ட அனைத்துப் படைப்புகளிலும் இத்தன்மை காணப்படுவதை அறியலாம்.

வடமொழியில் வேத வியாசரால் படைக்கப்பட்ட மகாபாரதம், இதிகாசம் என்று வர்ணிக்கப்பட்டாலும் இதிகாசமாகவும் அல்லது புராணமாகவும் அமையாமல் பழங்கால இந்தியாவின் சமூக வரலாறு போன்றனவற்றினை வெளிப்படுத்தும் காவியமாகத் திகழ்கின்றது.

மகாபாரதக்கதைகளில் வெளிப்படும் பழங்கால இந்தியாவின்

- நாடுகள்
- நகரங்கள்
- சிறு கிராமங்கள்
- மலைகள்
- காடுகள்
- முதன்மைத் தளங்கள்
- நதிகள்

என மகாபாரதக் கதைகளில் நாட்டுப்பெயர்களும் ஊர்ப்பெயர்களும் சிறந்து காணப்படுவதை ஆராயலாம்.

இக்காவியத்தில் வெளிப்படும் நாடுகளை வரைபடநோக்கில் அந்நாடுகளை வரிசைபடுத்தினால் மகாபாரதக் காலத்திய ஈராயிரம் ஆண்டுகளுக்கு முந்திய இந்திய வரைபடத்தை உருவாக்கிட இயலும்.

இந்தியாவிற்கு வழங்கப்படும் பாரதநாடு என்ற பெயரும்கூட மகாபாரதக் கதையிலிருந்து தொடங்குகின்றது எனலாம். பரத மன்னன் பெயரிலிருந்து பாரதநாடு என வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

மகாபாரதக் கதையின் மையமாக நகரம் அஸ்தினாபுரம் இந்நகரத்திற்கு குருபாஞ்சாலம் அல்லது குருவம்சம் அல்லது பிரம்ம வர்த்தம் என்ற பெயரும் வழங்கப்படுகின்றது.

ஆரிய வர்த்தம் என்ற பெயர் மகாபாரத காலத்தில் அஸ்தினாபுரம் உள்ளிட்ட அனைத்து நாடுகளுக்குமான இந்தியப் பெயராக வழங்கப்பட்டுள்ளது. ஆரிய வர்த்தம் தற்போதைய வடமாநிலம் மற்றும் தென்னிந்தியாவில் ஆந்திராவிற்கு வடக்குப் பகுதிவரையில் ஆரிய வர்த்தம் என்று வழங்கப் படுகின்றது. ஆனால் தனது ஆய்வுநூல் ஒன்றில் பழ. நெடுமாறன் பாகிஸ்தான் மற்றும் பஞ்சாப் பகுதிகள் போன்றவை மட்டுமே ஆரிய வர்த்தம் என்று வழங்கப்பட்டன என்று குறிப்பிடுவது ஆராயத்தக்கதாகும்.

ஆரிய வர்த்தத்திற்கு உட்பட்ட காண்டவப்பிரஸ்தம் என்ற காட்டுப்பகுதி பாண்டவர்களால் அழகிய இந்திரப்பிரஸ்தம் நகரமாக உருவாக்கப்பட்டது. இது தற்போதைய தில்லி பகுதி என்று வரலாற்று ஆய்வாளர்களால் கூறப்படுவது காணத்தக்கதாகும்.

மகாபாரதத்தில் இடம்பெறும் கிருஷ்ணனின் வாழ்வோடு பல ஊர்களும் நாடுகளும் தொடர்புடையதாக இருக்கின்றதை மகாபாரதம் சுட்டுகின்றது. கிருஷ்ணன் சிறையில் பிறந்த இடம் யமுனா. இந்நகரம் கம்சனின் தலை நகரமாகும். பின்பு கிருஷ்ணன் ஆயர்பாடி என்ற கிராமத்திலும், கோகுலம், நந்த கிராமம், பிருந்தாவனம் போன்ற கிராமங்களிலும் வளர்க்கப்படுகின்றான். பின்பு மதுராவில் இருந்து அரசாட்சி செலுத்துகின்றான். அப்போது ஜராசந்தன் போன்ற மன்னர்களின் தாக்குதலுக்கு தப்பிக்க துவாரகை என்ற அழகிய நகரை அரபிக்கடலில் தற்போதைய குஜராஜ்

கடற்பகுதியில் யாதவர்கள் தோற்றுவித்தனர். பின்பு இந்நகரம் கடல்கோள் போன்ற மாற்றங்களால் முற்றிலும் அழிந்து போய்விட்டது என்பது வரலாற்று நிகழ்வாகும்.

மதுரா நகரம் தற்போதைய உத்திரப்பிரதேசம், ராஜஸ்தான் மாநிலத்திற்கு இடைப்பட்ட பகுதியாக அமைவதைக் காணமுடியும்.

அங்கதேசம் என்பது கர்ணனுக்கு துரியோதனனால் அளிக்கப்பட்ட சிறு நாடாகும். இந்நாடு தற்போதைய ராஜஸ்தான் போன்ற பகுதியில் அமைந்திருத்தல் வேண்டும் என்று குறிப்பிடலாம்.

பாஞ்சாலம் என்ற நாட்டை துருபதன் ஆண்டுவந்தான். இந்நாடு தற்போதைய பாகிஸ்தான் மற்றும் பஞ்சாப் மாநிலத்தின் மேற்குப்பகுயும் அடங்கும். பஞ்ச நதிகள் பாயும் பகுதி என்ற காரணமே பாஞ்சாலம் என்று வழங்கப்படுகின்றது.

மத்தியதேசம் என்ற பகுதியின் தலைநகரமாக மகாபாரதம் குறிப்பிடுவது உபபுலவியம் என்பதாகும். இந்த மத்தியதேசம் என்பது இன்றைய மத்தியபிரதேசத்தின் பகுதிகள் அடங்கும். மத்தி என்பது நிலவியல் அடிப்படையில் நாட்டின் நடுப்பகுதி என்பதேயாகும். மற்றொன்று சூரிய உதயத்தின் ஒளிக்கீற்றுகள் கண்பார்வையாக முதலில் படும் இடம் என்ற பொருளும் வழங்கப்படுகின்றது. இதனால் மத்திய தேசம் தற்போதைய மத்தியபிரதேசத்தின் பகுதியில் அடங்கும்.

காசி நகரம் மகாபாரத காலத்தில் தனி நாடாகவே வழங்கப்பட்டுள்ளதைக் காணலாம். இது தற்போது வாரணாசி என்று உத்திரப்பிரதேசத்தின் கிழக்குப் பகுதியில் கங்கைக் கரையில் அமைந்துள்ள பகுதியாகும்.

கோசலநாடு என்பதின் தலைநகரமாக அயோத்தி இருந்துள்ளது. இதுவும் தற்போதைய உத்திரப்பிரதேசத்தில் அமைந்துள்ள பகுதியாகும்.

சேதிநாடு என்பது சிசுபாலன் என்ற மன்னன் ஆட்சிபுரிந்ததாக மகாபாரதக்கதையில் இடம் பெறுகின்றது. சேதிநாடு மதுராவை ஒட்டியே அமைந்திருக்க வேண்டும் எனலாம்.

அவந்திநாடு அல்லது மாளவம் எனப்படும் நாட்டின் தலைநகராக உஜ்ஜையினி இருந்துள்ளது. உஜ்ஜையினி நகரம் பற்றி மகாபாரதக்கதை பெரிதும் பேசவில்லை எனினும் அவந்திநாடு எனக் குறிப்பிடுகின்றது. இந்நாடு தற்போதைய மத்தியபிரதேசத்திற்கும் குஜராத்திற்கும் இடைப்பட்ட பகுதியாக அமைந்திருப்பதைக் காணலாம். மகதநாடு என்பது இன்றைய தெற்கு பீகார் பகுதிகளாகும்.

விதேக நாடு அல்லது விதர்ப்ப நாடு என்பது இன்றைய அலகாபாத் அல்லது குஜராத் பகுதியில் அடங்கிய நாடாகும்.

மகாபாரதக் கதையின் பீஷ்மகன் என்ற மன்னனின் மகள் ருக்மணியவாள் இவளை கிருஷ்ணன் கடத்திவந்து திருமணம் செய்து கொண்டான் என்பது மகாபாரதக் கதையாகும். இதனால் விதேகநாடு மதுராவை அடுத்து அமைந்திருத்தல் வேண்டும்.

கலிங்கநாடு என்பது மகாபாரதக் காலத்திலிருந்துத் தற்போதைய ஒரிசா மாநிலத்தின் பகுதிகளே கலிங்க நாடு என வழங்கப்பட்டுள்ளதை வரலாற்றுக் காலத்திலிருந்து அறிந்துகொள்ள முடிகிறது. மேலும், சகுனி ஆட்சி செய்த காந்தாரம், மற்றும் சால்வம், சௌபநாடு, அவந்திநாடு, போஜநாடு, கேகயம். திரிகர்த்தநாடு, புஷ்கரை, சிந்துநாடு, மத்ரநாடு, மகத நாடு எனப் பல்வேறு நாடுகளைப் பற்றியும் மகாபாரதம் தொடர்ந்து பேசுகின்றது. நகரத்தின் பெயர்களாக வாராணவாதம், உபபுலவியம், காம்வல்யம், கோகுலம், ஏகச்சக்கரபுரம் போன்ற பல்வேறு நகரப் பெயர்களையும் நந்தகிராமம், வேத்திரகிரஹனம், மகாம்மியம், வாரணாவதம், வர்காஸ்தலம், போன்ற கிராமத்தின் பெயர்களும் இடம் பெறுகின்றன.

துவைதவனம், சமந்தபஞ்சகம், கந்தமதானம், வைதரனி போன்ற இடங்களும் கதளிவனம், நாகசதம் சதுசிருங்கம் போன்ற காடுகளின் பெயர்களையும் மகாபாரதம் வர்ணிக்கின்ற நிலையை காணலாம்.

ஆரிய வர்த்தம் பகுதியில் அக்காலத்தில் தென்னிந்தியா இடம்பெறவில்லை. ஆனாலும் அர்ச்சுனன் தீர்த்த யாத்திரையாக பாண்டிய நாடுவரை வந்ததாக மகாபாரதம் பதிவுசெய்கின்றது.

மேலும் கங்கைநதி, பாகிரதி நதி, யமுனை நதி போன்ற பல்வேறு நதிகளின் பெயர்களையும் மகாபாரதம் குறிப்பிடுகின்றது.

பாண்டவர்கள் வனவாசம் சென்ற காலத்தில் பல காடுகளிலும் மலைகளிலும் சுற்றியுள்ளனர். அப்போது வீமன் இமயமலையைச் சுற்றி திரௌபதிக்காக மலர் ஒன்றை பறித்து வந்தான் என்ற செய்தியும் கூறப்படுவது அறியத்தக்கதாகும்.

மகாபாரதம் குறிப்பிடும் நாடுகளையும் நகரங்களையும், பொருத்தமுற கூர்மையாக ஆராய்ந்து வகைப்படுத்தினால் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய மகாபாரத காலத்திய இந்திய வரைபடத்தை உருவாக்கிக் காட்ட இயலும் என்பதில் மிகையல்ல. அந்த வகையில் மகாபாரதம், அக்காலத்திய நாடு நகரங்களை வெளிப்படுத்துவதன் மூலம் மகாபாரதம் ஈராயிரம் ஆண்டுகளுக்குமுன் நிகழ்வுற்ற உண்மைக் கதையாகவும் வரலாற்று நிகழ்வாகவும் அமைவதை நாம் மேற்கண்ட கருத்துக்களின் மூலம் துணியலாம்.

பார்வை நூல்கள்

1. ஜோதி, வ., **வியாசபாரதம்**, வர்த்தமானன் பதிப்பகம்.
2. நெடுமாறன், பழ., **உருவாகாத இந்தியத் தேசியமும், உருவான இந்து பாசிசமும்**, தமிழ்க்குலம் பதிப்பாலயம், நரு. நரசிம்மபுரம் சாலை, மயிலை, சென்னை—4.
3. இளவரசு, சோம., **காப்பியத்திறன்**, வேவன் வெளியீடு,, சிதம்பரம்

16. சங்க இலக்கியப் புலவர்களின் ஊர்ப்பெயர்கள்

முனைவர் பெ. இளையாப்பிள்ளை
உதவிப்பேராசிரியர், தமிழியல் துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
அண்ணாமலை நகர்.

மனித இனம் ஓரிடத்தில் கூட்டமாக நிலைத்து வாழத் தொடங்கிய நாள் முதலே அவ்விடத்திற்கு பெயர்வைக்கும் எண்ணம் தோன்றியிருக்கும் என்பதில் ஐயமில்லை. இவ்வாறாக உருவான அவ்விடத்தின் பெயர்களை ஆராய்ந்து அதன் வாயிலாக பல வகையான பயனுள்ள செய்திகளை எடுத்துக் கூறும் நிலை இன்றைய இலக்கியத்துறையில் காணக்கூடிய ஒரு புதுமையாகும். இனி அறங்களையும், அன்பையும் வழியுருத்தி பாடிய சங்கப்புலவர்களின் ஊர்ப் பெயர்களைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

நன்முல்லையார் வாழ்ந்த அள்ளூர்

அள்ளூர் என்பது பாண்டி நாட்டில் சிவகங்கை வட்டத்திலுள்ள ஓர் ஊர். நன்முல்லையார் என்ற சங்ககாலப்புலவர் இவ்வூரினராதலின் அள்ளூர் நன்முல்லையார் என பெயர் பெற்றார்.

"காலையும், பகலும், கையறு, மாலையும்
ஊர்துஞ்சு யாமமும், விடியலும், என்று" (குறுந்-32)

என்ற குறுந்தொகைப் பாடலைப் பாடியுள்ளார். இவர் புறநானூற்றில் 306, ஆம் பாடலையும் பாடியுள்ளார்.

ஆடுதுறை

ஆடுதுறை என்ற ஊர்ப்பெயர் மாசாத்தனார் என்ற சங்ககாலப் புலவர் பெயரோடு சேர்த்துக் கூறப்பட்டுள்ளது. சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனை, அவன் இறந்த பொழுது வருந்தி ஆடுதுறை மாசாத்தனார் பாடியுள்ளார்.

ஆறுகளில் மக்கள் இறங்கி நீராடுவதற்கேற்ற இடமாகிய துறை என்னும் பெயரை, ஆற்றையடுத்துள்ள ஊர்கள் பெற்றிருப்பதற்கு ஆடுதுறை என்னும் ஊர்ப்பபெயர் ஒரு சான்று.

ஆலங்குடி

வங்கனார் என்ற சங்கப்புலவர் பெயருடன் இணைத்து ஆலங்குடி வங்கனார் என வழங்கப் பெற்றுள்ளதால் 'ஆலங்குடி' என்ற ஊர்ப்பெயரை நாம் அறிகிறோம்.

அகநானூற்றில் 306ஆம் பாடலும் புறநானூற்றில் 319 ஆம் பாடலும் ஆலங்குடி வங்கனார் பாடிவை.

"ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் ஆட்சி புரிந்த முதலாம் இராசராசனின் கல்வெட்டிலும் 'ஆலங்குடி' என்ற ஊர்ப்பெயர் காணப்படுகிறது." (இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள் - ஆளவந்தான்)

இடைக்கழிநாடு

சிறுபாணாற்றுப்படை என்னும் நூலை இயற்றியவர் இடைகழிநாட்டு நல்லூர் நத்தத்தனார் என்பதிலிருந்து இடைக்கழிநாடு நல்லூர் நத்தத்தினர் வாழ்ந்த ஊரின் பகுதியாக இருக்கலாம் என்பதை அறிய முடிகிறது. 'இடைக்கழிநாடு செய்யூருக்குக் கிழக்கிலும் தென்கிழக்கிலும் தெற்கிலும் கடற்கரையோரத்தில் பரவியுள்ளது. இந்நாட்டின் இடையில் கழிவெளிகள் நீண்டு கிடக்கின்றன. இதுப்பற்றியே இந்நாடு இடைக்கழிநாடு எனப் பெயர் பெற்றது போலும்.' (இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள்-ஆளவந்தான்)

இடைக்காடு

சங்க இலக்கியப் புலவர்களுள் ஒருவர் இடைக்காடனார் என்றழைக்கப்படுகிறார். ஊரின் அமைப்பு முறையில் 'இடை' என்னும் அடைமொழியுடன் அமைந்த ஊர்ப்பெயர் இடைக்காடு. இடைக்காடு என்ற ஊர்மலைப்பகுதியைச் சார்ந்தது என்ற கருத்தும் உள்ளது.

இவர் நற்றிணையில் 142, 221, 316 ஆகிய பாடல்களும், குறுந்தொகையில் 251 ஆம் பாடலும் பாடியுள்ளார்.

இடைக்குன்றூர்-கிழார்

இவ்வூரைச் சேர்ந்த சங்கப்புலவர் இடைக்குன்றூர் கிழார் எனப் பெயர் பெற்றார். பாண்டியன் தலையாலங்கானத்துச் செறுவென்ற நெடுஞ்செழியனைப்பற்றி இவர்பாடிய பாடல்கள் புறநானூற்றில் 76, 77, 78, 79, ஆகியவை உள்ளன.

உகாய்க்குடி

சங்ககாலப் புலவர் ஒருவரின் பெயர் உகாய்க்குடிகிழார் எனப்பெயர் பெற்றார். இவரின் பெயரின் முன்னொட்டாக உகாய்குடி என்ற அடைமொழி வருவதால் இவர் உகாய்க் குடியில் வாழ்ந்தவர் என்பதை அறியமுடிகிறது.

'ஈதலும் துய்த்தலும் இல்லோர்க்கு இல்'

என்ற குறுந்தொகைப் பாடல் இவர்பாடியதே. 'உவா மரங்கள் நிறைந்த பகுதியதலால் உகாய்க்குடி எனப் பெயர் பெற்றிருக்கலாம்.' (இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள்- ஆளவந்தான்)

உம்பற்காடு

இளங்கண்ணனார் என்ற சங்கப்புலவர் உம்பற்காடு என்ற ஊரினர் எனத்தெரிகிறது. ஆகவே அவர் உம்பிற்காட்டு இளங்கண்ணனார் எனப்பெயர் பெற்றார்.

உடம்பற்காடு சேர நாட்டுப்பகுதியாகும். உம்பல் என்ற சொல் யானையைக் குறிக்கும். எனவே யானைகள் மிகுந்த காடு என்ற பொருளில் இவ்வூர் பெயர் பெற்றிருக்கலாம்.

'மழைஇல் வானம் மீன்அணிந் தன்ன,'

என்ற அகநானூற்று முல்லை நிலத்துப் பாடலைப் பாடியவர் இவரே.

உரோடகம்

கந்தரத்தனார் என்ற சங்ககாலப் புலவர் உரோடகம் என்ற ஊரினர். எனவே உரோடகத்துக் கந்தரத்தனார் எனப் பெயர் பெற்றார். அகநானூற்றில் ஒரோடகத்துக் கந்தரத்தனார் என உரோடகம் என்ற பெயர் ஒரோடகம் எனக் குறிக்கப் பெற்றுள்ளது.

நற்றிணையில் 306 ஆம் பாடலும், குறுந்தொகையில் 155 ஆம் பாடலும் அகநானூற்றில் 69, 95, 191 ஆகிய பாடல்களும் உரோடகத்துக் கந்தரத்தனார் பாடியவை.

எருமை வெளி

சங்க இலக்கியப் புலவர்களுள் ஒருவரின் பெயர் எருமை வெளியனார். வெளி என்னும் கூறு சில ஊர்ப்பெயர்களில் அமைந்திருப்பதைக் காணலாம். நாகப்பட்டினத்துக்கு அருகே வடக்கு வெளி என்னும் பெயருடைய ஊர் ஒன்று உண்டு.

சங்ககாலப் புலவர்களில் இருவர் வெளி என்னும் பெயரையுடைய ஊரினராகத் தெரிகிறது. எருமை வெளியனார் என்பது ஒருவர் பெயர். வீரைவெளியனார் என்பது

மற்றொருவர் பெயர். எருமை வெளியினார் அகநானூற்றில் 13-ஆம் பாடலைப் பாடியுள்ளார்.

ஏணிச்சேரி

யவனர்சேரி என்ற தொடர் நாளடைவில் ஏணிச் சேரி எனத் திரிந்து அமைந்திருக்கலாம் என்பது ஆளவந்தான் அவர்களின் கருத்தாகும். இதனை தலைநகராகிய உரையூரையடுத்து யவனர்கள் தங்கி இருந்த பகுதியாகக் கருதலாம்.

முடமோசியர் என்ற சங்ககாலப்புலவர் இவ்வூரினர். ஆகவே ஏணிச்சேரி முடமோசியார் எனப்பட்டார். ஏணிச்சேரி உறைவூரை ஒட்டி இருந்திருக்க வேண்டும்.

புறநானூற்றில் 13, 127, 135, 241, 374, 375 ஆகிய பாடல்கள் இப்புலவர் பாடியவை.

கடியலூர்

உருத்திரங்கண்ணனார் என்ற சங்க காலப்புலவர் இவ்வூனர். ஆகவே கடியலூர் உருத்திரங்கண்ணனார் எனப் பெற்றார். கடியலூர் பாண்டிய நாட்டிலுள்ள ஓர் ஊர். இது திருநெல்வேலி மாவட்டத்திலுள்ளது.

குறுந்தொகையில் 352-ஆம் பாடலும், அகநானூற்றில் 167-ஆம் பாடலும் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடியவை.

கள்ளில்

ஆத்திரையன் என்ற சங்ககாலப் புலவர் கள்ளில் என்னும் ஊரைச் சேர்ந்தவர் ஆதலின் கள்ளில் ஆத்திரையன் எனப் பெயர் பெற்றார். பெரும்பாலும் மக்கள் வாழும் வீட்டைக் குறிக்கும் 'இல்' என்பது சில பழமையான ஊர்ப்பெயர்களில் சேர்ந்திருக்கிறது.

'கள்ளின் கேளிர் ஆர்த்திய உள்ளூர்'

என்ற குறுந்தொகைப் பாடல் இவர் இயற்றியது.

குறுங்கோழியூர்

கிழார் என்ற சங்ககாலப் புலவர் குறுங்கோழியூரைச் சேர்ந்தவர். ஆகவே அவர் குறுங்கோழியூர் கிழார் எனப்பெயர் பெற்றார்.

புறநானூற்றில் 17, 20, 22, ஆகிய பாடல்கள் குறுங்கோழியூர் கிழார் பாடியவை.

குன்றூர்

குன்றை அடுத்துள்ள ஊர் என்ற நிலையில் குன்றூர் என்ற ஊர்ப்பெயர் தோற்றம் பெற்றிருக்கவேண்டும் எனத்தோன்றுகிறது. கிழார் என்னும் புலவரும் அவர் மகன் கண்ணனாரும் இவ்வூரினர் ஆகையால் தான், குன்றூர் கிழார் என்றும் குன்றூர் கிழார் மகனார் கண்ணத்தனார் என்றும்பெயர் பெற்றிருந்தனர். புறநானூற்றில் 338-ஆம் பாடல்கிழார் பாடிய பாடலாகும்.

கூடலூர்

ஆறுகள் கூடும் இடம் கூடல் எனப்பெயர் பெற்று, அங்கே அமைந்த ஊரும் கூடலூர் எனப்பெயர் பெற்றிருக்கலாம். மதுரைக் கூடலூர் கிழார் என்ற தொடர் மதுரையை அடுத்து இருக்கும் கூடலூரைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

நற்றிணையில் 200, 380, ஆகிய பாடல்களையும், புறநானூற்றில் 299, ஆம் பாடலையும் பாடிய கிழாரும் கூடலூரைச் சேர்ந்தவர்கள்.

துறையூர்

துறையூர் ஓடைகிழார் என்ற புலவர் ஒருவர் பாடிய சங்க இலக்கியப் பாடல் ஒன்றில் '**தண்புனல் வாயில் துறையூர்**' இடம் பெற்றுள்ளது. இப்புலவர் ஊரால் பெயர் பெற்றவராதல் வேண்டும். நீர்த்துறையின்கண் அமைந்த ஊர் துறையூர் எனப் பெயர் பெற்றிருக்க வேண்டும்.

முரஞ்சியூர்

சேரமான் பெருஞ்சோற்று உதியன் சேரலாதனை பாடிய முடிநாகராயர் என்னும் சங்ககாலப் புலவர் முரஞ்சியூரைச் சேர்ந்தவர்.

'மண்திணிந்த நிலனும்
நிலன் ஏந்திய விசும்பும்'

என்ற புறநானூற்றுப் பாடல் இப்புலவரால் பாய்பெற்றது.

நிறைவாக

சங்க இலக்கியப் புலவர்களின் ஊர்ப் பெயர்கள் என்னும் தலைப்பில் அமைந்த இக்கட்டுரையில் நன்முல்லையார் வாழ்ந்த அள்ளூர், மாசாத்துவனார் வாழ்ந்த ஆடுதுறை, வங்கனார் வாழ்ந்த ஆலமங்குடி, நல்லூர் நத்தத்தனார் வாழ்ந்த இடைக்கழி நாடு, இடைக்குன்றூர், உகாய்க்குடி, குறுங்கோழியூர், குன்றூர் ஆகியவையும் இளங்கண்ணனார் வாழ்ந்த உம்பற்க்காடு, கந்தரத்தனார் வாழ்ந்த எருமை வெளி, உருத்திரங்கண்ணனார் வாழ்ந்த கடியலூர், ஆத்திரையின் வாழ்ந்த கள்ளில் ஆகிய சங்கப் புலவர்கள் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

17. பத்துப்பாட்டில் பதிவாகியுள்ள ஊர்ப்பெயர்கள்

பா.எஸ்தர்

தமிழ்த்துறை, உதவிப்பேராசிரியை,

தாசிம்பீவி அப்துல் காதர் மகளிர் கல்லூரி, கீழக்கரை

முன்னுரை

சங்க இலக்கிய வரிசையில் ஒன்றான பத்துப்பாட்டில் பதிந்துள்ள ஊர்களின் பெயர்கள் பலவாகும். ஒவ்வொரு மனிதனுக்கும் அடையாளமாக பெயர்கள் சூட்டுவது போல இம்மனிதர்கள் குடியிருந்த ஒவ்வொரு இடங்களுக்கும் சிறப்பின் காரணமாக பெயரிட்டு வழங்கும் முறை அக்காலம் முதல் இக்காலம் வரை வழங்கி வரும் பழக்கமாகும். ஆகவே பத்துப்பாட்டில் ஒவ்வொரு பரிசில் பெற்ற பாணர்களும் தான் போய் பரிசில் வாங்கி வந்த மன்னன் முதல் இடையில் கண்ட ஊர்களின் சிறப்புக்களையும், பரிசில் பெற விழைந்த பாணர்களுக்கு கூறும் பாங்கில் மிகச்சிறப்பாக குறிப்பிடப்பட்டுள்ளது.

திருப்பரங்குன்றம்

மதுரையின் மேற்றிசைக் கண்ணே கரிய சேற்றையுடைய அகன்ற வயலிலே மலர்ந்த தாமரைப் பூவிலே இரவில் துயில்கொண்டு வைகறைப் போதிலே தேன் மணக்கும் நெய்தற் பூவை ஊதி ஞாயிறு தோன்றின பின்னர்க் கண் போன்று மலர்ந்த சுனை மலரின் கண் சென்று அழகிய சிறையுடைய வண்டுக் கூட்டம் ஆரவாரிக்கின்ற திருப்பரங்குன்றிலே நெஞ்சமர்ந்து தங்குதலுக்கு உரியவன் முருகன் ஆவான். இதைப் பின்வரும் பாடலில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

"கண்போல் மலர்ந்த காமரு சுனைமலர்
அஞ்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும்
குன்றமர்ந்துறைதலும் உரியன்"

(திருமுருகாற்றுப்படை 71 – 77)

திருச்சீரலைவாய்

இன்று திருச்செந்தூர் என்றழைக்கப்படுவது இவ்வூர் ஆகும். சான்றோர்களால் புகழக்கூடிய சிறப்பினை உடைய முருகப்பெருமானின் அரசாட்சியை காணலாம்.

"உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீர்
அலைவாய்ச் சேறலும்"

(திருமுருகாற்றுப்படை 124 – 125)

திருவாவினன்குடி

இத்தலத்தில் முருகன் தெய்வயானையாருடன் வீற்றிருப்பான். இங்கு திருமால் உருத்திரன் இந்திரன் ஆகிய மூவரும் வந்து அயனை விடுவிக்க வேண்டி வருகை புரிந்த செய்தியை நாம் அறிய முடிகிறது.

"தாவில் கொள்கை மடந்தையொடு சின்னாள்
ஆவினன்குடி அசைதலும் உரியன்"

(திருமுருகாற்றுப்படை 175 – 176)

திருஏரகம்

இத்தலத்தில் முருகனை அந்தணர்கள் வழிபடும் சிறப்பினை உடையது ஆகும்.

"விரையுறு நறுமலர் ஏந்திப் பெரிது வந்து
ஏரகத் துறைதலும் உரியன்"

(திருமுருகாற்றுப்படை 188 – 189)

குன்றுதோறாடல்

மெல்லிய தோளையுடைய மாண்பினை போன்ற பல மகளிரைத் தழுவிக்கொண்டு அவர்க்கு இடமளித்து மலைகள் தோறும் சென்று விளையாடுதலும் அம்முருகப்பெருமானுக்கு நிலைநின்ற குணமாம். அதை பின்வருமாறு காணலாம்.

"மென்தோள் பல்பிணை தழீஇத் தலைத்தந்து

குன்று தொறாடலும் நின்றதன் பண்பே"

பழமுதிர்ச்சோலை

மழை உச்சியிலிருந்து ஓசை உண்டாக குதிக்கும் அருவியை உடையதும் பழம் முற்றின சோலைகளை உடைய ஆனமலைக்கு உரிமை உடையவன் முருகப்பெருமான் ஆவான்.

"ஆமா நல்லேறு சிலைப்பச் சேண்நின்று

இழுமென இழிதரும் அருவிப்

பழமுதிர்ச்சோலை மலை கிழவோனே"

(திருமுருகாற்றுப்படை 315 — 317)

வெண்ணி

சேர மன்னனையும் பாண்டிய மன்னனையும் கரிகாற்சோழன் 'வெண்ணி' என்ற ஊரிடத்தே போரிட்டு வெற்றிப்பெற்றதால் அவ்வூர் இன்று வரை சிறப்பாக பேசப்பட்டு வருவதை பின்வருமாறு காணலாம்.

"இருபெரு வேந்தரு மொருகளத் தவிய

வெண்ணித் தாக்கிய வெருவரு நோன்றாட்

கண்ணார் கண்ணிக் கரிகால் வளவன்"

(பொருநராற்றுப்படை 145 — 148)

நீர்ப்பாயற்றுறை

நீர்த்துறையில் குளிக்கச் சென்ற மகளிர் பொன்னால் செய்த மகரக் குழையை விட்டுவிட்டுச் சென்றனர். அதைச் சிச்சிலிப் பறவைகள் தனது இரையாக நினைத்து எடுத்துப்போய் அந்தணரின் வேள்வித் தூணிலே வைத்து விடுகிறது. அந்த தங்கக் குழையானது அன்ன விளக்குப் போலவும் வானத்தே வைகறையில் தோன்றும் வெள்ளிமீன் போலவும் ஒளிவிட்டுத் திகழும் சிறப்பை உடையது இந்த நீர்ப்பாற்றுறை ஆகும்.

உறந்தை

சோழர் மரபில் வந்தவனும் கீர்த்தி மிக்கவனும் நல்ல தேரினை உடையோனுமாகிய செம்பியனது ஊர் உறந்தை ஆகும்.

"நாடா நல்லிசை நற்சேர்ச் செம்பியன்

ஓடாப்புட் கை உறந்தையும்"

(சிறுபாணாற்றுப்படை, 83-84)

எயிற்பட்டனம்

"மணிநீர் வைப்பு மதிலொடு பெயரிய

பனிநீர்ப் படுவிற் பட்டினம் படரின்"

(சிறுபாணாற்றுப்படை, 152-153)

இப்பாடலில் சுட்டப்பெறும் எயிற்பட்டினமானது பரதவர்கள் வாழும் பகுதியாகும்.

ஆமூர்

இவ்வூர் குளிர்ந்த வயல்களை உடையதும் அகன்ற வீடுகளையும் சான்றோர்கள் வாழும் சிறப்புக்களையும் உடையது. இதுவே நல்லியக்கோடன் என்ற மன்னவனது ஊரும் ஆகும். அவற்றைப் பின்வரும் பாடலின் வாயிலாக அறியலாம்.

"மருதம் சான்ற மருதத் தண்பனை
அந்தணர் அருகா அருங்கடி வியனகர்
அந்தண் கிடங்கினவன் ஆமூர்"

(சிறுபாணாற்றுப்படை, 186-188)

அருங்கடிமூதூர்

முல்லைப் பாட்டில் இடம்பெறும் இவ்வூரானது அரிய காவலை உடைய பழைய ஊராகும்.

காவிரிப்பூம்பட்டினம்

பலமொழிகள் பேசும் வணிகர் வந்து கூடும் சிறப்பை உடையது காவிரிப்பூம்பட்டினம் ஆகும்.

தலையாலங்கானம்

பாண்டியன் நெடுஞ்செழியன் தலையாலங்கானம் என்ற இடத்தில் முடிமன்னர் இருவரையும் குறுநில மன்னர் இருவரையும் குறுநில மன்னர் ஐவரையும் எதிர்த்து போரிட்டு வெற்றி கொண்டவன் ஆவான். அது பின்வருமாறு விளக்கப்படுகிறது.

"நாடுகெட எரிபரப்பி
ஆலங்கானத் தஞ்சு வரவிறுத்து
அரசுபட அமருழக்கி
முரசுகொண்டு களம்வேட்ட
அடுதிறலுயர் புகழ்வேந்தே"

(மதுரைக்காஞ்சி, 126-130)

நெல்லூர்

அசையும் இயல்புடைய பெரிய மரக்கலங்கள் வந்து நின்று அதிகமான பொருட்களை நாட்டில் உள்ளோர் வாங்கும்படி கொண்டு வரும் சிறப்புடையது. உயர்ந்த தர நெல்லினை உடைய நெல்லூரைக் கைக் கொண்டவன் பாண்டியன் நெடுஞ்செழியன் ஆவான்.

"சீர் சான்ற உயர்நெல்லின்
ஊர்கொண்ட உயர் கொற்றவ"

(மதுரைக்காஞ்சி, 87-88)

முதுவெள்ளிலை

நெற்கதிர்கள் காற்றில் அசைவதால் எழும் ஓசையும் அதை அறுப்பாந்தம் ஆரவாரமும், உப்பு விற்போரின் ஓசையும் இவ்வாறாக பல புது வருவாயினையுடையது முது வெள்ளிலை என்ற ஊராகும்.

"இருங்கழிச் செறுவின் வெள்ளுப்புப் பகர்நரொடு
ஒலியோவாக் கலியாணர்
முதுவெள்ளிலை"

(மதுரைக்காஞ்சி, 117-119)

கொற்கைப்பட்டினம்

பாண்டிய நாட்டின் சிறந்த பொருளாக எண்ணப்படுவது முத்தாகும் அது கொற்கைப்பட்டினத்தை அடுத்த கடலிற் குளிக்கப்படுதலான் கொற்கை முத்தென்ப கொற்கை பாண்டியர்களின் சிறந்த ஊராகும்.

பாணர்சேரி

குருகென்னும் பறவைகள் கூப்பிடும்படி மனையிடத்து மரங்கள் காணப்படும். அதனருகே பாணர் மீன் திருத்தும் பணி செய்வர்.

"குருநரல மனைமரத்தான்
மீன்சீவும் பாண்சேரி"

(மதுரைக்காஞ்சி, 267-268)

மணம்கமழ்சேரி

இது பரத்தையர்கள் வாழும் பகுதியாகும். ஏனென்றால் அவர்கள் தம்மை எப்பொழுதும் மலர் முதலிய நறுமணப் பொருள்களால் ஒப்பனை செய்வதால் இது மணம் கமழ் சேரியாகிறது.

அழும்பில்

பெரிய செல்வவளமுடைய மானவிறல் வேள் என்னும் குறுநில மன்னனுடைய ஊர் இது.

மோகூர்

"மழையொடுக்கறாஅப் பிழையா விளையுட்
பழையன் மோகூர்"

(மதுரைக்காஞ்சி, 507-508)

மோகூரில் இடைவிடாது மழைபெய்வதனால் எப்பொழுதும் விளைச்சல் விளைந்து கொண்டே இருக்கும். இவ்வூர் பழையன் என்னும் குறுநில மன்னனின் ஊராகும்.

மறவர்சேரி

வீரம் பொருந்தியவர்கள் வாழும் பகுதி மறவர்சேரி ஆகும்.

மதுரை

இம்மதுரையில் பல்யாகசாலை முதுகுடுமிப்பெருவழியின் ஆட்சிக்காலத்தில் பல் யாககங்களை செய்து வாழ்ந்து வந்தான் என்ற செய்தி பின்வருமாறு சுட்டப்படுகிறது.

"பரந்து தோன்றா வியனகராற்
பல்சாலை முதுகுடுமியின்
நல்வேள்வித்துறை"

(மதுரைக்காஞ்சி, 758-760)

கானவர்சிறுகுடி

கானவர்கள் வாழ்வதால் இவ்வூர் கானவர்சிறுகுடி என்றழைக்கப்படுகிறது. நன்னன் என்ற மன்னனுடைய நவிரமலையில் இடம் பெறும் ஊராகும்.

குறும்பல்லூர்

கரும்பு ஆலைகள் அதிகம் உடையது. தெங்கு, வாழை, கழுகு மரங்களை உடைய ஊர் இக்குறும்பல்லூர் ஆகும்.

பட்டினப்பாக்கம்

காவிரிக் கரையில் உள்ள மருத நிலப்பகுதியில் உள்ள ஊர் பட்டினப்பாக்கம் ஆகும்.

மருவூர்ப்பாக்கம்

நெய்தல் நிலப்பகுதியில் உள்ள ஊர் மருவூர்ப்பாக்கம் ஆகும்.

முடிவுரை

பத்துப்பாட்டு நூலின் வாயிலாக பண்டையகால மக்கள் வாழ்ந்த ஊர்களையும் அவற்றின் சிறப்புக்களை முறையே அறிய முடிகிறது. இப்புவியில் ஒவ்வொரு சமுதாய மக்களும் அவர்களுக்கென்று சில குடிகளை அமர்த்தி வாழும் இடங்களும் அவற்றிற்கு வழங்கப்படும் பெயர்களும் காலந்தோறும் பேசக் கூடிய வகையில் அமைந்துவிடும் பாங்கை நாம் உணரலாம்.

18. செழுமை + பழமை = சேறை

க.கந்தசாமிபாண்டியன். எம்.ஏ.,எம்.ஃ.பில்.,எம்.ஏ.,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
அய்யநாடார் ஜானகிஅம்மாள் கல்லூரி(தன்னாட்சி),
சிவகாசி.

தொடக்கம்

தொப்புள் கொடி உறவுகள் கூட திசைமாறிப் போகலாம். ஆனால் தான் பிறந்த புண்ணிய பூமியின் அன்பு என்றும் அகலாது. காரணம் தாய் தன்னை ஈன்றாலும் தான் மடியும் வரையும் மக்கும் வரையும் தாங்கி நிற்பது மண் மட்டும் தான். அத்தகைய சிறப்பு வாய்ந்த மண்ணின் பெயரைத் தன் மார்பு தட்டி ஒவ்வொரு மனிதனும் பெருமைப்பட்டுக் கொள்கிறான். இது சங்க காலம் முதல் தொடர்கின்ற ஒன்று. எத்தனையோ அறிஞர்கள் தன் பெயருக்கு முன்னால் பிறந்த மண்ணின் பெயரைச் சேர்த்துக்கொள்கின்றனர். காரணம் பெயர் எடுப்பதற்கு மட்டும் அன்று; தன் மண்ணின் பெயரை நிலைநாட்டவும் தான். அத்தகைய அறிஞர் பலர் தனது மண்ணின் பெருமையை இலக்கியமாக வடித்தனர். அம்மண்ணின் வரலாற்றை அதன் வழி அறிய முடியும்.

சேறை(சேத்தூர்) = செழுமை

"ஆண்மறை நாடு" என்று அன்போடு இது அழைக்கப்படுகிறது. தேவியாறு, நகரையாறு, கோறையாறு, புறவடியாறு, மனமாக்கியாறு என்று பஞ்ச நதிகளின் மூலம் பசுமையாகக் காட்சியளிக்கிறது. இதனைச் சேறைத் தலபுராணத்தில் நாட்டுப் படலம்

"கொண்டன் மேதி கொழுங்கு வடேமடி
மண்டலத்தில் வருநதி நீண் முலை
கண்ட நீண்முலைக் காம்பின் வடிந்தபா
லுண்ட கன்றுகளொக்குங் குளங்களே"
- சேறைத் தலபுராணம்.

என்று கருமுகில் பசுவாகவும்; மலைக் குன்றுகள் பசுவின் மடுக்களாகவும்; ஆறுகள் மடுக்களின் காம்புகளாகவும்; குளங்கள் பாலைக் குடிக்கும் கன்றுகளாகவும் உருவகப்படுத்திக் கூறுகின்றது. "சோழ நாடு சோறுடைத்து" என்று தமிழறிஞர் கூறுவது பழமை. ஆனால் "சோற்றுக்கு அலைந்தவர்கள் சேற்றூருக்குச் செல்லுங்கள்" என்று கூறுவது தான் புதுமை. இதிலிருந்து இத்தேசத்தின் செழுமை நன்கு புலப்படும்.

"மணிவயல் வாளைபாய வளரிளங் கதலி தூங்கும்
இணையின் மென்பழுஞ் சிந்துந் தேனிடை விடா தொழுகச் செந்நெற்
பனையெலா மோங்குஞ் சேறைப் பதிவளர் நாட்டுப் பண்ணைக்
கணைநிகர் கருங்கட்பண் மங்கையர் வரவுரைக்கின்றேன்."
- சேறைப்பட் பிரபந்தம்

என்று சேறையின் செழுமையைச் சேறைப்பட் பிரபந்தம் செப்புகிறது.

சேறை = பழமை

'சேற்றூர்', என்றும் 'போற்றூர்' என்றும் இலக்கியங்கள் பாராட்டுகின்றன. சேறை, சேரூர், சேம்மரம், குலசேகர புரம் என்னும் பெயர்களைக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. சேற்றூர் என்பது மருவி இன்று சேத்தூர் என்று அழைக்கப்படுகிறது. ஏகாம்பரத்தேவரின் மரபில் தோன்றியதே சேறை சமஸ்தானம் என்று 'நதிவிலாசம்' கூறுகிறது.

இராமன் இராமேசுவரத்தில் மணலைக் குவித்து சிவலிங்கத்தை வழிபட்டார். திருவாடனைக்கு அருகில் உள்ள உப்பூரில் உப்பைக் குவித்து விநாயகரை வழிபட்டார். அதுபோல சேத்தூரில் அகத்தியர் மணலைக் குவித்து வழிபட்டதாகப் புராணங்கள் பகர்கின்றன. அந்தக் கோவிலும் இன்று இருக்கிறது.

கிபி 7 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மகாவீரர் சிலையும் சமண முனிவர்கள் வாழ்ந்த குகையும் காணப்படுகிறது.

சுந்தரபாண்டியன், ஜடாவர்மன் பராக்கிரம பாண்டியன், அதிவீரராமன் ஸ்ரீவல்லபதேவன், தர்மப்பெருமாள் குலசேகரப்பாண்டியன், செண்பக பராக்கிரம பாண்டியன் ஆகிய மன்னர்களின் காலத்துக் கல்வெட்டுக்கள் சுமார் 14 இத்தேசத்தில் இருக்கின்றன.

" சென்று நேரியன் சேனை புகுந்துநீ
யொன்றும் பூசலுடற் றுமவ் வேளையிற்
குன்று போலுற் குறட்டை யேவிநாம்
வென்று நல்குவம் வெற்றியுனக் கொன்றான்"

- சேறைத் தலபுராணம்

என்று இறைவனே பாண்டிய மன்னனுக்குச் சேவகம் செய்ததைச் சேறைத் தலபுராணம் சிவபெருமான் சேவகஞ் செய்த படலம் கூறுகின்றது. மூவேந்தரும் வழிபட்ட தலம் என்று பல்வேறு சிறப்புகளைத் தன்னகத்தே கொண்டிலங்குகிறது.

தோல்வியே கண்டிராத மருதநாயகத்தை எதிர்த்துச் சமமாக 1756 ல் போரிட்டுள்ளது. 1800 க்குப் பிறகு சேத்தூர் பாளையம் என்ற தகுதியினைப் பெற்றது. 1803 ம் ஆண்டுக்கு முன்பு வரை இது மதுரை மாவட்டத்திலும் அதன் பின்பு சீர்மிகு திருநெல்வேலி மாவட்டத்திலும் இருந்தது. 1910 முதல் இராமநாதபுரம் மாவட்டத்திலும் 1984 முதல் விருதுநகர் மாவட்டத்திலும் இருந்து வருகின்றது.

சேறையும் செந்தமிழும்

சேறையில் முத்தமிழும் முகிழ்த்தது. முத்தமிழ் வித்தகர்களுக்கு அடைக்கலம் கொடுத்து ஆதரித்தது. சேறைமன்னர் சுந்தரராசுத் தேவர் 'துறைக்கோவை', 'பதிகப்பாமாலை', 'தனிப்பாடற்திரட்டு' போன்ற அற்புதக் கவிகள் புனைந்துள்ளார். வடமொழியில் இருந்த சேறைத் தலபுராணத்தை 1574 ல் சிந்தாமணிப்பிள்ளை என்ற பொன்னாயிரங்கவிராயர் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். இதனை 1893 ல் இராமசாமிக்கவிராயர் வெளியிட்டுள்ளார். 'குறவஞ்சிப் பிரபந்தம்', 'தாய்மகளெசல்' போன்ற பல இலக்கியங்களை இராமசாமிக்கவிராயர் படைத்துள்ளார். சங்கரமூர்த்திக் கவிராயர் 'சேறைப்பட் பிரபந்தம்' பாடியிருக்கிறார். மன்னர் பரம்பரையின் 14 வது பாட்டனார் சுந்தரராசுத் தேவர் 'அன்னம்விடு தூது' பாடியிருக்கிறார். மு.ரா.கந்தசாமிக் கவிராயர் 'குமணவள்ளல் சரித்திரம்' பாடி தமிழ் வளர்த்துள்ளார். இத்தனைக்கும் மேலாக பாவேந்தன் பாரதி தனது இளமையில் சிறிது காலத்தை சேறையில் செலவழித்துள்ளார். "கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும் என்பது முந்தைய மொழி. ஆனால் இன்றைய திருமொழி என்னவெனில் சேறைச் செந்நிலமும் செந்தமிழ் செப்பும்" என்ற வரலாற்று ஆய்வாளர் ந.இராசையாவின் வாக்கு முற்றிலும் உண்மையே.

தொகுப்புரை

சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்தப் பாண்டிய தேசத்தின் குறுநிலமே சேறை. இச்சேறையம்பதியும் முத்தமிழ் வளர்த்தது. செழுமை பழமையும் மிக்க இம்மண்ணின் பெருமைகளை இங்கு தோன்றிய இலக்கியங்கள் பறைசாற்றி நிற்கின்றன.

19. சங்க கால இலக்கியங்களில் பாடலால் அறியப்படும் ஊர்கள்

முனைவர்.ரெ.கலா
உதவிப்பேராசிரியர்,
தேசியக்கல்லூரி (தன்னாட்சி), திருச்சி

சங்க கால புலவர்கள் வரலாற்று நிகழ்ச்சிகளைப் பாடலில் சேர்த்து, காதற் செய்திகளைச் சொல்லி வந்தனர். அது மட்டுமல்ல பாடல்களில் ஊர்களையும் அங்கு நிகழ்ந்த செயல்களையும் நிகழ்த்திக் காட்டினார்கள்.

அகப்பா், அம்பா், அரிமண வாயில், அரையம், அழுந்தூா், அழும்பில் ஆமூா் ஆர்க்காடு ஆலங்கானம் ஆவினன்குடி இடையாறு, இருப்பை, இலங்கை ஈர்ந்தூா் உம்பற்காடு உறத்தூா் எயிற்பட்டினம், ஓய்மானாடு, கச்சி, கடியம், கரும்பனூா், கருவூா், கழாா், கழுமலம், காமூா், கிடங்கில், குடவாயில், குறுக்கை குறும்பூா், கொடுங்கால், கொடுமணம் கொல்லா கோவிலூா், சாய்க்காடு சிறுகுடி, செங்கண்மா, செருப்பாழி, செல்லூா். (துறையூா்) நாலூா் நியமம், நிடுா், நீர்ப்பெயற்று நெய்தலங் கானல் பிடவூா், போா், புகாா், பொறையாறு, பொதினி, போந்தை, மழுபுலம், மாவிலங்கை, மிழலை, முக்காவல் நாட்டு ஆமுா், முள்ளூா் மோகூா், வீரை, வெண்ணி, வேங்கடம், வேலூா், வேளூா் ஆகியன பாடலால் அறியப்படும் ஊர்களாகும் ஊர்களைப்பற்றி அறிந்துக் கொள்ளலாம்.

அகப்பா

என்ற ஊா் அது கோட்டையிருந்த ஓா் ஊரையே குறிக்க வழங்கியது என்றும், சேர நாட்டிற்கும் சோழ நாட்டிற்கும் இயற்கை எல்லையில் அமைந்தது மேலை மலைத் தொடா். இரு நாட்டிற்கும் வாயிலாய் அமைந்தது பாலைக் காட்டுக் கணவாய் சோழ நாட்டின் பாதுகாப்பிற்காகச் சோழ நாட்டின் எல்லையில் உம்பற்காட்டின் ஓரத்தில் அமைந்திருப்பது அகப்பா என்ற ஊா் அதன் சிறப்புகளையும் வன்னமயையும்

"உளை பொலிந்த மா
வம்பு பரந்த தோ்
அமா்க் கெதிர்ந்த புகன் மறவரொடு
துஞ்சுமரந் துவன்றிய மலரகன் பறந்தலை
ஓங்கு நிலை வாயில் தூங்குடி தகைத்த
வில்விசை மாட்டிய விழுச்சீா் ஐயவிக்
கடிமிலைக் கண்டு கிடங்கின்
நெடுமதில் நிரைப்பதணத்து

அண்ணலம் பெருங்கோட்டு அகப்பா" என்கிறாா் பாலைக் கௌதமனாா். இத்தகைய அகப்பாவை வென்று உம்பற்காட்டைத் தன் வயம் ஆக்கிக் கொண்டான் பல்பானைச் செல்கெழு குட்டுவன்

ஆமூா்

சேர நாட்டிலேயே பல ஆமூா் உள்ளன.

ஓரம்போகியாா்

"வெல்போச் சோழா் ஆமூா் அன்னஇவள்
நலம்பெறு சுடா்றுதல்"

என்கிறாா். இவா் குறிப்பாடும் ஆமூா் திருச்சி –முசிறி சாலையில் அமைந்துள்ளது.

ஆமூா் கவுதமன் சாதேவனாா்

"கொபீ முடி காக்கும் குரு உக்கண் நெடுமதில் சேண் விளங்கு சிறப்பின் ஆமூா் எய்தினும் ஆண்டமைந்து உறையுநா் அல்லா்" என்று குறிப்பிடும் ஆமூா் கொங்கு நாட்டில் உள்ளது. இது குறும்பாறை என்னும் மலைக்கு கிழக்கில் உள்ளது. கொடுமுடி என்பான் இருந்து ஆண்டது நெடிய மதிலைக் கொண்டது.

ஓய்மான் நாட்டில் ஓா் ஆமூரைக் குறிப்பிடுகின்றாா். நல்லூா் நத்தத்தனாா் அது மருதவளம் மிகுந்தது அந்தணா் பெருகியது. அருமையான காவலையுடையது அகழிச் சுழ்ந்தது அகன்ற நகரம் இதனை அவா்,

மருதஞ் சான்ற மருதத் தன்பயை

அந்தணர் அருகா அருங்கடி வியனகர்
அந்தண் கிடங்கின் அவன் ஆமூர் என்கிறார்.

ஆவிநன் குடி

முருகனது ஆறுபடை வீடுகளுள் ஒன்றாகக் கருதப்படும் ஆவினன் குடி மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீனாரால் சிறப்பிக்கப்படுகிறது.

பொதினியை ஆண்ட ஆவி குல மன்னர்களின் பெயரால் அமைந்தது ஆவினன் குடி எனலாம். பேகன் நாட்டைக் குறிக்கும் பெருஞ்சித்திரனார்

"ஈர்ந்தன் சிலம்பின் இருள் துங்கு நளிமுழை
அருந்திறல் கடவுள் காக்கும் உயர்சிமை
பெருங்கல் நாடன் போகனும்

என்கிறார். இதில் ஈர்ந்தன் சிலம்பு பெருங்கல் என்பவை இன்றைய பழனி மலையையே குறிக்கின்றன. "அருந்திறல் கடவுள்" என்பது முருகக்கடவுளையே பேகன் காலத்திலும் மலைக்கு மேலேயே முருகன் கோயில் இருந்தமை இதனால்
புலானாகிறது. புதியதாக அமைந்த ஆவிநன்குடி நக்கீரர் வாக்கிலும் அருணகிரியார் வாக்கிலும் இடம் பெற்றதால் பழம் பெயராகிய பொதியின் மருஉவாகிய பழனியே இன்றும் நிலைத்து நின்றுவிட்டது.

இடையாறு

இடையாறு தென்னார்க்காடு மாவட்டம் திருக்கோவிலூர் வட்டத்தில் உள்ளது. இடையாற்று நிகழ்ச்சியை நக்கீரர் பாடுகின்றார் நக்கீரது பாடலில் இடையாறு நில வளம் மிக்கதாகவும் செல்வ வளம் மிகுந்ததாகவும் காட்டப்படுகின்றது அவ்வூர் மக்கள் ஊரைவிட்டுச் செல்ல நினைத்தனர். அதனை தடுத்து நிறுத்தினான் கரிகாலன் என்கிறார். இதனை

"நெடுங்கால் மாஅத்துக் குறும்பறை பயிற்றுஞ்
செல்குடி நிறுத்த பெரும்பெயர்க் கரிகால்
எவல்போர்ச் சோழன் இடையாற் றன்ன
நல்லிசை வெறுக்கை தருமார்"

என்கிறார் நக்கீரர்

இடையாறு திருக்கோவிலூர் வட்டத்தில் காணப்படுவதால் தொடக்கத்தில் அது மலையமான் ஆட்சியில் இருந்தது என்றும், அதனைக் கரிகாலன் வென்று அடிப்படுத்தவே அவ்வூர் மக்கள் மலையமான மீது கொண்ட பற்றின் காரணமாகக் குடிபெயரத் தொடங்கினர் என்றும் அக்குடிப் பெயர்ச்சியைக் கரிகாலன் தடுத்து நிறுத்தினான் என்றும் பாடல் வெளிப்படுகிறது. கரிகாலனை வெல்போர்ச் சோழன் என்று குறிப்பதும் இதனை அரண் செய்கிறது.

"இடையாற் றன்ன நல்லிசை வெறுக்கை" என்பது இடையாற்றின் செல்வ வளத்தைக் குறிக்கிறது, குறும்பறை பயிற்றும் என்பது நிலவளத்தை குறிக்கும்.

உம்பற் காடு

சேர நாட்டையும் சோழ நாட்டையும் பிரிப்பது மேற்கு மலைத் தொடர் மேற்கு மலைத் தொடரின் கிழக்கே சோழ நாட்டு எல்லையில் அமைந்திருப்பது உம்பற்காடு ஆகும். இது பாலக்காட்டு கணவாய் ஓரமாக இருப்பதும் எண்ணத் தக்கது.

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் தம்பி பல்பானைச் செல்கெழு குட்டுவன் உடம்பாற் காட்டின் மீது படையெடுத்துத் தன் கோலை நிறுவினான். கொங்கு நாட்டையும் தன்னடிப் படுத்தினான்.

உம்பற் காட்டின் ஓரத்தே சோழ நாட்டிற்குக் காவலாக அகப்பா என்றும் ஒரு கோட்டை இருந்தது கோட்டைக்குரிய எல்லா நலன்களையும் பெற்றிருந்தது அகப்பா என்றாலே கோட்டை என்று பொருள்.

உறையூர்

சங்க காலத்தில் உறையூர் என்றும் பெயர் மக்கள் வழக்கிலும் உரைநடை எழுதும் பொழுதும் பயன்படுத்தப்பட்டது அவ்வூரில் பிறந்த புலவர்கள் தங்கன் பெயருக்கு

முன் உறையூர் என்ற பெயரையே பயன்படுத்தினர் ஆனால் சங்க கால புலவர்கள் உறையூரைத் தம் செய்யுட்களில் அறம்பொழுது உறந்தை என்றே ஆண்டனர். சிலம்பே முதன் முதலில் செய்யுகளில் உறையூர் என்றும் பெயரை ஆளத் தொடங்கியது. .
இதனை

"உறையூர் நொச்சி ஒருபுடை ஒதுங்கி என்னும் அடிகளால் அறியலாம்.

சங்க காலத்திலேயே உறையூருக்கு கோழி என்ற பெயரும் வழங்கி வந்தது என்பதனை,

"கோழி யோயே கோப்பெருஞ் சோழ" என்றும் பிசிராந்தையாரின் அடி தெரிவிக்கிறது. கோழி என்றும் பெயரைச் சிலம்பின் உரைபெறு கட்டுரையிலும் பரிபாடல் திரட்டிலும் காணலாம். கொழுமை என்னும் சொல்லடியாகவும் களுத்தடியாகவும் கோழி என்றும் பெயர் அமைந்திருக்காலம். ஆனால் சிலப்பதிகார காலத்திலேயே அதற்குக் கதை வழங்கத் தொடங்கி விட்டது என்பதனை

"முறஞ்செவி வாரணம் முன்சம முருக்கில
புறஞ்சிறை வாரணம் புக்கனர் புரிந்தென்"

என்ற அடிகளில் காணலாம் அன்றியும் கோழி என்பதன் பரியாயப் பெயராய 'வாரணம்' என்றும் சொல் வழங்கப்பட்டிருந்தலையும் காணலாம்.
களவியல் உரையில்

"ஊரெனப் படுவது உறையூர்

என்றும் உலகியல் மொழியைக் கூறுகின்றார். மதுரையில் தோன்றிய கணக்காயனார் மகனார் நக்கீரனார் இக்கருத்தை வலியுறுத்தவதே போலச் சிலப்பதிகாரம்.

"மாட மதுரையும் பீடார் உறந்தையும் ..
கலிகெழு வஞ்சியும் ஓலிபுனற் புகாரும்

என்ற அடிகளில் உறந்தையின் பீடு பேசப்படுகின்றன.
உறையூரில் விழாக்களின் மலிவை

"கறங்கிசை விழவின் உறந்தை"

என்றும் தொடரால் அறியலாம். உறந்தையில் நடைபெற்ற விழவினுள்ளும் பங்குனி உத்திர விழா சிறந்து விளங்கிற்று.
இதனை,

அவை மதுரை ஆவணி விட்டமே உறையூர்ப்
பங்குனியுத்திரமே கருவூர் உள்ளி விழாவே என இவை போலவன என்றும் களவியல் உரையால் அறியலாம். காவிரியின் கரையில் உறையூர் இருந்ததனை

"காவிரி படப்பை உறந்தை யன்ன
பொன்னுடை நெடுநகர்"

எயிற் பட்டினம்

ஓய்மானாட்டு எல்லையுள் அமைந்திருந்த எயிற்பட்டினத்தைச் சிறுபாணாற்றுபடையே அறிமுகப்படுத்துகிறது. பட்டினம் என்பது கடற்கன் பெருநகரத்தைக் குறிக்கும். நல்லூர் நத்தத்தனார் நேரடியாக நகர பெயரைச் சொல்லாமல்

"பாடல் சான்ற நெய்தல் நெடுவழி
மணிநீர் வைப்பு மதிலொடு பெயரிய
பனிநீர்ப் படுவிறற் பட்டினம் படதின்"

என்று புலவர்க்கே உரிய முறையில் கூறுகின்றார்.

கச்சி

பெரும்பாணாற்றுபடை இளந்திரையனின் இருக்கையாகக் கச்சியைக் கூறுகிறது. அதனை

"கச்சி யோனே கைவன் தோன்றல் என்கிறது காவற்காட்டையும் புறப்டை வீடு சூழ்ந்த கோட்டை மதிலினையும் கொண்டது என பெரும்பாணாற்றுப்டையே விளங்க உரைக்கின்றது.

குடவாயில்

குடவாயில் பெரும் பூண் சென்னி என்பானுக்கு உரியது பழைய நெல்லைத் தன்னிடத்து மிகுதியாகக் கொண்டது. மக்கள் தொகையில் இக்குடவாயிலைக் குடந்தை என்றும் குடந்தை வாயில் என்றும் அழைப்பர்.

சோழ நாட்டில் வசூலித்த திறை பெற்ற அனைத்துச் செல்வத்தையும் இக்குடவாயில் தான் திரட்டி வைத்திருந்தனர்.

பிற்காலத்தில் செங்கணான் கழுமலைப் போரில் தான் கைது செய்த கணைக்கால் இரும்பொறையை இக்குடவாயில் கோட்டத்தில் தான் அடைத்து வைத்திருந்தான் அவ்விடம் இன்று கோட்டவம் என வழங்கப்படுகிறது.

குடவாயில் இன்று குடவாசல் என வழங்கப்படுகிறது. அது தஞ்சை மாவட்டம் நன்னிலம் வட்டத்தில் திருவாரூர் கும்பகோணம் சாலையில் உள்ளது.

கொடுமணம்

கொடு மணம் பற்றி கபிலர் அரிசில் கிழார் பாடுகின்றனர். அதனைப் பற்றி அரிசில் கிழார்

"கொடுமணம் பட்ட வினைமான் யொக்கலொடு
புந்தர்ப் பெயரிய கைவல் மூதூர்க்
கடனறி மரபிற் கைவல் பானை
தென் கடன் முத்தமொடு நன்கலம் பெறுகுவை.

என்கிறார் கபிலர். அணிகலன்களை ஆக்குவதில் பெருமை பெற்ற கொடு மணம் இன்று கொடுமணல் என்னும் பெயரொடு பெரியார் மாவட்டம் பெருந்துறை வட்டம் சென்னி மலையிலிருந்துத் தென்மேற்கில் 20 கீ.மீ தொலைவில் உள்ளது.

கொல்லி

சேலம் மாவட்டத்தில் நாமக்கல், ஆத்தூர் வட்டங்களில் உள்ள ஒரு குன்றுத் தொடர் கொல்லி என்னும் ஊர் சேர நாட்டிலிருந்து இடம் பெயர்ந்த மழவருள் ஒரு சாரார் கொல்லியை வாழ்விடமாகக் கொண்டனர்.

அம்மரபில் வந்தவளே அதன் மகன் ஓரி கொல்லியைக் கூறும் பொழுது
என்கிறார் பரணர் அவரே
"வென்வேற்
களிறு பொழுது தானைப் பொறையன் கொல்லி"
என்கிறார்
இயற்கை வளமும் யானை வளமும் மிகுந்தது.

புகார்

புகாரைப் பூம்புகார் என்றும் காவிரிப் பூம்பட்டினம் என்றும் அழைப்பர். சோழ மன்னர்களின் கல்வெட்டுக்களில் "பட்டினப் பெருவழி" என்ற தொடரைக் காணலாம். அவை காவிரிப்பூம்பட்டினத்திற்கு செல்லும் பெருவழியையே குறித்தது. அவற்றைக் கொண்டு புகாரின் சிறப்பை நாம் அறியலாம்.

திருமாவளவன் காலத்தில்தான் புகார் தலைநகர் ஆயிற்று, எனினும், கி.மு 3- ஆம் நூற்றாண்டிலேயே அங்குக் கோட்டை இருந்ததைப் பரணர் குறிப்பிடுகின்றார்.
நலிங்கிள்ளியன் காலத்தில் புகார் பெருந்துறைமுகமாக விளங்கியதை,

"கடம்பொடு
மீப்பாய் களையாது மிசைப்பரந் தோண்டாது
புகாஅர்ப் புகுந்த பெருங்கலம், தகா அர்
இடைப்புலப் பெருவழிச் செரியும்
கடல் பல் தாரத்த நாடு கிழ வோயே"

என்றும் உறையூர் முதுகண்ணன் சாத்தனாரின் பாடலடிகள் தெரிவிக்கின்றன. வெளிநாட்டார் வாணிகம் மிகப் பெருகியது போது

"கயவாய் மருங்கிற் காண்போர்த் தடுக்கும்
புயறை வறியா யவனர் இருக்கையும்"

ஏன்ற அடிகளால் யவனருக்காவே கடற்கரையில் தனிக்குடியிருப்பு இருந்ததை அறியலாம். அவரைத் தவிர்த்த பிற நாட்டார்கள் கூடி வாழ்ந்தமையைக்

"கலந்தரு திருவிற் புலம்பெயர் மாக்கள்
கலந்தருத் துறையம் இலங்குநீர் வரைப்பும்"

என்ற அடிகளில் காணலாம். இத்தகைய செல்வப் பெருக்கினால் தான் நெல்லை உண்ண வந்த கோழியைப் பொற்குழை எரிந்து ஓட்டினர்.

புகார் திட்டமிட்டு அமைக்கப்பட்ட நகரம். மருவூர்ப்பாக்கம் தொழிலும் வாணிகமும் நிறைந்த பகுதியாக விளங்கியது பட்டினப் பாக்கம் பாதுகாப்போடு கூடிய அமைதி நகரமாக விளங்கியது. இடையில் நாளங்காடி என்னும் பகுதியில் இரு பாக்கத்தார்க்கும் வேண்டிய பொருட்கள் விற்கப்பட்டன.

ஐந்து வனங்களோடும் ஐந்து மன்றங்களோடும் விளங்கிய புகாரைச் சுற்றிலும் நால்வகைப் படை வீரர்களின் குடியிருப்புகள் அமைந்திருந்தன. பொருட் செல்வத்தோடு அறிவுச் செல்வமும் கலைச் செல்வமும் ஓங்கியிருந்தன எல்லா நலமும் எல்லா இன்பமும் குறைவற இருந்ததனால் புகார் நகரம் உத்தரகுவை ஓத்திருத்தாகப் புனைகிறார் இளங்கோ பிற சங்க இலக்கியங்களில் எளிய நெய்தல் நிலப் பட்டினமாகக் காட்சியளிக்கும் புகார், பட்டினப் பாலையில் வளரும் நிலையிலும் சிலம்பில் உயர்ந்த நிலையிலும் காட்சியளிக்கிறது. புகார் என்ற ஊர் என்பதை அறியலாம்.

ஆர்க்காடு

ஆர்க்காடு கழனிகள் நிறைந்தது. நெய்தல் மலர் நெல்லிடை மலரும் நீர்வளம் மிக்கது. இவ் வார்க்காடு வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ளது.

ஆர்க்காட்டை அழிசி என்பவன் ஆண்டான். பின் சேந்தன் சிறந்து ஆண்டு வந்தான். அவன் சிறப்பால் அவன் தந்தை புகழ் பெற்றான். 196 சேந்தனுக்குப் பின் ஆர்க்காடு சோழர்க்கு உரியதாயிற்று இதனை,

"படுமணி யானைப் பசும்பூண் சோழர்
கொடி நுடங்கு மறுகின் ஆர்க்காட்டு ஆங்கன்
கள்ளுடைத் தடவின் புள்ளொலித்து ஓவாத்
தேர்வழங்கு தெருவின் அன்ன
கேளனவபா கின்றது.

என்கிறார் தேவனார்.

20. கொங்கு நாடு – அன்றும் இன்றும்

திருமதி. மு. கலாமாரி,
ஆய்வாளர்,
ஸ்ரீபராசக்தி மகளிர் கல்லூரி, குற்றாலம்.

முன்னுரை

கொங்கு நாடானது ஆதி முதல் தமிழ் நாட்டின் ஒரு பகுதியாக இருந்து வருகிறது. இதன் காரணமாகவே தமிழ் நாட்டின் சரித்திரத்தில் கொங்கு நாடும் சிறப்பிடம் பெறுகின்றது. கொங்கு நாட்டின் சரித்திரம் இல்லாமல் தமிழ்நாட்டின் சரித்திரம் முழுமையடையாது. பழமை பெருமை வாய்ந்த பாரதநாட்டின் தென்பால் விளங்குவது தமிழ்நாடு. தமிழகத்தின் வரலாறு சங்க காலத்திலிருந்து தொடங்குகிறது. சங்க காலத்துத் தமிழகமானது துளு நாடு, சேர நாடு, பாண்டி நாடு, சோழநாடு, தொண்டை நாடு, கொங்கு நாடு என ஆறு உட்பிரிவுகளைக் கொண்டு விளங்குகிறது. கொங்கு நாட்டைத் தவிர்த்து மற்ற நாடுகள் அனைத்தும் கடற்கரையோரங்களில் அமைந்திருந்தன.

எல்லை

கொங்கு நாடு கடற்கரை இல்லாத உள் நாடான பழனிமலை வட்டாரத்திலிருந்து வடக்கே ஸ்ரீரங்கப்பட்டணம் வரையில் பரந்திருந்தது. மேற்கு எல்லையாக, மேற்குத் தொடர்ச்சி மலைகளும், கிழக்கு எல்லையாக சோழ தொண்டை நாடுகளின் மேற்கு எல்லைகள் அமைந்துள்ளன. சங்க காலத்தில் பெரிய நிலப்பரப்பாக இருந்த கொங்கு நாடு பிற்காலத்தில் படிப்படியாக குறைந்து குறுகலாகிவிட்டது.

ஆட்சி

மூவேந்தர்களைப் போல முடிசூட்டி அரசாண்ட மன்னர்கள் கொங்கு நாட்டில் இல்லாததால் குறுநில மன்னர்களே இதனை ஆண்டனர். இதற்காக மூவேந்தர்களும் போட்டியிட்டுள்ளனர். பல்வேறு போர்கள் கொங்கு நாட்டில் நடந்திருந்தாலும் இறுதியில் சேர அரசர்களே வாகை சூடினர். இவர்கள் மூத்தக்கால் வழியினர், இளையக்கால் வழியினர் என்னும் இரு பிரிவுகளைக் கொண்டவராக இருந்தனர். மூத்தக்கால் வழியினரான சேரர், சேர நாட்டையும் இளையக்கால் வழியினரான பொறையர் கொங்கு நாட்டையும் ஆண்டனர். இவர்கள் ஒரே குலத்தைச் சேர்ந்த மூத்த வழி இளைய வழியினராக இருந்தாலும், சேரநாட்டையாண்ட சேர அரசர் வேறு, கொங்கு நாட்டையாண்ட பொறைய அரசர் வேறு.

சரித்திரக் காலம்

கொங்கு நாட்டு வரலாற்றின் சரித்திரக் காலமானது ஏறத்தாழ கி.பி. முதல் நூற்றாண்டில் தொடங்கி கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் முடிந்தது. தமிழ்நாடு களப்பிர மன்னருக்குக் கீழ் வந்தபோது கொங்கு நாட்டின் பழைய சரித்திரமானது முடிவடைந்தது.

ஆராய்ச்சிகள்

ஒரு நாட்டின் வரலாறு தோன்றுவதற்கு அடிப்படை மற்றும் முக்கிய சான்றுகளாக இருப்பவை பழம்பொருள் அகழ்வாராய்ச்சி, சாசன எழுத்துகள், பழங்கால காசுகள், பல்வேறு இலக்கியச் சான்றுகள் முதலானவை சிறந்த பங்கு வகிக்கின்றன. அகழ்வாராய்ச்சி கொங்கு நாட்டில் தொடங்கவில்லை என்றே கூற வேண்டும். போதுமான ஆராய்ச்சிகள் மிகக் குறைவானதாக உள்ளது.

கொங்கு நாட்டின் அமைவிடம்

பிற்காலத்தில் குறுகிய கொங்கு நாட்டில், இன்றைய கோயம்புத்தூர், சேலம் வட்டங்களைத் தான் இக்காலத்தில் கொங்கு நாடு என்றழைக்கிறோம். திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் சேர்ந்திருக்கிற கரூர் வட்டமும் வேறு சில பகுதிகளும் பழங்காலத்தில் கொங்கு நாட்டில் சேர்ந்திருந்தன. முன்பு கருவூர், கொங்கு நாட்டின் தலைநகராக இருந்தது. ஆங்கிலேயர்களின் நாடு பிடிக்கும் கொள்கையில் கொங்கு நாட்டைச் சேர்ந்திருந்த அந்தப் பகுதிகள் திருச்சிராப்பள்ளி மாவட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

இக்காலத்தில் மைசூர் இராச்சியத்தின் தென்பகுதிகளாக இருக்கிற பல நாடுகள் அக்காலத்தில் வட கொங்கு நாட்டைச் சார்ந்திருந்திருக்கின்றன. பெரும் பெயர் பெற்ற புன்னாடு, கப்பிணி ஆற்றங்கரை மேல் உள்ள கட்டூரைத் (கிட்டூர்) தலைநகரமாகக் கொண்டிருந்தது. சங்க காலத்தில் எருமை ஊரை அரசாண்டவன் எருமையூரன் ஆவான். எருமை ஊர் பிற்காலத்தில் மைசூர் என்று பெயர் பெற்றது. (எருமை – மகிஷம், எருமையூர் – மைசூர்) எருமை ஊர் மைசூர் என்றாகிப் பிற்காலத்தில் கன்னட நாடு முழுவதுக்கும் பெயராக அமைந்துவிட்டது.

எருமையூரரையும் அதனை ஆண்ட எருமையூரனையும் சங்கச் செய்யுள்கள் கூறுகின்றன. இது வட கொங்கு நாட்டின் வட எல்லையாக இருந்தது.

"நாரரி நறவின் எருமையூரன்" (அகம்.36:17)

என்றும்,

"நேரா வன்றேள் வடுகர் பெருமகன்
பேரிசை எருமை நன்னாடு" (அகம். 253:18-19)

என்றும்,

"நுண்பூண் எருமை குடநாடு" (அகம்.115:5)

என்றும் குறிப்பிடப்படுகின்றது.

துறைமுகங்கள்

உள்நாடாகிய கொங்கு நாட்டுக்குக் கடற்கரையும் துறைமுகமும் இல்லாதபடியால், கொங்கு நாட்டை அரசாண்ட கொங்குச் சேரர்களுக்குத் துறைமுகப்பட்டினம் வேண்டியதாக இருந்தது. கொங்கு நாட்டையடுத்து மேற்கிலிருந்த பூமி நாட்டிலே தொண்டி, மாந்தை என்று இரண்டு துறைமுகப்பட்டினங்கள் இருந்தபடியால் இத்துறைமுகங்களையுடைய பூமிநாட்டைச் சேர அரசர்கள் கொங்கு நாட்டுச் சேரர்களுக்குக் கொடுத்தனர். இதற்குக் காரணம் முசிறித் துறைமுகம் சேரநாட்டில் இருந்ததே ஆகும். பூமி நாடானது கொங்கு நாட்டைச் சார்ந்ததன்று. சேரநாட்டைச் சார்ந்தது. இங்கு தான் இரு துறைமுகங்களும் இருந்தன. பூமி நாடானது மேற்குக் கடற்கரையோரத்தில் துளுநாட்டுக்குத் தெற்கிலும் சேரநாட்டுக்கு வடக்கிலும் அமைந்திருந்தது. இதன் இயற்கை வளத்தையும் துறைமுகத்தையும் குறுங்கோழியூர் கிழார்,

"குலையிறைஞ்சிய கோள்தாழை,
அகல்வயல் மலைவேலி
நிவந்த மணல் வியன்கானல்
தெண்கழிமிசைத் தீப்பூவின்
தண்தொண்டியோர் அடுபொருந" (புறம். 17:9-13)

மாந்தை துறைமுகப் பட்டினமாக இருந்ததபடியால் அங்கு அயல்நாட்டுக் கப்பல் வாணிகர் வந்து வாணிகம் செய்தார்கள். அதனால் சேரர்களுக்குச் சுங்க வருவாய் கிடைத்தது. இமயவரம்பன் நெடுஞ் சேரலாதன் இங்கு பொன் முதலான பெருஞ்செல்வத்தைப் புதைத்து வைத்திருந்தான் என்று மாமூலனார் கூறுகிறார்.

"வலம்படு முரசிற் சேரல் ஆதன்
முந்நீர் ஒட்டிக் கடம்பறுத் திமயத்து
முன்னோர் மருள வணங்குவிற் பொறித்து
நன்னகர் மாந்தை முற்றத்து ஒன்னார்
பணிதிறை தந்த பாடுசால் நன்கலம்
பொன்செய் பாவை வயிரமொடு ஆம்பல்
ஒன்றுவாய் நிறையக் குவைஇ அன்றவன்
நிலந் தினத் துறந்த நிதியம்" (அகம்.127:3-10)

மாந்தைப் பட்டினம் மரந்தை என்றுங் கூறப்பட்டது.

"குரங்குளைப் புரவிக் குட்டுவன்
மரந்தை யன்ன என்நலம்" (அகம்.376:17-18)

எதுகை நோக்கில் சில பதிப்புகளில் மரந்தை எனக் கூறப்பட்டுள்ளது. சில பதிப்புகள் மாந்தை என்கின்றன.

கொங்கு நாட்டை ஆண்ட பொறையர்களுக்குத் துறைமுகபட்டினம் இல்லாததால் தொண்டியை தங்களது துறைமுகப்பட்டினமாகக் கொண்டிருந்தார்கள்.

"வெண்கோட்டியானை விறல்போர்க் குட்டுவன்
தெண்திரைப் பரப்பில் தொண்டி முன்துறை" (அகம். 290:12-18)


என்றும்,

"அகல்வயல், அரிநர் அரிந்தும் தருவநர் பெற்றும்,
தண்சேறு தாய் மதனுடைய நோன்றாள்
கண்போல் நெய்தல் போர்விற்னாக்கும்
திண்டேர்ப் பொறையன் தொண்டி" (நற்.8:5-9)

என்றும் இப்பட்டினம் கூறப்படுகிறது.

முடிவுரை

பழைய சாசன எழுத்துக்குச் சான்றாக பிராமி எழுத்துகளில் எழுதப்பட்டிருக்கிறபடியால் இக்கொங்கு நாட்டுப் பழைய சரித்திரத்துக்கு ஓரளவு உதவியாக இருந்துள்ளன. பிராமி எழுத்துச் சாசனங்கள், கொங்கு நாட்டில் உள்ளன. கொங்கு நாட்டு மலைகளில், இன்னும் சில பிராமி எழுத்துக் கல்வெட்டுகள் இருக்கும் என்று நம்பப்படுகிறது. இது கொங்கு நாட்டவருக்கு முக்கிய அம்சங்களைக் குறிப்பிட வாய்ப்புள்ளது.



21. சங்ககால வள்ளல்கள் வாழ்ந்த ஊர்ப் பெயர்கள்

க.கலையரசி,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
பாரதிதாசன் உயராய்வு மையம்,
பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி,

முன்னுரை:

சங்க காலத்தில் முடியுடை மூவேந்தரைக் காட்டிலும் புகழ்பெற்ற வள்ளல்கள் வாழ்ந்த இடத்தைப் பற்றி ஆராய்வதே இத்தலைப்பின் நோக்கம்.

சிறுபாணன் குறித்த வள்ளல்கள்:

பேகன், பாரி, காரி, ஆய், அதிகன், நள்ளி, ஓரி என்பவர்கள். இத்தொகை எடுத்ததன் நோக்கம் பேகனும் பாரியும் படைமடம்படுதலால் அவர்களை முன் வைத்து ஆராயப்படுகின்றது.

வாழ்க்கைச் சுருக்கம்:

பேகன் பெரிய மலை நாட்டை உடையவன் ஆவியர் குடிப்பிறந்தவன். அவனது மலை நாடு, பருவமழை தவறாது பெய்தலால், வளம் மிக்கது என்றும் இவன் மனைவி கண்ணகியைப் பிரிந்து வாழ்ந்தான். கண்ணகியின் புலம்பலைக்கண்டு புலவர்கள் சந்துவித்தனர். குளிரால் நடுங்கிய மயிலுக்கு கலிங்கத்தை நல்கியவன் என்று சிறுபாணாற்றுப்படை தெரிவிக்கின்றது. அவ்வரிகள் வருமாறு:-

"சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய"(சிறுபா.அடி.89)

இவனது முன்னோன் நெடுவேளாவி ஆவான். நெடுவேள் ஆவிக்கு பொதினி மலை உரியது என்று மாமூலனார் (அகம்.1)ல் கூறுகின்றார். அவரே மற்றொரு பாட்டில் "நெடுவேள் ஆவி" பொன்னுடை நெடுகா பொதினி என்று கூறுகின்றார்.

பேகன் ஆவியர் பெருமகன் என்பதால் பொதினி மலையும் நகரமும் உரியது என்பது தெரிகின்றது.

பாரி:

பறம்புமலை அரசன் பாரி முல்லைக்குத் தேர் ஈந்து மகிழ்ந்தவன் என்று சிறுபாணாற்றுப்படை கூறுகின்றது. இதனை,

"சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய
பறம்பின் கோமான் பாரியும்"

மழை வாய்ப்பினும் பாரியின் பறம்பு பொய்க்காது என்று (புறம்.105) பகிர்கின்றது. பறம்பு நாட்டில் உள்ள முந்நூறு ஊர்களையும் பரிசிலர்க்கு வழங்கினான். (புறம்.110) இதிலிருந்து இவனது புகழ் மேன்மைபடுகின்றது. இவனது புகழ் கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தரும்,

"கொடுக்கி பொதனைப் பாரியே என்று
கூறினுங்கொடுப் பாரியை" தேவாரம் பகிர்கின்றது.

பறம்பு மலை நீர் குளிர்ச்சி மிக்கது. (குறுந்.196) பறம்பு மலை சம்பந்தர் காலத்தில் கொடுங்குன்றம் என மாறியதுஇ "குட்டாச்சுனையவை மண்டிநின் றாடுங் கொடுங்குன்றம்" (சம்பந்தர் தேவாரம்" இதனை கி.பி.12 ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டில் "புறமலை நாட்டு கொடுங்குன்றம்" என்று கூறுகின்றது. (A.R.E3830 + 1923)

"எந்தக் காலத்திலும் வற்றாத வையாபுரிடா"

"வையம் வற்றினாலும் வற்றாத வையாபுரி" என்று பழமொழியும் பகிர்கின்றது. இவனது உயிர்த் தோழன் கபிலர். பாரி இறப்புக்குப் பின் அவனது மகளைக் கபிலர் திருமணம் முடித்து வைத்தார்.

மலையமான்:

மலையமான் காரி மிகுந்த போர் ஆற்றல் மிக்கவன். மூவேந்தரும் தனக்குத் துணையாதல் வேண்டுமென்று விரும்பினார்கள். இவனது குதிரைப்பெயர் காரியாகும். இவன் இன்றைய திருக்கோவலூர்ப் பகுதிகளைக் கொண்டது. மலையமானோடு மலைநாடு எனப் பெற்றது. மலாடு எனப் பெரியபுராணம் சுட்டும். மலையமான்கள் ஏனாதி என்ற பட்டத்தைப் பெற்றவர்கள். இன்றும் இப்பெயரில் தமிழ்நாடு முழுவதும் வழங்கி வருகின்றன. இதே போன்று மலையமான் என்ற பெயர்களைக் கொண்டும் மிகுதியாகக் காணப்படுகின்றன. மலையமான் சோழிய ஏனாதி திருக்கண்ணன் என்று நப்பசலையார் (புறம்.174) ல் புகழ்ந்துள்ளார். இவன் காரியின் மகனாக இருக்கலாம் என்ற தோன்றுகின்றது.

ஆய்:

இவனது மலை பொதியின் மலை (புறம்.128) இம்மலையில் மூங்கில் மிகுதி (அகம்.152) என்று பரணர் குறிப்பிடுகின்றனர். இமயத்துக்கு ஈடாக இவனது கொடையை (புறம்.132) ல் குறிப்பிடப்படுகின்றது. இவன் இரவலர்க்குக் கொடுத்த யானைத் தொகை விண்மீன்களைக் காட்டிலும் அதிகம்.(புறம்.121) சிவபெருமானுக்கு நீல மணியினையும் நாகம் கொடுத்த கலிங்கத்தையும் நல்கியவன். (சிறுபா.96 – 99)

அதியமான்:

மழவர் பெருமகன் என்று ஔவையார் புறம். 88 – 90 ல் கூறியுள்ளார். இவனது நாடு தகடூர். தற்போது தருமபுரி என்றழைக்கப்படுகின்றது. ஔவையின் அன்பிற்குரியவன். மிகுந்த வீரன். குதிரைப்படையையும் யானைப்படையையும் உடையவன். இவனது மகன் பொகுட்டெழினியும் அஞ்சியைப் போன்ற பெருவீரனாவான். ஔவைக்கு அரிய நெல்லிக்கனியைக் கொடுத்து அருஞ்செயல் புரிந்தவன். இவனது தகடூர் ஆட்சியில் இருந்தனவென்று (A.R.E. 1907 P.57) கல்வெட்டு கூறுகின்றது. இவனது முன்னோரில் ஒருவன் தேவர் உலகில் உள்ள கரும்பை இவ்வுலகிற்கு கொண்டு வந்ததாக கருதப்படுகின்றது. (புறம்.99)

நள்ளி:

போரில் சிறந்தவன் சிறந்த கொடையாளி (சிறு.103 – 107) என்று வழங்குகின்றது. இவனது நாடு "கண்டீர நாடு" அதனால் அவன் கண்டீரக்கோ எனப்பட்டான். இவன் கலைஞர்களைப் பாதுகாத்தவன். கலைஞர்களுக்கு நல்விருந்து நல்கிய பயனில் தன்னிலை மறந்து காலைப் பண்ணை மாலையிலும் மாலைப் பண்ணை காலையிலும் மாற்றிப் பாடினார்கள் என்று (புறம்.149) கூறுகின்றது. இவனது வள்ளன்மை அறக்கொடை என்பதை,

"இலவென்னும் ஒவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே உள" (குறள்:223)

முப்பாலும் உணர்த்துகின்றது.

ஓரி:

ஓரி சிறந்த வில்லாற்றல் உடையவன் ஆதலால் அவன் வல்வில் ஓரி என்றழைக்கப்பட்டான். இவனது நாடு கொல்லிமலை. இவனது குதிரையின் பெயரும் ஓரி. இவனது மலையில் தெய்வத்தால் ஆன கொல்லிப்பாவை உள்ளதாக அறிய முடிகின்றது. இவனது தந்தை "ஆதன்" ஓரியாக இருக்கலாம் என்பது அறிஞர் கருத்து. ஓரியும் மழவர் பெருமகன் ஆவான்.

ஆதரிக்கப்பட்ட புலவர்கள்:

பேகனைப் புலவர் காணச் சென்று பரிசு பெற்ற பின், அப்பயனை பிறரும் அடையவேண்டுமென்று கருதி விறலியை ஆற்றுப்படுத்துகின்றார். இம்மைச் செய்தது மறுமைக்கு உதவும் என்று கருதாமல் தருபவன் என்கிறார்.

"மறுமை நோக்கின்றோ வன்றே
பிறர், வறுமை நோக்கின்றேன் கைவுண்மையே" (புறம்.141) இவரே பேகன் படைமடம் படுவதை,

"வரையா மரபின் மாரிபோலக்
கடாஅ யானைக் கழற்காற்பேகன்
கொடைமடம் படுத ல்லாது"

படைமடம் படான்பிறர்" (புறம்.142) விளக்குகிறார். பேகன் கண்ணகியைப் பிரிந்து வாழ்வதை தவிர்த்து சேர்த்து வாழவைத்க வேண்டு மென்று கபிலர், பரணர், அரிசில் கிழார், பெருங்குன்றூர்கிழார் ஆகிய நால்வரும் சந்துவித்தனர்.

பாரியின் கெழுதகை நண்பர் கபிலர். இவர் விறலியை ஆற்றுப்படுத்துகின்றார்.

"வேள் பாரியால் பாடினை செலின்
சேயிழை பெறுகுவை வானுதல் விறலி" (புறம்.105). இவரே மாரிக்கு ஒப்பாக பாரியைப் பாடுவதில் பாரியின் புகழ் மேலோங்குகின்றது.

"பாரி பாரி யென்று பல வேத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப்புலவர்
பாரி பொறுவனு மல்லன்
மாரியு முண்டீண் குலகுபுரப் பதுவே" (புறம்.107)

கபிலர் பாரி மாய்ந்த பின்பு அவனது மகளிரை பார்ப்பனரிடம் அடைக்கலப் படுத்திவிட்டு அவரும் இறந்து விட்டார். இவர்களது நட்பு என்னே!

மலையமான் கபிலருக்கு வரிசையறியாது கொடுத்ததை மறுத்து நீ வேந்தாக இருந்தாலும் வரிசையறியாது கொடுப்பதையொழிகஎன்றுகூறுகின்றார். (புறம்.107)
சேரமான் மாந்தரஞ்சேரலிரும்பொறையும் சோழன் இராசசதயம் வேட்ட பெருநற்கிள்ளியுமம் பொருதும் போது சோழற்குத் துப்பாகி இருந்தான் என்று வடம வண்ணக்கன் பெருஞ்சாத்தனார் புறம்.125 – ல் கூறுகின்றார். "வேள் ஆய்" அண்டிரன் எத்தனை முறை வந்தாலும் வரிசையறியாது கொடுக்கும் பண்புள்ளவன். ஆய் உறையூர் ஏணிச்சேரி முடமோசியாருக்கு வரும் தோறும் பொன்னும் பொருளும் கொடுத்தான். அதை அறிந்த புலவர் நான் பரிசில் வாங்க வரவில்லை உன்னைக் காண்பதற்கே வந்தேன் என்கிறார். (புறம்.135) அவரே பிறிதோர் பாடலில்,
"இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்
அறவிலை வணிகனாயலன்" (புறம்.134) அவனது மறுமை நோக்கா வள்ளன்மையை விளக்குகிறார். "அதிகனின்" அவைக்களப் புலவராகவும் குடும்ப நண்பராகவும் அரசியல் தூதராகவும் நீண்டநாள் இருந்தவர் என்றால் அது, ஔவை என்பது அனைவரும் அறிந்தவை. "நெல்லிக்கனியின் அருமை கருதாது எனக்கு தந்து சாதலை நீக்கிய நீ நீலமணி மிடற்றுக் கடவுள் போல மன்னுவாயாக" என்று அதிகனை ஔவை வாழ்த்தினார். (புறம்.91) ஒருநாள் போயினும் பலநாள் போயினும் முதல்நாள் எந்த இன்பத்தில் அழைத்தானோ அதே இன்பத்துடன் உபசரிப்பவன். (புறம்.101)

நள்ளி:

நள்ளியை வண்பரணர் விளக்குகிறார். காட்டிடத்தில் அயர்ந்திருந்ம எனங்களை முகம் நோக்கி வேட்டையாடிய உணவைக் கொடுத்து மகிழ்ந்தான். அது மட்டுமன்றி தன்னிடம் தற்போது பொருளில்லை யாம் இப்பொழுது காட்டிடத்தே இருப்பதால் வேறு நல்ல பொருள் இல்லை என்று மார்பிற் பூண்டிருந்த முத்தாரத்தைக் கொடுத்தான். ஐயா நீவிர் யார்? என்று கேட்ட போது தன்னை சுட்டிக்காமல் விடை பெற்றுச் சென்றான். பின்னர் வழியில் பிறரால் பேசிக் கொண்டதையறிந்து தோட்டிமலையரசன் என்று அறிந்தோம் என்கிறார். (புறம்.150) "ஓரியிடம் பெற்ற பரிசினால் வண்பரணரின் சுற்றத்தார் வறுமையிழந்து தனது தொழிலை மறந்திருந்தனர் என்று (புறம்.153) கூறுகின்றது. மேலும் அவரே அவனது வீரத்தையும் விரிக்கின்றார்.(புறம்.152)

வள்ளல்களின் நாடு:

பேகன்நாடு:

பொதினி. தற்போது பழனி என்று வழங்கப்படுகின்றது. இவற்றில் சண்பகனூர், கோடைக்கானல், தோன்றிக்குடி இவை திண்டுக்கல்லுக்கு மேற்கில் 15 கல் தொலைவி உள்ளது. நல்லூரில் மனைவியோடு வாழ்ந்தான். இவனது நாட்டை பெருங்கல் நாடு, பெருமலைநாடு என்றும் வழங்குவர். இளநீர் - இளநி, பதனீர் – பதனி என்றது போல பொதிநீர் – பொதினி என்று வழங்கப்படுகின்றது என்கிறார் துறையரங்கனார். இப்பொதினிக்கு "வையாபுரி" என்றும் இவை காலப்போக்கில் வையாபுரி என மருவியது. பாரி – பறம்புநாடு மதுரை மாவட்டத்து மேலூார் வட்டத்தின் கிழக்குப் பகுதியும் இராமநாதபுர மாவட்டதில் திருப்பத்தூர், சிவகங்கை, பரமக்குடி வட்டங்களும் அடங்கியது. பறம்புக்குடி என்ற பெயர் இப்போது பரமக்குடி என்று வழங்கப்படுகின்றது.

பாரி நாடு:

பறம்பு மலை தற்போது "பிரான் மலை" என்று வழங்கப்படுகின்றது. இங்கு சிவன் கோயில் ஒன்றுள்ளது. இவை கி.பி. ஏழாம் நூற்றாண்டில் திருஞான சம்பந்தரால் பாடப்பெற்றது. இம்மலையை கொடுங்குன்றம் திருநலின சம்பந்தரால் பாடப்பெற்றது. இம்மலையை திருக்கொடுங்குன்றம் என்றழைக்கப்பட்டதாக (A.R.E.383 of.1923) கல்வெட்டுக் கூறுகின்றது. இம்மலையே பறம்பு மலை என்று திருப்பத்தூர் வட்டத்து மக்கள் வழிவழியாகக் கூறுகின்றார்கள். இங்கு தான் அடர்ந்த காட்டில் பாரி முல்லைக்குத் தேர் ஈந்தது என்றும் கூறுகின்றார்கள்.
பிரான் மலையிலுள்ள சிவன் கோயில் "பாரிசுவரம்" என்றழைக்கிறார்கள். கி.பி.12ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டில் "புறமலை நாட்டுக் கொடுங்குன்றம் (A.R.E.383of.1923) என்று கூறுகின்றது. பறம்பு மலை எனவும் பின்பு புறமலை எனவும் மாறி கி.பி 13 ஆம் நூற்றாண்டின் பிராய் மலை என வழங்கியது கி.பி.16 ஆம் நூற்றாண்டில் இது நரசிங்கராயர் காலத்தில் பிரான்மலை என்று வழங்கப்பட்டு வருகின்றது.

மலையமான் நாடு:

மலையமானாடு மலைநாடு எனப் பெயர் பெற்றத மலாடு எனப் பெரியபுராணம் சுட்டும். இம்மலைநாட்டின் தலைநகரம் கோவலூர். (புறம்.69) அது பெண்ணையாற்றின் தென்கரையில் அமைந்தது. முள்ளூர் என்பது ஒரு நகரம். இது இப்பொழுது செஞ்சிவட்டத்தில் அமைந்துள்ளது.(நற்.170) கொடுங்கால் என்ற ஊர் பெண்ணையாற்றங்கரையில் உள்ளது.

மலையமானின் பட்டத்தால் அதாவது சோழிய ஏனாதி என்ற பெயராலும் அதிகமாக வழங்கி வருகின்றது. மலையனூர் கீழ், வட, தென் - திண்டிவனம், திருக்கோவலூர் என்ற வட்டத்தில் உள்ளதாக இராசமாணிக்கனார் கூறுகின்றார். காரி, மங்கலம் சேலம் மாவட்டம் காரியோடு தொடர்புடையதாகக் கருதப்படுகின்றது.

"முரண்மிகு கோவலூர் நூறி நின்
அரணோடு திரி ஏந்திய தோளே" (புறம்.99.13-14)
"துஞ்சா முழவின் கோவல் கோமான்
நெடுந்தேர்க் காரி" (அகம்.35.14-18)

ஆய்நாடு:

நாஞ்சில் நாடு. திருவட்டாறு, விழிஞம், திருவனந்தபுரம் என்பவை. இவனது மலை பொதியின் மலை (புறம்.128) இம்மலை மேற்குத் தொடர்ச்சியின் ஒரு பகுதி. குற்றாலம், பாபநாசம் இம்மலையைச் சேர்ந்தது. தலையாறு என்னுமிடத்தில் உயர்ந்த மலைப்பகுதி. அவற்றில் மூங்கில் அதிகம் (அகம்.152) என்று கூறுகின்றார். சங்ககால ஆய்வேளிர் கேரள நாட்டில் திருவல்லத்திலிருந்து கன்னியாகுமரி வரை உள்ள நிலப்பரப்பு என்று தாலமி குறிப்பிடுகின்றார். பாலக்காட்டுக் கணவாய் முதல் பொதியமலை முடிய உள்ள மேற்குத் தொடர்ச்சி மலைகளும் அவற்றைச் சேர்ந்த காடுகளும் ஆய்வேளிர்க்கு உரியவை என்று டாக்டர் சா.கிருஷ்ணசாமி ஐயங்கார் கூறுகின்றார்.

அதியமான் நாடு:

தகடூர். சங்க காலத்திற்குப் பின்பு சேலம் மாவட்டத்தின் வட பகுதியும் மைசூர் நாட்டில் கோலார் வட்டமும் தகடூர் ஆட்சியில் இருந்தனவென்று (A.R.E.1906. P.57) கல்வெட்டு கூறுகின்றது. தகடூர் தற்பொழுது நாமக்கல் என வழங்கப்படுகின்றது. நாமக்கல் புகழியூர் போன்றவை இவனது ஆட்சிக்குட்பட்டவை. அதியமான் விருகாதழகிய பெருமான் என்பவன் தன்னை எழினி மரபினன் என்று கூறுகின்றான். இவனது ஆட்சி வட ஆற்காடு மாவட்டத்துச் செங்கண்மா வரை பரவியிருந்தது. அதியன் பெயரில் வழங்கும் ஊர்கள் அதியமநல்லூர், அதியனூர், திருவதிகை, நெடுமானூர் நெடுமான் அஞ்சி, அதமன் கோட்டை, அதியமான் கோட்டை, அதகப்பாடி போன்றவை.

நள்ளி நாடு:

கண்டீரம், மதுரைக்கு அருகில் நள்ளி என்னும் பெயருடன் ஓர் ஊர் உள்ளது. அது இவனது நாடாகலாம் என கருத முடிகின்றது. நள்ளியின் பெயரால் நள்ளியூர் என்று ஓர் ஊர் இருந்ததைக் கொங்கு நாட்டுச் சாசனம் ஒன்று கூறுகின்றது. (கொங்கு நாடும் கிழை நாடும்) தோட்டி மலையும் இவனது நாட்டில் உள்ளது. (புறம்.150) "போந்தை" அவனது பக்கமலை (அகம்.238)

ஓரி நாடு:

கொல்லிமலை என்று வன்பரணர் (புறம்.152) ல் கூறுகின்றார்.

"மாரி வண்மகிழ் ஓரிக் கொல்லிக்
கலிமயில் கலாவத்தன்ன இவள்
ஒலி மென் கூந்தல் நம் வயினானே: (நற்.265.7-9)
"ஓரிக்கொன்று சேரலர்க்கு ஈத்த
செவ்வேர்ப் பலவின் பயம் கெழு கொல்லி (அகம்;14-17)
"கொல்லி ஆண்ட வல்வில் ஓரியும் (புறம்.158-5)
என்றெல்லாம் அறியப்படுகின்றோம்.

நாமக்கல், ஆத்தூர், இராசிபுரம் போன்றவை இவன் ஆண்ட ஊர்கள் இராசிபுர விசுவநாதர் கோவிலில் ஓரியன் உருவச்சிலை உள்ளது. கோவை மாவட்டம் ஓரி சேரி என்னும் ஊர் ஓரி மயநாடு தொடர்புடையதாகலாம்.

முடிவுரை:

இது காறும் கூறியவற்றில் வள்ளல்களின் வரலாறு சங்கத் தொகையில் கூறியதை எடுத்தாளப் பெற்றும் வள்ளன்மையை ஆராயப்பெற்றும் கொடுத்திருக்கின்றேன். இவற்றில் பெரும்பாலும் ஆய்விற்குரிய செய்திகள் மாணவர்களுக்கு பயன்படும் என்பது திண்ணம்.

22. சங்க இலக்கியத்தில் ஊர்பெயராய்வும் வரலாற்றுப் பதிவும்

எம்.ஓ.கன்னியப்பன்
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழியல் துறை,
பச்சையப்பன் கல்லூரி, சென்னை – 30.

சங்க இலக்கியம் சமூகம், பொருளாதாரம், அரசியல், மானிடவியல், தொல்லியல், உளவியல், தொன்மங்கள் சார்ந்தப் பண்பாட்டுப் பதிவுகள், அறிவியல், தத்துவம், அறவியல் என்று பல்துறைச் சார்ந்த புரிதலுக்கு விளக்கம் தருவதுபோல் நிலவியல் வரலாறுச் சார்ந்த ஊர்பெயராய்வுக்கும் விளக்கம் தருகின்றது.

மக்கள் திரளாகக் கூடிவாழும் இடத்தினை 'ஊர்' என்ற பெயரால் அழைப்பர். இந்திய ஊர்ப் புறங்கள் பெரும்பாலும் நிலப்பகுப்பின் அடிப்படையில் பெயரிடப்பட்டுள்ளன. இத்தகைய பெயரிடும் முறை சங்க காலம் தொடங்கி சமகாலம் வரை வழக்கில் நின்று நிலைப்பெற்று வருகின்றதை இலக்கியங்கள், தொல்பொருள் ஆய்வுகள் வழி அறியலாம்.

"மாயோன் மேய காடுரை உலகம்'
சேயோன் மேய மைவரை உலகம்
வேந்தன் மேய தீம்புனல் உலகம்
வருணன் மேய பெருமணல் உலகம்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலென்று
சொல்லிய முறையால் சொல்லவும் படுமே"

என்று தொல்காப்பியர் காலம் தொடர்ந்து ஊர்பெயர் வைப்பு முறைகள் ஐந்திணைகளாகப் பகுப்பட்டுள்ளன.

பெயர் வைப்பு முறை:-

குறிஞ்சி	-	மலைப்பகுதி
முல்லை	-	காடு சார்ந்த நிலஅமைப்பு
மருதம்	-	வேளாண்மைத் தொழில் நடக்கும் வயல் நிலம்,
நெய்தல்	-	கடல் சார்ந்த நிலம்
பாலை	-	குறிஞ்சியும் முல்லையும் வளம் திரிந்த நிலஅமைப்பு

என திணைச் சார்ந்த நிலப்பகுப்பு முறையில் பாடி, சேரி, குன்றம், சீறூர், நகரம், நாடு என்ற எல்லைக் கட்டமைப்பும் வரையறுக்கப்படுகின்றன. நிலப்பாகுப்பாட்டின் அடிப்படையில் மக்கள் குடிமரபுப்பெயர், தொழில்பெயர், காலப்பெயர், காலப்பெயர் பகுப்பு, பொருட்பெயர், தாவரப்பெயர், மனித உறவுப்பெயர்கள், பண்பாட்டுக் கட்டமைவும் முதலியனத் தோற்றம் பெருகின்றன.

தொல்காப்பியத்தில் ஊர்ப்பெயராய்வுக்கு அடித்தளம் இருப்பினும் கி.பி.19,20ஆம் நூற்றாண்டில்தான் பல்துறைச்சார்ந்த அறிவியல் புலமாக அத்துறை வளர்ச்சியடைந்துள்ளது.

மனித இன வரலாற்றை நோக்கின் மக்கள் கூட்டம் கூட்டமாக இடம் விட்டு இடம் பெயர்ந்து வாழத்தலைப்பட்ட காலத்தே ஊர்பெயராய்வுகள் தோற்றம் பெற்றுள்ளன. அதற்கு முன்னோடியாக ஆற்றுப்படை நூல்களைக் கூறலாம்.

"ஊரொடுத் தோற்றம் உரித்தென மொழிப'
(தொல் - பொருள்- நூ)

என்று தொல்காப்பியம் ஊர்பெயர் ஆய்வு முறையைச் சமூக வரலாற்றோடுத் தொடர்புடையதாவதைக் காட்டுகின்றது. ஊர்ப்பெயர்கள் தொன்மங்கள் சார்ந்த நிலையில் பதிவாகித் தனித்தப் பண்பாட்டையும், தொழிலையும், உறவு முறைகளையும் வளர்க்கின்றன.

"மனித இனம் ஒரு குழுவாக சமூகமாக ஆங்காங்கே ஏதேனும் ஒரு பகுதியில் சிறுது காலம் நிலையாக வாழத் தொடங்கிய பின்னர்தான் இடப் பெயர்கள் தோன்றியிருக்க வேண்டும். ஒரு மனிதன் இன்னொரு மணிதனிடமிருந்து வேறுபடுத்த ஆட்பெயரையும், ஒரு இனத்தை மற்றொரு இனத்திடமிருந்து வேறுபடுத்த இனப்பெயரையும் வழங்கியதுப் போன்று நிலத்தின் ஒரு பகுதியை இன்னொரு பகுதியினின்றும் வேறுபடுத்திக் காட்ட இடப்பெயர்கள் அமைத்துக் கொண்டனர்".

என்று கே.எம். ஜியார்ஜ் கூறுவதன் வழி ஊர்ப்பெயராய்வு ஒரு தொன்மையான சமூகத்தின் வரலாற்றையும், பண்பாட்டுப் பதிவையும் புலப்படுத்துகின்றன.

கி.பி.19ஆம் நூற்றாண்டில் நாட்டுப்புறவியல், மொழியியல் துறைகளின் வளர்ச்சி நிலையில் ஊர்பெயர் ஆய்வும் விரிவான ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன.

மேலை நாட்டாரே இத்துறையிலும் முன்னோடியாக உள்ளனர். ஊர்பெயராய்வின் முக்கியத்துவத்தை முதலில் உணர்த்தியவர் கோல் பிரைடு வில்ஹெல்ம் லெய்ப்னிஷ் (1768) ஆவார். இவரைத் தொடர்ந்து,

- ❖ 1952இல் அமெரிக்கப் பெயராய்வுக் கழகம் 'Names' என்ற இதழை நடத்தி வருகின்றது.
- ❖ 1960இல் International Committee of onomastic science- என்று இடப்பெயராய்வுக்கு விரிவான ஆய்வுக்குழுவை அமைத்தது.
- ❖ 1979-இல் இந்திய இடப்பெயர் ஆய்வுக்கழகம் தொடங்கப்பெற்றது (Studies in Indian Place Names)

இவ்வாறு இடப்பெயராய்வுக்கு இதழ்களும், ஆய்வுக்கழகங்களும் தோன்றியுள்ளன. இவைகளுக்கு முன்பே தமிழ் இலக்கிய வரலாற்றுப் பதிவுகளில் ஊர்ப்பெயர்கள் பதிவாகியுள்ளன. தமிழ் இலக்கண ஆசிரியர்கள், உரையாசிரியர்கள், தலபுராண ஆசிரியர்கள் இடப் பெயராய்வுக்குத் தோற்றுவாய் செய்துள்ளனர். ஊர்ப்பெயர் ஆய்வு முயற்சிக்கு சங்க இலக்கியங்கள் தொடர்ந்து சமகாலப் படைப்புகள் வழியாக விரிவானத் தகவல்களை அறியலாம். ஆழ்வார்கள், நாயன்மார்கள் வரலாற்றினை அறியும்போது ஊர்பெயர்ச்சார்ந்த தகவல்களும், மக்கள் பண்பாட்டு வரலாற்றையும் புலப்படுத்துகின்றன. தமிழ் இலக்கியத்தில் இத்தகைய முயற்சிக்கு வித்திட்டவர்கள் இராமலிங்க அடிகள், மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, ந.சஞ்சிவி, டாக்டர். ரா.பி. சேதுப்பிள்ளை (தமிழக ஊர்பெயராய்வின் தந்தை) இவருடையத் தமிழக "ஊரும் பேரும்" ஊர்பெயர் ஆய்வுப் பற்றிய அடிப்படை நூலாகும்.

தொல்பொருள் ஆய்வில் காணப்படாததும் வரலாற்றுச் சான்றுகளில் திரிபடைந்து காணப்படுவதுமான மொழியியல் செய்திகளை இடப்பெயர் ஆய்வுகள் முழுமையாகத் தருகின்றன. ஊர்ப்பெயர்கள் அரசியல் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தை அறியவும்; இயற்கை நில அமைப்புகளை அறியவும்; சமூக நிலையை அறியவும் துணைப் புரிகின்றன.

சங்க இலக்கியத்தில் பதிவாகியுள்ள புலவர்கள் பெயர்கள் ஊரொடுத் தொடர்புடையதைக் காட்டுகின்றன.

1. ஊரால் பெயர் பெற்றப் புலவர்கள்.
2. ஊரொரு தொடர்ந்த பெயர் கொண்ட புலவர்கள்.

என்று பொதுக்கூறு, சிறப்புக்கூறு என்னும் நிலையில் வகைப்படுத்தப்படலாம்.

1. ஊர்பெயரின் ஈற்றிலே ஊர்ப்பெயரின் விகுதியாகப் பிரிக்கலாம். (Suffix) இக்கூறுகள்தான் முதலில் ஊர்ப்பெயராக அமைந்திருக்கவேண்டும். காலப்போக்கில் ஒரே பெயரில் பல ஊர்கள் தோன்றும் போது அவற்றை வேறுபடுத்தச் சிறப்புக் கூறுகள் தோன்றலாயின். சிறப்புக்கூறினை முன்னொட்டாக கூறலாம். ஊரின் முன்னெட்டாக அமைந்த பெயரினைக் கொண்டப் புலவர்கள் நிலப்பிரிவின் பாகுபாட்டால் பெயர் பெற்றவர்களாகக் காணப்படுகின்றனர்.
2. பின்னொட்டால் பெயர் பெற்றப் புலவர்களை நிலப்பகுப்பின் பெயரால் பெயரிட்டு அழைக்கும் முறையைச் சங்க இலக்கியத்தின் வழி அறியலாம். எனவே சங்க இலக்கியத்தில் இடம்பெறும் இடப்பெயர்கள் பொதுக்கூறு, சிறப்புக்கூறு என இரண்டு கூறுகளைக் கொண்டு அமைகின்றன. சில ஊர்கள் ஒரே சொல்லாக அமைவதும் உண்டு.

இத்தகைய ஒரே சொல்லாக அமைந்த பெயர்களே முதலில் தோற்றம் பெற்றிருக்கவேண்டும். சிறப்புக்கூறுகளை விளக்கப் பெயரடை, ஆட்பெயரடை, பிறவகைப்பெயரடை என மூவகையாகப் பகுக்கலாம்.

பொதுக்கூறு:-

ஆர்:- என்ற முன்னொட்டால் பெயர் பெற்றவர்கள்.

1. அரிசில் - கிழார்

2. ஆவியார்- ஆர்
3. ஆலந்தூர்- கிழார்.
4. ஆவூர்- கிழார்
5. இடைக்காடனார்
6. இடைக் குன்றூர் கிழார்
7. ஊதாய்க்குடி கிழார்
8. உறையூர் இளம்பொன் வணிகனார்.
9. ஐயூர் முடவனார்
10. ஐயூர் மூலங்கிழார்.
11. கருவூர் கிழார்
12. கருவூர்க் கோசனார்
13. கல்லாடம் கல்லாடனார்
14. கள்ளில் ஆத்திரையனார்
15. கயத்தூர் கிழார்.
16. காப்பியாறு காப்பியனார்
17. காரியூர்- கிழார்
18. கிள்ளிமங்கலம் - கிழார்
19. குடபுலவியனார்.
20. குளம்பனார்
21. குறுங்கோழியூர் கிழார்
22. பொதும்பில் கிழார்.
23. கூடலூர் கிழார்.
24. கோக்குளம் முற்றனார்
25. துறையூர் ஓடைகிழார்
26. நல்லாவூர் கிழார்.
27. நொச்சி நியமங்கிழார்
28. பெருங்குன்றூர் கிழார்
30. பேராலவாயார்

சிறப்புக்கூறு:- (ஊர் சார்ந்து வழங்கப்பட்ட புலவர் பெயர்கள்)

பின்னொட்டால் பெயர் பெற்றப் புலவர்கள்.

1. உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்
2. உறையூர் கதுவாய்ச் சாத்தனார்.
3. உறையூர் சல்லியங் குமரானார்.
4. உறையூர்ச் சிறுகந்தனார்
5. உறையூர் பல்காயனார்.
6. உறையூர் மருத்துவன் தாமோதரனார்
7. உறையூர் முதுகண்ணன் சாத்தனார்
8. ஒக்கூர் மாசாத்தனார்
9. ஒக்கூர் மாசாத்தியார்.
10. கருவூர் கண்ணம்பளனார்.
11. கருவூர்க் கதப்பிள்ளைச் சாத்தனார்.
12. கருவூர்ச் சேரமான் சாத்தன்
13. கருவூர் நன்மார்பனார்.
14. கருவூர்ப் பவித்திரனார்
15. கருவூர் பூதஞ் சாத்தனார்
16. கருவூர் பெருஞ்சதுக்கத்துப் பூனார்.
17. காவிர்ப்பூம்பட்டினத்துக் கந்தரத்தனார்.
18. காவிரிப் பூம்பட்டினத்து காரிக்கணணனார்.
19. காவிரிப்பூம்பட்டினத்து சொல்கண்ணனார்.
20. காவிரிப் பூம்பட்டினத்துச் சேந்தன் கண்ணன்.

21. **காவிரிப் பூம்பட்டினத்துப்** பொன்வணிகன் மகன் நப்பூதனார்.
22. **கிடங்கில்** காவிதிப் பெருங் கொற்றனார்.
23. **கிடங்கில்** குலபதி நக்கண்ணனார்.
24. **கோழியூர்** கொற்றனார்.
25. **கோழியூர்** கிழார் மகனார் செழியனார்.
26. **செல்லூர்** கிழார் மகனார் பெரும் பூதங் கொற்றனார்.
27. **செல்லூர்க்** கோசிகன் கண்ணனார்.
28. **தங்கால்-** பொற்கொல்லன் வெண்ணாகனைக்
29. **தங்கால்-** ஆத்திரேயன் செங்கண்ணனார்.
30. **படுமரத்து** மோசிகீரனார்.
31. **படுமரத்து** மோசிகொற்றனார்.
32. **மதுரை** அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார்.
33. **மதுரை** அறுவை வாணிகன் இளவேட்டனார்.
35. **மதுரை** இளங்கண்ணிக் கௌசிகனார்.
36. **மதுரை** இளம்பாலாசிரியன் சேந்தன் கூத்தனார்.
37. **மதுரை** இளம்பாலாசிரியன் சேந்தன் கூத்தனார்.
38. **மதுரை** ஒலைக்கடைக் கண்ணம் புகுந்தாரயத்தனார்.
39. **மதுரை** ஒலைக் கடையத்தார்.
40. **மதுரைக்** கண்டரத்தனார்.

வேம்பற்றூர்

1. **வேம்பற்றூர்க்** கண்ணன் கூத்தன்.
2. **வேம்பற்றூர்க்** குமரனார்.

அஞ்சில்:

1. **அஞ்சில்** அஞ்சியார்
2. **அஞ்சில்** ஆந்தையார்

அரிசில்

அரிசில் கிழார்
அள்ளூர் அள்ளூர் நன்முல்லையார்
ஆலங்குடி வங்கனார்.

ஆவூர்ப் புலவர்கள்:

1. **ஆவூர்** கிழார்
2. **ஆவூர்** கிழார் மகனார் கண்ணனார்.
3. **ஆவூர்க்** காவிதிகள் சாதேவனார்.
4. **ஆவூர்** மூலங்கிழார்
5. **நல்லாவூர்** கிழார்.

இடைக்கழி நாடு

1. இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார்.

இடைக்காடு:

- இடைக்காடனார்.
- **இருந்தையூர்:** கொற்றன் புலவன்.
- **இளம்புல்லூர்** காவிதி
- **ஈழத்துப்** புதன் தேவனார்
- **உகாய்க்குடி** கிழார்.

உறையூர்ப் புலவர்கள்:-

1. **உறையூர்** இளம்பொன் வணிகனார்
2. **உறையூர்** ஏணிச்சேரி முடமோசியார்
3. **உறையூர்க்** கதுவாய்ச் சாத்தனார்.
4. **உறையூர்க்** சிறுகந்தனார்.
5. **உறையூர்க்** பல்காயனார்
6. **உறையூர்** மருத்துவன் தாமோதரன்
7. **உறையூர்** முதுகண்ணன் சாத்தனார்.

ஐயூர்

1. ஐயூர் முடவனார்.
2. ஐயூர் மூலங்கிழார்

ஒக்கூர்

1. ஒக்கூர் மாசாத்தனார்
2. ஒக்கூர் மாசாத்தியார்

கச்சிப்பேடு

1. கச்சிப்பேட்டு இளந்தச்சனார்
2. கச்சிப்பேட்டுக் காஞ்சிக்கொற்றனார்.
3. கச்சிப் பேட்டுப் பெருந்தச்சனார்.

பூங்குன்றம்

- கணியன் பூங்குன்றனார்
- கயத்தூர்
- கயத்தூர் கிழார்

கருவூர்ப் புலவர்கள்

1. கருவூர் கிழார்
2. கருவூர்க் கண்ணம்பாளனார்.
3. கருவூர்க் கதப்பிள்ளைச் சாத்தனார்.
4. கருவூர்க் கலிங்கத்தார்
5. கருவூர்க் கோசனார்
6. கருவூர்ச் சேரமான் சாத்தன்
7. கருவூர் நன்மாரனார்.
8. கருவூர் பூதஞ்சாத்தனார்
9. கருவூர் பெருஞ்சதுக்கத்துப் பூதனார்.

காட்டூர்

காட்டூர்கிழார் மகனார் கண்ணனார்.

காவிரிப்பூம்பட்டினப் புலவர்கள்

1. காவிரிப்பூம்பட்டினத்துக் கந்தரத்தனார்
2. காவிரிப் பூம்பட்டினத்துச் காரிக்கண்ணனார்
3. காவிரிப் பூம்பட்டினத்துச் செங்கண்ணனார்.
4. காவிரிப் பூம்பட்டினத்துச் சேந்தன் கண்ணனார்.
5. காவிரிப் பூம்பட்டினத்துப் பொன்வாணிகனார்.

கிடங்கில்:

1. கிடங்கில் காவிதிக் கீரங்கண்ணனார்
2. கிடங்கில் காவிதிப் பெருங் கொற்றனார்.
3. கிடங்கில் குலபதி நக்கண்ணனார்.

இவ்வாறு சங்க இலக்கியத்தில் புலப்படும் ஊர்பெயர்கள் பெரும்பாலும் தமிழ்நாட்டு நிலவியல் அமைப்பை அடிப்படையாகக் கொண்டு அதன் வழிப் புலப்படும் மக்கள் பெயர், அரசியலமைப்பு, குடிப்பெயர், தொழில்பெயர், காலப்பெயர், உயர்திணைப்பெயர், அஃறிணைப்பெயர் என விரிந்துச்செல்கின்றன.

- குறிஞ்சி - குறவன், குறத்தி, வேடுவர், வெற்பன், பொருப்பன்.
- முல்லை - கோவலர், ஆயர், இடையர், ஆய்ச்சி,
- மருதம் - ஊரன், மகிழ்னன், வேளாளர், நாடன்
- நெய்தல் - மீனவன், பரதவர், நுலையர், புலையர்
- பாலை - எயிற்றியர், எயினர்.

என திணைப்பாகுபாட்டின் அடிப்படையில் மக்கள் காணப்படுகின்றனர்.

பண்டைத் தமிழகம் பரந்துப்பட்ட நிலப்பரப்பை அடிப்படையாகக் கொண்டு எல்லைப்பகுப்பும், அரசியல் (சேரர், சோழர், பாண்டியர்) பிரிவுகளும், சமூகப் பண்பாடும் கட்டமைக்கப்பட்டுள்ளன.

வடவேங்கடம் தென்குமரி
ஆயிடைத்

தமிழ்க் கூறும் நல்லுலகம்
(தொல்- பாயிரம்)

என பரந்துப்பட்ட நிலப்பரப்பை அடிப்படையாக கொண்டு அதன் வழி திசைச்சொல் பெயர்களும் வழங்கப்பட்டுள்ளன.

வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்
தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்
குணாஅது கரைபொரு தொடுகடல் குணக்கும்
குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும்
(புறம் - 6)

என்று புறநானூறு வழி திசை சார்ந்த இடப்பெயர்களும் பதிவாகியுள்ளன.

- வடதிசை - பனிபடர்ந்த இமயம்.
- தென்திசை - குமரிக்கடல் மற்றும் பஃறுளியாற்றுப் பன்மலை அடுக்கம்.
- குணதிசை (கிழக்கு) - வங்கக்கடல் பகுதி.
- குடதிசை (மேற்கு) - மேற்குத் தொடர்ச்சி மலையும், அரபிக்கடலும்.

என்று தமிழ்நாட்டின் எல்லை திசைகள் சார்ந்தும் பரந்துப்பட்ட நிலஅமைப்பாக விளங்கயதைப் புறப்பாடல்வழி அறியலாம்.

சங்க இலக்கியத்தில் பதிவாகியுள்ள மொழி, சாதி, தொழில், திணைப்பிரிவுகள், மக்கள் பெயர்கள் முதலிய விவரங்களும் ஊர்ப்பெயராய்வுக்குத் துணைச்செய்யும் விதமாக அமைந்துள்ளன. மேலும் ஊர்பெயருக்கு மக்கள் தரும் விளக்கத்தைச் சேகரிக்கவும் சமய வரலாற்றை அறியவும், (பள்ளி, பாழி, திரு) இடப்பெயர்ச்சிகளை (Migration) அறியவும், "பொருளியல் மாற்றங்களை அறியவும்; அரசியல் வரலாற்றை அறியவும்; இயற்கை அமைப்பை அறியவும்; சமூகவியல் நிலையை ஆராயவும் ஊர்ப்பெயராய்வுப் பெருந்துணையாக அமைகின்றது.

சங்க இலக்கியத்தில் ஊர்பெயர் ஆய்வுச் சார்ந்த முயற்சிகளுக்கு பிறத்துரைகளுடன் கூடிய ஆய்வு அணுகுமுறை மிகவும் இன்றியமையாததாகும். அந்த வகையில் அணுகும்போது சங்க இலக்கியம் காலந்தோறும் புதிய அறிவியல் முறை ஆராய்ச்சிக்கு ஈடுகொடுத்து பரிமாண வளர்ச்சியடையும்.

சான்றாதார நூல்கள்

1. தொல்காப்பியம்
2. தொல்காப்பியம்
3. K. M. George. Place names of southern India, p-19. Trivandrum, 1986.
4. கி.நாச்சிமுத்து, தமிழ் இடப்பெயராய்வு, பக்.30-1996.
5. ந.சஞ்ஜீவி, சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணை.
6. தொல்காப்பியம்
7. பத்துப்பாட்டு எட்டுத்தொகை நூல்கள்.

23. சங்கப் புலவரும் ஊர்ப்பெயர்களும்

சு. கவிதா

தமிழ்த்துறை, இராணிமேரி கல்லூரி (தன்னாட்சி), சென்னை – 600 004.

முன்னுரை

சங்கப் புலவர்களில் சிலருடைய பெயர்கள் ஏட்டுப்பிரதிகளில் காணப்படவில்லை. சங்ககாலப் புலவர் பலர் இயற்பெயரால் வழங்கப்பெற, சிலர் தமக்கு இயற்பெயர் இருந்தோ அல்லது இருந்து மறைந்தோ தாமியற்றிய பாடல்களின் சிறப்பான தொடரினால் வழங்கப்படுகின்றனர். இவ்வாறு பெயர் காணப்படாத புலவர்களை விடுத்து, இயற்பெயராலும் காரணப் பெயராலும் அறியப்படும் புலவர் நானூற்றெழுபத்து மூவர் ஆவர். இப்புலவர்கள் சிலரது பெயரின் முன்னர் அவர்களது ஊர்ப்பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு சங்கப் புலவர்களின் பெயரின் முன்னர் இடம்பெறும் சில ஊர்களின் பெயர்க்காரணம், ஊரமைப்பு, சிறப்புகள் இவற்றைச் சங்க இலக்கியங்களின் வழி நின்று இக்கட்டுரை அமைகின்றது.

1. உறந்தை (உறையூர்) - மதுகூற்றனார்

உறையூர் மதுகூற்றனார் என்னும் புலவர் வழி இந்த உறையூர் என்னும் ஊர் குறிப்பிடப்பட்டுள்ளது. இரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் சோழநாட்டின் தலைநகர் உறையூரின் பெயர் "கோழி உறையூர்" – என்று பிங்கல நிகண்டு குறிப்பிடுவதாகவும் தற்பொழுது அது கோழியூர் என்று வழங்கப்படுவதாகவும் இவ்வூர் இராமநாதபுர நாட்டில் உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

முற்காலத்தில் ஆற்றங்கரைகளில் சிறந்த ஊர்கள் அமைந்திருந்தன. உறையூர் என்பது சோழநாட்டின் பழைய நகரமாக விளங்கியுள்ளது. இவ்வூர் காவிரிக்கரையில் அமைந்துள்ள ஊர் ஆகும்.

"வளங்கெழு சோழ ருறந்தைப் பெருந்துறை" (116-2)

2. தொண்டி - பரணர்

தொண்டி என்பது ஒரு கடற்கரை நகரமாகும். மேற்கடற்கரைத் தொண்டி ஒன்று பரணரால் குறிக்கப்படுகின்றது. அது பொறையனுக்குரியது. நெல் வளம் மிக்க தொண்டியொன்று வேறிரண்டு புலவர்களால் பாடப்பெறுகின்றது. அது கீழ் கடற்கரை என்று தெரிய வருகின்றது. இதனை,

"பல்லா பயந்த நெய்யிற் தொண்டி" (210 – 2)

என்றும்,

"திண்டேர்ப்பொறையன் றொண்டி முன்றுறை" (128 – 2)

என்ற வரிகளின் மூலம் அறிய முடிகின்றது.

3. குறும்பூர் - குறும்பூரார்

விச்சிக்கோ என்பவன் அரசரோடு பொருத இடமாகும். இது பரணரால் குறிப்பிக்கப்படுகிறது. இதனை,

"கலிகெழு குறும்பூரார்ப்பினும் பெரிதே" (328 – 8)

என்ற வரியின் மூலம் ஆரவாரமிக்க "குறும்பூர்" என்று சிறப்பிக்கப்பட்டுள்ளது.

4. இருந்தையூர் - கொற்றன் புலவனார்

இவ்வூர் இருந்தையூர்க் கொற்றன் புலவனார் என்ற புலவர் பெயரில் இருக்கிறது. திருக்கோவலூர் தாலுகாவில் 'இருந்தை' என்று ஓர் ஊர் உள்ளது. இருந்தையூர் என்பது அதுவாக இருக்கலாம் என்று தோன்றுகிறது. இந்த ஊரிலேயே கருங்கோழி மோசியார் என்ற வேறோர் இடைச்சங்கப் புலவர் இருந்தார் என்று தெரிய வருகிறது.

5. உரோடகம் - கந்தரத்தனார்

'உறைகடம்' என்னும் பெயர் உள்ள மூன்று ஊர்கள் செங்கற்பட்டு மாவட்டத்தில் இருக்கின்றன. காஞ்சிபுரம் தாலுக்காவில் உள்ள ஓரகடம் என்னும் ஊரே 'உரோடகம்' எனத் திரிந்தது என்றும் இந்த ஊரைப்பற்றி உரோகடத்துச் கந்தரத்தனார் என்ற புலவரின் பெயர் மூலமாக அறிந்துகொள்ளமுடிகின்றது.

6. கிடங்கில் - குலபதி நக்கண்ணனார்

கிடங்கில குலபதி நக்கண்ணனார் என்னும் புலவர் வழி 'கிடங்கில்' என்னும் ஊர் பற்றி அறிய முடிகின்றது. கிடங்கில் என்னும் பெயருடைய கோட்டையின் தலைவன் கொடை வள்ளலாக விளங்கியவன் நல்லியகோடன் என்னும் சிற்றரசன் ஆவான்.

இந்தக் கிடங்கில் என்னும் ஊர் கிடங்கால் என்னும் பெயருடன் விளங்கிற்று என்றும் நல்லியக்கோடன் ஆட்சிப்புரிந்த நாடு ஒய்மாநாடு என்றும் சாசனங்கள் கூறுகின்றன. இந்த ஒய்மாநாட்டில் இருந்த ஊர் கிடங்கில் என்று குறிக்கப்பட்டுள்ளது என்று இரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் 'தமிழக ஊரும் பேரும்' நூலில் குறிப்பிட்டுள்ளார்.

7. கிள்ளிமங்கலம் - சேர கோவனார்

கிள்ளிமங்கலங்கிழார் மகனார் சேர கோவனார் என்னும் புலவரால் கிள்ளிமங்கலம் என்ற ஊர் இருந்தமை தெளிவாகிறது. கிள்ளிமங்கலம் பாண்டிநாட்டிலுள்ளது. கிள்ளிமங்கலம் கிழார் என்பது இவரது தந்தை பெயராக இருந்திருக்கக் கூடும். இவர் குறிஞ்சித்திணையைச் சிறப்பித்துச் செய்திருக்கும் செய்யுள் நயமிக்கதாகக் கருதப்படுகிறது.

இரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் தமது நூலில் சோழ மரபினர்க்குரிய கிள்ளியென்ற பெயர் நிலவும் பகுதியில் வேளாளர் குலத்திற் பிறந்த புலவர் கிள்ளி மங்கலங்கிழார் என்று குறிப்பிட்டுள்ளார்.

கிள்ளி மங்கலம் என்ற ஊரின் பெயர் தற்பொழுது கின்னிமங்கலம் என மருவி வழங்கி வருகிறது. இந்தக் கின்னி மங்கலம் மதுரை திருமங்கல வட்டத்தில் உள்ளது.

8. குடவாயில் - கீரத்தனார்

குடவாயிற் கீரத்தனார் என்னும் புவலரால் இவ்வூர் அறியப்படுகிறது. இவ்வூர் திருவாரூர் மாவட்டத்தைச் சார்ந்த குடவாசல் வட்டாரத்திற்கு அண்மையில் உள்ளது. குடந்தை வேறு, குடவாயில் வேறு என்றும், "தேர்வண் சோழர் குடந்தை வாயில்" என்னுமிடத்தில் குடந்தையென்பது குடவாயிலே என்றும் நற்றிணை நூலால் அறியலாம்.

கோச்செங்கட் சோழன் தன்னொடு போர்செய்து தோல்வியுற்ற சேர மன்னனைக் குடவாயிற்கோட்டம் என்னும் சிறைக்கோட்டத்தில் அடைத்ததாக சங்க இலக்கியம் கூறுகின்றது.

திருவாரூர் மாவட்டத்தில் குடவாசல் என விளங்கும் ஊரே குடவாயில் என்னும் பழம்பகுதியாகும். முற்காலத்தில் சிறந்து விளங்கிய ஒரு பெருநகரின் மேலவாசலாக அமைந்த இடம் பிற்காலத்தில் ஓர் ஊராயிற்று எனலாம்.

"வரையார் மதில்சூழ் குடவாயில் மன்னும்

வரையார் பெருங்கோயில் மகிழ்ந்தவனே"

என்றும் திருஞானசம்பந்தர் பாடிய பாட்டால் இந்தக் குடவாயில் ஈசன் விளங்குமிடம் பெருங்கோயில் என்றும் போற்றப்பட்டுள்ளது.

9. இடைக்காடு - இடைக்காடனார்

இடைக்காடனார் எழுதிய பாக்களால் இடைக்காடனூரைப் பற்றி அறிய முடிகிறது. இவர் நற்றிணை, அகநானூறு, புறநானூறு, குறுந்தொகை, திருவள்ளுவமாலை ஆகியவற்றில் பாக்களை இயற்றியுள்ளார். இவர் குலமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் காலத்தவர் என்பதை இவரின் செய்யுள்களால் அறியமுடிகின்றது.

இடைக்காடு என்னும் ஊர் பட்டுக்கோட்டைக்கு அண்மையில் உள்ளது என்றும், கேரள மாவட்டத்திலும் இப்பெயரில் ஊர் ஒன்று உள்ளது என்றும் குறிப்புள்ளது. இவரது பாடல்கள் முல்லைத்திணையைப் பற்றியவையாக இருந்தலின் இவர் பட்டுக்கோட்டையினராகவே இருத்தல் வேண்டும்.

இரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் தமது நூலில் ஊர்களின் அமைப்பைக்கருதி தலை, இடை, கடை என்னும் அடைமொழிகள் அவற்றின் பெயரோடு இணைக்கப்படுவது உண்டு என்று கூறிச்செல்கிறார். இடையென்னும் அடைமொழியைக் கொண்ட ஊர்களில் மிகப் பழமை வாய்ந்தன திருவிடைமருதூர், திருவிடைச்சுரம், இடையாறு முதலியனவாகும். இவை மூன்றும் தேவாரப்பாடலில் இடம்பெற்றவையாகும். இடைக்காடு என்னும் ஊரிலே பிறந்த புலவர் இடைக்காடர் என்று பண்டை இலக்கியத்தில் பேசப்படுகிறது.

10. குட்டநாடு - நம்பிகுட்டுவனார்

நம்பிகுட்டுவனார் என்ற புலவரின் பெயரின்மூலம் இவ்வூர் குறிப்பிடப்பட்டுள்ளது எனலாம். இவர் நற்றிணையில் மூன்று பாடல்களையும் குறுந்தொகையில் இரண்டு பாடல்களையும் இயற்றியுள்ளார். இந்தக் குட்டுவர் என வழங்கும் பெயர் சேரர்களையேசாரும். அதனால் குட்டநாடு என்பது சேரநாட்டினைச் சேர்ந்ததாகும்.

11. கழார் - கழார்க்கீரன் எயிற்றியனார்

மயிலாடுதுறைக்குக் கீழ்ப்பாலுள்ள ஊர் கழார் எனப்படுகிறது. இவ்வூர் கழார்க்கீரன் எயிற்றியனார் என்னும் பெண்பாற் புலவரின் பெயரால் அறியப்பட்டுள்ளது. இந்த எயிற்றி என்னும் பேரினர் வேடர் மரபினராக இருந்துள்ளனர். கீரன் என்பாரின் மனைவியார் இவர் என்று நற்றிணை கூறுகிறது. இந்தப் புலவர் நற்றிணை 281, 282 அகிய செய்யுள்களை எழுதியுள்ளார்.

12. பிரான்மலை - பிரான் சாத்தனார்

பிரான் சாத்தனார் என்ற புலவரின் பெயரால் பிரான்மலை குறிப்பிடப்பட்டுள்ளது. குறிஞ்சிப்பாடல் இவர் பாடிய பாடலாகும். மகளிர் விளையாடாது இல்லின்கண் சோம்பியிருத்தல் அறனும் அன்று செல்வமும் சுருங்கும் என்று இற்செறிப்பற்ற தலைவி கூற்றில் காணும் நயத்தால் இவர் எவ்வளவு கவிதைத் திறம் வாய்ந்தவர் என்று கணக்கிடலாம்.

பாரிவள்ளலின் பறம்பு நாட்டில் காணப்படும் பாரீச்சுரம் என்னும் சிவாலயம் பாரியெடுத்த திருக்கோவிலாகக் கருதப்படுகின்றது. அப்பாரீச்சுரம் தேவாரப்பாடல் பெற்ற பொடுங்குன்றத்திற்கு அருகேயுள்ளது. இக்காலத்தே பிரான்மலையெனப்படும் கொடுங்குன்றத்தைத் தன்னகத்தே உடைய பறம்புநாடே பாரியின் நாடாகும். அதுவே பிரான்சாத்தனாரின் பிரான்மலையாகக் கருதப்படுவதாகக் கல்வெட்டுக்களால் அறியமுடிகின்றது.

முடிவுரை

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னே தமிழர் வாழ்ந்த வாழ்க்கையின் பெற்றியினை விளக்கி நிற்பன தமிழிலக்கியங்கள். புலவர்களின் பெயரோடு சேர்ந்து வழங்கப்படும் ஊர்களைப்பற்றிய செய்திகள் சங்க இலக்கியங்களில் பதிவாகியுள்ளன. அவ்வாறு புகழ்பூத்து விளங்கும் ஊர்களாக உறையூர், தொண்டி, குறும்பூர், இருந்தையூர் முதலிய பனிரெண்டு ஊர்களின் பெயர்களையும் அதன் சிறப்புக்களையும் பெருமைகளையும் கொண்டு இக்கட்டுரை அமைந்துள்ளது.

24. பொன்னியின் செல்வன் நாவலில் ஊர்ப் பெயர்கள்

த. கவிதா
முனைவர்ப்பட்ட ஆய்வாளர்
தமிழியல் துறை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
அண்ணாமலைநகர்

முன்னுரை

மனிதன் பிறந்து வளர்ந்த ஊர் சிறப்பு மிக்கதாய் இருக்கிறது. அவன் மறைந்தாலும் அந்த ஊர் சிறப்புற்றதாகவே இருக்கிறது. பொன்னியின் செல்வன் நாவல் வரும் செய்திகள் ஆயிரம் வருடத்துக்கு முற்பட்டவை. இந்நாவல் சோழர்களின் வரலாறு பற்றிய ஊர்கள் கூறுகிறது. ஒவ்வொரு ஊரும் ஒவ்வொரு சிறப்பு பெறுகிறது. பண்டைக் காலத்தில் இருந்த ஊர் பேர்களே தற்போது மாற்றம் பெற்று சுருக்கமாகவும் பல ஊர் பெயர்கள் அழைக்கப்படுகிறது. இந்நாவலில் இடம்பெறும் ஊர் பெயர்களும் அவற்றின் சிறப்புகளும் இக்கட்டுரையில் இடம்பெறுகின்றது.

பழையாறை

சோழர்களின் இடைக்காலத் தலைநகர் திருமாலுக்குரிய விணண்கரங்களும் உள்ளது. அந்த ஆலயங்களில் இசை வல்லுனர்கள் இனிய குரலில் தேவாரப் பாடல்களையும், திருவாய்மொழிப் பாசுரங்களையும் பாடுவார்கள்.

வீரநாராயணபுரம்

தொண்டை நாட்டுக்கும் சோழ நாட்டுக்கும் இடையில் உள்ள திருமுனைப்பாடி நாட்டின் தென்பகுதியில், தில்லைச் சிற்றம்பலத்துக்கு மேற்கே இரண்டு காத தூரத்தில் அலைகடல் போன்ற ஓர் ஏரி விரிந்து பரந்து கிடக்கிறது. அதற்கு வீரநாராயண ஏரி என்று பெயர். அது தெற்கு வடக்கில் ஒன்றரைக் காத நீளமும், கிழக்கு மேற்கில் அரைக்காத அகலமும் உள்ளது. காலப்போக்கில் அதன் பெயர் சிதைந்து இந்நாளில் 'வீராணத்து ஏரி' என்ற பெயரால் வழங்கி வருகிறது. இந்த ஏரியில் எழுபத்து நான்கு கணவாய்களின் வழியாகவும் தண்ணீர் குமுகுமுவென்று பாய்ந்து சுற்றுப்பக்கத்தில் நெடுந்தூரம் நீர் வளத்தைக் கொண்டிருக்கிறது.

கும்பகோணம்

இந்நாளில் கும்பகோணம் என்ற பெயரால் ஆங்கில அகராதியிலேகூட இடம்பெற்றிருக்கும் நகரம். அந்நாளில் குடந்தை என்றும் குடமூக்கு என்று வழங்கப்பட்டு வந்தது. புண்ணியஸ்தல மகிமையைப்பெற்றது.

சேவூர்

சேவூர் என்னுமிடத்தில் சோழ சைன்யத்துக்கும் பாண்டிய சைன்யத்துக்கும் பெரும் போர் நடந்தது. இறுதியில் பாண்டியர்கள் தோற்றார்கள்.

திருப்புறம்பயம்

குடந்தை நகருக்கு அரைக்காதம் வடமேற்கில் மண்ணியாற்றுக்கு வடகரையில் திருப்புறம்பயம் என்னும் கிராமத்துக்கருகில் ஒரு பள்ளிப் படைக்கோயில் இருந்தது. இது அந்தப் பிரதேசத்தில் நடந்த ஒரு மாபெரும் போரில் உயிர் நீத்த கங்க மன்னன் பிரிதிவீபதியின் ஞாபகமாக எடுத்தது.

தஞ்சாவூர்

சோழ குலத்தின் தலைநகரான தஞ்சைபுரி அந்த நாளில் சிற்ப சித்திரக் கலைக்குப் பெயர் பெற்றதாயிருந்தது. திருவையாற்றில் இசைக்கலையும், நடனக்கலையும், வளர்ந்தது போல் தஞ்சையில் சிற்ப சித்திரக் கலைகள் வளர்ந்து வந்தன. தஞ்சை அரண்மனையில் சோழ வம்சத்தின் பூர்வீக அரசர்களையும் அவர்களுடைய வாழ்க்கைச் சம்பவங்களையும் சித்தரிக்கும் காட்சிகள் உள்ளன.

உறையூர்

விஜயாலனுக்குப் பிற்பட்ட சோழ மன்னர்கள் பழையறையிலும், தஞ்சையிலும் வசித்த போதிலும் பூர்வீகச் சோழத் தலைநகர் உறையூர். உறையூருக்கு இன்னொரு பெயர் கோழி என்பதாகும். ஆகையால் சோழ மன்னர்கள் தங்களைக் 'கோழி வேந்தர்' என்று சொல்லிக் கொண்டார்கள்.

விருத்தாசலம்

விருத்தாசலம் அன்றைக்குத் திருமுதுகுன்றம் என்று அழைக்கப்பட்டது.

மழபாடி

சுந்தரமூர்த்தி சுவாமிகள் சோழ நாட்டு ஸ்தலங்களக்கு யாத்திரை செய்து கொண்டிருந்தபோது ஒரு நதியை கடக்க முயன்றபோது 'சுந்தரம் என்னை மறந்தாயோ' என்ற குரல் கேட்டது. இது இறைவனின் குரல் என்று உணர்ந்து, மற்றவர்களிடம் அருகில் கோயில் ஏதும் இருக்கிறதா என்று கேட்கிறார். அவர்களும் கொன்னை மரங்களின் மறைவில் மழபாடி கிராமத்து சிவன் கோயில் இருப்பதை அறிந்து இறைவனைப் போற்றிப் பாடினாராம்.

கோடியக்கரை

அக்காலத்தில் கோடியக்கரையில் கலங்கரை விளக்கம் உண்டு. அதன் உச்சியில் தீ மூட்டுவார்கள். அந்த ஜோதி எரிந்து கொண்டிருக்கும். கடலில் செல்லும் மரக்கலங்களுக்கு அது ''அருகில் நெருங்க வேண்டாம்!' என்று எச்சரித்துக் கொண்டிருக்கும். கோடியக்கரை ஓரத்தில் கடலில் ஆழம் கிடையாது. படகுகள் மட்டும் வரலாம். நாவாய், மரக்கலங்கள் வந்தால் தரை தட்டி உடைந்துவிடும்.

சுந்தரமூர்த்தி நாயனார் இந்த கோடியக்கரைக்கு வந்தாராம். காட்டின் மத்தியில் தன்னந்தனியே கோயில் கொண்டிருந்த குளக்கரைத் தரிசித்தார். அந்தோ இறைவா! இப்படி இந்தக் கடற்கரை காட்டின் மத்தியல் துணையின்றி தனியே இருந்தீரே? இருக்க வேறு இடமா இல்லை? இக்கொடியோனுடைய கண்கள் இந்த காட்சியையும் காண நேர்ந்ததே? என்று மனமுருகிப் பாடினார்.

அன்பில்

திருச்சிராப்பள்ளி ஜில்லா லால்குடி தாலுகாவில் அன்பில் என்ற பெயர் கொண்ட கிராமம் இருக்கிறது. இதை வடமொழியாளர் 'பிரேமபுரி' என்று மொழிபொய்த்துக் கையாண்டிருக்கிறார்கள். இவ்வூரில் செப்புத்தகடுகள் கிடைத்தன. அதில் சுந்தர சோழ சக்கரவர்த்தியின் 'மான்ய மந்திரி' யான அன்பில் அநிருத்தப் பிரமராயருக்குச் சக்கரவர்த்தி அளித்த பத்து வேலி நில சாஸனத்தைப் பற்றிய விவரங்கள் அந்தச் செப்பேடுகளில் செதுக்கப்பட்டிருந்தன.

திருக்கானாட்டுமுள்ளூர்

அக்காலத்தில் வட காவேரியாகிய கொள்ளிடமும் தென் காவிரியைப் போலவே புண்ணிய நதியாகக் கருதப்பட்டு வந்தது. துலா மாதத்தில் தினந்தோறும் கானாட்டு முள்ளூர் ஆலயத்தில் கோயில் கொண்டுள்ள சிவபெருமான் இடபாரூடராகக் கொள்ளிடக்கரைக்கு எழுந்தருளி ஸ்தானத்துக்கு வந்துள்ள பக்தர்களுக்குச் சேவை தருவது வழக்கம். அந்தக் கோயிலிலிருந்தும் பகவான் கருட வாகனத்தில் ஆரோகணித்துக் கொள்ளிடக் கரைக்கு எழுந்தருளுவார்.

மாமல்லபுரம்

பல்லவர்களின் தலைநகரம் காஞ்சிபுரம் மகேந்திரவர்மப்பல்லவரும், மாமல்ல நரசிம்மரும் உருவாக்கியதே மாமல்லபுரம். கடற்கரையோரத்தில் விளங்கிய அழகிய கற்கோவில், கற்களைப் பெயர்த்துக்கொண்டு வந்து கட்டப்பட்ட கோயில்.

நகரத்தின் நடுவே மூவுலகும் அளந்த பெருமாள் சயனித்திருக்கும் விண்ணகரக் கோயில் ஒன்றும் இருக்கிறது. திருமங்கையாழ்வார் இந்தக் கோயிலுக்கு வந்து

பெருமாளைத் தரிசித்து பக்தி வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும் தமிழ் பாடல்கள் பாடியுள்ளார். மாமல்லபுரம் செல்வம் கொழிக்கும் துறைமுகமாக விளங்கியது என்பதையும் பின்வரும் பாசுரத்தின் மூலம் நன்கு அறியலாம்.

"புலன்கொள் நிதிக்குவை யொடு
புழைக்கை மா களிற்றினமும்
நலங்கொள் நவமணிக் குவையும்
சுமந்தெங்கும் நான் றொசிந்து
கலங்கள் இயங்கும் மல்லைக்
கடல் மல்லைத் தலசயனம்
வலங்கொள் மனத்தாரவரை
வலங்கொள் என் மட நெஞ்சே!"

திருமங்கையாழ்வாரின் காலத்துக்குப் பிற்பட்ட நூறாண்டு காலத்தில் பல்லவ சாம்ராஜ்ய சூரியன் அஸ்தமித்துவிட்டது. கல்வியில் இணையில்லா காஞ்சி மாநகரின் சிறப்பும் குறைந்து விட்டது. 'கலங்கள் இயங்கும் கடல் மல்லை'யின் வர்த்தக வளமும் குன்றி வந்தது.

ஆனால் தமிழகத்துக்கு அழியாப் புகழ் அளிப்பதற்கென்று அமைந்த அந்த மாநகரத்தின் அற்புத சிற்பக் கலைகளுக்கு மட்டும் எந்தவிதக் குறைவும் நேரவில்லை. பாறைச் சுவர்களில் செதுக்கப்பட்ட சித்திர விசித்திரமான சிற்பங்களும், குன்றுகளைக் குடைந்து எடுத்து அமைத்த விமான ரதங்களும் முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னால் அவற்றை அமைத்த காலத்தில் விளங்கியது போலவே இன்றைக்கும் புத்தம் புதியனவாக விளங்கின.

முடிவுரை

இந்நாவலில் இடம்பெற்ற ஊர் பெயர்களும் அதன் சிறப்புகளும் வரலாற்று உண்மைகளைச் சுட்டுவதோடு அதன் தனித்தன்மையும், காரணமும் சுட்டப்பட்டுள்ளது. ஓவ்வோர் ஊரும் கோயில்களின் சிறப்பாலும் மன்னர்களின் பெயராலும் அமைந்துள்து. இந்நாவலில் வரும் ஊர் பெயர்கள் சோழ நாட்டில் உள்ளவையாகும்.

25. தொண்டியின் சிறப்பும் தலைவியின் வனப்பும்

பா.கவிதா,
முனைவர்பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
அழகப்பா பல்கலைக்கழகம்,
காரைக்குடி-3.

சங்கப்புலவர்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கை வாழ்ந்தவர்கள். முதல், கரு, உரிப்பொருள்களைக் கூறுவதன் வாயிலாக இயற்கைக் காட்சிகளை வருணிக்கும் திறமும் இயற்கைப் பொருள்களை உவமையாகக் கூறும் இயல்பும் சங்கப் புலவர்களிடையே காணும் தனிச் சிறப்பாகும். அவற்றுள் பெண்களின் எழில், நலம், உறுப்புகள் ஆகியவற்றைச் சிறப்பிப்பதற்கு நாடு, நகர், இயற்கை இடங்கள் ஆகியவற்றை உவமப் பொருளாக்கும் புதுமையைச் சங்கப்பாக்களில் அமைத்துப் பாடியுள்ளனர். சங்க இலக்கியத்தில் தலைவியின் நலனானது சேரனுடைய தொண்டி நகருடன் ஒப்பிட்டு உருக்காட்சிப்படுத்தப்பட்டுள்ளதையும் அதன்வழி, தொண்டி நகரத்தின் சிறப்பையும் ஆராய்ந்து வெளிக்கொணரும் முகமாக இக்கட்டுரை அமைகிறது.

தொண்டி:

சங்க காலத்தில் கிழக்குக் கரையிலும், மேற்குக் கரையிலும் இரண்டு தொண்டிப் பட்டினங்கள் இருந்துள்ளன. இரண்டும் துறைமுகப் பட்டினங்கள். ஒரு தொண்டி சேர நாட்டின் மேற்குக் கடற்கரையிலும் மற்றொரு தொண்டி பாண்டி நாட்டின் கிழக்குக் கடற்கரையிலும் இருந்துள்ளன என்பர் மயிலை.சீனி.வேங்கடசாமி. ஐங்குறுநூற்றில் நெய்தல் திணையைப் பாடிமி அம்மூவனார் 'தொண்டிப்பத்து' என்னும் தலைப்பில் பத்துச் செய்யுட்களைப் பாடியுள்ளார். இவர் பாடிய தொண்டி சேரநாட்டுத் தொண்டி நகரமாகும். இந்தத் தொண்டிப் புட்னம் கொங்கு நாட்டை அரசாண்ட பொறையர்களின் ஆட்சியிலிருந்ததாகத் தெரிகின்றது. பொறையர் சேர அரசர்களின் இளைய வழியினர். பொறையன் என்பது சேரர் குடிப்பெயர்களுள் ஒன்று. கொங்கு நாட்டை அரசாண்ட அவர்களுக்கு உள் நாடாகிய கொங்கு நாட்டில் துறைமுகப் பட்டினம் இன்மையால், சேர நாட்டுத் துறைமுகப் பட்டினமாகிய தொண்டியை வைத்திருந்தனர் என்று தோன்றுகிறது. இத்தொண்டி முதலில் நள்ளி என்னும் வள்ளலுக்கு உரியதாய்த் திகழ்ந்தது. (குறுந்.210).

சேரன் செங்குட்டுவனுடைய தம்பியாகிய (மாற்றாந்தாயின் மகன்) ஆடுகோட்பாட்டுச் சேரலாதன், வடக்கே தண்டாரணியத்திலிருந்து கொண்டு வந்த வருடைப் பசுக்களைத் தொண்டிக்குக் கொண்டு வந்து தானம் கொடுத்தான். இதனை,

"தண்டாரணியத்துக் கோட்பட்ட வருடையைத்
தொண்டியுட் டந்து கொடுப்பித்து" (பதிற்றுப். 6 ஆம் பத்து பதிகம்)

என்று கூறுகிறது. சங்க காலத்திலிருந்த பொய்கையார் என்னும் புலவர் இந்தத் தொண்டியில் வாழ்ந்தவர். (புறநா.48) தொண்டித் துறைமுகத்தில் அக்காலத்தில் யவன வாணிகர்கள் வந்து வாணிகம் செய்துள்ளனர். தாலமி (Ptolemy) என்னும் யவனர் இந்தத் தொண்டியைத் 'தைண்டிஸ்' (Tyndis) என்று கூறியுள்ளார்.

தொண்டியின் வளம்:

நெய்தல் நில ஊர்கள் பட்டினம், பாக்கம், குப்பம் என வழங்கப்படும். நெய்தல் நிலத்தைச் சார்ந்த தொண்டி, பட்டினம் என்று அழைக்கப்பட்டது. சங்க இலக்கியத்தில் தொண்டியின் வளமானது, பரதவர் பழம்படகைச் சரி செய்து கொண்டு புது வலையால் அரிதின் முயன்று தேடாமலே பிடித்திட்ட சுறாமீன்களை எல்லோர்க்கும் பகிர்ந்தளிக்கும் தொண்டி (அகநா.10:10-13) என்றும், கடலில் இறால்மீன் பிடித்துவரும் தந்தைக்கு, உப்பை விற்று வாங்கிய நெல்லை அரிசியாக்கி வெண்மையாக சமைத்த சோற்றில் அயிரைமீன் புளிக்குழம்புடன் உணவு கொடுக்கும் இடமாகிய சேரனது தொண்டி (அகநா.60:1-7) என்றும் குட்டுவனுடைய தெளிந்த அலைப் பரப்புடைய தொண்டி (அகநா.290:12-13) என்றும் அகநானூறு சேரனுடைய தொண்டியைக் கூறுகின்றது.

நற்றிணையில் சேர நாட்டுத் தொண்டி மூன்று இடங்களில் பதிவாகியுள்ளன. திண்ணிய தேரையுடைய சேரனின் தொண்டி (நற்.8:9) என்றும், கானற்சோலை சூழ்ந்த தொண்டி (நற்.18:4) என்றும், கல்லென்ற ஒலியையுடைய புள்ளினம் வாழும் கானற் சோலைகளையுடைய தொண்டி நகர் (நற்.195:5) என்றும் தொண்டியின் வளம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

சேரனுடைய தொண்டி மேற்குக் கடற்கரையில் அமைந்துள்ளது. அத்துறையின் கண் அயிரைமீன் மிகுதியும் கிடைக்கும் என்கிறார் பரணர் (குறுந்.128:2-3). தொண்டி நகரில் முழுவதுமாக விளைந்த வெண்ணெல் அனைத்தையும் கொண்டு சமைத்த சோறு (குறுந்.210:2-3) என்றும், பச்சை அவலை இடித்த கரிய வயிரம் பொருந்திய உலக்கையை நெற்கதிர் நிரம்பிய வயலினது வரப்பாகிய

அணையிலே படுக்க வைத்து ஒள்ளிய வளையையுடைய பெண்கள் விளையாடும்தொண்டி (குறுந்.238:1-4) என்றும் தொண்டி நகர் சிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடல் திரைகள் முழங்கும் இனிய ஓசையோடு முழவுமுழங்கும் இனிய ஓசையும் கலந்து தெருக்கள் தோறும் ஒலிக்கும். நெய்தல் மலர்களும் மணங்கமழும் நீர் முள்ளியின் நறிய மலர்களும் நிரம்பிய குளிர்ந்த துறையின்கண் வண்டுகள் ஒலிக்கும் சேரனுக்குரிய தொண்டித் துறையில் அலவன் தாக்கிடச் சுறாமீன் புரண்டிடும் இனிய ஒலி எழும் என்று, (ஐங்.171-180) ஐங்குறுநூற்றுத் தொண்டிப்பத்தில் தொண்டியின் வளங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

குலை தாழ்ந்தக் கோட்புக்க தெங்கினையும், அகன்ற கழனியையும், மலையாகிய வேலியையும், நிலாப்போன்ற மணலையுடைய அகன்ற கடற்கரையையும், தெளிந்த கழியிடத்துத் தீப்போலும் பூவினையுமுடைய குளிர்ந்த தொண்டி (புறநா.17:9-13) என்றும், கரிய கழியின்கண் மலர்ந்த நெய்தலானும், தேன்நாறா நிற்கும் கானலையுடைய தொண்டி (புறநா.48:3-4) என்றும் வருணிக்கப்பட்டுள்ளது.

தொண்டியைத் தலைவியின் நலனுக்கு ஒப்பிடல்

சங்க காலத்தில் இடம் விட்டு இடம் பெயர்ந்து ஒவ்வொரு மன்னனிடமும் உதவி பெற்று வாழ வேண்டிய நிலையில் கலைஞரும் புலவரும் இருந்துள்ளனர். அவர்கள் நாட்டு நடப்பையும், நிலையையும், நாட்டின் ஒவ்வொரு பகுதிக்குரிய சிறப்பையும் நன்கு அறிந்திருந்தனர். அவற்றைத் தம் பாடல்களில் திறமையாகப் பயன்படுத்தியுள்ளனர். அகப்பாடல்களில் தலைவியின் அழகு, நலன், சிறப்பு ஆகியவற்றைத் தமிழ் நாட்டின் சிறப்புமிக்க பகுதிகளின் எழிலோடு ஒப்பிட்டு உவமைப்படுத்திக் கூறியுள்ளனர். தலைவியின் பல், வாய், நுதல், தோள், கழுத்து போன்றவை இவ்வாறு உவமிக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் இடப்பற்று புலவர்கள் உள்ளத்தில் நிலைபெற்றது எனலாம்.

"கவிஞர்களின் நெஞ்சங்கவர்ந்த நகரங்கள், துறைமுகப் பட்டினங்கள், ஆறுகள் ஆகியவற்றின் எழில் நலப்பொலிவினைத் தலைவியின் அழகிய தோற்றத்திற்கு உவமை கூறுதல் சங்க இலக்கியத்தில் பயின்று வந்துள்ளது. தம்மை ஆதரித்த புரவலர் மனம் மகிழவும், அதன்வாயிலாகத் தம் உள்ளம் களிக்கவும் இந்த முறை தகுந்த வாய்ப்பினைப் புலவர்களுக்கு வழங்கியுள்ளது, அல்லது தாங்கள் பிறந்த ஊரைச் சிறப்பித்து மகிழ்வது புலவர்களின் நோக்கமாகவும் இருத்தல் கூடும்"[1] என்பார் மு.வரதராசனார்.

"தமிழ்நாட்டு இடங்களான மாந்தை, இருப்பை, தொண்டி, ஆர்க்காடு, தேனூர், கழாஅர், குடவாயில், குடநாடு, கழுமலம், அட்டவாயில், வஞ்சி, வேம்பி, குடந்தை ஆகியனவும், குன்றுகளான பாரிகுன்றம், கொல்லிமலை, பொதியில், நன்னன் பறம்பு போன்றவையும், கொற்கை போன்ற துறைமுகமும், காவிரி போன்ற நதியும் உவமப் பொருள்களாக நின்று பெண்களை, அவர்களின் எழிலைச் சிறப்பித்தன."[2] அவ்வகையில் சங்க அகப்பாடல்களில் தலைவியின் எழில் நலத்திற்குத் தொண்டி நகரை ஒப்பிட்டுள்ளனர். இதனை,

"வளம்கெழு தொண்டி அன்ன இவள் நலனே" (அகநா.10:13)
"திண்தேர்ப் பொறையன் தொண்டி அன்னஎம்
ஒண்தொடி" (அகநா.60:7-8)
"ஒண்தொடி மகளிர் வண்டல் அயரும்
தொண்டி அன்ன என் நலம் தந்து" (குறுந்.238:3-4)
"தொண்டி அன்ன பணைத்தோள்" (ஐங்.171:3)
"தொண்டித்,
தண்ணறு நெய்தல் நாறும்
பின்னிரும் கூந்தல்" (ஐங்.173:2-4)
"தொண்டி அன்னநின் பண்புபல கொண்டே" (ஐங்.175:4)
"தொண்டித்,
தண்கமழ் புதுமலர் நாறும் ஒண்தொடி" (ஐங்.176:1-2)
"முண்டக நறுமலர் கமழும்
தொண்டி அன்னோள்" (ஐங்177:3-4)
"இன்னொலித் தொண்டி அற்றே
நின் அலது இல்லாது இவள்சிறு நுதலே" (ஐங.179:3-4)
"துறைகெழு தொண்டி அன்ன இவள் நலனே" (ஐங்.180:4)

என்று சங்கப்புலவர்கள் தலைவியின் நலத்தோடு ஒப்பிட்டு உருக்காட்சிப் படுத்தியுள்ளனர். புணர்வின்பத்திற்குப் பேரூர்கள் உவமையாக வரக் காரணம் அவை கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்றறியும் ஐம்புல இன்பங்களுக்கும் இடனாக இருத்தல் என்பர். தொண்டி நகரத்திலும் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐவகை நிலவளங்களும் உண்டு. அதுபோல,

தலைவியிடத்திலும் ஐம்பொறிகளாலும் ஆரத்துய்க்கும் போக இன்பங்கள் உண்டு என்பது உவமையின் உட்பொருளாகும்.

"குறிப்பிட்ட ஒரு நாட்டின் இலக்கியத்தை ஊன்றிக் கவனித்தால் அவற்றில் அந்த நாட்டின் பகுதிகள், நகரங்கள், சிற்றூர்கள், பேரூர்கள் ஆகியன எந்த அளவு இடம் பெற்றிருக்கின்றன என்பதையும் அவற்றின் மூலம் அவ்வினத்தின் தனிப்பண்பும் தனித்தன்மைகளும் ஒளிவிடுவதையும் அறிய இயலும் என்பர்"[3] அவ்வகையில் சேரநாட்டுத் தொண்டியைத் தலைவியின் நலனுடன் ஒப்பிடும் வாயிலாக அந்நகரின் தொன்மை, வளம், சிறப்பு ஆகியவற்றையும் சேர்த்துப் புலவர்கள் காட்சிப்படுத்தியுள்ளனர்.

தொகுப்புரை:

★ சங்கப் புலவர்கள் பெண்களின் எழில் நலத்தைச் சிறப்பிக்க நாடு, நகர், இயற்கையிடங்கள் ஆகியவற்றை உவமையாக்கியுள்ளனர்.

★ சங்கப்புலவர்கள் தாங்கள் பிறந்த ஊர்களை முன்னிலைப்படுத்தவும் அல்லது தங்களை ஆதரித்த புரவலர்கள், அவர்களைச் சார்ந்த ஊர்கள் ஆகியவற்றைப் பெருமைப்படுத்தவும் இம்முறையினைக் கையாண்டுள்ளனர். இதன்மூலம் புலவர்களின் நாட்டுப்பற்றையும், நன்றியுணர்வையும் அறிந்துகொள்ள முடிகிறது.

★ சங்க காலத்தில் சேர நாட்டில் ஒரு தொண்டியும், பாண்டிய நாட்டில் ஒரு தொண்டியும் இருந்துள்ளன. இரண்டும் துறைமுகப் பட்டினங்கள்.

★ சங்கப் புலவர்களான அம்மூவனார், பொய்கையார் சேரநாட்டுத் தொண்டியைச் சேர்ந்தவர்கள்.

★ தொண்டி வாணிகத் தளமாக விளங்கியதைத் தாலமி குறிப்பிடுகிறார்.

★ தொண்டியில் பண்டமாற்று நடைபெற்றதை அறியமுடிகிறது.

★ தொண்டி நெய்தல் நிலத்தைச் சார்ந்திருந்தாலும் மருத வளமும் சிறப்புற்றிருந்ததைப் பாடல்கள் வழி அறிய முடிகிறது.

★ தொண்டி நகரை மகளிர்க்கு உவமைப்படுத்தும்போது அந்நகருக்கு உரிய பொறையன், குட்டுவன் என்று அரசனையும் இயைபுப்படுத்திப் பாடியுள்ளனர்.

சான்றெண் விளக்கம்:

1. மு.வரதராசனார், பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை, ப.488.
2. ப.கிருஷ்ணன், தமிழ் நூல்களில் தமிழ்மொழி, தமிழ் இனம், தமிழ்நாடு, ப.67.
2. ரெனிவெல்லாக், ஆஸ்டின் வாரன், இலக்கியக் கொள்கை, ப.65.

26. திருநெடுந்தாண்டகத்தில் இடம் பெறும் ஊர்ப் பெயர்கள்

முனைவர்.வே.கவிதா,
விரிவுரையாளர்,
இ.மா.கோ.யாதவர் மகளிர் கல்லூரி,
மதுரை.

முன்னுரை

ஐசவப் பெரியவர்களாகிய நாயன்மார்கள் பாடிய பாடல்களைப் பன்னிரு திருமுறைகள் என்று தொகுத்தது போல வைணவப் பெரியவர்களால் பன்னிரு ஆழ்வார்கள் பாடிய பாடல்களை நாலாயிரத்திவ்விய பிரபந்தம் என்று தொகுத்தனர். திருமாலிடம் ஆழமான பக்தி கொண்டு அப்பக்திப் பெருக்கிலே ஆழ்ந்து நின்றவர்கள் ஆழ்வார்கள் எனப்படுவார்கள். ஆழ்வார்கள் பன்னிருவர். இந்தப் பன்னிரு அழ்வார்களுள் திருமங்கை ஆழ்வார் பாடிய திருநெடுந்தாண்டகத்தில் இடம் பெறும் ஊர்ப் பெயர்களைப் பற்றி ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

திருமங்கையாழ்வார் பிறப்பு

திருமங்கை என்னும் பதியில் அவதரித்தமையால் இவ்வாழ்வார் இத்திருநாமம் ஏற்றார். இவரது பிள்ளைத் திருநாமங்கள் நீலன், கரியன், களிகன்றி, பரகாளன், ஆழிநாடன், குறையலூர்க்கோன் என்பன. சோழவள நாட்டில் சீர்காழிக்குக் கிழக்கே 10 கி.மீ. தொலைவில் உள்ள திருவாலி திமுநகரி என்னும் திவ்வய தேசத்திற்கு அருகில் உள்ள குறையலூரில் பிறந்தவர்.

ஐவணவர் மகளாகிய குமுதவல்லி என்பவரை மணந்து அவரின் விருப்பப்படி திருமாலின் அடியார்க்குத் தொண்டு செய்தார். செல்வம் குன்றிய போது வழிப்பறி செய்து தொண்டாற்றினார். ஒருமுறை திருமாலே மணக்கோலத்துடன் வந்த போது அவரிடம் வழிப்பறி செய்ய முற்பட்டார். செல்வத்தைக் கொள்ளையடித்துத் தூக்க முடியாமல் இருந்த போது நாராயணன் காட்சி கொடுத்த நாராயணன் மந்திரத்தைக் கையில் ஓதினார்.

இவரது காலம், பாசுரத் தொகுப்பு

திருமங்கையாழ்வார் பல்லவன் பணிந்த பரமேஸ்வர வின்னகரம் என்று பா பாடல்களில் குறித்துள்ளார் இவரே. நந்தி பணிசெய்த நகர் வின்னகரம் என்றும் கூறியுள்ளார். பரமேஸ்வரன் என்றும் நந்திவர்மன் என்றும் இரு பெயர்களைக் கொண்டவன் பல்லவ மன்னனே ஆவான். இம்மன்னனே காஞ்சியில் பரமேஸ்வர வின்னகரத்தை வைகுந்தப் பெருமான் கோயிலை அமைத்தான். இவ்வாழ்வார் பரமேஸ்வரன் என்ற பல்லவ மன்னன் காலத்தவர். இவர் திருஞானசம்பந்தர் காலத்தவர் என்னுறும் குறிப்பு காணப்படுகிறது.
மற்றும் இவர் கலியுகம் 398 ஆம் ஆண்டு அவதாரம் செய்தவர் என்றும் புராணக்குறிப்பு சாற்றுகிறது. இவரது காலம் கி.பி. 8 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி ஆகும். இத்திருநெடுந்தாண்டகம் 30 பாசுரங்களைக் கொண்டது.

திருநெடுந்தாண்டகத்தில் இடம்பெறும் ஊர்ப்பெயர்கள்

திருநெடுந்தாண்டகத்தில் இடம்பெறும் 30 பாசுரங்களுள் திருக்கோவிலூர், திருநீரகம், திருவேங்கடம், திருப்பேர்நகரம், திருக்கடல்மலை, திருக்கச்சிப்பதிகம், திருமாலிருஞ்சோலை, வடவேங்கம், திருமொழிக்களம், திருவரங்கம், திருங்குருங்குடி, திருக்கண்ணபுரம் திருவழுந்தூர், திருநரையூர், திருக்குடந்தை திருநீர்மலை, திருவின்னகர் முதலிய ஊர்ப் பெயர் இடம்பெறுகின்றன. பக்கம் வரையறை கொண்டு சில ஊர்ப் பெயர்களை மட்டும் விளக்கமாகக் காண்போம்.

திருவரங்கம்

திருவரங்கம் எனத் தியமும் கோயில் முதலில் பிரம்மனால் பெறப்பட்டுப் பின்பு அயோத்தி மன்னன் இச்சுவாகுவுக்கு கொடுக்கப் பெற்று எம்பெருமான்ன் அவதாரமான இராமநாதனை வணங்கப்பெற்றுப் பின்பு அப்பெருமானால் வீடணுக்குக் கொடுப்பபட்ட செய்தியுடன் கோயிலின் பெருமைகளும் கூறப்பட்டுள்ளன. இச்செய்திகளைக் கூறுவதற்கு முன்பாக இக்கோயிலை தன் வாழ்விடமாகக் கொண்ட அரங்கனை "ஆராத அருள் அமுதம்'' என்கிறார் சுவாமிதேசிகன் எம்பெருமான், திருவரங்கச் செல்வனாக அர்ச்சாவதாரத்தில் விலங்கியதின் முக்கிக் காரணமே அப்பெருமாள் உயிர்கள் மீது பொண்ட காரணமற்ற கருணையாம் அருள் என்பது கருத்து எக்காலத்திற்கும் யாருக்கும் தெவிட்டாத சுவையுடையது எம்பெருமானின் அருளமுதம்.
புகழ்பெற்றத் திருவரங்கம் என்ற ஊரினை திருநெடுந்தாண்டகத்தில் (2062, 2063, 2069,2070) ஆகிய 4 - இடங்களில் கையாண்டுள்ளார்.

பாவியான என்னுடை அழகிய மென் என் வார்த்தையைக் கேட்வில்லை.எம்பெருமானது திருமேனி காளமேகம் நிறுத்தது என்கிறாள். அவளது திருக்கண்களும் திருவாயும் திருக்கைகளும் திருவடி இரண்டும் தாமரைப் பூப் போன்ற நிறமுடையது என்கிறாள். அவர் பூமிப்பிராட்டி இட்ட வழக்காய் இருப்பவர் என்கிறாள். திருமகளுக்குப் பித்தர் என்கிறாள். அப்படிப்பட்ட திருவரங்கம் எங்குள்ளது, என்பதை

"ஏர்வண்ண எண்பேதை என்சொல் கேளாள்
ஏம்பெருமான் திருவரங்கம் எங்கே" என்னும்

என்று குறிப்பிடுகிறார்.

திருக்குடந்தை

உலகில் பல இடங்களில் செய்யும் பாவங்கள் புனிதத் தலங்களுக்குச் சென்றால் நீங்கும் என்றும், பல புனிதத் தலங்களில் செய்யும் பாவங்கள், காசிக்குச் சென்றால் நீங்கும் என்றும் காசியில் செய்யும் பாவங்கள் அக்குடந்தையில் தான் நீங்கும் என்றும் வேறு இடங்களுக்குச் செல்ல வெண்டியது இல்லை என்று கும்பகோண மகாத்மியம் என்ற நூல் கூறுகிறது.

இத்தகைய சிறப்பு பொருந்திய ஊரின் பெயரினை திருமங்கையாழ்வார் தன்னுடைய பாசுரத்தில் (2068,2080) 2 இடங்களில் கையாண்டுள்ளார்.

அதாவது திருவெண்ணகரில் பொருந்தி எப்போதும் காட்சித் தருபவரும், திருக்குடந்தையில் பள்ளிகொண்டிருப்பவரும் நெடியோனுமாகிய பெருமானை நாய்போல நீசனான அடியேன் நினைத்தேன் என்பதனை,

"நின்றானை தணக்குடந்தை கிடந்தமாலை
நேடியானை அடிநாயேன் நினைந்திடனேன"

ஏன்று குறிப்பிடுகிறார். இப்பாடலில் இறைவனுக்கு அடிமையானதைப் பற்றி விளக்குகிறார்.

திருநாறையூர்

திருநாறையூர் என்ற பெயரைக் கூறியவுடனேயே இனிமையும் நறுமணமும் இறை அன்பர்களின் உளத்தில் தோன்றுவது இயல்பு! ஆம்! நறை என்ற திருமளே தானே விரும்பி வருவதற்குக் காரணமான தேனை அல்லுது நறுமணத்தை உடைய ஊர் என்ற பொருளில் திருநாறையூர் என்ற பெயர் அமைந்துள்ளதாகக் கூறுவர். இத்தகைய ஊரினை (2067,2068) இரண்டு இடங்களில் கையாண்டுள்ளார்.

திருக்கண்ணபுரம்

'கண்ணபுரத்து அமுது' என்று பெரியாழ்வாராலும் 'கண்ணாபுரத்து என் கருமணி', திருக்கண்ணபுரத்து அரசே' என்று குலசேகராழ்வாராலும் 'கண்டவர்தம் மனம் வழங்கும் கண்ணாபுரத்து அம்மன்', கண்ணபுரத்து என் கனி' என்று திருமங்கையாழ்வாராலும் அழகுத் தமிழில் போற்றப் பெற்றத் திருக்கண்ணபுர எம்பெருமான் நிலைத்து வாழும் திருப்பதியே திருக்கண்ணபுரம் அகும்.

"சரணம் ஆகும் தனதாள் அடைந்தார்க்கு எல்லாம்
முரணம் ஆனால் வைகுந்தம் கொடுக்கும் பிரான்"
- திருவாய் - 9 -10- 5)

என்று நம்மாழ்வார் அருளி இருக்கிறார். இத்தலத்தின் சிறப்பினை ஆழ்வார் தன்னுடைய பாசுரத்தில் (2061,2078) என்ற இரண்டு இடத்தில் கையாண்டுள்ளார்.

திருவெ.ஃகா

வெ.ஃகாணைக் கிடந்து என்ன நீர்மையே என்று திருமழிசையாழ்வார் அருளிய வண்ணம்ஈ கிருஷ்ணாவரதத்தில் கண்ணனிடம் விளங்கிய எளிமைப்பண்பு, இத்தலத்து எம்பெருமானிடம் காணப்பெற்றதால் கண்ணன் வெ.ஃகா என்றார் நம்மாழ்வார். இத்தகைய தலத்தின் பெருமையினை திருமங்கையாழ்வார் (2059, 2065, 2066) மூன்று இடங்களில் கையாண்டுள்ளார்.

திருக்கோவிலூர்

'அன்று இவ்வுலகம் அளந்தாய் அடிபோற்றி' என்று ஆண்டாளின் போற்றுதலில் முதலிடம் பெற்றுத் திகழ்வது, எம்பெருமான் உலகு அளந்த வரலாறாகும். முற்றொரு பெருஞ் சிறப்பு இத்திவ்ய தேசத்திற்கு உண்டு. திருமால் இராமனாக அவதாரம் செய்தபோது, வேதங்கள் இராமாயணமாக அவதரித்தது போன்று தமிழ் வேதமாகிய நாலாயிரத்திவ்யப் பிரபந்தத்தை முதன் முதலாக இத்தலத்தில் இருந்து பெருபச் செய்ய எண்ணினான் எம்பெருமான், இத்தகைய எம்பெருமானின் பெருமையினை (2057, 2058, 2068) மூன்று இடங்களில் கையாண்டுள்ளார். இறைவனுடைய திருவடிகளைப் பாடி பெருகிவரும் வெள்ளத்தையுடைய பெண்ணையாறு இழுத்துக்

கொண்டு வரும் மூங்கில் முத்துக்களைவ யல்களில் கொண்டு தள்ள, பொன்னை விளைவிக்கும் இடமாயும் நீர்நிலைகளட சூழ்ந்துள்ள திருக்கோவிலூரைத் தொழுவோம் என்று குறிப்பிடும்போது இதன் பெருமையினைக் குறிப்பிடுவார்.

திருவூரகம்

திருமங்கை ஆழ்வார் காஞ்சியில் எழுந்தருளியுள்ள பெருமானைக் குறிக்கும்போது முதலில் அடைமொழி எதுவும் பெறாது 'நீரகத்தாய்' என்றார். அதே முறையில் "நிலாத்திங்கள் துண்டத்தாய்" என்றார். ஆனால். ஊரகத்து எம்பெருமானைக் குறிக்கும் போது 'நிறைந்த கூச்சி ஊரகத்தாய்" என்ற அடைமொழிகொடுத்து அருளியுள்ளமையால், மற்றவற்றைக் காட்டிலும் ஊரகம் பெற்றுள்ள தனிச்சிறப்பை அறியலாம். இத்தகைய சிறப்பினை இவர் தன்னுடைய பாசுரத்தில் (2054, 2064) இரண்டு இடங்களில் கையாண்டுள்ளார்.

திருவழுந்தூர்

எம்பெருமான் உகந்து எழுந்தருளியுள்ள நூற்றெட்டு, ஸ்ரீ வைணவத்திவ்ய தேசங்களில் சோழநாட்டுப் பதிகளில், பத்தாவதாக விளங்கும் பெருமை மிக்கதுதான் தேரழுந்தூர் என்று வழங்கப்படும் திருவழுந்தூர். இதனை, அழுந்தூர் என்றும் அழுந்தை என்றும் தென்னழுந்தை என்றும் இலக்கியங்களில் குறிப்பிடுகிறார்கள். இவ்வூரின் பெருமையை இவர் தன்னுடைய பாசுரத்தில் (2066, 2067) இரண்டு இடங்களில் கையாண்டுள்ளார். காஞ்சிபுரத்தில் எழுந்தருளியிருகக்கும் மத யானை போன்றவன் என்றும் கடல் கடந்த கனியே என்றும் நீர்வளம் நில வளமிக்க திருவழுந்தூரில் உவந்திருக்கின்ற சுவாமியே என்று குறிப்பிடும் போது

"அல்லியம்பூ மலர்ப் பொய்கை பழன வேலி
ஆணியழுந்தூர் நின்றகந்த அம்மான் என்றும்"

என்று குறிப்பிடுகிறார்.

முடிவுரை

நும்மால் காணமுடியாத திருப்பாற்கடலையும் திருப்பதமபதத்தையும் ஆழ்வார்கள் ஆச்சார்யர்களின் விளங்கிக்கொண்டு நேரில் காண்பது போன்ற நிலையை விளக்குவது திருநெடுந்தாண்டகத்தில் இடம்பெறும் ஊர்ப்பெயர்கள் ஆகும். மேற்சொல்லப்பட்ட ஊர்ப்பெயர்கள் மற்றுமின்றி திருப்போர்நகரம், திருக்கடல்மல்லை, திருக்கச்சி, திருமாலிருஞ்சோலை, திருமுழிக்களம், திருக்குறுங்குடிச காஞ்சிபுரம் போன்ற ஊர்ப் பெயர்கள் இடம்பெற்றுள்ளன.

27. ஊர்ப் பெயர்கள் - அன்றும் இன்றும்

முனைவர் **கே.கண்ணாத்தாள்**
இணைப் பேராசிரியர்,
தமிழ்த்துறை,
அழகப்பா அரசு கலைக்கல்லூரி,
காரைக்குடி - *630 003.*

மனிதன் வாழ்வு பண்பாட்டடிப்படையில் அமைந்துள்ள ஒரு கலைக்களஞ்சியம். பகுத்தறிவுக்குட்பட்ட பான்மையான வாழ்க்கை முறையை இறையருளாலும், விஞ்ஞானச் சிந்தனையாலும் செம்மைப்படுத்தத் தெரிந்துகொண்ட உயர்வான படைப்பு மனிதப்படைப்பு. ஒன்றோடு மற்றொன்றை வேறுபடுத்திக் காட்டுவதன் அடிப்படையில்தான் மனிதன் தனக்குப் பெயரிட்டு அழைக்கும் விந்தையை வெளிக்கொணர்ந்தான். அதேபோல தான் வாழும் இடங்கள், பறவைகள், விலங்குகள் எல்லாவற்றையும் காரண காரியங்களோடும், மரபுவழியாகவும், இடுகுறியாகவும் பெயரிட்டு அழைத்துத் தமது வாழ்க்கையை எளிமையாகவும் இயல்பாகவும் ஆக்கிக்கொண்டான்.

மனித நாகரிகம் வளர வளர, மக்களினம் பெருகியது போல வாழும் இடங்களும் பெருகின. அப்பெருக்கங்கள் வசதிகருதி பல பிரிவுகளாயின. ஆட்சியமைப்பு உருவாகியது. இதற்கெல்லாம் மனிதனுக்கு இட்டுக்கொண்ட பெயரும் ஊர்களுக்கு அவன் இட்ட பெயரும் உறுதுணையாய் அமைந்தன. ஆழ்ந்து சிந்தித்தால் மனிதகுலம் எவ்வளவு அருமையான வாழ்க்கையை மேற்கொண்டுள்ளது என்பது புரியும். அந்த வகையில் ஊர்களுக்குப் பெயரிடும் முறை எவ்வாறு தோன்றியது என்பதை அறியப் பழைய இலக்கியங்களை ஆதாரமாகக் கொள்ளலாம். இன்றுள்ள ஊர்களுக்குப் பெயர்கள் எவ்வாறு அமைந்துள்ளன என்பதைப் பழைய இலக்கியங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் பல உண்மைகள் வெளிப்படும். மேலும், ஊர்களுக்குப் பெயரிடும் முறையில் மனிதகுல வளர்ச்சியைப் போன்ற பரிணாம வளர்ச்சியையும் காணலாம்.

ஊர்

ஊர் என்ற சொல்லுக்கு 'ஊர்கை, கிராமம், இடம், ஊரிலுள்ளார், பரிவேடம்' என்ற பலபொருள்களை அகராதி சுட்டும். ஊர் என்ற சொல் பண்டைய இலக்கியங்களில் சிற்றூர், பேரூர், மூதூர் என்ற சொற்களால் குறிக்கப் பெறுகின்றன. இதிலிருந்து ஊர்களின் வகைகள் புலப்படுகின்றன. மக்கள் வாழும் இடம் சிறியதாக இருந்தால் சிற்றூர், பெரியதாக இருந்தால் பேரூர், பழைமையான ஊராக இருந்தால் மூதூர் என்று அழைத்திருக்கிறார்கள் எனக் கொள்ளலாம்.

ஊர் என்ற சொல் இடத்தைக் குறிக்கிறது. அதனால்தான் நாம் ஒருவரைப் பற்றி விசாரிக்கும்போது நீங்கள் எந்தவூர் எனக் கேட்கிறோம். ஊர் என்ற சொல் பொதுவாக இருப்பதால் பெயரில் தெளிவும், அறிதிறனும் கூடியிருக்க வேண்டும் என்பதற்காக ஊர் என்ற சொல்லோடு முன்னடைகள் சேர்த்துக் கொள்ளப்பட்டன.

இலக்கியச் சான்றுகள்

"ஊரூர் கொண்ட சீர்கெழு விழவினும்"
(திருமுருகாற்றுப்படை 160வது வரி)

"குறும்பல்லூர் நெடுஞ் சோணாட்டு"
(பட்டினப்பாலை 28வது வரி)

"அம்தண் கிடங்கின் அவன் ஆமூர்"
(சிறுபாணாற்றுப்படை 189)

"நீறுஅடங்கு தெருவின் அவன்சாறுஅயர் மூதூர்"
(சிறுபாணாற்றுப்படை 201)

"அறாஅ யாணர் அகன்தலைப் பேர் ஊர்"
(பொருநராற்றுப்படை 1)

இந்த அடிப்படையில் 'ஊர்' என்ற சொல்லோடு இணைக்கப்பட்டு பல ஊர்களுக்குப் பெயரிடப்பட்டுள்ளன என்பதை இன்றுள்ள ஊர்களின் பெயர்களை நோக்குமிடத்து உணரலாம். சான்றாக, திருவிடைமருதூர், திருப்பத்தூர், திருவெற்றியூர், ஆம்பூர், திருவாதவூர், குன்னூர், துகவூர், குச்சனூர், கண்ணனூர், கோட்டையூர், தஞ்சாவூர், மஞ்சூர், முத்தூர், செவ்வூர் பழுவூர், கரூர், கீரனூர்.

குடி

'குடி' என்ற சொல்லுக்கு 'பருகுகை, மதுபானம், குடியானவன், குடியிருப்போன், ஆட்சிக்குட்பட்ட குடிகள், குடும்பம், குலம், வீடு, ஊர், வாழ்விடம், புருவம்' எனப் பல பொருள்களைத் தமிழ் அகராதி குறிக்கிறது. குடியிருக்கும் ஊரைக் குறிப்பதாக 'குடி' என்ற சொல்லை இணைத்துப் பெயர் வைத்திருக்கும் மரபைத் தற்போதுள்ள ஊர்களின் பெயரை நோக்கும் போது உணரலாம். சங்க இலக்கியங்களில்,

"விலங்குபகை அல்லது கலங்குபகை அறியா
கொழும்பல்குடி செழும்பாக்கம்"
(பட்டினப்பாலை 26-27)

"குன்றகச் சிறுகுடி கிளையுடன் மகிழ்ந்து"
(திருமுருகாற்றுப்படை 196)

இவ்வாறு குறிக்கப்பட்டுள்ளது. குடி என்பது குடியிருக்கும் இடத்தையும், வளப்பம் மிகுந்த பல குடும்பங்கள் தங்கியுள்ள இடம் என்பதைக் 'கொழும்பல் குடி' என்ற சொல்லும், சில குடும்பங்கள் உறவினர்களோடு தங்கியுள்ள இடம் என்பதைச் சிறுகுடி என்ற சொல்லும் குறிக்கிறது. பிற்காலத்தில் 'குடி' என்ற சொல்லை இடம் என்ற பொருளில் எடுத்துக்கொண்டு ஊர்களுக்குத் தமிழர்கள் பெயர் வைத்திருக்கிறார்கள்.

சான்றாகச் சில ஊர்களைக் கீழே காணலாம்

பரமக்குடி, கருமந்தக்குடி, சிறுநாகுடி, அச்சங்குடி, குன்றக்குடி, விளாங்குடி, காரைக்குடி, சூரக்குடி, கண்ணங்குடி, பேச்சாத்தக்குடி, பெருங்குடி, பாப்பாகுடி, குறுந்தங்குடி, சிறுவேலங்குடி, மாங்குடி, கருங்குடி, கும்மங்குடி.

ஊர்களின் தன்மைக்கு ஏற்பவும், அமைப்புக்கேற்பவும், பெருமைக்கு ஏற்பவும் மேற்கண்ட பெயர்கள் அமைந்துள்ளன.

நகர்

நகர் என்ற சொல்லுக்கு 'வீடு, கோயில், நகரம், அரண்மனை, மருதநிலத்தூர், மனைவி' என்ற பொருள்களுண்டு. இச்சொல் பெரும்பான்மையாக, இடத்தைக் குறிப்பதாக (வீடு, கோயில், ஊர், அரண்மனை) அமைகிறது. சங்க இலக்கியங்களில் ஊரைக் குறிப்பதற்கு, குறிப்பாக அகன்ற பெரு நகரங்களைக் குறிப்பதற்கே 'நகர்' என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. உதாரணமாக

"நாற்பெருந் தெய்வத்து நல்நகர் நிலைஇய"
(திருமுருகாற்றுப்படை 160)

"முருகாற்றுப்படுத்த உருகெழு வியனகர்"
(திருமுருகாற்றுப்படை 244)

"நளிமலைச் சிலம்பின் நல்நகர் வாழ்த்தி"
(திருமுருகாற்றுப்படை 238)

"அந்தணர் அருகா அருங்கடி வியன்நகர்"
(சிறுபாணாற்றுப்படை 188)

"பல்மரம் நீள் இடைப்போகி நல்நகர்"
(பெரும்பாணாற்றுப்படை 368)

இவற்றைக் கூறலாம். தற்போதும் தமிழில் அகன்ற, விரிந்த வளர்ச்சியடைந்த நிலையில் உள்ள மக்கள் வாழும் இடங்களை நகரம் என்ற சொல்லால் குறிக்கிறோம். மதுரைநகரம், கோவை நகரம், சென்னை நகரம் எனக் குறிக்கப் பெறுகின்றன. அதோடு பெருநகரங்களில் உள்ள சிறுசிறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்ட இடங்களை நகர் என்கிறோம். திருநகர், அண்ணா நகர், திருவள்ளுவர் நகர், பொன்னகர், பிலோமினா நகர் என்ற பெயர்கள் தற்போது அதிகமாக வழங்கப்பெறுகின்றன.

பட்டினம், பாக்கம்

'பட்டினம்' என்பதற்குக் கடற்கரையூர் என்று பொருள். பாக்கம் என்ற பதத்திற்கு - மருதநிலத்தூர், அரசனிருக்கை, கடற்கரையூர், பக்கவூர் என்ற பல பொருள்கள் உண்டு. சிறுபாணாற்றுப்படையில்

"பனிநீர்ப் படுவின் பட்டினம் படரின்" (153)

என்று குறிக்கப்பட்டுள்ளது. நீர்சூழ்ந்த கடற்கரைப் பகுதியைக் குறிக்கிறது. அதே போல,

"விலங்குபகை அல்லது கலங்குபகை அறியா
கொழும்பல்குடிச் செழும்பாக்கம்"

(பட்டினப்பாலை *26-27*)

சோழநாட்டுச் சிறப்பைக் கூறும்போது குடிகளைக் கொண்ட பாக்கங்கள் என்று பட்டினப்பாலை கூறுகிறது.

தேங்காய்ப்பட்டினம், நாகப்பட்டினம், கோட்டைப்பட்டினம், அபிராமபட்டினம், காவிரிப்பூம்பட்டினம் இவ்வூர்கள் கடற்கரைப் பகுதியில் அமைந்தவை. மேலும், சேப்பாக்கம், கோடம்பாக்கம், விருகம்பாக்கம், ஆதம்பாக்கம் என்ற பெயர்கள் கடற்கரைப் பெருநகரங்களை ஒட்டி உள்ளே அமைந்துள்ள, மக்கள் வாழும் சிறுசிறு பகுதிகளைக் குறிக்கின்றன என்பதை நோக்கித் தெளியலாம்.

சேரி

'சேரி' என்பதற்குப் பொருள் காணுமிடத்து 'ஊரைச் சேர்ந்த ஊர்' என்று அறியப்பெறுகிறது. இதைப் பட்டினப்பாலை

"உறைகிணற்றுப் புறச்சேரி" (பட்டினப்பாலை *76*)

எனக் கூறுகிறது. ஊருக்குப் புறமாக அமைந்த பகுதி என்பதன் பொருளிலேயே கையாளப்பட்டுள்ளது. தற்போது தமிழ்நாட்டில் சேரி என்ற சொல் அதே பொருளில் பயன்படுத்தப்பட்டாலும், அச்சொல்லைக் கொண்ட ஊர்ப்பெயர்களும் உள்ளன. சிறுசேரி, வேளச்சேரி, கூடுவாஞ்சேரி, விளாச்சேரி, பெரும்பச்சேரி என்ற ஊர்கள் முன்பு ஊரைச் சேர்ந்த ஊர்களாயிருந்து, மக்கள் தொகைப் பெருக்கத்தால் தனி ஊர்களாக உருவாகியிருக்க வாய்ப்புண்டு.

முடிவுரை

தமிழர்கள் தாங்கள் வாழும் இடங்களுக்குப் பெயர்சூட்டி வாழ்ந்திருக்கிறார்கள் என்பதைச் சங்க இலக்கியங்களில் பத்துப்பாட்டு இலக்கியத்தை அடிப்படையாகக் கொண்டு அறியமுடிகிறது. பழந்தமிழர்கள் அமைப்பு, வளம், தன்மை இவற்றின் அடிப்படையில் ஊர்களுக்குப் பெயர் வைத்திருக்கிறார்கள் என்பதையும் ஆராய்வின் மூலம் கண்டுகொள்ள இயலுகிறது. மனித வாழ்க்கை என்பது 'போலச் செய்தல்' அடிப்படையில் அமைந்தது. நம்முன்னோர் உண்டது போல உண்டு, உடுத்ததுபோல உடுத்தித்தான் மனித இனம் வாழக்கற்றுக்கொண்டது. அதேபோல வாழும் இடங்களுக்குப் பெயர்வைப்பதில் முன்னோரைப் பின்பற்றி, தற்போது உள்ள சூழலுக்கு ஏற்பச் சில மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளனரேயொழிய முழுமையாக மாறவில்லை.

நம் பண்பாட்டு எச்சங்கள் நமக்குப் பெருமை அளிப்பவை. ஒவ்வொரு பகுதியாக நுண்மாண் நுழைந்து இலக்கியத்துறையில் நாம் செரிமானம் அடைந்தால் முன்னோரின் மாண்பு புரியும். இன்றைய மனிதனின் வளர்ச்சிபுரியும். இலக்கியங்கள் எல்லாவற்றிலும் அமைந்துள்ள ஊர்ப்பெயர்களை இந்நோக்கில் ஆராய்ந்தால் அன்றும் இன்றும் தமிழன் அந்நியப்பட்டுப் போகாமல் வாழ்கிறான் என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாய்ப் புலப்படும்.

28. சிறுபாணாற்றுப் படையில் - நல்லியக்கோடனின் ஊர்ச்சிறப்பு

து.கார்வேனி,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி, குற்றாலம்.

முன்னுரை

சங்க இலக்கியங்கள் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என்று அழைக்கப்படுகின்றன. பத்துப்பாட்டில் மூன்றாவதாத அமைவது சிறுபாணாற்றுப்படை ஆகும். சிறிய யாழினை இசைத்து வாழ்ந்த பாணனைப் பற்றிப் பேசும் பாடல்களால் அமைந்தது சிறுபாணாற்றுப் படை ஆகும். சிறுபாணாற்றுப் படையின் பாட்டுடைத் தலைவன் ஒய்மானாட்டு நல்லியக் கோடன் ஆவான். அவன் ஆட்சி செய்த ஊர்களின் சிறப்பை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

நல்லியக்கோடன்

சிறுபாணாற்றுப் படையின் பாட்டுடைத் தலைவன் நல்லியக்கோடன். இவனை நல்லூர் நத்தத்தனார் என்ற புலவர் புகழ்ந்து பாடியுள்ளார். ஓவியர் குடி என்னும் அரசர் குடியில் பிறந்தவன். ஒய்மா நாட்டின் அரசன் எயிற்பட்டினம், மாவிலங்கை, கிடங்கில் முதலிய ஊர்கள் இவனுக்கு உரியனவாக இருந்தன. ஆகவே எயிற்பட்டின நாடன், மாவிலங்கை மன்னன், கிடங்கில் கோமன் என்று போற்றப்படுகிறான்.

"தொன்மா விலங்கைக் கருவொடு பெயரிய
நன்மா விலங்கை மன்னருள்ளும்
மறுவின்றி விளங்கிய வடுவில் வாய்வாள்
உறுபுலித் துப்பின் ஓவியர் பெருமகன்" (சிறுபாணாற்றுப்படை – 120-122)

என்று புகழப்படுகின்றான்.

நல்லியக்கோடனின் சிறப்புகள்

செய்நன்றி மறவாத்தன்மை உடையவன், அறிவும், ஒழுக்கமும் இல்லாத சிற்றினத்தாரோடு சேராதத் தன்மை உடையவன், அகத்திலும், புறத்திலும் நல்ல குணங்களை உடையவன் என அறிஞர்களால் பாராட்டப்படுபவன்.

வீரத்தைக் கண்டு பணிந்தவர்களுக்கு அருள் செய்யக்கூடியவன். போரில் தன் வீரர்கள் தோற்று ஓடி வந்தால் "அழிபடை தாங்கலும்" (சிறுபாணாற்றுப்படை – 211) என படையைத் தடுத்து நிறுத்திப் பகைவரை வெற்றிக் காண்பவன் என படை மறவர்களால் பாராட்டப்பட்டவன்.

"வரிசை அறிதலும் வரையாது கொடுத்தலும்
பரிசில் வாழ்க்கைப் பரிசிலர் ஏத்த" (சிறுபாணாற்றுப்படை – 217,218)

என பரிசிலரின் தகுதி அறிந்து வாரி வழங்கும் வள்ளல் தன்மை உடையவன்.

"பல்மீன் நடுவண் பால் மதிபோல" (சிறுபாணாற்றுப்படை – 219)

என வெண்மையான ஒளிவீசும் முழுநிலவு போன்று, இயல், இசை, நாடகங்களில் சிறந்து விளங்கும் கூட்டத்ததாரின் நடுவே வீற்றிருப்பான் எனப் பல்வேறு சிறப்புகளை உடையவன் நல்லியங் கோடன்.

அரசாண்ட ஊர்கள்

நல்லியக்கோட்ன் எயிற்பட்டினம், மாவிலங்கை, கிடங்கில் முதலிய ஊர்களை ஆட்சி செய்தான்.

எயிற்பட்டினம்

எயிற்பட்டினம் என்பது கிழக்குக் கடற்கரை ஓரமாக இருந்த ஒரு துறைமுகப் பட்டினமாகும். எயிற்பட்டினத்தைச் சுற்றி மதிற்சுவர் கோட்டையாக அமைந்திருந்தது. ஆகவே இது எயிற்பட்டினம் என்று அழைக்கப்பட்டது. சோ என்றாலும் மதில் என்ப பொருள்படும். எனவே எயிற்பட்டினம், சோ பட்டினம் என்றும் அழைக்கப்பட்டது.

"பாடல் சான்ற நெய்தல் நெடுவழி
மணிநீர் வைப்பு மதிலோடு பெயரிய
பனிநீர்ப் படுவிற் பட்டினம்" (சிறுபாணாற்றுப்படை – 151-153)

என்று எயிற்பட்டினம் பற்றியச் செய்தி காணப்படுகிறது.

பண்டைக் காலத்தில் இருந்த எயிற்பட்டினம் இப்போது மறைந்துவிட்டது. அந்த இடத்தில் இப்போது 'மரக்காணம்' என்னும் எழுத்துக்கள் காணப்படுகின்றன. இந்தச் சாசனங்களிலே 'ஒய்மா நாட்டுப் பட்டின நாட்டு மரக்காணம்' என்றும் 'பட்டின நாட்டு எயிற்பட்டினம்' என்றும் இவ்வூர் கூறப்படுகிறது. இலக்கண விளக்கப் பரம்பரை சோமசுந்தர தேசிகர் அவர்கள் இப்போதைய

கூடலூர்தான் பழைய எயிற்பட்டினம் என்று கருதுகிறார். இவரது கூற்று ஏற்றுக் கொள்ளப்பட தக்கதாக இல்லை. (Identification of sopatama by S.S.Desikan, P.P. 129-140, quarterly Journal of the Mythic Society, Vol. XXI). கூடலூர் துறைமுகம் பிற்காலத்திலே, ஐரோப்பிய வர்த்தகர்களால் அமைக்கப்பட்டட எயிற்பட்டினம் என்று கூறுவது தவறான கருத்தாகும்.

யவனராகிய கிரேக்கர் கி.மு. முதல் நூற்றாண்டிலிருந்து கி.பி. இரண்டாம் நூற்றாண்டு வரையில் தமிழகத்துடன் வாணிபம் செய்தனர். கிரேக்க நூலாசிரியர்கள் தமிழ்நாட்டிலிருந்த அக்காலத்துத் துறைமுகப் பட்டினங்களைப் பற்றியும் எழுதி இருக்கிறார்க்ள. அவற்றுள் சோ பட்டினமாகிய எயிற்பட்டினமும் குறிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு எயிற்பட்டினம் பற்றிய குறிப்புகள் இலக்கியங்களில் காணப்படுகின்றன. இத்தகைய எயிற்பட்டினத்தை சிறுபாணாற்றுப்படையின் பாட்டுடைத் தலைவனான நல்லியக்கோடன் ஆட்சிச் செய்திருக்கிறான் என்பதனை சிறுபாணாற்றுப்படையின் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது.

மாவிலங்கை

நல்லியக் கோடன் ஓவியர் குடி என்னும் அரசர் குடியில் பிறந்தவன். ஓவியர் நாகரினத்தில் ஒரு பிரிவினர் 'மாவிலங்கை' என்னும் நகரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்து வந்தனர். இந்த மாவிலங்கை இப்பொழுது தென்னார்க்காடு மாவட்டத்தில் மேல் மாவிலங்கை, கீழ் மாவிலங்கை என இரு ஊராக உள்ளது. மாவிலங்கை புனல் நாட்டுக்கு வடக்கே உள்ள அருவா நாடும், அருவா வடதலை நாடும் சேரும் இடத்தில் உள்ளது என்கின்றார் உ.வே. சாமிநாதர்.

கடற்கரை ஓரமாக நீரும் நிலமாக அமைந்த இடம் இலங்கை என்று பெயர் பெறும். ஆறுகள் கடலில் கலக்கிற இடத்தில் கிளைகளாகப் பிரிந்து இடையிடையே நீரும், திடலுமாக அமைவது உண்டு. அன்றியும் 'காயல் என்னும் பெயருள்ள நீர்தேக்கமும் கடற்கரை ஓரமாக அமைவது உண்டு. இவ்வாறு நீரும் திடலுமாக அமைந்த இடத்தை லங்கா (இலங்கை) என்று ஆந்திர நாட்டவர் இன்றும் அழைப்பதைக் காண முடிகின்றது. நீரும், திடலுமாக அமைந்திருந்த பட்டின நாடு 'மாவிலங்கை' என்றும் பெயர் பெற்றிருந்தது. இப்போதும் ஓய்மா நாட்டு மாவிலங்கைப் பகுதியில் ஏரிகளும், ஓடைகளும், உப்பளங்களும் காண்படுகின்றன. இவ்வாறு 'மாவிலங்கை' என்ற ஊர் இலக்கியங்களில் குறிப்பிடப்பபட்டுள்ளது.

கிடங்கில்

சங்க இலக்கியத்தில் அறியப் பெறும் ஊர்களில் ஒன்றாகும். இவ்வூர் இன்று தென்னார்க்காடு மாவட்டத்தைச் சார்ந்த 'திண்டிவனம்' என்னும் நகரமேயாகும் என்று ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். சிறுபாணாற்றுப் படை நல்லியக்கோடனின் ஆட்சிக்குட்பட்டதாக அன்று இவ்வூர் விளங்கியது. 'கிடங்கில்' என்ற பெயரைப் பார்க்கும் போது இவவூர் 'அகழ்' சூழ்ந்ததாக இருந்திருக்கலாம் என அறியமுடிகின்றது. சிறுபாணாற்றுப்படையின் ஆசிரியர் நல்லியக்கோடனைக் குறிப்பிடும் போது 'கிளை மலர்ப் படப்பபைக் கிடங்கில் கோமான் "(சிறுபாணாற்றுப்படை -160) என்று குறிப்பிடுகின்றார். நத்தத்தனார் இதனால் கிடங்கில் என்னும் ஊர் மலர்கள் நிறைந்த வளமான படப்பைகள் சூழ்ந்தது என்பதனை அறிய முடிகின்றது.

கடல் ஓரமாக நெய்தல் நிலத்திலே இருந்த எயிற்பட்டினத்துக்கு மேற்கே குறிஞ்சி நிலத்திலே நல்லியக்கோடனுடைய 'கிடங்கில்' என்னும் ஊர் இருந்ததாகச் சிறுபாணாற்றுப்படைக் கூறுகின்றது.

பிற செய்திகள்

ஓவியர் குடியில் தோன்றிய நல்லியக்கோடன் ஒய்மான் நாட்டைக் கைப்பற்றி ஆண்டதால் ஓய்மான நாட்டு நல்லியக்கோடன் எனப் பெயர் பெற்றான். ஒய்மான் நாடு திண்டிவனத்திற்கு வடக்கிலுள்ள மாவிலங்கையை வட எல்லையாகவும், கடலை தென் எல்லையாகவும், சூணாம் பேடு என்னும் ஊரை அடுத்துள்ள வில்லிபாக்கத்தைக் கிழக்கெல்லையாகவும் ஏறத்தாழ விழுப்புரத்தை மேற்கெல்லையாகவும் கொண்டது என மா.இராச மாணிக்கனார் குறிப்பிடுகின்றார்.

நல்லியக்கோடனின் ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகளாக வேலூர், ஆமூர் என்னும் ஊர்களும் இருந்தன என்பதை சிறுபாணாற்றுப்பபடை வழி அறிய முடிகின்றது.

முடிவுரை

சிறுபாணாற்றுப்படையின் மூலம் நல்லியக்கோடனின் ஆட்சி செய்த எயிற்பட்டினம், மாவிலங்கை, கிடங்கில் ஆகிய ஊர்களைப் பற்றிய செய்திகளை அறிய முடிகின்றது. இவ்வூர்களைப் பற்றிய செய்திகளை இன்று நாம் அறிந்து கொள்ளுவதற்கு சங்க இலக்கிய நூல்களே சான்றாக அமைகின்றது.

29. அகநானூற்றில் ஊர்ப்பெயராய்வு

வா. காருண்யா,
துணைப் பேராசிரியர்,
தமிழாய்வுத் துறை,
புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி.

முன்னுரை

பழங்காலத்தில் ஒரு குன்றும் அதனைச் சார்ந்த ஊர்களும் ஓர் அரசனால் ஆளப்படும். ஓர் ஆற்றுச்சமவெளியும் அதனைச் சார்ந்த பல ஊர்களும் பிறிதொருவன் ஆட்சிக்குட்பட்டிருக்கும் .சேர ·சோழ பாண்டிய மன்னர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்த ஊர்களைப் பற்றி அகநானூற்றுப் பாடல் வழி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கொற்கை

பாண்டியர்களுக்கு உரியது கொற்கை ஆகும். 'சோழ நாடு சோறுடைத்து', 'பாண்டிய நாடு முத்துடைத்து' என்பதற்கேற்ப பாண்டிய நாட்டின் துறைமுகமாக கொற்கைப் பட்டினம் விளங்கியது. போரில் வெற்றி பெறுவதற்கு பாண்டியனுக்கு உறுதுணையாக படை பலம் மிகுந்திருந்ததை அகநானூற்றுப் பாடலடிகள் மெய்ப்பிக்கின்றன.

" அவிர் எழில் நுடங்கும் அணிகிளர் ஓடை
வினைநவில் யானை விறற்போர்ப் பாண்டியன்
புகழ்மலி சிறப்பின் கொற்கை முன்துறை
அவிர்கதிர் முத்தமொடு வலம்புரி சொரிந்து" (அகம்-201)

என்பதன் மூலம் ஒளியுடைய முத்துக்களும், வலம்புரிச் சங்கும் நிறைந்த வளத்தினைப் பெற்றது இத்துறைமுகம் என்பதை அறிய முடிகிறது. மேலும்,

"வாயிலோன் வாழி எம் கொற்கை வேந்தன் வாழி" (சிலம்பு–30)
"நற்றிறம் படராக் கொற்கை வேந்தே" (சிலம்பு–66)

என்ற கண்ணகியின் கூற்று வாயிலாக, கொற்கை பாண்டியர்களுக்கு உரியது என்பதை அறிய முடிகிறது. 'பாண்டிய நாடு முத்துடைத்து' என்ற கூற்றை மெய்ப்பிக்கும் வண்ணம் பாண்டிய நாட்டு வளத்தினை இளங்கோவடிகள்,

"தண் செங்கழுநீர்த் தாது விரி பிணையல்
கொற்கையம் பெருந்துறை முத்தொடு பூண்டு" (சிலம்பு–79,80)

என்று கூறுவதிலிருந்து பூமாலையோடு கொற்கைத் துறையில் முத்துக்கள் மிகுதியாக இருந்தமையைப் புலப்படுத்துகிறது. மேலும்,

"யாமுடைச் சிலம்பு முத்துடை அரியே
தருகெனத் தந்து தான்முன் வைப்ப" (சிலம்பு–70,71)

என்ற பாண்டிய மன்னனின் கூற்று, கோப்பெருந்தேவியின் சிலம்பு முத்தினால் செய்யப்பட்டு இருப்பதையும் உணர்த்துகின்றது. தலைச்சங்கக் காலத்தில் கொற்கைப் பட்டினம் இருந்துள்ளது. இயற்கைச் சீற்றத்தால் கடல்கோள் காரணமாக கொற்கைப் பட்டினம் அழிந்தது. தற்காலத்தில் 'கொற்கை' என்னும் ஊரின் பெயர் புழக்கத்தில் இல்லை.

காவிரிப்பூம்பட்டினம்

சோழர்களின் குடிச்சிறப்பினையும், பெருமையினையும் கொண்டது புகார் நகரம். நீர் வளமும், நில வளமும், படை பலமும் ஒருங்கே அமையப்பெற்றனவாக இப்புகார் நகரம் திகழ்ந்தது என்பதை அகநானூற்றுப் பாடலடிகள் எடுத்துரைக்கின்றன.

"வளங்கெழு கோசர் விளங்குபடை நூறி
நிலம் கொள வெ·.கிய பொலம்பூண் கிள்ளி
பூவிரி நெடுங்கழி நாப்பண் பெரும்பெயர்க்
காவிரிப் படப்பைப் பட்டினத் தன்ன" (அகம்-201)

இவ்வடிகள் சோழன் நலங்கிள்ளி கோசர்களை அழித்த வெற்றிச்சிறப்பையும் பெருமையையும் வளத்தினையும் புலப்படுத்துகிறது.

ஆத்தி மாலை அணிந்த சோழ மன்னனின் பெருமைக்குரிய பழம் பெரும் ஊர்களில் ஒன்று புகார் என்னும் பூம்புகார் நகரம்.

"ஆரங்கண்ணிச் சோழன் மூதூர்
பேராச் சிறப்பின் புகார் நகரத்துக்" (சிலம்பு–12,13)

" பொதுஅறு சிறப்பின் புகாரே ஆயினும்
நடுக்கு இன்றி நிலைஇய என்பது அல்லதை
ஒடுக்கம் கூறார் உயர்ந்தோர் உண்மையின்
முடித்த கேள்விய முழுதுணர்ந் தோரே" (சிலம்பு–16-19)

என்பது நடுவுநிலை பிறழாத சான்றோர் வாழும் சிறப்புடையது பூம்புகார் ஆகும். இது நீதி தவறாத சோழரின் குலச்சிறப்பினையும், குடிச்சிறப்பினையும் வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

"பீடுகெழு சிறப்பின் பெரியோர் மல்கிய
பாடல் சால் சிறப்பின் பட்டினப்பாக்கமும்" (சிலம்பு-57,58)

சான்றோர்களாகிய பெரியோர்கள் நிறைந்து வாழும் பெருமை உடையது பட்டினப்பாக்கம். 'சோழ நாடு சோறுடைத்து'என்ற கூற்றினை மெய்ப்பிக்கும் விதமாக அகநானூற்றுப் பாடல் அமைந்துள்ளது.

". . . . . .சோழர்
வெண்ணெல் வைப்பின் நல்நாடு பெறினும்" (அகம்-201)

என்ற அடிகள் நீர் வளமும், நெல் விளைச்சலும் மிகுதியாகக் கொண்ட ஊர்களையுடைய நல்ல நாடு சோழர்களுடையது என்பதை இளங்கோவடிகள்,

". . . . . தாங்கா விளையுள்
காவிரி நாடும் காட்டி" (சிலம்பு-30,31)

என்கிறார். வற்றாத செல்வவளம் கொழிக்கும் காவிரி சூழ்ந்தது சோழநாடு. வெண் சங்கினையும், முத்துக்களையும,ள் பூத்துக்குலுங்கும் ஆம்பல் மலரினையும் கொண்ட வளமுடையது காவிரிப்பூம்பட்டினமாகும்.

". . . . . .வெள்ளைப்
புரிவளையும் முத்தும் கண்டு ஆம்பல்
பொதி அவிழ்க்கும் புகாரே எம் ஊர" (சிலம்பு)

அலை மிகுந்த கடலானது தன்னிடம் உள்ள வெண்முத்துக்களைக் கொண்டு வந்து கரையிலே கொட்டி விட்டு, அதற்கு மாற்றாகப் பூமாலைகளைப் பெற்றுக் கொண்டு வணிகர் போல் மீண்டு செல்லும் வளமிகுந்த பண்டமாற்றும் வாணிப நகரமாக காவிப்பூம்பட்டினம் விளங்கியதை,

"வீங்கு ஓதம் தந்து விளங்கு ஒளிய வெண்முத்தம் விரைசூழ் கானல்
பூங்கோதை கொண்டு விலைஞர் போல் மீளும் புகாரே எம் ஊர்" (சிலம்பு-27,28)

இவ்வடிகள் சுட்டிக்காட்டுகின்றன. சங்ககாலத்தில் புகழ் பெற்று விளங்கிய காவிரிப்பூம்பட்டினம் தற்காலத்தில் தஞ்சை அருகில் 'பூம்புகார' என்ற பெயரிலேயே இன்றும் சங்க காலத்தினை நினைவூட்டுவதாக அமைந்துள்ளது.

சிறுகுடி

காவிரியின் வடக்குப் பக்கத்தே அமைந்துள்ளது சிறுகுடி என்னும் ஊர். இவ்வூர் 'வாணன் சிறுகுடி' என்று அழைக்கப்பட்டது. சோழர் மரபில் வந்த வாணனின் சிறிய குடியிலுள்ள சோலை போன்ற வளமுடைய ஊராகும்.

"வெண்ணெல் அரிநர் மடிவாய்த் தண்ணுமை
பல்மலர்ப் பொய்கைப் படுபுள் ஓப்பும்
காய்நெல் படப்பை வாணன் சிறுகுடித்" (அகம்-204)

வாணனது இவ்வூர் பொய்கைகளும், சோலைகளும் சூழ்ந்தது. என்றும் நீங்காத புதுவருவாயை உடையது. நீர்வளம் நிறைந்த நெல் வயல்களை கொண்டது.

"பொய்கை சூழ்ந்த பொய்யா யாணர்
வாணன் சிறுகுடி" என்பதும் (அகம்-117)
"பெருநீர்க் கானல் தழீஇய இருக்கை

வாணன் சிறுகுடி வணங்குகதிர் நெல்லின்
யாணர்த் தண்பணைப் போதுவாய் அவிழ்ந்த'' (அகம்-269)

என்பதும் சான்றாக அமைகின்றது. கடற்கரைச் சோலை சூழ்ந்தது. வளைந்த நெற்கதிர்களைக் கொண்ட நீர்வளம் மிக்க வயல்களையுடையது. 'சிறுகுடி' என்ற ஊர்ப்பெயர் தற்போதும் வழக்கில் இருந்து வருகின்றது.

கழாஅர்

'கழாஅர' என்னும் ஊர் சோழநாட்டில் உள்ளதாக அறியப்படுகிறது. வளமுடைய சோழநாட்டில் மக்களின் குடிச்சிறப்பினை உணர்த்தும் விதமாக,

"முழவுமுகம் புலராக் கலிகொள் ஆங்கண்
கழாஅர்ப் பெருந்துறை விழவின் ஆடும்'' (அகம்-222)

அமையப்பெற்ற இவ்வூரில் இடைவிடாது முழவொலி கேட்கும் ஆரவாரம் மிகுந்திருப்பதையும், விழாக்கள் நடைபெறுவதையும் புலப்படுத்துகிறது. மேலும், மத்தி என்பவன் 'கழாஅர' என்னும் ஊருக்கு உரியவன். இதனை அகநானூற்றுப் பாடல் மூலம் அறியலாம்.

''வல்வில் எறுழ்த்தோள் பரதவர் கோமான்
பல்வேல் மத்தி கழாஅர் முன்துறை
நெடுவெண் மருதொடு வஞ்சி சாஅய
விடியல் வந்த பெருநீர்க் காவிரி'' (அகம்-269)

என்ற அடிகள் காவிரியின் நீர்ப்பெருக்கை உணர்த்தி ஊரின் வளத்தை எடுத்துக்காட்டுகின்றது. இவ்வூரை ஆட்சி செய்யும் மத்தி என்பான் பரதவர்களுக்கு தலைவனாகவும் படைச்சிறப்பும், கொடைச்சிறப்பும் உடையவன் என்பதிலிருந்து கழாஅர் ஊரின் பெருமையை அறிய முடிகிறது. இதனை ஐங்குறுநூற்றுப் பாடலில்,

"நறுவடி மாஅத்து விளைந்து உகுதீம் பழம்
நெடுநீர்ப் பொய்கைத் துடுமென விழூஉம்
கைவண் மத்தி கழாஅர் அன்ன'' (ஐங்குறுநூறு-61)

அடிகள் மத்தி வள்ளலின் கழாஅர் என்னும் ஊர் மிகுதியான மரங்களையும், பொய்கைகளையும் கொண்ட அழகிய ஊராக காட்சியளிப்பதை சித்திரிக்கின்றது. 'கழாஅா'ள் என்னும் ஊர் தற்காலத்தில் புழக்கத்தில் இல்லை.

உறந்தை

சோழர்களுக்கு உரிய ஊர்களில் ஒன்றாகக் காணப்படுவது உறந்தை ஆகும். இவ்வூர் சோழநாட்டின் சிறப்பான நீர்வளம், நெல்விளைச்சல் பற்றி எடுத்துரைப்பனவாக அமைகின்றன.

"விளைகழை பிழிந்த அம்தீம் சேற்றோடு
பால்பெய் செந்நெற் பாசவல் பகுக்கும்
புனல்பொரு புதவின் உறந்தை எய்தினும்'' (அகம்-237)

செந்நெல் விளையும் வயல்களைக் கொண்ட இவ்வூர் பகுத்தளிக்கும் வள்ளல்கள் வாழும் செல்வம்மிக்க ஊராகத் திகழ்ந்தது. இவ்உறந்தையின் சிறப்பினை இளங்கோவடிகள்,

"மாட மதுரையும் பீடுஆர் உறந்தையும்
கலிகெழு வஞ்சியும் ஒலிபுனல் புகாரும்'' (சிலம்பு-3,4)

சிலம்பின் வழியாக மூவேந்தர் ஆட்சி செலுத்திய தமிழகத்தில் சேர, சோழ, பாண்டிய நாடுகளின் பெருமையைக் கூறும் போது சோழருக்குரிய உறந்தை ஊரினைக் குறிப்பிட்டு எடுத்துரைப்பது தனிச்சிறப்பாகும். மேலும்,

"மாதவத்து ஆட்டியும் மாண்புற மொழிந்து ஆங்கு
அன்று அவர் உறைவிடத்து அல்கினர் அடங்கி
தென்திசை மருங்கில் செலவு விருப்புற்று'' (சிலம்பு)

என்ற சிலம்பின் அடிகள் கோவலன் கண்ணகி கவுந்தியடிகள் ஆகிய மூவரும் உறந்தையைக் கடந்து மதுரை மாநகர் நோக்கி பயணம் செல்வதை உணர்த்துகிறது. உறந்தை என்ற இவ்வூர் 'உறையூர்' என்ற பெயரில் தற்காலத்திலும் நிலைக்கப்பெற்று அழைக்கப்பட்டு வருகிறது.

முடிவுரை

திணை இலக்கியமான அகநானூற்றுப் பாடலில் தலைவனுடைய நிலத்தை வர்ணிக்கும் விதமாக ஊர்ப்பெயர்கள் இடம்பெற்றிருப்பதை தோழி, தலைவி, கூற்று மூலமாக அறியமுடிகிறது. பேரரசுகளான சோழ, பாண்டிய மன்னர்களின் நாட்டு, நகர்வளச் சிறப்பினையும் மேலும் குறுநில மன்னர்கள் ஆட்சி செய்த ஊர்கள் அவ்வூரின் நீர் வளத்தினையும், நிலவளத்திளையும் புலப்படுத்துகிறது. சங்ககாலத்தில் இடம்பெற்ற ஊர்களில் சில ஊர்ப்பெயர்கள் இன்றும் நிலைபெற்று இருக்கின்றன. சிளல ஊர்களின் பெயர்கள் மறைந்தும் விட்டதை இக்கட்டுரையின் வாயிலாக அறிய முடிகிறது.

30. பத்துப்பாட்டில் மதுரைக்காஞ்சியில் ஊர்ப் பெயர்கள்

வி.கிருஷ்ணமூர்த்தி
உருமு தனலெட்சுமி கல்லூரி, காட்டூர், திருச்சி–19.

'மதுரைக்காஞ்சி' எனும் சங்க இலக்கியநூல் பாண்டிய மன்னனின் சிறப்புக்களையெல்லாம் எடுத்துக்காட்டுகிறது. நிலையாமையை உணர்த்துவது காஞ்சி. **அம்மன்னன் ஆட்சி** புரிந்தது சங்க கால மதுரை. தலையானங்கானத்து செருவென்ற **பாண்டியன்,** இம்மன்னனின் புகழைப்பாடியவர் மாங்குடி மருதனார் **மதுரை, தலையாலங்கானம்,** மாங்குடி போன்ற ஊர்பெயர் அடையாய் அமையபெற்றிருப்பதை அறியலாம்.

'ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன்தலைவனாக'

மருதனார் 'மதுரைக்காஞ்சி புலவன்' எனவும் காஞ்சிதலைவன் எனவும் அழைக்கப்படுகிறார். இவரது ஊர் 'மாங்குடி' என்பதாகும்.

<u>நெல்லூரைக்கொண்டவன்:</u>

வானத்தோடு கலந்து ஒன்றுபட்டு மூன்று தன்மைகளை உடையது. கடல், கடலில் அலைகளின் குறுக்கே பிறந்தோடுமாறு நெடிய கொடி, பொன்மிகுதற்கு காரணமான திறந்த பொருள்களை ஏற்றி வந்து இறக்கும் மரக்கலங்கள் ஆழ்ந்த கடல் அகழி உடைய **'நெல்லூர்'** அதனை வெற்றி கண்ட வேந்தே!

'தென்கடல் குண்டு அகழி
சீர் சான்ற உயர் நெல்லின்
ஊர் கொண்ட உயர் கொற்றாவ'

இப்பாடல் நெல்லூரையும், நெல்லூர் வளத்தினையும், அதனை ஆண்ட மன்னனையும் குறிப்பதாக அமைந்துள்ளது.

குட்டநாடுகள் வென்றவன்:

கல்வியில் சிறந்தவர்களான பொருநர்க்கு அச்சம் பொருந்திய பெரிய ஆண் யானை தந்தும் பொன், தாமரை மலர் சூட்டியும் நல்ல பேரணிகளை யாவர்க்கும் கொடுக்கும் வன்மையுடைய பல குட்டநாடுகளை வென்றவனே,

"இலங்கு மருப்பின் களிறு கொடுத்தும்
பொலந்தாமரைப் பூச்சூட்டியும்
நலம் சான்ற கலம் சிதறும்
பல் குட்டுவர் வெல் கோவே"

முதுவெள்ளிலை: கடற்கரைப்பட்டினம்:

சான்றோரால் புகழப்படும் சிறந்த செல்வமாகிய உழவு, வாணிகம் என்ற இரண்டு வகையானும், உழவர், வாணிகர் இருவரும் முதுவெள்ளிலை என்ற ஊரில் வாழ்பவர்கள் நான்கு நிலங்களிலும் வாழ்பவருடன் ஏவல் கேட்கும்படி வாழ்வர்
முது வெள்ளிலை என்பது கடற்கரைப்பட்டினத்தை குறிக்கும்.

'முதுவெள்ளிலை
வியல் மேவல் விழுமச்செல்வத்து
குடி கெழிஇய நால் நிலவறோடு'

தலையானங்கானத்தில் போர்செய்தவன்:

காற்றைப்போல் விரைந்து போய் பகைவரின் நாடு கெடுமாறு தீயைப் பரப்பி **தலையாலங்கானம்** என்ற ஊரில் பகைவர்க்கு அச்சம் உண்டாகுமாறு முடிமன்னன் இருவரையும் குறுநிலமன்னர் ஐவரையும் இறக்கும்படி போர் செய்து கொல்லும் ஆற்றல் மிக்க புகழை உடையவனே!

'நாடு கெட எரி பரப்பி
ஆலங்கானத்து அஞ்சுவ இறுத்து'

என்ற பாடல் தலையாலங்கானம் என்ற ஊரில் போரில் வெற்றிக் கண்டமையை புலப்படுத்துகிறது.

கொற்கைத் துறைமுகம் உடையவன்:

பாண்டிய நாட்டுக் கொற்கையில் கிடைப்பது முத்து, அஃது உலகத்தில் சிறந்தது. கொற்கை பாண்டியமன்னனின் நகரங்களுள் சிறந்தது. இழிந்த குடிமக்களின் சீறூர்களையும் உடைய நல்ல கொற்கை என்ற ஊரில் உள்ளவர் விரும்பும் மன்னனே.

'நல் கொற்கையோர் நசைப் பொருந''

திருப்பரங்குன்றம் வளமை உடையவன்:

இன்னோசையுடன் துளிக்கும் மேகம் பெய்யும் குளிர்ந்த திருப்பரங்குன்றத்தில் திருவிழாக்கொண்டாடும் ஆரவாரம், புதுநீர் விழாவின் ஆரவாரம், பாணர் குடியிருப்பில் பாடலாலும், ஆடலாலும் எழுந்த ஓசையுடன் கூடிய மருதநிலம் பொருந்திய ஒரு பகுதியாக விளங்கியது.

'தனிமழை பொழியும் தண்பரங்குன்றில்
கவி கொள் சும்மை ஒலி கொள் ஆயம்'

பாண்சேரி மணம் கமழ்சேரி:

பாண்சேரி முடிவு ஒலிக்கும் அகன்ற ஊர். அதில் திருநாள் நிலைபெற்ற அகன்ற தெரு, துணங்கைக் கூத்து, குரவைக் கூத்து உடைய மணம்கமழ்கின்ற பரத்தையர்சேரி, பரத்தையர் எப்போதும் நறுமணப் பொருள்களால் தங்களை அலங்கரித்துக் கொள்வர். அதனால் அச்சேரி **'மணம் கமழ்சேரி'** என அழைக்கப்பட்டது.

'முழவு இமிழும் அகல் ஆங்கன்
விழவு நின்ற வியல் மறுகின்
துணங்கை அம் தழூஉவின் மணம்கமழ் சேரி'

எனும் பாடல் வரிகள் பாண்சேரி எனும் ஊரைக் குறிப்பிடுகிறது.

'பாடல் சான்ற நல்நாடு' (மதுரை):

பாண்டியநாட்டு குடிமக்கள் நெருக்கமுடன் ஆரவாரத்துடன் திகழ்ந்தனர். **மதுரை** மாநகரம் சங்கம் வைத்து தமிழ் வளர்த்த பெருமையுடையது. ஆதலால் அதைப் புலவர்கள் புகழ்ந்து பாடி நெஞ்சார வாழ்த்தினர். இதனைப் **'பாடல் சான்ற நல்நாடு'** என்றார். அந்த நாட்டின் நடுவே உள்ளது மதுரையாகும்.

'பாடல் சான்ற நல்நாட்டு நடுவண்
புத்தேள் உலகம் கவினிக் கான் வர
மிக்கு புகழ் எய்திய பெரும் பெயர் மதுரை.'

அழும்பில்:

பெருஞ்செல்வத்தையுடைய **'மான விறல்வேள்'** என்ற குறுநில மன்னனின் **'அழும்பில்'** என்ற ஊரைப் போன்ற நாடுகளை இழந்தவர்களும், குடிகளை இழந்தவர்களும் புறத்துமிளைப் போரில் அம்மன்னர்கள் தங்கள் முரசுகளை இடையே கிடக்குமாறு கைவிட்டுப் புறங்காட்டி ஓடும்படி காத்த ஆழ்ந்த மணிநீர் கிடங்கு உடையது மதுரை, **புதுக்கோட்டைப்** பகுதியில் **'அம்புக்கோயில்'** என்ற ஊர் உள்ளது. அதுவே **'அழும்பில்'** என்பதாம். 'அழும்பில் வேள், அழும்பில் வோளாடு என்ற தொடர் சிலப்பதிகாரத்தில் உள்ளது.

'நிலனும் வளனும் கண்டு அமைகல்லா
விளங்கு பெருந்திருவின் மான விறள்வேள்
அழும்பில் அன்ன நாடு இழந்தனரும்'

பழையனின் மோகூர்:

பழையன். இவன் **'மோகூர்'** என்ற ஊரில் இருந்து ஆண்ட குறுநில மன்னன். இவன் பாண்டிய மரபினன். அவனது அவையில் கோசர் என்ற ஒருவகை வீரர் இருந்தனர். இருவர் இரண்டு உரையாமல் ஒன்றே மொழிவர். எனவே இவர் ஒன்று மொழி கோசர் என அழைக்கப்பட்டனர். மழை பெய்தல் இடைவிடாது நிகழ்தலால் பிழையா விளையுள் உடையதாய் விளங்கியது பழையனின் மோகூர்.

'மழை ஏழுக்கு அறாஅப் பிழையா விளையுள்
பழையன் மோகூர் அவையகம்விளங்க'

என்ற வரி புலப்படுத்துகிறது.

நாவலந்தீவு:

பாண்டியமன்னன் இளமைப் பருவத்தில் அமைந்த வெற்றியுடன் அமைதி கொள்ளவில்லை. **'நாவலந்தீவு'** முழுவதையும் வெற்றி கொள்ளத்தொடங்கினான். இத்தீவு **பாரதக் கண்டம்** என்றும் தற்காலத்தில் **இந்தியா** எனவும் அழைக்கப்படுகிறது. இவனிடம் அன்பு கொண்ட புலவர் **மாங்குடி** மருதனார். இவனுக்கு நிலையாமையை உணர்த்தி வீடுபேறு எய்திட செய்தார்.

31. செட்டிநாட்டு ஊர்ப் பெயர்கள் - ஓர் ஆய்வு

நெ.கிருஷ்ணவேணி,
முனைவர்பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை, அழகப்பா பல்கலைக்கழகம்,
காரைக்குடி-3.

மனிதன், பொருள், இடம் போன்றவற்றைக் குறிக்க எழுந்த குறியீடு பெயர் ஆகும். பெயர் குறித்த ஆய்வுகள் இன்று பல்கிப் பெருகியுள்ளன. இயற்கையான நில அமைப்பு மாறிக் கொண்டே வரும் சூழலில், இடப்பெயர் குறித்த ஆய்வு முக்கிய இடம் பெறுகின்றது. தமிழகத்தில் காணப்படும் செட்டிநாட்டுப் பகுதிகளில் இயற்கை சார்ந்து பெயர் பெற்றுள்ள ஊர்ப் பெயர்களை விளக்குமுகமாய் இக்கட்டுரை அமைகிறது.

நகரத்தார் கிராமங்கள்

"காவிரிப்பூம்பட்டிணத்திலிருந்து இடம்பெயர்ந்து இங்கு வந்து குடியேறியதால் செட்டியார்கள் 'நகரத்தார்' எனப் பெயர் பெற்றனர்"[1] என்பர். சோழ நாட்டில் வாழ்ந்த நகரத்தார்கள், பாண்டிய நாட்டில் வந்து குடியேறும் பொழுது, தாங்கள் வசிப்பதற்கென பல ஊர்களை உருவாக்கினர். இவை செட்டிநாடு என வழங்கப்பட்டன. தெற்கு வட்டகை (19), மேல வட்டகை (11), கீழப்புதூர் வட்டகை (4), கீழவட்டகை (3), மேலப்புதூர் வட்டகை (15), பதினாறு வட்டகை (28), என ஆறாகப் பகுக்கப்பட்டுள்ளன நகரத்தார் என கிராமங்கள் மொத்தம் எண்பதாகக் காணப்படுகிறது. இன்றைய மாவட்ட அமைப்பில், இவ்வூர்களில் பல சிவகங்கை மாவட்டத்தைச் சார்ந்ததாக, சில புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சார்ந்ததாகவும் விளங்குகின்றன.

இயற்கைச் சூழலில் இயல்பாய் அமைந்த ஊர்ப் பெயர்கள்

தமிழக ஊர்களின் பெயர்களை ஆராய முற்படுமிடத்து, அவற்றை வரலாற்று நிகழ்வின் அடிப்படையில் அமைந்த ஊர்கள், நில அமைப்பு, நீர்நிலை போன்ற இயற்கை சார்ந்து பெயர் பெற்ற ஊர்கள். கோட்டை, கோயில் போன்ற செயற்கைக் கூறுகளைக் கொண்டு பெயர் பெற்ற ஊர்கள் எனப் பகுக்க இயலும். இயற்கை அமைப்பை முதன்மையாகக் கொண்டு திணைவகுத்த சான்றோர்களின்வழி இன்றும் தொடர்கிறது. தமிழகத்தில் காணப்படுகின்ற பெரும்பான்மையான ஊர்ப்பகுதிகள் இயற்கைச் சூழலின் இயல்பால் பெயர் பெற்றனவாகவே விளங்குகின்றன. நகரத்தார்கள் வசிக்கும் ஊர்களில் பெரும்பாலன இயற்கைச் சூழலின் அடிப்படையில் பெயர் பெற்றுள்ளன.

நீர் நிலைகளின் அடிப்படையில் அமைந்த ஊர்ப்பெயர்கள்

உலக மக்கள் அனைவரது வாழ்விலும் ஆதாரமாக விளங்குவது நீர் ஆகும். மனிதன் தனக்குரிய நிலையான இடத்தை நீர் நிலைகளின் அருகில் தான் அமைக்கத் தொடங்கினான். ஹரப்பா, சிந்து சமவெளி போன்ற தம் பழம்பெரும் நாகரீகங்கள் இதற்குச் சான்றாக அமைகின்றன. இயற்கையின் அடிப்படையில் பெயர் பெற்ற நகரத்தாரின் பதினாறு ஊர்களுள், ஆறு ஊர்கள் அப்பகுதியில் அமைந்துள்ள நீர்நிலைகளை அடிப்படையாகக் கொண்டு பெயர் பெற்றவை. இவற்றுள் பாகனேரி, மதகுபட்டி, அலவாக்கோட்டை, அமராவதிபுதூர், பள்ளத்தூர் ஆகிய ஐந்து, ஊர்களும் சிவகங்கை மாவட்டத்திலும், வேகுப்பட்டி, புதுக்கோட்டை மாவட்டத்திலும் காணப்படுகின்றன.

(i) பாகனேரி:-

பாகன் + ஏறி → மதம் பிடித்த யானை ஒன்றை பாகன் ஒருவன் ஏறி அடக்கியதால் பாகன் ஏறி எனப் பெயர் பெற்று பின் பேச்சுவழக்கில் மருவி பாகனேரி ஆனதாகக் கூறுவர். இக்கருத்து ஏற்புடையதாகத் திகழவில்லை.

பாகன் + ஏரி → உமையொரு பாகன் விரும்பி உறையும் நீர்வளம் (ஏரி) மிக்க ஊர் என்பது ஏற்புடையது. "உமையொரு பாகனாகிய சிவபெருமான் விரும்பி உறையும் நீர்வளம் மிக்க ஊர் என்றும், ஏரியைப் போன்று விரிந்து பரந்த உள்ளமுடையவர்கள் வாழும் ஊர் என்றும் போற்றப்படுகிறது"[2] நீர் வளத்தின் அடிப்படையிலே இவ்வூர் பாகனேரி எனப் பெயர் பெற்றுள்ளது.

ii) மதகுபட்டி:-

'மதகு' என்பதற்கு ஏரிநீர் வெளியே போகும் வழி என்று நா.கதிரைவேற் பிள்ளையின் தமிழ்மொழி அகராதி பொருள் கூறுகிறது. இவ்வூரின் மேற்கே உள்ள பெரிய ஏரியின் கீழ்ப்புற மடவாயிலில் (நீர் பாயும் மடை) பெரியதொரு மதகும், பலகை அடைப்பும் காணப்படுவதால் 'மதகுபட்டி' எனப் பெயர் பெற்றது.

(iii) பள்ளத்தூர்:-

சிவகங்கை மாவட்ட வேலங்குடிக்கு அருகில் காணப்பட்ட புதூர் குடியிருப்புப் பள்ளமான பகுதியில் அமைந்திருந்தது. மழைக்காலத்தில் இங்குள்ள ஊருணியில் மழைநீர் தேங்கி நிறைந்து வளம் சேர்த்தது. பள்ளமான பகுதியில் இருந்து வளம் பெற்ற காரணத்தால் புதூர் பகுதி பள்ளத்தூர் எனப் பெயர் மாற்றம் பெற்றது. இப்பகுதியில் காணப்படுகின்ற வீடுகள் ஒன்றைவிட ஒன்று பள்ளத்தில் (ஒரு வீட்டின் தரை மட்டம், அடுத்த வீடுகளின் மாடி மட்டமாக) இருக்கும் காட்சி ஊர்ப் பெயர்க்காரணத்தை உணர்த்துவதாக அமைந்துள்ள பான்மை சிறப்பிற்குரியது.

(iv) கண்மாய்வழி கவின் பெற்ற கிராமங்கள்:-

அலவாக்கோட்டை, வேகுப்பட்டி, அமராவதிபுதூர் ஆகிய ஊர்கள் அங்கு காணப்படுகின்ற கண்மாய்வழி வளம் பெற்றன. அலவைக் கண்மாயால் நீர் வளம் பெற்று நெல்மணியைக் கோட்டை கோட்டையாய்க் குவித்து வாழ்ந்த காரணத்தால் அலவைக்கோட்டை என அழைக்கப்பட்டுப் பின் அலவாக்கோட்டையாக மருவிற்று.

இதனைப்போல அமராவதிக் கண்மாயை மையமிட்டு அமராவதிபுதூர், வேகுக்கண்மாயை மையமிட்டு வேகுப்பட்டி ஆகிய ஊர்கள் பெயர் பெற்றன.

மண்ணின் செம்மையில் மக்களின் செழுமை:-

நிலமும், பொழுதும் முதற்பொருளாகும் நிலத்தினை அடிப்படையாகக் கொண்டு திணை வகுத்தனர் சங்கச் சான்றோர். இன்றளவும், நிலத்தினது தன்மையால் பெயர் பெற்ற ஊர்கள் பல உள்ளன. செம்மண் பூமியை செம்மையான பூமி என்பர்.

சிவகங்கை மாவட்ட நகரத்தார் கிராமங்களில் செம்பனூரும், செவ்வூரும், மண் வளத்தால் பெயர் பெற்றன. செம்மையான சிவந்த மண் கொண்ட ஊர் செம்மண்ணூர் என அழைக்கப்பட்டுப் பின் செம்பனூர் என மருவியது. செந்நிறம் வாய்ந்த ஊர் செவ்வல் என்று பெயர்பெறும். இதன் அடிப்படையில் செவ்வூர் பெயர்பெற்றது. செவ்வூருக்கு நீர்வளம் தருகின்ற நீர்நிலை செவல் கண்மாய் என்று அழைக்கப்படுகிறது. நீர், நிலம் ஆகிய இரு தன்மையிலும் பெயர் பெற்ற ஊராகச் செவ்வூர் திகழ்கிறது.

பொழிலால் பொலிவு பெற்ற பெயர்கள்:-

"மரங்களும், செடி கொடிகளும் செழித்தோங்கி வளரும் சோலையைப் பொழில் என்னும் அழகிய சொல் குறிப்பிடும்"[3] நிலவளமும், நீர் வளமும் உடைய தமிழ்நாட்டில் அவ்வப்பகுதியில் செழித்தோங்கும் மரங்கள், மலர்களின் அடிப்படையில் பெயர் வைக்கும் முறைமை இருந்து வந்துள்ளது. சிவகங்கை மாவட்டப் பணங்குடி, ஆத்திக்காடு தெற்கூர், காரைக்குடி ஆகிய நகரத்தார் பகுதியில் அங்கு காணப்படுகின்ற மரம், செடிகளின் மிகுதி கருதிப் பெயர் பெற்றன.

பனை மரங்கள் அடர்ந்த பகுதி பனங்குடி என்றும், ஆத்திமரங்கள் அடர்ந்த காடுகளின் தெற்குப் பகுதியில் அமைந்த ஊராதலின் ஆத்திகாடு தெற்கூர் என்றும் இவ்வூர்கள் பெயர் பெற்றன. முட்கள் நிரம்பிய காரைச்செடிகள் அடர்ந்த காட்டுப்பகுதி மக்கள் குடிகொள்ளும் ஊராக மாறியபோது காரைக்குடியாக மாறியது. கார் குடி கொள்ளும் ஊர் என்பதும், காரை வீடுகள் அதிகம் காணப்பட்டதும், பின் அமைந்த சிறப்புகள் ஆகும்.

(i) மலரால் பெயர் பெற்ற கீழபூங்குடி, கொப்பனாப்பட்டி:-

நகரத்தார் பகுதிகளில் சிவகங்கை மாவட்ட கீழப்பூங்குடியும், புதுக்கோட்டை மாவட்ட கொப்பனாப்பட்டியும் மலர்களின் அடிப்படையில் பெயர் பெற்ற ஊர்கள் ஆகும்.

1) பூ+குடி → பூங்குடி, ஆரம்ப காலத்தில் பூக்கள் அதிகம் நிறைந்த பகுதியில் குடியேறிய காரணத்தினால் பூங்குடி எனக் குறிக்கப்பட்டது. கிழக்குத் திசையில் அமைந்திருத்தல் கருதி கீழப்பூங்குடி எனப்பெயர் பெற்றது.

2) கொப்பனாப்பட்டியின் பழைய பெயர் கொன்னையூர் என்பதால் கொன்றை மலர்கள் இங்கு மிகுதியாக உயர்ந்திருந்த காரணத்தால் இவ்வூர் கொன்றையூர் என்று அழைக்கப்பட்டது. நாளடைவில் கொன்னையூர் என மருவிற்று. இவ்வூரிற்கு அருகில் கண்மாய் ஏற்படுத்திய போது, கொப்பனான் கண்மாய் எனப் பெயரிட்டனர். இதனை மையமிட்டு இவ்வூர் கொப்பனாப்பட்டி எனப் பெயர் மாற்றம் பெற்றது.

(ii) வயலில் விளைந்த ஊர்கள்:-

சிறுவயல், புதுவயல், நெற்குப்பை போன்ற நகரத்தார் பகுதிகள் அங்கு காணப்படுகின்ற வயல் வளங்களின் அடிப்படையில் பெயர் பெற்றன. சாக்கோட்டையிலிருந்து வந்த நகரத்தார்கள் புதிய வயல்கள் நிரம்பிய பகுதியில் ஒரு ஊரை உருவாக்கி அங்குக் குடியேறிய காரணத்தால் புதுவயல் என்றும், சிறு சிறு வயல்கள் சூழப்பட்டிருக்கும் பகுதி சிறுவயல் என்றும் சுட்டப்பட்டது.

நெல் + குப்பை → நெற்குப்பை. குப்பை என்பது குவியலைக் குறிக்கும். நெல் அதிகம் விளைந்து நெற்குவியல்கள் அதிகமாக இருந்த காரணத்தால் இவ்வூருக்கு 'நெற்குப்பை' எனப் பெயர் பெற்றது.

தொகுப்புரை:-

- தமிழகத்தில் பெரும்பான்மையான ஊர்ப்பெயர்கள் இயற்கைச் சூழல் அடிப்படையில் பெயர் பெற்றுள்ளன.
- நகரத்தார் ஊர்களான எண்பது ஊர்களில் பதினாறு ஊர்கள் இயற்கைச் சூழல் அடிப்படையில் பெயர் பெற்றவை ஆகும்.
- பாகனேரி, மதகுபட்டி, பள்ளத்தூர், அலவாக்கோட்டை, வேகுப்பட்டி, அமராவதிபுதூர் ஆகிய ஊர்கள் நீர் நிலைகளின் அடிப்படையில் பெயர் பெற்றன.
- செவ்வூரும், செம்பனூரும் மண்வளத்தால் பெயர் பெற்றன.
- பனங்குடி, ஆ.தெக்கூர், காரைக்குடி, கீழப்பூங்குடி, கொப்பனாப்பட்டி, சிறுவயல், புதுவயல், நெற்குப்பை போன்ற நகரத்தார் பகுதிகள் மரம், மலர், வயல் வளங்கள் அடிப்படையில் பெயர் பெற்றன.
- கருப்பொருள்களின் அடிப்படையிலும், முதற்பொருளில் நிலத்தின் அடிப்படையிலும் ஊர்களுக்கு பெயர்கள் அமைக்கப்பட்டுள்ள பான்மை சிறப்பிற்குரியது.
-

மேற்கோள் விளக்கம்:-

1. சோம.லெ.செட்டிநாடும் தமிழும், ப.7
2. கு.செ.இராமசாமி, வெள்ளோட்டம், ப.7
3. ரா.பி.சேதுப்பிள்ளை, ஊரும், பேரும், ப.9

32. போர் முனைகளில் ஊர்ப் பெயர்கள்

ம.குமரவேல்,
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, மாநிலக் கல்லூரி,
சென்னை – 5.

ஒரு நாட்டின் பழங்கால வரலாற்றையோ, பண்பாட்டையோ அறிந்து கொள்ள இலக்கியங்கள் பெரும்பாலும் துணைபுரிகின்றன. அத்தகு இலக்கியங்களே சங்க இலக்கியமாக நமக்கு காட்சி தருகிறது. அவ்விலக்கியங்களிலிருந்து அக்கால அரசு, சமூகம், பொருளாதாரம், பண்பாடு போன்ற பல வகையான துறைகளைப் பற்றிய செய்திகளைச் சேகரிக்க முடிகிறது. அதே போல அக்காலத் தமிழகத்தின் பூகோளநிலை, ஊரமைப்பு நிலை போன்றவற்றைப் பற்றியும் பல செய்திகளைக் காண முடிகிறது. சங்கப் பாடல்களில் இடம் பெற்றுள்ள ஊர்ப்பெயர்களைக் காணுங்கால் பழந்தமிழரின் இயற்கையோடு இயைந்த இன்பியல் வாழ்வே நினைவுக்கு வருகிறது. குறிப்பாக அகப்பொருள் இலக்கியங்களில் தலைவியின் நலத்திற்கு உவமையாக ஊர் பெயர்கள் குறிப்பிடப்பட்டது. அதே போல் பகைவர்களைப் பற்றிக் கூறும் போதும் ஊர் பெயர்கள் அடையாக வருவது பொருத்தமாக அமைகிறது. அவ்வகையில் போர்களத் தொடர்பால் பெயர் பெற்ற ஊர்களை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

சங்கப்பாக்கள் சுட்டும் ஊர்ப்பெயர்கள்

தொல்காப்பியர் செய்யுளீட்டச் சொற்கள் நான்கு என்று குறிப்பிடுவர். அவை இயற்சொல் திரிசொல், திசைச்சொல், வடசொல் ஆகும். இயற்சொல்லும் திரிசொல்லும் தமிழுக்கே உரித்தானவை. திசைச்சொற்கள் கிளை மொழிகளாகவும் பொது மொழிகளாகவும் திரிந்து அமைந்த மொழிகள் என்று கூறுவர். வடசொல் என்பது சமஸ்கிருதத்தை மட்டும் குறிப்பிடும். இந்த திசை மொழியின் வழியாகவும், வடமொழியின் வழியாகவும் பல ஊர்ப் பெயர்கள் சங்க இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளது. சங்க காலத்தில் வழக்கிலிருந்து ஊர்ப்பெயர்கள் முழுமையும் சங்க இலக்கியங்களில் இடம் பெற்றிருக்கும் என்று எதிர்பாக்க முடியாது. ஏனெனில் சங்கப் பாடல்கள் வரலாற்றைக் கூறும் போக்கில் அமைந்தவையன்று. அவையனைத்தும் இலக்கியத்தன்மை உடையவை என்பதில் ஐயமன்று.

அட்டவாயில்

இரு பெரு மன்னர் போரிட்ட இடம் என்பதைக் குறிக்கும். அட்டவாயில் என்பது ஊருக்குப் பெயராய் அமைந்தது என எண்ண வாய்ப்பு உள்ளது. “தலைவியின் நலம் பாராட்டப்பெறும் இடங்களில் ஊர்ப்பெயர்கள் பல இடம் பெற்றியிருக்கின்றன.” என்றுரு ஆளவந்தார் (இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள் பக்கம். 60) குறிப்பிடுகிறார். இதனை அகம் – 326ஆம் பாடல் எடுத்துக் காட்டுகிறது.

அரிமண வாயில் உறத்தூர்

வேள் எவ்வியின் பகைவர்களைப் பற்றிக் கூறும் சங்க இலக்கியப்பாடல் ஒன்றில் அரிமண வாயில் உறத்தூர் என்ற ஊர்ப்பெயர் குறிக்கப்பெற்றுள்ளது. அரி–கள், உறப்பு – செறிவு, கள்ளின் மணம் செறிந்த ஊர் அரிமண வாயில் உறத்தூர் என்று அமைந்திருக்கலாம்.” என்று ஆளவந்தார் (இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள் பக்கம். 63) குறிப்பிடுகிறார். இதனை.

“வாய்வாள் எவ்வி ஏவல் மேவார்
நெடுமிடல் காய்ந்த பசும்பூண் பொருத்தலர்
அரிமண வாயில் உறத்தூர் ஆங்கண்
கள்ளுடைப் பெருஞ்சேர்ந்துஎல் சிமிழ் அன்ன” **(அகம் : 266 : 11–14)**

என்ற பாடல் வரிகளில் காணலாம்.

அழுந்தை

வஞ்சினம் கூறும் இயல்புடைய கோசர்கள் அன்னி மிஞிலியன் தந்தையின் கண்களைப் பிடுங்கிக் கொடுஞ்செயல் புரிந்தனர். இச்செய்தியை அன்னி மிஞிலி என்பாள் குறும்பியன், திதியன் ஆகியோர்க்கு எடுத்துக் கூறி அவர் உதவியால் அழுந்தை என்னுமிடத்து கோசரைக் கொன்று பகை தீர்த்து மகிழ்ந்தாள். அழுந்தை என்பது பின்னர் அழுந்தூர் என்று வழங்கியதை உணரலாம். கம்பன் பிறந்த திருவழுந்தூர் எனக் கருதலாம்.'' என்று ஆளவந்தார் (இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள் பக்கம். 65) குறிப்பிடுகிறார்.

“கடுஞ்தேர்த் திதியன் அழுந்தை கொடுங்குழை
அன்னி மிஞிலியின் இயலும்
நின் நலத்தருவியை முயங்கியமார்பே” (அகம் : 196 : 11–13)

என்ற பாடல் வரிகள் மேற்குறிப்பிட்ட செய்தியை மெய்ப்பிக்கிறது.

ஆமூர்

அகநானூறு, புறநானூறு, ஐங்குறுநூறு, சிறுபாணாற்றுப்படை ஆகிய இலக்கியங்கள் நமக்கு உணர்த்தும் ஊர்ப் பெயர்களுள் ஆமூர் என்பதும் ஒன்று. ஆமூரைச் சேர்ந்த மல்லன் ஒருவனைச் சோழன் போர்வைக் கோப்பெருற்கிள்ளி வென்ற பொழுது சாத்தந்தையார் என்ற புலவர் பாடிய பாடல் ஒன்று புறநானூற்றில் இடம் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

“இன்கடுங்கள்ளின் ஆமூர் ஆங்கண்
மைந்துடை மல்லன் மதவலி முருக்கி
ஒருகால் மார்பு ஒதுங்கின்றே; ஒருகால்
வருதார் தாங்கிப் பின் ஒதுங்கின்றே” (புறம் : 80 : 1–4)

என்ற பாடல் சுட்டுகிறது. முக்காவனாட்டு ஆமூர் மல்லன் என்ற கூற்று, 'ஆமூர்' முக்காவனாட்டைச் சேர்ந்தது என்பதைத் தெரிவிக்கிறது. இன்றைய மாமல்லபுரம் இருக்கும் பகுதி ஆமூர் நாடாக இருந்திருக்க வேண்டும்.

ஆலங்கானம்

'ஆலங்கானம்' என்ற இவ்வூர்ப் பெயர் அகநானூறு, புறநானூறு, மதுரைக்காஞ்சி ஆகிய சங்க இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளது. ஊரின் அமைப்பு கருதி தலையாலங்கானம் என்று குறிக்கப்பெற்றுள்ளது.

பாண்டியன் நெடுஞ்செழியன் தன்னை இளையன் என எண்ணி இகழ்ந்து தன் மீது படையெடுத்த சேர, சோழ, வேளிர் ஐவர் ஆக எழுவரைப் பொருது வென்ற இடம் ஆகும். இப்போரில் சேர, சோழர்கள் கொல்லப்பட்டனர். பெற்ற வெற்றியின் காரணமாக தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் எனப்பட்டான். ஆலங்கானம் போர்க்களமாக கருதப்படுகிறது.

“எழுவுறழ் திணிதோள் இயல்தேர்ச் செழியன்
நேரா எழுவர் அடிப்படக் கிடந்த
ஆலங்கானத்து ஆர்ப்பினும் பெரிதே” (அகம் : 209 : 4–6)

என்ற பாடல் வரிகள் நன்குணர்த்துவதாக அமைகிறது. மேலும், அகம் – 36, 116, 175, புறம் – 371, 372) முதலியப் பாடல்கள் ஆலங்கானத்திற்கு வலுசேர்ப்பதாய் அமைகிறது.

ஒல்லையூர்

ஒல்லை என்ற சொல் பழமை என்று பொருள் உணர்த்தும் ஊரின் பழமை குறித்து ஒல்லையூர் எனப் பெயர் பெற்றிருக்கலாம்.'' என்று ஆளவந்தார் (இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள் பக்கம். 92) குறிப்பிடுகிறார்.

ஒல்லையூர் நாடும் இருந்திருக்கிறது. பாண்டி நாட்டின் வடவெல்லையில் ஒல்லையூர் நாடு ஒரு சிறு பகுதி. இச்சிறு பகுதியைச் சோழர் பறித்துக் கொண்டனர். பாண்டிய மன்னர்களால் ஒல்லையூரை மீட்க முடிய வில்லை. பலமுறை சோழர் மேல் படைகொண்டு தாக்கினர். வெற்றிகிட்டவில்லை பூதப்பாண்டியன் பட்டம் பெற்று நாட்டை ஆளத்தொடங்கியதும் முன்னோரைத் தொடர்ந்து ஒல்லையூரை மீட்கப் போரிட்டு வென்றான். ஆகவே ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் ஆனான் என்ற செய்தி இலக்கியங்கள் வழி புலனாகிறது.

கடம்பின் பெருவாயில்

கடம்பு என்ற மரவகை நிறைந்த பகுதியாய் இருந்த காரணத்தால் இப்பெயர்கள் பெற்றிருக்கலாம் என்று எண்ண வாய்ப்பு இருக்கிறது.

பதிற்றுப்பத்தில் நான்காம் பத்தின் பதிப்பகத்தில் கடம்பின் பெருவாயில் என்ற ஓர் ஊர்ப்பெயர் குறிக்கப்பெற்றுள்ளது.

"பூழி நாட்டைப் படையெடுத்துத் தழீஇ,
உருள் பூங்கடம்பின் பெருவாயில் நன்னனை
நிலைச் செருவின் ஆற்றலை அறுத்து, அவன்
பொன்படு வாகை முழு முதல் தடிந்து" **(பதிற். நான்காம் பத்து பதிகம்)**

என்ற பாடல் வரிகள் மெய்ப்பிக்கிறது.

கழுமலம்

கழுமலம் என்னும் பெயருடைய ஊர் சேர மன்னன் குட்டுவன் என்பவனுக்குரியது என்று **சங்க இலக்கியம்** கூறுகிறது.

பழையன் சோழ மன்னனுடைய படைத்தலைவன். இவன் நன்னன் முதலிய ஆறுபடைத் தலைவர்களும், தத்தம் படையோடு கூடியிருந்த பாசறையைப் படை கொண்டு தாக்கிப் பெரும்பாலோரைக் கொன்று வீழ்த்திப் பின்னர், அப்பகைவர் படைக்கலனால் விழுப்புண்பட்டு மாய்ந்தனன். இக்களம் கண்டு பெரும்பூட் சென்னி என்னும் சோழ மன்னன் வெகுண்டு எழுந்து கழுமலம் என்னும் ஊரைத்தாக்கி ஆங்கிருந்த கணையன் என்னும் சேரமன்னனுடைய படைத் தலைவர்க்குத்தலைவனாகிய மறவனையும் அக்கழுமலம் என்னும் ஊரையும் கைப்பற்றினான் என்பது வரலாறு.

"பருந்து படப் பண்ணிப் பழையன் பட்டெனக்
கண்டது நோனானாகித் திண்டேர்க்
கணையனகப் படக் கழுமலந் தந்த
பிணையலங்கண்ணிப் பெரும்பூட் சென்னி **(அகம் : 44 : 11–14)**

என்ற பாடல் வரிகளில் கழுமலம் என்னும் ஊர் போர்க்களமாக, போர் முனைப்பகுதியாக இடம் பெறுவதை கண்டுணரலாம்.

கானப்பேரெயில்

பாண்டியன் உக்கிரப்பெருவழுதி கானப்பேரெயிலைக் கைப்பற்றியவன் என்று சங்க இலக்கியம் பகர்கிறது. அதனால் கானப்பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதி எனப் பெயர் பெற்றான்.

வேங்கை மார்பன் என்னும் குறுநில மன்னனுக்குரிய கானப்பேர் எயில் என்னும் அரணை வென்று கைப்பற்றிக் கொண்டான், பாண்டியன் உக்கிரப் பெரு வழுதி கானப்பேர் என்ற இடத்தில் அமைந்தமையால் கானப்பேரெயில் என்று அக்கோட்டையைக் குறித்துக் கூறினார் போலும் என்ற செய்தியை புறம் – 21ஆம் பாடல் சுட்டுகிறது.

குடந்தை

குடந்தைவாயில், குடத்தை, குடவாயில் என்று கூறப்படுவன எல்லாம் ஒரே ஊரின் பெயராம். கோச்செங்கட் சோழன் தன்னோடு போர் செய்து தோல்வியுற்ற சேர மன்னனைக் குடவாயிர் கோட்டம் என்னும் சிறைக் கோட்டத்தில் அடைத்து வைத்திருந்தான் என்ற செய்தி, இடம் பெறுகிறது.

குறுக்கை

குறுக்கைப் பறந்தலையில் அன்னி என்பான் திதியனோடு போரிட்டு, அவன் காவல் மரமாகிய புன்னையை வெட்டி வீழ்த்தினான் என்று சங்க இலக்கியம் கூறுகிறது. போர் நடைபெற்ற அந்தப் போர்க்களம் அமைந்த ஊர்ப் பெயராகிய குறுக்கை என்பதனோடு இணைந்து குறுக்கைப் பறந்தலை எனப்பெயர் பெற்றது.

> **"அன்னிக் குறுக்கைப் பறந்தலை, திதியின்**
> **தொல்நிலை முழுமுதல் துமியப்பண்ணிய**
> **புன்னை குறைந்த ஞான்றை" (அகம் : 45 : 9 – 11)**

என்ற பாடல் வரிகள் குறுக்கைப் போர்க்களத்தை எடுத்துக்காட்டுகிறது.

முள்ளூர்

முள் நிறைந்த ஊராதலின் இது முள்ளூர் எனப்பெயர் பெற்றது. முள்ளூர் மலையமான், திருமுடிக்காரிக்கு உடைய தாய் இருந்தது. இவ்வூரில் ஆரியருக்கும், மலையனுக்கும் போர் நடந்தது. அப்போரில் ஆரியப்படைத் தோற்று ஓடியது என்பது செய்தி.

> **"ஆரியர் துவன்றிய பேர் இசை முள்ளூர்**
> **பலருடன் கழித்த ஒள்வாள் மலையானது**
> **ஒரு வேற்கு ஓடியாங்கு நம்**
> **பன்மையது எவனோ, இவள் வன்மைதலைப் படினே" (நற் : 170 : 6–9).**

என்ற பாடல் வரிகளில் முள்ளூரில் போர் நடைபெற்றது என உறுதி செய்கிறது.

மோகூர்

பழையன் என்பவனுக்கு உரியது மோகூர், மோகூர் மன்னன் பழையன் கோசர்க்குப் பணியாத காரணத்தால் கோசர்க்கு துணையாக வந்த மோரியர் தம் தேர் உருளும்படி மலையை அறுத்து வழி செய்தனர் என்ற செய்தியை இலக்கியங்கள் வழி அறியலாம்.

> **"தெம்முலை சிதைத்த ஞான்றை, மோகூர்**
> **பணியாமையின் பதை தலை வந்த**
> **மாகெழுதானை வம்ப மோரியர்**
> **புனைதேர் உருளிய குரைத்த" (அகம் : 251 : 10–13)**

என்ற பாடல் வரியில், மோதூர் போர்க்களம் நின்ற ஊராகும் என்பதை அறியலாம்.

வாகை

ஒரு வகை மரத்தின் பெயர் ஓர் ஊருக்குப் பெயராய் அமைந்தது. வட ஆர்க்காட்டில் வாகை என்ற பெயருடன் ஓர் ஊர் உள்ளது. வாகைப் போர்க்களத்தில் கரிகாலனுடன் போர் புரிந்த பகைவர்கள் தோற்று ஓடினர் என்ற செய்தி

"பெருவளக் கரிகான் முன்னிலைச் செல்லார்,
சூடா வாகைப் பறந்தலை, ஆடு பெற
ஒன்பது குடையும் நன் பகல் ஒழித்த
பீடு இல் மன்னர் போல" **(அகம் : 125 : 17–21)**

என்ற பாடல் வரிகள் மெய்ப்பிக்கிறது. போர்க்களத் தொடர்பால் வாகைப் பறந்தலை எனப்பெயர் பெற்றது.

வெண்ணி

வெண்ணி என்பதற்கு வெறுந்தரை என்று பொருள். அதனால் வெண்ணி என்று பெயர் பெற்றது. ஆரூரின் அருகில் கோயில் வெண்ணி என்ற ஊரும் உள்ளது. இரண்டும் ஒன்றே என்று குறிப்பர் போலும்.

கரிகாலனோடு பெருஞ்சேரலாதன் வெண்ணிப் போர்க்களத்தை போர் செய்தான் போரில் புறப்புண்பட்டமைக்கு நாணியவனாய் தான் போரிட்டுத் தோற்றமிழிந்த அந்தக் களத்தின் ஒரு புறத்தே, வாளோடு வடக்கிருந்து உயிர் நீத்தான் என்ற செய்தி.

"கரிகால் வளவனொடு வெண்ணிப் பறந்தலைப்
பொருது புண் நாணிய சேரலாதன்
அழிகள மருங்கின் வாள் வடக்கிருந்தென" **(அகம் : 55 : 10–12)**

என்ற பாடல் வரிகள் சான்றாக அமைகிறது. வெண்ணி என்ற ஊர், வெண்ணிப் பறந்தலை என்ற போர்க்களமாக காட்சி தருகிறது.

இதுகாறும் கூறப்பட்ட செய்திகள் சங்க இலக்கியங்களின் வாயிலாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. இவற்றில் போர்க்களங்கள் தொடர்பான செய்திகளில், ஊர் பெயர்கள் இடம் பெற்ற விதம் சுருக்கம் கருதி கூறப்பட்டுள்ளது. சங்கப் பாடல்கள் சுட்டும் ஊர்ப் பெயர்களில் போர் முனைகளில் இடம் பெற்ற ஊர்கள் அதிகமாகவே காணப்படுகிறது என்பது இக்கட்டுரை வாயிலாக எடுத்துக் காட்டப்படுகிறது.

33. நற்றிணையில் ஊர்ப்பெயர்கள்

க.கோப்பெருந்தேவி
முனைவர்பட்ட ஆய்வாளர்
அ.வ.அ.கல்லூரி (தன்.)
மன்னம்பந்தல்
மயிலாடுதுறை.

முன்னுரை

ஆதி காலத்தில் மனிதர்கள் குகைகளிலும், காடுகளிலும் வசித்து வந்தனர். நாளடைவில் நாகரிக வளர்ச்சியின் காரணமாக ஆற்றங்கரைகளில் வீடுகளை அமைத்துக் கூட்டமாக வாழ்ந்தனர். காலப்போக்கில் ஏற்பட்ட மாற்றத்தினால் மக்கள் ஊர், சிற்றூர், பேரூர், நகரம், பட்டினம் என்ற அமைப்பு முறைகளைத் தோற்றுவித்தனர். இதனை அக்காலத்தில் எழுந்த நூல்களில் பதிவு செய்துள்ளனர். தமிழ்மொழிக்குச் செம்மொழி உயர்வினைத் தேடித்தந்த சங்க இலக்கியம் ஒரு தொன்மையான இயற்கை இலக்கியமாகும். சங்க இலக்கியத்தில் ஒன்றான எட்டுத்தொகையில் இடம்பெற்றுள்ள நற்றிணையில் காணப்படும் ஊர்ப் பெயர்கள் பற்றி இக்கட்டுரை அமைந்துள்ளது.

தொல்காப்பியத்தில் ஊர்

சங்கப் பாடல்களிலே ஊர்ப்பெயர்கள் பல்வேறு இடங்களில் பல்வேறு புலவர்களால் பாடப் பட்டுள்ளன. சங்கப் பாக்களுக்கு இலக்கண நூலாகத் திகழ்ந்த தொல்காப்பியம் மக்கள் வாழுமிடத்தை ஊர் என்றே குறிப்பிட்டுள்ளதைக் காணலாம். முப்பெரும் பிரிவுகளுடைய இவ்விலக்கண நூலில் எட்டு இடங்களில் ஊர் என்ற சொல்லாட்சி கையாளப்பட்டுள்ளது. இவையாவும் மூன்றாவது பிரிவாகிய பொருளதிகாரத்தில்தான் இடம்பெற்றுள்ளது.

1. பேரூர் (அகத்திணையில் 37 ஆவது நூற்பா)
2. ஊரது சார்வும் (அகத்திணையியல். 40)
3. ஊர்க்கொலை (புறத்திணையியல் .3)
4. ஊர்ச்செரு (புறத்திணையியல்.13)
5. ஊரொடு தோற்றம் (புறத்திணையியல்.30)
6. ஊரும் (களவியல் 11)
7. ஊரும் அயலும் (செய்யுளியல்.159)
8. ஊரும் பெயரும் (மரபியல்.76)

நச்சினார்க்கினியர் ஊர் என்ற சொல்லையே எழுத்ததிகாரம் புணரியலில் 11 ஆவது நூற்பாவிற்கு எழுதிய உரையில் குறிப்பிட்டுள்ளதைக் காணலாம். பிற உரையாசிரியர்களும் குறிப்பிட்டுள்ளனர். ஆயினும் நச்சினார்க்கினியர் கூறும் விளக்கம் சிறப்பு வாய்ந்ததாக அமைந்துள்ளது. ஊர்ப்பெயர்களின் பின்னொட்டாக அமைந்த சொற்கள் குறிப்பிட்ட நிலத்திற்குரியவை என ஆய்ந்து கண்டறிந்துள்ளார்.

1. முல்லை நிலத்திற்குரியவை – பாடி, சேரி, பள்ளி,
2. குறிஞ்சி நிலத்திற்குரியவை – சிறுகுடி, குறிச்சி
3. மருத நிலத்திற்குரியவை – ஊர்
4. நெய்தல் நிலத்திற்குரியவை – பட்டினம், பாக்கம்
5. பாலை நிலத்திற்குரியவை – பறந்தலை

இவற்றின் அடிப்படையிலேயே ஊர்ப்பெயர்கள் அமைந்திருக்கும் முறையைச் சங்கப்பாடல்கள் சுட்டுகின்றன.

நற்றிணையில் ஊர்ப்பெயர்கள்

அம்பர்

சோழன் கிள்ளிக்குரிய அம்பரைச்சூழ்ந்து அரிசில் என்னும் ஆறு ஓடியதாக,

"ஏந்து கோட்டு யானை இசைவெங்கிள்ளி
வம்பு அணி உயர்கொடி அம்பர் சூழ்ந்த
அரிசில் அம்தண் அறல் அன்ன இவள்" (நற்.பா.141 (9–11)

என்னும் நற்றிணை அடிகளில் வழி அம்பர் என்னும் ஊர் சோழ நாட்டினைச் சார்ந்தது என்பதை அறியமுடிகிறது. மேலும், இது அருவந்தை என்ற வள்ளலுக்கு உரியதாக இருந்தது ம என்பதை அம்பர்கிழான் அருவந்தையைக் கல்லாடனார் பாடிய புறநானூற்றுப்பாட்டு ஒன்று தெரிவிக்கிறது.புலவர் பெயர் ஊர்ப் பெயருடன் இணைத்துக் கூறப்பட்ட மரபும் இருந்தது என்பதற்கு இது ஒரு சான்று.

ஆலங்கானம்

ஆலங்கானம் என்ற இவ்வூர்ப்பெயர் நற்றிணையில் மட்டுமன்றி மதுரைக்காஞ்சி, அகநானூறு, புறநானூறு ஆகிய இலக்கியங்களிலும் இடம்பெற்றுள்ளது. "ஊர்களின் அமைப்புக் கருதி தலை, இடை, கடை என்ற மூன் ஒட்டுகளில் ஒன்று ஊர்ப்பெயர்களோடு இணைத்துக் கூறும் முறையையொட்டி ஆலங்கானம் என்ற ஊர்ப்பெயர்களோடு தலை என்ற அடையுடன் தலையாலங்கானம் என வழங்கப்பெற்றுள்ளது"[1].

"ஆலங்கானத்து அஞ்சுவர இறுத்த
வேல் கெழுதானைச் செழியன் பாசறை" (நற்.பா. 387, 7.8)

ஊணூர்

சங்கப் பாடல்களிலிருந்து அறியும் பெயர்களுள் ஊணூர் என்ற ஊர்ப் பெயரும் ஒன்று. ஊணூர் தழும்பன் என்ற வள்ளலுக்குரியதாக இருந்தது. தழும்பனுக்குரிய ஊர் அதலின் தழும் பனூர் என்றும் ஊணூர் கூறப்பெற்றது.

"இரும்பான் ஒக்கல் தலைவன் பெரும்புண்
ஏஎர் தழும்பன் ஊணூர் ஆங்கண்
பிச்சை சூழ் பெருங்களிறு போல" (நற்.பா. 300, 9–11)

காண்டவாயில்

காண்டம் என்றால் நீர் காண்டவாயில் நீர்வாயில் நீர்த்துறை அல்லது நீர்க்கரை என்ற பொருளில் காண்டவாயில் என்ற ஊர்ப்பெயர் அமைந்திருக்கலாம் இதனை,

"புலம்பா கின்றே தோழி கலங்குநீர்க்
கழிசூழ் படப்பைக் காண்ட வாயில்" (நற்.பா. 38, 9–11)

என்ற பாடல் அடிகளால் அறியலாம். "மரக்காணத்தை அடுத்த மாண்டவாயில் என்னும் ஊரே காண்ட வாயில் என்று அறிஞர் சிலர் எண்ணுகின்றனர்"[2].

கிடங்கில்

கிடங்கு என்ற சொல் அகழி என்றும் பண்டகசாலை என்றும் பொருள்படுவதால் இந்த இரண்டில் ஒன்றன் அமைப்பால் பெற்ற பெயர் என்று எண்ணலாம். கிடங்கில் காவிதி கீரங்கண்ணனார், கிடங்கில் காவிதிப் பெருங்கொற்றனார், கிடங்கில் குலபதி நக்கண்ணனார் ஆகிய சங்கப்புலவர்கள் இவ்வூரினர்.

"அமுதம் உண்க நம் அயல் இலாட்டி
கிடங்கில் அன்ன விட்டுக்கரைக் கான்யாற்று" (நற்.பா. 65. 1–2)

குடந்தை

குடந்தைவாயில் என்றும் குடந்தை என்றும் குடவாயில் என்றும் கூறப்படுவன எல்லாம் ஓர் ஊரின் பிற பெயர்களே ஆகும். இவ்வூர் இன்று குடவாசல் என்று வழங்கப்படுகிறது. உ.வே.சாமிநாதையர், பின்னத்தூர் அ.நாராயணசாமி ஐயர், பெருமழைப் புலவர் சோமசுந்தரனார் போன்றோர் சங்க இலக்கியப் பாடல்களுக்கு உரை எழுதும்போது குடந்தை என்ற சொல்லுக்கு குடவாயில் என்றே பொருள் கூறுகின்றனர்.

"தேர் வண் சோழர் குடந்தை வாயில்
மாரி அம்கிடங்கின் ஈரிய மலர்ந்த" (நற். பா. 379, 7-8)

கொண்கானம்

கொண்கானத்தினில் நன்னனின் ஏழில்மலை இருந்ததாக சங்க இலக்கியம் கூறுகிறது. காடு மலையும் நிறைந்த பகுதியாகத் தோன்றுவதால் அந்த மன்னனின் கானம் கோன்கானம் (கோனுக்குரிய கானம்) எனப்பெயர் பெற்று நாளடைவில் கோன் என்பது கொன் என மருவி கொன்கானம் என்றாகி கொண்கானம் என வழங்கப்பெற்றுது. ஏழில்மலை என்பது ஏழுமல என்று இப்பொழுது மலையாளத்தில் கூறப்படுகிறது. ஆகவே கொண்கானம் இன்றைய வடமலாப் பகுதியாகும்.

"பொன்படு கொண்கான நன்ன னன்னாட்
டேழிற் குன்றம் பெறினும்" (நற்.பா. 391, 6-7)

சிறுகுடி

"குடி என்னும் சொல் ஊர்ப்பெயர்களில் அமைந்து குடியிருப்பை உணர்த்துவதாகும். உறவு முறையையுடைய பல குடும்பத்தார் ஒரு குடியினராகக் கருதப்படுவர். இத்தகைய குடியினர் சேர்ந்து வாழும் இடம் குடியிருப்பு என்றும் குடி என்றும் சொல்லப்படும்"[3]. அத்தகைய குடியிருப்புகள் பரப்பின் சிறுமையால் சிறுகுடி எனப்பெயர் பெற்றது.

பண்ணன் என்ற வள்ளலுக்குரியது சிறுகுடி என்று சங்க இலக்கியம் கூறுகிறது. ஆகவே சிறுகுடி கிழான் பண்ணன் என்னும் பெயர் பெற்றான்.

"வாணன் சிறுகுடி அன்ன" (நற். பா. 340, 9)

"மூதில் அருமன் பேரிசைச் சிறுகுடி" (நற்.பா. 376,6)

நியமம்

நகரம் அல்லது இடம் எனப் பொருள் தரும் நியமம் என்னும் சொல் நாளடைவில் ஒரு குறிப்பிட்ட ஊருக்கே பெயராய் அமைந்து விட்டது. "கோடிக்கரையை நிகம என்று பெரிப்புளூஸ் என்ற கிரேக்க நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார். நிகம என்று கூறும் ஊர்ப் பெயர் சங்க நூல்களில் நியமம் என்று வரும் பெயராகும் என்பர்"[4].

"நொச்சி நியமம் என்ற பெயருடன் ஒரு நியமம் இருந்தாக நொச்சி நியமங்கிழார் என்ற புலவரின் பெயரால் அறியமுடிகிறது. திருச்சிராப்பள்ளிக்கு அருகிலுள்ள நொச்சியம் என்னும் ஊரே நொச்சி நியமம் என்ற கருத்தும் உள்ளது"[5].

"நெடுங்கொடி நுடங்கும் நியம மூதூர்க்
கடுந் தேர்ச் செல்வன் காதல் மகனே" (நற்.பா. 45, 4- 5)

பாரம்

பாரம் என்னும் ஊர் கொண்கானத்து நன்னனுக்கு உரியதாய் இருந்திருக்கிறது. அவன் தலைநகர் என்றும் கருதப்பட்டது. கொண்கானம் ஏழிற்குன்றம் பூழிநாடு ஆகியவற்றை உள்ளடக்கியதாய் இருந்தது நன்னனின் நாடு "இன்றைய கண்ணனூருக்கு வடக்கே சுமார் 15 மைல் தொலைவில் இன்றும் அதே பாரம் என்ற பெயருடன் இருப்பதாகக் கூறப்படுகிறது"[6].

மிஞலி என்ற மன்னனால் காக்கப்பட்ட ஊர் என்று சங்க இலக்கியம் கூறுகிறது இதனை

"பூந்தோள் யாப்பின் மிஞலி காக்கும்
பாரத்து அன்ன ஆரமார்பின்" (நற்.பா. 265, 3-5)

என்னும் அடிகள் உணர்த்தும்.

பொறையாறு

கல்லாடனார் என்ற சங்ககாலப் புலவரால் பாடப்பெற்ற பொறையாற்றுக் கிழான் என்பவன் பொறையாற்றின் தலைவன் ஆவான். அவன் பெரியன் என்றே குறிக்கப் பெறுகிறான் "வலிமை என்னும் பொருளுடைய பொறை என்னும் சொல்லடியாக இவ்வூர்ப் பெயர் பொறையாறு எனப்பட்டது. ஊர்த்தலைவன் வலிமையுள்ள ஒரு பெருந்தலைவனாக இருந்து

அவன் வலிமை காரணமாகவே அவனது ஊரும் பெயர் பெற்றது"7.

நாகப்பட்டினம் மாவட்டம் மயிலாடுதுறை கோட்டம் தரங்கம்பாடி வட்டத்தில் பொறையாறு இன்று தேர்வுநிலைப் பேரூராட்சியாக உள்ளது.

"நறவு மகிழ் இருக்கை நல்தேர்ப் பெரியன்
கள் கமழ் பொறையாறு அன்ன" (நற்.பா. 131, 7–8)

மருங்கூர்ப்பட்டினம் –மருங்கை

பசும்பூண் வழுதி மருங்கை என்னும் பாண்டியனுக்கு உரியது. இவ்வூர் என்பதை வலியுறுத்துகிறது. மருங்கூர்ப்பட்டினம் என்றும் மருங்கை என்றும் இவ்வூர் சங்க இலக்கியங்களில் குறிக்கப்பெற்றுள்ளது. நற்றிணையில் 289 ஆம் பாடலைப் பாடிய சேந்தன் குமரன், அகநானூற்றில் 80 ஆம் பாடலைப்பாடிய கிழார் பெருங்கண்ணன் 327 ஆம் பாடலைப் பாடிய பாகைசாத்தன் பூதன் அகிய சங்ககாலப் புலவர்கள் மருங்கூரைச் சார்ந்தவர்கள்.

"தூங்கல் வங்கத்து கூம்பில் சேர்க்கும்
மருங்கூர்ப் பட்டினத்து அன்ன இவள்" (நற். பா. 258. 9–10)
"பசும்பூண் வழுதி மருங்கை யன்ன என்
அரும்பெறல் ஆய் கவின் தொலைய" (நற்.பா. 358, 10–11)

நிறைவுரை

சங்ககால மக்கள் நிலத்தின் தன்மைக்கேற்ப குன்று, சேரி, ஊர், பட்டினம் என்று ஊர்ப் பெயர்களை அமைத்து வாழ்ந்தனர். நற்றிணையில் அம்பர் அர்க்காடு, ஆலங்கானம், இருப்பை, ஊணூர், ஏழில், கழாஅர், காண்டவாயில், கிடங்கில், குடந்தை, குன்றூர், கூடல், கொண்கானம், கொல்லி, கொற்கை, சிறுகுடி, தொண்டி, நியமம், பாரம், பொறையாறு, மருங்கூர்ப்பட்டினம், மாந்தை, முள்ளூர், வெண்ணி அகிய ஊர்களை பாடல் அடிகள் வழி அறியலாம். நற்றிணைப் பாடல்களைப் பாடிய புலவர்களின் பெயர்களுடன் இணைக்கப்பட்டுள்ள ஊர்களின் வழி நாற்பதுக்கும் மேற்பட்ட ஊர்களை அறியமுடிகிறது. இவையும் இவை போன்ற இன்ன பிறவும் இக்கட்டுரையின் வழி அறிந்துகொள்ளலாம்.

சான்றெண் விளக்கம்

1. ஆர். ஆளவந்தார், இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள், ப.71
2. மேலது, ப. 104
3. ரா.பி. சேதுப்பிள்ளை, ஊரும் பேரும், ப.60
4. பி.எல். சாமி, இலக்கிய ஆய்வு, ப.128
5. கலைக்களஞ்சியம், ப. 6.614
6. ஆர். ஆளவந்தார், மு. நூல், ப. 157
7. மேலது, ப. 162

34. புதுச்சேரி மாநிலத்தில் வில்லியனூர்

க. கஸ்தூரிபாய்காந்தி,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
காஞ்சி மாமுனிவர் பட்ட மேற்படிப்பு மையம்,
புதுச்சேரி – 605 008.

முன்னுரை

நாட்டுப்புறவியல் என்பது நாட்டுப்புற மக்களிடையே காணப்படும் வழக்காறுகளைத் தொகுத்துக் கூறுவது. நாட்டுப்புற மக்களிடையே காணப்படும் வழக்காற்றியலில் ஊர் பெயராய்வும் ஒன்று. ஊர் பெயராய்வு கள ஆய்வின் மூலம் ஆராயப்படுவது இன்றைய வளர்ச்சி போக்குகளை அறிய துணைபுரியும். அதனால் இவ்வாய்வின் மூலம் புதுச்சேரி கொம்யூன்களில் ஒன்றான வில்லியனூர் வட்டாரத்தில் அமைந்துள்ள ஊர்பெயர்களை (பேட் என முடிகின்ற ஊர்கள்) ஆராய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

தமிழில் ஊர்ப் பெயர்:

பண்டைய வரலாற்றினை அறிந்து கொள்ள உதவும் வாயில்களுள் ஊர்ப்பெயர் ஆய்வியலும் ஒன்று, இவ்வாய்வு மொழியியல், வரலாறு, தொல்பொருளியல் நிலநூல், சமூகவியல் போன்ற பல்துறை ஆய்விற்கும் மிகுதுணையாக விளங்குகிறது. மக்களின் நாகரிகம், பண்பாடு ஆகியவற்றை அறியவும் இவ்வாய்வு துணை செய்கிறது.

தமிழில், பழங்காலத்தொட்டே ஊரின் சிறப்பு பற்றிச் சொல்லப்படுகிறது. தொல்காப்பியர் அகத்திணையியலில் முதற்பொருட்களாக நிலமும் பொழுதும்,

"முதல் எனப்படுவது நிலம்பொழுது இரண்டின்
இயல்பென மொழிப இயல்பு உணர்ந்தோரே"
(நூா. 950)

என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும் நிலப்பெயர்களாக முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என,

"மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்
சொல்லிய முறையால் சொல்லவும் படுமே"
(நூா. 951)

என்னும் நூற்பாவில் குறிப்பிட்டுள்ளார். மேலும் சங்க இலக்கியங்களில் பட்டினப்பாலை, மதுரைக் காஞ்சி என்னும் நூல்கள் ஊர் (நகர்) பற்றிய செய்திகளைக் கூறுவதாக உள்ளது. இவ்வூர் பெயராவின் மூலம் ஊரமைப்பு, மக்கள், தொழில்வளம், பழக்கவழக்கங்கள், பண்பாட்டுச் சிறப்புகள் போன்றவற்றை அறிய முடிகிறது.

வில்லியனூர் - சிறப்பு:

வில்லியனூரில் திருக்காமீசுவரர் கோயில் பாடல் பெற்ற திருத்தலங்களாக உள்ளது. 'இக்கோவில் திருவிழா வைகாசித் திங்களில் நடைபெறும்' (முன்சுட்டியது-ப. 83) திருவிழாவின்போது அவ்வூர் மக்கள் தேர் இழுத்து கொண்டாடுவர்.

வில்லியனூரில் மாதா கோவில் சிறப்புக்குரியது அம்மாதாவின் பெயர் வில்லியனூர் மாதா என்றே அழைப்படுகிறது.

ஊருக்கு அருகாமையில் சங்கராபரணி ஆற்றங்கறை அமைந்துள்ளது

சங்கராபரணி ஆற்றங்கறையையொட்டி இந்திய அரசாங்கத்தால் மின் எரிவாயு உற்பத்திக் குழுமம் அமைக்கப்பட்டுள்ளது. இவ்விடத்திலிருந்து இந்தியா முழுவதும் மின் எரிவாயு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

வில்லியனூர் வட்டாரத்தில் நடைபெறும் திருவிழாக்களில் திருக்காஞ்சி திருவிழாவும் ஒன்று, இது திருக்காஞ்சி என்னும் ஊரில் நடைபெறும். இது சங்கராபரணி ஆற்றங்கரையில் அமைந்திருக்கும் 'காசி விஸ்வநாதர்' கோவிலிலும் நடைபெறுவதால் 'ஆத்து திருவிழா' என்றும் இது மாசி மாதத்தில் நடைபெறுவதால் 'மாசி மகம்' என்றும் அழைக்கப்படுகிறது.

வில்லியனூரைச் சுற்றியுள்ள வேலையற்ற பல பெண்கள் பணிபுரியும் இடமாக 'ஹைடிசன்' என்னும் குழுமம் ஒதியம்பட்டு சாலையில் இருந்து சங்கராபரணி ஆற்றங்கரைக்குச் செல்லும் வழியில் அமைந்துள்ளது.

வில்லியனூர் பெயராய்வு:

'நாயக்கராட்சியில் வில்லைத் தலபுராணத்தின் அடிப்படையில் வில்லியனூர்-வில்லை நல்லூர் என்ற வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்' (தில்லைவனம், புதுச்சேரி மாநிலம் வரலாறும் பண்பாடும் ப. 88).

திருக்காமி நல்லூர் என்பது வில்லியனூரின் மற்றொரு பெயர் என சு. தில்லைவனம் (முன்சுட்டியது ப.91) அவர்கள் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார். இருப்பினும் தற்போதைய நடப்பியல் வழக்கில் வாழ்ந்து வரும் மக்கள், வில்லியனூர் என்னும் இப்பெயர் முற்காலத்தில் 'வில்வ நல்லூர்' என வழங்கப்பட்டது. அதுவே பின் வில்லியனூர் என மருவியதாக கூறுகின்றனர்.

வில்லியனூர் வில்வ நல்லூர் என பெயர் இருந்தமைக்குக் காரணம், அப்பகுதியில் வில்வ மரம் அதிகமாக இருந்ததால் அப்பெயர் பெற்றது என்றும் அதற்கு சான்றாக வில்லியனூர் திருக்காமேசுவரர் கோவிலில் வில்வ மரம் இன்றும் வளர்க்கப்படுவதைக் கொண்டும் அறியலாம்.

'அச்சு தேவராயர் காலம் முதலே இவ்வூருக்கு வில்லியனூர் என்னும் பெயர் வழங்கப்பட்டு வருகின்றது' (முன்சுட்டியது பக். 87-88).

வில்லியனூர் வட்டார ஊர்ப்பெயர்கள் (பேட்):

வில்லியனூர் வட்டாரத்தில் பேட் என முடியும் ஊர்ப் பெயர்கள் பின்வருமாறு, அவை,

வில்லியனூர் (அ) பெரியபேட்
புதுப்பேட்
கரையான்பேட் (அ) பீமாராவ் நகர்
உத்திரவாகினி பேட்
ஒதியம்பட்டு பேட்
ஜீ.என். பாளையம் பேட்
ஆத்து வாய்க்கால் பேட்
அரசூர் பேட்
கல்மேடு பேட்
பொறையூர் பேட்
சேதராப்பட்டு பேட்
கரசூர் பேட்
துத்திப்பட்டு பேட்
தொண்டமாநத்தம் பேட்
கூடப்பாக்கம் பேட்
சேந்தநத்தம் பேட்
பட்டாணிகலம் (அ) சேத்திலால் நகர்
ஆரியபாளையம் பேட்
உறுவையாறு பேட்
திருக்காஞ்சி பேட்
பங்கூர் பேட்
அரியூர் பேட்
சிவராந்தகம் பேட்
வள்ளுவன் பேட்

ஊர்ப்பெயர் (பேட்) தோற்றம்:

வில்லியனூர் பூர்விக காலனியாக பெரியபேட் அமைந்துள்ளது. இது பழங்காலத்தில் வில்லியனூர் பேட் என்றும், அவை நாளடைவில் பெரிய பகுதியாக இருந்ததால் பெரியபேட் என்றும் அழைக்கப்பட்டுள்ளது. இட பற்றாக்குறைவின் காரணமாக பிரிக்கப்பட்ட ஊர்கள் கரையான் பேட், புதுப்பேட், உத்திரவாகினிபேட் ஆகும்.

வில்லியனூர் திருக்காமேசுவரர் ஆலயத் தேர்திருவிழா நடத்துவதற்கு முதலில் அவ்வாலயத்திற்கு உள்ளமைந்திருக்கும் பிடாரி அம்மனுக்கு காப்பு கட்டி பலிகொடுத்து எல்லை கட்டும் விழா நடைபெற்ற பின்னே தேர் திருவிழா நடைபெரும். பலிகொடுக்கும் விழாவினை இக்கிராமவாசிகளைக் கொண்டு நடத்தப்படுவதன் காரணம் ஆய்விற்குரியது. மேலுள்ள பகுதிகளின் தோற்றக் காரணம் மேலாய்விற்குரியது.

முடிவுரை

இவ்வாய்வின் வழி வில்லியனூர் வட்டாரத்தைச் சுற்றியும் பேட்டு மக்கள் (ஆதிதிராவிடர்) சராசரியாக உள்ளனர். சேரி மக்கள் ஊருக்கு ஒதுக்குப்புறமாகவும் இடுகாட்டையொட்டியும் அவற்றின் அருகாமையிலும் அமைக்கப்படுத்தப்பட்டுள்ளது. அதாவது ஊர் மக்கள், சேரி மக்கள் என்ற பிரிவு அடிப்படையில் ஊர் மக்களின் வாழ்விடத்திற்கு பிற்பட்ட நிலையிலே சேரி(பேட்) மக்கள் அமைந்துள்ள நிலையைக் காணமுடிகிறது.

35. தமிழிலக்கியங்களில் ஊர்ப் பெயர்கள்

பி.சங்கரநாராயணன்
கீழ வடகரை,
பெரியகுளம்.

முன்னுரை

இலக்கியங்களில் ஊர்ப் பெயர்கள் குறித்து ஆராய்கையில் சில செய்திகள் பதிவாகியுள்ளதை உணர முடிகிறது. தமிழகத்தில் ஊர்ப் பெயர்கள் இடுகுறியாக அமையாது, காரணப் பொதுப் பெயராகவும், காரணச் சிறப்புப் பெயராகவும் அமைந்துள்ளன. மூவேந்தர் ஆட்சிக்கு உட்பட்ட ஊர்ப் பெயர்கள் தமழ்ப் பெயர்களே. மேலும் இயற்கைச் சூழலுக்கேற்பவும், நிலத்தின் தன்மைக்கு ஏற்பவும் அமைந்துள்ளன. நானிலப் பகுப்பு முறைக்கும் ஊர்ப் பெயர்களுக்கும் பெரிதும் தொடர்புள்ளது. சாதியின் அடிப்படையில் அமைந்த ஊர்ப் பெயர்கள் மிகப்பழமையானவை அல்ல. இவை பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

சங்க இலக்கியம் சுட்டும் ஊர்ப் பெயர்கள்

குறிஞ்சி	:	சிறு குடி, குறிஞ்சி	குறிஞ்சிப்பாறை
முல்லை	:	பாடி, சேரி, பள்ளி	முல்லை மங்கலம்
மருதம்	:	ஊர்	மருதந்தூர்
நெய்தல்	:	பட்டினம், பாக்கம்	நெய்தல் வாயில்
பாலை	:	பறந்தலை	சிறுபாலையூர்

குமரி என்ற சொல் கன்னி, துர்க்கை, குமரி முனை, அறிவின்மை, கற்றாழை என்றும் பொருள் தரும்.

"பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக் குமரிக் கோடும்"
(சிலப். காடுகாண்காதை 19-20)

இலக்கியங்கள் காட்டும் குடியிருப்பு இடங்களை ஆறு வகையாக வகுத்துக் கூறலாம்.

1. சிற்றூர் 2. ஊர் 3. பேரூர் 4. மூதூர் 5. நகரம் 6. நாடு

புவியியலார் கூறும் 13 நகரங்களை இலக்கியங்கள் தெரிவிக்கின்றன.

1. River Town	:	ஆற்றங்கரை நகரம்	அரிசில், காரியாறு, பொறையாறு.
2. Confluence Town	:	கூடுதுறையில் அமைந்த நகரம்	கூடல், கூடலூர்
3. Port Town	:	துறைமுக நகரம்	தொண்டி, கொற்கை, பூம்புகார்
4. Gap Town	:	கணவாயில் அமைந்த நகரம்	ஆயக்குடி ஏரகம்
5. Market Town	:	சந்தை நகரம்	மதுரை, பூம்புகார், வஞ்சி, முசிறி
6. Mining Town	:	சுரங்கத் தொழில் நகரம்	
7. Industrial Town	:	தொழில் நகரம்	செயலூர், கொற்கை
8. Administrative Town	:	நிர்வாக நகரம்	கருவூர், காஞ்சி
9. Resort Town	:	வாசஸ்தல நகரம்	எழில் பறம்பு பாரம்
10. Religious Town	:	சமயப்பணி நகரம்	காஞ்சி
11. Cultural Town	:	பண்பாட்டு நகரம்	உறையூர்
12. Defence Town	:	தற்காப்பு நகரம்	பாழி கிடங்கில்
13. Miltary Town	:	இராணுவ நகரம்	அட்டவாயில் முன்னயூர்

பொதுக்கூறு

சங்க இலக்கியங்களில் வரும் ஊர்ப் பெயர்களில் 43 விதமான **பொதுக் கூறுகள்** அமைந்துள்ளன.

- இயற்கை அமைப்பு
- செயற்கை அமைப்பு
- குடியிருப்பு நிலை

இயற்கை அமைப்பு

காடு	:	உம்பற்காடு
குன்றம்	:	மால் குன்றம்
குன்று	:	பரங்குன்று
கோடு	:	அறங்கோடு

மலை : கொல்லிமலை

செயற்கை அமைப்பு

அம்பலம் : கோட்டம்பலம்

கோட்டம் : குணவாயிற் கோட்டம்

குடியிருப்பு நிலை

இல் : அழும்பில்

ஊர் : உறத்தூர்

குடி : சிறைக்குடி

சேரி : ஏணிச்சேரி

நகர் : சுருட்டநகர்

நாடு : சுலந்திநாடு

பட்டினம்: காவிரிபூம்பட்டினம்

பாக்கம் : பட்டினப்பாக்கம்

ஆறு : இடையாறு

செயற்கை அமைப்பு

அகம் : உரோடகம்

கூற்றம் : முத்தூற்றுக் கூற்றம்

நேசம் : மாணவ நேசம்

நாடு : இடைக்கழி நாடு

முற்றம் : குல முற்றம்

துறை : ஆடுதுறை

ஊர் : அரிமணவாயில் உறந்தூர்

குடி : ஆலங்குடி

நகர் : திருநகர்

பாக்கம் : பட்டினப்பாக்கம்

புரம் : கபிலபுரம்

பட்டினம்: காவிரிபூம்பட்டினம்

பேடு : கச்சிப்பேடு

மங்கலம்: கிள்ளி மங்கலம்

பகுப்பில் அடங்காதவை

கை : கொற்கை

நியமம் : நொச்சி நியமம்

பள்ளி : இலவந்திளகப்பண்ணி

பேர் : கானப் பேர்

வயம் : இடவயம்

வெண்ணிலை : முது வெண்ணிலை

சங்க இலக்கியங்களில் காணும் சிறப்புக் கூறுகள் : 102 சிறப்புக் கூறுகள்

அதலம்	ஏழ்	கொண்	பாழி
அரி	ஐ	கோ	புலி
அரிமணம்	ஒல்லை	கோடு	பொறை
அலை	கச்சி	கோவல்	மரு
அழுந்து	கடம்பு	கோழி	மா
அள்ளு	கடியல்	கோண்	மாடல்
ஆ	கயம்	சாலி	மால்
ஆடு	கரு	சாறு	மிழலை
ஆல்	கரும்பு	சிக்கல்	முகையல்
ஆர்	கள்ளி	சித்திரம்	முற்று
ஆலம்	காரி	சிரா	முரஞ்சி
இரத்தினம்	காவிரி	சிறு	முள்

இருந்தை	கானம்	சிறுமை	முனனி
இடை	கிடங்கு	சிறை	மை
இலவந்திகை	கிள்ளி	செம்மை	வயல்
ஈரம்	குடக்கு	செல்	வாகை
உகாய்	குணக்கு	தகடு	வாரணம்
உம்பல்	குரா	துறை	விரிச்சி
உறை	குழு	நேன்	வெண்மணி
ஊண்	குளம்	நாண்	வெள்ளை
எயிற்	குறும்பு	நாண்மாடம்	வேம்பு
எருக்காடு	குன்று	நீடு	வேல்
எருமை	கூடல்	நெய்தல்	வெண்
எறிச்சல்	கொடுகு	நொச்சி	
ஏணி	கொல்	பரம்	
ஏர்	கொல்லி	பாமுள்	

இலக்கியச் சான்றுகள்

விரிவஞ்சி சில ஊர்ப் பெயர்களை மட்டுமே இங்கே காணலாம்.

அழும்பல்

மதுரைக்காஞ்சி
அகநானூறு
புறநானூறு
சிலப்பதிகாரம்

ஆகிய இலக்கியங்களில் 'அழும்பல்' என்ற ஊர்ப் பெயர் குறிக்கப்பெற்றுள்ளது.

மதுரைக்காஞ்சி (344 - 345)

விலங்கு பெருந்திருவின் மானவிறல் லேன
அழும்பில் அன்னி நாடிழந்தனரும்
பிணையலங் கண்ணி பெரும்பூட் சென்னி
அழும்பில் அன்ன அறா அயாணர் (அகம் 44: 14-15)
அறைபறையென்றே யழும்பில் வேணுரைப்ப (சிலப் : 24:177)

ஆய்

தென்திசை (ஆஆய்க்குடி) இன்றாயின்
பிறழ்வது மன்னோ இம்மலர்தலை உலகே (புறம் 132 : 89)

பள்ளி

சங்க காலம் தொட்டே அமையும் ஊர்ப் பெயர்க் கூறுகளுள் ஒன்று.

அகத்தியான் பள்ளி	சிராப்பள்ளி
அரண் பள்ளி	செம்போன் பள்ளி
இடைப் பள்ளி	தனி பள்ளி
காட்டுப் பள்ளி	மகேந்திரப் பள்ளி
சக்கரப் பள்ளி	

சமணர் வரலாற்றோடு இதனைத் தொடர்புபடுத்தும் தன்மை மரபாக அமைகிறது.

கம்பன் காட்டும் மிதிலை

விரியும் வார் புனல் மருதம் சூழ் மிதிலையர் கோமான்
அகன் பணை மிதிலை நாடு என்றும் (457)

சேக்கிழார்

"மாமுனிவர் பன்னு புகழ்ப் பசுபதி நேபாளத்தைப்
புணிந்து ஏந்தி (திருநீல(3) என நேபாளம் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

நிறைவுரை

தமிழிலக்கியங்களில் ஊர்ப் பெயர்கள் குறித்து ஆராய்கையில் தமிழர் வாழ்வில் இயற்கைப் பெயர்களே முதல் பெயராக அமைந்திருக்க முடியும் என்பதையும் சங்க காலத்தில் குடியிருப்பு பெயர்களும் மிகுந்த பயிற்சி பெற்றன என்பதையும் உணர முடிகிறது.

பக்தி இலக்கியங்களிலும் இறைத் தொடர்பான பல பெயர்களைக் காண முடிகிறது.

பரிபாடல், திருமுருகாற்றுப்படை, சிலப்பதிகாரம் போன்ற இலக்கியங்களில் அறுபடை ஊர்களையும் மதுரையையும் காண முடிகிறது.

டாக்டர் ரா.பி.சேதுபிள்ளை அவர்களால் ‘ஊரும் பேரும்’ என தொடங்கப்பட்ட ஆய்வுப்பணி இன்னும் நிறைய ஆராயப்பட வேண்டிய நிலையில் உள்ளது. உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனமும் சிறப்பு பணியாற்றியுள்ளது. இக் கருத்தரங்கின் நோக்கமும் இனிதே நிறைவேறுவதாக.

36. பதிற்றுப்பத்தில் ஊர்ப் பெயர்கள்

க.சங்கரி
ஆய்வியல் நிறைஞர்
அ.வ.அ.கல்லூரி (தன்.), மன்னம்பந்தல், மயிலாடுதுறை.

முன்னுரை

எட்டுத்தொகை நூல்களில் ஒன்று பதிற்றுப்பத்து இது சேர சோழ பாண்டியரென்னும் முடியுடைய மூவேந்தர் குலத்துள் முதல் வைத்தெண்ணப்பட்ட சேரர் குலத்தின் வரலாற்றை கூறும் சிறப்பு வாய்ந்தது. பதிற்றுப்பத்தினில் இடம்பெற்றுள்ள சில ஊர்ப்பெயர்களைப் பற்றி இக்கட்டுரை அமைகின்றது.

பதிற்றுப்பத்தில் ஊர்ப்பெயர்கள்

உம்பற்காடு

இளங்கண்ணனார் என்ற சங்ககாலப் புலவர் உம்பற்காடு என்னும் ஊரினர். ஆகவே உம்பற்காட்டு இளங்கண்ணனார் எனப்பெற்றார். இமயவரம்பன் தம்பி பல்யானைச் செல்கெழுகுட்டுவன் உம்பற்காட்டில் தன் கோல் சிறக்க ஆண்டான். கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவனைப் பதிற்றுப்பத்தில் ஐந்தாம் பத்தால் பாடிய பரணர் உம்பற்காட்டு பகுதியையும், அவன் மகன் குட்டுவன் சேரலையும் பரிசாகப் பெற்றார்.

"உம்பற்காடு சேர நாட்டுப் பகுதியாகும். உம்பல் என்ற சொல் யானையைக் குறிக்கும். எனவே யானைகள் மிகுந்த காடு என்ற பொருளில் இவ்வூர் பெயர் பெற்றது"[1]. பதிற்றுப்பத்தில் மூன்றாம் பத்தின் பதிகத்தில் உம்பற்காடு என்ற ஊர்ப் பெயர் இடம் பெற்றுள்ளது. இதனை,

"இமைய வரம்பன் தம்பி அமைவர
உம்பற்காட்டைத் தன்கோல் நிறீஇ" பதிற். பதி.3 (1-2)

இப்பாட்டு அடிகள் வழி அறியமுடிகிறது.

கடம்பின் பெருவாயில்

கடம்பு என்ற மரவகை நிறைந்த பகுதியாய் இருந்து இப்பெயர் பெற்றது. பதிற்றுப்பத்தில் நான்காம் பத்தின் பதிகத்தில் கடம்பின் பெருவாயில் என்ற ஊர்ப்பெயர் குறிக்கப்பட்டுள்ளது. சேர மன்னன் நார்முடிச் சேரல் என்பவன் இவ்வூரில் நன்னனை வென்று, அவன் காவல் மரமாகிய வாகையைத் தடிந்து வெற்றி கொண்டான்.

"பூமி நாட்டைப் படையெடுத்துத் தழீஇ,
உருள் பூங் கடம்பின் பெருவாயில் நன்னனை" பதிற். பதி.4 (6-7)

என்ற அடிகளால் உணரலாம்.

"நன்னனின் ஏழில் குன்றத்தை அடுத்தே கடம்பின் பெருவாயில் என்ற ஊரானது இருந்துள்ளது"[2].

குடநாடு

கொடுந்தமிழ் நாடு பன்னிரண்டனுள் குடநாடும் ஒன்று. தமிழ்நாட்டின் மேற்குப் பகுதி திசைப்பெயருடன் இணைந்து குடநாடு என்னும் பெயர் பெற்றது. அந்நாட்டு மன்னன் சேரன் குடவர்கோ எனப் பெயர் பெற்றான்.

"வடவர் உட்கும் வான்தோய் வெல் கொடிக்
குடவர் கோமான் நெடுஞ் சேரலாதற்குச்
சோழன் மணக்கிள்ளி ஈன்றமகன்" பதிற். பதி.5 (1-3)

கொடுகூர்

அக்கரைநண்ணிக்கொடுகூரை எறிந்தான் கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன் என்ற செய்தியானது கொடுகூர் அக்கரையில் இருந்ததை உணர்த்துகிறது. "ஒடுங்குதல் அல்லது பொருந்துதல் என்னும் பொருளுடைய கொடுகு என்ற பகுதியைப் பெற்றது கொடுகூர் என்ற

ஊர்"3.

"அக்கரை நண்ணிக் கொடுகூ ரெறிந்து
பழையன் காக்குங் கடுஞ்சினை வேம்பின்
முழாரை முழுமுதல் துமியப் பண்ணி" பதிற். பதி.5 (12-14)

என்ற அடிகள் கொடுகூர் என்று ஒரு ஊர் இருந்ததைப் புலப்படுத்துகிறது.

கொல்லி

கொல்லிக் கூற்றத்தில் தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும் பொறை அதியமானோடு இரு பெருவேந்தரையும் உடனிலை வென்று, முரசு, குடை, கலன் ஆகியவற்றைப் பெற்றான் என்பதனை

"கொல்லிக் கூற்றத்து நீர்கூர் மீமிசைப்
பல்வேற் றானை யதிகமானோ" பதிற். பதி.8 (2-3)

தகடூர்

அதியமான் நெடுமான் அஞ்சி என்ற வள்ளலின் தலைநகராய் இருந்த ஊர் தகடூர் ஆகும். தகடூர் என்ற ஊர்ப்பெயரினை பதிற்றுப்பத்து பாடல்களால் அறியமுடிகிறது.

"பல்பயன் நிலைஇய கடறுடைய வைப்பின்
வெல்போர் ஆடவர் மறம்புரிந்து காக்கும்
வில்பயில் இறும்பின், தகடூர் நூறி" பதிற். பா.78 (7-9)

தொண்டி

"கடற்கழி என்னும் பொருளுடைய தொண்டி என்னும் சொல் படகுகள் போன்றவை வந்து செல்வதற்கு ஏற்ற ஆழமான பள்ளமான கடற்கரை ஓரத்தில் அமைந்த இடத்தைக் குறிக்கப் பயன்பட்டது. நாளடைவில் கடற்கரை நகரத்திற்கும் பெயரானது"4.

பதிற்றுப்பத்தில் ஆறாம்பத்தின் பதிகத்தில் தொண்டி என்ற ஊர்ப்பெயர் பயின்று வந்துள்ளது. மேலும் எண்பத்தெட்டாம் பாடலடியில் இவ்வூர்ப்பெயர் இடம் பெற்றுள்ளது என்பதனை,

"குடக்கோ நெடுஞ் சேரலாதற்கு வேஎள்
ஆவிக்கோமான் தேவி ஈன்ற மகன்
தண்டா ரணியத்துக் கோடப்பட்ட வருடையைத்
தொண்டியுள் தந்துகொடுப்பித்துப் பார்ப்பார்க்கு
கபிலையொடு குடநாட்டு ஓர்ஊர் ஈந்து" பதிற். பதி.6 (1-5)

மாந்தை

மாந்தை கடற்கரை நகரம். மேலைக் கடற்கரையில் சேர மன்னர்களுக்கு உரியதாய் இருந்தது. பதிற்றுப்பத்தில் மரந்தை என்று இவ்வூர் குறிக்கப்பட்டுள்ளது.

"இரங்க நீர்ப்பரப்பின் மரந்தையோர் பொருந" பதிற். பா.90 (28)

வஞ்சி

வஞ்சி என்ற ஊர்ப்பெயர் தாவரத்தால் பெற்ற பெயர் ஆகும். வஞ்சி என்ற ஊர்ப் பெயரானது பதிற்றுப்பத்தின் ஒன்பதாம் பதிகத்தினில் இடம் பெற்றுள்ளது. இதனை,

"வைத்த வஞ்சினம் வாய்ப்பவென்று
வஞ்சி மூதூர்த்தந்து பிறர்க்கு உதவி" பதிற். பதி.9 (8-9)

என்ற அடிகளால் தெரிந்து கொள்ளலாம்.

வியலூர்

"வியலூர் என்பது செங்குட்டுவனால் வெல்லப்பட்ட தோரூர். வியலூர் எனவும் வழங்கப்ப ட்டதாகத் தெரிகிறது. நன்னன் வேண்மான் என்பவனுக்கு இவ்வூர் உரியது என்று சங்க இலக்கி யம் கூறுகிறது"5.

பெருமை பொருந்திய ஊர் என ஊரின் புகழ் கருதி வியலூர் எனப் பெயர் பெற்றதா அல்ல து காட்டுப் பகுதியில் அமைந்த ஊர் என்பதால் வியலூர் எனப் பெயர் பெற்றதா என்பது தெரியவி

ல்லை எனினும் பதிற்றுப்பத்தினில் வியலூர் என்ற ஊர்ப்பெயர் இடம்பெற்றுள்ளதை கீழ்க்கண்ட அடிகளால் அறியலாம்.

"உறுபுலி அன்ன வயவர் வீழ
இறுகுரல் நெய்தல் வியலூர் நூறி" பதிற். பதி.5 (8-9)

முடிவுரை

உம்பற்காடு, கடம்பின் வெருவாயில், குடநாடு, கொடுகூர், கொல்லி, தகடூர், தொண்டி, மாந்தை, வஞ்சி, வியலூர் போன்ற ஊர்களும் இவையன்றி இன்னும் சில ஊர்களும் பதிற்றுப்பத்தினில் இடம்பெற்றுள்ளன. தாவரம், காடு, கடற்கரை ஆகியவையும் ஊர்ப்பெயர் அமைய காரணமாக இருந்துள்ளன என்பதை இவ்வூர்ப் பெயர்களின் வழி அறியமுடிகின்றது.

சான்றென் விளக்கம்

1. ஆர். ஆளவந்தார் இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள் ப. 79.
2. மேலது, ப 98.
3. மேலது, ப 124
4. மேலது, ப 144.

37. அகநானூற்றில் ஊர்ப் பெயர்கள்

மா.சங்கரேஸ்வரி,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
அய்யநாடார் ஜானகி அம்மாள் கல்லூரி,(தன்னாட்சி)
சிவகாசி.

முன்னுரை:

மனிதன் இருக்கும் இடத்தை அடையாளப்படுத்த ஊர்ப்பெயர்கள் உதவுகின்றன. சங்க காலத்தில் சேர, சோழ, பாண்டிய மற்றும் குறுநில மன்னர்கள் பல நகரங்கள் மற்றும் ஊர்களை ஆண்டுள்ளனர், என்பதை இலக்கியங்கள் புலப்படுத்துகின்றன. அவர்கள் ஆண்ட நகரங்கள் மற்றும் ஊர்களின் பெயர்களை அகநானூற்றின் வழி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தலைநகரங்கள்:

சங்க காலத்தில் சீரும், சிறப்பும் பெற்ற ஊர்கள் தலைநகரங்களாக விளங்கின. இந்நகரங்களை மன்னர்கள் நாட்டின் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தனர்.

வஞ்சி – சேரர்
உறந்தை (உறையூர்)- சோழர்
கூடல் (மதுரை) – பாண்டியர்

வஞ்சி:

வஞ்சி சேர நாட்டின் தலைநகரமாக விளங்கியது. சேரன் செங்குட்டுவன் வஞ்சி மாநகரத்தில் கண்ணகிக்கு கோவில் அமைத்து வழிபட்டான் என்று சிலம்பு மொழிகின்றது. ஆனால் வஞ்சி மாநகரம் எது என்று அறியப்படாத நிலை இன்று உள்ளது. கொச்சி நாட்டிலுள்ள திருவஞ்சைக் களமே வஞ்சி மாநகரம் என்பார் சிலர். திருச்சி நாட்டைச் சேர்ந்த கருவூரே வஞ்சி என்பார் வேறு சிலர். கருவூர் தான் வஞ்சியாக இருந்திருக்கலாம் என்று தெரிய வருகின்றது. ஏனெனில் சேரனின் செல்வம் கொழிக்கும் சிறப்பினைக் கொண்ட நகரம் கருவூர் ஆகும் என்பதை,

"திரு மா வியல் நகர்க் கருவூர் முன்துறை
தெண் நீர் உயர் கரைக் குவைஇய
தண் ஆன் பொருநை மணலினும் பலவே" (அகம்; 21-23)

என்ற பாடல் அடிகள் உணர்த்துகின்றன. மேலும் கருவூர்க் கண்ணம்பிளனார் என்னும் புலவர்(263;12) அடிகளில் சேரனின் தலைநகரம் வஞ்சி என்று குறிப்பிட்டு கூறியதால் வஞ்சி என்பது கருவூராக இருக்கலாம் என்ற ஐயம் எழுகின்றது.

உறந்தை:

சோழ நாட்டின தலைநகரமாக உறந்தை திகழ்ந்தது. இது காவிரியாற்றங்கரையில் அமைந்திருக்கின்றது. உறந்தை என்பது இப்போது உறையூராக மருவியுள்ளது. முற்காலத்தில் திருச்சிராப்பள்ளி ஒரு சிற்றூராக உறையூருக்கு அருகில் இருந்தது. காலப்போக்கில் உறையூரின் பெருமை குறைந்தது. திருச்சி பெருமை வாய்ந்த நகரமாக இன்று விளங்குகின்றது. உறையூர் அமைந்திருந்த புதுவருவாயுடைய காவிரி ஆற்றில் உத்தரமும், நிறைமதியும் கூடிய நன்னாளில் "பங்குனி உத்திர விழா" நடைபெற்றது. இதனை,

"இன் கடுங்களிற்றின் உறந்தை ஆங்கண்
வருபுனல் நெறிதரும் இடுகரைப் பேரியாற்று
....
பங்குனி முயக்கம் கழிந்த வழிநாள்" (அகம்; 137;6-9)

என்ற அடிகள் தெளிவுறுத்துகின்றன.

மதுரை:

பாண்டியர்களின் தலைநகரம் மதுரையாகும். மதுரையை "கூடல் நகர்" என்றும் கூறுவர். ஆறுகள் கூடும் துறைகளை கூடல் என்று அழைத்தார்கள். மதுரையில் பொய்யா குலக்கொடி என்னும் வைகை ஆறு ஓடுவதாக சிலம்பு பகருகின்றது. இக்காலத்தில் விழாக்களின் நகரம், தூங்கா நகரம் என்ற சிறப்புப் பெயர் மதுரைக்கு உண்டு. என்றும் நீங்காத விழாக்களைக் கொண்ட கூடல் போர்க்களத்தில் பாண்டியன் சேர, சோழர்களுடன் போரிட்டான் என்பதை,

"பொய்யா விழவின் கூடற் பறந்தலை
ஊடன் இயைந்து எழுந்த இருபெருவேந்தர்" (அகம்;116)

என்ற அடிகள் தெளிவுறுத்துகின்றன.

துறைமுகம்:

கடல் வாணிபத்திற்கும், கப்பல் தளத்திற்கும் சிறந்த இடம் துறைமுகம் ஆகும். ஆறுகள் கூடும் இடத்தில் துறைமுகம் அமைந்திருக்கும்.

முசிறி – பாண்டியன்
தொண்டி – சேரன்

முசிறி

முசிறி என்பது பாண்டிய நாட்டின் துறைமுகம் ஆகும். முசிறி என்பது முசிரி என்றும் முசுரி என்றும் மருவி வந்தது. சேர அரசரது சுள்ளி என்னும் பழைய பெயர் கொண்ட பேரியாறு கடலுடன் கலக்குமிடத்து அமைந்திருந்ததாகக் கூறப்படும் ஊர் முசிறியாகும். இதனை,

" முதுநீர் முன்துறை முசிறி முற்றி"(அகம்,57:15)
"பொன்னொடு வந்து கறியோடு பெயரும்
வளம் கெழு முசிறி ஆர்ப்பு எழ" (அகம்,149:10-11)

என்ற அடிகள் உணர்த்துகின்றன.

மலையும் திருத்தலங்களும்:

பொதினி:

பொதினி மலை ஆவி என்ற குறுநில மன்னனுக்கு உரியதாகும். இவன் வேளிர் தலைவருள் ஒருவன். அஞ்சத்தக்க குதிரைகளை உடைய மழவர்களை வெருட்டி ஓட்டியவன். பொதினி மலை தற்போது பழனி மலை என்ற பெயரால் அழைக்கப்படுகின்றது. பழம் என்பதற்கு பழமை, தொன்மை என்று பொருள். இது அறுபடை வீடுகளுள் ஒன்றாகும். பொதினி மலைக்கு திருஆவினன் குடி என்ற பெயரும் உண்டு. இதனை,

"முருகன் நற்போர் நெடுவேள் ஆவி,
அறுகோட்டு யானைப் பொதினி ஆங்கண்" (அகம்,1:3-4)

என்ற அடிகள் உணர்த்துகின்றன.

வேங்கட மலை:

திருவேங்கட மலை புல்லி என்பவனுக்கு உரியது. முற்காலத்தில் தமிழ் நாட்டின் வட எல்லையாக இருந்தது. தற்போது ஆந்திர மாநிலத்திற்கு உரியதாக உள்ளது. இன்னாளில் வேங்கட மலை திருப்பதி என்று திருமால் வீற்றிருக்கும் திருத்தலமாக திகழ்கின்றது. இதனை (அகம், 209:9) (393:18-20) என்ற அடிகளின் வழி உணர முடிகின்றது.

பொதிய மலை:

தமிழ் நாட்டுக்கு தெற்கே உள்ள மலை பொதிய மலையாகும். இம்மலை சங்க காலத்தில் பசும் பூட் பாண்டியன் என்ற மன்னனுக்குரியதாகும். சங்க காலத்தில் "பொருப்பு" என்றும் கூறுவர். இதனை(அகம்,338:6) என்ற அடி உணர்த்துகின்றது. இப்பொதிய மலையின் அடிவாரத்தில் பொருநையாறு ஓடுகின்றது. பாபநாசம் என்னும் திருத்தலம் இம்மலையில் அமைந்துள்ளது.

பறம்பு மலை:

கடையேழு வள்ளல்களுள் ஒருவரான பாரி பறம்பு மலைக்குரியவன். ஆவான். இம்மலை பரன் என்றாகிப் பின் பிரான் மலை என மருவியது. தற்போது சிவகங்கை மாவட்டத்தில் திருப்பத்தூர் வட்டாரத்தில் உள்ள கொடுங்குன்றமே பிரான் மலையாகும்.

ஊர்கள்:

வேளூர்:

வேளூர் என்ற ஊர் நாகப்பட்டினத்துக்கு அருகில் உள்ளது. இது கீழ்வேளூர் என்று அழைக்கப்படுகின்றது. வேளூர் பலவகை நெல்வளங்களைக் கொண்டது. நல்ல மரங்கள் செறிந்து காணப்படும். இதனை,

"பழம்பல் நெல்லின் வேளூர் வாயில்" (அகம்,166:4)

என்ற அடி எடுத்துரைக்கின்றது. தற்போது கீழ்வேளூர் என்பது கீவளூர் என்று சிதைந்துள்ளது.

கழாஅர்:

சோழ நாட்டில் உள்ள ஊர் "கழா அர்" ஆகும். மத்தி என்பவனுக்கு உரியதாகும். இவ்வூர் காவிரி ஆற்றின் கரையில் அமைந்துள்ளது. மருத மரங்கள் நிறைந்த தோட்டமும், வயல்களையும் இவ்வூர் கொண்டுள்ளது. இவ்வூர் ஆற்றங்கரையில் அமைந்து உள்ளதால் கரிகாலன் தன் சுற்றத்துடன் புதுவருவாய் அன்று புனல் விழாவினைக் கண்டு மகிழ்ந்தான். இதனை,

"ஒலி கதிர்க் கழனி, கழாஅர் முன்துறை
கலி கொள் சுற்றமொடு கரி கால் காண" (அகம்,376:3-4)

என்ற அடிகள் தெளிவுறுத்துகின்றன.

அள்ளூர்:

அள்ளூர் பாண்டிய நாட்டில் உள்ள சிவகங்கை மாவட்டத்திற்கு அருகில் உள்ளது. ஊர் என்னும்பெயர் மருத நிலக் குடியிருப்பைக் குறிக்கின்றது. அள்ளூர் நெல்வளம் மிக்க செழியன் என்ற பாண்டிய மன்னனுக்குரயதாகும். இதனை?

"ஔிறு வாட் தானைக் கொற்றச் செழியன்
பிண்ட நெல்லின் அள்ளூர் அன்ன" (அகம், .46:13-14) என்ற அடிகள் உணர்த்துகின்றன.

நீடூர்:

சில ஊர்களின் பெருமை, குறுமை அவற்றின் பெயர்களால் அமைகின்றது. மாயூரத்திற்கு அருகே நீடூர் என்னும் ஊர் அமைந்துள்ளது. இவ்வூர் பழங்காலத்தில் பெரியதேர் ஊராக இருந்திருத்தல் வேண்டும். இதனை (அகம்,266:10) என்ற அடி உணர்த்துகின்றது.

ஊணூார்:

மருங்கூர் என்ற பட்டினத்துக்கு அப்பால் உள்ள ஊர் ஊணூர் ஆகும். தழும்பன் என்ற வள்ளல் என்பவனுக்குரியதாகும். இதனை(அகம்,220:13) (227:18-12) என்ற அடிகள் தெளிவுறுத்துகின்றன.

காமூர்:

காமூருக்கு தலைவன் கழுவுள் என்ற இடையர் தலைவன் ஆவான். இவ்வூர் பதினான்கு குடி வேளிரால் அழிக்கப்பட்டது. இதனை, (அகம்,365:12) (135:10-13) என்ற அடிகள் உணர்த்துகின்றன.

போஓர்:

புழையன் என்பவனின் ஊர் போஓர் ஆகும். போஓர் என்பது போரூர் என்ற அடி உணர்த்துகின்றது.

சிறுகுடி:

குடி என்னும் சொல் குடியிருப்பை உணர்த்துகின்றது. உறவுமுறையுடைய பல குடும்பத்தார் ஒரு குடியினராகக் கருதப்படுவர். இத்தகைய குடியினர் குடியிருப்பை குடி என்று சொல்லப்படும். குடி என்னும் சொல் ஊர்ப்பெயர்களல் அமைந்துள்ளது. தந்தை

நாட்டில் பேரளத்துக்கு அருகே சிறுகுடி ஊர் உள்ளது. இவ்வூர் வாணன் என்ற வள்ளலுக்கு உரியதாகும். சிறுகுடி தோட்டங்கள் நிறைந்த வளம் சான்ற ஊர் என்பதை,

"வாணன் சிறுகுடி வணங்குகதிர் நெல்லின்" (அகம்,269:22)

என்ற அடி உணர்த்துகின்றது.

கோடிக்கரை:

முற்காலத்தில் தென்னிந்தியாவினின்று இலங்கை நாட்டுக்குச் செல்வதற்குக் கோடிக்கரை மார்க்கமே குறுக்கு வழியாக இருந்தது என்பர். இராமன் கோடிக் கரையருகே அமர்ந்து தன் வீரர்க்கு மறைச் செய்திகளை கூறும் போது பறவைகள் ஒலி எழுப்பதாவறு தன் ஆணையால் அடக்கினான். ஏன்ற இராமகாதைச் செய்தி கூறப்படுகின்றதை, (அகம்,70:13)என்ற அடி உணர்த்துகின்றது. கோடிக் கரை என்பது இராமேஸ்வரத்திற்கு அருகில் உள்ள தனுஷ்கோடியாகும். முக்கூடலும் கூடும் இடம் தனுஷ்கோடியாகும்.

முடிவுரை:

சேர, சோழ, பாண்டியர் மற்றும் குறுநில மன்னர்கள் ஆட்சி செய்த நகரங்களும், ஊர்களும் தற்காலத்தில் மருவி வந்துள்ளது என்றும், நகரங்களின் சிறப்பு அழிந்து வந்துள்ளது என்றும் அறிய முடிகின்றது.

38. அகநானூற்றின்வழி அறியலாகும் போர் நிகழ்ந்த ஊர்கள்

முனைவர் திருமதி கா.சத்தியபாமா,
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,
குந்தவை நாச்சியார் அரசினர்
மகளிர் கலைக்கல்லூரி (தன்னாட்சி),
தஞ்சாவூர் – 613 007.

சங்க இலக்கியங்கள் தமிழர்தம் வாழ்வியலையும் பண்பாட்டையும் புலப்படுத்தும் களஞ்சியங்களாக விளங்குவன. பண்டைத்தமிழ் நாட்டின் முடியுடை மூவேந்தர்கள், குறுநில மன்னர்கள், கடையெழு வள்ளல்கள், புலவர்கள் ஆகியவர்களுடைய வரலாற்றைப் புலப்படுத்தும் கருவூலங்களாகத் திகழ்வன. புறவாழ்வில் வீரம் சிறந்து ஓங்கிய காரணத்தால் மன்னர்கள் போர்க்களம் சென்று இறுதிவரை வீரப்போர் புரிவர். இவ்வாறு நம் மூதாதையரின் வீர வாழ்க்கையை எடுத்துரைக்கும் சங்க நூல்களுள் அகநானூற்றில் பல மன்னர்களுக்கு இடையே நடைபெற்ற போர் நிகழ்ந்த ஊர்கள் குறித்த செய்திகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. அவற்றை ஆய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

போர்கள் நிகழ்ந்த ஊர்கள்

பண்டைத்தமிழ் மன்னர்களிடையே பல்வேறு காரணங்களால் போர்கள் நிகழ்ந்தன. பெரும் மன்னர்களிடையே போர் நிகழ்ந்த போது, சிற்றரசர்களும் அவர்களுக்காகப் போரில் இணைந்து கொண்டு போரிட்டனர். எனவே, அவை பெரும்போர்களாகவும் வரலாற்றுச் சிறப்புமிக்கப் போர்களாகவும் விளங்கின. சில போர்கள், நடைபெற்ற ஊர்களின் பெயரால் அழைக்கப்பட்டன. அவ்வூர்களில் நடந்த போரில் வெற்றிபெற்ற மன்னரின் பெயரோடும் இப்பெயர்கள் இணைத்துப் பேசப்பட்டன. சான்றாகத் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் என்ற பெயரைச் சுட்டலாம். சில போர்கள் நிகழ்ந்த ஊர்களின் பெயர்கள் அகநானூற்றுப் பாடல்களில் இடம்பெற்றுள்ளன.

தலையாலங்கானப்போர்

தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் “தலையாலங்கானம்' என்ற இடத்தில் சேரன், சோழன், திதியன், எழினி, எருமையூரன், இளங்கோ வேண்மான், பொருநன் ஆகிய எழுவரையும் ஒரு பொழுதில் ஒரு முகூர்த்த பொழுதிலேயே வென்றான்.

“பொன்னணி நெடுந்தேர்த் தென்னன் கோமான்
எழுவாழ் திணிதோள் இயல்தேர் செழியன்
நேரா எழுவர் அடிப்படக் கடந்த
ஆலங் கானத்து ஆர்ப்பினும் பெரிது”
- (209 : 3-6)

அகநானூற்றில் ‘ஆலங்கானம்' என்று சுட்டப்படும் இவ்வூர் தலையாலங்கானம் அழைக்கப்படுகிறது.

வெண்ணிப்பறந்தலைப் போர்

சிறந்த சோழமன்னனான கரிகால் வளவன் வெண்ணிப் போர்களத்தில் பதினொரு வேளிர் என்னும் குறுநில மன்னரையும் சேரலாதன் என்ற சேர மன்னனையும் பாண்டிய மன்னனையும் ஒருசேர ‘வெண்ணி' என்ற ஊரின் போர்க்களத்தில் வென்று வாகை சூடினான்.

“காய்சின் மொய்ம்பிற் பெரும்பெயர்க் கரிகால்
ஆர்கலி நறவின் வெண்ணி வாயில்
சீர்கெழு மன்னர் மறலிய ஞாட்பின்
இமிழிசை முரசம் பொருகளத் தொழியப்
பதினொரு வேளிரொடு வேந்தர் சாய
மொய்வலி யறுத்த ஞான்றைத்
தொய்யா அழுந்தூர் ஆர்ப்பினும் பெரிதே”
- (246. 8-14)

“கரிகால் வளவனொடு வெண்ணிப் பறந்தலைப்
பொருதுபூண் நாணிய சேர லாதன்”
- (55. 11-12)

ஆகிய இரு பாடல்களின் வழி இப்போர் குறித்து அறிய முடிகிறது. வெண்ணி என்று ஊர் ஆரூர் அருகே இன்று கோயில் வெண்ணி என்று சுட்டப்படுகிறது. ‘வெண்ணிப்பறந்தலை' என்றும் இவ்வூர் குறிக்கப்பட்டுள்ளது என்பதையும், அழுந்தூர் என்ற ஊர் இவ்வூருக்கு அருகில் உள்ளது

என்பதையும் பாடலின் வழி அறியலாம். 'கடுந்தேர்த் திதியன் அழுந்தை' (196.11) என்பதால் இந்த ஊரை ஆண்டவன் திதியன் என்பது தெரிகிறது. இது இப்பாடலில் அழுந்தை எனச் சுட்டப்பட்டுள்ளது.

வெண்மணிப் போர்

சோழமன்னனொருவன் யானைப் பிடிப்பதற்காக மறவர் பலரை ஏவினான். அச்செயலை எழினி செய்யாத காரணத்தால் மன்னன் சினம் கொண்டு மத்தி என்ற மறவனை ஏவினான். அவன் எழினியைப் பிடித்து அவன் பல்லைப் பிடுங்கி வந்து அரண்மனைக் கதவில் பதித்தான். அவ்வீரச் செயலுக்கு விளக்கமாகக் கல்ஒன்றையும் கடற்கரைத் துறையில் நட்டுவைத்தான் என்னும் வரலாற்றினை அகம் பாடலால் தெரிந்து கொள்ள முடிகிறது.

"குழியிடை கொண்ட கன்றுடைப் பெருநிரை
பிடிபடு பூசலின் எய்தாது ஒழியக்
கடுஞ்சின வேந்தன் ஏவலின் எய்தி
நெடுஞ்சேண் நாட்டில் தலைத்தார்ப் பட்ட
கல்லா எழினி பல்லெறிந்து அழுத்திய
வன்கண் கதவின் வெண்மணி வாயில்
மத்தி நாட்டிய கல்கெழு பனித்துறை"
- (211. 8-15)

என்ற பாடடிகள் 'வெண்மணி' என்ற ஊரில் நடந்த போரினைச் சுட்டுவதாக அமைந்துள்ளது.

கழுமலப் போர்

பழையன் என்ற சோழ மன்னன், சேரர் படைத்தலைவர்கள் அத்தி, நன்னன், ஏற்றை, கங்கன், கட்டி புன்துறை ஆகிய அறுவரையும் வென்று விழுப்புண்பட்டு இறந்தான். இதனைக் கண்டு பெரும்பூண் சென்னி என்பான் சேரனுடைய கழுமலம் என்னும் ஊரை முற்றுகையிட்டு அதில் இருந்த கணையன் என்ற படைத்தலைவனைப் பிடித்ததோடு அனைத்தையும் கைப்பற்றினான். அவனுடைய ஊர் அழும்பில் என்பதாகும். அது குடவாயில் போன்ற அழகுடையது. அழும்பில் என்பது பாண்டிய நாட்டில் உள்ள ஊராகும். குடவாயில் என்பது சோழநாட்டில் உள்ள ஊர்.

"பருந்துபடப் பண்ணி பழையன் பட்டென
கண்டது நோனா னாகி திண்தேர்க்
கணையன் அகப்பட கழுமலம் தந்த
பிணையலம் கண்ணில் பெரும்பூட் சென்னி
அழும்பில் அன்ன அறாஅ யாணர்
பழம்பல் நெல்லின் பல்குடிப் பரவை
பொங்கடி படிகயம் மண்டிய பசுமிளை
தண்குட வாயில் ...."
- (44. 11-19)

என்ற பாடலடிகள் கழுமலத்தில் நடந்த போரை எடுத்துரைப்பன. இப்பாடலின் அழும்பில், குடவாயில் முதலான ஊர்களும் சுட்டப்பட்டுள்ளன.

வாகையூர்ப் போர்

சோழமன்னன் கரிகாலன் செய்த மற்றொரு போர், வாகை என்ற ஊரில் நடைபெற்றதாகும். அப்போரில் கரிகாலனை எதிர்த்த ஒன்பது மன்னர்களும் தோல்வியுற்றனர். அங்ஙனம் தோற்றோடும் பொழுது, தம் ஒன்பது வெண்கொற்றக் குடைகளையும் போர்க்களத்தில் விட்டுச் சென்றனர். இப்போரை,

"பெருவளக் கரிகால் முன்னிலைச் செல்லார்
சூடா வாகைப் பறந்தலை ஆடுபஎ
ஒன்பது குடையும் நண்பகல் ஒழித்த
பீடுஇல் மன்னர் போல
ஓடுவை ...."
- (125. 18-22)

என்று பரணர் எடுத்துரைக்கிறார்.

அரிமணவாயில் உறத்தூர்ப் போர்

யாழிசை ஒலிக்கும் தெருக்களையுடைய நீடூரின் தலைவன் வாள் வெற்றியை உடைய 'எவ்வி' என்ற சிற்றரசன். இவன் அரிமணவாயில் உறத்தூர் என்ற ஊரில் பகைவர்களை அழித்து அந்த ஊரில் கள்ளுடன் கூடிய பெருஞ்சோற்றை அனைவருக்கும் வழங்கினான். இதனை,

"யாழிசை மறுகின் நீடூர் கிழவோன்
வாய்வாள் எவ்வி ஏவல் மேவார்
நெடுமிடல் சாய்ந்த பசும்பூண் பொருந்தலர்
அரிமண வாயில் உறத்தூர் ஆங்கண்
கள்ளுடைப் பெருஞ்சோற்று எல்லிமிழ் அன்ன"
- (299. 10-14)

என்ற உவமையினால் அறிந்து கொள்ள முடிகிறது. இப்பாடலில் எவ்வியின் ஊராகிய நீடூரும் அவன் பகைவர்களைப் புறமுதுகிட்டு ஓடச் செய்த அரிமண வாயில் உறத்தூரும் குறிக்கப்பட்டுள்ளன.

பருவூர்ப் போர்

அஃதை என்பவளின் தந்தையான பெருமையுடைய யானையையும் வெல்லும் போரையுமுடைய சோழமன்னன் ஒருவன், பருவூர்ப் பறந்தலை என்ற இடத்தில் சேர, பாண்டியரோடு போரிட்டான். அப்போரில் இருபெரும் வேந்தரும் இறந்துபட அம்மன்னர்களின் ஆண்யானைகளைக் கவர்ந்து கொண்ட போது மிகுந்த ஆரவாரம் எழுந்தது என்பது,

"......... .... அஃதை தந்தை
அண்ணல் யானை அடுபோர்ச் சோழர்
வெண்ணெல் வைப்பின் பருவூர்ப் பறந்தலை
இருபெரு வேந்தரும் பொருது, களத்தொழிய
ஒளிறுவாள் நல்லமர் கடந்த ஞான்றை
களிறுகவர் கம்பலை போல"
- (96. 12-17)

என்ற உவமையின் வாயிலாக பருவூர்ப் பறந்தலையில் நடந்த போரைக் குறித்து அறிய முடிகிறது.

கூடற்பறந்தலை

யானைகளையும் போர்த்தொழிலையும் உடைய பாண்டியனின் விழாவையுடைய கூடற் நகரில் பக்கத்தில் உள்ள போர்க்களத்தில் சேர, சோழ மன்னர்கள் கடல்போன்ற பெரும்படையுடன் தாக்கினர். இப்போரின் இறுதியில் இரு மன்னர்களும் புறங்கண்டனர். இச்செய்தியை,

"மையணி யானை மறப்போர் செழியன்
பொய்யா விழவின் கூடற் பறந்தலை
உடனியைந்து எழுந்த இருபெரு வேந்தர்
கடல்மருள் பெரும்படை கலங்கத் தாக்கி
இரங்கிசை முரசம் ஒழிய பரந்தவர்
ஓடுபுறம் கண்ட ஞான்றை
ஆடுகொள் வியன்களத்து ஆரப்பினும் பெரிதே"
- (116. 13-19)

என்ற பாடலடிகளின் மூலமாகத் தெரிந்து கொள்ள முடிகிறது. கூடல் என்பது மதுரையின் வேறு பெயர் என்பதால் மதுரையில் இப்போர் நடந்துள்ளது என்பதை அறியலாம். பொதுவாகப் 'பறந்தலை' என்பது போர்க்களத்தைக் குறிக்கும் என்பதால், மதுரை நகருக்குப் பக்கத்தில் இருந்த போர்க்களம் என்று உரையாசிரியர்கள் கூறியிருப்பது இங்குச் சுட்டத்தக்கதாகும்.

கூடல்ப்போர்

பாண்டிய மன்னான பழையன் மாறனைச் சோழ மன்னான கிள்ளி வளவன் மதுரைக்குச் சென்று போரிட்டு வெற்றி கொண்டான். இதனை அகநானூற்றின் பாடலொன்று (346) எடுத்துரைக்கிறது.

நீண்ட தேரையும் அணியை அணிந்த யானையையும் உடையவன் பாண்டியன் பழையன் மாறன். அவனைச் சோழன் கிள்ளிவளவன் போரில் வீழ்த்தினான். அவனுடைய விரைந்த செலவையுடைய குதிரைகளுடன் ஆண்யானைகள் பலவற்றையும் கைகொண்டு மதுரையையும் கவர்ந்து கொண்டான். இதனால் பழையன் மாறனின் பகை மன்னான கோதை மார்பன் என்ற சேரமன்னர் மகிழ்ச்சியடைந்தான்.

"......... .... நெடுந்தேர்
இழையணி யானைப் பழையன் மாறன்
மாடமலி மறுகின் கூடல் ஆங்கண்
வெள்ளத் தானையோடு வேறுபுலத்து இறுத்த
கிள்ளி வளவன் நல்லமர் சாஅய்
கடும்பரி புரவியொடு களிறுபல வவ்வி
ஏதில் மன்னர் ஊர்கொள
கோதை மார்பன் உவகையின் பெரிதே"
- (346. 18-25)

என்ற பாடலடிகளின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது.

குறுக்கைப் பறந்தலை

பெரும்புகழ் உடைய மன்னன் அன்னி என்பான். இவன் குறுக்கைப் பறந்தலை என்ற இடத்தில் நடந்த போரில் திதியன் என்பவனின் காவல்மரமான பூக்கொத்துகளையுடைய புன்னை மரத்தின் அடிமரம் துணியும்படி வெட்டி வீழ்த்தினான்.

"......... .... பெருஞ்சீர்
அன்னி குறுக்கைப் பறந்தலைத் திதியன்
தொல்நிலை முழுமுதல் துமியப் பண்ணிய
நன்னர் மெல்லிணர் புன்னை போல"
- (145. 10-13)

என்ற பாடலடிகள் இதனை எடுத்துரைக்கின்றன.

பாழிப் பறந்தலை

தேன் நிறைந்த உச்சியையுடைய தன் குன்றைப் பாடும் சிறு பிரப்பங்கோலையுடைய பாணர் பரிசிலை விரும்பின் யானைகளைக் கொடையாக வழங்குபவன் வெளியன் வேண்மாண் ஆஅய் எயினன் என்பவன். இவன் அருளுடையவன். இவன் பாழிப் பறந்தலை என்னுமிடத்தில் யானையையும் தேரினையும் உடைய மிஞிலி என்பவனுடன் நண்பகற் பொழுதில் உண்டான போரில் புண்பட்டு வீழ்ந்தான் இதனைத்,

"தேம்முதிர் சிமைய குன்றம் பாடும்
நுண்கோல் அகவுநர் வேண்டின், வெண்கோட்டு
அண்ணல் யானை ஈயும் வண்மகிழ்
வெளியன் வேண்மான் ஆஅய் எயினன்
அளிஇயல் வாழ்க்கைப் பாழிப் பறந்தலை
இழையணி யானை இயல்தேர் மிஞிலியொடு
நண்பகல் உற்ற செருவில் புண்கூர்ந்து
ஒள்வாள் மயங்கு அமர்வீழ்ந் தென..."
- (208. 2-9)

என்று பரணர் அழகாக எடுத்தோதியுள்ளார்.

காமூர்ப் போர்

வெல்லும் போரையும் நீங்காத புகழையும் வானளாவிய குடையையும் உடையவன் கழுவுள் என்பவன். அவனுடைய ஊர் காமூராகும். இந்தக் காமூரில் பதினான்கு வேளிர் ஒன்றாகச் சேர்ந்து போரிட்ட செய்தியை,

"......... .... அடுப்போர்
வீயா விழுமிய விண்தோய் வியன்குடை
ஈரெழு வேளிர் இயைந்தொருங்கு எறிந்த
கழுவுள் காமூர் போல
கலங்கின்று ...."
- (135. 10-14)

என்ற பாடலடிகளால் தெரிந்து கொள்ள முடிகிறது.

பெருந்துறைப் போர்

வெற்றியையுடைய வாளையுடைய களக்காய்க் கண்ணி நார்முடிச் சேரல் என்ற சேர மன்னன், மேற்குத் திக்கில் உள்ள பெரிய பொன்வாகை மரத்தை உடைய பெருந்துறை என்னும் ஊரில் நிகழ்ந்த போரில் பொன்னணி அணிந்த நன்னன் என்ற வீரமன்னன் போர்க்களத்தில் இறக்குமாறு செய்து தான் முன்னம் இழந்திருந்த நாட்டை அடைந்தான்.

"......... .... குடாஅது
இரும்பொன் வாகைப் பெருந்துறைச் செருவில்
பொலம்பூண் நன்னன் பொருதுகளத்து ஒழிய
வலம்படு கொற்றம் தந்த வாய்வாள்
களக்காய்க் கண்ணி நார்முடி சேரல்
இழந்த நாடு தந்தன்ன"

- (199. 18-23)

என்ற உவமையின் மூலம் பெருந்துறை என்று ஊரில் நடந்த போர் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

முசிறிப்போர்

பாண்டிய மன்னனொருவன் முசிறியில் போர் செய்த செய்தியை அகநானூற்றுப் பாடலொன்று எடுத்துரைக்கிறது. பிடரி மயிரையுடைய குதிரைகளையுடைய கொடி கட்டப்பட்ட தேரை உடையவன் பாண்டியன். அவன் சிறந்த துறைமுகத்தையுடைய முசிறி என்னும் பட்டினத்தில் போர் செய்து அந்நகரையும் யானைப் படையையும் அழித்தான். அச்செய்தியைக்,

"கொய்சுவற் புரவிக் கொடித்தேர்ச் செழியன்
முதுநீர் முன்துறை முசிறி முற்றி
களிறுபட எருக்கிய கல்லென் ஞாட்பின்
அரும்புண் உறுநரின் ...."

- (57. 14-17)

என்ற பாடல்களின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது.

ஆய்வு முடிவுகள்

1. அகநானூற்றுப் பாடல்களில் அகச்செய்திகள் பேசப்படினும் மன்னர்கள், சிற்றரசர்கள், கடையெழு வள்ளல்கள், புலவர்கள் முதலானோரின் வரலாறு குறித்த செய்திகள் விரிவான நிலையில் கூறப்பட்டுள்ளன.
2. அகநானூற்றுப் பாடல்களில் நூற்றிற்கும் மேற்பட்ட பாடல்களில் ஊர்கள் பற்றிய செய்திகள் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் போர்கள் நடைபெற்ற பன்னிரண்டு ஊர்கள் சுட்டப்பட்டுள்ளன.
3. போர்ச் செய்திகள் பலவும் உவமைகளாக எடுத்தாளப்பட்டுள்ளன.
4. அரிய வரலாற்றுச் செய்திகளின் கருவூலங்களாக அகநானூற்றுப்பாடல்கள் விளங்குகின்றன என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

39. காணக்கிளியூர் நாட்டின் ஊர்களும் பெயர்களும்

திருமதி.இரா.சந்திரகலா, எம்.ஏ., எம்.ஃபில்.,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தேசியக்கல்லூரி, திருச்சிராப்பள்ளி

முன்னுரை

சங்ககாலம் தொட்டே வரலாற்றுப் பழமை மிக்கதாக விளங்கிய கானக்களூர் நாடானது காணக்கிளியூர் நாடு என்றும் கூறப்படும் இந்நாடு மழவர் என்னும் வீரக்குடியினர் வாழ்ந்த நிலப்பகுதியாகும். இந்நாடு சோழர், பல்லவர், பாண்டியர், விசயநகர அரசு ஆகிய பேரரசுகளின் கீழ் ஒரு அங்கமாக விளங்கியதாக இல. தியாகராாசன் என்பவர் காணக்கிளியூர் நாடு என்ற தமது நூலில் குறிப்பிட்டுள்ளார். அந்நூல் வழி நின்று அந்நாட்டில் அமைந்துள்ள சில ஊர்களைப் பற்றி ஆராய்வதே இந்த ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

அமைவிடம்

திருச்சி மாவட்டத்தின் இலால்குடி வட்டத்தில் புள்ளம்பாடிக்கு வடக்கே பத்து கிலோ மீட்டர் தொலைவில் காணக்கிளியநல்லூர் என்னும் ஊர் அமைந்துள்ளது. இவ்வூர் சோழர் காலத்தில் கானக்கிளியூர் நாடு என்னும் வருவாய்த்துறைப் பிரிவின் கீழ் தலைநகரமாக இருந்துள்ளது. இந்நாட்டின் கீழ்

1. அழுந்தலைப்பூர்
2. ஆமரசூர்
3. ஆரோக்கியபுரம்
4. கண்ணாகுடி
5. கல்லக்குடி
6. காணக்கிளியநல்லூர்
7. கீழ்அரசூர்
8. கீழ்குளக்குடி
9. குமு;ர்
10. குளக்காநத்தம்
11. கூடலூர்
12. தாப்பாய்
13. நத்தங்காடு
14. நல்லூர்
15. நெய்குப்பை
16. பளங்காநத்தம்
17. புள்ளம்பாடி
18. பெருவளப்பூர்
19. மணிகண்டம்
20. முதுவத்தூர்
21. மேட்டுத்தெரு
22. மேட்டூர்
23. சவக்காட்டுப்பட்டி
24. சன்னாவூர்
25. சிறுவயலூர்
26. சிறுகளப்பூர்
27. தச்சங்குறிச்சி
28. மேல்அரசூர்
29. ரெட்டிமாங்குடி
30. வந்தலை
31. வடுகர்பேட்டை
32. வரகுப்பை
33. விடுதலைபுரம்

என்று 33 ஊர்கள் அமைந்திருந்ததாக அந்நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் தற்போது கானக்கிளியூர் நாடு தலைநகரமாக இல்லை. இந்நாட்டின் ஒரு பகுதியாக விளங்கிய புள்ளம்பாடி என்னும் ஊரை தலைமையாகக்கொண்டு இவ்வூர் செயல்படுகின்றது. புள்ளம்பாடி ஒன்றியத்தில் உள்ள 33 ஊராட்சிகளில் கீாணக்கிளியநல்லூரும் ஒரு ஊராட்சியாக இருந்து செயல்பட்டு வருகின்றது.

கானக்கிளியூர் நாட்டின் ஒரு பகுதியாக விளங்கிய குளக்காநாத்தம், சவக்காட்டுப்பட்டி, சன்னாவூர், நத்தங்காடு, நெய்குப்பை, பளங்காநத்தம், மணிகண்டம், மேட்டுத்தெரு போன்ற ஊர்கள் வேறு ஒன்றியங்களுக்கு மாற்றப்பட்டுள்ளதால் புள்ளம்பாடி ஒன்றியத்தில் இவ்வூர்கள் சேர்க்கப்படவில்லை.

தற்போதை புள்ளம்பாடி ஒன்றியத்தில் அமைந்துள்ள ஊர்கள்

கீழ்க்காணும் ஊர்கள் மக்கள்தொகை, நிலரப்பரப்புக்கு ஏற்றவாறு ஊராட்சி, பேரூராட்சிகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

1. ஆலம்பாடி,
   தங்கசாலை
2. ஆலம்பாக்கம்
3. கருடமங்கலம்,
6. ஊட்டத்தூர்
7. ஒரத்தூர்
   சாத்தப்பாடி
   சிலுவைப்பட்டி
8. பெ.கு. அகரம்

அழுந்தலைப்பூர்
4. கல்லகம்
5. காணக்கிளியநல்லூர், சிறுகளப்பூர்
9. பெருவளப்பூர்
10. புதூர்பாளையம் வானதிரையன்பாளையம்
11. புஞ்சைசங்கேந்தி அய்யனார்புரம்
12. கண்ணாகுடி குளக்குடி
13. கீழரசூர் தென்னரசூர் ஆமரசூர்
14. கோவண்டாகுறிச்சி வடுகர்பேட்டை
15. குமுர் வளர்நாதபுரம் மேட்டுத்தச்சங்குறிச்சி
16. மால்வாய் சதுர்பாகம்
17. மேலரசூர்
18. பா.கண்ணனூர்
19. முதுவத்தூர்
20. நெய்குளம், நெடுங்கூர்
21. நம்புகுறிச்சி
22. நஞ்சைசங்கேந்தி
23. ரெட்டிமாங்குடி
24. சரடமங்கலம்
25. சிறுகளப்பூர்
26. திண்ணக்குளம்
27. திரணிப்பாளையம் நல்லூர்
28. தாப்பாய்
29. வந்தலைக்கூடலூர் வந்தலை விடுதலைபுரம்
30. வரகுப்பை
31. இ.வெள்ளனூர் இடங்கிமங்கலம் இராமநாதபுரம் இருதயபுரம் ஆனந்தப்புரம
32. வெங்கடாசலபுரம்
33. விரகாலூர்

பேரூராட்சிகள்

1. கல்லக்குடி
2. புள்ளம்பாடி

தற்போதைய புள்ளம்பாடி ஒன்றியத்தில் 33 ஊராட்சிகளில் 55 ஊர்களும், 2 பேரூராட்சிகள் சேர்ந்து மொத்தம் 57 ஊர்கள் உள்ளன.

பாடி

முல்லைநிலத்தில் தோன்றும் ஊர்களே பாடி என்று பெயர் பெற்றதாக “புறவம் புறம்பான புறவணி முல்லை, அந்நிலத்தூர்ப்பெயர் பாடி யென்ப” என்று பிங்கல நிகண்டு கூறுகின்றது. இங்கு, புள்ளம்பாடி, ஆலம்பாடி என்னும் ஊர்கள் உள்ளது.

புள்ளம்பாடி

சோழர் காலத்தில் கோயில்களை நடுவமாகக் கொண்டு சமுதாய இயக்கம் நடைபெற்றது. கோயில்கள் அரசியல் ஆதிக்க உணர்வை மக்களிடையே உணர்த்துகின்ற கருவியாகவும், அரசர்களால் பயன்படுத்தப்பட்டதாக நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார். சிற்றூர்களில் வாழும் பெருநிலக்கிழார்களைக் கல்வெட்டுக்களில் நாட்டார் என்று கூறியதாக குறிப்பிட்டுள்ளார். அவர்கள் உடையான், கிழான், கோன் போன்ற காணியுரிமையைக் காட்டும் பட்டங்களை பெற்றிருந்தனர். நாட்டார்கள், கூட்டாகச் சேர்ந்து செயல்படும்போது எந்த நாட்டைச் சேர்ந்தவர்களோ, அந்நாட்டைப் பெயருடன் சேர்த்து கூறுவதாக கல்வெட்டுக்களில் குறிப்பிட்டுள்ளதைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவ்வாறாக கோயில் நிலங்களுக்கான வரித்தொகையை புள்ளம்பாடி உடையான குருகுலராயன், புள்ளம்பாடி உடையான் பாண்டிய தரையன் என்ற இரண்டு வழி நாட்டார்கள் ஒன்று கூடி நிர்ணயம் செய்ததாக கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் இங்கு வாழும் மக்கள் ஒரு காலத்தில் ‘புள்’ என்னும் பறவை இங்கு அதிகம் வாழ்ந்து வந்ததால் தான் இவ்வூருக்கு புள்ளம்பாடி என்ற பெயர் வந்ததாக செவிவழி செய்தியாகக் கூறுகின்றன.

குறிச்சி

முன்னாளில் குறிஞ்சி நிலத்தில் குறவர் வாழும் பகுதியையே “குறிச்சி” என்று குறித்தனர். “குறிச்சி எங்கள் குறச்சாதி குடியிருப்ப தம்மே” என்று மதுரை

மீனாட்சியம்மை குறம் கூறுகின்றது. ஆதியில் ''குறிச்சி, என்பது குறவர் குடியிருப்பைக் குறித்தாலும் பிற்காலத்தில் மற்றைய குலத்தார் வாழும் சிற்றூர்களுக்கும் இப்பெயர் வழங்கப்பட்டது. இவ்வொன்றியத்தில் ''கோவண்டாகுறிச்சி, மேட்டுத்தச்சங்குறிச்சி, நம்புக்குறிச்சி என்னும் ஊர்கள் உள்ளது.

கோவண்டாகுறிச்சி

'கோ' என்பது அரசனைக்குறிக்கும் சொல். இப்பகுதியை அரசன் ஆட்சி செய்துக்கொண்டு வாழ்ந்து வந்ததாக, கள ஆய்வின் போது மக்கள் கூறினர். எனவே அரசன் ஆண்ட இப்பகுதியை 'கோவண்டாகுறிச்சி' என்றே அழைக்கின்றனர். இவ்வூரின் சிறப்பு யாதெனில் ஒவ்வொரு தெருவும் முறையாக அமைக்கப்பட்டிருக்கும்.

மேட்டுதச்சங்குறிச்சி

சில குடியிருப்புகளின் பெயர்கள் அவற்றின் தன்மைகளைக் கொண்டு அறிவிக்கப்படுகின்றன. பள்ளம், மேடு போன்ற இடங்களில் அமைந்துள்ள ஊர்களை அவற்றின் பெயர் கொண்டு உணரலாம். இவ்வூர் மேடான பகுதியில் அமைந்துள்ளதால் மேட்டுத்தச்சங்குறிச்சி என்றே அழைப்பர்.

குடி

குடி என்னும் சொல் ஊர்ப்பெயர்களில் அமைந்து குடியிருப்பை உணர்த்துவதாகும். உறவு முறையுடைய பல குடும்பத்தார் ஒரு குடியினராகக் கருதப்பட்டு, சேர்ந்து வாழுமிடமே 'குடியிருப்பு' என்றும் 'குடி' என்றும் சொல்லப்படுகின்றது. இப்பகுதியில் 1) ரெட்டிமாங்குடி 2) கண்ணாகுடி 3)குளக்குடி 4) கல்லக்குடி ஊர்கள் உள்ளது.

ரெட்டிமாங்குடி

இவ்வூரின் பழைய பெயர் மாங்குடி என்பதாகும். இப்பகுதியில் ரெட்டியார் இனத்தவர் அதிகமாக வாழ்வதாலேயே இவ்வூர் ரெட்டிமாங்குடி என்று அழைப்பதாக களப்பயணத்தின்போது மக்களால் கூறப்பட்டது. விசயநகர ஆட்சிகாலத்தில் ஆந்திராவைச் சேர்ந்த ரெட்டி இன மக்கள் தமிழக வந்து குடியேறியதாக இந்நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

வளம்

வளம் மிகுந்த நிலத்தை நன்செய் (நஞ்சை) என்றும் வளம் குறைந்த நிலத்தை புன்செய் (புஞ்சை) என்றும் கூறுவர். இப்பகுதியில் சங்கேந்தி என்னும் ஊரில் வளம் மிகுந்த பகுதி நன்செய் சங்கேந்தி என்றும் வளம் குறைந்த பகுதி புன்செய் சங்கேந்தி என்றும் கூறப்படுகிறது.

பாளையம்

படைவீரருக்குரிய ஊர் பாளையம் எனப்படும். தமிழகம் முழுமையும் பல பாளையங்கள் காணப்படினும் இப்பகுதியில் 1)புதூர்பாளையம் 2)வானதிரையன்பாளையம், 3) திரணிப்பாளையம் என்னும் ஊர்கள் உள்ளன.

புதூர்பாளையம்

சில ஊர்களின் பழமையும், புதுமையும் அவற்றின் பெயர்களால் அறியப்படும். புதிதாகத் தோன்றும் ஊர்கள், புது என்றும் அடைமொழியைப் பெரும்பாலும் பெற்று வழங்கும். கோவண்டாகுறிச்சிக்கு அருகில் உள்ள ஊர்களே புதூர்பாளையம், வானதிரையன்பாளையம் என்னும் ஊர்களாகும். அரசன் ஆண்ட ஊருக்கு அருகில் தான் படைவீரர்கள் தங்கி இருப்பர் என்பதற்கு இவ்வூர்களே சான்றாகும்.

மங்கலம்

நன்மையானவற்றையெல்லாம் மங்கலம் என்னும் சொல் குறிப்பதாகும். இப்பகுதியில் 1) கருடமங்கலம் 2) சரடமங்கலம் 3) இடங்கிமங்கலம் என்னும் ஊர்கள் உள்ளது. சோழர்கால கல்வெட்டுக்களில் கருடமங்கலத்தை – கருவிடைமங்கலம் என்றும் சரடமங்கலத்தை – செருவிடை மங்கலம் என்றும் குறிப்பிட்டுள்ளது.

அகம்

அகம் என்னும் சொல் முதலில் வீட்டைக்குறித்து, அதன்பின் வீடுகளையுடைய ஊரைக்குறித்தது. இப்பகுதியில் கல்லகம் என்னும் ஊரும் உள்ளது.

திசைகள்

சில ஊர்களின் பெயர்கள் திசைகளின் பெயரால் கூறப்படுகிறது. கிழக்கு, மேற்கு, தெற்கு என்னும் சொற்களும் சில ஊர்ப்பெயர்களிலே காணப்படுகின்றன. அரசூர் என்னும் ஊர் கிழக்குப்பகுதியில் உள்ளதை கீழரசூர் என்றும், மேற்குப்பகுதியில் உள்ளதை

மேலரசூர் என்றும், தென்பகுதியில் உள்ளதை தென்னரசூர் என்றும் வழங்கப்படுவதை களஆய்வின் மூலம் அறியப்படுகிறது.

முடிவுரை

இடப்பரப்பு கருதி ஒரு சில ஊர்களை மட்டுமே இங்கு கூற முடிந்தது. கள ஆய்வு செய்ததன் வாயிலாக ஒவ்வொரு ஊரும் தன்னுள் ஒரு பெரிய வரலாற்றையே புதைத்து வைத்துள்ளது என்பதை இக்கட்டுரையில் கண்கூடாக காணமுடிகின்றது.

40. நாவுக்கரசர் தேவாரத்தில் ஊர்ப்பெயர்கள்

முனைவர்.இரா.சந்திரசேகர்
தமிழ்த்துறை விரிவுரையாளர்
எஸ்.எஸ்.துரைச்சாமி நாடார் மாரியம்மாள் கல்லூரி.
கோவில்பட்டி..

தமிழகத்தில் சங்ககால மன்னர்கள் ஆட்சிக்குப் பின்னால் நிலையான தமிழ் மன்னர் ஆட்சி ஏற்பட வில்லை.சமணமும் பௌத்தமும் தம் ஆதிக்கத்தை செலுத்தத் தொடங்கின.ஆகவே ஆழ்வார்களுக்கும் நாயன்மார்களுக்கும் தத்தம் சமயத்தைக் காக்க வேண்டிய பொறுப்பு ஏற்பட்டது. ஆகவே அவர்கள் ஊர்ஊராகச் சென்று தம்முடைய சமயத்தைப் பரப்பினர்.அந்நிலையில் அவர்கள் பாடிய பாடல்களில் ஊர்களைப் பற்றிய குறிப்புகளைக் காணமுடிகிறது.அவ்வகையில் நாவுக்கரசரது தேவாரத்தில் காணப்படும் ஊர்ப்பெயர்கள் பற்றிய செய்திகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

திருக்கஞ்சனூர் :

சோழ நாட்டு சைவத் திருப்பதிகளுள் ஒன்று இது. நரசிங்கன் பேட்டைப் புகைவண்டி நிலையத்திலிருந்து ஒரு கல் தொலைவில் உள்ளது. காவிரியின் வடகரையில் உள்ளது. பிரமன் வழிபட்டது ஆதலின் கஞ்சனூர் எனப்பட்டது. அக்கினியும் வழிபட்டான் என்று கூறுவர்.

ஆனிலைந்து கந்தானை அமரர் கோவை
அயன் திருமால் ஆனானை அனலோன் போற்றும்
காவலனைக் கஞ்சனூராண்ட கோவைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டுய்ந்தேனே -7131

என்று இவ்வூரினைக் குறித்து அப்பர் பாடியுள்ளார்.

திருக்கடம்பந்துறை :

சோழ நாட்டு சைவத் திருப்பதிகளுள் ஒன்று. கடம்பு ஒரு வகை மரம். கடம்ப மரங்கள் மிகுந்துள்ளமையால் கடம்பந்துறை எனப்பட்டது. இப்போது கடம்பர் கோயில் என வழங்கப்படுகிறது. திருச்சி மாவட்டம் குளித்தலைப் புகைவண்டி நிலையத்திலிருந்து வடமேற்கே ஒன்றரைக் கல் தொலைவில் உள்ளது. கண்ணுவ முனிவருக்கும் அமரர்களுக்கும் சிவபெருமான் கடம்பவனத்தில் தோன்றிக் காட்சியருளிய இடம் என்பர்.

பூமென் கோதையுமை யொரு பாகனை
ஓமம் செய்தும் உணர்மின்காள் உள்ளத்து
காமற் காய்ந்த பிரான் கடம்பந் துறை
நாம மேத்த நந்தீவினை நாசமே -5409

என்ற பாடலடிகளில் அப்பர் கடம்பந்துறையைப் பற்றிப் பாடியுள்ளமையை அறியமுடிகிறது.

திருக்கடவூர் :

தஞ்சை மாவட்டத்தில் மாயவரம் தரங்கம்பாடிப் புகைவண்டிப் பாதையில் திருக்கடவூர் நிலையம் உள்ளது. இது காவிரித் தென்கரைத் தலங்களில் 47 ஆம் தலம் ஆகும். சாவின் அச்சத்தைக் கடக்க அருளும் திருப்பதி ஆதலின் கடவூர் எனப்பட்டது. திருமால் முதலானோர் தூயதோர் இடத்தில் உண்ண வேண்டுமென்று அமுத கலசத்தை இங்குக் கொண்டு வந்து வைத்தமையால் கடபுரி அல்லது கடவூர் எனப்பட்டது என்பர். அட்ட வீரட்டானங்களில் இதுவும் ஒன்று. மார்க்கண்டரைக் காத்தற் பொருட்டுக் கூற்றுவனை உதைத்தருளிய வீரம் நிகழ்ந்த தலம் எனவே வீரட்டானம் ஆயிற்று என்பர்.அப்பர் இவ்வூரினைக் குறித்து

பெரும் புலர்காலை மூழ்கிப் பித்தர்க்குப் பத்தராகி
அரும்பொடு மலர்கள் கொண்டாங்கு ஆர்வத்தை உள்ளே வைத்து
விரும்பி நல்விளக்குத் தூபம் விதியினால் இடவல்லார்க்குக்
கரும்பினில் கட்டி போல்வார்கடவூர் வீரட்டனாரே. -4465

என்று பாடியுள்ளார்.

திருக் கடவூர் மயானம் :

காவிரித் தென்கரைச் சிவத் தலங்களுள் 48 ஆம் தலம் இது. திருக்கடவூருக்குக் கிழக்கே ஒரு கல் தொலைவில் உள்ளது. சிவபெருமான் ஒரு காலத்தில் பிரமனை எரித்து நீறாக்கி அவனை மீண்டும் உயிர்ப்பித்துப் படைப்புத் தொழிலை அருளியதால் இத்தலம் மயானம் எனப்பட்டது. மார்க்கண்டேயர் பொருட்டுக் காலனைக் காலால் உதைத்தருளிய இடம் சாவின்

அச்சத்தைக் கடத்தற்குரிய தலம் ஆதலின் கடவூர் எனப்பட்டது. இப்போது மயானம் என்பது மெய்ஞ்ஞானம் என வழங்கப்படுகிறது.

பாசமான களைவார் பரிவார்க் கமுத மனையார்
ஆசைதீரக் கொடுப்பார் அலங்கல் விடைமேல் வருவார்
காசை மலர்போல்மிடற்றார் கடவூர் மயானம் அமர்ந்தார்
பேசவருவார் ஒருவர் அவர் எம்பெருமான் அடிகளே. -5606

என்ற பாடலில் அப்பர் இவ்வூரினைக் குறித்துப் பாடியிருப்பதனை அறிய முடிகிறது.

திருக்கழுக் குன்றம் :

இது தொண்டை நாட்டிலுள்ள 32 தலங்களுள் 28 ஆவதாகும். இத்தலத்திற்கு சம்பந்தர் குறிஞ்சிப்பண் ஒன்று, அப்பர் திருத் தாண்டகம் ஒன்று. சுந்தரர் நட்டபாடைப்பண் ஒன்று ஆக 3 பதிகங்கள் உள்ளன. வேதங்கள் மலையால் இறைவனைத் தாங்கியுள்ளதால் இம்மலை வேதகிரி, வேதாசலம் எனப்பெயர் பெறும். இத்தலம் செங்கல் பட்டில் இருந்து தென்கிழக்கே 15கி.மீ. தொலைவில் உள்ளது. உகந்தோறும் 2கழுகுகள் இங்குள்ள பெருமானைப் பூசித்துப் பேறு பெற்றுள்ள தலமாதலின் இவ்வூருக்கே திருக்குழுக்குன்றம் என்னும் பெயர் ஏற்படலாயிற்று. அதற்கேற்ப இப்போதும் நாள்தோறும் நடுப்பகலில் சடாயு, சம்பாதி என்னும் கழுகுகளின் வழித் தோன்றல்களாய் இரண்டு கழுகுகள் வந்து உணவுண்டு செல்கின்றன என்பர்.

பூவின்மேல் நான்முகனும் மாலும் போற்றப்
புணர்வரிய பெருமானைப் புனிதன் தன்னைக்
காவலனைக் கழுக்குன்றம் அமர்ந்தான் தன்னைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன்நானே -7151

என்ற பாடலடிகளில் திருக்கழுக்குன்றத்தினைக் காணமுடிகிறது.

திருக்கன்றாப்பூர் :

இது சோழ நாட்டில் காவிரியின் தென்கரையில் அமைந்துள்ள ஒரு சிவத்தலம், திருவாருருக்குத் தெற்கில் உள்ள நாட்டியத் தான்குடி புகைவண்டி நிலையத்துக்கு வடகிழக்கில் ஏறத்தாழ 8 கி.மீ கல்தொலைவில் உள்ளது. வைணவனுக்கு வாழ்க்கைப் பட்ட சைவப் பெண்ணொருத்தி கணவனுக்குத் தெரியாமல் ஒரு கன்று கட்டியிருந்த ஆப்பையே சிவலிங்கமாகக் கருதி வழிபட்டு வந்தாள். ஒருநாள் அதைக் கண்ட அவள் கணவன் அந்த ஆப்பைக் கோடாரியால் வெட்ட இறைவர் அவ்வரப்பிலிருந்து வெளிப்பட்டாள். இக்காரணங்களால் இவ்வூர் கன்றாப்பூர் என்றும், இவ்வூரில் எழுந்தருளியுள்ள இறைவர் நடுதறியப்பர் என்றும் வழங்கப்பட்டதாகக் கூறுவர்.

துடியனைய இடைமடவாள் பங்கா என்தும்
சுடலைதனில் நடமாடும் சோதீ யென்றும்
கடிமலர்தூய்த் தொழும் அடியார் நெஞ்சின் உள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே - 7806

என்ற அடிகளில் அப்பர் திருக்கன்றாப்பூரினைக் குறிப்பிட்டிருப்பதனைக் காணமுடிகிறது.

திருக்குரக்குக்கா :

சோழ நாட்டுத் தலங்களுள் ஒன்று. தஞ்சை மாவட்டத்தில் இக்காலத்தில் தலை ஞாயிறு என்று வழங்கப்பெறும். திருக்கருப்பறியலூர் என்னும் தலத்திற்கு வடக்கே 1கி.மீ. தொலைவில் இவ்வூர் உள்ளது. தஞ்சையிலிருந்து பேருந்து வழியாகத் தலை ஞாயிறு சென்று அங்கிருந்து இவ்வூரினை அடையலாம். குரக்குக்கா என்னும் பெயர் குரங்குச் சோலை என்று பொருள்படும். இத்தலம் அனுமார் வழிபட்ட சிறப்புடையது என்றும், அதனால் இது இப்பெயர் பெற்றது என்றும் கூறப்படுகிறது. ஆண்டில் ஒரு குறிப்பிட்ட நாளில் இந்தக் கோயிலில் பூசை முதலியன முடித்துக் கொண்டு பூசை செய்வோர் வந்துவிடுவர் என்றும் அதன் பின்னர் எங்கிருந்தோ சில குரங்குகள் இங்கு வந்து கருவறை வரையிற் சென்று வழிபடும் பாங்கில் இயங்கிப் பின்னர் செல்லும் என்றும் ஒரு செவிவழிச் செய்தி கேட்கப்படுகிறது. இவ்வூரினை அப்பரது

ஆலநீழல் அமர்ந்த அழகனார்
காலனை யுதை கொண்ட கருத்தனார்
கோல மஞ்ஞைகள் ஆலும் குரக்குக்காப்
பாலருக் கருள் செய்வர் பரிவொடே -5984

என்ற பாடலில் காணமுடிகிறது.

திருக்கொட்டையூர் :

கும்பகோணத்திற்கு மேற்கில் 3 கி.மீ தொலைவில் உள்ளது. வில்வாரணியம் என்பது இதன் வேறு பெயர். இவ்வூருக்கு மேற்கே 3 கி.மீ. தொலைவில் சுவாமிமலை இருக்கின்றது.

ஆமணக்குக் கொட்டைச் செடியின் கீழிருந்து இறைவர் தோன்றினமையால் இவ்வூர் கொட்டையூர் எனப்படுகிறது. கொட்டையூரில் செய்தபாவம் கட்டையோடே என்பது பழமொழி.

வருமணி நீர்ப் பொன்னி வலஞ் சுழியான் கண்டாய்
மாதேவன் கண்டாய் வரதன் கண்டாய்
குருமணிபோல் அழகமரும் கொட்டையூரிலே
கோடீச்சரத்து உறையும் கோமான்தானே -6967

என்ற பாடலில் இவ்வூரினைக் காணமுடிகிறது.

திருச் செம்பொன்பள்ளி :

தஞ்சாவூர் மாவட்டத்தில் மயிலாடுதுறை, தரங்கம்பாடிக் கிடையில் அமைந்த ஓர் ஊர் திருச்செம்பொன்பள்ளி. இன்று இவ்வூர் செம்பனார் கோயில் என வழங்குகின்றது. வடமொழியில் உள்ள பிரும்ம வைவர்த்த மகாபுராணத்தில் சுவர்ணதல மகாத்மியம் என்று இதன் பெருமை சூத முனிவரால் கூறப்படுகின்றது. இத்தலம் வீரபத்திரர் தோன்றிய தலமென்றும், இந்திரன் தவம் புரிந்து வச்சிராயுதம் பெற்ற இடமென்றும், இரதி இறைவனை வழிபட்டு மன்மதனைக் கணவனாகப் பெற்ற பதியென்றும் வடமொழிப்புராணம் கூறுகின்றது. சுவர்ண ரோமன் என்ற அரசனுக்கு அருள் செய்தமையாலும் தன்னளவில் பொன் போல ஒளிவிடுவதாலும் இங்குள்ள சிவலிங்கம் சுவர்ணலிங்கம் என்னும் காரணப் பெயர் பெற்றது என்பர்.

தந்தையும் தாயுமாகித் தானவன் ஞானமூர்த்தி
முந்திய தேவர் கூடி முறைமுறை இருக்குச் சொல்லி
எந்தை நீ சரணம் என்றாங்கு இமையவர் பரவிஏத்தச்
சிந்தையுள் சிவமதானார் திருச் செம்பொன் பள்ளியாரே -4445

என்ற பாடலில் அப்பர் இத்தலத்தில் கோவில் கொண்டிருக்கும் இறைவனைப் புகழ்ந்து பாடியுள்ளார்.

திருநனி பள்ளி :

புஞ்சை என்று இப்போது வழங்கப்பெறும் இத்தலம் தஞ்சை மாவட்டம் மயிலாடுதுறைக்கு வடகிழக்கே 13கி.மீ. தொலைவிலும் செம்பொன்னார் கோயில் புகைவண்டி நிலையத்திற்கு கிழக்கில் 5கி.மீ. தொலைவிலும் உள்ளது.

திருமகள் நீங்காது நிலை பெற்று உறையும் ஊராதலானும் மாதொரு பாகனான செல்லப்பரம் பொருள் விரும்பி வீற்றிருக்கும் இடமாதலினாலும் இப்பெயர் பெற்றது. திருநனி பள்ளி என்பர்.

புலர்ந்தகால் பூவுநீருங் கொண்டடி போற்ற மாட்டா
வலஞ்செய்து வாயினூலால் வட்டணைப் பந்தர் செய்த
சிலந்தியை அரையனாக்கிச் சீர்மைகள் அருளவல்லார்
நலந்திகழ் சோலை சூழ்ந்த நனிபள்ளி அடிகளாரே -5855

என்ற பாடலில் இவ்வூரினை அறியமுடிகிறது.பக்தி இலக்கியங்களில் இறைவனது சிறப்புகளையும் இறைவன் குடிகொண்டிருக்கும் திருத்தலச் சிறப்புகளையும் குறித்து இறையடியவர்கள் பாடியுள்ளார்கள்.ஆகவே ஊர்ப்பெயர்கள் குறித்த ஆய்விற்கு இவை பெருமளவு துணைபுரிவதனைக் காணமுடிகிறது.

41. பத்துப்பாட்டில் ஊர் பெயர்கள்

சந்திரா ரூபவதி, பி.எச்.டி
உதவிப் பேராசிரியை
தாசிம் பீவி அப்துல் காதர் பெண்கள் கல்லூரி
கீழக்கரை.

1. திருப்பரங்குன்றம் – 67 – 77

திருமகள் வீற்றிருந்த குற்றம் நீங்கிய கடைத் தெருவையும், மாட மாளிகைகள் மிக்க ஏனைத் தெருக்களையும் உடைய நகரம் 'கூடல்' என்று பெயர் பெற்ற மதுரை மாநகரம். அந்நகரின் மேற்குத் திசையில் உள்ளது திருப்பரங் குன்றம். சேற்றில் எழுந்த செந்தாமரையில் தேன் பருகச் சென்ற வண்டு அதில் திளைத்துக் கிடக்க, தாமரை குவித்து மூடிக் கொண்டதால் இரவெல்லாம் அதிற் சிக்கிக் கிடந்து, பொழுது புலர்ந்ததும் தாமரை கட்டவிழ்த்துக்கொள்ள அவ்வண்டு வெளியே போந்து, நெய்தல் ஊதிச் சுனையில் மலர்ந்த அழகிய குவளை மலரைச் சுற்றி ஒலிப்பதற்கு இடனாவது தண்பரங்குன்றம், உயிர்கள் அறியாமை என்னும் சேற்றில் எழும் அகப்பற்றும், புறப்பற்றுமாகிய தளையிற் பிணிப்புண்டு நிற்க முருகன் அருளால் அத்தளையினின்று நீங்கி எழுந்தால் அவனைக் கண்டு பேரின்பத்தில் திளைக்கலாம் என்ற கருத்தை குறிப்பாக உணர்த்துவது திருப்பரங்குன்றம்.

"அஞ்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும்
குன்று அமர்ந்து உறைதலும் உரியன்"

என்று தண்பரங் குன்றத்தின் சிறப்பை நக்கீரர் கூறுகிறார்.

2. திருச்சீர் அலைவாய் – நாமனூரலைவாய் – திருச்செந்தூர்

தேவ துந்துபி முழங்கவும், கொம்புகள் மிக்கொலிப்பவும் வெள்ளிய சங்குகள் முழங்கவும், இடியை ஒப்ப முழங்கும் முரசோடு, வெல் கொடியில் இருந்து மயில் அகவவும், சான்றோர்களாலே புகழப்பட மிக உயர்ந்த புகழி னையுடைய நாமனூரலைவாய் என்னும் சிறப்பு மிக்க ஊர், இவ்வூரின் கண் ஏற எழுந்தருளுதலும் முருகப் பெருமானுக்கு நிலை பெற்ற தன்மையாகும். இவ்வூரின் கண் ஆறுமுகம் உடைய முருகன் எழுந்தருளியிருக்கும் தன்மை சிறப்புக்குரியது. ஒரு முகம் கதிர் விரித்தன்று, ஒரு முகம் வரங்கொடுத்தன்று, ஒரு முகம் வேள்வி ஓர்க்கும், ஒரு முகம் திசை விளக்கும், ஒரு முகம் களம் வேட்டன்று, ஒரு முகம் நகையமர்ந் தன்று, நிமிர் தோள்களில் ஒரு கை ஏந்தியது, ஒரு கை சேர்த்தியது, ஒரு கை அசை இயது, ஒரு கை கடாவ, ஒரு கை விளங்க, ஒரு கை பொலிய, இரு கை திரிப்ப, ஒரு கை கொட்ப, ஒரு கை இரட்ட, ஒரு கை மழை பொழிய, ஒரு கை வதுவை சூட்ட முருகன் தண்பரங்க குன்றில் வீற்றிருந்தார்.

3. திரு ஆவினன்குடி – இன்று பழனி என்று அழைக்கப்படும் ஊர்

இது சங்க காலத்தில் 'பொதினி' என்ற பெயருடன் 'ஆவி' என்றும் வேளிர் தலைவனுக்கு உரியதாய் இருந்தது. இதன் அருகில் 'ஆய்க்குடி' என இருக்கும் ஊர் 'ஆவிகுடி' என்பதன் மருஉ. இப்பகுதியை கல்வெட்டுக்கள் 'வையாவி நாடு' என்று குறிக்கின்றன.

திரு, ஆ, இனன், கு, டி என்று பரிக்கப்பட்டுத் திருமகளும் காமதேனுவும், ஞாயிறும், நிலமகளும், தீக்கடவுளும் வழிபட்ட இடம் என்பதால் 'திருவாவினன்குடி' எனப்பட்டது எனப் பிற்காலம் புராண வரலாறு கூறுகிறது.

இனிச் சித்தன் ஊர் என்று சொல்லுகின்ற ஊர் முற்காலத்து 'ஆவினன்குடி' எனப் பெயர் பெற்ற தென்பர். குற்றமற்ற அறக் கற்பினையுடைய தெய்வானையாருடனே சில நாள் 'திருவாவினன் குடி' என்ற ஊரிலே இருத்தலும் உரியன் முனிவர்களும், தேவர்களும், திருமால் முதலிய கடவுளரும் தனது அருள் வேண்டி வந்து தொழும்படியாக, முருகப் பெருமான் 'திருவாவினன் குடியில்' எழுந்தருளியிருக்கும் பெருமையுடைத்து.

<u>திரு ஏரகம் :– திருவேரகம் என்னும் ஊர்</u>

இதனை 'மலை நாட்டகத்தொரு திருப்பதி' என்றார் நச்சினார்க்கினியர் 'அருணகிரியார்' சோழ நாட்டிலுள்ள சுவாமி மலை என்னும் தலமே 'ஏரகம்' என்று கூறியுள்ளார். இவ்வூரில் நீராடிய ஆடை புலராதபடி இருந்து வழிபடுவர் என்பது தோன்ற 'புலராக் காழகம் புலர உடீஇ' என்று கூறுகிறார் ஆசிரியர். 'சரவ ணபவ' என்னும் ஆறெழுத்து வேத மந்திரத்தை நாக்கு மட்டும் அசையும் அளவில் பல முறை ஒலித்துப் பின்னர் மலர்க ளை எடுத்து வழிபடுவர் இவ்வூரின் கண் இரு பிறப்பாளர் பொழுது அறிந்து, உடீஇ புகழ்ந்து, வாடி, ஏந்தி, நுவல, உவந்து ஏரகத்து உறைதலும் உரியவன் முருகப் பெருமான்.

<u>பாடல் 218 – 226 – திருமுருகாற்றுப்படை</u>
<u>பழமுதிர்ச்சோலை – மதுரைக்கு அருகில் உள்ளது.</u>

இப்பழமுதிர்ச் சோலை, முருகப் பெருமானுடைய ஆறுபடை வீடுகளுள் ஒன்று 'திருமாலிருஞ்சோலை' என்பர். பல்வேறு துகிற் கொடிகள் அசைந்தாற் போன்று அசைந்து, அகில், சந்தனமரம், மூங்கிலின் கொம்பு இவைகளின் வேரைப் பிளந்து, தேனிறால்களை கொடுத்து, ஆசினிப் பலாவின் சுளைகள் தன்னிடத்தேக் கலக்கச் சுரபுன்னையின் மலர்கள் உதிரக் கருங்குரங்குகளும், களிற்று யானைகளும், குதிக்கும்படியாகவும், வாழையின் அடிமரம் ஒடியவும், தொங்கின இளநீர்க்குலை உதிரவும், மிளகுக் கொடியின் கரிய கொத்துக்கள் கெட்டோட, ஆண் பன்றியும், மயிர் பொருந்திய கரடியும் மலை

முழஞ்சுகளில் புகுந்து ஒடுங்கவும், மலையுச்சியின்று 'இமும்' என்னும் ஓசையுண்டாகக் திறிக்கும் அருவியையுடையதும், பழம் முற்றினதுமான சோலைகளையுடையதும் ஆகிய பழமுதிர்ச் சோலை.

'அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்திருப்பவன் இறைவன்'
என்பதை பழமுதிர்ச் சோலை உணர்த்துகிறது.

<u>பத்துப்பாட்டு – சிறுபானாற்றுப்படை</u>

41 – 50 – வஞ்சிமாநகர்

சேரநாட்டில் உள்ள ஊர் வஞ்சி சேரர் நாட்டு செல்வங்களுள் தலை சிறந்தது, மிளகு, கழுநீர் மலரை மேய்ந்த எருமை, மிளகு படர்ந்த பலாமரத்தின் நிழலில், காட்டு மல்லிகைப் படுக்கையில், மஞ்சள் இலை தாவரத்துயிலும் நிர்வளம் மிக்க நகரம் வஞ்சி.

<u>51 – 67 – மதுரை – பாண்டிய நாடு</u>

முத்தும் முத்தமிழும், மூன்று சங்கங்களும் இருந்த பெருமையுடைத்து 'நிலந்தரு திருவின் பாண்டியன்' செந்தமிழை வளர்த்தப் பெருமையும் உண்டு.

'முத்தும்' முத்தமிழும் தந்து முற்றுமே'
(கம்ப. ஆறு செல். பா.53)

<u>உறந்தை</u>

'ஓடாப் பூட்கை உறந்தை'
என்றது, அந் நிலத்துக் கோழி, அயல் நிலத்து யானையைப் போரிடத்தே ஓடச் செய்து தான் ஓடாமைக்குக் காரணமான மறப் பண்புடைய 'உறந்தை' 'ஊரெனப் படுவது உறையூர்' இத்தொடரும் வெற்றிச் சிறப்பினைக் குறிக்கும் பெருமையுடையது உறந்தை.

<u>கொற்கை :-</u>

கடற்கரைப் பட்டினம், சிறந்த துறைமுகப் பட்டினம் வணிகத்தில் சிறந்து விளங்கிய ஊர். 'தத்து நீர் வரைப்பின் கொற்கை' என்பதனால் கொற்கையின் சிறப்பு விளங்கும்.

<u>வேலூர்: பெயர்க்கரணம் – சிறப்பு</u>

முருகன் கையில் உடைத்தாகிய வேலின் நுனிபோய நுனியினையுடைய ஆம்பல், தாமரை பூத்துள்ள கேணியினையுடையது வேலூர், 'நல்லியக் கோடன்' என்பான் தன் பகை மிகுதிக்கு அஞ்சி முருகனை வழிபட்ட வழி, அவன் இக்கேணியிற் பூவை வாங்கிப் பகைவரை எறியென்று கனவிற் கூறி, அதில் பூவை வேலாக நியமித்து இடம் எனவே வேலூர் எனவாயிற்று .

<u>ஆமூர் :</u>

நல்லியக் கோடனது ஊர், ஆற்றுப்படுத்துவது குளிர்ந்த வயல்களை உடையதும், சான்றோரை உடையதும் அரிய காவலை உடையதும், அகன்ற வீடுகளையும், பெரிய அகழியை உடையதுமாகிய சிறப்பினை உடையது ஆமூர்.

<u>முதூர் :</u>

நல்லியக் கோடனது ஊர், ஆமூரின் அண்மையிலேயே உள்ளது பழமை வாய்ந்தது, விழா நிகழ்வதுமாகிய தெருவினை உடையது இவ்வூர்.

<u>பத்துப்பாட்டு – பெரும்பானாற்றுப்படை</u>

<u>திருவெஃகா :</u>

இது காஞ்சியில் உள்ள திருமால் திருப்பதியாகும், திருமாலின் 108 திருப்பதிகளுள் இதுவும் ஒன்று, பெருமாள் அரவணையிற் பள்ளிகொண்ட கோலத்தோடு எழுந்தருளியுள்ளார் 'வெயில் நுழைபு அறியாக் குயில் நுழை பொதும்பர்' என்று ஆசிரியர் கூறியுள்ளதால், சோலையில் உள்ள மரங்களின் அடர்த்தியை எடுத்துக்காட்டி, சோலையின் வளம் கூறியுள்ள தன்மையைக் காணலாம். 'புனல் கால் கழீதிய பொழில்' என்று கூறியுள்ளதால் மழை பெய்து பெருகிய நீர் மரங்களின் அடிப்பாகம் வரையிற் பெருகித் தூய்மை செய்யும் என்பது புலனாகும்.

<u>கச்சி மூதூர் – காஞ்சி மாநகரம்</u>

'படைத் தலைபு அறியா' என்றதனால் பகைப் படையுடன் மோதும்போது, தமக்கு நேரும் ஊறு எண்ணி அஞ்சிப் புறம் கொடுத்து ஓடுதலை அறியாத வலிமையுடையவர்கள் காஞ்சி மறவர்கள். 'பல் குடி' என்ற தனால், நாற்பெரும் படையினரும் வதியும் இடம் என்பது புலனாகும். 'நெய்ம்மிதி கவளம்' 'மந்தி கவரும் கா' என்றதனால், காஞ்சி மாநகரின், செல்வ வளமும் நீர் நில வளமும் தெரிய வரும்.

'அடையா வாயில்' என்றதனால் இரவலர், கலைஞர் என எவருக்குமே 'அடையாத வாயில்' என்று காஞ்சியின் மாண்பு தெரியவரும். பழமையும், பெருமையும், சிறப்பும், தூய்மையும் உடைய ஊர் என்பர் நச்சினார்கினியர்.

<u>பத்துப்பாட்டு – முல்லைப்பாட்டு</u>

<u>**பாக்கம் :**</u> அகன்ற வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன அங்கே சிறுவர்கள் உருட்டி வரும் சிறிய தேரை, நெல்லைத் தின்னவருங் கோழிகளை, வெருட்டும் பொருட்டு பெண்கள் எறிந்த காதில் உள்ள இழைகள் தேரின் வழியை மறைக்கும், இந்தத் தடையும், பகையும் அன்றி வேறுபகை கிடையாது.

<u>படப்பை :</u>

புது வருவாயினையுடை தோப்புகளும், மணங்கமழும் பல வண்ணப் பூக்கள் நிரம்பியிருந்தலாற், பல நிறமுடைத்தாய் தோன்றும் பொய்கைகளும், இம்மை, மறுமை இரண்டும், காம இன்ப நுகர்ச்சியினைப் பயக்குமாறு இணைந்த ஏரிகளும் இவ்வூருக்கு சிறப்பைத் தருகின்றது.

<u>பத்துப்பாட்டு – பட்டினப்பாலை</u>

<u>**காவிரிப்பூம்பட்டினம் :**</u>

இவ்வூர் சோழ நாட்டின் தலைநகர் கடல் துறைமுகம், சோழர் தலை நகரங்களிலே சிறந்தது. இவ்வூர் 'பட்டினம்' என்ற சொல் கடற்கரையில் உள்ள ஊர்களைக் குறிக்கும். அக்காலத்தில் பட்டினம் என்றால் 'காவிரிப்பூம்பட்டினத்' தையே குறிக்கும் 'காவிரிப்பூம்பட்டினம்' சிறப்படைய 'காவிரி ஆறு' ஒரு முக்கியக் காரணம். பாலர்க்கும் அன்னமிடும் அறங்கூழ்ச் சாலைகள் பல காவிரிப் பூம்பட்டினத்திலே இருந்தன.காவிப் பூம்பட்டினத்திலே வாழ்ந்த வணிகர்கள் மிகவும் நேர்மையுள்ளவர்கள். நல்ல உள்ளமுடையவர்கள், கல்வி கேள்விகளில் வல்லவர்கள், காவிரிப்பூம்பட்டினத் துறைமுகத்திலே கிடக்கும் கப்பல்களுக்கு கரையை அறிவிக்கும் கலங்கரை விளக்குகள் இருந்தன.இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் நாட்டில் வேறு பல நாட்டினரும் வியாபாரம் செய்து, மொழி வெறுப்பு, இன வெறுப்பு இல்லாமல் அன்புடன் பழகி வந்தமையை அறியலாம். காவிரிப் பூம்பட்டினத்தின் வளத்தையும், சிறப்பையும் கருதி அங்கே பல நாட்டினர் வந்து குழுமியிருந்தமையைக் கானமுடிகின்றது. இத்தகைய அழியாச் சிறப்புடையது காவிரிப்பூம்பட்டினம்.

'தமிழிலக்கியங்களில்' ஊர்ப் பெயர்கள் என்ற தலைப்பின் கீழ், சங்கத் தமிழ் இலக்கியமான 'பத்துப்பாட்டு' என்ற நூலிருந்து ஊர்ப் பெயர்கள் மற்றும் அப்பெயர் வரக்காரணம், அதன் பெருமைகள் பற்றி இங்கே தெரியப்படுத்தி உள்ளேன்.

42. மூவேந்தர் துறைமுகப் பெயர் ஆய்வு

முனைவர்.த.சம்யுக்தா,
உதவிப்பேராசிரியர் ,
தாசீம்பிவி அப்துல்காதர் மகளிர் கல்லூரி,
கீழக்கரை.

முன்னுரை:

சங்காலத்தில் ஊர்கள் நான்கு நிலத்திலும் சிறியனவும் பெரியனவுமாக அமைந்திருந்தன. அவற்றுள் மூவேந்தரும் வாழ்ந்த கோநகர் தமிழ்நாட்டின் நகரங்களுள் தலைசிறந்த பேரூர்களாக விளங்கியது. அந்நகரங்களுள் தலைசிறந்த மூவேந்தர்களின் துறைமுகப்பெயர் குறித்து ஆய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

தொண்டி :

தலைவன் தலைவியின் களவொழுக்கத்தின்கண் அலர் எழுந்தது. ஆதலால் நின் ஊரிடத்து அவளை மணந்து கொண்டு போதல் வேண்டும் என அறிவுறுத்திய தோழி தலைவியின் அழகை,

"வளம் கெழு தொண்டி அன்ன இவள் நலனே" [பா-10]

என தொண்டிப்பட்டினத்தின் செழிப்புடன் ஒப்புமைப்படுத்தி தொண்டியின் செழிப்பை,

"மோட்டு மணல் அடைகரைக் கோட்டு மீன் கெண்டி
மணம் கமழ் பாக்கத்துப் பகுக்கும்" [பா-10]

என அறிமுகம் செய்கிறாள். தொண்டி எனும் பெயரைக் கொண்ட ஊர் பாண்டிய, சோழ நாட்டில் இருப்பினும் இப்பாடலாசிரியர் அம்மூவனார் ஐங்குறுநூற்றில் நெய்தல்திணையில் "தொண்டிப்பத்து" என்னும் பத்துப்பாடலைப் பாடியுள்ளதால் இப்பாடலில் இடம்பெற்றுள்ள தொண்டிப் பட்டினம் சேர நாட்டின்கண் உள்ளதை அறியமுடிகிறது. இதனை, அம்மூவனார் ஐங்குறுநூற்றில் கடற்கரைக்கு மிக நெருக்கமாக அமைந்த பட்டினம் என்பதை **"அயலது.......மறுகுதொறும்" [ஐ-171]** என்று குறிப்பிட்டுள்ளார்.

இப்பட்டினம் எல்லோராலும் விரும்பப்படல் ,பேரலகுடைமை,சேய்மையில் உள்ளோராலும் அறியப்பட்ட சிறப்புடைமை, இடையிறா இன்பத்திற்கு இருப்பிடமாதல் முதலான பண்புகளுடன் அமைந்துள்ளதை அம்மூவனார்,**"தொண்டி அன்ன நின் பண்பு பல கொண்டே" [பா:175]**என்று சிறப்பித்துள்ளார். மற்றுமொரு பாடலில் தலைமகன் தோழியிடம் தலைமகளைக் கண்டு அளவலாவும் தன் விருப்பத்தை நிறைவேற்றித் தருமாறு பணிவுடன் வேண்டுகிறான். அப்போது, முன்பெல்லாம் குட்டுவன் தொண்டிபோல் பல சிறப்புகளுடன் இருந்த நான் இப்பொழுது அவளைப் பெறாத காரணத்தால் அச்சிறப்புகளை எல்லாம் இழந்து நிற்கிறேன் என்று தன்னுடைய சிறப்புகளை தொண்டியுடன் ஒப்பிட்டு

"குட்டுவன் தொண்டி அன்ன
எற்கண்டு நயந்து நீ நலகாக் காலே" [ஐங்-178]

என தன்னை அறிமுகம் செய்கிறான். தொண்டி நகரம் யவனர்கட்கு நன்கு அறிமுகமான வணிகப்பட்டினம். இதனை, பிளைனி,தாலமி,பெரிப்புளுசின் ஆகியோர் குறிப்பிட்டுள்ளனர். தொண்டிப்பட்டணம் குறிஞ்சி, மருதம், நெய்தல் வளங்கள் நிரம்பிய நகரமாதலின் இதன் மன்னனை நாடன் என்பதா, ஊரன் என்பதா, சேர்ப்பன் என்பதா என்று புலவர் மயங்கினர். குறுங்கோழியூர்கிழர் எனும் புலவரும் தொண்டியை,

"குலை யிறைஞ்சிய கோட்டாழை
அகன் வயல் மலை வேலி
நிலவு மணல் வியயன் கானல்
தெண்கழிமிசைச் சுடர்ப்புவின்
தன் தொண்டி" [புற-17]

என புகழ்ந்துள்ளார். இக்காலத்தில் தொண்டி ஆலப்புழை என அழைக்கப்படுகிறது. உ.வே.சா இதனை அகலப்புழை என்றழைக்கிறார்.

கொற்கை :

அகநானூற்றில் தலைவியின் பற்களை வர்ணிப்பதற்காக புலவர் மதுரை கணக்காயனார், வீரம் பொருந்திய போரில் வல்லவர்கள்; கொற்கை,பாண்டியர் அறநெறி வழுவாது காவல் செய்கின்ற பட்டினமாகும். அப்பட்டினத்து பெருந்துறையில் பெறும் முத்துக்களைப் போன்ற நகையொடு பொலிந்து இலங்கும் பற்கள் தலைவியின் பற்கள்.

"மறப் போற பாண்டியர் அறத்தின் காக்கும்
கொற்கை அம் பெரும் துறை முத்தின் அன்ன

நகை பொலிந்து இலங்கும் எயிறு கெழு துவர் வாய்" [அக-27]

என்று பாண்டிய மன்னனின் துறைமுகப் பட்டினமான கொற்கைப் பட்டினத்தை சிறப்பித்துள்ளார்.இக்கொற்கைப் பட்டினம் பாண்டிய நாட்டில் தாமிரபரணியின் சங்கமுகத்தில் அமைந்த பழைய துறைமுகப்பட்டினம்ஆகும். பாண்டியர்களின் தலைநகரங்களுள் ஒன்று.

இதே போன்று ஐங்குறுநூற்றில் அம்மூவனார் கொற்கையம் பெருந்துறை முத்துக்களை

"அலங்கு இதழ் நெய்தல் கொற்கை முன்துறை
இலங்கு முத்து உறைக்கும் எயிறு கெழு துவர்வாய்" [Iq;-185]

என உவமையாகக் கூறியுள்ளார். இக்கொற்கை பழம்பெருமை வாய்ந்த தமிழ்நாட்டுத் துறைமுகங்களுள் ஒன்றாகும். பாண்டியநாட்டு கொற்கை முத்து உலகப் புகழ்பெற்றது. இம்முத்து பற்றி சங்க இலக்கியம் பரக்க பேசியுள்ளார். யவன ஆசிரியர்களும் இடைக்காலத்தில் பாண்டியநாடு போந்த மார்க்கோபோலோவும் இத்துறைமுகத்து முத்தின் பெருமையினைப் பேசுகின்றனர். தன் காதலியின் மேல் உள்ள ஆழ்ந்த அன்பு புலப்படத் தலைவன் அவள் பற்களுக்குத் தென் கடல் முத்தை உவமை கூறி சிறப்பித்துள்ளான்.

உறந்தை :

களிறும் பிடியும் நீர் விளையாடுவது போல தலைவன் பரத்தையுடன் புணை தழுவி புனல் ஆடினான். ஆதனை அறிந்த கற்புடைய தலைவி தலைவனை அறிமுகம் செய்யும் பொழுது. வான் மழை போல வரையாது வழங்கும்வள்ளன்மையுடையவன் தித்தன்.அவனுடைய நெற்குவியலை உடையது உறையூராகும். அவ்விடத்தே ஓடக்கோலும் நிலைபெறாத காவிரியாற்றில் நீர் பெருகி ஓடுகிறது.

"மழை வளம் தருஉம் மா வண் தித்தன்
பிண்ட நெல்லின் உறந்தை ஆங்கண்
கழை நிலை பெறாஅக் காவிரி நீத்தம்
குழை மாண் ஒள் இழை நீ வெய்யோளொடு
வேழ வெண் புணை தழீஇ , பூழியர்." [அக-6]

என அவன் வாழும் ஊரினை அறிமுகம் செய்கிறாள். பரணர், உறந்தையை சோழர்களின் இராசதாணிகளுள் ஒன்று **"நொச்சி வேலித் தித்தன்"** [அகம்:122] என்றும் குறுங்குடிமருதனார், உறந்தையை ஆரவாரிக்கும் ஓசை மிக்க விழாக்கள் நிறைந்தது **"கறங்கும் இசை விழாவின் உறந்தை குணாது"** [அகம்:4]என்றும் புறநானூற்றுப்புலவர் உறந்தையை மதிலையும் நெல்லையும் வேலியாகக் கொண்டது **"வெண்நெல்வேலி உறந்தை யன்ன"** [புறம்-:352] என்றும் அறிமுகம் செய்துள்ளார். இவன் உறையூரின்கண் இருந்து ஆட்சி செய்த சோழன் தித்தன் எனவும் , தித்தன்வெளியன் எனவும், வீரைவேண்மாள்வெளியன்தித்தன் எனவும் இலக்கியங்களில் குறிக்கப்பெறுகின்றான். வெல்போர், போரருந்தித்தன் [புறம்:80] **மழைவளம் தருஉம் மாதவன்தித்தன்** [அகம்:6] **"நுண்கோல் அகவுர்ப் புரந்த நேரிசைச் சினங்கெழுதானைத் தித்தன் வெளியன்** [அகம்:152] என்பன கொண்டு இவன் சினம் மிக்க படையுடன் போராற்றல் உடையவன் என்பதையும்,பாணரையும்,வறியார் பலரையும் பாதுகாக்கும் வள்ளல் என்பதையும அறிந்து கொள்ளலாம். இதன் வழி காவிரி பாயும் சோழ நாட்டின் துறைமுகமான உறையூர் மக்கள் செல்வச் செழிப்புடன் வாழ்ந்துள்ளனர் என்பதையும் அறிய முடிகிறது. செல்வம் இருக்கும் இடத்தில் விழாநிகழ்ச்சிகளும், பரத்தமை ஒழுக்கமும் இருந்துள்ளது இங்கு வெளிப்படுகிறது.

முடிவுரை :

தலைவியின் அழகை வர்ணிக்க புலவர்கள் தாம் மதித்து போற்றிய மன்னர்களையும் அவர்கள் ஆட்சி செய்த ஊரின் வளத்தையும் நினைவு கூர்தற்பொருட்டு; தலைவியின் அழகுக்கு அவற்றை உவமையாகக் கையாண்டுள்ளனர். இ'.து தமிழ்நாட்டு வரலாற்றை விளக்குவனவாக அமைந்துள்ளதை இக்கட்டுரை மெய்ப்பித்துள்ளது.

43. பதிற்றுப்பத்தில் ஊர்ப்பெயர்கள்

பா.சாந்தி,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி, (தன்னாட்சி)
சிவகாசி.

மக்கள் தாம் வாழும் இடத்தை அடையாளப்படுத்தவும் பிற இடங்களில் இருந்து தமது பகுதியை வேறுபடுத்திக் காட்டவும் ஊரிற்குப் பெயர்கள் இட்டுள்ளனர். தமிழ்த்திறனாய்வு உலகில் ஊர்ப் பெயராய்வின் பங்கு குறைவானதே ஆகும். இந்நிலையி பதிற்றுப்பத்தில் இடம்பெற்றுள்ள ஊர்ப்பெயர்களை ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

அயிரை:

அயிர் என்பர் ஒருவகை வாசனைப் பொருள் ஆகும். அது அதிகமாக விளையும் மலைக்கு "அயிரை" என்று பெயர் உண்டாகியிருக்கலாம். பதிற்றுப்பத்தில் அயிரை மலை நீர்வளம் நிறைந்ததாகவும் அங்கு கொற்றவைத் தெய்வம் இருந்ததாகவும் சுட்டப்பெற்றுள்ளது. இதனை,

"கடவுள் அயிரையின் நிலைஇ" பதி 79 (18)

என வரும் அடிகள் வழி அறிய முடிகின்றது.

உம்பற் காடு:

உம்பல் என்பதற்கு ஆட்டினேறு, ஆண்யானை என்ற பொருளுண்டு. இதனடிப்படையில் அவ் ஊர்ப்பெயர் அமைந்திருக்கலாம். உம்பற்காட்டை பல்யானைச் செங்கெழுகுட்டுவன் தன் ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்ததை,

"இமையவரம்பன் தம்பி அமைவர
உம்பற்காட்டை தன் கோல் நிறி."
மூன்றாம் பத்து பதிகம்(1-2)

என்னும் அடிகள் குறிப்பிடுகின்றன.

குட்டநாடு:

கேரள மாநிலத்திலுள்ள கோட்டையும், கொல்லம் ஆகிய நகரங்கள் அடங்கிய பகுதி குட்டநாடாகும். குட்டம் என்பது குழி அல்லது பள்ளம் எனப் பொருள்படும். ஏரி, உப்பங்கழி முதலிய நீர்ப்பகுதிகளைக் கொண்டிருத்தலால் குட்டநாடு என வழங்கப்பட்டுள்ளதாக அறிஞர்கள் கருதகின்றனர்.குட்டநாட்டை ஆண்ட சேரமன்னர்களைக் குட்டுவர்ககோ, குட்டுவன் எனக் குறிப்பிட்டுள்ளதை,

"மட்ப் புகாவின் குட்டுவர் ஏறே"
பதி 90 (26)

என்னும் இவ்வடி காட்டுகின்றது.

குடநாடு:

மேற்குத் திசையினைக் குறிக்கும் "குடக்கு" என்னும் சொல்லினை அடிப்படையாகக் கொண்டு தமிழகத்தின் மேற்குப்பகுதியில் அமைந்த பகுதியைக் "குடநாடு" என்று அழைத்திருக்கலாம். அங்கு வாழும் மக்களைக் குடவர் என்றும், அரசாளும் மன்னனைக் "குடக்கோ" என்றும் குறிப்பிட்டுள்ளனர். குடநாடு இன்று "மலபார்" என அழைக்கப்படுகின்றது. குடநாடு

"கபிலையொடு குடநாட்டு ஓர் ஊர் ஈத்து"
ஆறாம்பதிகம் (15)

என்னும் இவ்வடியில் சுட்டப்பெற்றுள்ளது.

கூடல்:

ஆறுகள் கூடுமிடத்தை ஊரினைக் கூடல் எனப் பண்டைத்தமிழர் அழைத்துள்ளனர். காவிரி,ஆன்பொருநை, குடவனாறு ஆகிய மூன்று ஆறுகளும் சேருமிடத்தைக் குறிக்கும் கூடல் எனும் ஊர் இன்று திருமுக் கூடல் என அழைக்கப்படுகின்றது. கூடல் நகரத்தினை,

"காவிரியன்றியும், பூவிரி புனல் ஒரு
மூன்று உடன் கூடிய கூடல் அனையை" பதி 50(6-7)

என்ற அடிகள் குறிப்பிடுகின்றன.

கொங்கர் நாடு:

கொங்கர்கள் இருந்த இடம் "கொங்கர் நாடு" எனக் குறிப்பிடப் பெற்றுள்ளது. பல்யானைச் செங்கெழுகுட்டுவன் கொங்கர் நாட்டினைத் தன் ஆட்சிக்குக் கீழ் கொண்டு வந்தனை,

"ஆ கெழு கொங்கர் நாடு அகப்படுத்த" பதி22(15)

என வரும் அடி தெளிவாக்குகின்றது.

கொழுகூர்:

"கொடு" என்பது வளைவு எனப் பொருள்படும். வளைவுகள் அதிகமமாக உள்ள பகுதியைக் "கொடுகூர்" என மக்கள் அழைத்திருக்கலாம். கடல் பிறக் கோட்டிய செங்குட்டுவன் கொடுகூரைப் பற்றியமையை,

"அக்கரை நண்ணிக் கொடுகூர் எறிந்து"

ஐந்தாம்பத்து பதிகம்(12)

என்னும் அடிக் குறிப்பிடுகின்றது.

கொடுமணம்:

கொடுமணம் எனும் ஊர் இன்று கொடுமணல் என அழைக்கப்படுகின்றது. ஈரோட்டிலிருந்து தென்மேற்காக 40 கீ.மீ தொலைவில் கொடுமணல் அமைந்துள்ளது. தொல்பொருள் ஆராய்ச்சியல் அவ்வூர் சிறப்புபெற்றதாகும். சிறந்த வேலைப் பாடுடைய அணிகளுக்குச் சிறப்புற்ற ஊராக கொடுமணத்தை

"கொடுமணம் பட்ட வினை மாண் அருங்கலம்"

பதி 74 (5)

என்ற அடி காட்டுகின்றது.

கொல்லி:

கொல்லி மலை ஓரிக்குரியது. அது சேலம் மாவட்டத்தில் நாமக்கூர், ஆத்தூர் வட்டத்திலுள்ள ஒரு குன்றுத்தொடர் ஊரின் பெயர். அவ்வூர் அமைந்த மலைப்பகுதிக்கோ மலையின் பெயர். அங்கே அமைந்த ஊருக்கோ பெயராக அமைந்திருக்க வேண்டும் என அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். அம்மலையிலுள்ள கொல்லிப்பாவை கண்டாரை வருத்தும் தன்மை உடையதலால் "கொல்லி" என அம்மலையை அழைத்திருப்பர். இதன் வளத்தை,

"சுரும்பு ஆர் சோலைப் பெரும் பெயற் கொல்லி"

பதி81(24)

எனும் அடி சுட்டுகின்றது.

தகடூர்:

அதியமான் நெடுமான் அஞ்சியின் ஊர் தகடூராகும். இன்றைய தருமபுரியே தகடூர் எனக் குறிப்பிடப் பெற்றுள்ளதாக அறிஞர்கள் கருதுகின்றனர். அக்காலத்தில் தகடூரை நுளம்ப பல்லவர்கள் ஆண்டனர் என்று தெரிகின்றது. அங்கு 9,10 ஆம் நூற்றாண்டு முதல் கல்வெட்டுகள் கிடைக்கின்றன. தகடூரைப் பெருஞ்சேரலிரும் பொறை அழித்தமையை,

"தகடூர் எறிந்து............"

எட்டாம் பத்து பதிகம்(10)

என வரும் அடி நிறுவுகின்றது.

தொண்டி:

தொண்டி துறைமுகப் பட்டினமாகத் திகழ்ந்துள்ளது. கடற்கழி என்னும் பொருளுடைய சொல் படகுகள் வந்து செல்வதற்கு ஏற்ற ஆழமான கடற்கரையைக் குறிக்க முதலில் பயன்படுதப்பட்டு நாளடைவில் கடற்கரை நகரத்திற்கு பெயராய் அமைந்திருக்க வேண்டும். தொண்டியை,

"வளைகடல் முழவின் தொண்டியோர் பொருந"

பதி 88(21)

எனச் சுட்டுகின்றது.

நறவு:

நறவு என்பதற்கு கள், ஒரு வகையான மரம் என்று பொருளுண்டு. கள்ளைப் போன்ற இனிமையுடையதாக இருப்பதாலோ, நறவ மரங்கள் நிறைந்திருப்பதாலோ, இவ்வூருக்கு "நறவு" என்னும் பெயர் ஏற்பட்டிருக்கலாம். செல்வக் கடுங்கோ வாழியாதன் நறவென்னும் ஊரில் அரசு வீற்றிருந்தமையை,

"சூடா நறவின் நாள் மகிழ் இருக்கை"

பதி 85(8)

இவ்வடி குறிப்பிடுகின்றது.

பந்தர்:

நிழலினைத் தரும்பொருட்டு தென்னங்கீற்றுகளால் வேயப்பெறும் அமைப்பிற்குப் பந்தல் என்று பெயர். மரங்கள் செழிப்பாக வளர்ந்து பந்தல் போல் காட்சி தரும் இடத்திற்கு "பந்தர்" என்ற பெயர் அமைந்திருக்கலாம். பந்தரில் புகழ்வாய்ந்த முத்துக்கள் கிடைக்குமென்பதை,

"பந்தர்ப் பயந்த பலர் புகழ் முத்தம்"

பதி74(6)

இவ்வடி சுட்டுகின்றது.

மரந்தை:

சேர நாட்டிற்குத் தலைநகரமாக விளங்கியது வஞ்சியாகும். சேரன் செங்குட்டுவன் வஞ்சியில் கண்ணகிக்கு கோவில் அமைத்தான். சிலர் திருவஞ்சைக் களத்தை வஞ்சியெனவும் சிலர் கருவூரை வஞ்சியெனவும் குறிப்பிடுவர்.வஞ்சிக் கொடி நிறைந்த பகுதி வஞ்சியென்ற பெயர் பெற்றிருக்கலாம். இளஞ்சேரல் இரும்பொறை வஞ்சி நகரில் கொடையளித்தமையை,

"வஞ்சி மூதூர்த் தந்து பிறர்க்கு உதவி"

ஒன்பதாம் பத்து பதிகம் (9)

இவ்வடி சுட்டுகின்றது.

வியலூர்:

வியல் என்பதற்கு அகலம், விரிவு என்ற பொருளுண்டு. பரந்து பட்ட நிலப்பரப்பினையுடைய ஊரினை "வியலூர்" என அழைத்துள்ளனர். சிலம்பில் வியலூர் "வீயலூர்" எனக் குறிப்பிடப்பெறுகின்றது. கடல் பிறகோட்டிய செங்குட்டுவன் வியலூரை அழித்தமையை,

"சிறுகுரல் நெய்தல் வியலூர் நூறி"

ஐந்தாம் பத்து பதிகம் (11)

இவ்வடி தெளிவாக்குகின்றது.

நிறைவுரை:

கொடுகூர், இடும்பிற்புறத்து, மையூர், மோகூர், ஞகந்தூ, பூழிநாடு போன்ற ஊர்ப்பெயர்களும் பதிற்றுப்பத்தில் இடம்பெற்றுள்ளன. ஓர் இடத்தில் விளையும் செடி, கொடி, மரங்களைக் கொண்டும், நில அமைப்பின் வழியும், நீர்ப் பரப்பின் அடிப்படையிலும் மக்களின் பெயரை அடிப்படையாகக் கொண்டும் ஊர்ப் பெயர்கள் தோன்றியுள்ளன்

44. வரலாற்றுப் பார்வையில் காட்டுநெடுங்குளம்

யா.சாம்ராஜ்,
முனைவர்பட்ட ஆய்வாளர் (பகுதிநேரம்),
தமிழ்த்துறை,
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.

தனிமனிதன் என்பதை விட கூட்டுக்குழுக்களின் பரிணாமத்தின் மூலம் ஓர் ஊர் உதய மாகின்றது. ஒரு கிராமம் பிறக்க அங்கு வாழும் மனிதர்களே பெற்றோர் ஆகிறார்கள். பொதுவாக ஒரு தாய், தந்தை தாங்கள் பெற்றெடுத்த குழந்தைக்குப் பெயர் சூட்டி இப்படித்தான் வாழ வேண்டும் என முன்கூட்டியே தீர்க்கதரிசனம் காண்பது போல், ஒரு ஊர் அமையப் பெறுகின்ற போது அவ்ஊரில் வாழும் மக்களே கண், காது, மூக்கு என உருவம் செய்து, அவை அமையப் பெறுகின்ற தன்மையைப் பொருத்தும், அவ்விடத்தில் செய்யப் பெறுகின்ற தொழில் முறையைப் பொருத்தும் அவ்ஊருக்கான பெயர் நடைமுறைப் படுத்தப் படுகின்றது. இதன் அடிப்படையில் சிவகங்கை மாவட்டம் காட்டுநெடுங்குளம் எனும் ஊரின் பெயர்க்காரணம் குறித்தும் வரலாறு குறித்தும் விளக்குவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

காட்டு நெடுங்குளம் பெயர்காரணம்

காடு + நெடுங்குளம் = காட்டுநெடுங்குளம். சங்க இலக்கியம் பகரும் முல்லை நிலமாகிய காடும் காடுசார்ந்த நிலப்பகுதியே இவ்வூருக்கான முகவரி எனலாம். காட்டைத் திருத்தி கழனி யாக்கினான் மனிதன் என்ற முற்போக்கு மனிதர்களின் வாய்மொழிக்கிணங்க,

- நோக்கும் இடமெல்லாம் கட்டுக்கடங்காத கருவேல மரங்களின் இனப் பெருக்கமும்,
- ஊர்வனங்கள் உற்பத்தியாவதற்காகவே மாடங்கள் போல் வளர்ந்து காணப்படும் கள்ளிப் புதர்களும்,
- விஷம் பாயாத ஊசிகளாய் பார்ப்போருக்குப் பயம் ஏற்படுத்தினாலும், தன் இடுப்புகளில் கருப்பு நிற இனிப்பு மிட்டாய்களைப் பிரசவித்துக் காணப்படும் பெரிய பெரிய ஈச்சஞ் செடிகளும்,
- எவ்வளவு உணவு உட்கொண்டாலும் உடல் பருமன் அடையாமல் ஒல்லியாகவே உயர வளர்ந்து காணப்படும் யூக்கலிப்டஸ் மரங்களும்,
- பணம் கொடுக்காமல் உடல் உஷ்ணத்தைக் குறைக்க உறுதுணைபுரியும் ஆவாரஞ் செடிகளும் தான் இவ்வூருக்கான அடையாளமாகும்.

'நெடு' என்பதற்கு நீண்ட என்ற பொருளின் அடிப்படையில், ஏழு கிராமங்களின் கண்மாய்கள் தங்களின் வயிற்றை நிரப்பி, போதும் போதும் என்ற நிலையில் வாந்தி எடுத்து எட்டாது கண்மாயான நெடுங்குளத்தில் வந்து சேர்வதால் நெடுங்குளம் என்று பெயர் பெற்றதாய், காலஞ்சென்ற, காலம் அழைப்பதற்காகக் காத்துக் கொண்டிருக்கின்ற பெரியோர்களின் வாய்மொழிகளாகும். இந்நிகழ்வுகளின் கூட்டுச் சேர்மத்தின் பயனாய் காட்டு நெடுங்குளம் உருவானது.

இனக்குழுக்களின் வகையும் மதமாற்றத்தின் உச்சமும்

1730-ல் நாலுகோட்டையை (சிவகங்கையிலிருந்து 10 கி.மீ.) சேர்ந்த உடையத்தேவர் காளையார்கோவில், சிவகங்கைப் பகுதிகளின் பொறுப்பாளராகவும் சிற்றரசராகவும் இருந்தார். இவரது மகன் சகிவர்ணத் தேவருக்கு இராமநாதபுரம் சேதுபதி விஜயரகுநாதர் தனது மகள் அகிலாண்டேசுவரி நாச்சியாரைத் திருமணம் செய்து கொடுத்தபோது, தனது மகளுக்குச் சீதமாக சிவகங்கையையும் அதன் சுற்றுப்புறப் பகுதியையும் அளித்தார். அதுவரையில் சிவகங்கை இராமநாதபுரத்தோடு இணைந்திருந்தது இச் சீதனத்திற்குப் பிறகு பெரிய மறவநாடு இராமநாதபுரம் என்றும் சின்ன மறவநாடு சிவகங்கை என்று பிரிக்கப்பட்டது. (1970, புனித செபஸ்தியார், ப.18).

18-ம் நூற்றாண்டில் தொண்டைமான் புதுக்கோட்டையை மையமாகக் கொண்டு, நெசவுத் தொழில் செய்துவந்த ஆதிப் பெற்றோர்கள், மூன்று வீட்டார் முறை, ஐந்து வீட்டார் முறை என்ற தரம் பிரித்து 18 கோத்ரங்களாய் வாழ்ந்துவந்தனர். (தமிழக மாவட்ட நூல், ப.23) காலம் நடக்க நடக்க,

- நிலையற்ற அரசியல் சூழ்நிலையாலும்
- அடிக்கடி ஏற்பட்ட போர், பஞ்சம் கொள்ளை நோயாலும்
- பிரிவினைவாதம் தலைதூக்கியதன் பயனாய், சமயத்தின் மிகப் பெரிய நெருக்கடியாலும்,

♦ கத்தோலிக்கத் திருச்சபையின் இரட்டை நிர்வாக முறையாலும், தொண்டை மண்டலத்தை (புதுகை) விட்டு சிவகங்கை நோக்கி குடிபெயரலாயினர்.

இந்த எட்டு வீட்டார் முறையினர் மொத்தமாக சிவகங்கையை அடுத்து 15 கி.மீ. தொலைவிலுள்ள ஓரிடத்தில் நிலையாகத் தங்கினர். இவ்விடம் கிடாப்புரி என்று பெயர் பெற்றது. இதுவே இவர்களின் தலைமையிடமாகும். பஞ்சம் வாட்டி வதைக்க, பலர் பசியால் மாண்ட போது பெரிய மறவநாடான இராமநாதபுரத்தை மையமாக வைத்து வெளிநாட்டு கிறிஸ்தவப் பாதிரியார்கள் வருகை புரிந்ததோடு, பசியால் வாடுவோருக்கு உணவளிக்கவும், உடைகள் வழங்கவும், நோயுற்றோரைச் சுகமளிக்கவும் முற்பட்டனர். குறிப்பாக உணவிற்கு புழுக்கர் கோதுமை கொடுத்து பசியை மறக்கடித்தனர். இவர்களின் முக்கியமானோர் நொபிலி, ஜான் என்ற அருளானந்தர் என்போர் ஆவர். இவர்கள் ஒரு நிபந்தனையை விதித்தனர். அவை, எல்லோரும் கிறிஸ்தவ மதத்திற்கு மாற வேண்டும் என்பதேயாகும். (A south India Mission)

இதன் தொடர்ச்சியாக கிடாப்புரியை கொண்டு "பூலாம்பரத்தான், இரும்பாளி, பெருமாநாடு, சிறுசினி, நாஞ்சூர், வடமலாப்பூர், தப்புக்கொட்டி, சீமானூர், களமாவூர், சிறுசெனை, பெருசெனை போன்ற கிளைக் கிராமங்கள் தோன்றலாயின. இப்போதும் 18 கோத்திரங்களின் மூலம் தோற்றுவிக்கப்பட்ட இக்கிளைக் கிராமங்களின் பெயரைச் சொல்லித் தான் திருமண சுபகாரியங்களில் ஒன்றான பரிசம் போடும் போது குறிப்பிட்டுப் பெண்ணை அழைப்பது சிறப்பம்சமாகத் திகழ்கின்றது. (புனித செபஸ்தியார் மடல், 26).

காட்டு நெடுங்குளம் உதயம்

கிடாப்புரியை மையமாகக் கொண்டு கிளைக்கிராமங்களில் பிரிந்து வாழ்ந்த ஒரு குடும்பப் பங்காளிகள் தனித்து சிவகங்கைக்குத் தெற்குப் புறமாக அமைந்துள்ள மணக்குளம் எனும் ஊரில் சிறிது காலமும் முட்டாங்குளத்தில் சிறிதுகாலமும் வாழ்ந்து வந்தனர். இவை பள்ளம் நிறைந்த பகுதியாக இருந்தமையால் மேட்டு நிலப் பகுதிக்கு குடிபெயரலாயினர். தொடக்கத்தில் சொல்லப்பட்ட அமைப்புமுறைகளில் காணப் பட்டதால், கடிய நிலம் திருத்தி நிலையாகத் தங்கினர். அதுவே காட்டு நெடுங்குளம் ஆனது. தொடர்ந்து கிறிஸ்தவ மதப்போதகர் களின் வருகையாலும், அவர்கள் செய்த நற்காரியங்களாலும், முழுமையாக இந்து மதத்திலிருந்து கிறிஸ்தவ மதத்திற்கு மாறினர். இவர்கள் ஆன்மீகக் காரியங்களில் வளர்வதற்கும், இவர்களைக் காவல் காக்கும் பொருட்டு புனித செபஸ்தியார் ஆலயத்தைத் திருச்சி மறைமாவட்ட இரண்டாவது ஆயர் மேதகு ஜான் மரிய பார்த்து 1908-ல் கட்டித் திறந்து வைத்தார். இவ்வாலயத்தின் மூலம் காலை, மாலை தியானங்களும், ஜெபங்களும் நடைபெறத் துவங்கின. இவ்வாலயம் கட்டிக் கிட்டத்தட்ட 99 ஆண்டுகளுக்குப்பின் அருட்தந்தை சேசு அடிகளாரின் பெரும் முயற்சியால் ஸ்ரீதாரண வருடம் சித்திரை மாதம் முதல்தேதி 13.04.2004 அன்று மேதகு ஆயர் எட்வர்டு பிரான்சிஸ் அவர்கள் புதிய ஆலயத்தைத் திறந்துவைத்தார். இவ்வாலயத்தின் திருவிழா வருடந்தோறும் பிப்ரவரி மாதம் கோலகாலமாகக் கொண்டாடப் பட்டு வருகிறது.

காட்டு நெடுங்குளத்தின் தனிச்சிறப்பு

காட்டு நெடுங்குளத்தின் வீடுகளின் அமைப்புமுறையானது பாண்டிச்சேரியில் அமைந்த சாலை முறைகளைப் போல் நேராக விதிமுறைகளில் அமையப்பட்டிருப்பதை இப்போதும் காணலாம்.

1970-ல் வந்த அன்றைய தமிழக அமைச்சர் பவு.சண்முகம் இதுபோன்ற கிராம அமைப்புமுறை தமிழகத்தில் வேறு எங்கும் பார்த்ததில்லை என்று கூறியுள்ளார். (பேட்டி : மனுவேல் ஆசிரியர், நாள் : 15.8.2011)

சிவகங்கை பங்குத்தளத்தின் முதல் கத்தோலிக்கப் பள்ளிக்கூடம் முதன் முதலில் காட்டு நெடுங்குளத்தில்தான் உருவானது. 1927ல் அவை அரசு தொடக்கப் பள்ளியாகத் தொடங்கப் பட்டு, வேம்பங்குடி, ஆலங்குளம், மாடக்கோட்டை, சுந்தரநடப்பு, கீழக்கண்டனி, மேலக்கண்டனி, மணக்குளம், துவங்கால், நாடமங்கலம், செங்குளம், உதாரப்புளி, வாணியங்குடி போன்ற ஊர்களிலிருந்து மாணவர்கள் படித்து, அன்றைய காலத்திலேயே உயர் அதிகாரிகளாக வளம் வந்துள்ளனர் என்பது பெருமைக்குறியது. (பேட்டி : செபஸ்தயான் ஆசிரியர், நாள் : 15.8.2011)

ஆங்கிலேயர் ஆட்சிகாலத்தில் தொடங்கப்பட்ட சென்னை - இராமேஸ்வரம் மார்க்கமாக சென்ற இரயில்கள் காட்டுநெடுங்குளத்தில் நின்று செல்லும் என்ற உன்னதமான நிலை இவ்வூருக்கு உண்டு. (பேட்டி : அமல்ராஜ் ஆசிரியர், நாள் : 16.8.2011)

53 குடிகளைக் கொண்ட காட்டுநெடுங்குளத்தில் 97 விழுக்காடு ஆசிரியர்களாகப் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளதோடு, தொடர்ந்து ஆசிரியர்களாக பணியாற்றி வருகின்றனர்.

இதுதவிர விஞ்ஞான மாற்றத்தின் அடிப்படையில் ஒரு குடும்பத்தில் 2 அல்லது 3 பேர் அரசுத் துறையில் பணிபுரிந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆன்மீகத் தொண்டு

இக்காட்டு நெடுங்குள மக்கள் அனைத்து வசதிகளோடு வாழ்வதற்கு ஆன்மீகமே காரணம். அந்த வகையில் தங்களின் குழந்தைகளை ஆன்மிகச் சிந்தனையை வளர்ப்பதில் எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றனர். சான்றாக,

1. அருட்சகோதரி சி.அல்போன்சா அவர்கள் ஞானப்பிரகாசியார் சபையில் துறவு பூண்டுள்ளார்.
2. அருட்சகோதரர் ச.ஜான் செபஸ்தி அவர்கள் சலேசியன் சபையில் துறவு பூண்டுள்ளார்.
3. அருட்சகோதரர் ஆ.பக்திநாதன் அவர்கள் புனித மான்போர்ட் சபையில் துறவு பூண்டுள்ளார்

உறவுவழி பதினெட்டு கிராமங்கள்

1.கிடாப்புரி (தலைமைக் கிராமம்) 2.காட்டுநெடுங்குளம் 3.சூசையப்பர் பட்டிணம் 4.நெடோடை 5.பொன்னலிக்கோட்டை 6.அய்யம்பட்டி 7.இரவியமங்களம்* 8.ஆணைமாவேலி 9.அலவாக்கோட்டை 10.சின்னப்பட்டி 11.குறவன்குளம் 12.வாடிப்பட்டி 13.காட்டாத்தி* 14.கல்வழி* 15.மருதக்கண்மாய் 16.மணப்புஞ்சை* 17.உப்புலிக்குடி* 18.தளக்காவூர்* இந்த பதினெட்டு (18) கிராமங்களின் உறவுகளில் '*' குறியிட்ட மற்ற ஏழு கிராமங்கள் தற்போது ஒன்றுக்கொண்டு தொடர்பற்று காணப்படுகின்றன மற்றவை உறவுகள் தொடர்ந்து நடைமுறையில் உள்ளன. தொடக்கத்தில் செயல்பட்ட ஊர்கள் தற்போது கிளைகள் என்று கூறப்படுகின்றது.

முடிவுரை

ஊரும் பேரும் நன்றாக இருந்தால், உடலும் உள்ளமும் நன்றாக இருக்கும் என்று பறை சாற்றிய திரு.சிலுவை அருளப்பன் அவர்களின் வாய்மொழிக்கிணங்க காட்டுநெடுங்குளத்தின் தனிப்பெரும் சிறப்பு குறித்தும், அங்கு வாழும் மக்களின் நடைமுறை குறித்தும் ஆன்மிக சிந்தனையில் முழுமையான ஈடுபாடு குறித்தும் இக்கட்டுரைவழி அறிமுகிறது.

45 பதிற்றுப்பத்துக் கூறும் சேரப் படையெடுப்பில் ஊர்ப்பெயர்கள்

முனைவர்.தி.சாமுண்டிஸ்வரி
தமிழ் விரிவுரையாளர்.
வள்ளியம்மாள் மகளிர் கல்லூரி.
சென்னை.-102.

மூவேந்தர்களில் முதலிடம் வகிக்கும் சேரர்கள் ஆண்ட தென் பகுதி அதாவது தற்பொழுது கேரளா என்று அழைக்கப்படும் பகுதியாகும். (சேர-கேர-கேரளா)தமிழ் மொழியினைத் தாய்மொழியாகவும்,அரசவை மொழியாகவும் வழங்கி வந்த அவர்கள் காலப்போக்கில் மொழிவளர்ச்சியின் காரணமாக கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டிற்குப் பிறகே மலையாளம் என்ற தனி மொழியினை வழக்கிற்கு கொண்டுவந்தனர்.சேர நாட்டு செந்தமிழ் இலக்கியங்களில் பதிற்றுப்பத்து, சேர அரசர்களின் வரலற்றினைத் தெளிவுற விளக்கும் ஓர் இலக்கியப் பெட்டகம் ஆகும். பதிற்றுப்பத்து வழி அறியலாகும் சேர படையெப்பில் காணப்படும் சில ஊர்ப்பெயர்களை ஆய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

<u>சேரநாட்டின் எல்லை:</u>

சேரநாட்டின் எல்லையினைப் பழந்தமிழ்ப் பாட்டொன்று பின்வருமாறு குறிக்கப்படுகிறது,

"வடக்குத் திசைபூமி வான்கீழ்தென் காசி
குடக்குத் திசை கோழிக் கோடாம் - கடற்கரையின்
ஓரமே தெற்காகும் உள்ளெண் பதின்காதம்
சேரநாட் டெல்லையெனச் செப்பு."

<u>முசிறி;</u>

சேர மன்னர்களின் நாடும் ஊரும் வடமொழிகளில் குறிப்பிடும் அளவிற்கு அவ்வேந்தர்களின் புகழ் மேலோங்கி இருந்தது.வடமொழியில் ஆதிகாவியம் எனப்படும் வான்மீகி இராமயணத்தில் ,சீதா தேவியை வானரவீரர் தேடி வரும்படி சுக்ரீவன் குறிப்பிட்டுள்ள இடங்களுள் கேரள நாடும் ,முரசீபத்தனமும் (முசிறி) குறிப்பிடப்படுகிறது. முரசீபத்தினம் என்பது சேர அரசர்களின் தலைநகரங்களில் ஒன்றான முசிறியாகும்.முசிறி துறைமுகம் மேனாட்டு யவனரது மரக்கலங்களில் மிளகு முதலிய மலைநாட்டுப் பொருட்களை ஏற்றிச் செல்வதற்க்குச் சிறந்த துறைமுகமாக விளங்கியது என்பதை பின்வரும் அகநானுற்றுப் பாடல் தெரிவிக்கின்றது.

"வாரேன்வாழி ,என் நெஞ்சே ! சேரலர்
சுள்ளிஅம் பேரியாற்று வெண்நுரை கலங்க
யவனர் தந்த வினைமாண் நன்கலம்
பொன்னொடு வந்து கற்யொடு பெயரும்
வளம்கெழு முசிறி ஆர்ப்புஎழ வளைஇ" (அகம்-149-(7-11)

என்று முசிறி நகரினை எர்க்காட்டூர்த் தாயங்கண்ணனார் பாடுகிறார்.

<u>தொண்டி</u>

சேர மன்னர்களின் துறைமுகமாக இருந்துள்ள தொண்டி என்னும் ஊரை மையமாகக் கொண்டு அம்மூவனாரால் இயற்றப்பட்டது தொண்டிப் பத்தாகும்.தொண்டிப்பத்தில் முதற்பாடல் ,என் நெஞ்சத்தை முழுமையாகக் கவர்ந்துகொண்ட இவள் ,கடலலையின் இனிய இசையொடு கூடி ,அயலே உள்ள ஒவ்வொரு தெருக்கண்ணும் மத்தளத்தின்இனிய இசை முழங்குவதற்கு இடமான தொண்டி என்ற பட்டினம் போன்ற பருத்த தோள்களையும் ஒளிமிக்க வளையல்களையும் உடையவள் தலைவி என்று இயம்புகிறது.இவ்வாறே பத்துப் பாடல்களும் தொண்டியின் சிறப்பை இயம்புகின்றன.

" மறாஅ விளையுள் அறாஅ யாணர்" (ஆறாம்பத்து ;10-8)

தொண்டி என்னும் கடற்கரைப் பட்டினத்தைத் தலைநகராகக் கொண்டு ஆடுகோட்டுச் சேரலாதன் என்னும் சேர அரசன் ஆண்டு வந்தான் என்பதை இப்பாடல் வழி அறியலாம்.

அகப்பா

இப்போது ஆனைமலைத்தொடர் என வழங்கும் தென்மலைப் பகுதியில் முதியர் என்பார் வாழ்ந்து வந்தனர்.குட்ட நாட்டின் வடபகுதிக்கு நேர் கிழக்கில் வடமொழித் தொடரின் மீது இருந்த பாயல் நாட்டுக்குக் குறுநிலத் தலைவர் சிலர் அவ்வப்போது குட்ட நாடு புகுந்து தொல்லை கொடுத்தனர்.உம்பற்காட்டின் வடபகுதியில் அமைந்திருந்த அகப்பா என்னும் அரண் இவர்களுக்குத் தலைமையிடமாக இருந்தது. இவ்வரண் உயரிய மதிலும் பெரிய காவற்காடும் கொண்டு பாதுகாப்பாக அமைந்திருந்தது.இவர்களை அடக்கப் பல்யானைச் செல்கெழு குட்டுவன் யானைப் படை நடத்திச் சென்று அவர்களை வென்று அவர்கள் பணிந்து திரைதரத் தன்னாடு திரும்பினான். உம்பற்காட்டு வெற்றியுடன் இல்லாமல் ,குட்டுவன் மேலும் படை நடத்திச் சென்று அகப்பா என்னும் அரணைக் கைப்பற்றி,அதனைச் சுற்றியுள்ள ஊர்களைத் தீக்கிரையாக்கிப் பின்னர் அப்பகுதியினை முதியர் காவலின் கீழ் வைத்து அரச ஆணையினை அப்பகுதியிலும் நிறுவிவிட்டுத் தன் தலைநகர் திரும்பினார்.அச்செய்தி மூன்றாம் பத்தில்,

"உம்பிற் காட்டைத் தன்கோல் நிறீஇ
அகப்பா எறிந்து பகற்றீ வேட்டு
மதியுறழ் மரபின் முதியரைத் தழீஇக்
கண்ணகன் வைப்பின் மண்வகுத்து ஈத்து (2;21-27)

என்று காணப்படுகிறது.

தகடூர்

கொங்கு நாட்டின் ஒரு பகுதியாக விளங்கியது அதியமான் எழினியின் நாடாகும்.தற்காலம் தருமபுரி என வழங்கப்படும் நகரமே அந்நாளில் தகடூர் என வழங்கப்பட்டது.முன்பு அதியமான் கோட்டை என வழங்கப்பட்ட இடமே இன்று அதமன் கோட்டை என வழங்கப்படுகிறது.தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை இந்தத் தகடூரைக் கைப்பற்றி அதியமானை வென்றான். இச்செய்தியினை,

"வெல்போர் ஆடவர் மறம் புரிந்து காக்கும்
வில்பயில் இறும்பிற் றகடூர் நூறி" (எட்டாம் பத்து -8;8-9)

என்ற பதிற்றுப்பத்தின் மூலம் அறியமுடிகிறது. தகடூர்ப் போர் குறித்துத் **'தகடூர் யாத்திரை'** என்றொரு நூல் இயற்றப்பட்டது என்பதை தொல்காப்பிய புறத்திணை உரையில் நச்சினார்க்கினியர் மேற்கோள் மூலம் அறியலாம்.இப்போரில் எழினி இறந்தான் என்றும் ,தகடூர்க் கோட்டை தீக்கிரையாயிற்று. தகடூர் வெற்றியின் காரணமாக தகடூர் எறிந்த என்னும் அடைமொழியினை பெருஞ்சேரல் இரும்பொறைக்கு உண்டாயிற்று. அஞ்சிக்கு உதவியாகச் சோழனும்,பாண்டியனும் பங்கேற்றனர்.தோல்வியுற்றனர்.இதனை,

"பல்வேற் றானை யதிக மானோடு
இருபெரு வேந்தரயும் உடனிலை வென்று
முரசுங் குடையுங் கலனுங் கொண்டு
உரைசால் சிறப்பின் அடுகளம் வேட்டுத்
துகள்தீர் மகளிர் இரங்கத் துப்பறுத்துத்
தகடூர் எறிந்து நொச்சிதந் தெய்திய
அருந்திறல் ஒள்ளிசைப் பெருஞ்சேரல் இரும்பொறை

என்று எட்டாம் பத்தின் பதிகம் குறிப்பிடுகின்றது.

மோகூர்

சேரன் செங்குட்டுவன் செய்த போர்களில் சிறப்பானதொரு போர் அவன் மேற்கொண்ட மோகூர்ப் போராகும்.மோகூர் பாண்டி நாட்டில் மதுரைக்கு அண்மையில் இருந்தது.பிற்காலத்தில் வைணவத் திருப்பதியாக விளங்கிய திருமோகூரே இம்மோகூர் என்பர்.(மயிலை.சீனி.வேங்கடசாமி,சேரன் செங்குட்டுவன்,ப-31)

மோகூர் மன்னன் பாண்டியனுக்குத் படைத் தலைவனாக இருந்தான். மோகூர் மன்னனுக்கும் அறுகை என்னும் குறுநில மன்னனுக்கும் பகை இருந்தது.ஒரு கால் ,போரில் அறுகை மன்னனை மோகூர் மன்னன் வென்றான்.தோற்ற அறுகைக்கு நண்பனாக இருந்த செங்குட்டுவன் அறுகையின் சார்பில் மோகூர் மேல் படையெடுத்துச் சென்றான். மோகூர்ப் பழையன் அப்போரில் முற்றிலும் தோற்றான்.அவன் காவல்மரமாகிய வேப்பமரத்தை வெட்டி

அதனால் முரசு செய்து தன் நாடு திரும்பினான். இவ்வெற்றி பலராலும் பலவிடங்களிலும் சிறப்பாகப் பேசப்பட்டுள்ளது.

"நுண்கொடி யுளிஞை வெல்போர் அறுகை
சேணன் ஆயினும் கேளென மொழிந்து
புலம்பெயர்ந் தொளித்த களையப் பூசற்று
அரண் கடாவுறீஇ யணங்குநிகழ்ந் தன்ன
மோகூர் மன்னன் முரசங் கொண்டு
நெடுமொழி பணித்தவன் வேம்புமுதல் தடிந்து
முரசுசெய முரற்சிக் களிறுபல பூட்டி
ஒழுகை யுய்த்தோய் கொழுவில் பைந்துணி" (ஐந்தாம் பத்து4;10-17)

என்றும்,

"வெல்போர் வேந்தரும் வேளிரும் ஒன்றுமொழிந்து
மொய்வளம் செருக்கி மொசிந்துவரு மோகூர்
வலம்படு குழூஉநிலை அதிரமண்டி
படுபிணம் பிறங்கப் பாழ்பல செய்து
படுகண் முரசும் நடுவட் சிலைப்ப
வளனற நிகழ்ந்து வாழுநர் பலர்படக்
கருஞ்சினை விறல்வேம் பறுத்த
பெருஞ்சினக் குட்டுவன்" (ஐந்தாம் பத்து-9;7-17)

என்றும் பரணர் குறிப்பிடுகின்றார்.

வஞ்சி(கருவூர்)

மலையாள மாவட்டத்தில் பொன்னானி,பாலைக்காடு,வைநாடு,வள்ளுவ நாடு,குறும்பர் நாடு,கோழிக்கோடு,ஏர்நாடு முதலிய மாவட்டங்களைத் தன்னகத்தே கொண்டது பொறைநாடு.இப்பொறை நாட்டில் குறும்பர் நாடு என்பது ஒரு பகுதியாகும்.இப்பகுதியில் மாந்தரம் எனப் பெரிய மலையொன்றும்,அதனையடுத்து மாந்தரம் என்னும் மூதூரும் உண்டு. மாந்தரஞ் சேரகளுள் மிக்க பழையோனாகப் பழம்பாடல்களில் காணப்படுபவன் மாந்தரம் பொறையன் கடுங்கோ என்பவனாவன்.இவனையடுத்து,ஒள்வாள் கோப்பெருஞ் சேரல் இரும்பொறை என்பான் சேரநாட்டைப் புரந்திருத்தல் வேண்டும்.இவனே 'கொங்கு நாட்டில் வடக்கே பூவானியாறு வரையும்,கிழக்கே கொங்குவஞ்சி (தாராபுரம்)வரையும்,பரவியிருந்த பொறைநாட்டைக் கீழ்க்கொங்கு நாட்டுக் கருவூர் வரையில் பரப்பிய முதல் சேரமான் (ஔவை.சு.துரைசாமிப்பிள்ளை,பண்டைநாளைச் சேர மன்னர் வரலாறு,ப-185)என்றும்,காவிரிக்கு வடகரையில் உள்ள மழ நாட்டைச் சோழர் கைப்பற்றி ,இக்கோப்பெருஞ்சேரல் அவரோடு ஒள்ளிய வாட்போர் செய்து கீழ்க் கொங்குநாட்டையும் அதற்கு நேரே காவிரியின் வடகரையில் கொல்லிமலை வரையில் இருந்த மழநாட்டையும் வெற்றி கொண்டான் என்றும் ,பின்னர்ச் சோழரொடு உறவுகொண்டு கருவூர்க்கு அணித்தே ஓடும் ஆன்பொருநை ஆற்றின் கரையிலிருந்த ஊரின் பழம்பெயரை கருவூர் என்று மாற்றியும் அந்நகரின் நேர் வடகரையில் விளங்கிய மழநாட்டுப் போரூரின் பெயரை மாற்றி முசிறி என்று பெயரையும் இட்டனன் என்றும்,அமராவதி என இப்பொழுது வழங்கப்படும் ஆறு ஆன்பொருநை என்றும் குறிக்கப்படுகின்றன என்றும், சேர நாட்டுப் பெருநகரங்களின் நினைவாகவே காவிரிக் கரையிலும் கருவூரும் முசிறியும் பெயர் பெற்றன என்றும் ஆராய்ச்சி அறிஞர் ஔவை.சு. துரைசாமிப்பிள்ளை அவர்கள் கூறியுள்ளார்.

ஒள்வாய் கோப்பெருஞ்சேரல் இரும்பொறையின் மகனே செல்வக் கடுங்கோ வாழியாதான்.இவன் கபிலருக்கு **நன்றா** என்னும் குன்றேறி நின்று தன் கண்ணிற்கண்ட நாடெல்லாம் காட்டிக் கொடுத்தான்.இந்நன்றா இன்று நணா என்றூ மருவி **பவானி** என்று வழங்குகின்றது.இவனுக்கு சிக்கற் பள்ளித் துஞ்சிய செல்வக் கடுங்கோ வாழியாதான் என்ற பெயரை வழங்கினர். சிக்கல் என்ற இடத்தில் பாண்டியனுக்காக துணை சென்று பகைவர் இட்ட வேல் இவன் மார்பில் தைத்து விழுப்புண் உண்டாக்கியது.அதனால் அவனுக்கு இப்பெயர் வந்தது.இப்போது இராமநாதபுரம் மாவட்டம் உத்திர கோச மங்கைப் பகுதியில் அவ்வூர் உள்ளது.

இளஞ்சேரல் இரும்பொறை ஐந்தெழில் என்னும் கோட்டையை முற்றுகையிற்று ,சோழன்,பாண்டியன், விச்சி,இளம் பழையன் மாறன் என்பவர்களை வென்று ,அவர்களிமிருந்து

திறையாகப் பேற்றுவந்த பொருளைக் கொண்டு வஞ்சி மூதூரில் தன்னை நாடிவந்த இரவலர்க்கு இனிதே வழங்கி மகிழ்ந்தான் என்று பின்வரும் பதிகம் குறிப்பிடப்படுகிறது.

" வெருவரு தானையொடு வெய்துறச் செய்துவென்று
இருபெரு வேந்தரும் விச்சியும் வீடி
அருமிளைக் கல்லகத் தைந்தெயி லெறிந்து
பொத்தி யாண்ட பெருஞ் சோ ழனையும்
வித்தை யாண்டவிளம் பழையன் மாறனையும்
வைத்த அஞ்சினம் வாய்ப்ப வென்று
வஞ்சி மூதூர்த் தந்துபிறர்க் குதவி" (ஒன்பதாம் பத்து-3-9)

இவ்வாறு பதிற்றுப்பத்தின் மூலம் சேரப் படையெடுப்பின் போது இருந்த ஊர்பெயர்களைப் பற்றி அறியமுடிகிறது. இலக்கியங்கள் வரலாற்றைப் பிரதிபலிக்கும் காலக் கண்ணாடி என்பது சான்றோரின் கருத்து.ஆம்.. பண்டைத் தமிழ் இலக்கியங்களின் வாயிலாக வரலாற்றுச் செய்திகளையும் அறிந்து கொள்ளமுடிகிறது. பழையன கழிதலும் ,புதியன புகுதலும் என்ற வாக்கிற்கு ஏற்றாற்போல் பழைய ஊர்ப் பெயர்களில் மாற்றங்கள் வந்திருந்தாலும் இலக்கியம் படிக்கும் நம்மால் பழைமையினை மறக்க இயலாது என்பதே உண்மை. புதியனவற்றில் பழையனவற்றை நினைவில் நிறுத்துவோம்.

46. நற்றிணையில் ஊர்ப் பெயர்கள்

ம.சித்ரா
முனைவர் பட்ட ஆய்வாளர்,
இராணி மேரி கல்லூரி,
சென்னை – 4

சங்க இலக்கியங்கள் எட்டுத் தொகையும் பத்துப்பாட்டு ஆகும். இவ்விலக்கியங்களில் எட்டுத் தொகையில் முதலாவதாக வைத்து எண்ணப்படும் நூல் நற்றிணை இலக்கியம் ஆகும். நற்றிணை பாடல்கள் பல்வேறு காலங்களில் வாழ்ந்த பல்வேறு புலவர்கள் இயற்றியுள்ளனர். இவ்விலக்கியம் நானூறு பாடல்கள் கொண்ட அகத்திணையால் பாடல் அமைந்த நூல் ஆகும். இதில் குறிஞ்சி,முல்லை,மருதம்,நெய்தல், பாலை இத்திணைகளை வைத்து புலவர்கள் அந்த அந்த நிலத்திற்கு ஏற்றால் போல் அகத்திணை பாடல்கள் பாடியுள்ளனர்.இப்புலவர்கள் நற்றிணையில் ஒரே புலவர் பல பாடல்களை இயற்றியுள்ளனர். அவர்கள் இதில் இயற்கை வளம்,நாட்டின் வளமை, மன்னன் சிறப்பு, மலைகளின் சிறப்பு போன்றவற்றை சூழலுக்கு ஏற்றவாறு நயம்பட பாழயுள்ளனர். இப்புலவர்களால் தான் நற்றிணை சிறப்பு பெறுகின்றது. ஆனால் இப்புலவர்களின் வரலாறும் நமக்கு குறைந்த அளவே கிடைத்துள்ளது. அவற்றை கொண்டு இப்புலவர்கள் இன்ன ஊரினர் என்று அறுதியிட்டு உரையாசிரியர்கள் கூறியள்ளனர்.அப்புலவர்களின் ஊர் பெயர்களை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

<u>அரிசில்:</u>

அரிசிலங்குமரனார் என்னும் புலவர் நற்றிணையில் பாடல் பாடியுள்ளார். அரிசில் என்ற ஊர்ப்பெயர் இவ்வூரைச் சேர்ந்த புலவர் பெயருடன் இணைத்துக் கூறப்பட்ட நிலையில் சங்க இலக்கியங்களில் இப்பெறப்பட்டது.

"அரிசிலற் தென்றல் அன்ன இவள்

விரை யொலி கூந்தல் விட்டமை கவனே"

(நற்றி - 141)

என்று அரிசிலங் குமரன் அரிசிலாற்றைப் பற்றி பாடியுள்ளார். அரிசில் தற்போது தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணத்திற்குத் தென்கிழக்கே நாலரை மைல் தொலைவில் அரிசிலாற்றங்கரையில் அரிசில் கரைப்புத்தூர் என்ற ஓர் ஊர் உள்ளது.

<u>ஆலம்பேரி:</u>

ஆலம்பேரி சாத்தனார் என்னும் புலவர் நற்றிணைப் பாடலை பாடியுள்ளார். ஆலம்பேரி என்னும் ஊர் நெல்லை மாவட்டத்தில் உள்ள ஊர்க்குள் ஒன்று இதை பையன் ஆலம்பேரி என்னும் ஊர் இச்சாத்தானருடையது என்பது உரையாசிரியர்களின் கருத்து பேரி என்ற சொல் பேரேரி என்பதன் சிதைவாகும்.பெரிய ஏரிகள் பேரேரிகள் எனப்பட்டது.

<u>இளம்புல்லூர்:</u>

நற்றிணை 89 ஆம் பாடலை பாடியவர் இளம்புல்லூர்க் காவிதி என்பவர். காவிதிப் பட்டம் பெற்ற இப்புலவரின் ஊரினை கல்வெட்டு குறிப்பிடுகிறது.சங்க காலப் பாண்டிய நாட்டு ஊர்களுள் இளம்புல்லூர் என்பது ஓர் ஊர்.இவ்வூர் இளமைப் பெயரால் சிறப்பிக்கப்படுகிறது. இச்சான்றோரது ஊரான இளம்புல்லூர் இடைக்காலத்தே மிழலைக் கூற்றத்து நடுவிற்கூறான இளம்புல்லூர்க்குடி என்று கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகின்றது.

<u>உம்பற்காடு:</u>

இவ்வூரைச் சேர்ந்த புலவர் உம்பற்காடு இளங்கண்ணனார் எனப்படுவார். உம்பற்காடு சேரநாட்டுப் பகுதியாகும்.உம்பல் என்ற சொல் யானையைக் குறிக்கும் எனவே யானைகள் மிகுந்த காடு என்ற பொருளில் இவ்வூர் பெயர் பெற்றிருக்கிறது. உம்பற்காடு என்பது மலையாள மாவட்டத்து வயநாட்டுப் பகுதியில் ஒன்று இதனைப் பிற்காலத்தவர் நும்பற்காடு எனவழங்கினர். இவ்வூர் கி.பி.1887 ஆம் ஆண்டு அரசியலார் இதனை வயநாட்டில் இருந்து பிரிந்து நீலகரி மாவட்டத்தில் சேர்ந்தனர்.

தற்போது இப்பெயர் மறைந்துவிட்டது.இன்றைய வயநாடு சங்க காலத்துச் சேரமான் வஞ்சன் என்பவனுக்குரிய பாயல் நாடு.அங்குள்ள மலைத்தொடர் பாயல்மலை என்று வழங்கப்படுகின்றது.இவ்வூரைப்பற்றி பதிற்றுப்பத்தில்

"இமயவரம்பன் தம்பி அமைவர

உம்பற்காட்டைத் தண்கொல் நிற்க"

(பதி-1-2)

ஒரு சிறை:

ஒரு சிறை என்னும் ஊரில் வாழ்ந்தவர்.பெரியனார் என்னும் புலவர் அவ்வூர் பாண்டிய நாட்டிலுள்ளது. தென்பாண்டி நாட்டு இராசராச புரத்துக்குப் பிடாகையாக ஒரு சிறையென்னும் ஊர் இருந்ததென கல்வெட்டு கூறுகின்றது. தற்போது திருநெல்வேலி மாவட்டத்தில் வள்ளியூர் பகுதியில் இவ்வூர் உள்ளது.

ஒரு சிறை என்பது ஒரு பக்கம் என்னும் பொருளுள்ளது.

ஓதலூர்:

நற்றிணையில் உள்ள 126 ஆம் பாடலின் ஆசிரியர் ஓதலாந்தையாரின் ஊர் ஓதலூர் ஆகும். ஓதலூர் சேர நாட்டுக் குட்ட நாட்டுப் பகுதியில் உள்ளதோர் ஊர். இப்போது அப்பகுதி மலையாள மாவட்டத்துப் (கேரளா) பொன்னானி வட்டத்திலுள்ளது. அப்பகுதி இன்றும் குட்ட நாடு என்றுதான் அழைக்கப்படுகிறது.

காவிதிப்பாக்கம்:

பண்டைய நாளில் நல்லொழுக்கம் நிறைந்த சான்றோர்களுக்கு எட்டி, காவிரி போன்ற பட்டங்களை அறிந்து அவர்களுக்குச் சிறப்பு செய்கின்ற போக்கு இருந்தது. அந்தச் சிறப்பினர் ஒருவரின் பெயரால் அமைந்ததே இக்காவிதிப்பாக்கம். "இது வட ஆர்க்காடு மாவட்டத்தில் காவிதிப்பாக்கமாக விளங்கிய பேரூர்" ஆகும். தற்போது 'காவிரிப் பாக்கம்' என மருவி வழங்குகிறது.

கிடங்கில்:

தமிழகத்தின் பழமையான ஊர்களில் ஒன்று கண்ணனார் என்னும் புலவர் இவ்வூரை சேர்ந்தவர். இது நடுநாட்டிலே ஓய்மாநாட்டு நல்லியக் கோடனின் ஆட்சியிலிருந்து ஒரு ஊர். இவ்வூர் தற்போது திண்டிவனம் நகரத்தின் அருகில் உள்ள ஊர். இவ்வூர் மிக பழமையானது. இந்நகர தெருக்களில் இருந்த புழுதியை யானைகளின் மதநீர் அருவி நனைத்து அடக்கியதாகச் சங்க இலக்கியம் கூறுகின்றது.

கிடங்கில் என்பது சங்க காலத்தில் தொண்டை நாட்டின் தென்பகுதியான ஒய்மா நாட்டுத் தலைநகரமாய் விளங்கிற்று. இப்போது திண்டிவனம் புகைவண்டி நிலையத்திற்கு அண்மையில் இவ்வூர் நகராட்சியில் அடங்கியுள்ளது.

குடவாயில்:

கீரத்தனார் என்னும் புலவர் நற்றினை பாடலை பாடியுள்ளார். இவர் குடவாயிலைச் சேர்ந்தவர். தற்போது குடவாயில் என்னும் குடவாசல் தஞ்சாவூர் மாவட்டம் நன்னிலம் வட்டத்தில் உள்ளது. இது கும்பகோணம் - திருவாரூர் நெடுஞ்சாலையில் கும்பகோணத்தில் இருந்து பத்து மைல் தொலைவில் உள்ளது. இது சோழ நாட்டு பழமையான ஊர். இக்குடந்தையை சங்க இலக்கியத்தில் ஷஷிதேர்வன் சோழர் குடந்தை வாயில்'' என்று நற்றினை குறிப்பிடுகிறது.

குழப்பந்தாங்கல் :

குளம்பு என்னும் மூரினதாதலிற் குளம்பனாரெனப்பட்டார். இ∴து ஊர் பற்றி வந்த பெயர் ஆகும். தற்போது இவ்வூர் தொண்டை நாட்டு ஊர்களில் குழப்பந்தாங்கல் என வழங்கப்படுகின்றது.

குன்றுகட் பாலி :

குன்றின்கட் பாலியாதனார் என்னும் புலவர் நற்றினைப் பாடலை பாடியுள்ளார். குன்றுகட் பாலி என்பது ஓர் ஊர். அ∴து தற்போது பாலிக்குன்று என்ற உருவில் மலையாள மாவட்டத்தில் (கேரளா) கோழிக்கோட்டுப் பகுதியில் உள்ளது.

கோமால் :

கோன்மா நெடுங்கோட்டனார் என்னும் புலவர் இவ்வூரினர் சோழநாட்ழன் கண் உள்ள ஊர்களில் ஒன்று. இதனை கல்வெட்டுகளும் குறிக்கின்றன. ஷசயங்கொண்ட சோழ மண்டலத்துத் திருவிழந்தூர் நாட்டுக் கோமலான குலோத்துங்க சோழச் சதுர்வேதி மங்கலம் என்று கூறுகின்றது. இந்நாளில் இது கோமல் என்று வழங்கப்படுகிறது. இது தற்போது நாகை மாவட்டத்தில் உள்ளது.

சுள்ளி :

மதுரைச் சுள்ளிப் போதனார் என்னும் புலவர் ஒருவர் நற்றிணையில் பாடல் இயற்றியுள்ளார். சுள்ளி என்பது தற்போது சுருளியென மருவி விட்டது. இப்போது தேனி மாவட்டம் கம்பம் பகுதியில் உள்ளது. இவ்வூர் சுருளி அருவி மிகவும் சிறப்பு வாய்ந்தது.

தண்கால் :

தண்கால் பொற்கொல்லன் வெண்ணாகனார் என்னும் புலவர் நற்றினையில் பாடலை இயற்றியுள்ளார். தண்கால் என்னும் ஊர்ப்பெயர் பிற்காலத்தே ஷதங்கால்' என மருவி விட்டது.

தங்கால் என்பது பாண்டிய நாட்டில் உள்ள ஓர் ஊர். திருத்தங்கலூர் என இன்று வழங்கப்படுகிறது.

இவ்வூர் பொதியத்தில் தோன்றிவரும் தென்றல் இவ்வூர்ப் பகுதியடைந்தும் மென்மையும் தன்மையும் பெற்றுத் தமிழ் நடையுற்று இனிமை செய்யத் தலைபடுவதால் அவ்விடம் தண்கால் எனப்படுவதாயிற்று என்று ஔவை துரைசாமி தன்உரையில் இவ்வூருக்கு விளக்கம் தருகிறார்.

<u>நொச்சி – நியமம் :</u>

நொச்சி நியமங்கிழார் என்னும் புலவர் நற்றிணையில் பாடலை இயற்றியுள்ளார். ஷநியமம் என்பது கோயிலைக் குறிப்பதால் முன்காலத்தில் நொச்சி நியமம் தெய்வநலம் பெற்ற ஊர்களில் ஒன்று என கொள்ளப்படுகிறது. தற்போது அவ்வூர்ப் பெயர் ஷநொச்சியம்' என மருவி வழங்குகின்றது. நொச்சி நியமம் என்பது சோழநாட்டுக் காவிரியின் வடக்கில் திருச்சிராப்பள்ளி வட்டத்து உத்தமர் கோயில் என்னும் ஊர்க்கு அண்மையில் உள்ளது.

<u>பெருந்தலை :</u>

பெருந்தலை என்னும் ஊரிற் பிறந்த சாத்தனாரைப் பெருந்தலைச் சாத்தனார் என்று குறித்தார்கள். அவ்வூர் பெருந்தலையூர் என்னும் பெயரோடு கொங்கு நாட்டில் இன்றும் காணப்படுகிறது. இவ்வூர் கோவை மாவட்டத்தில் பூவானி(பவானி)யாறு பாயும் நாட்டில் உள்ளதோர் ஊர் ஆகும்.

<u>மருங்கூர்ப் பட்டினம்:</u>

பாண்டிய நாட்டில் திருவாடானை வட்டத்தில் மருங்கூர் என்னும் பெயருடன் ஓர் ஊர் உள்ளது. "பசும்பூண் வழுதி மருங்கை" என்னும் தொடர் பாண்டியனுக்குரியது.மருங்கை என்னும் இவ்வூர் சங்க இலக்கியங்களில் குறிப்பிடபடுகிறது.

"பச்சிறாக் கவர்ந்த பசுங்கண் காக்கை
தூங்கல் வங்கத்துக் கூம்பிற் சேக்கும்
மருங்கூர்ப் பட்டினத் தன்ன இவன்
நெடுந்தேர் எவ்வளை ஒடுவ கண்டே"

(நற்றி-258)

என்று மருங்கூர்ப் பட்டினத்தின் சிறப்பைப் பாடியுள்ளார் நக்கீரர்.

இவ்வாறாக சங்க இலக்கியங்களில் அகத்திணைப் பாடல்களில் சிறப்புப்பெற்றது.நற்றிணை இந்நற்றிணையில் பல்வேறு சிறந்த் புலவர்களின் பாடல்கள் மறைந்தும் அழிந்து போயின. எஞ்சியுள்ளவை கொண்டு அப்புலவர்களின் ஊர் பெயர்களை அறியமுடிகிறது.

47. ஆற்றுப்படையில் ஊர்ப்பெயர்கள்

ம. சியாமளா
முனைவர்பட்ட ஆய்வாளர் (முழுநேரம்)
இராணிமேரி கல்லூரி, சென்னை

முன்னுரை

மனித இன வரலாற்றை நோக்கின் மக்கள் கூட்டம் கூட்டமாக இடம் விட்டு இடம் சென்று வாழத் தொடங்கிய காலத்தே **“ஊர்ப்பெயர்”** தோற்றம் பெற்றிருக்க வேண்டும். ஓர் ஊரினின்றும் மற்றொரு ஊரை வேறுபடுத்த பெயர் இன்றியமையாததாகிறது. மனித இனம் நிலையாக வாழ தொடங்கிய பின்னரே **‘இடப்பெயர்கள்’** தோன்றிருக்க வேண்டும்.

ஒரு நாட்டின் பழங்கால வாழ்வையும், வரலாற்றையும் அறிவதற்கு இலக்கியம், கல்வெட்டு, நாணயம் போன்றவை பெயராய்வுக்குத் துணை செய்கின்றன. சங்க இலக்கியப் பத்துப்பாட்டில் உள்ள ஆற்றுப்படை நூல்களால் காணப்படும் ஊர்கள் பற்றி கட்டுரையின் மூலம் அறியலாம்.

திருப்பரங்குன்றம்

“குன்று அமர்ந்து உறைதலும் உரியன்”   (திருமுருகு. 77)

என்னும் வரியில் வந்துள்ள குன்றம் என்னும் ஊர் மதுரைக்கு மேற்கே உள்ள திருப்பரங்குன்றத்தைக் குறிப்பதாக உள்ளது.

திருமகளே மதுரைநகரில் வீற்றிருப்பது போன்று செல்வ வளமுடையதாக மதுரை மாநகர் விளங்கியுள்ளது என்றும், கடைத்தெருக்களும், மாடங்களும் பல இருந்துள்ளன என்றும், அதற்கு மேற்கே திருப்பரங்குன்றம் இருந்தது என்றும் இவ்வரிகளால் அறியலாம்.

திருச்சீர் அலைவாய்

திருச்சீர் அலைவாய் என்று வழங்கப்படும் திருச்செந்தூரில் வீற்றிருக்கின்ற முருகன் பற்றிக் கூறுகையில் இவ்வூர் இருந்ததும், அங்கு முருகனுக்கு யானை ஊர்தியும், மயில் ஊர்தியும் உண்டு என உணர்ந்து கொள்ளலாம்.

“உலகம் புகழ்ந்த ஓங்குஉயர் விழுச்சீர்
ஆலைவாய்ச் சேறலும் நிலைஇய பண்பே”   (திருமுருகு. 124 – 125)

என்ற அடிகள் மூலம் - முருகன் ஆறுமுகங்களோடும், பன்னிரண்டுகைகளோடும் சூரபன்மனை வெல்ல திருச்செந்தூர் வருவதாகவும் அங்கு உலகம் புகழ்கின்ற ஓங்கிய உயர்ந்த பெருமையுடைய சிறப்பினையுடைய அலைகள் மோதுகின்ற திருச்செந்தூரை அடைந்து தாக்குதலும் உண்டு என்ற பாடல்வரிகளினால் இவ்வூரும், இவ்வூரின் அருகே கடல் இருந்தமையையும் தெளிவாகிறது.

திருஆவினன் குடி – பழனி

“தாஇல் கொள்கை மடந்தையொடு, சில நாள்”
ஆவினன்குடி அசைதலும் உரியன்”   (திருமுருகு. 175 – 176)

அருட்கற்பினையுடைய தெய்வானையாருடன், ஆவினன் குடியென்னும் ஊரிலே சில நாள் இருத்தலும் உரியன் என்று முருகன் ஆவினன் குடியில் இருத்தலைப் பற்றிக் கூறுவதிலிருந்து ஆவினன்குடி என்ற ஊரினை அறிந்து கொள்ளமுடிகிறது.

திருவேரகம் (சுவாமிமலை)

“விரைஉறு நறுமலர் ஏற்றி பெரிது உவந்து
எரகத்து உறைதலும் உரியன்”   திருமுருகு 188 – 189)

இதில் விரும்பிப் போற்றிப் பரவிப் பலரும் தொழ வருவர். இப்படி வாழ்த்தி வணங்குபவர்கள் மனம் மகிழ, இதயம் குளிர வேலவனாகிய முருகன், சாமிநாதப் பெருமானாக, திருஏரகம் என்னும் சுவாமிமலையில் அருளாட்சி புரிவான்.... என்றும் அடிகள் குறிப்பிடுவதிலிருந்து திரு ஏரகம் என்னும் ஊர் இருந்தது என்பதும் அதுதான் தற்பொழுது சுவாமிமலை என்று குறிப்பிடுவதாகவும் கூறப்படுகிறது. சிவபெருமானுக்கு ஓம் என்னும் பிரணவ மந்திரத்தை உபதேசம் செய்தது தகப்பன் சுவாமிமலை பெயர் பெற்ற சுவாமிமலை.

பழமுதிர்சோலை

“பழமுதிர் சோலை மலைகிழவோனே!”   (திருமுருகு – 317)

என்பது பழம் முற்றின சோலைகளையுடைய மலைக்கு உரியவனாகிய முருகனே என்று குறிப்பிடுவதிலிருந்து, பழமுதிர்ச்சோலை என்பது சோலைகள் அமையப் பெற்ற இடமாக இருந்திருக்கக் கூடும் என்பது தெரிகிறது.

வெண்ணி

சோழமன்னன் கரிகாலன் வெண்ணியென்ற ஊரிடத்தே பொருத அச்சம் தோன்றுகின்ற வலியையுடைய முயற்சி என்று பொருநராற்று அடிகளில் குறிப்பிடுவதிலிருந்து வெண்ணியூர் பற்றி அறியலாம்.

"வெண்ணித் தாக்கிய வெருவரு நோன்றதத்
குாண் ஆர் கண்ணி, கரிகால் வளவன்" *(பொருநர். 147 – 148)*

வஞ்சிநகர் (குட்டநாடு)

மேற்கு நாட்டு அரசர் குலத்தில் தோன்றிய குட்டநாட்டரசன் குட்டுவன் தன் ஆற்றலால் வடநாட்டுப் பகைவரை வென்று இமயமலையில் தன் வில் கொடியினைப் பொறித்துள்ளான். அவன் தலைநகரமாகிய வஞ்சிமாநகர் சென்றாலும் கிடைக்கும் பரிசில் சிறியதுதான் என்று பாணன் குறிப்பிடுவதாக அமைந்துள்ள பாடல் சிறுபாணாற்றுப்படையில் அமைந்துள்ளது. இதில் குட்டநாடு என்பது மேற்குநாட்டில் இருந்ததென்பதும், அதன் தலைநகரம் வஞ்சிமாநகரம் என்பதும் உணர்த்தப்படுவதாக அமைந்துள்ளது.

"வடபுல இமயத்து வாங்குவிற் பொறித்த
எழுஉறழ் திண்தோள் இயல்தேர்க குட்டுவன்
வருபுனல் வாயில்வஞ்சியும் வறிதே" *(சிறுபாண். 48 – 50)*

கொற்கை

"தத்துநீர் வரைப்பின் கொற்கைக் கோமான்......" (சிறுபாண். 62)

என்ற அடிகளின் மூலம் முரிகின்ற நீரைத் தனக்கு எல்லையாகவுடைய கொற்கையென்னும் ஊருக்கு அரசன் என்று குறிப்பிடுவதிலிருந்து கொற்கை நாடு அறியப்பட்டுள்ளது. இந்த கொற்கை நாடு தான் மதுரை என்றும் வழங்கப்பட்டுள்ளது. இதை இதே செய்யுளில் வரும்

"மகிழ்நனை மறுகின் மதுரையும் வறிதே" *(சிறுபாண். 68)*

என்று சிறுபாணாற்று அடியின் மூலம் பொய்கையென்ற நதியிலிருந்து பற்றியும் அந்நதி உறந்தையில் இருந்தது என்பதும் மற்றும்,

"ஓடாப் பூட்கை உறந்தையும் வறிதே" *(சிறுபாண் - 83)*

என்ற அடி தன்னிடத்திருந்தோர் ஓடாமைக்குக் காரணமாகிய உறந்தையென்னும் ஊர் என்று குறிப்பிடுவதிலிருந்து அறிய முடிகிறது.

உறந்தையூர் என்பது உறையூர் என்றும் இது சோழனின் தலைநகரம் என்றும் ச.வே. சுப்பிரமணியன் குறிப்பிடுகிறார்.

தோட்டிமலை

"துளிமழை பொழியும் வளிதுஞ்சு நெடுங்கோட்டு
நுளிமலை நாடன் நள்ளி......." *(சிறுபாண். 106 -107)*

என்ற அடிகள் குளிர்ச்சிபொருந்திய தோட்டி மலைக்குத் தலைவன் நள்ளி என்று குறிப்பிட்டுள்ளது. இந்த அடிகளினால் தோட்டிமலையென்பது மக்கள் வாழ்ந்து இருந்ததென்பதும் நள்ளி என்னும் அரசன் அவ்வூரை ஆட்சிபுரிந்திருந்தான் என்பதும் தெளிவாகிறது.

வேலூர்

"திறல் வேல் நுதியின் பூத்த கேணி
விறல் வேல் வென்றி வேலூர் எய்தின" *(சிறுபாண். 72 - 73)*

இந்த அடிகளின் மூலம் நல்லியக்கோடன் தன் பகை மிகுதிக்கு அஞ்சி முருகனை வழிபட்ட வழி அவன் இக்கேணியிற் பூவை வாங்கிப் பகைவரை எறியென்று கனவிற் கூறியதாகவும் அதில் பூவைத் தன் வேலாக நிருமித்தமாகவும் கதை கூறிற்று என்று நச்சினார்க்கினியர் உரை கூறப்பட்டுள்ளது. இவ்வாறு வேலூர் என்ற ஊரின் சிறப்பை அறிந்துக் கொள்ள முடிகிறது.

தொண்டைநாடு

பெரும்பாணாற்றுப் படையில் தொண்டைமான் இளந்திரையன் என்று அரசர் பெயர் சுட்டப்பட்டுள்ளது. இதில் இளந்திரையன் என்பது அரசனாகவும், தொண்டைநாடு ஊராகவும் கருதப்பட்டுள்ளது.

"இமையவர் உறையும் சிமையச் செவ்வரை" *(பெரும்பாண். 429)*

செவ்வரைநாடு என்று இத்தொண்டைநாடு பெரும் பாணாற்றுப்படையில் குறிப்பிட்டுள்ளது. வளமுடைய ஊர்கள் பல தொண்டைநாட்டில் இருந்ததாக பெரும்பாணாற்றுப்படை அடி தெரிவிக்கிறது.

நீர்ப்பெயற்று

"நீர்ப்பெயற்று எல்லைப்போகி" *(பெரும்பாண். 319)*

என்ற அடி நீர்ப்பெயற்றென்னும் ஊரினெல்லையிலே போய்..... என்று குறிக்கப்படுவதிலிருந்து நீர்ப்பெயற்று என்னும் ஊர் இருந்தமை தெரிகிறது என்று நச்சினார்க்கினியர் உரைக்கிறார்.

இந்த நீர்ப்பெயற்று என்பது துறையைக் குறிப்பதாகும். இதை,

"பட்டின மருங்கின் அசையின்" *(பெரும்பாண். 336)*

என்ற அடியால் துறைமுகப்பட்டினம் என்ற குறிப்பினைக் குறிப்பிடுவதிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

இடைக்கழிநாடு

இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார், என்ற புலவர் பெயரின் மூலம் ***"இடைக்கழிநாடு"*** இருந்தமை புலப்படுகிறது. இடைக்கழி நாட்டில் உள்ள நல்லூர் என்ற ஊர் இவருடைய ஊராகும்.

முடிவுரை

ஆற்றுப்படையில் பேசப்பட்டுள்ள ஊர்கள் இன்றும் தமிழகத்தில் சிறப்பு வாய்ந்த இடமாகத் திகழ்கிறது. குறிப்பாக முருகனின் அறுபடைவீடுகளாகும். இவ்வாறு பத்துப்பாட்டு ஆற்றுப்படை நூல்களில் பல ஊர்ப்பெயர்கள் கூறப்பட்டுள்ளது. இன்று இதன் வழி பழந்தமிழர்கள் வாழ்ந்த ஊர்களை நாம் அறிந்து கொள்ள துணை புரிகிறது. மேலும் இவ்வூர்களில் சில இன்னும் வழக்கில் இருப்பது தமிழ் இலக்கியத்திற்கு சான்று பகர்கிறது என்று தெளிந்து கொள்ளலாம்.

சங்க இலக்கியங்களில் மிகுதியும் இடம்பெறும் ஊர்ப்பெயர்கள்

மா.சியாமளாதேவி
முனைவர்பட்ட ஆய்வாளர்,
அ.வ.அ.கல்லூரி (தன்.),
மன்னம்பந்தல்,
மயிலாடுதுறை.

அறிமுகம்

இயற்கையை ஒட்டி அமைந்ததில் அதிக இலக்கியமாகாது. அகம்,புறம் இரண்டையும், அளவுபட, அறிவு பட, அறம்படச் சொல்வது. இலக்கியம் இலக்கியத்திற்காகவே என்று அமையாமல் உலகில் அமைதியும், உறவில் அன்பும், சமுதாயத்தில் ஒழுங்கும் நாட்டப்பட வேண்டும் என்ற குறிக்கோளில் அமைந்து எழுந்த மனித இலக்கியம். அவ்வகையினில் காலத்தால் அழியாத இலக்கியங்களுள் எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் சிறப்பானவை. சங்க இலக்கியங்களில் பயின்று வந்துள்ள ஊர்ப்பெயர்கள் அனைத்தும் குறிப்பிடத்தக்க வரலாற்றை அடிப்படையாகக் கொண்ட பெயர்களாகவே காணப்படுகின்றன. அவ்வகையில் இவ்விலக்கியங்களில் மிகுதியும் இடம்பெறும் ஊர்ப்பெயர்கள் குறித்தது.

இலக்கியங்களில் மிகுதியும் இடம்பெரும் ஊர்கள்

உறந்தை, கூடல், கொற்கை, பட்டினப் பாக்கம் ஆகிய ஊர்கள் சிறுபாணாற்றுப்படை, மதுரைக்காஞ்சி, பட்டினப்பாலை போன்ற பத்துப்பாட்டு நூல்களாலும், நற்றினை, குறுந்தொகை ஐங்குறுநூறு, அகநானூறு, புறநானூறு என்ற எட்டுத்தொகை நூல்களிலும் இடம்பெற்றுள்ளன.

உறந்தை

உறந்தை என்னும் இவ்வூர்ப்பெயர் உறையூர் என்றும், கோழி என்றும் வழங்கப்பெற்றுள்ளது. பண்டைக் காலத்தில் சிறந்து விளங்கிய நகரங்களும், துறைமுகங்களும் ஆற்றையடுத்தே உண்டாயின. சோழ நாட்டின் பண்டைய தலைநகரமாகிய உறையூர் காவிரியாற்றின் கரையில் அமைந்திருந்தது. உறப்பு என்ற சொல் செறிவு என்று பொருள்படுவதைக் காணும்பொழுது, மக்கள் நெருங்கி வாழ்ந்த இடமாக இருந்திருக்கலாம் எனத் தோன்றுகிறது. ஊர் எனப்படுவது உறையூர் எனப் பாராட்டப்பெற்ற இவ்வூர் இன்று திருச்சிராப்பள்ளி நகரின் ஒரு பகுதியாக இருக்கிறது.

உறந்தை நீதிக்குப் பெயர் போனது. சோழர்களின் ஆட்சிக்காலத்தில் மெல்லிய பஞ்சாடைகளின் வாணிகத்திற்குப் பெயர் பெற்றிருந்தது. உறந்தை என்ற பெயரே முதலில் அமைந்தது. பின்னரே உறையூர் என்று வழங்கினர் என்பதனை இலக்கியச் சான்றுகள் காட்டுகின்றன. சங்க இலக்கியத்திலெல்லாம். உறந்தை என்ற ஆட்சியே மிகுதியாக உள்ளது. சிலப்பதிகாரத்தில் ஓரிடத்தில் உறையூர் என்று இளங்கோ ஆண்டிருப்பதும், இவ்வூரைச் சேர்ந்த புலவர்கள் எல்லாருடைய பெயர்களிலும் உறையூர் என்றே இணைத்துக் கூறப் பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது. உறந்தை என்ற ஊர்ப்பெயரினை,

> நாடா நல்லிசை நற்றேர்ச் செம்பிய
> னோடாப் பூட்கை யுறந்தையும் உறிதே யதாஅன்றுண
> சிறுபாண். (அடி.82–83)

என்ற சிறுபாணாற்றுப்படையும்

> பிறங்குநிலை மாடத்து துறந்தை போக்கி (பட்டினப். வரி. 285)

என்ற மதுரைக்காஞ்சி தொடரிலும் பயின்று வந்துள்ளமையைக் காணலாம். உறந்தைக்குக் கோழி என்றும் ஒருபெயர் வழங்கி உள்ளது. ஒருகோழி யானையைப் போரில் வென்ற இடமாதலின் இப்பெயர் பெற்றது எனச் சிலப்பதிகாரம் கூறுகிறது. இதனை,

> முறஞ்செவி வாரணமும் சமமுருக்கிய
> புறஞ்சிறை வாரணம் (சிலம்பு. 10:247–248)

என்னும் அடிகள் வழி அறிய முடிகிறது. மேலும், கோழி என்ற சொல்லாட்சியானது பரிபாடலிலும், புறநானூற்றிலும் இடம்பெற்றுள்ளது.

கூடல்

மதுரை என்ற ஊரினைக் குறிக்க பலவேறு பெயர்கள் வழக்கினில் இருந்துள்ளன. அவை கூடல், நான் மாடக் கூடல், ஆலவாய், கடம்பவனம், மதுரை என்பன. கூடி இருத்தல் என்ற பொருளில் கூடல் எனப்பெயர் பெற்றி ருக்கலாம். சங்கப் புலவர்கள் கூடி இருந்து தமிழாய்ந்தமையால் இப்பெயர் தோன்றியிருக்கலாம்.

மதுரை என்ற ஊர்ப்பெயர் இக்காலத்தில் வழக்கில் அதிகமாக இருந்தாலும், சங்க காலத்தில் அருகேயே இருந்துள்ளது. பேச்சு வழக்கில் இன்று காணும் மருதை என்ற பெயரே மதுரை என மருவி வழங்கி இருக்க வேண்டும். அதாவது பண்டைக் காலத்தில் மரத்தால் ஊர்ப்பெயர்கள் அமையும் முறையையொட்டி மருத மரங்கள் நிறைந்த மருத நிலத்தின் அடிப்படையில் மருதை என்ற பெயர் தோன்றி, நாளடைவில் மதுரை என மாறி

வழங்கியதாகக் கருதலாம். சங்க இலக்கியத்தில் எங்கும் மருதை என்ற பெயர் இடம்பெறவே இல்லை. காரணம் இலக்கியங்களில் புலவர்கள் பாட ஆரம்பிப்பதற்கு முன்னமே மருதை என்ற பெயர் மதுரை என மருவி வழங்கப்பட்டுவிட்டது. கடம்ப மரங்கள் நிறைந்த கடம்ப வனத்தில் ஒரு கடம்ப மரத்தின் கீழ் தேவேந்திரன் சிவலிங்கத்திற்குப் பூசை செய்ய அதை அறிந்த பாண்டியன் அந்த வனத்தை நகராக்கினான். அதனால்தான் கடம்பவனம் என்ற ஒரு பெயர் மதுரைக்கு உண்டு என்பதும் புராணச் செய்தி.

பாண்டியன் தொன்மையான தலைநகராய் அலைவாய் என்ற பெயரை, அந்நகரின் அழிவுக்குப் பிறகு, சங்க காலத் தம் தலைநகரான மதுரைக்கும் இட்டனன். அந்த அலைவாய் என்ற பெயரே ஆலவாய் என மாற்றம் பெற்றது. அதற்கு ஒரு புராணக்கதையும் உண்டாக்கப்பட்டது என்ற கருத்தும் குறிப்பிடத்தக்கது. வையை ஆற்றை ஒட்டி மதுரைநகர் அமைந்திருக்கிறது. அதன் நீர்த் துறைகளை ஒட்டிப் பூங்காக்கள் இருந்தன. இடையில் பெரும்பாணர் சேரி இருந்தது. அடுத்து அகழி, பெரும்பாணர் சேரி இருந்தது, அகழியை அடுத்துகோட்டை அமைந்திருந்தன. கோயில் பழமையானது. வலிமை வாய்ந்தது. கோட்டையின் உள்ளே அகன்ற தெருக்களும், நடுநாயகமாய் அரண்மனையும் விளங்கின. இவை மதுரையைப் பற்றிப் பத்துப்பாட்டுத் தரும் செய்தி. இதில் கூடல் என்ற சொல்லாட்சியினைத் திருமுருகாற்றுப்படையின்

திருவீற் றிருந்த தீதுதீர் நியமத்து
மாடமலிமறுகிற் கூடற் குடவயி (திருமுருகு. அடிகள் 70–71)
மாடம் பிறங்கிய மலிபுகழ் கூட
னாளங்காடி நனந்தலைக் கம்பலை (மதுரைக். அடிகள் 429–430)

என்ற மதுரைக்காஞ்சி தொடராலும் அறியலாம். மதுரை என்ற சொல்லாட்சியினைச் சிறுபாணாற்றுப்படையின்

கண்ணார் கண்ணிக் கருந்தேர்ச் செழியன்
றிமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின்
மகிழ்நனை மறுகின் மதுரையும் பெறிதேயதா அன்று
(சிறுபாண். அடிகள் 65–67)

என்ற அடிகளிலும்,

மிக்கப் புகழெய்திய பெரும்பெயர் மதுரை (மதுரைக். வரி 699)

என்ற தொடரிலும் காணலாம். இன்றைய மதுரை சங்ககால மதுரையன்று. இன்றைய மதுரைக்குத் தெற்கில் சுமார் மூன்று மைல் தொலைவில் அவனியாபுரம் என்ற ஊரும், இரண்டு மைல் தொலைவில் கோவலன் பொட்டல் என்ற ஒரு மேடும் உள்ளது. இந்த அவனியாபுரமும் கோவலன் பொட்டலுக்கும் இடையிலுள்ள நிலப்பகுதியுமே சங்ககாலக் கூடல் என்று கருதுகின்றனர். நாளடைவில் இன்றுள்ள மதுரை ஒரு புதிய நகரமாகத் தோன்றியது என்றும் எண்ணுகின்றனர்.

கொற்கை

கொற்கை என்பது ஒரு துறைமுக நகரம். பொருநையாறு கடலோடு கலக்குமிடத்தில் விளங்கியது. இத்துறையில் விளைந்த முத்து கடல்கடந்த நாடுகளில் வாணிகப் பொருளாக அமைந்த சிறப்பினது. செங்குட்டுவன் காலத்தில் வெற்றிவேற் செழியன் என்னும் பாண்டியன் கொற்கை நகரைத் தலைநகரமாகக் கொண்டு அரசாண்டான். இக்கொற்கை இப்பொழுது திருநெல்வேலி மாவட்டத்தில் ஒரு சிற்றூராக உள்ளது. கொற்கை என்பது மரப்பெயர் அடிப்படையில் தோன்றிய ஊர்பெயர்

கிளர்பூட் புதல்வரோடு கிலுகிலி யாடுந்
தத்துநீர் வரைப்பிற் கொற்கைக் கோமான் (சிறுபாண். அடிகள் 61–62)

என்ற சிறுபாணாற்றுப்படை அடிகளில் கொற்கை என்ற ஊர்ப்பெயர் இடம்பெற்றுள்ளது. முத்தெடுப்போர் கொற்கையில் ஒரு தனிச்சேரியில் வாழ்ந்து வந்தனர். அதைச் சுற்றிலும் மதுக்குடிப்போர் வாழ்ந்த பாக்கம் இருந்தது என்பதனை,

விளைந்து முதிர்ந்த விழுமுத்தி
னிலங்குவளை யிருஞ்சேரிக்
கட்கொண்டிக் குடிப்பாக்கத்து
நற்கொற்கையோர் நசைப் பொருந (மதுரைக். அடிகள் 135–138)

என்ற மதுரைக்காஞ்சி அடிகளால் தெரிந்து கொள்ளலாம்.

பட்டினப்பாக்கம்

பட்டினப்பாக்கம் என்பதில் உள்ள பட்டினம், பாக்கம் என்ற இரு சொற்களும் நெய்தல் நிலத்து ஊரைக் குறிக்கும் பொதுச்சொற்கள். பூம்புகார் நகரத்தின் ஒரு பிரிவு பட்டினப்பாக்கம் என்ற பெயரையுடையதாய் இருந்தது. அக்காலத்தில் சிறந்திருந்த கடற்கரை நகரங்களின் அமைப்பைப் பண்டைய இலக்கியங்கள் ஒருவாறு காட்டுகின்றன. ஒவ்வொரு பெரிய கடற்கரை நகரமும் இரு பாகங்களையுடையதாய் இருந்தது. அவற்றுள் ஒரு பாகம் ஊர் என்றும், மற்றொரு பாகம் பட்டினம் என்றும் அழைக்கப்பட்டன. பூம்புகார் நகரத்தின் ஒருபாகம் மருவூர்ப் பாக்கம் என்றும், மற்றொரு பாகம் பட்டினப்பாக்கம் என்றும் பெயர் பெற்றன.

முத்த வார்மணற் பொற்கழங் காடும்
பட்டின மருங்கி னசையின் முட்டில் (பெரும்பாண். அடிகள் 335–336)

என்று பெரும்பாணாற்றுப்படையிலும்,

வாலிதை யெடுத்த வளிதரு வங்கம்
பல்வேறு பண்ட மிழிதரும் பட்டினத்து (மதுரைக். அடிகள் 536-537)

என்ற மதுரைக்காஞ்சி அடிகளிலும்,

புலம்பெயர் மாக்கள் கலந்தினி துறையு
முட்டாச் சிறப்பிற் பட்டினம் பெறினும் (பட்டினப். அடிகள் 217-21)

என்னும் பட்டினப்பாலை பாடல் அடிகளிலும் பட்டினப்பாக்கம் என்னும் ஊர்ப்பெயரானது பட்டினம் என்ற நிலையில் பயின்று வந்துள்ளது. பாக்கம் என்னும் ஊர்ப்பெயர் சொல்லும் பட்டினப்பாக்கத்தையே குறிக்கிறது. பொதுவாகக் கடற்கரை ஊர் என்ற பொருளிலும் பாக்கம் என்ற சொல் வழங்கப் பெற்றிருக்கிறது.

விலங்குபகை யல்லது கலங்குபகை யறியாக்
கொழும்பல்குடிச் செழும்பாக்கத்து

என்ற பட்டினப்பாலை அடிகள் அமைந்துள்ளது.

நிறைவுரை

உறக்கதை, கூடல், கொற்கை, பட்டினப்பாக்கம் ஆகிய ஊர்கள் சிறுபாணாற்றுப்படை, மதுரைக்காஞ்சி, பட்டினப்பாலை போன்ற பத்துப்பாட்டு நூல்களிலும், நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, அகநானூறு, புறநானூறு என்ற எட்டுத்தொகை நூல்கலும் மிகுதியும் இடம்பெற்றுள்ள என்பதைச் இக்கட்டுரைகள் வழி அறிந்து கொள்ளலாம்.

சான்றெண் விளக்கம்

1. ஆர். ஆளவந்தார், இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள், ப.80
2. மேலது, ப.118
3. மேலது, ப.119
4. பி.எல்.சாமி, சங்க நூல்களில் மணிகள், பக்.93-94
5. ஆர். ஆளவந்தார், மு.நூல், ப.120
6. மேலது, ப.128
7. ரா.பி.சேதுப்பிள்ளை, ஊரும் பேரும், ப.34

49. நெல்லை வட்டார ஊர்ப் பெயர்களில் 'நீர்'

முனைவர் க.சிவனேசன்,
முதுகலைத் தமிழ்த் துறை,
அய்யநாடார் ஜானகி அம்மாள் கல்லூரி(தன்னாட்சி)
சிவகாசி – 626 124.

முன்னுரை

"நீரின்றி அமையாது உலகு'' என்று சங்க இலக்கியமான நற்றிணையும் "நீரின்றி அமையாது உலகெனின் யார்க்கும் வானின்றி அமையாது உலகு'' (குறள் 20) என்று நீதி நூலான திருக்குறளும் நீரின் சிறப்பை எடுத்துரைக்கின்றன. நீர், ஐம்பூதங்களில் தனிச்சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது. இத்தனை சிறப்பு வாய்ந்த நீரின் பெயரால் நெல்லைச் சீமை என்று அழைக்கப்படும் திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் அநேக ஊரின் பெயர்கள் காணப்படுகின்றன. அவற்றைப் பற்றி ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

பண்டைத் தமிழகம் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகை நிலங்களால் ஆனது. பிரிக்கப்படாத பழைய நெல்லை மாவட்டம் இந்த ஐவகை நிலங்களையும் ஒருங்கே கொண்டதாகும். குற்றாலம், பாபநாசம் ஆகிய அருவிகள் கொண்ட குறிஞ்சி நிலமும் செங்கோட்டை, பைம்பொழில், காரையாறு, மணிமுத்தாறு போன்ற காட்டுப்பகுதிகள் கொண்ட முல்லை நிலமும் இலஞ்சி, கடையம், கீழப்பாவூர் என்று வயல்வெளிகள் சூழ்ந்த முல்லை நிலமும் உவரி, கூடங்குளம் எனறு கடல் பரப்பைக் கொண்ட நெய்தல் நிலமும் ராதாபுரம் போன்ற சற்று வரண்ட பாலை நிலமும் நெல்லைச் சீமையில் ஒருங்கே அமைந்துள்ளது. இவற்றுள் பாலை நீங்களாக பிற செழுமை கொண்டவை. அவற்றுள்ளும் நீர்நிலைகளின் பெயர்களைத் தாங்கிய ஊர்கள் மிகுதியாகவே இம்மண்ணில் உள்ளன.

"ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்'' என்பது பழமொழி. கயத்தாறு, மணிமுத்தாறு, கோதையாறு, சேர்வலாறு, காரையாறு, உள்ளாறு, கடனாநதி, ராமாநதி, என ஆறுகளின் பெயரால் இந்நெல்லை மண்ணில் பல்வேறு ஊர்கள் காணப்படுகின்றன. இவை எல்லாம் 'தண்பொருநை' என்று போற்றப்படும் தாமிரபரணி நீர் கிளைகளாகப் பாய்ந்து வளம் செய்யும் பகுதிகள் ஆகும். மலை வீழ் அருவி, நிலத்தை அறுத்துக் கொண்டு ஓடுவதால் 'அறுத்தல்' எனும் தொழில் பெயரின் பகுதியான 'அறு' என்பது ஆதிநீடல் விதிப்படி 'ஆறு' என ஆயிற்று. ஆற்றங்கரை ஓரங்களில் தாம் நாகரிகங்கள் தோன்றியுள்ளன. பெரும்பாலான அந்தணர் குடியிருப்புகள் இன்றும் ஆற்றங்கரை அருகிலேயே அமைந்துள்ளன.

ஆற்று நீரும், மழை நீரும் தேங்கி நிற்கும் பகுதி குளம் ஆகும். புன்செய், நன்செய் எனப்படும் இருவகைப் பாசனப்பகுதிகளும் குளங்களையே நம்பி உள்ளன. இத்தகைய குளத்துப் பாசன நன்செய் நிலங்களால் தான் இன்றும் திருநெல்வேலி, தஞ்சைக்கு அடுத்தப் படியாக இன்றும் மிகுதியாக நெல் விளையும் பரப்பாகத் திகழ்கிறது.

நாகல் குளம், ஆலங்குளம், பூலாங்குளம், பால்குளம், வெள்ளாளன் குளம், கழுநீர் குளம், பாணான்குளம், குருவிகுளம், குறிஞ்சாக்குளம், கிடாரக்குளம், செந்நெல்தா புதுக் குளம், கடம்பா குளம், கருங்குளம், அடையக்கருங் குளம், குறிப்பான் குளம், சாத்தான் குளம், பாப்பாங்குளம், பேய்க்குளம், அரிய குளம், ஆழ்வார்கற் குளம், வேய்ந்தான் குளம், குளத்தூர், கும்பத்தார்குளம், செங்குளம், விளாத்திகுளம், கூடங்குளம், சிவலார்குளம் என நெல்லை வட்டார ஊர்ப்பெயர்களின் பட்டியல் குளம் என முடியும் ஊர்ப் பெயர்களாகவே காணப்படுகின்றது. இவற்றுள் ஆலங்குளம், பூலாங்குளம், விளாத்திகுளம், வேப்பிளாங்குளம், நாகல்குளம், கடம்பாகுளம் என்பவை மரங்களின் பெயர்களால் அமைந்துள்ளன. செங்குளம், கருங்குளம் என்பன நிறப்பெயராலும் பாணான்குளம், வெள்ளாளங்குளம், பாப்பாங்குளம் என்பன சாதிப் பெயர்களாலும் அமைந்துள்ளன. பேய்க்குளம், சாத்தான்குளம் ஆகியவை ஆவி பற்றிய நம்பிக்கையால் அமைந்துள்ள ஊர்கள் ஆகும். அரியகுளம் நாயக்கர் ஆட்சியின் போது இருந்த 'தளவாய்' பட்டம் பெற்ற அரியநாத முதலியாரின் பெயரால் அமைந்துள்ளதாகும்.

சிவலார்குளம், ஆழ்வார்கற்குளம் என்பவை முறையே சைவ, வைணவ சமயப்பெயர்களால் ஆனவை. குருவிகுளம் பறவை பெயரால் காணப்படுகிறது.

ஊற்றுமலை, அத்தியூற்று, கோவிலூற்று, தாழையூற்று தன்னூற்று போல்வன ஊற்றின் பெயரால் அமைந்துள்ளவை ஆகும். "ஆற்றுப் பெருக்கற்று அடிசுடம் காலத்தும் ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும்'' என ஊற்றுகள் சிறப்பிக்கப்படுகின்றன.

நாரைக் கிணறு, காவல் கிணறு ஆகிய ஊர்கள் கிணறுகளின் பெயரால் அமைந்துள்ளன. இடைக்கால், மறுகால், குறிச்சி ஆகியன கால்வாய்களின் பெயர்களால் அமைந்துள்ள ஊர்கள் ஆகும்.

பட்டினம் என்பது கடற்கரை நகரம் என ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரம், காவிரிப்பூம் பட்டினம் என்னும் புகார் நகர் வாயிலாகத் தெரிவிக்கின்றது. நெல்லைச் சீமையின் புன்னைக்காயல், காயல்பட்டினம், பழையகாயல், வீரபாண்டியன் பட்டினம், உவரி ஆகிய ஊர்கள் கடலின் அருகே கரையில் அமையப்பெற்றுள்ள ஊர்கள் ஆகும். இவற்றுள் கயல் என்பது கழிமுகப் பகுதியாகும். 'உவரி' என்பது உப்புத் தன்மை கொண்ட தண்ணீரால் அதாவது கடல்நீரால் ஆன ஊர் என்னும் பொருள்படும்.

மேலும், அம்பாசமுத்திரம், கோபாலசமுத்திரம், ரவணசமுத்திரம், தளபதிசமுத்திரம் ஆகிய ஊர்கள் கடலருகே அமையாத போதும், சமுத்திரம் போன்ற நீர்வளம் உடையது என்று செழுமை கருதி இப்பெயர் பெற்றன போலும்.

நாங்குநேரி, சீவலப்பேரி, ஆயிரப்பேரி என்னும் ஊர்கள் ஏரிகளின் பெயரால் ஆனவை. வைணவர்கள் அதிகமாக உள்ள நாங்கு நேரி நான்கு ஏரிகள் கொண்ட ஊர் என்னும் பொருள்பட உள்ளதாகும். சீவலப்பேரி என்னும் ஊர்தான் முன்பு முக்கூடற்பள்ளு நூலில் சுட்டப்பெறும் முக்கூடல் ஆகும். பிற்காலப் பாண்டிய மன்னர்களில் ஒருவரான ஸ்ரீவல்லப்பேரி அழைக்கப்பட்ட ஊர் பின்பு மருவி, சீவலப்பேரி என்று ஆயிற்று.

கல்லூரணி என்னும் ஊர் பாவூர்சத்திரத்திற்கு அருகில் உள்ளது. கல்லூருணி என்று தொடக்கத்தில் இருந்த ஊரே பின்பு மருவி கல்லூரணி ஆயிற்று. ஊருணி என்பது ஊர்மக்கள் உண்ணும் நீர் நிலை என்பதாகும். இதையே வள்ளுவப் பெருந்தகை, "ஊருணி நீர்நிறைந்தற்றே உலகவாம் பேரறி வாளன் திரு" என்று குறிப்பிட்டுள்ளார்.

இலஞ்சி, நெடுவயல் என்னும் ஊர்கள் நீர்வளம் மிக்க வயலும் வயல் சார்ந்த ஊர்களான மருதநிலத்தினைக் குறிப்பிடுகின்றன.

வடகரை, ஆசூர், சாம்பவர் வடகரை, காலாங்கரை, கரையிருப்பு, கருமடையூர், மூலக்கரையூர், கரைசுற்றுப் புதூர் என்னும் ஊர்கள் நீர்நிலைகளுக்குக் கரையில் அமைந்த ஊர்களாகும்.

தொகுப்புரை

இவ்வாறு நெல்லை வட்டார ஊர்ப்பெயர்கள் ஆறு, குளம், ஏரி, கிணறு, மடை, கால்வாய் என நீர்நிலைகளின் பெயரால் அமைந்து அம்மாவட்டத்தின் செழுமையைப் பறைசாற்றுகின்றன என்பது தெற்றென விளங்குகிறது.

துணை நின்ற நூல்கள்:

1. நற்றிணை - கழக வெளியீடு
2. திருக்குறள் - கழக வெளியீடு

50. புறநானூற்றில் ஊர்ப்பெயர்கள்

த. சிவவிவேதா
முனைவர் பட்ட ஆய்வாளர்
இராணிமேரி கல்லூரி
சென்னை

முன்னுரை

எட்டுத்தொகை நூல்களில் ஒன்றாகிய புறநானூறு பண்டைத் தமிழகத்தின் அரசியல் நிலையையும், மக்களின் வாழ்க்கை முறையினையும், புலவர்களின் உள்ளத்துணர்வுகளையும் விளக்கும் நூலாகத் திகழ்கின்றது. பண்டைத் தமிழரின் போர், வீரம், கொடை போன்ற புறவாழ்க்கை முறையை விளக்குவதோடு மட்டுமின்றி பண்டைத்தமிழகத்தை வரைபடமாக விளக்கும் ஊர்ப்பெயர்கள் பலவற்றைக் கொண்டுள்ள இலக்கியமாக விளங்குகிறது. புறநானூறு பதிவாகியுள்ள ஊர்ப்பெயர்கள் குறித்து ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

அம்பர்

புறநானூற்று 385 ஆம் பாடலின் பாட்டுடைத் தலைவன் அம்பர் கிழான் அருவந்தை. அவனது அம்பர் எனும் ஊர்,

"நெல்விளை கழனி யம்பர் புல்லிய" (385 – 9)

என்று பாடலில் பதிவாகியுள்ளது. அம்பர் தஞ்சாவூரில் உள்ள ஓர் ஊராகும். "உய்யக் கொண்டார் வளநாட்டு அம்பர் நாட்டு அம்பர் அருவந்தை" (175 of 1927-28) எனத் திருப்பழனத்துக் கல்வெட்டுக் குறிப்பிடுவதைக் காணலாம்.

ஆமூர்

(புறநானூறு 80 ஆம் பாடல்) சோழன் போரவைக் கோப்பெருநற் கிள்ளி, முக்காவல் நாட்டு ஆமூர் மல்லனை போரில் வென்ற செய்தியை சாத்தந்தையார் பாடியதாகும் இப்பாடலில்,

"இன்கடுங் கள்ளினாமூ ராங்கண்" (80 – 1)

ஏன ஆமூர் பதிவாகியுள்ளது.

அழும்பில்

"அழும்பில் னடங்கான் றகையு மென்னும்" (283 – 5)

என்னும் வரியில் அழும்பில் என்னும் ஊர் பதிவாகியுள்ளது. இது புதுக்கோட்டைப் பகுதியில் உள்ளது. இப்போது அம்புகோயில் என வழங்குகிறது. இங்குள்ள கல்வெட்டு "இராஜராஜ வளநாட்டுப் பன்றியூர் நாட்டு அழும்பில் (p. s.Ins. 458) என்று குறிக்கிறது.

உறையூர்

"உறந்தை யன்ன வுரைசா னன்கலம்" (352 – 10)

என்னும் வரியில் உறந்தை என்னும் ஊர் பதிவாகியுள்ளது. உறந்தை, உறையூரின் மரூஉ ஆகும்.

ஊணூர்

"வாய்மொழித் தழும்ப னூணூரன்ன" (384 – 5)

ஏன ஊணூர் பதிவாகியுள்ளது. தழும்பனுடைய ஊணூர் மருங்கூர்ப் பட்டினத்திற்கு அருகில் உள்ளது.

கந்தாரம்

"முட்காற் காரை முதுபழ னேய்ப்பத்
தெறிப்ப விளைந்த தேங்கந் தாரம்" (258 – 1-2)

என்னும் பாடல்வரியில் கந்தாரம் எனும் ஊர் குறிக்கப்பட்டிருக்கிறது. கந்தாரம் என்பது காவிரிக்கரையில் உள்ள ஊர். அதற்கான கல்வெட்டுச் சான்று "நித்தா வினோத வளநாட்டுக் கந்தார நாடு" (M.E.R.1936 – 37 No: 31) என்று குறிக்கப்பட்டுள்ளது.

கரும்பனூர்

கரும்பனூர் என்பது தொண்டை நாட்டுத் திருவேங்கடக் கோட்டத்திலுள்ள சீர் ஊர். திருக்கழுக்குன்றத்துக்குக் கல்வெட்டு, "கரும்பனூர் வணிகம் ஆதித்த" (A.R.No.76 of 1932-33) என்று குறிப்பிடுகின்றது. புறநானூறு 381, 384 ஆம் பாடல்களைப் பாடிய கரும்பனூர் கிழான்.

"கரும்ப னூரன் காதன் மகனே" (381 – 26)

என்றும்

"கரும்ப னூரன் கிணையேம் பெரும" (384 – 10)

என்றும் கரும்பனூரைப் பதிவு செய்கின்றார்.

காவேரிப்பூம்பட்டினம்

"காவிரிக் கிழவன் மாயா நல்லிசைக்
கிள்ளி வளவ னுள்ளி யவற் படர்தும்" (399 – 12-13)

என்னும் பாடலடியில் காவிரிப்பூம்பட்டினம் பதிவாகியுள்ளது. இந்நகரத்திற்குப் 'புகார்' என்ற சிறப்புப் பெயரும் உண்டு. காவிரியாறு கடலோடு கலக்கும் இடமே புகார் என்று அழைக்கப்பட்ட சிறந்த பட்டணமாகும்.

கூடல்

"மணநாறு மார்பின் மறப்போ ரகுதை
குண்டுநீர் வரைப் பிற் கூட லன்ன" (347 – 5:6)

என்னும் பாடல் வரியில் பதிவாகியுள்ள கூடல் என்னும் நகரம் தமிழகத்தில் பல ஊர்களில் இருக்கின்றது. கூடல் என்றும் பெயரில் பதிவாகியுள்ள கல்வெட்டுச் சான்றுகளைச் சான்றுகளைக் காணும் போது (அகுதையின் கூடல், மேற்கா நாட்டுக் கூடல் (A.R.No. 62 of 1918) கூடன் மங்கலம் (S.I.I.VoL.VII.No.757) என்றும் கூறப்படும் கூடலூராகக் கொள்ளலாம். கூடலூர் இப்போது கடலூர் எனப்படும் ஊராகும்.

துவரை

"உவரா வீகைத் துவரை யாண்டு" (201 – 10)

என்னும் வரியில் இடம் பெறும் 'துவரை' என்னும் நகரைக் குறித்த சான்று, "துவரை மாநகர் நின்று போந்த தொன்மை பார்த்துக் கிள்ளி வேந்தன் நிகரில் தென்கவில் நாடு தன்னில் நிகழ்வித்த நிதியாளர்" (Pudukkotta state .Ins. 120)

எனும் இக்கல்வெட்டுக் குறிப்பின் மூலம் மைசூர் நாட்டுத் துவரை மாநகர் 12 ஆம் நூற்றாண்டினைச் சார்ந்தது எனும் செய்தி புலனாகின்றது.

நாஞ்சில் நாடு

நாஞ்சில் நாடு நாகர்கோயிலுக்கும், தென்குமதிக்கும் இடையில் உள்ளது. இப்போது மருத்துமலை என வழங்குகிறது. நாஞ்சில் வள்ளுவன் என்னும் பாடலாசிரியர் தமது பாடலில் நாஞ்சில் நாட்டினைப் பதிவு செய்கின்றார்.

"செவ்வரைப் படப்பை நாஞ்சிற் பொருந" (137-12)

என்னும்,

"தடவுநிலைப் பலவி னாஞ்சிற் பொருநன் (140 –1)

என்றும் குறிக்கப்படுகிறது.

பிடவூர்

புறநானூறு 395 ஆம் பாடலைப் பாடிய சோழநாட்டுப் பிடவூர் கிழான் மகன் பெருஞ்சாத்தான்,

"நெடுங்கை வேண்மா னருங்கடிப் பிடவூர்" (385 -20)

என்று பிடவூரைப் பதிவு செய்கின்றார். பிடவூர் சோழநாட்டுப் பிடவூர் ("பிடவூர் நாட்டுப் பிடவூர்" (A.R. No. 139 of 1930-31)) தொண்டைநாட்டுப் பிடவூர் ("மணவிற் கோட்டத்துப் புரிசை நாட்டுப் பிடவூர் (A.R.N0.68 of 1923)) என்றும் குறிப்பிடப்படுகிறது.

போந்தை

"நெடுவே ளாதன் போந்தை யன்ன" (338 - 4)

என்னும் வரியில் உள்ள போந்தை எனும் பெயரில் தமிழ்நாட்டில் பல ஊர்கள் உள்ளன. இதனை, கல்வெட்டுக்களில் "மிறைக் கூற்றத்துப் போந்தை" (A.R.No.5.of 1920) என்று குறிக்கப்பட்டிருக்கிறது.

முசிறி

"முழங்குகடன் முழவின் முசிறி யன்ன" (343 – 11)

என்னும் பாடல் வரியில் முசிறி நகரின் செழிப்பு பதிவு செய்யப்பட்டுள்ளது.

முள்ளூர்

புறநானூறு 123,174 ஆம் பாடலில் முள்ளூர் பதிவாகியுள்ளது.

"பயன்கெழு முள்ளூர் மீமிசை" (123 – 5)

என்றும்,

"எள்ளாறு சிறப்பின் முள்ளூர் மீமிசை" (174 – 13)

என்றும் குறிக்கப்பட்டிருக்கிறது.

வஞ்சி

புறநானூறு 373, 387 ஆம் பாடல்களில் வஞ்சி நகரம் பதிவாகியுள்ளது.

"வஞ்சி முற்றம் வயக்கள னாக" (373 – 24)

என்றும்,

"புல்லிலே வஞ்சிப் புறமதி லலைக்கும்"

என்றும் குறிக்கப்படுகின்றன. வஞ்சி நகர். இடைக்காலத்தே அஞ்சைக்களமென மருவி, இப்போது திருவஞ்சிக்களமென வழங்குகின்றது.

வாகை

"வண்மை யெயினன் வாகை யன்ன" (புறம். 351 – 60)

என்று வாகை நகர் குறிக்கப்படுகின்றது.

வட்டாறு

புறநானூறு, 396 ஆம் பாடல் வாட்டாற்று எழினியாதனை மாங்குடி கிழார் பாடிய பாடலில்,

"வளநீர் வாட்டாற் றெழினி யாதன்" (396 - 13)

எனக் குறிப்பிடுகின்றார். வாட்டாறு என்னும் ஊர் சோழநாட்டிலும், தென்பாண்டி நாட்டிலும் உள்ளன. வாட்டாற்றுக் கோட்டை வாட்டாத்திக் கோட்டை என இப்போது மருவி வழங்குகிறது.

முடிவுரை

புறநானூற்றில் பதிவாகியுள்ள ஊர்ப்பெயர்களை ஆய்வு செய்யும் போது, பண்டைத் தமிழகத்தின் வரலாற்றினையே அறிந்து கொள்ள முடிகின்றது. கல்வெட்டுச் சான்றுகளோடு நோக்கும் போது இலக்கியங்கள் நயத்திற்காக, கற்பனையாக படைக்கப்படுபவை அல்ல, அவை உண்மையை, மக்களின் வாழ்வியலைப் பதிவு செய்யவே படைக்கப்பட்டுள்ளன என்னும் வரலாற்றுத் தரவுகளை நமக்குத் தருகின்றன.

51. 'பாண்டிய நாயக'னில் ஊர்ப்பெயர்கள்

கி.சுபதாரணி,
முனைவர் பட்ட ஆய்வாளர்(தமிழ்),
அழகப்பா பல்கலைக் கழகம்,
காரைக்குடி.

முன்னுரை

வரலாற்று மீட்டுருவாக்கத்திற்கு இலக்கியங்களும் கல்வெட்டுக்களும் நினைவுச் சின்னங்களும் பழங்காசுகளும் எந்த அளவு துணை புரிகின்றனவோ அந்த அளவிற்கு ஊர்ப்பெயர்களும் துணைபுரிகின்றன. **'ஊர்கள் பழமையின் எச்சங்கள்'** என்றும் **'வரலாறு பேசாத இடத்திலும் ஊர்ப்பெயர்கள் பேசும்'** என்றும் கூறப்படுவதற்கேற்ப வரலாற்றாய்வில் தீர்க்கமுடியாத சில சிக்கல்களை ஊர்ப்பெயர்கள் தீர்த்துவிடுகின்றன. **'ஊர்ப்பெயர்களின் வரலாறு'** அப்பெயர்கள் வழங்கும் மொழி, நாடு ஆகியவற்றின் வரலாற்றின் ஒரு பகுதியைக் காட்டுவதாகும் என்கிறார் எப்.டி.வெயின் ரைட்(1). இக்கருதுகோளின் படி டாக்டர் .இரா. பாலசுப்பிரமணியன் அவர்களின் **'பாண்டிய நாயகன்'**(2006) என்னும் படைப்பில் உள்ள ஊர்ப்பெயர்கள், அப்பெயர்களை வரலாற்று நிகழ்வுகளோடு பொருத்திக் கூறியுள்ள தன்மை, அவ்வூர்கள் குறித்த அரிய உண்மைகள் ஆகியவற்றை விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

பாண்டிய நாயகன்

பாரம்பரியமிக்க சமுதாயத்தின் பெருமிதத்தைக் கூறுவதோடு நிகழ்காலச் சமுதாயத்திற்கும் படிப்பினையை ஊட்டும் போதுதான் வரலாற்று புதினங்கள் உண்மையான வெற்றியைப் பெறுகிறது. அதைக் கருத்தில் கொண்டு தான் டாக்டர். இரா. பாலசுப்பிரமணியன் அவர்கள் **'பாண்டிய நாயகன்'** என்ற வரலாற்று புதினத்தை உருவாக்கியுள்ளார். ஒற்றுமையும் எதிரிகளை மன்னிக்கும் பண்பும் சான்றோர்களை அரவணைத்து ஏற்றத்தாழ்வற்ற தமிழகத்தை உருவாக்க வேண்டும் என்ற எண்ணமும் கொண்ட மாமன்னன் **முதல் மாறவர்மன் குலசேகரனை (கி.பி.1268-1311)** நாயகனாகக் கொண்ட கதை தான் பாண்டிய நாயகன். குலசேகரரின் தந்தையாரான சடையவர்மர் சுந்தரபாண்டியன் காலத்தில் பாண்டியப் பேரரசு நெல்லூர், கடப்பை வரை பரவியிருந்தது. குலசேகரன் தன் சகோதரர்கள் ஐவரோடு இணைந்து அரசாட்சி நடத்தியவன். இவர்களுக்குள் சண்டை ஏற்பட்டால் இவர்களின் தாய் பாண்டிமாதேவி வாளையெடுத்துத் தன் முலையை அரியப் போய்விடுவாளாம் என்றக் குறிப்புகள் வெனீஸ் நாட்டு **மார்கோபோலோ(2)** மற்றும் **வாசாப்** ஆகியோர்களின் குறிப்புக்களில் காணப்படுகின்றது. சகோதரர்களிடையே பகையுண்டாகக் கூடாது என ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மண்டலத்தின் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டது. ஆசிரியர் வரலாற்றுப் பாத்திரங்களையும் கற்பனைப் பாத்திரங்களையும் இப்புதினத்தில் உலவவிட்டுள்ளார். பாத்திரங்களை வரலாற்றுத் தளத்திலிருந்து தடம்புரண்டுவிடாமல் ஊர்கள் குறித்த உண்மைத் தரவுகளையும் இப்புதினத்தில் அமைத்துள்ளார்.

கதைப்போக்கில் ஊர்களின் பங்கு

முதலாம் மாறவர்மன் குலசேகரன், சேரர்களுடன் கொல்லம்போரில் போரிட்டு சேரர்களைத் தோற்கடித்து **'கொல்லம் கொண்டான்'** என்ற பட்டம் பெற்றார். ஆனாலும் சேரர்களிடமே மீண்டும் கொல்லத்தை ஒப்படைத்தார். குலசேகரர் மற்ற மன்னர்களிடமிருந்து வேறுபட்டவர். மக்களிடம் அன்பானவர். வீண் வரி வசூலிக்கக்கூடாது என்பவர். போரில் வென்ற பொருள்களைக் கருவூலத்தில் நிரப்பாமல் கோயிலுக்குக் கொடுத்தவர்(3). அதேபோல் சிவன் கோயிலுக்குத் **தேவதானம்,** திருமால் கோயிலுக்குத் **திருவிடையாட்டம்,** பௌத்தர் கோயிலுக்குப் **பள்ளிச் சந்தம்** என விளை நிலங்களையும் கொடுத்தவர்.

ஒற்றுமையான தமிழகம் உருவாக்குவதே அவரின் நோக்கம். ஆனால் இதனை அறியாத பகைவர்களான **சேரர் (வீரவர்மன்), சோழர் (3ஆம் இராஜேந்திரர்), ஹொய்சளர் (இராமநாதர்), காகத்தியர், கொங்கு மற்றும் மகதை நாட்டினர், ஈழர்** (பராக்கிரமபாகு) ஆகியோர் பாண்டியப் படைகளைத் தோற்கடிக்க **கண்ணனூர், தஞ்சை** ஆகிய இடங்களில் ரகசியக் கூட்டம் அமைத்து போருக்கு முயற்சி செய்தனர்(4). குலசேகரரின் **தம்பி விக்கிரம பாண்டியனும் இளம்வழுதியும்** தூதுவன் உருவத்தில் பகை மன்னர்களின் சதித்திட்டத்தின் ஊடே வந்து சமாதானம் பேச முயன்றனர். ஆனால் பகைவர்கள் மறுத்து போருக்கு தயார் ஆயினர். அதிக உயிர் இழப்புகள் போரில் ஏற்படக்கூடாது என்றும் மாமன்னர் எண்ணியிருந்தார். **கண்ணனூருக்கும் உறையூருக்கும்** இடையில் பாண்டியர்களின் வீரன் இளம்வழுதிக்கும் **ஹொய்சளருக்கும், கங்கை கொண்ட சோழபுரத்தில் மூன்றாம் இராஜேந்திரர்க்கும் சடையவர்மர் சுந்திர பாண்டியருக்கும்**(1277) போர்கள் நடந்தன. அந்நிலையிலும் பகைவரான மூன்றாம் இராஜேந்திரனைக் காப்பாற்றி மீண்டும் சோழ நாட்டை அவரிடமே ஒப்படைத்தார். பகைவர்களை தூண்டிய சூழ்ச்சிக்காரனான **வீரசிங்கணன்**

(இராமநாதரின் படைத்தலைவன்) என்பானின் சதித்திட்டங்கள் அனைத்தும் அழிக்கப்பட்டு அவனும் தன் நண்பன் கடல்கட்டியாராலேயே கொல்லப்பட்டான். முடிவில் பகை மன்னர்கள் தங்கள் தவறுகளைப் புரிந்து கொண்டதோடு முதலாம் மாறவர்மன் குலசேகரனின் நல்ல மனதையும் புரிந்து கொண்டனர். அனைவரும் ஒன்று கூடி தமிழகம் என்னும் பேரரசை அமைதியாகவும் ஒற்றுமையாகவும் ஆண்டனர் எனப் புதினத்தை முடிக்கிறார் ஆசிரியர். இதற்கிடையே மாமன்னரின் தந்தையான சடையவர்மரைத் தெலுங்குச் சோழன் விசயகண்ட கோபாலனிடமிருந்து காஞ்சிப் போரில் காப்பாற்றிய **அழகர்** பெருமாள் மகனும், குலசேகரனின் உயிரைக் காப்பாற்றிய **இளம்வழுதிக்கும்,** காயலின் மன்னர் விக்கிரமரின் மகளான **மதுரவல்லிக்கும் கண்ணனூரைத்** தலைநகரமாகக் கொண்ட ஹொய்சள மன்னர் இராமநாதரின் வளர்ப்பு மகளான **இலக்குமிதேவிக்கும்** இடையேயானக் காதலைக் கூறி இரண்டு மங்கையரையும் வெற்றியின் பரிசாகத் திருமணம் செய்து கொண்டான் எனக் கதையை மதுரையில் இனிதே முடிக்கிறார் ஆசிரியர் டாக்டர்.இரா. பாலசுப்பிரமணியன்.

ஊர்ப்பெயர்கள்

"ஊர்தல்" என்னும் வினையினால் **'ஊர்'** என்ற சொல் தோன்றியது. சிறிது சிறிதாக ஊர்ந்து பரவும் தன்மையினால் ஊரென்பது முதனிலைத் தொழிலாகு பெயராகுமென்று **ஞா. தேவநேயன்(5)** கூறுகிறார். எந்த ஓர் ஊரின் பெயர்க் காரணத்தையும் அறிய, 1. **ஊர்ப்பெயர்களின் சொற்பொருள்** நிலை. 2. **ஊர்ப்பெயர்கள் வந்த பின்னணி நிலை** ஆகிய இரண்டு படி நிலைகளின் வழியே ஆராய வேண்டும். மேலும் **போற்றுதல்** காரணமாகவும், **பழம் பதியின் பெயர் சூட்டல்** காரணமாகவும் அமையலாம் என ஆய்வாளர்கள கூறுகின்றனர்.

ஆசிரியர் இப்புதினப் பயணத்தில் பல ஊர்களைக் கூறியுள்ளார். அவற்றில் முதன்மைக் கருதித் தலைநகர்களான **மதுரை, உறையூர்,** ஆகிய ஊர்ப்பெயர்களையும், துறைமுகங்களான **கொற்கை, காயல், கொல்லம்** ஆகிய ஊர்களையும் கூறியுள்ளார். பகை மன்னர்களின் ஊர்களாக போருக்கு முக்கிய காரணமான **கண்ணனூர், கங்கை கொண்ட சோழபுரம்** ஆகிய ஊர்கள் குறித்த தரவுகளைக் கூறியுள்ளார். மேலும் **துவாரசமுத்திரம், குருகூர், திருநெல்வேலி, திருப்பரங்குன்றம், புகார், நெல்லூர், தஞ்சை, இலங்கை, மாவிலங்கை, நல்லூர், செவ்விருக்கை நாடு, மகதை நாடு, வளநாடு, மளுவநாடு, தில்லை, மணப்படையூர்** ஆகிய ஊர்களில் தன் கதைப் பயணத்தை மேற்கொண்டுள்ளார். இவைகளுடன் தாமிரவருணி, வையை, காவிரி ஆகிய நதிகளின் சிறப்புகளையும் கூறியுள்ளார்.

தலைநகரங்கள்

ஆசிரியர் குலசேகரர் காலத்து மதுரையைக் கண்முன் காட்டுகிறார். **மதுரை, கூடல், ஆலவாய், சிவராசதானி, கடம்பவனம்** என்றெல்லாம் வழங்கப்படுகிறது. மருத மரங்கள் நிறைந்ததாலோ, மருத நிலம் மருதை என மாறி மதுரை என்றோ, மாதுறைகள் மருவி மதுரை என்றோ ஆகியிருக்கலாம் என ஊர்ப்பெயர் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். கல்வெட்டுகளில இப்பெயர்கள் **மதிரை, மதிர, மத்திரை** என பலவாக எழுதப்பட்டுள்ளன. **'மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்பூவோடு புரையும் சீரூர், தீம்புனல் வையைத் திருமருத முன்துறை'** (பரி:22) என்று பரிபாடலால் சிறப்பிக்கப்பட்டிருப்பதற்கேற்ப கம்பீரமான மாளிகையும் நகரின் நடுவே கோயிலும் அரண்மனைகளும் தேரோடும் இராஜவீதிகளும் வையையும் பார்ப்பவரைக்கவருகின்றன. அம்மதுரையில்தான் குலசேகரரின் தலைமையில் மந்திர ஆலோசனை நடைபெற்றது. **'திரு மருத முன்துறை'** என்ற வழக்கே மதுரை என மருவியதென்று **என். சுப்பிரமணியம்(6)** கருதுகிறார்.

ஆலவாய், நான்மாடக்கூடல்

கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட தேவார திருவாசகத்தில் மதுரை நகரம் **'ஆலவாய்'** என்ற பெயரில் குறிப்பிடப்படுகிறது. **'தான் வாடவிடாத தண்மைக்கே தென்னவன், நான்மாடக்கூடல்'** என இலக்கியங்களால் சிறப்பிக்கப்பெறும் மதுரை மாநகருக்கு திருஆலவாயுடை நாயனாரின் திருக்கோயில் அணி சேர்க்கிறது என வர்ணிக்கிறார். **திருவாலவாய், திருநள்ளாறு, திருமுடங்கை, திருநடுவூர்** என்ற நான்கு மாடக்கோயில் பகுதிகள் கூடியதே நான்மாடக்கூடல் என புராணங்கள் கூறுகின்றன. வருணனிடமிருந்து சிவன் நான்கு மாடங்கள் மூலம் மதுரையைக் காத்தார் என்று **திருவிளையாடற் புராணத்தில்** இடம்பெற்றுள்ளது(7). திருஞானசமபந்தர் **'கூடலாலவாயிலாய்', மதுரையாலவாயிலாய்'(தேவாரம். பதிகம்..310)** எனக் கூறியுள்ளார். கோயிற் பெயரே ஊர்ப்பெயராக மாறிவரும் வழக்கு இங்கு நோக்கத்தக்கது.

பூர்வீகம்

'மகாபாரதந் தமிழ்ப்படுத்தும், மதுராபுரிச் சங்கம் வைத்தும்' எனச் சின்னமனூர் செப்பேடு(பா.நா.46) கூறுகிறது. ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு பல்வேறு காரணங்களால்

குடியேறிய மக்கள் தங்கள் பூர்வீக ஊர்களின் பெயர்களைத் தற்போது வாழும் நிலங்களுக்கு வைக்கும் வழக்கம் உலகம் முழுதும் உள்ளது. (சான்றுகள்) மதுரை, காயல், துவாரசமுத்திரம், **New york, New Londen,** இலங்கையில் உள்ள இராமநாதபுரம் ஆகியவாகும். வடநாட்டில் உள்ள **மதுரா** என்ற நகரின் பெயரே மதுரை ஆயிற்று என்பதை இக்கருத்துக்கள் அரண் செய்கின்றன.

மதுரையின் வளம் வையையால் அடைந்ததுபோல் உறையூர்க்கு காவிரியால் வளம் கிடைத்தது. வரலாறுகள் பல கண்ட பழம்பெருநகரான இவ்வூர் **'ஊரெனப் படுவது ஊறையூர்'** என்ற சிறப்பை பெற்றதாகும். உறையூர், வடக்கே காவிரி ஆற்றையும் தெற்கே உய்யக் கொண்டான் ஆற்றுடன் கற்குடி மலையையும் (உய்யக் கொண்டான் திருமலை) கிழக்கே சிராப்பள்ளிக் குன்றையும், மேற்கே குளித்தண்டலையும் (குளித்தலை) கொண்டுள்ளது என்பதை கல்வெட்டுகள் தெளிவுபடுத்துகிறது. இரா.பாலசுப்பிரமணியனார் உறையூரின் சிறப்பைக் கூறுகையில் அதற்கு அருகே வீரதாவளன் என்னும் இடத்தில் பாண்டியர்களின் **'உய்யக்கொண்டான் திருமாளிகை'** என்ற பெரிய அரண்மனை குறித்தும் கூறியுள்ளார். அங்குள்ள அரியணைக்கு **'கச்சிக்கு வாச்சான'** என்ற பெயரையும் சூட்டி இருந்தார்கள் என்ற அரிய தகவல்களையும் கூறியுள்ளார்.

உறையூர் பெயர் மாற்றங்கள்

உறையூர் மருவி உறந்தை ஆயிற்று. **'உறப்பு'** என்ற சொல்லுக்கு **'செறிவு'** என **ச.வே.சுப்பிரமணியன்** தொல்காப்பிய தெளிவுரையில் கூறியுள்ளார்(நூ.830). மக்கள் நெருங்கி வாழ்ந்த ஊராக உறந்தை அமைந்திருக்கவேண்டும் என்பது புலனாகிறது. உறையூரைக் **'கோழி', 'கோழியூர்'** எனவும் வழங்குவர். 'கோழியானே கோப்பெருஞ்சோழன்' என புறம்(212) கூறுகிறது. தமிழ் வளர்த்த உறையூர் சோழன் மூன்றாம் இராசராசன் காலத்தில் முதலாம் **மாறவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி. 1219)** சோழ நாட்டின் மீது படையெடுத்து உறையூரை அழித்ததாக கூறப்படுகிறது. ஆனால் பதினாறு கால் மண்டபத்தை மட்டும் அழிக்கவில்லை என்றும் அங்குதான் பட்டினப்பாலை அறங்கேற்றப் பட்டது என்றும் திருவெள்ளறைக் கல்வெட்டுச் செய்யுள் கூறுகிறது. **தாலமி** தனது **பூகோள விவரணம்** என்ற புத்தகத்தில் உறந்தைப் பற்றி கூறியுள்ளார். **பெரிப்ளுசு** குறிப்பிடும் **'அரகாறும்'** உறையூரே.

பிற அரசர்களின் தலைநகரம் - கண்ணனூர்

கண்ணனூர் பாண்டியர்களின் பகைவரான ஹொய்சளரின் தலைநகரமாக இருந்தாலும் அதன் சிறப்புகளையும் கூறியுள்ளார். துவாரசமுத்திரம் தான் ஹொய்சளரின் முதல் தலைநகராக இருந்தது. பேரரசை விரிவுபடுத்த கண்ணனூரைத் தலைநகராக்கினர். கதையில் பகைவர்களின் இரகசிய கூட்டமும், இளம்வழுதியின் காதல் மலர்வும், கண்ணனூர் போரும் முக்கியப் பங்கு வகிக்கின்றன. மதுரை, கங்கை கொண்ட சோழபுரம் ஆகியவற்றைக் காட்டிலும் சிறிய ஊராக இருந்தாலும் மாடமாளிகை நிறைந்த ஊராக சித்தரிக்கப்பட்டுள்ளது. இவ்வூருக்கு **கண்ணபுரம், விக்கிரமபுரம், மாகாளிபுரம்** எனப் பல பெயர்கள் உள்ளன. துவாரசமுத்திரத்தில் உள்ளதைப் போல் இங்கும் இராமநாதர் **போசளேசுவரர் கோயிலைக்** கட்டியுள்ளார். இக்கோயிலிலுள்ள லிங்க கருவறையில் உள்ள சுரங்கம் அரண்மனைவரை செல்கிறது என்ற செய்தி இக்கதையில் இடம் பெற்றுள்ளது. தற்போது திருச்சிக்கு அருகிலுள்ள **சமயபுரமே** கண்ணனூர் என(8) வழங்கப்படுகிறது. செல்லம்பட்டி ஒன்றியத்தில் உள்ள கண்ணிநல்லூரே காலப்போக்கில் மாறி கண்ணனூர் ஆகியது என விக்கரமங்கலம் கல்வெட்டு கூறகிறது.

துவாரசமுத்திரம்

ஹொய்சளரின் பழைய தலைநகராகும். கண்ணனூரைக்காட்டிலும் பெரியது. அங்குள்ள அடர்ந்த காடுகளில் புலிவேட்டை நிகழ்ந்த செய்திகள் புதினத்தில் இடம்பெற்றுள்ளன.
வடநாட்டிலுள்ள **துவாரகையே** கண்ணன் பிறந்த இடமாக புராணங்கள் கூறுகின்றன. அங்கிருந்து இங்கு குடியேறிய மக்கள் சூட்டிய பெயராக இருக்கலாம் என்று ஊர்ப்பெயராய்வாளர்கள் கூறுகின்றனர். **'சமுத்திரம்'** என்ற சொல் பெருங்கடலைக் குறித்தாலும் பெரிய குளங்கள் கொண்ட ஊர்களுக்கும் சமுத்திரம் என்ற சொல் பின் அடையாகச் சேர்க்கப்படுகிறது.

கங்கை கொண்ட சோழபுரம்

முதலாம் இராஜேந்திரன் வடநாட்டு படையெடுப்பின் வெற்றிச்சின்னமாக உருவாக்கிய நகரம் கங்கை கொண்ட சோழபுரம் ஆகும். அவருக்கு **கங்கை கொண்டான், கடாரம் கொண்டான்** எனப் பட்டங்களும் உள்ளன. **கங்கை கொண்ட சோளிச்சுவரம்** என்ற பெயராலும் அழைக்கப்படுகிறது. இது மத்தியில் கோயிலையும் பல மாடமாளிகைகள் சூழவும் உள்ளது. வடக்கே துங்கபத்திரை நதியிலிருந்து தெற்கே ஈழம் முழவதும் மேற்கே மகோதயபுரம் முதல்

கிழக்கே வங்கக் கடல் கடந்து கடாரம் ஸ்ரீவிஜயம் வரை தனி குடைக்கீழ் ஆண்ட சோழ அரசர்கள் வீற்றிருந்து கோலோச்சிய நகரம் என இதன் புகழை மூன்றாம் இராஜேந்திரர் தன் நண்பர்களான பிற நாட்டு மன்னர்களுக்கு கூறியதான செய்தி இடம் பெறுகிறது. குலொத்துங்கருக்கு **பரணி**, மூவருலா, கருவூர்த்தேவரின் திருவிசைப்பா இங்கு இசைக்கப்பட்டன.

மாவிலங்கை

மாவிலங்கையின் சிற்றரசரான சாம்புவரையை இராஜேந்திரர் அடக்கியதால் **'வீரராட்சசர்களை அடக்கிய ராமன்'** என்ற பட்டத்தை வென்றார். புதினத்தில் இடம்பெறும் மாவிலங்கை தற்போது தொண்டை மண்டலத்தைச் சேர்ந்த தென்னார்க்காடு மாவட்டமான திண்டிவனத்திற்கு அருகிலுள்ள பகுதியாகும். சாம்புவயர்களின் பூர்வீகம் இலங்கையாக இருக்கலாம் எனவும் பெரிய என பொருள் தரும் மா என்னும் உரிச்சொல் சேர்த்து மாவிலங்கை ஆகியது எனவும் அறியமுடிகிறது.

திருவரங்கம்

காவிரி நீர் பெருக்கெடுப்பால் இரண்டாகப் பிரிந்து காவிரியாகவும் கொள்ளிடமாகவும் பெயர்பெற்றது. அதன் நடுவில் இயற்கையில் அமைந்த தீவுப் பகுதியில் உள்ள அடர்ந்த சோலைக்கு அடையில் திருவரங்கம் உள்ளது. இத்திருவரங்கம் போக மண்டபமென்றும் **பூலோக வைகுண்டமென்றும்** அழைக்கப்படுகிறது. சோழர்கள் அல்லது பலரும் வரும் திருத்தலமாகும். அங்குள்ள விமானம் **பிரணாவாகார விமானம்** என அழைக்கப்பட்டது. குலசேகரர் பல்லவர்களிடமிருந்து வென்ற மரகதமாலையை இக்கோயிலுக்கு கொடுத்துள்ளார். அதில் ஐந்துதலை அரவணையில் அரங்க நாதர் தலையைக் குடதிசை வைத்து குணதிசைப் பாதம் நீட்டி வடதிசைப் பின் நோக்கி கிடக்கிறார். சடையவர்மன் சுந்திரபாண்டியன் பெருமானுக்கு பொன்னால் திருமேனி(9) செய்தார் என்ற வரலாற்று நிகழ்வை பதிவு செய்துள்ளார்.

திருக்குருகூர், திருநெல்வேலி

'பகை அணங்கு ஆழியையும், பால்வெண் சங்கும்' வைத்துள்ள பெருமாளுக்குத் தென்பாண்டி நாட்டில் அமைந்துள்ள நவதிருப்பதியில் ஒன்று திருக்குருகூர் ஆகும். சிவன் நெல்லுக்கு வேலியிட்டுகாத்ததால் **திரு-நெல்-வேலி** எனவும் அங்கு எழுந்தருளியுள்ள இறைவனுக்கு **நெல்லையப்பர்** எனவும் பெயர் வந்ததாக புராணங்கள் கூறுகின்றன. காயலிலிருந்து திருநெல்வேலி செல்லும் வழியிலுள்ள மணப்படையூர் குறித்தும் அங்கு ஏற்பட்ட கள்வர்களின் தாக்குதல் குறித்தும் பாண்டியர்களின் தாயான பாண்டிமாதேவி திருநெல்வேலியில் தங்கியிருந்தது குறித்தும் அறிய முடிகிறது.

அரிய மரங்கள்

காயலிலோ மதுரையிலோ காணப்படாத **உன்னமரங்கள்** திருநெல்வேலி எல்லையில் **காணப்பட்டதாகவும்** அவை செழித்தால் நன்மை, வாடினால் தீங்கு என ஆருடம் உள்ளது. **'வருவதை அறிவிக்கும் மரங்கள்'** என கதாபாத்திரங்கள் மூலம் அரிய செய்திகள் இப்புதினத்தில் இடம் பெற்றுள்ளன. இதனையே தொல்காப்பியர்**'உடல் வேந்து அடுக்கிய உன்ன நிலை'**(தொ.பொருள்.இளம்.உரை.63) என்கிறார்.

கொற்கை

பொற்கொள்ளர்கள் காசு அடிக்கும் இடம் **கொள்+கை** –கொற்கை(10) ஆகிற்று. காசு செய்யுமிடங்களான **அஃகசாலை** துறைமுகத்திற்கு அருகில் மிகுந்திருத்தல் இதற்குச் சான்றாகும். கொள்வதும் கொடுப்பதுமான வணிகத்தின் சிறப்பால் கொள்+கை-, கொட்கை- கொற்கை ஆகிற்று, எனக் கூறுதலும் பொருந்தும். **'பாண்டிநாடு முத்துடைத்து'** என்ற பெருமைக்கு தாயகமாக விளங்கும் **துறைமுகம்** கொற்கையாகும். இது பாண்டியர்களின் மூன்றாம் தலைநகரமாகும்.

தாமிரவருணி கடலோடு கலக்கும் இடத்தில் நிமிர்ந்துள்ள மாநகரமாகிய கொற்கை குலசேகரன் காலத்தில் கடல் உள்வாங்கியதால் சிறப்பிழந்த துறைமுக நகரமாயிற்று. ஆனாலும் இயற்கை வளங்கள் நிறைந்த பகுதியாகவும் வணிகச் சிறப்பு குன்றிய இடிந்த கட்டிடங்கள் கொண்டு இருந்ததாலும் சதிகாரர்களின் புகலிடமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. கொற்கையில் கிடைக்கும் முத்துக்களில் பெரியது அரசருக்கும் பத்தில் ஒரு பாகம் அரச நிதிக்கும் சேர்க்கப்பட்டது. கடல் வாணிபம், அஃகசாலை ஆகியவை குன்றிய நகரமாக இருந்தாலும் **சங்குமுக ஈஸ்வரன் கோயிலும், வெற்றிவேல் அம்மன்(கண்ணகி)** கோயிலிலும் இப்புதினத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றன. சங்குமுக ஈஸ்வரன் கோயில் கடலோடு சங்கமம் ஆவதால் தண்பொருநை ஆறு பாயுமிடம் **சங்கமம், சங்கமத்துறை, கழிமுகத்துறை** எனப்படுகிறது. இக்கொற்கை தற்போது தூத்துக்குடி மாவட்டத்தில் ஸ்ரீவைகுண்டத் தாலுக்காவில் உள்ள சிறிய

ஊராகும். கடல் கொண்ட தென்னாட்டிலிருந்து மீண்ட பரதவர் உருவக்கியதே கொற்கையாகும். வங்காள விரிகுடாவிலிருந்து 6கி.மி தொலைவிலும் தாமிரவருணியிலுருந்து 3கி.மி. தொலைவிலும் உள்ளது.

காயல்

கொற்கையின் சிறப்பு குன்றியதால் உருவாக்கப்பட்ட நகரம் காயலின் மன்னராக விக்கிரம பாண்டியர் இருந்தார். அவருக்கு **புவனேகவீரன், இராஜக்கள் நாயகன்** எனப் பல பெயர்கள் உள்ளன. கடல் கடந்து வரும் வணிகர்களுக்கு அவரின் நேரடி பார்வையில் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டதாகவும் இஸ்லாமியரான **மாலிக்-உல்-இஸ்லாம் ஜமாலிதின்** என்ற புகழ் பெற்ற அரபு வணிகர் குலசேகரரின் அன்பாலும் பண்பாலும் கவரப்பட்டு காயலிலேயே இருந்தார் என்ற செய்திகளும் கதையில் இடம் பெறுகின்றன. அங்கும் அ.:.கசாலைகள் பல இருந்தன. காயலில் **உப்பு, மிளகு** என உள்நாட்டு வாணிகமும் **முத்து, பட்டு, குதிரை** என வெளிநாட்டு வாணிகமும் சிறந்து விளங்குகிறது. என்ற தரவுகள் இடம்பெற்றுள்ளன. இராமநாதபுர நகரிலிருந்து பத்து மைல் தொலைவில் உள்ளது. **பழைய காயல், புன்னைக் காயல், கீழக்கரை, காயல் பட்டினம்** என நான்கு ஊர்கள் இருப்பினும் **கீழக்கரைதான்** உண்மையான பூர்வீகக் காயல்(11) என வரலாறுச் சான்று கூறுகின்றன.

கொல்லம்

சேரர்களின் தலைநகரான வஞ்சி குறித்த செய்திகள் புதினத்தில் இடம் பெறவில்லை யென்றாலும் கொல்லம் குறித்து பல வரலாற்று நிகழ்வுகளை ஆசிரியர் பதிவுசெய்துள்ளார். கொல்லத்துப் போரிலே கதையைத் துவக்குகிறார். சேரநாடு மலைநாட்டு மண்டலம் என அழைக்கப்படுகிறது. கொல்லம் தான் அதன் துறைமுக நகரமாக இருந்தது. கொல்லத்துப் போரில் இறந்த இருநாட்டு வீரர்களின் மனைவி மக்களுக்கு **உதிரப்பட்டி** என்னும் பெயரால் **இறையிலி** நிலங்கள் பாண்டியனால் கொடுக்கப்பட்டது என்ற தகவலை ஆசிரியர் கூறுகிறார். தற்போது கொல்லம் கேரள மாநிலத்தின் மாநகராட்சியாக உள்ளது.

முடிவுரை

ஆசிரியர் இரா.பாலசுப்பிரமணியனின் 'பாண்டியர் நாயகன்' புதினத்தில் வரலாற்றுச் சிறப்பிற்குரிய ஊர்களின் பெயர்கள் குறித்த இவ்வாய்வில் ஊர்ப்பெயர்கள் பெரும்பாலும் காரணப் பெயராகவே அமைந்துள்ளதைக் காணமுடிகிறது. இப்பெயர்களில் ஊர்களின் தன்மை, அவ்வூர் மக்களின் எண்ணங்கள், ஓரிடத்திலிருந்து மற்ற இடங்களுக்கு குடி பெயர்ந்தோரின் ஊர்ப் பற்று, மரூஉ பெயர்கள் போன்ற அமைப்புகளில் உள்ளமையை அறியமுடிகிறது.

1. F.T.Wain wright ,Archaeology,place name and history .p.21
2. சாக்கோட்டை கிருஷ்ணசாமி-**south India and muhammadan Invaders-oxford univefsity pre.55**
3. திருவரங்க கோயிலுக்கு பல்லவர்களிடமிருந்து வென்ற மரகதமாலையை வழங்கினார்.
4. பாண்டிய நாயகன். ப. 69.
5. ஞா. தேவநேயன், 'நாகரிகம்', செந்தமிழ்ச் செல்வி-10. ப. 301
6. **N.Subramaniam, Pallavan Tamil Index. P. 65.**
7. திருவிளையாடற் புராணம். மதுரைக் காண்டம் ப. 5
8. இணையம். விக்கிபீடியா.
9. டாக்டர். கே. வி. இராமன், பாண்டியர் வரலாறு. ப.116.
10. இரா.இளங்குமரனார். செந்தமிழ்ச் செல்வி. ப.75
11. வள்ளல் சீதக்காதியின் வாழ்வும் காலமும் ப-26.

52. தமிழிலக்கியங்களில் ஊர்ப் பெயர்கள்

திருமதி ப்பி. சுகந்தி,
உதவியாளர் (தெரிவுநிலை),
எம்.வி.எம். அரசு மகளிர் கலைக் கல்லூரி,
திண்டுக்கல்.

முன்னுரை :

சங்ககாலப் பழம்பாடல்களில் ஊர்களின் அமைப்பும், சிறப்பும் இயற்கை அழகும் மக்களின் வாழ்க்கையும் அழகுற புனையப்பபட்டன. அன்றே இப்பாரில் நம் பாரதமே புண்ணிய நாடாகத் திகழ்ந்தது. சங்க பாடல்களில் வடவேங்கடம் முதல் தென் குமரி வரையிலும், ஹரப்பா, மொகஞ்சதாரோ முதல் மதுரை, காவிரிப் பூம்பட்டினம் வரையிலும், காசி, காளத்தி தில்லையும் பாடப்பட்டுள்ளன.

சைவத்திருமுறைகள் பன்னிரெண்டில் 11ம் திருமுறையில் இடம் பெற்று, சொற்சுவையும், பொருட்சுவையும் பக்திசுவையும் நிறைந்த தொன்மைமிகு இலக்கியமாம் திருமுருகாற்றுப்படையில் பாடபப்பட்டுள்ள அறுபடைவீடுகளை ஆராய்கிறது இக்கட்டுரை,

திருப்பரங்குன்றம் :

தண்ணார் தமிழினிக்கும் தண் பாண்டிநாடு என்றும், தொன்மைப்புகழ் பூண்டது பாண்டிய நாடு என்றும் புகழப்பட்ட பாண்டிய நாட்டின் தலைநகரமாம் மதுரை மாநகரத்தின் தென்மேற்கு திசையில் 5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது முதல் அறுபடை வீடான திருப்பரங்குன்றம், சிவன், பார்வதி, சூரியன், சந்திரன், அகத்தியர், இந்திரன் மற்றும் பல தெய்வங்களும் முனிவர்களும் கூடி இருந்து முருகனுக்கும் தெய்வானைக்கும் திருமணம் செய்வித்து வாழ்த்தியதாக வரலாறு கூறுகிறது.

சூரியனும், சந்திரனும் ஒரே இடத்தில் விளங்கும் சிறப்புடையது திருப்பரங்குன்றம். சேவ்வேளுக்கும் தெய்வானைக்கும் திருமணம் நடைபெற்ற காரணத்ததால் அன்று முதல் இன்று வரை இத்தலத்தில் வழிவழியாக ஆயிரக்கணக்கில் திருமணங்கள் நடத்தப்படுகின்றன. மற்ற கோவில்களில் முருகன் வள்ளி, தெய்வானையுடன் காட்சியளிக்கும் பட்சத்தில் திருப்பரங்குன்றத்தில் தெய்வானையுடன் மட்டுமே காட்சியளிக்கிறார். வேறு எங்குமே கோவில் கட்டப்படாத பிரமனுக்கு கோவில் கொண்டுள்ள சிறப்பைப்பெற்றது திருப்பரங்குன்றம். விஸ்வகர்மாக்கள் திருப்பரங்குன்றத்தைப் புண்ணிய தலமாக உருவாக்கினார்கள் என்பது புராணசெய்தி. இங்கு பாண்டியர்களால் உருவாக்கப்பட்ட குடவறைக் கோயில்கள் மேலும் சிறப்பைச் சேர்க்கின்றன. இங்கு பராந்தக நெடுஞ்சடையனின் தானைத்தலைவன் "சாமந்த பீமன்" என்பவன் சிவனுக்கு ஒரு மண்டபக்கோவில் குடைவித்ததுள்ளான்.

இங்கு காணப்படும் துர்க்கைக் கோவில் கல்வெட்டில் "கலி ஆண்டு" பொறிக்கப்படடுள்ளது. முருகன் கோவிலில் வரையப்பட்டுள்ள சித்திரங்கள் பற்றி பரிபாடலில் பாடப்பட்டுள்ளது.

திருப்பரங்குன்றின் இயற்கை அழகு :

திருப்பரங்குன்றிலுள்ள அருவிநீா் ஓடிவந்து தங்கும் அழகிய சுனை இமயமலையிலுள்ள பிறசுனைகளையெல்லாம் விட சிறப்பு மிக்கதாகும் என திருமுருகாற்றுப்படையில் திருப்பரங்குன்றின் இயற்கை வளம் பாடப்பட்டுள்ளது.

முதல்வ! நின் யானை முழக்கம் கேட்ட
கதியிற்றே காரின் குரல்
குரல் கேட்ட கோழி குன்று அதிர்ககூவ
மத நனி வாரணம் மாறுமாறு அதிர்ப்ப'
எதிர்எதிர் ஆகின்றது அதிர்ப்பு, மலை முழை"

திருமுருகாற்றுப்படை.

முருகனின் ஊர்தியாகிய பிணிமுகம் என்னும் யானையின் பிளிற்றொலி முழக்கம் மேகத்தின் முழக்கமாகிய இடியொலியைக் கேட்ட தன்மையை ஒத்தது; அந்த யானையினது முழக்கத்தினைக் கேட்ட உனது சேவற்கோழி குன்றம் முழுதும் எதிரொலிக்கும்படி கூவியது. அக் கோழியின் குரல் கேட்ட உனது மதம் உடைய யானையும் பிளிறியது. இவ்வாறு மாறிமாறி எழுந்த முழக்கங்களும் ஒலிகளும் திருப்பரங்குன்றின் குகைகளில் எதிரொலியினை எழுப்பின.

திருப்பரங்குன்றம் குன்றின்மேல் மிகவும் பிரசித்திபெற்ற இஸ்லாமியத் தர்கா ஒன்று உள்ளது. இது ஹஜ்ரா சுல்தான் சிக்கந்தர் என்ற மதத்தலைவரால் உருவாக்கப்பட்டது. இந்த தர்ஹா மதுரை மாநகரின் எப்பகுதியிலிருந்தும் காணும்படியாக அமைந்துள்ளது இதன் சிறப்பாகும். தமிழ்நாடு மற்றும் கேரளாவிலிருந்தும் அனைத்து மத மக்களும் வேறுபாடு கருதாமல் வந்து செல்லும் தலமாக இந்த தர்ஹா விளங்குகிறது .

"யாதும் ஊரே யாவரும் கேளிர்", என்ற பரந்த போக்கிற்கு இலக்கணமாக திருப்பரங்குன்றம் விளங்குகிறது .என்பதில் ஐயமில்லை

திருச்சீரலைவாய் :

"திருச்சீரலைவாய்" என்று அழைக்கப்படும் திருச்செந்தூர், அறுபடைவீடுகளில் இரண்டாவது படைவீடாகப் பாடப்பட்ட சிறப்பினை உடையது. திருநெல்வேலியிலிருந்து கிழக்கே 58 கி.மீ. தூரத்தில் உள்ளது இத்தலம். உப்பு உற்பத்தியிலும் மீன்பிடி தொழிலிலும் சிறந்து விளங்கும் துறைமுகமாம் தூத்துகுடியிலிருந்து 40கி.மீ தூரத்தில் தெற்கே உள்ளது. இங்கு கடற்கரையோரம் முருகன் கோவில் கம்பீரமாக அமைந்துள்ளது. பக்தர்கள் சூரியனையும், இஷ்டமூர்த்தியையும் கண்டு வழிபடுவது இயற்கை. முருக பெருமான் சூரனை ஆட்கொண்டு தேவரையும் காத்தருளி உலகை உய்விக்கத் தேவ சேனாதிபதியாக வீரபாகுத் தேவர்கள் புடைசூழ அமர்ந்த இடம் திருச்செந்தூர். வடதிசை நோக்கி சண்முகப்பெருமான் ஆறுதிருமுகத்துடனும் பன்னிரு திருக்கரத்துடனும் காட்சி தருகிறார்.

"செந்தில் மாநகரம் தன்னில்மேவிய
தேசிகனும் முருகேசன் மயில்வாசியில்
ஏனும் உல்லாசன்"

என்ற காவடிச்சிந்து நினைவில் தோன்றும். கடலில் நீராடிவிட்டு பின் இங்குள்ள நாழிக்கிணற்றில் நீராடி முருகனைத் தரிசிப்பது சிறப்பு. சூரபத்மனை வதைத்து வெற்றி கொண்ட "சூரசம்ஹாரம்" சிறப்பாகக் கொண்டாப்படுகிறது . கார்த்திகையில் கந்தசஷ்டியும் கொண்டாடப்படும்.

அலைகள் வந்து ஒய்வடைகின்ற இடமாதலால் செந்திலுக்கு அலைவாய் என்று மற்றொரு பெயருண்டு. நினைப்பு மறப்புகளாகிய அலைகள் வலியற்று அவனது திருவடியில் வந்து ஒடுங்க கடற்கரையில் எம்பெருமான் உறைகின்றனன். "பிறவிக் கடலில் வாழ்ந்தோரை எனது திருவடியாகிய ஒடத்தால் முத்திக்கரை சேர்ப்பதற்காகக் கடற்கரையில் யான் வசிக்கின்றனன்" என்ற குறிப்பைக் காட்டுவதற்காகவே முருகன் திருச்செந்தூரில் எழுந்தருளியுள்ளான்.

"யாது நிலை யற்றலையும் ஏழு பிற விக்கடலை
ஏற விடுநற் கருணை ஓடக்காரனும்"

திருவகுப்பு (4) திருப்புகழ் விரிவுரை - 212

திருச்செந்தூர் "திருக்கயிலாயம" போன்ற உயர்வுடையது "பரமபதமாய செந்தில்" என்றும் பிறிதொரு திருப்புகழில் அருணகிரியார் கூறியுள்ளளார். முருகவேள் சூராதியவுணரை மாய்ப்பதற்கு முன்னும் பின்னும் தங்கி பக்தாபீஷ்டவரதராக எழுந்தருளியிருப்பதால் இவ்வுயர்வு பெற்றது.

திருப்புகழ் விரிவுரை — 237

சீரலைவாய் - திருச்செந்தூர் :

வானளாவிய சோலைகள் சூழ்ந்த அரியதலம் திருச்செந்தூர்.

"வளரும் வாழையு மஞ்சளும் இஞ்சியும்
இடைவிடாது நெருங்கிய மங்கல
மகிமை மாநகர் செந்திலில் வந்தருள் பெருமானே!"

- (கமல மாது) திருப்புகழ் விரிவுரை- 258

திருஆவினன்குடி :

திண்டுக்கல்லில் இருந்து சுமார் 60 கி.மீ. தூரத்தில் கோயமுத்தூர் செல்லும் பாதையில் இத்தலம் அமைந்துள்ளது. ஆவினன்குடியில் போக முனிவர் என்ற சித்தர் வாழ்ந்ததால் "சித்தன் வாழ்வு" என்ற பெயர் உள்ளது. இது முருகனின் மூன்றாம் படை வீடாக பாடப்பட்டுள்ளது. மலையடிவாரத்தில் திருஆவினன்குடி கோயிலும், மலைமேல் பழனியாண்டவர் கோயிலும் உள்ளது. முருகன் குடி கொண்டுள்ள ஆறு படைவீடுகளில் இது மூன்றாம் படைவீடாக விளங்குகிறது. பழனி என்பது "பழம் நீ" என்பதன் திரிபு பழனிஆண்டவர் கோயில் அமைந்துள்ள மலை 450 அடி உயரமுடையதாகும். இங்கு புனிதத் தீர்த்தங்களான வையாபுரி, சண்முகாநதி, சரவணப்பொய்கை ஆகிய தீர்த்தங்கள் உள்ளன. மேற்கு தொடர்ச்சி மலையில் வராக மலைக்கும், கொடைக்கானல் மலைக்கும் இடையே உள்ள பள்ளத்தாக்கில் பழனி மலையும் இடும்பன் மலையும் அடுத்தடுத்து அமைந்துள்ளது.

இடும்பன் அகஸ்தியரின் ஆணைப்படி இரண்டு மலைகளையும் காவடியாகத் தோள்களில் தூக்கிக் கொண்டு சென்ற பொழுது, களைப்பு தீரவேண்டும் என்பதற்காக, காவடியை கீழே இறக்கி வைத்துவிட்டு திரும்ப வந்து மலையைத் தூக்க முயற்சிக்கும் பொழுது அவனால், தூக்க முடியவில்லை. மலையில் உள்ள ஒரு மரத்தில் பாலகுமாரன் நின்று கொண்டிருந்தான். அதைப் பார்த்து சினங் கொண்ட இடும்பன், முருகன் மீது பாய்ந்தான். இருவருக்குமிடையே போர் நடந்ததில் இடும்பன் கொல்லப்பட்டான். பின்னர் இடும்பனின் மனைவி கேட்ட வேண்டுகோளுக்கிணங்க அவனை மீண்டும் உயிர்பித்தான் பாலகுமாரன். அதன் பின்னர் இடும்பன்

விரும்பியபடி அவனை வாயிற் காப்போனாக ஆக்கிக் கொண்டான் முருகன். அந்த இருமலைகள்தான் தற்போது பழனி மலையாகவும், இடும்பன் மலையாகவும் விளங்குகிறது. பழனி அடிவாரத்திலிருந்து இரயில் மூலம் மேலே உள்ள முருகன் கோயிலுக்கு செல்லலாம். தற்போது ரோப்கார் மூலமும் அடிவாரத்திலிருந்து மலை மேல் உள்ள முருகனைச் சென்று தரிசிக்கலாம். இந்தியாவிலேயே ஒரு சில கோயிலில்தான் இந்த வசதி உள்ளது. இவையிரண்டும் பழனி கோவிலின் தனிச் சிறப்பாகும். பழனியிலிருந்து தென்கிழக்கில் ஏறக்குறைய 100 கி.மீ. தொலைவில் "கொடைக்கானல்" என்ற கோடை வாசஸ்தலம் உள்ளது.

வராக நதி, சண்முக நதி போன்ற நதிகள் பழனியை 'கழனி'யாக்குகின்றன. இங்கு வைகாசி விசாகம், கந்த சஷ்டி, பங்குனி உத்திர திருவிழா, தை பூசம் போன்றவை வெகு விமரிசையாக நடை பெறுகின்றன. தை பூசம், பங்குனி உத்திரம் போன்ற நாட்களில் மக்கள் பல்வேறு ஊர்களிலிருந்து லட்சக் கணக்கில் பாதயாத்திரை வந்து பழனி முருகனை சேவிக்கின்றனர்.

பால்காவடி, தீர்த்தக்காவடி, மச்சக்காவடி, சேவல்காவடி, சர்ப்பக்காவடி ஆகிய காவடிகளை மக்கள் தோளில் கொண்டு வந்து முருகனுக்கு காணிக்கை செலுத்துவது பழனியின் சிறப்பாகும். பழனி மலை கோயிலில் போக முனிவர் என்ற சித்தர் வாழ்ந்த குகைக் கோயில் இன்றும் காணப்படுகிறது.

இங்கு சிறப்பு பிரசாதமாக பஞ்சாமிர்தம் கிடைக்கிறது. வாழைப்பழம், பேரிச்சம் பழம், தேன், கற்கண்டு, கிஸ்மிஸ் பழம், சர்க்கரை முதலியன சேர்த்து பக்குவமாக தயாரிக்கப்படும் பழனி பஞ்சாமிர்தம் மிகவும் புகழ் பெற்றதாகும். பழனியிலிருந்து தென்மேற்கில் 20 கி.மீ. தொலைவில் திருமூர்த்தி எனும் சுற்றுலாத்தலம் உள்ளது.

திருவேரகம் :

கும்பகோணம் - சுவாமிமலை நெடுஞ்சாலையில் திருவேரகம் எனும் திருத்தலம் அமைந்துள்ளது. திருவேரகமும் சுவாமி மலையும் ஒன்று என்று குறிப்பிடுகிறார்கள். ஆனால், இரண்டும் ஒன்றல்ல. இரண்டும் வேறு வேறு தலங்கள். ஆனால் இரண்டும் ஒற்றுமை உடையவை. ஏனெனில் திருவேரகம் என்னும் தலம், மந்திர உபதேசம் செய்த தலம். இங்கிருந்து மனிதர்கள் வேலை நிமித்தமாக வெளியூர் செல்வது போல சுவாமியும் சென்று இங்கு வந்து விட்டதாக வரலாறுகள் கூறுகின்றன.

"நீரகத் தேதனை நினையும் அன்பினோர்
பேரகத் தல மரும் பிறவி நித்திடும்
தாரகத் துருவமாம் தலைமை எய்திய
ஏரகத்து ஆறுமுகன் அடிகள் ஏற்றுவமே"

என்கிறது கந்த புராணப்பாடல்.

இப்பாடல் தார அகத்து உருவம் எனச் சொன்னது முருகனைத் தான், அப்படி தாரக மந்திரத்தை உரைத்த ஏரகத்து முருகன் அடிகள் பணிவோம் என்று கூறுகிறது. எனவே, ஸ்வாமி மலையும் திருவேரகமும் வேறு வேறானவை. ஆனால் ஒற்றுமை உள்ளவை என்பது விளங்கும்.

திருவேரகம், சுவாமிமலை தோன்றுவதற்கு முன்பே தோன்றியதாக புரணச் செய்திகள் கூறுகின்றன. இந்த கோவில்தான் முருகன் சிவபெருமானுக்கு மந்திரோபதேசம் செய்ததாக சான்றுகள் உள்ளன. சிவத்தொண்டுகள் பல ஆற்றிய நக்கீரர் மற்றும் அருணகிரிநாதரால் இத்தலம் பாடப்பட்ட சிறப்பினை உடையது.

சிவனுக்கு மந்திரோபதேசம் செய்யும் பொழுது அகஸ்தியரும் தனக்கும் "உன் தந்தைக்கும் உரைத்ததை எனக்கும் உபதேசிக்க வேண்டும்." என்று கூறியதாக கந்தபுராணப் பாடல் கூறுகிறது. இதற்குச் சான்றாக முருகனுக்கு அருகில் அகஸ்தியரும் காட்சியளிக்கிறார்.

மற்றொரு சிறப்பாகச் சிவனை முருக பெருமான் பூசை செய்து அம்பிகையிடம் பாசுபத அஸ்தரம் வாங்கிய தலமாக விளங்குகிறது. அதனால் இங்கு சிவன் 'ஸ்கந்த நாத சுவாமி' என்ற பெயரோடு விளங்குகிறார். முன்பு ஏழு பிரகாரங்களுடன் விளங்கிய கோவில் பிரகாரங்கள் சிதைவுற்று தற்போது ஒரே ஒரு பிரகாரத்துடன் திகழ்கிறது.

இத்திருக்கோயிலின் புண்ணிய தீர்த்தமாகச் சரவணப் பொய்கை விளங்குகிறது. அருணகிரிநாதர் தம் பாடல்களில் 14 பாடல்கள் திருவேரகம் பற்றியும் 24 பாடல்கள் சுவாமி மலை பற்றியும் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

குன்றுதோறாடல் :

கோயமுத்தூரிலிருந்து வடமேற்கில் 15 கி.மீ. தொலைவில் மேற்குத் தொடர்ச்சி மலையில் அமைந்துள்ளது மருதமலை. இங்கு நிலவும் இதமான வானிலை இவ்விடத்தின் சிறப்புகளுள் முதன்மையானது. 12ம் நூற்றாண்டில் இக்கோவில் உருவாக்கப்பட்டதாக வரலாற்றுச் செய்திகள் பகர்கின்றன. 500 அடி உயரத்தில் மருதமலை முருகன் கோவில் அழகுறக் கம்பீரமாகக் கிழக்கு

நோக்கி அமைந்துள்ளது. இம்மலைக் கோயிலை அடைய 700 படிக்கட்டுகள் உள்ளன. பேருந்து தடமும் உள்ளது. இக்கோயில் 800 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது என வரலாற்றுச்செய்திகள் கூறுகின்றன. இங்கு கோயில் கொண்டுள்ள முருகன் "மருதாஜலபதி" என்றும் அழைக்கப்படுகிறான்.

மருத மரங்கள் இம்மலைக் காட்டில் அதிகமாக காணப்படுவதால் இம்மலை 'மருத மலை' என பெயர் பெற்றதாகக் கூறுவர். இம்மலையில் மருத்துவ குணங்கள் கொண்ட பல அறிய மூலிகைகள் காணப்படுவதாகத் தெரிகிறது. மேலும் மருதா தீர்த்தம், பாம்பாட்டிச் சுனை போன்ற தீர்த்தங்களும் இங்கு உள்ளன. இத்தீர்த்தங்களில் உள்ள நீர் பல நோய்களைத் தீர்க்கும் மூலிகை குணம் கொண்டதாகக் கூறப்படுகிறது.

பாம்பாட்டிச் சித்தர் குகை என்ற குகைக்கோயில் இங்கு உள்ளது, பாம்பாட்டி சித்தர் இன்றும் கண்ணுக்குப் புலப்படாமல் தினமும் முருகனை வந்து தரிசிப்பதாக நம்பப்படுகிறது.

__பழமுதிர்சோலை__ :

மதுரையிலிருந்து 21 கீ.மீ. வடமேற்கில் அழகர் மலை அடிவாரத்தில் அழகர்கோவில் அமைந்துள்ளது, வைணவக் கடவுள் அழகர் இங்கு எழுந்தருளியுள்ளார். சுற்றிலும் கோட்டையுடன் இயற்கை அழகுடன் மலை அடிவாரத்தில் அமைந்துள்ளது. மலை மேல் 4 கி.மீ. உயரத்தில் பழமுதிர்சோலை என்ற முருகன் கோயில் அமைந்துள்ளது. இதுவே பழமுதிர்சோலை என்று ஆறாவது படை வீடாகப் பாடப்பெற்றுள்ளது. இங்கு நூபுர கங்கை (Nubura Gangai) எனும் தீர்த்தம் அமைந்துள்ளது. இங்கு ஆழ்வார்கள் மற்றும் நக்கீரரும் இந்த இடத்தை தம் பாடல்களில் சிறப்பித்துப் பாடியுள்ளனர்.

அழகர்கோவிலின் நுழைவாயில் மிக பிரமாண்டமாகக் காணப்படுகிறது. பாண்டிய மன்னர்களால் கட்டப்பட்டது, அவற்றில் இதிகாசங்களில் காணப்படும் முக்கிய நிகழ்வுகள் ஓவியங்களாக வரையப்பட்டுள்ளன. பழமுதிர்சோலையில் உள்ள கல்வெட்டுகள் அனைத்தும் கிறிஸ்துவுக்கு 200 அல்லது 300 ஆண்டுகளுக்கு முற்பட்டவையாகும்.

__முடிவுரை__ :

திருமுருகாற்றுப்படையில் திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருஆவினன்குடி, திருவேரகம், குன்றுதோராடல், அழகர்கோவில் போன்றவை ஆறுபடை வீடுகளாக காணப்படுகின்றன,.

பரங்குன்றம் என்று அழைக்கப்படும் திருப்பரங்குன்றம் இயற்கையழகோடு அமைந்த திருத்தலமாகக் காணப்படுகிறது, மற்றும் சமயப்பொறைக்குரிய இடமாகவும் திகழ்கிறது.

திருச்செந்தூர் என்று அழைக்கப்படும் திருத்தலம் திருச்சீரலைவாய். இது புகழ்பெற்ற சுற்றுலாத்தலமாகக் காணப்படுகிறது. மேலும் கடற்கரையோரத் தலமாகவும் காணப்பபடுகிறது.

திருஆவினன்குடி பழனி என்ற ஊர் பெயரைப்பெற்றது. இத்தலம் சித்தர் வாழ்விடமாகவம் திகழ்கிறது.

திருவேரகம் என்பது சுவாமிமலை அருகில் முருகன் உறைந்துள்ள திருத்தலமாகும். ஏரகத்து முருகனை தரிசித்துப் பின் சுவாமிமலை நாதரை தரிசிப்பது சிறப்படையதாகும்,

மருதமலை குன்றுதோராடல் என்ற பெயருடன் விளங்குகிறது. மேற்கு தொடர்ச்சி மலையில் இயற்கை அழகோடு சுற்றுலா தலமாக விளங்குகிறது.

மதுரை மாவட்டத்தில் உள்ள பழமுதிர்சோலை திருமுருகாற்றுப்படையில் ஆறாவது படைவீடாகப் பாடப்பபட்ட சிறப்புடையது.

ஆறுபடைவீடுகளிலும் பழனி, அழகர்மலை, மருதமலை முன்றும் மலையும் மலைச்சார்ந்த பகுதியான குறிஞ்சி நிலத்தில் முருகன் வீற்று அருள் புரிகின்றான். திருச்செந்தூரில் கடலும் கடல் சார்ந்த பகுதியான நெய்தல் நிலத்தில் குடிகொண்டுள்ளான்.

53. புளியம்பட்டி சுற்றுவட்டார விடுகதைகளில் ஊர்ப்பெயர்கள்

(கள ஆய்வு)

கி. சுமித்ரா
முனைவர்பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை, இராணிமேரி கல்லூரி (தன்னாட்சி), சென்னை – 600 004.

ஒரு நாட்டின் பழங்கால வரலாற்றையோ பண்பாட்டையோ அறிந்துகொள்ள இலக்கியங்கள், சாசனங்கள், பழங்காசுகள், பிற நினைவுச் சின்னங்கள் எந்த அளவு துணைபுரிகின்றனவோ அந்த அளவு துணைபுரியும் தன்மையும் பெருமையும் ஊர்ப்பெயர்களுக்கு உண்டு. ஊர்ப்பெயராய்வு, மொழியியலையும், வரலாறு பண்பாட்டியலையும் ஊன்றுகோலாகக் கொண்டு அறிவியலின் திட்பத்துடன் வளர்ந்து வரும் ஒரு துறை. இத்துறையில் தமிழில் நிகழ்ந்துள்ள ஆய்வுகள் ஒரு சிலவே.

மக்களுடைய வாழ்வியல் சூழலானது பல பண்பாட்டு வழக்காறுகளைப் புலப்படுத்துகிறது. வாய்மொழியாக, தலைமுறை தலைமுறையாகப் பரிமாறிக் கொள்ளப்படுகிறது. இதற்கு மக்களிடையே இருந்து வருகின்ற நாட்டுப்புறப் பாடல்கள், நாட்டுப்புறக் கதைகள், நாட்டுப்புற விளையாட்டுக்கள் போன்ற கர்ண பரம்பரையான பண்பாட்டுப் பரிமாற்ற நிகழ்வுகளில் ஊர்ப்பெயர்களோடு தொடர்புடைய பல்வேறு அடிப்படைச் செய்திகளை அறியலாம். கிருட்டினகிரி மாவட்டம் புளியம்பட்டி கிராமத்தைச் சுற்றியுள்ள ஊர்களில் களஆய்வு மூலம் சேகரிக்கப்பட்ட நாட்டுப்புற விடுகதைகளை மையமாக வைத்து இக்கட்டுரை அமைகின்றது.

புளியம்பட்டி

முதலில் கள ஆய்வு மேற்கொண்ட புளியம்பட்டி என்ற ஊர்ப்பெயரில் உள்ள 'பட்டி' என்ற பொதுக்கூற்றைக் குறித்துக் காண்போம். 'பட்டி' என்னும் பொதுக்கூறு, பொதுவாக 'சிற்றூர்' என்று கருதப்படுகிறது. நிலத்தை பட்டி என்ற பெயரால் குறிப்பிடுவது எடுத்துக்காட்டத்தக்கது. ஆர். பூங்குன்றன் குறிப்பிடுகையில், "பட்டி என்பது கால்நடைத்தங்கும் இடத்தினைக் குறிக்கும். வேளாண்மை நிலத்தினையும் பட்டி என்று கூறுவது, கால்நடை வளர்ப்பின் செல்வாக்கினைப் புலப்படுத்துகிறது"[1] என்று கூறியுள்ளார். தமிழ் பேரகராதியும் "சிற்றூர், பசுக்கொட்டில், பட்டி, மாடு" என்று பல்வேறு பொருளைத் தருகின்றன. (தொகுதி 6, ப. 2424)

மேற்கண்ட கூற்றுகளை எல்லாம் நோக்கும்போது வேளாண்மைத் தொழில் நடைபெற்றாலும் தொடர்ந்து கால்நடை வளர்ப்புச் சமூகத்தில் எல்லாவற்றையும் கால்நடை மூலமாக அளந்து பார்க்கின்றனர் என்னும் கருத்துகள் வெளிப்படுகின்றன. களப்பகுதி ஊராகிய 'புளியம்பட்டி' மரப்பெயரை அடையாகக் கொண்டு வரும் நிலை காணமுடிகின்றது. இக்கிராமத்தைச்சுற்றி புளிய மரங்கள் அதிக அளவில் காணப்படும். ஆகையால் அதன் காரணமாக புளியம்பட்டி என்று அழைக்கப்பட்டிருக்க வாய்ப்புள்ளது.

வாணியம்பாடி

'பாடி' என்னும் பொதுக்கூறுத் 'தங்கியிருத்தல்' எனப் பொருள்படும். தமிழ்ப்பேரகராதியில் 'பாடி' என்னும் சொல்லுக்கு "நகரம், சேரி, முல்லைநிலத்து ஊர், பாடி வீடு, சேனை, கவசம், உளவாளி, பாடுபவன், பாடுபவள், பாட்டுப்பாடி பிச்சை எடுத்தல் ஒரு ராகம்" (தமிழ்ப்பேரகராதி, தொகுதி 4, ப. 2593) என்றவாறு பொருள் தருகின்றது. ஒரு விடுகதையைக் கூறி, அவ்விடுகதையை விடுவிப்பவர்க்குப் பரிசுப் பொருள்கள் தருவதாகக் கூறுவார்கள். ஊதாரணத்திற்கு,

"கரிமணிய கண்டெடுத்துக் கோக்கரவங்களுக்கு
நாடு தரேன் நகரம் தரேன்
வாணியம்பாடிய வளச்சி தரேன்
திருப்பத்தூர திருப்பித் தரேன்
எட்டுக்கட்டு வெத்தல தரேன்
எளம் பாக்குத் தரேன்
அத விடுவிச்சி கொடுக்கரவங்களுக்கு
எல்லாந் தாரேன் - அது என்ன?" (விடை : **பண்ணை விரை**)

என்று கதை போடுவர். இதில் வருகின்ற '**வாணியம்பாடி, திருப்பத்தூர்**' ஆகிய ஊர்கள் விடுகதை சேகரிக்கப்பட்ட களப்பகுதிக்கு அருகாமையில் உள்ளவை. களப்பகுதி மக்களால் நன்கு அறியப்பட்ட ஊர்கள். வாணியம்பாடி இசுலாமியர்கள் அதிக அளவில் வசிக்கும் பகுதியாகும்.

திருப்பத்தூர் இவ்விடுகதையில் கூறப்பட்டுள்ள திருப்பத்தூர் வடஆர்க்காடு மாவட்டத்தில் அமைந்துள்ளது. இதே பெயருடன் இராமநாதபுரம் மாவட்டத்திலும் ஒரு வட்டம் உள்ளது. இது பாண்டிநாட்டிலுள்ள ஊர். காரைக்குடி புகைவண்டி நிலையத்திலிருந்து 12 மைல் தொலைவில் உள்ளது. வயிரவர் சந்நிதி அங்கு சிறப்புடையது.

பாலக்கோடு - காஞ்சிபுரம் - வேலூர்

"பாலக்கோட்டுல ஒரு பச்சபுறா வாங்கனோம்
காஞ்சிபுரத்துல ஒரு கருப்புப்புறா வாங்கனோம்
வேலூர்ல ஒரு வெள்ளபுறா வாங்கனோம்
மூனையும் சேத்தினா ஒரு செவப்புப்புறா – அது என்ன?"

(விடை : வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு, வெற்றிலை எச்சில்)

பாலக்கோடு, காஞ்சிபுரம், வேலூர் முதலான ஊர்கள் மேற்கண்ட விடுகதையில் இடம்பெற்றுள்ள ஊர்களாகும். பாலக்கோடு – பச்சை, காஞ்சிபுரம் - கருப்பு, வேலூர் – வெள்ளை என எதுகை நயத்திற்காக இவ்விடுகதையில் இடம்பெற்றுள்ள ஊர்கள் குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தோன்றுகிறது. இவ்விடுகதையில் இடம்பெற்றுள்ள ஊர்களும் களப்பகுதிக்கு அருகாமையில் உள்ள ஊர்களேயாகும்.

பாலக்கோடு - கடையெழு வள்ளல்களில் ஒருவராகிய அதியமான் ஆண்ட இன்றைய தருமபுரி மாவட்டத்தில் பாலக்கோடு அமைந்துள்ளது. பண்டைக்காலத்தில் தகடூர் என்று வழுங்கப்பெற்றது தருமபுரி. இவ்வூரில் சர்க்கரை ஆலை புகழ்பெற்ற ஒன்று. தற்பொழுது வாழைப்பழத்தில் ஒரு வகையாகிய 'ஏலக்கி' என்ற பழவகைக்கு சிறப்புற்று விளங்குகிறது இவ்வூர்.

காஞ்சிபுரம் - 'புரம்' என்ற பொதுக்கூறுக்கு, தமிழ்ப் பேரகராதி புரம் என்ற சொல்லுக்கு, "ஊர், நகரம், ராஜதானி, பிரத்தியம், கோயில், மேல் மாடம், சரிரம், தோல்" (தொகுதி 5, ப. 2770) போன்ற பொருள்களைக் குறிப்பிடுகிறது.

காஞ்சி என்ற ஊர்ப்பெயர் மரப்பெயரால் பெயர் பெற்றது. பிற்காலத்தில் 'புரம்' என்ற பின் ஒட்டுடன் இணைந்து காஞ்சிபுரமாயிற்று. கி.பி. 12ம் நூற்றாண்டைச் சேர்ந்தவனாகிய இரண்டாம் ராசாதிராசனின் கல்வெட்டு ஒன்றில் காஞ்சி என்றே இவ்வூர் குறிக்கப்பெற்றுள்ளது. சங்ககாலத்தில் 'கச்சி' என வழங்கப்பெற்று, காலப்போக்கில் காஞ்சி என்ற பெயர் நிலைத்ததோ என்று எண்ணவும் இடமளிக்கிறது. நற்றிணையில் 123ஆம் பாடல் காஞ்சிப்புலவனார் பாடியது.

செங்கற்பட்டு மாவட்டத்தின் பழைய நகரம் கச்சி. கச்சி என்ற நகரமும் காஞ்சி என்ற நகரமும் ஒன்று என்றும், இரண்டும் வெவ்வேறான தனித்தனி இரு நகரங்கள் என்றும் இருவேறு வகையான கருத்து உள்ளது. இன்றுள்ள காஞ்சி நகரத்திற்குக் கிழக்கிலுள்ள நிலப்பரப்பிலேயே சங்ககாலக் காஞ்சி மாநகர் அமைந்திருந்தது என்றும் கருதுகின்றனர். காஞ்சிபுரம் சரித்திரப் புகழும், சமயப் பெருமையும் பெற்ற நகரம். காஞ்சிபுரம் பல்லவர், சோழர், விஜயநகர மன்னர்கள் காலங்களில் தலைநகரமாக விளங்கிய பெருமை இவ்வூருக்கு உண்டு. ஏகாம்பரேஸ்வரர் ஆலயம், வரதராசப் பெருமாள் ஆலயம், காமாட்சியம்மன் ஆலயம், குமரக்கோட்டம் போன்ற பல ஆலயங்கள் இந்நகரில் அமைந்துள்ளன.

மணிமேகலைக் காலத்தில் தொண்டை நாட்டின் தலைநகரமாகக் காஞ்சிநகர் விளங்கியது. தேவலோகம்தான் மண்ணுலகில் வந்து கிடந்ததோ என்று மதிக்கும்படியாக இருந்தது காஞ்சி என்று மணிமேகலை புகழ்கிறது. காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு சோழமன்னர்கள் ஆண்டு வந்தனர். இந்த நகரத்தில் தவம்புரிவோர், சமயவாதிகள் பலர் இருந்தனர். இதனால் 'தொண்டைநாடு சான்றோர் உடைத்து' என்னும் பெருமை வந்தது.

"கச்சி முற்றத்து நின்னுயிர்கடை கொள" (மணிமேகலை, 174)
"பொன்னெயிற் காஞ்சி நாடு கவினழிந்து" (மணிமேகலை, கச்சிமாநகர் புக்க காதை. 156)

வேலூர் – மேற்கண்ட விடுகதையில் குறிப்பிடப்படும் வேலூர் வடஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள ஊராகும். இவ்வூரில் மத்திய சிறைச்சாலை, வேலூர் கோட்டை, பொற்கோவில் முதலானவை முக்கிய இடங்களாகும். சமீபத்தில் தொடங்கப்பட்ட திருவள்ளுவர் பல்கலைக் கழகம் வேலூரில் உள்ள பல்கலைக்கழகமாகும்.

சிறுபாணாற்றுப்படையில் குறிக்கப்பெறும் வேலூர் என்ற ஊர் தென்ஆர்க்காடு மாவட்டத்தில் திண்டிவனம் வட்டத்தில் கிளியனூருக்கு அருகில் உள்ளது. ஓய்மா நாடு வேலூர் என்று குறிக்கப்பெற்ற இவ்வூர் இப்பொழுழுது உப்பு வேலூர் என வழங்கப்பெறுகிறது.

'வேல்' என்ற ஒருவகை மரத்தின் பயெரால் வேலூர் என்ற பெயர் வைக்கப்பெற்றிருக்கலாம். அல்லது நல்லியக்கோடன் தன் பகையை வென்ற இடமாதலின் வேலூர்

என்றும் பெயர் பெற்றிருக்கலாம். (வேல் என்றால் பகை என்றும் வெல்லுகை என்றும் பொருள் உண்டு).

"திறல் **வேல்** நுழியிற் பூத்தகேணி
விறல் வேல்லென்றி வேலூரெய்தின்" (பத்துப். சிறுபாண். 172-173)

திருவண்ணாமலை

தமிழ்ப்பேரகராதியில் 'மலை' என்னும் பொதுக்கூறுக்குப் "பர்வதம், ஈட்டம், மிகுதி, போர்த்தொழில்" (தொகுதி 5, ப. 3105) போன்ற பொருளைத் தருகின்றன. 'மலை' என்னும் பொதுக்கூறு குன்றத்துடன் தொடர்புடையது. குன்றங்களைவிடப் பொதுவாக மலைகள் உயரமாக இருக்கும். இவ்வூர் விடுகதைகளில் காணப்படும் திருவண்ணாமலை, தீர்த்தமலை ஆகிய மலைகள் ஊர்களின் பாதுகாப்பு அரணாக இன்றும் விளங்குகின்றன. களப்பகுதியில் சேகரிக்கப்பட்ட விடுகதை ஒன்றில்,

"**திருவண்ணாமலைக்கும் தீர்த்தமலைக்கும்** ரோடு
அதுல போரான் சேட்டு
சீலையத் தூக்கி காட்டு – அது என்ன?" (விடை : கத்தரிக்காய் (அ) மக்காச் சோளம்)

என்று திருவண்ணாமலை பற்றியக் குறிப்புக் காணப்படுகின்றது.

அண்ணாமலை என்றால் அண்ண முடியாத, எட்டாத அல்லது நெருங்க முடியாத மலை என்று பொருள். சிவபெருமான் அழலுருவாய் (நெருப்பு) நின்றபோது திருமாலால் அடியையும் பிரம்மாவால் முடியையும் காண முடியவில்லை. இறைவன் அழலுருவாய் நின்றதால் இத்தலம் அண்ணாமலை தலமானது. இதனைத் திருஞான சம்பந்தர், "அள வாவண மழலாகிய வண்ணாமலை யண்ணல்"[2] என்று குறிப்பிடுகின்றார்.

திருவண்ணாமலை வடஆர்க்காடு மாவட்டத்திலுள்ளது. இம்மலை 2665அடி உயரமுடையது. அண்ணாமலையார் கோயில் நகரின் நடுவில் உள்ளது. இங்கே நடைபெறும் கார்த்திகை தீபம் தமிழ்நாடு அறிந்த பெரிய திருவிழா. கோயில் சுவர்களிலுள்ள கல்வெட்டுகள் அதனுடைய வரலாற்றைக் கூறுகின்றன. இக்கல்வெட்டுகளில் இவ்வூர் முதல் ராஜேந்திரன் காலத்தில் மதுராந்தக வளநாட்டுப் பெண்ணை வடகரைத் திருவண்ணமாலை என்று குறிப்பிடப்பெற்றுள்ளது. பிறகு இராஜராஜ வளநாடு என்றும், ஜெயங்கொண்ட சோழமண்டலம் என்றும் பெயர் மாறியுள்ளது.

தீர்த்தமலை மேற்கண்ட விடுகதையில் இடம்பெற்றுள்ள **தீர்த்தமலை** மலையூற்றால் பெயர் பெற்றதாகும். இங்கு சிவனுக்கு கோயில் ஒன்று உள்ளது. ஆகவே நீரிடம் ஒன்றையடுத்து உருவாகியுள்ள ஊரும், கோயிலும் குறிப்பிட்ட நீரிடத்தின் மதிப்பை விளக்குகின்றன. நீர் என்பது தொடக்ககால ஊர்களின் வளத்தை அறிய உதவும் அளவுகோலாகும்.

ஜோலார்பேட்டை – சேலம் - செவ்வாப்பேட்டை

'பேடு' என்ற சொல்லின் அடியாகவே 'பேட்டை' என்ற சொல் அமைந்திருக்கலாம். ஆனால் பேட்டை என்ற சொல் எந்தக் காலத்திலிருந்து ஊர்ப்பெயராக அமைந்துள்ளது என்பதை நோக்கும்போது அச்சொல் 'பேடு' என்ற சொல்லினடியாகப் பிறந்திருக்குமா என்று தோன்றுகிறது. தமிழ்பேரகராதியில், பேட்டை என்னும் பொதுக்கூறுக்கு "புறநகர், நகரத்து அருகில், சந்தை கூடும் சார்பு, பிறையான வண்டி, தங்குமிடம்" (தொகுதி 5, ப. 2889) எனப்பொருள் தருகின்றது.

மேற்கண்ட கூற்றுகளைப் நோக்கும் பொழுது 'பட்டடை' என்ற சொல் தொழிலின் அடிப்படையில் அமைந்த ஊர்ப் பெயரைக் குறிக்கும். பட்டடை என்பது குறுகி நாளடைவில் பேட்டை என்று அமைந்திருக்கலாம். பட்டடை என்பது தொழில்கள் தோன்றுவதற்கு ஏற்ற ஊர் என்ற பொருத்தத்தில் பட்டடை – பட்டை – பேட்டை என்று மாற்றம் பெற்றிருத்தல் கூடும்.

1. "ஜோஜோன்னு மழை பெய்யும்
ஜோலார்பேட்டயில தண்ணி போகும்
ஒரு பாப்பாத்தி நனைஞ்சினு போரா
நாலு பாப்பாத்திங்க மட்டும்
நனையாம போறாங்க – அவர்கள் யார்?"
(விடை : ஒரு பாப்பாத்தி – மாடு
நாலு பாப்பாத்தி – மாட்டு முலைக்காம்பு)
2. "**சேலம்** செவப்பு
செவ்வாப்பேட்ட கருப்பு

உடைச்சா பருப்பு
தின்னா கசப்பு – அது என்ன?'' (விடை : கருமணி)

என்று வழக்கில் பேசப்படுகின்ற விடுகதையை இங்கு எடுத்துக் கொள்ளலாம். இதில் வரும் 'ஜோலார்பேட்ட', 'செவ்வாப்பேட்ட' என்ற ஊர்ப்பெயர்கள் நோக்கத் தக்கது. வேலூர் மாவட்டத்தில் உள்ள ஊர் ஜோலார்பேட்டை. சேலம் மாவட்டத்தில் உள்ள ஊர் செவ்வாப்பேட்டை. மக்களுடைய பேச்சு வழக்கில் சொற்சிக்கனம், பேச்சு எளிமை காரணமாக ஜோலார்பேட்ட, செவ்வாப்பேட்ட என இம்மாதிரியான மொழித் திரிபை ஏற்றுள்ளன.

செவ்வாப்பேட்டை – சேலம் மாவட்டத்தில் உள்ள ஒரு பகுதி இது. இப்பகுதியில் தானியங்கள், அரிசி போன்ற விளைபொருட்கள் மொத்தமாகவும், சில்லரையாகவும் விற்பனை செய்யக்கூடிய பகுதியாகவும், ஆடைகள் கொள்முதல் விளைக்கு விற்பனை செய்யக்கூடிய் பகுதியாகவும் விளங்குகிறது.

சேலம் - கோயம்புத்தூர் மாவட்டத்தை அடுத்துள்ளது சேலம் மாவட்டம். இதன் தலைநகர் சேலம். இம்மாவட்டத்தின் வடபகுதி பீடபூமி. மேற்கு பகுதி மலைவெளி. கல்வராயன், சேர்வராயன், ஏலகிரி, கொல்லிமலை, பச்சைமலை முதலியன முக்கிய மலைகளாகும். நீண்டு வளைந்து செல்லும் அழகிய இம்மலைத் தொடர்களும் ஆங்காங்கே சிதறுண்டு நிற்கும் குன்றுகளும் அவற்றின் உச்சியில் அமைந்துள்ள பண்டைய கோயில்களும் கோட்டைகளும் இம்மாவட்டத்துக்குப் பெருமையளிக்கின்றன.

சேலத்தில் கைத்தறி நெசவு முக்கியத்தொழில். ஆடையைக் குறிக்கும் சேலம் என்ற சொல்லால் பெயர்பெற்ற நகரம் இது. மாம்பழத்துக்குப் பெயர்பெற்ற இடம். இம்மாவட்டம் கொங்குநாட்டின் ஒரு பகுதி. கடையெழு வள்ளல்களிலில் இருவரான அதியமான் நெடுமான் அஞ்சியும், வல்வில் ஓரியும் வாழ்ந்த இடம். மேட்டூர் நீர்த்தேக்கம் இருக்கும் இடம். ஏர்க்காடு மலை வாசத்தலம், மேட்டூர் நீர்த்தேக்கமும், பென்னாகரம் நீர்வீழ்ச்சியும், ஏர்க்காடு கரடிக்குகையும் ஏரியும் பார்க்க வேண்டிய இடங்கள்.

திண்டுக்கல்

தமிழ்ப் பேரகராதியில் 'கல்' என்ற பொதுக்கூறுக்கு, "வெட்டி எடுக்கப்பட்ட பெருங்கல்" (தொகுதி 2, ப. 770) என்று பொருள் தருகிறது.

"**திண்டுக்கல்ல** ரெண்டா உடைச்சி
மிசுனு மெரிக்க
ரத்தம் தெரிக்க – அது என்ன?'' **(விடை : பாக்கு, பற்கள், வெற்றிலை எச்சில்)**

'திண்டுக்கல்' மாவட்டம் சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மதுரைக்கு அருகில் உள்ளது. இவ்வூரில் 'பூட்டு' மிக முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது. இவ்வூரில் தயாரிக்கப்படும் பூட்டு, பிற ஊர்களில் தயாரிக்கப்படும் பூட்டுகளை விட உறுதியானவை, பாதுகாப்பானவையாக விளங்குவதாக ஐக்கூ கவிதை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. அக்கவிதை,

**"திண்டுக்கல் பூட்டைத் திறக்க முடியவில்லை
திருடன்
திருடிப்போனான் வீட்டை"**

என்று திண்டுக்கலில் தயாரிக்கப்படும் பூட்டின் சிறப்பு கூறப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. மேலும் கைத்தறி துண்டு, ஜமுக்காளம் முதலானவற்றிற்கும் பேர்போன இடமாகும். இம்மாவட்டத்தில் காந்திகிராமம் என்ற இடத்தில் கிராமியப் பல்கலைக்கழகம் ஒன்று உள்ளது. சுற்றுலாத் தளமாகிய கொடைக்கானல் இத்திண்டுக்கல் மாவட்டத்தில்தான் உள்ளது.

கொங்குநாடு

பண்டைத் தமிழகத்திலிருந்த நாடுகளுள் ஒன்று. இது இன்றைய கோயம்புத்தூர், சேலம் மாவட்டங்களடங்கிய நிலவெளியாகும். இதைப்பற்றி தனிப்பாடல்களையும், கொங்கு மண்டல சதகத்தையும் கொண்டு நோக்குமிடத்துக் கொங்குநாடு என்பது மேற்கே வெள்ளிமலை, நீலகிரி மலைகளுக்கும், வடக்கே மாதேசுவரன் மலை, தொப்பூர் மலை என்ற மலைகளுக்கும், தெற்கே பழநிமலைக்கும் கிழக்கே சேர்வராயன் மலை, பச்சை மலை, கொல்லிமலை என்ற மலைகளுக்கும் இடையிலுள்ள சமநிலமாகும். இதன் வழியாகக் காவிரி தென்கிழக்காக ஓடிச் சோழ நாட்டில் புகுகின்றது. இந்நாட்டை சேர, சோழ, பாண்டியர், பல்லவர், கங்கர், நாகர், முகம்மதியர் முதலிய பலர் அவ்வப்போது ஆண்டு வந்துள்ளனர். களப்பகுதியில் சேகரிக்கப்பட்ட விடுகதை ஒன்றில் கொங்குநாடு இடம்பெற்றுள்ளது. அவ்விடுகதை :

"கோன கோனத்தடி

கொங்கு நாட்டுத் தடி
எங்க நாட்டுத் தடி
எங்கேயும் கிடைக்கும் தடி – அது என்ன?" (விடை : சாலை வழி (அ) பாதை)

சென்னப்பட்டணம்

"சின்ன பொண்ணுக்கும்
சின்னப் பையனுக்கும்
திரிச்சி கட்டின தாலி
அத சிக்கில்லாம
உடைக்கரவங்களுக்கு
சென்னப்பட்டணம் தாரேன் - அது என்ன?" (விடை : தூக்கனாங்குருவி கூடு)

இவ்விடுகதையில் இடம்பெறும் சென்னப்பட்டணம், சென்னை என்றும், மதராஸ் என்றும் இரு பெயர்களால் வழங்கப்பட்டு வருகிறது. சுமார் 350 ஆண்டுகளுக்கு முன் இப்பொழுது நீதிமன்றக் கட்டடம் உள்ள இடத்தில் சென்னகேசவர் கோயில் ஒன்று இருந்தது. இதைச் சுற்றியிருந்த இடம் சென்னகேசவபுரம் என்று வழங்கப்பட்டது. ஆங்கிலேயர்களுக்கு செயின்ட் ஜார்ஜ் கோட்டையைக் கட்ட இடமளித்த அய்யப்ப நாயக்கன், வேங்கடப்பன் அகியவர்களின் தந்தை சென்னைப்ப நாயக்கன் பெயரால் சென்னைப்பட்டினம் என்று அழைக்கப்பட்டதாகத் தெரிகிறது.

சென்னைப் பட்டினத்துக்கு வடக்கே மதராஸபட்டினம் என்ற கிராமம் இருந்ததாகத் தெரிகிறது. நாயக்கர்கள் தந்த பட்டயத்திலும் இப்பெயர் காணப்படுகிறது. இந்த 2 பட்டினங்களையும் ஒன்று சேர்த்து ஆங்கிலேயர் மதராஸ்பட்டினம் என்ற பெயராலும், தமிழர் சென்னைப்பட்டினம் என்ற பெயராலும் அழைக்கலாயினர். சென்னையில் முதலில் குடியேறிய ஐரோப்பியர் போர்ச்சுகீசியரே. இவர்கள் கி.பி. 1552இல் சாந்தோமில் குடியேறி வாணிகம் செய்தனர். இப்பொழுது தமிழ்நாட்டின் தலைநகராமாய் சென்னை விளங்குகிறது.

முடிவுரை

ஏட்டிலக்கியங்களைவிட நாட்டுப்புற இலக்கியங்கள் சமுதாயம் பற்றிய ஆய்விற்குப் பெரிதும் துணை செய்வதாகும். நிலத்தின் ஒரு பகுதியை இன்னொரு பகுதியினின்றும் வேறுபடுத்திக்காட்ட ஊர்ப்பெயர்களை ஆதிகால மக்கள் அமைத்துக்கொண்டனர். மாறிவரும் இக்காலச் சூழ்நிலையில் மண்ணின் பெருமையையும் ஊர்ப்பெயர்களின் ஆராய்ச்சி பற்றியும் பதிவு செய்வது நமது கலாச்சாரப் பண்பாடுகளின் பெருமையைக் காட்ட துணைபுரியும். தமிழகம் தனக்கென எல்லாவற்றிலும் தனித்தன்மை பெற்றிருப்பதைப் போலவே ஊர்ப் பெயர்களிலும் தனித்தன்மைகளைப் பெற்றிருக்கிறது.

களஆய்வில் சேகரிக்கப்பட்ட விடுகதைகளில் இடம்பெற்ற ஊர்ப்பெயர்கள் பொதுவாகக் களப்பகுதி மக்களால் நன்கு அறியப்பட்ட களப்பகுதிக்கு அருகாமையில் உள்ள தீர்த்தமலை, ஜோலார்பேட்டை, திருப்பத்தூர், வாணியம்பாடி, வேலூர், சேலம், செவ்வாப்பேட்டை, காஞ்சிபுரம் போன்ற ஊர்கள் மட்டுமல்லாது களப்பகுதிக்கு வெகுதொலைவில் உள்ள சென்னை, திண்டுக்கல், கொங்குநாடு (கோவை) முதலான ஊர்களும் புளியம்பட்டி சுற்றுவட்டாரப்பகுதி மக்களின் விடுகதையில் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

பல்வேறு சூழல்களில் மக்களிடையே இடம்பெறும் தகவல்களைச் சேகரித்தாலும் பல உண்மையான ஊர்ப்பெயர்கள் கிடைக்கக்கூடும். அவ்வுண்மைகள் கால வரலாற்றுக்கு உதவக்கூடும் என்பது மறுக்க இயலாது.

அடிக்குறிப்புகள்

1. ஆர். பூங்குன்றன், தொல்குடி வேளிர் அரசியல், செங்கம் நடுகற்கள், ப. 40.
2. திருஞான சம்பந்தர் தேவாரம், 10 – 9, ப. 11.

துணைநூற்பட்டியல்

1. தமிழக ஊர்ப்பெயர்கள், கு. பகவதி, உலகத் தமிழ் இயக்ககம், தமிழூர், ஜூன் 1986.
2. இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள், கு. பகவதி மற்றும் ஆர். ஆளவந்தார், உ.த.நி, சென்னை.
3. ஊரும் பேரும், ரா.பி சேதுபிள்ளை, பனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1956.
4. கல்வெட்டில் ஊர்ப்பெயர்கள், ஆர். ஆளவந்தார், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1983.
5. தமிழ் இடப்பெயராய்வு, கி. நாச்சிமுத்து, சோபிதம் பதிப்பகம், நாகர்கோயில், 1983.
6. பேரும் பெருமையும், மா. நயினார், சோபிதம் பதிப்பகம், நாகர்கோயில். 1982.

54. தஞ்சாவூர்

முனைவர் நா.சுந்தரராசன்,
நிறுவனர், அ.கா.நா.நி.அறக்கட்டளை,
2. அண்ணா நகர், சிவாஜி நகர் மேற்கு,
தஞ்சாவூர்- 613 001.

தமிழ் இலக்கியங்களில் ஊர்ப்பெயர்கள் என்ற தலைப்பில் தஞ்சாவூரைப் பற்றி ஆய்வது கட்டுரையின் நோக்கமாகும். தமிழகத்தை மட்டும் அல்லது சுற்றியுள்ள நாடுகளையும், கடல் கடந்தும் சென்று தனது நாட்டின் எல்லையை நிறுவிய மாமன்னன் இராஜராஜன் தஞ்சாவூரை தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தான். தஞ்சாவூரின் புகழ் மேலும் உலகமெல்லாம் விரிந்து நிறக அவன் எடுப்பித்த 'திருக்கற்றளி' தஞ்சாவூருக்கு மேலும் சிறப்பு தருவதாக உள்ளது. பிற்காலச் சோழர்களில் இராஜராஜன் காலத்தில் தஞ்சாவூர் சிறப்புற்றிருந்தது என்பதை வரலாற்றால் அறிய முடிகிறது.

மிகப்பழங்காலத்தில் தஞ்சாவூரின் நிலைப்பாட்டினைச் சரியாக அறிந்து கொள்ள முடியவில்லை. சங்க காலத்திற்குப்பின் முற்காலச் சோழர்கள் காலத்திலும் இவ்வூர் முக்கிய இடம்பெறவில்லை. கரிகாற்சோழன் முதற்கொண்டு, உறையூர், பழையார் காவிரிப்பூம்பட்டிணம் ஆகிய ஊர்களையே தலைநகரமாகக் கொண்டு ஆட்சி செய்தனர். சைனாவில் இருந்து தமிழகத்திற்கு அன்றுவந்த தாலமி (Prolemy) போன்றோர்களின் குறிப்பில் காவிரிப்பூம்பட்டினத்தை (KHABERIS) என்றும் நாகப்பட்டினத்தை (NIKAMA) என்று குறிப்பிட்டுள்ளதாக (THECOLAS)என்று வரலாற்று நூலில் (பக்கம்.22) K.A.நீலகண்ட சாஸ்திரிகள் குறிப்பிடுகிறார். இதனைப்போன்றே உரகப்புரம் என்ற நகரை தலைமையிடமாகக் கொண்டும் ஆட்சி செய்தனர் என்பதை அறிய முடிகிறது. பிற்காலச் சோழர்கட்கு முந்தைய காலங்களில் தஞ்சாவூரைச் சார்ந்த பகுதிகள், நல்ல விளைநிலங்கள் நிரம்பிய பகுதிகளாகவும், காவிரியின் நீர்ப்பெருக்கால் எப்பொழுதும் குளிர்ச்சியான தண்மையும் பெற்றுள்ளமையால் தஞ்சை என்று அழைத்திருக்கலாம் என முடிவு செய்ய முடியும்.

மேலும் தஞ்சை என்பதற்கான வரலாற்றுச் சான்றினை, இன்று நம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கும் வரலாற்று அறிஞர் குடவாயில் பலசுப்ரமணியம் அவர்கள், திருச்சி மலைக்கோட்டையில் உள்ள கி.பி. 5ம் நூற்றாண்டின் கல்வெட்டு ஒன்றில் 'தஞ்ச ஹரக' என்ற சிறந்த கல்வெட்டு ஒன்றினை ஆய்ந்து 'தஞ்சை' என்ற சொல் வழக்கில் இருந்ததாக எழுதியுள்ளார்கள் (ப்க்கம்.2) தஞ்சாவூர் என்ற நூலில் தஞ்சை என்ற சொல்லாட்சிக்கு செவிவழிச் செய்திகள் பலவும் உள்ளது. அவற்றுள் சிறப்பாக அமைந்துள்ளது தஞ்சையில் வெற்றிவேல் அச்சகம் வைத்து நடத்திக் கொண்டிருந்த பெரும் சிவபக்தரும் தஞ்சைப் பெரிய கோயிலை பேரம்பலம் என்றும் பெருந்திருக்கோயில் என்றும் போற்றி வழிபட்டவருமான திரு K.V.பக்கிரிசாமி தனது "கோவிலும் தஞ்சாவூரும்" என்ற சிறுநூலில் " இவ்வூரில் குபேரன் பரம ஈச்வரனை வழிபட்டமையால் இவ்வூருக்கு அளகை என்று பெயர் இவ்வூரில் பராசர முனிவர் தவஞ்செய்தகாலைத் தஞ்சன், தாரகன், தாண்டகன் என்னும் அசுராதிகளால் துன்புறுத்தப்பட்டபோது அம்மாமுனிவர், விண்டுவிடமும் துர்கையிடமும் முறையிட்டார். முனிவரின் முறையீட்டிற்கிரங்கி விண்டு, தஞ்சன், தாரண்டகனையும், துர்க்கை தாரகனையும் சம்ஹரித்தார். அப்போது தஞ்சன் அம்பிகையிடம் இவ்வூர் தன் பெயரால் அழைக்கப்பட வேண்டுமென கூறி இருந்ததால் அதுமுதல் அளகை நகர் தஞ்சன் ஊர் - தஞ்சை புரி - தஞ்சாவூர் என வழுங்கலுறுகிறது." (பக்கம் 25-26) செவிவழிச் செய்திகளையும், பழம்புராணச் செய்திகளையும் தக்கச் சான்றுகள் இல்லையென்பதால் ஒதுக்கிவிடக்கூடிய நிலையும் ஏற்படுகிறது. இருக்கலாம் என்பதற்கு கிடைக்கும் எடுத்துக்காட்டுகளால் நம்பகத்தன்மையும் ஏற்படுகிறது.

இன்றைய தஞ்சை நகருக்கு வடக்கில் வெண்ணாற்றங்கரை என்ற பகுதியில் உள்ள சிவத்தலத்தில் உள்ள இறைவன் பெயர் தஞ்சை புரீஸ்வரர் என்பதாகும். எனவே தஞ்சைக்கு தஞ்சைபுரி என்ற பெயரும் இருந்திருக்கலாம். மேலும் அளகை நகர் என்ற பெயர் குறிப்பிடப்படுவதால், அளகை நகர் என்று வழங்கியிருக்கவும் வாய்ப்புகள் உள்ளதாக அறியமுடிகிறது. இறைவன் தஞ்சைபுரீஸ்வரரை குபேரன் வழிபட்டதாக கோயில் தல புராணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. குபேரன் இருக்கும் இடம் அளகாபுரி என்பதால் அளகை நகர் மற்றும் அளகை நாடு என்றும் தஞ்சைக்கு பெயர் இருந்திருக்கலாம்.

அளகைநாடு என்பதற்கு துல்லியமாகச் சான்றுகள் காட்ட முடியாவிட்டாலும் சில கூற்றுக்களை ஒப்பிட்டுப்பார்க்கும் போது இருந்திருக்கலாம் என்று அறிய முடிகிறது. "வரலாற்றுப்போக்கில் தென்னகச் சமூகம்" என்ற நூலில் நொபொரு கராஷிமா தனது மிகச்சிறந்த சிறப்பான கல்வெட்டு ஆய்வுநூலில் சோழமண்டலத்தில் அருள்மொழிதேவ வளநாட்டில் அளநாடு என்றும் மற்றும் க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டிலும் அளநாடு என்றும் உட்பிரிவாக நாட்டினைக் குறிப்பிடுவது, எந்த அளநாட்டை குறிப்பிடுகிறார் என்பதை மேலும் ஆய்வு செய்து வெளிக்கொணர்வது சிறப்பினைத்தரும் (பக்கம்.61) மேலும் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை 1994ல் வெளியிட்ட இராசராசேச்சுரம் என்ற நூலில் கல்வெட்டு எண்.4 என்ற தலைப்பில் உள்ள கல்வெட்டில் (இக்கல்வெட்டு கோயில் விமானத்தின் திருச்சுற்றின் கிழக்குச் சுவரில் உள்ளது). மெய்க்காப்பாளர்கள் நியமனமும், அவர்கட்கு ஊதியமும் தரப்பட்டச் செய்தியில் "அளநாட்டு பெருங்கடம்பூர்

சபையார்'' என்ற குறிப்பு உள்ளது. இவ்வூர் மேற்கண்ட க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டை சேர்ந்தது என்பதும் நோக்கற்பாலது (பக்கம்.86) எனவே குளிர்ச்சியும், நன்செய் நிலங்களும் சிறப்புடன் இருந்தமையால் தஞ்சை என்ற பெயர் பெற்று இருப்பினும், அளகைநகர், தஞ்சைபுரி என்றும் வழக்கில் இருந்தது என்பதை அறிய முடிகிறது. மேற்கண்ட வரலாற்றுச் சான்றுகள் இப்பெயர்களை உறுதிச் செய்கிறது. இதைப்பற்றிய ஆய்வுகள் இன்னும் சிறப்பாக மேற்கொள்ளப்பட வேண்டும். தஞ்சாவூரைப் பற்றிய பழைய வரலாறுகள் நமக்கு நிறைய கிடைக்கவில்லையென்றாலும், பிற்காலத்தில் இவ்வூரின் சிறப்பினை அறிந்து கொள்ள நிறையச் சான்றுகள் உள்ளன. இராசராசன் இவ்வூரில் பெரிய கற்றளி எடுப்பதற்கு முன்பே இவ்வூரில் ஓர் சிவாலயம் இருந்துள்ளது. அந்தச் சிவாலயத்தை உள்ளடக்கியதாகத்தான் தஞ்சை கோட்டை அமைந்திருக்க வேண்டும். இக்கோட்டை பிற்றை நாட்களில் பாண்டிய மன்னரால் சிதைக்கப்பட்டது என்பது வரலாற்று ஆய்வாளர்களின் கூற்று. இங்குள்ள இறைவனை சிறப்பித்து திருநாவுக்கரசர் தன் திருத்தாண்டகத்தில்

அஞ்சைக் களத்துள்ளார் ஐயாற்றுள்ளார்
　　ஆரூரார் பேரூரார் அழுந்தூருள்ளார்
தஞ்சைத் தளிக்குளத்தார் தக்கவூரார்
　　சாந்தை அயவந்தி தங்கினார்தம் . . . .(பக்கம் 400 பாடல் 516) என்றும்
நள்ளாறும், பழையாறுங் கோட்டாற்றோடு
　　நலந்திகழும் நாலாறுந் திருவையாறும்
தெள்ளாறும் வளைகுளமும் தளிக்குலமுநல்
　　லிமைக்குளமும் . . . . . . (பக்கம் 535 பாடல் 720)

என்று குறிப்பிட்டுள்ளார்.திருநாவுக்கரசர் ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்று கூறும்போது அப்போது தஞ்சையென்ற பெயருடன் தஞ்சாவூர் இருந்து என்றும் அங்கு இறைவன் பெயர் தளிக்குளத்தார் என்பதும் பெறப்படுவதால் ஏழாம் நூற்றாண்டும் அதற்கு முன்பும் தஞ்சை என்ற பெயரில் இவ்வூர் இருந்து என்பதை அறிய முடிகிறது.

மனிதர்களின் பேராசையால் அழிந்த நிகழ்வுகளை வரலாறுகள் நிறையவே வெளிப்படுத்துகின்றன. சங்க காலத்திற்கு பின் சிறப்புடன் வாழ்ந்த சோழ மன்னர்கள் ஆட்சியும் வீழ்ச்சியுற்று களப்பிரர் பல்லவர் மற்றும் பாண்டியர் என்று வந்தபோது குறுநில மன்னர்களாக வந்த முத்தரையர்களால் தஞ்சை சிறப்புற்றது என்பதும் தஞ்சாவூரை பற்றிய வரலாறுகளால் தெரிந்து கொள்ள முடிகிறது. பல்லவர்களின் துணையோடு சோழநாட்டில் கால்பதித்த முத்தரையர்கள் தஞ்சையின் வளமைபொருந்திய நில அமைப்பை கண்டு தஞ்சைக்கு முக்கியம் கொடுத்தனர். அவர்கள், இங்குள்ள செந்தலை, அல்லது நியமம் (நேமம்) என்ற ஊரை தலைநகராக்கி கொண்டார்கள் என்பதற்கு செந்தலை கோயிலில் உள்ள கல்வெட்டுக்களை வரலாற்றறிஞர்கள் கூறுவார்கள் இருப்பினும் தஞ்சாவூரைத்தான் தலைநகராகக் கொண்டிருக்க வேண்டும் என்றும் தஞ்சாவூருக்கு அருகில் உள்ள நந்திபுரம் (கண்டியூர்) என்ற ஊரை தலைநகராக கொண்டிருந்தனர் என்பாரும் உள்ளார். வரலாற்றறிஞர் நீலகண்ட சாஸ்திரியும் தமது "THE COLAS" என்ற நூலில் .... As the Muttaraiyar were in possession of part of the fertile delta land in the Tanjore district. Their inscriptions came from sendalai and clearly decribe them as ruling Tanjore also. Though they had their Head- Quarters at sendalai of Niyamam. Like Colas, the Muttaraiyar found it impossible to set up an independent rule and had to support themselves by clinging to the Pandyas of the Pallavas" (Page 112) என்பதால் அறிய முடிகிறது. திருநாவுக்கரசருக்குப் பிறகு முத்தரையர்கள் தஞ்சாவூரை சிறப்பாக போற்றி இருக்கலாம். பின்னர் எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் விஜயாலய சோழன் (கி.பி.850-907) தஞ்சாவூரை கைப்பற்றியதாக திருவேலங்காடு செப்பேடு (பக்கம். 110) கூறுவதாக மேற்கண்ட நூலில் நீலகண்ட சாஸ்திரி கூறுகிறார்.

வரலாற்றாய்வாளர் குடவாயில் பாலசுப்ரமணியமும் "தஞ்சாவூர்" என்ற நூலில் கன்னியாகுமரி பகவதி அம்மன் திருக்கோயிலின் மகாமண்டபமான மணிமண்டபத் தூண்களில் உள்ள கல்வெட்டை எடுத்துக் காட்டி பின்வருமாறு எழுதியுள்ளார். "இந்தக் குலத்தில் (சோழர்) விஜயாலயன் என்ற பெயருடையவன் அனைவருக்கும் தலைவனாகப் பிறந்தான் இவனது பாதங்களால் பல மன்னர்களின் திருமுடிகள் சிறப்புப் பெற்றன. அவன் சோழநாட்டில் பிரம்மாதி தேவர்களால் அமைக்கப்பட்ட தஞ்சாபுரீ என்னும் நகரைப் புதுமையான பல சிறந்த அம்சங்களுடன் சிறப்புற்றதாக அமைத்தான் " (பக்கம்.19) என்று கூறியுள்ளார்.

மேற்கண்ட தரவுகளால் தஞ்சாவூர் பழமையான ஊர்தான் என்றாலும், பிற்காலச் சோழர்கள் தான் இவ்வூரின் பெருமையை நிலைநாட்டினார்கள். குறிப்பாக விஜயாலய சோழன் இங்கு நிசம்ப சூதனி (துர்க்கை) அம்மனுக்கு கோயில் எடுத்ததாக வரலாறு உள்ளது. இன்றும் அக்கோயில் சிறப்புடன் உள்ளது. பெரிய நிலப்பரபை ஆண்ட சோழர்கள் குறுகிய எல்லைக்குள் வந்துவிட்ட நிலையில் தஞ்சாவூரை தலைநகரமாக்கியிருக்கலாம்.

மிகவும் அழுத்தமாகவும்,திருத்தமாகவும், தஞ்சாவூர் என்று பெருமையுடன் இவ்வூரின் பெருமையை நிலைநாட்டியவன் மாமன்னன் இராராசனே குறுகிய நிலபரப்பாய் இருந்த சோழநாட்டைக் கடல்கடந்தும் படை நடத்தி மிகப்பெரிய நிலப்பரப்பாக மாற்றி மாமன்னன் என்ற நிலைப்பேற்றைப் பெற்றான், சிறந்த ஆளுமைத் திறனால் செயற்கரிய செயல்கள் வியக்கும்படியாகச் செய்தான். தன் ஆட்சிக்குட்பட்ட பெரிய நிலப்பரப்பிற்குத் தஞ்சாவூரைத் தலைநகராகச் செய்து வரலாற்றில் தஞ்சாவூரின் பெருமையை நிலைக்கச் செய்தான். உலகே வியந்து போற்றும் அவன் எடுப்பித்த திருக்கற்றளியிலே வரலாற்றை சிறப்பாகவே தமிழ் கல்வெட்டுகளால் சிறப்பித்துள்ளான். அக்கல்வெட்டுகளில் தஞ்சாவூர் என்று பல இடங்களில் சுட்டியுள்ளான். எல்லாவற்றிற்கும் மேலாக தான் எடுப்பித்தக்கற்றளியிலேயே வரும் கல்வெட்டொன்று " . . . . . தஞ்சாவூர்க் கூற்றத்துத் தஞ்சாவூர் நாம் எடுப்பிச்ச திருக்கற்றளி" . . . . (த.தொ.ஆ.பகக‌ம் 42) என்பதையெல்லாம் நோக்கும்போது தஞ்சாவூரின் சிறப்பை உணரமுடிகிறது.

முடிவுரை

தமிழ் இலக்கியங்களில் ஊர்ப்பெயர்கள் என்ற இக்கட்டுரையில் தஞ்சாவூர் பற்றிய தரவுகளின் அடிப்படையில் ஊர்பெயரை உணர்ந்தோம். இருப்பினும் " வரலாற்று அடிப்படையில் சில உண்மைகளை கண்டறிவது வைக்கோல் பொதிக்குள் ஊசியை தேடிக்கண்டுபிடிப்பது போல்" என்பதாக வரலாற்றறிஞர்கள் கூறுவார்கள் தஞ்சாவூரைப் பற்றி நமக்கு அப்படிப்பட்ட சிரமம் ஒன்றும் இல்லையென்றாலும் கரிகால் சோழன் போன்ற முற்காலச் சோழர்கள் காலத்தில் தஞ்சாவூரின் நிலைபற்றித் தெரிந்து கொள்ள முடியவில்லை. திருநாவுக்கரசரின் குறிப்பு மற்றும் முத்தரையர்கள் சான்றுடன், தஞ்சாவூரின் நிலைத்த தன்மையை உணர முடிகிறது. விஜயாலய சோழன் தஞ்சைக்கு பெருமை சேர்த்த பின்னர் இராஜராஜசோழனால் தஞ்சாவூர் பெற்ற பெருமையை "தஞ்சம் என்போரை அஞ்சேலென்னும் தஞ்சை மாநாடு எத்துணை எத்துணை சிறப்பு பொருந்தியதென்று இயம்ப முடியாத அத்துணைச் சிறப்பும் கொண்ட இந்நாட்டை முன்னாளில் பல நாடுகளையும் வெற்றிக் கொண்ட முதலாம் இராஜராஜசோழன் அரசாண்டு அன்றும் இன்றும் அணையா விளக்கென ஐந்து கண்டங்களும் புகழ் எடுத்த தஞ்சை இராஜராஜஸ்வரமுடையாரின் பேரம்பலமாம் பெருந்திருக்கோயிலை அறியாரோ ஆவல் கொள்ளாரோ இல்லையென்னற் பொருந்தும் "என்று T.K.பக்கிரிசாமி தனது புத்தகத்தின் முன்னுரையில் குறிப்பிட்டப்படி சிறப்புற்ற ஊரே தஞ்சாவூர்.

நோக்கு நூல்கள்

The Colas : By K.A.Nilakantasastri University of Madras 1975
வரலாற்றுப் போக்கில் தென்னகச் சமூகம்: நொபொரு கராஷிமா - தமிழக தொல்லியல் கழகம் 1995
இராசராசேச்சுரம் - நடனகாசிநாதன் இயக்குனர் - தமிழகத் தொல்பொருள்கழகம் 1994
தஞ்சாவூர் - குடவாயில் பாலசுப்ரமணியன் திருவாடுதுறை ஆதீனவெளியீடு 1995
கோவிலும் தஞ்சாவூரும் K.V.பக்கிரிசாமி பிள்ளை - வெற்றிவேல் பிரஸ் 1960.
பன்னிருத்திருமுறைகள் - தமிழ்நிலையம் சென்னை 1998

55. தூத்துக்குடி மாவட்ட ஊர்ப் பெயர்கள் – அன்றும் இன்றும்

முனைவர் இரா. சுதமதி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
அழகப்பா அரசு கலைக் கல்லூரி
காரைக்குடி – 630003

தூத்துக்குடி மாவட்டம் வரலாற்றுச் சிறப்பு மிக்க பல ஊர்களைத் தன்னகத்தே கொண்டது. இம்மாவட்டத்தின் வரலாறு, வரலாற்றுக்கு முந்தைய காலத்திலிருந்தே தொடங்குகிறது. இடைக் கற்காலப் பண்பாடு இம்மாவட்டத்தின் பல ஊர்களில் இருந்ததற்கான சான்றுகள் பரவலாகக் காணக் கிடைக்கின்றன. இவ்விடங்களில் கிடைக்கும் பல கல்வெட்டுக்கள் மற்றும் செப்பேடுகள் அவ்வூர்களின் பெயர்கள் குறித்த புதிய செய்திகளைத் தருகின்றன. இம்மாவட்டத்தில் இன்று வழங்கலாகும் ஊர்ப்பெயர்களும் அவற்றின் அக்காலப் பெயர்களும் இங்கே குறிப்பிடப்படுகின்றன.

இம்மாவட்டத்தில் இருந்த பழைய நாட்டுப் பிரிவுகளும் இன்றைய பெயர்களும்:

1. நெற்சுர நாடு	-	நாலாட்டின் புத்தூர்
2. சூரங்குடி நாடு	-	சூரங்குடி
3. முரப்பு நாடு	-	முறப்ப நாடு
4. அமித குண வள நாடு	-	சாத்தான்குளம்
5. திருவழுதி நாடு	-	பெருங்குளம்
6. சீவல்லவ வள நாடு	-	ஒட்டப்பிடாரம்
7. பராந்தக வள நாடு	-	மாறமங்கலம்
8. மானவீர வள நாடு	-	குலசேகரன் பட்டினம்
9. குட நாடு	-	கொற்கை
10. கீழ்க்களக் கூற்றம்	-	கங்கை கொண்டான்
11. முதுகுடி நாடு	-	பசுவந்தனை
12. ஆசி நாடு	-	கயத்தாறு
13. வெண்புல நாடு	-	விளாத்திகுளம்

<u>ஊர்ப்பெயர் மாற்றம்</u>

<u>தற்போதுள்ள ஊர்ப்பெயர்</u>		<u>கல்வெட்டு,செப்பேடுகளில்உள்ள ஊர்ப்பெயர்</u>
1. அங்கமங்கலம்	-	சிவன் தலைக் கங்கை மங்கலம், அங்கைமங்கலமான மதுரோதையப் பெருந்தெரு, அங்கைமங்கலமான வீரபாண்டியன் மடிகை மாநகர்
2. ஆழ்வார் திருநகரி	-	திருக்குருகூர், ஆழ்வார் திருநகரி
3. இரட்டைத் திருப்பதி	-	திருத்தொலைவில்லி மங்கலம்
4. கட்டாலங்குளம்	-	கட்டாறை மங்கலம்

5. கட்டாரி மங்கலம்	-	கட்டாணை மங்கலம்
6. காயல்பட்டினம்	-	சோ நகர் பட்டினம்
7. குலசேகரன்பட்டினம்	-	மானவீர வள நாடு
8. குரும்பூர்	-	குரும்பிலான ஸ்ரீஇராசேந்திர நல்லூர்
9.கொற்கை	-	குடநாட்டுக் கொற்கை, கொற்கையான மதுராந்தக நல்லூர், கொற்கையான மதுரோதைய நல்லூர்
10. திருக்கோளூர்	-	திருவழுதி வளநாட்டுத் திருக்கோளூர், திருக்கோளூரான சிந்தாமணி நல்லூர் திருக்கோளூரான உலகசிந்தாமணிபுரம்
11. தென்திருப்பேரை	-	தென்திருப்பேர், தென்திருப்பேரான சுந்தரபாண்டியச் சதுர்வேதி மங்கலம்
12. நத்தம்	-	வரகுணமங்கை
13. பெருங்குளம்	-	பெருங்குளமான உத்தமசோழபாண்டிய நல்லூர், பெருங்குளமான உத்தம பாண்டிய நல்லூர்
14. மாறமங்கலம்	-	சோழேந்திர சிங்கச் சருப்பேதி மங்கலம், மாறன்மங்கலமான தேவேந்திர வல்லபச் சருப்பேதி மங்கலம்
15. முறப்பநாடு	-	முறப்பநாட்டு இராசராசவிச்சாதிரநல்லூர்
16. வல்லநாடு	-	வல்லநாடான செயங்கொண்ட பாண்டிய நல்லூர்
17. வானரமுட்டி	-	ஊற்றந்தூரான சுந்தர பாண்டிய நல்லூர்
18. வீரபாண்டியன்பட்டினம்	-	சோணாடு கொண்டான் பட்டணம்

இன்றைய ஊர்கள் இவ்வாறான பெயர்களைக் கொண்டிருந்தமையைக் கல்வெட்டுக்கள், செப்பேடுகள் வழி அறிய முடிகிறது.

<u>சில சான்றுகள்</u>

1. ஸ்ரீ பாண்டி மண்டலத்து <u>குடநாட்டு கங்கை மங்கலமான மதுரோதையப் பெருந்தெரு</u> – கி.பி. 1243 நாகர்கோவில் சோழபுரம் சோழீஸ்வரர் கோயிற் கல்வெட்டு – அர்த்தமண்டபம், தென்சுவர்.

2. குடநாட்டுச் <u>சிவந்தலை</u>யான திருநாராயணச் சதுர்வேதி மங்கலத்துத் திருநாராயண விண்ணகர் – சிவந்தலைக் கல்வெட்டு , கி. பி. 13ஆம் நூற்.

3. ஸ்ரீவல்லப வளநாட்டுக் <u>கட்டாறை மங்கலம்</u> – திருச்செந்தூர் வரகுண பாண்டியன் கல்வெட்டு.

4. "அமுதகுண வளநாட்டுக் <u>கட்டாணி மங்கலமான</u> விக்கிரமபாண்டியச் சதுர்வேதி மங்கலம்"

5. "ராஜராஜப் பாண்டிநாட்டு உத்தம சோழ வளநாட்டுக் குரும்பிலான இராஜேந்திர நல்லூர் சுந்தர சோழபாண்டிய விண்ணகர் உகந்தருளின பெருமான்" – குரும்பூர் பெருமாள் கோயில் கல்வெட்டு

6. "திருவழுதி வளநாட்டு ஸ்ரீவைகுந்தத்து கருமாணிக்கத்தாழ்வார்' – குலோத்துங்கனின் கல்வெட்டுத் துண்டு திருச்சுற்றுத் தளத்தில் பதிக்கப் பட்டுள்ளது.

7. "வழுதி வளநாட்டு பிரமதேயம் வரகுண மங்கலம்" – திருச்செந்தூர் வரகுணபாண்டியன் கல்வெட்டு.

8. "சூரங்குடி நாட்டு மாறமங்கலத்து இறைகள் பேரால் மிழலூர் அப்பன் பழுது இடுவித்த செக்கு" – இருவப்பபுரம் செக்குக் கல்வெட்டு.

துணை நின்றவை

1.ச.சுந்தரராசன்-வ.உ.சிதம்பரனார்மாவட்டம்(ஊரும்பழஞ்சிறப்பும்), கழக வெளியீடு,1986

2.சிதம்பரனார்மாவட்டம் - ஓர்ஆய்வு, மா. செந்தில்செல்வக்குமரன், சொ. சந்திரவாணன், தொல்பொருள் தொழில் நுட்பப் பணியாளர் பண்பாட்டுக் கழகம், 1986

56. சிலம்பில் ஊர்ப்பெயர்கள்

வே.சுயம்புத்தங்கம்,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை, தெ.தி.இந்துக் கல்லூரி, நாகர்கோவில்.

முன்னுரை

மனிதன் கூட்டம் கூட்டமாக வாழத்தொடங்கிய போதே தத்தம் இடத்திற்கு என ஒரு பெயரைச் சூட்டியிருப்பான். அவ்வாறு சூட்டிய பெயர்கள் மூலம் அவ்வவ் மக்களின் வாழிடம், வாழ்க்கை முறை, பண்பாடு முதலியவற்றை அறிய முடியும். ஒரு நாட்டின் பெயரால் அந்நாட்டு அரசன், அவன் சிறப்புகள், நாட்டுவளம் முதலானவை பெறப்படுகின்றன. சில புலவர்கள், படைப்பாளர்கள் தங்கள் பெயருடன் ஊர்ப்பெயரையும் சேர்த்துக் கொண்டு தன்னை அடையாளப்படுத்திக் கொண்டனர். சான்றாக மதுரைக் கணக்காயனார், கோவூர் கிழார் இவர்களைச் சுட்டலாம். இதன் மூலம் அவர்கள் ஊர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளமையையும், ஊர்பெயர்கள் ஓர் அடையாளச் சின்னங்களாக இருந்துள்ளமையையும் அறியமுடிகிறது. அவ்வகையில் சிலம்பில் அமைந்துள்ள ஊர்ப்பெயர்கள் பற்றி இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.

அலைவாய்

அலைவாய் என்ற பெயர் சிலப்பதிகாரத்தில் செந்தில் என்ற பெயரால் குறிக்கப்பட்டுள்ளது.

அலைவாய் என்ற ஊர்ப்பெயர் சீரலைவாய் அல்லது திருச்சீரலைவாய் என்றும் செந்தில் என்ற ஊர்ப்பெயர் திருச்செந்தில் மற்றும் செந்தூர் அல்லது திருச்செந்தூர் என்றும் வழங்கப்படுகின்றன.

"சீர் கெழு செந்திலுஞ் செங்கோடும் வெண் குன்றும்

ஏரகமும் நீங்கா இறைவன் கைவேலன்றே"

(சிலப். குன்றக்குரவை. 8)

என்ற வரிகள் மூலம் செந்தில் என்ற சொல் வந்துள்ளமையைக் காணமுடிகிறது.

அழும்பில்

மானவிறல்வேள் என்ற குறுநில மன்னனுக்குரியது 'அழும்பில்' என்ற ஊர். இதனை மதுரைக் காஞ்சி கூறுகிறது. "புதுக்கோட்டைச் சீமையில் உள்ள அம்புக்கோயில் என்ற ஊரே பழைய அழும்பில் என்ற கருத்து உள்ளது. இவ்வூரில் உள்ள சிவன் கோயில் 'அழும்பிற் கோவில்' என வழங்கி, அதுவே நாளடைவில் அம்புக்கோயில் என மருவி ஊர்ப் பெயராயிற்று என்பர்" என ரா.பி.சேதுபிள்ளை தன்னுடைய ஊரும் பேரும் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். சிலப்பதிகாரத்தில் அழும்பில் என்ற ஊர் குறிப்பிடப்பட்டுள்ளது.

"அறைபறை யென்றே யழும்பில் வேளுரைப்பு"

(சிலப். 25 : 177)

உறந்தை

உறந்தை என்ற ஊர்ப்பெயர் உறையூர் என்றும் கோழி என்றும் வழங்கப்படுகிறது.

உறப்பு என்ற சொல் செறிவு என்று பொருள்படுவதைக் காணும் பொழுது மக்கள் செறிந்து வாழும் பகுதி என்றும் பொருள் கொள்ளலாம்.

சங்க இலக்கியங்களில் உறந்தை என்ற சொல் அதிகமாக கையாளப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது. ஆனால் உறையூர் என்ற பெயர் சிலம்பில் ஒரேயொரு இடத்தில் காண முடிகிறது.

இதனை,

"தமிழ் வரம்பறுத்த தண்புன னன்னாட்டு
மாட மதுரையும் பீடாருறந்தையும்
கலிகெழு வஞ்சியு மொலி புணர் புகாரும்"

(சிலப் . 8 : 2-4)

"அறியாமை யின்றிழி பிறப்புற்றோர்
உறையூர் நொச்சியொரு புடை யொதுக்கிப்
பன்னிரு மதியம் படர்நோயு ழந்தபின்
முன்னையுருவம் பெறுக வீங்கிவரென"

(சிலப் . 10 : 241. 244)

என்ற பாடல் வரிகள் மூலம் அறியலாம்.

ஏரகம்

ஏர் என்றால் அழகு. அகம் என்றால் இடம் அழகிய சோலைகள் நிறைந்த பகுதி என்ற பொருளில் 'ஏரகம்' என்ற பெயர் வந்திருக்க வேண்டும். சிலம்பில் குன்றக்குரவையில் இப்பெயர் இடம் பெற்றிருப்பதை அறிய முடிகிறது.

சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும்
ஏரகமும் நீங்கா இறைவன் கைவேலன்றே"

(சிலப். குன்றக்குரவை. 8)

காவிரிப்பூம்பட்டினம்

காவிரியாறு கடலோடு கலக்குமிடத்தில் சோழர்களின் தலைநகரமாகச் சிறந்து விளங்கியது தான் காவிரிப்பூம்பட்டினம். அந்நகரப் பெயர் சிலம்பில்,

"காவிரிப் படப்பைப் பட்டினந் தன்னுள்"

(சிலப். அடைக்கலக்காதை . 151)

என குறிப்பிடப்பட்டுள்ளமையைக் காணமுடிகிறது.

கொடும்பை

இவ்வூர் பாண்டிய நாட்டில் உள்ளது. சிலப்பதிகாரக் காலத்தில் உறையூரிலிருந்து மதுரைக்குச் செல்லும் வழியிலிருந்தது என்பது அறிந்த செய்தி. கொடும்பை என்பது குளம் என்னும் பொருளையுடைய சொல்லாதலின் இவ்வூர்ப் பெயர் நீர்நிலையால் பெயர் பெற்றதாகக் கருத இடமுண்டு. இவ்வூர்ப் பெயர் சிலம்பில்,

"நெடும் பேரத்த நீந்திச் சென்று
கொடும்பை நெடுங்குளம் கோட்டகம் புக்கால்"

(சிலப். காடுகாண்காதை-69,70)

என்ற வரிகள் மூலம் சுட்டப்படுவதை அறியலாம்.

திருச்செங்கோடு

செங்கோடு என்று இலக்கியத்தில் வழங்கப்படும் ஊர்ப்பெயர் திரு என்னும் ஒட்டுடன் இணைந்து திருச்செங்கோடு என வழங்குகிறது.

செந்நிறம் வாய்ந்த மலையின் சிகரம் என்னும் பொருளில் செங்கோடு என பெயர்பெற்றிருக்கலாம். அல்லது செம்மையான அதாவது செங்குத்தான மலையின் சிகரம் ஆகையால் செங்கோடு எனப் பெயர் பெற்றது. இப்பெயர் சிலம்பில்.

"சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண் குன்றும்

ஏரகமும் நீங்கா இறைவன் கைவேலன்றே''

(சிலப். குன்றக் குரவை, 8)

என்று வருசவதைக் காணமுடிகிறது.

மருவூர்

அக்காலத்தில் கடற்கரை நகரங்களை இருபிரிவாக பிரித்திருந்தனர். அதில் ஒரு பாகம் 'ஊர்' என்றும் மற்றொரு பாகம் 'பட்டினம்' என்றும் அழைக்கப்பட்டன. பூம்புகார் நகரத்தின் ஒரு பாகம் மருவூர்ப்பாக்கம் என்றும் மற்றொரு பாகம் பட்டினப்பாக்கம் என்றும் பெயர் பெற்றன என்று ரா.பி.சேதுபிள்ளை அவர்கள் குறிப்பிடுகிறார். இப்பெயர்கள் சிலம்பிலும் இடம் பெற்றிருப்பதைக் காணமுடிகிறது.

மருவூர் மருங்கின் மறங் கொள் வீரரும்.

பட்டின மருங்கிற் படைகெழு மாக்களும்
முந்தச் சென்று முழுப்பலி பீடிகை
வெந திறன் மன்னற் குற்றதை யொழிக்கென்

(சிலப். 5 : 76-79)

என்ற வரிகள் மூலம் மருவூர் என்ற ஊர் இருந்ததை பாடல் அடிகள் மூலம் அறியமுடிகிறது.

வயலூர்

விளை நிலங்களை ஒட்டியெழுந்த ஊர்கள் அப்பெயர்களையே ஊர்ப்பெயர்களாகவும் கொண்டு விளங்கும். அவ்வகையில் வயல் என்ற சொல்லுடன் ஊர் என்ற பெயர் சேர்ந்து வயலூர் என்றாகியிருக்க வேண்டும்.

"மடங்கா விளையுள் ஒரு வயலூர் நல்கி"

(சிலப். 23: 119)

உஞ்சையம்

உஞ்சையம் என்பது உஞ்சயினி நகரமே ஆகும். இது அவந்தி என்றும் உஞ்சை எனவும் வழங்கப்படும். அவந்தி நாட்டிலுள்ளது என்றும் பிரச்சோதனனின் தலைநகர் என்றும் அறியமுடிகிறது. அந்நகரப்பெயர் சிலம்பு, மணிமேகலை போன்ற நூற்களிலும் காணமுடிகிறது.

"அமரர் தலைவனை வணங்குவதும் யாமெனச்
சிமையத் திமையமும் செழுநீர்க் கங்கையும்
உஞ்சையம் பதியும் விஞ்சத் தடவியும்"

(சிலப் . 6: 27-29)

நிறைவுரை

சங்க காலத்திலிருந்து தோன்றிய ஊர்கள் தற்போதும் அதே பெயரில் இருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. பழங்காலத்தில் இயற்கைக்கும் ஊர்ப்பெயர்களுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. பொதுவாக ஊர்ப் பெயர்கள் இயற்கைப் பெயராகவே அமைந்துள்ளமையைக் காண முடிகிறது. சில ஊர்ப் பெயர்கள் காரணம் கருதியும், சில ஊர்ப் பெயர்கள் காரணம் கூற முடியாமலும் உள்ளன. இலக்கியங்களில் காணப்படும் ஊர்ப் பெயர்கள் மூலம் பிற நாடுகள் பற்றி அறிய முடிகிறது. நமக்குத் தெரியாத பல ஊர்களும் இலக்கியங்களில் காணப்படுகிறது. அவ்வூர்களைப் பற்றி அறிய இவ் இலக்கிய புத்தகங்கள் ஒரு வாயிலாக அமைகின்றன என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

57. புறநானூற்றுப் புலவர்களின் ஊர்ப்பெயர்கள்

முனைவர் நா.சுலோசனா
உதவிப்பேராசிரியர்
இளங்கலைத்தமிழ்த்துறை
அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி(தன்னாட்சி)
சிவகாசி

தமிழக ஊர்ப்பெயர்கள் வரலாற்றின் அடிப்படையில் அமைந்துள்ளதாகும். வரலாறு என்பது தமிழ் நாட்டின் ஊர்ப்பெயர்களை விளக்கும் கலங்கரை விளக்கமாகத் திகழ்கிறது. தமிழ்நாட்டில் சில ஊர்ப்பெயர்கள் சிதைந்தும் திரிந்தும் மருவியும் மாறியும் தத்தம் முன்னிலையை இழந்தும் உள்ளன. பட்டி, புரம், ஊர், குளம், சேரி, பாளையம், குறிச்சி, நத்தம், நகர், நகரம், புரி போன்றவை தமிழக ஊர்ப்பெயர்களில் பின்னிலை வடிவங்களாக இருக்கின்றன. இலக்கியங்களிலும் இத்தகைய வடிவங்கள் காணப்படுகின்றன. புறநானூற்றில் இடம்பெற்றுள்ள புலவர்களின் ஊர்ப்பெயர்களை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

புலவர்களும் ஊர்ப்பெயர்களும்:

தமிழ்ப் புலவர்கள் சிலர் அவரவர் தோன்றிய ஊர்ப்பெயர்களால் அழைக்கப் பெறுதல் மரபாகும். அவ்வகையில் உறையூர், காவிரிபூம்பட்டினம், மதுரை பேராலவாயார், ஆவடுதுறை மாசாத்தனார், ஐயூர் முடவனார், தகடூர், கூடலூர்கிழார், கோவூர் கிழார், இதைப்போல இன்னும் பல புலவர்கள் தாம் தோன்றிய ஊர்ப்பெயர்களால் புகழ்பெற்று விளங்கினர்.

உறையூர் இளம்பொன் வாணிகனார்:

பெரு நகரங்கள் சிறு ஊர்களாகவும், சிறு ஊர்கள் பெரு நகரங்களாகவும் காலத்தால் மாற்றம் பெற்றுள்ளன. 'உறந்தை' என்னும் பெருநகரம் பிற்காலத்தில் 'உறையூர்' என்ற ஊராகப் பெயர்பெற்றுள்ளது. அப்பொழுது அதனருகில் இருந்த திருச்சிராப்பள்ளி என்ற சிற்றூர் இன்று பெருநகராக வளர்ந்துள்ளதையும் காணமுடிகிறது.

இவ்உறையூரில் பிறந்தவர்கள் 264 – வது பாடலைப் பாடிய இளம்பொன் வாணிகனார், 130,131,132,133,134,135 ஆகிய பாடல்களைப் பாடிய உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்,60,170-வது பாடல்களைப் பாடிய உறையூர் மருத்துவன் தாமோதனார்,27,325-வது பாடல்களைப் பாடிய உறையூர் முதுகண்ணன் சாத்தனார் ஆகியோர் உறையூரால் பெயர்பெற்றவர்களாவர். உறையூர் என்பது தற்போது திருச்சிக்கு அருகிலுள்ளது.

காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார்:

கடற்கரையில் அமைந்த சில ஊர்களின் தன்மையை அவற்றின் பெயர்களே நமக்குத் தெளிவுறுத்துகின்றன. கடலின் கரையில் அமைந்த ஊர்களுக்கு கரை என்றும், கடல் வாணிபத்திற்குச் சிறப்புப்பெற்ற இடம் துறை என்றும் பெயர் பெற்றன. இக்காலத்தில் துறை, துறைமுகமாயிற்று. கடற்கரையில் உண்டாகும் நகரங்கள் பட்டினம் எனப் பெயர்பெற்றுள்ளன. அவ்வகையில் காவிரிப்பூம்பட்டினம் விளங்குகின்றது என்பதை இலக்கியங்கள் சுட்டுகின்றன. இஃது இரு பெரும் பிரிவாகி ஊர், பட்டினம் என வழங்கப் பெற்றுள்ளது. இது சிலப்பதிகாரத்தில் மருவூர்பாக்கம், பட்டினப்பாக்கம் எனச் சுட்டப்படுகிறது. தற்போது பூம்புகார் எனவும் வழங்கப்படுகிறது. இது கடலூர்க்கு அருகிலுள்ளது.

புறநானூற்றில் 57,58,169,171,353 -வது பாடலைப் பாடிய காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணாரும், ஊர்ப்பெயரால் புகழ்பெற்றவராவார்.

நொச்சிநியமங்கிழார்:

'நியமம்' என்பதே இச்சான்றோரின் ஊராகும். இப்பெயருடைய ஊர்கள் பல இருக்கின்றன. இப்புலவர் பிறந்த நியமத்தின் சிறப்பு நொச்சி வேலி சூழ்ந்து காணப்படுவதாலும் இந்நியமம் 'நொச்சி நியமம்' எனப்பட்டது. 'நொச்சி' என்பதற்கு நொச்சிப்பூமாலை சூடித் தம் மதிலைக் காக்கும் வீரரை குறிப்பதாகும். 293-வது பாடலை பாடிய நொச்சிநியமங்கிழா நொச்சியால் புகழ்பெற்றவராவார். இந்நொச்சி திருச்சிராப்பள்ளியிலிருந்து முசிறிக்குச் செல்லும் வழியில் உள்ளது.

மோசி சாத்தனார்,மோசி கீரனார்:

இவர் புறநானூற்றில் 272-வது பாடலைப் பாடியுள்ளார். மோசி என்பது பாண்டியநாட்டில் உள்ள ஒரு ஊராகும். இப்போது மோசி குடி என வழங்கப்படுகிறது. அதைப்போல மோசி

கீரனாரும் மோசி என்னும் ஊரில் பிறந்தாராவார். இவர் 50,154,155,156 ஆகிய பாடல்களைப் பாடியுள்ளார்.

மாறோக்கத்து நப்பசலையார் :

37,39,126,174,383 ஆகிய பாடல்களைப் பாடியவர் மாறோகத்து நப்பசலையார் ஆவர். மாறோக்கம் என்பது நெய்தல் நிலப்பகுதியான கொற்கையைச் சூழ்ந்த பகுதியாகும். மாறோக்கம் என்பதே மாறமங்கலம் என அழைக்கப்படுவதாக ஒளவை துரைச்சாமிப்பிள்ளையின் கூற்றாகும். இது மாறவன் மன்மங்கலமெனவும், மானமங்கலமெனவும் கல்வெட்டுகளில் காணப்படுகிறது.

மதுரை:

மன்னர்கள் தாங்கள் பெற்ற வெற்றியின் சிறப்பை நிலை நிறுத்தும் பொருட்டு சில நகரங்களைத் தோற்றவித்துள்ளனர். அவ்வகையில் பாண்டியர்களின் தலைநகரமாக விளங்கியது கொற்கை. கொற்கையை அடுத்தது மதுரை மாநகரமாகும். இம்மதுரையால் பெயர்பெற்ற புலவர்கள் 329-வது பாடலைப் பாடிய மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்,330-வது பாடலைப் பாடிய மதுரைக் கணக்காயனார், 334 -வது பாடலைப் பாடிய மதுரைத் தமிழக் கூத்தனார், மதுரை மேலைக் கடைக்கண்ணம் புகுத்தாராயத்தனார், மருதத்திணைப் பாடல்களை இயற்றுவதில் வல்லவரான மதுரை மருதனிளநாகனார் 52,55,349 ஆகிய பாடல்களைப் பாடியுள்ளார், 56,189 ஆகிய பாடல்களைப் பாடிய மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரானார், 59-வது பாடலைப் பாடிய மதுரை கூலவாணிகள் சீத்தலைச் சாத்தனார் ஆகியோர் மதுரையால் புகழ் பெற்றவராவார்.

கோவூர் கிழார்:

கோவூர் என்பது தொண்டை நாட்டு ஊர்களுள் ஒன்றாகும். தொண்டை நாடு தற்போது இது செங்கற்பட்டு மாவட்டமாகும். சோழன் நலங்கிள்ளி, சோழன் குளமுற்றத்ததுச் துஞ்சிய கிள்ளி வளவன் முதலிய முடிவேந்தர்களைப் பாடிச் சிறப்புப் பெற்ற புலவர் கோவூர் கிழார் ஆவார். இவர் 31,41,44,45,46,47,68,70,308,386 ஆகிய பாடல்களைப் பாடியவராவார்.

ஆவூர் கிழார் : ஆவூர் மூலங்கிழார் :

ஆவூர் என்னும் பெயருடைய ஊர்கள் தஞ்சை மாவட்டத்திலும் வடஆர்க்காடு மாவட்டத்திலும் உள்ளன. பாணர்கள் அதிமாக வாழ்ந்த பாணவரம் என்ற ஊரே வடஆர்க்காடு என்று பெயர்பெற்றதை தமிழறிஞர் ரா.பி.சேதுப்பிள்ளை தம்முடைய 'ஊரும் பேரும்' என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். ஆவூர் கிழாரின் ஊர்ப்பெயரான ஆவூர் என்பதை அவர் பாடிய பாடல்களில் முல்லை நிலத்தையே சிறப்பித்துப் பாடியதிலிருந்து அறிந்து கொள்ளமுடிகிறது. ஆவூர் கிழார் 322-வது பாடலைப் பாடியவராவார்

புறநானூற்றுப் பாடல்களில் 38,261- வது பாடலைப் பாடிய ஆவூர் மூலங்கிழாரின் ஆவூர் என்னும் ஊர் பாண்டிய நாட்டிலுள்ள ஊராகும். 'ஆமூர்' என்பதே ஆவூர் என்றாயிற்று. மூல ஓரையிலே பிறந்தவர் ஆதலால் ஆவூர் மூலங்கிழார் எனப் பெயர் பெற்றார்.

ஓக்கூர்:

ஒக்கூர் என்ற பெயருடைய ஊர்கள் சோழ நாட்டிலும், பாண்டிய நாட்டிலும் இருந்துள்ளன. 248-வது பாடலைப் பாடிய ஒக்கூர் மாசாத்தனார்,279-வது பாடலைப் பாடிய ஒக்கூர் மாசாத்தியார், இருவரும் வெவ்வேறானவர்களானாலும் யார் எந்த நாட்டில் பிறந்தவர்கள் என்பதை அறியமுடியவில்லை. ஓக்கூர் என்பது திருக்கோட்டியூருக்கு அருகிலுள்ள ஓர் ஊராகும்.

சேரமான் கோட்டம்பலத்துத் தஞ்சிய மாக்கோதை :

இறைவன் வீற்றிருக்கும் அம்பலம் இரண்டாகும். தமிழ்நாட்டு ஐந்து சபைகளுள் சிதம்பரத்திலுள்ள பொன்னம்பலமும், மதுரையிலுள்ள வெள்ளியம்பலமும் குறிப்பிடத் தகுந்தவை ஆகும்.

கோட்டம்பலம் என்பது சேரநாட்டு ஊர்களுள் ஒன்றாகும். இக்கோட்டம்பலம் தற்போது அம்பலப்புழையென்னும் இடமாகத் திகழ்கிறது என்பது ஒளவை சு.துரைச்சாமிப்பிள்ளை அவர்களின் கூற்றாகும். இது சில ஏடுகளில் கூத்தம்பலம் எனவும் வழங்கப்படுகிறது.

கோடை பாடிய பெரும்பூதனார்:

கோடையென்பது மலையாகும். தற்போது அது கோடைக்கானல் என வழங்கப்படுகிறது. இதனைச் சான்றோர் பலரும் வியந்து பாராட்டுமாறு பாடிய சிறப்பால் 259-வது பாடலைப் பாடிய பெரும்பூதனார் 'கோடை பாடிய பெரும்பூதனார்' என்று அழைக்கப்படுகின்றார்.

பெருஞ்சிக்கல் கிழான் :

சோழ நாட்டு உட்பிரிவுகளுள் ஒன்று சிக்கல் நாடாகும்.இது இப்போது திருவாரூர்க்குக் கிழக்கிலுள்ள பகுதியாகும். இதன் தலைநகரம் சிக்கல் எனப்படும். பெருஞ்சிக்கல் என்பது பழங்கால வழக்கத்திலிருந்த ஊர்ப்பெயராகும். 349-வது பாடலைப் பாடிய பெருஞ்சிக்கல் கிழான், 387-வது பாடலைப் பாடிய சேரமான் சிக்கற்பள்ளித் துஞ்சிய செல்வக் கடுங்கோழியாதன் இப்புலவர்களின் பெயரிலுள்ள சிக்கலென்னும் ஊர் பாண்டிய நாட்டிலுள்ள ஊராகும்.

வட்டாற்று எழினியாதன் :

சோழநாட்டிலும், தென்பாண்டி நாட்டிலம் வாட்டாறு என்னும் பெயர் தாங்கிய ஊர்கள் இருந்தன. சோழநாட்டுத் தஞசாவூர் மாவட்டம் பட்டுக் கோட்டைத் தாலுகாவில் உள்ளது. இது வாட்டாற்றுக் கோட்டை, வாட்டாத்திக் கோட்டையென தற்போது மருவி வழங்கப்படுகிறது. தென்பாண்டி நாட்டில் இது பழமையான நகரமாகக் காணப்படுகிறது.

கதையங்கண்ணனார் :

குடியும் படையும் அரசனுக்குரிய அங்கங்களுள் குறிப்பிடத்தக்கவை ஆகும். இவைதம் சிறப்பை ஊர்ப்பெயர்கள் நன்கு விளக்கிக் காட்டுகின்றன.

குடி என்னும் சொல் ஊர்ப்பெயர்கள் அமைந்து குடியிருப்பை உணர்த்துகின்றன. தஞ்சைக்கருகில் சிறுகுடி, கற்குடி, விற்குடி, செங்காட்டாங்குடி, மன்னார்குடி முதலியன தேவாரம் குறிப்பிடும் பெயர்களாகும். கதையன்குடி என்பது பாண்டிய நாட்டில் இருந்த ஊராகும். கதவங்குடி என இப்போது மருவி வழங்கப்படுகிறது. 356-வது பாடலைப் பாடியவர் இவரே ஆவார்.

ஒய்மான் நல்லியக் கோடன் :

ஓவியர் என்னும் குலத்தார் வாழ்ந்து ஆண்ட பகுதி ஒய்மாநாடு என ஆகியதாகும். குலத்தினால் பெயர் பெற்றவன் ஒய்மான் நல்லியக்கோடன் ஆவான்.சய்ககாலத்தில் ஒய்மா நாட்டை ஆண்ட கொடைவள்ளல் நல்லியக்கோடனாவான். இன்றைய திண்டிவனத்தைத் தலைநகராகக் கொண்டு நல்லாட்சி செய்து வந்தவனாவான். 376- வது பாடலைப் பாடியவராவார்.

தங்காற் பொற்கொல்லனார் :

'தங்கால்' என்பது விருதுநகருக்கு அருகிலுள்ள ஊராகும். இளங்கோவடிகள் இதனைத் "தடம் புனற் கழனித் தங்காள்" --- (சிலம்பு, மதுரைக், 23:118) என்று சிறப்பித்துள்ளார். கல்வெட்டுகளில் 'திருத்தங்கால்' என்றும் 'திருத்தங்கல்' என்றும் அழைக்கப்படுகிறது. "இவ்வூரின் வடக்கில் சுமார் 100 அடி உயரமுடைய குன்று காணப்படுகிறது. திருப்பதி நாராயணர் திருவில்லிபுத்தூரிலுள்ள ஆண்டாளின் திருமணத்திற்காக வரும் வழியில் இப்பாறையில் தங்கியிருந்து பின்னர் திருவில்லிபுத்தூர் சென்றதால் இவ்வூர் 'திருத்தங்கல்' என்று பெயர் பெற்றது வரலாற்றுச் செய்தியாகும்."----

(மா.செந்தில்செல்வக்குமரன், விருதுநகர் மாவட்ட வரலாறு, ப.62). இவர் 326 வது பாடலைப் பாடியவராவார்.

ஆவடுதுறை மாசாத்தனார்:

இறைவன் உறையும் துறைகள் பலவும் தேவாரத்தில் கூறப்பட்டுள்ளன. காவிரியாற்றில் அமைந்த அழகிய துறைகள் குரங்காடுதுறை, மயிலாடுதுறை போன்று திருவாவடுதுறை, திருப்பாற்றுறை, திருச்செந்துறை, கடம்பந்துறை முதலியன 'துறை' என்னும் பெயர் கொண்டு இறைவன் புகழ்பாடுகின்றன.

சோழநாட்டிலுள்ளது ஆவடுதுறையாகும். திருவாவடுதுறைக்குச் சாத்தனூர் என்பது பழம் பெயராகும்.. திருவாவடுதுறை என்பது திருக்கோவிலுக்குப் பெயராகும். நாளடைவில் சாத்தனூர் என்பது மறைந்து, திருவாவடுதுறை என்ற பெயரே ஊருக்கும் பெயராகிவிட்டது. ஆவடுதுறை என்பதே 'ஆடுதுறை' என மருவி வழங்கப்படுகிறது.இந்த 'ஆடுதுறை' என்பது தஞ்சாவூர் பக்கத்திலுள்ள ஊராகும். நெல் ஆராய்ச்சித்துறைக்கு புகழ் பெற்ற ஊராகும். இவர் 227 வது பாடலைப் பாடியவராவார்.

தகடூர் :

அதியமான் நெடுமான் அஞ்சி கொங்கு நாட்டில் தருமபரி எனப்படும் தகடூரிலிருந்து ஆட்சி புரிந்தான் என்பதையும் அவனது கொடைப்புகழ் தமிழகமெங்கும் பரந்திருப்பதையும் நாம் அறிய முடிகிறது. தகடூர் என்பது தற்போது சேலம் மாவட்டத்திலுள்ள தருமபுரியாகும். இவர் 206 வது பாடலைப் பாடியவராவார்.

அம்பர் கிழான் அருவந்தை :

அம்பர் என்பது சோழநாட்டில் தஞ்சை மாவட்டத்திலுள்ள நன்னிலந் தாலுகாவில் உள்ள ஓர் ஊராகும். அருவந்தை என்னும் பெயர் கொண்ட தலைவன் ஒருவனுக்கு உரியதாகும். அம்பர் நாட்டில் வாழ்ந்த கல்வி கேள்விகளால் நிறைந்த தலைவனைச் சுட்டும் பொருட்டு ‘அம்பர் அருவந்தை’ என ஆயிற்று. இவர் 385 வது பாடலைப் பாடியவராவார்.

வஞ்சி:

சேர மன்னர்களின் தலைநகரம் வஞ்சியாகும். வஞ்சி என்பது இன்றைய கரூர் மாவட்டத்தைச் சார்ந்ததாகும்.

வான் தொடும் புகழையும், வெற்றியையும் உடையது கருவூர் என்பதை

“விண் பொரு புகழ்,விறல் வஞ்சி
பாடல் சான்ற விறல் வேந்தனும்மே”,------(புறம் 11: 6-7)

என்று சேரமான் பாடலை பாடிய பெருங்கடுங்கோவைப் பேய்மகள் இளவெயினி பாடிய பாடல் ஊர்ப்பெயருக்குச் சான்றாகும்.”வஞ்சி என்பது தற்போது கொச்சிக்கு கிழக்கே வடக்குச் சாய்வாக 28 கல் தொலைவில் உள்ளது”-------(கா.அப்பாத்துரையார், 1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகம், ப.35)

பறம்பு:

மலையும் மலை சார்ந்த பகுதியும் குறிஞ்சி நிலமாகும். முல்லையை அடிப்படையாகக் கொண்டு சில ஊர்ப்பெயர்கள் அமைந்துள்ளன.பாண்டிய நாட்டில் அதாவது இன்றைய மதுரைக்கு அருகிலுள்ள ஆனைமலை, சிறுமலை, பசுமலை போல பாரியின் பறம்புமலையும் பெரும் புகழுடையதாய் விளங்கிற்று.

“சேறும் - வாழியோ பெரும் பெயர்ப் பறம்பே”! ------ (புறம் 113 : 7)

வேள்பாரியின் பெருமையும், புகழும், கோடையும் உலகம் உள்ளளவும நிலைத்து நிற்கும் படி செய்ததால் பறம்பு மலையை “வாழியோ பெயர்ப் பறம்பே” என்று கபிலர் வாழ்த்தினார்.

மலையில் குறைந்தது ‘குன்று’ எனப்படும். அவ்வகையில் பாரியின் பறம்பு மலையை ‘குன்று’ என வழங்கப்பட்டதற்கு கபிலர் பாடிய புறநானூற்றுப் பாடல்களே சான்றாகும்.

அரிசில் கிழார் :

முடிவேந்தர்களாகிய சேரமான் தகடுரெறிந்த பெருஞ்சேரலிரும்பொறையையும் குறுநில மன்னருள் வையாவிக் கோப்பெரும்பேகன், அதியமான் எழினி போன்றோரைப் பாடி பெருஞ்ச் சிறப்புப் பெற்றவர் அரிசில் கிழார் ஆவார். ‘அரிசில்’ என்னும் ஊர் இன்றைய கும்பகோணத்திற்கு அருகிலுள்ள ஓர் ஊராகும்.

சீறூர்:

சீறூர் என்பது புறநானூற்றுப் பாடல்களில் காணப்படும் ஒரு பெயராகும். அதை

“மரை பிரித்து உண்ட நெல்லி வேலி
பரலுடை முன்றில், அம் குடிச் சீறூர்”------------ (புறம் : 170 : 1-2)

இப்பாடலடியிலுள்ள சீறூர் என்பது சங்க காலத்தில் வாழ்ந்த மக்களின் குடிசைகளைக் காட்டுவதாகும்.

எண்ணிலடங்கா புலவர்கள் ஊர்ப்பெயர்களால் புகழ்பெற்றவர்களாக விளங்கினர். உவமைகளால் பெயர் பெற்றவர்களைப் போல ஊர்ப்பெயர்களால் புகழ்பெற்றவர்கள் பெருந்தலைச் சாத்தனார் உள்ளிட்ட பழம் பெரும் புலவர்கள் உள்ளனர். புறநானூற்றில் புலவர்களை அறிந்து கொள்வதோடு மட்டுமல்லாமல் அவர்களின் ஊர்ப்பெயர் வரலாற்றையும் நாம் அறிந்து கொள்ள முடிகிறது. சங்க இலக்கிய ஊர்ப்பெயர்கள் இன்று மருவி வழங்கி வருவதையும் இன்று நாம் வாழும் பக்கத்து ஊர்களிலும் அரசர்கள் ஆட்சி செய்தனர் என்பது நமக்கு மேலும் வியப்பூட்டும் விதமாக உள்ளது. நாம் வாழ்வதும் பெருமைக்குரியதாகும்.

ஒரு சில பெயர்கள் பல் வேறு மாவட்டங்களில் காணப்படுகிறது. அதேபோல் சங்க காலத்தில் ஒரே பெயருள்ள ஊர்ப்பெயர்கள் வேறு நாடுகளிலும் காணப்பட்டன என்பதையும் அதைப் பிரித்துக் காண்பதற்கு அவர் பாடிய பாடல்களே சான்றாகவும் அமைகிறது.

58. பத்துப்பாட்டில் ஆற்றுப்படைகளில் உள்ள ஊர்ப்பெயர்கள்

மு.சுபாஷினி
உருமுதனலெட்சுமி கல்லூரி,
காட்டூர், திருச்சி-19.

சங்க இலக்கியங்களில் பத்துப்பாட்டில் ஆற்றுப்படை நூல்கள் ஐந்து. முதலாவது திருமுருகாற்றுப்படை இதன் வேறு பெயர் புலவராற்றுப்படை ஆகும். பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, மலைபடுகடாம் என்று கூறும் கூத்துராற்றுப்படை. **ஆற்றுப்படை என்பது** பரிசு பெற்று வரும் ஒருவன் தான் எதிர்பட்ட வேறொருவனை தான் பரிசில் பெற்ற இயல்புக்கூறி, அவரிடம் செல்லும்படி ஆற்றுப்படுத்துவதேயாகும். ஆற்றுப்படைகளில் உள்ள ஊர் பெயர்களை இக்கட்டுரையில் கானலாம்.

திருமுருகாற்றுப்படையில் ஊர்கள்:

திருமுருகாற்றுப்படையில் முருக பெருமானின் தலங்களான **திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருஆவினன்குடி**, திரு ஏரகம், குன்றுதோராடல், பழமுதிர்சோலை போன்ற ஊர்கள் குறிப்பிடப்படுகிறது. இதன் ஆசிரியர் **'நக்கீரர்'** திருமகள் வீற்றிருக்கும் மாட மாளிகை, அழகிய அகன்ற தெருக்களை உடைய **'மதுரைக்கு'** மேற்கு திசையில் உள்ளது திருபரங்குன்றம். பசுமையான வயல்கள் சூழ்ந்த, தேன் மணம் கமழும் சோலைகள் நிறைந்த **'திருபரங்குன்றத்தில்'** முருகன் வீற்றிருக்கிறான்.

"கண் போல் மலர்ந்த காமரு சுனை மலர்
அஞ்சிறை வண்டின் அரிக் கணம் ஒலிக்கும்
குன்று அமர்ந்து உறைதலும் உரியன் . . ." (அடி 75-77)

திருசீரலைவாய் என்பதை **திருச்செந்தூர்** என்ற ஊராகும் திருசெந்தூரில் முருக பெருமான் 'சூரபதுமனை' வதம் செய்த ஊராகும். 'குமரகுருபரர்' ஊமை நீங்க பெற்று வாய் திறந்து 'கந்தர் கலிவெண்பா'. பாடிய இடமும் அதுவேயாகும்.

"உலகம் புகழ்ந்த ஓங்கு உயர் விழச் சீர்
அலைவாய்ச் சேறலும் நிலைஇய பண்பே ..." (அடி 124 - 125)

முருகன் குன்றில் உறைபவன் அன்றி அலைவாயிலும் இருப்பவன் என்று இப்பாடல் உணர்த்துகிறது.

முருகன், தெய்வயானையாருடன் சில நாள் **'திருவாவின்குடி'** என்னும் ஊரில் வீற்றிருந்தான். தன்னிடம் வருபவருக்கு எந்த குறையும் நேராது பேணுபவன் முருகன். **'திருவாவின்குடி'** என்பதே இக்காலத்தில் உள்ள **'பழனி'** என்னும் ஊராகும். **'ஆவி'** என்பவனுக்குரிய நன்குடியை உடைய ஊர் என்பதால் **'திருஆவினன்குடி'** என்று பெயர் வழங்கலாயிற்று.

"தாவில் கொள்கை மடந்தையொடு சில் நாள்
ஆவினன்குடி அசைதலும் உரியன் . . ." (அடி 175-176)

அந்தணர் பூணூலை அணிந்து முருகனின் ஆறெழுத்து மந்திரத்தை ஓதி, மணமிக்க மலர்கள் தூவி அருச்சித்து வணங்க மகிழ்ந்து 'திருவேரகத்தும்' முருகன் வீற்றிருப்பான். அருணகிரிநாதர், சோழ நாட்டில் உள்ள 'சுவாமிமலையே' 'ஏரகம்' என்பர்.

"ஆறு எழுத்து அடக்கிய அரு மறைக் கேள்வி
நா இயல் மருங்கில் நவிலப் பாடி
விரை உறு நறு மலர் ஏந்திப் பெரிது உவந்து
ஏரகத்து உறைதலும் உரியன்" (அடி 186-189)

முருகன் குறிஞ்சித் தெய்வம் ஆவான். ஆதலால் எல்லா மலைகளிலும் திருவிளையாடல் செய்வான் என்பதால் குன்று தோறு ஆடும் பண்பு உடையவனான்.

"முழவு உறழ் தடக்கையின் இயல ஏந்தி
மென் தோள் பல் பிணை தழீஇ தலைத் தந்து
குன்று தொறு ஆடலும் நின்ற தன் பண்பே" (அடி 216-217)

முருகன் சிறுபறையின் தாளத்துக்கு ஏற்பக் குரவைக் கூத்தாடுவான் 'குன்று இருக்கும் இடமெல்லாம் குமரன் குடி கொண்ட இடம்' என்ற சிறப்பும் உண்டு.

முருகப்பெருமான் மலை உச்சியிலிருந்து குதிக்கும் அருவிகளையும் 'பழம்' முற்றிய சோலைகளையும் உடைய மலைக்கு உரியவன். **'பழமுதிர்சோலை'**. இக்காலத்தில் **"கள்ளழக பெருமாள் கோயில்"** என்று வழங்கப்படுகிறது.

"இழுமென இழிதரும் அருவி
பழமுதிர் சோலைமலை கிழவோனே" (அடி 316-317)

முருகபெருமான் இங்குத் தேவியர் இருவருடன் ஒரே பீடத்தில் வீற்றிருக்கின்றான்.

பொருநராற்றுப்படையில் ஊர்கள்:

பொருநராற்றுப்படையில் சோழன் கரிகால் பெருவளத்தானை முடத்தாமக்கண்ணியார் புகழ்ந்து பாடுகின்றார். கரிகாலன் **'பேரூரை'** ஆட்சி செய்தான். பேரூர் - மக்கள் வாழ்வதற்கு வேண்டிய அகலிடமுடையதும், நெல் முதலிய விளைவு உடையதுமான **அகன்ற பெரிய ஊர்.** சேரன் மற்றும் பாண்டியனுடன் **'வெண்ணி'** என்னும் ஊரின்கண் போரிட்டு வெற்றி பெற்று ஆத்தி மாலையை உடையவன் கரிகாலன்.

"பெரு வேந்தரும் ஒருகளத் தவிய
வெண்ணித் தாக்கிய வெருவரு நோன் தாள்
கண் ஆர் கண்ணிக் கரிகால் வளவன்" (அடி 146-148)

கரிகாலன் 'கருவூரில்' இருந்தான் என்று கூறப்படுகிறது. 'உறையூரை' பெரிதாக்கி வளப்படுத்தினான். பண்டமாற்று முறையில் "மருவூர்ப்பாக்கம்" பற்றியும் கூறப்படுகிறது. கரிகாலன் வடக்கு 'இமயம்' வரை வென்றடிப்படுத்தி ஆண்ட செய்தியை,

"இரு நில மருங்கின் பொருநரைப் பெறாஅச்
செருவெங் காதலின் திருமா வளவன்" (சிலம்பு)

பொருநராற்றுப்படையில் காவிரியின் சிறப்பு எடுத்துரைக்கப்படுகிறது.

சிறுபாணாற்றுப்படையில் ஊர்கள்:

சிறுபாணாற்றுப்படையில் ஒய்மானாட்டு நல்லியக் கோடனின் சிறப்பை நல்லூர் நத்தத்தனார் கூறுவதாவது, சேர,சோழ, பாண்டிய மூவேந்தரையும், கடையெழு வள்ளல்களையும் தான்ஒருவனே கொண்டவன் நல்லியக்கோடன். அவன் தோன்றிய ஊர் **'இலங்கை'.** இராவணன் ஆண்ட **'இலங்கை'** தீமையுடையது. நல்லியக்கோடனின் **'இலங்கை'** தீமையற்றது என்பதையே,

"தொல்மா இலங்கைக் கருவொடு பெயரிய
நல் மா இலங்கை மன்னருள்ளும்" (அடி 119-120)

ஆதலால் 'நன்மா இலங்கை' என்கிறார்.

"எழு உறழ் திணிதோள் இயல் தேர்க்குட்டுவன்
வரு புனல் வாயில் வஞ்சியும் வறிதே" (அடி -19)

'வஞ்சி' மாநகரமானது சேர மன்னனின் தலைநகரமாகும். வட 'இமயத்தில்' வில் பொறியை பொறித்தவன். 'குட்ட நாட்டின்' தலைவன். செங்கழநீர் மலர், மிளகு கொடி படர்ந்த பலா மரம், மல்லிகை, மஞ்சள் இலை போன்ற பல இயற்கை வளம் செழித்து விளங்கும் வஞ்சி நகரமாகும்.

"தமிழ் நிலைபெற்ற தாங்கு அரு மரபின்
மகிழ் நனை மறுகின் மதுரையும் வறிதே" (அடி 66-67)

'மதுரை' மாநகரமானது பாண்டியனின் தலைநகரமாகும். கடற்கரைப்பட்டினமான 'கொற்கை' என்பதே இக்காலத்தில் 'மதுரை' என அழைக்கப்படும் ஊர். அக்காலத்தில் 'மதுரை' கடற்பரப்பான நெய்தல் நிலமாக உள்ளது என்று சிறுப்பாணாற்றுப்படையில் கூறப்படுகிறது. கொற்கையிலுள்ள மக்கள் உப்பு வண்டியில் ஏற்றி விற்றனர் என்று அறியப்படுகிறது.

நாடா நல் இசை நல் தேர்ச் செம்பியன்
ஓடாப் பூட்கை உறந்தையும் வறிதே" (அடி 82-83)

"உறந்தை" மாநகரமானது சோழனின் தலைநகரமாகும். ஓடாப்பூட்கை என்பது தன்னிடம் வாழ்வோர் எந்த குறையும் இல்லாமல் ஓடாமைக்கு காரணமான செல்வ வளம் கொழிக்கும் "உறந்தை" என்னும் ஊரே இன்று **"உறையூர்"** என்று அழைக்கப்படும் ஊராகும்.

பழனிமலைத் தலைவனான பேகன் குளிரால் நடுங்கிய மயிலுக்கு தன் போர்வையை கொடுத்த கடையெழு வள்ளல்களுள் ஒருவனாவான். பறம்புமலைக்கு தலைவனான பாரி, கொம்பில்லாமல் தத்தளித்த முல்லை கொடிக்கு தன் தேரை கொடுத்தவன். **பறம்புமலை** முந்நூறு ஊர்களை கொண்டது.

காரி என்பவனுடைய மலையமான் நாட்டின் தலைநகரம் **"திருக்கோவலூர்"** என்பதாகும். காரி தன்னை நாடி வரும் இரவலர்க்கு தன் ஊர்களை கொடுக்கும் வள்ளலாவான்.

"பொதியமலையின்" தலைவனான ஆய்அண்டிரன் நாகம் தந்த ஆடையை சிவபெருமானுக்கு கொடுத்தவன். இவனை புகழ்ந்து பாடிய புலவர் "உறையூர்" ஏணி சேரி முட மோசியார். **"துறையூர்"** ஓடைகிழார். **"உமட்டூர்"** கிழார் மகனார் பரங்கொற்றனார் முதலான புலவர்கள் புகழ்ந்து பாடியுள்ளனர்.

"குதிரை மலை" அதியமானின் மலையாகும். அமிழ்தத் தன்மையுடைய நெல்லிக்கனியை ஔவைக்கு கொடுத்தவன். ஓரியின் மலை **"கொல்லிமலை"** ஆகும். அம்மலையை தனக்கு

சொந்தமாக்கி கொள்ள விரும்பிய சேர மன்னன் காரியிடம் கூற, **"முள்ளூர்"** மன்னன் காரிக்கும், ஓரிக்கும் போர் நடந்தன. ஓரி தன்னுடைய செல்வமிக்க நல்ல நாடுகளை கூத்தர்க்கு அளித்தவன்.

நல்லியக்கோடன் ஆட்சி காலத்தில் **எயிற்பட்டினம், வேலூர், ஆமூர், கிடங்கில், மாவிலங்கை** என்பவை சிறந்து விளங்கின.

"எயிற்பட்டினம்"- மதிலையுடைய பட்டினம் என்ற பொருளில் எயிற்பட்டினம் என வழங்கப்படுகிறது. அந்நெய்தல் நில மக்கள் உப்பு வாணிகம் செய்து மகிழ்ச்சியுடன் இருந்தனர். மக்களின் உணவு மீன் இறைச்சியாகும்.

"வேலூர்"- நல்லியக்கோடன் தன்பகைவரைக் கருதி அஞ்சி முருகனிடம் வேண்ட, முருகபெருமான் கனவில் தோன்றி **"கேணியிற் பூத்த பூவைப்பறித்து"** நின் பகைவர் மீது எய்க என கூற, அவ்வாறு அவனும் பூவை எடுத்து எறிந்தான். அப்பூ "வேலாக" மாறி பகைவரை அழித்தது. ஆதலால் "வேலூர்" என பெயர்பெற்றது. இவற்றை "நச்சர்" உரையால் அறிகிறோம்.

"திறல் வேல் நுதியின் பூத்த கேணி
விறல் வேல் வென்றி வேலூர் எய்தி" (அடி-172-173)

"வேலூர்" முல்லை நிலம் சார்ந்ததாகும். ஆடு, மாடு மேய்க்கும் ஆயர்குலத்தவர். அங்குள்ள மக்களின்உணவு புளிங்கறியிட்ட சோறும், ஆட்டிறைச்சியும் உண்டு. மக்கள் மகிழ்ச்சியுடன் இருந்தனர்.

"ஆமூர்" மருத நிலம் சார்ந்ததாகும். வளம் மிக்க வயல் சார்ந்த குளிர்ந்த ஊர் ஆமூராகும். அவ்வூர் மக்கள் குறைவு இல்லாத செல்வ செழிப்புடன் திகழ்ந்தனர்.

"அந்தணர் அருகா அருங்கடி வியல்நகர்
ஆம் தண் கிடங்கின் அவன் ஆமூர் எய்தின்" (அடி-187-188)

"ஆமூர்" மக்களின் உணவு வெண்மையான அரிசியால் ஆக்கிய வெண் சோறு, நண்டு கலவையுடன் உண்டு மகிழ்ந்தனர்.

"பழம் படு தேறல் பரதவர் மடுப்பக்
கிளை மலர்ப் படப்பைக் கிடங்கில் கோமான்" (அடி-159-160)

"கிடங்கில்" என்பது இப்போதைய **"திண்டிவனம்"** என அழைக்கப்படும் ஊராகும்.

பெரும்பாணாற்றுப்படையில் ஊர்கள்:

பெரும்பாணாற்றுப்படை **"கடியலூர்"** உருத்திரங்கண்ணனார் மன்னன் தொண்டைமான் இளந்திரயனை புகழ்ந்து பாடப்பட்டது. இளந்திரையன் நாட்டில் **"திருவேங்கடம்"** உள்ளதும், அம்மன்னன் திருமால் மீதுஅன்புடையவன் என்றும்இந்நூல் கூறுகிறது.

"நீர்ப்பெயற்று" என்பது **"நீர்ப்பாயல்துறை"** என்பதன் மரூஉ. இதனை **"தல சயனம்"** என்று வைணவர் உரைப்பர். "சல சயனம்" என்பதே "தல சயனம்"ஆயிற்று. சலம்-நீர், சயனம்-பாயல் படுக்கை. நீரிடையே திருமால் பள்ளி கொண்டிருக்கும் தலம் என்று பொருள். "நீர்ப்பாயல் துறையே".இன்றுள்ள **"மாமல்லபுரம்"** என்று அழைக்கப்படும் ஊர்.

"வைகுறு மீனின்பையத் தோன்றும்
நீர்ப்பெயற்று எல்லைப் போகி பாற்கேழ்" (அடி-318-319)

"நீர்ப்பெயல்துறை" பட்டினத்திலிருந்து இளந்திரையன் **"மூதூர்"** போகும் வழியில் மக்கள் பசியும், பிணியும், அறியாது வளம் மிக்க நாடு இளந்திரையனின் நகரமான **"காஞ்சி"** என்னும் ஊர். பசுமையான சோலைகள் நிறைந்த அடர்ந்தகாடுகளையும், பூங்கொத்துகளையும் வெயில் உள்ளே புகாதவாறான "காஞ்சியில்" உள்ள திருமாலின் **"திருவெஃகா"** இக்காலத்தில் **"திருப்பதி"** என்று அழைக்கப்படும் ஊராகும்.

மலைபடுகடாமில் ஊர்கள்:

மலைபடுகடாம் என்பதை கூத்தராற்றுப்படை என்றும் அழைக்கப்படும். கூத்தர்கள் மலை வழியே பத்து வகையான இசைக்கருவிகளை இசைத்துக் கொண்டு மன்னன் "நன்னன் வேண்மானை காணசெல்வதும், அதனிடையே உள்ள ஊர்களின் வளத்தை வியந்து பாராட்டி நன்னனை சென்று அடைகின்றனர். இதனை பாடியவர் **"பெருங்குன்றூர்"** பெருங்கௌசிகனார்ஆவார்.

நன்னனின் ஊர் **"மூதூர்"**. இவ்வூரில் மக்கள் திருவிழா போன்று கூட்டமாக திரண்டு ஆரவாரித்து செல்வ வளம் மிகுந்து விளங்கும் ஊரராகும்.

"பனி வார் காவின் பல் வண்டு இமிரும்
நனி சேய்த்தன்று அவன் பழ விறல் மூதூர்" (அடி-486-487)

நன்னனின் தலைநகரம் **"செங்கண்மா"** என்பதாகும். காலபோக்கில் **"செங்கம்மா"** என்று மருவியது. அவற்றை **"செங்கைமா"** என்றும் **"செங்கம்"** என்றும் கல்வெட்டுகளில் காணப்படுகிறது.

"சேயாற்றின்" ஒரு கரையில் செல்லும் நெறியில் நன்னன் ஊர்க்குப் போகும் வழி என்று கூறுகின்றனர். **"சேயாறு"** இன்று **"செய்யாறு"** என அழைக்கப்படுகிறது.

இவை **"சவ்வாது மலைத்"** தொடரின் வடக்கில் தோன்றித் தெற்கு நோக்கி மலைகளிலேயே பாய்ந்து வருகின்றது.

"துனை செலல் தலைவாய் ஓ இறந்து வரிக்கும்
காணுநர் வயாஅம் கட்கு இன் சேயாற்றின்" (அடி-475-476)

"சேயாறு" இன்று **"சண்முகநதி"** எனவும் அழைக்கப்படுகிறது.

நன்னனின் மலை **"நவிரமலை"** இம்மலையில் காரியுண்டிக் கடவுள் வீற்றிருக்கின்றார். காரியுண்டிக் கடவுள் நஞ்சை உண்ட சிவபெருமான் ஆவார்.

"பேர் இசை நவிரம் மேஎய் உறையும்
காரி உண்டிக் கடவுளது இயற்கையும்" (அடி-82-83)

"நவிரமலை" என்பது **"திருவண்ணாமலை"** வடமேற்கில் வாயு திக்கில் உள்ளது. இக்காலத்தில் **"திரிசூலகிரி"** **"பர்வதமலை"** என்ற பெயரில் வழங்குகிறது. இம்மலையில் இறைவன் **"காளகாண்டேசுவரர்"** வீற்றிருக்கின்றான். மலைபடுகடாம் பாடலில் **"குடகுமலை"** பற்றியும் குறிப்பிடப்படுகிறது.

ஆற்றுப்படையில் உள்ள ஊர்கள். நாட்டின் வளம், மக்களின் உணவு, ஊரின் சிறப்பு, மன்னனின் வீரம், கொடை, பண்பு, அந்த காலத்தில் உள்ள ஊர், இக்காலத்தில் அவ்வூரை அழைக்கும் விதம் கூத்தர் செல்லும் வழியின் இயல்பு முதலியவற்றை எடுத்தியம்பப்பட்டுள்ளது.

59. சங்க இலக்கியத்தில் ஊரால் பெயர்பெற்ற பெண்பாற் புலவர்கள்

சு. சுபாஷினி,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
காஞ்சி மாமுனிவர் பட்ட மேற்படிப்பு மையம்,
புதுச்சேரி – 605 008.

முன்னுரை:

சங்க காலத்தில் பல நிலைகளில் கூடி வாழ்ந்த மக்கள் சமூகத்தை நாடு, நகர், ஊர் எனப் பல கோணங்களில் அறிந்து கொள்ள முடிகின்றது. இது பற்றிய செய்திகள் அக்காலத்தில் தோன்றிய இலக்கியங்கள், கல்வெட்டுகள், செப்பேடுகள் போன்ற வரலாற்று ஆவணங்களில் குறிக்கப்பட்டிருப்பதும் அறியக் கிடக்கின்றன. இந்நிலையில் ஊர்ப் பெயர்கள் பல நிலைகளில் குறிப்பிடப்பட்டு புகழ் பெற்றிருப்பது உணரத்தக்கதாகின்றது.

ஊர்ப்பெயரோடு அங்கே பிறந்து வாழ்ந்த மக்கள், அரசர்கள், புலவர்கள் இவர்களைச் சிறப்பித்துப் போற்றப்படுவதும் காணக்கிடக்கின்றது. அவ்வகையில் சங்க இலக்கிய பெண்பாற் புலவர்களின் பெயர்கள் அவர்களின் ஊர் பெயரோடு சிறப்பித்துப் போற்றப்படுகின்ற கருத்தும் பெறப்படுகின்றது. எனவே ஊரால் பெயர் பெற்ற பெண்பாற் புலவர்களின் ஊர்கள் பற்றிய செய்திகளை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

சங்கப் பெண்பாற்புலவர்கள் அறிமுகம்:

சங்ககாலப் புலவர்களாக 473 பேரும், அவர்களில் 45-க்கு மேற்பட்ட பெண்பாற் புலவர்கள் இருப்பதும் தெரிய வருகின்றது. அவர்களில் பதின்மூன்று பேர் ஊரால் பெயர் பெற்ற பெண்பாற் புலவர்களாக கொள்ளப்படுகின்றனர். அவர்களின் பெயர்கள் அகரவரிசை நிலையில் பின்வருமாறு ஆராயப்படுகின்றது.

அஞ்சில் அஞ்சியார்:

சங்ககாலப் பெண்பாற் புலவர்களில் அஞ்சில் அஞ்சியார் நற்றிணையில் ஒரு பாடல் மட்டும் பாடியுள்ளார். 'அஞ்சி' என்பது இவருடைய இயற்பெயராகவும் 'அஞ்சில்' என்பது ஊர்ப் பெயராகவும் குறிக்கப்படுகின்றது. இப்புலவர் 'அஞ்சி' என்ற பெயரைக் கொண்டிருப்பதால் இவர் தகடூர் அதியமான் அஞ்சியின் உறவினராகவும் அல்லது ஊரினராகவும் இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. எனவே 'அஞ்சில்' என்பது குடிப்பெயரையோ ஊர்ப் பெயரையோ குறிப்பதாகக் கொள்ளப்படுகின்றது. இதனை,

"பூங்கண் ஆயம் ஊக்க ஊங்காள்
அழுதனள் பெயரும் அஞ்சில்" (நற்.90)

என வரும் பாடல் உறுதி செய்கின்றன. இந்நிலையில் இவர் பாடல் அடியால் பெயர் பெற்ற புலவராகக் குறிப்பட இடம் உள்ளது.

அள்ளூர் நன்முல்லையார்:

இவர் குறுந்தொகையில் ஒன்பது பாடலும், அகநானூற்றில் ஒரு பாடலும், புறநானூற்றில் ஒரு பாடலும் பாடியுள்ளார். நன்முல்லையார் என்பது இவருடைய இயற்பெயராகவும், 'அள்ளூர்' என்பது இவரின் ஊர்ப்பெயராகவும் குறிக்கப்படுகின்றது.

"ஒளிறு வாட்தானைக் கொற்றச் செழியன்
பிண்ட நெல்லின் அள்ளூர் அன்ன என்
ஒண்தொடி……" (அகம்.46)

என்ற அகநானூற்று பாடலிலும் திருவாலங்காட்டு கல்வெட்டுகளிலும் அள்ளூர் என்னும் ஊர் வழங்கியதாகக் குறிப்பிடப்படுகின்றது.

ஒக்கூர் மாசாத்தியார்:

இவர் அகநானூற்றில் இரண்டு பாடலும் குறுந்தொகையில் ஐந்து பாடலும் புறநானூற்றில் ஒரு பாடலும் பாடியுள்ளார். சாத்தி என்பது இவருடைய இயற்பெயராகவும் ஒக்கூர் என்ற பெயருடைய ஊர் பாண்டி நாட்டிலும் சோழ நாட்டிலும் உள்ளதாக கருதப்படுகின்றது. எனவே தாம் பிறந்து வாழ்ந்த ஊர்ப் பெயரோடு தம் இயற்பெயரையும் சேர்த்து ஒக்கூர் மாசத்தியார் என அழைக்கலாயினர். சாத்தன், சாத்தி என்ற பெயர்கள் அக்காலத்தில் மக்களிடையே பெருவழக்காக இருந்துள்ளன. மாசாத்தியார் பிறந்த ஒக்கூரில் தான் மாசாத்தனார் என்ற ஆண்பால் புலவரும் வாழ்ந்துள்ளதாக குறிப்பு காணப்படுகின்றது. இருவரும் ஏதேனும் ஒருவகையில் உறவுடையவராக இருக்கலாம் என்றும் கருத வாய்ப்பிருக்கின்றது.

கச்சிப்பேட்டு நன்னாகையார்:

இவர் குறுந்தொகையில் ஆறு பாடல்கள் பாடியுள்ளார். நன்னாகையார் என்னும் இயற்பெயர் கொண்ட இரண்டு பெண்பாற் புலவர்கள் உள்ளதைக் குறுந்தொகை குறிப்பிடுகின்றது. ஒருவர் கச்சிப்பேட்டு நன்னாகையார் எனவும், மற்றொருவர் நன்னாகையார் எனவும் பதிப்புகள் வழி காணப்படுகின்றது. இருவரும் ஒருவரல்லர் என்பதை வேறுபடுத்திக் காட்டவே ஒருவர் பெயர் முன் ஊர்ப் பெயரைச் சேர்த்து வைத்துக் கொண்டுள்ளனர் என்பது அறியப்படுகிறது.

கா. கோவிந்தன் காஞ்சி மாநகரை அடுத்த கச்சிப்பேடு என்றோர் ஊர் உள்ளது. ஒரு நகரத்தின் புறத்தே இக்காலத்துச் சந்தை போல நாள்தோறும் நிகழும் வணிக நிலையத்தைக் குறிக்க வழங்கிய 'பேட்டு' என்ற பெயர் இற்று "பேட்டை" எனத் திரிந்து வழங்கப்படுவது அறியத்தக்கது.

கா. கோவிந்தன் கூறுவதன் வாயிலாக நாகையார் வாழ்ந்த ஊர் கச்சிப்பேட்டு என்பது தெரியவருகிறது. ஊர்ப்பெயரோடு சேர்த்து இப்பெண்பாற்புலவர் கச்சிப்பேட்டு நன்னாகையார் என அழைக்கப்படுவது உணரத்தக்கது.

கழார்க்கீரன் எயிற்றியார்:

இவர் குறுந்தொகையில் இரண்டு பாடல்களும் நற்றிணையில் இரண்டு பாடல்களும் அகநானூற்றில் நான்கு பாடல்களும் பாடியுள்ளார். 'எயிற்றியார்' என்பது இயற்பெயராகவும் 'கழார்' என்பது இவரின் ஊர்ப்பெயராகவும் குறிக்கப்படுகின்றது.

"வளிபொரு நெடுஞ்சினை தளியொடு தூங்கி
வெல்போர்ச் சோழர் கழாஅரக் கொள்ளும்" (நற்.281)

என்ற நற்றிணை பாடல்கள் கழார் என்னும் ஊர் பெயரைக் குறிப்பிட்டுச் செல்கின்றார். பாடல் அடியால் பெயர் பெற்ற புலவராகக் குறிப்பிடுவதற்கு இப்பாடலில் வாய்ப்பு உள்ளது என்பதும் அறியத்தக்கது.

குமிழி ஞாழலார் நப்பசலையார்:

இவர் அகநானூற்றில் ஒரு பாடல் மட்டுமே பாடியுள்ளார். நப்பசலையார் என்ற இயற்பெயர் கொண்டவர்களினும் இவரை வேறுபடுத்தவே குமிழி ஞாழலார் என்ற சிறப்புப் பெயர் சேர்த்து கூறப்படுகின்றது. குழுமி என்பது இவர் வாழ்ந்த ஊர்ப் பெயராக இருக்கலாம் என்றும் கருதப்படுகிறது.

பூங்கணுத்திரையார்:

இவர் குறுந்தொகையில் இரண்டு பாடலும், புறநானூற்றில் மூன்று பாடலும் பாடியுள்ளார். உத்திரை என்பது இயற்பெயர். பூங்கண உத்திரையார் என அழைக்கப்பட்டார். பூங்கண் என்பது காவிரியாற்றின் வடகரையில் இருக்கும் ஓர் ஊர்ப் பெயராகவும் உள்ளது. அதனால் உத்திரையார் இவ்வூரினராக இருக்கலாம் எனவும் கொள்ளப்படுகின்றது.

மாறோக்கத்து நப்பசலையார்:

இவர் புறநானூற்றில் ஏழு பாடலும், நற்றிணையில் ஒரு பாடலும் பாடியுள்ளார். நப்பசலையார் என்பது இயற்பெயராகவும் 'மாறோக்கம்' என்பது இவரின் ஊர்ப் பெயராகவும் குறிக்கப்படுகின்றது. இவர் வாழ்ந்த ஊர்ப்பெயரோடு சேர்த்து மாறோக்கத்து நப்பசலையார் என அழைக்கப்பட்டது அறியப்படுகின்றன.

வெண்ணியக்குயத்தியார்:

இவர் புறநானூற்றில் ஒரு பாடல் மட்டுமே பாடியுள்ளார். குயத்தி என்பது தொழில் அடிப்படையாக வந்த பெயராகக் கொள்ளபடுகின்றது. வெண்ணி என்பது சோழ நாட்டுத் தஞ்சை வட்டத்திலுள்ள ஊரைச் சேர்ந்தவர். இப்புலவரை தம் ஊர் பெயரோடு சேர்த்து அழைக்க பெற்றதாக கருதப்படுகிறது.

"வெண்நோய் நின்னினும் நல்லனன்தே
கலிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை" (புறம்.66)

என்று இவர் பாடிய புறநானூற்றுப் பாடலில் 'வெண்ணி' என்றும் சொல் இடம் பெற்றதை அறியமுடிகின்றது.

வெண்மணிப்பூதி:

வெண்மணிப்பூதியார் பாடியதாகக் குறுந்தொகையில் ஒரு பாடல் மட்டுமே உள்ளது. 'பூதி' என்பதற்குச் செல்வம், கொடுமை, விபூதி எனப் பல பொருள் கொள்ளப்படுகின்றது. வெண்மணி என்பது அரியலூர் பக்கத்தில் உள்ள ஓர் ஊர் என்றும், வெண்மணிப் பூதியார் அவ்வூரைச் சார்ந்தவர் என்ற செய்தியும் உ.வே.சாமிநாதையர்ரால் குறிப்பிடப்படுகின்றது.

பொதுக்கயத்துக்கீரந்தை:

குறுந்தொகையில் ஒரு பாடலைப் பாடியவர் பொதுக்கயத்துக்கீரந்தை எனும் புலவராவார். இப்புலவரின் இயற்பெயர் கீரந்தை என்பதாகும். கீரந்தை என்னும் பெயருடைய வேறு புலவர்களும் இருப்பதனால் அப்புலவரிலிருந்து வேறுபடுத்திக் காட்ட பொதுக்கயத்துக் கீரந்தை என்ற அடை சேர்க்கப்பட்டு இருத்தல் கூடும். பொதுகயம் என்பது ஊரில் உள்ள மக்களின் பயன்பாட்டிற்குரிய ஊர் குளம் என்று பெயர் பெற்றாலும் கயம் என்ற பெயர் ஊர்ப்பெயராகவும் இருக்கலாம் என்று கருத இடமுண்டு. ஆகையால் புலவரின் பெயரோடு ஊர்ப் பெயரையும் சேர்த்து பொதுக்கயத்துக் கீரந்தை என்று அழைக்கப்படுகிறார்.

பொதும்பில் புல்லாளங்கண்ணியார்:

குறுந்தொகையில் ஒரு பாடலை பாடியவர் பொதும்பில் புல்லாளங்கண்ணியார் எனும் புலவர் ஆவர். இப்புலவரின் இயற்பெயர் கண்ணியார் என்பதாகும். பொதும்பு என்பது நிலத்தைக் குறிப்பதாக அமைகின்றது. பொதும்பில் புல்லாளம் என்பது புல்லாளம் என்ற ஊரினைக் குறிக்கிறது. இவ்வூர் பெயரோடு கண்ணியார் சேர்க்கப்பட்டு புலவர் அடையாளப்படுத்தப்படுகிறார்.

முள்ளியூர் பூதியார்:

அகநானூற்றில் ஒரு பாடலை மட்டுமே பாடியவர் முள்ளியூர் பூதியார் எனும் புலவர் ஆவர். இப்புலவரின் இயற்பெயர் பூதியார் என்பதாகும். இவரது பெயர் ஊர்ப்பெயரோடு சேர்த்து முள்ளியூர் பூதியார் என அழைக்கப்படுகின்றது. மலையமான் திருமுடிகாரியின் ஆட்சிக்குட்பட்ட ஊராகவும் முள்ளியூர் திகழ்ந்தது. இவரும் ஊரால் பெயர் பெற்ற பெண்பாற் புலவராக கருதப்படுகின்றது.

முடிவுரை:

ஊரால் பெயர் பெற்ற பெண்பாற் புலவர்கள் என்ற கட்டுரையின் வழி பெறப்பட்ட முடிவுகள் பின்வருமாறு:

- அஞ்சில் அஞ்சியார் என்கிற புலவர் நற்றிணை பாடல் அடியாலும் பெயர் பெற்ற புலவர் என்பது குறிப்பிடத்தக்கது.
- அள்ளூர் நன்முல்லையார் என்ற புலவரின் சிறப்பு திருவாலங்காட்டுக் கல்வெட்டுகளில் அள்ளூர் என்னும் ஊர்ப் பற்றிய செய்திகள் சிறப்பாக கூறப்படுகின்றது.
- ஒக்கூர் மாசத்தியார் என்ற புலவர் தாம் பிறந்த வாழ்ந்த ஊர்ப்பெயரோடு தம் பெயரையும் சேர்த்து அழைக்கப்பட்டதாக கூறப்படுகின்றது.
- வெண்ணிகுயத்தியார் என்ற புலவர் மண்பாண்டம் செய்யும் குயவர் குடியில் பிறந்ததால் அவரையும் தொழிலால் பெயர் பெற்ற புலவர் என்று கூறலாம்.
- கழார்கீரன் எயிற்றியார் என்ற புலவர் பார்ப்பாருக்கு உரிய குலப்பெயரால் அழைக்கப்பட்டும் கழார் என்ற ஊர்ப் பெயர் சேர்க்கப்பட்டும் இலக்கியங்களில் காணப்படுகின்றார்.
- மாறோகத்து நப்பசலையார் என்ற புலவர் பசலையைச் சிறப்பித்துப் பாடியதால் பசலையார் என்றும், இவர் வாழ்ந்த ஊர்ப் பெயரோடு சேர்த்து வழங்கியதால் மாறோகத்து நப்பசலையார் என்று கூறுவதாக அமைந்துள்ளது.

பார்வை நூல்கள்:

1. அகநானூறு - புலவர் இரா. இளங்குமரன்
2. குறுந்தொகை மூலமும் உரையும் - உ.வே.சாமிநாதையர்
3. சங்கத் தமிழ் புலவர் வரிசை பகுதி-2 - கா. கோவிந்தன்
4. நற்றிணை மூலமும் விளக்கவுரையும் - சு. துரைசாமிப் பிள்ளை
5. புறநானூறு - புலவர் இரா. இளங்குமரன்
6. மகடூஉ முன்னிலை - தாயம்மாள் அறவாணன்

60. பெரியபுராணத்தில் ஊர்ப்பெயர்கள்

இரா.சுமதி.
உதவிப்பேராசிரியர் - தமிழ்த்துறை
தாசீம்பீவீ அப்துல்காதர் மகளிர் கல்லூரி
கீழக்கரை, இராமநாதபுரம் மாவட்டம்.

ஆதிமனிதன் ஒரே இடத்தில் கூட்டமாக வாழ்ந்த போது ஊர்ப்பெயர் தோற்றம் பெற்றிருக்க வாய்ப்பில்லை. என்று இடம் விட்டு இடம்பெயரத் தொடங்கினானோ அப்போதே இரு இடங்களையும் வேறுபடுத்திக்காட்டும் நிலையில், அம்மக்கள் வாழ்பகுதிகள் ஊர், பாடி, சேரி என்ற பெயர்களாலும் அதன் இணைப்பு நகர், நாடு என்ற பெயர்களாலும் சுட்டப்பட்டன. இடைக்கால இலக்கியமான பக்தி இலக்கியத்தின் வழி எண்ணற்ற ஊர்களை அறிய வாய்ப்புள்ளது. ஊர்தோறும் சென்று இறையடியார்கள் இறைவனைப் பாடும் நிலையில் பல ஊர்களின் பெயர்களும் கோயில் உள்ள ஊர்களின் பெயர்களும் தெரியவருகின்றன. அடியவர்களின் வரலாற்றைக் கூறுமிடத்து அவர்கள் பிறந்த இடம், சென்ற இடம் பற்றியும் அறிய முடிகிறது. பெரியபுராணத்தின் வழி ஊர்ப்பெயர்களை அறிவது இக்கட்டுரையின் நோக்கம்.

காரைக்கால்:

காரைக்கால் அம்மையார் பிறந்ததால் பெருஞ்சிறப்பு பெற்றுத்திகழும் ஊர்.

"கூனல் வளை திரை சுமந்து கொண்டேறி மண்டு கழி
கானல் மிசை உலவு வளம் பெருகு திருக்காரைக்கால்"(பெரிய 30-1)

இவ்வூர் காரைச்செடிகள் மிகுதி காரணமாக இப்பெயர் பெற்றிருக்கக் கூடும். காரைக்காயல் என்பது காரைக்கால் என்றாயிற்று. காரைக்கால் அம்மையார் தம் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகத்தில் 'காரைக்காற் பேய்' எனக் குறிப்பிடுவதால், அவர் காலத்திலும் "காரைக்கால்" என்ற பெயரே அமைந்திருந்தது என்பதை அறியலாம்.

இளையாங்குடி:

சேக்கிழார் இளையான்குடி மாற நாயனார் புராணத்தில்,

"இம்பா ஞாலம் விளக்கினார் இளையான் குடிப்பதிமாறனார் (1-10-1)

எனக் குறிப்பிடுகிறார். இளையான்குடி என்றதொரு ஊரினை, குலோத்துங்க சோழர் கல்வெட்டு சுட்டுகிறது.

வில்லிபுத்தூர்:

ஸ்ரீவில்லிபுத்தூர் என அழைக்கப்படும் இவ்வூர் இன்று இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ளது. திருமால் கோயில் பெருமை பெற்றது. இறைவனது சாபத்தால் வேடனாகப் பிறந்த முனிவர் வில்லி. பரந்தாமன் வில்லியினது கனவில் தோன்றி, இந்தக் காட்டை அழித்து நகரம் ஆக்கு, பாண்டிய, சோழ நாட்டு அந்தணர்களைக் கொண்டு வந்து குடியேற்று எனச் சொல்ல வில்லிக்காடு திருத்தி நாடாக்கிய நகரம் தான் வில்லிப்புத்தூர் என்று குறிக்கப்படுகிறது. பெரியாழ்வாராலும், ஆண்டாளாலும் பாடப்பெற்ற தலம் இது.

"செருவிலி புத்தூர் மன்னும் சிவ மறையோர் திருக்குலத்தார்
அருவரை வில்லாளி தனக்க கத்தடிமையாம்" (பெரிய 62-1)

எனச் சேக்கிழார் புகழ்த்துணை நாயனார் பிறந்த இடமாக செருவிலிபுத்தூர் என்ற இடத்தை சுட்டுவர். இவை இரண்டும் வேறு வேறு ஊராகும். ஆனால் ஒரே காலத்தவை. ஆதலால் மருவி வழங்கியிருக்கலாம் என எண்ணக்கூடும்.

மங்கலம்:

பெரியபுராணம் சுட்டும் ஊர். இன்று தஞ்சாவூர் மாவட்டத்தில் திருமங்கலம் என்ற பெயரால் வழங்கப்படுகிறது. மழநாட்டில் உள்ள ஒரு ஊராக இது இருந்தது என்பதனைச் சேக்கிழார்,

"பொங்கரில் வண்டு புறம்பலை சோலைகள் மேலோடும்
வெங்கதிர் தங்க விளங்கிய மேன் மழ நன்னாடாம்

அங்கது மண்ணின் அருங்கலமாக அதற்கேயோர்
மங்கலமானது மங்கலமாகிய வாழ் மூதூர்(30-7)

எனச் சுட்டுகிறார். கோயில் பற்றிய வரலாறு எதுவும் தெரியவில்லையாயினும் , இன்று திருமங்கலம் என்று சுட்டப்படுவதால் கோயில் இருந்திருக்கலாம் என அறிய வாய்ப்புள்ள செல்வம் மிக்க ஊர் எனவும் குறிப்பிடுவர்.

வேற்காடு:

திருவேற்காடு என, செங்கற்பட்டு மாவட்டத்தில் இருக்கும் ஊர் இது. சிவன் கோயில் சிறப்பு பெற்றது. இன்று கருமாரியம்மன் கோயில் காரணமாக பெரும் புகழுடன் திகழ்கிறது. தலமரம் 'வேலமரம்' என அறியும் போது, வேலமரங்கள் மிகுதி காரணமாக இப்பெயர் அமைந்துள்ளது. காடுவெட்டியாறு என்ற பழைய பாலாற்றங்கரையில் உள்ளது இத்தலம்.

" பன்மணிகள் பொன்வரன்றி அகிலும் சந்தும்
பொருதலைக்கும் பாலிவட கரையில் நீடு
சென்னிமதி அணிந்தவர், திருவேற்காடு சென்று
அணைந்தார் திருஞான முண்டசெல்வர்(பெரிய 34-1029)

என சேக்கிழார் குறிப்பிடுகிறார்.

பனையூர்:

திருப்பனையூர் என்ற இத்தலம் இன்று தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ளது. பனை காரணமாக எழுந்தது இவ் ஊர்ப்பெயர். தலமரமும் பனையாக அமைகிறது.

" வளமல்கிய சீர்த் திருப்பனையூர்" (பெரிய-ஏயர்,54)

எனச் சேக்கிழார் சுட்டுகிறார்.

அண்ணாமலை:

திருநாவுக்கரசர், ஞானசம்பந்தர், மாணிக்கவாசகர், சேக்கிழார் போன்றோரால் பாடப்பெற்ற திருத்தலம். இன்றும் இதன் பெருமை குன்றாது வடஆர்க்காடு மாவட்டத்தில் உயர்ந்ததொரு மலையையும், கோயிலைறும் தன்னுட் கொண்டு திகழ்கிறது.

பிரம்மாவும், விஷ்ணுவும் அடி, முடி காண இயலாத நிலையில், அழலுருவாக நின்றான் சிவன். விஷ்ணு தன் தோல்வியை ஒப்புக்கொண்டதை மெச்சி அவருக்குத் தன் அடியையும் முடியையும் காட்டுகிறார். அதற்காக அழல் உருவில் இருந்த இறைவன் மலையுருவில் குறுகுகிறார். அப்படிப் பொங்கழல் உருவினனாக இருந்த இறைவனே அண்ணாமலையாக மாறி நின்றார் என தலவரலாறு கூறுகிறது. உயர்ந்தவனாகிய இறைவன் இருக்கும் மலை, அண்ணாந்து பார்க்கும் அளவிற்கு உயர்ந்த மலை என்னும் பொருளில் பெயர்பெற்றது.

"அண்ணாமலை அங்கு அமரர் பிரான்
வடிவு போல் தோன்றுதலும்(34-970)

எனப் பெரியபுராணத்தில் சேக்கிழார் இறைவனின் உயர்வுக்கு இவ்வூரை ஒப்பிடுகிறார்.

நாவலூர்:

இன்று தென்ஆற்காடு மாவட்டத்தில் திருநாமநல்லூர் என்ற பெயரால் சுட்டப்படுகிறது. சுந்தரர் பிறந்த ஊர். அவரால் பதிகம் பெற்ற சிறப்புடையது.சேக்கிழார்,

"மருவிய தவத்தால் மிக்க வளம்பதி வாய்மை குன்றா
திருமறையவர்கள் நீடும் திருநாவலூராம் அன்றே"(6 :2-4)

என இவ்வூரினைக் குறிப்பிடுகிறார். நாவல் மரங்கள் மிகுந்திருந்ததன் காரணமாகவும், நாவல் மரம் தலமரம் என்பதாலும் இப்பெயர் அமையலாம்.

ஒற்றியூர்:

திருவெற்றியூர் என்னும் பெயராக, செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ளது இவ்வூர். தேவாரமூவராலும் பாடப்பட்டது. கடற்கரை அருகேயுள்ள ஊர் என்பதனை,

"உருவேற்றார் அமர்ந்துறையும் ஒதவேலை ஒற்றியூர் "(34-1030)

எனவும், 'ஒற்றி நகர்' எனவும் சுட்டுகிறார். ஒற்றியாக நிலத்தை வைத்த பின்னர் மீட்டதன் காரணமாக ஒற்றியூர் எனப் பெயர் பெற்றிருக்கலாம் என்பர்.

ஆரூர்:

திருவாரூர் என தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ளது இவ்வூர். திருவாரூரை மனுநீதி சோழன் ஆண்டான் என்பது குறிப்பு. சங்ககாலத்தே இவ்வூர் சிறப்புடன் திகழ்ந்துள்ளது. ஆரூர் என்ற பெயரை நோக்கின் இது ஆத்தி மரங்கள் நிறைந்த ஊராக இருக்கலாம் எனத் தோன்றுகிறது. இவ்வூரின் பழமையையும்,சிறப்பையும்,

"சொன்ன நாட்டிடை தொன்மையில் மிக்கது
மன்னு மாமலராள் வழிபட்டது
வன்னியாறு மதிபொதி செஞ்சடைச்
சென்னியார் திருவாரூர்த் திருநகர்(பெரிய: 4-1)
"காதன் மங்கை யிதயகமலமாம்
மாதொர் பாகனார் ஆரூர் மலர்ந்ததால் (பெரிய: 2-33)

என சேக்கிழார் இவ்வூரைப்பற்றி உரைக்கிறார்.

சண்டியூர்:

சேக்கிழார் பெரியபுராணம் காட்டும் ஊர். கழறிற்றறிவார் புராணத்தில்,

"மின் பரப்பும் சடையண்ணல் விரும்பும் திருச்சண்டியூர்(130)

எனக் காவிரிக் கரைத்தலங்களை வணங்கி, திருச்சண்டியூர் சென்ற நிலையைச் சுட்டும் தன்மை இதனைச் சோழ நாட்டு தலமாக எண்ணச் செய்கிறது. சண்டீஸ்வரர் என்ற இறைப்பெயரால் இப்பெயர் அமைந்திருக்கலாம் எனத் தோன்றுகிறது.

மயிலாடுதுறை:

மாயூரம் என்றும் மாயவரம் என்றும் பிற்காலத்தில் வழங்கப்பட்டு வந்த மயிலாடுதுறை இன்று திரும்பவும் தன் பழம்பெயரைப் பெற்று இலங்குகிறது. தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ளது. மயில்கள் மிகுதியாக இருந்தமை இப்பெயருக்குக் காரணமாகலாம். எனினும் பக்தியுணர்வு, இறையோடு இப்பெயரை இணைக்கச் செய்து, கதைகளையும் இவ்வூருக்கென்று உருவாக்கி விட்டிருக்கக் காண்கிறோம். அவற்றுள் அம்மை மயிலாய் ஆடிய துறைதான் மயிலாடுதுறை. பெரியபுராணம் இவ்வூரினை,

"வாலி சூழ் திருமயிலாடுதுறை
மல்கு தண்டனை மயிலாடுதுறை (34- 437-438)

எனச் சுட்டுகிறது.

அன்னியூர்:

இன்று பொன்னூர் என்று சுட்டப்படும் தலம் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ளது. அன்னிகுடி என்ற ஊரும் இம்மாவட்டத்திலுள்ளது. இதனை அன்னி என்ற குறுநில மன்னனோடு தொடர்புபடுத்துவர். இப்பெயரைப் போன்று அன்னியூரும் அமைந்திருக்கலாம்

"எய்தி போந்தன்னியூர் சென்று போற்றி" (பெரிய: 34-289)

எனக் குறிப்பிடுகிறார்.

பந்தனை நல்லூர்:

பந்தனை நல்லூர் என்று இன்று சுட்டப்படும் இவ்வூர். தஞ்சாவூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. அம்பிகை ஆடிய பந்து வந்து அணைந்ததால் பந்தணை நல்லூர் எனப் பெயர் பெற்றது. சம்பந்தர், அப்பர் இருவருமே தமது பதிகத்தில் பந்தணைநல்லூர் என்றே குறிப்பிடுகின்றனர்.

சேக்கிழார்,

"பாங்கு பந்தணை நல்லூர் (பெரிய: 33-250-2)
"பருக்கை வரை யுரித்தார் தம் பந்தணை நல்லூர் (34-289-3)

எனச் சுட்டிக் காட்டுகிறார்.

முனைப்பாடி:

முனைப்பாடி நாடு என்பது பல ஊர்களைத் தன்னகத்தே கொண்டு திகழ்ந்தது. இதனை சேக்கிழார்,

"சென்னி மதிபுனைய வளர் மணிமாடச் செழும்பதிகள்
மன்னி நிறைந்துளது திருமுனைப்பாடி வளநாடு" (27-2-1.4)

எனப்பாடுகிறார். அப்பர் பிறந்த திருவாமூர் இந்நாட்டில் உள்ள ஊரே. இன்று தென்ஆர்க்காடு மாவட்டத்தை சார்ந்தது. முனைப்பாடி நாடும் தென்ஆர்க்காடு மாவட்டப்பகுதியாக இருந்திருக்க வேண்டும்.சுந்தரர் பிறந்த திருநாவலூரும் இந்நாட்டைச் சேர்ந்தது என்பது தெரியவருகிறது.

சோற்றுத்துறை:

திருச்சோற்றுத்துறை என்பது தஞ்சாவூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. ஆற்றின் கரையில் கோயில் இருக்கிறது. இக்கோயிலைப் பாடியோர் சம்பந்தர், அப்பர், சுந்தரர் மூவருமாவர். பெரியபுராணத்தில்,

"துனை புனற் பொன்னித் திரைவலம் கொள்
சோற்றுத்துறை தொழச் சென்றடைவார் (பெரிய 34-353)

எனக் குறிப்பிடுகிறார். சோற்றுத்துறை என்பதை ஆராயின், இதுத் தாவரம் தொடர்பான பெயர். துறை என்பது பொதுக்கூறு நிலையில் உணரக்கூடிய ஒன்று. சோறு நிரம்பிய அல்லது நிறைந்த துறை என்னும் பொருளில், 'கத்தாழை' என்றதொரு செடியின் இலையில் இருக்கும் உட்பகுதியை சோறு என்று சுட்டும் தன்மை இன்று வரை அமைகிறது. எனவே சோறு நிரம்பிய அதாவது தாழை நெருங்கிய துறையாக இது அமைந்திருக்கலாம் எனத் தோன்றுகிறது. பின்னர் இறைச்சிறப்பாக 'திரு' என்னும் அடைமொழி பெற்று திருச்சோற்றுத்துறை என்றாயிற்று.

மருகல்:

திருமருகல் என்று வழங்கப்படும் இவ்வூர். தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ளது. கோச்செங்கட்சோழன் கட்டிய மாடக்கோயில்களுள் இதுவும் ஒன்று. மருகல் நாடு சோழநாட்டைச் சார்ந்தது என்பதும் பல ஊர்களைத் தன்னகத்தே கொண்ட மருகல் ஒரு சிறந்த நாடாக விளங்கியது. இவற்றுள் ஒன்றுதான் தஞ்சை என்ற ஊர் என்பதும் தெளிவாகிறது. இக்கருத்தை பெரியபுராணம்,

தெள்ளும் திரைகள் மதகு தொறும் சேலும் கயலும் செழு மணியும்
தள்ளும் பொன்னி நீர்நாட்டு மருக மாட்டுத்தஞ்சாவூர் (61-1)

என்றியம்புகிறது. மருகல் என்பது ஒரு வகை வாழை இது கல்வாழை எனவும் வழங்கப்படுகிறது. இதன் தல விருட்சம் வாழை என்பதும் மருகல் வாழை காரணமாகப் பெயர் பெற்ற ஊர் எனத் தெரியவருகிறது.

நீடூர்:

நீடூர் என்று இன்றும் சுட்டப்படும் இவ்வூர் தஞ்சாவூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. அப்பர், சுந்தரர் பாடல் பெற்ற தலம். இக்கோயில் தலமரமாக மகிழமரம் அமைகிறது. இதன் காரணமாக மகிழாரண்யம், மகிழவனம் எனப் பிற பெயர்களும் இதற்கு அமைகின்றன. ஊழிக்காலத்தும் அழியாது நீடித்திருக்கும் தலமாதலின் இப்பெயர் பெற்றது என்கிறார் சுந்தரர்.

சேக்கிழார் இதனை,

"ஆறு பெருகி வெள்ளி மிகும் அள்ளல் வயலின் மள்ளருழுஞ்
சேறு நறுவா சங்க மழுஞ் செல்வ நீடூர் திருநீடூர் (பெரிய 58-1)

எனச் சுட்டுகிறார். இதனை நோக்கின் பழமையான ஊர் என்பதும் மக்கள் ஊரின் செழிப்பு காரணமாக நீண்டகாலம் குடியிருப்பாகக் கொண்ட ஊர் என்ற நிலையில் நீடூர் என்று பெயர் பெற்றது என்பர்.

உடுப்பூர்:

கண்ணப்பநாயனார் புராணத்தில் கண்ணப்பரின் பிறந்த இடம் பற்றிப் பேசுகையில் சேக்கிழார், பொத்தப்பி நாட்டில்,

இத்திருநாடு தன்னில் இவர் திருப்பதி யாதெனில்
நித்தில அருவிச் சாரல் நீள் வரை சூழ்ந்த பாங்கர்
மத்த வெங்களிற்றுக் கோட்டு வன் தொடர்வேலி கோலி
ஒத்த பேரரணம் சூழ்ந்த முதுபதி உடுப்பூராகும்(16-2)

எனப் பதியின் தன்மை உரைக்கிறார். 'குன்றவர் அதனில் வாழ்வர்' என்று அடுத்த பாடலில் கூறுவதால், இது மலைப்பகுதி என்பது தெளிவாகும். எனவே அரணம் சூழ்ந்த முதுபதி ஆகையால் உடுப்பூர் என்ற பெயர் அமைந்திருக்கலாம், அல்லது மலையில் வாழும் உடும்புகள் நிறைந்த பகுதியாக இருக்கலாம் என்பதால் அறியலாம்.

நின்ற ஊர்:

'திருநின்ற உர்' என அழைக்கப்படும் இவ்வூர். இன்று செங்கல்பட்டு மாவட்டத்தில் அமைந்துள்ளது. திருமங்கையாழ்வார் இங்குள்ள திருமாலைப் புகழ்ந்து பாடுகிறார். சேக்கிழார் தமது பெரியபுராணத்தில் பூசலார்நாயனார் பற்றிக் குறிப்பிடும் போது,

குலமுதற் சீலமென்றும் குறைவிலா மறையோர் கொள்கை
நிலவிய செல்வ மல்கி திகழ் திருநின்ற ஊராம் (பெரிய-2)

என்று அவர் பிறந்த ஊரினைக் குறிப்பிடுகிறார். இந்நிலையில் வைணவக் கோயிலுடன், பழமை மிக்க செல்வம் பொருந்தியதொரு ஊர் என்பது விளக்கமாக அமையும்.

முடிவுரை:

வாழும் நிலங்களுக்கு ஏற்ப, சூழலுக்கு ஏற்ப, சிந்தனைக்கு ஏற்ப, ஊர் பெயர்கள் வேறுபட்டன. இன்று வேறுபட்டு அமைகின்றன. காலந்தோறும் புதிதாகத் தோன்றி மறைந்து, அழியாமல் நின்று மருவியும் இப்பெயர்கள் வழக்கில் உள்ளன. இப்பெயர்கள் வரலாற்றுச் சிந்தனைகளைத் தரும் நிலையில் சிறந்ததொரு வரலாற்று மூலமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

61. சுவடுகள் சுட்டும் ஊர்ப்பெயர்கள்

சே.செந்தமிழ்ப்பாவை
இணைப் பேராசிரியர்,
தமிழ்த்துறை, அழகப்பா பல்கலைக்கழகம்,
காரைக்குடி.

சுவடுகள் என்னும் புதினம் இரா.பாலசுப்பிரமணியன் அவர்களால் படைக்கப்பட்டதாகும். காந்தியக் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட இப்புதினத்தில் ஆசிரியர் கொடிக்குளம், செங்குளம், பாளையம்பட்டி, நடுவப்பட்டி, சிறுமலை, நல்லூர், பெரியமங்கலம், மதுரை, வேதாரண்யம் என்ற ஒன்பது ஊர்களின் பெயர்களைப் படைத்துள்ளார். இப்பெயர்கள் கற்பனைப் பெயர், வழக்கில் உள்ள உண்மைப் பெயர் என்னும் இருநிலைகளில் அமைந்துள்ளன. இதில் வழக்கில் உள்ள பெயராகிய வேதாரண்யம் குறித்து விளக்குவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கற்பனைப் பெயர்கள்

படைப்பாசிரியரின் கதைக் களத்திற்கு ஏற்ற வகையில் சில ஊர்களைக் கற்பனையாகப் படைப்பதுண்டு. அப்பெயர்களும் உண்மையாக உள்ள ஊர்ப்பெயர்களின் அடிப்படையில் பெருமளவு அமையும். சான்றாகச் சுவடுகள் நாவலில் உள்ள கொடிக்குளம், செங்குளம் போன்றவை "கருங்குளம்" என்னும் ஊர்ச்சாயலை உடையன. நீரைக் கொண்டே மக்கள் தம் வாழ்க்கையை அமைத்துக்கொள்வர். எனவே, மக்களின் வேளாண்மைக்கு உதவும் நீராதாரமாகிய குளங்களை அடிப்படையாகக் கொண்டு அதன், நிறம், அளவு. தன்மை போன்றவற்றால் பெயர் அமைக்கும் முறையைப் பின்பற்றினர். அவ்வகையில் அமைந்ததே செங்குளம், கொடிக்குளம் போன்ற ஊர்ப்பெயர்கள்.

பட்டி

பட்டி என்னும் சொல் முல்லை நிலத்து ஊர்களைக் குறிக்கும். எனவே, மலையடிவாரத்தில் உள்ள முல்லைநிலத்து ஊர்களைக்குறிக்க ஆசிரியர் பாளையம்பட்டி, நடுவப்பட்டி போன்ற பெயர்களைக் கையாண்டுள்ளார்.

மலை

தமிழ் இலக்கிய மரபில் மலை என்னும் சொல் ஓங்கி உயர்ந்த வரையைக் குறிக்கும். மலையில் சிறியது, சிறுமலையாயிற்று. எனவே சிறுமலை தன் தோற்றத்தால் பெற்ற பெயராகும்.

நல்லூர்

தமிழகத்தில் இறைவன், அரசர் தம் பெயர்கள், விருதுகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு நல்லூர் என்னும் ஊர்ப்பெயர்கள் அமைக்கப்பட்டுள்ளன. சுவடுகளில் இடம்பெற்றுள்ள 'நல்லூர்' எல்லா நலனும் நிறைந்த ஊர், நன்மை தரும் ஊர் என்னும் பொருளில் ஆளப்பெற்றுள்ளது.

மங்கலம்

மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன் நன்கலம் நன்மக்கட்பேறு என்பர் வள்ளுவர். எனவே மங்கலம் என்னும் சொல் நன்மையைக்குறிக்கும். மன்னர்கள் உருவாக்கிய ஊர்களில் 'மங்கலம்' என்னும் பெயர் இடம் பெற்றுள்ளது. இதனடிப்படையில் 'பெரியமங்கலம்' என்னும் ஊர்ப்பெயர் அமைந்துள்ளது.

உண்மைப் பெயர்கள்

மதுரை, வேதாரண்யம் என்னும் ஊர்கள் இன்றும் வழக்கிலுள்ள உண்மைப் பெயர்கள் ஆகும். இதில் வேதாரண்யம் என்னும் ஊர் குருசாமித்தாத்தா என்னும் பாத்திரம் காந்தியடிகளின் ஆணையை ஏற்று உப்புச் சத்தியாக்கிரகம் நடத்திய இடமாக நாவலில் சுட்டப்படுகிறது. இவ்வூர்ப் பெயர் காலந்தோறும் மாறுபட்டு வந்துள்ளது.

வேதாரண்யம்

இது தற்பொழுது நாக்பட்டினம் மாவட்டத்தில் அமைந்துள்ளது. வேதம்+ஆரண்யம்=வேதாரண்யம். இது தமிழில் திருமறைக்காடு என வழங்கப்படுகிறது. காட்டைக் குறிக்கும் வடசொற்கள் வனம், ஆரண்யம் என்பனவாகும். கம்பராமாயணத்தில் உள்ள 'ஆரண்ய

காண்டம்' என்னும் பெயர் இவ்விடத்தில் சுட்டத்தக்கது. தமிழகம் முழுவதும் உள்ள ஊர்கள், இறைவன், இறைவி திருப்பெயர்கள் போன்றவை சமற்கிருத மயமாக்கப்பட்டபொழுது இவ்வூரும் இப்பெயர் பெற்றது. இதன் முந்தைய பெயர் திருமறைக்காடு என்பதாகும்.

திரு+மறை=காடு இதில் திரு என்பது உயர்வு கருதிய சொல் மறை-வேதம், காடு-ஆரண்யம் இதனால் திருமறைக்காடு என்னும் பெயரே வேதாரண்யம் என மருவி வழங்கப்பட்டுள்ளது என்பது புலனாகும்.

திருமறைக்காடு

மறைக்காடு என்னும் இவ்வூர் பற்றி முதன்முதலில் ஞானசம்பந்தர் தேவாரத்தில் குறிப்பு உள்ளது. ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவரும் திருமறைக்காடு என்னும் பெயருடைய பதிகங்களில் அவ்வூரிலுள்ள இறைவனாகிய மறைக்காட்டீசரையும், இறைவியாகிய யாழைப்பழித்த மொழியம்மையையும் போற்றியுரைக்கின்றனர். இதில் ஞானசம்பந்தர் திருமறைக்காட்டை "மலை போன்ற மதில்கள் சூழ்ந்த மறைக்காடு (திருஞா.தே.228) இருண்ட மேகம் போன்ற பொழிலையுடைய மறைக்காடு (திருஞா.தே.230) வண்டுகள் ரீங்காரம் செய்யும் மறைக்காடு (திருஞா.தே.234) என்று பாராட்டியுரைப்பர்.

திருநாவுக்கரசர் திருமறைக்காட்டுப் பதிகத்தில், உமாதேவியாரை உடனாகக் கொண்டு மணவாளத்திருக்கோலத்தில் வீற்றிருக்கும் சிவபெருமான் என்று பொதுப்பட இறைவனை மட்டும் பாராட்டியுரைப்பர்.

சுந்தரர்,

வாழைக்கனி கூழைக்குரங்கு, உண்ணும் மறைக்காடு (சு.தே.719)
மகரத்தொடு சுறவங் கொணர்ந்து, எற்றும் மறைக்காடு (சு.தே.720)
வலம்புரியோடு சலம், சலம் கொணர்ந்து, எற்றும் மறைக்காடு (சு.தே.726)

என்று கடல்வளம் சார்ந்தது என மறைக்காட்டைச் சிறப்பிக்கிறார். இதனால் சமயக்குரவர் மூவர் பாடல்களிலும் இவ்வூர் திருமறைக்காடு என்றே குறிப்பிடப்பட்டுள்ளமை புலனாகும். மேலும் இவ்வூர் வேதங்கள் வந்து வணங்கிய பெருமையுடையது, வேதங்களால் அடைப்பட்ட திருக்கோயில் கதவுகளைத் திறக்கவும், மூடவும் நாவுக்கரசரும், ஞானசம்பந்தரும் பாடிய சிறப்புடையது என்றும் புகழ்ந்துரைக்கப்பெறுகிறது. வரலாற்றில் கி.பி.6முதல் கி.பி.12 வரை சைவசமயம் எழுச்சி பெற்றிருந்த காலமாகும். புறச்சமயத்தாக்கத்திலிருந்து மக்களை விடுவிக்க இறையடியார்கள் ஒவ்வொர் ஊராகச் சென்று சைவசமயத்தின் பெருமைகளையும், சிவபெருமானின் சிறப்புக்களையும் எடுத்தோர்தத் தலைப்பட்டனர். இதன் விளைவே வேதங்கள் வழிபட்ட சிறப்புடையது என்னும் கருத்தில் மறைக்காடு என்றுரைக்கத் தொடங்கியதாகும்.

வேதங்கள் வழிபடுதல் என்பது இயற்கைக்கு மாறானது. எனவே மறைக்காடு என்னும் பெயர் விளக்கம் சமயநோக்கோடு கூறப்பட்டுள்ளமை தெளிவாகும். இதற்கு மாறாக 'மரைக்காடு' என்தில் உள்ள வல்லின 'ற' கரத்திற்குப் பதில் இடையினமாகிய 'ர' என்பதை இட்டால் மரைக்காடு என்று பொருள் வரும். 'மரை' என்பது மானைக் குறிக்கும். மரைக்காடு என்பதற்கு மான்கள் நிறைந்த காடு என்பது இயல்பான விளக்கமாகும். இதற்கு அரண் சேர்க்கும் விளக்கங்கள் சங்க இலக்கியத்தில் பரக்கக் காணப்படுகின்றன.

சங்க காலத்தில் மான்களில் இரலை, கலை என்ற இரண்டு பிரிவுகள் சுட்டப்படுகின்றன. இரலையினத்தில் இரலை, நவ்வி, மரையான் என்ற மூவகையும். கலையினத்தில் உழை, கடமா என்ற இரண்டு வகையும் உண்டு. இதனை, "சங்க இலக்கியங்களில் ஐந்து வகை மான்களைப் பற்றிய செய்திகள் கூறப்படுகின்றன. அவை இரலை, நவ்வி, மரையான், உழை, கடமா என்பனவாகும்" என்ற பி.எல்.சாமியின் கூற்று உறுதிப்படுத்தும். (ச.இ.வில.விளக்கம். ப.14)

மரையான்

இரலை மானினத்தைச் சார்ந்த 'மரையான்' பற்றிச் சங்க இலக்கியத்தில் 24 இடங்களில் குறிப்புள்ளது. ஆ போலும் மா 'ஆமா' என்றழைக்கப்பட்டது போல் ஆ போன்ற மரை மரைஆன், மரைஆ என்றழைக்கப்பட்டது மரையான் கானகத்தில் காணப்படுவதால் சூடாமணி நிகண்டு மரையானின் மறு பெயராகக் 'கானக்குதிரை' என்று குறிப்பிடுகிறது.

மரையானின் தோற்றம்

மரத்தில் செய்யப்பட்ட மரை போன்று புரிவுடன் கூடிய குறுகிய கொம்பு இருப்பதால் இதற்கு 'மரையான்' என்று பெயரிட்டுள்ளனர். மரையானுக்கு நீண்ட காதுகள் இருப்பதை 'மடக்கண் மரையான் பெருஞ்செவி' என்று மலைபடுகடாம் உரைக்கும். மரையான் பார்ப்பதற்கு அழகற்ற விலங்காகும். இது கருமை நிறமுடையது என்பதை, "புரிமட மரையான் கருநரை நல்லேறு" (குறுந்.317) என்று குறுந்தொகை உரைக்கும். இம்மரையான் மரங்கள் அடர்த்தியில்லாத குன்றுகளிலும் காடுகளிலும் வறட்சியான சமவெளிகளிலும், வயற்புறங்களிலும் காணப்படும் (நற்.43, அகநா.69, கலித்.5). மரையான் குதிரையைப் போல் மிக விரைவாக ஓடக்கூடியது (மலைபடு.331, 406) இவை ஓரிடத்தில் கூடி, மந்தையாக வாழும் இயல்பின. இதை மடமரைக் கணநிரை (அகநா.69) மரைக்கணம் (அகநா.224) என்னும் தொடர்கள் விளக்கும்.

மரையானின் உணவு

மரையான்கள் இலந்தை, நெல்லி, இலைகள், இருப்பைப்பூ போன்றவற்றை விரும்பி உண்ணும் இயல்பின. (குறுந்.115, 235, அகநா.399, புறநா.170) மரையான்களை இருப்பைப் பூவைத் தின்னவிடாது வேட்டுவச் சிறுவர்கள் வில்லால் தடுத்தலை,

"அங்குழை இருப்பை அறைவாய் வான்புழல்
புல்லுளைச் சிறாஅர் வில்லின் நீக்கி
மரைகடிந் தூட்டும் வரையகச் சீறூர்" (அகநா.107)

என்னும் பாடல் விளக்கும்.

தெறித்த நடையுடைய மரைக்கணம் வேட்டுவர் தம் ஊரில் காய வைத்த உணவைக் கவர வந்ததை அகநானூறு(224) எடுத்துரைக்கும். மேலும் பாழடைந்த பொதியிலில் தூண் விழும்படி உடலைச் சொரிந்த மரையானைப் பற்றிக் குடவாயிற் கீரத்தனார் பாடுவர்.

மரையா கன்றுடன் தூங்கும் சிறிய ஊர் இறையிலி நிலமாக வேண்டாம் என்று கூறி, மருதநிலத்தூரைப் புலவர் வேண்டியது புறநானூற்றில்(297) இடம் பெற்றுள்ளது. மேலும் மரையாவைப் பற்றிப் பாடிய புலவர்களில் குடவாயில் கீரத்தனார், காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் போன்றோர் வேதாரண்யத்திற்கு அண்மையில் உள்ள ஊரைச் சார்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலைச் செய்திகளால் மரையான் அதிகம் உள்ள காடு மரைக்காடு என வழங்கப்பட்டுள்ளது என்பது புலனாகும். இதுமட்டுமின்றி கன்னட மொழியில் இன்றும் சங்ககாலப் பெயரை மறக்காது மரையானை 'மரைக்குதிரை' என்று அழைக்கின்றனர். மேலும் மரையான் நீலம் போன்ற கருமை நிறத்திலிருப்பதால் நீலப்பசு என்ற பொருளில் இந்தியில் நீல்கை (Nilgai) என்றும் ஆங்கிலத்தில் Blue Bull என்றும் அழைக்கப்படுகிறது.

மேலும் ஒரு சான்று

தற்பொழுது வேதாரண்யத்தில் கருமான்களுக்கென ஒரு விலங்குகள் சரணாலயம் அமைக்கப்பட்டுள்ளது. அருகிய விலங்குகளைப் பாதுகாக்க உருவாக்குவது சரணாலயம். இன்று கருமான் என்று குறிக்கப்படும் விலங்கே சங்ககாலத்தில் மரையா என்று சுட்டப்பட்டுள்ளது என்பது தெள்ளிதின் புலனாகும்.

தொகுப்புரை

இரா.பாலசுப்பிரமணியனால் படைக்கப்பட்ட சுவடுகள் என்னும் புதினத்தில் ஒன்பது ஊர்ப்பெயர்கள் சுட்டப்பட்டுள்ளன. இதில் வேதாரண்யம் என்னும் ஊரின் பண்டைப் பெயர் மரைக்காடு என்பதாகும். மரை என்னும் மானினங்கள் வாழ்ந்த பகுதி மரைக்காடு என்றழைக்கப்பட்டது. சைவசமயம் எழுச்சிபெற்ற காலத்தில் இவ்வூர் இறைவனோடும், வேதத்தோடும் தொடர்புபடுத்தி 'மறைக்காடு' என்று வழங்கப்பட்டது. அதன்பின் தமிழகம் முழுவதும் சமற்கிருதமயமாக்கப்பட்ட பொழுது திருமறைக்காடு – வேதாரண்யம் என்று பெயர் மாற்றம் பெற்றுள்ளது. கருநிறமுடைய மரையான்கள் வாழ்ந்தது மரைக்காடு என்பதை இன்று அவ்வூரிலுள்ள கருமான்கள் சரணாலயமும் நன்கு புலப்படுத்தும்.

62. தேவாரப்பாடல்களில் ஊர்ப்பெயர்கள்

வே.செந்தில்ஆறுமுகம்
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தெ.தி.இந்துக் கல்லூரி, நாகர்கோவில்.

முன்னுரை :

காலம் காட்டும் கண்ணாடியான இலக்கியங்கள் நாம் ஆன்மிக வழிகளுக்குச் செல்ல உதவிபுரிகின்றன. இலக்கியங்களில் பக்தி இலக்கியமும் முக்கிய பங்கு வகிக்கின்றன. உண்மையாகவே பக்தி இலக்கியங்களை ஆராய்ந்தால் இலக்கியச்சுவையும், ஆன்மீக உணர்வும் எளிதாக நம்மை பரவசப்படுத்தும் என்பதே உணர்வுபூர்வமாக அனுபவிக்கின்ற வாய்மையாகும். இறைவனை போற்றிப்புகழும் பொழுது அவன் கோயில் கொண்டுள்ள ஊர்ப்பெயர் அவற்றில் நடமாடுவது சாத்தியம்.

ஆய்வின் நோக்கம் :

காரணம் இல்லாமல் காரியங்கள் நடைபெறுவதில்லை. ஒவ்வொர் செயலுக்கும் காரண காரியங்கள் உண்டு, அவை இறைவன் அருளால் இயம்பப்பட்டவை என்பதில் எந்தவித மாற்றுக் கருத்தும் இருக்கமுடியாது. அனுபவத்தில் கண்ட உண்மையை சிந்திக்கும் நோக்கில், ஒவ்வொரு ஊருக்கும் காரணப்பெயர் இருந்திருக்கக் கூடுமோ என்ற வினா எழும்பியபோது, பக்தி இலக்கியங்களை ஆராய்ந்து இறைவன் அருளைக்கூறும் பதிகங்களில் ஊர்ப்பெயர்கள் நடமாடுவதைக் கண்டு அவற்றை ஆன்மீக அன்பர்களுக்கு சுட்டிக்காட்டும் நோக்கிலே ஆய்வு நோக்கம் வரையறுக்கப்பட்டது.

பக்தி இலக்கியம் :

நம்பியாண்டார் நம்பியால் தொகுக்கப்பட்ட பதினொரு திருமுறைகள் மற்றும் பின்னர் சேக்கிழார் இயற்றிய பெரியபுராணத்தை பன்னிரெண்டாந் திருமுறையாகக் கொண்டனர். சைவ சமய பக்தி நூல்களான பன்னிரெண்டு திருமுறைகளும் 'பக்தி இலக்கியங்கள்' என்றுக் குறிப்பிடப்படுகிறது.

முக்கியமாக, பக்தி இலக்கியங்களில் தேவாரம் முக்கியப் பங்கு வகிக்கின்றது. அத்தகைய தேவாரப்பாடல்களில் நாம் ஆழ்ந்து நோக்கினால் அரியப்பல உண்மைகள் புலப்படும்.

தேவாரம் :

திருஞானசம்பந்தர் - முதல் மூன்று திருமுறைகள் (383 பதிகங்கள்)
திருநாவுக்கரசர் - இரண்டாவது மூன்று திருமுறைகள் (312 பதிகங்கள்)
சுந்தரமூர்த்தி பாடல்கள் - ஒரு திருமுறைகள் (101 பாடல்கள்)

என்று ஏழுதிருமுறைகளை 'தேவாரம்' என்றத் தொகுப்பில் நம்பியாண்டார் நம்பி தொகுத்துள்ளார். தேவாரம் என்றால் தெய்வ பக்தி என்று பொருள்.

தே + வாரம் = தேவாரம்: தே = தெய்வம்: வாரம் = அன்பு

தேவாரத்தினை – அடங்கன் முறை என்று கூறுவர். தேவாரத்தொகுப்பு ஏற்பட்ட காலம் - கி.பி. பத்தாம் நூற்றாண்டின் முதல் பகுதி.

தேவாரப் பாடல்கள், சைவ சமயத்தின் கடவுளான பரம்பொருள் இறைவன் சிவபெருமானை பற்றி பெருமையாக பாடும் பாடல்கள் ஆகும். மூவர் - தேவாரத்தில் இறைவனை பற்றிய பாடல்கள் வரும்பொழுது, "எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் இறைவன்" ஊர்தோறும் கோயில் கொண்டுள்ளான் என்பதனை குறிப்பிடும் பொழுது குறிப்பிட்ட ஊர்ப்பெயரினை கூறி அவ்வூரில் உறைந்திருக்கும் இறைவன் திருப்பெருமைகளை கூறுவதாக அப்பாடல்கள் அழகுற அமைந்துள்ளன.

தேவாரப் பாடல்களில் பண் அமைப்பு காணப்படுகிறது. பண் என்பது பாடலின் ஒலி, ராகம் என்று கூறுவர். பாடல்முறை, பாடலில் இருக்கக் கூடிய சொற்கள், பாடல் இலக்கணம் ஆகியவற்றை பொறுத்து பண் அமையும்.

பெருவேளூர் - இறைவன் :

நாதனாய், உலகம் எல்லாம் நம்பிரான் எனவும் நின்ற
பாதனாம், பரமயோகி, பலப்பல திறத்தினாலும்
பேதனாய் தோன்றினானைப் பெருவேளூர் பேணினானை
ஓதநாவுடையன் ஆகி உரைக்குமாறு உரைக்கின்றேனே.

- திருநாவுக்கரசர் - தேவாரம்

திருப்பெருவேளூர்த் திருநேரிசையிலே உள்ள பாடல் இது. பாட்டின் பொருளினை நோக்கினால்,

'தலைவனாக, உலகம் எல்லாம் எங்கள் தலைவன் என்று சொல்லி வழுங்கும்படி நின்ற பாதங்களையுடையவன். பலப்பல துறையில் நின்று பல்வேறு உருவிலே காணப்படுகின்றவனவன். உயர்ந்த யோகி. பெருவேளூரை விரும்பி அங்கே கோயில் கொண்டிருப்பவன். அத்தகைய இறைவனாகிய அவனையே எப்பொழுதும் ஓதி வணங்கும் நாவை உடைய நான், அவன் பெருமையை எப்படி சொல்லிப் போற்ற வேண்டுமோ அப்படி சொல்லிப் போற்றுகின்றேன்' என்பது புலனாகும். இந்த பாட்டில் பெருவேளூரில் விரும்பி உறைபவனாகிய இறைவன் எங்கெங்கினும் இருந்தாலும் பெருவேளூரில் கோயில் கொள்வதில் அதிக விருப்பமுடையவன் என்பதனை பாடல் வழி உணரலாம்.

ஆடுதுறை – ஆண்டவன் :

வேளாண்மைத் துறையில், புதுமைகளைப் புகுத்தும் வண்ணம் அரிய பல கண்டுபிடிப்புக்களான நெல் ரகங்களை, ஆடுதுறை-56 என்ற மாதிரி முறையில் விதை நெல்லினை நாம் குறிப்பிடுவதுண்டு. அத்தகைய பேறுபெற்ற ஆடுதுறையில் உறைந்து, உலகினை உய்விக்கின்ற உண்மைப்பரம்பொருள் இறைவனாகிய சிவபெருமானின் பெருமைகளைப் பற்றி குறிப்பிடும் தேவாரப் பாடல்களில் ஆடுதுறையில் உறைபவனே நம்மை காலனிடமிருந்து காப்பவன் என்றுக் குறிப்பிடுவதற்கு,

வெம் சினக் கடும்காலன் விரைகிலான்,
அஞ்சு இறப்பும் பிறப்பும் அறுக்கலாம்,
மஞ்சன் மாமயில் ஆடுதுறை உறை
அம் சொலாள் உமைபங்கள் அருளிலே

- நாவுக்கரசர் தேவாரம்

என்ற பாடல் மூலம், இறைவனாகிய சிவபெருமானை, 'சிறந்த வலிமையுள்ளவன், பெருமைமிக்க மயிலாடுதுறையில் வாழ்கின்றவன், உமாதேவியை உடலில் ஒரு பாகமாக உடைய அர்த்தநாரீஸ்வரன், இத்தகைய சிவபெருமான் நமக்கு அருள்செய்வானாகின், கொடுமையான சினத்தையுடைய காலன் நம்மை நெருங்க மாட்டான். எப்பொழுது, இறப்பு வருமோ என்று அஞ்சுகின்ற தேவை இல்லை, அதன்பின் பிறக்கின்ற பிறப்பும் இல்லை. இவை இரண்டையும் (பிறப்பு, இறப்பு) அடியோடு அறுத்துவிடலாம் என்று சிறப்பித்துக் கூறுகின்ற பாடலில் மயில் ஆடுகின்ற மயிலாடுதுறையில் உறைபவனே என்று இறைவன் பெயரை ஊரோடு அடையாளப்படுத்தி கூறுவது வியக்கத்தக்கது. மற்றொரு தேவாரப்பாடலில்,

தோலும் புல்லும் ஒருகையில் கூச்சமும்
தோலும் பூண்டும் துயரம் உற்று என்பயன்?
நீல மாமயில் ஆடு துறையனே
நூலும் வேண்டு மோ, நுண் உணர்ந்தோர் கட்கே.

என்ற செய்யுளில், 'கையிலே முக்கோலும், நாணல் புல்லும், ஒரு கையில் குடையும், மான்தோலும் தரித்துக் கொண்டு துயரம் அடைய வேண்டியதில்லை, நீல நிறம் பொருந்திய மயில் ஆடிக்கொண்டிருக்கின்ற நீர்த்துறையை உடைய ஊரிலே வாழ்கின்ற தலைவனே, உன்னை அறிந்து வணங்கும் மனமுடையவர்களுக்கு, நுட்பம் உள்ளவர்களுக்கு, நுட்பம் அறிந்தவர்களுக்கு, வேதபாராயணம் கூடத் தேவையில்லை. உன்னை வணங்குவது ஒன்றே போதுமானதாகும் என்ற கருத்து நமக்குக் கிடைக்கின்றது. இறைவன் அருளே எல்லா இன்பங்களையும் தரும் என்ற உண்மையை உணர்ந்தவர்க்கு வேறு எத்தகைய தேவையும் இல்லை. துன்பத்தைத் தரக்கூடிய எந்த முயற்சிகளும் வேண்டாம். இறைவனை வணங்கும் மதிநுட்பம் மட்டும் இருந்தால், அவன் அருளால் அடுத்தபிறவி இல்லை என்று இறைவனை பாடுவதற்கு, நீலநிறம் பொருந்திய மயில் ஆடிக்கொண்டிருக்கின்ற நீர்த்துறையை உள்ளடக்கிய இடத்தின் பெயரே மயிலாடுதுறை என்பதும், அத்தகைய மயிலாடுதுறையினுள் ஆலயம் கொண்டிருக்கும் ஆண்டவனை வணங்கினாலே இப்பிறவி எடுத்த பயனை அடையலாம் என்பதனை செய்யுள் மூலம் ஊரினை குறிப்பிட்டு இறைவனை இறைஞ்சுகிறார் நாவுக்கரசர்.

'சிந்தயையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறம் அரிது' — தாயுமானவர்.

சிந்தை சும்மா நிற்காமல் தாவித்தாவிச் செல்லும் குணமுடையது. அத்தகைய சிந்தையை அடக்கி கட்டுபடுத்திய ஞானிகள் வழியில் ஆடுதுறை ஆண்டவனை ஆராதிப்போம்.

திருக்கலைய நல்லூர் - திலகன் :

இறைவனைப் பணிவதற்கு என்று குறிப்பிட்ட ஊரினை சுட்டிக்காட்டி அங்கே சென்று பணிந்தால் அனைத்து நன்மைகளும் அழகாக நம்மை வந்து அடையும் என்பதில் ஐயமில்லை.

'சோலைமலி குயில்கூவக், கோலமயில் ஆலச்சுரும்பொடு
வண்டு இசைமுரலப் பசும்கிளி சொல்துதிக்கக்,
காலையிலும் மாலையிலும் கடவுள் அடிபணிந்து கசிந்த

மனத்தவர் பயிலும் கலைய நல்லூர் காணே!

- திருக்கலைய நல்லூர்ப் பதிகம்
(சுந்தரர் தேவாரம்)

சோலையிலே குயில்கள் பல கூவிக் கொண்டிருக்கின்றன, அழகான மயில்கள் தோகையை விரித்து ஆடிக் கொண்டிருக்கின்றன, ஆண்வண்டுகளும் பெண்வண்டுகளும் மலர்த்தேனை உண்டு மகிழ்ந்து பாடிக் கொண்டிருக்கின்றன, பச்சைக்கிளிகள் தமது வார்த்தைகளால் இறைவனாகிய சிவபெருமானைப் போற்றுகின்றன. காலையிலும், மாலையிலும் தவறாமல் கடவுள் அடி பணிந்து மனம் உருகுவோர் வாழ்ந்திருக்கின்ற பெருமை உடைய திருக்கலையநல்லூர் இறைவனைக் கண்டு பணிந்தால் காணக்கிடைக்காத அவன் தரிசனம் கண்டு கவினுற வாழலாம் வையகத்தில் என்பதே பதிகம் கூறும் பாவகையாகும்.

வொற்றியூர் - ஔடதன் :

சைவத் திருத்தலங்களை நேரில் சென்று வழிபட விரும்பும் அன்பர்களுக்கு உடனடியாக தெரியும் வகையில் சென்னையில் கோயில் கொண்டு உள்ள திருவொற்றியூர் இறைவனைப் பற்றி பாடும் பாடல்,

"சங்கும் சிப்பியும், சலஞ்சலம் முரல
வயிரம் முத்தொடு, பொன்மணி வரன்றி
மாக ஓங்குகடல் ஓதம் வந்து உலவும்
ஒற்றியூர் எனும் ஊர்உறை வானே"

- சுந்தரம் தேவாரமான
திருவெற்றியூர்ப் பதிகம்

சங்கும், முத்துச்சிப்பியும், 'சலம் சலம்' என்னும் உயர்ந்த சங்கும் ஒலிக்கும்படி, வைரம், முத்து, பொன், இரத்தினம் முதலியவைகளை வாரிக்கொண்டு வந்து ஒலிக்கின்ற பெரிய கடலின் வெள்ளம் வந்து உலாவுகின்ற ஒற்றியூர், இத்திருவொற்றியூரில் வாழ்கின்ற சிவபெருமானே என்ற சிவப்பரம்பொருளை வணங்கினால் சிந்தை தெளிவாகி, நிந்தை இல்லா வாழ்வு நிலைக்கும்.

முடிவுரை :

இலக்கியங்கள்!
இறைவனை ...
இறைஞ்சுகின்ற,
இன்பத் தமிழ்ப் பதிகங்களில் ...
இயம்பினோர் - மூவர்!
இறுதியாக — ஊரில் உறையும் உத்தமனை!
இரக்கின்ற நலமாய் - இறைவனை!

பக்தி இலக்கியமானத் தேவாரப்பாடல்களில் எந்தெந்த ஊர்களில் இறைவன் ஆலயங்கள் உள்ளதோ, அத்தகைய ஊரில் உறையும் இறைவனை வழிபாடு செய்வார்க்கு வரம் அனைத்தும் நல்குவான் நான்மறைச் சான்றோன் என்ற கூற்றினை தெரிவுபடுத்த, 'நம்பினோர் கெடுவதில்லை — நான்கு முறை தீர்ப்பு' என்ற பெருமகனை, பெரிய உலகில் தெளிய வைக்க, ஊரின் பெயரினையும் அதன் சிறப்பினையும் சுந்தரர் தேவாரம் மூலம், நாவுக்கரசர் பதிகம் மூலம் பாருக்கு உவந்தது பார்த்து படித்து மகிழதக்கவே.

துணைநூற்பட்டியல் :

1. தேவாரத்திருவுலா — டாக்டர். சுதாசேஷய்யன்,
விகடன் பிரசுரம்

2. தேவாரத்திருமொழிகள் - சாமி. சிதம்பரனார்
தாமரை பப்ளிகேஷன்ஸ் (பி) லிட்

63. புறநானூறு உணர்த்தும் ஊர்ப் பெயர்கள்

முனைவா.பொ.செந்தில்குமார்,
கேளரவ விரிவுரையாளர், அரசு கலைக்கல்லூரி(தன்னாட்சி)
சேலம் - 7.

எட்டுத்தொகை நூலிலி ஏழாவதாக அமைந்த பாடல். புலவர் பலரால் பாடப்பெற்ற புறப்பொபருள் பற்றி நானூறு பாடல்கள். பெருந்தேவனார் கடவுள் வாழ்த்து சிவன் பாடினார். நானூறு அகவற்பா புறநால் 43 வேந்தர்களும் 48 குறுநில மன்னர்களும் 138 பாடலீ சேர பாண்டிய சோழரும் சிறப்பைப் பாடியுள்ளனர். தாபத நிலை முதல் மறக்காஞ்சி வரை முப்பது துறைகள் அமைந்தது. பாடாண் திணைப் பாடல்கள் அதிகம்.

ஊர்ப் பெயர்கள்

புறநானூற்றில் இடம்பெற்றுள்ள ஊர்ப் பெயர்களை உணரும் போது பழந்தமிழரின் இயற்கையோடு இணைந்த இன்ப வாழ்க்கையே இயம்புகிறது. தனிமனிதன் ஆங்காங்கு விருப்பப்படி உறைவிடங்களை அமைத்து ஆங்காங்கு வாழ்ந்த நிலைமாறி பலரும் ஒன்று சேர்ந்து வாழ்ந்தது. ஆங்காங்குள்ள பல ஊர்களும் தங்களுள் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு ஒன்று கூடி வாழும் போது ஊர்களை அமைத்துக் கொண்டான்.

ஊர்தல் என்ற தொழில் அடிப்படையில் ஊர் என்ற சொல்லும், நகர்தல் என்ற தொழில்ப் பெயரின் அடிப்படையில் நகர் என்பதும் அமைந்தன. இப்பாடலில் இடம், தாவரம், நீர்த்துறை, புலவர் ஊர், பிற பெயர்கள் என்ற பெயர் உணர்த்தும் ஊர்ப் பெயர்கள் ஆராயப்பட்டுள்ளது.

இடப்பெயர்

புறநூல் பாடல் பெரும்பாலும் இடப்பெயர் அடிப்படையில் காணப்படுகிறது.அம்பர் - அருவந்தை என்ற வள்ளலுக்கு உரிதாகியுள்ளது. அம்பர்கிழான் அருவந்தையைக் கல்லாடனார் பாடிய, 'அம்பர் கிழவோன்' (புறம்-385–10)பாடல் வரி அறியப்படும். இன்று தஞ்சை மாவட்டத்தில் பூந்தோட்டம் அருகில் ஊர் உள்ளது.

ஆலைவாய் - திருச்சீரலைவாய் என்னும் செந்தில் என்ற பெயர் அடையாக திருச்செந்தூர் வழங்கப்படும். 'புணரி யலைக்குஞ் செந்தில்' (புறம் -55) என்னும் ஊர் இன்று நெல்லை மாவட்டத்தில் உள்ளது.

அழும்பில் - அம்புக் கோயில் என்ற ஊரே பழமையான அழும்பில் ஊராகும். 'அழும்பிலன் அடங்கான்' (புறம் -283) இன்று புதுவையில் உள்ளது.

ஆய்குடி-ஆய் அண்டிரன் ஆயர் குலத்தை சேர்ந்தவன். ஆயர்குடி என்னும் ஊர் மருவி ஆய்குடி என்று பெயர் பெற்றது. 'தென்திசை ஆ ஆய்குடி'(புறம் - 132)

உறந்தை – உறப்பு என்ற சொல் செறிவு என்ற பொருள்படுவதைக் காணும் போது ஊர்மக்கள் நெருங்கி வாழ்ந்த இடமாகும். 'உறந்தை அவையத்து' (புறம்39-8) இன்று திருச்சியில் ஒரு நகரமாகியுள்ளது.

தாவரயிடப் பெயர்கள்

நிலத்தின் அடிப்படையில் அமைந்த ஊர் படிப்படியாக வளர்ந்து செடிகள், பூ வகைகள், காய்கள், மரங்கள் ஆகிய அடிப்படையாக ஊர்ப் பெயர் அமைந்தன. அரையம் - பாரி மகளிரை ஏற்றக் கொள்ளாத கருங்கோவேனை நோக்கிய பாடல். 'நீடுநிலை அரையத்துக்'(புறம் -202-2) ஓய்மா நாடு- கண்பிரக் கோட் ஓய்மா நாட்டு நல்லியக் கோடனை பெருநள்ளியைப் பரணர் பாடியது. கண்பீரம் என்ற சொல்லுக்கு சதுக்கள்ளி என்னும் பொருள். இது பாலை நிலத்தாவரமாகும். இன்று திண்டிவனத்தில் உள்ளது

கரும்பானூர்-ஒருவகையான தாவரமாம். 'கரும்பனூரன் காதல் மகனே'(புறம் -381-26) கரும்பு அதிகம் விளையும் பகுதி கரும்பனூர் ஆயிற்று.

கள்ளில் - கள்ளில் ஆத்திரையன் என்ற பெயர் பெற்றார்.கள்ளி என்ற ஒரு வகைத் தாவரமாம்.

முசிறி – ஒருவகை இன புல்.கடற்கரை அருகில் அதிகம் வளரும். கடற்கரை நகரமே முசிறியாகும். முழவின் முசிறியன்ன (புறம்343-10)

வஞ்சி-ஒருவகை பூ வகை சேர்ந்தது. 'விறல் வஞ்சி' (புறம்-11-6)என்ற புறநானூற்றில் உண்டு. இன்று திருச்சியில் உள்ளது.

நீர்த்துறை

புறநானூற்றில் பாடல்கள் நீர்த்துறை இடத்தே அமைந்த ஊர்களாகும். காவிரிப்பட்டினம்-பூம்புகார் நகரம். நன்மறைக் காவிரிப் பூம்பட்டினத்து காரிக்கண்ணனார் பாடியதால் பெயர் பெற்றது.

கடலூர்-ஆறுகள் கூடும் இடம் கூடல். அங்கே அமைந்த ஊரும் கடலூர் எனப் பெயர் பெற்றது. 'கடல் மண்டு'(புறம்-299-3)துறையூர்-ஊரால் பெயர் பெற்ற பெற்றோர் போலும் தம் நீர்த்துறையில் அமைந்த ஊர். 'வாயிற் றுறையூர் முன்றுரை'(புறம்-136-25)

பிசிர்-நீர்த்துளி அல்லது ஊற்றுநீர் என்ற பொருள்படும். 'பிசிரோன் என்ப'(புறம்-215-4) என்பது இன்று இராமநாதபுரம் மாவட்டத்தில் பசிர்குடி என்று வழங்கப்படுகிறது.

ஈரந்தை-ஊர் நீர்ப்பற்று அமைந்த பகுதியில் உள்ளூர் பெயர் பெற்றது. 'ஈரந்தையோனே பாண்பசிப்'(180-7)

புலவர் பெயர்

புறநானூற்றுப' பாடல் வழி அதிகப் பாடல்கள் புலவர் பாடலைப் பாடியதால் அவ்வூரையை பலவர் பாடலுக்குள் அடக்கியுள்ளனர். அரிசில்-சோழன் முற்றுத்துச் துஞ்சிய வளவனை ஆடுதுறை மாசாத்தனார் பாடியதால் பெயர் பெற்றது. இன்று திருவாடுதுறை தஞ்சை மாவட்டத்தில் உண்டு.

எருக்காட்டூர்-எருக்கம் காடுகள் நிறைந்த பகுதி இருப்பதாக எருக்காட்டூர் பெயர் பெற்றது. கிள்ளிவளவனை எருக்காட்டுக் கண்ணனர் பாடியது. இன்று தஞ்சயில் உள்ளது.

எறிச்சலூர் - கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனர் பாடியது.ஆதலால் ஆசிரியர் பெயரே பாடலில் வந்துள்ளது.

பிறபெயர்கள்

விலங்கு, மரம், சாதி, மலை முதலான இடப்பெயர்கள் புலவர் தம் பாடலில் அமைந்துள்ளனர். ஆவூர்-பசுவையும் ஆச்சா மரத்தையும் குறிக்கும்.

எருமை வெளி-சோழன் கிள்ளி வளவனை எருமை வெளியினர் பாடியது. இன்று அந்தணர் தெரு. ஆரியர் தெரு, ஐயர் தெரு, ஐயங்கார், அக்கரஹாரம், பார்ப்பனச் சேரி போன்ற ஊர்ப் பெயர்கள் குறிக்கின்றன.

கொல்லி-சேலம் மாவட்டத்தில் ஆத்தூர் வட்டத்தில் கொல்லிமலை உள்ளது. ஒரு குன்றுத் தொடர் ஓரிக்குரிய மலையாகும்.

இருங்கானத்துக் கொல்லி போல (புறம்-158-5)

இவ்வாறு இடப் பெயராய்வு வரலாற்று அடிப்படையைக் கொண்டு அமைவதோடு புவியியல் கருத்தும், பண்பா: கருத்தும், மொழி பற்றிய கருத்தும் மனநிலை பற்றிய கருத்தும் கண்டறிய பெரிதும் உதவும்.

64. தேவாரத்தில் ஊர்ப்பெயர்கள்

சு.செல்லம்
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை, இராணிமேரி கல்லூரி
சென்னை.

மனித இனம் தோன்றிய காலத்திலிருந்து அவர்களால் ஆளப்பட்டு வந்த ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொரு பெயரை உடையதாயிருக்கின்றது. அப்பகுதியை(இடத்தை) மற்றவர்களுக்குச் சுட்டிக்காட்டவும் பெயர்களைச் சூட்டலானார்கள். அன்றைய நிலையில் அவர்களுக்கு இயற்கையே பெயர்களின் கருவூலங்களாக அமைந்தன. எனவே அவற்றின் அடியாக மரப்பெயர்கள், ஆற்றுப்பெயர்கள், நிலப்பெயர்கள், விலங்கு – பறவைகளின் பெயர்கள் முதலியன இடப்பெயர்களைக் குறிப்பிடப் பயன்படுத்தினர்.

பண்டையத் தமிழரின் பண்பாடு ஐந்திணை நிலத்தைக் களமாகக் கொண்டு அமைந்துள்ளது. அவர்களது நிலப்பாகுபாடு, அவற்றின் கருப்பொருள்களுக்கு ஏற்பவே அமையலாயின. இம்முறையில் அவர்கள் தாம் வாழிடங்களுக்கும் இயற்கையோடு ஒட்டிய கருப்பொருள்களாகிய தாவரங்கள், விலங்குகள், பறவைகள், தானிய வகைகள், நீர்நிலை, நில இயற்கை, தெய்வம், திணை, மாந்தர் என்ற அடிப்படையில் பெயர்கள் வைக்கலாயினர். இவ்வகையில் நோக்கும் போது, பக்தி இயக்க காலத்தில் இருந்த ஊர்களில் பல மன்னர்களால் கட்டப்பட்ட ஆலயங்களின் சிறப்பால் ஊர்ப்பெயர்களும் சிறப்புப் பெற்றன. இவ்வகையில் அப்பர், சம்பந்தர், சுந்தரா் ஆகியோர் தலங்கள்தோறும் சென்று பாடப்பட்ட தேவாரத்திருத்தலங்கள் அமைந்த ஊர்ப்பெயர்கள் 276 என்னும் நிலையில் உயிரினங்களின் பெயர்களைக் கொண்டமைநத ஊர்ப்பெயர்களில் பதின்மூன்று ஊர்ப்பெயர்கள் மட்டும் கூறும் வகையில் இக்கட்டுரை அமைகின்றது.

தேவாரத்தில் உயிரினங்களின் பெயர்களைக் கொண்டமைந்த ஊர்ப்பெயர்கள்

தேவாரத்தில் காணப்படுகின்ற ஊர்ப்பெயர்களில் உயிரினங்களின் பெயர்களைக் கொண்டமைந்த ஊர்ப்பெயர்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். ஆவை விலங்குப்பெயர்கள், பறவைப்பெயர்கள், பிறஉயிரினப்பெயர்கள்(வண்டு, ஈசல் போல்வன). தேவாரத்தில் விலங்குப்பெயர்களைக் கொண்டமைந்த ஊர்ப்பெயர்கள் இருபத்தைந்தும், பறவைகள் பெயர்களை கொண்டமைந்த ஊர்ப்பெயர்கள் பத்தும், பிறஉயிரினப்பெயர்களைக் கொண்டமைந்த ஊர்ப்பெயர்கள் ஏழும் உள்ளன. இவற்றுள் கட்டுரையின் பக்க வரையறை கருதி பதின்மூன்று மட்டுமே எடுத்துக்கொண்டு ஊர்ப்பெயர்ப்பெயர்க் காரணத்தைக் கூறும் வகையில் இக்கட்டுரை அமைகின்றது.

காளையார்கோவில்

இவ்வூர் சிவகங்கையிலிருந்து 11 மைல் தொலைவில் உள்ளது. நாட்டரசன் கோட்டை இரயில்வே நிலையத்திலிருந்து 6 மைல் தொலைவில் உள்ளது. இத்தலத்திற்கு சுந்தரேசுவரர், சோமேசுவரர், காளையீசரென்று மூன்று சிவலிங்கப் பெருமானுடைய சந்நிதிகள் உள்ளன. "சுந்தரா் கனவில் சிவபெருமான் காளையாகத் தோன்றி, தான் இருப்பது கானப்போர் என்றுரைத்து அவரை வணங்கச் செய்து பதிகம் பெற்ற காரணத்தால் 'காளையார்கோவில்' என்று தலப்பெயர் வழங்கப்படுகின்றது. ஐராவதம் தனக்கிருந்த சாபம் நீங்கும் பொருட்டுச் சிவபெருமானை வழிபட்டு சாபம் தீர்ந்தது என்பது இத்தலபுராண வரலாறாகும்.

பண்டைக்காலத்தில் இவ்வூரின் பெயர் கானப்பேரெயில். இப்பகுதியில் பேரரனுடைய கோட்டை ஒன்று கானப்பேரெயில் என்னும் பெயரில் இருந்தது. கோட்டையைச் சுற்றி எழுந்த ஊரும் இக்கோட்டையின் பெயரையே பெற்றது. வேங்கை மார்பன் இதன் தலைவனாக விளங்கினான். பாண்டியன் உக்கிரப் பெருவழுதி கானப்பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதி எனப் பாராட்டப் பெறுகின்றான். எனவே, அக்காலத்தில் வேங்கை மார்பனை உக்கிரப் பெருவழுதி வென்றிருக்க வேண்டும் என்பர். இவ்வரலாற்றைப் புறநானூற்றில் (21,367) அறிய முடிகின்றது.

கன்றாப்பூர்

திருவாருருக்குத் தெற்கே உள்ள மாவூர்ச்சோலை இரயில்வே நிலையத்திற்குக் கிழக்கே ஐந்து மைல் தொலைவில் உள்ளது. கன்றுக்குட்டியைக் கட்டி வைக்கும் தறியிலிருந்து இறைவன் வழிபாடு ஏற்றுக்கொண்டதாகக் கூறப்படுகின்றது. கட்டுத்தறியில் உள்ள மரக்குச்சியை ஆப்பு என்று கூறுவர். அந்த ஆப்பில் இறைவன் தோன்றியதால் கன்றாப்பூர் என்று பெயர் வந்ததாகக் கூறப்படுகின்றது.

சைவம் சார்ந்த பெண்ணொருத்தி வைணவரைத் திருமணம் செய்து கொண்டாள். கன்று கட்டும் ஆப்பையே சிவலிங்கமாக வழிபட்டு வந்தாள். இச்செயல் அவள் கணவனுக்குத் தெரியாது. ஒருநாள் அவன் அந்த ஆப்பை வெட்ட அதிலிருந்து இறைவன் வெளிப்பட்டு அருளினார்.

இத்தெய்வ நிகழ்ச்சியால் இந்த ஊர் கன்றாப்பூர் என்று பெயர் பெற்றுள்ளது. இதனை உறுதி செய்யும் வகையில் கோயிலுள்ள சிவக்கொழுந்தின்மீது கோடாரியின் வெட்டு அடையாளமாகக் காணப்படுவதாக வழக்கில் கூறப்பட்டு வருகின்றது.

திருக்குரக்குக்கா

தஞ்சாவூர் மாவட்டத்தில் வைத்தீஸ்வரன் கோயில் இரயில் நிலையத்திலிருந்து தெற்கே 7 கி.மீ தொலைவில் இவ்வூர் இருக்கின்றது. காவிரியின் கரையிலுள்ள ஊர் இது. எனவே நீர்வளமும் நிலவளமும் நிறைந்த ஊராக விளங்குகின்றது. சோலைகள் நிறைந்த ஊர். சோலைகளில் குரங்குகள் மகிழ்ந்தாடிய நிலையில் இவ்வூர் குரக்குக்கா என்று பெயர் பெற்றுள்ளது. கா என்பது சோலை என்று பொருள்படும்.

திருவானைக்கா

இத்தலம் ஸ்ரீரங்கம் இரயில்வே நிலையத்திற்குக் கிழக்கில் அரை மைல் தொலைவில் உள்ளது. இத்தலம் இறைவனை யானையும், சிலந்தியும் வழிபட்டதாக புராணச்செய்தி கூறப்படுகின்றது. ஒரு திருக்கயிலாயத்தில் புஷ்பதந்தன் மால்யவான் என்ற இருகணநாதர் போட்டியிட்டுத் தொண்டாற்றுவதில் பெருமை கொண்டு ஒருவரை ஒருவர் சபித்துக்கொண்டு முறையே யானையும் சிலந்தியும் ஆயினர். இருவரும் முறையிடுவதற்கு இரங்கிய சிவபெருமான் இத்தலத்தில் வழிபட்டு விமோசனம் பெருமாறு அருளினார். யானையும், சிலந்தியும் ஜம்புலிங்கத்திற்கு பூசை செய்து வழிபட்டனர். சிலந்தி தனது வாய்நூலால் பந்தல் அமைத்தது. இப்பந்தல் இடையூறு என்றும், அவை வேண்டாதவை என்றும் யானை அதனை அழித்து வழிபட்டுச் சென்றபிறகு, சிலந்தி நாடோறும் புதிய பந்தல் அமைத்து வந்தது. பந்தலையழிக்கும் யானையைத் தண்டிக்க எண்ணிய சிலந்தி துதிக்கைக்குள் நுழைந்து மூளையைக் கடித்தது. யானை இறந்தது. உள்ளே புகுந்த சிலந்தியும் இறந்தது. இவ்வாறு யானையும், சிலந்தியும் இறைவனை வழிபட்டதால் (யானை, கா – சிலந்தி) ஆனைக்கா என்ற பெயர் பெற்றதாகும்.

திருக்கழுக்குன்றம்

செங்கல்பட்டு மாவட்டம் செங்கல்பட்டு வட்டத்தில் உள்ளது இவ்வூர். கழுகுகள் வழிபட்டுப் பேறு பெறும் குன்றம் கழுக்குன்றம் ஆயிற்று. அக்குன்றை அடுத்து எழுந்த ஊர் திருக்கழுக்குன்றம் என்பதேயாகும். இவ்வூருக்கு கழுகுகள் தொடர்பான புராணச்செய்தியும் உண்டு. அதனடிப்படையில் இவ்வூர்ப்பெயர் வந்ததாகவும் சொல்லப்படுகின்றன. இத்தலத்தில் யுகந்தோறும் இரண்டு கழுகுகள் பறந்து வந்து வழிபட்ட காரணத்தினால் இது திருக்கழுக்குன்றம் என்று பெயர் பெற்றுத் திகழ்கின்றது.(கழு என்ற சொல் கழுகு என்ற பொருளில் வருவது) கழுகாசலம், கிருத்தகிரி என்று வடமொழியிலும் பெயர்கள் வழங்குகின்றன.

திருமயிலாடுதுறை

தஞ்சை மாவட்டம் மயிலாடுதுறை வட்டத்தில் தலைநகராய் இந்த ஊர் விளங்குகின்றது. காவிரியின் தென்கரையில் இந்த ஊர் அமைந்திருக்கின்றது. மயிலாடுதுறைப் பகுதி நீர்வளம், நிலவளம் மிக்கது. காவிரி பாய்ந்து வளங்கொழிக்கும் பகுதி. வயல்களும் சோலைகளும் நிறைந்த பகுதி. இயற்கை வளம் வாய்ந்த இப்பகுதியில் மயில்கள் நிறைந்து ஆடுகின்றமையால் இப்பகுதியில் தோன்றிய ஊர் மயிலாடுதுறை என்று பெயர் பெற்றுள்ளது.

மயில் வடமொழியில் மயூரம் என்று வழங்கப்பட்டு வந்தது. அண்மையில் அரசின் முயற்சியால் இப்பெயர் தமிழாக்கம் செய்யப்பட்டது. இவ்வூருக்குப் புராணச்செய்தியும் உண்டு.

திருநாரையூர்

தென்னார்க்காடு மாவட்டத்தில் சிதம்பரம் மன்னார்குடிச் சாலையில் சிதம்பரத்திற்குத் தென்மேற்கில் 13 கி.மீ தொலைவில் இவ்வூர் இருக்கின்றது. பறவைகள் பெயரால் தமிழ்நாட்டில் பல ஊர்கள் பெயர் பெற்றுள்ளன. இந்த ஊர் நீர்வளம் நிலவளம் வாய்ந்ததாக விளங்கியதால் நாரைகள் மிகுந்து வாழ்ந்திருக்கின்றன. இதன் காரணமாக நாரையூர் என்று பெயர் வந்துள்ளது. நாரை இத்தலத்தில் வழிபட்டுப் பேறு பெற்றதால் நாரையூர் என்று பெயர் வந்ததாகவும் கூறுவர்.

திருக்குருகாவூர்

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ளது இவ்வூர். இன்று இவ்வூர் திருக்கடவூர் என்று அழைக்கப்படுகின்றது. பொழில்கள் நிறைந்த இவ்வூரில் குருகுகள் நிறைந்த சோலை என்ற பொருளில் குருகாவூர் எனப்பெயர் அமைந்திருந்திருக்கலாம்.

திருச்சக்கரப்பள்ளி

ஐயம்பேட்டை இரயில்வே நிலையத்திலிருந்து முக்கால் மைல் தொலைவில் இவ்வூர் உள்ளது. விஷ்ணு பூசித்துச் சக்கரம் பெற்றதாகத் தேவாரம் கூறுகின்றது. அம்பிகை சக்கரவாகப் பறவையாக வந்து பூசித்தத் தலம் என்பதால் சக்கரப்பள்ளி என்று பெயர் பெற்றதாகப் புராணச்செய்தி.

திருஈங்கோய்மலை

இவ்வூர் திருவிங்கநாதமலை என இன்று அழைக்கப்பெறும். இவ்வூர் திருச்சி மாவட்டத்தைச் சார்ந்ததாக அமைகின்றது. ஈ இத்தல இறைவனை வழிபட்டுப் பேறு பெற்ற காரணத்தால் ஈங்கோய்மலை எனப்பெயர் பெற்றதாகலாம்.

திருக்கச்சூர்

இத்தலம் செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ளது. அமுதம் திரண்டு வருவதற்காக விஷ்ணு ஆமையாய் இருந்து பூசித்த தலம். ஆலமரங்களின் மிகுதியால் "ஆலக்கோயில்" என்ற பெயர் பெற்றது. பின்னர், இறை செல்வாக்கு பெற்ற காலத்தில் புராணக்கதை காரணமாக, கச்சப (கச்சபம் - ஆமை) ஊர்என வழங்கப்பட்டு, பின்னர் கச்சூர் என்று வழக்கில் அமைந்திருக்கலாம் என எண்ணத் தோன்றுகின்றது. ஆமை வழிபட்ட தலம் என்பதாலும், முன்னோர் காலத்தில் ஆமைகள் அங்கு நிறைந்தும் இருந்திருக்கலாம் என்பதாலும் கச்சூர் என வழங்கப்பட்டு வருகின்றதோ என்ற எண்ணமும் எழுகின்றது.

திருக்காளத்தில் (ஸ்ரீகாளகஸ்தி)

இத்தலம் ரேணிகுண்டா புகை வண்டி நிலையத்திற்கு வடகிழக்கு 15 கி.மீ மைல் தொலைவில் சுவர்ணமுகி என்ற ஆற்றை கடந்து அமைந்துள்ளது. ஸ்ரீ - சிலந்தி, காளம் - பாம்பு, கஸ்தி – யானை ஆகிய மூன்றும் பூசித்து முக்தியடைந்த தலமாகும்.

குரங்கணில்முட்டம்

செங்கற்பட்டு மாவட்டம் காஞ்சிபுரம் வட்டத்தில் காஞ்சிபுரத்திலிருந்து 8 கி.மீ தொலைவில் பாலாற்றின் தென்கரையில் இவ்வூர் உள்ளது. தமிழ்நாட்டில் விலங்குகள் பறவைகள் காரணமாகப் பல ஊர்கள் பெயர் பெற்றுள்ளன. அவ்வகையில் குரங்கு, அணில், முட்டம்(காக்கை) காரணமாக இந்த ஊர் குரங்கணில்முட்டம் என்று பெயர் பெற்றுள்ளது. திருக்குரங்கணில்முட்டம் என்று பெயர் பெற்றதாகக் கூறுவர். கோயிலின் திருவாயிலில் குரங்கு வழிபட்டதை வடபாலும், அணிலும் காக்கையும் வழிபட்டதைத் தென்பாலும் காட்டியுள்ளனர்.

தொகுப்புரை

ஊர்ப்பெயர்கட்கான காரண காரியங்களைப் பல்வேறு தரவுகளின் வாயிலாகப் பெறலாம். ஊர்ப்பெயர்கள் தொடர்பான பறவைகள் – விலங்குக் கதைகள் வாயிலாகவும் பெயர்க்காரணம் எளிதில் அறிய வாய்ப்புகள் உள்ளன. இருப்பினும், காலந்தோறும் உருவாகின்ற பொதுக் கருத்து வளர்ச்சியில் உருமாறி வரும் ஊர்ப்பெயர்களுக்கு எற்றவாறு கதை வடிவங்களும் புதுக்கருத்தாக்கம் உள்ளது. இத்தகைய சூழலில் கதைகள் வாயிலாகப் பெறவப்படும் தகவல்கள் வரலாற்றுண்மைக்கு எத்தகைய விதத்தில் நிலைநிறுத்தக் கூடிய வலுவுடைய செய்தியினைப் புலப்படுத்திகின்றன என்பதை அறிய முடிகின்றது. ஊர்ப்பெயர்கள் இறைவனோடு தொடர்புடைய விலங்குகளை மையமாகக் கொண்டவையாகவும், குடியிருப்பைச் சார்ந்த சுற்றுப்புறங்களில் விலங்குகளின் நடமாட்டங்களின் காரணமாகவும் பெயரேற்றுள்ளமையை அறிய முடிகின்றது.

65. சுவடுகள் நாவலில் கொடிக்குளம்

முனைவர் மா. செல்வத்தரசி
கௌரவ விரிவுரையாளர்
ஸ்ரீபராசக்தி மகளிர் கல்லூரி, குற்றாலம்.

முன்னுரை

கிராமங்களே நாட்டின் ஆணிவேர். மண்ணில் தன்னை நிறுத்தி பொருளாதாரத்தில் முதலிடம் பெறச் செய்யும் இவர்களுக்கு சமுதாய வாழ்வில் இரண்டாமிடம் தான். அன்பு, உழைப்பு, உண்மை இவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ள இவர்களது வாழ்வில் இடர்பாடுகள் பலவாகும். அந்த இடர்பாடுகளைக் களைவதற்காகப் படைக்கப்பட்ட பாத்திரம் தான் மனிதத் தெய்வமாகிய 'இரகுபதி'. தனி மனிதன் தன்னை மாற்றிக் கொள்ளும் போது தான் ஒரு சமுதாயம் 'மறுமலர்ச்சி' பெறுகிறது. இதனைக் காந்திய ரீதியில் எடுத்தாளப்பட்ட இரா.பாலசுப்பிரமணியத்தின் 'சுவடுகள்' நாவலே கட்டுரைக்கு அடித்தளமாக அமைகிறது.

கொடிக்குளம்

வைகையாற்றுக் கால்வாயின் இயற்கை எழிலோடு மலைகளும் அடர்ந்த காடுகளாலும் சூழப்பட்ட கிராமமே கொடிக்குளம் என்னும் ஊர் ஆகும். இவ்வூரினைச் சுற்றி பதினெட்டுக் கிராமங்கள் காணப்படுகின்றன.

பல்வேறு இன மக்கள் வாழுகின்ற இடம். 'பண்ணையார்' என்ற சுயநலவாதம் கொண்ட மனிதனால் சேரி மக்கள் பல்வேறு இன்னல்களை அடைகிறார்கள். தானாக உதித்த வாழ்க்கைச் சூழலில் தலை விரித்தாடுகிறது வறுமையின் பிடிப்பு. இரகுபதி என்ற தனி மனிதன் சேரி மக்களின் வறுமையைக் களைந்து உரிமைகளைப் பெற்றுக் கொடுத்து கிராமத்திற்கு மறுவாழ்வு கொடுப்பதே நாவலில் உட்பொருளாகும்.

பண்ணையார் எனும் குறியீடு

சூரியன் உதிப்பது சத்தியத்தினால் தான். பூமி நிலைத்திருப்பது
சத்தியத்தின் மீதுதான். சத்தியமே தலையாய தர்மம்.
- மார்க்கண்டேய புராணம்

பண்ணையார் என்பவர் பெயருக்கு ஏற்றத் தோற்றம் உடையவர். தனது பணபலத்தால் அரசாங்க அதிகாரிகளைத் தன் வயப்படுத்திக் கொண்டவர். சேரி மக்களின் நிலங்களை அபகரித்துக் கொண்டவர். ரேசன் பொருட்களைக் கடத்தி அதில் லாபம் சம்பாதிப்பவர். மலைப்பகுதியை தன்வயப்படுத்தி சந்தனக் கடத்தலைச் செய்துவந்த ஒரு கொள்ளையர். கொடிக்குளத்தில் கொலைகள் நடப்பின் பின்னணியாகத் திகழ்பவர். அவருக்குக் குள்ள நரியாகக் கணக்குப்பிள்ளை, மாடசாமி..... இன்னும் பலர். பண்ணையார் என்பவர் தண்ணீர் பாம்பு அல்ல. கருநாகம் என்று கூறி வைத்தவர். பணபலத்தால் பல சீரழிவுகளை உண்டு பண்ணியவர்.

பள்ளர் இனச் சேரி மக்கள் கலப்பை உழைப்பு என்ற நோக்கத்தை மட்டும் கொண்டவர்கள். இவர்களில் யாருக்கும் சொந்த நிலம் கிடையாது. பண்ணையாருக்கும் கணக்குப்பிள்ளைக்கும் பகிர்ந்து கொடுத்துவிட்டார்கள். அரசு வழங்கும் எந்தச் சலுகைகளும் இவர்களுக்கு எட்டியதில்லை.

பண்ணையாரின் ஒரே மகள் இராசாத்தி. இராசாத்தியின் கல்விக்கு அரசாங்க உதவித்தொகைக்கு பாரத்தில் கையெழுத்து போடமறுத்த இரகுபதியின் நேர்மை அவருக்கு மிகவும் பிடித்திருந்தது. இரகுபதிக்காக அவனது குணத்தைப் பாராட்டி அவனை சிறைமீட்டு வெளிக்கொணர்கிறாள். இராசாத்தி சேற்றில் முளைத்த செந்தாமரையாய் விளங்குகிறாள். இரகுபதியின் சீர்திருத்தத்திற்காகத் தன் தந்தையாகிய பண்ணையாரையே எதிர்க்கத் துணிந்து வெற்றி காணுகிறாள்.

சூழ்ச்சித் தீ

பாறையின் மேல் அலைகள் மோதி மோதிப் புரண்டு
கொண்டிருந்தாலும் கல்லானது அசையாமல் நிற்கம்
- மார்க்ஸ் ஔரேலியஸ்

தீ நாக்குகள் அக்கம் பக்கம் எட்டமுடியாத அளவுக்கு சுவை பார்த்துக் கொண்டிருந்தன. இயற்கையுடன் போராடிய காலம் போய் இப்போது சூழ்ச்சித் தீயுடன் போராடுகிறக் காலகட்டமாய் போய்விட்டது. இந்தச் சூழ்ச்சியில் இன்ஸ்பெக்டர் விஜயன் காக்கி உடுப்பிற்கு அர்த்தத்தை கையாண்டான். ஊரிய தன்னாட்சி வாங்கிக் கொடுத்து நிரபராதிக்கு விடுதலை வாங்கிக் கொடுத்தவன். குடிசைகள் உயிர் பெற அரசாங்க கடன் உதவித்தொகை பெற்றுத் தந்த

தாசில்தார். பிரச்சினைகளை உணர்ச்சிப் பூர்வமாக அணுகுவதைக் காட்டிலும் அறிவுப் பூர்வமாக அணுவதில் நிரந்தரத் தீர்வு இருக்கும் என்பதை உணர்ந்து இரகுபதி செயல்பட்டான்.

சாதனையே குறிக்கோள்

இரகுபதி, பார்வதி இருவரும் உலக நியதிக்கு உட்பட்டவர்கள். இயற்கையில் எழும் உணர்ச்சிகளுக்குக் கட்டுபாட்டை விதித்துக் கொண்டவர்கள். சாதனையையே குறிக்கோளாகக் கொண்டவர்கள். ஏழ்மை நிலையில் ஆசிரியப் பணியை முடித்த பார்வதி. தனது ஆசிரியப் பணியை விட்டு விட்டு இரகுபதிக்கு உதவுவதற்காக முன்வந்த காதல் தியாகிகள். படிப்பறிவுள்ள ஒவ்வொருவரும் சமுதாய ஏலத்தில் அக்கறையுள்ள பாத்திரங்களாக நாவலில் உயிர் பெற்றுள்ளனர். உரிமைகள், கோபங்கள், வேகங்கள் இல்லாவிட்டால் எந்தக் காதலாவது ஜெயிக்குமா என்பதற்கும் கூட வித்துக்களாக அமைந்தவர்கள்.

அநீதியைக் கண்டு பொங்கி எழாமல் அமைதியின் அகிம்சையைக் கடைப்பிடித்தவன். மன உணர்வுகளை அடக்கிக் கொண்டு பெண்களை நல்வழிப்படுத்துகின்ற உயர்ந்த பண்பு உடையவன். அமைதி, பொறுமை, நேர்மை இவற்றைத் தாங்கிய கொள்கைகளாகக் கடைப்பிடித்தவன்.

கல்வியின் கொள்கை

கல்வியென்பது வாழ்க்கையோடு தொடர்புடையதாக இருக்க வேண்டும். வாழவழி வகுக்கிற நிலைக்களனாகவும் அமைய வேண்டும். நீ படிச்சபடிப்பிலே மக்களுக்கு என்ன செய்ய முடியும்னு சிந்தி. பயன்படாத தொழிலைச் செய்து ஆயிரமாயிரம் சம்பாதிப்பதைக் காட்டிலும் ஏழை, எளியவர்களுக்கு இலவசமாய் பாடம் சொல்லித்தற்றது தான் உண்மையான சேவை என்பதே கல்வியின் கொள்கை.

உடல் உழைப்பு மூளை உழைப்பு இதில் மூளை உழைப்புக்குத் தான் மரியாதை அதிகம். கல்விங்றது மனிதனைப் பூரணமாக்கனும் இல்லாவிட்டால் மனித மதிப்புகளையாவது வளர்க்கனும். இரண்டும் இல்லாத நிலையில் வேறுபாட்டையாவது வளர்க்காமல் இருக்கனும்.

கல்விக் கொள்கையினை சித்தரிக்கும் பாத்திரமாக குருசாமி தாத்தா. அவர் மனைவி மக்கள் எதுவுமில்லாத தனி மனிதர். எத்தனை அனாதைகளுக்குத் தாயாகவும் தந்தையாகவும் இருந்து வருகிறார். இரகுபதி மாதிரி ஆட்கள் இந்நாட்டை மாற்றிக் காட்டுவார்கள் என்று நம்பிக்கை வைத்தார்.

கொடிக்குளமும் கொடையும்

வறுமையின் பிடியில் சிக்கித் தவித்தாலும் தெய்வத்தை வணங்கும் அருள் உள்ளம் கொண்டவர்கள் கிராம மக்கள். மாரியம்மன், முத்தாலம்மன், காளி என்று தெய்வங்கள் நிறைந்த ஓர் ஊர். மாரியம்மாளுக்கு வைகாசியிலும் புரட்டாசியில் முத்தாலம்மனுக்கும் கொடை கொடுப்பவர்கள். அவர்களுக்கு காளி கோயில் காவல் தெய்வமாக விளங்கியது. வடக்கிருந்து வரும் நோயினையும் தீமையினையும் காப்பவளாக வேளார் கூறியிருந்தார். மழை பொதிந்து பூமி செழித்து நிலவளமாகிக் கொண்டதால் மகசூல் அதிகமானது. எனவே, மழைக்கு நன்றி செலுத்தும் விதத்தில் கொடையினை நடத்தினார்கள்.

முடிவுரை

இரா.பாலசுப்பிரமணியன் படைப்புகளில் 'சுவடுகள்' நாவல் காலத்தைப் பிரதிபலிப்பவையாகும். சமூக இருளை அகற்ற என்ன வழிமுறை என்பதை விளக்கியது. தனிமனிதப் போராட்டமே சமுகத்தை சீர்திருத்தும் என்ற புதுமையை உருவாக்கியவர். கல்வி கற்ற உள்ளங்களே அதற்கு முன்வர வேண்டும் என்ற எண்ணத்தை நிலைப்படுத்தியவர். காந்தியக் கொள்கையை கிராமம் நகரம் எங்கும் பிரதிபலிக்கச் செய்தார்.

66. தமிழிலக்கியங்களில் திருத்தணிகை

மா.ந.சொக்கலிங்கம்
முனைவர் பட்ட ஆய்வாளர்,
திருவேங்கடவன் பல்கலைக் கழகம்
திருப்பதி - 517502.

முன்னுரை : தமிழ்க் கடவுள் வீற்றிருக்கும் திருத்தலங்கள் ஆறுபடை வீடுகளும் ஐந்தாம்படை வீடாக அமைந்திருக்கும் ''குன்றுதோறாடல்'' என சங்க இலக்கியமான திருமுருகாற்றுப்படையில் குறிப்பிடப்படும் பெருமைக்குரிய 'திருத்தணிகை' பற்றி தமிழலக்கியங்கள் எடுத்தியம்பும் சிறப்பை இக்கட்டுரை வாயிலாகக் காண்போம்.

திருத்தணி தலவரலாற்றுச் சுருக்கம்

வரை இடங்களில் சிறந்தது. இத்தணிகைமால் வரையே' என்பது கந்த புராணம். திருத்தணிகை என்ற பெயரை தொலைவிலிருந்து கேட்டாலும், சொன்னாலும் நினைத்தாலும், திசைநோக்கித் தொழுதாலும் அவர்தம் படிவினைகள் யாவும் போம்' என்று தணிகைப் புராணம் கூறுகின்றது. இக்கருத்தையே அருணகிரிநாதரும் கூறுகிறார். *''தூரத்தொழுவார் வினை சிந்திடு தணியம்பதி''* எனக் குறிப்பிடுகின்றார்.

சாந்தாத்ரி, ஸ்ரீபரிபூரணகிரி அகோர கைவல்யப்ரதம், நாரதப்ரியம், கர்பஜித், மூலாத்ரி, இந்திரநகரி, இந்திர நீலபர்வதம், கல்லாரகிரி, உற்பலகிரி எனப் பல பெயர்கள் கொண்டது திருத்தணிகை.

இங்குள்ள முருகப்பெருமான் ஞானசக்திதரன் என்று அழைக்கப்பெருவான். செங்கல்வராயன் என்றும் கூறுவதும் உண்டு

முருகப்பெருமான் தேவர்களின் துயரம் நீங்கும் பொருட்டும் சூரபதுமன் என்ற அசுரனுடன் செய்த பெரும் போரும், வள்ளியம்மையை மணந்து கொள்ள வேடர்களுடன் நிகழ்த்திய சிறு போரும் முடிந்து, தணிந்து அமர்ந்த தலம் திருத்தணியாகும் என்று புராண வாயிலாக அறியப்படுகின்றது.

சைவசமயாச்சாரியார்கள் நால்வருள் ஒருவரான திருநாவுக்கரசர் இக்கோவிலைப் பற்றிப் பாடியுள்ளார். அருணகிரிநாதர், இராமலிங்க அடிகள், முத்துசாமித் தீட்சிதர் ஆகியோரால் பாடல் பெற்ற தலம் ஆகும்.

அபராஜிதவர்மன் (கி.பி. 875 – 893) என்ற பல்லவ மன்னனின் கல்வெட்டும், முதலாம் பராந்தக சோழன் (907–953) காலத்துக் கல்வெட்டும் இக்கோவிலில் காணப்படுவதால் இன்றைக்குச் சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பே இக்கோவில் சிறந்து விளங்கியது என்று கல்வெட்டு வாயிலாக அறிகிறோம்.

விஜயநகர மன்னர்கள் கார்வேட்டிநகர் ஜமீன்தாரர்கள் ஆகியோரின் திருப்பணிகள் இக்கோவிலில் உள்ளன. திருப்பதிக்கு அருகில் இருக்கும் இத்தலத்திற்கு பக்தர்கள் அதிகளவில் வருகின்றனர். ஒவ்வொரு மாதத்திலும் வரும் கிருத்திகை நாள் இங்கு சிறப்பு நாளாகும். ஆடிக்கிருத்திகை ஆண்டுதோறும் வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. அதே போல் தை முதல் நாள் 'படித்திருவிழா' என்றும் விழா கொண்டாடப்படுகிறது. 365 படிகள் கொண்ட மலைப்பாதை ஆண்டின் 365 நாட்களும் பக்தர்களுக்கு இன்பத்தையும், அமைதி, ஆனந்தத்தை அளிப்பதாகக் கருதி அந்நாளை பக்தர்கள் பக்திப்பரவசத்துடன் கொண்டாடி வருகின்றனர்.

தமிழிலக்கியங்களில் திருத்தணிகை

சங்க இலக்கியமான திருமுருகாற்றுப்படையில்,

முடிவுஉறழ் தடக்கையின் இயல ஏந்தி
மெல்தோள் பல்வினை தழிஇத் தயைத் தந்து
குன்றுதோறும் ஆடலும் நின்றதன் பண்பே

நக்கீரர் முருகப்பெருமானின் இத்திருத்தலத்தைப் போற்றியுள்ளார்.

ஒரு சமயம் அருணிகிரி நாதரையும், அவரது திருப்புகழையும், முருகனது அடியார்களையும் சிலர் எள்ளி நகையாட அவர்கள் தணிகை வேலனது கோபத்தால் எரிந்து போயினர். பின்பு அருணிகிரியாரின் பாடலால் உயிர் பிழைத்தனர்.

சினத்தவர் முடிக்கும் பகைத்தவர் குடிக்கும்
செருத்தவர் உயிர்க்கும் சினமாகச்
சிரிப்பவர் தமக்கும் பழிப்பவர் தமக்கும்
திருப்புகழ் நெருப்பென்று அறிவோம்யாம்
****
சினத்தையு முடற்சாப் கரித்த மலைமுற்றுஞ்
சிரித்தெரி கொளுத்துங் கதிர்வேலா
தினைக்கிரி குறப்பெண் தனத்தொடு சுகித்தென்
திருத்தணி இருக்கும் பெருமானே!

(திருப்புகழ்)

திருத்தணியில் பிறந்த கச்சியப்ப முனிவர். இவர் தணிகைப் புராணம் இயற்றினார். இவரது மாணவர் கந்தப்பத் தேசிகர். இவரும் திருத்தணியில் வாழ்ந்தவர். இவர் தணிகைப் பிள்ளைத்தமிழ், தணிகாசலப் புராணம், தணிகாசல அநுபூதி, தணிகை சந்நிதி முறை, தணிகை தயாநிதிமாலை போன்ற நூல்களை இயற்றினார். இவற்றில் திருத்தணி தலத்தின் பெருமையைப் பறைசாற்றியுள்ளனர்.

மலை அலையை அங்கையில் அடக்கி
தலைமை பெறுவீட்டு நெறிகாட்டு தணிகைக்கு இறைவ!
சப்பாணி கொட்டி அருளே!
சரவணப் பொய்கைதனில் அவதரித்திடு முருக
சப்பாணி கொட்டி அருளே!

(தணிகைப் பிள்ளைத் தமிழ்)

பிரியேன் உனையான் பிரிந்துஒர் கணமும்
தரியனே் உடல்பிரிந்து சாவேன் – கரியோன்
முருகா! துணிகைவரை மன்னா! வடிவேல்
முருகா! வருவாய்என் முன்!

(தணிகாசல அநுபூதி)

பெற்றாலும் இனிஒருவர் எனைத் தணிகை
வரையகத்தே பெறவும் வேண்டும்

(தணிகைச் சந்நிதி முறை)

பழியிலா உடலும் பயமிலா மனமும்
பாதகத்து உடன்படாச் செயலும்
கழிவிலா வயதும் குறைவிலாத் தனமும்
கரும்பகை தானிலா அரசம்
ஒழிவிலா அறமும் இழிவிலாச கதியும்
உனதுஅடி நம்பினேற்கு அருள்வாய்
அழிவிலாப் பதவி அருள்திருத் தணிகை
ஆறுமாமுக தயாநிதியே

(தணிகை தயாநிதி மாலை)

சிதம்பரம் அடுத்த காட்டுமன்னார்கோயிலில் பிறந்தவர் தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவர் ஆவார். இவர் திருத்தணிகையின் சிறப்பை தணிகைத் திருவிருத்தம் நூலில் பாடியுள்ளார்.

தன்னமும் மனத்துயரிலாது அமரரைக் காத்த
சரவணோற்பவ குமரனே!
தணிகையங்கிரிவாச! அரன்விரும்பு உபதேச
சகல பண்டித ராசனே!

(தணிகைத் திருவிருத்தம்)

முடிவுரை

சூரபத்மனோடு போர் புரிந்து கோபம் தணிந்து முருகன் இங்கு அமர்ந்ததால் செறுத்தணிந்த இடமாகத் திகழ்ந்தது. செறுத்தணி என்பது திருத்தணி என மருவியதாகக் கூறுவர். குன்றுதோறாடல் என சங்க இலக்கியத்திலும், பின்பு காலப்போக்கில் திருத்தணிகையென்றும் தமிழிலக்கியங்களில் குறிப்பிடப்பெறும் முருகப்பெருமானின் இத்திருத்தலத்தை நாமும் போற்றி வணங்குவோம் வாருங்கள் !

துணை நூற்பட்டியல்

1. தமிழ்நாட்டின் தலவரலாறுகளும் பண்பாட்டுச் சின்னங்களும் – V.கந்தசாமி, பழனியப்பா பிரதர்ஸ், முதற்பதிப்பு 1983.
2. முருகன் அருள்செல்வம் – பி.எல். முத்துக்குமரன், தணிகைப் பதிப்பகம், செ.1 முதற்பதிப்பு 1972.
3. கோயில் திருத்தலங்கள் வரலாறு – N.சிவராமன், விநாயகா பப்ளிகேஷன்ஸ், செ–14.
4. கந்தரலங்காரம் கந்தர் அநுபூதி மூலமும் உரையும் புலவர் பி.ரா.நடராசன், சகுந்தலை நிலையம், செ–1.
5. ஆறுபடை வீடுகள் (குன்றுதோறாடல்) – பி.ஸ்ரீ. அல்லயன்ஸ், செ.4
6. முருகன் புகழ்நூல்கள் – சாது சிதம்பரம் சுவாமி, ஜெயமணி வெளியீடு, செ. 24.

67. அகநானூற்று ஊர்ப்பெயர்கள்

ம. தமிழரசன்,
தமிழ் முனைவர்பட்ட ஆய்வாளர்,
அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி-3.

நாடோடியாகத் திரிந்த மனிதன் ஓரிடத்தில் நிலைத்து வாழத் தொடங்கிய காலத்தில்: தான் நிலைபெற்ற இடங்களுக்கு அடையாளப் பெயர்களை உருவாக்கினான். அவ்வாறு தோன்றிய பெயர்களே பிற்காலத்தில் குடியிருப்பு, ஊர்களாகத் தோற்றம் பெற்றன. இவ்வாறான ஊர்ப்பெயர்கள் பல்வேறு தோற்றக் காரணங்களைக் கொண்டு விளங்குகின்றன. அவ்வகையில் அகநானூற்றில் இடம்பெற்றுள்ள பொதுவான ஊர்ப்பெயர்கள் குறித்து விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

ஊர்ப் பெயர்கள் தோற்றம்

ஊர், குடி, சேரி, நகர், புரம் என்னும் பெயர்கள் மக்கள் வசிக்கும் பகுதியினைக் குறிக்கப் பயன்படுகின்றன. இதனை "நிலம்-மலை-காடு-வயல்-ஆறு - கடல் - நாடு - நகரம் - குடி - படை - குலம் - கோ - தேவு -தலம் முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டே ஊர்ப் பெயர்கள் தோற்றம் பெறுகின்றன" என ரா.பி.செதுப்பிள்ளை அவர்களின் (தமிழகம் ஊரும் பேரும் - முதற்பதிப்பின் முகவுரை) ஊர்ப்பெயர் ஆய்வு மெய்ப்பிக்கும்.

நெடுந்தொகையில் ஊர்ப்பெயர்கள்

நெடுந்தொகை என்னும் சிறப்புக்குறிய அகநானூற்றில் இடம் பெற்றுள்ள ஊர்ப்பெயர்கள், அவ்வூர்களின் தன்மை, காலப்பழமை, அளவு (பரப்பு) ஆகியவற்றின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளன. அவை 1. சிறுகுடி (அ) சீறூர், 2. பேரூர், 3. மூதூர், 4. நல்லூர், 5. சிறுநல்லூர், 6. இன்னூர். 7. பாழூர் என்பனவாகும்.

1. சிறுகுடி / *சீறூர்*

சிறுகுடி என்னும் பெயர் அகநானூற்றில் பதினைந்து பாடல்களிலும் (அகநா.7:22, 75:7, 103:7, 110:13, 192:12, 228:13, 232:6, 250:11, 284:7, 300:14, 312:5, 315:18, 318:12, 320:5, 331:7), சீறூர் என்னும் பெயர் இருபத்து இரண்டு பாடல்களிலும் (அகநா.9:10, 52:8, 63:13, 77:12, 87:14, 104:13, 107:18, 152:2, 160:17, 171:8, 203:15, 225:13, 265:20, 283:5, 287:5, 321:10, 329:4, 331:8, 367:5, 368:15, 369:22, 384:6) இடம் பெற்றுள்ளன. இவை அனைத்தும் குறுகிய அளவு மக்களைக் கொண்ட ஊர், மக்கள் அதிகம் வாழாத சிற்றூர் என்ற பொருளில் குறிக்கப்பெற்றுள்ளன.

2. பேரூர்

அருவி பாயும் நீர்த்துறையினை உடைய பெரிய ஊர் பேரூர் என அழைக்கப்பட்டுள்ளது. இதனை,

"அருவி பாய்த்த ….. …..
….. ….. ….. …..
சாரல் பேரூர்" (அகநா.382:9-11)

என்னும் பாடலடி விளக்கும்.

3. மூதூர்

மூதூர் என்பதற்கு பழமை வாய்ந்த ஊர், முதிய ஊர், காலத்தால் முந்தைய பழைய ஊர் என்பது பொருளாகும். மூதூர் என்னும் சொல்லாட்சி அகநானூற்றில் ஒன்பது இடங்களில் இடம் பெற்றுள்ளது. இவை,

"விழவுத் தலைக்கொண்ட பழவிறல் மூதூர்" (அகநா.17:19)
"அழுங்கல் மூதூர்" (அகநா.113:8)
"அருங்கடிக் காப்பின் அஞ்சுவரு மூதூர்" (அகநா.114:12)
"அழியா விழவின் அஞ்சுவரு மூதூர்" (அகநா.115:1)
"பழவிறல் மூதூர்ப் பலருடன் துவன்றிய" (அகநா.141:10)
"குருஉக்கொடிப் பகன்றை சூடி மூதூர்" (அகநா.316:6)
"ஆகொள் மூதூர்" (அகநா.342:6)
"அம்பல் மூதூர்" (அகநா.347:7)
"விழவுகொள் மூதூர்" (அகநா.352:5)

என்று பெரும்பாலும் பழமையும், காவலும் நிறைந்தது என்றும் பொருளில் கையாளப்பெற்றுள்ளது.

4. நல்லூர் / சிறுநல்லூர்

நல்லூர் என்பது உறைதற்கு இனிய தன்மை உடைய ஊர் எனப் பொருள்படும். இந்நல்லூர் என்னும் பெயரும், சிறுநல்லூர் என்னும் பெயரும் முல்லை, நெய்தல் நிலங்களில் உள்ள ஊர்களுக்கு இடப்பட்டுள்ளமை சுட்டத்தக்கது. (அகநா.234:15, 310:17, 350:15, 394:16)

5. இன்னூர்

தங்குதற்கு இனிய தன்மை உடைய ஊரை இன்னூர் என அழைத்துள்ளனர். இதனை,

"தென்கடற் பரப்பினெம் உறைவ இன்னூர்க்கே" (அகநா.340:24)

என்னும் பாடலடி வழி அறிகிறோம்.

6. பாழூர்

பாழூர் என்பது பாழான, அழிந்துபட்ட ஊரைக் குறிக்கும். பாழூர் குறித்து அகநானூறு,

"பகல்செய் பல்கதிர்ப் பருதியஞ் செல்வன்
அகல்வாய் வானத் தாழி போழ்ந்தென
....
பாழூர்க் குரம்பையில் தோன்றும்" (அகநா.229:1-6)

எனக் குறிப்பிடுகின்றது.

மலையும், மலை சார்ந்த பகுதியாகிய குறிஞ்சி நிலத்தினைக் குறிக்க மலை, கோடு, குன்று, பாறை, கல், கிரி, குறிச்சி என்பனவும் முல்லை நிலத்தைக் குறிக்க காவு, பொழில், தண்டலை, சோலை, தோப்பு, சுரம், வனம், பட்டி, மந்தை என்பனவும் இதேபோல மருதம், நெய்தல், பாலை நிலங்களுக்கும் அவ்வந் நிலம் சார்ந்த பெயர்களும் ஊர்ப் பெயர்களாக அமைவதுபோல வசிக்கும் மக்களின் அளவு, ஊர்ப்பரப்பு (எல்லை) முதலியவற்றைக் கொண்டு சங்கத் தமிழர்கள் ஊர்ப் பெயரை இட்டுள்ளனர். சிறிய பகுதியினைச் சீறூர், சிறுகுடி என்றும் பெரும் நிலப்பகுதியைப் பேரூர் என்றும் வழங்கியுள்ளனர். காலத்தால் மூத்த, பழமை வாய்ந்த ஊர்களை மூதூர் என்று அழைத்து வந்துள்ளனர். ஊர்களின் சிறப்புத் தன்மை காரணமாக நல்லூர் என்றும், சிறுநல்லூர் என்றும் இன்னூர் என்றும் அழைத்துள்ளனர். இழப்பு, இழிவு காரணமாகப் பாழ்பட்ட ஊர் பாழூர் என்று அழைக்கப்பட்டுள்ளது என்பது மேற்சுட்டிய செய்திகளின் வழிப் புலனாகிறது.

அகநானூற்று
ஊர்ப்பெயர்கள்

↓ அளவு (எல்லை)
↓
1. சிறுகுடி
2. சீறூர்
3. பேரூர்

↓ காலம்
↓ மூதூர்

↓ தன்மை
↓ சிறப்பு
↓
1. நல்லூர்
2. சிறுநல்லூர்
3. இன்னூர்

↓ இழிவு
↓ பாழூர்

68. சிலம்பில் காவிரிப்பூம்பட்டினம்

முனைவர் மி.சி. தியாகராஜன்
உதவிப்பேராசிரியர்
தமிழியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

அரங்க. லோகாம்பாள்
முனைவர்பட்ட ஆய்வாளர்
தேசியக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி-1

வீரத்தையும் காதலையும் முதன்மையாகக் கொண்டு ஒன்றோடோன்று தொடர்பற்ற தனிப்பாடல்களாகச் சங்கப்பாடல்கள் திகழ்கின்றன. கதையமைப்புடன் தொடர்நிலைச் செய்யுள்களாகப் பாடல்கள் ஒருங்கிணைக்கப்பட்டுக் 'காப்பியம்' எனும் பெயரால் வழங்கும் வழக்கம் நடைமுறைக்கு வந்தது. இக்காப்பிய அமைப்பிற்கு முதன்முதலில் வித்திட்டவர் இளங்கோவடிகள். தொல்காப்பியர் கூறும் வனப்புகளில் தொன்மையும், தோலும் காப்பியத்திற்குரியன. அத்தகைய சிறப்பினைப் பெற்றுத் திகழும் முதற் காப்பியம் சிலப்பதிகாரம் ஆகும். பல சிறப்புப்பெயரால் அழைக்கப்படுகின்ற சிலப்பதிகாரத்தில் மூவேந்தர்கள் ஆட்சிபுரிந்த ஊரின் சிறப்புகள் கூறப்பட்டுள்ளன.

ஊர்ப்பெயர்கள்

மக்கள் இடம் விட்டு இடம் பெயர்ந்த நாடோடி வாழ்க்கையை விட்டு இனக்குழுக்களாக, சமுதாயமாக ஒன்றுகூடி வாழ்ந்தபோது, அவர்களின் இடத்தினைச் சுட்டிக்காட்டுவதற்காக ஊர்ப்பெயர்கள் இடப்பட்டன. அவ்வாறு உருவாக்கப்பட்ட பெயர்கள் ஏதாவது ஒரு காரணத்தை அடிப்படையாகக் கொண்டே அமைக்கப்பட்டன. மனிதப் பண்பாட்டையும். நாகரிகத்தையும் ஆராய்ந்து வெளிப்படுத்துவதற்குத் தொல்பொருளாய்வு பயன்படுவது போல இடப்பெயராய்வும் பயன்படுகிறது எனக் கூறலாம். அவ்வகையில் இளங்கோவடிகளால் படைக்கப்பட்ட சிலப்பதிகாரத்தில் பல்வேறு நகரங்களும், ஊர்களும் சிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் அந்நகர, ஊர் மக்களின் பண்பாட்டையும் நாகரிகத்தையும் அறிய முடிகிறது. ஆய்வுச் சுருக்கம் கருதி காவிரிப்பூம்பட்டினத்தை இளங்கோவடிகள் எவ்வாறு படைத்துள்ளார் என்பதை விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

காவிரிப்பூம்பட்டினம்

இந்தியாவின் புண்ணியநதிகளின் சிறப்பினை "கங்கேச யமுனேசவா, கோதாவரி, சரஸ்வதி, நர்மதே, சிந்து, காவேரி ஐலேஸ்மின் சன்னதி குரு" என்ற ரிக்வேத வரிகள் எடுத்துக்காட்டுகின்றன. இந்த நதி ஆதாரங்களில் ஒன்றான காவிரி நதிக்கரையோரம் அமைந்திருந்த காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பினை சிலப்பதிகாரத்தில் காணமுடிகிறது. அக்காலத்திலேயே தமிழர்கள் கடல் பற்றிய அறிவினைப் பெற்றிருந்தனர் என்பதை எடுத்தியம்பும் நகரமாக இந்நகரம் திகழ்ந்தது.

சோழ மன்னர்களின் கல்வெட்டுகளில் 'பட்டினப் பெருவழி' என்று குறிக்கப்படுவது காவிரிப்பூம்பட்டினத்திற்கு செல்லும் 'பெருவழி' என்று அறிஞர்கள் குறிப்பிடுவர். 19-ஆம் நூற்றாண்டில் இலண்டன் மாநகரம் காட்சி அளித்ததைவிட இராண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் காவிரிப்பூம்பட்டினம் சிறப்பாக விளங்கியதாக யவன ஆசிரியர் தாலமி எழுதிய குறிப்பின் மூலமும், பெரிப்ளூஸ் நூலின் மூலமும் அறிய முடிகிறது. மூன்று லட்சத்திற்கும் அதிகமான மக்களைக் கொண்டு பேரூராய் திகழ்ந்தது. இந்நகரம் ஒருபகுதி பட்டினப்பாக்கம் எனவும், மீனவர்கள் வணிகர்கள் வாழ்ந்த பகுதி மருவூர்பாக்கம் எனவும் இருபிரிவுகளைக் கொண்டுதிகழ்ந்தது.

இயற்கைத் துறைமுகம்

பழந்தமிழர்கள் கடல் கடந்து வாணிபம் செய்வதற்கு இயற்கையான துறைமுகமாகக் காவிரிப்பூம்பட்டினம் விளங்கியது. இங்கிருந்து முத்துக்கள், மிளகு போன்ற வாசனைத் திரவியங்களை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்தனர். ரோமாபுரி மன்னர்களுக்கும், பிரபுக்களுக்கும் மஸ்லின் துணிகள் ஏற்றுமதி செய்யப்பட்டு அவற்றிற்குப் பதிலாக அரேபியக் குதிரைகள் பெறப்பட்டன. தமிழர்கள் மரக்கலன்கள்

செய்வதில் திறமை பெற்றிருந்தனர். மரக்கலன்களை ஒட்டுவதற்கு ஆணி, திருகு பயன்படுத்தாமல் ஒருவிதப் 'பிசின்' பயன்படுத்தப்பட்டது. ஐதராபாத், செகந்திராபாத் நகரங்களை 'இரட்டை நகரம்' என்று அழைப்பது போல மருவூர்ப்பாக்கம், பட்டினப்பாக்கம் இரண்டும் சேர்ந்து காவிரிப்பூம்பட்டினத்தின் 'இரட்டை நகரம்' என்று பெருமையுடன் கூறலாம்.

மருவூர்ப்பாக்கம்

சோழ நாட்டின் ஒரு பகுதியாக விளங்கும் மருவூர்ப்பாக்கத்தில் சோழ நாட்டு வணிகவளம், கட்டிட அமைப்பு, தொழில் வளம் ஆகியன வளர்ச்சிபெற்ற நிலையில் காணப்பட்டது. இவ்வூர் கடற்கரையோரம் அமைந்திருந்ததால் குடியிருப்புகள் உறுதியாகவும், பெரியதாகவும் அமைக்கப்பட்டு இருந்தன. வீடுகளுக்குப் பெரிய துளைகளை இட்டு நல்ல காற்றோட்டத்துடன் சுகாதாரமாக வசிக்கும்படி உருவாக்கப்பட்டது. கடல் வாணிபம் சிறந்து விளங்கியதால் யவனர்களின் இருப்பிடமும் அங்கு காணப்பட்டது. யவனர் என்ற சொல் கிரேக்கர்களைக் குறிப்பதாக வரலாற்று ஆசிரியர்கள் கூறிச்செல்வர். இரு நாட்டு மக்களிடமும் வர்த்தகப் பரிவர்த்தனைகள் முன்னேற்றம் அடைந்து காணப்பட்டதால் யவனர் குடியிருப்புகள் மருவூர்ப்பக்கத்தில் காணப்பட்டதாக வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுவர்.

> "கயவாய் மருங்கில் காண்போர் தடுக்கும்
> பயன் அளவு அறியா யவனர் இருக்கையும் "

என்ற சிலப்பதிகார வரிகள் இதனை மெய்ப்பிக்கின்றன. இன்றைய காலகட்டத்தில் பன்னாட்டுத் தொழில் வளங்களை மேம்படுத்துவதற்காகத் தங்கள் அலுவலகங்களை பிற நாடுகளில் ஏற்படுத்திக் கொள்கின்றனர். பல நூற்றாண்டிற்கு முன்பே தமிழர்கள் இம்முறையைப் பின்பற்றினர் என்பதை மருவூர்ப்பாக்கம் காட்டுகிறது. மருவூர்ப்பாக்கத்தில் அமைந்திருந்த நாளங்காடி, அல்லங்காடி போன்றன நாட்டின் வர்த்தகச் சிறப்பைக் காட்டுகின்றன.

வாணிப வளம் சிறந்து விளங்கிய இவ்வூரில் என்னென்ன பொருள்கள் எந்தெந்தப் பகுதியில் கிடைக்குமெனச் சிலம்பு எடுத்துக் காட்டுகிறது.

> *"பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்*
> *கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்*
> ....
> *மரங்கொல் தச்சரும் கருங்கைக் கொல்லரும்*
> *கண்ணுள் வினைஞரும் மண்ணீட்டாளரும்"*

பட்டு, பருத்தி நூல், எலி மயிர்களைக் கொண்டு தயாரிக்கப்படும் ஆடை வகைகள், உணவுப் பண்டங்கள், நகை விற்பனைப்பகுதிகள், உணவகங்கள் போன்றவை நகரத்தின் ஒரு பகுதியிலும், சித்திரக்காரர்கள், பொம்மை செய்வோர், சிலை வடிப்போர், நகை செய்வோர், ஆடைகளைத் தைப்போர், தோல் பொருட்களை விற்போர், குற்றமில்லாத ஒலி இசைகளை இசைக்கும் யாழ், குழல் போன்ற கருவிகள் செய்வோரும் மற்றொரு புறத்தில் இடம் பெற்றிருந்தனர். சிறிய முதலீட்டில் கைத்தொழில் செய்வோரும், பிறர் கூறிய வேலையைச் செய்யும் பணியாளர்களும் மருவூர்ப்பாக்கத்தில் குடிகொண்டிருந்தனர். சோழ நாட்டின் வாணிபம் சார்ந்த தொழில்கள் அனைத்தும் மருவூர்ப்பக்கத்தில் நடைபெற்றதாகச் சிலப்பதிகாரம் எடுத்துரைக்கிறது.

பட்டினப்பாக்கம்

சோழப் பேரரசின் நிர்வாகத்துறை அனைத்தும் பட்டினப்பாக்கத்தில் காணப்பட்டது. அகன்ற இராஜவீதிகள், செல்வந்தர்களின் மாளிகைகள், கலைஞர்கள், இசைப்புலவர்கள், சான்றோர்கள் என அவரவர் தொழில்முறைக்கேற்றவாறு தனித்தனி வீதிகள் பட்டினப்பாக்கத்தில் அமைந்திருந்ததாக இளங்கோவடிகள் சிலம்பில் எடுத்துக் காட்டுகிறார். சோழ நாட்டின் பாதுகாப்புக்கலன்களும் பட்டினப்பாக்கத்தில் இடம் பெற்றிருந்தது. முத்துக்கோப்போர், சூதர், மாகதர், வேதாளிகர், நாழிகைக் கணக்கர், சாந்திக்கூத்தர், காமக் கிழத்தியர், பரிசம் கொள்வார், வீட்டு வேலை செய்யும் மகளிர்

முதலியவர்கள் பல வீதிகளில் குடிகொண்டிருந்தனர். அரசவீதியைச் சுற்றி குதிரைப்படைவீரர்கள், யானைப்படை வீரர்கள், தேர்ப்படையினர், காலாட்படையினர் தங்கள் வீடுகளை அமைத்து முழுநேரமும் பாதுகாப்புப்பணியில் ஈடுபட்டிருந்தனர்.

"இருந்து புறஞ் சுற்றிய பெரும்பாய் இருக்கையும்
பீடுகெழ சிறப்பிற் பெரியோர் மல்கிய
பாடல்சால் சிறப்பிற் பட்டினப் பாக்கமும்"

பெருமைமிக்க பெரியோரும் இவ்வூரின்கண் வாழ்ந்ததாக சிலப்பதிகாரம் இயம்புகிறது. நாளங்காடிப் பூதம் என்ற இடத்தில் வீரர்கள், மரபலி இடுவோர் தங்கள் நேர்த்திக்கடனைச் செலுத்துவர். இருவேந்தர்கள் போர் செய்ய முற்படும்போது தங்கி இருந்த பாசறையைப்போல மருவூர்ப்பாக்கம், பட்டினப்பாக்கம் என்ற இரு ஊர்களுக்கும் நடுவே கோயில் அமைந்திருந்தது.

அறநெறி தவறா ஆட்சி மன்றம்

பழங்கால அரசியலில் நீதித்துறைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. சேக்கிழார், தனது பெரியபுராணத்தில் ஒரு குற்றத்தை விசாரித்து எவ்வாறு நீதிவழங்க வேண்டும் என்பதை மூன்று அடிப்படைப் பிரிவுகளாக எடுத்துக்காட்டியுள்ளார்.

1. ஆட்சி (நடைமுறை)
2. ஆவணம்
3. அயலவர் சாட்சி என்ற மூன்று அடிப்படைகள் நீதி வழங்க

இன்றியமையாததாகக் கருதப்படுகிறது. குற்றங்களை விசாரிக்கும் போது தவறு ஏற்பட்டால் அவற்றை 'மனிதவழு' என்கிறோம். சோழ அரசர்கள் நீதிநெறியில் தவறுகள் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக அப்பொறுப்பை தெய்வத்திடம் விட்டுவிட்டனர். புகார்நகரில் திருட்டினைத் தடுக்க வெள்ளிடைமன்றம், ஊனம் நீங்க இலஞ்சிமன்றம், துன்பம் நீங்கப்பெற நெடுங்கல்மன்றம், தீயவரைத் தண்டிக்கும் பூதச்சதுக்க மன்றம், நீதிநெறி, தவறினால் கண்ணீர்விடும் பாவைமன்றம் என ஐவகை மன்றங்கள் ஏற்படுத்தப்பட்டுச் சோழர்கள் நீதிதவறாத ஆட்சியை மேற்கொண்டனர் என்பதைச் சிலம்பில் இளங்கோ எடுத்துரைக்கிறார்.

"உரை நூல்கோடி ஒரு திறம் பற்றினும்
நாவோடு நவிலாது, நவை நீர் உகுத்துப்
பாவை நின்றழும் பாவை மன்றமும்"

என்ற பாடல் அடிகள் மூலம் அறியலாம்.

பட்டினப்பாக்கத்திற்குச் சாட்சி கூற வருவோர் பொய்சாட்சி கூறமுடியாது. தவறாக நீதி வழங்கினால் பாவை கண்ணீர் விட்டு நீதியை நிலைநாட்டியது. மன்றங்களின் செய்திகள் கற்பனையாக இருப்பினும், மக்களுக்கு ஒருவிதப் பயத்தை உண்டாக்கித் தவறுகள் செய்யவிடாமல் தடுத்தது.

நிறைவாக

நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரத்தில் காவிரிப்பூம்பட்டினம் எனும் ஊரின் சிறப்பினை இளங்கோவடிகள் மனித நாகரிகத்தின் வெளிப்பாடாக விளங்கும் புற அமைப்புகள் மட்டுமல்லாது, மனிதநேயப் பண்பாடுகள் நிறைந்த அகவாழ்வினையும் முழுமையாகப் படைத்துள்ளார் என்பதை அறிய முடிகிறது.

69. சங்கம் வளர்த்த மதுரை

முனைவர். வெ. திருவேணி,
18/1, சுப்பிரமணியபுரம்,
10 வது வீதி(தெற்கு வளைவு),
காரைக்குடி – 630 003.

தமிழர் நாகரிகம், தமிழ்மொழி, தமிழ்ப்பண்பு இவற்றின் தாயகமாய் விளங்கி வருவது மதுரை மூதூர். குறிஞ்சி, முல்லை, மருதம் என்னும் மூவகை நிலப்பண்புகளை மதுரை கொண்டுள்ளது. பல நூறு ஆண்டுகளாய் பாண்டியர்களின் ஆளுகையின் கீழ் மதுரை இருந்து வந்தது. புராண வரலாற்றுச் சிறப்புடையது மதுரை. கி.பி. 77-இல் பிளினி என்பவரும், கி.பி. 140-இல் தாலமி என்பவரும் மதுரையின் பழம்பெருமையைத் தத்தமது நூல்களில் குறித்துள்ளதைக் காணலாம்.

திருக்குறள் அரங்கேற்றம்:

தமிழ்ச்சங்கம் கண்ட மதுரையில் தமிழ்ப்புலவர்கள் ஒன்றுகூடி, தமிழாராய்ந்த காரணத்தால் 'மதுரைக்கூடல்' என்னும் பெயரும் இவ்வூருக்கு உண்டு. இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்களில் பாண்டியர்தம் பழம்பெருமை விளக்கப்பட்டுள்ளது. மெகஸ்தனிஸ் எனும் கிரேக்க நாட்டுத்தூதர் தமது இண்டிகா என்ற நூலில் பாண்டிய நாடு தென்கடற்கரை வரை பரவியிருந்தது என்று கூறியுள்ளார். கௌடில்யர் தம்'அர்த்தசாஸ்திரம்' என்னும் நூலில் பாண்டியநாட்டின் சிறப்புகளை விரிவாகக் குறிப்பிட்டுள்ளார். உலகப் பொதுமறையான திருக்குறளும் மதுரையில் தான் அரங்கேற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது.

சங்க காலம்:

சங்க இலக்கியங்களின் வாயிலாக பாண்டியர் பலரைப்பற்றி நாம் அறிந்து கொள்ள முடிகிறது. இச்சங்க காலத்தை, முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என மூன்றாகப் பிரித்துக் கூறுவர்.

முதற்சங்கம், அகத்தியர் முதலானோரால் நடத்தப்பட்டது. பல்லாண்டு நடைபெற்ற இச்சங்க காலத்தில் அகத்தியம், பரிபாடல் முதலிய நூல்கள் அரங்கேற்றப்பட்டன. இடைச்சங்கம் 59 மன்னர்களின் ஆதரவைப் பெற்று (வெண்தேர்ச்செழியன் முதல் முடத்திருமாறன் வரை) விளங்கியது.

கடைச்சங்கம் முடத்திருமாறன் முதல் உக்கிரப்பெருவழுதியின் காலம் வரை சிறப்புற்றது. பிற்காலப் பாண்டியர்களில் ஒருவரான குலசேகரப்பாண்டியன் காலத்தில் இன்றுள்ள மதுரை மாநகரின் அடிப்படை அமைப்பு உருவாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

மதுரைக்குப் பெருமை சேர்த்த திருமலைநாயக்கர்:

மதுரைக்குப பெருமை சேர்த்த நாயக்க மன்னர்களுள் திருமலைநாயக்கர் தலைசிறந்தவராவார். அவர் திருமலைநாயக்கர் மஹால், ஆயிரங்கால் மண்டபம் ஆகியவற்றைக் கட்டியதோடு, அழகர்கோயில், திருப்பரங்குன்றம் கோயில் ஆகியவற்றிற்குத் திருப்பணி செய்தார். நாயக்கர் மரபில் வந்த பேரரசி ராணி மங்கம்மாள் "தமுக்கம்" என்ற பெயரில் ஒரு மாளிகையைக் கட்டினாள். 1786-இல் மதுரை மாவட்டம் உருவாக்கப்பட்டது. இந்திய விடுதலைப்போரின் பின்னணியில் மதுரை மாவட்டம் சிறப்பிடத்தை வகித்தது.

மதுரையின் வேறு பெயர்கள்:

வரலாற்றுச் சிறப்பு பெற்றிருப்பதுடன் மக்கள் தொகை செறிந்த நகராயும் மதுரை மூதூர் திகழ்கிறது. இதன் வேறு பெயர்களாவன: நான்மாடக்கூடல், தென்மதுரை, ஆலவாய், சிவராசதானி, கடம்பவனம் என்பதாகும். மதுரை நகரானது, நாகமலைக்கும், யானைமலைக்குமிடையே வைகை ஆற்றின் கரையில் அமைந்துள்ளது. இந்நகரத்தின் அமைப்பு தாமரை மலர் போன்று அமைந்துள்ளது. ஆடி வீதி, சித்திரை வீதி, ஆவணி மூலவீதி, மாசி வீதி என தமிழ்த் திங்கள்களின் பெயர்களை நகரின் வீதிகள் சூடியுள்ளன. பாடுதமிழ் வளர்த்த கூடல், தமிழ் கெழு கடல், மதுரை மூதூர், மாண்புடை மரபின் மதுரை, மதுரைப் பெருநன் மாநகர், மணிமதுரை, மாடமதுரை மாநகர் என இலக்கியங்களில் மதுரை சிறப்பிக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டினர் இந்நகரத்தை "கோவில் மாநகர்" என்றும் "விழா மிகுந்த நகர்" என்றும், "தென்னிந்தியாவின் ஏதென்ஸ்" என்றும் புகழ்ந்திருப்பதை உணரலாம்.

திருவிளையாடல் புராணத்தில் மதுரை:

திருவிளையாடல் புராணம் மதுரை மாநகரின் வரலாற்றைக் கூறுவதாகும். அதில் காணும் கதைகளுக்கேற்ப அடையாளச் சின்னங்களை மதுரையில் இன்றும் காணலாம். வைகை ஆறு குண்டோதரனின் தாகத்தைத் தணிக்க ஏற்பட்டது. சமணர் மதுரையை வெல்ல அனுப்பிய பசு, நாகம், யானை இம்மூன்றின் பெயர்களில் மூன்று மலைகள் திகழ்கின்றன. பசுவை வெல்வதற்கு அனுப்பப்பட்ட இடமும் ஒரு மலையாகி 'அழகர்மலை' என்னும் பெயரால் குறிப்பிடப்படுகின்றது. மாணிக்கவாசகருக்காக சொக்கநாதர் நரிகளைக் குதிரைகளாக்கிய இடம் நரிக்குடி. பின்னர் குதிரைகள் நரிகளாகச் சென்ற இடம் செல்லூர். அந்நரிகள் கத்திச் சென்ற இடம் 'கத்துநரி' என்பதாகும். இப்பொழுது 'தத்தனேரி' என வழங்கப்படுகிறது. அந்நரிகள் ஒன்றையொன்று தொடர்ந்து சென்ற இடம் தோடனேரி. 'மண்டியூர்' என்பது 'வண்டியூர்' என்றாகியுள்ளது. குதிரைகள் வந்தபொழுது இங்கு புழுதி மண்டியதால் இப்பெயர் பெற்றது. பாண்டியன் குதிரைகளை விலை மதிப்பிட்ட இடம் மதிச்சயம். பாண்டியர்களின் அரண்மனை இருந்த இடம் மாநகர். வெள்ளியம்பலத்தெரு. சிவபெருமான் கால் மாற்றி ஆடியதைக் குறிப்பது ஆகும். வலைவீச்சுத் தெப்பக்குளம், அவன் மீன் பிடித்தத் திருவிளையாடல் நிகழ்ச்சியைச் சார்ந்ததாகும்.

சிவபெருமான் வளையல் விற்ற திருவிளையாடலால், வளையல்காரத்தெரு எனப்பெயர் பெற்றது. அவர் பிட்டு விற்ற இடம் பிட்டுத்தோப்பு. அவர் குண்டோதரனுக்குச் சோறு இட்ட இடம் அன்னக்குழி மண்டபம். 'பழங்காநத்தம்' என்னும் மதுரையின் புறநகர்ப் பகுதியிலுள்ள இடுகாடு கோவலன் பொட்டலாகும். இவ்விடத்தில் கோவலன் கொலையுண்டதாகக் கூறுவர். மதுரையில் இரவு முழுவதும் கடைகள் பெரும்பாலும் திறந்திருக்கின்றன. மதுரையிலும், அதன் சுற்றுப்புறங்களிலும் மல்லிகைத் தோட்டங்கள் மிகுதியாதலால், இங்கிருந்து தினந்தோறும் மாலையில் சிங்கப்பூர், மலேசியா போன்ற வெளிநாடுகளுக்கு மல்லிகைப்பூக்கள் விமானம் மூலம் ஏற்றுமதியாகின்றன.

மதுரையின் சிறப்பு:

மணிமேகலைக் காப்பியம் தோன்றிய இடம். திருவாசகம் தந்த மணிவாசகர் வாழ்ந்த இடம். சைவசமயத்தின் பெருமையைத் திருஞானசம்பந்தர் நிலைநிறுத்திய இடம். பெரியபுராணம் குறிப்பிடும் 63 நாயன்மார்களில் நான்குபேர் மதுரையைச் சேர்ந்தவர்கள். அவர்களில் 1. 'மங்கையர்க்கரசியார்', 2. நின்றசீர் நெடுமாறன், 3. குலச்சிறையார், 4. மூர்த்தி நாயனார் ஆகியோராவார். தென்னிந்திய வரலாற்றில் குறிப்பிடத்தக்க இடம் மதுரை என்பதை இதன் மூலம் உணரலாம்.

சிலப்பதிகாரக் கண்ணகியும் மதுரையும்:

காவிரிப் பூம்பட்டினத்தில் வசித்த கண்ணகி கோவலன் இருவரும் பிழைப்பிற்காக மதுரைக்கு வந்தனர். அவர்களை வழியில் சந்தித்த கவுந்தியடிகள் என்னும் பெண் துறவி அவர்களை மதுரையில் உள்ள 'மாதரி' என்பவளின் வீட்டில் அடைக்கலமாகத் தங்கச் செய்கிறாள். கண்ணகியின் கணவன் கோவலன், மனைவியின் சிலம்பை விற்றுத் தொழில் தொடங்கலாம் என்ற நோக்கத்தில் ஊருக்குள் சென்றான். இவ்வேளையில் அவ்வூரை ஆண்ட பாண்டிய நெடுஞ்செழியனின் மனைவி கோப்பெருந்தேவியின் சிலம்பை அபகரித்த அரண்மனைப் பொற்கொல்லன், இந்தப்பழியைக் கோவலன் மீது போட்டு விட்டான். இதனைத் தீர விசாரிக்காத பாண்டிய மன்னன், கோவலனுக்கு மரண தண்டனை கொடுத்து விட்டான். கணவனை இழந்த கண்ணகி கோபத்துடன் பாண்டியன் சபையில் தனக்கு இழைக்கப்பட்ட அநீதியை ஆதாரத்துடன் கூட்டிக் காட்டினாள். தவறை உணர்ந்த மன்னனும் இராணியும் அக்கணமே உயிர்விட்டனர் என்று சிலப்பதிகாரம் சுட்டுகிறது.

புலவர்களுக்குப் பெருமை சேர்த்த மதுரை:

தமிழும் இலக்கியமும் வளர்த்த சங்கங்களியல் மதுரையில் மையம் கொணடதால், சங்க காலத்தில் மதுரையைத் தம்பெயரின் முன் வைத்துத் தம்மை அடையாளம் காட்டிக் கொண்டனர் எண்ணற்ற புலவர்கள். மதுரைக் கூல வாணிகன் சீத்தலைச் சாத்தனார், மதுரை ஈழத்துப் பூதத்தேவனார், மதுரைக்கணக்காயனார் மகன் நக்கீரனார் எல்லாம் நமக்குத் தெரிய வந்த பழக்கமான பெயர்கள். மாணிக்கவாசகர் அமைச்சராக இருந்ததும் அரிமர்த்தப் பாண்டிய மன்னனிடம்தான். மதுரையைச் சிறப்பிக்கும் அதை மையமாகக் கொண்டுள்ள இலக்கியங்கள் என்றால், புறநானூறு, சிலப்பதிகாரம், மதுரைக்காஞ்சி, பரிபாடல், திருமுருகாற்றுப்படை என்றெல்லாம் தொடங்கி அவற்றைக் கடந்து, திருவிளையாடற்புராணம், சுந்தரபாண்டியம் என்றெல்லாமும் கடந்து மதுரைக்கலம்பகம், மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழ் என எத்தனையோ நூற்றாண்டுகள் நம் மனதில் இடம்பிடித்த இலக்கியங்களைக் காண முடிகின்றது.

நக்கீரர் சங்க காலப்புலவர். இவர் பாண்டிய நாட்டிலுள்ள மதுரையில் வாழ்ந்தவர். பெண்ணின் கூந்தலில் இயற்கையில் வாசனையுண்டா? என்று சிவனுடனேயே, அஞ்சாது வாதிட்டவர். அப்பாடல் இதோ:

"கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியல்
செறிஎயிற் றறிவை கூந்தலின்
நறியவும் உளவோ நீயறியும் பூவே".

மதுரைக்காஞ்சி:

பத்துப்பாட்டில் மிக நீண்ட பாட்டாக இருப்பது 782 அடிகள் கொண்ட மதுரைக்காஞ்சி, பழந்தமிழ் நகரமாகிய மதுரையின் பலவகை வருணனையும் இதில் காணலாம். இதில் புகழ்ந்து பாடப்படும் அரசன் பாண்டியன் நெடுஞ்செழியன், வாழ்க்கையின் நிலையாமையைக் கூறி நல்வழியை வற்புறுத்துவது காஞ்சித்திணை. மதுரையில் வாழும் தலைவனுக்கு எடுத்துக் கூறிய காஞ்சி ஆகையால் மதுரைக் காஞ்சி எனப்பெயர் பெற்றது. மேற்கு வானத்தில் தோன்றும் வளர்பிறைபோல் பாண்டியனுக்கு வெற்றி பெருக வேண்டும் என்றும், கிழக்கு வானத்தில் தோன்றும் முழுமதி போல் பகைவருடைய மேன்மை தேய்ந்து போகவேண்டும் என்றும் கூறிப் பாண்டியனைப் புலவர் வாழ்த்துகிறார்.

எத்தனையோ அரசுகள் மாறினும் பல நூற்றாண்டுகளாகப் புகழோடு விளங்கி வரும் நகரங்களுள் மதுரை ஒன்று. உலகத்தில் உள்ள மிகப் பழைய நகரங்களுள் அது ஒன்று. அதைப்பற்றிப் பாடிய பழங்காலத்துப் புலவர் ஒருவர், 'வெள்ளத்தின் நீர் முற்றுகையிட்டு மதிலைத் தாக்கும் பகை அல்லாமல் போர் முற்றுகை ஒன்றும் அறியாத கோட்டை உடைய ஊர்' என்று பாடியிருக்கிறார். பாட்டுக்கு உரிய கற்பனையழகு இதில் கலந்திருந்த போதிலும், பல மாறுதல்களுக்கு இடையே தொன்றுதொட்டுத் தொடர்ந்து வரும் அமைதியான வாழ்வு உடையது என்ற உண்மைக் கருத்தும் பொதிந்துள்ளது. மதுரை நகரத்தைப் பற்றிக் கூறப்பட்ட இந்தச் சிறப்பு ஏறக்குறைய தமிழகத்தின் தொன்மையான நாகரீக வாழ்வுக்கும் பொருந்துவது என்று சொல்லலாம். இதை உணர்ந்தால், தமிழ்மொழி பல நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து அமைதியாக வளர்ந்து வரும் வளர்ச்சியைப் பற்றித் தெளிவு பெறலாம்.

சங்கம் இருந்தது:

தமிழகத்தில் சங்கம் நிலவியதற்குச் சான்றுகள் பல உள்ளன. அச் சங்கம் ஒன்றா? இரண்டா? மூன்றா? என்று நிறுவுவதற்குத்தான் சான்றுகள் கிடைக்கவில்லை.

- தொல்காப்பியம் நிலந்தரு திருவின் பாண்டியன் அவையில் அரங்கேற்றப்பட்டதாகப் பனம்பாரனார் குறிப்பிடுகின்றார். இங்குக் கூறும் 'அவை', புலவர்கள் கூடிய கழகமாக இருக்கலாம்.
- "இமிழ்குரல் முரசம் மூன்றுடன் ஆளும்
  தமிழ்கெழு கூடல் தண்கோல் வேந்தே" -புறம்,58.
- "தமிழ்நிலை பெற்ற தாங்கரும் மரபின்
  மகிழ்நனை மறுகின் மதுரை" - சிறுபாணாற்றுப்படை
- நிலனாவில் திரிதரு உம் நீள்மாடக் கூடலார்
  புலனாவில் பிறந்த சொல்
  புதிதுண்ணும் பொழுதன்றோ" - கலி,35.
- " தென் தமிழ் நனனாட்டுத் தீதுதீர் மதுரை" – சிலம்பு
- "தென் தமிழ் மதுரைச் செழுங்கலைப் பாவாய்" – மணி

மேற்காட்டிய இலக்கியச் சான்றுகளால், மதுரையில் தமிழ் வளர்க்கும் நிலையம் இருந்தது என்பது புலனாகிறது.

- "சங்கத்தமிழ் மூன்றும் தா" - ஔவை.
- "தென் தமிழ் நாட்டகன் பொதியில்
  திருமுனிவன் தமிழ்ச் சங்கம்" – கம்பர்.

மேற்காட்டிய சான்றுகளால், பாண்டிய நாட்டில் தம்ழ்ச் சங்கம் இருந்தது. அங்குத் தமிழ் நூல்கள் அரங்கேற்றப் பட்டன. பாண்டியர்கள் அச் சங்கத்தின் புரவலர்களாக இருந்தனர் என்பது தெளிவாகிறது.

70. புறநானூற்றின் கடையெழு வள்ளல்களின் திருக்கோவிலூர்

ரெ.தினேஷ்குமார்
முனைவர் பட்ட ஆய்வாளர்
உருமு தனலட்சுமி கல்லூரி
திருச்சி – 19.

முன்னுரை

திருக்கோவிலூா் தென்னார்காடு மவட்டத்தில் உள்ளது. அப்படிப்பட்ட திருக்கோவிலூரை ஆட்சி செய்த திருமுடிக்காரி பற்றியும் சங்க காலம் முதல் இன்றைய காலக்கட்டம் வரை ஆராய்ந்து இங்கு கட்டுரையாக வரையப்படுகிறது.

திருமுடிக்காரியின் கொடை சிறப்புகள்:

குதிரைகளையும், ஏனைய செல்வங்களையும், இல்லையென்று இருப்போர்க்கு, இல்லையென்று சொல்லாமல் உலகம் வியக்கும்படி இனிய மொழிகளுடன் ஈந்தவன் இவன். பகைவர் அஞ்சும் வேற்படையை உடையவன். நீண்ட கையை உடையவன். இவன் தேர்வண்மலையன் எனவும் கூறப்பட்டுள்ளான். பெண்ணையாற்றங் கரையில் அமைந்துள்ள திருக்கோவிலூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த குறுநில மன்னன். இவனது நாடு 'மாலாடு' எனவும் மலைய மாநாடு எனவும் வழங்கப்பட்டது.

"துஞ்சா முழுவிற் தேவர் கோமான்
பெண்ணையும் பேரியாற்று"

என்று கூறுகிறது. மலையமான் என்னும் பரம்பரை அடைமொழியுடன் கூடிய அரசர்கள் வழிவழியாக ஆண்டு வரும் மரபில் உதித்த முள்ளூர் மன்னன் என்னும் பழமையும், பெருமையும் வாய்ந்த திருமுடிக்காரி என்பவன் பெருமை மிகு கடையெழு வள்ளல்களில் ஒருவனாக விளங்கினான். காரி வீரத்தில் மட்டுமின்றி நெஞ்சின் ஈரத்திலும் நிகரில்லா வள்ளலாக இருந்தான். முடியுடை வேந்தர்களிடம் பெற்ற செல்வங்களையும் தன்னை நாடி வரும் இரவலருக்கும், புலவர்களுக்கும் கொடுத்தான்.

"மூவருள் ஒருவன் துப்பு ஆகியர் என
ஏத்தினர் தருஉம் கூழே நும்குடி
வாழ்த்தினர் வருஉம் இரவலரதுவே"

மூவேந்தர்களுள் யாராவது ஒருவர் தம் படைக்கு கொட்டிக் கொடுக்கும் பொருளைத் தன்னை நாடி வரும் இரவலர்க்குத் தந்து விடும் இயல்பினை உடையவன். இவன் முள்ளூரைத் தனக்குரிய மலையாகக் கொண்டு ஆட்சி புரிந்தவன். சிறந்த போர் வீரனாகிய இவன் பகைவர் ஊர் சென்று பசுக்கள் பலவற்றைக் கவர்ந்து அவற்றை இரவலருக்குக் கொடையாக அளித்துள்ளதை,

" .... முனையூர்ப்
பல்லா நெடுநிரை வில்லி னொய்யுந்
தேர்வண் மலையன்"

என்று நற்றிணை குறிப்பிடுகின்றது. மலையமான் தன்னை வாழ்த்தும் புலவர்களுக்கு அவர்களின் நிலைமை அறிந்து பரிசில் தருவான். புள் சகுணம், தடையாக இருந்தாலும், திறன் அற்ற பாடல்களைப் பாடினாலும் அதை அவன் பொருட்படுத்துவதில்லை. காரி போர்களத்தில் அஞ்சாது எதிர் நின்று பகைவரை வெல்லும் ஆற்றல் படைத்தவன். தன்னிடம் யார் வந்து கேட்டாலும் இல்லை என்று சொல்லாமல் தருபவன் திருமுடிகாரி என நற்றிணை குறிப்பிடுகின்றது. மலையமான் தன்னை வாழ்த்தும் புலவர்களுக்கு அவர்களின் நிலைமை அறிந்த பரிசில் தருவான். புள் சகுணம் தடையாக இருந்தாலும், திறன் அற்ற பாடல்களைப் பாடினாலும் அதை அவன் பொருட்படுத்துவதில்லை. காரி போர்களத்தில் அஞ்சாது எதிர் நின்று பகைவரை வெல்லும் ஆற்றல் படைத்தவன். தன்னிடம் யார் வந்து கேட்டாலும் அவர்களது துன்பம் தீர்ந்திடும் வகையில் இல்லை என்று கூறாமல் பொருள்களைக் கொடுத்து உதவியுள்ளான். இதனால் காரியின் புகழ் தென்திசை மட்டுமின்றி வட திசையிலும் பரவியது.

நீயும் திருமகளும் நின்றாயால் குன்றெடுத்துப்
பாயும் பணிமறைத்த பண்பாளா – வாயில்
கடைகழியா வுள்புகா காமர் பூங்கோவல்
இடைகழியே பற்றியினி – (2167)

(முதல் திருவந்தாதி – 86)

என்று பொய்கையாழ்வாரால் மங்களா சாசனம் செய்யப்பட்ட இத்திருக்கோவிலூர் தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ளது. கடலூரிலிருந்து பேருந்துவசதிகள் உண்டு. விழுப்புரம்-காட்பாடி இரயில்பாதையில் திருக்கோவிலூர் ஒரு நிறுத்தமாகும். திருச்சியிலிருந்து வேலூர் செல்லும் பேருந்துகள் இவ்வூர் வழியாகச் செல்கின்றன.

பக்தி இலக்கிய காலத்தின் வரலாறுச் சிறப்புகள் :

பத்ம புராணம், பிரம்மாண்ட புராணம் இவ்விரண்டும் இத்தலம் பற்றி விவரித்துப் பேசுகிறது. பகவான் தனது வாமன அவதாரத்தை தம்மைக் குறித்து தவமிருந்த முனிவர்களுக்காக இத்தலத்தில் மீண்டும் ஒரு முறை வாமன அவதாரத்தைக் காட்டிக் கொடுத்த தலமாகும். பஞ்ச கிருஷ்ணத் தலங்களில் இதுவும் ஒன்றாகும். வாமன திருவிக்ரம அவதார திருத்தலம் என்றும் இது அழைக்கப்படுகிறது. கிருஷ்ணன் கோவில் என்றே வடமொழி நூல்கள் குறிக்கின்றன. ஆழ்வார்களால் முதன்முதலாகப் பாடப்பட்ட திவ்ய தேசம் இதுதான்.

பெருமாள் வாமன அவதாரம் எடுக்கும் முன்பே கிருஷ்ணக் கோவில் என்று பெருமையாக வழங்கப்பட்ட இத்தலத்தின் தொன்மை பல ஆண்டுகளுக்கு முந்தியதாகும். கிருஷ்ணன் வாழ்ந்த இந்த ஊரில் கோபாலன் என்னும் சொல்லே கோவலன் எனத் திரிந்தது. அந்த கிருஷ்ண பரமாத்மா எழுந்தருளியுள்ள தலமே திருக்கோவிலூர் ஆயிற்று. "தட்சிணபினாகினி" எனப்படும் தென்பெண்ணையாற்றங்கரையில் இத்தலம் அமைந்துள்ளது. மகாஞானிகளும், நாரதரும், கின்னரர்களும் இந்தக் கிருஷ்ண திருத்தலத்தில் தவம் செய்தனரென்றும் தானும் இத்தலத்தில் தவமியற்றியதாகக் கூறிய பிரம்மன், மார்க்கண்டேயரின் தந்தையான மிருகண்டு முனிவர் எம்பெருமானின் வாமன அவதாரத்தைக் காணவிரும்பி தவம் புரிந்த தலம் இதுதான் என்று பத்ம புராணத்தில் எட்டு அத்தியாயங்களில் (பிரம்மன் கூறியதாக) இத்தல வரலாறு பேசப்படுகிறது. முன்னொரு காலத்தில் மகாபலி என்னும் மன்னன் ஒருவன் தர்ம நியாயங்கட்கு கட்டுப்பட்டு ஆட்சி புரிந்து வந்தான். இருப்பினும் இமமன்னன் தேவர்களைத் துன்புறுத்தி அவர்கட்குத் தொடர்ந்து இன்னல்கள் விளைவித்துவந்தான். அசுரர்களின் குலகுருவான சுக்கிரபகவான் இம்மன்னனுக்கு குருவாக இருந்து சர்வ சக்திகளையும் அளித்து தேவர்களைத் துன்புறுத்தவும் தூண்டிவந்தான்.

இந்தக் காலகட்டத்தில் புத்திரப் பேறில்லாத ரிஷி தம்பதியரான கசியபர், அதிதி ஆகிய இருவரும் திருமால் குறித்து புத்திர காமேஷ்டியாகம் செய்து வந்தனர். இந்நிலையில் மகாபலியின் துன்பம் பொறுக்க இயலாத தேவர்கள் திருமாலைத் தன்மைக் காத்தருள வேண்டுமென விண்ணப்பிக்க, புத்திரப்பேறு வேண்டி மகாயாகம் செய்து கொண்டிருக்கும் மகாபலியை ஒழித்து உங்கள் இன்னல்களைப் போக்குகிறேன் என்று நல்லருள் புரிந்தார்.

கசியபர் அதிதி தம்பதிகளின் யாகத்தை மெச்சிய திருமால் அவர்கட்கு மகவாக அவதரித்து குட்டையான வடிவம் கொண்ட வாமன மூர்த்தியாக வளர்ந்து பிரம்மச்சர்யத்தை மேற்கொண்டார். பிரம்மச்சர்யம் மேற்கொண்டதும் பூமிதானம் பெறுவதற்கான மகாபலிச் சக்ரவர்ததியிடம் வந்தார். குட்டையான புன்னகையுடன் என்ன வேண்டுமென்று கேட்க எனக்கு ஏளனங்கலந்த புன்னகையுடன் என்ன வேண்டுமென்று கேட்க எனக்கு மூன்றடி மண் வேண்டுமென வாமணன் கேட்க, இதென்ன பிரமாதம் இப்போதே தந்தேன் என்று வாக்களித்து தாரை வார்த்து தானம் கொடுக்க ஆயத்தமானான். வந்திருப்பது ஸ்ரீமந் நாராயணன் என்றும், தனது சீடன் வீணாக வீழ்ந்துவிடப் போகிறான் என்பதை உணர்ந்த சுக்ராச்சார்யார் மாவலியிடம் உண்மை உணர்த்தி தானம் கொடுப்பதை நிறுத்தச் சொன்னார். கொடுத்த வாக்கை மீறாத குணம் படைத்த மாவலிதான் தானம் கொடுத்தே தீருவேன் என்றும் அவ்வாறு வந்திருப்பது ஸ்ரீமந் நாராயணனே எனில் அவருக்குத் தானம் கொடுப்பதும் தமக்குப் பெருமைத்தான் எனக் கூறி தாரை வார்க்கத் தொடங்கினேன். இந்நிலையில் இதைத்த தடுக்க நினைத்த சுக்கராச்சாரியார் ஒரு சிறிய வண்டின் வடிவமாக உருவெடுத்து தாரை வார்த்துக் கொடுக்கும் கமண்டலத்தின் துவாரத்தை அடைத்துக் கொண்டார். கமண்டல துவாரத்தை ஏதோ அடைப்பதையறிந்த வாமனன் ஒரு சிறிய நாணல் புல்லினையெடுத்து துவாரத்தின் வழியாகக் குத்த சுக்ராச்சாரியார் ஒரு கண்ணை இழந்தார். (இழுந்த கண்ணை மீண்டும் பெறவும், செய்த பிழையின் பாவம் போக்கவுந்தான் சுக்கிரன் திருவெள்ளியங்குடியில் திருமாலைக் குறித்து தவமிருந்து தனது கண்ணை மீண்டும் பெற்றார் என்பது திருவெள்ளியங்குடி ஸ்தல வரலாறு ஆகும்.) மாவலி தாரை வார்த்துக் கொடுக்க தனது ஓரடியால் இந்த நிலவுலகு முழுவதையும் அளந்து மற்றோரடியை விண்ணுயரத்தூக்கி விண்ணுலகம் முழுவதும் அளந்து, திருவிக்ரம அவதார கோலத்தில் நின்று தனது மூன்றாவது அடிக்கு இடம் எங்கே என்று கேட்டு நின்றார். வாமன வடிவத்தில் வந்தவர் நெடிதுயர்ந்த திருவிக்ரம அவதாரங்காட்டி நிற்பதைக்கண்ட மாவலி மனம் பதைத்து, தன் நிலையுணர்ந்து மன்னிப்பு வேண்டி தங்களது மூன்றாவது திருவடிக்கு எனது சிரசே இடம் என்று சரணாகதி அடைந்தார்.

அன்ன பானமின்றி கடும் விரதம் மேற்கொண்ட இம்முனிவரின் தவத்தை மெச்சிய பிரம்மன் நீர் வாமன, திருவிக்ரம திருக்கோலத்தைக் காண வேண்டுமாயின் கிருஷ்ண பத்திரா நதிக்கரையில் கிருஷ்ண திருதலத்தில், கிருஷ்ணன் என்ற பெயரில் பகவான் கோயில் கொண்டுள்ள இடமே நீர் தவம் செய்வதற்கு உகந்த இடமாகும். ஒரு நாள் மஹாவிஷ்ணு ஒரு வயதான அந்தணர் கோலத்தில் வந்து அன்னம் கேட்க, அப்போது தானம் செய்யக்கூட அன்னம் இல்லாத நிலைமையிருக்க தனது மனைவி மித்ராவதியை அணுகிய மிருகண்டு முனிவர் வந்திருக்கும் முனிவர்க்கு உடனடியாக அன்னம் படைக்க ஏதாவது செய்ய வேண்டுமென, கற்பிற் சிறந்த அப்பெண்மணி நாராயணனை நினைத்துப் பாத்திரத்தைக் கையிலெடுத்த மாத்திரத்தில் அதில்

அன்னம் நிரம்பி வழிந்தது. அதைப் பெற்றுக் கொண்டு பெருமகிழ்வோடு முனிவர் வெளியே வர இறைவன் சங்கு சக்ரதாரியாகக் காட்சி தந்தார். அவ்வண்ணமே திருமால் அருள்பாலித்த திருத்தலம் இத்திருக்கோவிலூராகும்.

இங்குதான் ஆழ்வார்கள் மூவரும் முதன் முதலாக இறைவனைத் தூய தமிழ்ப் பாக்களில் பாடித் துதிக்க ஆரம்பித்தனர். மிருகண்டு முனிவரின் ஆசிரமத்தை அடைந்து இரவு தங்குவதற்கு இடமுண்டோ என்று கேட்க அதைப் போல பூதத்தாழ்வாரும் கேட்க, மேலும் பேயாழ்வாரும் கேட்க, ஒருவர் படுக்கலாம், இருவர் இருக்கலாம், மூவர் நிற்கலாம் என்று கூறி அவரையும் சேர்த்துக் கொள்ள இட நெருக்கடிதாளாது முண்டிக்கொள்ள அப்போது நான்காவதாக மேலும் ஒருவர் வந்து மூவரையும் நெருக்குவது போன்ற உணர்வு எம்பெருமானை ஒருங்கே நினைக்க, உடனே பேரொளியாய்த் தோன்றிய எம்பெருமான் தம் திருமேனியை மூவருக்கும் காட்டி அருள் புரிந்தார்.

இன்றைய நிலையில் திருக்கோவிலூர் சன்னதி சிறப்புகள்:

தாயார்:	பூங்கோலை நாச்சியார், புஷ்பவல்லி தாயார் என்னும் திருநாமங்கள்.
உற்சவர்:	ஆயன், ஆயனார், கோவலன் (கோபாலன்)
தாயார்:	கஜலெட்சுமி
தீர்த்தம் :	பெண்ணையாறு, கிருஷ்ண தீர்த்தம், சுக்ர தீர்த்தம்.

முடிவுரை :

திருக்கோவிலூர் திருத்தலம் தென்னார்காடு மாவட்டத்தில் இருந்தது. இது சங்க இலக்கியமான புறநானூற்றில் கடையெழு வள்ளல்களான திருமுடிக்காரி இந்த நகரைத் தலைமையிடமாகக் கொண்டு ஆட்சி புரிந்தபோது கொடைக்கென்ற ஒரு ஊராகவும் திகழ்ந்தது. அதன்பின் பக்தி இலக்கிய காலத்தில் வரலாற்று சிறப்பு பெற்ற தலமாகவும் உள்ளது திருக்கோவிலூர். வீரத்திற்கும், நீர்வளம், நிலவளம், நிறைந்த ஊரில் பக்தி இலக்கிய வளர்ச்சி பெற்றுள்ளது. என்பதை பார்க்கும் பொழுது "நாலாயிரத் திவ்யபிரபந்தத்தின்" மூலங்களைக் கொண்டு உருவாக்கப்பெற்றுள்ளது. இதுவே அன்றையிருந்த திருக்கோவிலூர் இன்றைக்கும் சிறப்பு பெற்ற ஒரு "நடுநாட்டு திருப்பதியாகவே" காட்சியளிக்கிறது.

71. பக்தி இலக்கியத்தில் தஞ்சை மாவட்ட ஊர் பெயர்கள்

தா. தேவி
இராணி மேரிக் கல்லூரி,
சென்னை.

பழம் பண்பாட்டை, நாகரீகத்தினை விளக்கும் ஊர்ப் பெயர்கள் ஆராய்ச்சி மேலை நாட்டிலேயே முதன் முதலில் தோற்றம் பெற்றது. ஐரோப்பியா, பிரிட்டன் போன்ற நாடுகளில்தான் முதன் முதலில் ஊர்ப் பெயராய்வு தொடங்கியது. மேலை நாடுகள் இவ்வாய்வில் வளர்ச்சியுள்ள அளவில் இன்று நாம் வளர்ச்சி பெறவில்லை எனலாம். சில ஆண்டு காலமாகவே நம் நாட்டினர் இவ்வாராய்ச்சியில் ஈடுபட்டு வருகின்றனர். அதற்குச் சான்றாக சங்கங்களும், ஆய்வரங்கங்களும் ஆய்வுத் தொகுதிகளும், தமிழ் இலக்கியங்களின் மூலமாகவும் அறிய முடிகின்றது. பெரும்பாலும் பக்தி இலக்கியங்களில் கோயில்களின் பெயர்களே ஊர்ப் பெயர்களாக அமைந்துள்ளதை நாம் அறியலாம். அவ்வாறு தஞ்சை மாவட்டத்தில் உள்ள ஊர்ப் பெயர்கள் கோவில்களின் சிறப்புக்களாலே அமைக்கப்பட்டுள்ளது என்பதனை இவ்வாய்வின் மூலம் அறியலாம்.

ஊர்ப் பெயர்களின் தோற்றம்

ஒரு பொருளை மற்றொரு பொருளில் இருந்து வேறுபடுத்திக்காட்ட பிரித்துக் காட்ட வழங்கப்பட்டக் குறியீடுகளே பெயர்கள் எனலாம். எல்லாப் பொருள்களும் ஒரே தன்மையல்ல. ஒவ்வொரு பொருளும் ஒவ்வொரு தன்மையதாய் இயல்பினதாய் இருத்தல் இயற்கை. பொருள்களின் இந்த வேறுபட்ட தன்மைகளுக்கு அமைப்புக்களுக்கு ஏற்ப அவைகளுக்குப் பெயர்களும் வழங்கப்பட்டன. இப்பெயர்கள் எல்லாமே காரணத்துடன் வழங்கப்பட்டன அல்ல. ஒரு சில பெயர்கள் எந்தவிதமான காரணமும் இன்றி இடுகுறியாகவும், ஒரு சில பெயர்கள் ஏதோ ஒரு காரணங்கருதியும் ஒரு சில காரணம் கண்டறிய இயலாத தன்மையிலும் பலப் பெயர்கள் பெரும்பான்மையானப் பெயர்கள் காரணத்துடனும் வழங்கி வருதலைக் காணமுடிகிறது.

நாளடைவில் மொழி வளர்ச்சி, நாகரீக வளர்ச்சி ஆகியவற்றின் காரணமாக இப்பெயர்கள் ஒரு வித தெளிவுடன் நல்ல முறையில் வளரத் தொடங்கின. இதனால் இது பயனுடையதாகவும் அமைந்தது.

ஊர்ப் பெயர்களின் பயன்கள்

ஊர்ப் பெயர்கள் மிகவும் பழமையானவை. புதைப் பொருட்களைப் போலவே ஊர்ப்பெயர்களும் பழம்பண்பாட்டினையும் நாகரீகத்தையும் உணர்த்தும் சான்றுகளாய் விளங்குகின்றன. பழம் பண்பாட்டை உணர்த்தும் காரணத்தால் ஊர்ப் பெயராய்வு மிகவும் போற்றத்தக்கதாகும். பழங்காலத்தில் வாழ்ந்த இனங்கள், குடிகள் பற்றியும், சாதி சமய வரலாறு பற்றியும், நில அமைப்பு பற்றியும் அக்கால இலக்கியங்கள் பற்றியும் தொல் பொருளாய்வுக்குத் துணை செய்யும் வகையில் நாடு, நகரங்கள் பற்றியும் நன்கு அறிய முடிகிறது.

வரலாற்றுச் சிறப்பு

தென்னிந்தியாவில் வரலாற்றில் தஞ்சையின் வரலாறு தனியிடத்தைப் பெற்றுள்ளது எனலாம். இம்மாவட்டத்தில் உள்ள கோயில்களும் கோட்டைக் கொத்தளங்களும் இங்கு காணப்படும். கல்வெட்டுக்களும் தஞ்சை வரலாற்றுச் சிறப்பைப் பகர்வன எனலாம். பல்வேறு காலச்சூழலி தஞ்சையின் வரலாற்று நிலை எவ்வாறு இருந்தது என்பதைக் கல்வெட்டுக்களே பெரும்பாலும் உணர்த்துகின்றன எனலாம். தஞ்சை வரலாற்றில் பெரும் பங்கு வகித்தவர்கள் சோழர்களே எனலாம். அதிலும் தஞ்சையில் இன்றளவும் சிறப்புடன் காணப்படும் இராஜராஜனால் கட்டப்பட்ட பெரிய கோயிலினால் தஞ்சையில் சோழர்கள் ஆட்சி சிறப்புற்று இருந்தமையை நன்கு அறிய முடிகின்றது. அவர்களுடைய தலையாய துறைமுகம் காவிரி ஆறு. கடலோடு கலக்கும் சங்க முகத்தில் விளங்கிய காவிரிப் பூம்பட்டினம். அக்காவேரிப் பூம்பட்டினத்தையும் தஞ்சை மாவட்டத்தினைச் சுற்றியுள்ள சில ஊர்களைப் பற்றியும் பக்தி இலக்கியங்களை கொண்டு நாம் அறியலாம்.

காவிரியின் சிறப்பு

சுந்தரர் முவருமாவர் காவிரிக் கரையில் உள்ள ஊர் என்பதைப் பாடல் நிலையிலும் நாம் அறிய முடிகின்றது.

உரையும் செல்வமுடையார் காவிரி
அரையும் சோற்றுத் துறை சென்றடைவோமே - திருஞான - 28-5
துனை புனற் பொன்னித் திரைவலம் கொள்
சோற்றுத் துறை தொழச் சென்றடைவார் - பெரிய - 34-353

எனவே, காவிரியின் கரையில் உள்ள ஓர் தலம் என்பது தெளிவாக அமைகிறது. அடுத்து 'சோற்றுத்துறை' என்பதை ஆராயின், தாவரத் தொடர்பான பெயர் என்பது துறைய என்ற பொதுக்கூறு நிலையிலும் உணரக்கூடிய ஒன்றாக அமைந்துள்ளது.

திருந்துதேவன் குடி

திருந்து தேவன் குடி என்று இன்றும் வழங்கப்படும் இவ்வூர் தஞ்சாவூர் மாவட்டத்தைச் சார்ந்தது அமைந்தது. ஞானசம்பந்தர் பாடல் பெற்றது. இத்தலக்கோயில் ஊர் இல்லை. ஞானசம்பந்தர் பாடல் பெற்ற இக்கோயில் மட்டும் வயலுக்கு மத்தியில் உள்ளது என்ற குறிப்பு ஊர் இருந்து, மக்கள் பிற இடங்கட்குச் சென்ற நிலையைக் காட்டுகிறது. ஞானசம்பந்தர் பாடல் இவ்வூர் பற்றிய இனச் சிறப்பையே காட்டுகின்றது. இருப்பினும் பெரியபுராணம் இவ்வூர் குறித்துச் சுட்டும் எண்ணங்கள். திருந்து தேவன் குடியில் இருந்த சிவன் பற்றிக் கூறும் நிலையினை இங்குக் காணலாம்.

செங்கண் மாலுக்கரியார் தம் திருந்துதேவன் குடிசார்ந்தார்
- திருஞான 294
எனச் சேக்கிழார் சுட்டி மேலும்,
திருந்து தேவன் குடி மன்னும் சிவபெருமான் கோயில் எய்தி
- திருஞான 295
என்றும் மொய்திகழ் சோலை அம்முதூர் முன்னகன்று (296) என்றும் கூறும் நிலையில் இது ஒரு ஊராக இருந்தது என்பது தெளிவாக விளங்குகிறது. 'குடி' என்ற பொதுக்கூறு குடியிருப்புப் பகுதியைச் சுட்டும் தன்மையும் இங்கு இணைத்து நோக்கத்தக்கது. இறைவன் கோயில் கொண்ட நிலையில் தேவர் குடியாகியிருக்க வாய்ப்பு அமைகிறது.

நல்லூர்

தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த இவ்வூர் இன்றும் நல்லூர் எனவே சுட்டப்படுகிறது. திருநாவுக்கரசர், அப்பர் பாடல் பெற்ற தலம் இது.

ஞானசம்பந்தர் இவ்வூரினை, 'நாளும் மலர்ப்பொய்கை நல்லூர்' (86-2) என்றும், 'நண்ணும் புனல்வேலி நல்லூர்' (86-11) என்றும் குறிப்பிடுவதுடன்,

திண்ணமரும் பைம்பொழிலும் வயலும் சூழந்த திருநல்லூர்
மண்ணமரும் கோயிலே கோயிலாக மகிழ்ந்தரே
.... திருநல்லூர் (193-1)
மலைமல்கு கோயிலே கோயிலாக மகிழ்ந்தீரே (193-1)
சிறைநவின்ற தன்புனலும் வயலும் சூழ்ந்த திருநல்லூர்
மறைநவின்ற கோயிலே கோயிலாக மகிழ்ந்தீரே (194-4)
எனவும் பாடும் நிலை, நல்லூர் ஊர்ப் பெயர் என்பதைத் தெளிவுபடுத்துகிறது.

நள்ளாறு

நளன் பூசித்த காரணம் என்ற எண்ணமும், இப்பெயர் தொடர்பாக அமைகிறது. எனினும் இது ஏற்றுக் கொள்ளத்தக்கது அன்று நளன் வழிபட்ட செய்தியென,

வளம் கெழவு தீபமொடு தூபமலர் தூவி
நளன் கெழுவி நாளும் வழிபாடு செய் நள்ளாறே"
என ஞானசம்பந்தர் பாடல்களைத் தருகின்றனர் எனினும் இக்கதை முன்னரே இவ்வூர்ப் பெயர் குறித்து மக்களிடையே காணப்பட்டது என்ற கருத்தையே நாம் கொள்ளல் பொருத்தமானது.

நரையூர்

நரையூர் என்று சுட்டப்படும் இவ்வூர் இன்று தஞ்சாவூர் மாவட்டத்தைச் சார்ந்தது. ஞானசம்பந்தர், சுந்தரர் இருவராலும் பாடல் பெற்ற இவ்வூர்க் கோயில் சித்தீச்சரம் ஆகும். இவர்கள் பாடல்கள் இவ்வூரின் இயற்கைச் செழிப்பையும் எடுத்தியம்புகின்றன.

சிறைகொள் வண்டு தேனார் நறையூர்ச்சித்தீச்சரமே (திருஞான 71-1)
கடிகொள் சோலைவயல் சூழ் மடுவிற் கயலாரினம் பாயக்
கொடி கொண்மாடக் குழாமார் நறையூர்ச் சித்தீச்சரமே
(திருஞான 71-3)
வாரும் மருவி மணிபொன் கொழித்துச்
சேரும் நறையூர்ச் சித்தீச்சரமே (சுந் 93-1)
கழுநீர் கமழக் கயல் சேறுகளும்
செழுநீர் நரையூர்ச் சித்தீச்சரமே (சுந் 93-5)
எனவே, இவற்றை நோக்க இயற்கை நலம் மிக்க ஊராகையினால், நறை என்றால் தேன். நறுநாற்றம் என்ற பொருளைத் தரும் நிலையில் இவற்றின் அடிப்படையில் இப்பெயர்

அமைந்திருக்கலாம் என தோன்றுகிறது. செழுநீர் நரையூர் எனச் சேக்கிழாரும் இவ்வூர் பற்றியும் எடுத்துரைக்கிறார்.

இவ்வாறு பக்தி இலக்கியங்களின் மூலமாக பல ஊர்களின் பெயர்கள் கோவில்களின் பெயர்களாலே அமைக்கப்பட்டுள்ளது என்பதனையும் சிறப்புற்று விளங்குகிறது என்பதனை 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்ற பழமொழி உணர்த்துகின்றது. இதனையே அப்பர்தம் பாடலில் 'திருக்கோயில் இல்லா ஊர் ஊரன்று' என்று பாடுகின்றார்.

இந்நிலையில் இடைக்காலத்தில் உள்ள ஊர்ப் பெயர்கள் மேலும் மிகுதியாகப் பிறச் சான்றுகள் வழியே கிடைக்கும் போது இங்கு கருதப்பட்ட எண்ணங்கள் மேலும் தெளிவாக அமையும் என்பது உறுதி.

72. நிலக்கோட்டை – ஊர்ப் பெயர்

முனைவர் மு. தேவகி
விரிவுரையாளர், தமிழ்த்துறை,
பார்வதீஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
திண்டுக்கல்.

மனிதன் என்று தான் இருக்கும் இடத்தை அடையாளப்படுத்தத் தொடங்கினானோ அன்றே ஊர்ப்பெயர்களும் தொடங்கிவிட்டன என்று குறிப்பிடலாம். ஊார்ப்பெயர்களின் வழியாக ஓர் இனத்தின் வரலா மட்டுமல்லாது, அங்கு வாழ்ந்த அனைத்த மக்களின் பண்பாட்டையும், அறிந்துகொள்ள ஊர்ப்பெயர்கள் உதவி செய்கின்றன. அவ்வகையில் தொல்காப்பிய நில அமைப்பினை அடிப்படையாகக் கொண்டு அவற்றின் அடிப்படையில் அமைந்த 'நிலக்கோட்டை' எனும் பெயரை ஆய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

தொல்காப்பியர் சுட்டும் நிலஅமைப்பு

மனிதனுக்கு இயற்கை சில நல்ல விஷயங்களை அளித்துள்ளது அவற்றிலிருந்து கற்றுக்கொண்ட மனிதன் அவற்றையே தங்களின் வாழிடங்களுக்குப் பெயராக வைத்துள்ளனர். காரணமாகத் தான் இயற்கை சூழலின் அடிப்படையிலேயே ஊர்ப பெயர்களை அமைத்துக் கொண்டான் என்பதற்கு தொல்காப்பிய இலக்கணமே சான்றாக நிற்கிறது.

"குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலையென
சொல்லிய முறையால் சொல்லவும் படுமே."

இவற்றின் அடிப்படையில்தான் தமிழர்கள் ஊர்பெயர்களையும் தாங்கள் வாழந்த நிலப்பகுதியையும் திணைவாரியாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அறிமுகம்

தமிழகத்தில் உள்ள மாவட்டங்களில் ஒருசில நிலப்பரப்புகளிலும், மக்கள் தொகையாலும் பெரிய மாவட்டங்களாக உள்ளன.

இத்தகைய மாவட்டங்களை ஆட்சி நலனுக்கேற்ப, பல கோட்டங்களாகப் பிரித்து, கோட்ட ஆட்சியாளர்களால் நிர்வகிக்கப்பட்ட போதிலும், ஒரே மாவட்ட ஆட்சித் தலைவர் பொறுப்பில் நிர்வாகம் விரைந்து செயல்பட முடியாத ஒருநிலை உருவாயிற்று.

பல மேம்பாட்டுத் திட்டங்களால் ஒவ்வொரு மாநிலமும் முன்னேற வேண்டிய காலகட்டத்தில், இத்தகைய தேக்க முறைகளால் மேற்படித் திட்டங்கள் மக்களை விரைந்து சென்று அடைய முடியாது என்பதை அனுபவத்தில் உணர்ந்து, தமிழ்நாடு அரசு புதிய மாவட்டங்களை உருவாக்கும் பணியில் ஈடுபட்டது. அத்தகைய முயற்சியில், திருநெல்வேலி மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம், மதுரை மாவட்டம் மூன்றும் பிரிக்கப்பட்டன.

திருநெல்வேலி சிதம்பரனார் மாவட்டம் எனவும், இராமநாதபுரம் பசும்பொன் முத்துராமலிங்கம், காமராஜர் மாவட்டம் எனவும், மதுரை மாவட்டம் 15.09.1985 ஆம் ஆண்டு மதுரை / திண்டுக்கல் மாவட்டம் எனவும் பிரிக்கப்பட்டன.

திண்டுக்கல் மாவட்டம்

மக்கள் செல்வாக்குப்பெற்ற பெரும் தலைவர்களான காமராஜர், முத்துராமலிங்கத்தேவர் பெயரால் ஒரு மாவட்டங்கள் அமைக்கப்பட்டதும், அறிஞர் அண்ணா பெயரால் ஒரு மாவட்டம் அமைக்க வேண்டம் என்றும் கருத்து பரவலாகத் தோன்றியது. தமிழ்நாட்டிற்கும், தமிழுக்கும் ஏற்றம் அளிக்கும் வகையில் தமிழ்நாடு என்று பெயர் சூட்டி தமிழை அரியாசனத்தில் ஏற்றிய பெருமை அண்ணா அவர்களையே சாரும்.

மதுரை சங்கத் தமிழ் வளர்த்துப் பெருமை பெற்ற மாவட்டம், அண்ணாவும் தமிழுக்காக வாழ்ந்தவர் இதை ஒட்டி, மதுரை மாவட்டத்தில் இருந்த திண்டுக்கல், பழனி, வேடசந்தூர், நிலக்கோட்டை, கொடைக்கானல் வட்டங்களை ஒன்று சேர்த்த அப்போதைய முதல்வர் எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்கள் திண்டுக்கல்லை அண்ணா மாவட்டம் என்று பெயர்சூட்டி மக்களை மகிழ்வித்தார்.

அண்ணா மாவட்டம் புதிய மாவட்டம் என்றாலும் பல்வேறு திட்டங்களால், அனைத்துத் துறைகளிலும் விரைந்து, முன்னேற்றம் கண்டு, பிற மாவட்டங்களைக் காட்டிலும் முன்னிலையில் நிற்கும் என்பது திண்ணம். இன்று இது திண்டுக்கல் மாவட்டம் எனும் பெயரிலே வழங்கப்பெறுகிறது.

1.1.2 திண்டுக்கல் கோட்டம்

திண்டுக்கல் கோட்டத்தில் ஏழு ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன. இவற்றில் நிலக்கோட்டை வட்டம் ஆறாவது ஊராட்சி ஒன்றியமாக விளங்குகிறது.

1.2 நிலக்கோட்டை ஊராட்சி ஒன்றியங்கள்

திண்டுக்கல் கோட்டம், நிலக்கோட்டை வட்டத்தில் ஊராட்சி ஒன்றியங்கள் மொத்தம் 28 ஆகும்.

1.2.1 நிலக்கோட்டை தலவரலாறு

இன்றைய திண்டுக்கல் மாவட்டம் ஆதியில் மதுரை மாவட்டத்துடன் இணைந்திருந்த காரணத்தால் இம்மாவட்டமும் பாண்டியர்கள், நாயக்கர்கள் மதலியவர்களால் ஆளப்பட்டுச் சிறந்த பெருமை பெற்றது.

1.2.2 நாயக்கர் ஆட்சி

விஜயநகரப்பேரரசுக்கு ஏற்றம் தந்தவர் கிருஷ்ணதேவராயர். இவர் நாகமநாயக்கர் என்பவரை மதுரையில் தம் பிரதிநிதியாக நியமித்து ஆட்சி செய்தார்.

1.2.3 விசுவநாத நாயக்கர்

விசுவநாதர் ஆட்சி இம்மாவட்டத்தின் வளர்ச்சியில் சிறப்பிடத்தைப் பெற்று விளங்குகிறது. இவர் காலத்தில் நாயக்கர் ஆட்சி தெற்கே குமரிவரையிலும் மேற்கே கொங்குநாடு வரையில் பரவியிருந்தது.

கோட்டை கொத்தளங்கள் புதுப்பிக்கப்பட்டுப் பலப்படுத்தப்பட்டன. புதிய கால்வாய்ககள் வெட்டப்பட்ட. வைகையில் பேரணை, சிற்றணைகள் கட்டப்பட்டு விவசாயம் வளம்பெற்றது. அன்னச்சத்திரங்கள் கட்டப்பட்டு மக்களுக்குப் பயன்பட்டன.

1.2.4 பாளையப்பட்டுக்கள்

நிர்வாக வசதி கருதி விசுவநாதநாயக்கர், தளவாய் அரியநாதர் உதவியுடன் தம் ஆட்சிக்குட்பட்ட மதுரை, திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம், திருநெல்வேலி, சேலம், கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களையும் 72 பாளையப்பட்டுக்களாகப் பிரித்தார். அதில் ஒன்று தான் நிலக்கோட்டை. பாளையப்பட்டுக்களை ஆள நியமிக்கப்பட்டவர்கள் வருடந்தோறும் வரிசெலுத்தியும் போர்க்களத்தில் படை உதவி செய்தும் வந்தனர்.

மதுரை, திண்டுக்கள் மாவட்டம் இரண்டிலும் தலைவர்களாக விளங்கிய பாளையக்காரர்கள், மதுரை நாயக்கர் வேண்டியபோது அவர்களுக்கு படைகளை அனுப்பி உதவினர். அதற்குப் பதிலாக அவ்வப் பகுதிகளில் பாளையக்காரர்களுக்கு வரிவசூலித்துக் கொள்ளும் உரிமை வழங்கப்பட்டிருந்தது.

முஸ்லிம் படையெடுப்பால் அமைதியற்றுக் கிடந்த இம்மாவட்டத்தை இந்த நிலையிலிருந்து மாற்றி அமைதியை நிலைநாட்டியவர் நாயக்கர்களும் பாளையக்காரர்களுமேயாவர்.

1.3. கோட்டைகள்

பாண்டிய மன்னர்களாலும், பிறபாளையத் தலைவர்களாலும் இம் மாவட்டத்தில் கட்டப்பட்ட பல மண் கோட்டைகள் காலத்தால் அழிந்துவிட்டன பிற்கால பாண்டியர்கள் எடுத்த கோட்டைகளும் அழிந்துவிட்டன.

கி.பி. 15 ஆம் நூற்றாண்டைத் தொடர்ந்து 17, 18 ஆம் நூற்றாண்டுவரை கட்டப்பட்ட கோட்டைகளை மூவகைப்படுத்தலாம். மலைமீது கட்டப்பெற்றவை, தரைமீது கட்டப்பெற்றவை, ஆற்றோரங்களில் கட்டப்பெற்றவை என்பன. இவையாவும் தமிழக வரலாற்றோடு இரண்டறக் கலந்தவை.

நிலக்கோட்டையில் அமைந்திருக்கும் கோட்டை தரைமீது கட்டப்பெற்றவையாகும்.

1.3.1. கோட்டைச் சிறப்பு

கல்லுமிழ் கவண்பொறி, கருவிறல் குரங்கு கடிக்கும்பொறி, பாம்புப்பொறி, புலிப்பொறி என்ற கருவிகள் கோட்டை மதிற்சுவர்களில் பாதுகாப்புக் கருவிகளாக இருந்தன. இவற்றில் போர்க்கலைப் பயிற்சியாளர் இருந்தனர்.

போர்க்கருவிகள், ஆயுதங்கள், உணவு முதலியன சேகரித்து வைக்கப்பட்டிருந்தன. இம்மாவட்டம் ஆங்கிலேயர் ஆட்சியில் கோட்டை நகரமாகத் திகழ்ந்ததைக் கண்டு, இதனால் மாவட்ட வளர்ச்சி பாதிக்கப்படுவதாக எண்ணி, ஆங்கிலேயர் பல கோட்டைச் சுவர்களைத் தகர்த்தனர்.

1.3.2. நிலக்கோட்டை

நிலக்கோட்டை வட்டத் தலைநகராய் திகழ்கிறது. பழைய திண்டுக்கல் சீமையில் 26 பாளையங்களுள் இது ஒன்றாகத் திகழ்கிறது.

திண்டுக்கல்லுக்கு முப்பது கிலோமீட்டர் தூரத்திலுள்ள, திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டம், நிலக்கோட்டை பேரூராட்சி வரலாற்று சிறப்பு மிக்கதாகும். அங்குள்ள ஸ்ரீ அகோபிலநரசிம்மப் பெருமாள் கோவில் கூளப்ப வாரிசுதாரர்கள் முறையே எட்டாவது ஜமீன் சிகப்பு கூளப்ப நாயக்கர் காலத்தில் (கி.பி. 1696-ல்) கட்டப்பெற்றது. தொடர்ந்து மூன்றாண்டுகள் வெள்ளையரை எதிர்த்த பெருமை இப்பாளையக்காரர்களுக்கு உண்டு.

கிருஷ்ணதேவராயர் ஆந்திர சமஸ்தானத்தை ஆண்டபோது அச்சமஸ்தானத்தின் மீது முகம்மதியர் படையெடுத்து வந்தனர். அப்போது கிருஷ்ணதேவராயர் தலைமையின் கீழ் தமிழகத்தின் பல பகுதிகளை நாயக்கர்கள் ஆட்சி செய்து வந்தனர். அதில் நிலக்கோட்டைப் பகுதியானது மாக்களசாமி கூளப்பநாயக்கர் என்பவரின் மேற்பார்வையின் கீழ் இருந்தது. அவர் இராயருக்கு உதவியாகப் போர்க்களம் சென்று முகம்மதியரைத் தோற்கடித்த காரணத்தினால் தேவராயர் மனமகிழ்ந்து மதுரை நகருக்கும், திண்டுக்கல் நகருக்கும் இடையே மூன்று காதத் தொலைவில் உள்ள இடத்தை வழங்கினார். அவ்விடத்தில் என்றும் நிலைக்கும் படியாய் கோட்டை அமைத்துக் கொள்ளுமாறு உத்தரவிட்டார். அதன்படி நிலக்கோட்டை ஒரு பாளையமாகிறது. மதுரையில் நாயக்கர் ஆட்சி ஏற்பட்டது. அதன்படி மாக்களசாமி கூளப்பநாயக்கரின் தலைமையில் சீரற்றுக்கிடந்த நிலங்களை எல்லாம் சமன் செய்து மண்கோட்டை ஒன்றை எழுப்பி தங்களுடைய குடியிருப்புகளை ஏற்படுத்தி நிலக்கோட்டை என்னும் பெயர் வழங்கி ஆட்சிபுரிந்தனர். இக்கோட்டை சமமான நிலத்தில் கட்டப்பட்டிருப்பதால் இக்கோட்டைக்கு நிலக்கோட்டை என்று பெயராயிற்று. அப்பெயரே அக்கோட்டையை ஒட்டி அமைந்த ஊருக்கும் ஏற்பட்டது. அந்த நாயக்கர்களின் வாரிசுதாரர்களே வழிவழியாகப் பொறுப்பேற்று ஆட்சிபுரிந்தனர். அவர்கள் நிலக்கோட்டைப் பகுதியை ஆட்சிபுரிந்த காலத்தில் வைணவக் கோயில்களையும், சிவன் கோயில்களையும் எழுப்பி வழிபாடு செய்து வந்தனர் என்னும் வரலாற்றுச் செய்திகள் கூறுகின்றன.

நிலக்கோட்டையில் உள்ள இக்கோட்டையின் சுற்றுச்சுவர்கள் சிதைந்துவிட்டன. கோட்டை நடுவில் உள்ள அரண்மனையில் நாயக்கர் வம்சா வழியினர் வாழ்ந்த வருகின்றனர்.

முடிவுரை

நமது முன்னோர் திணைவாரியாக ஊர்ப்பெயர்களை வைத்துக் கொண்டது மட்டுமல்லாமல் நிலத்தின் பெயரையே ஊர்பெயராக வைத்துக்கொண்டுள்ள தன்மையின் வழியாக இயற்கை சார்ந்த சூழலுக்கு அவன் அளித்த முக்கியத்துவத்தை உணர முடிகிறது. மேலும், நிலமட்டுமல்லாது நிலத்தின் தன்மை, அளவு, மேடு, பள்ளம் என நிலத்தின் அமைப்புக்கேற்பவும் செம்பட்டி, செம்மேட்டுப்பட்டி, பள்ளப்பட்டி இதுபோன்ற ஊர்பெயர்களை வைத்துள்ளனர் என்பதையும் நாம் அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

73. நற்றிணையில் ஊர் பெயர்த் தொகுப்புகள்

இரா.தேவகி
முனைவர்பட்ட ஆய்வாளர்
பெரியார் பல்கலைக்கழகம்
சேலம்–11.

முன்னுரை

பண்டைய வரலாற்றை அறிவதற்கு மக்களின் வாழ்க்கை நிகழ்வுகள் ஆதாரங்களாக இருப்பதைப் போன்று, அம்மக்கள் வாழ்ந்த ஊர்களும் அரசர்களது தலை நகரங்களும் வாணிகத்துறை முகங்களும் முக்கிய ஆதாரங்களாகின்றன. இவ்வாறாக அமைந்த பதிவுகளின் அடிப்படையில் அம்மக்களின் வாழ்க்கை, அரசியல், வாணிபம் ஆகியவற்றை அறியமுடிகிறது. சங்க இலக்கியமான நற்றிணையில் ஊர் பெயர் தொகுப்பு என்ற முறையில் இவ்வாய்வுக் கட்டுரை அமைந்துள்ளது.

நற்றிணையில் 23 பாடல்களில் ஊர் பெயர்கள் இடம் பெற்றுள்ளது. இவற்றைத் திணை அடிப்படையில் பார்த்தோமானால் குறிஞ்சி–7, முல்லை–1, மருதம்–5, நெய்தல்–6, பாலை–4 பாடல் எண்ணிக்கை அமைந்துள்ளது. “சங்கப் பாடல்களில் ஊர்ப்பெயர்களின் பொருள் விளங்குமாறு நேர்முகமாகவும் மறைமுகமாகவும் புலவர்கள் பாடியிருக்கின்றனர்'' கி.நாச்சிமுத்து தமிழ் இடப்பெயராய்வு ப.123, பார்க்கலாம். மேலும், சங்க பாக்களுக்கு இலக்கண நூலாகத் திகழ்ந்த தொல்காப்பியம் மக்கள் வாழுமிடத்தை ஊர் என்று குறிப்பிட்டுள்ளது. “ஊர்'' என்றால் பெயரை எட்டு இடங்களில் தொல்காப்பியர் கையாண்டுள்ளார். இவற்றில் சிறப்பான ஒருவரி “ஊரோடு தோற்றம் உரித்தெனமொழிப'' என்பதாகும்.

சேர நாட்டு ஊர்பெயர்கள்

சேரமன்னர் ஆண்ட ஊர் பெயர்கள் பற்றி நற்றிணையில் நான்கு பாடல்களில் அமைந்துள்ளன.

தொண்டி

தொண்டியைப் பொறையன் என்ற மன்னன் ஆட்சிச் செய்தான். அவனுடைய ஆட்சியில் மக்கள் எல்லா வளமும் பெற்றிருந்தார்கள். என்பதை,

“தின்தேர்ப் பொறையன் தொண்டி
தன்திறம் பெறுக இவள் ஈன்ற தாயே'' (நற்றிணை.8; 9–10)

மேலே உள்ள கருத்திற்கும் சான்றாகும். மேலும் ஒரு பாடலில்,

“கல்லென் புள்ளின் கானல் அம் தொண்டி'' (நற்றிணை–195;5)

கல் என்ற ஓசையையுடைய பறவைகள் சூழ்ந்த தொண்டி எனக் குறிப்பிடப்பட்டுள்ளன.

சங்க காலத்தில் கிழக்குக்கரையிலும், மேற்குக் கரையிலும் இரண்டு தொண்டிப் பட்டினங்கள் இருந்தன. இரண்டில் ஒன்று சேர நாட்டில் மேற்குக் கடற்கரையில் இருந்தது. மற்றொன்று பாண்டிய நாட்டில் கிழக்குக் கடற்கரையில் இருந்தது என்பதை, ஐங்குறுநூற்றில் நெய்தல் திணையில் தொண்டிப் பத்து என்றும் தலைப்பில் பத்து செய்யுள்களைச் சங்க புலவரான அம்மூவனார் பாடியுள்ளார். அது சேர நாட்டுத்தொண்டி. அதே புலவர் அகநானூற்றில் பத்தாம் செய்யுளில் பாண்டிய நாட்டுத் தொண்டியினைத் குறிப்பிடுகிறார். மேற்கு கடற்கரையில் அமைந்த தொண்டி ‘அகலப் புழையாற்றில் குட்டியடியருகே தொண்டிப் போயில் என்னும் சிற்றூர் இன்னும் இருக்கிறது. இப்பெயர் தொண்டிக்கப் போகும் வழி என்ற பொருள் குறிப்பது என்று கருத இடம் தருகிறது. 1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகம் ப.37 பார்க்க பாண்டிய நாட்டில் இருந்த தொண்டி பிற்காலத்தில் மறைந்து இப்போது இராம்நாதபுரம் மாவட்டத்தில் தொண்டி என்னும் சிற்றூராக இருக்கிறது' என்பதை சங்ககாலத் தமிழவரலாறு தொகுதி–2, ப.149 பார்கலாம்.

மாந்தை

சேர நாட்டுத் துறைமுகம் மாந்தை. ஒரு பட்டினமாக திகழ்ந்தது என்பதை,

“துறை கெழு மாந்தை அன்ன இவள் நலம்'' (நற்றிணை.35:7)

என்ற பாடல் மூலம் அறியலாம். மேலும்,

“கடல் கெழு மாந்தை அன்ன எம்
வேட்டனை அல்லையால் நலம் தந்து சென்மே''
(நற்றிணை.395:9–10)

கடற்கரையகத்தே விளங்கிய மாந்தை என்னும் நகர் என்று ஊரைப் பற்றிய குறிப்பு மட்டும் நற்றிணையில் அமைந்துள்ளது. அதன் முழுமையான செயல்பாடுகள் பற்றி தெரியாத ஒன்றாகவே உள்ளது.

சோழநாட்டு ஊர்ப் பெயர்கள்

போஒர்

சோழ மன்னர் ஆண்ட பகுதி போலூர். இம் மன்னர் கொங்கரை அடக்கும் பொருட்டு போஒர் என்னும் ஊரில் தலைவனாகப் பழையன் என்னும் படைத்தலைவனை வைத்திருந்தார். அவன் குறிதப்பாத வேற்படையை வைத்திருந்தான் என்பதை,

"கொற்றச் சோழர் கொங்கர்ப் பணீ இயர்
வெண் கோட்டு யானை போஒர் கிழவோன்''
(நற்றிணை.10:6–7)

இப்பாடல் வழி அறியமுடிகிறது. "போர் சோழனின் படைத்தலைவன். பழையன் இருந்து அரசாண்ட ஊர். போர்ப்புறம் போரில் வேல் பஃறடக்கைப் பெருவிறற் கிள்ளியும் குடக்கோ நெடுஞ்சேரலாதனும் போரிட்டு மாண்டனர். திருப்போர்ப் புறம் செங்கணாவனுக்கும் கணைக்கால் இரும்பொறைக்கும் போர் நடைபெற்ற இடம் இத்தகைய வரலாற்றுச் சிறுப்புமிக்க இடம் காவிரி ஆறுபாயும் பகுதியில் இருந்தது என்பதைப் பழையன் வரலாற்றில் காணலாம். இப்போதுள்ள திருப்பூர்க்கு மேலே குறிப்பிட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க ஊராய் இருக்கலாம் என்பது அறிஞர் கருத்து'' மயிலை சீனி வேங்கடசாமி சங்ககாலத் தமிழகவரலாறு தொகுதி – இரண்டில் இடம்பெற்றுள்ளது.

கழாஆர்

சோழர்களின் ஆட்சிப் பகுதிக்கு உரிய 'கழாஆர்' இங்கு பலவகையான பலிச்சோறு கொடையாக வழங்கப்படும்.

"வெல் போர்ச் சோழர் கழாஅர்க் கொள்ளும்'' (நற்றிணை.281:3)

மேலே உள்ள பாடல் வரிகள் சோழ மன்னன் ஆண்டப் பகுதி என்பதற்கு சான்றாக உள்ளது. இக்கழார் கழமலத்தையும் மயிலாடுதுறையையும், புகாரையும் ஒட்டி அமைந்துள்ள ஊர் என்பது நினைக்கத்தக்கது. இன்று அது கழுதகாரன் துறை என்று வழுங்கப்படுகிறது. இது கழார் முன்றுறை என்பதன் மரூஉ: கழாஅர் இதனை மத்தி என்னும் பரதவர் கோமான் ஆண்டான் என அகம்–226 குறிப்பிடுகிறது. இவனை பற்றிய குறிப்புகளை மாமூலனார் அகம்.221 குறிப்பிடுகிறது. பரணர் பாடல் அகம்.6 லும் ஓரம் போகியார் பாடல் ஐங்குறுநூறு 61லும் தருகின்றனர். மேலும் இவனது கழார் நீர்வளம் மிக்கது எனப்பிறர் கூறுகின்றனர்.

பறம் அரேறு கலாவத்து

அம்பினையும், வில்லினையும் உடைய வீரர்களின் தலைவன் மிஞிலி என்பான். அவர் ஆளும் ஊர் பாரம். அவ்ஊரினைப் போல ஆத்திமாலை அணிந்தவர், சிற்றூர் பலவற்றை ஆளுவதற்குரிய செங்கோலை கொண்டுள்ள சோழன். அவனுடைய ஆரேறு என்னும் ஊர். அவ்வூரில் மழைப்போல கொடையும், கள்ளிணையும் உடைய ஓரியின் கொல்லி மலையில் உள்ள மயில் தோகைப் போல அவன் நாடு விரிந்து பரந்தது என்பது புலனாகிறது.

"பூந்தோன் யாப்பின் மிஞிலி காக்கும்
பாரத்து அன்ன மார்பின்
சிறுகோற் சென்னி ஆரேற்றன்ன
மாரி வண் மகிழ் ஓரி கொல்லிக்
கலி மயில் கலாவத்து அன்ன''
(நற்றிணை.265:4–8)

இப்பாடல் அடிகள் மூலம் அறியலாம்.

பாரமகால் என்ற பழைய பெயர் கொண்டது சேலம். இது பல ஊர்களையும், மாவட்டத்தையும் கொண்டதாக இருந்தது. மேலே உள்ள பாடல் அடிகளைக் கொண்டு ஆய்ந்தோம் என்றால் இது சேலத்தைக் குறிப்பது போல இருக்கிறது. நாமக்கல், ஈரோடு தர்மபுரி ஆகியவை அடங்கியவையாக இருந்த ஒரு பகுதியைப் பற்றிய சங்க இலக்கியப் பாடலாக இருக்கும் என்பது தெளிவாக அறியப்பட வேண்டிய ஒன்றாக உள்ளது.

பாண்டிய நாட்டு ஊர்ப்பெயர்கள்

கொற்கை பாண்டியரின் துறைமுகம். முத்துக்குபெயர் போனத் துறை முகம் என்று கூறலாம். இத்துறைமுகத்தை நற்றிணையில்,

முத்துப்படு பரப்பின் கொற்கை முன் துறைச்
சிறு பாசடை செப்பு ஊர் நெய்தல் (நற்றிணை.23:6–7)

நெருங்கிய நீர்த்துறையில் முத்துக்கள் தோன்றும் என்றச் செய்தியும், கொற்கை துறைமுகத்தில் நெய்தல் மலர்கள் மலர்ந்துள்ளது என்ற செய்தியும் பதிவாகியுள்ளது.

மதுரை

பாண்டிய மன்னரின் தலைநகரம் மதுரை என்பதை நாம் அனைவரும் அறிந்த ஒன்று அவற்றை நற்றிணையில்,

"பெரும் பெயல் கூடல் அன்ன நின்'' (நற்றிணை.39:9)

பாண்டிய மன்னரின் புகழ்மிக்க மதுரை என குறிப்பிடப்படுகிறது. மேலும்,

"பற்றாய் – வழி எம் நெஞ்சே நல் தார்ப்
பொற்றேர்ச் செழியன் கூடல் ஆங்கண்'' (நற்றிணை.298:8–9)

பாண்டிய மன்னரின் தலைநகரான மதுரையில் பொன்னால் ஆனத் தேரில் மாலைகள் அணிந்து இருந்தது என்ற செய்தியைப் புலவர் குறிப்பிடுகிறார்.

மருங்கூர் பட்டினம்

நற்றிணையில் பசிய பூண்ணனிந்த பாண்டியனது மருங்கூர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

"பசும் பூண் வழுதி மருங்கை அன்ன என்'' (நற்றிணை.358:10)

மேலே உள்ள கருத்திற்கு அரணாக உள்ளது.

"மருங்கூர்ப் பட்டினம் கி.பி13 நூற்றாண்டுச் சாசனங்களிலும் கூறப்படுகிறது. சோழ நாட்டிலே நன்னிலம் தாலுக்காவில் உள்ள திருச்செங்காட்டங்குடி உத்தராவதீவுவர் கோவிலின் முன் மண்டபத்து மேற்குப் பக்கத்துச் சுவரின் அடிப்புறத்தில் ஒரு சாசனம் எழுதப்பட்டிருக்கிறது. திரிபுவன சக்கரவர்த்தி இராஜராஜ தேவரின் III மூன்றாம் ஆட்சியாண்டில் (கி.பி.1218 1இல்) இந்த சாசனம் எழுதப்பட்டது. மருங்கூர் வாசிகளான இருவர் இந்தக் கோவிலுக்கு நிலம் தானங் கொடுத்ததை இச்சாசனம் கூறுகிறது.

இதே கோவிலின் இரண்டாவது கோபுரவாயிலின் இடதுபுறம் சுவரில் உள்ள சாசனம், திரிபுவனச் சக்கர வர்த்தி பராக்கிரம பாண்டிய தேவரின் ஏழாவது ஆட்சியாண்டில் எழுதப்பட்டது. மருங்கூரில் இருந்த இரண்டு வலிநிலத்தை இக்கோவிலுக்குத் தானம் செய்யப்பட்ட செய்தி இதில் கூறப்படுகிறது.

கிடங்கில்

கிடங்கில் என்னும் ஊர் இனிமை நிறைந்தனவாக அமைந்துள்ளன என்பதை,

"கிடங்கில் அன்ன இட்டுக் கரைக்கான் யாற்றுக்
கலங்கும் பாசி நீர் அலைக் கலாவ'' (நற்றிணை.65:2–3)

இப்பாடல் வரிகள் மூலம் அறியலாம். மேலும், சங்க இலக்கியத்தில் அறியப் பெறும் ஊர்களுள் ஒன்று பண்டு நடு நாட்டைச் சேர்ந்தது எனப்படும். இவ்வூர் இன்று தென்னார்க்காடு மாவட்டத்தையும் சேர்ந்த திண்டிவனம் என்றும் நகரமேயாகும் என்று ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். சிறுபாணாற்றுப்படைத் தலைவனான ஒய்மாநாட்டு நல்லியக்கோடனின் ஆட்சிக்குப்பட்டதாக அன்று இவ்வூர் விளங்கியது. கிடங்கில் என்னும் பெயரை நோக்குங்கால், இவ்வூர் அகழ்சூழ்ந்ததாக இருந்திருக்கலாம் என்பது புலனாகிறது'' வாழ்வியல் களஞ்சியம் தொகுதி–7 மூலம் அறியலாம்.

பொறையாறு

பொறையாற்றில் உண்ணுந் தோறும் இனிமையான கள்ளினைக் கொண்டிருக்கும் ஊர் என நற்றிணைக் குறிப்பிடுவதை நோக்கும் பொழுது கள்ளினைப் பெற வேண்டி தலையானங்கானத்துப் போர் நடைபெற்று இருக்குமோ என்பதை அறியவேண்டிய ஒன்றாக உள்ளது. இதனை,

"நறவு மகிழ் இருக்கை நல்தேர்ப் பெரியன்,
கள்கமழ், பொறையாறு அன்னஎன்'' (நற்றிணை.131:7–9)

தஞ்சை மாவட்டத்திலுள்ள பொறையாறு என்னும் ஊர். நெய்தல் வளம் நிறைந்த இந்த ஊரில் குறுநிலமன்னராகவும், சிறந்த கொடை வள்ளலாகவும் நெடுங்காலம் வாழ்ந்தவர். பொறையாற்றுக்கிழார் ஆவார். பரிசிலர்கள் எப்பொழுதும் இவரிடம் வந்து கொண்டே இருப்பர். இவரைப் புகழ்ந்து பாடிய பாடலொன்று புறநானூற்றில் காணப்படுகிறது. பாடியவர் கல்லாடனார் பொறையாறு புறத்தை எனவும் வழங்கப்படும். பொறையாற்றைப் பற்றி உலோச்சனார் அகம்.100 பாடலில் குறிப்பிடுகிறார்.

அம்பர்

கிள்ளிவளவனின் அம்பர் நகரம் பற்றி புலவர் வர்ணிக்கிறார். புதியதாக அலங்கரிக்கப்பட்ட கொடியுடன் விளங்குகிறது. நகரைச் சுற்றி அரிசிலாறு கருமணல் பரப்புபோல் உள்ளது என்கிறார்.

"வம்பு அணி உயிர் கொடி அம்பர் சூழ்ந்த
அரிசில் அம் தண் அறல் அன்ன'' (நற்றிணை.141:10–11)

மேலும் 'கரிகால் வளவனுக்கு பின் அவன் மகன் வேற்பஃறொடை பெருவிரல் கிள்ளி என்பவன் புகாரை ஆண்டான். அவனுக்கு மூன்று மக்கள் இருந்தனர். அவர்களுல் முதல் மகன் கிள்ளிவளவன். இக்கிள்ளிவளவன் குளமற்றத்து துஞ்சிய கிள்ளிவளவன் என அழைக்கப்படுகிறான். இதுவே இவ்வூரின் மன்னர் பற்றியச் செய்திளை வாழ்வியல் களஞ்சியம் மூலம் அறியலாம்.

ஆர்க்காடு

பழவாகிய அரண்களை உடைய அழிசியின் ஆர்க்காடு. இங்கு உள்ள கழனியை பகைவர்கள் அணுகுதற்கரியது.

"ஆரியில் அம் கழனி ஆர்க்காடு அன்ன'' (நற்றிணை.190:6)

என்ற பாடல் அடிகள் வழி அறியலாம். 19–ம் நூற்றாண்டில் 2–ம் கர்நாடகப் போர் ஏற்பட காரணமாக இருந்தது. பிரெஞ்சு ஆங்கிலேயருக்கும் நடைபெற்றது.
புனல்வாயில் இருப்பை

"தெவ்வர்த் தேய்த்த செவ்வேல் வயவன்
மலி புனல் வாயில் இடுப்பை அன்ன'' (நற்றிணை.260:6)

பகைவரை அழித்து வென்றவன் விரா அன் என்பவன். அவனுடைய புனல் வாயிலின் அருகமைந்த இருப்பை என்னும் நகரம் என பதிவாகியுள்ளது.

முள்ளூர்

"மா இரு முள்ளூர் மன்னன் மா ஊர்ந்து
எல்லித் தரிஇய இனநிரைப்
பல் ஆன் கிழவரின் அழிந்த (நற்றிணை.291:7–9)

முள்ளூர் மன்னாகிய மலையமான் திருமுடிக்காரி. இவன் பகைநாட்டு ஆநிரைகளைக் கவர்ந்து விடுகிறான். அந்த ஆநிரைகளுக்கு ஆரியமன்னன் எதிரே போர் செய்த போது முள்ளூரை அழித்தன் என்ற செய்தி பதிவாகியுள்ளது.

ஊணூர்

போரில் பெரும் புண் பெற்ற தழும்பன் என்பவனின் உளணூர். இவ்வூரில் யானைகள் பாகனோடு வந்து பிச்சைக்கு வந்து நிற்கும் என்பதை,

"இடும் பாண் ஒக்கல் தலைவன், பெரும் புண்
எர் தழுபேன் ஊணூர் ஆங்கண்,
பிச்சை சூழ் பெருங்களிறு போல எம்'' (நற்றிணை.300:9–11)

இப்பாடல் மூலம் அறியலாம். இது ஒரு கடற்கரை சார்ந்த ஊர். நெல்வளம் மிக்காது என்பதை மதுரை மருகள் இளநாகனார் அகநானூற்றுப் பாடல் 220. 227ம் பாடலிலும் மருங்கூறைப் பற்றிக் கூறவந்த நக்கீரர் அதுஊணுருக்கு அப்பால் உள்ள பட்டினம் என்கிறார்.

வெண்ணி

கொடையில் சிறந்த கிள்ளிவளவனின் கோயில், வெண்ணியைச் சூழ்ந்த வயலின் வெண்மையான ஆம்பல் விளங்கும் என்பதை,

"கை வண் கிள்ளி வெண்ணி சூழ்ந்த

வயில் வெள் ஆம்பல் உருவ நெறித்தலை'' (நற்றி.390:3–4)

இப்பாடல் மூலம் அறியலாம். கிள்ளிவளவனின் கோயில் அமைப்பை அறியலாம்.

வாணன் சிறுகுடி

பிற ஊர்களினும் சிறந்த ஊர் வாணனுடைய சிறுகுடி என்னும் இவ்வூர் பற்றியச் செய்திகள் விரிவாக இல்லை.

"வாணன் சிறுகுடி அன்ன, என்'' (நற்றணை.340, அடி.9)

அருமன் சிறுகுடி

"மூதில் அடுமன் பேர் இசைச் சிறுகுடி'' (நற்றிணை.367:6)

அருமன் என்பவனது சிறுகுடி என்னும் ஊரில் வாழும் மக்கள். கருணைக் கிழங்கின் பொரியலோடு செந்நெல்லாற் சமைத்த வெண்மையான சோற்றுப்பலியைத் தெய்வத்துக்கிடுவர் என்றச் செய்தியும் அச்சிறியக்கோயில் என்பதும், மிக்க உணவுப்பொருள்களை உடையதுமான நல்லமனைகள் பல அமைந்த ஊர் என்பதையும் அறியலாம்.

முடிவுரை

நற்றிணையில் ஊர்ப் பெயர்கள் 23 பாடல்களில் இடம் பெற்றுள்ளது. இதில் பாடல் அமைப்பினைப் பார்த்தால் சேர, சோழ, பாண்டிய நாடுகள் பற்றி வரிசையாகப் பாடல்கள் அமைந்து இருந்தது. குறுநில மன்னர்கள் பற்றிய பாடல் அதற்கு அடுத்தும், அதற்கு அடுத்தப்படி சிறப்பான ஊர்கள், போர்பற்றிய ஊர், பழக்கவழக்கம் பற்றிய ஊர்கள் என இருந்தது. இவற்றை எல்லாம் நோக்கும் பொழுது நற்றிணைப் பாடல்கள் எல்லாம் ஒரு முறை கருதி, புலவர்கள் பாடியுள்ளார் எனலாம். இன்றைக்கு இவ்வூர்கள் எங்கு உள்ளது என்பதையும் இவ்வாய்வுக் கட்டுரையில் பார்க்கப்பட்டுள்ளது.

74. எட்டுத்தொகை நூல்களில் ஊர்ப்பெயர்கள்

கவிஞர் துரைகோ
ப.எண்:பி.23 பு.எண்:பி20
காவல் நிலையம் தெரு,
எம்.எம்.டி.ஏ காலனி
அரும்பாக்கம், சென்னை - 106.

முகப்புரை:-

மனிதன் பிறந்து வளர்ந்து இறந்த பின்னும் அவனை ஊட்டி வளர்த்த ஊர்கள் அவனுடைய சந்ததியினரை வளர்த்துக்கொண்டிருக்கிறது. ஊர்கள் நம் உயிரோடு ஒட்டிக்கொண்டவை.உறவுகளைப்போல் நம்மை அரவணைத்துக்கொள்பவை.ஒவ்வொரு மனிதன் பெறும் புகழ் அவன் பிறந்த ஊருக்கு சென்றடைகிறது. ஊர்கள் பெற்ற புகழ் அவ்வூரில் பிறக்கும் ஒவ்வொரு உயிருக்கும் சென்றடைகிறது.ஊர்கள் பெற்ற தனிச்சிறப்பும் பெருமையும் அவ்வூருக்கு பெயர்சூட்டக் காரணமாக இருந்திருக்கின்றன.ஒவ்வொரு மண்ணும் மனிதனுக்கு மாண்பினைத் தந்திருக்கின்றது; பண்பினைத் தந்திருக்கின்றது. சங்க இலக்கியங்களில் குறிப்பாக எட்டுத்தொகை நூல்களில் காணப்படும் ஊர்கள் சிலவற்றையும் அவை எந்த மாதிரியான சூழலுக்கு இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்ட என்பதையும் இக்கட்டுரையில் காண்போம்.

மரந்தை

மரந்தை எனும் கடற்கரை நகர் **நற்றிணையில் பின்வரும் பாடலில் சுட்டப்பட்டுள்ளது.**

**"இரை தேர் நாரை எய்தி விடுக்கும்
துறைகெழு மரந்தை அன்ன இவள் நலம்
பண்டும் இற்றே; கண்டிசின் தெய்ய;
உழையின் போகாது அளிப்பினும்,சிறிய
ஞெகிழ்ந்த கவின் நலம் கொல்லோ?மகிழ்ந்தாய்"**

(நற்றிணை 35:6-10) பாடியவர் :அம்மூவனார்

மேலெழும் அலைகள் தாக்கிய நீண்ட மணல் பரந்த கரையிலே புல்லிய காம்புடைய நாவலின் கரியகனி, களிபொதிந்த மேற்புறமுள்ளதொன்று உதிர்ந்தது அதை தும்பி வண்டுகள் தம் இனம் எனக்கருதி மொய்த்தன. பல கால்களையுடைய அலவன் எனும் நண்டு அதனைப் பழம் எனக்கருதிக் கைக்கொள்ளச் சென்றது. அக்கொள்ளுகைக்கு வண்டுகள் வருந்தி கைக்கொள்ள விடாமல் யாழ் நரம்போசை போல மிக்கு ஒலித்தன.அந்த ஆரவாரத்தை அங்கே இரை தேடும் நாரை கேட்டு களி கிடைக்குமிடம் அடைந்து பூசலைத்தீர்த்தது . அவ்வாறாக கடற்றுறை மிக்க **மரந்தை** எனும் ஊர் போன்ற இவள் நலம் பண்டும் இவ்வாறாகவே இருந்ததென நீ காண்பாயாக என்பதன் வழிமரந்தை எனும் ஊரை நாம் அறிய முடிகிறது.

பாடலிபுத்திரம்:-

பாடலிபுத்திரம் எனும் ஊர் குறுந்தொகையில் பின்வரும் பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது

"நீ கண்டனையோ? கண்டார்க் கேட்டனையோ
ஒன்று தெளிய நசையினம் மொழியுமோ
வெண் கோட்டு யானை சோணை, படியும்
பொன் மலி பாடலி பெறீ இயர்
யார்வாய்க் கேட்டனை, காதலர் வரவே"

(குறுந்தொகை :75) பாடியவர் :படுமரத்துமோசிகீரனார்

தலைவனின் வரவைக்கூறிய பாணனே ! அதனை நீ கண்ணால் கண்டாயோ அல்லது தலைவனைக் கண்டவரின் சொல் கேட்டு அறிந்தாயோ ? அங்ஙனம் பிறர்பால் கேட்டனையாயின் யாரிடத்து கேட்டு அறிந்தாய்? அதனை அறிந்து கொள்ள விருப்பம் உடையோம், ஆதலின் உண்மை உரைப்பாயாக ! அப்படி உரைத்தால் அதற்குப்பரிசாக வெள்ளிய கொம்புகளை உடைய யானையின் துளையமிட்டு விளையாடும் சோணை ஆற்றின் கரையில் அமைந்துள்ள பொன்

நிறைந்திருக்கும் பாடலிபுத்திரத்தை நீ பெறுவாயாக ! என்ற விளக்கத்தின் மூலம் பாடலிபுத்திரம் என்ற ஊரை நாம் அறிய முடிகிறது.

இருப்பை:-

இருப்பை எனும் ஊர் ஐங்குறுநூற்றில் 58வது செய்யுளில்டலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

"விண்டு அன்ன வெண்ணெற் போர்வின்
கைவண் விராஅன் இருப்பை அன்ன
இவள் அணங்குற்றனை போற்றி
பிறர்க்கும் அனையை யால் வாழி நீயே !

(ஐங்குறுநூறு:58) பாடியவர் : *ஓரம்போகியார்*

மலை போல் உயர்ந்த நெற்போர்வைகள் அதிகமாக கொண்ட விரான் எனும் வண்கை வாய்ந்த தலைவனுக்குரிய ஊராக இருப்பை குறிப்பிடப்பட்டிருக்கிறது.

கழாஅர்:-

கழாஅர் எனும் ஊர் அகநானூற்றில் 6வது செய்யுளில் இடம்பெற்றுள்ளது.

"சுடரப் பூந்தாமரை நீர் முதிர் பழனத்து
அம் தூம்பு வள்ளை ஆய் கொடி மயக்கி
வாளை மேய்ந்தவள் எயிற்றுநீர்நாய்
.முள் அரைப் பிரம்பின் மூதரில் செறியும்
பல் வேல் மத்தி, கழாஅர் அன்ன எம்
இளமை சென்று தவத் தொல்லஃதே
இனிமை எவன்செய்வது பொய்ம்மொழி எமக்கே? "

(அகநானூறு 6:20) பாடியவர் : *பரணர்*

தீயைப்போன்ற தாமரைப்பூக்களையுடைய வயலில் அழகிய உள்துளைகளைக்கொண்ட வள்ளையின் மெல்லிய கொடிகளை உழக்கி வாளை மீன்களைத்தின்ற கூரிய பற்களையுடைய நீர்நாய், முட்கள் பொருந்திய தண்டையுடைய பிரம்பின் பழைய புதர்களில் தங்கியிருக்கும் இடங்களையுடைய "மத்தி" என்பவனின் கழாஅர் என்ற ஊரைப்போன்ற எம் இளமை கழிந்து பழையதாயிற்று. ஆதலால் உன் மாயப்பொய்ம்மொழி எங்கட்டு இனிமை செய்வது எவ்வாறு? என்ற பாடலின் மூலம் நாம் கழாஅர் னுளம் ஊரை பற்றிய செய்திகளை அறியமுடிகிறது.

கருவூர்:-

கருவூர் சேரருக்குச்சொந்தமான தலைநகரமாகும். இது வஞ்சி என்றும் அக்காலத்தில் அழைக்கப்பட்டது.இவ்வூரின் மதிலைச்சுற்றி ஆன் பொருநை எனும் ஆறு ஓடியதாகவும், வானை முட்டிய புகழைக் கொண்ட ஊராகவும் கருவூர் விளங்கியுள்ளது என்பது பின்வரும் புறநானூற்றுப் பாடல் சொல்லும் செய்தியாகும்.

"தண்பொருநை புனல்பாயும்
விண்பொருபுகழ் விறல் வஞ்சி "

(புறநானூறு 6:20) பாடியவர் : *பேய்மகள் இளவெயினி*

மெல்லிய கைகளையுடைய இளம்பெண்கள் கொம்புப்பூவைப் பறித்து சூட்டியபின் ஆன்பொருநை நதியில் விளையாடுவர்.இத்தகைய இயல்புடைய அழகான நதியைக்கொண்ட ஊராகவும் மற்றும் வெற்றியின் சின்னமாகவும் கருவூர் விளங்கிற்று.

கொல்லிமலை:-

சேரநாட்டின்கண் அமைந்துள்ள கொல்லிமலையின் வளம் பின்வரும் பதிற்றுப்பத்து பாடலில் மிகவும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

"முடிவி னமைந்த பெரும்பழ மிசைந்து

சாறயர்ந் தன்ன காரணி யாணர்த
தூம்பகம் பழுனிய தீம்பிழி மாந்திக்
காந்தளங் கண்ணிச் செழுங்குடிச் செல்வர்
கலிமகிழ் மேவலர் இரவலர்க்கீயும்
சுரும்பார் சோலைப் பெரும்பெயர்க்கொல்லி"

(பதிற்றுப்பத்து 9;1:19-24) பாடியவர் : பெருங்குன்னூர்கிழார்

காந்தட்பூவில் தொடுத்த கண்ணி சூடிய செழித்த குடிப்பிறந்த செல்வ மக்கள் முழவு போன்றமைந்த பெரிய பலாப்பழத்தையுண்டு விழாக் கொண்டாடினாற்போல புதுமையுடைய கரிய அழகிய மூங்கிற் குழாயிடத்தே பெய்து முதிர்வித்த இனியக்கள்ளைக் குடித்து ஆராவாரத்தையுடைய மகிழ்ச்சியை விரும்பி இரப்போருக்கு வேண்டுவன நல்கும் வண்டுகள் பொருந்திய சோலை சூழ்ந்த பெரிய பெயரையுடைய கொல்லிமலை என்பது இப்பகுதியால் அறியப்படும் செய்தியாகும்.

வையை:-

வையை எனும் ஊர் பரிபாடலில் 95வது செய்யுளில் சுட்டப்பட்டுள்ளது.

"இன்ன துனியும் புலவியும் ஏற்பிக்கும்
தென்னவன் வையைச்சிறப்பு
கொடி இயலார் கைபோல் குவிந்தமுகை
அரவு உடன்றவைபோல் இரிந்தகுலை
குடை விரிந்தவை போலக்கோலும் மலர்"

(பரிபாடல் :95-100) பாடியவர்:நல்லந்துவனார்

இச்செய்யுளின் மூலம் துனியையும் ஊடலையும் பாண்டியனின் வையை ஆறு ஏற்கச்செய்யும் சிறப்புக்கொண்டதாகும் என்று விளக்குகின்றார்.

இமயமலை :-

இமயமலை எனும் ஊர் கலித்தொகையில் 38வது செய்யுளில் சுட்டப்பட்டுள்ளது.

"இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்
உமை அமர்ந்து உயர்மலை இருந்தன னாக
ஐ-இரு தலையின் அரக்கர் கோமான்
தொடிப்பொலி தடக்கையின் கீழ்புகுத்து அம்மலை
எடுக்கல் செல்லாது உழப்பவன் போல"

(கலித்தொகை:1-5) பாடியவர்:கபிலர்

இமயமலையை வில்லாக வளைத்தவன் , கங்கையின் ஈரத்தை உடைத்தாகிய சடையினை உடையவனாகிய இறைவன் சிவபெருமான், இறைவியாகிய உமையம்மையுடன் உயர்ந்த இமயமலையிலே இருந்தனன். அரக்கர்களின் தலைவன் இராவணன் இமயமலையை எடுத்ததற்காக கைகளைக் கீழே செருகி, தொடியழகுப்பெற்ற தடக்கைகளினால் அம்மலையை எடுக்க இயலாது வருந்தினான் என்ற புராண கதையின் மூலம் இமயமலையை இப்பாடல் சுட்டுகிறது.

முடிவுரை:-

காலம் யாருக்காகவும் எதற்காகவும் காத்திருப்பதில்லை என்பதைபோல காலம் கடந்த நிகழ்வுகளை இன்றும் நமக்கு நினைவூட்டுபவை ஊர்கள்தான். அன்று சங்க இலக்கியங்களில் ஊர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டதின் காரணமாகத் தான் இன்று நாம் அவற்றைப் பற்றி அறிந்து கொள்ள முடிகிறது.இலக்கியங்கள் நம் பண்பாட்டையும் கலாசாரத்தையும், அரசியல் நெறிமுறைகளையும் பாதுகாக்கும் பொக்கிஷங்கள் ஆகும்.அந்த பொக்கிஷங்களை பாதுகாக்கின்றேன் என்று கூறிவிட்டு அதனை பெட்டிக்குள் பூட்டி வைப்பதில் நியாயமில்லை. பிறந்த ஊரை மதிப்பதைப்போல அந்த ஊர்களின் பெயர்களை நம்முடைய பல சந்ததியினருக்கு கொண்டு செல்லும் இலக்கியங்களையும் நாம் மதிக்க வேண்டும்.

75. சிறுபாணாற்றுப்படையில் மாவிலங்கை

தே. தேன்மொழி,
முனைவர்பட்ட ஆய்வாளர்,
இராணிமேரி கல்லூரி,
சென்னை – 600 004.

முன்னுரை

மனித வாழ்வு ஒரே இடத்தில் நிலைத்து இருந்தது அன்று. நாடோடிகளாகத் திரிந்து பல இடங்கட்கும் சென்று தங்களுக்கு ஏற்ற வாழ்க்கைச் சூழல், வசதி ஆகியவற்றைக் கண்டபோது ஒரு இடத்தில் குழுவாக சேர்ந்து குடியிருப்பினைத் தொடங்கியிருப்பார்கள் என்ற நிலையில் ஊர்ந்து ஊர்ந்து சென்று குடியிருப்பினை ஏற்படுத்திக்கொண்ட நிலையில் 'ஊர்' என்ற சொல் தோற்றம் பெற்றிருக்கக் கூடும் என ச.வே.சுப்பிரமணியன் குறிப்பிட்டுள்ளது ஏற்படையதாகும். (The Place in Early Tamil Literature, Page. 2)

சிறுபாணற்றுப்படையின் பாட்டுடைத் தலைவனான நல்லியக்கோடன் ஓய்மா நாட்டை ஆண்டு வந்தான். மாவிலங்கை என்னும் ஊரை தலைநகரமாகக் கொண்டு இருந்தான். (கிடங்கில் என்னும் தலைநகரில் இருந்தான் என்றும் இடம் பெற்றுள்ளது). ஓய்மானாட்டு ஊர்களாக, எயிற்பட்டினம், வேலூர், ஆமூர், கிடங்கில், மாவிலங்கை எனச் சிறுபாணாற்றுப் படையில் குறிக்கப்பட்டுள்ளன. நல்லியக் கோடனிடம் பரிசில் பெற்று மீண்ட சிறுபாணன் வேறொரு சிறுபாணனை அவனிடம் ஆற்றுப்படுத்தியதாக இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார் பாடியுள்ளார்.

ஓய்மானாடு

"உறுபுலித் துப்பின் ஓவியர் பெருமகன்"

என்று நல்லியக்கோடனை சிறுபாணாற்றுப்படை குறிப்பிடுகின்றது. இவன் 'ஓய்மான் நல்லியக்கோடன்' என்று வழங்கப்பட்டான். வேள்மகன் – வேண்மான் எனவும், வேள்மகள் வேண்மாள் எனவும் வழக்குப் பெற்றாற்போல 'ஓவியர் மகன்' என்பது 'ஒய்மான்' எனமருவியது. எனவே ஒவி என்பதன் மறுவடிவம் 'ஓய்' என்பதாயிற்று. ஓய்மான் ஆண்ட நாடு 'ஓய்மானாடு' எனப்பட்டது.

ஓய்மானாடு, திண்டிவனத்திற்கு வடக்கிலுள்ள மாவிலங்கையை வட எல்லையாகவும் கடலைத் தென் எல்லையாகவும் சூணாம்பேடு என்னும் ஊரை அடுத்த வில்லிப்பாக்கத்தைக் கிழக்கெல்லையாகவும் கொண்டது என்று மா.இராசமாணிக்கனார் குறிப்பிட்டுள்ளார். (பத்துப்பாட்டு ஆராய்ச்சி. முகவுரை பக்.XII)

நத்தத்தனார்

இவர் சிறுபாணாற்றுப்படையைப் பாடியவர். இவரது ஊர் இடைக்கழி நாட்டு நல்லூர் ஆகும். சென்னைக்குத் தென்மேற்கிலுள்ள செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் வட்டத்தில் உப்பங்கழிக்கும் கடற்கரைக்கும் இடைப்பட்ட நிலப்பகுதிதான் நல்லூர் ஆகும். காஞ்சிபுரம் மாவட்டம் செய்யூர் வட்டத்தில் உள்ளது. இப்போது 'இடைக்கழி நாடு' என்பது 'எடக்க நாடு' என்று மருவி வழங்கப்பெறுகிறது. அந்நாட்டின் தென் பகுதியில் நல்லூர் என்னும் ஊரில் வாழ்ந்தவர் நத்தத்தனார். (ம.இராசமாணிக்கனார், பத்துப்பாட்டு ஆராய்ச்சி, பக்.55)

நத்தனாருக்கு இடைக்கழிநாடு நல்லூரில் சென்னையிலிருந்து பாண்டி நாடு செல்லும் கடற்கரைச் சாலை ஓரம் 1958–ல் சிலை வைத்து கோயில்கட்டி அன்றைய சென்னை அமைச்சர் M.பக்தவச்சலம் திறப்புவிழா செய்துள்ளார். 1992–ல் தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறை

நத்தத்தனாருக்கு நினைவுச் சின்னம் எழுப்பிச் சிறப்பித்துள்ளது. நினைவுச் சின்னத்தை ஔவை நடராசன் திறந்து வைத்துள்ளார்.

தம் ஊருக்கு ஐந்து கல் தெற்கே இருந்த ஒய்மானாட்டை நன்கு அறிந்தவர். அதனை ஆண்ட நல்லியக் கோடனால் சிறப்பிக்கப்பட்டவர். ஆதலால், அவனது நாட்டுவளத்தைநன்கு விளக்கி, அந்நாட்டில் சிறப்புற்று விளங்கிய எயிற்பட்டினம், வேலூர், ஆமூர், கிடங்கில், மாவிலங்கை என்னும் ஊர்களைப் பற்றிய விவரங்களைத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். அதில் மாவிலங்கைப் பற்றி ஆய்வதே இக்கட்டரையாகும்.

மாவிலங்கை

"புகழ்பெற்ற பண்டை இலங்கையின் பெயரைக் கொண்டது மாவிலங்கை. இதனைச் சுற்றிலும் நீர் உள்ளது. அந்நீரின் துறையில் மகளிர் நீராடுவர். அந்நீர் கரையினைக் குத்தும். அந்நீரில் சுரபுன்னை மலர்களும் அகிற்கட்டைகளும் சந்தனக் கட்டைகளும் மிதக்கும். இச்சிறப்புடைய நன்மாவிலங்கையை ஆவியர் பெருமக்கள் மன்னராயிருந்து கொண்டு வந்தனர். அவருள் கொடையால் சிறந்தவன் நல்லியக் கோடன் என்பதை,

"தொன்மா இலங்கைக் கருவொடு பெயரிய
நன்மா இலங்கை மன்னருள்ளும்
மறுவின்றி விளங்கிய வடுவில் வாய்வாள்
உறுபுலித் துப்பின் ஓவியர் பெருமகன்" **(சி.பா.119–122)**

என்று சிறுபாணாற்றுப்படை குறிப்பிட்டுள்ளது. "இமும்" என்னும் ஓசையுண்டாக முழங்கும் நீர் வழங்கும் வாய்த்தலைகளை உடையது மாவிலங்கை" என்று புறம் 176–ல் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால் மாவிலங்கையைச் சுற்றியுள்ள அகழி நீர் வடிமதகுகள் வழியே இரைச்சலுடன் வெளிப்பட்டுக் கொண்டிருந்தது என்பது தெளிவாகிறது. அந்நகரத்தைச் சுற்றிலும் "நீண்ட மதிலும் ஆழமான அகழியும் இருக்கின்றன" என்று புறத்திணை நன்னாகனார் (புறம்.379) பாடியுள்ளார். **(இன்றும் தண்ணீர் குறைந்த நிலையில் உள்ளது)**

திண்டிவனத்திற்கு வடக்கில் ஏறத்தாழ ஏழுகல் தொலைவில் தெள்ளாறு செல்லும் பெருவழியில் மேல் மாவிலங்கை என்னும் சிற்றூர் அமைந்துள்ளது. அதற்குக் கிழக்கில் மூன்று பர்லாங்கு தொலைவில் கீழ்மாவிலங்கை என்னும் சிற்றூர் உள்ளது. மேல் மாவிலங்கை என்பது ஒரே ஒரு தெருவையுடைய சிற்றூர். இன்று 4 தெருக்கள் கொண்டு சுமார் 800 பேர் கொண்ட மக்கள் தொகையைக் கொண்டு விளங்குகின்றது. சாலையின் ஓரத்திலேயே அமைந்துள்ளது. கீழ் மாவிலங்கை ஐந்து அல்லது ஆறு தெருக்களையுடைய சிற்றூர். இன்று 9 தெருக்கள் கொண்டு சுமார் 1417 பேர் கொண்ட மக்கள் தொகையைப் பெற்றுள்ளது. கீழ்மாவிலங்கையிலிருந்து மக்கள் 3 கிலோமீட்டர் தொலைவில் விநாயகபுரம் என்னும் பெயரில் குடியேறி உள்ளனர்.

இவ்விரண்டு சிற்றூர்களுக்கும் இடையில் சிறு சிறு பாறைகள் சிலவும் புன்செய் நிலமும் ஐயனார் தாங்கல் என்னும் சிறிய ஏரியும் இருக்கின்றன. ஒரு பாறையில் நின்ற கோலத்தில் திருமால் உருவம் குடையப்பட்டுள்ளது.

அவை இன்றும் பல்லவர் கால குடவரைக் கோயில் என்று தொல்லியல் துறையில் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. அதற்கு மக்கள் வழிபடுவதில்லை. மேல்மாவிலங்கையிலிருந்து கிழக்குபுறம் 3 கி.மீ தொலைவில் குகைக்கோயில் ஒன்று உள்ளது.

கீழ்மாவிலங்கை

கீழ்மாவிலங்கைக்குச் சிறிது மேற்கே சிவன் கோயில் ஒன்று இருந்து அது காலப்போக்கில் அழிந்துவிட்டது. அக்கோவிலின் கற்கள் கீழ் மாவிலங்கைக்கு வடமேற்கில் இரண்டு கல் தொலைவில் உள்ள தாதாபுரத்தைச் சேர்ந்த இராயலு ஏரிக்குக் கலிங்கல் கட்டப்

பயன்படுத்தப்பட்டன. (அவை இன்றும் உள்ளது. 21.8.2011–ல் பார்வையிட்டேன்) (2.9.62–ல் இவ்விடங்களை மேற்பார்வையிட்டதாக மா.இராசமாணிக்கனார் குறிப்பிட்டுள்ளார். ப.165) அச்சிவன் கோயில்களில் கல்வெட்டுகள் இருந்ததா என ஆராயவில்லை. அக்கோவிலில் இருந்த இலிங்கமும் நந்தியும் பழைய கோவில் இருந்த இடத்திலேயே இருக்கின்றன.

இன்று அந்த இடம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு ஒருவரின் உடைமையாக வைக்கப்பட்டுள்ளது. அவ்வுடைமையாளர் அச்சிவலிங்கத்திற்கு கோயில் கட்டப் போவதாக ஊர்மக்கள் தெரிவித்தனர்.

மேல்மாவிலங்கை

மேல் மாவிலங்கை ஏரிக்குக் கிழக்கிலும் முதூரு (மூதூர்) ஏரிக்கு மேற்கிலும் நெடுஞ்சாலையை அடுத்துள்ள பகுதியில் ஒரடி நீளமும் அரையடி அகலமும் இரண்டு அங்குலம் கனமும் உடைய செங்கல் அடிப்படை ஏறத்தாழ முப்பது ஆண்டுகளுக்கு முன்பு காணப்பட்டதாம்.

ஆழ்ந்து அகன்ற அகழி

மேல்மாவிலங்கை, கீழ்மாவிலங்கை, இவை இரண்டிற்கும் இடைப்பட்ட நிலப்பகுதி ஆகிய மூன்றும் சுற்றிலுமுள்ள நிலப்பகுதியைவிட மேடாய்க் காணப்படுகிறது. நெடுஞ்சாலையில் செல்லும்போதே இதை உணரலாம். இன்றும் அத்தன்மையை உணர முடிகின்றது. இம்மேட்டுப்பகுதியைச் சுற்றிலும் ஏரிகளும் பள்ளமான விளை நிலங்களும் இருக்கின்றன. இம்மேட்டுப்பகுதிக்கு கிழக்கில் ஏறத்தாழ 1600 அடி நீளமும் 300 அடி அகலமும் உள்ள ஏரி உள்ளது. அதனை 'பெரிய ஏரி' என்பர். அதற்கு வடக்கில் ஏரியின் நீரைப்பெறும் நன்செய் நிலங்கள் உள்ளன.

மேட்டு நிலப்பகுதிக்குத் தெற்கில் முதூரு (மூதூர்) ஏரி உள்ளது. இன்று அவை பொதேரி என்று அழைக்கப்படுகிறது. அதன் நீளம் 2000 அடி, அகலம் 1100 அடி ஆகும் அதற்குக் கிழக்கில் ஏரியின் நீரைப் பெறும் நன்செய் நிலங்கள் அமைந்துள்ளன. மேட்டு நிலப்பகுதிக்கு மேற்கில் மேல்மாவிலங்கை ஏரி உள்ளது. அது 2000 அடி நீளமும் 1400 அடி அகலமும் உடையது. அதற்கு வடக்கில் மேல்மாவிலங்கை நன்செய் நிலங்கள் உள்ளன.

இவ்வாறு மாவிலங்கை என்னும் மேட்டுப் பகுதியைச் சுற்றிலுமுள்ள நிலப்பகுதி ஏரிகளாகவும் நன்செய், புன்செய் நிலங்களாகவும் காணப்படுகின்றது. இதனை ஆழ்ந்து நோக்கினால் இப்பள்ளமான சுற்றுப்பகுதி அம்மேட்டு நிலத்திற்கு அகழிபோல அமைந்துள்ளதை அறிய முடியும். 'மாவிலங்கை' என்னும் பெயரும், பண்டைக்காலச் செங்கல் அடிப்படைச் சுவர் காணப்பட்டமையும் ஆகிய இரண்டும் 'சங்ககால மாவிலங்கை', எனும் ஊரெனக் கருத இடம் தருகின்றது. (ம.இராசமாணிக்கனார், ப.167)

இன்றுள்ள மாவிலங்கை என்னும் மேட்டுப் பகுதியைச் சுற்றிலும் உள்ள ஏரிகளையும், பள்ளமான நிலப்பகுதியையும் வைத்துப் பார்க்கும்போது மாவிலங்கை ஒரு தீவுபோல் காட்சியளிக்கின்ற தன்மை உணரலாம். இம்மாவிலங்கை இலங்கைத் தீவை ஒத்திருக்கும் நிலையினை அறியலாம்.

வடவெல்லையில் அமைந்த நகரம்

மாவிலங்கைக்கு இரண்டு கல் வடக்கே உள்ள தாதாபுரம், 'வெண்குன்றக் கோட்டத்து இராசராசபுரம்' என்று கல்வெட்டுகள் (History of Tamil, P.T.S. Aiyangar P.319) கூறுகின்றன.

தாதாபுரத்தில் இராசஇராச சோழனின் தமக்கையார் தன் தம்பிக்காகக் கட்டப்பட்ட சிவன் கோயில் உள்ளது. அந்த சிவன் கோயிலின் உருவ அமைப்பில் தஞ்சாவூர் கோயில் அமைந்துள்ளது என அவ்வூர் மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஆதலால் மாவிலங்கையே ஒய்மாநாட்டின் வட எல்லையில் அமைந்த முதல் நகரம் என்பதை தெளியலாம். ஆகையால் அது சூழ்ந்து அகன்ற அகழியையும் உயர்ந்த மதிலையும் பெற்று இலங்கை போலப் பாதுகாப்புடன் விளங்கியது. (ம.இராசமாணிக்கனார், ப.168)

முடிவுரை

சிறுபாணாற்றுப்படையிலும் புறநானூற்றுப் பாடல்களிலும் புகழ்ந்து பேசப்பட்ட மாவிலங்கை என்னும் மூதூர் ஒய்மானாட்டு உள்நாட்டு ஊர் என்பதும், அரசன் விரும்பி இருக்கத்தக்க மதிலையும் அகழியையும் கொண்ட பாதுகாப்பு மிகுந்த நகரம் என்பதை அறியலாம். கி.பி. 2–ம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் தமிழகத்து ஊர்களைப் பற்றித் தாம் அறிந்தவற்றை எழுதிவைத்த தாலமி என்ற யவன ஆசிரியர் மாவிலங்கையைக் குறித்துள்ளார் என்பதை இங்கு நினைவு கூறத்தக்கதாகும். (A.R.E. 8 of 1919) நம் நாட்டுப் புலவர்கள் மாவிலங்கையின் சிறப்பைக் குறிப்பிட்டிருந்தாலும் அயல்நாட்டு ஆசிரியர் குறிக்கத் தக்க வகையில் இம்மாவிலங்கை சிறப்புற்றிருந்தது என்பதை உணர்ந்து உள்ளம் உவகையுறுகிறது.

அகழி : ஒய்மானாட்டு ஆமூரைச் சூழ அழகினையுடைய குளிர்ந்த நீரைக் கொண்ட கிடங்கு இருந்தது. (சி.பா.187–188)

கழி : கடலை அடுத்திருக்கும் உப்புநீர்ப் பரப்பாகும். ஒய்மாநாட்டு கடற்கரையில் அமைந்திருந்த எயிற்பட்டினம் நீலமணி போலும் கழி ஆழ்ந்த ஊர்களையுடையது. (சி.பா.152)

கேணி : ஒய்மானாட்டு வேலூரில் கேணி இருந்ததெனச் சிறுபாணாற்றுப்படை செப்புகிறது. (சி.பா–172)

ஒய்மானாடு அருவா நாட்டைச் சார்ந்தது "அருவா நாட்டார் சிறுகுளத்தைக் கேணி என்பர்" என்பது நச்சினார்க்கினியர் உரை (தொல்.சொல் 400 வரை)

ஒய்மாநாடு என்று வழங்கப்பட்ட மரக்காணம், ஆமூர், வேலூர், மாவிலங்கை, கிடங்கில் போன்ற ஊர்களுக்குச் சென்று கள ஆய்வு செய்யப்பட்டது. அங்கு உதவி கிராம அலுவலர்கள், பொது மக்கள் போன்றோருக்கு நன்றி. களஆய்விற்கு உதவியாக இருந்த நண்பரும் என் தம்பிக்கும் நன்றி.

துணை நின்ற நூல்கள்

1. பத்துப்பாட்டு, மூலமும் உரையும், ச.வே.சுப்பிரமணியன், கோவிலூர் மடாலயம், கோவிலூர் –630 307.
2. பத்துப்பாட்டு ஆராய்ச்சி, டாக்டர் மா.இராசமாணிக்கனார், சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை – 600 005.
3. இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள், கே.பகவதி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – 113.

76. கு.அழகிரிசாமி, பணீஷ்வர்நாத் ரேணு சிறுகதைகள் ஒப்பீடு : இடப்பெயர்கள்.

முனைவர் நித்தியா அறவேந்தன்
தமிழ் விரிவுரையாளர்,
ஸ்ரீமதி இந்திராகாந்தி மகளிர் வல்லூரி,
திருச்சி.

இலக்கியங்களில் இடச்சூழலானது பாடுபொருளுக்கும் கதை மாந்தருக்கும் இடையிலான நெருக்கத்தை உணர்த்துவதாக அமைகின்றது. இது, தொல்காப்பியத்திலேயே அறியப்பட்டு இருந்ததை, இவ்விவ் மக்கள் இந்த நிலத்திற்கு உரியவர் என்று பகுக்கப் பெற்ற முதல், கரு, உரிப்பொருள் கருத்தியல் வழி அறியமுடிகின்றது. கவிதைச் சித்திரிக்கும் இடைவெளி தொடர்பான வரையறைகளை இலக்கியக் கோட்பாடாகப் பாலா முன்வைக்கிறார். இவர் இடச்சூழலுக்கான கோட்பாடாகக் கூறும் கருத்து, 1)சிற்றூர், பேரூர், நகர, பெருநகர் அதன் பகுதிகள் 2)இயற்கை அமைவிடம் என்று அமைகின்றது.

கு.அழகிரிசாமி, பணீஷ்வர்நாத் ரேணு ஆகிய இருவரின் சிறுகதைகளில் இடம்பெறும் இடப்பெயர்களையும் அங்கு வாழும் மக்களின் தன்மைகளை ஒப்பிட்டு ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கம். இவர்களது சிறுகதைகளில் காணலாகும் இடங்களை, 1)கிராமம், 2)நகரம், 3)கிராமம் நகரம் இரண்டும், 4)நகரத் தன்மை வாய்ந்த கிராமம், 5)கிராமத்தில் இருந்து நகரத்திற்குச் செல்லுதல் என்று பகுக்கலாம். இக்கூறுகளில் கிராமம் நகரம் இரண்டும் இடம்பெறுவன தவிர்த்த மற்ற கூறுகள் இங்கு விளக்கப்பெறுகின்றன.

கு.அ.சிறுகதைகளில் கிராமம்

கு.அ.சிறுகதைகளில் கிராமச் சூழல் பதினான்கு கதைகளில் இடம்பெறுகின்றன. இச்சூழலை இரண்டு வகையாகப் பகுக்கலாம். குறிப்பிட்ட கிராமத்தின் பெயரைக் குறிக்காமல் 'கிராமம்' என்று பொதுநிலையில் பொதுநிலையில் குறிப்பிடும் வகையில் ஒன்பது கதைகள் (3, 4, 6, 8, 22, 41, 44, 45, 48) அமைந்துள்ளன. கிராமத்தின் பெயரைக் குறிப்பிடும் வகையில் ஐந்து கதைகள் (17, 18, 23, 31, 53) அமைந்துள்ளன. ஏழாயிரம்பண்ணை, வேப்பங்குளம், அம்பாசமுத்திரம், குளத்தூர், மத்தாளப்பெட்டி, விக்கிரமசிங்கபுரம் ஆகிய கிராமங்களின் பெயர்கள் கதைகளில் சுட்டப்பெறுகின்றன. இருவகைப் பகுப்பிற்கும் உரியவர்கள் செய்யும் தொழிலாக விவசாயம்(3, 41, 31), பலகாரக்கடை(6, 45, 18), மளிகைக்கடை(44), கூலி வேலை(22, 41, 44, 48, 17), கோவில் பூசாரி(8), ஆசிரியர்(28) ஆகியன இடம்பெறுகின்றன. மிராசுதாரர்(4), அம்பலக்காரர்(53) என்பனவும் இருகதைகளில் சுட்டப்பெறுகின்றன. இத்தொழில்கள் கிராமச்சூழலில் வாழ்பவரின் பொருளாதாரத்திற்கு ஏற்ற பொருத்தப் பாடுடையனவாக அமைந்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

கு.அ.சிறுகதைகளில் நகரம்

கு.அ.சிறுகதைகளில் நகரச்சூழல் முப்பத்து இரண்டு கதைகளில் இடம்பெறுகிறது. இச்சூழலை மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவை, தமிழ்நாட்டின் நகரங்கள், வெளிமாநில நகரங்கள், வெளிநாடுகள் என்று அமைகின்றன. தமிழ் நாட்டின் நகரங்கள்(1,2, 11, 21, 25, 27, 32, 33, 37, 38, 39, 42, 49, 50, 58, 54, 55, 56, 60, 62, 64, 13, 23, 33, 34, 35, 36, 57, 52) இருபத்தெட்டுக் கதைகளில் இடம் பெறுகின்றன. அவை சென்னை, மதுரை, கோயமுத்தூர், திருநெல்வேலி, கோவில்பட்டி, குற்றாலம், காஞ்சிபுரம், கன்னியாகுமரி, நாகர்கோவில், வேலூர் என்பனவாகும். வேளிமாநில நகரங்களாக பம்பாய், கல்கத்தா, அந்தமான்தீவு, ஆகியன (39, 50) ஆகியன அமைந்துள்ளன. வெளிநாடுகளாக ஜெர்மனி, அமெரிக்கா, ஜப்பான், ஆகியன (25) அமைந்துள்ளன. கதை மாந்தர் வேலை கிடைத்துச் செல்லுதல், வேலை மாற்றம் காரணமாகச் செல்லுதல் என்பன் கதைப்போக்கின் பின்னணியாக அமைகின்றன. தமிழக நகரங்களில் வாழும் கதை மாந்தர்களின் தொழில்களாக அலுவலகப்பணி (35,38,50,62,42) பத்திரிக்கை அலுகளகப் பணி(1), காரியாலத்தில் வேலை(2), கம்பெனியஜல் வேலை(39) என்று பொதுநிலையில் பல கதைகள் அமைந்துள்ளன. சில கதைகள் குறிப்பிடும் தொழிலின் பெயர்களைத் தட்டச்சர்(2,39), குமாஸ்தா(54,63), பேராசிரியர், எழுத்தாளர், தொழிற்சாலை நிர்வாகி, சமையல், பிச்சையெடுத்தல், மளிகைக்கடை, ஆசிரியர், சர்வர், நடிகர், ஹார்ட்வேர்ஸ்டோர், அடகுக்கடையில் இரசீது போட்டுக் கொடுத்தல் என்பனவாக உள்ளன. தொழிற்பயிற்சிக்காகவும், சுற்றுலாவிற்காகவும் வெளிநாடுகள் (அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பா) சென்று வருவதாக வெளிநாட்டுச் சூழல்களும் சில கதைகளில் அமைந்துள்ளன.

கு.அ.சிறுகதைகளில் நகரத்தன்மை வாய்ந்த கிராமச்சூழல்

ஒரே ஒரு கதையில் மட்டும் கிராமம் சித்தரிக்கப்படுகிறது. கதையில் கிராமத்தின் பெயர் குறிப்பிடப்பெறவில்லை. ‘குடடி டவுன்’ என்று குறிப்பிடப்பெற்றுள்ளது. கதைமாந்தர் ரயில் நிலையத்தில் ‘புக்கிங் கிளார்க்’ வேலைபார்ப்பதாகத் தொழில் குறிக்கப்பெற்றுள்ளது.

கு.அ.சிறுகதைகளில் கிராமத்திலிருந்து நகரம் செல்லுதல்

கு.அ.சிறுகதைகளில் கிராமத்திலிருந்து நகரம் செல்லுதல் என்ற நிலையை இருவகையாகப் பகுக்கலாம். அவை, 1)கிராமத்திலிருந்து நகரம் சென்று அங்கேயே தங்கிவிடுதல் 2)கிராமத்திலிருந்து நகரம் சென்று சிறிது காலத்திற்குப் பிறகு கிராமத்திற்குத் திரும்புதல்.

நகரத்தில் தங்கிவடுதல்

நகரத்திற்கு இடம் பெயர்ந்து செல்பவர்கள் பெரும்பாலும் வறுமை காரணமாகத் தொழில் செய்யச் செல்கின்றனர். அவ்வாறு அமைந்துள்ள நான்கு கதைகளில் (40,47,51,55) கிராமத்தின் பெராகச் ‘செட்டிமேடு’ என்று ஒரு பெயர் மட்டும் இடம் பெற்றுள்ளது. மற்ற கிராமங்கள் காஞ்சிபுரத்தை அடுத்த ‘ஒரு கிராமம்’ எனப் பெறுகின்றன. நான்கு கதைகளிலும் சென்னை நகரத்தில் ஒருவர் ஸ்டுடியோ வைத்தும், பல தொழில்கள் செய்வதும், மற்றொருவர் பத்திரிக்கை நடத்தி நட்டப்படுவதும், நடிகனாவதும், பெண்கள் பசிக்கொடுமையால் பாலியல் தொழிலில் ஈடுபடுவதும் சித்தரிக்கப்பட்டுள்ளன.

நகரத்திலிருந்து கிராமத்திற்குத் திரும்புதல்

கு.அ.சிறுகதைகளில் கிராமத்தில் இருந்து நகரம் சென்று சிறிது காலத்திற்குப் பிறகு கிராமத்திற்குத் திரும்பும் நிலையைக் காண இயலவில்லை.

ரேணுவின் சிறுகதைகளின் கிராமம்

ரேணுவின் சிறுகதைகளில் கிராமம் மட்டுமே பின்னணியாக அமையும் இரு கதைகள் இடம்பெற்றுள்ளன (5,11). அவை கமல்பூர், பிரௌலி என்பன ஆகும். ‘கிராமம்’ என்று பொதுநிலையிலும் பெயர்களுக்குப் பின்னால் கிராமம் என்ற நிலையிலும் அமைந்துள்ளன. இக்கிராமவாசிகளின் தொழில்களாக டீக்கடை, சோத்துப்பருப்புக்கடை, விவசாயம், வீட்டு வேலைகள் செய்வது ஆகியன அமைந்துள்ளன.

ரேணுவின் கதைகளில் நகரம்

ரேணுவின் சிறுகதைகளில் நகரம் மட்டுமே வரும் நான்கு கதைகள் இடம்பெற்றுள்ளன (4,8,9,18). நுகரத்தின் பெயராக பாட்னா இரண்டு கதைகளில் இடம் பெற்றுள்ளது. நகரம் என்று பொதுநிலையில் இரண்டு கதைகள் அமைந்துள்ளன. இந்நகரவாசிகளின் தொழில்களாக அலுவளகத்தில் வேலைஈ கதாசிரியன், நாடக நடிகன், இசைக்கச்சேரி செய்தல் என்பன அமைந்துள்ளன.

ரேணுவின் சிறுகதைகளில் நகரத்தன்மை வாய்ந்த கிராமச்சூழல்

ஒரே ஒரு கதையில் மட்டும் நகரத்தன்மை வாய்ந்த கிராமச்சூழல் இடம் பெறுகிறது. இது பெயர் குறிப்பிடாமல் ‘சிற்றூர்’ என்றே சுட்டப்படுகிறது. குறுகிய காலகட்டத்தில் வளர்ச்சி பெற்ற ஊராகவும் அமைந்துள்ளது. இதில், ‘ரிப்பேர்கடை’ தொழிலுக்குரிய களமாக அமைந்துள்ளது.

ரேணுவின் சிறுகதைகளில் கிராமத்திலிருந்து நகரம் செல்லுதல்

இந்நிலையை கு.அ.கதைகள் போன்றே இருவகையாகப் பகுக்கலாம்.

நகரத்தில் தங்கிவிடுதல்

நகரத்திற்குச் சென்று வாழ்வது (15) ஒரு கதையில் மட்டும் இடம்பெறுகிறது. அந்தக் கிராமத்தின், நகரத்தின் பெயர்கள் குறிக்கப் பெறவில்லை. கதை மாந்தர் கிராமத்தில் விவசாயம் செய்பவர்களதகவும் நகரத்திற்குச் சென்று பொதுச் சேவையில் (இயக்கங்கள்) ஈடுபடுவதாகவும் அக்கதை அமைந்துள்ளது.

நகரத்திலிருந்து மீண்டும் கிராமத்திற்கே திரும்புதல்

கிராமத்திலிருந்து நகரத்திற்குப் படிப்பிற்காகவும் தொழில் தொடர்பாகவும் சென்று பின்னர்க் கிராமத்திற்கே திரும்புவதாக (1,2,14,21) நான்கு கதைகள் அமைந்துள்ளன. இவற்றில் ஒரு கதையில் மட்டும் கிராமத்தின் பெயர் மோகன்பூர் என்று அமைந்துள்ளது. மற்ற மூன்று கதைகளிலும் கிராமம் என்ற பொதுநிலைக் குறிப்பே காணப்பெறுகின்றது. நகரத்தின் பெயர்களாக

சியாம்நகர், பாட்னா, டில்லி ஆகியன அமைந்துள்ளன. இந்நகரங்களில் வாழ்கின்ற மக்களின் தொழில்களாக, சுவரையில் சித்திரம் வரைந்து வர்ணம் தீட்டுதல். ஆரசவை பயில்வான், ரிக்ஷாடெலிவரி என்று அமைந்துள்ளன. கிராம மக்கள் மேற்கொள்ளும் தொழில்களாக ஆடு, மாடு மேய்த்தல், குஸ்தி பயிற்சியளித்தல், விவசாயம், எண்ணெய் மில் வைத்தல், பால்விற்பனை என்பவை அமைந்துள்ளன.

கு.அ., ரேணு சிறுகதைகளில் இடங்கள் ஒப்பீடு

கு.அ. கதைகளில் தமிழகம், இந்தியா, வெளிநாடு என்று இடச்சூழலின் எல்லையாக அமைய, ரேணுவின் கதைகளில் பீகார், இந்தியா என்றே இடச்சூழல் அமைந்துள்ளது. வெளிநாட்டு இடச்சூழல் இடம்பெறவில்லை. இருவரின் கதைகளிலுமே கிராமத்தில் உள்ளவர்கள் தொழில், படிப்பு, சுற்றுலா என்ற காரணங்களுக்காக நகரத்திற்குச் சென்று வருகின்றனர். இருவருடை கதைகளிலும் கிராமத்துத் தொழில்கள் சிறுதொழில்கள்(கடை நடத்துதல்) சார்ந்தும், நகரத் தொழில்கள் கல்வி சார்ந்தும், அலுவளகம் சார்ந்தும் இடம்பெற்றுள்ளன. கு.அ.கதைகளில் கதை மாந்தர் கிராமத்திலிருந்து நகரத்திற்கு இடம்பெயர்ந்து அங்கேயே வாழுகின்றனர். ஆனால், ரேணுவின் கதைகளில் திரும்பிவருதல் என்ற நிலை உள்ளது. இந்நிலைப் பாகுபாடு மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கும் கிராமங்களைவிட நகரங்களே ஏற்றவை எனும் கருத்தை வெளிப்படுத்துகிறது.

இதுவரை கூறப்பட்ட கருத்துக்களின் நிலைப்பாட்டிற்குக் காரணம் இருவருமே கிராமத்தில் பிறந்து வளர்ந்து பிறகு நகரத்தில் வாழ்ந்தமையாக இருக்கலாம்.

77. சிலப்பதிகாரத்தில் மாநகரங்கள், நகரங்கள் ஊர்கள்

முனைவர்.நயம்பு.அறிவுடைநம்பி,
மாவட்டச் செயலர்,
உலகத்திருக்குறள் பேரவை,
போரூர், சென்னை-600 116

முன்னுரை

உலகிலுள்ள மக்கள் தத்தம் நாட்டு மலைகள், ஆறுகள், ஊர்கள் ஆகியவற்றை நன்கு அறிந்திருப்பர். ஆனால் தமிழக மக்கள் குறிப்பாக மாணவர்கள், ஆசிரியர்கள்கூட தமிழக மலைகள், ஆறுகள், ஊர்கள் பற்றி அறிந்து கொள்ள அக்கறை காட்டுவதில்லை. இலக்கியங்களில் ஊர்ப்பெயர்கள் என்னும் ஆய்வு சிந்திக்கதக்கது. சிந்திக்கவைப்பது. சொல்லின் செல்வர் இரா.பி.சேதுப்பிள்ளை அவர்கள் ஊரும் பேரும் என்ற அருமையான நூலெழுதிய முன்னோடியாவார். பாஸ்கரத் தொண்டைமான் அவர்கள் வேங்கடம் முதல் குமரிவரை என்ற நூலெழுதி நமக்கு வழிகாட்டியுள்ளார். இக்கட்டுரை சிலப்பதிகாரத்தில் மாநகரங்கள், நகரங்கள், ஊர்கள் பற்றி எழுதப்பெற்றது. முக்கிய ஊர்கள் பற்றி விளக்கமாகவும், மற்றவை பற்றிச் சுருக்கமாகவும் எழுதப்பெற்றுள்ளன.

சிலப்பதிகாரத்தில் இடம் பெற்றுள்ள ஊர்கள்

நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் முதன்மைக்காப்பியமாகும், முத்தமிழ்க் காப்பியமாகும். இதில் முப்பத்தேழு ஊர்கள் இடம் பெற்றுள்ளன. இவற்றை மாநகரங்கள், நகரங்கள், ஊர்கள் என்று மூவகைப்படுத்தி, அவை சிலம்பில் இடம்பெற்ற தன்மைகளை இக்கட்டுரை விளக்குகிறது. பூம்புகார், மதுரை, வஞ்சி ஆகிய மூன்றும் மாநகரங்களாகும். உறையூர், கொற்கை, அயோத்தி, திருவரங்கம், உஞ்சை (உச்சயினி) தொண்டி, நாக நீள்நகர் ஆகிய ஏழும் நகரங்களாகும். மற்ற இருப்பத்தேழும் ஊர்களாகும். இக்கட்டுரையால் சிலப்பதிகாரம் இலக்கியம் மட்டுமன்று, அது வரலாற்று நூலாகவும், புவியியல் நூலாகவும் விளங்குகிறது என்பது விளங்கும்.

அ) **சிலம்பில் மாநகரங்கள்:** சிலப்பதிகாரத்தில் பூம்புகார், மதுரை, வஞ்சி ஆகிய மூன்று மாநகரங்கள் இடமபெற்றுள்ளன.

1) **பூம்புகார்:** இது சோழநாட்டின் தலைநகர். சங்ககாலத்தில் தலைசிறந்த துறைமுகமாக விளங்கியது. பட்டினப்பாலை, சிலப்பதிகாரம் ஆகிய நூல்கள் இம்மாநகர் பற்றி விரிவாகப் பாடியுள்ளன. "முட்டாச்சிறப்பின் பட்டினம்" என்று பட்டினப்பாலை பாராட்டுகிறது. இளங்கோவடிகள் மங்கல வாழ்த்துப் பாடலில் "பூம்புகார் போற்றுதும்" என்று அம்மாநகரை அறிமுகப்படுத்துகிறார் "ஆரங்கண்ணிச் சோழன் மூதூர்" (பதிகம்:2) "செம்பியன் மூதூர்" (27:87) என்பனவற்றால் அதன் பழமை தெரிகிறது. பொதிகைமலை, இமயமலை ஆகியன அழியாமல் நிலைத்திருப்பன. அதுபோல அழியாத புகழுடைய மாநகரமாகும். இது மருவூர்ப்பாக்கம், பட்டினப்பாக்கம் என்ற இரட்டை நகரங்களைக் கொண்ட மாநகரம். "மருவின்றி விளங்கும் மருவூர்ப்பாக்கமும் பாடல்சால் சிறப்பின் பட்டினப்பாக்கமும்" (5:39-58) என்கிறார் அடிகள். மருவூர்ப்பாக்கம் கடற்கரையை ஒட்டியது. இது நிலாமுற்ற மாளிகைகளும், மான்போன்ற பல கண்களுடைய மாளிகைகளும், சரக்கு அறைகளும் உடையது. யவனர்கள் இங்கு வாழ்ந்தனர். ஆடை நெய்யும் சாலியர், பிட்டு விற்கும் காழியர், மீன் விற்கும் பரதவர், கள்விற்கும் வலைச்சியர், பாசவர், உமணர், ஓசுநர் ஆகியோர் வாழுமிடமாகும். மேலும் தச்சர், கன்னார், கொல்லர், ஓவியர், சிற்பியர், தட்டார், செம்மார், பாணர் ஆகிய பல்வேறு தொழில் செய்வோர் வாழ்கின்றனர். இங்கு கூல வீதிகளும், கடைவீதிகளும் உண்டு (5:7-39). பட்டினப்பாக்கத்தில் இராசவீதி, தேரோடும் வீதி, கடைத்தெருக்கள் உள்ளன. இங்கு அரசர், அமைச்சர், படைவீரர், வேதியர், உழவர், மருத்துவர், சோதிடர் ஆகியோர் வாழ்ந்தனர். மேலும் இங்கு மாதகர், வேதாளிகர், நாழிகைக் கணக்கர், சங்கறுப்போர் ஆகியோர் இருந்துள்ளனர். இவ்விரு நகரங்களுக்கிடையே நாளங்காடி உள்ளது. அங்கு இந்திரனால் முசுகுந்தனுக்கு அளிக்கப்பெற்ற சதுக்கபூதம் உள்ளது. இப்பூதம் நான்கு காததூரத்திற்குள் தவறு செய்வோரைத் தண்டிக்கும் என்பதால் பூம்புகார் நகரம் நாற்பது மைல் சுற்றளவுடையது என அறிகிறோம். வெள்ளிடைமன்றம், இலஞ்சிமன்றம், நெடுங்கல் மன்றம், பூத சதுக்க மன்றம், பாவை மன்றம் என்னும் ஐவகை மன்றங்கள் புகாரில் உள்ளவை. கற்பகத்தருக்கோயில், யானைக்கோயில், பலதேவர் கோயில் ஆகிய பல கோயில்கள் அங்குண்டு (10:9-25). இங்கு இலவந்திகை, உய்யாவனம், கவேரவனம், சம்பாவதிவனம், உவவனம் என்னும் சோலைகள் உண்டு. சோமகுண்டம், சூரியகுண்டம் என்னும் குளங்கள் உள்ளன. இங்கு இந்திரவிழா மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. சிலப்பதிகார இந்திரவிழா ஊரெடுத்த காதை, மணிமேகலை, பட்டினப்பாலை ஆகியன இம்மாநகரின் பெருமைகளைப் பறைசாற்றுகின்றன.

2) **மதுரை மாநகரம்:** இது பாண்டிய நாட்டின் தலைநகரம். சிலப்பதிகாரம், மதுரைக் காஞ்சி ஆகிய நூல்கள் இதன் பெருமையை உணர்த்தும். "பதியெழு அறியாப் பண்புமேம்பட்ட / மதுரை மூதூர் மாநகர்" (15:1-6) என்றும் "பொற்றேர்ச் செழியன் மதுரை மாநகர்" (27:84) என்றும் "நான்மாடக்கூடல்" (21:39) என்றும் இன்னும் பல்வேறு இடங்களில் இம்மாநகர் பற்றி அடிகளார் விளக்கமாகப் பாடியுள்ளார். மாநகர், மாடமதுரை, கூடல்நகர் எனப் பாடப்பெற்றுள்ளது. காவற்காட்டை உடையது. அகழி, கோட்டை, மதில், சுருங்கை உடைய பாதுகாப்பான மாநகர். இந்நகரில் மூடுவண்டி, பல்லக்கு, உடைய பரத்தையர் பலர் வாழ்ந்தனர். அங்காடி வீதிகளும், பல்வகையான தொழில் செய்வோர் குடியிருப்புக்களும் உடையது. (14:212-218) மதுரைதான் மிகவும் காவல் மிகுந்தது. இங்கு பாண்டியன் அரண்மனைகளும் சிவன், திருமால், பலராமர், முருகன், புத்தர், அருகன் கோயில்களும் உள்ளன (14:7-12). இம்மாநகரில் "பாண்டியனின் கோலின் செம்மையும் கொடையின் தண்மையும் / வேலின் கொற்றமும் விளங்கிய கொள்கை" (15:3-6) ஆகியவற்றைக் காணலாம். சிலப்பதிகாரத்தின் ஊர்காண்காதை இந்நகரைப்பற்றிய ஏராளமான செய்திகளைப் படம்பிடித்துக் காட்டுகிறது. இது வையை ஆற்றின் தென்கரையில் உள்ளது.

3) **வஞ்சிமாநகர்:** இது சேரரின் தலைநகரம். இந்நகரம் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நான்கு நிலங்களும் அருகருகே நெருங்கி அமைந்த அழகு நகரமாகும். செங்குட்டுவன் வடநாடு சென்றபோது, இருங்கோ வேண்மாள் கனகமாளிகையில் துயிலாமல் நானில மக்கள் பாடும் பாடல்களைக் கேட்ட வண்ணம் இருந்தாள் என்பதால் அறியலாம். குறத்தியர் பாடிய "குறிஞ்சிப்பாணியும்" (27:224) கோவலர் ஊதிய குழலின் பாணியும் (27:241) படுநுகம் பூணாய் பகடே (27:228) அருஞ்சொற் கிளவியர் அம்தீம்பாணியும் (27:251) என்ற அடிகளால் வஞ்சிமாநகர் நானில வளமுடையது என உணரலாம். இங்கு சிவன்கோயில், திருமால் கோயில், அருகர் கோயில் ஆகியன இருந்தன (26:54-67). சிலப்பதிகாரம், பதிற்றுப்பத்து ஆகிய நூல்கள் இம்மாநகரை வியந்து பாராட்டியுள்ளன. இம் மூன்று மாநகரங்களின் பெயரிலே புகார்க்காண்டம் மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம் என அமைத்துக் காவியம் பாடிய இளங்கோவடிகளின் அறிவின் நுட்பமும், புலமையின் நுணுக்கமும் கற்று மகிழத்தக்கன.

ஆ) நகரங்கள்:

1) **உறையூர்** : ஒருகாலத்தில் சோழரின் தலை நகரமாக விளங்கியது. இதனை "பீடார் உறந்தை" (8:3) என அடிகள் பாராட்டுகிறார். இதற்கு வாரணம், கோழியூர் என்ற வேறு பெயர்களுண்டு. சேரன் செங்குட்டுவனின் மைத்துனனாகிய பெருங்கிள்ளி இந்நகரை ஆண்டவனாவான்.

2) **கொற்கை:** பாண்டியனின் துறைமுகநகரமாகும். "கொற்கையில் இருந்த வெற்றிவேற்செழியன்" (உரைபெறு கட்டுரை:1) என்பதால் அதனை வெற்றிவேற் செழியன் ஆட்சிபுரிந்தான் என்பதும், இதுவும் ஒருகாலத்தில் பாண்டியரின் தலைநகரமாக இருந்தது என்பதும் விளங்கும். "வாழிஎம் கொற்கை வேந்தே (20:30) நற்றிறம் படராக் கொற்கை வேந்தே" (20:69) எனக் கண்ணகி இந்நகரை மன்னனுடன் சேர்த்தே விளித்துரைத்தாள்.

3) அயோத்தி : இது கோசல நாட்டின், தலைநகரம். இராமன் பிறந்தது, ஆண்டது. வரலாற்றுச் சிறப்புடையது. சுரயூநதிக்கரையில் உள்ளது. இந்நகரை "அருந்திறல் பிரிந்த அயோத்தி போல" (28:143) எனச் சிலம்பு பாடியுள்ளது. இராமனைப் பிரிந்த அயோத்தி நகர மக்கள் வருந்தியது போலக் கோவலனைப் பிரிந்த புகார் மக்கள் வருந்தினார்கள்.

4) திருவரங்கம் : காவிரி, கொள்ளிடம் இவற்றின் நடுவில் அமைந்துள்ளது. திருமாலியரின் கோவில் எனப் புகழப்படும் பெருமைக்குரியது. இந்நகரை ஆர்வார்கள் பலர் மஙீகளாசாசனம் டிசய்துள்ளனர். இளஙீகொவழகள்.

"விரிதிரைக் காவிரி வியன்பெருந் துருத்தித்
திருவமர் மார்பன் கிடந்த வண்ணமும்" (11:39-40) எனப்பாராட்டியுள்ளார்.

5) உஞ்சை என்னும் உச்சயினி : இது விக்கிரமாதித்தன் தலைநகரம். புகழ்பெற்ற மாகாளி கோயில் உடையது. வித்தியாதரன் தன் மனைவியுடன் இந்திரவிழா காண வருகிறான். வான்வழி வரும்போது அவன் தன் காதலிக்கு இமயம், கங்கை, உஞ்சை, விந்தியம், வேங்கடம் ஆகியவற்றைச் சுட்டிக்காட்டி வருமிடத்தில் இதனை அறிகிறோம். "சிமையத்து இமயமும் செழுநீர்க்

கங்கையும், உஞ்சைஅம்பதியும் விஞ்சத்து அடவியும் காவிரி நாடும் காட்டிப் பின்னர்" (6:28:36) என்பதால் இந்நகரை அறியலாம்.

6) தொண்டி : இது சேரரின் துறைமுக நகரமாகும். இதனை "வங்க ஈட்டத்துத் தொண்டியோர் இட்ட" (14:107) என்பதால் அறியலாம் இந்தத் துறைமுகத்தின் வாயிலாகப் பாண்டியனுக்கு அகில், சந்தனம், இலவங்கம், சாதிக்காய், கற்பூரம் முதலிய பொருட்கள் கிடைத்தன.

7) நாகநீள் நகர் : "நாகநீள் நகரொடு நாகநாடு அதனொடு" (1:21) என இந்நகரை அடிகளார் அறிமுகப்படுத்தியுள்ளார். நாகநீள் நகர் (சுவர்க்கம்) நாகநாடு (கீழ் உலகம்) ஆகியன போகம் என்னும் மிகுந்த இன்பம் உடையன. அதைப்போல மிக்க இன்பமுடைய நகர் பூம்புகார் என அடிகள் பாராட்டியுள்ளார்.

இ) ஊர்கள் : சிலப்பதிகாரத்தில் இருபத்தேழு ஊர்கள் இடம் பெற்றுள்ளன.

1. **அகப்பா** : மாடலன் செங்குட்டுவனிடம் நிலையாமை பற்றிப் பேசும் போது "மிகப்பெரும் தானையொடு இரும்செரு ஓட்டி
அகப்பா எறிந்த அருந்திறல் ஆயினும்" (28:143-14) என்ற இடத்தில் அகப்பா என்ற ஊரைக் குறிப்பிடுகிறான். இவ்வூர் பாதுகாப்புடைய அரண் உடையது.

2. **அழுப்பில்** : அழும்பில் என்னும் ஊரில் வாழ்ந்த வேள் என்பவன் அழும்பில் வேள் எனப்பெற்றான். இவன் செங்குட்டுவனின் அமைச்சன். "அறைபறை என்றே அழும்பில்வேள் உரைப்ப"(25:177)

3. **இடும்பில்** : செங்குட்டுவன் வெற்றிபெற்ற ஊர்களுள் இடும்பில் என்பதும் ஒன்றாகும் "நெடும் தேர்த்தானையொடு இடும்பில் புறத்து இறுத்தக்" (22:118)

4. **ஏரகம்** : முருகனின் அறுபடைவீடுகளுள் ஒன்று. மலை நாட்டகத்து ஒருபதி என்பர்! "ஏரகமும் நீங்கா இறைவன்கை வேலன்றே" (24: தெய்வம்8)

5. **கபிலபுரம்** : "காம்பெழுக் கானகக்கபில புரத்தினும்" (23:141) கலிங்க நாட்டிலுள்ள ஓர் ஊர். இது மூங்கில்கள் நிறைந்த காடுகளையுடைய ஊராகும்.

6. **காப்பியத்தொல்குடி** : இது அழகு வாய்ந்த ஊராகும். இதனைக் "காப்பியத் தொல்குடிக் கவின் பெற வளர்ந்து" (20:83) என்கிறார்

7. **குமரிக்கோடு** : இது கடல் கோளால் அழிந்த ஊர். குமரிக்கோடு என்ற மலையால் பெயர் பெற்றது. "குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள" (11:20).

8. **குமரியம் பெருந்துறை** : இது தற்போதைய கன்னியாகுமரியாகும், இதனை "நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்" (8:1) "குமரியம் பெருந்துறை கொள்கையின் படிந்து" (15:15) "குமரியம் பெருந்துறை ஆடி மீள்வேன்" (27:69) என்றெல்லாம் பாடியுள்ளார்.

9. **குயிலாலுவம்** : இமயமலையிலுள்ள ஓர் ஊர். (18:102)

10. **கொடும்பை** : கொடும்பை நெடுங்குளம் கோட்டம் புக்கால் (11:71) எனப்பாடப் பெற்றுள்ளது. இது கொடும்பாவூர் எனவும் அழைக்கப்பெறும்.

11. **சிங்கபுரம்** : இது கலிங்க நாட்டிலுள்ள நீர்வளமுள்ள வயல்கள் சூழ்ந்த ஊராகும். "சிங்கா வண்புகழ்ச் சிங்கபுரத்து" (பதி :47) "தீம்புனல் பழனச்சிங்கபுரம்" (23:139) "சிங்கா வண்புகழ்ச் சிங்கபுரத்தின்" (23:140) என்றெல்லாம் பாடப்பெற்றுள்ளது.

12. **செந்தில்** : இது முருகனின் அறுபடைவீடுகளுள் ஒன்று. இது திருச்செந்தூராகும். "சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றம்" (24 தெய்வம் 8).

13. **தங்கால்** : பாண்டிய நாட்டில் வளமான வயல் சூழ்ந்த ஊர் வார்த்திகன் என்பவன் அவ்வூரினன் "தங்கால் என்பது ஊரே" (23:75) "தடம்புனல் கழனித்தங்கால்" (23:118).

14. **தலைச் செங்கானம்** : சேரநாட்டிலுள்ள ஊர். மாடலன் இவ்வூரினன். "தாழநீர் வேலித் தலைச் செங்கானத்து" (15:11).

15. **திருமால்குன்றம்** : இது தற்போது பழமுதிர்ச்சோலையாகிய மலையூர் அழகர் மலையென்றும் கூறுவர். "திருமால் குன்றத்துச் செல்கு வீராயின் " (11:91)

16. **நீலகிரி** : நீலமலையில் உள்ள ஊர். ஊர்ப் பெயரே மலைப்பெயராயிற்று. "நீலகிரியின் நெடும்புறத்திருத்தாங்கு" (26:85)

17. **நெடுங்குளம்** : கொடும்பாளூர் அருகேயுள்ள ஊர்.

18. **நெடுவேள்குன்றம்** : இது திருச்செங்கோடு என்னும் ஊராகும் நெடுவேள் குன்றம் அடிவைத்து ஏறி(23:89) செங்கோடும், வெண்குன்றும் (24 தெய்வம் .8)

19. **பறையூர்** : சேர நாட்டூர் கூத்தாடும் சாக்கையன் வாழ்ந்த ஊர். "பறையூர் கூத்த சாக்கையன் ஆடலில் மகிழ்ந்து" (28: 76-22)

20. **மாங்காடு** : குடகு மலையிலுள்ளது மாங்காடு. மாங்காட்டு மறையோனின் ஊராரும் "வந்தேன் குடமலை மாங்காட்டு உள்ளேன் " (1:53).

21. **வடவேங்கடம்** : இது புகழ்பெற்ற திருமால் கோயிலான திருப்தியாகும் "வீங்குநீர் அருவி வேங்கடம் என்னும்" (11:41) எனச்சிலம்பு பாடுகிறது.

22. **வயலூர்** : பாண்டியன் வார்த்திகனுக்குத் தந்தது. பாண்டிய நாட்டில் உள்ளது. "மடங்கா விளையுள் வயலூர் நல்கி" (28:119)

23. **வாரணம்** : மத்தியப் பைந்திரத்தில் (பிரதேசத்தல்) உள்ளது. "மத்திய நன்னாட்டு வாரணம் தன்னுள்" (15:178)

24. **வியலூர்** : "சிறுகுரல் நெய்தல் வியலூர்" (28:115) எனப்பாடப்பெற்றுள்ளது. செங்குட்டுவன் வென்ற ஊர்களுள் வியலூரும் ஒன்றாகும்.

25. **வெண்குன்று** : முருகனின் அறுபடை வீடுகளுள் ஒன்றான சுவாமிமலை. "சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும்" (24 : தெய்வம் 8).

26. **செங்களம்** : "கொங்கர் செங்களத்து கொடுவரிக்கயல் கொடி" (25:153) கொங்கரது ஆட்சிக்கு உட்பட்ட ஊர்.

27. **நேரிவாயில்** : இவ்வூரில்தான் செங்குட்டுவன் ஒன்பது மன்னர்களைத் தோற்கடித்தான். இதனை "ஒன்பது மன்னரை நேரிவாயில் நிலைச்செரு வென்று" (28:116-117) என்றார். இங்ஙனம் சிலப்பதிகாரத்தில் இருபத்தேழு ஊர்கள் இடம் பெற்றுள்ளன.

முடிவுரை

சிலப்பதிகாரத்தில் மூன்று மாநகரங்களும், ஏழு நகரங்களும், இருபத்தேழு ஊர்களும் இடம்பெற்றுள்ளன. இந்த முப்பத்தேழு ஊர்களின் இருப்பிடம், அருமைபெருமைகள் பற்றி இன்னும் விரிவான நூல் எழுதப்பெற வேண்டும். தமிழ் இலக்கியங்களில் ஊர்ப்பெயர்கள் என்னும் ஊர்க்களஞ்சியம் தொகுத்து வெளியிடப் பெற வேண்டும். இவற்றால் உயர்தனிச்செவ்வியல் மொழியானத் தமிழின் தொன்மையும், பெருமையும் உலகறிய, தமிழகம் அறிய ஏதுவாகும்.

78. அறுபடை வீடுகளின் பெயர்கள்

முனைவர் சி.பரமேஸ்வரி
உதவிப் பேராசிரியர்,
அழகப்பா அரசு கலைக் கல்லூரி,
காரைக்குடி – 3.

மக்கள் தாம் வாழ்வதற்கும் தொழில் புரிவதற்கும் ஏற்ற இடத்தினைத் தேர்ந்தெடுத்தனர். பிறகு தாம் தேர்ந்தெடுத்தப் பகுதியைப் பிறர் கண்டறிந்து வரவும், தமது இருப்பிடத்தையும் பிறருக்குக் குறித்துக் காட்டவும் பெயரிட்டழைத்தனர். இவ்வாறு எழுந்ததே ஊர்ப்பெயராகும். இப்பெயர் மனிதனுடைய விருப்பத்திற்கேற்பவும் சூழ்நிலைக்கேற்பவும் அமையும். இவ்வகையில் திருமுருகாற்றுப்படையில் முருகப்பெருமான் வீற்றிருக்கும் அறுபடை வீடுகளின் பெயர்களை எடுத்துரைக்கிறது.

தொல்காப்பியத்தில் ஊர்

தொல்காப்பியம் மக்கள் வாழும் இடத்தை 'ஊர்' என்று குறிப்பிடுகிறது. பொருளதிகாரத்தில், பேரூர் (அகத். 983:1), ஊரது செரு (அகத். 1014:8), ஊர்கொலை (புறத்.1004:5), ஊரது சார்பும் (அகத். 986:3), ஊரோடு தோற்றம் (புறத். 1031), ஊரும் பேரும் (கள. 1048:11), ஊரும் அயலும் (செய். 1447:1), ஊரும் பெயரும் (மர.1575:1) ஆகிய இடங்களில் 'ஊர்' என்ற சொல் வந்துள்ளது.

ஊர்ப் பெயர்கள்

மனிதன் தன் நாடோடி வாழ்க்கையினை விடுத்து என்றைக்கு நிலையாக வாழத் தொடங்கினானோ அன்றைக்கே ஊர்ப் பெயர்கள் அமைந்தன. "மனித இனம் ஓரிடத்தில் நிலைத்து வாழத் தொடங்கிய காலத்திலேயே இடப்பெயர்களும் தோற்றுவிக்கப்பெற்றிருத்தல் வேண்டும்''[1] என்று ஆர்.ஆழவந்தார் குறிப்பிடுவார். மக்களது பண்பாட்டுக் கூறுகளை மையமிட்டும் இடத்தினைப் பற்றிய உணர்வினை ஏற்படுத்தக் கூடிய வகையிலும் இடப்பெயர்கள் அமையும். கி.நாச்சிமுத்து "ஊர்ப் பெயரமைப்பு முறைகள் அவ்வம் மக்களின் வாழிடம், வாழ்க்கை முறை போன்ற பண்பாட்டுக் கூறுகளைப் பொறுத்து அமையும்''[2] என்பார். "குறிப்பிட்டதொரு இடத்தை உணர்த்தியும், அந்த இடத்தைப் பிற இடத்தினின்று தனிமைப்படுத்தியும் மக்கட்கு அவ்விடம் பற்றிய உணர்வை அளிப்பன இடப்பெயர்கள்''[3] என்று கே.பகவதி சுட்டுவார்.

அறுபடை வீடுகள்

முருகன், கந்தன், குமரன், சேயோன், செவ்வேள் போன்ற பல்வேறு பெயர்கள் முருகப்பெருமானுக்கு உண்டு. தொல்காப்பியம் முருகப்பெருமானைச் சேயோன் என்று குறிப்பிட்டு அவன் விரும்புகின்ற மேகம் சூழ்ந்த மலையையுடை குறிஞ்சி நிலத்தையும் மொழியும். இதனை,

"சேயோன் மேய மைவரை உலகமும்'' (தொல். 951:2)

என்பதால் பெறப்படும். சிலப்பதிகாரம் முருகப்பெருமான் காட்சி தரும் பழம்பதிகளை,

"சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும்
ஏரகமு நீங்கா இறைவன்கை வேலன்றே''
- சிலப். குண.குர. 7:1-2

என்று சிறப்புப் பொருந்திய திருச்செந்திலும் திருச்செங்கோடும் சுவாமிமலையும் ஏரகமும் ஆகிய இடங்களில் நீங்காத முருகனின் கையிடத்து வேல் என்பதைக் குறிக்கும்.

பத்துப்பாட்டில் கடவுள் வாழ்த்தெனத் திகழும் திருமுருகாற்றுப்படையில் முருகப்பெருமானின் அறுபடைவீடுகளின் பெயர்கள் நக்கீரரால் எடுத்தாளப்பட்டுள்ளன. அவை, திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருஆவினன்குடி, திர ஏரகம், குன்று தோறும் ஆடல், பழமுதிர்ச்சோலை என்பனவாகும்.

திருப்பரங்குன்றம்

திருப்பரங்குன்றம் முருகனுக்குரிய அறுபடை வீடுகளுள் முதலாவதாக வைத்துப் போற்றப் பெறுவது. இப்பதியானது பாண்டிய நாடான மதுரைக்கு அருகில் மேற்குத் திசையில் ஐந்து கல் தொலைவில் உள்ளது.

கரிய சேற்றினையுடைய அகன்ற வயலின் விரிந்து மலர்ந்த முள் பொருந்திய தாள்களையுடையது தாமரை மலர். இம்மலரில் இரவெல்லாம் உறங்கி, வைகறைப் பொழுதில் மணம் கமழுகின்ற நெய்தல் மலரின் தேனை உண்டு, சூரியன் தோன்றிய பின்பு மகளிரின் கண்கள் போன்று மலர்ந்த சுனைப்பூக்களை நாடும் வண்டுக் கூட்டம் ஆரவாரிக்கின்ற வளம் நிறைந்தது திருப்பரங்குன்றம். அக்குன்றிலே முருகப்பெருமான் மிக்க விருப்புடன் கோயில் கொண்டருளி உறைதலும் உரியன். இதனை,

> "இருஞ்சேற்று அகல்வயல் விரிந்துவாய் அவிழ்ந்த
> முள்தாட் தாமரை துஞ்சி வைகறைக்
> கள்கமழ் நெய்தல் ஊதி எல்படக்
> கண்போல் மலர்ந்த காமரு சுனைமலர்
> அஞ்சிறை வண்டின் அரிக்கஉம் ஒலிக்கும்
> குன்றுஅமர்ந்து உறைதலும் உரியன்'' (72 – 77)

என்று குறிப்பிடும்.

குன்றம், குன்று என்பன மலை என்னும் பொருளையுடையன. குன்றமானது பல்வேறு மலர்கள் நிறைந்து வளம் மிக்கதாகத் திகழும். இம்மலர்களின் தேனை உண்ட வண்டுக் கூட்டங்கள் ஆரவாரிக்கும் வளம் நிறைந்தது. பரம் பொருளாகிய முருகப்பெருமான் இக்குன்றிலே உறைந்திருப்பதனால் இவ்விடம் திருப்பரங்குன்றம் எனப்பட்டது.

திருச்சீர் அலைவாய்

அலைவாய் என்பது கடற்கரை அமைந்த ஊராகும். இவ்வூர் நெல்லை மாவட்டத்தின் கடற்கரையின் காயல்பட்டினத்திற்குத் தெற்கில் அமைந்துள்ளது. நா.மு.வேங்கடசாமிநாட்டார் "செந்தில் - திருச்செந்தூர்; திருச்சீரலைவாய்'' என்று மொழிவார். "திருச்சீரலைவாய் - திருச்செந்தூர்; நாமனுரலைவாய் என இப்பதியைக் குறிப்பர் என்று'' இரா.மோகன் கூறுவார்.

இவற்றால் இத்தலத்திற்குத் திருச்செந்தில், திருச்செந்தூர், திருச்சீரலைவாய், நாமனுரலைவாய் ஆகிய பெயர்கள் உண்டு என்பதை அறிந்து கொள்ள இயலும்.

தேவதுந்துபி முழங்கவும் கொம்புகள் மிக்கொலிப்பவும் வெள்ளிய சங்குகள் முழங்கவும் இடியை ஒப்ப முழங்கும் முரசோடு வெல்கொடியில் இருந்து மயில் அகவும் சான்றோர்களாலே புகழப்பட்ட மிக உயர்ந்த புகழினையுடைய அலைவாய் என்னும் திருப்பதியில் ஏற எழுந்தருளுதலும் முருகப்பெருமானுக்கு நிலைபெற்ற தன்மை ஆகும்.

> "அந்தரப் பல்லியம் கறங்க திண்காழ்
> உயிர்எழுந்து இசைப்ப வால்வளை ஞால
> உரம்தலைக் கொண்ட உரும்இடி முரசமொடு
> பல்பொறி மஞ்ஞை வெல்கொடி அகவ
> விசும்பு ஆறுஅக விரைசெலல் முன்னி
> உலகம் புகழ்ந்த ஓங்குஉயர் வழுச்சீர்
> அலைவாய்ச் சேறலும் நிலைகிய பண்பே'' (119 — 125)

என்று கடற்கரையில் வீற்றிருக்கும் முருகப் பெருமானை எடுத்துரைப்பார்.

சீராக அலை பாய்ந்து கொண்டிருக்கும் சிறப்பு மிக்கக் கடற்கரை வாயிலில் துந்துபிகளும் சங்குகளும் மயில்களும் ஒலியெழுப்ப முருகப் பெருமான் எழுந்தருளியிருப்பதால் திருச்சீரலைவாய் என்ற பெயர் ஏற்பட்டது.

திருஆவினன்குடி

'குடி' என்னும் சொல் மக்கள் வாழக்கூடிய குடியிருப்பினை உணர்த்தக் கூடியது. ஆவிக்கோமானின் குடியினர் வாழ்ந்த ஊர் 'ஆவின்குடி'. இவ்வூர் நாளடைவில் 'ஆவிநன்குடி' என்றாயிற்று. ஆவியர் குலத்தவர் பழனி மலைப் பகுதிகளில் வாழ்ந்து வந்தனர். ஆதியில் இது பொதினி என்று பெயர் பெற்றிருந்தது. வேளிர் குலத்

தலைவர்கள் அம்மலையையும் அதனைச் சார்ந்த நாட்டையும் ஆண்டு வந்தனர். இப்பொதினியே காலப்போக்கில் பழனி என்றாயிற்று. "இன்றுள்ள பழனி என்னும் தலத்தின் மலையடிவாரத்தில் உள்ள கோயிலே ஆவினன்குடி என்னும் ஊரைச் சார்ந்த பழைய கோயில் என்றும் மலை மீதுள்ள கோயில் பிற்காலத்தது என்றும் கூறப்படுகிறது"[6]

"முடிவுறழ் திணிதோள் நெடுவேள் ஆவி
பொன்னுடை நெடுநகர்ப் பொதினி"
- அகநா. 61; 15-16

என்பதில் வேளிர் குலத்தைச் சேர்ந்த ஆவி என்ற குறுநில மன்னன் பொதினி என்னும் நகரத்தில் ஆட்சி புரிந்தான் என்பது அறியப்படுகிறது. இங்ஙனம் ஆவியர் குடியினரால் நெடுங்காலமாக ஆளப்பெற்ற நகரம் 'ஆவிநன்குடி என்று பெயர் பெற்றது. இரா.ஜெயபால் "பொதினி: இக்காலத்துப் பழனி என்பது பொன்வளங்கொண்ட இம்மலை ஆவிக்குரியது; யானைகள் மிகுந்தது"[7] என்பர்

திருவாவின்குடி என்னும் பதியினைப் பற்றி இரா.மோகன் "திருவாவினன்குடி — இப்போது பழனி என வழங்கும் ஊராகும். இது சங்க காலத்தில் 'பொதினி' என்ற பெயருடன் ஆவி என்னும் வேளிர் தலைவனுக்கு உரியதாய் இருந்தது. இதன் அருகில் ஆய்க்குடி என இருக்கும் ஊர் 'ஆவிகுடி' என்பதன் மரூஉ. இப்பகுதியைக் கல்வெட்டுக்கள் 'வையாவி நாடு' என்று குறிக்கின்றன"[8] என்பார்.

இத்தகைய திருப்பதியில் முருகன், குற்றமற்ற அறக்கற்பினையுடை தெய்வயானையாருடனே சிலநாள் திருவாவினன்குடி என்னும் ஊரிலே இருந்தலும் உரியன். இதனை,

"தாகில் கொள்கை மடந்தையொடு சிலநாள்
ஆவினன்குடி அசைத்தலும் உரியன்" (175 – 176)

என்னும் அடிகள் குறிப்பிடும்.

ஆவியர் குடியைச் சேர்ந்த ஆவிக்கோ என்ற மன்னன் தன் குடிமக்களுடன் ஆட்சி செய்த இடத்தில் முருகப்பெருமான் வீற்றிருந்ததால் திருஆவினன்குடி என்ற பெயராயிற்று.

திருஏரகம்

ஏரகம் என்பது திருவனந்தபுரத்தையடுத்த பத்மநாபபுரத்தின் வடகிழக்கே பதினைந்து கல் தொலைவில் உள்ள குமாரகோயிலாகும். இவ்வூர் சுவாமிமலையின் வேறாகியது. வீடும் என்னும் பொருள்படும் அகம் என்ற சொல் சில ஊர்ப் பெயர்களில் அமைந்திருக்கிறது. முதலில் வீட்டைக் குறித்த அகம் என்ற சொல் நாளடைவில் வீடுகளையுடைய ஊரைக் குறித்தது. "கும்பகோணத்திற்கு மேற்கேயுள்ள சுவாமிமலையே திருஏரகம் என்பர். அங்கு கோயில் கொண்டுள்ள முருகன் சுவாமிநாதன் என்னும் பெயருடையார். மூல மந்திரமாகிய பிரணவத்தின் உட்பொருளை ஈசனார் மனங்குளிர எடுத்துரைத்த காரணத்தால் சிவகுரு என்றும் சுவாமிநாதன் என்றும் முருகன் பெயர் பெற்றார். என்பர். சுவாதிநாதனுக்குரிய மலை சுவாமிமலை என்று அழைக்கப்படுகிறது"9.

ஏரகத்து முருகன் கோயிலில் நாற்பத்தெட்டு ஆண்டு பிரமசரிய விரதம் காத்த அந்தணர்கள், தாங்கள் வழிபட வேண்டிய முக்காலமம் அறிந்து பூணுலையும் புலராத ஆடையையும் அணிந்து கொண்டு தலைமேலே குவித்த கையினராய் முருகப் பெருமானைப் புகழ்ந்து துதித்து, ஆறு எழுத்துக்களைத் தன்னிடத்துக் கொண்ட பெறுதற்கு அருமையான 'சரவணபவ' என்னும் வேத மந்திரத்தை நாக்கு மட்டும் அசையும் அளவில் பயிலும் படி பலமுறை ஒலித்துப் பின்னர் வாசமிக்க மலர்களை எடுத்திட்டு வழிபடவும் அதற்கு,

" ....பெரிது உவந்து
ஏகரத்து எறைதலும் எரியன்" (188 – 189)

ஏர் என்றால் அழகு. அகம் என்றால் இடம். அழகிய சோலைகள் நிறைந்த பகுதி 'ஏரகம்'. இத்தகைய சோலைகள் நிறைந்த மலைப்பகுதியில் முருகப்பெருமான் எழுந்தருளியுள்ளார்.

குன்றுதொறு ஆடல்

முருகக் கடவுள் குறிஞ்சி நிலத் தெய்வம் ஆதலால் எல்லா மலைகளிலும் இருந்து அருள்புரிவான் என்பது பற்றிய பொதுவில் குன்றுதொறு ஆடல் எனப்பட்டது. முழவை ஒத்த பெரிய கைகளால் பொருந்த ஏந்தி மெல்லிய தோளையுடைய மாண்பினைப் போலும்

பல மகளிரைத் தழுவிக் கொண்டு அவர்க்கு முதற்கை கொடுத்து மலைகள தோறும் சென்று விளையாடுதல் முருகக் கடவுளின் நிலைத்த குணமாம்.

"முழவு உறழ் தடக்கையின் இயலஏந்த
மென்தோள் பல்பிணை தழீஇ தலைத்தந்து
குன்றுதொறு ஆடலும் நின்றதன் பண்பே" (215 – 217)

என்பது குறிப்பிடும்

பழமுதிர்ச்சோலை

திருமால் திருப்பதியாக விளங்கும் மதுரைக்கு அருகிலுள்ள அழகர் மலையே பழமுதிர் சோலையாகும். சோலை என்ற சொல்லும் சில ஊர்ப்பெயர்களில் உண்டு. முன்பு இங்கு முருகன் கோயில் இருந்தது என்றும் அது அழகர் கோயிலுக்கு எதிரில் இருந்தது என்றும் கூறுவர்.

பல்வேறு துகிற் கொடிகள் அசைவது போன்ற அகிலைச் சுமந்து, சந்தன தரத்தைச் சாய்த்துத் தள்ளி, சிறு மூங்கிலின் கொம்பு தனிக்கும் படி வேரைப் பிளந்து, விண்முட்டிய மலையில் ஞாயிற்று மண்டிலத்தை ஒத்த தேனிறால்களை கொடுத்து, ஆசினிப்பலாவின் சுளைகள் தன்னிடத்தே கலக்க, சுரபுன்னையின் மலர்கள் உதிரக் கருங்குரங்குகளும் முசுக்கலைகளும் நடுங்கும்படி யானைகள் குளிர்ப்ப பெரிய களிற்று யானைகளின் முத்துக்களையுடைய வெள்ளிய கொம்புகளை உள்ளடக்கிக் குதித்து, நல் பொன்னும் மணியும் நிறம் விளங்கும் படி செய்து, பொடியாகிய பொன்னைக் கொழித்துக் கொண்டு வாழையின் அடிமரம் ஒடியவும் தெங்கின் இளநீர்க் குலை உதிரவும், அவற்றைத் தாக்கி மிளகுக் கொடியின் கரிய கொத்துக்கள் சாய, பீலியையுடைய மயிலடகளோடே கோழிப் பெடைகள் கெட்டோட, ஆண்பன்றியும் பனையின் செறும்பு போன்ற கரிய முடி பொருந்திய உடலையுடைய கரடிகளும் மலைமுழைஞ்சுகளில் புகுந்து ஒடுங்கவும், கரிய கொம்பினையுடைய ஆமான் ஏறுகள் முழங்கவும், மலையுச்சியினின்றும் இழும் என்னும் ஓசையுண்டாகக் குதிக்கும் அருவியையுடையதும் என்று குறிப்பிடுவதோடு, பழம் முற்றின சோலைகளை உடையதும் ஆன மலைக்கு உரிமையுடைய முருகப் பெருமானை,

"பழம் முதிர் சோலை மலைகிழவோன்" (317)

என்று மொழியும்.

இவ்வாறு பழ முற்றிய சோலைகளையுடைய இடத்தில் முருகப்பெருமான் பழமுதிர்ச்சோலை எனப்பட்டது.

தொகுப்புரை

முருகப் பெருமான் சோலைகள் நிறைந்த மலைகள் தோறும் வீற்றிருக்கக் கூடியவன். இம்மலைப் பகுதியைப் பிற மலைப்பகுதியிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவதற்காக அறுபடை வீடுகளின் பெயர்கள் அமைந்தன.

சான்றெண் விளக்கம்

1) ஆர்.ஆளவந்தார், கல்வெட்டில் ஊர்ப் பெயர்கள், ப.1
2) கி.நாச்சிமுத்து, தமிழ் இடப்பெயராய்வு, ப.113
3) கே.பகவதி, இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள் (தொகுதி 2). பக் 2-3
4) ந.மு.வேங்கடசாமிநாட்டார், சிலப்பதிகாரம், ப.496
5) இரா.மோகன்(உ.ஆ), பத்துப்பாட்டு முதற்தொகுதி (மூலமும் உரையும்), ப.46
6) ஆர்.ஆளவந்தார், இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள்(தொகுதி 1), ப.74
7) இரா.செயபால்(உ.ஆ),அகநானூறு(மூலமும் உரையும்), ப.183
8) இரா.மோகன்(உ.ஆ),பத்துப்பாட்டு முதற்தொகுதி (மூலமும் உரையும்), ப.55
9) ரா.பி.சேதுப்பிள்ளை, ஊரும் பேரும், ப.288

79. தொல்காப்பியத்தில் சேரி – தோற்றமும் மாற்றமும்

திருமதி.க.பழனியம்மாள்,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தேசியக்கல்லூரி, திருச்சி-1.

முன்னுரை

சமுதாயத்தின் கடைக்கோடி மக்களைக் கொண்டு ஊர்க்கோடியில் அமைந்த பகுதி சேரி எனப்படுகின்றது இன்று! ஒரு சமுதாயத்தின் குப்பை எனக் கருதப்படும் பகுதியே சேரி, என்று எண்ணிப் பலரும் சேரியை விட்டுச் சற்று தள்ளியே நிற்கின்றனர். எனவே, அச்சேரியின் ஆரம்பம் எங்கே? அதன் வளர்ச்சி என்ன? என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சேரி – பொருள்

“சேரே திரட்சி” (தொல். சொல். நு.363) – என்பதில் “சேர்” என்பது செறிந்து, திரண்டிருத்தல் என்கிறார் தொல்காப்பியர். மக்கள், செறிந்து திரண்டிருக்கும் ஊர் பகுதியும் இக்காரணத்தால் “சேரி” என்று அழைக்கப் பட்டிருக்கலாம் எனப் பொருள் கொள்வது பொருத்தமானதாகும்.

தொல்காப்பியத்தில் சேரி

வாழ்க்கையின் பொருளுக்கு இலக்கணம் வகுத்த தொல்காப்பியத்தில் அகப்பொருள் பற்றிப் பேசும்போது முதலில் வருவது முதற்பொருளான நிலம். அந்நிலத்தை ஐந்திணைகளுக்கும் உரிய பகுதிகளாகப் பிரித்து வரையறை செய்கிறார் தொல்காப்பியர். இதில் முல்லை நில பகுதியாக காடும் காட்டைச் சார்ந்த பகுதியை உரிமையாக்குகிறார். மேலும், முல்லையின் ஊர் பகுதிகளாக பாடி, சேரி என்பவற்றை குறிப்பிடுகின்றார்.

“ஏமப் பேரூர்ச் சேரியும் சுரத்தும்” (தொல். பொருள். நூ.40)- என்று நூற்பா அமைத்து சேரிப்பற்றி பேசுகிறார். அதுமட்டுமின்றி இதற்கு அடுத்த நூற்பாவான, “அயலோர் ஆயினும் அகற்சி மேற்றே” என்பதில் வரும் அயலோர் என்பதை விளக்குமிடத்து “சேரியினும், சுரத்தினும் பிரிதலன்றி” – என்று இளம்பூரணர் பொருள் தொடர்புபடுத்துகின்றார். எனவே, இந்நூற்பாவின்படி தொல்காப்பியர் காலத்தில் “மக்கள் சேர்ந்து வாழ்ந்த பொதுப்பகுதி சேரி” என குறிப்பிடப்பட்டுள்ளதை உணரலாம். இக்காலத்தில் சாதி வேறுபாடுகள் இல்லை என்பதை மனதில் கொண்டால் “மக்களின் பொதுவான வாழிடம் சேரி” என்பது தெற்றென விளங்கும். அதுமட்டுமின்றி,

“ஊரும் அயலுஞ் சேரியோரும்
நோய்மருங் தறிநருஞ் தந்தையும் தன் ஐயும்
கொண்டுெத்து மொழியப் படுதலல்லது
கூற்றவெண் இன்மை யாப்புறத் தோன்றும்” (தொல். பொ. நூ.183)

என்ற செய்யுளியல் நூற்பாவிலும் “சேரியைக்” குறித்துக் காட்டுகின்றார் தொல்காப்பியர். இதன் மூலமும் “சேரி” என்ற பகுதி தொல்காப்பிய காலத்திலும் உண்டென்பதை அறியலாம்.

தொல்காப்பிய சேரி – யாருடையது?
இளம்பூரணர் விளக்கம்

“கிளைப்பெய ரெல்லாங் கொளத்திரி பலவே” (தொல். எழு. நூ308)

என்பதை விளக்குவதற்கு இளம்பூரணம் “எயின் சேரி, எயினச்சேரி” யைக் குறிப்பிடுகின்றார். பாலை நிலத்து மக்கள் எயினார் எனப்படுபவர். அவர்கள் கூடி வாழுமிடம் “எயினச் சேரி” வேறுபாடின்றி பாலை நிலத்து மக்கள் அனைவருக்கும் உரிய இடம் என்பதை குறிப்பால் உணரலாம்.

தமிழச்சேரி – தமிழ்நாடன்றோ?

“தமிழென் கிளவியும் அதனோ ரற்றோ” (தொல்.எழு.நு386)

இதற்கு உதாரணமாய் தமிழக் கூத்து, தமிழச் சேரி என்கிறார் இளம்பூரணர். இதன்படி நோக்கின் தமிழ்க்குடிகள் வாழும் பகுதி தமிழச்சேரி என்பதால் தமிழ் நாடே தமிழச் சேரியாயிற்று. இதில் எங்கிருந்து சேரிக்கு தாழ்வு வரும்? எப்படி சேரி என்பது தீண்டத்தகாத பகுதியாக குறுகி நிற்கும்? சொல்லுங்கள்!

இருவிளை – கொற்றன் :

பண்டைய கருவூரில் உள்ள சேரியாகிய "இருவிள" என்ற ஊரைக் குறிப்பிடுகின்றார் இளம்பூரணர். "இருவிள கொற்றன்" என்பவனையும் காட்டுகின்றார். (எழு.நூ.307) "கொற்றவன்", எனப் போற்றப்படுவன் தாழ்ந்த சேரியில் வசித்தல் என்பது எவ்விதம் ஏற்புடைதல் ஆகும்? எனக் கொண்டால் அன்றை "சேரி" என்பதில் தாழ்வு எதும் இல்லை என்பதை உணரலாம்.

சேனாவரையர் காட்டிய சேரி :

தொல்காப்பிய இடையியலில் இடைச் சொல்லின் இலக்கணம் கூறும்போது நூற்பா 249ல் உதாரணமாய் "வருகதில் லம்ம வெஞ்சேரி சேர" (அகம் 276) என்ற பாடலில் சேரியைக் குறிப்பிடுகின்றார் சேனாவரையர்.

இனம் கூறும்போது, "எடுத்த மொழி இனஞ்செப்பலும் உரித்தே" (தொல்.சொல்.நூ.60) என்பதை விளக்க "மேற்சேரிக் கோழியலைத்தது எனக் கீழ்ச்சேரிக் கோழியலைப்புண்டது" என்று மேற்சேரி, கீழ்ச்சேரி என்ற இருச் சேரிகளை இனமாகக் காட்டுகின்றார்.

- இதில், மேல், கீழ் என்பவை மேற்கு, கிழக்குச் சேரிகளாக இருத்தல் வேண்டும். ஏனெனில் மேற்குத் தெரு, மேலத்தெரு எனவும், கிழக்குத்தெரு, கீழத் தெரு எனவும் வழங்கல் பெறுதலால் மேற்குச் சேரி, மேல் சேரி எனவும், கிழக்குச் சேரி, கீழச்சேரி எனவும் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். அதுவன்றி மேற்சேரி என்பது உயர்ந்தது கீழ்ச்ரேி என்பது தாழ்ந்தது என்றிருந்தால். மேற் சேரி கோழி அலைத்தது எனக் கீழ்ச்சேரிக் கோழியலைப் புண்டிருத்தல் இயலாது போயிருக்கும்.

புறப்பொருள் வெண்பாமாலை சுட்டிய சேரி :

ஐயனாரிதனார், பெருந்திணைப் படலத்தில் பிறர்மனைத் துயின்றமை விறலி கூறல் என்னுமிடத்தில்

"மற்றவர் சேரியின் மைந்தன் உறைந்தமை
இற்றென விறலி எடுத்துரைத்தன்று" என்று படைத்துள்ளார்.

தலைவி தவிர்த்த அல்லது தலைவனின் வீடல்லாத பிற பகுதியை, பிறர் வாழுமிடத்தை "மற்றவர் சேரி" என்று கூறுகின்றார். ஆக சேரி என்பது அனைவரும் செல்லத்தக்க, தங்கத்தக்க மக்கள் வாழிடமே என்பதை இதன் வழி ஏற்கலாம்.

- இந்நூற்பாவிற்கு அவர்காட்டும் உதாரணத்தில் "தையலார் சேரி" "மயிலன்ன காரிகையர் சேரி" எனப் பல பரத்தையர் சேரிகளை தலைவன் தங்கிய இடமாய் காட்டுகின்றார். இதன் மூலம் அன்றைய நாட்களில் சேரி எனக் குறிப்பிடும் அளவில் பெண்கள் பலர் சேர்ந்திருந்து பரத்தமை மேற்கொண்டனர் என்ற வாழ்க்கை முறை தமிழரின் நனி நாகரிக வாழ்விற்கு மிகப் பெரும் களங்கமாக நிற்பதை காணலாம்.

சேரிப்பரத்தை :

பரத்தமையிலும் ஒருவனுக்கே உரியவள் காமக்கிழத்தி, இற்பரத்தை என கூறப்படுகிறாள். பலருக்கும் உரிய பரத்தை சேரிப்பரத்தை எனப்படுகின்றாள்.

"ஊரின் பொதுவிடம் சேரி என்பதால் அவளும் சேரிப்பரத்தை ஆயினள் போலும்!

சங்க இலக்கியச் சேரி :

"....... சிறுசின்
மீன் சீவும் பாண்சேரி" (புறம் 348:4) என்பது பாணர்கள் வாழும் சேரியை நுவலுகின்றது. "செறிந்த சேரிச் செம்மல் மூதூர்" என்ற அகப்பாட்டில் (15) மக்கள் செறிந்த சேரிகள் கொண்ட பழமையான ஊரைப் பார்க்கலாம். "ஊஉரலழெச் சேரி கழலென" என்ற குறுந்தொகை அலர் எழுந்த ஊரை சேரி என்று கழலுவதை கேட்கலாம். அதுமட்டுமின்றி திருவிழாக் காலங்களில் மல்லர்கள் தத்தம் சேரிகளில் விளையாட்டு போர் நிகழ்த்துவர் என்கிறது மதுரைக்காஞ்சி.

"பேரிசை நன்னன் பெறும்பெயர் நன்னாள்
சேரி விழவின் ஆர்பெழுந்தாங்கு" – என்ற மதுரைக்காஞ்சி 615 – 619.

நன்னன் என்னும் அரசனின் பிறந்தநாள் விழை ஆர்பரித்து கொண்டாடிய ஊரை சேரி என்று குறிப்பிடுகின்றது. எனவே, இதன் வழிக்காணின் "சேரி" என்று அன்று குறிப்பிடப்பட்டது மக்கள் நிறைந்த அனைவருக்கும், பொதுவான வாழிட பகுதியே ஆகும். அவ்வாறில்லை எனில் ஒரு மன்னனின் பிறந்த நாள் விழா "சேரி விழவின்" என்ற பொருளில் ஆளப்பட்டிருக்குமா? சற்றே எண்ணிப் பாருங்கள்.

சிலம்பில் வந்த புறஞ்சேரி :

சிலப்பதிகாரத்தின் மதுரைக்காண்ட பகுதியில் "புறஞ்சேரியிறுத்த காதை" என்ற கதைப்பகுதி காணப்படுகின்றது. அதில் நகரின் புறத்தே அமைந்த, மக்கள் வாழும் பொதுவான பகுதியாகப் புறஞ்சேரி காட்டப் பெறுகின்றது.

சேரியில் பண்டமாற்று :

"நெல்லின் நேரே வெண்கல் உப்பு எனச்

சேரி விலைமாது கூறலின்" (அகம் 140) என்ற பாட்டு பண்டைய தமிழரின் பண்டமாற்று வணிகமுறையை எடுத்துக் காட்டுகிறது. அதில் நமது சேரியின் கூறையும் காணலாம்.

சேரியில் வசிப்போர் தாழ்ந்தவராய், தீண்டத்தகாதவர்களாய் பண்டு மதிக்கப்பட்டிருந்தால் அவர்களால் நெல்லுக்கு நேராய் எப்படி உப்பை மாற்றி பண்டமாற்று முறையில் வணிகம் நிகழ்த்தியிருக்க முடியும்? இப்படி அகப்பாட்டில் எப்படி விலைக் கூறி விற்றிருக்க முடியும்? எனவே, "சேரி என்பது பண்டைய நாளில் மக்கள் நெருக்கம் மிகுந்த, மக்கள் வாழிட பகுதியைக் குறிக்கும் சொல்" எனக் கொள்ளுதலே பொருத்தமானதாகும்.

பேராசிரியரின் சேரி மொழி :

"தெரிந்த மொழியார் செவ்விதிற் கிளந்த
தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றிற்" (தொல்.பொ.செ.நூ 223)

என்ற நூற்பாவிற்கு பொருள் கூற வந்த பேராசிரியர், "சேரி என்ற நூற்பாவிற்கு செவ்விதிற் கிளந்து" என்று பாடம் கொண்டு பொருள் கூறுகின்றார். இவரது செயலை விளக்கப் புகுந்த மு.வ. அவர்கள் "கூற்றுக் குரியாருக்கு ஏற்றவாறு சொல் அமைய வேண்டும் என்ற கருத்தால் சேரி மொழியாற்" என்று கூறியிருக்க வேண்டும் என்கிறார்.

இக்கருத்து வழி "அனைவருக்கும் தெரிந்த, பொதுவான பேச்சு வழக்கை சேரி மொழி" என்கிறார் என உணரலாம். அவ்வாறு கொள்வதன் வாயிலாக, "சேரி என்பது அனைவராலும் ஏற்கத்தகுந்த, மதிக்கத்தகுந்த மக்கள் வாழிடம் என்றும் அவர் பேசிய மொழி சிறப்பான, அனைவருக்கும் பொதுவான சேரி மொழி" – என்பதே பேராசிரியர் கருத்து வழி பெறப்படும் உட்பொருளாகும்.

இதனை அரண் செய்யும் வண்ணம் முனைவர்.தமிழண்ணல் வனப்பை தொகுத்துக் காட்டும்போது சொல்லின் அடிப்படை பரந்தமொழி, தெரிந்த மொழி, சேரி மொழி, ஓங்கிய மொழி என்கிறார்.

புதுச்சேரி :

சோழ மண்டலக்கரையில் புதிதாகத் தோன்றிய ஒருச்சேரி, ஒரு குடியிருப்பு பகுதி "புதுச்சேரி" எனப் பெயர் பெற்றது.

சேரி என்பது தாழ்ந்த வகுப்பாரின் குடியிருப்பைக் குறிக்கும் சொல்லாக இருந்திருந்தால், ப்ரெஞ்சுக்காரர்களின் குடியிருப்பு எப்படி புதுக் சேரியாகவோ? பாண்டிச்சேரியாகவோ? எப்படி பெயர் பெற்றிருக்க முடியும்.

சேரியின் தற்காலப் பொருள் :

"இக்காலத்தில் சேரி என்னும் சொல் இழிந்த வகுப்பினராக எண்ணப்படுகின்ற பள்ளர், பறையர் முதலியோர் வசிக்கும் இடங்களைக் குறிக்கின்றது. ஒவ்வோர் ஊரிலும் சேரி உண்டு. அஃது ஊரின் புறத்தே வகுப்பார்க்கு உரியதாக அமைந்திருக்கின்றது" – என்கிறார் ரா.பி.சேதுப்பிள்ளை.

சேரி – பொருள் தாழ்வுறக் காரணம் :

இளம்பூரணர் வாழ்ந்த பிற்காலச் சோழர்களின் காலமே தொல்காப்பிய நெறிக்கு மாறான பிறப்பு அடிப்படைப் பிரிவினையை வளர்த்துவிட்டு, ஆதரித்த காலமாகும். இதனை K.K.பிள்ளை அவர்கள் பிற்காலச் சோழர் காலத்தில் ஏற்பட்ட மிக முக்கிய மாறுதல் கிளைச் சாதிகளின் வளர்ச்சியென்றார்.

"பார்ப்பார், அரசர், இடையர், குறவர் என்றின்னோர் மாட்டு ஒருவரையொருவர் ஒவ்வாமற் கிடக்கும் இயல்பு என்ற இளம்பூரணரின் குறிப்பாலும், இனவேற்றுமைகளை வலுப்படுத்தி இடையிடையே உரிமைகளாகப் பகை மூண்ட செய்திகள் பிற்காலச் சோழர் சமுதாயத்தில் இருந்ததாக கே.கே.பிள்ளை குறிப்பிடுவதில் இருந்தும் இதனை அறியலாம்.

அரசனின் வலது கைப் பகுதியில் அமர்ந்தவர்கள் வலங்கைப் பிரிவினர் உயர்ந்தவர், இடது கைப் பக்கம் அமர்ந்தவர் இடங்கையினர் தாழ்ந்தவர் என்று சாதி வளர்த்த காலம் அது! "புலையன் தொடு தீம்பால் திரியும்" என்ற அளவிற்கு தீண்டாமை முகிழ்ந்ததை இளம்பூரணர் உரை காட்டும் நமக்கு! தாழ்ந்த பிரிவினரைச் சேர்ந்த மக்கள் மிகவும் அடிமையாக கருதப்பட்டனர் என்ற கே.கே.பிள்ளை கூற்றை "கூழுக்கு கூற்றேவல் செய்யும்" என்ற இளம்பூரணர் உரை எடுத்துக்காட்டுகின்றது.

சிறு வரவினதான மெய்ப்பாடுகள் பற்றி விளக்குமிடத்து "தன்மை" என்பதற்குச் சாதி இயல்பு, அவரவர் சாதி இயல்புக்கு ஏற்ப தோன்றும் நிலை என்று பொருள் கூறுகிறார் இளம்பூரணர். சோழர் காலத்தில் வாழந்ததால் அன்றைய அவர்கால சமுதாய பழக்க வழக்கங்கள் இப்படி இழையோடி இருப்பதைக் கொண்டு,

"இவ்வாறு சோழர்கள் காலத்தில் வேரூன்றி கடுமையான சாதிப் பழக்கங்களால், பின் வந்த விஜய நகர ஆட்சியில் தாழ்த்தப்பட்டவர்களுக்கென தனிச் சேரிகள் ஒதுக்கப்படும் வழக்கம் உருவாயின. அவர்கள் ஒற்றை மாடி வீட்டில் வாழும் உரிமை கூடப் போராடியே பெறப்பட்டது." – என்கிறார் கே.கே.பிள்ளை தமது தமிழக வரலாறு மக்களும் பண்பாடும் என்ற நூலில்.

இந்தக் காலக்கட்டத்தில் தமிழகத்தின் பிறமொழி ஆட்சியாளரின் சாதிய கொள்கையால், கடும் சாதிவெறியின் தாக்கத்தால் "சேரி" என்ற சொல் தாழ்த்தப்பட்டவர்கள் வாழும் பகுதியைக் குறிப்பதாய், தொல்காப்பியர் காலப் பொருளில் இருந்து மாறி நிற்கத் துவங்கியது. சேரி என்பது சொல் மாறுபாடின்றி பொருள் மாறுபாட்டுடன் துலங்குகின்றது இன்று!".

முடிவுரை :

இலக்கண, இலக்கிய சான்றுகளின்படி "சேரி" என்பது மக்கள் செறிந்து வாழுமிடமாகும் என்கின்ற பொருள் செறிந்த தமிழ்ச் சொல் ஆகும். இது காலத்தின் கோலத்தால், வளர்ந்து வந்த சாதிக் கொடுமைகளால் குறிப்பிட்ட சில வகுப்பார் வசிக்குமிடமாய் மாறி, தாழ்ந்த பொருளுடைய சொல்லாய் விளங்கும் சூழலில் அகப்பட்டுள்ளதை இக்கட்டுரை வாயிலாக உணரலாம்!.

80. தமிழிலக்கியங்களில் ஊர்ப்பெயர்கள்
பிரான்மலை

அ.பாண்டியன்
முனைவர் பட்ட ஆய்வு மாணவர்
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி

கோடைக்கால இன்ப இருப்பிடமான கொடைக்கானல் இது என, இங்குள்ள மக்களால், பிரான்மலை அழைக்கப்படுகிறது. பிரான்மலை (பறம்புமலை) முல்லைக்குத் தேர்கொடுத்த வள்ளல்பாரியின் தலைநகராக விளங்கியது. மங்கைபாகருக்கு மூன்றடுக்குக் குடவரை கோயில் உள்ளன. சுதந்திரப் போராட்ட காலத்தில் மருதுபாண்டியர், ஊமைத்துரைக்கு அடைக்கலம் கொடுத்த ஊமையன் குகை, ஏர்வாடிக்கு அடுத்து அதிக அளவில் முஸ்லீம்கள் வந்து செல்லும் சேக் அப்துல்லா அவுலியாதர்கா. இயற்கை எழில் சூழ்ந்த மலை போன்ற சிறப்புக்களைக் கொண்டது. ஏராளமான சுற்றுலாப் பயணிகள் இங்கு வந்து செல்கின்றனர். தமிழ்நாடு அரசு பிரான்மலையைச் சுற்றுலாத்தலமாக அறிவித்து சுற்றுலா வளர்ச்சித்திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது.

மூவர் பாடிய தேவாரம் பெற்ற சிவத்திருத்தலங்களில், பாண்டிய நாட்டில் உள்ள திருத்தலங்கள் பதினான்காகும். இவற்றைப் "பாண்டி பதினான்கு தலங்கள்" என்று கூறுவது மரபு.

"கூடல் புனல்வாயில் குற்றாலம் ஆப்பனூர்
ஏடகம் நெல்வேலி இராமேசம் - ஆடானை
தென்பரங்குன் றம்சுழியல் தென்திருப்புத் தூர்கானை
வன் கொடுங்குன் றம்பூ வணம்".

என்னும் பாடல் தேவாரம்பெற்ற பாண்டி நாட்டுச் சிவத்தலங்கள் பதினான்கையும் தொகுத்துரைக்கின்றது. அவற்றுள் ஒன்றாக விளங்குவது திருக்கொடுங்குன்றம். இ∴து இக்காலத்தில் பிரான்மலை என்று வழங்கப்பெறுகின்றது. சங்ககாலத்தில் பறம்புமலையெனப் புகழ் பெற்றிருந்ததும் இந்தப் பிரான்மலையேயாகும்.

தலமும் இருப்பிடமும்:

திருக்கொடுங்குன்றம் (பிரான்மலை) சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டத்தில் சிங்கம்புணரிக்கு அருகில் உள்ளது. காரைக்குடியிலிருந்து மேற்கே 42 தொலைவிலும், மதுரையிலிருந்து வடக்கே 63 கிலோ மீட்டர் தொலைவிலும், புதுக்கோட்டையிலிருந்து தென்மேற்கே 45 கி.மீ. தொலைவிலும், உள்ளது. திருப்பத்தூர் - திண்டுக்கல் பேருந்துச்சாலையில் சதுர்வேதமங்கலத்திலிருந்து (மட்டியூரிலிருந்து) வடக்கே 8 கி.மீ தொலைவிலும், சிங்கம்புணரியிலிருந்து வடக்கே 12 கி.மீ. தொலைவிலும், திருச்சிராப்பள்ளி - மதுரை பேருந்துச் சாலையில் உள்ள பள்ளபட்டியிலிருந்து கிழக்கே 6 கி.மீ தொலைவிலும், பொன்னமராவதியிலிருந்து தெற்கே 15 கி.மீ தொலைவிலும், உள்ளது. மதுரை, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, திருப்பத்தூர், பொன்னமராவதி முதலிய நகரங்களிலிருந்துப் பேருந்துகளும், சிங்கம்புணரியிலிருந்து நகரப் பேருந்துகளும் செல்கின்றன. 2450 அடி உயரமுள்ளது இந்த மலை,

"ஈண்டுநின் றோர்க்கும் தோன்றும் சிறுவரை
சென்றுநின் றோர்க்கும் தோன்றும்"[1]

என்று கபிலர் பாடியவாறு, நாலாபக்கமும் நெடுந்தொலைவிலுள்ளோருக்கும் காட்சியளிக்கும் மாட்சியும், உயரமும் கொண்டுவிளங்கும் மலை, இந்தப்பிரான்மலை.

திணிநெடுங்குன்றம் - திருக்கொடுங்குன்றம்:

சங்க காலத்தில், வள்ளல் பாரியாண்ட இந்தமலை, பறம்புலை என்று பெரும் பெயர் பெற்றிருந்தது. கபிலர் பெருமான், "பறம்பு" என்றும் "**திணி நெடுங்குன்றம்**" என்றும் இம்மலையைச் சுட்டியுள்ளார். இதனை கி.பி. ஏழாம் நூற்றாண்டினராகிய திருஞானசம்பந்த சுவாமிகள், இத்திருப்பதிகத் திருப்பாடல் ஒவ்வொன்றிலும் "**கொடுங்குன்றம்**" என்று குறித்துள்ளார். பாண்டி பதினான்கு திருத்தலங்களில் இரண்டு மட்டும் குன்றங்களாகும். ஒன்று, திருப்பரங்குன்றம். மற்றொன்று இந்தக் கொடுங்குன்றம். "**கொடு**" என்றால் வளைவு என்று பொருளாகும். இயல்பாகவே வளைந்த முகடுடைய குன்றம் என்ற பொருளில், திருப்பரங்குன்றத்தினின்றும் வேறுபிரித்துக் காட்டும் வகையில், இப்பறம்புமலையை ஆன்றோர் "**கொடுங்குன்றம்**" எனவும் வழங்கினர் எனலாம். பாரியது அருமையறியாப் பகைவர் செய்த கொடுமைக்குக் களமாக அமைந்து விட்டதால், "கொடுங்குன்றம்" எனவும் பெயர் பெற்றிருக்கலாம் என்று அருள் நெறித்தந்தை தவத்திரு குன்றக்குடி அடிகளார் நயம்படக் கூறுவார்.

திருக்கொடுங்குன்றநாதர் கோயில்மண்டபச் சுற்றின் தென்புறச் சுவரில், "**திருநெடுங்குன்றமான சுந்தரராசச்** சதுர்வேதி மங்கலத்து'' என்று பெயர் பெற்றிருப்பதும், இவ்வூர், "**சுந்தரராசச் சதுர்வேதிமங்கலம்**" என்று இரண்டாம் பராந்தகனாகிய சுந்தரசோழன் (கி.பி.957-970) பெயரால் சதுர்வேதிமங்கலமாகப் பெயர் பெற்றிருப்பதும் புலனாகின்றது.'[2] என்பார் பேராசிரியர்.சி.கோவிந்தராசனார்.

இத்திருக் கோயிலில் உள்ள முதற்குலோத்துங்க சோழன் காலத்து (கி.பி.1070) கல்வெட்டு முதல, கி.பி.1743 வரையிலான கல்வெட்டுக்கள் பலவற்றில், "**திருக்கொடுங்குன்றம்**" என்றும், இதே பொருள்தரும் "**திருமலை**" என்றும் குறிக்கப்பெற்றுள்ளன.

கி.பி.15ஆம் நூற்றாண்டினராகிய அருணகிரிநாதர் சுவாமிகள் தம் திருப்புகழில், "**கொடுந்திண்குன்றம்**" என்று குறிக்கின்றார். இப்பெயர். "**திணிநெடுங்குன்றம்**" என்று கபிலர் குறிப்பிடுவதோடு மிக நெருங்கிய தொடர்புடையதாக அமைந்துள்ளது. எனவே, சங்ககாலத்தில் இம்மலையைக் குறித்த "**திணிநெடுங்குன்றம்**" என்பது,
7ஆம் நூற்றாண்டில் "கொடுங்குன்றம்'' என்றும்,
10-ஆம் நூற்றாண்டில் "**திருநெடுக்குன்றம்**" என்றும்
11ஆம் நூற்றாண்டில் "**திருக்கொடுங்குன்றம்**" (திருமலை)
என்றும் திருத்தலப் பெயராக வழங்கப் பெற்று வந்தது.

"**பறநாட்டுப் பெண்டிரடி**" எனும் யாப்பருங்கலக் காரிகையில், விகற்பச் சிந்தியல் வெண்பாவிற்குரிய எடுத்துக்காட்டு வெண்பா, கி.பி. 11 ஆம் நூற்றாண்டினராகிய குணசேகரர் எடுத்துக் காட்டியது. எனவே இந்த நூற்றாண்டு வரை பறநாடு என்று இந்நாட்டுப் பெயர் வழங்கியிருப்பதை அறியலாம். பறநாடு என்று வழங்கியது போலவே இம்மலை அக்காலத்துப் பறமலை எனவும் வழங்கியதாக வேண்டும்.

கி.பி.12 ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டில் " **புறமலை நாட்டுக் கொடுங்குன்றம்**" என்று காணப்படுகிறது. தண்முறை என்பது தண்டறை என வழங்குகிறது. (ஏ.ஆர்.சி. 383 1923) இதனால் உகரம் அகரமாதலும் அகரம் உகரமாதலும் பேச்சு வழக்கில் இயல்பு என்பது தெரிகிறது. எனவே பறமலை என்பது புறமலை என்று மாறி வழங்கியிருக்கலாம் என்றும், சிறுகுன்றம் என்பது காலப் போக்கில் சிறுகுணம் எனவும் மாறி வழங்குதல் போல, பறம்புமலை, புறமலை எனவும் மாறி வழங்கியிருக்கலாம். அப்பெயர் மேலும் கெட்டு பிராய்மலை (ஏ.ஆர். சி.163 — 1935 - 1936) எனக் கிபி 13 ஆம் நூற்றாண்டில் வழங்கியது"[3] என்றும் டாக்டர் மா.இராசமாணிக்கனார் கூறுவார்.

சகாப்தம் 1389 (கிபி 1467) நெற்குப்பைச் செப்பேடு "**பிறாமலை சூழ்ந்த பொன்னமராவதி நாட்டில்**"[4] என்று குறிக்கிறது. மங்கைபாகர் கோவில் தென்புறச் சுவற்றில் உள்ள சாளுவ சிம்மடி நரசிம்மராயர் (கி.பி.1501) காலத்துக் கல்வெட்டு, "**பிறாமலைச் சீர்மையில் தென்வரம்பியான திப்பராசபுரம்**''[5] என்று குறிக்கிறது. எனவே 13 ஆம் நூற்றாண்டில் பிராய்மலை என வழங்கப் பெற்றது. 15 ஆம் நூற்றாண்டில் பிரான்மலை என வழங்கலாயிற்று, என அறிகிறோம். பிரான்மலை எனும் இப்பெயர் இன்று வரை நிலை பெற்றுள்ளது. மலைக்குரிய பெயராகிய இது, இம்மலையின் அடிவாரத்தில் உள்ள ஊரின் பெயராகவும் வழங்கப் பெற்று வருகிறது.

எனவே, சங்க காலத்தில் **பறம்புமலை** எனவும், கி.பி.12 ஆம் நூற்றாண்டில் **பறமலை, புறமலை** எனவும், கி.பி.13 ஆம் நூற்றாண்டில் **பிராய்மலை** எனவும், கி.பி 15ஆம் நூற்றாண்டு முதல் இன்று வரை **பிரான்மலை** எனவும், வழங்கப் பெற்ற வரும் மலைக்குரிய பெயர், இம்மலையின் அடிவாரத்தில் அமைந்துள்ள ஊருக்குப் பெயராகி, இவ்வூர் இன்று, **பிரான்மலை**, என்று அழைக்கப்படுகிறது என்பது தெளிவாகின்றது.

சான்றெண் விளக்கம்:

1. புறநானூறு 114: 1-2 (ஆய்விலக்கியம் - புறநானூறு) சங்க இலக்கியம்
2. பிரான்மலைக் கல்வெட்டுகள் சி.கோவிந்தராசனார் கையெழுத்துப்படி பிற்சேர்க்கை பக்கம் - 3
3. பத்துப்பாட்டு ஆராய்ச்சி - டாக்டர் மா.இராசமாணிக்கனார் பக் 412-413
4. நெற்குப்பைச் செப்பேடுகள் - மா.செந்தில் செல்வக்குமரன் எம்.ஏ
5. பிரான்மலைக் கல்வெட்டுக்கள் - சி.கோவிந்தராசனார் கையெழுத்துப்படி கல்வெட்டு எண் 17
6. நூலாதாரம்: பறம்புமலை - திருக்கொடுங்குன்றம் வரலாறு. மரு.பரமகுரு

81. புறநானூறு காட்டும் ஊர்கள்

ஜெ.பாரதி,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
தரமணி, சென்னை – 113.

ஒரு மனிதன் அடையாளம் காட்டப்படுவதும் அடையாளம் பெறப்படுவதும் ஊரால் தான். நாடோடியாகத் திரிந்த மனிதன் இயற்கையை எதிர்த்து, பாதுகாத்தல் செய்து ஓரிடத்தில் நிலையாக வாழத் தொடங்கினான். நிலையாக வாழத் தொடங்கியபின் உறவுகளின் மீதும் பற்று ஏற்பட, தனக்குத் தானே உறவுகளை ஏற்படுத்தி தன் வழித்தோன்றல்களுடன் ஒரு சமுதாயமாக வாழ துவங்கினான் அதன் விளைவே முதலில் ஊர்களின் துவக்கம் உலகில் மனித இனம் தோன்றியது லெமூரியாவில் எனில், ஊர்களைத் தோற்றுவித்து பெயர் சூட்டிய பெருமை தமிழர்களையே சாரும்.

மனிதன் தான் வாழும் சமூகத்தை மற்ற சமூகத்தினரிடம் இருந்து வேறுபடுத்தி காண நினைத்து ஊர்களுக்கு பெயர் சூட்டினான். ஓர் ஊருக்குப் பெயர் சூட்ட முக்கிய காரணம் மற்றவரிடன் இருந்து தன்னை வேறுபடுத்தி காட்டவே ஆகும். அவ்வாறு தோன்றிய பெயர்களில் பெரும்பாலும் காரணப் பெயர்களே மிகுதியாக உள்ளன. அப்பெயர்க் கொண்டு விளங்கிய புலவர்களே சங்க காலத்தில் மிகுதியாக இருந்தனர். புலவர்கள் ஊர் பெயரைத் தாங்கி பாடல் இசைக்க, ஊர்களோ காரணப் பெயரையே பெயர்களாகக் கொண்டு திகழ்கின்றன. சங்க காலம் முதலே தொன்றுத் தொட்டு நிகழும் வழக்கமாகிறது இது. சங்க காலத்தில் அவ்வாறு காணப்பட்ட ஊர்களைப் புறநானூறு வழியாக வெளிக்கொணர்கிறது இவ்வாய்வு கட்டுரை.

பெயர்க் காரணம்

ஊர்ப் பெயராய்வுகள் சங்கத்தமிழர்களின் இருப்பைப் பறைசாற்றுவதோடு அதில் ஓர் ஒழுங்குமுறையை எடுத்துக் காட்டுகின்றன. ஊர்ப் பெயர்கள் மனிதர்களின் மொழி மரபையும், பண்பாட்டையும் ஒன்று மற்றொன்றிலிருந்து வேறுபடுத்தி காட்டும் தன் இருப்பிடத்தை பிறர் அறியவும் ஏதோ ஓர் குறியிட்டை பயன்படுத்த அது ஊர் பெயராகிறது.

கூறுகள்

ஊர்ப் பெயர்கள் பொதுக் கூறுகள், சிறப்புக் கூறுகள் என இருவகைப்படும்[1]. பொதுக்கூறு அமைவிடத்தின் பொதுத்தன்மை பற்றி விளக்குவதாகும். சிறப்புக் கூறு என்று ஊரின் அமைவிடத்தின் சிறப்புக் கூறுகளைக் கூறுவதாகும்.

“எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே” (தொ.கா.சொ)

எனும் தொல்காப்பியரின் கூற்றின்படி ஊர்ப் பெயர்களும் ஏதோ ஒரு பொருளினைத் தாங்கியப்படியே உண்டாகின. அப்பொருள் அவ்வூரின் இயற்கையுடனோ, வாழ்வியல் நிகழ்வுகளுடனோ தொடர்பு கொண்டு விளங்குகின்றன. ஊர் பெயர்களை ஆய்வு செய்வதன் மூலம் சங்க கால இயற்கை நிலை அதை ஊர் சார்ந்திருக்கும் நிலை, மக்களின் வாழ்வியல் நிலைகளை அறிய முடிகிறது.

ஊர்ப் பெயர் புலவர்கள்

சங்க இலக்கியப் பாடல்களை பாடிய புலவர்கள் தங்கள் ஊரை அடையாளப்படுத்தும் நோக்கத்துடன் தங்கள் பெயருடன் ஊரின் பெயரையும் சேர்த்தே கூறலாயினர். 200க்கும் மேற்பட்ட புலவர்கள் தங்கள் பெயருடன் தங்கள் ஊரின் பெயரையும் இணைத்துள்ளனர். சங்க இலக்கியங்களில் இயற்கையைச் சார்ந்தும், நீர் நிலையமைப்பாலும், தாவரத்தின் பெயராலும், விலங்கின் பெயராலும் தெய்வத்தின் பெயராலும் நிலப்பிரிவின் தன்மையாலும், பொருட்பெயராலும், திசைப்பெயராலும் போர் முனைத் தொடர்பாலும், இருக்கும் இடத்தின் தன்மையாலும் என பல காரணங்களைக் கொண்டு ஊர்கள் திகழ்கின்றன.

காரணங்கொண்ட ஊர்கள் சில

இயற்கையைப் பெயராகக் கொண்டு	–	குன்றம், கொல்லி, முதிர, மலை
நீர்நிலையைப் பெயராகக் கொண்டு	–	அலைவாய், கண்ட வாயில், துறையூர்
தாவரத்தைப் பெயராகக் கொண்டு	–	அரையம், மருவூர், மல்லி
விலங்கைப் பெயராகக் கொண்டு	–	எருமைவெளி, செங்கண்ணமா
தெய்வத்தைப் பெயராகக் கொண்டு	–	இருந்தையூர்
அரசர்களின்ப் பெயராகக் கொண்டு	–	கிள்ளி, மங்கலம், கோராடு
போர்முனையைப் பெயராகக் கொண்டு	–	அட்டவாயில், முனையூர்

சங்க இலக்கியத்தில் ஊர்களின் பெயர்கள் சங்க கால வாழ்வியலை எடுத்துக் கூறுகின்றன. புறநானூற்றிலும் அப்படிப்பட்ட ஊர் பெயர்கள் மிகுந்துக் காணப்படுகின்றன. அவற்றில் சில ஊர் பெயர்கள் இங்கு ஆய்வு செய்யப்படுகிறது.

துறையூர்

இந்த ஊரைச் சேர்ந்த ஓடைக்கிழார் எனும் புலவர் துறையூர் எனும் தன் ஊரின் பெயரையே அடையாகக் கொண்டு துறையூர் ஓடைக்கிழார் எனத் தன் பெயரைக் குறிக்கிறார்.

நல்கினை விடுமதி பரிசில் அல்கலும்
தண்புனல் வாயிற்றுறையூர் முன்னுரை
நுண்பல மணலினு மேந்தி **(புறம் 136 – துறையூர் ஓடைக்கிழார்)**

இவ்வடிகளில் கூறப்படும் தண்புனல் வாயில் துறையூர் எனப் பெயர் கொண்டு இப்புலவர் விளங்கியுள்ளார்.

நீர்த்துறையின் கண் அமைந்ததால் துறையூர் எனப்பெயர் பெற்றிருக்க வேண்டும். மேற்குறிப்பிட்ட அடிகள் மூலம் இது விளங்குகிறது. 'நாள்தோறும் குளிர்ந்த நீர் ஓடும் வாய்த்தலைகளையுடைய துறையூர் எனப்பொருள் கொண்ட அடிகளாயின. அதுமட்டுமின்றி தற்போது அதே பெயர்க் கொண்ட ஊர்கள் தென் ஆற்காடு மாவட்டத்திலும் விழுப்புரம் மாவட்டத்திலும், லால்குடி வட்டத்திலும், முசிறி வட்டத்திலும் தற்போது உள்ளன.

கொல்லி

கொல்லி ஆண்ட வல்வில் ஓரியும்
காரி ஊர்த்து பேர் அமர்க் கடந்த(புறம் – 158 பெருஞ்சித்திரனார்).

கொல்லி எனப்படும் ஊர் மலைப்பகுதியைக் கொண்டதாகும்.[2] கொல்லி என்பது மலை பகுதியோ அல்லது அதைச்சார்ந்த ஊரின் பெயராகவோ இருந்திருக்கலாம். கொல்லிமலை ஓரி என்ற வள்ளலுக்குரியது. கொல்லி மலை சேலம் மாவட்டத்தில் நாமக்கல், ஆத்தூர் வட்டத்திலுள்ள ஒரு குன்றுத்தொடர்.

கோவலூர்

கோவல் என்றும் கோவலூர் என்றும் அழைக்கப்படுகிறது. மலையமான் திருமுடிக்காரி முதலியோர் ஆண்ட ஊர் கோவலூர் தென்னார்க்காடு மாவட்டத்தில் தென் பெண்ணையாற்றின் கரையில் உள்ளது. இதை புறநானூற்று பாடலடிகள்.

முரண்மிகு கோவலூர் நூறி நின்
அரண்டு திரி ஏந்திய தோளே **(புறம் 99)**

என்று கூறுகிறது.

தொண்டி

தொண்டி என்பது ஓர் துறைமுகப்பட்டினமாகும். கடற்கழி என்னும் பொருளுடைய தொண்டி என்னும் சொல் படகுகள் போன்றவை வந்து செல்லுவதக்கு ஏற்ற ஆழமான பள்ளமான கடற்கரை ஓரத்தில் அமைந்த இடத்தைக் குறிக்க முதலில் பயன்படுத்தப்பட்டு, நாளடைவில் கடற்கரை நகரத்திற்கு பெயராய் அமைந்திருக்க வேண்டும்.[3]

தொண்டி எனும் துறைமுகம் சேரர்களுக்கு உரியது. மற்றொன்று கீழைக் கடற்கரையில் அமைந்தது. இரண்டு தொண்டி இருந்ததாக இலக்கியங்கள் கூறுகின்றன. தொண்டி எனப்பட்ட நகரம் அழிந்த பிறகு வேறு நகரம் தோன்றி இருக்க வேண்டும். ஒரு தொண்டி சேரர்களின் தலைநகரமாக விளங்கியிருந்தது.

தெண்கழமிசைத் தீப்பூவின்
ததுண் தொண்டி யோர் அருபொருந (புறம் 17)

என்று புறநானூறு அடிகளும்

"ஓங்கிடும் பரப்பின் பங்க விட்டத்துத் தொண்டியோ (சிலம்பு–14) 106–107.

எனச் சிலம்பு தொண்டி துறைமுகம் இருந்ததைப் பறைசாற்றுகின்றன. பகைவர்களைப் பல்லைப்பிடுங்கி வாயிற்கதவில் தைக்கும் பழக்கம் இருந்தது.[4] அந்த பழக்கத்தினால் தொண்டை நகரின் வாயிற்கதவில் போரில் வெல்லப்பட்ட மூவன் என்பவனின் பற்களை வைத்து பதித்திருந்தனர்.

நாஞ்சில்

நாஞ்சில் என்பது ஒரு மலையையும் அம்மலையின் உள்ளடக்கிய நாடுமாகும். அதை புறநானூறு அடிகள்.

செவ்வரைப் படப்பை நாஞ்சில் பொருந!
சிறு வெள்ளருவிப் பெருங்கல் நாடனை (புறம் 137 12–13)

என்று கூறுகிறது. சேர, சோழ, பாண்டிய மூவேந்தர்களின் ஆட்சியில் மாறி மாறி இருந்துள்ளது. மதிலுறுப்பு என்னும் பொருள் கொண்டது. நாஞ்சில் திருவிதாங்கூரின் ஒரு பகுதியாய் இருந்து 1956 முதல் தமிழ்நாட்டை சேர்ந்ததாகியது. தமிழ்நாட்டின் தென் எல்லையாகிய குமரி இந்நாட்டில் உள்ளது.[4]

நாலூர்

"தோலா நல் இசை நாலைகிழவன்" புறம் – 179

இவ்வடி நாலைக்கிழவன் நாகனை வடநெடுந்தத்தனார் பாடியது[5] சங்க இலக்கியங்களில் நாலூர்க் கோசர் நன்மொழி என்பது போல கோசரையும் குறிக்கும். இது நாலூரண்ற சேர்ந்த கோசர் என்றும் நான்கு ஊர்களைச் சேர்ந்த கோசர் என்றும் குறிக்கப்பெறும்.

பறம்பு

பறம்பு என்பது ஒரு மலை. அம்மலையை சேர்ந்த நாட்டிற்கு அப்பெயரே விளங்கிற்று. இப்பெயர் கொண்ட நாடு 300 ஊர்கள் சேர்ந்தது. பாரி என்பவன் கடையேழு வள்ளல்களில் ஒருவன் இதனை ஆண்டான். இப்பறம்பு திருப்பூர் மாவட்டத்தில் உள்ளது.

அளிதோதானே பாரியது பறம்பே
நளி கொள் முரசின் மூவிரும் முற்றிலும் (புறம் – 109).

திருமோகூரைச் சுற்றியுள்ளப் பகுதி பாரியின் ஆட்சிக்கு உட்பட்டவை என்பதைத் திருமோகூர் கல்வெட்டு "தென் பறம்பு நாட்டில் திருமோகூர் என்று குறிப்பிடுகிறது.

பிடவூர்

இப்பெயர் ஒரு வகை மரத்தை குறிக்கிறது. அம் மரத்தால் பிடவூர் என்ற பெயர் கொண்டதாக அது அமைந்திருக்கலாம். இவ்வூர் கொண்ட புறநானூறு அடிகள்

செல்லா நல்இசை உறந்தைக் குணாது
நெடுங்கை வேண்மான் அருங்கடிப் பிடவூர்
அறப்பெயர்ச் சாத்தன் கிளையேம் (புறம் – 395)

இவ்வடிகள் சோழநாட்டுப் பிடவூர் கிழார் மகன் பெருஞ்சாத்தானை மதுரை நக்கீரர் பாடியது.[6] இப்புலவர் பிடவூர் என்னும் ஊரினை தன் பெயருடன் அடைபெயராகக் கொண்டார்.

பிசிர்

பிசிர் எனப்படும் ஊரைச் சேர்ந்தவர், பிசிராந்தையார். இவர் கோப்பெருஞ்சோழரின் நண்பர் ஆவார். ஆந்தையார் எனும் பெயர் கொண்ட இந்த புலவர் தன் ஊரைச் சேர்ந்து பிசிராந்தையார் எனக் கொண்டார். இப்போது இவ்வூர் இராமநாதபுரம் மாவட்டத்தில் பிசிர் குடி என வழங்கப் பெறுவதாகத் தெரிகிறது.

பிசிர் என்ற சொல்லுக்கு நீர்த்துளி அல்லது ஊற்றுநீர் எனப் பொருள்படும். இவ்வூரில் ஊற்றுநீர் கிடைக்கும் ஊராய் இருந்ததால் பிசிர் என்று பெயர் கொண்டு இருந்திருக்கலாம்.

பெருங்கோக் கிள்ளி கேட்க இருப்பிசிர்
ஆந்தை அடியுறை எனினே – (புறம் 67)

தென்னம் பொருப்பன் நன்னாட்டுள்ளும்
பிசிரோன் என்ப என் உயிர் ஓம்பு நனே (புறம் 215)

போன்ற பாடலடிகள் பிசிர் எனும் ஊர் இருந்ததை உறுதி செய்கின்றன.

முசிறி

முசுறுப்புல் என்பது ஒருவகைப்புல். இது இக்கடற்கரைப் பகுதியில் அதிகம் விளைவதால் இப்பெயர் கொண்டிருக்கலாம். இம்முசிறி மேலைக் கடற்கரையில் அமைந்த கடற்கரை நகரம். இது சேரர்களுக்குரியது. சேரன் செங்குட்டுவனுக்குரிய இத்துறை முகத்திலிருந்து தான் பண்டைக் காலத்தில் மிளகு முதலியன ஏற்றுமதி செய்யப்பட்டது. இதனைப் புறநானூறு பாடலடிகள்.

புனலம் கள்ளின் பொலந்தார்க்குட்டுவன்
முழுங்குகடல் முழுவில் முசுறியன்ன (புறம் 343)

என்று கூறுகிறது.

இதன் மூலம் முசிறி எனும் முசிறி துறைமுகம் இருந்ததற்கான சான்றுகள் புலப்படுகின்றன. சங்க காலம் முதலே பெயர் பெற்றத் துறைமுகங்களில் இதுவும் ஒன்று. கேரளப் பல்கலைக்கழகத்தின் முதுகலை ஏடான தூர்ந்து போன துறைமுகங்களில் முசிறியின் விளக்கம் சிறப்பாக அமைகிறது.

முதிரம்

முதிரம் எனப்படும் பெயர் கொண்ட இது ஒரு மலையாகும். இது குமணனுக்குரிய மலை. முதுகிற் சேணமிட்டு நிற்கும் குதிரைப் போல் இது காட்சி அளித்ததால் பிற்காலத்தில் குதிரை மலை என அழைக்கப்பட்டதாக இருக்கலாம். இந்த மலையும் குமணன் வாழ்ந்த ஊரும் முதிரம் என அழைக்கப்பட்டது.

முதிரம் எனப்படும் ஊர் குமணன் வாழ்ந்ததால் குமணம் என்றும் பெயர் பெற்றது. பின்னர் மருவிய நிலையில் கொழுமம் என ஆனது. தற்போது கோவை மாவட்டத்தைச் சேர்ந்த உடுமலைப்பேட்டை வட்டத்தில் கொழுமம் ஒரு சிற்றூராக இன்று உள்ளது.

அதிநாயணர் முதிரத்துக் கிழவ!
இவண் விளங்கு சிறப்பின் இயல் தேர்குமணி (புறம் 158)

இந்த அடிகள், முதிரம் குமணனின் ஊர் என்பது தெளிவாகிறது.

மையல்

வைகையாற்றங்கரையில் மையல் எனும் ஊர் அமைந்திருந்ததாகச் சங்க இலக்கியம் கூறுகிறது. செல்வம் முதலியவற்றால் வரும் செருக்கு என்று பொருள்படும்படி மையல் என பெயர்க் கொண்டதாக இவ்வூர் அமைந்துள்ளது. வையையாறு பாய்ந்து வளம் கொழித்ததால் இப்பெயர் கொண்டதாக அமைகிறது. இதை குறிக்கும் வகையில் அமைந்த புறநானூறு பாடல் அடிகள்,

வையை சூழ்ந்த வளங்கெழ வைப்பிற்
பொய்யா யாணர் மையல் கோமான் (புறம் 71)

வஞ்சி

வஞ்சி எனும் ஒரு வகை தாவரத்தால் இப்பெயர் பெற்றது இவ்வூர். தற்போது திருச்சிராப்பள்ளியிலுள்ள கொங்கு நாட்டுடையதுமான கரூரே வஞ்சிமாநகர் என்றும் மலைநாட்டில் பெரியாற்றங்கரையில் உள்ள திருக்கருரே வஞ்சி என்போரும் உள்ளனர். சேரன் வஞ்சி என்னும் நூல் திருவஞ்சைக் களத்தை வஞ்சி என்னும் சேரன் செங்குட்டுவன் வஞ்சி மாநகர் என்னும் நூல்கள் கரூரை வஞ்சி என்றும் கூறியுள்ளன.[9]

தண்பொருநைப்புனல் பாயும்
விண்பொடு புகழ் விறல் வஞ்சி
பாடல் சான்ற விறல் வேந்தனும் (புறம் 11)

இவ்வடிகள் வஞ்சி எனும் ஊரைப்பற்றி அறிய சான்றுகளாயுள்ளன.

வல்லார்

வலிமையுடையவர் எனப் பொருள்படும் பெயரில் இவ்வூர் திகழ்கிறது. சொல்வல்லிய வீரர்கள் தங்கியிருந்த குடிகளடங்கிய ஊராக இருக்கலாம்.

'வலா அரோனே வாய்வாட் பண்ணன்' (புறம். 181)

எனும் அடிகள் மூலம் இதை அறியலாம்.

முடிவுரை

ஒரு மனிதன் இன்னார் எனக் கூறப்பட்டு அதற்கு பிறகு சமூகத்தில் அந்த மனிதனுக்குக் கிடைக்கும் சுட்டு குறி அவன் வாழும் ஊரே. அந்த வழியிலே ஊர் பெயரைக் கொண்ட சில புலவர்களைச் சில புறநானூற்று பாடலடிகள் மூலம் அறிய முடிந்தது. மேலும் சில ஊர்களின் பெயருக்குண்டான காரணமும் இங்கு ஆராயப்பட்டது. இதன் மூலம் சங்க காலத்தில் நம் தமிழகம் கொண்ட சில இயற்கை சிறப்புகளும் அறிய நேர்ந்தது. மேலும் இப்பாடலடிகள் மூலம் மனிதர்களின் நிலையும் அவர்கள் சார்ந்திருந்த ஊரின் அமைப்பும் விளங்கிற்று.

<u>அடிக்குறிப்புகள்</u>

1. இலக்கியங்களில் மரபும் புதுமையும், திருப்பதி, ச., ப.919.
2. இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள், ஆளவந்தான், ஆர்., (ப 126)
3. மேலது, ப. 144
4. மேலது, ப. 145
5. புறநானூறு, ப. 435
6. மேலது, ப.435

82. வடவேங்கடமும் தென்திருப்பதியும்

ம.பிரசன்னா,
முனைவர்பட்ட ஆய்வாளர்,
அய்யநாடார் ஜானகி அம்மாள் கல்லூரி,
சிவகாசி.

முன்னுரை

'கோயில் இல்லாத ஊரில் குடியிருக்காதே' என்பது பழமொழி. இதன் வழிக் கோயிலின் முக்கியத்துவம் நமக்கு விளங்கும். தமிழகத்தின் கோயில்கள் நம் தொன்மையும் பண்பாட்டையும் தன்னிலையில் இன்றும் விளக்கிக் கொண்டே இருக்கின்றன. அவ்வகையில், வடவேங்கடம் என்று அழைக்கப்படும் திருப்பதி என்னும் ஊரினையும் தென்திருப்பதி என்று அழைக்கப்படும் திருவண்ணாமலை ஊரினையும் ஒப்பிட்டு ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது. தென்திருப்பதி என்ற பெயர் வழங்குவதற்கான காரணத்தையும் இக்கட்டுரை ஆய்கிறது.

கோயில் தத்துவம்

'கோயில்' என்பது தெய்வம் உறையும் இடத்தையும் வேந்தன் உறையும் இடத்தையும் குறிக்கும். இவ்விரு கோவில்களுக்கும் நாடிச்செல்லுங்கால் மக்களுக்கு நன்மை கிடைக்கும் என்பது அடிப்படை. இறை வழிச்சென்றால் நல்வாழ்வு அடையலாம் என்னும் அடிப்படையில் பக்திமை தொடர்கின்றது.

திருப்பதிகளும் திருமலை நாயக்கரும்.

வைணவக் கோயில்கள் திருமலைநாயக்கர் காலத்திலேயே தமிழகத்தில் மிகுதியாகக் கட்டப்பட்டன. வட வேங்கடத்திற்கு நிறைய ஆபரணங்கள் தந்துள்ளார். திருவில்லிபுத்தூரிலும் திருமலை நாயக்கர் வழிபாடு செய்வதற்கு அடிக்கடி வந்து தங்கியுள்ளார். அவர் வந்து தங்கிய அரண்மனை தற்போதும் இந்துசமய அறநிலையத்துறையின் பராமரிப்பில் திருவில்லிபுத்தூரில் உள்ளது. இதிலிருந்து, திருமலை மன்னன் இரு கோயில்களுக்கும் கொடுத்த முக்கியத்துவம் தெரியவருகிறது.

வடவேங்கடமும் தென்திருப்பதியும்

வடவேங்கடம் பற்றி குறிப்புகள் சங்கப்பாடல்களிலேயே காணப்படுகின்றன. பழந்தமிழகத்தின் வட எல்லையாக அது இருந்ததும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். தென் திருப்பதி என்று அழைக்கப்படும் திருவண்ணாமலையானது வட வேங்கடத்திற்குக் காலத்தால் பிந்தையது ஆகும். அது, வட வேங்கடத்தின் அமைப்பிலே நிர்மாணம் செய்யப்பட்டக் கருத்தை மெய்ப்பிப்பதே இவ்வாய்வின் நோக்காகும்.

திருவண்ணாமலை

அரங்கன் மேல் ஆறாக் காதல் கொண்டு அவனை அடைந்த ஆண்டாள் பிறந்த ஊர் திருவில்லிபுத்தூர் ஆகும். அத்திருவில்லிபுத்தூரில் இருந்து வடக்கே மூன்று கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. சென்னை அருகே உள்ள திருவண்ணாமலையில் அண்ணாலையார் உறைந்துள்ளார். திருவில்லிபுத்தூர் திருவண்ணாமலையில் சீனிவாசப்பெருமாள் உறைந்துள்ளார். இக்கோவிலுக்குத் திருவண்ணாமலை என்று பெயர் வந்ததை, "திருமால் குடியிருக்கும் மலையானது 'திருமலை' என்று ஆரம்பத்தில் அழைக்கப்பட்டது. திருவில்லிபுத்தூரில் மாரியம்மன், முருகன், பிள்ளையார், கருப்பசாமி போன்ற தெய்வங்களை வணங்கிய பக்தர்களிடம் "கோனேரியில் குளித்துவிட்டு எங்கள் அண்ணனாகிய திருமலையை வணங்கி வாருங்கள் என்று குரல் கேட்டது….. அன்றிலிருந்து 'அண்ணன் திருமலை' என்பது திருவண்ணாமலை எனப்பெயர் மாறியது'' என்பர்.

திருவண்ணாமலை வரலாற்று நோக்கு

திருவில்லிபுத்தூர், 'வராக சேத்திரம்', 'புதுவை', 'தென்புதுவை', 'புத்தூர்', 'வடவேஸ்வரபுரம்', 'கானதபுரி' என்ற பல பெயர்களால் அழைக்கப்பட்டுள்ளது.

வில்லி என்னும் வேட்டுவ அரசனால் இவ்வூர் புதுப்பிக்கப்பட்ட காரணத்தால் வில்லிபுத்தூர் என்ற பெயர் பெற்றதாகக் கூறுவர். வில்லி மன்னன் மட்டுமல்லாது, கி.பி.1536இல் பாண்டியர்களிலாலும் இக்கோவில் புதுப்பிக்கப்பட்டுள்ளது. தினசரி நாட்காட்டியில் கூட இதனை மெய்ப்பிக்கும் விதத்தில் 'திருவண்ணாமலை சமீபம் சீனிவாசப் பெருமாள் கோயில்' எனுமாறு விழாக்கள் பற்றிய விபரம் தரப்பட்டிருக்கும்.

இதன் வழி, திருவண்ணாமலை என்னும் தென்திருப்பதி பிற்காலத்தினதாகும் என்பதை அறியலாம். இத்தென்திருப்பதி நிர்மாணம் செய்யப்பட்டது வடவேங்கடத்தின் அடிப்படையிலேயே ஆகும்

வடவேங்கடம் - தென்திருப்பதி ஒப்புமைக்கூறுகள்

வடவேங்கடத்தைத் திருமலை என்ற பெயரில் அழைப்பது போலவே திருவண்ணாமலையும் திருமலை என்ற பெயரிலேயே முற்காலத்தில் அழைக்கப்பட்டது. வட வேங்கடம் கோவிலில் மலை மீது பெருமான் எழுந்தருளியிருப்பது போல, இங்கும் பெருமாள் மலை மீதே எழுந்தருளியிருக்கிறார். வடவேங்கடத்தின் அடிவாரத்தில் இருப்பது போன்று தென்திருப்பதியின் அடிவாரத்திலும் 'மங்காபுரம்' என்னும் ஊர் அமைந்துள்ளது. 'அலமேலு மங்கைபுரம்' என்னும் ஊர்ப் பெயரின் திரிபே மங்காபுரம் ஆகும். இன்று வரையிலும் இரு ஊர்களும் மங்காபுரம் என்றே இரு மாநிலங்களிலும் அழைக்கப்படுகின்றன.

திருவில்லிபுத்தூர் மங்காபுரம் அருகே, 'பெருமாள் பட்டி' என்னும் ஊரும் 'ஆறு ஆய்ச்சியர்பட்டி' என்னும் பொருளுடைய ஊர் 'ஆராய்ச்சிபட்டி' என்ற திரிபுடைய பெயருடன் விளங்கி வருகின்றன. வைணவம் தமிழகத்தில் செல்வாக்குப் பெற்ற காலகட்டத்தில் இவ்வூர்ப் பெயர்கள் உருவாகியிருக்கக் கூடும்.

இது காரணத்தினாலேயே திருவில்லிபுத்தூர் சீனிவாசப் பெருமாள் கோவிலைத் தென்திருப்பதி எனக் கூறுவது பொருந்துவதாக உள்ளது.

திருவில்லிபுத்தூரில் வாழ்ந்த அந்தணர்கள் அல்லது விசயநகரப் பேரரசின் சார்பு ஆட்சியாளர்களால் வடவேங்கடத்தின் அமைப்பில் திருவண்ணாமலை நிறுவப்பட்டிருக்கலாம்.

நிறைவுரை

ஆய்வு வழிக்கண்ட தகவல்கள் தவிர, கல்வெட்டு, அகழாய்வு, ஓலைச்சுவடி, தலபுராணங்கள், செப்புப் பட்டயங்கள் அடிப்படையில் திருவண்ணாமலையை ஆய்வு செய்தால் ஆய்வுலகிற்கு இன்னும் பல செய்திகள் வெளிவரலாம்.

83. பதிற்றுப்பத்தில் ஊர்ப்பெயராய்வு

முனைவர்.ம.பிரேமா

தமிழாய்வுத்துறை விரிவுரையாளர்

புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி

திருச்சிராப்பள்ளி.

சேரமன்னர்களின் பெருமையினைப் பறைசாற்றும் பனுவல் பதிற்றுப்பத்து. அந்நூலில் மறம், அறம், அன்பு, பாதீடு, செஞ்சோறு வழங்குதல், ஆற்றுப்படுத்துதல் முதலிய எண்ணற்றக் கூறுகள் வண்ணமுற இடம் பெற்றுள்ளன. சேரமன்னர்கள் போர்க்களங்கள் பலவற்றை வென்று தடம் பதித்தவர்கள். அவர்கள் தடம் பதித்த ஊர்களைப் பற்றியும், புலவர்களை அவர்கள் வாழ்ந்த ஊரின் பெயரால் அழைத்துள்ளதையும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

மோகூர்:

தொல்காப்பியர், புறத்திணைகளாக வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என்னும் ஏழு திணைகளையும் குறிப்பிடுகின்றார். அவற்றுள் உழிஞைத்திணை என்பது

"முழுமுதல் அரணும் முற்றலும் கோடலும்
அனைநெறி மரபிற்று ஆகும் என்ப" (புறத்திணையியல்)

என்கிறார். மோகூரினை அரசாட்சி செய்து வந்தவன் பழையன். இவர் 'அறுகை' என்னும் மன்னனது மதிலை முற்றுகையிட்டு வளைத்தார். இந்நிலையில் அறுகை மன்னன் நாட்டை விட்டு வெளியேறினான். அப்போது தன் நண்பன் கடல் பிறக்கோட்டிய சேரன் செங்குட்டுவன் என்றும், அவன் சேய்மையில் இருந்தாலும் உறுதியாக உன்னை வெல்வான் என்றும் வஞ்சினம் மொழிந்தான். இச்செய்தியை அறிந்த சேரன் போர்த்தொடுத்துச் சென்றான் . பழையனை வென்று காவல் மரங்களை அழித்து முரசம் செய்தான். அம்முரசத்தினை பழையனது யானைகளை வண்டியில் பூட்டி இழுக்கச் செய்தான் என்பதை

நுண்கொடி உழிஞை வெல்போர் அறுகை
சேணன் ஆயினும் கேளென மொழிந்து
புலம் பெயர்ந்து ஒளித்த களையாப்பூசற்கு
அரண்கள் தாவுநீஇ அணங்கு நிகழ்ந்தன்ன
மோகூர் மன்னன் முரசங் கொண்டு (5-ஆம்பத்து)

வியலூர், கொடுகூர், முழார், இடும்பில்:

மலைவளம் காண்பதற்காகச் சென்ற சேரனிடம் குன்றக்குறவர்கள் கண்ணகியின் நிலையினை எடுத்துரைத்தனர். அப்பத்தினித் தெய்வத்திற்கு கல்நட்டு வழிபாடு செய்தல் வேண்டும் என்று சேரன் எண்ணுகின்றான். இதனைச் சிலம்பு

"பொற்கோட்டு இமயத்துப் பொருவறு பத்தினிக்
கற்கால் கொண்டனன் காவலன்" (வஞ்சிக்காண்டம்)

என்று குறிப்பிடுகின்றது. கடவுள் கண்ணகிக்குக் கல் எடுக்கச் சென்றபோது ஆரிய அண்ணல், கங்கை மன்னர் ஆகியோரை வென்றான் என்று பதிகம் கூறுகின்றது. மேலும் இடும்பில், வியலூர், கொடுகூர், முழார் முதலிய ஊர்களை அரசாட்சி செய்த மன்னர்களையும் வீழ்த்தியதனைப் பரணர்

"கடவுள் பத்தினிக் கற்கோள் வேண்டி
மாறாவல்வில் இடும்பில் புறந்து இறுத்து
உறுபுலி அன்ன வயவர் வீழ
சிறுகுரல் நெய்தல் வியலூர் நூறி
அக்கரை நண்ணிக் கொடுகூர் எறிந்து
பழையன் காக்கும் கருஞ்சினை வேம்பின்
முழாரை முழுமுதல் துமியப்பண்ணி (5 ஆம்பத்து – பதிகம்)

மூதூர், நறவு:

உயர்ந்த மலைகளையும் காடுகளையும் அரண்களாக உடைய ஊர் மூதூர். இவ்வூரின் அரசன் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன். அரசர்களுக்குரிய வழக்கங்களுள் ஒன்று பகைவரை வென்று திறைப்பொருளைப் பெறுவது. அவ்வாறு திறைப்பொருளைப் பெறுவதற்காகச் சேரலாதனும் களம் புகுகின்றான். பகைவர்களும் சேரலாதனுக்குக் குறைவில்லாத புதுவருவாயைத் திறையாகச் செலுத்தினர். அப்பொருள்களைப் பெற்றச் சேரலாதன் மூதூர்க்கு வருகைப் புரிந்ததனைக் காக்கைப் பாடினியார்

"வாடா யாணர் நாடுதிறை கொடுப்ப
நல்கினை யாகுமதி யெம்மென் றருளிக்
கல்பிறங்கு வைப்பிற் கடறரை யாத்த நின்
தொல்புகழ் மூதூர்ச் செல்குவை யாயிற்" *(6-ஆம்பத்து)*

அட்டில் சாலை, அறச்சாலை என்ற இருவகைச் சாலைகள் இருந்தமையைப் பட்டினப்பாலைக் குறிப்பிடுகின்றது. மக்களின் வாழ்வியல் நெறிகளுள் தலையாயது அறம்.

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது"

என்று வள்ளுவரும்

அறமெனப் படுவது யாதெனக் கேட்பின்
மறவாது இதுகேள் மன்னுயிர்க்கு எல்லாம்
உண்டியும் உடையும் உறையுளும் அல்லது
கண்டதில்லை *(மணிமேகலை)*

"உண்டிக் கொடுத்தோர் உயிர்க்கொடுத்தோரே"

என்று சீத்தலைச்சாத்தனாரும் குறிப்பிடுகின்றனர். அறத்தின் பொருட்டு பழமரங்களை சாலைகளில் நட்டுவைப்பது பண்டைத்தமிழரின் இயல்பு. பயணம் செல்வோர் அப்பழங்களை உண்டு வழிநடை வருத்தம் நீங்கிச் செல்வதை நற்செயலாகக் கருதினர். இந்நற்செயல்கள் மிகுந்த ஊர் நறவு, இவ்வூரில் உயிர்கள் குளிர்க்காற்றினால் மட்டுமே வருந்தும் என்பதை

பொங்கு பிசிர்ப் / புணரி மங்குலொடு மயங்கி
வருங்கட லூதையிற் பனிக்கும்
துவ்வா நறவின் சாயினத் தானே *(6 ஆம்பத்து)*

அறந்தலைப்பட்ட நெல்லியம் பசுங்காய் (குறுந்தொகை)

என்று குறிப்பிடுவதிலிருந்து உணர்ந்துக் கொள்ளமுடிகின்றது. 'நறவு' என்பது கள்ளைக்குறிக்கும். அதனின் இது வேறு என்பதற்காக 'துவ்வா நறவு' என்கிறார் காக்கைப் பாடினியார். தற்காலத்தில் வழிச் செல்வோருக்குப் பயன்படாதவாறு பழமரங்களை காவலிடுகின்றனர். அதனைச் சாலை வருவாயாக பொருளீட்டும் நிலை உருவாகியுள்ளது.

ஒகந்தூர்:

ஏழாம் பத்தின் தலைவன் செல்வக்கடுங்கோவாழியாதன். இம்மன்னன் மாற்றார் அஞ்சும் சேனையொடு சென்று பகைவர்களை வென்றான். நாடுகளில் பல ஊர்களை உண்டாக்கினான். வேள்விகளை நிகழ்த்தியுள்ளான். திருமால் மீது பக்தி கொண்ட வாழியாதன் 'ஒகந்தூர்' என்னும் ஊரினை கோயிலுக்கு கொடையாக வழங்கியுள்ளான்.

மாய வண்ணனை மனனுறப் பெற்றவர்
கோத்திர நெல்லி னொகந்தூ ரீத்துப் *(7ஆம் பதிகம்)*

நாட்டின் எல்லையை விரிவாக்கம் செய்வதில் அரசர்கள் ஆர்வம் காட்டியதை முடத்தாமக்கண்ணியார்

"காடுகொன்று நாடாக்கி
குளந்தொட்டு வளம் பெருக்கி" *(பொருநராற்றுப்படை)*

என்கிறார். வாழியாதனும் பல ஊர்களை உருவாக்கியதிலிருந்து பலவெற்றிகள் பெற்றமைப் புலப்படுகிறது.

மாய வண்ணனை மனனுறப் பெற்றவர்

கோத்திர நெல்லி னொகந்தூ ரீத்துப் (7ஆம் பதிகம்)

நாட்டின் எல்லையை விரிவாக்கம் செய்வதில் அரசர்கள் ஆர்வம் காட்டியதை முடத்தாமக் கண்ணியார்

"காடுகொன்று நாடாக்கி

குளந்தொட்டு வளம் பெருக்கி (பொருநராற்றுப்படை)

என்கிறார். வாழியாதனும் பல ஊர்களை உருவாக்கியதிலிருந்து பலவெற்றிகள் பெற்றமைப் புலப்படுகிறது.

கொடுமணம், பந்தர்:

பாணர்கள் செல்வக்கடுங்கோவாழியாதனைக் காணபதற்கு வருகின்றனர் அவர்களிடம் கபிலர் வாழியாதனின் கொடைத்திறனை வியந்துரைக்கின்றார். நீங்களும் வள்ளல் தன்மையுடைய அரசனைப் புகழ்ந்துரைத்தால் கொடுமணம் என்னும் ஊரிடத்தும், பந்தர் என்னும் புகழுடைய பழைய ஊரிடத்தும் பெற்று வந்த அணி மணிகளோடு, தென்கடலில் எடுக்கப்படும் முத்துக்களையும் பரிசிலாக பெறுகுவீர்கள் என்று ஆற்றுப்படுத்துகின்றார்.

கொடுமணம் பட்ட நெடுமொழி யொக்கலொடு

பந்தர்ப் பெயரிய பேரிசை மூதூர்க்

கடனறி மரபிற் கைவல் பாண

தென்கடன் முத்தமொடு நன்கலம் பெறுகுவ (7ஆம்பத்து)

என்று கபிலரும்,

"கொடுமணம் பட்ட வினைமா ணருங்கலம்

பந்தர்ப் பயந்த பலர்புகழ் முத்தம்" (8 ஆம்பத்து)

என்று அரிசில் கிழாரும் வாழியாதனின், கொடைச் சிறப்பினைச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தகடூர்:

தகடூரினைச் சார்ந்தவர்கள் சினம் மிகுதியாலும், வீரம் மிகுதியாலும் தம்மை எதிர்த்து வந்த பகைவரை புறமுதுகிட்டு ஓடச் செய்தனர். இவர்களுடன் பெருஞ்சேரல் இரும்பொறை போர் செய்வதற்காகச் சென்றார். இவரது வீரம் படைத்திறன் முதலியவற்றை உணராது எதிர்த்துப் போரிட்டனர்.

இதனை தொல்காப்பியர்

மைந்துப் பொருளாக வந்த வேந்தனை

சென்று தலையழிக்கும் சிறப்பிற்றென்ப (புறத்திணையியல்)

என்கிறார். பெருஞ்சேரல் இரும்பொறை அவர்களுடைய வலிமை கெடுமாறு சமர்செய்து தகடூரை அழித்தான் என்பதை

தகடு ரெறிந்து நொச்சிதந் தெய்திய

அருந்திற லொள்ளிசைப் பெருஞ்சேரலிரும் பொறையை (8ஆம் பதிகம்)

என்று குறிப்பிடுகின்றது. சேரமன்னனிடம் விறலியை ஆற்றுப்படுத்துமிடத்து அவனது வெற்றியைச் சிறப்பிக்கின்றார்.

கட்டூர், மையூர்:

பகைவரோடு போர் செய்தல் வேண்டித் தானையொடு சென்ற வேந்தர், போரெதிர்தல் வேண்டித் தங்குவதற்காக அமைக்கப்படும் பாடி வீடுகள் கட்டூர் என்று அழைக்கப்பட்டது. பல நாடுகளிலிருந்து வந்த தானை, ஆதலால் அவர் தத்தம் மொழிகளையே பேசுவதால் விரவுமொழி கட்டூர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

"விரவுமொழிக் கட்டூர் வயவர் வேந்தே

உரவு கடலன்ன தாங்கருந் தானையொடு" *(9-ஆம்பத்து)*

விரவுமொழிக் கட்டூர் வேண்டுவழி கொளீஇ *(அகநானூறு)*

ஒன்பதாம் பத்தின் பாட்டுடைத்தலைவன் குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறை அவருடைய **பிறப்பினைக் கூறுமிடத்து** பெருங்குன்றூர்கிழார்

குட்டுவ விரும்பொறைக்கு மையூர் கிழான்

வேண்மா ளந்துவஞ் செள்ளை யீன்ற மகன்

வெருவரு தானையொடு வெய்குறச் செய்து

என்கிறார்.

அரிசில், பெருங்குன்றூர், பூஞ்சாற்றூர், பேரூர்

சோழநாட்டு ஊர்களுள் ஒன்று அரிசில். காவிரியினின்று பிரிந்து சென்ற கிளை ஆறு அரிசிலாறு. இவ்வூரில் பிறந்தமையால் 'கிழார்' என்ற சிறப்புப் பெற்று அரிசில்கிழார் என்று எட்டாம்பத்தின் ஆசிரியர் அழைக்கப்பட்டார், தற்போது வழக்கில் இல்லை. பெருங்குன்றூர்கிழாரும் இவ்வாறே அழைக்கப்பட்டுள்ளார்.

நிறைவுரை:

ஊர்ப்பெயர்களின் வழியே சேரமன்னர்களது மறப்பண்பு, வாழ்வின் நிலைக்களன்களாகிய அறக்கோட்பாடுகள், பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதலாகிய விழுமியச் சிந்தனைகள் முதலியவற்றை இக்கட்டுரை தெளிவாக வழிமொழிகின்றது.

84. பதிற்றுப்பத்தில் ஊரும் - பெயராய்வும்

பி.புவனேஷ்வரி,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை, காந்தி கிராமியப் பல்கலைக் கழகம்,
காந்திகிராமம்.

முன்னுரை

மனிதன் மற்றவர்களிடம் இருந்து தன்னை வேறுபடுத்திக் காட்டிக்கொள்ள நடை, உடை, பாவனை, எண்ணம் போன்ற அனைத்திலும் மாறுபாடுகளை விரும்புகிறான். அதற்குக் காரணம் தன்னை மற்றவர் கவனிக்க வேண்டும் என்ற எண்ணமாகும். இன்றளவும் பல்வேறு துறைகளில் புகழ்பெற்று விளங்கும் பெருமக்கள் பலரும் அவர்களுடைய பெயர்களைவிட அவர்களின் ஊர்களின் பெயரால் அழைக்கப்படுவதைக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். அவ்வகையில் இக்கட்டுரை கிழார் என்னும் பெயருடைய புலவர்களின் பாடல் வழியாக தாவர ஊர்ப்பெயர்களை ஆய்வதாக அமைகிறது.

பெயரமைப்பு

பொதுவாக ஒருவர் தன்னை மற்றவரிடம் இருந்து வேறுபடுத்திக்காட்ட அவர்களுடைய நாடு, ஊர், இருப்பிடம், தொழில் முதலியவற்றைப் பெயருக்கு முன்னால் குறிக்கப்படுவது வழக்கம். ஒரே பெயரில் இருக்கும் பலரில் இருந்து தன்னை வேறுபடுத்திக் காட்டவும், குறிப்பாக ஒருவரைச் சுட்டிக்காட்டவும் இம்முறையைக் கையாண்டுள்ளனர் நம் முன்னோர்கள்.

1. வாழ்ந்திருந்த அல்லது வாழ்கின்ற இடத்தைக் குறிப்பன.
2. பிறரிடம், குறிப்பாகத் தந்தையிடம் இருக்கும் தொடர்பைக் காட்டுவன.
3. செய்யும் தொழிலைக் குறிப்பன[1]

என்பதற்கு "ஊரும் பெயரும் உடைத்தொழிற் கருவியும் யாரும் சார்த்தி அவையவை பெறுமே" (தொல்.மர.1574). இக்கட்டுரையானது தாவர ஊர்ப்பெயர்களோடு தொடர்புடைய ஒருசில புலவர்களை மட்டும் விளக்கிச் செல்கிறது.

1. ஊர்ப்பெயரால் அறியப்படும் புலவர்கள்

தமிழகத்து ஊர்களும் அவற்றின் பெயர்களும் ஒவ்வொன்றும் பெரும்பாலும் யாதோ ஒரு காரணத்தோடு தொடர்புடையனவாக அமைந்துள்ளன. பொதுவாகத் தம்மைச் சார்ந்த மலைகள், ஆறுகள், காடுகள் முதலியவற்றோடு தொடர்புடையதாகப் பெரும்பான்மையான ஊர்ப்பெயர்கள் அமைந்துள்ளன. தன்னைச் சார்ந்த சூழலோடு மனிதன் கொண்ட நெருக்கத்தினை இவ்வூர்ப் பெயர்களின் வழியாக அறிய முடிகிறது. அவ்வகையில் தாவர ஊர்ப்பெயரால் அறியப்படும் புலவர்களை இங்குக் காணலாம்.

அ) ஆலத்தூர் கிழார்

ஆலத்தூர் என்ற பெயருடைய ஊர்கள் தமிழகத்தில் பல உள்ளன. பாண்டிய நாடு (மதுரை), தொண்டை நாடு மற்றும் சோழ நாட்டிலும் (தஞ்சாவூர்) இவ்வூர்ப் பெயர்கள் காணப்படுகின்றன. ஆலத்தூர் கிழார் என்ற இப்புலவர் சோழநாட்டு அரசர்களையே அதிகமும் பாடியுள்ளமையால் இவர் பிறந்த ஆலத்தூர் சோழநாட்டு காவிரி ஆற்றின் தென்கரையில் அமைந்துள்ள ஆலத்தூர் என்று கொள்ளலாம்[2].

தாவரப்பெயர்கொண்டு பெயர் வைத்தலில் "ஆல்" மரமும் தமிழகத்தில் மரபாக வழங்கிய ஒன்று என்பதனைப் பண்டு தொட்டே விளங்கும் ஆலங்குடி, ஆலத்தூர், ஆலங்குளம் போன்ற பெயர்களின் வழியாகத் தெளிவு பெறலாம்.

"ஆவூர்க்கூற்றத்து விக்கிரமசோழன் பேராலத்தூர்" என்றும் "தென்கரை நித்த விநோத விக்கிரம சோழன் பேராலத்தூர்" என்றும் "தென்கரை நித்த விநோத வளநாட்டு ஆலத்தூர்" என்றும் "நித்த விநோத வளநாட்டு ஆவூர்க்கூற்றத்து ஆலத்தூர்" என்றும் கல்வெட்டுகளில் இவ்வூர் குறிக்கப்பட்டுள்ளது[3].

"அமலைக் கொழுஞ் சோறு ஆர்ந்த பாணர்க்கு,
அகலாது செல்வம் முழுவதும் செய்தோன்....." (புறம் : 347)

இலந்தை மரமுயர்ந்த அகன்ற இடமுடைய மன்றத்தில் மறைக்காத உள்ளத்துடன் உளம் விரும்பும் இனிய மொழிகளைக் கூறிப் பெருந்திரளாகிய கொழுந்த சோற்றினை எம்போன்ற பாணர் உண்டனர் என்ற இக்கூற்றின் வழியாகப் பண்டைத் தமிழர், தான தருமங்களைக்கூட இயற்கை சார்ந்த சூழலில் தான் வழங்கியுள்ளனர் என்பதைக் காணமுடிகிறது. மேலும்

"கையது, கடன் நிறை யாழே...
நெடுங் கடை நிற்றலும் இலையே...."[4]

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனை ஆலத்தூர் கிழார் பாடிய இப்பாடலின் வழியாகச் சோழனின் ஈகைத் தன்மையை அறிவதன் வழி ஆலத்தூர் வளத்தையும் அறிந்து கொள்ள முடிகிறது.

ஆ) அரிசில்கிழார்

கடைச்சங்கப் புலவருள் ஒருவரான இவரின் பெயரிலுள்ள அரிசில் இப்புலவரின் சொந்த ஊராகலாமென்றும், அது கொள்ளிடத்தின் வடபால் உள்ள அரியலூர் என்பதன் மரு உருவாகலாமென்றும்[5] மைசூர் நாட்டிலுள்ள அரிசிற்கரை என்ற ஊரே அரிசிலாகும் என்றும், சோழநாட்டுக் கும்பகோணத்திற்கு அருகிலுள்ள ஊர் என்றும் பலவாறாகக் கருதுகின்றனர்[6].

சங்க இலக்கியம் 'அரிசில்' என்ற ஊர்ப்பெயரைச் சுட்டுகிறது. "அரிசில் என்ற ஊர் கொங்கு நாட்டு ஊர் மயிலை சீனி வேங்கடசாமி கருத்து"[7] 'அரிசிலாறு' என்ற ஆறு பற்றிய குறிப்பும் உள்ளது. காவிரியாற்றின் கிளை குடந்தைக்கருகில் பிரியும் நிலையில் இப்பெயர் பெறுகிறது எனக் காணவும் (தமிழ் இலக்கியத்தில் ஆறு-பக் 2)[8].

'அரிசிபுல்' என்ற புல்வகையினைத் தமிழ்ப் பேரகராதி சுட்டுகிறது. (Species of miller Vol. 3 பக்-1261) இப்புல் இவ்வாற்றின் கரையில் நிறைந்து வளர்ந்து காணப்பட்டிருக்கலாம். எனவே 'அரிசிப்புல்' அரிசிலுக்கு அடிப்படையாயிற்று எனக் கொள்ளலாம்[9]. "அரிசிற் பெருந்துறை" (பதி 301-4) அரிசிலாற்றங்கரையில் உள்ள அரிசிற்கரைப்புத்தூர் என்ற திருநாவுக்கரசரின் கூற்றிற்கு வலுசேர்க்கும் விதமாக இக்கூற்று அமைகிறது.

'தமிழ் இலக்கியத்தில் ஆறு' என்ற நூலில் கி.நாச்சிமுத்து அவர்கள் ஆறுகள் பெயர் பெறும் நிலைக்குரிய பல காரணங்களை அலசி ஆராய்ந்திருக்கிறார்[10]. இவற்றுள் ஆற்றினுள் விளையும் பொருட்களால் பெயர் பெறும் நிலையையும் ஊர்ப்பெயர் காரணமாக ஆறுகள் பெயர் பெறும் நிலையையும் சுட்டுகிறார். இந்நிலையில் 'அரிசில்' என்ற காவிரியின் கிளைநதிக்குக் கொடுக்கப்பட்டுள்ளதால் இது கரையில் நின்ற அரிசிப்புற்களால் பெயர் பெற்றிருக்கலாம். அல்லது அந்த இடம் அரிசிப்புல்லால் முதலில் பெயர் பெற்று, பின்னர் அப்பகுதி ஆறும் அப்பெயர் பெற்றிருக்கலாம் என்று பலவிதமான எண்ணங்கள் தோன்றுகின்றன.

தகடுரெறிந்த பெருஞ்சேரலிரும் பொறை என்னும் சேரவேந்தனை (பதி 8-ம் பத்து) சிறப்பித்துள்ளார். தன்னைச் சிறப்பித்ததற்காக அரிசில்கிழாருக்குப் பரிசிலாக, அவனும் அவன் மனைவியும் அரண்மனைக்கு வெளியே வந்து அரண்மனையிலுள்ள எல்லாவற்றையும் கொள்ளுங்கள் என்று ஒன்பது நூறாயிரம் காணத்தோடு அரசுக்கட்டிலையும் வழங்கினான். அரிசில்கிழார் அரசுக்கட்டிலையும் ஏலாது அரசனே ஆளுமாறு வேண்டிக் கொண்டு தாம் அம்மன்னனுக்கு அமைச்சுத் தொழில் பூண்டு விளங்கினார்[11] என்ற வரலாற்றுச் செய்தியின் வழியாக இவரின் உள்ளக்குறிப்பினை அறியமுடிகிறது.

"வையகம் புகழ்ந்த வியங்கு வினை ஒள் வாள்
பொய்யா எழினி பொருது களம் சேர" (புறம் - 230)

விதை நெல் எழினி பலப்பல நெற்கதிர்கள் அனைய, உயர்செல்வத்தை ஈட்டிக்கொடுக்கும் என்பதை மறந்து போரிடுவதால், மன்னனும் அவன் சுற்றமும் பட்டினி கிடக்க வேண்டியதுதான் என்பதனை மறந்து போரிடுதல் சரியா எனக்குமுறும் இவரின் பாடலின் வழியாக நெல் வயல்கள் சூழ்ந்த பகுதியே தான் வாழ்ந்த அரிசிலூர் என்று சுட்டியதன் வழி அரிசியால் தான் முதலில் இவ்வூர் பெயர் பெற்றிருக்க வேண்டும். காலச்சூழலுக்கேற்ப ஊரின் பெயர் மாறியிருந்தாலும் அரிசில் என்ற அடிச்சொல்லினை

நாம் மறந்துவிடக்கூடாது. இதே போன்ற பெயருடைய அரிசிப்பாளையம் என்ற ஊர் சேலம் மாவட்டத்தில் அமைந்துள்ளது.

சைவ நாயன்மார்கள் மூவராலும் பாடப்பெற்ற இத்தலத்தைப் புத்தூர், அரிசில்கரைப் புத்தூர், திருப்புத்தூர், அரிசிற் தென்கரை அழகார் திருப்புத்தூர் போன்ற பெயர்களாலும் சுட்டுகின்றனர்[12]. இன்று "அழகாபுத்தூர்: என்றழைக்கப்படும் அரிசிற்கரைப் புத்தூருக்கு "செருவிலி புத்தூர்" எனும் பழம்பெயரும் உண்டு என்ற கருத்தும் அமைகிறது[13]. இதன்வழி இவ்வூரின் பழமையை உணர்ந்துகொள்ள முடிகிறது. அரிசில் எனும் இவ்வூர் மறைந்து போயினும் அவ்வூர் இருந்ததனை குடந்தைக் கீழ்க் கோட்டத்துக் கல்வெட்டு ஒன்று காட்டுகின்றது. மேலும் அரிசிலாறு இவ்வூருக்குச் சான்றாக இன்றுவரையுள்ளது என்பதே நமக்குக் கிடைக்கும் இன்றைய சான்றாகின்றது. ஆக நீர்நிலை அருகில் இருக்கும் இம்முடிகளின் வழியாக தாவர மிகுதியால் ஆறும் தாவரமும் இணைந்து பெயர் பெற்று நிற்கும் என்பதற்கு இவ்வூரே தக்கசான்று.

2.2 ஊர் மற்றும் தந்தை பெயரோடு தொடர்புடைய புலவர்கள்

ஒரே பெயரில் பலர் இருந்ததால் மற்றவர்களிடமிருந்து தன்னை வேறுபடுத்திக்காட்ட, தனது ஊர்ப்பெயரை இணைத்துக் கொள்ளுதல் இயல்பு, அவற்றிலும் ஒன்றுபட்டவர்கள் காணப்படின் தனது தந்தை பெயரைத் தன் பெயரோடு இணைக்கும் பொழுது இன்னாரின் மகன் இவர் என்று குறிப்பதன் வழி பெயரில் உள்ள குழப்பம் தெளிவுபடும் என்ற எண்ணமேயாகும். இம்முறையானது வள்ளுவரின்,

மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை
என்நோற்றான் கொல் எனுஞ் சொல் (குறள் - 70)

என்ற குறளோடு ஒத்துவருவது கவனிக்கத் தக்கதாகும்.

அ) ஆர்க்காடுக்கிழார் மகனார் வெள்ளிக்கண்ணத்தனார்

வடஆர்க்காடு மாவட்டத் தலைநகராகிய வேலூர்க்குக் கிழக்கே பாலாற்றங்கரையில் இவ்வூர் அமைந்துள்ளது. இப்பெயர் நகரையும் மாவட்டத்தையும் குறிக்கிறது[15].

"ஆரே தாதரி கல்ல இ ஆத்தி"

என்பது பிங்கல நிகண்டு. ஆர் என்பது அத்தி மரத்தைக் குறிக்கும் தமிழ்ச் சொல்லாகும்[16]. அத்தி சோழர்க்குரிய பூ என்பதனையும் நாம் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

"ஏந்துகோட் டியானைச் சேந்தன் உளந்தை...
அழிசி ஆர்க் கா டன்ன" (குறு: 258)

சோழ மன்னன் சேந்தன் என்பவனுடைய தந்தை அழிசி என்பவனுக்கு உரியதாக இவ்வூர் இருந்தது என்ற பரணரின் கூற்றின் வழியாக மிகப்பழைய அரண்மிகுந்த ஊர் இவ்வூர் என அறியமுடிகிறது. மேலும்,

"பகுமணி யானைப் பசும்பூண் சோழன்
கொடி நடங்கு மருகின் ஆர்க் கா டாங்கண்"

எனச் சோழனின் பெருமையை எடுத்துரைப்பதன் மூலம் ஆர்க்காட்டின் பழமையையும், பெருமையையும் தெரிந்துகொள்ள முடிகிறது.

ஆர்க்காடு என்றால் ஆலமரக்காடு எனப் பொருள்படலாம். ஆறு+காடு எனப் பிரித்து ஆறுகாடுகளையுடையது எனப் புராணங்கள் கூறுகிறது என்பர். இப்பெயர் வடமொழியில் ஷடாரண்யம் என வழங்கப்பெறுகிறது. தமிழ் இலக்கியங்களிலும், கல்வெட்டுக்களிலும் ஆர்க்காடு என்ற படிவமே வழங்கப் பெற்றுள்ளது[18]. பழம்பெருமை பெற்ற ஆர்க்காடு கருநாடக நவாப்புகள் காலத்தில் அவர்களுடைய தலைநகராகவும் விளங்கியுள்ளது[19].

"கனையும் இடனால் பாக, உறை, அணி ...
ஊர் வயல் பெயரும் பொழுதல், சேர்பு உடன்...." (அகம் - 647)

வினைமுற்றி மீளும் தலைவன் தேர்ப்பாகனுக்குச் சொல்லுவதாக அகநானூற்றில் அமையும் ஒரே ஒரு பாடலை மட்டுமே இப்புலவர் பாடியுள்ளார். வேறு பாடல்கள் ஏதும் பாடாத காரணத்தினால் இவரைப் பற்றி முழுமையாக அறிய முடியவில்லை. ஊர்ப்பெயரின் வழியாக மட்டுமே ஆர்க்காட்டைச் சார்ந்தவர் என்பதை நம்மால் அறியமுடிகிறது.

ஆ) கொடியூர்க்கிழார் மகனார் நெய்தல் தத்தனார்

தத்தனார் என்ற இயற்பெயருடைய இவர் நெய்தல் திணையைப் பாடிய சிறப்பால் நெய்தல் தத்தனார் என அழைக்கப் பெற்றார். திணையைப் பாடிய சிறப்பால் நிலத்தின் பெயரோடு இவர் பெயர் வழங்கப்பட்டாலும் இவர் வாழ்ந்த ஊர் கொடியூர் என்பதனை அவர் பெயரின் முன்னொட்டின் வழியாகவே அறிய முடிகிறது.

"அவரை ஆயமலர் உதிர துவரின்
நெல்ஒலி பாசவல் நுழைஇ ... கண்இல் வாடை (அகம் 243)

அவரையின் அழகிய மலர்கள் உதிர்ந்தன. பவளம் போன்ற இண்டஞ்செடி பூத்தது. மாலைக் காலத்து பகன்றை மலரும் மழையின் நீர்வரத்தும் நின்றுபோனது, நன்று தழைத்துக் கருக்கொண்டு எழுந்த கதிர்களையுடைய வயலின் நெல் ஒலி செய்யும் பள்ளங்களைத் துழவிய வாடைக்காற்று தலைவனின் பிரிவினையும், நமது வலிமையற்ற தன்மையினையும் உணர்த்தும் விதமாக வாடைக்காற்று வந்தது என்ற பாடலின் வழியாக அவர் வாழ்ந்த ஊரின் சூழலினை அறிந்துகொள்ள முடிகிறதே தவிர இந்த ஊர்தான் என அறுதியிட்டுக் கூறமுடியவில்லை. கொடிக்குளம் (மதுரை), கொடியூர் (வடஆர்க்காடு) போன்ற ஊர்ப்பெயர்களையும் நாம் ஒப்புநோக்க வேண்டும்.

3. தொழிலுடன் தொடர்புடைய புலவர்கள்

ஊர்ப் பெயர்களின் வழியாக பண்டையச் சமூகத்தின் சாதிவழி அமைந்த குடியிருப்பு, தொழில் வளம் ஆகிய சமூகச் செய்திகளையும், வரலாற்று நிகழ்வுகளையும் வெவ்வேறு கால கட்டங்களில் எழுதப்பட்ட ஊர்ப்பெயர்களின் வழியாக ஆராய முடிகிறது.

நான் எனது ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட புலவர்கள் தாவர ஊர்ப்பெயரோடு ஒற்றுமையுடையவர்களாக மட்டுமல்லாது, 'கிழார்' சொல்லின் வழி தொழில் அடிப்படையிலும் ஒற்றுமையுடையவர்களாகத் திகழ்வதால் திணை சார்ந்த ஆய்வும் தேவைப்படுகிறது.

சங்க இலக்கியம் குறிப்பிடும் திணை மரபு என்பது தமிழகத்தின் நிலவியல் அமைப்பின் அடிப்படையிலும் ஆண், பெண் இடையே நிலவிய காதல் உறவின் அடிப்படையிலும், பாடல்கள் இயற்றப்பட்டுள்ளன. இத்திணை மரபு குறிப்படும் நிலப்பகுதி அங்கு வாழும் மக்கள், புழங்கு பொருட்கள், வேளாண்மை, பழக்க வழக்கம் போன்றவற்றின் வழியாக ஒரு இனத்தின் வாழ்க்கை முறையை நாம் தெளிவாக அறிந்துகொள்ள முடியும்.

திணைக்கோட்பாடானது ஒவ்வொரு நிலப்பகுதியிலும் நிலவுகினற் சமூக, அரசியல், பொருளாதார வளர்ச்சி, போன்ற அனைத்து வகைப்பாட்டையும் சுட்டி நிற்கிறது எனலாம்.

ஊர் மற்றும் தொழில் பெயரோடு தொடர்புடைய புலவர்கள்

வ.எண்	ஊர்ப்பெயர்	தொழில் பெயர்
1.	ஆலத்தூர்	கிழார்
2.	ஆரிசில்	கிழார்

ஊர் மற்றும் தொழில் மற்றும் தந்தை பெயரோடு தொடர்புடைய புலவர்கள்

வ.எண்	ஊர்ப்பெயர்	தொழில் பெயர்	தந்தை பெயர்	இ. பெயர்
1.	ஆர்க்காடு	கிழார்	மகனார்	வெள்ளிக் கண்ணத்தனார்
2.	கொடியூர்	கிழார்	மகனார்	நெய்தல் தத்தனார்

கிழான் / கிழார் என்ற பெயர்களுடன் வரும் புலவர்களைப் பற்றிய குறிப்புகளை நோக்கும்போது அவர்கள் பெரும்பாலும் 'மன்னன்' 'அரசன்' போன்ற ஆட்சியாளர்களுடன் தொடர்புடையவர்களாய் இருந்ததனையும், இவர்கள் ஆளும் பகுதி பெரும்பாலும் குறிஞ்சி, முல்லை சார்ந்த வளர்ச்சியடைந்த நிலவியலமைப்பை உடையவர்களாகவும் திகழ்ந்தனர்[23]. தோட்டங்கள் உடையவர்க்கு 'நிலக்கிழார்' என்ற பெயர் வழங்கப்படுவதும் குறிப்பிடத் தக்கதாகும்.

கிழார் என்ற சொல் தோட்டம் என்ற பொருளைத் தருவதால் நிலவுடமை வாதிகளாக இப்புலவர்கள் திகழ்ந்துள்ளனர். இவர்கள் வளர்ச்சியடைவதற்குத் தாவரம் சார்ந்த உற்பத்திப் பொருளே காரணமாக அமைந்துள்ளது என்பதற்குக் 'கிழான்' என்ற

சொல்லே எனது ஊர்சார்ந்த ஆய்வுக்கும், இனவரைவியல் சார்ந்த ஆய்வுக்கும் வழிவகுத்துள்ளது.

"… திருவீழ் நுண் பூண் பாண்டியன் மறவன்
படை வேண்டுவழி வாள் உதவியும்" (புறம் - 179)

பாண்டிய அரசனுக்குப் படைக்கலன்களை வழங்கியது மட்டுமல்லாமல் அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்பவனாகவும் நாலைக்கிழவன் விளங்கினான் என்ற செய்தியின் வழியாக மன்னனுக்கும் இவர்களுக்கும் உள்ள உறவினை இப்பாடல் நன்கு புலப்படுத்துகிறது. மேலும்

"பலகுடை நீழலும் தங்குடைக்கீழ்க் காண்பர்
அலகுடை நீழ லவர்" (குறள் - 1034)

நிலத்தினை உடையவர்கள் இந்த உலகத்தினையே தனது மன்னனின் கீழ் கொண்டு வரும் வல்லமையுடையவர்களாகத் திகழ்ந்தனர். சிறகுடிக்கிழான் பண்ணன், மல்லிகிழான் காரியாதி, நசாந்தூர் கிழான் தோழன் மாறன், வல்லார் கிழான் பண்ணன், கரும்பனூர் கிழான், அம்பர் கிழான் அருவந்தை, பொறையாற்றுக்கிழான்[24] போன்ற இனக்குழுத் தலைவர்களின் பெயர்களின் வலியாக 'கிழான்' என்ற சொல்லின் வலிமையை அறிந்துகொள்ள முடிகின்றது. இவர்களின் செல்வாக்கினை மட்டுமல்லாது ஊரின் வளத்தினையும் தெரியப்படுத்தும் விதத்தில் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள பகுதியில் தோட்டங்கள் மிகுந்திருப்பதால் அப்பகுதியில் தோன்றிய ஊருக்கு 'கிழார்' எனப் பெயரிட்டுள்ளதையும் நாம் கவனிக்க வேண்டும்.

முடிவுரை

ஆதி மனிதன் நிழல் சார்ந்தும் நீர்நிலை சார்ந்தும் தனது குடியிருப்புக்களை அமைந்து கொள்ள காரணம். தாங்கள் வாழ்க்கை நிலையை முன்னேற்றிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணமாகும். மரம், செடி, கொடிகள் சார்ந்த இயற்கைச் சூழலில் அவன் தனது இருப்பிடத்தை அமைத்துக் கொள்ளும்போது அவற்றையே தனது இருப்பிடத்தின்அடையாளச் சின்னமாக பெயரிட்டுக் கொண்டான். இவ்வாறு அமைத்துக் கொள்ளும்போது தகவல் முறையில் ஏற்பட்ட முன்னேற்றத்தின் காரணமாக பல இருப்பிடங்களின் பெயர்கள் ஒன்றாக இருப்பதனை அறிந்துகொண்ட மனிதன் மற்றவரில் இருந்து தன்னை வேறுபடுத்திக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் தோன்றியதன் வாயிலாக மற்றவரில் இருந்து தன்னை வித்தியாசப்படுத்திக் காட்டிக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையிலும், ஒரே பெயரில் உள்ள பலரை அழைக்கும்போது ஏற்படும் சிக்கல்களை தவிர்த்துக் கொள்ளவும் சிறிய சிறிய மாற்றங்களை செய்துகொண்டனர். தொடக்கத்தில் ஆட்டங்களாக, ஓவியங்களாக தங்களின் வாழ்க்கையை பதிவு செய்தவர்கள் எழுத்துருவாக்கத்தின் மூலம் பாடல்கள், கவிதைகள், காவியங்கள் என தனது படைப்பை உருவாக்கும் போது மனிதக்குழு வாழ்க்கையின் வெளிப்பாடாக வந்தன. நிகழ்வுகளிலும் உணர்வுகளிலும் முதல், கரு, உரிப்பொருளை இணைத்து வாழ்க்கையோடு இணைந்தவற்றை நேரடியாகவும், மறைமுகமாகவும், குறிப்புக்களாகவும், குறியீடுகளாகவும் பல வடிவங்களில் வந்து புவியியல் வரைவுகளுக்கும் இனவியல் வரைவுகளுக்கும் உகந்த வகையில் தனது படைப்புக்களை உருவாக்கியுள்ளனர். அவற்றை ஒன்றிணைத்துப் பார்க்கும்போது சமூக உண்மைகள் கதைவடிவில் புலப்பட்டு நிற்பதை அறியமுடிகிறது.

85. இலக்கியங்கள் காட்டும் சோழ நாட்டு ஊர்கள்

இரா. பூங்குழலி
முனைவர்ப்பட்ட ஆய்வாளர்
தமிழியல் துறை
அண்ணாமலைப் பல்கலைகழகம்
அண்ணாமலைநகர்

முன்னுரை

ஊர்ப்பெயர்கள் காரணத்தோடு தான் தோன்றியிருக்க வேண்டும். தமக்கென மிகப் பழைய மரபைப் பெற்றிருக்க வேண்டும் எனலாம். பேச்சு வழக்கில் தான் ஊர்ப் பெயர்கள் சிதைவுப் பெற்றுக் காணப்படுகிறது. காலப்போக்கில் இவை மருவு மொழியாக வழங்கப்பட்டு வருகிறது. சோழ நாட்டு ஊர்கள் பற்றி இங்கு காண்போம்.

திருப்புறம்பயம்

திரும்புறம்பயம் என்பது தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் தாலுக்காவிலுள்ள ஒரு சிவத்தலம் ஆகும். இவ்வூர் கும்பகோணத்திற்கு வடமேற்கே ஐந்து மைல் தூரத்தில் மண்ணியாற்றின் வடகரையில் இருக்கிறது. இங்கு கோயிலில் குடிகொண்டிருக்கும் இறைவன் பெயர் புறம்பயநாதன். ஆதலால் திரு அடைமொழி இட்டு திருப்புறம்பயம் என்ற பெயர் வழங்கப்பட்டுள்ளது. "நால்வர்க் கறம் பயனுரைத்தனை புறம்பயமமர்ந்தோய்" என்று திருஞானசம்பந்தர் என்று பாடியுள்ளார். இங்கு பாண்டியர், பல்லவர், சோழர் இடையே ஏற்பட்ட பெரும்போர் தான் சோழப் பேரரசு உருவாக காரணமாக விளங்கிறது. இவ்வூர் வரலாற்றில் மிகப்பெரிய திருப்புமுனை ஏற்படுத்திய இடம் ஆகும்.

செம்பியன் மாதேவி

ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டம், நாகப்பட்டினம் வட்டத்திலுள்ள சிவத்தலம் ஆகும். கண்டராதித்தன் மனைவியும் சோழப் பேரரசியுமான செம்பியன் மாதேவி பெயரால் இவ்வூர் பெயர் வழங்கப்படுகிறது. சிவ பக்தியில் சிறந்து விளங்கிய செம்பியன் மாதேவியார் தன் பக்தியின் சின்னமாக நாகையை அடுத்த ஓர் சிற்றூரை விலைக்கு வாங்கி கைலாச நாதருக்கு கோயில் எடுப்பித்தார். பின்பு அவ்வூருக்கு செம்பியன் மாதேவி என்று பெயர் சூட்டினார். இத்தலம் நாகைக்குத் தென்மேற்கில் சுமார் எட்டு கல் தொலைவில் அமைந்துள்ளது என்று சதாசிவப்பண்டாரத்தார் குறிப்பிடுகிறார்.[1]

சூரியனார் கோயில்

தஞ்சை மாவட்டம், ஆடுதுறைக்கு வடகிழக்கே அமைந்திருப்பது சூரியனார் கோயில் என்னும் ஊராகும். சுங்க வரி தவிர்த்த முதற்குலோத்துங்க சோழன் சூரியனுக்கு தமிழ்நாட்டில் முதன் முதலில் கோயில் கட்டி வழிபட்ட இடமே சூரியனார் கோயில் என்று வழங்கப்பெறுகிறது. இதன் மூலம் வடமாநிலத்தோடு உள்ள தொடர்பைக் காட்டுகிறது என்று சதாசிவப் பண்டாரத்தார் சுட்டுகிறார்.[2]

பழையாறை

கும்பகோணத்திற்குத் தென்மேற்கே மூன்று மைல் தூரத்தில் பழையாறு என்னும் பெயரில் இன்று ஒரு சிற்றூர் உள்ளது. இது முற்காலத்தில் பரந்துப்பட்ட ஒரு மாநகராக இருந்திருக்கிறது. காலப்போக்கில் இந்த நகர் சிதைந்து, இன்று பல சிற்றூர்களாகக் காணப்படுகிறது. பிற்காலச் சோழர்கள் காலத்தில் ஒருத் தலைநகராக விளங்கி இருக்கிறது.

பழையாறை நகரைத் தலைமையிடமாகக் கொண்டு அரசாட்சி செய்வன் சுந்தரசோழன் என்பதனைக் கல்வெட்டுச் சான்றுகளுடன் விளக்குகிறார் சதாசிவப் பண்டாரத்தார். இந்நகர் கும்பகோணத்திற்குத் தென்மேற்கே மூன்று மைல் தூரத்தில் பழையாறை என்னும் பெயருடன் இந்நாளில் ஒரு சிற்றூராக உள்ளது. அச்சிற்றூரையும் அதனைச் சூழ்ந்துள்ள முழையூர், பட்டீச்சரம் திருச்சத்திமுற்றம், சோழமாளிகை,

அரிச்சந்திரபுரம், ஆரியப்படையூர், பம்பைப்படையூர், புதுப்படையூர், மணப்படையூர், கோணப்பெருமாள் கோயில், திருமேற்றளி, தாராசுரம், நாதன்கோயில் என்று வழங்கும் நந்திபுர விண்ணகரம் ஆகிய ஊர்களையும் தன்னகத்துக் கொண்டு முற்காலத்தில் பெரிய நகராக அஃது அமைந்திருந்தது என்பதைத் தேவாரப் பதிகங்களாலும் அவ்விடங்களில் காணப்படும் கல்வெட்டுக்களாலும் அறியலாம் என எழுதுகிறார் சதாசிவப்பண்டாரத்தார்.[3]

மீன்சுருட்டி

பாண்டியர்கள் சோழர்களிடம் போரில் தோற்றுவிட்டார்கள். பாண்டியர் கொடி மீன்கொடி. பாண்டியர் மீன் கொடி சுருட்டப்பட்டு புலிக்கொடி கொண்ட சோழர் ஆட்சி வந்தது. மீன்கொடி சுருட்டப்பட்ட இடம் மீன்சுருட்டி என்று அந்த ஊருக்குப் பெயர் வந்தது.

கங்கைகொண்ட சோழபுரம்

கங்கைகொண்ட சோழனாகிய முதலாம் இராசேந்திரனால் அமைக்கப்பட்டது கங்கைகொண்ட சோழபுரம் என்னும் பெருநகராகும். இம்மாநகரமானது, கங்காபுரி என்று கலிங்கத்துப்பரணி, விக்கிரம சோழன் உலா ஆகிய நூல்களிலும் கங்க மாநகர் என்று வீரராசேந்திர சோழன் மெய்கீர்த்திலிலும் கங்காபுரம் என்று தண்டியலங்கார மேற்கோள் பாடலிலும் கூறப்பட்டுள்ளமையினையும் பண்டாரத்தார் எடுத்துக்காட்டுகிறார். மேலும் இவர் கங்கைகொண்ட சோழபுரத்தின் பகுதிகள் இப்போது உட்கோட்டை, மாளிகைமேடு, ஆரிக்கலம் வாணதரையன்குப்பம், கொல்லாபுரம், வீரசோழநல்லூர், சுண்ணாம்புக்குழி, குருகை பாலப்பன் கோயில் என்னும் சிற்றூர்களாகக் காணப்படுகின்றன என்ற ஆய்வுக் குறிப்பை முன்வைக்கக் காணலாம்.[4]

திருமணஞ்சேரி

மயிலாடுதுறைக்கு மேற்கே குத்தாலத்திற்கு வடக்கே அமைந்துள்ள திருமணஞ்சேரி என்னும் ஊர் அசல் உட்கிராமமாகும். இவ்வூர் அக்காலத்தில் கரிகால் சோழ சதுர்வேதிமங்கலம் என வழங்கப்பட்டது. திருமணத்திற்கானத் தெய்வ வழிபாட்டோடு மட்டும் தொடர்புடையதாக மக்களால் இன்று கருதப்பட்டு வருகிறது. இதனால் திருமணஞ்சேரி என்று பெயர் வழங்கப்படுகிறது.

காவிரிப்பூம்பட்டனம்

சோழ மன்னர்க்குரிய தலைமை நகரங்களுள் ஒன்றாகவும் இந்நாட்டு வாணிக வளர்ச்சிக்குரிய கடற்றுறைப்பட்டினமாகவும் விளங்கியது காவிரிப்பூம்பட்டினம் என்ற பேரூர் ஆகும். இவ்வூர் சோழ நாட்டினைத் தாய்போற் பேணிக் காக்கும் நன்னீர்மை வாய்ந்த காவிரியாறு கடலொடு கலக்கும் நிலப் பகுதியில் அமைந்தமையால் புகார் எனவும், காவிரிப்பூம்பட்டினம் எனவும் வழங்கப்பெறுகிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலண்டன் மாநகரம் எப்படி விளங்கியதோ அதைவிட ஆயிரம் மடங்கு சிறப்பாக பூம்புகார் நகரம் விளங்கியுள்ளது. இந்நகரத்தின் பரப்பினையும் செல்வ வளத்தினையும் பிற சிறப்புக்களையும் பட்டினப்பாலை, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய பண்டைத் தமிழிலக்கியங்களால் நன்குணரலாம். கி.பி. முதல் நூற்றாண்டில் மேனாட்டினின்றும் தமிழ் நாட்டிற்கு வந்த யவன ஆசிரியர் தாலமி என்பவர் எழுதிய வரலாற்றுக் குறிப்பிலும் பெரிப்ளுஸ் என்ற நூலிலும் காவிரிப்பூம்பட்டினமாகிய இந்நகரத்தை பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன என்கிறார்.[5]

ஆடுதுறை

ஆடுதுறை என்ற ஊர்ப் பெயர் மாசாத்தனார் என்ற சங்ககாலப் புலவர் பெயரோடு சேர்த்துக் கூறப்பட்டுள்ளது. இவ்வூர் தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம் என்று கூறப்படுகிறது. ஆறுகளில் மக்கள் இறங்கி நீராடுதற்கேற்ற இடமாகிய துறை என்னும் பெயரை, ஆற்றையடுத்துள்ள ஊர்கள் பெற்றிருப்பதால் ஆடுதுறை என்ற பெயரை ஊர் பெற்றுள்ளது. இவ்வூர் மயிலாடுதுறையிருந்து கும்பகோணம் செல்லும் வழியில் உள்ளது.

கண்டிரகசியம்

திருச்சி மாவட்டம் உடையார்பாளையம் வட்டத்தில் உள்ள கொள்ளிடப் பேராற்றிற்கு வடகரையில் திருமழபாடிக்கு மேற்கே ஒரு மைல் தூரத்தில் அமைந்துள்ளது கண்டிராச்சியம் என்னும் சிற்றூராகும். இது கண்டிரகசியம் எனப்படுகிறது. இவ்வூர் கண்டராதித்தன் என்னும் சோழ மன்னனால் கண்டராதித்த சதுர்வேதி மங்கலம் என்னும் பெயரில் அமைக்கப்பட்டது.

முடிவுரை

ஊர்கள் தமது பழைய பெயரிலிருந்து மாறி புதிய பெயரருடன் உள்ளது எனலாம். சில ஊர்கள் பழைய பெயர் மாறாமல் அப்படியே உள்ளது. ஒவ்வொர் ஊரும் காரணப்பெயரோடு விளங்குகிறது. இவை வரலாற்றோடு தொடர்புடையதாக் காணப்படுகிறது. அங்கு உள்ள இறைவன் பெயராலும் ஊர்ப் பெயர் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு ஊர்ப்பற்றிய ஆய்வு மேற்கொண்டால் தான் உண்மையான ஊர் வரலாறு தெரிந்துக்
கொள்ளலாம்.

அடிக்குறிப்புகள்

1. தி.வை. சதாசிவப்பண்டாரத்தார், செம்பிய்ன மாதேவி தல வரலாறு, ,ஸ்ரீ கயிலாசநாதசுவாமி தேவஸ்தானம் செம்பியன் மாதேவி வடுகச்சேரி, முதல் பதிப்பு, 1958.

2. தி.வை. சதாசிவப்பண்டாரத்தார், பிற்காலச் சோழ வரலாறு, பக். 308.

3. மேற்படி, பக். 82-83.

4. மேற்படி, பக். 182-183.

5. தி.வை. சதாசிவபண்டாரத்தார், காவிரிப்பூம்பட்டினம், மாதவி மன்றம், மேலப்பெரும்பள்ளம், பதிப்பு 1959.

86. குறுந்தொகையில் ஊர்கள் உணர்த்தும் உவமைச்சிறப்பு

முனைவர். இரா.பூங்கோதை
இணைப் பேராசிரியர்,
குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கல்லூரி

இலக்கியம் இதயத்தை நெறிப்படுத்தும் ஆற்றல் மிக்கது இலக்கியச் சோலையில் நுழைந்தால் தமிழ் இலக்கியத்தின் பல்வேறு பரிமாணங்களை உணர்ந்து துய்க்க முடியும். அறிவியல் முயற்சிகளும் வளர்ச்சிகளும் எவ்வளவு மாறினாலும் வாழ்வியலின் அடிப்படை அறங்களும் மாறா என்பது உலகில் உண்மை. சங்க இலக்கியங்கள் வாழ்வியல் நெறிகளை உள்ளது உள்ளபடி உணர்த்துவன என்பதில் எள்ளவும் ஐயமில்லை. ஆழகிய உவமைகளையும், சொற்செறிவினையும், கருத்துச் சிறப்பினையும் கொண்டு இலங்குகின்றது. இந்நூலில் இடம்பெற்றுள்ள 'ஊர்' பற்றிய செய்திகளைக' காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

'ஊர்' நல்ல ஊராக அமைவது அந்நாட்டுமக்களைப் பொறுத்ததே என்பதை ஔவை பெருமாட்டி " எவ்வழி நல்லவராடவர் அவ்வழி நல்லை வாழிய நிலனே" என்ற அடிகள் மூலம் விளக்குகிறார் ஊர்களின் சிறப்பு ஊர்களை ஆளும் தலைவர்களின் ஆற்றலையும் அணுகு முறையையும் பொறுத்தமைகின்றது. அக இலக்கியமாகத் திகழ்வதால் குறுந்தொகையில் ஊர்கள் தலைவிக்கு- உவமிக்கப்படுகிறது. தலைவன் கூற்று, தோழிகூற்று வாயிலாக தலைவியின் கூந்தல், அலரெழும்பல், வரைவு கடாவுதல், துன்பசூழல் அன்பு மாறியநிலை போன்றவற்றிக்கு ஊரின் அழகு ஆரவாரம் போன்றவை உவமைகளாக கையாளப்பட்டிருப்பதை அறியமுடிகிறது. சங்க இலக்கியத்திற்கு உள்ள சிறப்புக்களில் ஒன்றாகும். வாழ்வின இருபக்கங்களான இன்பம் துன்பங்களை சங்க இலக்கியங்கள் உணர்த்துகின்றன. காதலைப் பாடுபொருளாக கொண்ட அக இலக்கியங்களை தலைவியின் நலத்திற்கு ஊர்களை ஒப்பிடுவதன் மூலம் புறப்பொருள் கருத்துக்கள் அறியமுடிகிறது.

குறுந்தொகையில் மூவேந்தர்களுக்கு உரிய ஊர்களை விட நன்னன் அருமன் , ஏழினி அகுரை மலையன் அஞ்சி அழிசி தொண்டையர்கோன் எவ்வி ஆகிய மன்னர்களுக்கு உரிய, மலை, கானம், கடற்கரைப் பட்டினங்களும் குறிப்பிடப்படுகின்றன.

குறும்பர், கொங்கர், கோசர் பற்றிய போர்க்களங்களும் தொண்டி, மாந்தை ஆகிய வளமான கடற்கரைப் பட்டினங்களும், சுட்டப்படுகின்றன, பாடலி குன்றூர் ஆர்க்காடு முதலிய ஊர்களும் மலையன்கானம், ஓரிகானம், முதலிய கானங்களும், கொல்லிமலை பறம்புமலை, அரலைக்குன்றம் ஆகியவைகளும் தலைவியின் எழிலுக்கு பொருத்தமாகச் சுட்டப்படுகின்றன.

தலைவன், தோழி கூற்றுக்கள் வாயிலாக தலைவியின் அழகு விரித்துக் கூறப்பட்டுள்ளது. வில்லாற்றல் மிக்கி ஓரி கொல்லிமலைக்கு தலைவன் வல்வில் ஓரியாவதை பரணர் பரவுகின்றார்

கொல்லிமலை : அழகுபாவை

வல்வில் ஒரியின் கொல்லிமலையில் உள்ள தெய்வப்பாவை கண்டவரைத் தன்வசப்படுத்தும் ஆற்றல் மிக்கது, ஆடவர்களைக் கொல்லும் அழகு பாவை உவமையாகும் நிலையை,

> வல்வில் ஓரி கொல்லி குடவரைப்
> பாவையுள் மட வந்தனளே
> மணத்தற்கரிய பணைப் பெருந்தோளே — குறு -100

என்ற குறந்தொகை தொடர்கள் விளக்குகின்றன.

ஓரியன் கானகம் தீண்டி வரும் நறுமணத் தென்றல் போல மணமிக்க தலைவின் நெறிபடு கூந்தல் உள்ளதாக பரணர் (குறு (199)) பாடியுள்ளார். கொல்லிமலை. அழகுபாவையாகவும், பாவையின் அழகு குழலாக உவமித்த சிறப்பை அறியமுடிகிறது.

உறந்தை பெருந்துறை

வளமார் சோழரின் உறந்தை பெருந்துறையில் உள்ள அறவைப் போன்ற கூந்தலை தன் தலைவி பெற்றிருப்பதைத் தலைவன் கூற்றில் இளங்கீனார் கூற்றில் இளங்கீரனார்.

> " வளங்கெழு சோழர் உறந்தைப் பெருந்துறை
> நுண் மணல் அறல் வார்ந்தன்ன குழல்" (குறு. 116)

என்ற வரிகள் மூலம் விளக்குவதன் மூலம், மூவேந்தர் நாடுகளில் சோழ நாடு வளப்பம் கொண்டது. பெருந்துறை என்பது வளமான காவிரித் துறையை புலனாகின்றது. "அறல் போல் கூந்தல்" என்று பொருநர் ஆற்றுப்படை வரியும் அறலை கூந்தலுக்கு உவமையாக்கி மொழிகிறது.

மாந்தை அன்ன வெறிகுழல் :

"கானலகம் பெருந்தோடு அட்ட மள்ளர் ஆர்ப்பவெ ஆர்ப்பவெ நீ உம்
குட்டுவன் மாந்தை அன்ன வெறிகுழல" (குறு. 34)

குட்டுவன் மாந்தை நகரைப் போன்று தலைவி கூந்தல் திகழ்வதை சுட்டுகின்றது.

முள்ளூர் மலை:

மலையமான் திருமுடிக்காரி எனும் வள்ளலின் முள்ளூர் மலையை சார்ந்த மணமுடைய காட்டைப் போன்ற கூந்தலை உடையவள் தலைவி என்பதை கபிலரின்

"செவ்வேல் மலையன் முள்ளூர் கான
நாற வந்து நன்ளென் கருங்குழல" (குறு. 312)

என்ற குறுந்தொகை வரிகள் மொழிகின்றன. கானம், நகர்., மலை என்ற உறைவிட ஊர்களைத் தலைவியின் அழகிய கூந்தல் வருணைக்கு பொருத்தமான உவமைகளைச் சித்தரித்த நயம் அறியலாகின்றது.

அரலைக் குன்ற மலர்மணம்

நள்ளிக்குரிமையான அரலைக்குன்றச் சுனைவில் பூத்த குவளை காட்டு மல்லிகை இணைந்த நறுமணம் வீசும். நறுநுதலை வீசும் தலைவன் மறக்க இயலாது என்று தோழி கூற்று தலைவியை ஆறுதல் படுத்துவதாக அமைகின்றது.

பொறையனின் தொண்டி:-

பொறையனின் தொண்டி முன்றுரையில் இருந்த நாரை அயிரை மீனுக்காகக் காத்திருந்தது போன்று அரியளாகிய தலைவிக்குத் தலைவன் காத்திருப்பதை,

"திண்டேர் பொறையன் தொண்டி முன்றுரை
அயிரை ஆரிரைக் காண வந்தாங்கு" -(குறு 128)

என்ற வரிகள் விளக்குகிறது. வினை முடிந்து திரும்பிய தலைவன்
தோழிக்கு நன்றி கூறினான் அதைக் கேட்ட தோழி நீ கூற வேண்டிய நன்றி
விருந்து வரக் கரைந்த காக்கைக்கே என்று மொழிவதை

திண்டேர் நள்ளி கானத் தண்டர்
பல்லா பயந்த நெய்யிற் றொண்டி
முழுதுடன் விளைந்த வெண்ணெலவெஞ்சோறு
எழுகலத் தேந்தி -(குறு 210)

என்ற வரிகளில் காக்கைப் பாடினி. தொண்டித் துறைமுகத்தின் சிறப்பைக் கூறுவதோடு சமுதாயத்தில் நிலவிய நம்பிக்கை ஒன்றினைச் சுட்டுவதாக அமைந்துள்ளது தலைவீயன் துன்பத்தைப் பொக்கியது காக்கை என்று அடக்கத்தோடு தன் வரலாற்று அறிவு கலந்து மறுக்கினறாள் தோழி என்பது புலனாகின்றது.

தொண்டியன்ன நலம்:-

தலைவியின் நலம் பொதுநிலையில் ஊர்களோடு உவமிக்கப்படுகிறது. பல சிறப்புக்களைத் தன்னகத்தே பெற்றிருக்கும் தொண்டியன்ன நலத்தை கவர்ந்த தலைவனின் கொடுமையைக் கூறி வாயில் மறுப்பதாக தோழிகூற்று அமைவது (குறு-238) பாடல் விளக்குகிறது.

ஒண்டொடி மகளிர் வண்டலயரும்
தொண்டியன்ன வென் நலம்தந்து -(குறு 238)

என்ற வரிகள் தொண்டி நகரின் சிறப்பு போன்ற தலைவியின் கவர்ந்த நலத்தை தந்துவிடு என்று வாதிடுவதாக அமைவது அறியலாகிறது அகநானூறும்.

வளங்கெழு தொண்டியன்ன
இவள் நலனே -(அகம்-40)

தலைவி நலம் வளமான தொண்டி நகரை ஒத்தமையைச சுட்டுகின்றது.

அழிசி ஆர்க்காடு:

காவிரியாற்று நீர்த்துறையில் பிணித்த யானைகயளையும் உடையவன் வேட்டையாடும் தொழலில் வல்ல வீரர்களின் தலைவன் அழிசி. இவனுக்கு உரிமையான ஆர்க்காடு என்னும் நகரை ஒத்த இவள் நலம் தொலைத்ததை கண்டு ஊர் அவர் தூற்றுகிறது என்பதை,

நிரைய ஒள்வாள் இளைஞர் பெரும
அளிசி ஆர்க்கா டன்ன இவள்

பழிதீர் மாணலம் தொரலத்த (குறு 258)

என்ற வரிகள் உணர்த்துகின்றன. பெண்மை நலத்திற்கு உவமையாவதுடன் தவறிய தலைவனின் பரத்தமை ஒழுக்கத்தைச் சுட்டி வாயில் மறுக்கும் தோழிக்கூற்று பண்பாட்டுச் சிறப்பைப் பகர்கின்றது.

ஆதி அரமனின் மூதூர்:

தலைவன் நாடும் பரத்தையின் நலம் ஆதி அருமனின் மூதூரைப் போன்றது

ஓங்கிரும் பெண்னை நுங்கொடு பெயரும்
ஆதி அருமன் மூதூரன்ன – குறு 293

என்று பாடல் வரிகள் விளக்குகின்றது. தலைவனின் புரத்தமை ஒழுக்கம் தலைவியின் நலன் அழிவிற்கு காரணமாவதை உணரமுடிகிறது.

குறும்பூர் - வாகைப் பறந்தலை:

"புலி நோக்குறழ் நிலைகண்ட
கலிகெழு குறும்பூப் ஆர்ப்பினும்" - (328 குறு)

விச்சியர் பெருமகன் வேந்தரொடு போரிட்ட போது குறும்பூரில் வாழ்ந்தவர் செய்த ஆரவாரத்தைப்போன்று தலைவி ஊரவர் அலர்தூற்றினர். என்று மொழிகிறது. வாகைப் பறந்தலையில் பசும்பூன் பாண்டியனுக்கு துணையாகச் சென்று அதிகன் போரிட்டு மறைந்த போது எழுந்த ஆரவாரத்தை விட பெரிதாக அலர் தூற்றப்பட்டதை (குறு 393 வது பாடல்) கூறுகின்றது.

மாந்தை நகர்

மாந்தை நகர், தலைவனைக் காணாத காலத்து இனிதாக அமைந்தது. தலைவன் நம்மைவிட்டு பிரிந்த இந்த காலத்தில் துன்பமானதாகியதை தோழி, உணர்த்துவதை

"நாரை நிரைபெயர்ந்தயிறை யானும்
ஊரோ நன்றுமன் மாந்தை
ஒரு தனி வைகிற புலம்பாகிற்றே" – குறு 166.

என்ற வரிகள் விளக்குகின்றன. தன்கண்வாழ்வார்க்கு சால இனிதான மாந்தை நகர் தலைவன் பிரிவால் துன்பமயமானது என்ற தோழியின் ஆதங்கம் பலப்படுகிறது.

பொன்மலி பாடலி:

தலைவன் வரவை பாணன் மூலம் கேட்ட குறுந்தொகை தலைவி அதை உறுதிபடுத்தும் வகையில்

"நீ கண்டனையோ? கண்டார்க்கேட்டனையோ?
ஒன்று தெளிய நசையின மொழிமோ
வெண்கோட்டியானை சோனை படியும்
பொன்மலி பாடலி பெறீஇயர்
யார்வாய்க் கேட்டனை காதலர் வரவே" (குறு 75)

வினாக்களை எழுப்பி உறுதிபடுத்தும் தலைவியைக் குறுந்தொகை காட்டுகிறது. அறிவினால் அறியவொண்ணாதது்ம், உணர்ச்சிக்கு நன்கு புலனாவதும் அன்பின் தன்மையாகும் அன்பிற்குரியவர் ஆக்கத்தோடு வந்தால் நெஞ்சம் நெகிழ்ந்து போகும் என்பதற்கேற்ப தலைவனை எதிர்நோக்கி இருக்கும் அன்புகெழுமிய ஆர்வமிகுதி பாணனை வினவும் வகையில் அமைவது சிறப்பானது.

தலைவன் வரவை பாணன் மூலம் உணர்ந்த தலைவி பாடலி புரத்தின் செல்வத்தை பெறுக என வாழ்த்துவதை

"பல்புகழ் நிறைந்த வெல்போர் நந்நர்
சீர் மிகு பாடலிக் குழீஇக் கங்கை
நீர் முதற் கரந்த நிதியங்கொல்லோ " (அகம்265)

என்ற அகநானூற்று வரிகள் விளக்குகிறது. தென்னகம் வட இந்தியாவுடன் கொண் தொடர்பையும் நந்நவம்சத்திற்கு முன் பழந்தமிழ் இலக்கியச் செல்வத்தின் தொன்மைச் சிறப்பையும் உணரமுடிகின்றது.

பறம்பு மலை:

கற்பு வாழ்வில் தலைவனின் அன்புமாறிய நிலையைக் குறிக்க வந்த தோழி இனிமைக்கு எடுத்துகாட்டாக பாரியின் பரம்புமலைச் சுனை நீரைக் குறிப்பிடகின்றனர் கனவில் வேம்வின் பைங்காய் கற்கண்டாகவும் கற்புகாலத்து தைத் திங்கள் தண்ணியசுனை நீர் வெம்மையாக உவர்பாக தோன்றும் நிலையை

"பாரிபறம்பிற் பனிச்சுனைச் தெண்ணீர்
தை இத் திங்கட்டண்ணிய தரினும்
வெய்ய உவர்க்கும" குறு 196

என்ற வரிகள் விளக்குவதிலிருந்து தலைவனின் அன்பு மாறிய நெஞ்சத்திற்குச் சான்றாக தோழி பாரியின் இனிய சுனை நீரைக் குறிப்பிடுவது தலைவன் நிலையையும், தலைவி மீது தோழிகொண்ட அன்பு நிலையும் புலப்படுகிறது.

நாலூர் கோசர்:

முரசு முழங்கவும் சங்குஒலிப்பவும் மோகூர் பழையனின் நியாய சபையில் நாலூர்கோசர் ஆலமரத்தடியில் உள்ள பொது மன்றத்தில் உண்மை பேசுவது போல தலைவி தலைவனுடன கொண்ட நட்பானது முரசு முழங்க சங்கு ஒலிக்க மணம் செய்வதால் உண்மையானது என்று செவிலிக் கூற்றாக குறுந்தொகையில்

"நாலூர் கோசர் நன்மொழிபோல
வாயாகின்றே தோழி" (குறு15)

இடம்பெற்ற வரிகள் உணர்த்துகின்றன. உண்மையைப் பேசும் இயல்புடைய கோசர் நாலூரில் வாழ்பவர் என்பது புலனாகிறது. கோசர் என்பவர் மோகூர் பழையனின் நியாய சபையில் வீற்றிருக்கும் மறவர் என்ற வரலாயற்று கூறும் வெளிப்படுகிறது.

குறந்தொகையில் இடம் பெற்ற ஊர்களை ஆராயும் போது தங்களைப் புரந்த மன்னர்களின் வரலாறுகளை நன்றி உணர்வுடன் கூறுதல்.

தங்கள் காலத்தில் நிகழந்த, தங்கள் உள்ளத்தில் பதிந்த நிகழ்ச்சிகளைப் புனைதல்
தாங்கள் பிறந்த மண்ணின் பெருமையைப் நயம்பட விரித்தல்
தாங்கள் வாழும் நாட்டின் பெருமையை நயம்பட விரித்தல்
தாங்கள் கண்ட கேட்ட வாழ்ந்த உள்ளங் கவர்ந்த
வளமான ஊர்களை உவமித்துப் பாடுதல் என்ற முறையில்

புலவர்களை வரலாற்றுச் சான்றுகளைச் பதிவு செயதுள்ளனர் அக்கால மன்னர்களின் கொடை வீரம் பற்றியும் அறிய முடிகின்றது. அகப்பொருளிலும் புறக் கூறுகளை பொருத்தமாக கையாள முடியும் என்பதை மேற்குறித்த சான்றுகள் உணர்த்துகின்றன. குறந்தொகையில் குறிப்பிட பட்டுள்ள ஊர்கள், தலைவியின் எழிலுக்கு உவமையாகிறது. போர்க் களங்களின் ஆரவாரம் அலர் மொழிக்கு பொருத்தமாக அமைகிறது. வாயில் மறுக்கும் தோழியின் கூற்று பரத்தமைஒழுக்கத்தைக் கண்டிக்கும் பண்பாட்டுச் சிறப்பினை உணர்த்துகின்றது.

87. சிலம்பில் ஊர்ப் பெயர்கள்

பேரா. ஆ. பூபாலன்
தமிழ்த்துறைத் தலைவர்
ஸ்ரீ பாரதி மகளிர் கல்லூரி
குண்ணத்தூர், ஆரணி.

"திங்களோடும் செழும்பரிதி தன்னோடும் விண்ணோடும் உடுக்களோடும்
பொங்குகடல் இவற்றோடும் பிறந்த தமிழ்"

எனச் சிறந்தே பிறந்த மொழி நம் தமிழ் மொழி. இத்தமிழ் இலக்கியத்தில் ஐந்து பெரிய காப்பியங்கள் உள்ளன. அவை சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி மற்றும் குண்டலகேசி என்பனவாகும். இவற்றுள் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியன இரட்டைக்காப்பியங்கள் ஆகும். சிலப்பதிகாரத்தின் தொடர்ச்சியாக மணிமேகலை அமைகிறது எனலாம். சிலப்பதிகாரம் என்னும் காப்பியம் பாரதநாடு முழுமையும் தொடர்பு கொள்ளும் அரிய சிறந்த காப்பியமாகத் திகழ்கிறது. அதாவது குமரி முதல் இமயம் வரை அனைத்து பகுதிகளையும் கூறுகிறது.

இக்காப்பியத்தில் சேர, சோழ, பாண்டிய மன்னர்களான மூவேந்தர்களைப் பற்றிய செய்திகளோடு மற்றும் கொங்கர், மாளுவ வேந்தர், கலிங்கர், நூற்றுவர், கன்னர் மற்றும் கனகவிசயர் ஆகிய மன்னர்களையும் குறிப்பிட்டுள்ளது.

பாரதத்தின் வட எல்லையாக அமைந்துள்ள இமய மலையிலிருந்து கனக விசயர் தலைமுடியில் கல் சுமக்க செய்து கொண்டுவந்து சேர நாட்டில் உள்ள திருச்செங்குன்றத்தில் கண்ணகிக்குச் சிலை அமைத்து வழிபாடு செய்த முறையானது, சமுதாய இணக்கத்திற்கும் ஒருமை உணர்வுக்கும் சான்றாகக் கூறலாம்.

இக்காப்பியம் மூன்று காண்டங்களைக் கொண்டுள்ளது, அவை,

1. *புகார்க்காண்டம்*
2. *மதுரைக்காண்டம்*
3. *வஞ்சிக்காண்டம்*

போன்றனவாகும். இம்மூன்று காண்டங்களும் சேர, சோழ, பாண்டிய நாட்டின் தலை நகரங்களின் பெயர்களைக் குறிக்கின்றது.

இந்நகரங்களின் சுற்றுப்புற ஊர்களின் பெயர்களையும் இக்காப்பியம் தெளிவாகக் கூறுகின்றது.

புகார் என்று சொல்லப்பெறும் காவிரிப் பூம்பட்டினம் காவிரி ஆறு கடலோடு சேருமிடமாகும். காவிரி ஆறு கடலில் புகுவதால் காவிரிப் பூம்பட்டினம் எனப் பெயர் பெற்றது. கடற்கரையை ஒட்டிய பகுதிகளை பட்டினம் மற்றும் பாக்கம் எனக்கூறுவது தமிழ் இலக்கியங்களில் காணமுடிகிறது. இப்புகார் நகருக்குப் பல சிறப்புகள் உண்டு.

ஆங்கு,
"பொதியில் ஆயினும், இமயம் ஆயினும்,
பதிஎழு அறியாப் பழங்குடி கெழீஇய
பொது அறு சிறப்பின் புகாரே, ஆயினும்
நடுக்கு இன்றி நிலை இய என்பது அல்லதை
ஒடுக்கம் கூறார் உயர்ந்தோர், உண்மையின்
முடித்த கேள்வி முழு உணர்ந்தோரே,
அதனால்
நாக நீள் நகரொடு நாக நாடு அதனொடு
போக நீள் புகழ் மன்னும் புகார் நகர்"

இத்தகைய சிறப்பு பெற்ற புகார் நகரில் உள்ளவர்கள் மிகவும் பெருமைக்குரியவர்கள். அந்நகர மக்கள் அகத்திய முனிவர் வாழும் பொதிய மலையாக இருந்தாலும், அல்லது சிவபெருமான் விளங்கும் இமயமலையேயாயினும் புகார் நகரத்திலிருந்து ஆங்குச் சென்று வாழ வேண்டும் என்று நினைக்க மாட்டார்கள்.

இவர்கள் தொன்மை விளங்கும் பழமையான குடிமக்களாய்ப் பரம்பரையாக இருப்பவர்கள். இப்புகார் நகரத்தின் சிறப்பு எவற்றாலும் குறைபடாது. நடுநிலைமையில் பிறழாத தன்மை உடைய மக்கள் சிறந்து விளங்குவதையும் உயர்ந்து விளங்கும் சான்றோர்களாகவும், கேள்விச்செல்வம் மிகுந்தவர்களாகவும், நன்கு கற்றுணர்ந்தவர்களாகவும் திகழ்ந்தார்கள். இப்படி பல சிறப்பு பெற்று விளங்கியது புகார் நகரம். புகார் நகருக்கு பக்கத்தே மருவூர்ப்பாக்கம், பட்டினப்பாக்கம் என்னும்

இரு பகுதிகளைக் கொண்டது. மருவூர்ப்பாக்கத்தில் யவனர்கள் இருப்பிடமாகவும் வண்ணம், சுண்ணம், சந்தனம் முதலியன விற்பவர்களும் பட்டு, நவமணிகள், பொன்மணிகள் முதலியன விற்பனை செய்யும் வீதிகளாகும். தச்சர், கொல்லர், பொற்கொல்லர் முதலியோரும் ஏழிசைகளைக் குற்றம் இல்லாது பாடும் பாணர்களும் எனப் பலரும் இருந்தனர்.

பட்டினப்பாக்கத்தில் அரசர் வீதியும், தேர் செல்லும் வீதியும் மற்றும் அந்தணர்கள், வணிகர்கள், சோதிடர்கள், மருத்துவர்கள் மற்றும் கணிகையர்கள் என முதலானோர்கள் வீதிகளும் இருந்தன. இவ்விருப்பாக்கங்களுக்கும் இடையில் நாளங்காடி உள்ளது. இங்கு வெள்ளிடைமன்றம், இலஞ்சி மன்றம், நெடுங்கல் மன்றம், பூதச்சதுக்கம், பாவைமன்றம் என்னும் ஐவகை மன்றங்கள் இருந்தன.

இப்புகார் நகரில் வச்சிரக்கோட்டம் என்னும் கோவில் உள்ளது. இக்கோவிலில் திருவிழா எடுப்பதற்கு முன்னர் கொடியேற்றம் நிகழும். இத்திருவிழா இருபத்தெட்டு நாட்கள் நடைபெறும்.

கோவலன், கண்ணகி, கவுந்தியடிகள் மூவரும் சமணப்பள்ளியிலிருந்து செல்லும் போது நீர்ப் பெருக ஓடும் காவிரித் தாய் கருணை உடையவளாய் உழவர்களைத் தம் மக்களாகக் கருதி நீர் வளத்தைப் பெருகச் செய்து உழவர் பெருங்குடி மக்களையும், அவர்களைப் பேணிக்காக்கவும் மன்னர்களையும் சிறப்பு மிக்க பல ஊர்களையும் கடந்து மதுரையை நோக்கி சென்றார்கள். இவ்வாறு மதுரையை நோக்கிச் சென்றவர்கள் பல நாள் கழித்து காவிரியாற்றை மறைப்பது போன்று விளங்கும் திருவரங்கத்தைச் சென்றடைந்தார்கள்

"ஆற்று வீ அரங்கத்து வீற்று வீற்றாகிக்
குரங்கு அமை யுடுத்த மரம்பயில் அடுக்கத்து
வானவர் உறையும் பூநாறு ஒருசிறைப்
பட்டினப்பாக்கம் விட்டனர் நீங்காப்
பெரும் பெயர் ஐயர் ஒருங்குடன் இட்ட,"

என இளங்கோவடிகள் மூவரும் திருவரங்கத்தை அடைந்ததாகக் கூறியுள்ளார்.
திருவரங்கத்திலிருந்து பல நாட்கள் நடந்து சென்று பின்னர் அருந்தவப்பெரும் சிறப்புடைய கவுந்தியடிகளும், கண்ணகி, கோவலன் ஆகிய மூவரும் உறையூரைச் சென்றடைந்தார்கள். இவ்வூரில் முன்பொரு காலத்தில் யானையும், கோழியும் சண்டை போட்டுக் கொண்டதால் இவ்வூரை கோழியூர் என்றும் வழங்குவர்.

மதுரை

உறையூரை அடைந்த மூவரும் மறுநாள் விடியற்காலையில் புறப்பட்டு தென்திசை நோக்கிச் சென்றார்கள். அவ்வழியில் ஒரு சோலையில் மூவரும் தங்கினர். அங்கு பாண்டிய மன்னனை புகழ்ந்து வாழ்த்திய அந்தணன் ஒருவனை நோக்கி உன்னுடைய ஊர் எது? இங்க வரக் காரணம் யாது எனக் கோவலன் கேட்டான். நான் "திருவரங்கத்தில்" பள்ளி கொண்டுள்ள திருமாலின் திரு வண்ணத்தையும், திருவேங்டத்தில் அருள்புரியும் ஏழுமலையானின் எழில் வண்ணத்தையும் காணும் விருப்பத்தில் வந்தேன். என் ஊர் குடகுமலைக்கு அருகில் "மாங்காடு" எனக் கூறினான். அங்கிருந்து கொடும்பாளூர், நெடுங்குளம் ஆகிய ஊர்களைக் கடந்து நடந்து சென்றனர். புறஞ்சேரி இறுத்த காதையில் கோவலனிடம் கோசிகமாணி என்ற அந்தணப் பிரம்மச்சாரி அவனிடம் உன்னைப் பிரிந்த புகார் நகர மக்கள் இராமனைப் பிரிந்த "அயோத்தி" நகர் மக்கள் போல வருத்தமடைந்தனர் என்று புகார் நகரை அயோத்தி நகருக்கு ஒப்பாகக் கூறப்பட்டுள்ளது.

மதுரையின் சிறப்பு

மூடு வண்டி, இரண்டு சக்கரங்களை உடைய வண்டிகள், தேரின் தாமரைத் தட்டு, உடல் கவசம், மணிகள் பதித்த அங்குசம், தோளால் செய்த தாளம், அரைப்பட்டிகை வளைதடி, வெண்சாமரம், சித்திரச்சீலை, காய குத்துக்கோல் செம்பு, வெண்கலம் முதலியவற்றால் ஆன பொருட்கள் கயிற்றால் பின்னப்பட்டவை, கருக்கு அரிவாள், தந்தத்தால் செய்யப்பட்ட பொருள், வாசனைப்புகை, வண்ணச்சாந்து எனப் பல பொருள்கள் கடை வீதியில் விளங்கின. மதுரைக் காண்டத்தின் இறுதிக்காதையான கட்டுரைக் காதையில் கலிங்க நாடு பற்றியும் அதில் உள்ள சிங்கபுரம், கபிலபுரம் என்னும் இரு நகரங்கள் பற்றிய,

"கடிபொழில் உடுத்த கலிங்கநன் னாட்டு
வடிவேல் தடக்கை வசுவும், குமரனும்
தீம்புனல் பழனச் சிங்க புரத்திலும்
காம்பு எழு கானக் கபிலபுரத்திலும்
அரைசாள்செல்வத்து நிரைதார் வேந்தர்"

குறிப்புகளைக் காணலாம்.

வஞ்சி

குன்றக்குரவை என்னும் காதையில் முருகன் அருளிய இடங்களான திருச்செந்தூர், திருச்செங்கோடு, வெண்குன்றம், திருஏரகம் என்னும் ஊர்களையும் முருகனையும் புகழ்ந்து பாடினர்.

கடல் நீரை எல்லையாக உடைய கடல் நடுவே இருந்த கடம்ப மரத்தை அழித்தும், இமய மலையில் வில் சின்னத்தை பொறித்த சேரன் செங்குட்டுவன் வஞ்சி மாநகரைத் தலைமை இடமாகக் கொண்டு ஆட்சி செய்து வந்தான்.

கால் கோல் காதையில் சேரன் வாழ்க என வாழ்த்த வரும் போது திருவனந்தபுரத்தில் பள்ளி கொண்டுள்ள அனந்த பத்மநாத சாமி கோயில் பிரசாதங்களைக் கொண்டு வந்து கொடுத்தனர் எனக் குறிப்பிட்டுள்ளது. சேரன் செங்குட்டுவன் வட நாட்டின் மீது படையெடுத்து செல்லும் போது "நீலகிரி" மலையின் பக்கத்தில் தங்கினான் எனக் குறிப்பு உள்ளது.

வஞ்சி மாநகரை பொன் விளங்கும் புதுமை நகர் என்று குறிப்பிடுவர். இவ்வஞ்சி நகருக்கு அருகே நான்கு வேதங்களையும் அறிந்த அந்தணர்கள் வாழும் "பறையூர்" என்னும் ஊர் உள்ளது எனக் குறிப்பிட்டுள்ளனர்.

சேரன் செங்குட்டுவன் படையெடுத்து சென்ற இமயமலையின் அருகே "குயிலாலுவம்" என்னும் ஊர் உள்ளது என்றும் அங்கு இடப்பக்கத்தில் உமா தேவியைக் கொண்டுள்ள சிவ பெருமான் காட்சியளிக்கிறார் என்று குறிப்பு உள்ளது.

நடுகற் காதையில்,

.... குறையாக் கேள்வி,
மாடலன் எழுத்து, மன்னவர் மன்னே!
வாழ்க! நின் கொற்றம் வாழ்க! என்று ஏத்திக்
"கறிவளர் சிலம்பில் துஞ்சும் யானையின்
சிறுகுரல் நெய்தல் வியலூர் எறிந்தபின்,"

என நெய்தல் பூக்கள் நிறைந்த வயலூரை அழித்து வெற்றி கொண்டவனே, ஆத்திமாலை சூடிய ஒன்பது சோழ வேந்தர்களை "நேரிவாயில்" என்னும் ஊரில் வெற்றிக் கொண்டவனே, மற்றும் தேர்ப்படை கொண்டு "இடும்பில்" என்னும் ஊர்புறத்தில் தங்கிப் பெரும் போர் நிகழ்த்தி நின்னை எதிர்த்த பகைவர்களை வெற்றிக் கொண்டவனே.

ஆயர் குலத்தில் கண்ணகிக்குச் செவிலித்தாயான மாதரி திருமாலை வணங்கிக் குரவைப் பாடல்களால் பாடப்பெற்றமையால் இப்பிறவியில் திருவனந்தபுரத்தில் பள்ளி கொண்டுள்ள அனந்த பத்மநாபப் பெருமாளுக்குத் திருத் தொண்டு புரியும் அன்பர் ஒருவர் குடும்பத்தில் பிறவி எடுத்தார் எனக் குறிப்பிட்டுள்ளது.

சிலப்பதிகாரத்தில் ஊர்ப் பெயர்கள் என்று பார்க்கும் போது புகார் காண்டத்தில் புகார் நகரம் மற்றும் பட்டினப்பாக்கம் மற்றும் மருவூர்ப்பாக்கம் என்ற பகுதிகளையும் கூறியுள்ளனர். அதன் பிறகு கண்ணகி, கோவலன், கவுந்தியடிகள் ஆகிய மூவரும் திருவரங்கம் வழியாக உறையூரை அடையும் செய்தியைக் காண முடிகிறது.

மதுரைக் காண்டத்தில் குடகுமலை, மாங்காடு, திருவரங்கம், திருவேங்கடம், கொடும்பாளூர், நெடுங்குளம் ஆகிய ஊர்கள் மட்டுமின்றி அயோத்தி நகரையும் குறிப்பிட்டுள்ளனர். இறுதியாக சிங்கபுரம், கபிலபுரம் என்ற இரு நகர்களையும் கூறியுள்ளனர்.

வஞ்சிக் காண்டத்தில் முருகனின் திருச்செந்தூர், திருச்செங்கோடு, வெண்குன்றம், திருஏரகம் என்னும் ஊர்களையும் திருவனந்தபுரம், நீலகிரி போன்ற நகரங்களையும் வஞ்சிநகர்க்கு அருகில் உள்ள பறையூரையும் குறிப்பிட்டுள்ளார் மற்றும் வயலூர், நேரிவாயில், இடும்பில் எனும் ஊர்களையும் குறிப்பிட்டுள்ளார், அதாவது சிலப்பதிகாரத்தில் ஊர்ப் பெயர்கள் என்று பார்க்கும் போது தெற்கே குமரி முதல் வடக்கே இமயம் வரையும் மூவேந்தர் நகரங்களையும் சிறப்பாக கூறியுள்ளார்.

88. திருமங்கையாழ்வார் பாசுரங்களில் ஊர்ப்பெயர்கள்

முனைவர்.பா.பொன்னி
உதவிப் பேராசிரியர்
எஸ்.எஃப்.ஆர்.மகளிர் கல்லூரி, சிவகாசி

இலக்கியங்கள் தாம் தோன்றிய காலச்சூழலையும் சமூகச் சூழலையும் பிரதிபலிப்பதாக அமைகின்றன. அந்நிலையில் அவை மக்களின் வாழ்க்கை முறை அவர்கள் வாழ்கின்ற பகுதிக்கு ஏற்றவாறு எந்நிலையில் அமைகின்றன என்பதனையும் சுட்டிச் செல்கின்றன.குறிப்பிட்ட பகுதியினைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது அவ்வூர் தொடர்பான செய்திகளையும் நாம் அறிந்து கொள்ள இயலுகிறது.அவ்வாறு இலக்கியங்கள் குறிப்பிடுகின்ற ஊர்களின் பெயர்கள் எண்ணற்றவை.அவற்றுள் நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில் திருமங்கையாழ்வார் குறிப்பிட்டுள்ள ஊர்களின் பெயர்களையும் அப்பெயர்களுக்கானக் காரணங்களையும் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

திருமங்கையாழ்வார்:

திருமங்கையாழ்வார் திவ்வியப் பிரபந்தம் பாடிய வைணவ ஆழ்வார்களுள் ஒருவர். இவரது இயற்பெயர் கலியன் என்பதாகும். இவன் பரகாலன் என்றும் குறிக்கப் பெறுகிறார். தஞ்சைமாவட்டச் சீர்காழி வட்டத்திலுள்ள திருக்குறையலூரைச் சார்ந்தவர் இவர். சோழர் ஆட்சியின் கீழ்க் குறுநில மன்னராக ஆலிநாடு (திருவாலித் திருநகர்) என்பதனை இவர் ஆண்டு வந்தார். அதன் தலைநகரம் திருமங்கை என்னும் ஊராக இருத்தல் வேண்டும். இந்த ஊர் சீர்காழியின் அருகில் இருந்திருக்க வேண்டும். ஆனால் இப்போது எங்குள்ளதெனக் கண்டுபிடிக்க முடியவில்லை. திருமங்கையைத் தலைநகராகக் கொண்டு திருவாலி நாட்டை ஆண்டதால் திருமங்கை மன்னன் என்றும், பின்னர்த் திருமாலின் திருக்குணங்களில் இவர் ஆழங்காற்பட்டதால் திருமங்கையாழ்வார் என்றும் பெயர் பெற்றார். இவருக்கு நாலுகவிப் பெருமாள் என்ற சிறப்புப் பெயரும் உண்டு. போரிலும் புகழிலும் வெறி கொண்டிருந்த திருமங்கை மன்னனைத் திருமங்கை ஆழ்வாராக நெறி நிறுத்திய பெருமை இவர் தம் மனைவி குமுதவல்லிக்கு உரியது ஆகும். திவ்வியப் பிரபந்தத்தில் இடம் பெறும் நாலாயிரத்துள் 1361 பாசுரங்கள் பாடிய பெருமை இவர்க்கே உரியது. திருமொழி, திருவெழு கூற்றிருக்கை, சிறிய திருமால், பெரிய திருமடல், திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம் என்னும் இவர் தம் ஆறுநூல்கள் திவ்வியப் பிரபந்தத்தில் இடம் பெற்றுள்ளன.

பதரிகாசிரமம் உள்ளிட்ட வடநாட்டுத் திருப்பதிகம் தொடங்கித் தென்னெல்லை இறுதி வரையில் உள்ள 108 திவ்விய தேசங்களுள் என்பத்தாறினைப் பாடிய பெருமை இவர்க்கே உரிய சிறப்பு ஆகும்.

திருவழுந்தூர் :

சோழ நாட்டு வைணவத் திருத்தலங்கள் நாற்பதனுள் இதுவும் ஒன்று. இப்போது இவ்வூர் தேரழுந்தூர் என வழங்கப்படுகிறது. திருமயிலாடுதுறை நகருக்குப் பக்கத்தில் இவ்வூர் உள்ளது.

கவிச் சக்கரவர்த்தி கம்பன் பிறந்த ஊர் இது. கோபுரத்தினது உச்சியின் உட்புறம் கம்பனும் அவர் மனைவியும் சிலை வடிவில் நிற்கின்றனர். எதிரில் தெளிந்த நீரையுடைய பெரிய தடாகம் உள்ளது. தென் மேற்கே 1 கி.மீ தொலைவில் கம்பன் மேடு என்ற இடம் உள்ளது. இங்கு தான் கம்பர் வளர்ந்து வாழ்ந்ததாகக் கூறப்படுகிறது.

தேரழுந்தூர் என்ற பெயருக்கு ஒரு புராண நிகழ்ச்சி காரணமாகச் சொல்லப்படுகிறது.

தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் ஒரு காலத்தில் வாக்குவாதம் நடந்தது. அதனைக் கவனித்து நடுநிலை தவறாமல் தீர்ப்பு சொல்வதற்காக உபரிசரவக என்ற பெயருடைய அரசன் அழைக்கப்பட்டிருந்தான். அவன் தன் தவ வன்மையால் ஆகாயத்தில் தேர் செலுத்தும் ஆற்றல் பெற்றவன். அவனுடைய தீர்ப்பு முனிவர்களுக்குப் பாதகமாக இருந்ததால் அவர்கள் அரசனைச் சபித்தனர். முனிவர்களின் சாபத்தால் ஆகாயத்தில் சென்ற அரசன் தேர் பூமியில் இறங்கி அழுந்தியது. அழுந்திய இடம் இந்த ஊராதலின் இவ்வூர் தேரழுந்தூர் (திரு அழுந்தூர்) எனப் பெயர் பெற்றது.

அந்தி மூன்றும் அனலோம்பும்
அணியார் வீதி அழுந்தூரே (பெரிய திருமொழி 7-5:1)

என்ற பாடலடிகளில் அவ்வூரினைக் குறிப்பிடுவதனை அறியமுடிகிறது.

திருவாலித் திருநகர் :

சோழநாட்டுத் திருப்பதிகள் நாற்பதினுள் ஒன்று. இதனைத் திருவாலித் திருநகர் என்றும் உரைப்பர். சீர்காழிக்கும் தென்கிழக்கே 91/2 கி.மீ தொலைவில் உள்ளது திருமங்கை ஆழ்வார் பிறந்த குறையலூர் இதன் அருகிலே உள்ளது. அவரது மனைவியார் குமத வல்லி வளர்ந்த இடமும் இதுவே ஆகும்.

திருநகர் என்ற ஊர் திருவாலியினின்றும் 5 கி.மீ. தொலைவில் உள்ளது. இதற்கு 1கி.மீ. தொலைவில் வேதராசபுரம் என்ற ஊர் உள்ளது. இங்கு தான் திருமங்கை அழ்வார் வேடு பறி செய்து பெருமானிடம் மந்திரப் பொருள் பெற்றார். அதற்குப்பின் தான் வாடினேன் வாடி என்று நாராயணா நாமம் பாடத் தொடங்கினார். வயலாளி மணவாளன் என்று பாடப்பட்ட பெருமாள், திருநகரியிலும் சிந்தனைக்கும் இனியாய் என்று பாடப்பட்ட பெருமாள், வேதராசபுரத்திலும் இருப்பதால் இம் மூன்றையும் ஒன்றாகக் கணக்கிடுவர் வைணவ சம்பிரதாயிகள்.

எம்பெருமானைத் திருமகள் ஆலிங்கனம் செய்து கொண்ட இடமாதலால் திருவாலி எனப் பெயர் பெற்றது. திருமாலும் திருமகளும் மணக்கோலமாகக் காட்சியளித்த இடம் இப்போது வேதராசபுரம் என்று கூறப்படும் ஊராகும். இப்போது மூன்றாக உள்ள ஊர்கள் திருமங்கையாழ்வார் வாழ்க்கை நிகழ்ச்சியில் ஒன்றாகக் காணப்படுவதால் திருவாலித் திருநகர் என்று சொல்வதே பொருத்தமாக உள்ளது.

அந்தளிர் அணியார் அசோகின் இளந்தளிர்கள்
கலந்து அவையெங்கும்
செந்தழல் புரையும் திருவாலி யம்மானே (பெரிய திருமொழி 3-5:1)

என்ற வரிகளில் இவ்வூரினைக் குறிப்பிட்டிருப்பதனைக் காணமுடிகிறது.

திருநின்றவூர் :

தொண்டை நாட்டு வைணவத் திருத்தலங்கள் இருபத்திரண்டினுள் ஒன்று. இத்தலம் சென்னைக்கும் திருவள்ளுருக்குமிடையே சென்னையிலிருந்து 31 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. இன்று திருவள்ளுர் எனப்படுகிறது. திருமாலுடன் ஊடல் கொண்ட திருமகள் அவனை விட்டு பிரிந்து வந்து இவ்விடத்தில் விரும்பி வாழ்ந்தமையால் திருநின்ற ஊர் எனப்பட்டது. வடமொழியில் இத்தலம் சீனிவாச சேத்திரம் எனப்படுகிறது. திருமங்கை ஆழ்வார் இத்தலத்து எம்பெருமானை இரண்டு பாசுரங்களால் பாடியுள்ளார். (பெரிய திருமொழி 2.5:2 7.10:5) மற்ற திவ்ய தேசங்களுக்குப் பத்துப் பத்தாக பாசுரம் பாடிய ஆழ்வார், தம் நாதனுக்கு மட்டும் இரண்டே பாசுரங்கள் பாடியிருக்கிறாரே! என்று திரு(பிராட்டி) திகைத்து நின்ற ஊர் ஆதலின் திருநின்றவூர் என்று பெயர் ஏற்பட்டது என்றும் கூறுவர்.

நீண்டவத்தைக் கருமுகிலை எம்மான் தன்னை
நின்றவூர் நித்திலத்தைத் தொத்தார் சோலை(பெரிய திருமொழி 2.5:2)
கூற்றினை குருமாமணிக்குன்றினை
நின்றவூர் நின்ற நித்திலத் தொத்தினை(பெரிய திருமொழி 7.10:5)

என்ற பாசுர அடிகளில் இதனைக் காணமுடிகிறது.

திருக்கோட்டியூர் :

பாண்டிய நாட்டில் சிவகங்கைச் சாலையில் திருப்புத்தூருக்கு அப்பால் 91/2 கி.மீ தொலைவில் உள்ளது.

இரணியன் மூவுலகையும் ஆண்ட காலத்தில் தேவர்கள் அவனை அழிப்பதற்குரிய வழியினைத் திரளாகக் (கோட்டியாக) கூடிச் சிந்தித்த இடமாதலின் இவ்வூருக்குக் கோகூஷ்டீபுரம் என்னும் வடமொழிப் பெயர் உண்டாயிற்று. அதுவே கோட்டியூர் எனத் தமிழில் வழங்குகின்றது.

பெரியாழ்வார் கண்ணன் பிறந்த ஆயர்பாடியாக இவ்வூரினைக் கருதிப்போற்றிய சிறப்பு இதற்கு உண்டு. மேலும் வைணவப் பெரியோர்களுள் ஒருவரான திருக்கோட்டியூர் நம்பி பிறந்தருளிய பெருமையும் இவ்வூரினைச் சாரும்.

திருமங்கையாழ்வார் இங்குப் பெருமான் தன்பால் சார்ந்தார்க்குத் தன்னை உடைமையாக்கிக் கொண்டு எழுந்தருளியுள்ள நிலையை எங்கள் என்னும் திருமொழியிலும் சிறப்பாகப் பாடியுள்ளார்.

பொங்குதண் அருவி புதம் செய்யப்
பொன்களே சிதறும் இலங்கொளி
செங்கமலம் மலரும் திருக்கோட்டியூரானே (பெரிய திருமொழி 9.10:1)
என்ற பாசுர அடிகளில் இதனைக் காணமுடிகிறது.

திருக்கடிகை :

சென்னைக்கு வடமேற்கே ஏழத்தாழ 72கி.மீ. தொலைவில் உள்ள வைணவத் தலம் திருக்கடிகை. இது கடிகாலம் என்றும் சோளசிங்கபுரம் என்றும் வழங்கப்படுகிறது. கடிகா என்ற வடமொழிச் சொல் நாழிகை என்று பொருள்படும். இவ்வூரில் ஒருவர் ஒரு நாழிகை காலம் தங்கியிருந்தாலே அவருக்கு முத்தி சித்திக்கும் என்பது பற்றிக் கடிகாசலம் என்ற பெயர் இவ்வூருக்கு அமைந்தது என்பர்.

திருமங்கையாழ்வார் "தக்கானைக் கடிகைத் தடங்குன்றின் மிகையிருந்த அக்காரக்கனியை அடைந்துய்ந்து போனேன்" என்றார். தக்கான் - தகவுடையவன் அதாவது மிகவும் கிருபை புரியுமவன். இத்தலத்து எம்பெருமானை அக்காரக்கனி என்கிறார் ஆழ்வார். அக்காரம் என்று கருப்பஞ் சாற்றுக்குப்பெயர். அதனைச் செடியின் நிலையில் வைத்து அதில் ஒரு கனி தோன்றினால் அது எவ்வளவு இனிமையாயிருக்குமோ அவ்வளவு இனிமையானவன் இத்தலத்து எம்பெருமான் என்று கூற வந்த ஆழ்வார் 'அக்காரக்கனி' என்றார்.

மிக்கானை மறையாய் விரித்த விளக்கை என்னுள்
புக்கானை புகழ்சேர் பொலிகின்ற பொன்மலையை
தக்கானைக் கடிகைத் தடங்குன்றின் மிசையிருந்த
அக்காரக் கனியை அடைந்துய்ந்து போனேனே. (பெரியதிருமொழி 7.10:5)
என்ற பாசுர அடிகளில் இதனைக் காணமுடிகிறது.

திருவரிமேய விண்ணகரம் :

வைணவத் திருத்தலங்கள் சோழநாட்டில் நாற்பது இருக்கின்றன. அவற்றுள் ஒன்று இதுவாகும். சீர்காழிக்குக் கிழக்கே 8கி.மீ. தொலைவில் உள்ளது இவ்வூர். திருமங்கை ஆழ்வாரால் பாடப்பெற்ற கோயில் இவ்வூரில் உள்ளது. விண்ணகரம் என்பது பெருமாள் கோயிலுக்கு இடப்பட்ட ஒரு சிறப்புப் பெயராகும். வைகுந்த விண்ணகரம், சீராம விண்ணகரம், நந்திபுர விண்ணகரம் என்ற பெயர்கள் இக்கருத்தினை வலியுறுத்தும்.

அரி என்பதற்குத் திருமால் என்றும் பொருள் உண்டு. சிங்கம் என்றும் பொருள் உண்டு. திருமால் நரசிங்க வடிவமாக வந்து இரணியனை ஒழித்ததைத் திருமங்கை ஆழ்வார் இத்தலத்துப் பதிகத்துள் சிறப்பித்துப் பாடுகின்றார். அதனால் அரிமேய விண்ணகரம் என்ற பெயர் வந்திருக்கலாம் என்பர்.

ஓடாத வாளரியின் உருவமது கொண்டு அன்று
உலப்பில் மிகு பெருவரத்த இரணியனைப் பற்றி
வாடாத வள்ளுகிரால் பிளந்து அவன் தன் மகனுக்கு
அருள் செய்தான் வாழும் இடம் ...
ஆடேறு வயலாலைப் புகைகமழும் நாங்கூர்
அரிமேய விண்ணகரம் (பெரிய திருமொழி 3-10:4)
என்பது பெரிய திருமொழிப் பாசுரப் பகுதி.இவற்றின் வாயிலாகத் திருமங்கையாழ்வார் பாடிய பாசுரங்களில் அமைந்துள்ள ஊர்ப் பெயர்களின் சிறப்புகளை அறிய முடிகிறது.

89. திருக்குற்றாலத் தலபுராணத்தில் ஊர்ப்பெயர்

மு.மகேஸ்வரி,
ஊதவிப் பேராசிரியர், தமிழியற்புலம்
ஸ்ரீபராசக்தி மகளிர் கல்லூரி,
குற்றாலம்.

"வம்பார் குன்றம் நீடுயர் சாரல் வளர்வேங்கைக்
கொம்பார் சோலைக் கோலவண் டியாழ்செய் குற்றாலம்
அம்பானெய்யோ டாடலமர்ந்தான் அலர்கொன்றை
நம்பான் மேய நன்னகர் போலும் நமரங்காள்"
(திருக்குற்றாலப் பதிகம் : பாடல்–1)

என்று திருஞானசம்பந்தரால் பாடப்பெற்ற தலம் திருக்குற்றாலம். பாண்டி நாட்டுத் தேவாரத் திருப்பதிகங்கள் பதிநான்கனுள் சிறந்து விளங்கும் ஊர் திருக்குற்றாலம். இத்தலம் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூவகையாலும் சிறந்து விளங்கும் திருத்தலம். இவ்வளவு சிறப்புக்களையும் ஒருங்கே பெற்று விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

திருக்குற்றாலம்

குற்றாலம் என்ற பெயரை குறு + ஆலம் எனப் பிரிப்பர். இதற்கு சிறிய ஆலமரம் எனப் பொருள் கூறி அம்மரத்தை அடிப்படையாகக் கொண்டு இவ்வூர்ப் பெயர் அமைந்தது என்று கூறுவர். கல்லாலின் புடையமர்ந்து நால்வர்க்கு உபதேசித்த வள்ளல் சிவபெருமான் வீற்றிருந்த கல் ஆலமே குறு ஆலம் ஆகும். இக்குறு ஆலமரங்கள் நிறைந்த மலையாதலால் இஃது குற்றாலம் ஆயிற்று என்பர். 'ஆலம்' என்பதற்கு 'குளிர்ந்த நீர்' என்ற பொருளும் உண்டு. குன்றிலிருந்து விழும் ஆலமே குன்று ஆலம் எனக் கொண்டு 'ன்' 'ற்' றாக மாறி குற்றாலம் ஆயிற்று எனலாம்.

'கு' என்பது பூமி அல்லது பிறவிப்பிணி என்றும், 'தாலம்' என்பது தீர்ப்பது என்றும், கு + தாலம் குத்தாலமென்றும், குற்றாலமெனத் திரிந்து பிறவிப் பிணியைத் தீர்க்கும் தலம் என்றும் பொருள் கொள்வர் ஒரு சாரார்.

குற்றாலம் என்பதற்கு,

"ஆனி முதல் புரட்டாசி வரையுள்ள மாதங்களில் விதைக்கப் பெற்று ஐந்து மாதங்களில் ஒரு வகை நெல், திருநெல்வேலி ஜில்லாவில் உள்ள சுகவாசஸ்தலமும், திருப்பதியும்" (மதுரைத் தமிழ்ப் பேரகராதி–பக்.கூ.கூ.கூ.) என மதுரைத் தமிழ்ப்பேரகராதி விளக்கம் தருகிறது.

"தென்பாண்டி நாட்டில் அழகும், அருளும் வாய்ந்த ஊர் திருக்குற்றாலம். காவிரித் துருத்தி என்று தேவாரத்திலும், வீங்கு நீர்த்துருத்தி என்று சாசனங்களிலும் வழங்கப் பெற்ற அவ்வூர் பிற்காலத்தில் குலோத்துங்க சோழன் குற்றாலம் என்று பெயர் பெற்றது. இப்பொழுது குற்றாலம் என்பதே அதன் பெயராக வழங்குகின்றது"
(ரா.பி.சேதுப்பிள்ளை – ஊரும் பேரும், பக்.104)
என்று ரா.பி.சேதுப்பிள்ளை தன் நூலில் குறிப்பிடுகிறார்.

பாண்டியர்க்குப் பெருமை சேர்ந்த நகர்கள் பதினான்கு. அவற்றுள் ஒன்று திருக்குற்றாலம் என்பது பெருமைக்குரியது. பாண்டியர்கள் தம் பெயர்களோடு இணைத்துக் கொண்ட நகர்கள் ஐந்து. அவற்றுள் ஒன்று பொதிகை 'பொதிகை வெற்பன்', 'பொதிகைப் பொருப்பன்' என முறையே சூடாமணி நிகண்டும், திவாகர நிகண்டும் சிறப்பித்துக் கூறுவதைக் காண முடிகிறது.

பொதிகைமலை அடிவாரத்தில் மிகப் பொலிவுடன் அமைந்துள்ள திருக்குற்றாலத்தின் திருப்பெயர்களோ இருபத்து ஒன்று. அவற்றுள் 13 பெயர்கள் புராணத்தை அடியொற்றியும், எஞ்சிய எட்டுப் பெயர்கள் இயற்கையை அடியொற்றியும், அமைக்கப்பட்ட பெயர்களாகும். இத்தனை பெயர்கள் இருந்தாலும் மக்கள் மத்தியில் நிலை பெற்றது திருக்குற்றாலம் என்னும் பெயரே ஆகும்.

திரிகூடபுரம்

திருக்குற்றாலத்திற்கு மற்றொரு சிறப்புப் பெயர் திரிகூடபுரம். மூன்று மலைகள் இணைந்த அமைப்பினை அடிப்படையாகக் கொண்டு திரிகூடபுரம் என அழைக்கப்பட்டிருக்கலாம். இம்முக்கூட்டுமலை கைலாயத்திற்கு இணையானது என்றும் கூறுவர். மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் இங்கு சிறப்புற்றமையால் 'திரிகூடம்' எனப் பெயர் பெற்றது என்னும் கூறுவர்.

> "பிதுர்கண்டஞ் தீர்த்தபுரஞ் சிவத்துரோ கந்தீர்த்த பெருமை மூதூர்
> மதுவுண்டா னுயிர்மீட்ட புறம்பவர்க்க மீட்டபுரம் வசந்தப் பேரூர்
> . . . .
> சேடபுரமெனவிருபத் தொருநாமம் பெற்றபதி திருக்குற்றாலம்"
> (திருக்குற்றாலத் தலபுராணம், பக். 43)

எனத் திருக்குற்றாலத்தின் இருபத்தொரு பெயர்களை, தலமகிமைச் சுருக்கம் 30, 31வது பாடல் நமக்கு எடுத்தியம்புகின்றது. அவை பின்வருமாறு.

1. பிதுர் கண்டநீர்த்தபுரம்
2. சிவத்துரோகம் தீர்த்த மூதூர்
3. மதுவுண்டான் உயிர் மீட்ட புரம்
4. பவர்க்கம் மீட்ட புரம்
5. வசந்தப் பேரூர்
6. முதுகங்கை வந்த புரம்
7. செண்பக ஆரணியபுரம்
8. முக்திவேலி
9. மாநகரம்
10. திருநகரம்
11. நன்னகரம்
12. ஞானப்பாக்கம்
13. வேடன் வலஞ்செய்தபுரம்
14. வேழம் பூசித்த புரம்
15. சக்தி பீட புரம்
16. மும்மூர்த்திபுரம்
17. பிரம்மபுரம்
18. முனிக்குருசிம் பேரூர்
19. தேவகூடபுரம்
20. புடார்ச்சுனபுரம்
21. குறும்பலா விசேடபுரம்.

குற்றாலத் தல புராணத்தில் திருக்குற்றாலத் தல மகிமைச் சுருக்கம் என்று தலப் பெருமைகளைக் கூறுவதற்கென்றே இருந்தாலும், கதைகளின் மூலம் பெருமைகள் உணர்த்தப்படும்பொழுது தான் மக்கள் மனதில் பதியும் என்ற நோக்கோடு கதைகளாகக் கூறப்படுகின்றன. இவ்வூர்ப் பெயர்களை 1) தலச்சிறப்பு 2) மூர்த்திச் சிறப்பு என்ற இரண்டு பொதுக்கூறுகளின் கீழ் வகைப்படுத்தலாம்.

I. தலச் சிறப்பால் பெற்ற பெயர்கள்

1) தேவர்கள் சிவத்துரோகம் அடைந்தது

இது, கந்த புராணக் கதையான தக்கன் வேள்வியோடு தொடர்புடையது. ஆனாலும், திருக்குற்றாலச் சிறப்பும், அத்தலத்திற்கு வந்து தவம் செய்து தேவர்கள் சிவத்துரோகம் நீங்கியதுமாக குறிப்பிடப்படுவதால் தலச் சிறப்பில் சேர்க்கப்பட்டது. அது போல தேவர்கள் சிவத்துரோகம் தீர்ந்த சருக்கமும் தலச் சிறப்புக்குரியதாகும். இச்சருக்கத்தில் சிவபெருமான் உறையும் 274 தலங்கள் குறிக்கப்படுகின்றன.

2) சிவத்துரோகம் தீர்த்த ஊர்

பிரமனின் மானசபுத்திரர்களில் ஒருவனான தக்கன் சிவமூர்த்தியை எண்ணித் தவஞ்செய்து உமையை மகளாகவும், சிவமூர்த்தியை மருமகனாகவும் பெற வரம் வேண்டிப் பெற்றான். உமாதேவிக்குத் தாட்சாயணி எனப் பெயரிட்டு வளர்த்துச் சிவபிரானுக்குத் திருமணம் செய்வித்தான். ஒரு நாள் தக்கன் தன் மகளைக் காண திருக்கைலைக்குச் சென்ற போது, பூதகணங்களால் தடுத்து நிறுத்தப்பட்டான். அதனால் சினமடைந்த தக்கன் விஷ்ணுவாதி தேவர்களை யாகத் தலைவராக்கி ஒரு வேள்வி செய்தான். அவ்வேள்வியில் கலந்து கொண்டதனால், தேவர்கள் செய்த சிவத்துரோகம், திருக்குற்றாலம் வந்து தவம் செய்ததால் நீங்கியது. எனவே திருக்குற்றாலத்திற்குச் சிவத்துரோகம் தீர்த்த ஊர் என்ற பெயரும் ஏற்பட்டது.

3) பவர்க்கம் மீட்ட புரம்

பவர்க்கம் என்றால் நரகம் என்பது பொருளாகும். நரகத்திலிருந்து மீட்டபுரம் என்பது பொருள். நரகம் செல்லும் பாவங்களைச் செய்தவர்கள் குற்றாலம் திருத்தலத்தைக் கைகுவித்து வணங்கினாலும், மிதித்தாலும், அவர்களைக் காக்கும் தலம் குற்றாலம்.

கவுற்சனன் என்பவன் தன் குலத்திற்குரிய நல்லொழுக்கத்தில் தவறி ஒருயெதன் காரணமாக நரகத்தை அடைந்தான். திருக்குற்றாலத்தின் மகிமையால் நரகத்திலிருந்து மீட்கப் பெற்றற செய்தியைத் தன்னகத்தே கொண்ட தலாமாக விளங்குவதால் பவர்க்கம் மீட்டபுரம் என்ற பெயர் பெற்றது. “இக்கதை சிவபெருமானால் வாசுகிக்கித் தலப் பெருமை உணர்த்தக் கூறப்பட்டது” என டாக்டர் குமார.பத்மநாபன் அவர்கள் குறிப்பிடுகிறார். (டாக்டர் குமார.பத்மநாபன்–திரிகூட ராயப்பக் கவிராயர் – ஓர் இலக்கிய நோக்கு – பக்.222)

II. மூர்த்திச் சிறப்பால் பெற்ற பெயர்

மூர்த்திச் சிறப்பு

மூர்த்தி விசேடச் சருக்கம், பராசக்தி பீடச் சருக்கம் குறும்பலாச் சருக்கம் ஆகிய மூன்றும் மூர்த்திச் சிறப்பை உணர்த்துகின்றன. திருக்குற்றாலத்தில் இறைவன் ஊழிக்காலத்தும் அழியாது வீற்றிருக்கிறான் என்பதாகச் சிறப்பிக்கப்படுகிறான். திரிகூட மூர்த்தியே மூர்த்திகளின் மூலமூர்த்தி எனச் சிறப்பிக்கப்படுவதோடு, இப்பகுதியில் மூர்த்தியை வழிபடுபவர் பாங்கும், அவர்கள் அடையும் பலனும் விரிந்துரைக்கப்படுகிறது. வழிபாட்டால் இறைவன் அருளைப் பெறலாம் என்பதும் வலியுறுத்தப்படுகிறது.

1) வேடன் வலம் வந்த புரம்

பொதிய மலைச்சாரலில் குடியிருந்த வில்வித்தையில் வல்ல ஒரு வேடன் மகன் வலன். அவன் தோற்றத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில், “பெரிய புராணத்தில் சேக்கிழார் கண்ணப்பரை வருணிக்கும் பாங்கில் அமைந்துள்ளது” என டாக்டர் பத்மநாபன் குறிப்பிடுகிறார்.

கொலைத் தொழிலின் வலிமையால் மலையில் பாம்பு போலத் திரிந்தான். இவன் ஒரு நாள் ஊன் பொருட்டு நரி ஒன்றைப் பிடிப்பதற்காக அதனைப் பின் தொடர்ந்தான் திரிகூடமலை, வட அருவி, சித்திராநதி ஆகியன சூழ்ந்த சங்க வீதியை வலஞ்சுற்றி நரியோட, அதன் பின் ஓடினான். இவ்வாறு வேடன் திருக்குற்றாலத்தை வலம் வந்த வேடனுக்கு நோக்கம் வேறாக இருந்தாலும், தலத்தை வலம் வந்ததால் சிவனருள் பெற்றான். இதனால் வேடன் வலம் வந்த புரம் எனப் பெயர் உண்டாகியது.

2) யானை பூசித்தபுரம்

மந்திரங்கள், தண்ணீர், மலர் முதலிய உபகரணங்கள் கொண்டு மன ஒருமையோடு பூசை செய்யும் முறை அறியமாட்டாத கொலைத் தொழிலையுடைய யானை திருக்குற்றாலநாதரை ஒரு நாள் வந்து வழிபட்டு நற்கதி பெற்ற வரலாற்றை தன்னகத்தேக் கொண்டதால், யானை பூசித்தபுரம் என்னும் பெயரைப் பெற்று விளங்கியது.

மேலே கூறிய ஊர்ப்பெயர் விளக்கம் தவிர வேறு சில விளக்கங்களும் இத்தலத்திற்குக் கூறப்படுகின்றன. பக்க வரையறை கருதி இவ்விளக்கம் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளது. குற்றாலத்திற்குரிய ஊர்ப் பெயர்களை 1) புராணப்பெயர்கள் 2) இயற்கைப் பெயர்கள் 3) அடைமொழிப் பெயர்கள் 4) குணப்பெயர்கள் என, நான்காகப் பிரிக்கலாம். இவற்றுள் புராணப் பெயர்கள் மிகுதியாக உள்ளன. இப்புராணப் பெயர்கள் திருக்குற்றாலத்தின் தலச் சிறப்பினை உணர்த்துவனவாகவும், ஒழுக்கத்தையும், அறத்தையும் போதிப்பனவாகவும் அமைந்துள்ளன.

இலக்கியப் பெயர்கள் 21 பெயர்கள் இருந்தாலும், மக்களால் வழங்கப்படுவதென்னவோ குற்றாலம் தான். இவ்வூர் அடைவார் பெறும் பயனைத் தலபுராணம் "எத்தலத்திலவர்புரிந்த பாதகமு மித்தலத்தி லெய்தத் தீரும்"
(தலமகிமைச் சருக்கம். பாடல் – 20)

"குற்றாலமென்றொருக்கா நினைப்பவர்க்கு பாவமொரு கோடி தீரும்."

என்று குற்றாலத் தலபுராணம் குறிப்பிடுகிறது. ஊர்ப்பெயர்கள் வரலாற்றை அறியத் துணை நிற்பதோடு, மக்களின் வாழ்க்கைக்கும் பயன்படும் ஒன்றாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

பயன்பட்ட நூல்கள்
1. தமிழ்ப்பேரகராதி – பக். கூகூகூ.
2. திருக்குற்றாலத்தலபுராணம் – சண்முக நயினார்.
3. திருக்குற்றாலதலவரலாறு – முனைவர் கஸ்தூரி நாகராஜன்.
4. சிற்றிலக்கியங்களில் மும்முனைப் போக்கு – முனைவர் நிர்மலாமோகன்.
5. திரிகூடராசப்பக்கவிராயர் ஓர் இலக்கிய நோக்கு –
டாக்டர்.குமார.பத்மநாபன்.

90. தமிழச்சியின் கவிதையில் மல்லாங்கிணறு

கா.வெ.மணிமேகலை,
முதல்வர்,
கிரசனட் பெண்கள் ஆசிரியர்
பயிற்சி நிறுவனம்,
மதுரை – 14

தமிழிலக்கிய உலகம் பரந்துபட்ட அண்டவெளிக்கு இணையானதென்றால் மிகையாகாது. தோண்ட தோண்ட இலக்கியங்களை அள்ளித்தரும் மகாசுரங்கம் அது. அப்படிப்பட்ட உலகில் அறிவுச்சுரங்கத்தில் அள்ளப்பட்ட பொன்னாக தனியொரு இடத்தை கவிதையுலகம் பெற்றுள்ளது. அன்று மரபுக் கவிதை முதல் நவீன கவிதை வரை அந்தந்தக் காலத்தை ஆட்சி செய்பவையாக இருந்து வருகின்றன. தற்காலத்தில் பின்நவீனக் கவிஞைகளில் முக்கியமான கவிஞர் தமிழச்சி. அவருடைய கவிதைகள் முழுவதும் அவர்தம் ஊர் மணம் வீசுவதைக் காண முடிகிறது. ஆவர் இலக்கியங்களில் அவ்வூர் ஆராய்ச்சி செய்வதே இதன் நோக்கமாகும்.

கவிஞை தமிழச்சி:

சுமதி என்ற இயற்பெயருடன் விருதுநகர் மாவட்ட **“மல்லாங்கிணறு”** என்ற கிராமத்தில் பிறந்தவர். ஆங்கில இலக்கியத்தில் முனைவர் பட்டம் பெற்று, நகரம் சார் வாழ்வு, ஆங்கில இலக்கியப் பயிற்றுவிக்கும் பணி எனத் தொடர்ந்த கவிஞையின் வாழ்வில், நீட்சியில், 2003 ஆம் ஆண்டு, **எஞ்சோட்டும் பெண்**, 2007ல் **வனப்பேச்சி**, 2009ல் **மஞ்சணத்தி** என அவர்தாம் சிந்தனைப் பிரசவிப்பு மூன்று கவிதைத் தொகுப்புக்கள். அம்மூன்றின் மூலமும் அவர்தம் மண்சார்ந்த காதல் அப்பட்டமாகிறது. அக்காதலின் தன்மையை அவரின் முதல் படைப்பான எஞ்சோட்டுப் பெண் மூலம் எடுத்தியம்பும் படலமே இக்கட்டுரை.

தமிழச்சியின் கவிதையில் ஊரும் பேரும்:

“ஊர்பேர் இல்வழி உள்ளம் என் செய்யும்? அ∴து எதனுடன் தொடர்பு கொள்ளும்? எக்கடனை ஆற்றும்? ஊரும் பேரும் இல்லையேல் உள்ளம் உறங்கியே போகும்” என்று ஊர்பேரால் தான் உலகம் இயங்கல் வெள்ளிடைமலை என்று ஆணித்தரமாக இயம்பியவர் இனிமைத் தென்றல் திரு.வி.க அவர்கள்.

இதனின் வெளிப்பாடு கவிஞையின் குரலாக அவர்தம் எஞ்சோட்டுப் பெண் கவிதைத் தொகுப்பில் மிளிர்கிறது. மண்கவிச்சை முத்தம் என்ற தன்குரலில் “எத்தனையோ முறை இடறி விழுந்தும், புரண்டு எழுந்தும் என் பிறந்த ஊரான மல்லாங்கிணற்றின் (ஒன்றுபட்ட இராமநாதபுர மாவட்ட) மண்ணை நான் முத்தமிட்டிருக்கிறேன். ஒழுகும் எச்சிலைப் புறங்கையால் துடைத்தபடி அந்தக் கிராமத்துப் புழுதி மண்ணில் புதிதாய் வைக்கப்பட்டிருக்கின்ற இம்முதல் தொகுப்பே, அம்மண்ணிற்காக என் முழுமையான, உள்ளார்ந்த எச்சில் துடைக்காத, மண் கவிச்சை முத்தம்” என்பதன் மூலம் ஊரும் பேரும் இல்லையேல் கவிஞையின் உள்ளம் உறங்கிப் போயிருக்கும் என்பது வெளிப்படை.

கரிசல் மணம் வீசும் எஞ்சோட்டுப்பெண்:

தமிழச்சியின் கவிதையுலக முதல் பிரவேசம் **“எஞ்சோட்டுப் பெண்ணே”**அதில் அவர் எவ்வூரை எம்மண்ணைச் சார்ந்தவர் என்பதைத் தம் கவிதை மூலம் தெளிவுபடுத்துவதில் பெருமை கொள்கிறார்.

நான்(என்கிற) காவிரி என்ற தலைப்பின்)கீழ்

> “எனதூர்க்
> கரிசல்மண்ணில் மல்லாந்து
> வட்டார மொழி சுழிக்க
> வடிவங்களின்
> முகம் தொலைத்து
> நதிநீராய்ப்
> புரண்டோட வேணுமெனக்கு
> இலக்கின்றி”(எஞ்சோட்டுப் பெண் - 22)

மதகிலிருந்துவிட்டு விடுதலையாகி, வீரியத்துடன் பாயும் நீரானது, தூரம் சென்று நதி நீராய், மென்மையாய் இலக்கின்றி பயணிக்கும் பாதையே கவிஞையின் கவிதைப் பயணம். அப்பயணத்தில் “அவர் படைப்பு அவரின் மண்மொழி, இளம் பிராயத்திலிருந்து இன்று வரை அவர்

சுவாசிக்கின்ற கவிச்சை மொழி வாசனைத் திரவியங்களின் பூச்சற்ற வியர்வையின் மணம் அந்தக் கிராமத்துக் கவிச்சைதான். திரவியங்களின் பாசாங்கற்ற இந்த வியர்வையின் மணம்தான் அவர் கவிதைகளுக்கான அடிப்படையும், உருமொழியும்" என அவரே அப்படைப்பிற்கான முகாந்திரமென ஒப்புதல் வாக்குமூலம் தந்துள்ளார்.

அக்கவிதைத் தலைப்பு எஞ்சோட்டுப் பெண்ணான தன்னோடு மல்லாங்கிணற்று மண்ணின் இளம்பிராயத்து முதல் தோழமை சிலம்பாயிக்கு அர்ப்பணமாக நட்டு வைத்த நடுகல்.

"இளம்பிராயம் எனும் வீட்டுக்காரன்
இருவரையும்
ஒரே கரிசல் மண்ணில்
கவனமுடன் பதியம் போட்டாலும்
பின்வந்த காலத் தோட்டக்காரனோ
பட்டணத்தில் படிப்பவளாய்
என்னையும்
பக்கத்து மேஸ்திரி மனைவியாய் உன்னையும்
பாகுபடுத்தி படரவிட....
நசுங்கிய குடமாய்
வருடந்தோறும் உருமாறி வந்த
எஞ்சோட்டுப் பெண்ணே
சிலம்பாயி....
பின்னிருந்து
நாலவது பிரசவத்தில்
நீ இறந்துவிட்டதாய்....."

(எஞ்சோட்டுப் பெண் - 20)

தமிழச்சியின் கவிதையின் பாடுபொருள் :

தொல்காப்பியர் அகத்திணையியலில் பொருள் பற்றிக் குறிப்பிடும் பொழுது

"முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே
நுவலுங் காலை முறை சிறந்தனவே
பாடலுட் பயின்றவை நாடுங் காலை"

(தொல்-பொருள் - 3)

என்பதன் படி தமிழச்சியின் கவிதைகளில் அவரின் நிலமும் நிலம் சார்ந்த இடமும், காலமும், கருப்பொருளான இடத்தினும், காலத்தினும் தோற்றும் பொருள்களான தேவர், மக்கள், விலங்கு முதலாயினவும் உணவு, செயல்களான, விழாக்கள், அவர்தம் பேச்சுமொழியும், மக்கட்குரிய பொருளான உரிப்பொருளும், பாடுபொருள்களாக கவிதையும், முக்கால்வாசி இடத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளன.

கரிசல் காட்டு வெண் பருத்தியான இக் கவிஞையின் முதற்படைப்பான எஞ்சோட்டுப் பெண்ணில் 58 கவிதைகளில் **"அப்பத்தா"** தொடங்கி **"கச்சம்மா பொங்கல்"** வரை ஏறத்தாழ 22 கவிதைகள் முழுமையான கிராமிய மண், பொழுதுகள், மக்கள், மக்களின் செயல்கள், உறவுகளான உரிப்பொருள்களை உள்ளடக்கியது.

நிலமும் நிலம் சார்ந்த இடமும் :

கரிசல் மண் பூமியான வறட்சியான வானம் பார்த்த பூமியில் மல்லாங்கிணறு என்ற கிராமத்தில் பிறந்த தமிழச்சி தன் ஊர் பெயரைச் சுட்டாமல் **"எனதூர்க் கரிசல் மண்ணில் மல்லாந்து"** எனத் தம் கவிதையில் சுட்டுகிறார்.

தன்னூர் நினைவு (நிலமும் நிலம் சார்ந்த இடமும்) :

நிலம் சார்ந்த கவிதைகளிலிருந்து சிலவற்றைக் கொள்வோம். **"தீப்பெட்டி பொன்வண்டு"** என்ற தலைப்பில்

"நகரத்தில் தொலைந்த என்னை
நடுஇரவு உறக்கத்தில்
சிரிக்க வைத்து
மீண்டும் கண்டெடுக்கும்
சிறுவயதில் நான் சேகரித்த
தீப்பெட்டிப் பொன்வண்டாய்
என்பிறந்த ஊர் நினைவு"

(எஞ்சோட்டுப் பெண் பக்கம் - 45)

மேலும் அவர் ஊரின் பகுதிகளான கம்மாக்கரை, செம்மண் புழுதி, ஊருணிக்கரை, வயக்காடு, ஊத்து மடை, கண்மாய் எனப் பலபல இடப் பெயர்களைச் சுட்டுகிறார்.அவர் பிறந்த ஊர் தவிர, அவர்தம் அப்பத்தா பிறந்த இளஞ்சமூர், செல்வனூர், சேத்தூர், முடியனூர், புளியம்பட்டி நரிப்பையூர் போன்ற ஊர்ப்பெயர்களைக் குறிப்பிட்டுள்ளார்.

பொழுதுகள்:

கவிஞர் தன் எஞ்சோட்டுப் பெண்ணில் கோடைக் காலம், கடுங்குளிா காலம், வசந்த காலம், இலையுதிர் காலம் என காலங்களையும், சிறு பொழுதுகளான மதியப் பொழுது, உச்சி வெயில், அந்தி நேரம், மாலை, நடுச்சாமம், நடுமதியம், அதிகாலை எனச் சுட்டியுள்ளார்கள்.

கருப்பொருட்கள்:

"தெய்வம் உணாவே மாமாரம் புட்பறை
சேய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
ஆவ்வகை பிறவும் கருஎன மொழிப" (அகத் 20)

எனக் கருப்பொருளைப் பற்றித் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். நிலத்தில் உள்ள கடவுள், மனிதர், பறவை, விலங்கு, பயன்படுத்தும் பொருட்கள், தொழிகள், செயல்கள் என தன்னூர் தொடர்புடைய கருப்பொருட்கள் கவிதைகளில் ஏராளமான இடங்களில் மிளிர்கிறது.

தெய்வங்கள்:

பிடாரி, இருக்கன்குடி அம்மன், அய்யனார், முத்தாலம்மன், பாண்டிமுனி, முனி எனப்பல தெய்வங்களின் பெயர்களையும், கவிஞர் இரத்த உறவுகளான, அப்பத்தா, அப்பா, அம்மா, எடன் பிறவா சோதரி, உடன் பிறந்தாள், சேத்தூர் சித்தப்பாவென்றும், இளம்பிராயத் தோழி, சிலம்பாயி, முடியனூர் கிழவி, காமாட்சி பாட்டி, பெரியான், பொன்னுச்சாமி, வடிவேலு, இருஞ்சாயி கிழவி, சின்ராசு, கோமதி அக்கா, ஒச்சம்மம்மா எனப்பலப்பல முகங்கள்.

தொழில்கள்:

ஆசாரி, இடையன், பச்சை குத்துதல், கொல்லன், வயக்காட்டு வேலை, கொத்தனார் என சில தொழில் செய்பவர்கள் பற்றிய விபரக் குறிப்பும் உண்டு.

தான்வாழும் சூழலில் வாழும் ஐந்தறிவு உயிர்களான அனைத்தும் அவருக்கு நேசமானவையாக இருந்துள்ளதால் படைப்பில் பாத்திரங்களாகின்றன. ஊதாரணமான ஆடுகிடாய், பசுக்கள், நாய், அணில், பூனை மற்றும் கொக்கு, குருவி, கிளி போன்ற பறவைகளும், பொன்வண்டு போன்றவைகளும் இடம்பெற்றுள்ளன. கவிதையில்

"சினைவயிற்றோடு
மேயும் சிவப்பி
பொன் வண்டு
அடையும் மஞ்சனத்தி"

எனப்பயின்று (ஒழுக்கம்) வந்துள்ளன.

மரஞ் செடிகொடிகள்:

ஆலமரம், அரச மரம், மஞ்சணத்தி, பனை மரம், கருவேலமரம், மாமாரம், நெட்டிலிங்கம் மற்றும் வல்லாரைக்கீரை, வெற்றிலை, காளான், பொன்னாங்கண்ணி, கரிசலாங்கண்ணி, குப்பைமேனி, பிரண்டை போன்ற செடி கொடிகளையும், தும்பைப்பூ, பூசணிப்பூ, மல்லிகைப்பூ போன்ற பூக்கள் கவிதைகளில் கண் சிமிட்டுகின்றன.

"கூம்பிய மணத்தின்
வேம்மையைக்
கூந்தலுக்குச் சொன்னது
மலராத மல்லிகை, மலர்ந்த கற்றாழை"

என அவர்தம் கவிதையில் வாசமில்லாததைக் குறித்தது.

கம்மங்கூழ், உளுந்தங்கழி, கடைந்தெடுதடத மோர், பச்சையும், ஆரஞ்சும், மஞ்சலும் கலந்து இனிப்பு பூந்தி, நுங்கு, கடுக்காமிட்டாய், ஜீராபன், எள்ளுருண்டை, பொரிகடலை மாவு, சீத்தாப்பழம், மாவிளக்கு மாவு, மெதுவடை, இலந்தை, தட்டாங்காய், கருவாடு, வெள்ளரிப்பழம், ஆட்டுப்பால், பஞ்சுமிட்டாய் , வெங்காயம் முதலியனவை.

பொருட்கள்:

கோரைப்பாய், உலக்கை, உரல், சாம்பிராணி, மயிற்பீலி, குறுக்கை, அருவாள், பிச்சுவாக்கத்தி, மண்அடுப்பு, வெண்கலப்பானை, கருகமணி.

உரிப்பொருள்:

இவர் கவிதைத் தொகுப்பில் அப்பா, அப்பத்தா, சகோதரி, சோட்டுப் பெண் மறைவு மற்றும் தெரிந்தோர்,சேர்ந்தோரின் மறைவுகள், அவரை அதிகம் பாதித்ததோடு மட்டுமல்லாமல் பாரி மகளிர் போல கையற்ற நிலையை "அப்பா"வின் மறைவு ஏற்படுத்தியுள்ளது அப்பட்டமானது.

"இந்தக் கோடையிலும்
எனக்காக காத்திருக்கும்
எல்லாமும் இருக்கின்றன
என் பிறந்த ஊரில்
இரயிலடிக்கு வண்டியோடு
தன் மனதையும்
அனுப்பி வைக்கும்
ஒரு மாலை நேரத்து
மாரடைப்பில்
பாராமல் எனைப் பிரிந்த
என் அப்பாவைத் தவிர"

மனித நேசங்களை முதன்மைப்படுத்திய கவிஞை மரம், மழை, செடி, பழைய சாமான்கள் மீது அவர்தாம் கொண்ட காதலை காட்சிப்படுத்தியிருக்கிறார்.

முடிவுரை:

மல்லாங்கிணற்றிலிருந்து நகரத்துக்கு வந்துவிட்ட தமிழச்சியின் மணம் ஏனோ கண்ணாடிமாளிகையான நகரத்திலிருந்து கரிசல்கிராமத்தையே நோக்குகிறது. அவரின் ஊரை, ஊரில் அனுபவித்த வாழ்க்கை, சந்தித்த மானுடங்கள், நெகிழ்ச்சி, துக்கம், கிராமத்து பண்டங்கள், சிறு தெய்வங்கள், மரங்கள், பண்டிகைகள் என வெகுவாக லயித்து கொட்டியுள்ள முத்துக்குவியல் தான் எஞ்சோட்டுப்பெண் என்ற படைப்பு பஞ்சு மெத்தையாக அவர்தம் ஊர்ப்படுக்கையும், முள்படுக்கையாக போர்த்திக் கொண்ட நகரத்து வாழ்க்கையும் என முரண்பொருள் பொதிந்த அவர்தம் படைப்பு, படைப்பாளியின் பிறப்பிடத்தை கண்ணாடியில் விழுந்த பிம்பமாய் நமக்குத் தெரிய வைக்கிறது.

முடிபாக உளவியல் ரீதியாக ஒரு படைப்பாளன் படைப்பின்மூலம் தன் மனவோட்டத்தை மகிழ்வோடு முன்வைப்பவன். அவ்வகையில் கவிஞர் தமிழச்சி இயற்கையோடு இயைந்த யதார்த்த வாழ்வான சங்ககாலத்து வாழ்வை, மனரீதியாக தன் ஊர் மீதுள்ள வாஞ்சையின் மூலம் வெளிப்படுத்துகிறார்.

"ஊரால் சிலமக்கள் மணம் பெறுவர்
மக்களால் சிலநேரம் ஊர் புகழ் பெறும்"

ஊரால் மக்கள் மணம் பெறுவர்! சிலநேரம் மக்களால் ஊர் புகழ் பெறும். அவ்வகையில் கவிஞையின் படைப்புக்கு மணம் சேர்த்தது அவர் ஊர் மண். அவர் படைப்பின் மூலம் அவர் ஊர் உன்னதப்படுத்தப்படுகிறது என்பது நிதர்சனமான உண்மை!

பார்வை நூல்கள்:

1. எஞ்சோட்டுப்பெண் - தமிழச்சி- (திசம்பர் 2003)
2. காலமும் கவிதையும் - தமிழச்சி – (திசம்பர் 2010)
3. தொல்காப்பியம்(பொருளதிகாரம்) - இளம்பூரணார் உரை
4. நற்றிணை

91. முனைவர் இரா.பாலசுப்பிரமணியன் அவர்களின் படைப்புகளில் ஊர்ப்பெயராய்வு

சீ.மணிமேகலை
முனைவர் பட்ட ஆய்வாளர்,
அய்யநாடார் ஜானகி அம்மாள் கல்லூரி,
சிவகாசி

முன்னுரை

இன்றைய உலகம் விஞ்ஞான உலகம் எதையும் ஆய்வு செய்து பார்க்கும் உலகம். காரண காரியத்தைத் தேடுகின்ற, உலகம். நிருபிக்கப்பட்டால் தான் அதில் நம்பிக்கை வைக்கின்ற உலகம். நாம் வாழும் இவ்வுலகம் இன்றைக்குச் சுமார் இருநூறுகோடி ஆண்டுகளுக்கு முன்னர் பெரிய செஞ்ஞாயிற்றினின்றும் பிளவுண்டு வீழ்ந்த ஒரு சிறிய துண்டு. வீழ்ந்த துண்டு ஒரு நூறு கோடி ஆண்டுகள் வரை அனற்பிழம்பாய்க் கொதிப்புற்றுக் கிடந்தது. பின் அது படிப்படியாகத் தணியத் தொடங்கியது. பின் நிலமும் உயிரும் **'ஊரும் பேரும்'** பெற்றமையைக் காணலாம்.

ஊர்ப்பெயராய்வு

ஒரு மொழியின் வலிமையை நிலைநாட்டத் தோன்றிய அமைப்புக்களைப் பற்றிக் குறிப்பிடும் போது அம்மொழி வாழ்ந்த வளர்ந்த ஊர்ப்பெயர் சிறப்புக்குரியதாகும். பெயராய்வு என்கின்ற ஆலமரமானது தனது விழுதுகளைப் பல்வேறு துறைகளில் பதித்து, இந்திய வரலாற்றைச் செழுமைபடுத்தி வருகின்றது என்றால் அது மிகையாகாது. 1946இல் வெளிவந்த 'தமிழகம் ஊரும் பேரும்' என்ற இரா.பி.சேதுப்பிள்ளை அவர்களின் நூலே ஊர்ப்பெயராய்வு நோக்கில் அமைந்த முதல் நூலாகும். சோமலெ என்பவர் தமிழ்நாட்டின் மாவட்டந்தழுவிய ஊர்ப்பெயர்களைச் சமூகவியல் நோக்கில் ஆய்வு செய்து எழுதியுள்ளார். இக்கட்டுரை முனைவர் இரா.பாலசுப்பிரமணியன் அவர்களின் படைப்புகளில் காணப்படும் ஊர்ப்பெயர்களை ஆய்வு செய்கிறது.

ஊர்ப்பெயர்க்காரணம்

முதலில் குடியேறிவர்களின் பெயர்களால் பெயர் பெற்ற ஊர்கள், நினைவுப் போற்றலால் பெயர் பெற்ற ஊர்கள், வழிபாட்டில் அமைந்த ஊர்கள், சமயத்தாக்கத்தின அடிப்படையில் பெயர் பெற்ற ஊர்கள், நிலத்தை நீர் நிலைகளை, விலங்குகள், தாவரங்களை மையமாக வைத்துச் சூட்டப்பட்ட ஊர்ப்பெயர்கள் எனப் பலவகையில் அமைந்த ஊர்ப்பெயர்கள் இவ்வாய்வில் மேற்கொள்ளப்பட்டன.

ஊர்ப்பெயர்கள் எப்பொழுது முக்கியத்துவம் பெறுகிறது?

ஒரு மொழியின் வளமையை நிலைநாட்ட அம்மொழி வாழ்ந்த வளர்ந்த ஊர்ப்பெயர் சிறப்பிற்குரியதாகும். முன்னோர்களின் அடிச்சுவட்டினை மற்றவர்கட்கு எடுத்தோதும் போது அவர்கள் வாழ்ந்த ஊர்ப்பெயர் முக்கியத்துவம் பெறும். இவ்வகையில் இரா.பாலசுப்பிரமணியன் அவர்களின் படைப்புகளில் இடம் பெற்ற ஊர்ப்பெயர்கள் பற்றி இக்கட்டுரை ஆய்வு செய்கிறது.

திருவாரூர் **'சமய இணக்கமும் மேம்பாடும்'** என்ற நூலில் பெரியபுராணம் காட்டும் ஒருமைப்பாடு என்ற தலைப்பில் பெரியபுராணத்தில் சுந்தரர் தெரிந்த அடியார்களைப் பாடிவிட்டு, அறிந்து கூற முடியாதவர்களை எல்லாம் தொகையடியார்கள் என்ற கூட்டத்தில் குறிப்பிடுகிறார். அவர்களுள் திருவாரூரில் பிறந்தவர்களும் உள்ளனர்.

இவ்வூர் (திருவாரூர்) தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ளது. ஆர் என்ற மலர் ஆத்திமாலையைப் பற்றித் தொண்டு தொட்டே கண்டாலும் இவ்வூரின் பெருஞ்சிறப்பு இடைக்காலத்தில் தான் வெளிப்பட்டது. இது ஆத்திமரங்கள் நிறைந்த ஊராக இருக்கலாம் எனத் தோன்றுகிறது. கல்வெட்டிலும் திருவாரூர் என்ற பெயரே காணப்படுகிறது. இவ்வூர் தேவார மூவர்களால் மட்டுமல்லாது சேக்கிழார், மாணிக்கவாசகர் நம்பியாண்டார் நம்பி, ஐயடிகள், காடவர்கோன் ஆகிய பலராலும் பாடப்படும் தன்மை இதன் மதிப்பைத் தெளிவாகும். அல்லல் நோய் தீர்க்கும் அருமருந்தாக இவ்வூரில் வீற்றிருக்கும் இறைவனை நம்பினர்.

"காதன் மங்கை யிதயகமலமாம்
மாதோர் பாங்கனார் ஆரூர் மலர்ந்ததால்"

எனப் பெரியபுராணம் கூறுகிறது. முத்திதரும் தலங்களுள்

"காண முத்தி தருவது சிதம்பரம்
இறக்க முத்தி தருவது காசி
பறக்க முத்தி தருவது ஆரூர்"

என்ற எண்ணமும் ஏற்படுகின்றது.

திருப்பரங்குன்றம்

'நாவல் களங்கள்' என்ற நூலில் 'கயல்விழி' என்ற வரலாற்று நாவலில் விழுப்பரையர் மகன் ஆலவாய் நம்பிக்கும் திருப்பரங்குன்றத்தில் உள்ள உய்ய வந்தாள் என்ற நங்கைக்கும் காதல்

திருமணம் அனுமதிக்கப்பட்டது. இங்கு இடம் பெற்ற திருப்பரங்குன்றம் மதுரை மாவட்டத்தில் அமைந்திருக்கிறது. முருகப் பெருமானின் அறுபடை வீடுகளுள் ஒன்று. இதனைத் திருமுருகாற்றுப்படை.

அஞ்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும்
குன்று அமர்ந்து உறைதலும் உரியன்"

என அவன் இருப்பிடத்தைக் கூறுகிறது. இப்பரங்குன்றம் 'குன்று' என்றே சுட்டப்பட்ட நிலையையும் உரைக்கிறது. இங்கு முருகன் குடிகொண்ட நிலையை, சினம் மிகு முருகன் தண்பரங்குன்றம் என்று கூறுகிறது. எனவே பரன்குன்று, என்ற நிலையில் தலைவன் குன்று என்று பெயர் பெற்றது எனலாம். பிற்காலத்தில் இங்குச் சிவன் கோயிலும் காணப்பட்டது என்பதைத் தேவாரப்பாடல்கள் காட்டுகின்றன,

" பண்ணார் மொழி மங்கையோர் பங்குடையான் பரங்குன்றம்" – எனத் திருஞான சம்பந்தரும்,
'பரங்குன்று மேயான் தன்னை" எனத் திருநாவுக்கரசரும்
"பரங்குன்று மேய பரமன்" எனச் சுந்தரரும் பாடியிருக்கின்றனர்.

திருநெல்வேலி (கணியான் கூத்து)

கணியான் கூத்து என்ற நூலில் இக்கூத்து திருநெல்வேலி மாவட்டத்தில் மட்டும் வழங்கி வருகிறது என்றும், அதனைத் தொழிலாகக் கொண்ட கலைஞர்களை ஆய்ந்து அந்நூலில் கூறியிருக்கிறார்.

நாவல் களங்கள் என்ற நூலில் திரு.அரு.இராமநாதன் எழுதிய திருநெல்வேலி நாடகச் சடையொன்றிய இராஜ ராஜ சோழன் நாடகம் நடக்க விருந்தது. அதனை எழுதியவரை டி கே எஸ் சண்முகம் 'இவர் ஒர் அகஸ்தியர்' என அதனை எழுதிய ஆசிரியரை அறிமுகப்படுத்தியிருக்கிறார்.

அவர் குறிப்பிட்ட திருநெல்வேலி - திருநெல்வேலி மாவட்டத்தின் தலைநகர். இவ்வூர் பாண்டி நாட்டைச் சேர்ந்தது.

"பொருந்து தண்புறவினிற் கொன்றை பொன் சொரி தரத்துன்று பைம்பூம்
செருந்தி செம்பொன்மலர் திருநெல்வேலி" என்றும்

"தென்றல் வந்துலவிய திருநெல்வேலி" என்றும் திருஞான சம்பந்தரால் பாடப் பெற்றிருக்கிறது. இப்பாடலில் குறிப்பிட்டிருக்கும் திருநெல்வேலி இவரது காலத்திற்கு முன்பே செழிப்பும் பெருமையும் பெற்று விளங்கிய நிலை தெளிவாகத் தெரிகிறது.

எஸ்.கணபதிராமன் என்பவர் தம் 'பொருநைநாடு' என்ற நூலில் இங்கு 'நெல்லின் ஊர்' என்பது திருநெல்வேலியே எனக் குறிக்கின்றார். மதுரைக் காஞ்சியில்,

"சீர்சான்ற உயர்நெல்லின்
ஊர்கொண்ட உயர் கொற்றவ"

என்னும் பாடல் அடிகள். பாண்டிய நாட்டை ஆண்ட தலையாலங்கானத்துச் செரு வென்ற பாண்டியன் நெடுஞ்செழியின் புகழைப்பாட எழுந்தவை. பத்துப்பாட்டு உரையில் டாக்டர் உ.வே.சா.'சாலியூர்' எனப் பொருள் கூறியுள்ளார். 'சாலி' என்பது சங்ககாலத்தில் சிறப்புமிக்க நெல்வகையாகக் கருதப்பட்டது.

"கருந்தெற்று முடையின் இடம் கெடக்கிடக்கும்
சாலி நெல்லின் சிறை கொள் வேலி" எனப் பொருநராற்றுப் படையும், மதுரைக்காஞ்சி குறிப்பிடும்

"சீர்சான்ற உயர்நெல்லின்,
ஊர் கொண்ட உயர் கொற்றவ" என்ற அடிகளில் அமையும் நெல்லின் ஊருக்கு உ.வே.சா. உரை 'சாலியூர்' என்று குறிப்பிடுகிறது.

"நெல்லைக் கொண்ட ஊர்
நெல்வளம் மிக்க ஊர்" என்ற பொருளிலும் கொள்ளலாம். 'நெல்வேலியைக் கொண்ட மன்னவன்' என அதன் செழிப்பினைச் சேக்கிழாரும் சுட்டுகின்றார். செல்வத் திருநெல்வேலி என்பது இவர் காட்டும் நிலை பொருநை ஆறு பாய்ந்து வளம் செழித்ததாக வெளிப்படையாகத் தெரிகிறது.

திருமுனைப் பாடி நாட்டில் திருவாமூர்

"சமய இணக்கமும் மேம்பாடும்" என்ற நூலில் முனைவர் இரா.பாலசுப்பிரமணியன் அவர்கள் திலகவதியாரும் மருண்நீக்கியாரும் பிறந்த ஊர் திருவாமூர் என்றும் மருண்நீக்கியார் தம் தமக்கை திலகவதியாரை சமண சமயத்திலிருந்து சைவசமயம் வரத்துணை புரிந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

சங்ககாலத்திலிருந்தே தெரியவரும் ஊர்ப் பெயர்களுள் ஒன்று ஆமூர். பெண்ணையாற்று வளம் பெருகிய திருமுனைப்பாடி நாட்டுள் உள்ள ஊர்களுள் ஒன்று ஆமூர் என்பது பெரியபுராணம் சுட்டும் செய்தி. இங்கு திருநாவுக்கரசர் பிறந்த செய்தியைச் சேக்கிழாரும் உரைக்கின்றார்.

இவ்வூர்ச் சிறப்பைச் சேக்கிழார்

"சைவ நெறி ஏழுலகும் பாலிக்கும் தன்மையினால்
தெய்வ நெறிச் சிவம் பெருக்கும் திருவாமூர்"

என்கிறார். பண்டு தொட்டே இருந்து வந்த இவ்வூர் இடைக்காலத்தில் சைவசமயம் மலர்ச்சி பெற்றதொரு ஊராகவும், இருந்தது என்பது தெரியவருகிறது.

திருநாரையூர்

முனைவர் இரா.பாலசுப்பிரமணியன் அவர்களின் **'புராணவியல்'** என்ற நூலில் திருத்தலங்கள் வரிசையில் சிதம்பரத்துக்கு அருகில் உள்ள திருநாரையூர் விநாயகர் பொல்லாப்பிள்ளையாராக வழங்கும் ஊர். நம்பியாண்டார் நம்பி வணங்கிய பிள்ளையார், இவ்வூர் தஞ்சை மாவட்டத்தில் உள்ள ஊர் சம்பந்தர், அப்பர் பாடல் பெற்ற ஊர், நாரை வழிபட்ட தலம் ஆதலால் நாரையூர் எனப் பெயர் பெற்றது.

நரிக்குடி, துவரிமான், காளையார் கோவில் என விலங்குகளை வைத்துப் பெயரிட்டது போல் பறவையைக் காரணமாக வைத்துச் சூட்டப்பட்ட பெயர் நாரையூர்.

"பொன்னி வடகரைசேர் நாரையூரில்" என நம்பியாண்டார் நம்பி தம் திருத்தொண்டர் திருவந்தாதியில் குறிப்பிடுகின்றார்.

மேலும்,

தேம்புனல் சூழ் திகழ்மாமடு விற்றிரு
நாரையூர் மேய
பூம்புனல் சேர் புரிபுன் சடையான்"

என ஞானசம்பந்தர் இவ்வூர் பற்றிய எண்ணம் தருகின்றார். எனவே நீர் வளமுடையது என்பதோடு நாரைகளின் மிகுதியால் இவ்வூர் இப்பெயர் பெற்றிருக்கலாம்.

திருச்செங்காட்டங்குடி

'புராணவியல்' என்னும் நூலில் திருச்செங்காட்டங்குடியில் இருப்பவர். வாதாபி கணபதி ஆவார் பல்லவ சேனாதிபதி பரஞ்சோதி தான் வாதாபியிலிருந்து கணபதியைக் கொண்டு வந்து திருச்செங்காட்டங்குடியில் வைத்ததாக வரலாறு கூறுவதாக முனைவர் இரா.பாலசுப்பிரமணியன் அவர்கள் குறிப்பிடுகிறார்.

இன்றும் தஞ்சாவூர் மாவட்டத்தில் அமைகிறது இவ்வூர். கஜமுகாசுரன் என்பவன் தேவர்களுக்கு இடுக்கண் செய்ய, அவனை ஒழித்துக்கட்ட சிவகுமாரன் விநாயகர் யானை முகத்துடன் அவதரித்து அவனைச் சம்ஹரித்திருக்கிறார். இந்த கஜமுகாசுரனைச் சம்ஹரித்திருக்கிறார். இந்த கஜமுகாசுரனைச் சம்ஹரித்த போது இரத்தம் செங்காடாய்ப் பெருகிய காரணத்தால் 'செங்காட்டங்குடி' என்ற பெயர் நிலைத்திருக்கிறது. இந்தப் பழி நீங்க இத்தலத்தில் இறைவனைக் கணபதி வழிபட்ட காரணத்தால் கணபதீச்சுரம் என்ற பெயரையும் பெற்றிருக்கிறது.

இத்தலம் 'மருகல்' என்ற பகுதியுள் அடங்கும். பின்னர் பக்கத்தில் உள்ள செங்காட்டங்குடியில் மக்கள் குடியேறிய நிலையில் 'மருகல் செங்காட்டங்குடி' என்ற தொடர் உண்மையைப் புலப்படுத்துகிறது.

"கருநாட்டக் கடைசியர் தம் களிகாட்டும்/காவேரித் திருநாட்டு வளம் காட்டும் செங்காட்டம் குடியாகும்" என இவ்வூர்ச் சிறப்பைச் சேக்கிழார் பாடுகிறார்.

யாழ்ப்பாணம்

"சமய இணக்கமும் மேம்பாடும்" என்ற நூலில் திருநீலகண்ட யாழ்ப்பாணர் ஓர் அரிசனர். அந்தணரும் அடியாரே, அரிசனரும் அடியாரே' அடியாராக இருப்பதற்கு விதி வேறுபாடுகள் கற்பிக்கப்பட வில்லை. சம்பந்தர் அவரை எதிர்கொண்டு அழைக்கிறபோது,

"அளவிலா மகிழ்ச்சியினர் தமை நோக்கி, ஐயா! நீர்
உளமகிழ இங்கணைந்த உறுதி உடையோம்" என்கிறார்.

இந்த யாழ்ப்பாணர் இலங்கைத் தீவில் இருந்து வந்தவர். இவர் பண்டையப் பாணர் குலத்தில் ஒரு வகுப்பினர்

"குழலினும் யாழினும் குரல் முதல் ஏழும்
வழுவின்றிசைத்து வழித்திறம் காட்டும்" என்ற வரிகள்பாணர் பெருமையை உணர்த்தும் நன்றமிழ் வல்ல ஞானசம்பந்தருடன் தலந்தோறும் சென்று அவர் பாடிய தமிழ்ப்பாட்டை யாழில் அமைத்து இன்னிசை அமுதமாக வழங்கிய திரு நீலகண்டயாழ்ப்பாணர் குடியேறி வாழ்ந்த இலங்கைப்பகுதி யாழ்ப்பாணம் என்று பெயர் பெற்றது. காலப்போக்கில் அச் சொல்லில் உள்ள ழகர ஒற்று நழுவி 'யாப்பாணம்' என்றாகி பின்பு புறநாட்டார் நாவில் அகப்பட்டு 'யாப்பனம்' என்றும் ஜாப்பனம் என்றும் சிதைந்து இப்பொழுது **'ஜாப்னா'** என வழங்குகிறது.

சிதம்பரம் 'சிந்தனைச் சுடர்கள்' என்ற நூலில் தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள **'சிதம்பரம்'** என்ற ஊர் இடம் பெற்றிருக்கிறது. 'சமய இணக்கமும் மேம்பாடும்' என்ற நூலில் 'திருநாளைப் போவார்' என்ற அடியாரைத் தில்லைவாழ் அந்தணர்கள் ஐயரே! என்றழைக்கின்றனர். இத்தலத்திற்குத் தில்லை என்னும் மரங்கள் அடர்ந்திருந்த காரணத்தால் இத்தலத்திற்குத் தில்லை

என்னும் பெயர் உண்டாயிற்று. புலிப்பாதர் என்னும் முனிவர் பூசித்தமையால் புலியூர் என்ற பெயரும் உண்டு.

சித் + அம்பரம் = சிதம்பரம்,

சித் + அறிவு, அம்பரம் - வெட்டவெளி இத்தலத்திற்கு பூலோகக் கைலாசம், புண்டரீகபுரம் முதலிய வேறு பெயர்களும் உண்டு. சிற்றம்பலம் என்ற பெயரின் மரூஉ சிதம்பரமாகும்.

சீர்காழி

சமய இணக்கமும் மேம்பாடும் என்ற நூலில் சீர்காழி இடம் பெற்றுள்ளது. திருஞான சம்பந்தர் ஞானப்பால் பெற்றது இங்குள்ள சிவன் கோவில் குளக்கரையில் தான். சமயவாதிகள் 12 பெயர்கள் குறிப்பிட்டுள்ளனர். காவிரியின் கழிமுகப் பகுதியில் இன்று சீர்காழி வட்டமாக அமைந்துள்ளது.

'செல்வம் நிறைந்த ஊர் சீரில் திகழ்ந்த ஊர்',"ஞாலத்துமிக்க ஊர் நானூற்றவர்கள் ஊர் வேலொத்த கண்ணாள் விளங்கும் ஊர்" எனபன போன்ற 12 பெயர்களையும் நம்பி ஆரூரர் எடுத்துரைக்கிறார். அவற்றுள் ஒன்று தோணிபுரம். பிரளய காலத்தில் தோணி போல மிதந்தது சீர்காழி எனவே தோணிபுரம் என்ற பெயர் ஏற்பட்டது என்கிறார் திருநாவுக்கரசர்.

முடிவுரை

பெயர் ஒரு பொருளைச் சுட்டுகிறது. அதனைப் பிறிதொரு பொருளின்றும் வேறுபடுத்துகிறது. இத்தகைய பெயரின் தோற்றம் மாற்றம் வளர்ச்சி போன்ற பலவற்றையும் ஆராயும் துறையே பெயராய்வு. இடப்பெயர்கள் அனைத்தும் ஊர் என்ற சிறுபகுதி முதல் உலகம் என்ற பெரும் பகுதி வரையிலும் அடங்கும்.

92. ஊர்ப்பெயர்கள்

முனைவர். சோ.முத்தமிழ்ச் செல்வன்,
தமிழ் உதவிப்பேராசியரிர், தமிழ்த்துறை,
அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி (தன்னாட்சி)
சிவகாசி – 626 124.

குறிப்பிட்டதொரு இடத்தை உணர்த்தியும், இந்த இடத்தை பிற இடத்திலிருந்து தனிமைப்படுத்தியும் மக்களுக்கு அவ்விடம் பற்றிய உணர்வை அளிப்பன இடப்பெயர்களாகும். ஆதி மனிதன் ஒரே இடத்தில் கூட்டமாக வாழ்ந்த போது இடப்பெயர்கள் தோற்றம் பெற வாய்ப்பில்லை. ஆனால் மனிதன் எப்போது ஒரு இடத்தை விட்டு பிறிதொரு இடம் செல்லத் தொடங்கினானோ, அப்போதுதான் அந்த இரு இடங்களையும் வேறுபடுத்தி பார்க்க ஆரம்பித்தான். அதனை பிறரிடம் கூறும்போதுதான் இடம் பற்றிய சிந்தனை பிறந்திருக்கின்றது. அவ்வகையில் முந்தைய ராமநாதபுரம் மாவட்ட ஊர்ப்பெயர்கள் சில இலக்கியங்களில் எவ்வாறு இடம்பெற்றுள்ளன என்பதனை இக்கட்டுரை ஆராய்கின்றது.

ஆடானை :

ஆடானை என்பது பாடல்பெற்ற தலங்களுள் ஒன்றாகும். இன்று ஊரின் பெயர் திருவாடனை ஆகும். இவ்வூர் மதுரை – தொண்டி நெடுஞ்சாலையில் உள்ளது. இப்போதும் இவ்வூர் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு உட்பட்ட ஒரு வட்டமாக இருக்கின்றது. இவ்வூர் விடுதலைப் போராட்டத்தில் முக்கிய பங்கு வகித்திருக்கின்றது.

வருணனின் புதல்வன், துருவாச முனிவரை அவமதித்தமையின் விளைவாக ஆட்டுத் தலையையும், யானையின் உடலையும் பெற்றான். இத்தகைய ஆட்டுத் தலையும், யானையின் உடலமைப்பும் கொண்ட வருணனையின் புதல்வன் இத்தலத்தில் உள்ள இறைவனை வழிபட்டமையால் இவ்வடிவம் நீங்கப் பெற்றான். ஆதலால் இத்தலம் திருவாடனை எனப் பெயர்பெற்றது. இங்குள்ள இறைவனின் பெயர் ஆடானை நாதர் ஆவார். இச்செய்தியை திருஞானசம்பந்தர் தனது தேவாரத்தில் (பதிக் 248) சுட்டியுள்ளார்.

கானப்பேர் :

கானப்பேர் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்றாகும். இன்யை ஊர் காளையார் கோவில் என்று அழைக்கப்படுகிறது. இவ்வூர் மதுரை – தொண்டி நெடுஞ்சாலையில் உள்ளது. ஏற்கனவே முந்தைய இராமநாதபுரம் மாவட்டத்தில் இருந்த இவ்வூர் தற்போது சிவகங்கை மாவட்டத்தில் ஒரு வட்டமாக உள்ளது. இவ்வூர் விடுதலைப் போராட்டத்தில் முக்கிய பங்கு வகித்துள்ளது. குறிப்பாக மருது சகோதரர்களின் கோட்டமாக இருந்துள்ளது. இவ்வூர் இலக்கியங்களில் காணப்பேரூர் (சுந் 15-2), காணப்பேர் (திரு'ான பதி 130) காணப்பேரெயில் என காணப்பெறுகின்றது. கேயிலின் சிறப்ப சைவப்பற்று ஆகியவற்றின் காரணமாக புராணக் கதை தொடர்போடு காளையார்கோவில் என அழைப்படுகின்றது. காட்டுப்பகுதியில் அமைந்த ஊராக இது இருந்ததனை காணப்பெயர் என பெயர் சுட்டுகின்றது.

இவ்வூர் சிறப்பாக அன்று காணப்பெற்றது என்பதனை 'காவார்ந்த பொழிற்சோலை (திருஞா 317-7), கார்வயல் சூழ் காணப்பெயர் உறை காளையே (சுநதரா் 84-1)கற்றார்கள் தொழுது ஏத்தும் காணப்பேர் (பெரிய திருஞா – 886) எனவரும் பாடலடிகள் தெளிவுபடுத்துகின்றன.

மேலும் கல்லாட தேவநாயனார் தம்முடைய தேவா் திருமறத்தில் 'மஞ்சன நீரும் கொண்டு காணப் பேருறை கண்ணுதல்' (21-2) எனவரும் பாடலடிகளில் சுட்டிச்செல்கின்றார். இதில் சுட்டப்பெறும் சிவன் காலத்தியில் உறைபவன், ஈண்டு, காணப் பேருறை என்பது கானகத்தில் உறையும் சிவன் எனக் கருத இடமளிக்கின்றது.

அவ்வகையில் கானப்பேரூ என்பது காட்டுப்பகுதியில் எழுந்த புதிய குடியிருப்பு என்பது புலப்படுகின்றது. இவ்வூர் பெயர் சங்க காலத்தில் காணப்பேரெயில் உக்கிர பெருவழுதி என்பதோடு எண்ணிப்பார்க்க இடம் உள்ளது. இதில் வரும் கானப்பேரெயில் என்பது ஊரைச் சுற்றி கானகத்தில் இருந்த பெரிய கோட்டையை குறித்திருக்கலாம். இக்கோட்டைப் பகுதி பின்னர் தனி ஊராக பெயர் பெற்றிருக்கலாம். எனவே காப்பெரெயில் என்ற பெயர் பினனா் கானப்பேர் என்றும், கானப்பேரூர் என்றும் சுட்டப் பெற்றிருக்கலாம் என முனைவர் கே.பகவதி தனது இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள்(பக்கம் 101) எனும் நூலில் மொழிவார்.

இராமனதீச்சுரம் :

இரமனதீச்சுரம் பாடல்பெற்ற தலங்களுள் ஒன்றாகும். இவ்வூர் இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள வட்டங்களுள் ஒன்றாகும். இவ்வூர் இராமேஸ்வரம் என்று அழைக்கப்படுகின்றது. கம்பராமாயணத்திற்கு முன்பு இவ்வூரை பற்றிய பல செய்திகள் இடம்

பெற்றுள்ளன. சேக்கிழார் இவ்வூரை பற்றி பல இடங்களில் கூறுகின்றார். இராமன் வணங்கிய கோயில் என தெளிவாக சேக்கிழார் சுட்டுகின்றார். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் முதலான சிவனடியார்கள் இத்தலத்தை பாடியுள்ளனர். இதுமட்டுமன்றி

'அந்தன் கானல் இடுதிரை இராமேச்சுவரம்' (திருநா 285 – 8)

என்ற பாடலடியில் கடற்கரை சார்ந்த நிலையில் இராமேசுவரம் அமைந்துள்ள தன்மையை உணர முடிகின்றது.

<u>உத்தரகோசமங்கை :</u>

உத்தரகோசமங்கை மாணிக்கவாசகரால் பாடப்பெற்ற தலமாகும். இவ்வூர் இன்றுள்ள இராமநாதபுரம் மாவட்டத்திலேயே உள்ளது. இவ்வூரைப் பற்றி பல சுவையான கதைகள் உண்டு 'வேதம் படிப்பதற்காக பார்வதியைப் பூலோகத்தில் அவதரிக்க செய்து வேதம்படிக்க வைத்து மீண்டும், மீண்டும் வேதப் பொருளை அவருக்கு உபதேசிக்கின்றனர். இவ்வாறு வேதத்தில் திரும்பவும் உபதேசம் பெற்ற மங்கை கல்யாண சுந்தரியாக கோவில் கொண்டிருக்கும் தலமே உத்தரகோசமங்கை ஆகும். இதில் உத்தரம் என்பது திரும்ப பெறும் விடை என்றும், கோசம் என்பது வேதம் என்றும் பொருள் உணர்த்தி நிற்கின்றது. இவவூரை

'உத்தரகோசமங்கை யுளிருந்து' (திருவாசகக் கீர்த்தி – 48)

'உத்தரகோசமங்கை கரசே' (திருவாசக நீத்தல் - ,3)

என்ற பாடலடிகள் வாயிலாக உணரலாம்.

இவ்வாறாக மக்கள் தங்கள் வாழ்க்கை வசதிக்கேற்ப குடியிருப்புகளை அழைத்துக் கொண்டு வாழ்ந்த நிலையை உணர முடிகின்றது. மாணிடவியலின்படி மாந்தர் தம் வாழ்க்கை வசதிகளுக்கேற்ப குடியிருப்பு பகுதிகளை அமைத்துக் கொள்வர் என்பது இயல்பான ஒன்றாகும். ஆதலால் தான் வெப்பம் மிகுந்த நாட்டுப் பகுதியைச் சார்ந்த தமிழர்கள் நீர்நிலை, தாவரம், மிகு பகுதிகளில் மிகுந்த குடியிருப்பு பகுதிகளை அமைத்துக் கொண்டனர் என்றும், அப்பெயர்களையே தாம் வாழும் பகுதிகளுக்கு இட்டனர் என்பதம் மிகப் பொருத்தமாக அமைகின்றது. வெப்பநாட்டு மக்களுக்கு நீர்நிலை தாவரம் மீதுமிகு மதிப்பு இருந்தது என்ற க.ப.அறவாணன் கருத்தில், மதிப்பு அவர்களின் தேவை அடிப்படையில் எழுந்த ஒன்று என்பதனை இந்த ஆய்வுக் கட்டுரையில் கண்ட இவ்வூர்ப்பெயர்கள் உறுதிப்படுத்துகின்றன.

93. ஜம்பை ஊர்ப் பெயர்

முனைவர் ரெ. முத்துக்குமரன்
முதன்மையர், துறைத்தலைவர்
வரலாற்றுத்துறை, ந.க.ம. கல்லூரி
பொள்ளாச்சி.

திருமதி.மா.சக்தி விஷ்ணு பிரியா
துணைப்பேராசிரியர்
வரலாற்றுத்துறை, ந.க.ம. கல்லூரி
பொள்ளாச்சி.

முன்னுரை

விழுப்புரம் மாவட்டத்தில் திருக்கோயிலூர் வட்டத்தில் தென்பெண்ணைய் ஆற்றின் வடகரையில் "ஜம்பை" என்ற ஊர் அமைந்துள்ளது. இவ்வூர் திருக்கோயிலூரிலிருந்து வடமேற்கில் இருபது கிலோமீட்டர் தொலைவிலும் மணலூர்பேட்டையிலிருந்து மேற்கில் நான்கு கிலோமீட்டர் தொலைவிலும் உள்ளது. இவ்வூரைச் சுற்றியுள்ள ஊர்களில் பெருங்கற்காலச் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதால்[1], ஜம்பையும் அக்காலத்தில் மக்கள் வாழிடமாகத் திகழ்ந்திருக்கக்கூடும். இவ்வூருக்கு வடக்கில் ஏரிக்குக் கிழக்கில் இரண்டுச் சிறு குன்றுகள் காணப்படுகின்றன. அங்குள்ள குகையில் பொறிக்கப்பட்டுள்ள இரண்டு கல்வெட்டுக்கள் முறையே கி.மு. மூன்றாண்டும் நூற்றாண்டையும்[2], கி.பி. முதலாம் நூற்றாண்டையும் சேர்ந்தது[3] என்று கல்வெட்டாய்வாளர்கள் கருதுகின்றனர். இக்கட்டுரையில் ஜம்பை ஊர்ப் பெயர்க் காரணத்தை ஆராயலாம்.

பெயர்க் காரணம்

ஜம்பு அல்லது சம்பு அல்லது சண்பை என்பது ஒருவகை நீர்ப்புல் ஆகும். அப்புல் நீர்த் தேங்கிய வண்டல் நிலத்தில் வளரும் தன்மை கொண்டது. சண்டை புல் நிறைந்து காணப்பட்ட அப்பகுதியில் மக்கள் குடியேறியதால் சண்பை[4] என்ற நீர்த் தாவர அடிப்படையில் ஊர்ப்பெயர் ஏற்பட்டிருக்க வேண்டும். இப்பெயர் பேச்சு வழக்கில் ஜம்பை என்று அழைத்திருக்க வாய்ப்பிருக்கிறது. இன்னும் ஜம்பைக்கு அருகில் பள்ளிச் சந்தல் என்ற ஊரின் வயல்வெளிப் பகுதிகளில் சண்பை புல் காணப்படுகின்றது. பள்ளிச்சந்தல் சோழர் காலத்தில் ஜம்பையைச் சேர்ந்தது என்று கல்வெட்டுகள் மூலம் அறியமுடிகின்றது[5]. பள்ளிச் சந்தல் சமணப் பள்ளிக்கு அளக்கப்பட்ட ஊராக இருப்பதால் அப்பெயர் பெற்றுள்ளது.

வாளையூர்

கி.பி. 10 ஆம் நூற்றாண்டில் பொறிக்கப்பட்ட முதலாம் பராந்தக சோழன் கல்வெட்டுக்களிலும், இராட்டிரகூட மன்னன் மூன்றாம் கிருஷ்ணனுடைய கல்வெட்டுக்களிலும் ஜம்பை வாளையூர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது[6]. வாளை என்பது ஒருவகை மீனின் பெயராகவும்[7], வாளை மீன் நீர்நிலைகளில் காணப்படும் கற்பாறைகள் நிறைந்த இடங்களில் அதிக அளவில் காணப்படும் ஆய்விற்குரிய இவ்வூரின் தெற்கில் ஓடும் தென்பெண்ணை ஆற்றிலும் மற்றும் சாத்தனூர் அணையிலும் வாளைமீன்கள் வளர்ந்ததற்கு ஆதாரமாக ஆங்காங்கு பாறைகள் காணப்படுகின்றன. இத்தகைய புவியியல் சூழலில் ஜம்பையில் முதலாம் பராந்தக சோழன் ஆட்சிக் காலத்திற்கு முன்னர் வாளை மீன்கள் அதிக அளவில் கிடைத்ததனால் வாளையூர் என்ற பெயர் வழக்கத்தில் இருந்திருக்கக் கூடும். வாளையூர் என்ற பெயரை முதலாம் பராந்தக சோழன் மற்றும் இராட்டிரக்கூட மன்னன் மூன்றாம் கிருட்டிணன் கல்வெட்டுக்களில் "பெண்ணெய் வடகரை வாளையூர்" என்று பொறிக்கப்பட்டுள்ளது. வாளையூர் நீர்வாழ் விலங்கு அடிப்படையில் காரணப் பெயராக ஏற்பட்டிருக்கிறது[8].

நித்தவிநோதபுரம்

சோழப் பேரரசின் நிர்வாகத் திறமை கொண்ட மன்னராக திகழ்ந்த முதலாம் இராசராசச் சோழனுக்குப் பலப் பட்டப் பெயர்கள் உண்டு. அவற்றுள் ஒன்று நித்தவினோதனாகும். நித்த வினோதனின் பெயரை வாளையூருக்கு இட்டு பெண்ணெய் வடகரை வாளையூராகிய நித்தவினோதபுரம் என்று அழைக்கப்பட்டது. இப்பெயர் அங்குள்ள கல்வெட்டுக்களில் காணப்படுகினறது[9]. முதலாம் இராசராசசோழன் மற்றும் முதலாம் இராசேந்திரசோழன் காலத்தில் நித்தவினோதபுரம் என்றழைக்கப்பட்டது. சோழர் காலத்தில் பெரும்பாலான நகரங்கள் புரம் என்ற பெயரால் அழைக்கப்பட்டுள்ளன. புரம் என்றால் நகரம் என்பது பொருளாகும்[10]. சோழர் காலத்தில் வியாபாரிகள் நிறைந்து காணப்பட்ட பகுதி நகரம் என்று அழைக்கப்பட்டது. ஊர்களின் பெயரில் புரம் என்று முடிந்தாலும் நகரம் என்று பொருள்படும் என்பர். வாளையூர் நகரமாகும், அதற்கு நித்தவிநோதன் என்று பெயருடன் பிற்சேர்கையாக புரம் என்ற சொல் சேர்க்கப்பட்டுள்ளது[11].

வீரராசேந்திர சோழபுரம்

வாளையூருக்கு வீரராசேந்திரசோழன் ஆட்சியில் வீரராசேந்திரசோழபுரம் என்று பெயர் இடப்பட்டதை ஜம்பையில் காணப்படும் கல்வெட்டுக்கள் மூலம் அறிய முடிகின்றது[12].

இராசேந்திராபுரம்

வாளையூருக்கு இரண்டாம் இராசேந்திர சோழனின் பெயரில் இராசேந்திரபுரம் என்று அழைக்கப்பட்டதை அவரது மூன்றாம் ஆட்சியாண்டு கல்வெட்டு மூலம் காணமுடிகின்றது[13].

சண்பை

ஜம்பை முதலில் வாளையூர் என்றுதான் அழைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே முதலாம் பராந்தக சோழனின் கல்வெட்டிலும் இராட்டிரகூட மன்னன் மூன்றாம் கிருஷ்ணரின் கல்வெட்டிலும் வாளையூர் என்று பெயர் காணப்படுகின்றது. சண்பையான வீரராசேந்திர சோழபுரம் என்ற பெயர் முதலில் வீரராசேந்திர சோழனின் காலத்து கல்வெட்டில் காணப்படுகின்றது. அதற்குப் பிறகு பாண்டியன் கோப்பெருஞ்சிங்கள், விசயநகர மன்னர்கள் ஆகியோர் காலத்து கல்வெட்டுக்களில் சண்பையை சண்பை, ஜம்பை, செம்பை என்று அழைக்கப்பட்டதாகக் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. வீரராசேந்திரனின் மூன்றாம் ஆட்சியாண்டுக்கு முன்னர் வரை பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்களில், "வாளையூர்" என்றும், "வாளையூராகிய நித்தவிநோதபுரம்" என்றும் "வாளையூராகிய இராசேந்திரபுரம்" என்றும். "பூர்வதேசத்து வாளையூர் என்றும் அழைக்கப்பட்டதைக் காணலாம்[14].

முடிவுரை

ஜம்பை பத்தாம் நூற்றாண்டு முதற்கொண்டு காலந்தோறும் மன்னர்களின் ஆர்வத்திற்கு இணங்கவும் உள்ளுர் மக்களின் விருப்பத்திற்கு இணங்கவும் பலமுறை பெயர் மாற்றம் பெற்றதைக் கல்வெட்டுக்களின் வாயிலாக அறிய முடிகின்றது.

அடிக்குறிப்புகள்

1. Narasimhaiah. B. *Neolithic and Megalithic cultures in Tamilnadu*, Sundeep Prakashan, Delhi, 1980 and K. Rajan, pages 17, to 19, 25 and 36, Archaeology of Palar Basin, Tamil University, Thanjavur, 2000, page 128.
2. ச. இராசு, அதியமான் மரபு – சங்ககாலம், Salem: Institute of Kongu studies.
3. Iravatham Mahadevan, page.399. Early Epigraphy – From the earliest times to the sixth century AD.CREA and Harvard University, Chennai,2003.
4. இரா. நாகசாமி, ஔவைக்கு நெல்லிக்கனி ஈந்த அதியமான் கல்வெட்டு, தினமணி நாளிதழ் 12.10.1981.
5. மார்க்சிய காந்தி. நூ. தமிழக வரலாற்றில் அதியர் மரபு, அமுதன் பதிப்பகம், சென்னை 1998, ப.46
6. Kathiraiver pillai, Tamil Moli Akarathi, Asian Educational Services, Madras 1994.
7. ARE. 1937-38/446.
8. S.I.I. Volume xxii nos. 97, 108, 109, 110, 112, 1.15, 116, 117, 118, 121, 124 and 126. ARE 1937-38/441, 442, 443 and 446.
9. Shanmugham, *Fishery Biology and Aquaculture,* Loe Pathipagam, Madras 1990. page.79.
10. S.I.I. Volume xxii nos. 71 and 82.
11. Hall. R. Kenneth, page 51. Statecraft in the age of the Colas, Abhinavi Publications, New Delhi. 1980.
12. S.I.I. Volume xxii nos. 67, 68, 69, 70, 72, 73, 74, 83, 85, 87, 90, 92, 93, 98, 99, 100, 102, 103, 104, 105, 114, 122 and 127, ARE 1937-38/429 and 448.
13. S.S.I. Volume xxii no.80.
14. S.I.I. Volume xxii nos. 76, 77, 88, 89, 96, 101, 106, 113, 119, 120 and 123. ARE Nos. 1937-38/430, 434, 446 and 445.

94. ஊர்ப்பெயர் ஆய்வில் 'மதுரை'

முனைவர் சு.முத்துஇலக்குமி,
முதல்வர் (பணி நிறைவு),
முதல்வர் காந்தி சிந்தனைக் கல்லூரி,
தமிழ்நாடு காந்தி நினைவுநிதி,
மதுரை.

0.0

மானுட முகவரியில் தனக்கென ஓரிடத்தைப் பெற்ற சிறப்பினைக் கொண்டது 'ஊர்.' மனிதப் பிறவியைப் பெற்ற ஒவ்வொருவருக்கும், மகாகவியின் வாக்கின்படி 'தந்தையர் நாடும்,' பிறந்த 'ஊரும்' முந்தித்தவம் கிடந்து முந்நூறு நாள் சுமந்து பெற்றெடுத்த தாயும் - தந்தையும், உடன் பிறந்தோரும், உறவினரும் இனத்தின் (elan) இனங்காட்டலும் (identiy) உரியவைகளாக உள்ளன. குடும்ப உறவின் குருதிப் பிணைப்பின் இணைப்பால் இவ்வமைப்பு என்றால், சமுதாய உறவினால் கல்வியும், பணியும் பெறுதற்குக் காரணமான குருவின், கல்வியின் நிறுவனமும், அதன் ஊரும், நாடும் குறிப்பாக (உள்ளூர் மற்றும் வெளிநாடு) இடம் பெறுபவைகளாக உள்ளன என்பது நிதர்சனம். இவ்வாறு வாழ்வின் வாழ்க்கைப் பயணப் பதிவில் ஊரின் உன்னதம் குடும்பம் மற்றும் சமுதாயம் என்ற இரு வேறு முகங்களினால் நிறைவுபெறுவது என வரன்முறைப்படுத்தலாம்.

1.0 சங்கப் புலவரின் உலகளாவிய உயரிய அன்புமிகு நேயத்தால்,

"யாதும் ஊரே யாவரும் கேளிர்"

என்று ஏற்றுக்கொண்டாலும், தனக்கென ஊரும் பேரும் உடையவராக மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்து வேடிக்கை மனிதராக இல்லாது சாதனை மனிதராக உயர உழைத்திடும் காலத்து அவரால் ஊருக்கும் பெருமித உணர்வு தானே வந்தெய்தும் என்பதில் ஐயமில்லை.

1.1 ஊரும் பேரும்

திரு.மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியின் பிறப்பால் 'போர்பந்தர்' உலக வரலாற்றில் தனித்துவ இடத்தைப் பெற்றுப் போற்றி வணங்கப்படுவதாக உள்ளது. இவர் தம் வழியைப் பின்பற்றிய இன்றைய மக்கள் நலச் சிந்தனையாளர் அன்னா ஹசாரேவின் பிறப்பினால் மகாராட்டிர மாநிலத்து 'ராலே கான்சித்தி' என்ற ஊர் பெருமையும் சிறப்பையும் பெற்றுள்ளது கண்கூடு. 'பதச்சோறு' போல இவ்விருவர் மட்டுமே இவண் சான்றாக எடுத்துரைக்கப்பட்டுள்ளனர்.

2.0 மதுரையின் இருப்பிடம்

இந்திய நாட்டின் தென்பகுதியில் வைகை ஆற்றின் கரையில் அமைந்துள்ள நகரே 'மதுரை' இந்நகர் தனக்கென்று ஒரு வரலாற்றினைக் கொண்டு விளங்குகின்றது. "கி.பி.5 முதல் கி.பி.11 வரை மதுரை மிகச் சிறந்த நகரமாக விளங்கியது" என்பதே வாழ்வியற் களஞ்சியம் (தொகுதி 13) வழங்கும் கருத்தாகும். பாண்டிய நாட்டின் தலைநகராக இம் மதுரையே விளங்கியது.

2.1 சங்கம் - மதுரை

சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மாமதுரை என்ற அடைமொழிக்கு ஏற்பத் தொன்மைக் காலத்திலேயே தமிழுக்காக முப்பெரும் சங்கங்கள் மதுரை, கபாடபுரம் என்ற ஊர்களில் இருந்தன என்று வரலாற்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். நான்காம் தமிழ்ச்சங்கம் நிறுவப்பட்டுள்ள இடம் ' இன்றைய மதுரை' என்பதும் குறிப்பிடத்தக்கது.

3.0 மதுரையின் பெயர்

மதுரை மாநகருக்குப் பல பெயர்கள் வழங்கப்பட்டுள்ளன.

- ♦ கூடல் - சங்கப் புலவர்களின் கூடலுக்கான நகரம் என்பதால்
- ♦ நான்மாடக்கூடல் - நான்கு மேகங்களும் நான்கு திசைகளில் நான்கு மாடங்களாக இருந்து காத்தமையால்
- ♦ ஆலவாய் - நாகம் நஞ்சினை உமிழ்ந்த தலம் என்பதால்
- ♦ மதுரை - சிவனின், பிறைச் சந்திரனின் அமர்தம் மதுவைப் பிழிந்து
  - நாகம் உமிழ்ந்த நஞ்சின் வேகத்தை நீக்கிப் புனிதப்படுத்தியமையால்
- ♦ கடம்பவனம் - கடம்ப மரங்கள் நிறைந்த வனப்பகுதியில் அமைந்த ஊர் என்பதால்
- ♦ மருதை - மருத மரங்கள் நிறைந்திருந்த காரணத்தால்
- ♦ சிவநகரம்
  சிவராஜதானி

சிவலோகம்
சிவன் முக்திபுரம்
துவார சாந்தபுரம்

♦ தமிழ் மதுரை - தமிழ் ஆராய்ந்த காரணத்தால்

4.0 கல்வெட்டின் சொல்வெட்டு

மதுரையின் பல்வேறு பெயருக்கானக் காரணங்களை மீக்காணும் முறையில் எடுத்துரைக்கலாம் . ஆனால் 'மேட்டுப்பட்டி' மற்றும் 'அழகர் கோவில்' கல்வெட்டுக்களில் மதுரையின் பெயர் '**மதிரை**' என்று பதிவாகியுள்ளது. கல்வெட்டு ஆய்வாளர், தொல்லியல்துறை அறிஞர் முனைவர் சாந்தலிங்கம் அவர்களின் கூற்றின்படி, தமிழ் மொழியிலுள்ள பிராமி எழுத்தில் மேட்டுப்பட்டி கல்வெட்டில், "அமணன் மதிரை அத்திரன் உறை உதயணச" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு கி.மு. 3 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்பதே ஆய்வாளரின் கூற்று.

4.1 இதேபோன்று கி.மு. முதலாம் நூற்றாண்டைச் சார்ந்த அழகர்மலை கல்வெட்டில், "மதிரய் பொன்கொல்லன் ஆதன் ஆதன்" என்று பதிவாகியுள்ளது. எனவே,

மதிரை - மதுரை

என்ற மாற்றம் நிகழ்ந்து நிலைபெற்று நிலவி வருகின்றது எனலாம்.

4.2

சின்னமன்னூர்ச் செப்பேடு, "மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்" என்று மதுரையை மதுராபுரி என்கிறது.

5.0 இலக்கியப்பதிவுகள்

ஆய்வுத் தரவுக் களங்களில் கல்வெட்டும், செப்பேடும் முதன்மையான இடத்தைப் பெறுவனவ ாகும். இதே போன்று இலக்கியப் பதிவுகளும் அகச்சான்றுகளாக நின்று ஆய்வின் களத்தை வளப்படுத்து வன எனலாம். சங்கப் பெட்டகத்தின் இரு தனிக் கூறுகள் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு. இப்பத்துப்பாடடில் 'மதுரை'யின் பெயரையே தன் படைப்பின் தலைப்பிலேயே கொண்ட 'மதுரைக் காஞ்சி'யின் பாட்டுடைத் தலைவன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் ஆவான். இந்நெடும் பாடலைப் பாடிய புலவர் மாங்குடி மருதனார் ஆவார். பத்துப்பாட்டில் மிக நீண்ட 782 அடிகளைக் கொண்ட நூலில் மதுரை மாநகர் குறித்த வர்ணனை 354 அடிகளில் இடம்பெற்றுள்ளன.

5.1

மதுரை மாநகரை ஒருவர் காலையில் தொடங்கி மறுநாள் விடியல்வரை சுற்றிப் பார்த்து வரும் பொழுது காண்பனவற்றை எடுத்துக் கூறுதல் போன்ற பாணியில் இவ்வரிகள் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

"புத்தேள் உலகம் கவினிக் காண்பன
மிக்கு புகழ் ஏந்திய பெரும் பெயர் மதுரை"
(மதுரைக்காஞ்சி, 198:99)

என்ற வரிகள் மூலம் மதுரையின் உயர்வை உணர இயலும்! மாங்குடி மருதனார் மதுரையின் மாண்பினையும் புறத்தில் காஞ்சித்திணையின் நிலையாமை நிலைப்பாட்டினையும் ஒருசேர இந்நெடும் பாட்டின் வழி எடுத்துரைத்து விளக்குகிறார். இப்பாடலில் 'மதுரை' என்ற சொல் இடம்பெற்றுள்ளது.

5.2 மதுரையும் தமிழும் இணைந்து விளங்கிய திறத்தைப் பிற இலக்கியப் பகுதிகளும் இயம்பியுள்ளன.

♦ "தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின்
மகிழ்நனை மறுகின் மதுரை"
(சிறுபாண்.66-67)

♦ தென் தமிழ் மதுரை
(மணிமேகலை 25-131)

♦ "...அரவுஉமிழ் ஆலவாற்றை மதுரமாக்குதலால் ஆங்கு
வருபுகழ் பதிக்கு நாமம் மதுரைமாநகரி..."
(திருவிளையாடற்புராணம்)

என்பனவாகும்.

5.3 'மதுரைக் காஞ்சி,' 'திருவிளையாடற் புராணம்,' 'மதுரைக் கலம்பகம்' என்பன மதுரை மாநகரைக் களமாகக் கொண்டு படைக்கப் பெற்ற இலக்கியப் படைப்புக்களாகும். சிலப்பதிகாரத்தில் ' மதுரைக் காண்டம்' என்ற பகுதியில் கோவலன் - கண்ணகி வாழ்வின் அவல நிகழ்வுகள் நிகழ்ந்த களமாக மதுரை இடம்பெற்றுள்ளது. மதுரை மாநகரிலுள்ள 'கோவலன் பொட்டல்' என்ற மேடு 'கோவலன் கொல்லப்பட்ட இடம்' என்பதே வழிவழியாக வழங்கும் செய்தியாகும்.

6.0 ஆய்வறிஞர்கள்

ஊர்ப்பெயர் ஆய்வின் பிதாமகன் ரா.பி.சேதுப்பிள்ளை ஆவார். அன்னாரது 'ஊரும் பேரும்' ஊர்கள் பற்றிய ஆய்வின் அணுகுமுறையை விவரிப்பதாகும். இவரது வழிப் பயணத்தில் ஊர்கள் பற்றிய ஆய்வில் ஈடுத்திக்கொண்ட மகாவித்வான் ரா.இராகவையங்காரின் 'சேதுநாடும் தமிழும்,' 'வஞ்சி மாநகரம்' போன்ற நூல்களைப் படைத்தார். மகாவித்துவான் ரா.ரா.வின் அணுக்கமான போக்கினால் நுணுக்கமானக் கருத்தியல்களும் விளக்கங்களும் நமக்குக் கிடைத்துள்ளது.

6.1

படைப்பாளர் - ஆய்வாளர், திரு.சோமலெவின் 'மதுரை' என்ற நூலில் 'மதுரை' என்ற பெயருக் கானக் காரணங்கள் இடம்பெற்றுள்ளன. 14வது அத்தியாயத்தில் 'மதுரை மாநகர்' என்ற தலைப்பின் கீழ் ஆசிரியர் 'பெயர்' என்று தலைப்பிட்டு,

"1. மருதநிலங்களால் சூழப்பெற்ற ஊர் மதுரை.

2. 'இறைவன்' அமுத கிரணங்களைத் தெளித்துப் புனிதப்படுத்தியதால் மதுரை.

3. 'மதுரம்' செறிந்து நிலைத்த ஊர் மதுரை'

என்றும் கூறுவர். 'மது' என்ற சொல் தனிமையையும் எளிமையையும் குறிக்கிறது. மதுரையைச் சுற்றி மல்லிகைப்பூ பூப்பதை நாட்டுப்பாடல் படித்தவர்கள் முதல் நாளும் விமானத்தில் பறப்பவர்கள் வரை அறிவர். இதுவும் 'மது' என்னும் சொல்லின் வளத்துக்குச் சான்று பகருகிறது (ப.223) என்று எடுத்துரைக்கிறார்.

7.0 மருதை - மதுரையாயிற்று

'புதிய நோக்கில் தமிழிலக்கிய வரலாறு (முனைவர் தமிழண்ணல்) என்ற நூலில் பேராசிரியர், "மதுரையின் கதையும் இதுதான். கூடல் நகரில் திருமருத முன்துறை என்பது புகழ்ப்பெற்ற வையைத் துறையாகும். மருதை என்ற பெயரை இன்றும் கல்லா மாந்தரிடம் பேச்சுவழக்கில் காணலாம். மருதையே, மதுரையாக ஒலிப்பிறழ்ச்சியாலும் தொடர்புடைய வடமொழிப் பெயராலும் மாறி வழங்கலாயிற்று. மதுரையின் முன்னைய பெயர் கூடல் என்தே" (ப.113) என்று தெளிவுபடுத்துகிறார்.

8.0 பிற மதுரையம்பதிகள்

- மதுரைக்குக் கிழக்கே கீழ்மதுரை
- சிவகங்கை மாவட்டத்தில் மானாமதுரை
- திண்டுக்கல்லுக்கு வடக்கே வடமதுரை
- அருப்புக்கோட்டை சாலையில் நெடுமதுரை
- திருவெண்ணெய் நல்லூரில் சிறுமதுரை.

8.1 வடமாநிலத்தில், உத்திரப்பிரதேசத்தில் 'மத்ரா' என்பது 'மதுரை' என்ற பெயரேயாகும்.

8.2

வெளிநாட்டில், இந்தோனேசியாவிலுள்ள 'மதுரை' என்ற சிறு தீவு, குமரிக்கண்டம் எனப்படும் 'இலமூரியா'க் கண்டம் விளங்கிய காலத்தே இருந்த தீவாக இருக்கலாம் என்றும், தமிழர் நாகரிகம் பரவியிருந்தபோது இத்தீவு இந்தியாவைத் தமிழகத்தைச் சார்ந்ததாக இருந்திருக்கலாம் என்றும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

8.3 மேலும் கம்போடியாவிலுள்ள 'ஆஸ்கோவாட்' கோயிலின் அமைப்பு மதுரைக் கோயிலை முழுக்க முழுக்க பின்பற்றியதாக உள்ளது என்பதே அக்கோயிலைப் பார்த்து ஆய்வு செய்தவர்களின் கணிப்பாகும்.

9.0 'வண்புகழ் மூவரின்' காலமாம் சங்ககாலம் தொட்டு இன்றுவரை 'மதுரை' என்ற ஊரின் மாண்பும் மணமும் ஆய்வு செய்யுந்தோறும் பல்வேறு தகவல்களைத் தர அட்சயக்கலமாக அமைந்துள்ள பாங்கினை உணர இயலுகின்றது எனலாம்.

10.0 முடிவுகளாக

- மானுட வாழ்வில் 'ஊரும் பேரும்' முதன்மையும் முக்கியத்துவமும் பெறுபவைகளாகும்.
- மதுரையின் இருப்பிடம் - மதுரைத் தமிழ்ச்சங்கம் - மதுரையின் பல்வேறு பெயர்கள் - ஆய்வின்வழி அறிதற்குரியன.
- கல்வெட்டு - சாசனம் வழங்கும் புறச்சான்றுகள், இலக்கியப் பதிவுகளின் அகச் சான்றுகளின் வழி 'ம துரை' என்ற சொல்லாட்சியின் விளக்கத்தைப் பெறுதற்கு இயலும்.
- மதுரைப் புலவர்கள் - ஆய்வறிஞர்கள் - தரும் விளக்கங்கள் குறிப்பிடத்தக்கவை.

துணைநின்றவை
1. *வாழ்வியற் களஞ்சியம், தொகுதி - 13, தமிழ்ப் பல்கலை, தஞ்சை, முதற்பதிப்பு 1994.*
2. *சோமலெ., மதுரை.*
3. *ஆ.சிங்காரவேலு முதலியார், அபிதான சிந்தாமணி, ஏஷியன் கல்விப்பணி, புதுதில்லி, 1988.*
4. *தமிழண்ணல், புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, மறுபதிப்பு 2002.*
5. www.wikipedia.com

95. புறநானூற்றில் உறையூர்ப் புலவர்கள்

சி. மரியசெல்வம் லேக்கதோஸ்
முனைவர் பட்ட ஆய்வாளர்
காஞ்சி மாமுனிவர் பட்ட மேற்படிப்பு மையம்
புதுச்சேரி – 8.

1. முன்னுரை:

பண்டைத் தமிழரின் வரலாற்றை உணர்ந்துகொள்ள மூலகாரணியாக விளங்குவது இலக்கியங்களாகும். இலக்கியங்கள் மூலமே வரலாற்றின் முழுமையை அறிந்துகொள்ள முடிகிறது. அதேபோல ஒரு சமுதாயத்தை அடையாளப்படுத்தவும், மக்களின் வாழ்க்கை முறையினை அடையாளப்படுத்தவும் ஊர்ப்பெயராய்வு என்பது அவசியமாகிறது. ஊர் என்பது மக்களின் குடியிருப்பினைச் சுட்டும் தொன்மை வடிவமாகும். மக்களின் குடிப்பெயர்வுகளினால் புதிதுபுதிதாக ஊர்கள் உண்டாகியுள்ளன. தொல்காப்பியம் மற்றும் சங்க நூல்களில் “ஊர்” என்ற சொல் பல இடங்களில் கையாளப்பட்டுள்ளது. சங்கப்பாடல்களிலிருந்தும் பதிகக் குறிப்புகளிலிருந்தும் கிடைக்கின்ற ஊர்ப்பெயர்களில் பெரும்பான்மையானவை “ஊர்” என்றே முடிகின்றன. தமிழ்ப்பிராமிக் கல்வெட்டுக்களிலும் “ஊர்” என்று முடியும் ஊர்கள் காணப்படுகின்றன. இவ்வாறு இலக்கியங்களில் பரந்துபட்டுக்காணப்படும் ஊர்களில் உறையூர் பற்றியும், இவ்வூரால் பெயர்பெற்ற புலவர்கள் பற்றியும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

2. ஊர் - சொல் விளக்கம்:

‘ஊர்தல்’ எனும் வினையினால் ‘ஊர்’ என்ற சொல் தோன்றியது. சிறிதுசிறிதாக ஊர்ந்து பரவும் தன்மையினால் ஊரென்பது முதனிலைத் தொழிலாகு பெயராகும் என்று ஞா. தேவநேயன் குறிப்பிடுகிறார். ஊர்ப்பெயர் என்பது இயல்பான ஊரைக்குறிப்பிடாமல் மக்களின் ஒட்டுமொத்தமாகத் தொகுதியினைக் குறிக்கிறது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனும் ஐவகை நிலங்களிலுள்ள மக்கள் குடியிருப்புகள் எவ்வெவ்வாறு அழைக்கப்பட்டன என்பதனைத் தொல்காப்பிய உரையாசிரியர்கள் குறிப்பிடும்பொழுது மருத நிலத்துக் குடியிருப்புகள் “ஊர்” என்று அழைக்கப்பட்டன என்கின்றனர். (தொல். பொருள், அகத்திணையியல், நூற்பா – 18, நச்சிஉரை) சங்க இலக்கியப் பாடல்களில் மட்டுமல்லாமல், அப்பாடல்களைப் பாடிய புலவர்களும் தாங்கள் சார்ந்த ஊரினை, அடையாளப்படுத்தும் நோக்கத்துடன் தங்களுடைய பெயருடன் ஊரின் பெயரினையும் அடையாக வைத்துள்ளனர் என்பதை அறியமுடிகிறது.

3. உறையூர் வரலாறு:

இன்றைய திருச்சி நகரின் ஒரு பகுதி உறையூராகும். சோழர்களின் தலைநகரமாக விளங்கிய இவ்வூர் திருச்சிராப்பள்ளிக்கு மேற்கே 1.6 கி.மீ தொலைவில் காவிரி ஆற்றின் கரையில் அமைந்துள்ளது. பழைய உறையூர், திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் பாண்ட மங்கலத்தில் இருபதடிக்கு கீழே இருக்கிறது. மண்மாரியால் முழுகியது என அபிதான சிந்தாமணி விளக்கம் கூறுகின்றது. இது உறந்தை, உறையூர், கோழி, கோழியூர், வாரணம், உரபுரம் முதலான பெயர்களாலும் வழங்கப்பட்டது. உறப்பு என்ற சொல் செறிவு என்னும் பொருள் படுவதைக் காணும்போது மக்கள் நெருங்கி வாழ்ந்த இடமாக இருந்ததால் உறந்தை எனப்பெயர் பெற்றிருக்கலாம்.

4. இலக்கியங்களில் உறையூர்:

உறைதல் என்றால் தங்குதல் எனப் பொருள் கொண்டு மக்கள் வாழ்வதற்குரிய நிலனமைப்பும் விளங்கும் இருந்த ஊர் ஆகையால் உறையூர் எனப்பெயர் வழங்கியிருக்கலாம் என்பதை,

“வளம்கெழு சோழர் உறந்தைப் பெருந்துறை” (குறு. 11) என்ற பாடல் வரிகள் உணர்த்துகின்றன. சங்கப் பாடல்களில் ‘உறந்தை’ எனவும், சங்கப் புலவர்களின் பெயர்களோடு ஊர்ப்பெயர் அடைபெற்று வரும்பொழுது ‘உறையூர்’ எனவும் வழங்கப்படுகிறது.

சிறுபாணாற்றுப்படையில் ஓரிடத்திலும் (83), நற்றிணையில் இரண்டு இடங்களிலும் (234, 400), குறுந்தொகையில் ஓரிடத்திலும் (116), அகநானூற்றில் ஒன்பது இடங்களிலும் (4, 6, 93, 122, 137, 226, 237, 369, 385), புறநானூற்றில் நான்கு இடங்களிலும் (39, 58, 352, 395). உறந்தை என்றசொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. மேலும் புறநானூற்றில் இரண்டு பாடல்களில் (68, 69) உறந்தையோன் என்னும் சொல்லாட்சிகள் காணப்படுகின்றன. சிலப்பதிகாரத்தில் ஓரிடத்தில் உறையூர் எனவும் உறந்தை எனவும் (சிலம்பு, 8-3), கோழி (சிலம்பு. 299), வாரணம் (சிலம்பு. 10-247, 248) இளங்கோ ஆண்டிருப்பதும், முத்தொள்ளாயிரத்தில் உறையூர் (58-3)

எனவருவதும் குறிப்பிடத்தக்கது. சங்க இலக்கியத்தில் உறந்தை எனவரும் இடங்களில் எல்லாம் பழைய உரையாசிரியர் உறையூர் என்றே குறிப்பிடுகின்றார். அவருக்குப்பின் எழுந்த உரைகளும் உறந்தையை உறையூர் என்றே எழுதுகின்றனர். கி.பி. 13 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மாறவர்மன் சுந்தர பாண்டியனின் கல்வெட்டில் 'உறந்தை' என்றே கூறப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (வாழ்வியற்களஞ்சியம். தொகுதி. 5:548) புறநானூற்று 212ம் பாடலில் 'கோழியோன்' என்பதற்கு உறையூரென்னும் படைவீட்டிருந்தான் எனவும் கோழி என்பது உறையூரையே குறிக்குமெனவும் உரையாசிரியர்கள் கூறுகின்றனர்.

தொல்காப்பியப் புணரியலில் 11-ஆவது நூற்பாவிற்கு விளக்கம் கூறும் நச்சினார்க்கினியர் மருதநிலத்துக்குரிய ஊர்ப்பெயர்களுக்குப் பின்னொட்டாக ஊர்வரும் என்றும் குறிப்பிடுகின்றார். உறந்தை சோழர்க்குரியதாகவும். வளமையாகவும், செல்வச்சிறப்புடன் திகழ்ந்ததால் மக்கள் அதனை விட்டு நீங்க விருப்பம் கொள்ளாதவர்களாகவும் இருந்தனர் என்பதை,

"கைவல் யானைக் கடுந்தேர்ச் சோழர்
காவிரிப் படப்பை உறந்தை அன்ன
பொன்னுடை நெடுநகர் (அகம். 385)

என்ற அகப்பாடல்அடிகளால் அறியமுடிகிறது. நல்ல புகழினையும் தேரினையும் உடைய சோழனது உறந்தை தன்பால் வாழ்வோர்விட்டு நீங்காமைக்குக் காரணமான சிறப்பினையுடையது என (சிறுபாணாற்றுப்படை. 82,83) கூறுகின்ற சிறப்புப்பொருந்தியது. உறந்தையின் தொடக்ககால வரலாற்றில் வெளியன்தித்தன் என்னும் தலைவனுக்கு ஒரு சிறந்த இடம் உண்டு, கடற்கரைப் பட்டிணத்தின் தலைவனான இவன் உறையூரைக் கைப்பற்றிப் பிறர் எளிதில் தாக்காவண்ணம் உறையூரில் அரண்களை அமைத்து வலுவுள்ளதாக மாற்றியுள்ளான் என்பதை,

''நொச்சி வேலித் தித்தன் உறந்தை
கல்முதிர் புறங்காட்டன்ன'' (அகம். 385)
''வென்றெறி முரசின் விறற்போர்ச் சோழர்
இன்கடுங்கள்ளின் உறந்தை ஆங்கண் (அகம். 137)

ஆகியபாடல் அடிகளில் அறியமுடிகிறது. அதோடு உறந்தை நல்லவளம் பொருந்திய தலமாகவும், வெண்ணெல் வயல்கள் வேலியாகச் சூழ்ந்த உறந்தை பெரிய வண்மையுடைய தித்தனுக்குரியதாகவும் இருந்தது என்பதை,

''மாவண் தித்தன் வெண்ணெல் வேலி
உறந்தை அன்ன உரைசால் நன்கலம்'' (புறம். 352)

என்ற புறப்பாடல் அடிகள் உணர்த்துகின்றன. சிறுகண் யானைகளையுடைய தித்தனுக்குரிய உறந்தை கெடாத நல்ல புகழ் வாய்ந்ததாகவும், நல்ல விளைபுலங்களால் சூழப்பட்டு இருந்ததாகவும் (புறம். 395) புறநானூற்றுப் பாடலில் காணப்படுவதால். தித்தன் ஆண்டகாலத்தில் உறையூரைச் சுற்றியுள்ள இடங்கள் நெல் உற்பத்தித்திறன் பெற்றிருந்ததால் சிறந்த நெற்களஞ்சியமாகவும், புகழ்பெற்ற நகரமாகவும் நல்ல சூழலமைவுடன் விளங்கியுள்ளது, பின்னால் உறந்தை நகரினைத் திருமாவளவன் காடுகளை வெட்டியழித்து நாடாகச் செய்து களங்கள் அழித்து பல்வேறு வளங்களையும் பெருகச்செய்து பெரிய நிலைகள் பொருத்திய மாடங்களை அமைத்து விரிவுறச் செய்தான். (பட். 284 – 286)

சோழன் நலங்கிள்ளி ஆவுரை முற்றுகையிட்ட காலத்து அதனை அடைத்துக்கிடந்த நெடுங்கிள்ளியின் பின் தப்பிச் சென்று உறையூரை அடைத்துகிடக்க, அதனையும் அந்நலங்கிள்ளி முற்றுகையிட்டான். அந்நிலையில் கோவூர்கிழார் அவ்விருவரையும் அணுகிப்போரைக் கைவிடுமாறு அறிவுரை கூறினார். (புறம். 44, 45).

கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்த இடத்துச் சென்று மீண்டு அவனது உறையூருக்கு வந்த பொத்தியார் யானை இருந்து இறந்த கூட்டத்தைப் பார்த்துக் கலங்கும் பாகனைப் போல அம்முதூரில் அவனிருந்த மன்றத்தைக் கண்டு அழுது பாடினார். (புறம். 210). உறந்தையில் பங்குனிவிழா நடைபெற்றது (நற். 234) என்பதையும் அறியமுடிகிறது. மறம் பொருந்திய சோழரது உறந்தையிலுள்ள அவைக்களத்து அறம் கெடவறியாது நின்று நிலைபெற்றது (நற். 400).

கரிகாற்சோழன் தனது தலைநகரை உறையூரில் இருந்து காவிரிப் பூம்பட்டிணத்திற்கு மாற்றினான் என்பதைப் பட்டினப்பாலை கூறுகின்றது. கோழியொன்று யானையைப் போரில் வென்றதால், வீரமிக்க இந்த இடம் கோழி அல்லது கோழியூர் என வழங்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. உறையூர் பஞ்சவர்ணசாமி கோயிலில் கோழியும் யானையும் போரிடும் காட்சி சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளமை, இந்நிகழ்ச்சிக்குச் சான்றாகவுள்ளது. (வாழ்வியற்களஞ்சியம், தொகுதி 5, ப. 548).

உறையூர்ப் பகுதி ஏறத்தாழ கி.பி. 600 முதல் 875 முடிய பல்லவரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. பல்லவரை அடுத்து பாண்டியர் உறையூர்ப் பகுதியில் மேலாண்மை செலுத்தினர் என்பதை நெடுஞ்சடையான் பாண்டியனின் (கி.பி. 768 – 815) வேள்விக்குடிச்செப்பேடு சுட்டுகின்றது. தேர்மாறன் என்னும் பாண்டிய மன்னன் கூடல், வஞ்சி, கோழி என்னும் தலைநகரங்களிலுள்ள

அரண்மனைகளையும், அரண்களையும் புதுப்பித்த செய்தி, இச்செப்பேட்டால் அறியப்படுகிறது. உதயேந்திரச்செப்பேடு பராந்தகச் சோழனின் தலைநகரம் உறையூர் என்று செப்புகிறது. இதனால் உறையூர் பாண்டியரிடமிருந்து மீண்டும் சோழர் வசம் வந்தது புலனாகின்றது. பிற்காலப் பாண்டியர் வலுவடைந்தபொழுது, மீண்டும் உறையூர் பாண்டியர் கைக்கு மாறியது. முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி. 1216 – 1235) உறையூரையும் தஞ்சையையும் தீக்கிரையாக்கினான் என்று திருக்கோயிலூர் கல்வெட்டு கூறுகின்றது. இச்செய்திகளினால் உறையூரின் வரலாற்றுச் சுவடுகளையும் மக்களது வாழ்வியல் பதிவுகளையும் அறியமுடிகின்றது.

5. உறையூரால் பெயர்பெற்ற புலவர்கள்

புறநானூற்றில் ஊரால் பெயர்பெற்ற புலவர்களாக 81 புலவர்கள் அறியப்படுகின்றனர். அவற்றுள் உறையூரால் பெயர்பெற்ற புலவர்கள் ஐந்து புலவர்கள் குறிக்கப்படுகின்றனர்.

(i) உறையூர் இளம்பொன் வாணிகனார்:

மாற்றுக் குறைந்தபொன் ‘இளம்பொன்’ என்று அழைக்கப்படும். இத்தகைய பொன்னை வாணிகம் செய்ததால் இளம்பொன் வாணிகனார் என்று அழைக்கப்பெறுகின்றார். உறையூரில் இருந்த இப்பொன் வாணிகர் புறநானூற்றில் ஒரு பாடல் மட்டும் பாடியுள்ளார். இப்பாடல் போரில் இறந்துபட்ட வீரனது நடுகல் வழிபாட்டில் அவன் இறத்தமை அறியாது இரவலர் (பாணர்) வருவரே என்று புலவர் ஏங்கிப் பாடுவதாக அப்பாடல் அமைகின்றது. (புறம். 264).

(ii) உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்:

முடமோசியார் என்னும் இச்சான்றோர் ஏணிச்சேரி என்னும் ஊரினர். இ∴து உறையூரின் ஒரு பகுதியாகும். உறையூரிடத்தே தங்கியிருந்தமையால் உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் எனப்படுகின்றார். மோசி என்பது இவரது இயற்பெயர். இவர் முடம் பட்டமையால் முடமோசியார் எனப்பட்டார். இவர் அந்தணர் குலத்தினர் என்பர். புறநானூற்றில் இவர் பாடிய 13 பாடல்கள் கிடைக்கின்றன. ஆய் என்னும் வள்ளலைப் பெருந்தகப் பாடிய சிறப்பால் ‘மோசி பாடிய ஆயும்’ (புறம். 158) என்று சான்றோர் பாடும் புகழ்கொண்டவர். இவர் சேரன் அந்துவஞ்சேரல் இரும்பொறையின் சிறப்பை ஒரு பாடலிலும், மற்ற பாடல்கள் எல்லாம், ஆய் அண்டிரனின் கொடைச்சிறப்பு. யானையைக் கொடையாக வழங்கும் அவனது சிறப்பும், ஆய் ஆண்டிரனை மட்டுமே பாடவேண்டும் என்றும் மற்றவர்களைப் பாடாது ஒழிக என்று கூறுவதன் மூலம் முடமோசியாரின் பாடல்கள் தனித்தன்மைபெறுகிறது.

(iii) உறையூர் மருத்துவன் தாமோதரனார்:

தாமோதரனார் என்னும் சான்றோர் உறையூரின்கண் மருத்துவத்தொழில் புரிந்தவர். இனிய செய்யுள் செய்வதில் சிறந்தவர். இவரால் பாடப்பட்டவர் சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவனும், பிட்டங்கொற்றனும் ஆவர். இவர் புறநானூற்றில் மூன்று பாடல்களை பாடியுள்ளார். பெருந்திருமாவளவனின் வெண்கொற்றக் கொடையின் சிறப்பும், பிட்டங்கொற்றனின் வீரமும் இவரது பாடலில் விளக்கியுள்ளார்.

(iv) உறையூர் முதுகண்ணன் சாத்தனார்

சோழர்களின் தலைநகரான உறையூரைச் சேர்ந்தவர். முதுகண்ணன் என்பது இவர் தந்தை பெயர். இச்சாத்தனார் சோழன் நலங்கிள்ளியைப் பாடியவர். குறுந்தொகையிலும் இப்பாடல் ஒன்று ‘நல்லதன் நலத்தையும் தீயதன் தீதையும் மறுப்பவர்க்கு உறவாக இராதே’ என்று கூறும் அறிவுரை இவரது சிறப்பைக்காட்டும். இவர் புறநானூற்றில் ஐந்து பாடல்கள் பாடியுள்ளார். இவரது பாடல்கள் நலங்கிள்ளியினைச் சிறப்பித்துக்கூறுவதாக அமைகின்றது. நலங்கிள்ளியின் அருள், கொடை, செல்வச்சிறப்பு, அடக்கமுடைமை ஆகியவற்றை கூறுவதாகவும், மன்னனுக்கு அறிவுரை கூறுவதாகவும் பாடல்களை அமைத்துள்ளார்.

(v) உறையூர் முதுகூத்தனார்

இவரது பெயர் முதுகூத்தனார். உறையூர் முதுகூற்றனார் எனவும் இவர் பெயர் வழங்குகிறது. இவர்தம் உறையூரை

“வென்நெறி முரசின் விறற்போர்ச் சோழர்... உறந்தை” (அகம். 137)

எனப்பாராட்டுகிறார். இவர் புறநானூற்றில் ஒரு பாடல் மட்டும் பாடியள்ளார். அப்பாடல் சீறூர்த்தலைவனின் இல்லாண்மையை விளக்குவதாக அமைகிறது. (புறம். 331).

6. முடிவுரை

இலக்கியங்களில் புதைந்து கிடக்கும் ஊரினை எடுத்து ஆய்வு நிகழ்த்தும் போது அவ்வூரினை பற்றிய வரலாற்றினை அறிந்து கொள்ள முடிகிறது. சங்க இலக்கியப் பாடல்களில் உறந்தை என்னும் சொல்லாட்சியே காணப்படுகின்றன. சங்க இலக்கியப் புலவர்களின் பெயரிலும் பின்னால் தோன்றிய இலக்கியங்களிலும் உரைகளிலும்தான் உறையூர் என்னும் சொல்லாட்சி காணப்படுகின்றது. உறையூரின் மற்ற பெயர்களும் இலக்கியங்கள் வழியாக அறிய முடிகிறது.

உறந்தையின் இயற்கைச் சூழலமைப்பும், சிறப்பும், சங்க நூல்களில் கட்டமைக்கப்பட்டுள்ளன. உறையூர் பற்றிய செய்தி கல்வெட்டிலும், செப்பேட்டிலும் காணப்படுவது அறியமுடிகிறது. புலவர்கள் தங்களுடைய பெயரை நிலைநிறுத்திக்கொள்ள தந்தைபெயர், ஊரின்பெயர், செய்யும் தொழில்பெயர் ஆகியவற்றை தங்களுடைய பெயரோடு இணைப்பதன்மூலம் தங்களை அடையாளப்படுத்துகின்றனர். மேலும் உறையூர் புலவர்கள் தங்களுடைய பாடல்களில் கொடைச்சிறப்பு, அறிவுறுத்தும் பாங்கு, அரசனின் தனித்தன்மை, மாறாத அன்பும், நட்பும்கொண்டு விளங்கினர் என்பதையும் புலப்படுத்துகின்றனர் என்பதும் பெறப்படுகின்றது

துணைநின்றநூல்கள்:

1. ஆளவந்தான், ஆர் - இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1984.
2. இளங்குமரன், இரா., (உ.ஆ) - புறநானூறு, கோவிலூர் மடாலயம், கோவிலூர், 2003.
3. சாமிநாதையர், உ.வே. (ப.ஆ) - புறநானூறும் பழைய உரையும் குறுந்தொகை மூலமும் உரையும். உ.வே.சா. நூல்நிலையம், சென்னை, 1971.
4. தமிழண்ணல், அண்ணாமலை, சு.ப. (ப.ஆ) - அகநானூறு, கோவிலூர் மடாலயம், கோவிலூர், 2004.

96. தேவார இலக்கியத்தில் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஊர்ப்பெயர்கள்

கூ. முத்தையன்
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழாய்வுத்துறை,
தேசியக் கல்லூரி, திருச்சி.

முன்னுரை

'திருச்சிராப்பள்ளி' என்று கூறினால் தீவினை இல்லாது போய்விடும் என்று தேவாரம் கூறுகின்றது. மிகவும் பழமையான நகரம் திருச்சிராப்பள்ளி. இதுசோழ அரசர்களின் தலை நகரமாக விளங்கியது. திருச்சிராப்பள்ளியின் ஒரு பகுதியான உறையூர் சோழப் பேரரசின் தலை நகரம். சிவபெருமான் விற்றிருக்கும் ஆலயங்களும் அங்கு நடந்த வரலாறுகளும் புராணங்களில் காணப்படுகின்றன. செவ்வந்திப் புராணம், உறையூர்ப் புராணம், ஆகிய இரண்டின் மூலமாகவும் திருச்சிராப்பள்ளியின் வரலாற்றை ஓரளவு அறியலாம். திருச்சிராப்பள்ளியைச் சார்ந்த ஆலயங்கள் அமைந்த ஊர்ப்பெயர்களைப்பற்றி மட்டும் இக்கட்டுரையில் காண்போம்.

ஆனைக்கா

காவிரிக் கரையில் காவிரிக்கும் கொள்ளிடத்துக்கும் இடையில் உள்ள தலம், ஸ்ரீரங்கம் பக்கத்தில் உள்ள திருவானைக் காவல் என்ற பெயருடன் இன்று திருச்சி மாவட்டத்தில் உள்ளது. ஆனை+கா என்பதற்குப் பொருள் ஆனைகள் நிறைந்த சோலை என்பது. இப்பெயர் பின் இங்குள்ள இறைச் சிறப்பும் கோயில் சிறப்பும் செல்வாக்கு பெற. பிறிதொரு பொய்க் காரணத்தையும் கொள்கிறது. இங்கு முத்தி பெற்ற யானையின் ஞாபகார்த்தமாகவே இத்தலம் ஆனைக்கா ஆகிறது. சிலந்தி மறுப்பிறப்பில் கோச்செங்கட் சோழனாகப் பிறக்கிறது. அந்தப் பிறவியிலும் யானைமீது கொண்டு இருந்த பகையை மறக்காமல் யானைமீது ஏறஇயலாதமாடக் கோயில்களாக எழுபது கட்டுகிறான்[1]. மேலும் இக்கோயில் தலமரமாகிய வெண் நாவல் காரணமாக இத்தலத்தை 'ஜம்புகேஸ்வரம்' என்றும் கட்டுகின்றனர். (ஜம்பு நாவல்) சம்பந்தர்சுந்தரர் பாடலும் இத்தலத்திற்கு உண்டு. மேலும் இங்குள்ள கோயிலின் பழமையைத் திருநாவுக்கரசரின்,

"ஆச்சிராமம் நகரும் ஆனைக்காவும்
முன்னமே கோயிலாக் கொண்டான் தன்னை"

என்ற குறிப்பு சுட்டுகிறது.

வானைக்காவில் வெண்மதி மல்கு புல்கு வார் சடை
தேனைக்காவில் இன்மொழி தேவிபாகம் ஆயினான்
ஆனைக்காவில் அண்ணலை அபயமாக வாழ்பவர்
ஏனைக்காவல் வேண்டுவார்க் கேதும் ஓதம் இல்லையே

கோயில் பழமையுடன், இக்கதைப் பழமையையும் இவ்விலக்கியச் சான்றுகள் காட்டுகின்றன.

'சிலந்தியும் ஆனைக்காவில் திருநிழல் பந்தல் செய்து உலந்து அவண் இறந்தபோதே கோச்செங்கணனுமாக கலந்து நீர் காவிரி சூழ் சோணாட்டு சோழர் தங்கள் குலந்தனில் பிறப்பித்திட்டார் குறுக்கை வீரட்டானாரே.

உறந்தை

உறந்தை, உறையூர், கோழியூர் போன்ற பல பெயர் பெற்ற ஊர். புல பெயர்கள் இத் சிறப்பையும் செல்வாக்கையும் காட்டும், சங்க காலத்திலேயே சோழமன்னர்களின் பெரு மதிப்பினைப் பெற்று, அவர்களின் தலைநகராகத் திகழும் வண்ணம் சிறப்புடன் விளங்கிற்று. சேக்கிழார், சோழனுடன் உறந்தையின் நெருக்கம் கண்டே "உறையூர்ச் சோழன் மணியாரம் சாத்தும் திறத்தை' (ஏயர் 76) எனப்பாடிச் செல்கின்றனர். இவ்வூர்ப் பெயர், பண்டு தொட்டே உறந்தை என்றும் உறையூர் என்றும் வழங்கிவருவதால் இடைக்காலத்தும் இவ்விரு பெயர்களையும் புலவர் சுட்டும் நிலை இயல்பாக அமைகிறது. எனி னும் 'உறையூரே' முதல் பெயர் உறந்தை மருஉப் பெயர் என்பதையும் நாம் அறிகின்றோம்.[1] இது காவிரிக் கரையில் உள்ளதொரு ஊர். எனவே அப்பகுதியில் முதலில் மக்கள் உறைவதற்குத் தேர்ந்தெடுத்த ஊர் என்ற நிலையில் மக்கள் உறைவதற்கு ஏற்ற ஊர் என்ற பொருளில் இப்பெயர் தோன்றியிருக்கலாம்.

உறந்தை என்ற ஊர் மக்களின் சிக்கனம் போன்ற பல காரணங்களால் பின்னர் மருவி வழங்கினும், மக்களிடம் 'உறையூர்' என்ற பெயரும் செல்வாக்கு இழக்க வில்லை என்பதையே இப்பெயரின் வாழ்வு காட்டுகிறது. 'கோழியூர்' சோழன் வரலாறு தொடர்பாக அமைகிறது. இந்த உறந்தை நகரில் விளங்குகின்ற சிராப்பள்ளி எனத் திருநாவுக்கரசர் குறித்த நிலையினைக் காண்கின்றோம். ஆயின் இன்று, திருச்சிராப்பள்ளி செல்வாக்கு பெற, 'உறையூர்' அதனுள் ஒரு பகுதியாக விளங்கக் காண்கின்றோம்.

முத்தொள்ளாயிரமும்,
சிவபெருமான் திருவந்தாதி,

'விரையார் புனற் கங்கை சேர் சடையான் பொன்னார்
விரையார் பொழில் உறந்தை மேயான்' (65)
சாந்தம் வெண்ணீ றெனப்பூசி வெள்ளஞ் சடை வைத்தவர்
காந்தளாரும் விரலேழை யோடாடிய காரணம்
ஆய்ந்துகொண்டால் கறியந் நிறைந்தாரவ ரார்கொலோ
வேந்தன் மூக்கீச் சரத்தடிகள் செய்கின்றதோர் மெய்ம்மையே

எனவும் உறந்தை பற்றி உரைக்கின்றன. உறந்தையில் உள்ள கோயில் முக்கீச்சுரம் எனப்படும். உறையூரை வடமொழியில் உரசபுரம் என்று அழைத்ததாகத் தெரிகிறது.1
எறும்பியூர் மலை

திரு எறும்பூர்

'திரு எறும்பூர்' என வழங்கப்படும் இவ்வூர் இன்று திருச்சி மாவட்டத்தைச் சார்ந்து அமைகிறது. 'தேவர்கள் எறும்பு வடிவம் கொண்டு வழிபட்டனர் எனவே இப்பெயர் என்பது புராணக் கருத்து[1], எனினும் மலைமேற் கோயில் இருந்தது என்பது அப்பர் பாடல்வழி புரிகின்ற ஒன்று. திருவெறும்பியூர் மலைமேல் மாணிக்கம் என அவர் விளித்துப் பாடுவதைக் காண்கின்றோம். எறும்பியூர் மலை இன்று எறும்பூர் ஆக எளிமை கருதி திரிந்தது போலும். கோயில் செல்வாக்கு பெற்ற காரணத்தால் அம்மலைப் பெயரிலேயே ஊர்ப்பெயரும் அமைந்தது எனத் தோன்றுகிறது.

கற்குடி

கற்குடி இன்று உய்யக்கொண்டான் மலை என்ற பெயரில் அமையும் இத்தலம் திருச்சி மாவட்டத்தில் உள்ளது கோயில் மலையின் மீது உள்ளது. மூவர் பாடலும் பெற்ற தலம் இது. மலைத்தலம் என்பதனை ஞானசம்பந்தர் பாடல் விளக்கங்கள் காட்டுகின்றன.

போர கலந் தரு வேடர் புனத்திடையிட்ட விறகில்
காரகிலின் புகை விம்மூங் கற்குடி மாமலை யாரே (43-3)
வண்டிசை யாயின பாட நீடிய வார்பொழில் நீழல்
கண்டமர் மாமயிலாடும் கற்குடிமாமலையாரே (43-9)
வடந்திகழ் மென்முலை யாளைப் பாகம தாக மதித்துத்
தடந்திரை சேர்புனல் மாதைத் தாழ்சடை வைத்த சதுரர்
இடந்திகழ் முப்புரி நூலர் துன்பமொ டின்பம தெல்லாம்
கடந்தவர் காதலில் வாழும் கற்குடி மாமலை யாரே

கற்குடி என்ற ஊர்ப்பெயர் மட்டுமே திருநாவுக்கரசர் பாடலில் அமைகிறது. (285-3) சுந்தரர், பூம்பொழில்கள் (27-1) சோலைகள் (27-2) கரும்பாரும் வயல்கள் (29-9) போன்றவை சூழ்ந்து காணப்படும் இவ்வூர் வளத்தினைச் சிறப்பிக்கின்றார். இந்நிலையில் மலைப்பகுதியைச் சார்ந்த ஊர் காரணமாகக் 'கற்குடி' என்ற பெயர் அமைந்து இருக்கும் எனத் தோன்றுகிறது. பின்னர் இறைவன் சிறப்பு காரணமாக 'உய்யக் கொண்டான் மலை' என்று வழங்கத் தொடங்கிற்று எனக் கருதலாம். கல்வெட்டு இரண்டு பெயரையும் சுட்டுகிறது.

சிராப்பள்ளி

சங்க காலத்தில் உறையூர் மிகப் புகழ்பெற்றிருந்த நிலையைக் காண்கின்றோம், இடையில் சிராப்பள்ளிக் கோயில் நிலையில் புகழ்பெற, இன்று உறந்தை புகழ் மறைந்து திருச்சிராப்பள்ளி மிகுந்த புகழுடன் அமையும் நிலை அமைகிறது.

உறைவதற்கு ஏற்ற இடம் என்ற நிலையில் காவிரிக்கரையில் மிக்க புகழுடன் இருந்த நிலையைச் சங்க இலக்கியம் காட்டும், அரசியல் நிலையிலும், மன்னர் வாழ்விடமாக இது அமைந்தது.

“சிராப்பள்ளி” என்ற பெயர் இன்று திருச்சிராப்பள்ளி என்று வழங்கினாலும் திருச்சி என்ற குறுக்கமே பெரும்பழக்காக அமைகிறது. ‘பள்ளி’ பொதுவாக வாழ்விடம் குறித்து அமையிலும், இப்பெயரோடு தொடர்புடைய வரலாறுகளைக் காண சமணர் தொடர்புடையதாகவே இது அமைந்திருக்கலாம் எனத் துணியலாம். மூன்று தலைகளைப் பெற்று இருந்த அசுரன் வழிபட்டமையால் திருச்சிராப்பள்ளி என்று பெயர் பெற்றது என்பர். போன்ற பலஎண்ணங்கள் இது குறித்து வழங்கின எனினும், இவ்வூர் பற்றிய தோற்றம் நோக்க தெளிவு கிடைக்கின்றது. முதலில் பழமை நிலையில் காணலாமட். சிராப்பள்ளி என்ற பெயர் பண்டு இல்லை.

உறந்தை என்ற பெயரே முதலில் இருந்தது. உறந்தையைச் சார்ந்த இன்று அமையும் மலைப் பகுதியைக் குறிக்கும் அகநானூற்றுப் பாடல், கறங்கிசை விழவின் உறந்தைக் குணாது.

நன்றுடையானை தீயதிலானை நரைவெள்ளேறு
ஒன்றுடையானை உமையொரு பாகம் உடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறஎன் உள்ளம் குளிருமே

நெடும் பெரும் குன்றத்து என இக் குன்றம் பற்றி இயம்புகின்றது. எனவே இப்பெயரின்மை உறுதிப்படுகின்றது. சிராப்பள்ளியைப் பற்றிய ஆய்வு செய்யம் தி.வை. சதாசிவம் பண்டாரத்தார், இவ்வூர்ப் பின்னணியை நன்கு ஆய்கின்றார். இவ்வாய்வில் இவர். ‘கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் குன்றின்மேல் சில சமண முனிவர்கள் தங்கித் தவம் புரிந்துக் கொண்டிருந்தனர் என்பது நன்கு தெரியப்படும். அவர்களுள் ‘சிரா’ என்ற முனிவா ஒருவர் இருந்தமை அங்குள்ள கல்வெட்டுகளால் அறியப்படுகிறது. அம்முனிவர் அத்தவப்பள்ளியின் தலைவராயிருந்தமை பற்றி அது சிராப்பள்ளி என்று முதலில் வழங்கத் தொடங்கி, அவர் காலத்திற்குப் பின்னரும் அப்பெயரோடு நின்று நிலவுவதாயிற்று” என சுட்டிச் செல்வது இப்பெயரைப்பற்றிய தெளிவைத் தருமாறு அமைகிறது.[2] மகேந்திரவர்மன் சிராப்பள்ளி பெருங் குன்றைக் குடைந்து அங்கே சிவபெருமானுக்குத் திருக்கோயில் அமைத்தவன் என்பது ஆராய்ச்சியில் பெறப்படுகிறது என்றும் இவர் குறிப்பிடுகின்றார். சிராப்பள்ளி கோயிலைப் பாடியவர்கள் சம்பந்தர், அப்பர், ‘சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளி குன்றுடையானைக் கூற என்னுள்ளம் குளிருமே” என்கிறார் சம்பந்தர்.

முடிவுரை

மக்கள் திருத்தலங்களைச் சார்ந்து வாழ்ந்தனர். ‘கோயிலில்லாத ஊர்களில் குடியிருக்க வேண்டாம்” என்பது நமது முன்னோர்களின் பொன் மொழியாகும். ஆலயம் இருக்கின்ற ஊர்களில் வசிப்பது புண்ணியமாகும். இந்த ஆலயங்களில் சமயக் குரவர்கள் சென்று பாடல்களைப் பாடித் தமிழ்மொழிக்குப் பெருமை சேர்த்தனர். இலக்கிய வளம் சேர்த்தனர். மக்கள் ஒருமைப் பாட்டையும் பண்பாட்டையும் வளர்த்தனர். ஆலயங்கள் மக்கள் ஒருமைப்பாட்டிற்கு வழிவகுக்கின்றன.

97. தமிழிலக்கியங்களில் ஊர்ப் பெயர்கள் (சிவகங்கை மாவட்டம்)

முனைவர் க.மோகன்,
ஆய்வக உதவியாளர் (தெ.நி),
அழகப்பா அரசு கலைக்கல்லூரி,
காரைக்குடி 630 003.

முன்னுரை

இடங்கள் பெயர் பெற்ற விதம் பல எனினும் இவற்றுள் மக்கள் வாழுகின்ற பகுதிகள் ஊர், பாடி, சேரி, மங்கலம், பட்டி என்ற பல பெயர்களாலும், இப்பல பகுதிகளின் இணைப்பு நகர், நாடு என்ற பெயர்களாலும் சுட்டப்படுகின்றன. மக்கள் வாழுகின்ற நிலப்பகுதிகள் பல பெயர்களால் சுட்டப்பட்டாலும், ஊர் என்ற பொதுப் பெயர் இவையனைத்தையும் சுட்டும் நிலையில் உள்ளது. மக்கள் வாழும் நிலங்களுக்கேற்ப, சூழலுக்கேற்ப, ஊர்ப் பெயர்கள் வேறுபட்டன. இவ்வூர்ப் பெயர்கள் தமிழிலக்கியங்களில் இடம்பெற்ற விதத்தினையும், தமிழிலக்கியங்கள் கிடைக்க உதவிய ஊர்களையும் காண்பது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பிறம்பு மலை என்ற பிரான்மலை

பாரி ஆண்ட பறம்பு நாடு முந்நூறு ஊர்களைத் தன்னகத்தே கொண்டது.

"*முந்நூறு ஊர்த்தே தண்பரம்பு நல்நாடு*
முந்நூறு ஊரும் பரிசிலர் பெற்றனர்
யாமும் பாரியும் உளமே"(1)

என்ற பாடல் மூலம் முந்நூறு ஊரும் பாரியும் கபிலரும் பறம்பு நாட்டின் அணிகலன்களாக விளங்கினர். புறநானூறு பாடல்கள் 105 முதல் 120 வரையிலான பாடல்கள் பாரியின் பண்பைப் பற்றியும் பறம்பு மலையின் சிறப்பைப் பற்றியும் பேசுகின்றன.

இத்தகைய பறம்புமலையாகிய திருக்கொடுங்குன்றம் (பிரான்மலை) காரைக்குடியிலிருந்து 42 கி.மீ தொலைவில் உள்ளது. பிரான்மலை 2450 அடி உயரமுள்ளது. இரண்டாம் நூற்றாண்டில் முல்லைக்குத் தேர் தந்த வேள்பாரி ஆண்டதினால் பெரும் பெயர் கொண்டது. பாரி நாடு பறம்பு நாடு எனவும், பறம்பு மலைச் சுனை பனிச்சுனை எனவும் சங்க இலக்கியங்கள் இயம்புகின்றன. சங்கப் புலவர்களான கபிலர், ஔவை, மிளைக்கந்தனார், நக்கீரர், புறத்திணை நன்னாகனார், பெருஞ்சித்திரனார், நல்லூர் நத்தத்தனார் முதலியோர் வள்ளல் பாரியையும் பறம்புமலையையும் பாடியுள்ளனர்.

தற்போது பிரான்மலை என்றழைக்கப்படுகின்ற பறம்பு மலை சங்க இலக்கியத்தில் கடையேழு வள்ளல்களில் ஒருவனான பாரி வாழ்ந்த இடமில்லை என்பாரும் உளர். 'பறம்புமலை ஒரு குளிர்ந்த மலை. அத்தோடு மட்டுமல்லாமல், பிறம்பு நாட்டைச் சேர்ந்த முந்நூறு ஊர்களும் குளிர்ந்த ஊர்கள். எனவே தான் கபிலர் பாடும் போது 'முந்நூறு ஊர்தே தண் பறம்பு நன் நாடு' என்று பாடுகிறார். இந்த குளிர்ந்த பறம்புமலை தமிழ்நாட்டுக்கு அப்பால் கேரளகர்நாடகத்தில் அமைந்திருப்பதைப் பல தமிழ் அறிஞர்கள் ஆய்வு செய்யாதது வருந்தத்தக்கது"(2) என்று தஞ்சை சுந்தரராசன் குறிப்பிடுகிறார்.

குன்றக்குடி ஆதீனப் புலவர் மரு.பரமகுரு தனது **'பறம்புமலை திருக்கொடுங்குன்றம்'** என்ற நூலில் தற்போதுள்ள பிரான்மலைதான் பாரியின் பறம்பு மலை என்று அறுதியிட்டுக் கூறியுள்ளார். "பிறம்பு நாடு என்பது பிரம்பூர் எனவும் மருவி வழங்கி வருகிறது. நகரத்தார்கள் ஒரு பிரிவாகிய மாற்றூர்க் கோவிலைச் சேர்ந்தவர்கள் தங்கள் திருமணங்களில் எழுதும் இசைவுப் பிடிமானத்தில் **'கேரள சிங்க வள நாடாகிய பிரம்பூர் நாட்டில'** என்று இன்றளவும் எழுதி வருகிறார்கள் என்று சோமலெ குறிப்பிடுகிறார்."(3) சோமலெயின் கூற்றுப்படியும் தஞ்சை சுந்தரராசன் கூற்றுப்படியும் நோக்கும் போது, பிரான்மலை பாரியின் பறம்புமலை தானா? என்ற ஐயப்பாடு ஆய்விற்குரியதாகிறது. "பாண்டி நாட்டிலுள்ள பறம்பு மலையையும், அதை அடுத்த முந்நூறு ஊர்களையும் ஆண்டு வந்தான் பாரி"(4) என்ற ரா.பி.சேதுபிள்ளையின் கூற்றும் நோக்கத்தக்கது.

தமிழிலக்கியங்களில் காணப்படும் ஊர்ப் பெயர்களை பல்வேறு பெயராய்வு நூல்கள் வெளிக்கொணர்ந்துள்ளன. தமிழிலக்கியங்கள் தோன்றுவதற்குக் காரணமான மண்ணின் மைந்தர்கள் வாழ்ந்த ஊர்களைப் பற்றியும், தமிழிலக்கியங்கள் காலத்தாலும், கரையான்களாலும் அழிந்துவிடாமல் காத்த ஊர்களைப் பற்றியும் அறிந்து கொள்வதும் தமிழுக்குச் செய்யும் தொண்டாகும். அந்தவிதத்தில் சில ஊர்களைப் பற்றிக் காணலாம்.

ஒக்கூர்

காரைக்குடிக்கும் சிவகங்கைக்கும் இடையில் உள்ள ஊர். இவ்வூரில் வாழ்ந்தவர் சங்கால பெண்பாற் புலவர் ஒக்கூர் மாசாத்தியார் ஆவார். "இன்னும் வெம்மை சான்ற போர்க்களத்தில், அஞ்சாது நின்று அமர் புரியுமாறு, தாம் பெற்ற அருமை மைந்தரை ஊக்கி அனுப்பிய வீரத்தாயரும் அக்காலத்தே விளங்கினர்"(5) என்பர் ரா.பி.சேதுபிள்ளை. அத்தகைய வீரத்தாயரைப் பற்றி ஒக்கூர் மாசாத்தியார்,

"கெடுக சிந்தை கடிது இவள் துணிவே
மூதின் மகளிராதல் தகுமே..."(6)

என்ற புறநானூற்றுப் பாடலைப் பாடியுள்ளார். பெண்களும் வீரத்தில் சிறந்தவர்கள் என்பதை உலகிற்குக் காட்டிய ஒப்பற்ற பாடலைப் பாடியவரைப் பெற்ற ஊர் ஒக்கூராகும்.

மிதிலைப்பட்டி

காரைக்குடியிலிருந்து சுமார் 30 கி.மீ. தொலைவில் உள்ளது மிதிலைப்பட்டி என்ற சிற்ராகும். செல்லரித்துக் கொண்டிருந்த ஓலைச்சுவடிகளை ஆராய்ந்து, அச்சேற்றித் தமிழுக்குத் தொண்டு செய்த உ.வே.சா.விற்குச் சிலப்பதிகார ஏடுகளை தந்துதவிய ஊர் மிதிலைப்பட்டியாகும். மிதிலைப்பட்டி செட்டிநாட்டின் தமிழ்ப் பண்ணை என்கின்றளவிற்கு அங்கு பல கவிராயர்கள் வாழ்ந்துள்ளனர். அவர்களில் 'சிற்றம்பலக் கவிராயர்' என்ற புலவர் பெருமகனாரே சிலப்பதிகார ஏடுகளை உ.வே.சா.விற்கு வழங்கியவர். உ.வே.சா. மிதிலைப்பட்டியைத் தமிழ்த் தாய் குடிகொண்டிருக்கும் கோயில் என்று பாராட்டியுள்ளார். "மிதிலைப்பட்டி, பாடுவார் முத்தப்பர், வெண்பாப்புலிச் சொக்கலிங்கக் கவிராயர் போன்ற புலவர்கள் பலரும் ஒருங்கு கூடும் இடமாக இருந்தது. மதிலைப்பட்டி, புலவர் கூடும் தமிழ் மையமாகவும், அறிவுப் போர் நிகழும் பட்டிமன்றமாகவும் விளங்கியமை தெளிவாகும். மிதிலைப்பட்டி கவிராயர்களும் அவர்களின் உறவினர்களும் தமிழறிவையும் தமிழின் மேல் ஈடுபாட்டையும் ஏற்படுத்தினர்"(7) என்பர் தே.சொக்கலிங்கம். மிதிலைப்பட்டி கவிராயர்களுள் ஒருவர் தமக்கு இடையூறு செய்த ஒருவர் மீது **'கழுதைவிடு தூது'** என்று ஒரு பிரபந்தம் இயற்றியுள்ளார்.

குன்றக்குடி

பதினான்காம் நூற்றாண்டில் தொடங்கப்பட்ட சைவத் திருமடமான குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் இங்குள்ளது. இவ்வூர் ஆதீனக் கர்த்தாக்கள் தமிழ்த் தொண்டாற்றி வருகிறார்கள். இவ்வூர் குன்றின் மேல் சண்முகநாதர் திருக்கோயில் உள்ளது. உ.வே.சா.வின் ஆசிரியர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை இம்மடத்திற்கு வந்துள்ளவர்களில் குறிப்பிடத்தக்கவர். சிலப்பதிகார ஏடுகள் கிடைப்பதற்கு உ.வே.சா. விற்கு இம்மடத்தின் தலைவர்கள் உதவி புரிந்துள்ளனர். இவ்வூரினை 1984 செப்டம்பரில் ஆங்கில இதழான **"The Hindu"** இல் அன்றைய பாரத பிரதமர் அன்னை இந்திராகாந்தி **"This is what I should like for all other villages"** என்று பாராட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வூர் இந்தியாவின் மாதிரி சிற்றூர் **"Model Village)** என்று மத்திய அரசால் அங்கிகரிக்கப்பட்டுள்ளது.

சிறுகூடல்பட்டி

"கவிஞன் யானோர் காலக்கணிதம்
கருப்படு பொருளை உருப்பட வைப்பேன்
புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்
பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம்
பண்டோர் கம்பன் பாரதிதாசன்
சொல்லாதன சில சொல்லிட முனைவேன்"

என்று தன்னைத் தானே அறிமுகம் செய்து கொண்ட கவியரசு கண்ணதாசனை 1927 ஜூன் 24இல் தமிழன்னை தனக்கென்று ஒரு புதல்வனைப் பெற்றுக் கொண்ட ஊர். இவ்வூர் சிவகங்கை மாவட்டம், காரைக்குடிக்குச் சில கல் தொலைவில் உள்ளது. கண்ணதாசன், தமிழ் மக்களின் உதடுகள் வழியே உள்ளம் புகுந்த மாக்கவிஞன். திரைப்பாடல்கள் மூலம் தமிழினைத் தித்திக்கச் செய்தவர். எளிய நடையில் சந்த வரிசையில் கவிதைகள் இயற்றிய சாதனையாளர். இயேசு காவியம் படைத்தவர்.

மகிபாலன்பட்டி

உலகப் புகழ் பெற்ற **"யாதும் ஊரே யாவரும் கேளிர்"** என்ற புறநானூற்றுப் பாடலைப் பாடிய கணியன் பூங்குன்றனார் பிறந்த ஊர். முன்னைய அண்ணாமலைப் பல்கலைக்கழகத்

தமிழ்த்துறைத் தலைவரும், தமிழறிஞருமான பண்டிதமணி மு.கதிரேசச் செட்டியார் பிறந்த ஊர். கணியன் பூங்குன்றனாருக்கு நினைவு மண்டபம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இவ்வூர் சிவகங்கை மாவட்டத்தில் அமைந்திருப்பது பெருமைக்குரியதாகும்.

நாட்டரசன்கோட்டை

'பாட்டரசன் கால்பட்ட நாட்டரசன்கோட்டை' என்று அழைக்கப்படும் இவ்வூரில்தான் கவிச்சக்கரவர்த்தி கம்பர் தமது இறுதிநாட்களை கழித்துச் சமாதியானார். ஏரெழுபது, சடகோபர் அந்தாதி, சரசுவதி அந்தாதி போன்றவை கம்பரின் பிற நூல்களாகும். இவ்வூரின்கண் அமைந்துள்ளது கண்ணுடைய நாயகி அம்மன் திருக்கோயில். இவ்வூரும் சிவகங்கை மாவட்டத்தில் அமைந்துள்ளது.

திருவாதவூர்

'பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்திவியன் மண்டலத் தீசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண்டு அக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்'

என்று பாடிய மாணிக்கவாசகர் பிறந்த ஊர். இவ்வூர் திருப்பத்தூரிலிருந்து மதுரை செல்லும் வழியில் மேலூருக்கு அருகாமையில் அமைந்துள்ளது. அங்கு அவருக்கு கோயில் எழுப்பப்பட்டுள்ளது.

விருந்திடாத ஊர் - செவ்வூர்

நகரத்தார்கள் வாழுகின்ற தொண்ணூற்றாறு ஊர்களில் ஒன்று செவ்வூர். காரைக்குடியிலிருந்து 40 கி.மீ. தொலைவில் பூலாங்குறிச்சி வ.செ.செ. சிவலிங்கம் செட்டியார் அரசு கலைக்கல்லூரிக்கு அருகாமையில் அமைந்த ஊராகும். நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் மரபில் காலத்தாற் முதற்கண் அறியப்பெறும் அருள்மொழிப் புலவர் பாடுவார் முத்தப்பர் ஆவார். **'காடுவெட்டிப் போட்டுக் கடிய நிலந்திருத்தி...'** என்ற பாடல் நகரத்தார் பகுதிகளில் பரவிய பாட்டாகும். இப்பாடலைப் பாடியவர் பாடுவார் முத்தப்பர். "அவர் செவ்வூர்க்குப் போன நேரம் உணவு உண்ணும் நேரம். அருள்மொழிக் கவிஞர் ஊருள் வருவதைக் கண்ட பின்னும் அவ்வூர் நகரத்தார்கள் யாரும் வரவேற்று உபசரிக்கவில்லை என்பது அவர் வருத்தம். பசி நேரத்தில் உணவளிக்க வேண்டும் என்ற மனித நேயமற்ற அவர்கள் பண்பைப் பொதுமைப்படுத்தி,

'எவ்வூரிற் போனாலும் எவ்வுலகிற் சென்றாலும்
செவ்வூற் போகமனம் செல்லாதே - அவ்வூரார்
பார்த்திருக்கத் தின்பார் பசித்தார் முகம் பாரார்
கோத்திரத்திற் குள்ளகுணம்!'

என்று பாடினார். பிறகு அவருக்கு உணவளித்து, பிழை பொறுக்க வேண்டினர். அதன்பின், அவ்வூரார் பார்த்திருக்கத் தின்னார் பசித்தார் முகம் பார்ப்பர் என்று நல்வாக்காக மாற்றினார்."[8] ஆனால் பாட்டில் விழுந்த கறை இன்னும் மாறவில்லை. இலக்கியம் அறியாத இப்பகுதியினர்கூட இப்பாடலை அறிந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

'எத்திசைச் செல்லினும் அத்திசைச் சோறே' என்று பாடிய சங்கப் புலவர் ஔவையாரை நினைவூட்டும் நிகழ்வாக இது அமைந்துள்ளது. இது தமிழ்ப் புலவர்களின் யாருக்கும் அஞ்சாதத் தன்மையினைக் காட்டுகிறது.

முடிவுரை

ஊர்கள், பாடி, சேரி, மங்கலம், பட்டி, புரம், பட்டினம், பாக்கம், புலம், குப்பம், பேட்டை, ஊர் என்றவாறு அழைக்கப்படுகின்றன. புலம் என்னும் சொல் நிலத்தைக் குறிப்பதாகும். பெயரைச் சொல்லாமல் ஊரினைச் சொன்னாலே அவரின் பெருமைகளை அறிந்து கொள்ள முடிகின்றளவிற்கு ஊர்ப் பெயர்கள் காணப்படுகின்றன. அத்தகைய ஊர்களின் பெருமைகளைத் தமிழிலக்கியங்கள் பலவாறு எடுத்தியம்பியுள்ளன. தமிழிலக்கியங்கள் பெருமைபட பாடிய பல ஊர்கள் சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்ததாக அமைந்திருப்பது இம்மண்ணின் பெருமையாகும். தமிழிலக்கியங்களால் ஊர்கள் பெருமைப்பட்டது. இப்பகுதி ஊர்களாலும் தமிழிலக்கியங்கள் பெருமையடைந்தன என்பது அறியப் பெறுகிறது. பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களை இங்கு கொணருவது மட்டுமல்ல நமது பெருமைகளையும் பிற பகுதியினர் அறிந்து கொள்வதற்கு இத்தகைய ஆய்வுகள் அவசியமாகின்றன.

அடிக்குறிப்புகள்

1. புறம்.2
2. சுந்தரராசன், தரணி ஆண்ட தமிழ் வள்ளல்கள் (முதல் பாகம் பறம்பு நாட்டுப் பாரி), ப.9.
3. சோமலெ, செட்டிநாடும் செந்தமிழும், ப.34.
4. ரா.பி.சேதுபிள்ளை, தமிழின்பம், ப.14.
5. மேலது, ப.20.
6. புறம்.279.
7. தே.சொக்கலிங்கம், பாடுவார் முத்தப்பர், ப.14.
8. மேலது, ப.16.

துணைநூற்பட்டியல்

1. ஆளவந்தான், ஆர்., இலக்கியத்தில் ஊர்ப் பெயர்கள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், டி.டி.டி.ஐ. தரமணி, சென்னை600 113.

2. சுந்தரராசன், தரணி ஆண்ட தமிழ் வள்ளல்கள் ஓர் ஆய்வு (முதல் பாகம் பறம்புநாட்டுப் பாரி, மான்துயில் நிலையம், 36, தூவாரக நகர், தஞ்சாவூர்1, முதற்பதிப்பு ஏப்ரல்1989.

3. சேதுப்பிள்ளை, ரா.பி., தமிழின்பம், பழனியப்பா பிரதர்ஸ், 14, பீட்டர்ஸ் ரோடு, சென்னை600 014, பதினான்காம் பதிப்பு 2004.

4. சொக்கலிங்கம், தே., பாடுவார் முத்தப்பர், பார்வதி பதிப்பகம், தையல் நாயகி இல்லம், 11, எட்டாவது வீதி, தென் விரிவு, காரைக்குடி3.

5. சோமலெ, செட்டிநாடும் செந்தமிழும், பாரிநிலையம், 59 பிராட்வே, சென்னை, இரண்டாம் பதிப்பு 1960.

6. தமிழ்ப் பொழில், 1961, ஏப்ரல்மே.

7. பகவதி, கு., இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள் (தொகுதி), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், டி.டி.டி.ஐ. தரமணி, சென்னை600 113.

8. ...., தமிழகம்இலங்கை ஊர்ப் பெயர்கள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், டி.டி.டி.ஐ. தரமணி, சென்னை600 113.

9. பரமகுரு. மரு., பறம்புமலை திருக்கொடுங்குன்றம், மணிவாசகர் பதிப்பகம், 55, லிங்கி தெரு, சென்னை1, முதற்பதிப்பு ஏப்ரல் 13, 1992.

98. கருணைமிகு திருக்கருவையம்பதி

பா.ஸ்ரீராமகிருஷ்ணன். எம்.ஏ.,எம்.ஃபில்
அய்யநாடார் ஜானகி அம்மாள் கலலூரி (தன்னாட்சி),
சிவகாசி.

முன்னுரை

நல்லனவே செய்யும் நலம் தரும் பல திருப்பதிகங்களுள் மூவர் முதலிகள் பாடிய பாக்களைத் 'தேவாரம்' என்று அழைப்பார்கள் நம் முன்னோர்கள். தேவாரப் பாடல் பெற்ற பாண்டிய நாட்டு ஸ்தலங்கள் பதினான்கில் திக்கெல்லாம் புகழுறுந் திருநெல்வேலி சீமையின் வடகோடிப் பகுதியில் இருக்கும் கரிவலம்வந்தநல்லூர் என்ற ஊர் பெயரைப் பற்றி ஆய்வதாக இவ் ஆய்வுக் கட்டுரை அமைகிறது.

அமைவிடம்

மதுரையில் இருந்து திருநெல்வேலி செல்லும் நெடுஞ்சாலையில் இராஜபாளையத்திற்குத் தெற்கே 21 கி.மீ தொலைவிலும், சங்கரன்கோயிலில் இருந்து வடக்கே 10 கி.மீ தொலைவிலும் அமைந்துள்ளது இக் கரிவலம்வந்தநல்லூர். கரிவலம்வந்தநல்லூரைச் சுற்றி சுமார் 20க்கும் மேற்பட்ட குக்கிராமங்கள் உள்ளன என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

புராணவரலாறு

ஆதியில் இந்திரன், ஜெயந்தன் என்ற விண்ணுக்குரிய அரசர்கள் முன்வினைப் பயனின் காரணமாக களாவனமாக இருந்த இப்பகுதியில் வேடுவர் குலத்தில் பிறந்து காரி, சாத்தான் என்ற பெயர்களை முறையாகக் கொண்டு களாவனத்தில் எழுந்தருளி இருக்கும் இறைவனை அனுதினமும் பூசனை செய்து வந்தனர். இந்திரனின் ஐராவதமாகிய வாகனமும் பூவுலகில் யானையாகப் பிறந்து வளர்ந்து களாவனத்து இறைவனை பூர்வ ஜென்ம புண்ணியத்தால் பூசனை புரிந்தது. திருக்களாவனநாதரைக் காரி, சாத்தன், யானையும் வணங்கி வழிபட்ட காரணத்தால் மூவரும் நற்கதி பெற்றனர். இவ்வாறு யானை வலம் வந்து வணங்கி வழிபட்ட இறைவன் எழுந்தருளி இருக்கும் தலம் ஆதலால் இத்தலத்திற்கு கரிவலம்வந்தநல்லூர் என்ற பெயர் வழங்கலாயிற்று.

கரிவலம்வந்தநல்லூர் பெயர்வரக் காரணம்

"கரி" என்ற சொல்லுக்கு தமிழ் அகராதிகள் அடுப்புக்கரி, நிலக்கரி, கருந்தை, கந்துள், எரிந்த கட்டை, காந்து, கருகு, கண்மை, சாட்சி, சான்று, குறைகூறு, நஞ்சு, தாளி, சின, வெறு, உறை, உறுப்பு, கழுதை, வைரம், யானை, என்று பொருள் கூறுகிறது. இருப்பினும், தலத்தின் பெருமை, இறைவனின் மகிமை ஆகியவற்றைக் கொண்டு உற்று நோக்கும் போது கரி என்ற சொல்லுக்கு யானை என்ற பொருளே நேராக அமைகிறது. யானை இவ்வூரில் இருக்கும் இறைவனை வணங்கி வழிபாடு செய்த காரணத்தால் கரிவலம்வந்தநல்லூர் என்று பெயர் பெற்றுள்ளது என்பதனைத் தமிழ் கூறும் நல்லுலகம் நன்கு அறியும்.

கல்வெட்டு

தி. வை. சதாசிவ பண்டாரத்தார், மு. அருணாச்சலம், அ. கி. பரந்தாமன், போன்ற வரலாற்று அறிஞர்கள் கூறும் பிற்காலப் பாண்டியர்களில் ஒருவரான வரதுங்கராமபாண்டிய மன்னனின் தலைநகரமாக விளங்கியது. இக் கரிவலம்வந்தநல்லூர். புகழ் வேண்டா பெருமனத்தராய் வாழ்ந்த மன்னர்கள் மூர்த்தி, தலம், தீர்த்தம், முறையாக கொண்டு இறை வழிபாட்டில் மனம், மொழி, மெய்களால் ஒன்றி வழிபட்டார்கள். இறைவனுக்குச் செய்த தொண்டுகள் மென்மேலும் சிறப்புற திருக்கோயிலின் மதிற்சுவரிலும்; செப்புப் பட்டயத்திலும் தனது ஆணையைப் பிறப்பித்தார்கள். அவ்வாறு கரிவலம்வந்தநல்லூர் திருக்கோயிலின் பிறப்பித்தக் கல்வெட்டுகளில் **'ஆரியநாட்டுக் கரிவரநல்லூர்'** என்று குறிப்பிட்டு இருப்பது இங்கு நோக்கத் தக்கதாகும்.

வேறு பெயர்கள்

உலகம் உய்யத் தோன்றிய திருஞானசம்பந்த சுவாமிகள் அவதரித்த ஊருக்கு பன்னிரெண்டு பெயர்கள் உண்டு என்று சேக்கிழார் சுவாமிகள்

"பிரமபுரம் வேணுபுரம் புகலிபெரு வெங்குருநீர்ப்,
பொருவில் திருத்தோணிபுரம் பூந்தராய் சிரபுரமுன்
வருபுறவஞ் சண்பைநகர் வளர்காழி கொச்சைவயம்
பரவுதிருக் கழுமலமாம் பன்னிரண்டு திருபெயர்த்தால்"

என்று கூறுவார். இதனைப் போன்றே இக் கரிவலம்வந்தநல்லூருக்கும் பன்னிரண்டு பெயர்கள் உண்டு என்ற செய்தியை அகவல் விருத்தத்தில்,

"பத்தி செய் மாநகர மகத்திய நகர மநாதிபுரம் பாவநாசஞ்
சித்துருவ ஞானபாசுர மமுதாசலஞ் சிவசத்தி புரஞ்சீவன்
முத்தி புரியுபயபுரி கரிபுரமம் பரபுரமிம் முந்நீர் ஞால
நத்து கரிவலநகரந் திருக்களாவன மிந்த நகர்ப் பேராமல்"

என்று திருக்கருவைத் தலபுராண ஆசிரியர் தலவிசேட சருக்கத்தில் கூறுகிறார். அப் பன்னிரண்டு பெயர்கள் பின் வருமாறு.

1. அநாதிபுரம்
2. பாவநாசம்
3. சித்துருவம்
4. ஞானபாசுரம்
5. அமுதாச்சலம்
6. சிவசக்திபுரம்
7. சீவன்முக்திபுரி
8. உபயபுரி
9. கரிபுரம்
10. அம்பரபுரம்
11. கரிவலம்
12. திருக்களாவனம் என்பனவாகும்.

மருவு

தஞ்சாவூர் தஞ்சை என்று மருவினாற் போல், சங்கரநயினார் கோயில் சங்கரன்கோயில் என்று மருவினார் போல், கரிவலம்வந்தநல்லூர் கருவை என மருஉவாகி மேன்மையை உணர்த்தும் "திரு" என்னும் அடை பெற்றுத் திருக்கருவை என்று வழங்கலாயிற்று.

அந்தாதியில் அநாதிபுரம்

ஞானத்தின் உச்சியில் வாழ்ந்து காட்டிய அருளாளர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி தானும் வாழ்ந்து காட்டிய வரதுங்கராமபாண்டியன் சைவத் தமிழ் உலகிற்கு வழங்கிய அருள் கொடையே திருக்கருவைக் கலித்துறை அந்தாதி, திருக்கருவை வெண்பா அந்தாதி, திருக்கருவைப் பதிற்றுப்பத்து அந்தாதி என்பனவாகும். இவ் அந்தாதி பாக்கள் யாவும் இறைவன் திருவருளை நமக்கு உணர்த்தி நல்வழிப்படுத்தும் ஞானபோத பாக்களாகும்.

படிப்போரைப் பண்படுத்தும், கேட்போரைத் தன் வயப்படுத்தும், உணர்ந்து வாழ்வோரை உன்னத நிலைக்கு உயர்த்தும். இப்பாக்கள் தோறும் பல இடங்களில் 'கருவை' என்ற சொல்லை பயன்படுத்துகிறார் வரதுங்கராமபாண்டியன்.

சான்றாக,

கண்டேன் கருவைப் பெருமான் - திருக்கருவைக் கலித்துறை அந்தாதி-18

சீரணிந்த தென் கருவை செல்வனே - திருக்கருவை வெண்பா அந்தாதி-1

கருவை வாழும் முன்னோனே - திருக்கருவைப் பதிற்றுப்பத்து அந்தாதி-5

அன்னத் தொகுதி வயல் கருவை - திருக்கருவைப் பதிற்றுப்பத்து அந்தாதி-6

செந்தமிழ்க் கருவை - திருக்கருவைப் பதிற்றுப்பத்து அந்தாதி-86

என்றவாறு இறைவனின் பெருமையையும், மகத்துவத்தையும் ஊரின் வளத்தையும், தமிழின் தனிச் சிறப்பையும் அடையாளம் காட்டும் வரதுங்கராமபாண்டியன் **'கருவை'** என்ற சொல்லைக் கருத்தோடு அழுத்தமாகக் கையாண்டுள்ளார் என்பதனை அறிய முடிகிறது.

காலம்தோறும் திருக்கருவையம்பதி

பதினெட்டாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் வாழ்ந்த பாட்டிசைக்கும் பாவலன்; தொண்டை நாட்டு நமச்சிவாயப் புலவர் **'செய்யாரத் தடம்புடை சூழ் கருவை வாழும் திருக்களாவிச்சுரரே'** என்றவாறு ஊரின் வளத்தைச் சிறப்பிக்கும் போது **'கருவை'** என்ற சொற்பதத்தைப் பயன்படுத்துகிறார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் நிறைவுப் பகுதியில் வாழ்ந்த மலைசாயப் பாடிய சங்குப்புலவர் மரபில் வந்த திருமலைவேற்கவிராயர் தன்னுடைய படைப்புகளின் **'திருக்கருவை'** என்ற அடைமொழியோடு தனது படைப்புகளைப் படைத்திருக்கிறார்.

இருபதாம் நூற்றாண்டின் கடைபகுதியில் வாழ்ந்த சேத்தூர் சமஸ்தான வித்துவான் அப்பாவுக் கவிராயரின் சீடர் சி.ஆ. இராமசாமியாபிள்ளை இலக்கிய இலக்கணங்களை முறையாகக் கற்ற இவருடைய படைப்புகள் யாவும் மரபிலக்கியக் கண்ணோட்டம் நிறைந்தவை. அவைகளில் **தென்கருவை என்றும்,** திருக்கருவை **என்றும், கருவாபுரி என்றும்** ஊரின் திருநாமத்தைத் தாங்கியே தனது படைப்புகளைப் படைத்துள்ளார் என்பதனை அறிய முடிகிறது.

நிறைவுரை

கரிவலம்வந்தநல்லூர் என்னும் பெயர் இலக்கிய உலகில் **திருக்கருவை, தென்கருவை** என்று சிறப்புப் பெயர்களோடு முன்னோரின் மூத்த அருள் நூல்களுக்கு பின்னே தன்னை இணைத்துக் கொண்டு இலக்கிய உலகில் தனது இனிய பயணத்தைத் தொடர்ந்த வண்ணம் உள்ளது.

99. குறுந்தொகையில் ஊர்ப்பெயர்கள்

செ.ரமேஷ்
ஆய்வியல் நிறைஞர்
அ.வ.அ.கல்லூரி (தன்.)
மன்னம்பந்தல்
மயிலாடுதுறை.

முன்னுரை

சங்க இலக்கியங்களுள் தொல்காப்பியம் பதினென்கீழ்க்கணக்கு, சிலப்பதிகாரம், மணிமேகலை என்ற இலக்கியங்கள் வரலாற்றுச் செய்திகளைக் கூறுகின்றன. ஊர்ப்பெயர்கள் என்னும் நிலையில் இலக்கியங்கள் அதிகம் பெயர்களைக் கூறவில்லை. குறைவான பெயர்களைச் சுட்டுகின்றது எனலாம். அன்றைய காலக் கட்டத்தில் இருந்த ஊர்ப்பெயர்களின் நிலையையும், பெயர்கள் எவ்வாறு இடப்பட்டன என்ற நிலையையும் வெளிப்படையாக சங்க இலக்கியம் விளக்கி கூறுகிறது. அச்சங்க இலக்கியங்களில் எட்டுத்தொகை நூல்களில், குறுந்தொகையில் காணப்படும் ஊர்ப்பெயர்கள் பற்றி இக்கட்டுரை அமைந்துள்ளது.

இலக்கியங்களில் உள்ள ஊர்ப்பெயர்களைக் காணும்போது பல்வேறு செய்திகளைக் கூறும் வகையில் அமைந்திருப்பதைக் காணலாம். "ஒரு நாட்டின் பழங்கால வரலாற்றையோ, பண்பாட்டையோ அறிந்து கொள்ள இலக்கியங்கள், சாசனங்கள், பழங்காசுகள், பிறநினைவுச் சின்னங்கள் எந்த அளவு துணை புரிகின்றனவோ, அந்த அளவு துணைபுரியும் தன்மையும் பெருமையும் ஊர்ப்பெயர்க்கும் உண்டு"[1].

குறுந்தொகையில் ஊர்ப்பெயர்கள்

அதங்கோடு

கோடு என்னும் பொதுக்கூறு உச்சி என்ற ஒரு பொருளைத் தரும் சொல். அதவம் என்பது ஒரு மரப்பெயர் என்று குறுந்தொகைப் பாடல் வழி அறியமுடிகிறது.

"அதவங்கோடு என்ற ஊர்ப்பெயர் மரப்பெயரால் பெற்ற ஓர் ஊர்ப்பெயர். அல்லது அதவமரங்கள் நிறைந்த மலைப்பகுதி என்னும் பொருளில் பெற்ற பெயர் எனக்கருத முடிகிறது. அதவங்கோடு என்ற பெயரே அதங்கோடு என்றானது"[2].

"அறங்கரை நாவின் நான்மறை முற்றிய
அதங்கோட்டசாற் கரில்தபத் தெரிந்து"[3]

என்ற தொல்காப்பியப் பாயிரத்திலும் அதங்கோடு என்ற ஊர்ப்பெயர் இடம் பெற்றுள்ளது.

"ஆற்று அயல் எழுந்த வெண்கோட்டு அதவத்து
எழுகுளிறு மிதித்த ஒரு பழம்போலக்
குழைய கொடியோர் நாவே" குறுந். பா. 24 (3-5)

ஆர்க்காடு

ஆர்க்காடு என்னும் ஊர் சோழ மன்னன் சேந்தன் தந்தையாகிய ஆழிசி என்பவனுக்குரியது என்று நற்றிணையும், குறுந்தொகையும் கூறுகின்றன. அகப்பொருள் பற்றிக்கூறும் இவ்விலக்கியங்கள் தலைவியின் நலம்பற்றிக் கூறும்பொழுது ஆர்க்காடு அன்ன நலம் எனப் புகழ்ந்துரைக்கும் நிலையிலேயே ஆர்க்காடு என்ற ஊரைக் குறித்துள்ளன.

சோழ மன்னனுக்குரிய ஆத்தியைக் குறிக்கும் ஆர் என்ற மரத்தால் பெயர் பெற்ற ஊர் ஆர்க்காடு என்பது ஆத்தி மரம் நிறைந்திருந்த பகுதி ஆர்க்காடு என்று பெயர் பெற்றது. ஆர்க்காடு என்ற பெயருடைய மாவட்டம் வடஆர்க்காடு மாவட்டம், தென் ஆர்க்காடு மாவட்டம் என இரண்டு பிரிவாக உள்ளது.

சங்க இலக்கியம் குறிக்கும் ஆர்க்காடு என்ற பெயருடைய இவ்வூர் வட ஆர்க்காடு மாவட்டத்தில் பாலாற்றங்கரையில் உள்ளது.

"நிறைய ஒள்வாள் இளையர் பெருமகன்
அழிசி ஆர்க்காடன்ன இவள்
பழிதீர் மாணலந் தொலைதல் கண்டே" குறுந். பா. 258 (6-8)

ஏழில்

நன்னன் என்பவன் ஏழில் குன்றத்திலிருந்து ஆட்சி புரிந்ததாகச் சங்ககால இலக்கியங்கள் கூறுகின்றன . ஏழில் என்பது ஏழிலை பாலை மரத்தின் பெயரென்று குறுந்தொகை 138 ஆம் பாடலுக்கான விளக்கவுரையில் உ.வே.சாமிநாதையர் குறிப்பிட்டுள்ளார். எனவே ஏழில் மரப்பெயரால் பெற்ற ஊர்ப்பெயர் என்று அறியமுடிகிறது.

"எம்மில் அயலது ஏழில் உம்பர்" (குறுந். பா. 138 (2))

குறுந்தொகை மட்டுமின்றி நற்றிணையின் 391 ஆவது பாடல் அகநானூற்றில் 152, 345, 349 ஆவது பாடல்களில் ஏழில் என்ற ஊர்ப்பெயர் இடம் பெற்றுள்ளது.

குறும்பூர்

குறும்பு என்பது பாலை நிலத்து ஊர். இப்பெயர் அடிப்படையில் குறும்பூர் என்ற ஊர்ப்பெயர் தோற்றம் பெற்றது. விச்சியூர் கோமகன் பகைவர்களுடன் பொருதபொழுது குறும்பூர் ஆர்த்தது என்று சங்க இலக்கியம் கூறுகிறது.

"வில் கெழுதானை விச்சியர் பெருமகன்
வேந்தரொடு பொருத ஞான்றைப் பாணர்
புலி நோக்குறழ் நிலை கண்ட
கலிகெழு குறும்பூரார்ப்பினும் பெரிதே" குறுந். பா. 328 (5-8)

குன்றூர்

குன்றை அடுத்துள்ள ஊர் என்ற நிலையில் குன்றூர் என்ற ஊர்ப்பெயர் தோற்றம் பெற்றது. கிழார் என்னும் புலவரும் அவர் மகன் கண்ணனாரும் இவ்வூரினர் ஆகையால்தான், குன்றூர் கிழார் என்றும் குன்றூர் கிழார் மகனார் கண்ணத்தனார் என்றும் பெயர் பெற்றிருந்தனர். நற்றிணையில் 382 ஆம் பாடல் கண்ணத்தனாரும், புறநானூற்றில் 338 ஆம் பாடல் கிழாரும் பாடிய பாடல்களாகும்.

தொன்று முதிர் வேளிர் என்றும், குன்றூர் குணாது தண் பெரும் பௌவம் என்றும் இலக்கியங் கூறுவதை நோக்கும்பொழுது கீழ்க்கடற்கரையை அடுத்த குன்றூரே சங்க இலக்கியம் குறிப்பிடும் குன்றூர் ஆகும்.

"கணைக் கோட்டு வாளைக் கமஞ்சூல் மடநாகு
துணர்ந் தேக்கொக்கின் தீம்பழம் கதூஉம்
தொன்று முதிர் வேளிர் குன்றூர்க் குணாது" குறுந். பா. 164 (1-3)

கொல்லி

கொல்லி என சங்க இலக்கியங்களில் இடம்பெற்ற ஊர்ப்பெயர் மலைப்பகுதி ஊராகும். ஊரின் பெயர் அவ்வூர் அமைந்த மலைப்பகுதிக்கோ, மலைப் பகுதியின் பெயர் அங்கே அமைந்த ஊருக்கோ பெயராக அமைந்திருக்க வேண்டும். கொல்லிமலை ஓரி என்ற வள்ளலுக்குரியது. கொல்லிமலை குறித்த குறிப்புகளை நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகிய இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன.

"கொல்லிக் கண்ணன் ...." குறுந். பா. 34
"பெரும்பூட் பொறையன் பேஎமுதிர் கொல்லிக்
கருங்கட் டெய்வம் குடவரை எழுதிய" குறுந். பா. 89 (4-5)
"கடுங்கண் வேழத்துக் கோடு நொடுத்து உண்ணும்
வல்வில் ஓரிக் கொல்லிக் குடவரை" குறுந். பா. 100 (4-5)

தொண்டி

தொண்டி என்னும் பெயருடைய ஓர் ஊர் துறைமுகப்பட்டினமாக இருந்தது. தொண்டி என்ற பெயருடன் தமிழ்நாட்டில் இரண்டு துறைமுக நகரங்கள் இருந்தன என்று இலக்கியங்களால் அறிய முடிகிறது. அவற்றுள் ஒன்று சங்க காலத்தில் மேற்குக் கடற்கரையில் அமைந்திருந்த தொண்டி என்னும் துறைமுக நகரம். இது சேரர்களுக்குரியது. மற்றொன்று கீழைக் கடற்கரையில் பிற்காலத்தில் அதே பெயருடன் அமைந்த நகரம். இது சோழர்களுக்குரியது. ஒரு கடற்கரை நகரம் அழிந்த பிறகு அதே பெயருடன் வேறொரு நகரம் அமைந்திருக்க வேண்டும்.

"குணகடல் திரையது பறைபுத நாரை
திண்தேர்ப் பொறையன் தொண்டி முன்துறை" குறுந். பா. 128(1-2)

"திண்தேர் நள்ளி கானத்து அண்டர்
பல் ஆ பயந்த நெய்யின், தொண்டி" குறுந். பா. 210 (1-2)

"தொண்டி அன்ன என் நலம் தந்து
கொண்டனை சென்மோ மகிழ்ந நின்" குறுந். பா. 238 (4-5)

பறம்பு

பறம்பு என்பது ஒரு மலையின் பெயர். அம்மலையையுடைய நாட்டிற்கும் அது பெயராயிற்று. பறம்பு நாடு முந்நூறு ஊர்களை உடையது. இது பாரி என்ற மன்னனின் ஆட்சியில் இருந்த நாடு. பறம்பு என்ற ஊர்ப்பெயர்

குறுந்தொகை மட்டுமின்றி அகநானூறு, புறநானூறு, சிறுபாணாற்றுப்படை போன்ற சங்க இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளது.

"பாரி பறம்பிற் பனிச்சுனைத் தெண்ணீர்" குறுந். பா. 196

மாந்தை

மாந்தை என்னும் ஊர்ப்பெயர் மாந்தை யெனவும் வழங்கப் பெற்றுள்ளது. இரண்டும் ஊரின் பெயரே, இலக்கியங்களில் பாடவேறுபாடாக இடம் பெற்றிருப்பதாகவும் தெரிகிறது.

நற்றிணையில் 35 மற்றும் 395 ஆவது பாடலினும், அகநானூற்றில் 127 மற்றும் 376 ஆவது பாடலிலும் மாந்தை என்ற ஊர்ப்பெயர் இடம்பெற்றுள்ளது. குறுந்தொகையில்,

"குட்டுவன் மாந்தை அன்ன எம்
குழை விளங்கு ஆய்நுதற் கிழவனும் அவனே" குறுந். பா. 34 (6-7)

"நாரை நிரை பெயர்ந்து அயிரை ஆரும்
ஊரோ நன்று மன் மரந்தை"

என்ற அடிகளால் மாந்தை, மரந்தை என்ற ஊர்ப்பெயரினை அறிய முடிகின்றது.

முள்ளூர்

முள் நிறைந்த மலையையுடைய ஊராதலின் இது முள்ளூர் எனப்பட்டது. முள்ளூர் திருமுடிக்காரியின் ஆட்சிக்குட்பட்டதாய் இருந்தது. இவ்வூரில் ஆரியருக்கும், மலையனுக்கும் போர் நடந்தது. அப்போரில் ஆரியர் படை தோற்று ஓடியது.

"இரண்டு அறி கள்வி நம் காதலோளே
முரண் கொள் துப்பின் செவ்வேல் மலையன்
முள்ளூர்க் கானம் நாற வந்து
நள்ளென் கங்குல் நம்மோரன்னன்" குறுந். பா. 312 (1-4)

நற்றிணை, அகநானூறு, புறநானூறு போன்ற இலக்கியங்களிலும் முள்ளூர் என்ற ஊர்ப்பெயர் பயின்று வந்துள்ளது.

முடிவுரை

ஊர் பெயராய்வு என்பது இன்றியமையாத ஒன்றாக அமைகிறது. இடப்பெயர்கள், ஊர்ப்பெயர்கள், உலக அளவில் இடப்பெயராய்வுகள் போன்றவைத் தொடர்பான செய்திகள் இவ்வியலில் ஆராயப்பட்டுள்ளது.

மனிதன் ஓரிடத்திலே நிலைத்து வாழத் தொடங்கிய காலத்திலே இடப்பெயர்கள் தோற்றம் பெற்றது. மேலும் மனிதன் இடம்விட்டு இடம் பெயரத் தொடங்கிய காலத்து இடப்பெயர்கள் பற்றிய சிந்தனைகள் வளர்ந்தது எனினும் 18-ஆம் நூற்றாண்டிலேயே இடப்பெயராய்விற்கென ஒரு தனித்துறை ஐரோப்பாவில் தோற்றுவிக்கப்பட்டது எனலாம்.

சான்றெண் விளக்கம்

1. ஆர். ஆளவந்தார், கல்வெட்டில் ஊர்ப்பெயர்கள், ப.2
2. ஆர். ஆளவந்தார், இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள், ப.61
3. தொல்காப்பியம், சிறப்புப்பாயிரம்.
4. ஆர். ஆளவந்தார், இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள், ப.70
5. மேலது, ப. 118
6. மேலது, ப. 164

100. சங்க இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள்

பொன். ரமேஷ்குமார்
முனைவர்பட்ட ஆய்வாளர்
தமிழ் மொழித்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை 600 005

சங்க காலத் தமிழ்ச் சமுகத்தின் வரலாற்று ஆவணம் அது. சங்க இலக்கியம் ஒரு பண்பாட்டுப் பெட்டகம். ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர் பலரைப்பெற்ற அறிவுக் கருவூலம். சங்க இலக்கியங்கள் ஒரு பொற்கால இலக்கியம் என்று போற்றப்படும் இந்நிலையில், அவ்விலக்கியங்கள் ஒரு முழுத்தன்மையைப் பெற்று விளங்குகின்றதென்றால் அதற்குச் சங்க இலக்கியம் தொடர்பான பல ஆய்வுகள் துணை நிற்கின்றன. சங்க இலக்கியத்தின் வழி அறியப்பெறும் பல்வேறு சிறப்புக் கூறுகளில் சிற்றூர், பேரூர், நகரம் என வருகின்ற ஊரப்பெயர்கள் குறிப்பிடத்தக்கவையாகும்.

மனித இனம் ஓரிடத்தில் நிலைத்து வாழத் தொடங்கிய காலத்திலேயே இடப்பெயர்களும் தோற்றுவிக்கப் பெற்றிருத்தல் வேண்டும்.1 சங்க இலக்கியத்தில் காணப்படும் ஊர்ப்பெயரமைப்பு முறைகள் அவ்வம் மக்களின் வாழ்விடம், வாழ்க்கைமுறை போன்ற பண்பாட்டுக் கூறுகளைப் பொறுத்து அமைகின்றன.

மனிதன் கூடி வாழ்பவன். எனவேதான் மனிதனைச் சமூக விலங்கு என்றழைக்கின்றோம். தம்மைச் சார்ந்தாரோடு கூடி வாழ்ந்து இன்பம் துய்க்கப்பாடுபடும் மனிதன், அதற்குப் பகையாய் உள்ள அனைத்தையும் விட்டு விலகிச்சென்று, அதற்குத் துணையாக உள்ளவற்றை தன் முயற்சியாலேயே அமைத்துக் கொள்ள விழைகின்றான். இதன் காரணமாக அவன் வாழ்வதற்கேற்ற இடத்தையும், தொழில் புரிவதற்கேற்ற இடத்தையும் தக்க சூழ்நிலையமைப்பைக் கொண்டுத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறான். இவ்வாறு அவன் தேர்ந்தெடுக்கும் இடங்கள் பெரும்பாலும் ஆற்றங்கரையோரமாக அமைந்திருப்பதைக் காணலாம். தாம் தேர்ந்தெடுத்தப் பகுதியைப் பிறர் கண்டறிந்து வரவும், தன் இருப்பிடத்தைப் பிறர்க்குக் குறித்துச்சுட்டவும் ஏதேனும் ஓர் அமைப்பில் ஒரு பெயரிட்டு அழைக்க ஆசைப்படுகின்றான். இதனால் எழுகின்ற பெயரே ஊர்ப்பெயராகும். இப்பெயர் மனிதன் விருப்பத்திற்கு ஏற்ப அமைய நேரிட்டாலும், சூழலுக்கு ஏற்ப அமைவதைக் காண முடிகின்றது. இப்பெயர்கள் காரணப்பெயர்களாகவே அமைந்து விடுகின்றன. இடுகுறிப்பெயர்கள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன.

சங்க இலக்கியத்தில் சுட்டப்பெறும் ஊர்ப்பெயர்கள் காரணமின்றித் தோன்றாமல் தமக்கென மிகப் பழைய மரபைப் பெற்றிருக்கின்றன. "எங்கே வரலாறு மௌனம் சாதிக்கத் தொடங்குகின்றதோ அங்கே இடப்பெயர்களும் ஊர்ப்பெயர்களும் தம் வாய் திறந்து பேசத்தொடங்கும்."2 சங்க இலக்கியம் சுட்டும் இடப்பெயர்களும் ஊர்ப்பெயர்களும் தம் வாய் திறந்து பேச ஊர்ப்பெயராய்வு நல்ல வழி வகுக்கிறது.

மனிதப் பண்பாட்டையும், நாகரிகத்தையும் ஆராய்ந்து வெளிப்படுத்துவதில் வரலாற்றுக்கும், தொல்பொருளாய்வுக்கும் என்ன பங்கு உண்டோ அதே அளவு ஊர்ப்பெயராய்வுக்கும் உண்டு. இவ் ஊர்ப்பெயராய்வு இன்றைய மொழியியல் துறைக்குப் பெரிதும் உதவும். இத்துடன் கிளைமொழி ஆய்வுக்கும் பெரிதும் பயன்படும். நம் மொழியில் பிறமொழித் தாக்கம் எவ்வாறு வளர்ந்து வந்தது என்பதற்கும், அகராதிக் கலையை வளர்ப்பதற்கும் இவ்வாய்வு பயன்படும். மேலும், சமூகவியல், மானிடவியல், நாட்டுப்புறவியல், இயற்கையில் முதலான பல துறைகளுக்கும் இவ்வாய்வுப் பயன்படும்.

சங்க இலக்கியப் பாடல்களில் ஊர்ப்பெயர்களின் பொருள் விளங்குமாறு நேர்முகமாகவும் மறைமுகமாகவும் புலவர்கள் பாடியிருக்கிறார்கள். மேலும், ஊரப்பெயரால் பெயர்பெறும் புலவர்களையும், ஊரோடு தொடர்ந்த பெயர் கொண்ட புலவர்களையும் சங்க இலக்கியத்தில் காண முடிகின்றது. இத்தகையச் சங்க இலக்கியத்திற்கு இலக்கண நூலாகத்திகழும் தொல்காப்பியம் மக்கள் வாழுமிடத்தை 'ஊர்' என்றே குறிப்பிட்டுள்ளது. எனவே, சங்க இலக்கியம் குறிப்பிடும் ஊர்களை அடையாளம் கண்டு விளக்கினால் இக்கட்டுரை விரியும் என்பதால் ஊர்ப்பெயர் அகராதி மட்டும் இக்கட்டுரையில் இடம்பெறுகிறது.

ஊர்ப்பெயர் அகரநிலை

அட்டவாயில் - அகம். 326-5

அதங்கோடு- குறுந். 24-3

அந்தியூர் (பு.பெ.பெ.ஊ.) - அகம். 71

அம்பர் - நற். 141-10, புறம். 385-9, பெ. 117

அரிசில் (பு.பெ.பெ.ஊ.) - நற். 141-11 குறுந். 193, பதிற்று. 8ஆம்பத்து, புறம். 146, 230, 281, 285, 300, 304, 342)

அரிமண வாயில் உறத்தூர் - அகம். 266-13

அரையம் - புறம். 202-8

அலைவாய் (திருச்செந்தூர்) - அகம் - 266-20, திருமுருகு. 125

அழுங்கல் - அகம். 70-17, 100-18, 122-1, 180-15, 301-25, 400-26, ஐங். 181-5, 372-3, கலி. 23-5, குறுந். 12-6, 140-5, 214-7, 276-8, 289-8, 307-8, 351-8, 372-7, 385-7, நற். 36-9, 38-10, 63-5, 138-11, 149-10, 150-11, 203-11, பரி. 12-100, புறம். 220-3

அழுங்கல் மூதூர் - நற். 90-1, 138-11, ஐங். 373-3, பரி. 12-100, அகம். 113-8, 122-1, 301-25

அழுந்தூர் - அகம். 246-14, 168-5, 196-11

அழும்பில் - மதுரைக். 345, அகம். 44-15, சிலப். 25-177, புறம். 283-5

அள்ளூர் (பு.பெ.பெ.ஊ.) - அகம் - 46-14. 46, குறுந்.32, 67, 68, 96, 140, 157, 202, 237, புறம். 306

ஆடுதுறை (பு.பெ.பெ.ஊ.) - புறம். 227

ஆமூர். அகம். 159-19, ஐங்.56-2, சிறுபாண். 188, புறம். 80-1

ஆய்குடி - புறம். 132-8

ஆர்க்காடு-நற். 190-6, 227-6, குறுந். 258-7

ஆலங்குடி (பு.பெ.பெ.ஊ.) - அகம். 106, குறுந். 8, 45 நற். 230, 330, 400, புறம். 319

ஆலத்தூர் (பு.பெ.பெ.ஊ.) - குறுந். 112, 350, புறம். 34, 36, 69, 225, 324

ஆலம்பேரி (பு.பெ.பெ.ஊ.) - நற். 152, 255, அகம். 47, 81, 143, 175

ஆவினன்குடி (பழனி) - திரு முருகு -176, அகம் - 1-4, 61-16

ஆவூர் - நற். 265, அகம். 13, 24,156,159, 202, 224, புறம். 38, 40 , 166, 177, 178, 196, 261, 301, 322

இடைக்காடு (பு.பெ.பெ.ஊ.) - அகம். 139, 194, 274, 284, 304, 374, குறுந். 251, நற். 142, 316, புறம். 42

இடைக்குன்றூர் (பு.பெ.பெ.ஊ.) - 76, 77, 78, 79

இடைகழி (பு.பெ.பெ.ஊ.) -

இடையாறு - அகம். 141-23

இருந்தையூர் - பரி. திரட்டு 1-5

இருப்பையூர் - நற். 111-1, 260-7, 279-1, 350-4, குறுந். 329-1, ஐங். 58-2, அகம். 9-3, 15-13, 81-2, 95-6, 107-16, 135-8, 149-3, 171-14, 225-11, 267-6, 275-11, 321-5, 331-1, 351-8, புறம். 384-7

இலவந்திகைப்பள்ளி (ம.பெ.பெ.ஊ.) - புறம் - 55, 56, 57, 196, 198

ஈர்ந்தை - புறம். 180-7

உகாய்க்குடி (பு.பெ.பெ.ஊ.) - குறுந். 63

உம்பற்காடு (பு.பெ.பெ.ஊ.) - அகம் 264 (பதிற்று. மூன்றாம் பத்தின் பதிகம் 1-2)

உறத்தூர் - அகம். 266-13

உறந்தை (உறையூர்) - அகம். 4-14, 6-5, 93-5, 122-21, 137-6, 226-14, 237-14, 369-14, 385-4, குறுந். 116-2, சிறு. 83, நற். 400-7, பட். 285, புறம். 39-8, 58-9, 352-10, 395-19

உரோடம் (பு.பெ.பெ.ஊ.) - நற். 306, அகம். 69,95, 191, குறுந். 155

ஊனூர் - நற் - 300-10, அகம் - 220-13, 227-18, புறம். 348-5

எயிற்பட்டினம் - சிறுபாண். 153, சிறுபாண். தனிப்பாடல் - 1-34

எருக்காட்டூர் (பு.பெ.பெ.ஊ.) - அகம். 149, 319, 357, புறம். 397

எருமையூர் - அகம். 36-17, 115-5, 253-19

எழில் (எழிற்குன்றம்) - நற். 391-7, குறுந். 138-2, அகம். 152-13, 345-7, 349-9

எறிச்சலூர் (பு.பெ.பெ.ஊ.) - புறம். 54-61, 167-180, 197, 394

ஏணிச்சேரி (பு.பெ.பெ.ஊ.) - புறம். 13, 127, 135, 241, 374, 375

ஏரகம் (சுவாமிமலை) - திருமுருகு - 189, சிலப். 24-48

ஏறை (ம.பெ.பெ.ஊ.) - புறம். 157

ஐயூர் (பு.பெ.பெ.ஊ.) - புறம். 21, அகம். 216, குறுந். 123, 206, 322, நற். 206, 334, புறம். 51, 228, 314, 399

ஒக்கூர் (பு.பெ.பெ.ஊ.) - அகம். 14, புறம். 248, குறுந். 126, 139, 156, 220, 275, அகம். 324, 384, புறம். 279

ஓகந்தூர் - பதிற்று. 7-9

ஒய்மா நாடு (ம.பெ.பெ.ஊ.) -

ஒல்லையூர் - புறம். 242-6

கச்சி (காஞ்சிபுரம்) - பெரும். 420

கட்டிநாடு - அகம். 44-8, 226-16, கலி. 7-9, 85-9, 140-6, குறுந். 11-6, 196-2, நற். 34-3, பதிற்று. 74-12, 81-16,90-25 பெரும். 164 மதுரைக். 434 குறி. 104, 125

கட்டூர் - அகம். 44-10, 212-14, ஐங். 445-2, பதிற்று. 68-2, 82-2, 90-30, புறம். 295-1

கடம்பனூர் (பு.பெ.பெ.ஊ.) - குறுந். 307

கடம்பின் பெருவாயில் - பதிற்று. 4-ம் பத்து-பதிகம்.7

கடிநகர் - பரி. 8-126, 19-29, அகம். 136-6

கடியலூர் (பு.பெ.பெ.ஊ.) - குறுந். 352, அகம். 167

கண்டீரம் (ம.பெ.பெ.ஊ.) - புறம். 248, 149-150, 151

கயத்தூர் (பு.பெ.பெ.ஊ.) - குறுந். 354

கரும்பனூர் - புறம். 381-26, 384-10

கருவூர் - அகம். 98-21

கழாஅர் - நற். 281-3, ஐங். 61-3, 281-3, அகம். 6-20, 222-5, 226-8, 376-4

கழுமலம் - அகம். 44-13, நற். 234-6

கள்ளில் (பு.பெ.பெ.ஊ.) - குறுந். 293, புறம். 175, 389

கள்ளூர் - அகம் - 256-15

காண்டவாயில் - நற். 38-7

காரியாறு (ம.பெ.பெ.ஊ.) - புறம். 47

காவிரிப்படப்பைப் பட்டிம் (பூம்புகார்) - அகம். 205-12, சிலப். 15-151

கானப்பேரெயில் (ம.பெ.பெ.ஊ.) - புறம் - 21

கிடங்கில் - சிறுபாண். 160, நற். 65-2

கிள்ளிமங்கலம் (பு.பெ.பெ.ஊ.) - குறுந். 76, 110, 152, 181

குடந்தை - அகம். 60-13, 284-4, நற். 379-7, புறம். 321-5

குடந்தைவாயில் - நற். 379-7

குடநாடு - அகம். 91-17, 115-5, புறம். 177-12

குடவாயில் - அகம். 44-18, 60-13

குமரி - மதுரைக். 70, பதிற்று. 11-24, புறம். 6-2, 17-1

குராப்பள்ளி (ம.பெ.பெ.ஊ.) - புறம். 58, 60, 197

குழுமூர் - அகம். 168-5

குறுக்கை - அகம். 45-9, 145-11

குறுங்குடி (பு.பெ.பெ.ஊ.) - குறுந். 344, அகம். 4

குறுங்கோழியூர் (பு.பெ.பெ.ஊ.) - புறம். 17, 20,22

பிசிர் - புறம். 67-4, 215-7

பிடவூர் - 295-20

புகார் - அகம். 110-4, 181-22, 190-11, குறுந். 130-1, பதிற்று. 73-13,புறம். 30-13, பட். 173, புறம். 11-6, 15-24, 32-2, 33-10, 39-17, 378-9

புன்னாடு - அகம். 396-2

பூழி - சிறு. 134, மலை. 444, நற். 121-1, 389-9, அகம். 63-5, 133-3, 194-2, புறம். 120-3, 168-4

பூழி நாடு - பதிற்று. 4-6, 84-7, 90-27

பெருங்குன்றூர் (பு.பெ.பெ.ஊ.) - குறுந். 338, புறம். 147, 210, 211, 266, 318

பெருந்தலைவயூர் (பு.பெ.பெ.ஊ.) - நற். 262

பெருமையூர் - அகம். 36-17, 115-5, 253-19

பேரூர் - பெரும். 254, நற். 132-1, 153-9, குறுந். 223-1, ஐங். 77-2, கலி. 109-6, 146-42, அகம். 382-11, புறம். 57-7, 84-4, 300-5, சிலப். 6-54, 12-1-12, 14-217, 16-146, மணி. 2-54, 3-123, 146, 5நூ-25, 6-37, 7-26, 9-24, 13-84, 108, 17-98, 18-9

பொதினி (பழனி) - 1-4, 61-16

பொருந்தில் (பு.பெ.பெ.ஊ.) - புறம். 33

பொறையநாடு - ஐங். 404-4

பொறையாறு - நற். 131-8

போந்தை - புறம். 338-4

மருங்கூர்ப்பட்டினம் - நற். 258-10, அகம். 227-20

மதுரை - கலி. 96-23, சிறு. 67, பரி. 11-48, 12-9, புறம். 32-5, மதுரைக். 699, பரி.திரட்டு. 9-3, 10-3, 11-3

மரந்தை - அகம். 127-6, 376-18, குறுந். 34-6, 166-34, நற். 35-7, 395-91, பதிற்று. 90- 28

மல்லல் - அகம். 50-9, 122-3, 215-14, 216-12, 308-11, 375-7, ஐங். 120-3, 414-4, கலி. 61-23, 104-61, 138-10, 148-5 குறுந். 45-3, நற். 73-3, 174-10, 239-8, 249-9, நெடு. 29, 44, பதிற்று. 36-3, பரி. 11-43, 121, புறம். 18-12, 160-26, 174-9, 192-8, பெரும். 143, 254, மலை. 233

மல்லி (ம.பெ.பெ.ஊ.) - புறம். 177

மாங்காடு - அகம். 288-15, சிலப். 11-53

மாவிலங்கை - புறம். 176-6

மாறோக்கம் (பு.பெ.பெ.ஊ.) - அகம். 377, புறம். 37, 39, 126, 174, 226, 280

மிழலை - புறம். 24-19

முகையலூர் (பு.பெ.பெ.ஊ.) - புறம். 181, 265

முசிறி - அகம். 57-15, 149-11, புறம். 243-10

முதிரம் - புறம். 158-25, 160-13, 163-8

முதுநீர் முன்துறை - அகம். 57-15

முதுநீர்ப் பொய்கை - பெரும். 294

முரஞ்சியூர் (பு.பெ.பெ.ஊ.) - புறம். 2

முள்ளூர் - நற்.170-6, 291-7, குறுந்.198-6, 312-3, புறம். 123-5, 126-8, 174-13, அகம்.206-12

மூதூர் - அகம். 15-7, 17-19, 50-9, 83-7, 113-8, 114-12, 115-1, 122-1, 141-10, 165-4, 218-19, 316-6, 335-11, 342-6, 347-7, 352-5, ஐங். 15-3, 372-3, குறி. 236, குறுந். 293-4, சிறு. 201, நற். 45-4, 73-3, 85-3, 90-1, 130-4, 138-11, 143-7, 249-10, 272-9, 293-4, 311-5, 319-3, 321-10, நெடு. 29, பட். 215, பதிற்று. 15-18, 26-12, 30-20, 53-5, 67-2, பரி. 8-37, 1294, 100, புறம். 18-12, 37-11, 54-1, 79-1, 97-18, 202-6, 220-7, 228-4, 256-7, 336-7, 350-2, 398-11, பெ. 411, முல். 7

மோகூர் - அகம். 251-10, பதிற்று. 44-14, 49-8, மதுரைக். 508

வஞ்சி - தொல். 64-1, 330-1, 334-1, 349- 2, 363-1, 389-1, 410-1, 413-1, 415-4, 531-1, சிறுபாண். 50, குறி. 89, ஐங்.50-2, அகம். 226-9, 263-12,396-19

வஞ்சிமுதூர் - பதிற்று. பதிற்று. 9-9

வடமோதம் (பு.பெ.பெ. ஊ.) - புறம். 260, அகம். 317

வல்லம் - அகம். 356-13

வல்லார் - அகம். 152-19, கலி. 141-19, பதிற்று. 20-22, பரி. 6-80, 9-74, புறம். 27-15, 57-1, 181-6, மலை. 78

வாகை - அகம். 125-19, 136-10, குறி. 67, குறுந். 7-5, 347-2, 369-1, 393-3, பதிற்று. 40-15, 43-23, 66-15, 88-10, பரி. 14-7, புறம். 351-6, பெரும். 109

வாரணவாசி - கலி. 60-13

வியலூர் - அகம். 97-13, குறி. 191, பதிற்று. ஐந்தாம்பத்து-பதிகம். 11, சிலப். 28-115

விரியூர் (பு.பெ.பெ. ஊ) - புறம். 332

விளங்கில் - அகம். 81-13, புறம். 53-4

வீரை - அகம்.206-13, நற்.58-5

வெண்குடை - சிறு. 64, நெடு. 184, பதிற்று. 17-14, 52-31, அகம். 36-21, 121-12, 204-1, 231-12, புறம். 3-1, 60-12, 75-11, 174-15, 189-2, 197-8, 213-2, 229-20, 231-5, 367-14, 392-1

வெண்ணி - அகம். 55-10, 246-9, நற். 390-3, புறம். 66-6, பொரு. 147

வெள்ளூர் (பு.பெ.பெ.ஊ.) - குறுந். 219

வெள்ளைக்குடி (பு.பெ.பெ.ஊ.) - நற். 158, 196, புறம். 35

வெளியம் - அகம். 359-6

வேங்கடம் (திருப்பதி) - தொல். எழுத்து. சிறப்புப். 1-3, அகம். 27-7, 61-3, 83-10, 85-9, 141-29, 209-9, 211-7, 213-3, 393-20, புறம். 381-22, 385-11, 389-11, 391-7

வேம்பற்றூர் (பு.பெ.பெ.ஊ.) - குறுந். 362, அகம். 157, புறம். 317

வேம்பி - அகம். 249-9

வேலூர் - சிறு. 173

வேளூர் - அகம். 166-4

வைப்பு - குறுந். 71-1, சிறு. 152, திருமுருகு. 224, நற். 114-1, பதிற்று. 30-13, 25.

அடிக்குறிப்புகள்

1. ஆளவந்தார். ஆர்., கல்வெட்டில் ஊர்பெயர்கள் ப.1
2. Balakrishnan Nayar. T., Linguistic Anthropological and Archaeological approach- p. 35

சுருக்க விளக்கம்

பு.பெ.பெ.ஊ. - புலவரால் பெயர்ப்பெற்ற ஊர்
ம.பெ.ஊ. - மன்னனால் பெயர்ப்பெற்ற ஊர்

101. பெருமாள் முருகனின் கங்கணம் நாவலில் ஊர்ப் பெயர்கள்

ம.ப.ரமேஷ்குமார்,
முனைவர்பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
பெரியார் பல்கலைக்கழகம்,
சேலம்–636 011.

கங்கணம் பெருமாள் முருகனின் நான்காவது நாவலாகும். திருமணமாகாத இளைஞனின் வாழ்வியலை அவன் சார்ந்த கிராமத்துச் சூழலோடு எடுத்துரைக்கின்றார் பெருமாள் முருகன். திருமணத்திற்காகப் பெண்தேடுதல், கதாப்பாத்திரங்களை அறிமுகம் செய்தல் எனும் நிலைகளில் பல ஊர்ப்பெயர்கள் இந்நாவலுள் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் சாதி சார்ந்த ஊர்ப்பெயர்களும், நிலம் சார்ந்த குறியீடுகளால் அமைந்த பெயர்களும், தமிழக அளவில் அறியப்படும் பிரபலமான ஊர்ப்பெயர்களும் அடங்கியுள்ளன. இத்தகைய ஊர்ப் பெயர்களின் பின்புலத்தை ஆராய்தல் கடினமாதலால் நாவலின் கதை இயங்கும் மையக்களமான திருச்செங்கோடு எனும் ஊர்ப்பெயரை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

கங்கணம் நாவலில் சிறியதும் பெரியதுமாக 40க்கும் மேற்பட்ட ஊர்ப் பெயர்கள் இடம்பெற்றுள்ளன. சென்னை, கள்ளக்குறிச்சி, சங்கராபுரம், ஈரோடு, தருமபுரி, திருச்செங்கோடு, பள்ளிபாளையம், திருமணஞ்சேரி போன்ற புகழ்வாய்ந்த ஊர்கள் இந்நாவலின் கதையோட்டத்தினூடே எடுத்துரைக்கப்படுகின்றன. நாடார் வளவு, சக்கிலி வளவு, பாப்பாரத்தெரு முதலிய ஊர்கள் சாதியை அடையாளமாகக் கொண்டு விளங்குவதோடு குறிப்பிட்ட சாதியினர் மட்டுமே வாழும் பகுதிகளாக நாவலில் இடம்பெறுகின்றன.

நாவலின் கதைக்களம் திருச்செங்கோட்டை மையமிட்டே அமைக்கப்பட்டுள்ளது. திருச்செங்கோட்டைச் சுற்றியமைந்துள்ள நாச்சிபாளையம், தொட்டிபாளையம், மங்கரட்டுப்பாளையம், சிறுமொளசி, மோளியப்பள்ளி, குமரமங்கலம், நெட்டாலம்பாளையம், அணிமூர், மின்னம்பட்டி, ஆனங்கூர், கீழேரிப்பட்டி, மணியனூர், கொல்லப்பட்டி, பள்ளிபாளையம், கரட்டுப்பாளையம் முதலிய ஊர்கள் இந்நாவலில் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதேபோல நாவலின் மையப்பாத்திரமான மாரிமுத்து எனும் முதிர் இளைஞனின் ஊரான நாச்சிபாளையம் எனும் ஊருக்குட்பட்ட பகுதிகளும் நாவலில் இடம்பெற்றுள்ளன. அவை பெரும்பாலும் சக்கிலி வளவு, நாடார் வளவு எனச் சாதிப்பெயர்களாகவே உள்ளன. எனினும் நிலப்பகுதிகளின் தன்மையையும் அளவையும் கொண்ட பெயர்கள் குறிப்பிட்ட நிலப்பகுதிகளைக் குறிப்பனவாக நாவலில் இடம்பெற்றுள்ளன. அவை, மேட்டுக்காடு, செம்மாங்காடு, நெடுங்காடு, மின்னக்காடு, சின்னாங்காடு, கொட்டக்காடு, வடமங்காடு எனும் பெயர்களாக அமைகின்றன. இத்தகைய பெயர்கள் அனைத்தையும் நுணுக்கமாக ஆராய வேண்டுமெனின் வரிவான களஆய்வு மேற்கொள்ளப்படவேண்டும். ஆகவே நாவல் சுட்டும் ஊர்களுள் மையமானதும் இடைக்காலந்தொட்டு பிரசித்தி பெற்றதுமான 'திருச்செங்கோடு' எனும் ஊர்ப்பெயரினை ஆராய முற்படுகிறது இக்கட்டுரை.

"திருச்செங்கோடு' பக்திக்காலந் தொட்டு மிகவும் பிரபலமான ஊராக விளங்கியுள்ளது. சைவக் கடவுளான சிவன் மாதொருபாகனாகக் காட்சியளிக்கும் தலமே இத்திருச்செங்கோடு. அடியார்கள் பலரால் புகழ்ந்து பாடப்பெற்ற தலமாகத் திருச்செங்கோடு உள்ளது. சிவனும் உமையும் இணைந்து ஒருடலாகக் காட்சி தரும் திருத்தலமாக இது அமைந்துள்ளது. இவ்வூரில் உள்ள இறைவன் அர்த்தநாரீஸ்வரர் எனும் பெயரால் அழைக்கப்படுகிறார்.

திருச்செங்கோடு – அகராதி விளக்கம்

திரு + செம் + கோடு = திருச்செங்கோடு, திரு + செம்மை + கோடு = திருச்செங்கோடு எனப் பிரித்தும் பொருளறியும்படி இவ்வூரின் பெயர் அமைந்துள்ளது. இறைத்தலங்கள் பெரும்பாலானவை திரு என்னும் அடைமொழியுடன் கூடியதாகவே அமைந்துள்ளன.

இதனை, "திரு–அழகு, திருமகள், செல்வம், தெய்வீகம், மங்கலமொழியில் ஒன்று, மேன்மை, சிறப்பு, காந்தி, பொலிவு, பாக்கியம், தெய்வத்தன்மை, நல்வினை'' (2004:543–544) என்பதன் மூலம் அறியலாம்.

இங்கு, திருச்செங்கோடு எனும் பெயரில் உள்ள திரு என்பது மேன்மை மற்றும் சிறப்பு எனும் பொருள் கருதியே அமைக்கப்பட்டிருப்பதாகக் கருதலாம். மேலும் 'செம்' என்பதற்குரிய பொருள்களாக "சிவப்பு, செம்மை'' என்பன கழகத்தமிழகராதியால் குறிப்பிடப்பட்டுள்ளன (ப.486). இதைப்போலவே,

> 'செம்மை' என்பதற்கும் – "அழகு, இணக்கம், கனம், சிவப்பு, செப்பம், செவ்வை, நிதார்த்தம், தலைமை, நடுவுநிலைமை, மாணிக்கம், வளைவின்மை, நேர்மை, பெருமை, கேது, கந்தகம்''

எனப் பொருள்களைத் தருகின்றது கழகத்தமிழகராதி (பக்.487). இதில் வரும் சிவப்பு எனும் சொற்பொருளே 'செம்மை' எனும் சொல்லுக்குப் பொருந்துவதாக உள்ளது.

மேலும், கோடு என்பதற்குரிய சொற்பொருள்களாக மிக நீண்ட பட்டியலைக் கழகத்தமிழகராதி முன்வைக்கின்றது. அவை,

> "அரணிருக்கை, அறை, கூட்டம், ஊதுகொம்பு, கோடென்னேவல், சங்கு, சுழி, திரள், நத்தை...... மலை உச்சி, விலங்கின் கொம்பு, மலை, மலைச்சிகரம், மேட்டுநிலம்...'' (ப.405)

என விரிந்து கொண்டே செல்கின்றன. எனினும், திருச்செங்கோடு எனும் பெயரில் உள்ள கோடு' என்பதற்கு மலை, மலை உச்சி, மலைச்சிகரம், மேட்டுநிலம் எனும் பொருள்கள் பொருந்துவனவாக உள்ளன.

மேற்கண்ட அகராதி விளக்கங்களின் அடிப்படையில் சிவப்பு நிறத்தில் இருக்கக்கூடிய மேட்டுநிலப்பகுதியாகிய மலை எனும் பொருள் கொண்டதாகச் செங்கோடு எனும் பெயர் அமைந்திருக்கக்கூடும். மேலும் சிறப்பு மற்றும் மேன்மை கருதி செங்கோடு எனும் பெயருக்கு முன் 'திரு' எனும் அடைமொழி சேர்ந்து 'திருச்செங்கோடு' எனும் பெயர் தோன்றியிருக்கக்கூடும்.

திருமுறைகளும் திருச்செங்கோடும்

பன்னிரு திருமுறைகளுள் இடம்பெற்றுள்ள திருஞானசம்பந்தர் தேவாரம் (1 ஆம் திருமுறை) மற்றும் அருணகிரி நாதரின் திருப்புகழ் ஆகியவற்றுள் திருச்செங்கோட்டு இறைவனைப் பற்றிய பாடல்கள் இடம்பெற்றுள்ளன. சம்பந்தரால் பாடல் பெற்ற தலமாகத் திருச்செங்கோடு உள்ளது. சம்பந்தர் தேவாரத்தில் 2 பதிகங்கள் திருச்செங்கோட்டு அர்த்தநாரிஸ்வரர் குறித்துப் பாடப்பட்டுள்ளன. இதில் 22 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இதைப்போலவே அருணகிரிநாதரால் பாடல்பெற்ற தலமாகவும் திருச்செங்கோடு விளங்குகின்றது. இதில் திருச்செங்கோட்டிலுள்ள முருகப்பெருமானைப் பற்றி 21 பாடல்களை அருணகிரியார் பாடியுள்ளார்.

'கொடிமாடச் செங்குன்றூர்', 'திருச்செங்கோடு', 'நாககிரி', 'புஜக கோத்திரி' எனும் பெயர்கள் இருந்ததை திருப்புகழில் உள்ள திருச்செங்கோடு குறித்த முன்னுரை மூலம் அறியலாம்.

> "இது தேவாரத்திற் கொடி மாடச் செங்குன்றூர் என வழங்கும்... மலை சிவந்த நிறமாயிருப்பதால் இதற்குத் திருச்செங்கோடு எனப்பெயர் போந்தது. மேலை வீதியிலிருந்து பார்த்தால் மலை நாகம்போற் காணப்படுகின்றது. மலைக்கு நாககிரி என்றும் பெயர். 1181 ஆம் பாடலிற் கொங்கின் புஜககோத்திரி என்பதையும் காண்க'' (ப.434)

எனத் திருப்புகழில் திருச்செங்கோடு பற்றி கூறப்படுவதிலிருந்தும்,

> "இயற்கையான பெரியமலை. மலை செங்குத்தானது. செங்குத்தாக உள்ளதால் 'செங்கோடு' ஆயிற்றோ! (கோடு–மலை) மலை செம்மையாக இருத்தலின் செங்கோடானதோ! நாககிரி, நாகமலை, சர்ப்பகிரி என வேறு பெயர்களும் உண்டு. நகரின் மேல்வீதியிலிருந்து பார்த்தால் மலை நாகம்போல் தோன்றுவதால் நாககிரி என்பர்'' (552:2004)

என்று சம்பந்தர் தேவார தலச்சிறப்பு எடுத்துரைக்கப்படுவதிலிருந்தும் திருச்செங்கோட்டிற்கு அமைந்திருந்த வேறு பெயர்களை அறியமுடிகின்றது. இதன்வழி நாகம் போல மலை வளைந்திருப்பது நாகமலை, சர்ப்பகிரி, நாககிரி எனும் பெயர்த் தோற்றத்திற்குக் காரணமாவதைக் காணலாம்.

பெருமாள் முருகன் திருச்செங்கோடு வட்டாரத்தைச் சேர்ந்தவர் என்பதால் அவர் படைப்புகள் பெருமளவில் திருச்செங்கோட்டை மையமிட்ட சூழலிலேயே படைக்கப்படுகின்றன. இதனாலேயே அவரது கங்கணம் நாவலில் 'திருச்செங்கோடு' எனும் பெயர் 27 முறை இடம்பெற்றுள்ளது. எனவே அகராதி கூறும் விளக்கங்களின் அடிப்படையிலும் திருஞானசம்பந்தர்

தேவாரம், அருணகிரிநாதர் திருப்புகழ் ஆகியவை கூறும் கருத்துக்களினடிப்படையிலும் 'திருச்செங்கோடு' எனும் பெயர் சிவப்புநிற மலை, செங்குத்தான மலை எனும் பொருள்களினடிப்படையில் தோன்றியிருக்க வாய்ப்புள்ளது.

துணைநூல்கள்

1. கழகத் தமிழ் அகராதி, 2005, கழகவெளியீடு, சென்னை.
2. திருப்புகழ், பன்னிருதிருமுறை.
3. நடராசன், பி.ரா., (உ.ஆ.), திருஞானசம்பந்தர் சுவாமிகள் தேவாரம், முதல் பகுதி, 2004, உமா பதிப்பகம், சென்னை.
4. பெருமாள் முருகன், கங்கணம், 2007, அடையாளம் பதிப்பகம், புத்தாநத்தம்–10.

102. பதிற்றுப்பத்தில் ஊர்கள்

தா. ராணி
முனைவர்பட்ட ஆய்வாளர்
இராணிமேரி கல்லூரி
தமிழ்த்துறை
சென்னை

*"நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியோட கம்புறமென்று
இத்திறத்த எட்டுத் தொகை"*

என்ற வெணபா பாடல் மூலமாக அறியலாகும். எட்டுத்தொகை நூல்களுள் நான்காவதாகக் கூறப்படும் பதிற்றுப்பத்து அகவற்பாவாலான புறப்பொருள் நூலாகும்.

பதிற்றுப்பத்து

பத்து சேர அரசர்களைப் பற்றி பத்துப் புலவர்கள் பாடிய பத்துப் பாடல்களே பதிற்றுப்பத்து என்னும் நூலாகும். முதறபத்தும் இறுதிப்பத்தும் இதுவரை கிடைக்கவில்லை. பத்து பத்து என்னும் எண்ணின் தொகையே பதிற்றுப்பத்து. இவை முறையே முதல் பத்து இரண்டாம் பத்து என்று எண்ணால் பெயர் பெற்றுள்ளன. இவை யாவும் பாடாண்திணையில் அமைந்தவை. பதிற்றுப்பத்தைத் தொகுத்தார், தொகுப்பித்தார் பெயர் தெரியவில்லை.

ஒவ்வொரு பத்துப் பாடலின் முடிவிலும் ஒரு பதிகம் உள்ளது. இது பிற்காலத்து மெய்க்கீர்த்தியைப் போலப் பாடப்பட்ட அரசனின் புகழைப் பேசுகிறது. பதிகத்தைத் தொடர்ந்து பத்துப்பாடல்களின் பெயர்கள் தரப்பட்டுள்ளன. அதன் பின்னர் பாடிய புலவர் பெற்ற பரிசும் பரிசளித்த அரசன், ஆட்சி செய்த ஆண்டும் குறிக்கப் பெற்றுள்ளன.

பதிற்றுப்பத்து சேரர் திறத்தைச் சீரிய முறையில் கூறுகின்றது. பேரரசர்களின் போர் பற்றி பாடும் போது அவர்களால் அழிந்த நாடுகளின் பெயர்களையும் ஊர்களையும் பதிற்றுப்பத்து குறிப்பிட்டு பாடுகிறது.

இயற்கை வளத்தோடு கூடிய நாடுகளையும், ஊர்களையும் ஆறுகளையும் பதிற்றுப்பத்து பாடிச் செல்கிறது.

"போர் அடுதானைச் சேரலாத"

என்னும் அடிகள் அஞ்சாது நின்று அறப்போர் புரியும் தானையினைமுடைய சேரலாதனே என்று குறிப்பிடப்படும் அடிகளிலிருந்து சேரநாடு மன்னனின் வீரமும், படைபலமும் சிறந்திருந்துள்ளது என்று அறிய முடிகின்றது. இதனால், அக்கால சேரநாட்டைப் பற்றி தெரிந்து கொள்ள முடிகிறது.

சேரநாட்டைப் பற்றி இரா.பி.சேதுப்பிள்ளை சேர நாட்டில் சிறந்திருந்த முசிறிப்பட்டினம் இரு பாகங்களாக இருந்தது என்றும் அவற்றுள் ஊர் என்னும் பெயருடைய பாகம் கொடுங்களூர் எனவும் மற்றொரு பாகம் மகோதைப் பட்டினம் எனவும் வழங்கி வந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இமயம் தென்குமரி

*"ஆரியர் துவன்றிய பேரிகை இமயம்
தென்னம் குமரியோடு.................."*

என்ற அடிகளில் ஆரியர் நிறைந்த இடம் இமயம் என்பது தென்குமரியென்பது கன்னியாகுமரியைக் குறிப்பிடுவதாகவும் எடுத்துக்கொள்ளலாம்.

வணிகர் குடிகள்

*"கூலம் பகர்நர் குடிபுறந்தராஅக்
குடிபுறந் தருநர் பார மோம்பீ"*

என்ற அடிகள் நிலத்தே விளையும் எண்வகைக் கூலங்களையும் விற்கும் வணிகர் குடியைப் பேணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் வணிகர் குடி என்று இருத்தலால் வணிக மக்கள் பலர் சேரநாட்டில் வாழ்ந்திருந்தனர் என்றும் அவர்கள் வாழ்ந்த இடங்களை வணிகர் குடிகள் என்றும் வழங்கிருத்தல் வேண்டும் என்று தெரிந்து கொள்ள முடிகிறது.

மேற்குடிகள்

*"குடிபுறந் தரா அக்
குடிபுறந் தருநர் பாரமோம்பி......"*

என்ற இந்த அடிகளில் தாராவென்று தராவெனக் குறுகிற்று என்றும் தருநர் என்பது தம்+கீழ்க்குடிகளாகிய வரிசையாளரைப் புறந்தரும் மேற்குடிகளாகிய காணியாளரை என்றும்

குறிப்பிடப்பட்டுள்ளது. இதலிருந்து குடிகள் வாரியாக மக்கள் பிரிக்கப்பட்டிருந்தது என்பதும் அறிந்து கொள்ள முடிகிறது.

நாவலந் தீவு

"கடலகம் வரைப்பின் இப்பொழில் முழுது ஆண்டநின்"

அடிகளில் இப்பொழில் என்பது நாவலந்தீவைக் குறிப்பதாகும். இந்தக்கடல் சூழ்ந்த உலகில் நாவலம் பொழில் முழுவதையும் நிலைத்த புகழோடு ஆண்டு வந்தனர் சேரனின் முன்னோர்கள். இதில் நாவலந்தீவு என்பது கடலால் சூழப்பட்ட பகுதியாகும்.

முந்நீர் துருத்தி (கடல்தீவு)

"நும்கோ யார் என........"

இரு முந்நீர்த் துருத்தியுள்ள - என்னும் அடிகள் உம்முடைய தலைவன் யார் என்று வினவுவவாயின் எம் தலைவன் பெரிய கடலிடையே உள்ள தீவில் வாழும் பகைவரை அழிக்கின்றவன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது, இதில் முந்நீர் என்பது ஆற்றுநீர், ஊற்றுநீர், மழைநீர் ஆகியவைகளைக் குறிப்பதாக உள்ளது.

உம்பற்காடு

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைக் குமட்டூர் கண்ணனார் பத்துப்பாடல்கள் பாடிச் சிறப்பித்ததினால் அவர்க்குப் பரிசாக உம்பற்காடு என்னும் பகுதியையும் அதில் ஐந்நூறு ஊர்களையும் உட்படுத்தி இவைகள் தென்னாட்டு வருமானத்தில் அளிக்கப்பட்ட பாகமாக இருந்தது என்றும் குறிப்பிடப்படுவதிலிருந்து இந்த உம்பற்காடு பற்றி அறியலாம்.

செருப்பு மலைநாடு

"மிதிஅல் செருப்பின் பூழியர் கோவே"

என்ற அடிகள் மிதியாகிய செருப்பு அல்லாத செருப்பென்னும் பெயரிய மயலயம் அந்த மலையினையுடைய பூமிநாட்டிற்குத் தலைவனே என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதிலிருந்து இந்த செருப்பு மலையைப் பற்றி அறிந்து கொள்ளலாம்.

கொங்கர் நாடு

"ஆகெழு கொங்கர் நாடு" என்று வரும் அடிகள் பசுக்களையுடைய கொங்கர் நாட்டினைக் கைப்பற்றிய அரசனே என்று குறிப்பிடுகிறது இதிலிருந்து கொங்கர்நாடு பற்றி அறிய முடிகின்றது.

கொங்கர் என்பவர் கொங்குநாட்டவர் இவரை "ஒளிறு வாட் கொங்கர்" என்றும் ஈரம்படைக் கொங்கர் என்றும் அழைப்பர் கொங்குநாட்டை வெல்வதற்குப் பல அரசர்கள் போட்டியிட்டு உள்ளனர். "கொங்கர் குடகடலோட்டிய ஞான்றை" என்ற அடிகள் இதனை நன்குப்புலப்படுத்துவதாக உள்ளன.

குட்டடுவ நாடு - குட்டுவன்

"பல்யானைச் செல்கெழு குட்டுவனென்பது"

பதிற்றுப்பத்தின் மூன்றாம் பத்தின் பாட்டுடைத் தலைவனான சேரனது பெயராகும். குட்டநாடு என்பது மலைநாட்டின் ஒரு பகுதியாகக் குறிப்பிடபட்டுள்ளது. இந்த மலைநாடு சேரநாட்டைச் சார்ந்ததாக இருந்திருக்க வேண்டும் என்பதற்கச் சேரமான் குட்டுவன் கோதை என்ற அரசனின் பெயரால் அறிந்து கொள்ளலாம். இதில் சேரமானைக் குட்டுவன் என்று குறிப்பிடுவது குட்டநாட்டரசன் என்னும் பெயரினாலே யாரும் என்றும் குறிப்பிடப்படுகிறது.

பூமிநாடு, ஏழில்நாடு, பன்னாடு

நன்னன் என்ற ஒரு சிற்றரசனின் ஆட்சிக்குட்பட்டதாக இருந்தது ஏழில் மலை என்று ஆசிரியர் எஸ். சங்கு ஐயர் குறிப்பிட்டுள்ளார். பூமிநாட்டின் அருகிலுள்ள ஓர் ஊராக இருந்துள்ளது என்றும் நன்னன் இந்நாட்டின் மீது பகை கொண்டிருந்தான் என்று புன்னாட்டினரை எதிரிகளிடமிருந்து காப்பாற்றுவதாக நான்முடிச்சேரனும், வெளியத்திலுள்ள எயினனும் தெரிவித்திருந்தனர் என்றும் குறிப்பிடுகிறது.

அகப்பா

"அப்பாவெறிந்து பகற்றீவெட்டு"..........

அடியில் இமயவரம்பனின் தம்பி அகப்பா என்னும் பகைவர் நாட்டு அரணிகளை அழித்து, அதனைப் பகலிலேயே தீக்கு இரையாக்கினான். இதிலிருந்து அகப்பா என்பது

ஊர்ப்பெயராக இருக்கக் கூடும் என்று முனைவர். அ.மா.பரிமணம் குறிப்பிட்டுள்ளார். உ.வே. சாமிநாதய்யர் அகப்பா என்பதனை ஓர் அரண் என்று குறிப்பிட்டுள்ளார்.

நேரிலை

"நீர் இமிழ் சிலம்பின் நேரியோனே"

என்னும் அடிகள் அருவிநீர் ஒலிக்கின்ற நேரிமலையிலுள்ள அரசனைக் குறிப்பதாகும். இதிலிருந்து நேரிமலையை ஆண்ட அரசன் சேரமன்னன். இந்த நேரிமலை சேரநாட்டில் சிறப்புடன் விளங்கிற்று.

மன்றங்கள், தெருக்கள்

"நல்நுதல் விறலியர் ஆடும்
தொல்நகர் வரைப்பின் அவன்..."

என்ற அடிகள் மூலம் விறலியர் ஆடும் மன்றங்கள், தெருக்கள் இருந்தமையும் புலகுல மக்கள் வாழும் இடமாக இந்த மன்றங்களும் தெருக்களும் இருந்தமையும் புலனாகின்றது.

மோகூர்

"மோகூர் மன்னன் முரசம் கொண்டு என்னும் அடி"

மோகூர் மன்னனுக்கு அஞ்சித் தன்நாட்டினின்றும் நீங்கியோடி ஒளிந்து கொண்டனர் என்று வருவதிலிருந்து மோகூர் என்ற ஊர் சேரநாட்டிற்கு அருகில் இருந்தமை தெளிவாகியுள்ளது.

பழையன் என்பவனுக்குரியதாய் இந்த மோகூர் என்னும் ஊர் இருந்ததாகவும், மோரியர் படை மோகூரைத் தாக்கிய போது உற்றுழி உதவுவதாக வஞ்சினங்கூறி கோசர் இருந்ததாகவும், மோகூர் அவையத்து ஆலமரத்தடியில் தோன்றி மோரியரைப் புறங்கண்டனர் என்று வரலாறு உள்ளதாகவும் ச.வே.சுப்பிரமணியம் குறிப்பிடுகிறார்.

வியலூர், கொடுகூர்

"சிறுகுரல் நெய்தல் வியலூர் நீறி"

என்றஅடி வியலூரையும், அக்கரை நண்ணிக் கொடுகூர் எறிந்து" என்ற அடியில் கொடுகூழபை' பற்றியும் அறிந்து கொள்ள முடிகிறது. இந்த வியலூரும் கொடுகூரும் கண்ணகிக்கு கோவில் கட்டுவதற்காகக் கல் எடுக்க இமயமலைக்குச் சென்ற சேரன் செங்குட்டுவன் வரும் வழியில் தன்னை எதிர்த்த அரசர்களைப் போரிட்டுத் தாங்கிய இடமாக முனைவர் அ.மா. பரிமணம் குறிப்பிட்டுள்ளார்.

103. தூது இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள்

தி. ரெகானா பர்வீன்
தமிழ்த்துறை
உதவிப்பேராசிரியை
தாசிம்பீவி அப்துல் காதர் மகளிர் கல்லூரி
கீழக்கரை

முன்னுரை

மனித இன வரலாற்றை நோக்கின் மக்கள் கூட்டம் கூட்டமாக இடம் விட்டு இடம் சென்று வாழும் காலம் தொட்டே ஊர்ப்பெயர் தோற்றம் பெற்றிருக்க வேண்டும். ஒரு ஊரினின்றும் மற்றொரு ஊரை வேறுபடுத்தப் பெயர் இன்றிமையாததாகிறது. ஊர்ப்பெயர்கள் பழமை எச்சங்களாக நின்று மனித வரலாற்றையும் பண்பாட்டையும் விளக்குகின்றன. மக்கள் வாழும் பகுதிகளுக்குப் பலபெயர் இருப்பினும் "ஊர்" என்ற பெயர் அனைத்தையும் சுட்டும் நிலையில் உள்ளது. இவ்வாறு அமையப்பெற்ற ஊர்ப்பெயர்கள் தமிழிலக்கியங்களில் பல இடங்களில் இடம் பெற்றுள்ளன. தமிழ்விடு தூதிலும், அழகர் கிள்ளை விடுதூதிலும் இடம்பெற்றுள்ள ஊர்ப்பெயர்களை இங்கு காண்போம்.

தமிழ்விடுதூது

அன்று முதல் இன்று வரை மதுரை தனக்கென்று ஒரு வரலாற்றினைக் கொண்டு விளங்குகிறது. சங்கக்கால இலக்கியத்தில் இவ்வூர் கூடல், நான்மாடக்கூடல், மதுரை, ஆலவாய் எனப் பலபெயர்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. அக்காலத் தமிழகம் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுத் (சேர நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு) தனித்தனி அரசாட்சிக் கொண்டு விளங்கியது. மீன் கொடியைத் தங்கள் சின்னமாகக் கொண்டு அரசாட்சி செலுத்திய பாண்டிய மன்னர்களின் பாண்டிய நாட்டின் தலைசிறந்த தலைநகராக மதுரை கி.மு. 5-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 11-ஆம் நூற்றாண்டின் இறுதிவரை விளங்கியது.

கூடல் நகரமானது பல சிறப்புகளைக் கொண்டதோடு, மிகவும் பரந்த, நீண்ட ஊராகும் என்பதை,

"சீர்கொண்டகூடல்" என்றும் (த.வி.தூ.1)
"நீள்மதுரை" (த.வி.தூ.95)

என்றும் தமிழ்விடுதூது ஆசிரியர் கூறுகிறார்.

திருநல்லூர்

தஞ்சை மாவட்டத்தில், கும்பகோணம் - தஞ்சாவூர் பேருந்து வழியில் வாழைப்பழக்கடை என்னும் ஊருக்குத் தென்மேற்கே ஒரு கிலோ மீட்டர் தொலைவில் இருக்கும் தேவாரத் திருப்பாடல் பெற்ற திருவூராகும். திருக்கயிலாயம் என்று சிறப்பித்துக் கூறும் திருவூர்களுள் இதுவும் ஒன்று.

பிரமனும், திருமாலும் மிகவும் தேடியும் காணமுடியாத சிவபெருமான் திருவடிகளை திருநாவுக்கரசர் பாடல்களாய் பாடித் தம் தலையில் முடியாகத் தாங்கி பேறு பெற்றது திருநல்லூரில் தான் என்பது,

"தேடி முடியா அடியைத் தேடாதே நல்லூரில்
பாடி முடியாப் படைத்தோரும்" (த.வி.தூ.7)

என்ற பாடல் வரிகளில் புலனாகிறது.

காவிரிப்பூம்பட்டினம்

காவிரி ஆறு கடலில் புகும் பட்டினம் என்பது "காவிரிப்புகும் பட்டினம்" என்று அமைந்து, அது மருவிக் காவிரிப்பூப்பட்டினம் ஆயிற்று என்பர். இருமருங்கும் பூங்காக்கள் விரிந்து பரந்து நிற்குங் காவிரி பூப்பொலிவுடன் கடலோடு கலத்தலால் காவிரிப்பூம்பட்டினம் என ஆயிற்று என்றும் கூறுவர். காவிரியாகிய பொன்னி கடலுடன் சங்கமமாகுந் துறையாதலின் இதனைப் "பொன்னித் துறை" என்றும் "சங்க முகத்துறை" என்றும் வழங்கியுள்ளனர். அன்றியும் இப்பொருளையொட்டியே 'புகார்ப்பட்டினம்' என்றும் 'புகார்' என்றும் 'பூம்புகார்' என்றும் மொழிவர்.

உலக மக்கள் விருப்புடன் நோக்குவது பூம்புகார் நகரம் என்பதை,

"நோக்கு புகார்" (த.வி.தூ.193)

என்று கூறுகிறார்.

திருச்செங்கோடு

தமிழ்நாட்டில் சேலம் மாவட்டத்தில் உள்ளதொரு வட்டம் நெடிய மலையின் உச்சியில் கோயில் உள்ளது. கொங்கு நாட்டின் ஏழு சிவத்தலங்களுள் ஒன்றாக இது கருதப்படுகிறது. தேவாரத்தில் இவ்வூர் திருக்கொடிமாடச் செங்குன்றூர் எனக் கூறப்படுகிறது. இங்கு கண்டுபிடிக்கப்பட்டு, வெளியிடப்பட்டுள்ள செப்பேடுகள் திருச்செங்கோட்டுச் செப்பேடுகள் எனக் கூறப்படுகின்றன. •

கொங்கு நாட்டுத் திருச்செங்கோட்டில் கொடிய பனியால் வாடாத வண்ணம் அங்குள்ள யாவர் துயரத்தையும் சம்பந்தர் நீக்கினார்.

"கொங்கில் அப்பனியால் வாடாதே யார்க்கும் துயர் ஒழித்தாய்"
(த.வி.தூ.160)

திருவாவடுதுறை

தேவாரச் சிறப்புப் பெற்ற சிவத்தலம் இது. திரு ஆ ஆடு துறை என்பதே திருவாவடுதுறையாயிற்று. ஆ-பசு, சிவபெருமான் கட்டளையால் உமாதேவி பசு வடிவம் பெற்றுக் காவிரிக் கரையோரம் அமைந்த இவ்விடத்திற்கு வந்து பெருமானை வழிபாடு செய்து முன் உருப்பெற்றதால் 'திரு' என்னும் அடைமொழியுடன் இவ்வூர்ப் பெயர் வழங்கலாயிற்று என்பது புராண நம்பிக்கை. திருமூலர், திருமாளிகைத்தேவர் போன்றோர் போகநாத சித்தரிடம் உபதேசம் பெற்றுத் தொண்டு புரிந்து அருள் பெற்ற இடம் திருவாவடுதுறையாகும்.

இறைவனிடமிருந்து திருவாவடுதுறையில் ஞானசம்பந்தர் பொன் முடிப்பைப் பெற்றார் என்பதை,

"வலவா நல ஆவடுதுறையில்" (த.வி.தூ.191)

என்பதன் மூலம் அறியலாம்.

கன்னியாகுமரி

தமிழ்நாட்டித் தென் கோடிப் பகுதியில் உள்ள ஒரு பட்டினம். இது அமைந்துள்ள மாவட்டமும் இதே பெயரால் குறிக்கப்படுகிறது. இங்கு உள்ள சிவன் ஆலயமும், காந்தி நினைவுக் கட்டடமும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை. குமரியாக அமர்ந்திருக்கும் தேவி ஓர் அரக்கனை இங்கே மாய்த்து இடையூறுகளைக் களைந்ததாகக் கதைகள் கூறுகின்றன. சொக்கநாதரை புகழ்ந்து கன்னியாகுமரித்துறைகள் அரசனே என்பதை,

"கன்னித் துறைக்கு அரசே" (த.வி.தூ.251)

என்பதன் மூலம் அறியலாம்.

அழகர் கிள்ளை விடுதூது

திருப்பதி

'பதி' என்னும் சொல்லின் பொருள் ஊர் என்பது ஆகும். தெய்வத் தொடர்பான பெயர்களுக்கெல்லாம் அடைமொழியாகத் 'திரு' என்ற சொல்லைச் சேர்ப்பது தமிழ் மரபு. எனவே 'திருப்பதி' என்பது தெய்வத் தொடர்புடைய ஊர்களையெல்லாம் பொதுவாகக் குறிக்கும் என்றாலும், சிறப்பாகத் திருமாலுக்குரிய ஊர்களை நூற்றெட்டுத் திருப்பதிகள் என்ற வழக்கு குறித்தலைக் காணலாம். இப்படி திருமாலுக்குச் சிறப்பாக உரிய நூற்றெட்டுத் திருப்பதிகளுள் பெருஞ்சிறப்பு வாய்ந்ததென ஒரு பகுதியின் பெயர் 'திருப்பதி' என்றே வழங்கப்பெறுகிறது.

திருப்பதி பெருஞ்சிறப்புக் கொண்ட, தெய்வீகமான ஊராகும் என்பதை,

"சீர்பதியான திருப்பதி" (அ.கி.வி.தூ.111)

என்ற அடி கூறுகின்றது.

மதுரை

தென் மதுரை என்னும் ஊரில் தமிழ்ச்சங்கம் இருந்தது.

"தென் மதுரை ஊர் இடத்தும் சங்கத்து" (அ.கி.வி.தூ.136)

விழா நாளன்று திரண்டு சென்று கூடுவதால் கூடல் என்று அழைக்கப்படும் மதுரைத் திருநகர்

"கூடலின் கூடல் என்னும் கூடல் திருநகர்" (அ.கி.வி.தூ.146)

தல்லாகுளம்

விழா நாளன்று அழகர் ஆற்றில் இறங்க தல்லாகுளம் என்னும் ஊருக்கு வந்து அருள் செய்வார் என்பதை,

"தல்லாகுளம் வந்து சார்ந்து அருளி" (அ.கி.வி.தூ.147)

என்ற அடியின் மூலம் அறிய முடிகிறது.

தென்மதுரை

தென் மதுரையில் தமிழ் சங்கம் இருந்தது என்பதை

"தென்மதுரை ஊர் இடத்தும்
சங்கத்து ………………" (அ.கி.வி.தூ.136)

வண்டியூர்

திருமால் வண்டியூர் மண்டபத்தில் மகிழ்வுடன் வீற்றிருந்ததை

"வண்டியூர் மண்டபத்தில் உவந்து இருந்து" (அ.கி.வி.தூ.161)

என்ற அடி விளக்குகிறது.

தேனூர்

அழகர் தேனூர் மண்டபத்தைச் சார்ந்து அதனை வலம் வந்ததை,

"தேனூர் மண்டபம் சார்வாய் வலம் கொண்டு" (அ.கி.வி.தூ.185)

என்ற அடியின் மூலம் அறிய முடிகிறது.

முடிவுரை

மனித இனம் ஒரு குழுவாக சமூகமாக ஆங்காங்கே ஏதேனும் ஒரு பகுதியில் சிறிதுகாலம் நிலையாக வாழத் தொடங்கிய பின்னர்தான் இடப்பெயர்கள் தோன்றியிருக்க வேண்டும். ஒரு மனிதன் இன்னொரு மனிதனிடமிருந்து வேறுபடுத்த ஆட்பெயரையும் ஒரு இனத்தை மற்றொரு இனத்திடமிருந்து வேறுபடுத்த இனப்பெயரை வழங்கியது போன்று நிலத்தின் ஒரு பகுதியை இன்னொரு பகுதியினின்றும் வேறுபடுத்திக் காட்ட ஊர்ப்பெயர்களை அமைத்துக் கொண்டனர்.

104. அடியார்க்கு நல்லார் உரையில் ஊர்ப்பெயர்கள்

ப.லெட்சுமி,
முனைவர் பட்ட ஆய்வாளர்
ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி
குற்றாலம்.

முன்னுரை

மனிதகுலம் பல வரலாறுகளைத் தன்னகத்தே உள்ளடக்கியது. இவ்வரலாற்றினை அறிவதற்கு கல்வெட்டுகள், செப்பேடுகள், பட்டயங்கள், பழங்காசுகள், நாட்குறிப்புகள், சாசனங்கள், சுவடிகள், நினைவுச் சின்னங்கள், இலக்கியங்கள், தொல்பொருட்கள் போன்ற பல வரலாற்று மூலங்கள் துணை நிற்கின்றன. மேலும் பண்டைக் கால அரசர்கள், புலவர்கள், வெளிநாட்டு அறிஞர்கள், தேடுதல் மனம் கொண்ட உள்நாட்டு ஆய்வாளர்கள் போன்றோரும் பண்டைய வரலாற்றினை விளக்கும் கருவிகளாக நிற்கின்றனர். இவர்களது வரிசையில் வைத்து எண்ணத்தக்கவர்கள் உரையாசிரியர்கள் ஆவர். இவ்வுரையாசிரியர்கள் பரந்த உலகியல் அறிவு பெற்றவர்கள் என்று சொல்லத்தக்க வகையில் தம் உரைகளில் பல ஊர்களுக்கு காரணப் பெயர்கள் கூறியும், அவ்வூர்களின் அமைவிடங்களைக் குறிப்பிட்டும் உரை கூறுகின்ற பாங்கு போற்றுதற்குரியது. இவ்வகையில் அடியார்க்கு நல்லார் குறிப்பிடும் ஊர்ப்பெயர்களை அவர்தம் சிலப்பதிகார உரைவழி ஆய்வதாக இவ்வியல் அமைகின்றது.

ஊர் - சொல் விளக்கம்

ஊர் என்ற சொல்லுக்கு கிராமம்; மக்கள் சேர்ந்து வாழும் இடம்; இடம்; ஊரிலுள்ளோர்; சந்திர சூரியரைச் சூழ்ந்த பரிவேடம், தவழ், பரவு, தினவுறு, ஏறு, செலுத்து போன்ற விளக்கங்களைத் தருகின்றது. மெய்யப்பன் தமிழகராதி (ப. 214). மேலும் இவ்வூர் என்ற சொல் பின்னடைகளோடு சேர்ந்து வரும்போது **'மேலே'** என்கின்ற பொருளைத் தருகின்றது. அதாவது ஊர்த்துவகதி என்பது **'மேனோக்கிச் செல்லுகை'** என்ற பொருளிலும், ஊர்த்துவ காமினி என்பது மேல்நோக்கிச் செல்லும் குதிரை என்ற பொருளிலும், ஊர்த்துவ சுவாசம் என்பது **'மேல்மூச்சு'** என்ற பொருளிலும், ஊர்த்துவ தாண்டவம் என்பது **'ஒரு காலை மேலே தூக்கியாடும் நடனம்'** என்ற பொருளிலும் வழங்கப்படுகின்றது.

'ஊர்' என்ற சொல் தமிழ் இலக்கியங்களில் பரவலாகக் காணப்படுகின்றது. தொல்காப்பியத்தில் 3 நூற்பாக்கள் (புறத். 30, செய். 189, மர. 76) ஊர் என்ற சொல்லில் தொடங்குகின்றன.

"ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப" (புறத். 30)

என்ற தொல்காப்பிய நூற்பாவே உலா என்னும் சிற்றிலக்கியத்திற்கு வழிகோலியது இங்கு குறிக்கத்தக்கது. மேலும் **'ஊரன்'** என்ற சொல் மருத நிலத் தலைவனைக் குறிக்கும் சொல்லாக அக இலக்கியங்களில் இடம் பெறுகின்றது. மேலும் இப்பெயரை சுந்தரமூர்த்தி நாயனாரைக் குறிப்பிடுவதாகவும் அமைகின்றது. பகைமேற் சொல்வோர் நிரை கொள்ளும் முன்பு நிரைகாக்கும் காவலரைக் கொல்வது, **'ஊர்க்கொலை'** என்னும் புறத்துறையாகக் குறிப்பிடப்படுகின்றது.

பாட்டுடைத் தலைவனது ஊரினைப் பத்து வெண்பாவினால் சிறப்பிப்பது ஊர்வெண்பா என்றும், நேரிசை வெண்பாவினால் பாடுவது ஊர்நேரிசை என்றும், இன்னிசை வெண்பாவால் சிறப்பிப்பது ஊர் இன்னிசை என்றும் சிற்றிலக்கிய வகைகள் இடம்பெற்றுள்ளன.

இவ்வாறாக ஊர் என்ற சொல் மக்கள் வாழும் இடத்தைக் குறிக்கவும், மனிதர்களைக் குறிக்கவும், பெயராகவும், வினையாகவும் செயல்படுவதைக் காண முடிகின்றது.

ஊர்ப்பெயர்கள் உருவான விதம்

உலகில் வாழும் ஒவ்வொரு மனிதனுக்கும் ஊரும் பேரும் அவசியம். இறைவனைக் கூட, அவ்இறைவன் உறைந்துள்ள தலத்தோடு குறிப்பிட்டுக் காட்டும் இயல்பினை பக்தி இலக்கியங்கள் சுட்டுகின்றன.

பழங்கால மனிதன் நாடோடி வாழ்க்கை வாழ்ந்த போது, தான் சென்ற இடங்கள், காணுகின்ற பொருட்கள் போன்றவற்றைச் சுட்டுவதற்கு ஒரு அடையாடமிட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. "மக்கள் தாங்கள் வாழ்ந்த இயற்கை அமைப்பு, சுற்றுப்புறச்சூழல் போன்றவற்றைக் கொண்டு இயல்பாகப் பெயர் அமைத்த நிலையே முதலில் தோற்றம் பெற்றது" என்கிறார் ஆர்.ஆளவந்தார் (கல்வெட்டில் ஊர்ப் பெயர்கள், ப. 1). எனவே இயற்கையே மனிதனைப் பெயரிடும் பழக்கத்திற்குத் தூண்டியது எனலாம்.

'மனிதன் என்று ஒரு பொருளைக் குறிப்பிட்டு அதனைப் பிறருக்கு உணர்த்த விழைந்தானோ, என்று ஒரு பொருளைப் பிறிதொரு பொருளினின்றும் வேறுபடுத்த முயன்றானோ

அன்றே பெயருக்கான விதை தூவப்பட்டுவிட்டது' என்கிறார் கு.பகவதி (இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள், ப. 2). இவ்வாறு தோன்றிய வித்துக்களே ஊர், இடப் பெயர்களாகக் காலூன்ற ஆரம்பித்தன. இவ்வூர்ப் பெயர்கள் நீர்நிலைகள், தாவர, விலங்கினங்கள், ஆட்சிப்புரிந்த மன்னர்கள், இயற்கைச் சூழல்கள் போன்றவற்றை மையமிட்டு அமைந்திருப்பதைக் காண முடிகின்றது. எனவே பழங்காலப் பண்பாட்டை அறிவதற்கும், மண்ணின் மணத்தை உணர்வதற்கும் ஊர்ப்பெயர்கள் ஒரு கருவியாகத் திகழ்கின்றன எனலாம்.

சிலப்பதிகாரத்தில் ஊர்ப்பெயர்கள்

சிலப்பதிகாரக் காப்பியம் தேசியக் காப்பியம் என்று குறிப்பிடும் சிறப்பிற்கேற்ப அதில் இந்தியத் துணைக்கண்டத்தின் பல்வேறு நாடுகளைப் பற்றியும் நகரங்களைப் பற்றியும் பல அரிய தகவல்களை இளங்கோவடிகள் குறிப்பிட்டுச் செல்கின்றார்.

தமிழ்நாட்டின் எல்லையை குறிப்பிட்டுக் காட்டிய இளங்கோ, சேர, சோழ, பாண்டிய நாடுகள், கொங்கு, கோசர், கங்கம், கட்டி, குடகு, கருநடம், பங்களம், கொங்கணம், மாளுவம், மத்திமம், யவனர், வச்சிரம், அவந்தி, மகதம், கலிங்கம், ஆரியம், இலங்கை போன்ற நாடுகளைப் பற்றியும் புகார், மதுரை, வஞ்சி முதலான பெருநகரங்களைப் பற்றியும் அந்நகரோடு தொடர்புடைய பிற ஊர்ப்பகுதிகள் பற்றியும் தம் காப்பியத்தில் எழுத்தாள்கின்றார். அயிரை, கங்கை, காவிரி, குமரி, சிலம்பாறு, சோணை, தொழுனை, ப·றுளி, பேராறு, பொருநை, வையை போன்ற நதிகளையும் இட்ட சித்தி, சூரிய குண்டம், சோம குண்டம், பவகாரணி, புண்ணிய சரவணம் போன்ற பொய்கைகளையும் சிலம்பு சுட்டுகின்றது. இவற்றுள் அடியார்க்கு நல்லார் இளங்கோ கூறாத சில பகுதிகளைக் குறிப்பிடுவதோடு அவற்றிற்கான காரணங்களையும் விளக்குகின்றார்.

அடியார்க்கு நல்லார் உரையில் நாடுகளின் பெயர்கள்

சிலம்பில் இளங்கோ கூறாத பல நாடுகளின் பெயரை நல்லார் குறிப்பிடுகின்றார். ஏழ்தெங்கநாடு, ஏழ்மதுரை நாடு, ஏழ் முன்பாலை நாடு, ஏழு பின்பாலை நாடு, ஏழ்குன்ற நாடு, ஏழ்குண காரை நாடு, ஏழ் குறும்பனை நாடு ஆகிய 49 நாடுகள் கடற்கோளால் அழிந்தமையை நல்லார் உரை (அடி. நல். உரை. ப. 228) தெளிவுறுத்துகின்றது. இதற்குச் சான்றாக கணக்காயனார் மகனார் நக்கீரனார் உரைத்த இறையனார் பொருளுரையானும் உரையாசிரியராகிய இளம்பூரணவடிகள் முகவுரையானும் பிறவாற்றானும் பெறுதும் என்கிறார். மேலும் நல்லார் பிறநாடுகளைக் குறிப்பிடும்போது அவற்றின் பிற பெயர்களையும் அமைவிடங்களையும் கூறுகின்றார். அவையாவன

i) அவந்தி : சோழ மன்னனுக்கு அவந்தி வேந்தன் தோரண வாயிலைப் பரிசாக அளித்ததாகச் சிலம்பு சுட்டுகின்றது. அவந்தி நாடுமாளவ விந்திய மலைக்கு வடக்கே இருந்ததாகவும் அறிஞர் சுட்டுவர். இதன் தலைநகரம் உச்சயினி ஆகும். அடியார்க்கு நல்லார் இதனை உஞ்சை (அடி. உரை. ப. 162) என்று குறிப்பிடுகின்றார்.

ii) வச்சிரநாடு : வச்சிரநாட்டு மன்னன் சோழனுக்குக் கொற்றப்பந்தரை அளித்தான் என சிலம்பு சுட்டுகின்றது.

"மாநீர் வேலி வச்சிர நன்னாட்டு"

(சிலப். இந். 99-100)

என்று சிலம்பு கூறுவதால் இது நீர் சூழ்ந்த பகுதியாக இருக்கும் என்பது தெளிவாகின்றது. இது பீகார் மாநிலத்தின் வடபகுதி என்றும், இந்நகரம் இன்று முசா·பர்பூர் மாவட்டத்தில் பெசார் என்று வழங்குகின்றது என்றும் வரலாற்றேடுகள் கூறுகின்றன (R.C. Majumdar & Co – Advanced History of India – P. 3). அடியார்க்கு நல்லார் வச்சிரநாடு சோனையாற்றின் கரையில் உள்ளது என்கின்றார் (அடி. உரை, ப. 162). நல்லார் குறிப்பிடும் சோனையாறு இன்றும் பீகார் மாநிலத்தில் ஓடுகின்றது.

அடியார்க்கு நல்லார் உரையில் நகரமும் ஊரும்

நல்லார் தம் உரையில் சில நகர்களின் அமைவிடங்களையும், ஊர்ப்பெயர் காரணத்தையும் விளக்குகின்றார்.

அவையாவன:

அ) சிங்கபுரம்

இளங்கோ இதனை **'சிங்கபுரம்'** என்று மட்டுமே குறிப்பிட நல்லார் **"கலிங்கநாட்டுச் சிங்கபுரமென்னும் நகர்"** (அடி. உரை. ப. 22) என்று குறிப்பிடுகின்றார்.

ஆ) உறையூர்

இளங்கோ இதனை **'வாரணம்'** என்று குறிக்க, நல்லார் அதன் காரணத்தை உரைக்கின்றார். அதாவது, "வாரணம்-கோழி; ஆவது உறையூர். முற்காலத்து ஒரு கோழி யானையைப் போர் தொலைத்தலான் அந்நிலத்திற் செய்த நகர்க்குக் கோழியென்பது பெயராயிற்று. அந்நகர் காண்கின்ற பொழுது சிறையும் கழுத்துமாக ஆக்கியவதனாற் புறம்பே சிறையையுடைய கோழி யென்றாயிற்றென்பாருமுளர்; அற்றன்று; புறஞ்சிறை வாரணமென்பது சிலேடை; புறத்தே சிறையையுடைய உறையூரும்; புறஞ்சிறைப் பொழிலும்" (அடி. உரை. பக். 247-8) என்று நல்லார் விளக்கி உரைக்கின்றார்.

இ) குணவாயில்

திருக்குணவாயில் என்பதோரூர்; அது வஞ்சியின் கீழ்த்திசைக்கண் உள்ளது (அடி. உரை. ப. 12).

ஈ) குன்றம்

கொடுங்கோளூர்க்கு அயலதாகிய செங்குன்றென்னும் மலை (அடி. உரை. ப. 19). இது திருச்செங்கோடு அல்ல என்கிறார் நல்லார்.

முடிவுகள்

அடியார்க்கு நல்லார் உரையில் கபாடபுரம், இருந்தையூர், வெள்ளூர், மதுரை, துவரை, கீரந்தை, கருங்கோழி (அடி. உரை. ப. 9) போன்ற ஊர்ப்பெயர்கள் காணக்கிடைக்கின்றன. மேலும் **'கடையம்'** என்பது ஓர் ஆற்றின் பெயர் என்றும், தெய்வ மால் வரை (அர. 1) என்பது பொதியில் (அடி. 78) என்றும், சிறுமலை (காடு. 85) என்பதை மட்சிறுமலை என்றும் நல்லார் குறிக்கின்றார். இவர் கூறும் ஊர், இடப் பெயர்கள் விரிவான ஆய்விற்கு உரியன.

105. வள்ளுவத்தில் ஊர்

மா. லட்சுமி பிரியா
முனைவர் பட்ட ஆய்வாளர் (ப.நே)
அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி
சிவகாசி

முன்னுரை

தமிழ்ச் சமுதாயத்தை முழுமையாக படம்பிடித்துக் காட்டும் காலக் கண்ணாடியாக திகழும் இலக்கியம் திருக்குறள் ஆகும். நாடு, ஊர், குடும்பம், தனிமனிதன் என பலவற்றையும் வள்ளுவம் பதிவு செய்துள்ளது. இதில் ஊர் பற்றிய செய்திகள இடம் பெற்றுள்ள விதம்தனை இக்கட்டுரையில் காண்போம்.

ஊர்

"மக்கள் வசிக்கும் வீடுகள் கொண்ட இடம் ஊர்" (an area of houses where in people live) என அகராதி சுட்டுகின்றது"[1] மக்களின் வாழ்நிலை, வளர்ச்சிநிலையின் படி மக்கள் வசிக்கும் இடம் சிற்றூர் (village) பேரூர் (big village) நகரம் அல்லது மாநகரம் (town or city) என அழைக்கப்படுகின்றது.

ஊரின் தோற்றம்

மக்கள் வாழக்கூடிய இடம் இல் (குறள் 30) எனப்பட்டது. வீட்டின் உள் முற்றம் அங்கணம் (குறள் 730) எனப்பட்டது இத்தகைய பல இல்லங்கள் சேர்ந்த நிலப்பகுதியே ஊராகும்.. நிலம், உலகு என மனிதன் வசிக்கக்கூடிய பகுதியை வள்ளுவர் கூறியிருப்பினும் அதற்குள் இருக்கக்கூடிய ஊர் என்ற அமைப்பினை புறம், அகம் என இரண்டினுக்கும் சான்றாதாரமாக உவமை அமைத்து பாடியுள்ளார்.

உவமை வழி ஊர்

"தெரிவிக்க விரும்பும் பொருளைத் தெரிந்த பழைய பொருளோடு, போல, புரைய, அன்ன என்பன போன்ற இணைப்புச் சொற்களால் ஒப்பிட்டு விளக்குவதே உவமை ஆகும்"2 இதன்வழி நோக்கின் வள்ளுவரின் எதார்த்தம் மற்றும் அறிவுசார் நுண்புலம் நன்கு விளங்கும். மக்களிடத்து கூற வரும் கருத்தை மக்கள் குழுமி வசிக்கு இடப்பொருளாகிய ஊரைக் கொண்டே உவமை அமைத்து பாடியிருப்பது மக்களிடமிருந்தே அதாவது அவர்களின் வாழ்வியலை, சமூகத்தை உட்கொள்ளாது ஓர் இலக்கியத்தை படைக்க முடியாது என்பதை வலியுறுத்துகின்றது.

திருக்குறளில் ஊரை உவமையாகக் கொண்டு படைக்கப்பட்ட குறள் குறைவே ஆயினும் மிகவும் பொருத்தமுடையதாக மொழியப்பட்டுள்ளது எனலாம்.

உள்ளூர்

மக்கள் அனைவரும் பயன்படுத்தக்கூடிய செல்லக்கூடிய ஊரின் உட்பகுதியே உள்ளூர் எனப்படும். இன்றைய வழக்கிலும் உள்ளூர் என்பது அவ்வூரைச் சார்ந்தவருக்கு நன்கு தெரிந்த இடமாக இருக்கும். அதன்படி வள்ளுவர் ஒப்புரவு செய்வான் கண் செல்வம்படுமாயின் அது ஊர் நடுவே பயன்மரம் பழுத்தது போன்று உவமித்துள்ளார். இதனை,

"பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயன்உடை யான்கண் படின்" (குறள் 216)

என்ற குறள் குறிப்பிடுகின்றது. அதாவது வெளிப்புறம் எனின் அனைவராலும் பயன்பெற முடியாது ஆதலாலே ஊரின் நடு என்ற பொருள் படும்படி பாடியுள்ளார்.

'ஒப்புரவு' அதிகாரத்தில் 'பயன் மரம்' நடுஊரில் இருந்தால் அனைவருக்கும் பயன்தரும் எனக் கூறப்பட்டிருப்பது போல, 'நன்றியில் செல்வம்' என்ற அதிகாரத்தில் ஈட்டியவருக்கும், பிறர்க்கும் பயன்படுதல் இல்லாத செல்வத்தை ஊரின் நடுவே இருக்கும் 'நச்சுமரம்' எனக் கூறப்பட்டுள்ளது.

"நச்சப் படாதவன் செல்வம் நடுஊருள்
நச்சு மரம்பழுத் தற்று" (குறள் 1008)

பிறருக்கு கொடுக்க வெண்டும் என்ற விரும்பாதவன் செல்வ பயன்பாட்டு இன்மையைக் குறிக்க இவ்வுவமைக் கையாளப்பட்டுள்ளது.

ஊரணி

ஊரில் வசிக்கும் மக்களால் பயன்படுத்தப்படும் நீர் நிறைந்த குளம் 'ஊருணி' எனப்படும். ஊரவரின் புழக்கத்திற்காக அமைக்கப்பட்டது ஆகையால் இப்பெயர் வந்தது எனலாம். இன்று இவ்வூரணி என்னும் சொல்வழக்கு இராமநாதபுரம், திருநெல்வேலிப் பகுதிகளில் மிகுதியாக வழங்கப்படுதலைக் காணலாம்.

வள்ளுவரின் சிந்தையில் இவ்வூரணி ஒப்புரவை விரும்பிச் செய்வாரின் தன்மைக்கு உவமையாத் தோன்றியுள்ளது.

"ஊருணி நீர்நிறைந் தற்றே உலகுஅவாம்
பேரறி வாளன் திரு" (குறள் 215)

ஒப்புரவு செய்வானிடத்து இருக்கும் பெரிய அளவிலான செல்வம், ஊரார், தண்ணீர் பருகும் குளம் நீரால் நிறைந்தாற் போன்றதாகும்.

ஊரார்

ஊரில் வசிப்பவர் ஊரார் அல்லது ஊரவர் என அழைக்கப்படுவர். குறிப்பிட்ட எந்த ஊரையும் சுட்டாமல் வள்ளுவர் ஊர், ஊரார் என்று சுட்டியிருப்பதே அவரின் பொதுமை உணர்வைச் சுட்டுகின்றது. வசிப்பவர் அன்றி ஊர் என்பதில்லை ஆதலாலே ஊரவர் முதன்மைபடுத்தி, முன்னிருத்தி பாடியுள்ளார். கள் உண்பவரை ஊரார் மதிக்கமாட்டார் என்பதனை,

"உள்ஒற்றி உள்ளூர் நகப்படுவர் எஞ்ஞான்றும்
கள்ஒற்றி கண்சாய் பவர்" (குறள் 927)

என்ற குறள் குறிப்பிடுகின்றது. மேலும் 'ஊரவர்' என்ற சொல் மிகுதியாக தலைவன் தலைவியின் அகநிலைப்பாட்டிற்கே எதிர்நிலையாக கையாளப்பட்டுள்ளது.

கண் இமைத்தால் தலைவன் மறைந்து விடுவான் என்பதால் கண் இமைக்காமல் இருப்பேன் ஆனால் ஊரவர் தலைவனை துயிலா நோய் செய்த அன்பிலாதவர் என்று கூறுகின்றனர். இதில் தலைவன் தலைவியின் பிரியாத நிலை ஊர்மக்களால் வேறுபடுத்திக் கூறப்பட்டுள்ளது.

"இமைப்பின் கரப்பாக்கு அறிவல் அனைத்திற்கே
ஏதிலர் என்னும்இவ் ஊர்" (குறள் 1129)

"உவந்துஉறைவர் உள்ளத்துள் என்றும் இகந்துஉறைவர்
ஏதிலர் என்னும்இவ் ஊர்" (குறள் 1130)

இவ் இருகுறளும் ஒத்த பொருளைக் கொண்டு அமைந்துள்ளது. அகத்துறையில் ஊரவர் அலர் தூற்றுதல் என்பது தலைவன் தலைவியின் வரைவுக்கு காரணமாக அமைகின்றது. தலைவியின் அருமை தெரியாமல், ஊரவர் அவளை எளியவளாகக் கருதி அவர் தூற்றுகின்றமையை,

"மலர்அன்ன கண்ணாள் அருமை அறியாது
அலர்எமக்கு ஈந்ததுஇவ் ஊர்" (குறள் 1142)

என்ற குறள் வழி அறியமுடிகின்றது. மற்றொரு குறளில் தலைவி, இவ்வூரார் தூற்றிய அலர் தமக்கு நன்மை பயத்தாகக் கூறுவதனை,

"உறாஅதோ ஊர் அறிந்த கெளவை அதனைப்
பெறாஅது பெற்றன்ன நீர்த்து" (குறளட 1143)

என்ற குறள் குறிப்பிடுகின்றது. மேலும் தலைவி ஊரார் தூற்றும் அலர் எருவாகவும், அன்னையின் கடுஞ்சொல்லை நீராகவும் கொண்டு இக்காமநோய் வளர்கிறது என்கிறாள் இதனை,

"ஊரவர் கெளவை எருவாக அன்னைசொல்
நீராக நீளம்இந் நோய்" (குறள் 1147)

என்ற குறள் சுட்டுகின்றது. ஊரவரின் இப்பேச்சு உளவியல் நோக்கிலும் எண்ணத் தகுந்ததாகும்.

ஊரார் இவ்வாறு பேசுவதால் தலைவன் உடன்போக்கிற்கு உடன்படுவான் என தலைவி தெளிவதனை,

"தாம் வேண்டின் நல்குவர் காதலர் யாம்வேண்டும்
கெளவை எடுக்கும்இவ் ஊர்" (குறள் 1150)

எனக் இக்குறள் குறிப்பிடுகின்றது

அகத்தில் தோழியின் பங்கு மிக முக்கிய இடத்தைப் பெறுகின்றது. தலைவியின் உளபாங்கிற்கு வடிகாலாக தோழி திகழ்கிறாள் ஆதலால் தலைவனும், தோழியும் இல்லாத ஊர் தலைவிற்கு துன்பமாக இருக்கின்றது என்பதனை வள்ளுவர்,

"இன்னாதுஇனன் இல்ஊர் வாழ்தல் அதனினும்
இன்னாது இனியார்ப் பிரிவு" (குறள் 1158)

எனக் கூறுகின்றார். மேலும் 'கண்விதுப்பு அழிதல்' என்ற அதிகாரத்தில் தன் அகத்திருப்பதை புறத்தே காட்டும் என்ற அறைபறையாகிய கண்ணின் தன்மையை அறிந்து கொள்வது இந்த ஊராருக்கு எளிது என்கிறாள்.

"மறைபெறல் ஊரார்க்கு அரிதன்றால் எம்போல்
அறைபறை கண்ணா ரகத்து" (குறள். 1180)

மற்றொரு குறளில் கனவில் வரும் தலைவனை அறியாத ஊரார் தலைவன் நனவில் தலைவியை விட்டு பிரிந்திருக்கும் நிலையை பழித்து பேசுகின்றனர் என்பதனை,

"நனவினான் நம்நீத்தார் என்பர் கனவினான்
காணார்கொல் இவ்வூ ரவர்?" (குறள் 1220)

என்ற குறள் சுட்டுகின்றது.

முடிவுரை

ஊர் என்ற சொல்லோ அல்லது குறிப்பிட்ட ஒரு ஊரின் பெயரோ மன்னன் ஆட்சி சிறப்பைக் கூறுவதோடு மட்டுமல்லாமல் அகத்துறையில் தலைவியின் நலனுக்கும், அலருக்கும் கையாளப்பட்டுள்ள விதம்தனை சங்க இலக்கியத்தில் மட்டுமன்றி அறஇலக்கியமாகிய திருக்குறளின் வழியும் அறிந்து கொள்ள முடிகின்றது.

குறிப்பு :

1) அடோன், தமிழ் - ஆங்கில அகராதி, ப. 100
2) அர. சிங்காரவடிவேலன், சங்க இலக்கிய உவமைகள், ப.29.

106. ஐங்குறுநூற்று ஊர்ப்பெயர் ஆளுகையில் கருத்துப்புலப்பாட்டுச் சிக்கல்

ம. லோகேஸ்வரன்
தமிழ் - முனைவர்பட்ட ஆய்வாளர்
பெரியார் உயராய்வு மையம்
பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சிராப்பள்ளி – 24.

ஐங்குறுநூற்றில் காணப்பெறும் ஊர்ப்பெயர்கள் குறித்தும் ஊர்ப்பெயர்கள் தொடர்பான சூழலியல் குறித்தும் விளக்குவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

உரைமரபுப் பின்னணியில் ஊர்ப்பெயர்கள்

திணைப்பகுப்பு அடிப்படையில் அமைந்துள்ள ஐங்குறுநூற்றின் முதல் இரண்டு திணைகள் (மருதம், நெய்தல்) இவ் ஆய்வுக்கு உட்படுத்தப் பெற்றுள்ளன. முதலாவதான மருதத்திணையில் தேனூர், ஆமூர், இருப்பையூர், கழார் ஆகிய ஊர்ப்பெயர்களும் நெய்தல் திணையில் தொண்டி, கொற்கை ஆகிய துறைமுகங்களுமாக ஆறு ஊர்ப்பெயர்கள் பதிவாகியுள்ளன. ஐங்குறுநூற்று உரைமரபில் ஔவை சு. துரைசாமிப்பிள்ளை உரையைத் தவிர்ந்த ஏனைய உரைகளில் மேற்கூறப்பெற்ற ஊர்ப்பெயர்களுக்கான அடையாளப்படுத்தத்தைக் காண இயலவில்லை. உ.வே.சா பதிப்பின் பழையவுரைகாரரும் இதில் கவனம் செலுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஔவையின் இத்தகு உரை முயற்சிக்குப் பின்னர் எழுந்த மரபார்ந்த உரைகளில் கூட மேலோட்டமான பொருண்மைகளே வெளிப்படுகின்றன (விவரம், பின்னிணைப்பு:1) ஔவை பல இலக்கியச் சான்றுகளுடனும் கல்வெட்டுக் குறிப்புகளுடனும் இவ்ஊர்ப் பெயர்களை நிறுவியமையால் பின்வந்தோர் அதற்கு உடன்பட்டுச் சுருக்கமான விளக்கங்களைக் குறிப்பிட்டுச் சென்றுள்ளனர் என்று கருதுவதற்கு இடமளிக்கின்றன.

ஊரன்: கருத்தியல்

இருநூறு பாக்களில் நேரடியாகப் பதிவாகியுள்ள ஆறு ஊர்ப்பெயர்கள் தவிர்ந்து பொதுநிலையில் (ஊர்கள்) குறிக்கப்பெற்றுள்ள தன்மையினைக் காணமுடிகின்றது. சங்க இலக்கியப் பாக்களில் குறிஞ்சி நிலத் தலைவனை குன்றநாடன், மலைநாடன், நன்மலைநாடன் என்றும் முல்லை நிலத் தலைவனை புன்புலநாடன் புறவணிநாடன், கான்கெழுநாடன் என்றும் நெய்தல் நிலத் தலைவனைச் சேர்ப்பன், புலம்பன், துறைவன், வெற்பன் என்றும் குறிக்கப்பெற்றுள்ளன. இதே போன்று மருதத் திணையில் 'மகிழ்நன்' எனும் திணைநிலைப் பெயர் குறிக்கப்பெற்றிருந்தாலும் 'ஊரன்' எனும் பெயரே மருத் திணையில் பெரும்பான்மையாகக் கையாளப்பெற்றுள்ளது. மேற்கூறப்பெற்றவை போன்றே 'ஊரன்' என்பதும் திணைநிலைப்பெயர் என்று கூறிக் கடந்தாலும் இதன் உள்ளீடாகப் புலமைத்துவச் சார்பு இயங்கியுள்ளதை அறியமுடிகிறது.

நிலங்களனைத்திலும் ஊர்கள் இருந்துள்ளமையை சங்கப் பாக்களின் வழி அறிய முடிகின்றன. அவை அந்தந்த நிலத்திற்கேற்ப குடி, சேரி, துறை என்று குறிக்கப்பெற்றுள்ளன. இருப்பினும் மருதத் திணைப் பாக்களில் பயின்று வந்துள்ள 'ஊரன்' எனும் சொல் சமூகத்துடனான தொடர்பினையே முன்னிறுத்துவதாய் அமைந்துள்ளது.

> "மக்கள் வாழும் பகுதிகள் மோகூர், செல்லூர், பழவூர், புத்தூர்
> என்றாற்போல ஊர் என்று பெயர் பெறும்" (1957:10)

என்று மருதத் திணைப் பகுதிகள் குறித்து ஔவை குறிப்பிடும் கருத்தும் உடன்வைத்து எண்ணத்தக்கது. இவ்வாறாக ஊர்கள் நிறைந்துள்ள மருதநிலப் பகுதியாதலின் இந்நிலத் தலைவனை 'ஊரன்' என்று பொதுநிலையில் குறிக்கப்பெறும் சூழல் உருவாகியுள்ளது (விவரம், பின்னிணைப்பு:2) என்று குறிப்பிடலாம்.

சூழல்: புறக்கணிப்பு

இருதிணைகளுள் கொற்கை எனும் ஊரினைத் தவிர ஏனைய ஊர்கள் உவமையாகவே குறிக்கப்பெற்றுள்ளன (விவரம், பின்னிணைப்பு:3). இந்நிலையில் அவனூர் (24,41), நம்மூர் (31,34,35,102,104) நின்னூரே (45), இவ்வூர் (62,110,132,138,154), எவ்வூர் (62), பேரூர் (77), ஊரே (75,94,104,173,181,184), நும்மூர் (83,92,137), ஊர் (101), கடலூர் (124) என்று பொதுநிலையில் குறிக்கப்பெற்றுள்ள பதிவுகள் கவனத்தில் கொள்ளத்தக்கதாகும்.

> இவ்வூர் மங்கையர்த் தொகுத்தினி
> எவ்வூர் நின்றன்று மகிழ்நநின் தேரே (62)

இவ்வடிகளுக்கு 'இவ்வூரின்கண் பல மங்கையரை வதுவை அயர்ந்த நீ அவர்களோடமையாது வேறு பிற ஊர்கட்கும் சென்று வேறு மங்கையர் பலரைக் கூட விரும்புகிறாய்' என்று ஔவை

உரைவரைந்துள்ளார். இவ்விடங்களில் வழக்காற்று ஊர்களை நேரடியாகப் பதிவு செய்யும் சூழல் அமைந்திருந்தும் புலவர்கள் அதனைத் தவிர்த்துள்ளமாற்றை அறியமுடிகின்றது. இதே போன்று,

'கவின்பெறு சுடர்நுதல் தந்தை யூரே' (94)

எனும் அடி பயின்றுவந்துள்ள பாடலுக்குத் 'தலைவிக்கு ஊர் தன்னூரே யாயினும் அவள் வாழும் பகுதியை அவட்கு அயன்மை தோன்றத் தந்தையூர் என்றானாம். இனித் தன்வரைவு எதிர்கொண்டு மகட்கொடை நேரும் உரிமையுடையவன் அவள் தந்தையாகலின் தந்தையூர் என்றான்' என்று ஔவை உரை வரைந்துள்ளார். 'தந்தையூர்' என்று சுட்டியுரைக்கின்ற சூழலிலும் வழக்காற்று ஊரினைத் தவிர்த்தே புலவர்கள் கட்டமைத்துள்ளனர். இத்தகு புலமைத்துவ மரபின் தத்துவாத்தப் பின்னணி அகப்பொருள் மரபு சார்ந்த வெளிப்பாடே என்று அமைதியுற்றாலும் தேனூர், ஆமூர், இருப்பையூர் போன்ற ஊர்களின் பதிவுகள் கவனத்திற்குள்ளாகின்றன.

'தில்லை வேலி இவ்வூர் (131)

எனும் அடிக்கு,

"சிதம்பரத்தின் பழம் பெயராகிய தில்லை என்பது இதனால் வந்தது. தில்லைச் சிற்றம்பலம் என்ற பழைய பெயர்களுள் தில்லை மறையவும் சிற்றம்பலம் சிதம்பரம் எனச் சிதைந்து மருவிவிட்டது. தில்லை – மரம்; இது நெய்தற் பகுதியில் செறிந்திருத்தல் பெறப்படும்"

என்று ஔவை உரைவரைந்துள்ளார். 'தில்லை' எனும் கருப்பொருளினைக் கொண்டு ஓர் ஊர்ப்பெயரினை அடையாளங் கொள்கின்ற (அ) வருவித்துக்கொள்கின்ற சூழல்கள் மருதத் திணையிலும் நெய்தல் திணையிலும் விரவியிருக்கின்றன. அவற்றை ஊரன், நம்மூர், நும்மூர், தந்தையூர் போன்ற பொதுநிலைச் சொற்கள் மறைத்து நிற்கின்றன. இப்பின்னணியில் 'நாடன்' எனும் சொற்பதிவினையும் அணுக வேண்டியுள்ளது. இதுகுறித்து மயிலம் வே. சிவசுப்பிரமணியன் பதிப்பில்,

"தேஎம் - நாடு – தான் வசிக்கும் இடத்தைத் தேயம் என்றான். ஓர் ஊர்ப்பகுதியையும் நாடு என்றல் இக்கால மக்கள் வழக்கில் உள்ளது." (அக.மணி. ப.384)

என்று குறிக்கப்பெற்றுள்ளது. நாடு என்பதற்குத் தற்காலத்தில் பொருள் கொள்கின்ற வழக்கு சங்க காலத்தில் இருந்திருக்க வாய்ப்பில்லை. ஆனால் 'நாடு' எனும் சொற்றாளுகை பரவலாக இருந்துள்ளமையைக் காணமுடிகின்றது. இவ்வாறு குறிப்பிடும் வழக்கு ஊர்ப்பகுதியை மையமிட்டதாகவே கருதமுடிகின்றது. மேலும் தற்காலத்தில் 'குறிப்பிட்ட சில ஊர்ப்பகுதிகளை' நாடு என்று குறிப்பிடும் வழக்கு பண்டைச் சமூகத்தின் எச்சமாகக் கருதலாம்.

பின்னிணைப்பு: 1

ஊர்	யாழ்ப்பான உரைகாரர்	ஔவை சு. துரைசாமிப்பிள்ளை	பொ.வே. சோமசுந்தரனார்	புலியூர்க் கேசிகன்
தேனூர்	எக்காலத்தும் குளிர்ந்த நீரைச் சொரியாநிற்கும் தேனூர்	மதுரை நாட்டுத் தென்கரைப் பழங்கூர்ப்பற்றுத் தேனூர். முதுகுளத்தூர்ப் பகுதியில் 'திருமாலுகந்தான் கோட்டை. வையைக் கரையில் திருவேடகத்துக் கண்மையில் ஓர் தேனூர்.	பாண்டி நாட்டின் கண்ணுள்ள ஒரு சிறந்த ஊர்.	வையைபட்ட பாய்ச்சலில் மதுரைக்கு அருகிலே உள்ள ஓர் ஊர்
ஆமூர்	பகைவரை வெல்லுகின்ற போரையுடைய சோழனது ஆமூரையொத்த	சோழ நாட்டில் பல ஆமூர்கள் உள எனக் கொள்க. என்று கூறி நான்கு இலக்கியச் சான்றுகளைக் குறிப்பிட்டுள்ளார்	சோழ நாட்டின் கண்ணதாகிய ஓரூர்.	சோழர்க்குரியதோர் பேரூர்
இருப்பை யூர்	விரான் என்பவனது இருப்பை என்னும் ஊரையொத்த	விராஅன் இருப்பை என்னும் ஊரின்கண் இருந்து விளங்கிய ஒரு வள்ளல். இருப்பையூர் வெண்ணெல்லால் வீறுபெற்று விளங்குமாறு காண்க. என்று இலக்கியச் சான்றுகள் தந்து விளக்கியுள்ளார்	விரான் என்னும் வள்ளலுடைய மூதூர்.	இலுப்பைக்குடி, இலுப்பைக்குளம் ஆகிய ஊர்களோடு ஒப்பிடத்தக்கது.
கழார்	மத்தியினுடைய கழாரென்னும் ஊரையொத்த	கழாஅர் என்பது காவிரிக் கரையை யடுத்து, மேலும் இது கழா அர்க்கீரன் எயிற்றியார் என்னும் புலவர் பெருமாட்டியர் பிறந்த ஊராய்க் கரிகால்வளவன் தன் மகள்	மத்தி என்னும் நெய்தல் நிலத் தலைவனது ஊர். காவிரிக்கரையின் கண்ணது என்பர்.	சோணாட்டில் ஓர் கடற்கரைப் பேரூர்

		ஆதிமந்தியும் அவள் கணவன் ஆட்டனத்தியும் சூழ்வரச் சென்று தன்பதம் கொண்ட சீரிய இடமுமாகும்.		
தொண்டி	தோண்டியன்ன பணைத்தோள்	பண்டையில் குடக்கோ வேந்தர்க்கும் இடையில் இரும்பொறை வழியினர்க்கும், பின்னர்க் கோதை மன்னர்க்கும் உரிமையுற்றிருந்த தொண்டி நகரம்.	சேர நாட்டிலுள்ள ஒரு சிறந்த பட்டினம்	சேரர்க்குரிய புகழ்பெற்ற கடற்கரைப் பேரூர். இந்நாளைய அகலப்புழை, இராமநாதபுர மாவட்டத்தும் ஒரு தொண்டிப்பட்டினம் உள்ளது.
கொற்கை	நெய்தல் பொருந்திய கொற்கை	தன்னான் பொருநை (தாம்பிரபரணி) கடலொடு கலக்குமிடத்தே இருந்த நகரம். இப்போது சிற்றூராய் உள்ளது.	பாண்டிய நாட்டின்கண் அமைந்த ஒரு சிறந்த துறைமுகப்பட்டினம்	பாண்டியரின் கடற்றுரைப் பட்டினம் தாமிரபரணி கடலொடு கலக்குமிடத்து முன்நாளில் இருந்தது.

பின்னிணைப்பு – 2
ஊர: 47,48,51,53,65,68,70,81,85,86,98.
ஊரன்: 17,19,20,22,26,27,28,36,39,89,95,96,183.
ஊரின் ஊரனை: 54.
கழனியூரன்: 4,18,25,29,60,91,96.
தண்டுரையூரன்: 2,5,6,7,9,10,13,21,83,88.
துறைகேழுரன்: 11,12.
புனலனியூரன்: 97.
பூக்கஞுலூரன்: 3,8,16,99.
பொய்கையூரன்: 97.
மணித்துறையூரன்: 14.
மூதூரூரன்: 15.
யாணரூரன்: 1,42,43,49,50,87,100.

பின்னிணைப்பு: 3
'தன்புன லொழுகும் தேனூ ரன்ன' (54)
'தேர்வண் கோமான் தேனூ ரன்ன (55)
'பகல்கொள் விளக்கோ டிராநாள் அறியா
வெல்போர்ச் சோழ ராமூ ரன்ன' (56)
'ஆம்பலஞ் செறுவிற் றேனூ ரன்ன' (57)
'கைவண் விராஅ னிருப்பை யன்ன' (58)
'நெடுநீர்ப் பொய்கைத் துடுமென விழூஉம்
கைவண் மத்தி கழாஅ ரன்ன' (61)
'இன்னிரை மறுகுதொ றிசைக்கும்
தொண்டி யன்ன …' (171)
'அலங்கிதழ் நெய்தற் கொற்கை' (185)
'கொற்கைக் கோமான் கொற்கையம் பெருந்துறை' (188)

107. கள்ளிக்காட்டு இதிகாசத்தில் ஊர்ப் பெயர்கள்

வா.வாசுகி,
உதவிப் பேராசிரியர்,
அய்யநாடார் ஜானகி அம்மாள் கல்லூரி,
சிவகாசி.

இலக்கியத்தின் மையமாகவோ, பின் புலமாகவோ ஊர்ப் பெயர்கள் அமையலாம். இலக்கிய வகைகள் குறிப்பாக புதினம் மற்றும் சிறுகதைகள், கிராமத்தையோ நகரத்தையோ மையப்படுத்தித்தான் பயணிக்கிறது. கள்ளிக்காட்டு இதிகாசம் என்னும் இந்தப் புதினத்தின் முக்கியக் கதாபாத்திரம் பேயத்தேவர் ஆவார். ஆவர் பயணித்த ஊர்களையும் பிற கதாப்பாத்திரங்களுக்குக் தொடர்புடைய ஊர்களையும் இக்கதையில் ஆசிரியர் பயன்படுத்தி உள்ளார். அந்த ஊர்கள் குறித்து ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

புதினத்தில் பதிவான ஊர்ப் பெயர்கள்

கள்ளிக்காட்டு இதிகாசத்தின் கதை பெரும்பாலும் தேனி மாவட்டத்திலுள்ள பல சிறிய கிராமங்களைச் சுற்றியே நடக்கிறது. இப்புதினத்தில் மொத்தம் 28 ஊர்களைப் பதிவு செய்துள்ளார் ஆசிரிகர். இதில் பல கிராமங்களையும் சில நகரங்களையும் பதிவு செய்துள்ளார். கள்ளிக்காடு, காமக்காப்பட்டி, கானா விளக்கு, காக்கிவாடன்பட்டி, நாச்சியார்புரம், கருமாத்தூர், கோடாங்கிபட்டி, பாலாறுபட்டி, எருமலநாயக்கன் பட்டி, மெட்டூரு, சல்லிப்பட்டி, சொக்கத்தேவன் பட்டி, கொண்டம்மா கரடு, சக்கரப்பட்டி, கரட்டுப்பட்டி, வருசநாடு, தாண்டிக்குடி, பின்னத்தேவன் பட்டி, சொக்கனூரு, குருவியப்பன் பட்டி, சாவடிப்பட்டி, பசுக்காரன்பட்டி, தேக்கடி, குமுளி, சோழவந்தான், மதுரை, இராமநாதபுரம், பெரியகுளம் இப்புதினத்தின் கதை, இத்தனை ஊர்களிலும் பயணிப்பதால் இந்த ஊர்களைப் பதிவு செய்வது அவசியமாகிறது.

கிராமங்களின் பிறப்பு

தோற்றம் ஆராய்ச்சிக்கு முடிவே இல்லை. மனிதனின் தோற்றத்திற்கான காரணங்களும் காலமும் இன்றும் ஆராயப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதில் கிராமங்கள் எப்போது தோன்றின? மக்கள் எப்படி ஒன்றிணைந்திருப்பர்? போன்ற பல கேள்விகள் எழுவது இயற்கை. இந்தக் கேள்விக்கான விடையை, ஆசிரியர் “நூறு முதல் இருநூறு ஆண்டுகளுக்குள் உண்டான ஊர்களாகத்தான் இருக்க முடியும். பஞ்சத்தால் துரத்தப்பட்டவர்கள், கொள்ளை நோயிக்கு அஞ்சி ஓடி வந்தவர்கள், யுத்தத்தால் விரட்டப் பட்டவர்கள், சாதிக் கலவரத்தில் தப்பித்து வந்தலர்கள், அரசாங்கத்தின் வரைபடத்துக்கு வராத வறண்ட நிலங்களில் தாங்களே மண்ணை மிதித்து வீடு கட்டிக் கொண்டவர்கள். அந்தக் குடியிருப்புகள் காலப்போக்கில் குக் கிராமங்கள் என்ற அந்தஸ்து பெற்றுவிடுகின்றன’’(க.இ.ப. 43). இவ்வாறு பேசுவதன் மூலம் அறிந்து கொள்ளலாம்.

பதிவுகளும் பின்புலமும்

கதைத் தலைவரும் ஊர்ப் பின்புலமும்

பேயத்தேவர் கள்ளிக்காட்டு இதிகாசத்தின் கதைத் தலைவர் ஆவார். ஆவரின் பிறப்பிடமே கள்ளிப்பட்டியாக இருப்பதால், இக்கதையின் கதைக்களனாகவும் பின்புலமாகவும் இவ்வூர் பயன்படுத்தப்பட்டுள்ளது. வறண்ட நிலமாகவும், கள்ளிச் செடிகளே அதிகம் வளரும் ஊராகவும் இருப்பதால் இவ்வூர் ‘கள்ளிப்பட்டி’ என்று பெயர் பெற்றிருக்கலாம். இது மேலும் ஆய்வுக்குரியதாகும்.

ஆணைக்கட்டால் அழிந்த ஊர்கள்

மேனி மாவட்டத்தில் ஓடும் ஆறு வைகை. இதனை, அணைக்கட்டி, இராமநாதபுரத்திற்குக் கொண்டு சேர்க்க எண்ணுகிறது, அரசாங்கத்தின் ஐந்தாண்டுத் திட்டம். இதனால் பல ஊர்கள் நீரால் அழிகிறது. இதனை, நாட்டாமை கதாப்பாத்திரம் “ஓங்க ஊரு மட்டும் இல்ல பெரியவரே ….. காமக்காபட்டி, கரட்டுப்பட்டி, குருவியப்பன்பட்டி,….. பன்னியான் வீடு உள்பட எல்லா ஊரையும் காலி பண்ண சொல்லித் தான் சர்க்கார் உத்தரவு’’(க.இ.ப. 318)’’.
இவ்வாறு பேசுவதன் மூலம் அறியலாம்.

திருமணச் சூழலில் பதிவான ஊர்கள்

கள்ளிப்பட்டி மக்கள் திருமணம் செய்தல், பெண் எடுத்தல், மாப்பிள்ளை எடுத்தல் போன்ற காரணங்களுக்காகப் பிற ஊர்களுக்குச் செல்கின்றனர். திருமணச் சூழலின் காரணமாக எருமல நாயக்கன்பட்டி, கருமாத்தூர் போன்ற ஊர்கள் இப்புதினத்தில் இடம்பெற்றுள்ளன.

சந்தை காரணமாக இடம் பெறும் ஊர்கள்

கள்ளிப்பட்டி மிகச் சிறிய கிராமம். ஆகையால், மக்களுக்குத் தேவையான பொருள்களை வாங்குவதற்குச் சந்தைக்குத் தான் செல்ல வேண்டும். சந்தை உள்ள சிறிய நகரமாக நாச்சியார்புரம் இருப்பதால், அந்த ஊரையும் புதினத்தில் பதிவு செய்துள்ளார்.

அணைக்கட்டு எதிர்ப்புச் சூழலில் பதிவான ஊர்

அணைக்கட்டினால், அதிகமான ஊர்கள் வெள்ளத்தில் அழியும் அபாயம் ஏற்படும். ஆகையால், அந்த முயற்சியைத் தடுக்க வேண்டும் என்று நினைத்தார் பேயத்தேவர். அதற்காக மனு ஒன்றைத் தயாரித்தார். அதனைக் கொடுக்க தாசில்தார் அலுவலகம் சென்றார். அந்த அலுவலகம் பெரியகுளத்தில் இருப்பதால், அந்த நகரத்தையும் பதிவு செய்துள்ளார் ஆசிரியர்.

கள்ளிப்பட்டி மக்களின் வாழ்க்கையோடு பல கிராமங்களும் நகரங்களும் தொடர்பு கொண்டிருக்கின்றன. எனவே அத்தனை ஊர்களையும் பதிவு செய்வது அவசியமாகின்றது.

108. முத்தொள்ளாயிரத்தில் மதுரை

வே. விக்னேசு
தமிழ் நிறைகலை இரண்டாம் ஆண்டு
பூ.சா.கோ. கலை அறிவியற்கல்லூரி
கோயம்புத்தூர்-14.

தமிழ் மொழியாந்தாய்மொழி பல்லாயிர யாண்டுகட்கு முன்னமே தோற்ற முற்றிலங்கும் உயர்தனிச் செம்மொழியாகும். இத்தகு சீரிளமை பொருந்திய தமிழ்மொழியினைச் சங்கவிலக்கியங்கள், சங்கம் மருவிய இலக்கியங்கள் என்றின்ன இலக்கிய வகைமைகள் மக்கள் மனக் கண்முன் ஆடியெனச் சிறந்து பொழிகின்றன. அங்ஙனம் சங்கம் மருவியகால இலக்கியங்களிலொன்று 'முத்தொள்ளாயிர மென்னுமோர் முத்தாரமாகும்'. இஃது முடியுடை மூவேந்தர்களைப் பற்றிப் பாடியமைகிறது. மூன்று வேந்தர்கள் மேலும் பாடப்பெற்ற தொள்ளாயிரம் பாடல்களைக் கொண்ட நூல் என்றோ, மூன்று தொள்ளாயிரம் அஃதாவது ஈறாயிரத்து எழுநூறு பாடல்களைக் கொண்ட நூல் என்றோ கருதற்குரிய அளவிற்கு இந்நூற்குப் பெயரமைந்துள்ளது உற்று நோக்குதற்குரியது. எது யாங்ஙனமாயினும் தற்போது நமக்குக் கிட்டியிருக்கும் பாக்கள் 108 மட்டுமே. அவற்றுள் முதற்கண்ணதாகிய பாண்டியப் பெருவேந்தனைப் பற்றியமையும் ஐம்பத்தேழு பாக்களில் மதுரைமாநகரின் பெயர் எங்ஙனம் சுட்டப்பட்டுள்ளது என்பதை வித்துவான் ந.சுப்புரெட்டியார் அவர்களின் "முத்தொள்ளாயிர விளக்கம்" (1965) என்னும் நூலை முதன்மைச் சான்று மூலமாகக் கொண்டு இக்கட்டுரை விளக்க முற்படுகிறது.

இம் முத்தொள்ளாயிரம் மூவேந்தர் பெருமக்களின் ஆட்சிமுறையும், மற மாண்பும், ஆட்சிப்பரப்பும், அறப்போரும், யானை, குதிரை, காலாள் முதலிய படைப்பெருக்கத் திறனும் ஆகியவற்றைத் தெளிவாக்குகிறது. இந்நூலுள் பாண்டிய மன்னனைப் பற்றியமையும் பாக்களின் தொகை ஐம்பத்தேழு. இப்பாக்களுள் பாண்டிய மன்னர்தம் நிலவரையாகிய மதுரை மாநகரம் **கூடல், வையையார், நாடு, ஊர், சேரி, மதுரை** பெயர்களாட் சுட்டப்பெறுகிறது. இங்ஙனம் பெயர் சுட்டியமைக்கான ஏதுக்களை விளக்குவதே இக்கட்டுரை ஆராயக்கொண்ட ஆய்பொருளாகும்.

கூடல் : இந்நூலுள் மதுரையைக் குறிக்கும் பெயர்களிலொன்று 'கூடல்' என்பதாகும். 'கூடல்' என்பதற்குக் கழகத்தமிழகராதி "பொருந்துகை, புணர்ச்சி, சங்கமும், கூடற்சுழி, மதுரை, தோப்பு, கைகூடல்" என்றின்ன பொருள்களை நுவல்கின்றது. இதனுள் 'மதுரை' என்ற பெயரும் வருதட்காண்க.

சங்கவிலக்கியங்களில் பெரும்பான்மையாக 'கூடல்' என்ற பெயரிட்டே மதுரை மாநகரம் வழங்கப்பட்டுள்ளது. சிலவிடங்களில் 'நான்மாடக்கூடல்' என்ற அடைமொழியுடனும் வழங்கப்பட்டுள்ளது. 'கூடல்' என்ற பெயரமைந்ததன் ஏதுவென்னை யென்பதை ஆய்ந்தறிதல் இன்றியமையாததாகும்.

வருணன் தன் சினத்தால் மதுரை மாநகரினை அழித்தற்கருதி ஏழு மேகங்களைக் கடும் மழை பொழியுமாறு ஏவினான். அவ்வமயம் சிவபெருமான் நான்கு மேகங்களை ஏவ அவை நான்கு மாடங்களாக நின்று நகரைக் காத்தமையால் 'நான்மாடக்கூடல்' என்னும் பெயர்த்து என்று புராணச் செய்திகள் கூறுகின்றன. இதனை, "நான்கு மாடங்கூடலின் நான்மாடக்கூடல் என்றாயிற்று. அவை திருவாலவாய், திருநல்லாறு, திருமுடங்கல், திருநடுவூர்" என்ற நச்சினார்க்கினியரின் கலித்தொகை 92 ஆம் பாட்டின் உரையால் ஒருவாற்றான் உணரலாம்.

இஃதிங்ஙனம் நிற்க, வித்துவான் ந. சுப்புரெட்டியாரவர்கள் தனது 'முத்தொள்ளாயிர விளக்கம்' என்ற நூலின் ஆங்கில முன்னுரையில் 'கூடல்' என்ற பெயரைப்பற்றிக் கூறுகையில்,

"பண்டு மதுரையின் பழம்பெயர் 'கூடல்' என்றே வழங்கப்பட்டது. தமிழின் தொன்மையிலக்கியங்களுள் யாங்ஙனும் 'மதுரை' என்னும் பெயர் கிடைத்திலது அதற்கு மறுதலையாக 'கூடல்' அல்லது 'பேராலவாயில்' என்னும் பெயரே கிடைத்துள்ளது".[1] என்று கூறியுள்ளார். இங்ஙனமாகிய 'கூடல்' என்னும் பெயரை இந்நூல் எடுத்தாண்டவிதத்தை அடியிற்கண்டச் செய்யுளுள் அறிய இயலுகிறது.

"தடுமாற லாகிய தன்மைத்தே தென்னன்
நெடுமாடக் கூட லகம்" (முத்தொள்ளாயிரம். பா. 2)
"தென்னவனே தேர்வேந்தே தேறுநீர்க் கூடலார்
மன்னவனே மார்பின் மறு" (மேலது-19)
"எலாஅ மடப்பிடியே யெங்கூடற் கோமான்" (மேலது-26)
"கூடற் பெருமானைக் கூடலார் கோமானைக்" (மேலது-40)
"கோட்டெங்கு சூழ்கூடற் கோமானைக் கூடவென" (மேலது- 44)
"ஏமான் பிணைபோல நின்றதே கூடலார்
கோமான்பின் சென்றவென் னெஞ்சு" (மேலது – 51)

மேற்சுட்டிய செய்யுள்களனைத்தும் மதுரைமாநகரினை 'கூடல்' என்றே பெயரிட்டு அழைப்பது மதுரையின் பழம்பெயர் 'கூடல்' தானோ என்றெண்ணத் தோன்றுகிறது.

வையையார் : முத்தொள்ளாயிரத்தில் பாண்டியனது புகழைப்பாடுங்கால், மதுரையானது ஒரு செய்யுளின்கண் 'வையையார்' என்று சுட்டப்படுகிறது. இதனை,

"வரிவளை நின்றன வையையார் கோமான்
புரிவளை போந்தியம்பக் கேட்டு" (மேலது-23)

என்ற வரிகள் விளக்கி நிற்கும்.

ஊர்ப் பெயர்கள் அவ்வூரின் இயற்கையமைப்பினை ஒட்டியமைதலியல்பு. அவ்வகையில் ஊரினைச் செழிக்கச் செய்யும் நதிகளினடிப்படையிலும் பெயர் வழங்கப்படுதல் மரபு. காட்டாக கிடையாறு, காவிரிப்பூம்பட்டினம், பொறையாறு என்பனவற்றையொப்ப மதுரை மாநகரினைச் செழிப்புறச் செய்யும் வையை நதியையடிப்படையாகக் கொண்டு அவ்வூரவரை 'வையையார்' என்று இந்நூல் குறித்தற் காண்க.

வையை யாற்றினைப் பற்றிய வருணனைகள் பல பரிபாடலிலும் மதுரைக்காஞ்சியிலும் சிலம்பின் கண்ணும் கூறப்பெற்றுள்ளன. இத்தகு சீர்மிகு வையையாற்றினை,

"புலவர் நாவிற் பொருந்திய பூங்கொடி
வையை என்ற பொய்யாக் குலக்கொடி" (சிலம்பு-புறஞ்சேரி-169-170)

என்று இளங்கோவடிகள் போற்றியுள்ளமையையும் ஈண்டு ஒருங்குவைத்தெண்ணத்தக்கது.

நாடு : இந்நூலுள் மதுரையம்பதியானது 'நாடு' என்று ஓரிடத்தில் குறிக்கப்பெறுகிறது. நாடு என்பதற்கு, "சிற்றூர். ஊர், பேரூர், மூதூர், நகரம் ஆகியவை தம்முள் அடங்கிய பெரும் பகுதியை, ஒரு மன்னர் ஆட்சிக்குட்பட்ட பகுதியை நாடு என அழைத்தனர்"[2] என்பர் அறிஞர் ஆர். ஆளவந்தார். அவ்வகையில் இந்நூலுள் 'நாடு' என்று சுட்டுஞ் செய்யுள்,

"ஆபுகு மாலை யணிமலையிற் றீயேபோல்
நாடறி கௌவை தரும்" (முத்தொ. பா-29) என்பதாக அமைந்துள்ளது.

அவ்வகையில் மதுரைமாநகரமானது சிற்றூர், ஊர், மூதூர், நகரம் ஆகியவனைத்தும் அடங்கிய ஒரு மன்னன் வெண்கொற்றக்குடையின் கீழ் ஆளப்பட்டு வந்த பகுதியென்பது வெள்ளிடைமலையென விளங்கும்.

ஊர் : பண்டைத் தமிழகமானது நானிலமாகப் பகுக்கப்பட்டிருந்தமைக்குச் சங்கநூற்களேக் காட்டாகத் திகழ்கின்றன. அங்ஙனமே முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என்ற நிலவரையினடிப்படையில் முல்லை நிலத்திற்குரியவையாக பாடி, சேரி, பள்ளி என்பனவும் குறிஞ்சி நிலத்திற்குரியது சிறுகுடி என்றும் மருதநிலத்திற்குரியது ஊரென்றும் நெய்தற்நிலத்திற்குரியவையாகப் பட்டினம், பாக்கம் என்பனவும் பாலைநிலத்திற்குப் பறந்தலை என்றும் இவற்றினடிப்படையிலேயே ஊர்ப்பெயர்கள் அமைந்திருந்தமையைச் சங்கப்பாக்கள் சுட்டும். இவற்றுள் மருதநிலத்திற்குரியது 'ஊர்' என்று சங்கப்பாக்களால் அறியவியலுகிறது. ஆனால், "தொல்காப்பியம் மக்கள் வாழுமிடத்தை 'ஊர்' என்றே குறிப்பிட்டுள்ளதைக் காணமுடிகிறது."[3]

மேற்கண்ட, அறிஞரின் கருத்தினை நாம் உன்னுங்கால், தொல்காப்பியனாரின் காலத்திற்குப் பின்றோன்றிய மாறுதல்கள் சிலவற்றையறிதற்கு ஏதுவாக சங்கநூற்கள் அமைந்துள்ளமை தெற்றென விளங்கும். அவ்வகையில். சங்கம் மருவிய காலத்து நூலாகிய் முத்தொள்ளாயிரத்தில்

"போரகத்துப் பாயுமா பாயா துபாயமா
ஊரகத்து மெல்ல நடவாயோ" (முத்தொ. பா-27)

மேற்கண்டச் செய்யுளடிகள் மதுரைமாநகரினை 'ஊர்' என்று குறிப்பதை நோக்குங்கால் இந்நூல் தொல்காப்பியத்தை அடியொற்றியெழுந்த நூலென்பது அங்கை நெல்லியென விளங்கும்.

சேரி : 'சேரி' என்பதற்கு பலர் சேர்ந்திருக்குமிடம் என்பது பொருள். இது ஊரின் ஒரு பகுதியைக் குறிக்கும். சங்கவிலக்கியங்களுள் முல்லைக்குரிய ஊர்கள் 'சேரி' என்று குறிக்கப்படுகின்றன. ஆனால், ஏனைய நிலங்களிலும் சிலபகுதிகள் 'சேரி' என்றே குறிக்கப்பட்டமையை சங்கவிலக்கியங்களினின்றும் சிலம்பினின்றும் அறிய இயலுகிறது. காட்டாக,

"பேரிசை நன்னன் பெறும் பெயர் நன்னாள்
சேரி விழவின் ஆர்ப்பு எழுந் தாங்கு" (மதுரைக்காஞ்சி. 618-619) என்ற

மதுரைக்காஞ்சியின் வரிகள் நன்னன் தலைநகரின்கண் சேரிகள் இருந்தமையைப் புலப்படுத்துகின்றன. மேலும், சிலம்பினகத்தே பரதவர் சேரி, மாலைச்சேரி, வலைவாழ்நர்சேரி போன்றன சுட்டப்பெறுகின்றன. தொல்காப்பியர் அகத்திணையியலுள் 40ஆவது நூற்பாவில் 'ஏமப்பேரூர்ச்சேரி'

என்று குறிப்பிடுவார். இவ்வகையில் முத்தொள்ளாயிரத்தில் ஒரு செய்யுள் 'சேரி' என்பதைக் குறிக்கிறது. அச்செய்யுள்,

"சேலேக வண்ணனொடு சேரி புகுதலுமெஞ்
சாலேகஞ் சார நட" (முத்தொ. பா-25) என்பதாகும். இதனுள் குறிப்பிடப்பட்டுள்ள சேரி என்பது ஆய்ச்சியர்கள் சேர்ந்து வாழ்ந்த சேரியாமோ? என்றும் ஐயுறத் தோன்றுகிறது. இங்ஙனமே, மதுரைக்காஞ்சியில்,

"விளைந்து முதிர்ந்த விழுமத்தின்
இலங்குவளை இருஞ்சேரி...." (மதுரைக்காஞ்சி, 135-136) என்ற வரிகளின்படி பாண்டிய மன்னனின் ஆளுகைக்குட்பட்ட கொற்கை நகரில் முத்துக்குளிப்பவர் சேரியும் சங்கு எடுப்போர் சேரியும் இருந்தமை ஈண்டு ஒப்பவைத்தெண்ணத்தக்கது.

மதுரை : முன்னம் சுட்டியதுபோல் சங்கவிலக்கியங்களில் 'கூடல்' என்ற பெயரே பல இடங்களில் காணக்கிடக்கின்றன. 'மதுரை' என்ற பெயர் அருகியல்லது வரவில்லை என்பது கண்கூடு. வித்துவான் ந. சுப்புரெட்டியார் தம் 'முத்தொள்ளாயிர விளக்கம்' என்ற நூலின் ஆங்கில முன்னுரையில் 'மதுரை' என்னும் பெயரமைந்தமைக்கு அடியிற்கண்டாங்கு ஏது காட்டுவார்.

"முன்னம் தமிழ்நாட்டில் வடமொழியின் தாக்கத்தின் காரணமாக 'கூடல்', 'பேராலவாயில்'என்னும் பெயர்கள் 'மதுரா' என்னும் வடமொழிப்பெயராகத் திரிபுற்றது. மேலும் கிருஷ்ணன், பலராமன் ஆகிய கடவுள்களின் சமயத்தாக்கமும் கலப்பதாயிற்று. அதற்கு மதுரை நகரமே மையமாக அமைந்தது. இத்தாக்கமானது சிலம்பில் ஆய்ச்சியர்குரவையில்தான் முற்றிலும் வெளிப்பட்டது"[4] ஆனால் அறிஞர் ஆர். ஆளவந்தார்,

"பேச்சுவழக்கில் இன்று காணும் மருதை என்ற பெயரே மதுரை என மருவி வழங்கியிருக்க வேண்டும். அதாவது பண்டைக் காலத்தில் மரத்தால் ஊர்ப்பெயர்கள் அமையும் முறையையொட்டி மருத மரங்கள் நிறைந்த ஒரு நிலத்தின் அடிப்படையில் மருதை என்ற பெயர் தோன்றி, நாளடைவில் மதுரை என மாறி வழங்கியதாகக் கருதவேண்டும்" [5] என்பார். அங்ஙனமாயின் சங்கவிலக்கியத்தில் 'மருதை' என்ற பெயர் யாண்டும் இடம் பெற்றிலவென்பது நோக்கற்பாலது. அவ்வகையில் இந்நூலுள்,

"மாட முரிஞ்சும் மதுரையார் கோமானைக்
கூட வொருநாட் பெற" (முத்தொ. பா. 35) என்ற செய்யுள் 'மதுரையார்' என்று சுட்டுகிறது. ஆக வித்துவான் ந. சுப்புரெட்டியாரவர்களின் கருத்துப்படி வடமொழியின் கலப்பினால் 'மதுரை' என்னும் பெயர் பெற்றதோ, அல்லது அறிஞர் ஆர். ஆளவந்தார் கருத்துப்படி பண்டு ஊரில் மிகுதியாக உள்ள பொருட்களின் பெயரால் ஊர்ப்பெயர்கள் அமையுமாதலால் இப்பெயர் பெற்றதோ என்றின்ன கருத்துக்கள் அறிஞர்கள் ஊடே இற்றைக்கும் கருத்தொற்றுமை யெழவில்லையென்பது வெள்ளிடை.

முடிபு : இன்ன வகையான் கண்ணுற்று நோக்குங்கால் முத்தொள்ளாயிரத்தில் மதுரை மாநகரமானது ஐவகைப் பெயரால் குறிக்கப்படுகிறது. அவற்றுள் மதுரையினைச் செழிப்புறச் செய்யும் வையை நதியினடிப்படையில் பெயரிட்டழைத்துள்ளனரென்பதும் ஒரு மன்னர் தம் ஆட்சிக்குட்பட்டிருந்தமையால் 'நாடு' என்று வழங்கப்பட்டதும் தொல்காப்பியத்தினை அடியொற்றி இந்நூலெழுந்தமையின் மதுரைமாநகரம் 'ஊர்' என்று குறிக்கப்பட்டதும் பலர் சேர்ந்திருக்கும் 'சேரி' என்றழைக்கப்பட்டமையும் புலனாகின்றது. ஆயினும் 'கூடல்' என்னும் பெயரே இந்நூலுள் மேலோங்கியுள்ளதும் மதுரையின் பழம் பெயர் 'கூடல்' தானென்று வித்துவான் ந. சுப்புரெட்டியாரவர்கள் கருத்தின்படியும் சங்கவிலக்கியங்களுள் 'கூடல்' என்னும் பெயரே பலவிடங்களில் குறிக்கப்பட்டுள்ளமையும் நோக்குங்கால் மதுரையின் பழம் பெயர் 'கூடல்' தானென்பதை ஒருதலையாய் உய்த்துணர முடிகிறது.

சான்றெண் விளக்கம்

1. சுப்புரெட்டியார், வித்துவான் ந. – 'முத்தொள்ளாயிர விளக்கம்' முன்னுரை, ப. xxiii
2. ஆளவந்தார், ஆர். - 'இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள்', ப-42
3. மேலது, ப. 21
4. சுப்புரெட்டியார், வித்துவான் ந. – 'முத்தொள்ளாயிர விளக்கம்' முன்னுரை, ப. xxiii
5. ஆளவந்தார், ஆர். - 'இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள்', ப-119

துணை நின்ற நூல்கள்

1. சுப்புரெட்டியார், வித்துவான் ந. - முத்தொள்ளாயிர விளக்கம்
   திருவேங்கடவன் பல்கலைக் கழகம், திருப்பதி. (1965).
2. சேதுரகுநாதன், வித்துவான் ந. - **முத்தொள்ளாயிரம்**
   சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை. (1964)
3. சேதுப்பிள்ளை, ரா.பி. - **ஊரும் பேரும்**
   பழனியப்பா பிரதர்ஸ், சென்னை. (1956)
4. ஆளவந்தார். ஆர். - **இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள்**
   உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை. (1984)

109. புறநானூற்று ஊர்ப்பெயர்களில் தாவரங்கள்

சு. விமல்ராஜ்
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
அ.வ.அ. கல்லூரி(தன்னாட்சி),
மன்னம்பந்தல், மயிலாடுதுறை.

முன்னுரை :

சங்க இலக்கியங்கள் பழந்தமிழரின் வாழ்க்கையைப் பழந்தமிழகத்தின் வரலாற்றைக் காட்டும் கண்ணாடியாக விளங்குகின்றன. பத்துப்பாட்டு எட்டுத்தொகை என்று வைத்தெண்ணப்படும் இவ்விலக்கியங்களில் பயின்று வரும் ஊர்கள் இன்றும் ஆய்வுக்குரியவையாகவே விளங்குகின்றன.

சங்க இலக்கியங்கள் வழித் தமிழர்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை வாழ்ந்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. இவ்விலக்கியங்களில் இடம்பெற்றுள்ள ஊர்ப்பெயர்களில் இயற்கை சார்ந்த சொற்கள் முன்னொட்டாகவும் பின்னொட்டாகவும் பயின்று வந்துள்ளன. அவற்றுள் புறநானூற்று ஊர்ப்பெயர்களில் இடம் பெற்றுள்ள தாவரப் பெயர்களைக் கண்டுணர்வதே இவ்வாய்வின் நோக்கம்.

ஆலங்குடி. ஆலத்தூர், ஆலங்கானம் :

இவ்வூர்களின் முன்னொட்டுகளாக 'ஆல்' என்ற சொல்லிருப்பதால் ஆல், ஆலம் என்ற தாவரத்தை முன்னிறுத்தி இப்பெயர்கள் உருவானதாகக் கொள்ளலாம். 'ஆல்' என்ற சொல் ஆலமரத்தை மட்டுமன்றிப் பனைமரத்தின் சிறாம்பு (தொழில் வழக்கு), பொன்னாங்கண்ணி (மர இன தொகுதி), அகல் சட்டி (சென்னைப் பல்கலைக்கழக அகரமுதலி) குடம், நீர்ச்சட்டி (சங்க இலக்கியம் : அகநானூறு), பத்துவகை துவர்களுள் ஒன்று (தொல். அகத்திணை சூத்திரம்) கார்த்திகை வின்மீண் (பரிபாடல் 5,43), என்னும் பல்வேறு பொருள்களில் இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளது.

புலவர்கள் வழி 'ஆலம்' என்று அறியப்படும் ஊர்ப்பெயர்களாக ஆலங்குடி வங்கனார் (புறம் : 319), ஆலத்தூர் கிழார் (புறம் : 34, 36, 69, 225, 324), ஆலியர் (புறம் : 298), என்னும் பெயர்கள் அமைகின்றன.

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டிய நெடுஞ்செழியனின் வெண்ணிப்பறந்தலைப் போர் நிகழ்வைப் புறநானூறு : 175:10-11, புறநானூறு : 23:15-17, நற்றிணை : 387:6-9, அகநானூறு : 209:4-6, அகநானூறு : 175:10-12, மதுரைக்காஞ்சி : 126 – 129 ஆகிய பாடல்களில் காணமுடிகிறது. இதில் ஆலங்கானம் என்னும் ஊர் குறிக்கப் பெறுகிறது.

ஆலத்தூர், கோவை மாவட்டம் அவினாசி வட்டம் புஞ்சை புளியம்பட்டிக்கு அருகில் உள்ளது. ஆலத்தூர் என்று தமிழகத்தின் பல பகுதிகளில் இருப்பினும் புறநானூற்றுப் புலவர்களுள் ஒருவரான ஆலத்தூர் கிழாரின் ஊர் இதுவே ஆகும். (உ.வே.சாவின் புறநாநூற்று பதிப்புரை). கருவூர்ப்போரை பாடியிருப்பதாலும், ஈமச்சின்ன சிதைவுகள் இருப்பதாலும் இவ்வூரே இப்புலவரின் ஊராகும்.

"ஆல் கெழு கடவுள்" (திருமுரு. 256), "ஆல் அமர் செல்வற்கு" (சிறுபாண்.47), "ஆல் அமர் செல்வன் அணிசால் பெருவிறல்" (கலி.81:9), "முழுமுதல் தொலைந்த கோளி ஆலத்து" (புறம் 58:2), "முன்ஊர்ப் பழுனிய கோளி ஆலத்து" (புறம் 254:7), "....... கோளி ஆலத்து" (புறம் 58:2-3) இவ்வாறு ஆலம் என்ற சொல் புறநானூற்றில் பல்வேறு இடங்களில் பயின்று வருகிறது 'ஆல்' என்ற சொல்லின் பின்னொட்டாக குடி, ஊர் என்ற சொற்கள் பயின்று வருகின்றன. 'ஆலங்கானம்' என்னும் சொல்லில் 'கானம்' என்பது காடு என்று பொருள் கொள்ள மிகுந்த ஆலமரங்களைக் கொண்ட பகுதியாக அது விளங்கியிருக்கும் என்று அறிந்து கொள்ள முடிகிறது. சங்க இலக்கியத்தில் ஆல், ஆலம் என்று உள்ளது. உலக வழக்கில் இன்று 'ஆலமரம்' என்று அழைக்கப்பெறுகிறது. இம்மரத்தின் இயல்வகை இருவித்திலை ஆகும்.

எருக்காட்டூர் :

இவ்வூர் திருவாரூர் மாவட்டம் நன்னிலம் வட்டம் 'காவலக்குடி' என்னும் ஊரின் கீழ்த்திசையில் 'மணற்குன்று' என்னும் பகுதியையொட்டி உள்ளது. திருக்கடையூர் கல்வெட்டு "எருக்காட்டூர் சேரிக்கு பிடாகையான மணற்குன்று" (A.R. No. 32 and 38 of 1906) என்று கூறுகிறது.

எருக்கு, எருக்கம் என்று குறிக்கப்பெறும் தாவரம் காடாக விளங்கும் பகுதியாக இருந்திருக்க வேண்டுமாதலால் இப்பெயர் பெற்றிருக்க வேண்டும். இவ்வெருக்கத்தை "நல்லவும் தீயவும் அல்ல ; குவியினர்ப் புல்லிலை எருக்கம்" என்று புறம் : 106 ஆம் பாடலிலும், "குறுமுகிழ் எருக்கங்கண்ணி" என்று நற் : 220 : 3லும் "குவிமுகிழ் எருக்கங்கண்ணி என்று நற் : 17:2 லும்,

"ஒல்லேம் குவளை புலாஅல் மருங்கின் புல்லெருக்கங் கண்ணி நறிது" என்று (தொல். சொல். 57வது உரையிலும் இடம் பெறுகிறது.

இவ்வெருக்கம் இரண்டு வகைப்படும்

(1) **வெள்ளிய நிறம்**

(2) **வெளிர் நீல நிறம்**

இவ்வெருக்கத்தின் பால் மருந்தாகவும், விடமாகவும் பயன்படும். இத்தாவரத்தின் சங்க இலக்கியப் பெயர் எருக்கு, எருக்கம். உலக வழக்கில் இன்று மக்கள் எருக்கம் என்றே, அழைக்கின்றனர். இத்தாவரத்தின் இயல்வகை இருவித்திலைத் தாவரம் ஆகும்.

புல்லாற்றூர் :

இவ்வூர் காவிரியின் வடகரையில் உள்ளது என்று குறிக்கப் பெறுகிறது. 'புல்' என்னும் தாவரப் பெயர் 'ஆற்றூர்' என்னும் சொல்லின் முன்னொட்டாக இருக்கிறது. பசுமையான புல்நிறைந்த ஆற்றுப்படுகையாக இவ்வூர் விளங்குதல் வேண்டும்.

'புல்' என்று குறிக்கப்பெறுவது, அறுகம்புல், தருப்பை, கரும்பு, மூங்கில் இவற்றில் ஏதேனும் ஒன்றாகவே இருக்க வேண்டும். ஏனெனில் இவையனைத்தும் புல்வகையைச் சார்ந்தவை ஆகும்.

(1) **அறுகை** - இது அறுகை அல்லது அறுகம் என்று குறிக்கப் பெறுகிறது. அகநானூறு : 146, குறுந்தொகை : 256, பட்டிணப்பாலை : 255 ஆகிய பாடல்களில் இடம் பெற்றிருக்கிறது. இதன் தாவர இயல்வகை ஒருவித்திலைத் தாவரம் ஆகும்.

(2) **தருப்பை** – புதர்ச்செடியாகத் தரையிலிருந்து செழித்து வளரும். "வேழம் நிரைத்து வெண்கோடு விரைஇ தாழை முடித்துத் தருப்பை வேய்ந்த குறியிரைக் குரம்பை பறியுடைமுன்றில்" என்ற பெரும்பாணாற்றுப்படை(263) குறிக்கிறது. இதன் தாவர இயல் வகை ஒரு வித்திலைத் ஆகும். இது குசம்புல் என்றும், நாணல் என்றும் அழைக்கப்பெறுகிறது.

(3) **கரும்பு** – கரும்பை, "அரும்பெறல் மரபின் கரும்பு இவன் தந்தும்" (புறம் : 99:2) என்றும், "கரும்பு இவன் தந்தோன் பெரும்பிறங்கடையே" (புறம் : 398:19-21) என்றும், "புறக்காழனவே புல்லென மொழிப" என்று தொல். பொருள் 9:86 லும் குறிக்கப்பெறுகிறது. இனிய சுவையும் கருநீல அழகிய நிறமும் உடையது இத்தாவரம். வேழல், கண்ணல், கழை, கரும்பு என்று பல்வேறு பெயர்களில் அழைக்கப்பெறும் இத்தாவரத்தின் இயல் வகை ஒருவித்திலை ஆகும்.

இவ்வாறு நாணல் அல்லது அறுகை மற்றும் கரும்பு என்று இத்தாவரத்தின் ஏதேனும் ஒன்று அடர்ந்து காணப்படும் ஆற்றுப்படுகையே 'புல்லாற்றூர்' என்று குறிக்கப் பெற்றிருத்தல் வேண்டும்.

தும்பசைச் சொகினூர் :

தும்பைச் சொகினனார் என்னும் புலவர் புறநானூற்றின் 249வது பாடலைப் பாடியவர் ஆவார். தும்பை என்பது இவர் ஊர் எனவும் சொகினன் என்பது இவர் பெயர் எனவும் எடுத்துக்கொண்டால் தும்பையூரைச் சார்ந்த சொகினனார் என்றும், சொகினம் என்பது இவர் ஊராக இருந்து, அவ்வூரைச் சேர்ந்தவராதலால் சொகினனார் என்றோ சொகினத்தார் என்றோ அவரை அழைத்து, அவ்வூரில் தும்பை என்னும் தாவரம் மிகுந்து இருந்து பெயர் பெற்றதால் அவ்வூரை 'தும்பைச் சொகினம்' என்று அழைத்திருந்தால் அதன் வழியும் இப்புலவருக்குத் தும்பைச் சொகினனார் என்று பெயர் ஏற்பட்டிருக்கும்.

"தொண்டைநாட்டுப் பையூரிளங் கோட்டத்துப் பட்டைய நாட்டுத் தும்பையூர்" (Nel. Ins. Sulur.15) என்றும், திருவேங்கடத்துக்கண்மையுளுள்ள திருச்சொகினூர் (திருச்சானூர்) சொகின்னூரிலிருந்து சொகினூரென்று(A.R. No.452 of 1924) மறுவியிருக்க வேண்டும் என்றும் கருதப்படுகிறது. தும்பை வெண்ணிறப் பூக்களால் பூத்துக் குலுங்கி நிற்கும் ஒரு வகைச் செடி 'தும்பை துழாஅய்' (குறிஞ்சிப்பாட்டு :90) என்று கபிலர் பாடுகிறார். போரில் ஈடுபடும் இருநாட்டுப் படைவீரர்களும் சூடிக்கொள்ளும் பூ இப்பூவாகும்.

"கவிழ்பூந் தும்பை நுதலஅசைந் தோனே" (புறம் : 283 : 14-15) என்று புறநானூறு குறிக்கின்றது. "ஆடுகொளக் குழைந்த தும்பைப் புலவர்" (புறம் : 21:10-11) என்று ஐயூர் மூலங்கிழாரால் குறிப்பிடப்படுவது தும்பைச் சொகினனாரா? என்று ஐயம் உண்டு.

தும்பை மலர் மருந்தாகவும் பயன்படும். இது ஒருபக்கத் துலைவலியைப் போக்க உதவும். இது இருவித்திலை தாவர வகையைச் சார்ந்தது.

நொச்சி நியமம் :

நோச்சி நியமம் என்னும் ஊர் இன்று நொச்சியம் என்று வழங்கப்பெறுகிறது. நியமம் என்ற ஊர் நொச்சி சூழ காணப்பட்டதால் நொச்சி நியமம் எனப்பட்டது. திருச்சியிலிருந்து முசிறிக்குச் செல்லும் வழியில் உத்தமர் கோயிலுக்கு அருகில் இவ்வூர் உள்ளது.

"மணிதுணர்ந்தன்ன மாக்குரல் நொச்சி" (புறம் : 272)

"நீர் அறவு அறியா நிலமுதற் கலந்த
கருங்குரல் நொச்சிக் கண்ணார் குரூஉத் தழை" (புறம் : 272)

என்று நொச்சியைப் புறுநானூறு காட்டுகிறது. முற்றுகையைத் தகர்த்து எழும் வீரர்கள் சூடும் பூவான இது, (1) மனை நொச்சி (2) கரு நொச்சி (3) மலை நொச்சி (4) வெண்ணொச்சி என்று நான்கு வகைப்படும். சிறு மரமாகக் காணப்படும் இத்தாவரம் மூன்றிலை, ஐந்திலை, ஏழிலை என்று வேறுபட்டுக் காணப்படும். சங்க இலக்கியப் பெயர் நொச்சி, சிந்துவாரம் என்பதாகும். புதர்ச்செடி வகையிலும் இது சேறும். இதன் தாவர இயல் இருவித்திலை தாவரம் ஆகும்.

நிறைவுரை :

புறநானூற்றில் இடம் பெற்றுள்ள ஆல், எருக்கு, புல், தருப்பை, அறுகை, கரும்பு, தும்பை, நொச்சி என்ற தாவரப் பெயர்கள் ஊர்களின் பெயர்களுக்கு முன்னொட்டாக இடம்பெற்றுள்ளன.

இத்தகு தாவரங்கள் மனிதர்களுக்குப் பயன்படுவதும், பயன்பாடு அல்லாததும் என்றில்லாமல் அழகிய தாவரத்தை சுவைத்தும் மூலிகை தாவரத்தை மருந்துப் பொருளாக உட்கொண்டும் அவற்றைத் தங்கள் வாழ்க்கைக்குள் உட்படுத்திக் கொண்டார்கள் என்பதை அறியமுடிகிறது.

சங்ககால மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வு வாழ்ந்தார்கள் என்பதும் இயற்கையைப் பாதுகாக்க இவற்றை தம் வாழ்வுடன் கலந்து பெயர் வைப்பதன் வழிப் போற்றினர் என்பதும் அறிந்து கொள்ளலாம். இவையும் இவை போன்ற இன்ன பிறவும் இக்கட்டுரையின் வழிப் பெறலாம்

110. சோழநாட்டில் ஊர்ப் பெயர்கள்

முனைவர்.சா.வினோலியா சாலொமிசந்திரகாந்தம்,
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
அருள்மிகு மீனாட்சி அரசினர்
மகளிர் கல்லூரி, (தன்னாட்சி)
மதுரை-2.

பரந்து விரிந்த உலகை இடம்பிரித்து உணர்த்தும்படியாக கண்டங்கள், நாடுகள், மாநிலங்கள், மாவட்டங்கள், தாலுகாக்கள், ஊர்கள் என பகுத்து அவை ஒவ்வொன்றையும் பெயரிட்டு அழைக்கின்றனர். மாமனிதர்கள் பிறந்த, வாழ்ந்த இடங்கள் போற்றுதற்குரிய புண்ணியத் தலங்களாகின்றன. இடத்திற்கு இட்டு அழைக்கின்ற பெயர்கள் இடப்பெயர்கள். சங்க இலக்கியங்கள் தொடங்கி இக்கால இலக்கியங்கள் வரை அனைத்திலும் ஊர்ப்பெயர்கள் காணப்படுகின்றன. அவற்றுள் சோழநாட்டில் காணப்படும் ஊர்ப்பெயர்கள் பற்றி ஆய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

உறையூர்

சோழநாட்டின் தலைநகரம் உறையூர் என்றும், உறந்தை என்றும் வழங்கப்பட்டது. இது உள்நாட்டில் காவிரி ஆற்றின் தென்கரையில் இருந்தது. உறையூர், கோட்டை மதில் சூழ்ந்த நகரம். இந்த மதிலுக்கு வெளியே ஆழமான அகழியும், அகழியைச் சூழ்ந்து மிளைக்காடும் இருந்தன. உறையூருக்குக் **'கோழி'** என்றும் ஒரு பெயர் இருந்தது. உறையூர்த் தெருக்களில் ஒன்றன் பெயர் ஏணிச்சேரி (சேரி – தெரு) முடமோசியார் என்னும் புலவர் அந்தத் தெருவில் வாழ்ந்திருந்தார். உறையூருக்கு எதிர்கரையில் திருவரங்கம் இருந்தது. உறையூருக்குக் கிழக்கே திருச்சிராப்பள்ளி மலை இருந்தது. உறையூரை உரகபுரம் என்று வடமொழியாளர் கூறியுள்ளனர். **'உறந்தைக் குணாது நெடும்பெருங்குன்றம்'** (அகம் 4 : 14-15) என்ற பாடல்வரி சோழநாட்டின் தலைநகரான இந்த உறையூரை உறந்தை என குறிப்பிடுகிறது.

காவிரிப்பூம் பட்டினம்

காவிரியாறு கடலில் புகுமிடத்தில் வடகரையின் மேல் காவிரிப்பூம்பட்டினம் இருந்தது. உலகப்புகழ் பெற்றிருந்த இப்பட்டினம் புகார் என்று பெயர் பெற்றிருந்தது. இதனைப் பௌத்த நூல்கள் கவீரப்பட்டினம் என்று கூறுகின்றன. இது பட்டினப்பாக்கம், மருவூர்ப்பாக்கம் என்று இரண்டு பிரிவாக இருந்தது. மருவூர்ப்பாக்கத்தில் மீன்பிடிக்கும் பரதவரும், கொல்லர், கருமார், கன்னார், தச்சர், பொற்கொல்லர், இசைவாணர் முதலான தொழிலாளரும் நடுத்தர மக்களும் வாழ்ந்தனர். பல பொருள்களை விற்கும் கடைவீதிகள் மருவூர்ப் பாக்கத்திற்கும் பட்டினப் பாக்கத்திற்கும் இடையில் இருந்தன. மருவூர்ப் பாக்கத்துக்கு மேற்கே பட்டினப்பாக்கம் இருந்தது. பட்டினப்பாக்கத்தைச் சூழ்ந்து நாற்புறமும் கோட்டை மதில்கள் இருந்தன. மதில்களுக்கு வெளியே அகழி இருந்தது. கோட்டைக்குள் இருந்த பட்டினப்பாக்கத்தில் செல்வரும் பெருங்குடி மக்களும் வாழ்ந்தனர். சோழ அரசருடைய அரண்மனை ஆற்றங்கரைப் பக்கமாகப் பட்டினப் பாக்கத்தில் இருந்தது.

காவிரிப்பூம்பட்டினத்தின் துறைமுகம் உலகப்புகழ் பெற்றிருந்தது. இந்தத் துறைமுகத்திற்குப் பாரத நாட்டின் பல திசைகளிலிருந்தும் கடல் வாணிகர் வந்தனர். யவன வணிகரும் இங்கு வந்தனர். காவிரிப்பூம்பட்டினத்தைப் பற்றிச் சங்கப்பாடல்கள் கூறுகின்றன. இங்கு நடந்த ஏற்றுமதி இறக்குமதிப் பொருட்களையும் வாணிகத்தையும் பற்றிப் **'பட்டினப்பாலை'** கூறுகிறது. மணிமேகலை, சிலப்பதிகாரக் காப்பியங்களிலும் இதன் சிறப்புக் கூறப்படுகிறது. கடல் வாணிகர்களும் (மாநாய்கர்), தரை வாணிகர்களும் (மாசாத்துவர்) இந்த நகரத்தில் வாணிகம் செய்தார்கள். சங்க காலத்தில் காவிரிப்பூம்பட்டினம் தலையாய துறைமுகமாகவும் பெரிய வணிக நகரமாகவும் இருந்தது.

குடந்தை

சோழநாட்டில் சங்ககாலத்தில் இருந்த ஊர்களில் குடந்தையும் ஒன்று. குடந்தை இக்காலத்தில் கும்பகோணம் என்று வழங்கப்படுகிறது. சோழரின் பெருநிதி இவ்வூரில் சேமித்து வைக்கப்பட்டிருந்தது. இதனை அகநானூறு **'வென்வேற் கொற்றச் சோழர் குடந்தை வைத்த நாடுதரு நிதி' (அகம் 60 : 12-14)** என குறிப்பிடுவதால் அறியலாம். குடந்தையைச் சூழ்ந்து கோட்டை மதில் இருந்தது. மதிலைச் சூழ்ந்து அகழி (கிடங்கு) இருந்தது. அகழியில் நீலப்பூக்கள் மலர்ந்திருந்தன, இதனை நற்றிணை

'தேர்வண் சோழர் குடந்தை வாயில்
மாரிஅம் கிடங்கின் ஈரிய மலர்ந்த

பெயல்உறு நீலம் போன்றன' (நற்றிணை. 379 : 7-9)

என்ற பாடல் வரிகளில் குறிப்பிடுவதைக் காணலாம். குடந்தைக்கு அருகில் இருந்த குடவாயில் என்னும் ஊரில் குடவாயில் கீரத்தனார் என்னும் புலவர் வாழ்ந்தார். குடவாயிலில் சோழர் சிறைச்சாலை அமைந்திருந்தனர் எனத் தெரிகிறது. அந்தச் சிறைச்சாலைக்குக் குடவாயில் கோட்டம் என்று பெயர். சோழன் செங்கணான், சேரமான் கணைக்கால் இரும்பொறையைப் போரில் சிறைப்பிடித்துக் கொண்டு வந்து குடவாயில் சிறையில் அடைத்து வைத்தான் என்று கூறப்படுவது இந்த சிறைச்சாலை போலும், கணைக்கால் இரும்பொறை சிறையில் கிடந்து, தண்ணீர் தா என்று பெறாது, பெயர்த்துப் பெற்று, கைக் கொண்டிருந்து, உண்ணான் சொல்லித் துஞ்சிய பாட்டு (புறம்.74) **'குழவி இறப்பினும்'** எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலாகும்.

ஆர்க்காடு

ஆர்க்காடு என்னும் பெயர் ஆத்தி மரத்தினால் வந்த பெயர். **'ஆர்'** என்றால் ஆத்திமரம், ஆத்திப்பூமாலையைச் சோழர் அணிந்தனர். பழங்காலத்தில் மரங்களின் பெயர்களையே ஊர்ப் பெயராக வைத்தனர். ஆலங்காடு, வேற்காடு, கடம்பங்காடு என்பனபோல ஆர்க்காடு என்பதும் மரங்களினால் வந்த பெயர்.

சோழநாட்டில் ஆர்க்காட்டுக் கூற்றம் என்னும் பிரிவு சங்க காலத்திலும் பிற்காலத்திலும் இருந்தது. ஆர்க்காட்டுக் கூற்றத்தின் தலைநகரம் ஆர்க்காடு. ஆர்க்காடு நகரம் சங்ககாலத்தில் பெரிய நகரமாக இருந்தது. இதனை,

'படுமணி யானைப் பசும்பூண் சோழர்
கொடிநுடங்கு மறுகின் ஆர்க்காட்டு ஆங்கண்' (நற்.227:5,6)

என்ற நற்றிணைப் பாடல் வரிகளால் அறியலாம், **'அழிசி'** என்னும் சோழன் ஆர்க்காட்டில் இருந்தான்.

'திதலை எ.்கின் சேந்தன் தந்தை,
தேம்கமழ் விரிதார் இயல்தேர் அழிசி,
வண்டுமூசு நெய்தல் நெல்லிடை மலரும்
அரியல்ஆம் கழனி ஆர்க்காடு அன்ன' (நற். 190:3-6)
'ஏந்துகோட்டு யானைச் சேந்தன் தந்தை,
அரியல்அம் புகலின் அம்கோட்டு வேட்டை
நிரைய ஒள்வாள் இளையர் பெருமகன்,
அழிசி ஆர்க்காடு' (குறுந். 258: 4-7)

என்ற நற்றிணை, குறுந்தொகைப் பாடல் வரிகள் அழிசி ஆர்க்காட்டில் இருந்த செய்தியை தெளிவுபடுத்துகின்றன. இந்தச் சோழநாட்டு ஆர்க்காடு தொண்டைநாட்டு ஆர்க்காடு அன்று, இதுவேறு; அதுவேறு. சோழ அரசனை உள்ளிட்ட எழுவரைப் பாண்டியன் நெடுஞ்செழியன் தலையாலங்கானம் என்னுமிடத்தில் வென்றான் என்பது வரலாறு. இந்த ஆலங்கானம் சோழநாட்டு ஊர் என்று நம்பப்படுகிறது.

கழார்

சோழநாட்டில் காவிரிக்கரையில் இருந்த கழார் என்ற ஊருக்கு மத்தி என்பவன் தலைவனாக இருந்தான். **'மத்தி'** பரதவர் கோமான். காவிரியில் நீர்ப்பெருக்கு வரும்போது கழார்ப் பெருந்துறையில் நீராட்டு விழா நடந்தது. அந்த நீராட்டுவிழா மிகச் சிறப்பாக நடந்ததாகத் தெரிகிறது.

'வெல்போர்ச் சோழர் கழாஅர்க் கொள்ளும்' (நற்.281 :3)
'வல்வில் எறுழ்த்தோள், பரதவர் கோமான்,
பல்வேல் மத்தி, கழாஅர் முன்துறை' (அகம் 226 :7,8)
'கழாஅர்ப் பெருந்துறை விழவின் ஆடும்' (அகம். 222:5)

என்ற பாடல் வரிகள் கழார் என்ற ஊரினை சுட்டிக்காட்டுகிறது. அங்கு நடைபெற்ற நீராட்டு விழாவுக்கு சோழன் கரிகாலன் தன்னுடைய சுற்றத்தோடு வந்து கண்டு மகிழ்ந்தான்.

போர் (போரூர், போர்வை)

இவ்வூர் போரூர் என்றும், போர்வை என்றும், திருப்போர் என்றும் கூறப்பட்டது. இது சோழநாட்டில் காவிரி ஆற்றங்கரை மேல் இருந்தது. இவ்வூரில் கொங்குச் சேரருக்கும் சோழருக்கும் வெவ்வேறு காலத்தில் பல போர்கள் நடந்தன. இவ்வூரில் பழையன் என்னும் சிற்றரசன் ஆண்டு வந்தான். இவன் சோழ அரசர் சார்பில் நாடு காவல் பணி பூண்டிருந்தவனாவான்.

'மாரி அம்பின், மழைத்தோற் பழையன்
காவிரி வைப்பின் போஒர் அன்ன' (அகம். 186 : 15,16)

பொத்தி

இது சோழநாட்டிலிருந்த ஓர் ஊராகும். பெருஞ்சோழன் என்பவன் இவ்வூரை ஆண்டான். இவ்வூரில் இருந்த புலவர் பொத்தியார் என்று பெயர் பெற்றார். பெருஞ்சோழன் வடக்கிருந்து உயிர்விட்டபோது அவனுடைய நண்பரான இந்தப் பொத்தியாரும் அவனுடன் வடக்கிருந்து உயிர்விட்டார். புறநானூறு 217,220,221,222,223 ஆகிய பாடல்களில் இச்செய்தி கூறப்பட்டுள்ளது. சேலம் மாவட்டம் காவிரியின் வடகரையிலுள்ள பொத்தனூர் இந்த ஊராயிருக்கலாம் என்பர்.

சாய்க்காடு

இக்காலத்தில் இது திருச்சாய்க்காடு என்று கூறப்படுகிறது. இதற்குச் சாயாவனம் என்னும் பெயரும் உண்டு.

'நெருங்கதிர்க் கழனித் தண்சாய்க் கானத்து' (அகம்.220:19)
என்றும்,
செந்நெலஞ் செறுவின் அன்னந் துஞ்சம்
பூக்கெழு படப்பைச் சாய்க்காடு' (நற்.73;8,9)

என்றும் இது சிறப்பிக்கப்பட்டுள்ளது.

வல்லம்

இது சோழநாட்டிலிருந்த ஊர். இவ்வூர் கோட்டை மதிலினால் சூழப்பட்டு, மதிலுக்கு வெளிப்புறத்தில் மிளைக்காடுகளால் அரண் செய்யப்பட்டிருந்தது. வல்லத்துக் கோட்டையை ஆரியப்படை தாக்கினார்கள். தாக்குதலுக்கு எதிர்நிற்க முடியாமல் ஆரியப்படை சிதறி ஓடிப்போயிற்று.

'மாரி அம்பின் மழைத்தோற் சோழர்
வில்ஈண்டு குறும்பின் வல்லத்துப் புறமிளை
நேர்இறை முன்னக வீங்கிய வளையே' (அகம்.336:20-22)

வல்லத்தின் தலைவனாக இருந்தவன் சோழர் குலத்தைச் சேர்ந்த நல்லடி என்பவன்.

வெண்ணி

இவ்வூர் இக்காலத்தில் கோயில் வெண்ணி என்று கூறப்படுகிறது. இது தஞ்சாவூருக்குக் கிழக்கே இருபத்து நான்கு கி.மீ.தொலைவில் இருக்கிறது. இந்த ஊரில் சில போர்கள் நடந்துள்ளன. பாண்டியனும் சேரனும் பதினோரு வேள் அரசரோடு வந்து போர் செய்தபோது கரிகாற்சோழன் அவர்களை வென்றான்.

'கரிகால் வளவனொடு வெண்ணிப் பறந்தலைப்
பொருதுபுண் நாணிய சேர லாதன்' (அகம்.55:10,11)
'களிஇயல் யானைக் கரிகால் வளவ
சென்று அமர்க் கடந்தநின் ஆற்றல் தோன்ற
வென்றோய் நின்னினும் நல்லன் அன்றே
கலிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை
மிகப்புகழ் உலகம் எய்தி
புறப்புண் நாணி வடக்கிருந் தோனே' (புறம் 66:3,4)

கரிகாற் சோழனுடைய இந்த வெற்றியைப் பாடிய வெண்ணிக்குயத்தியார் இந்த ஊரிலிருந்த புலவர்.

முடிவுரை

உறையூர், காவிரிப்பூம்பட்டினம், குடந்தை, ஆர்க்காடு, கழார், போரூர், பொத்தி, சாய்க்காடு, வல்லம், வெண்ணி ஆகிய ஊர்கள் சோழநாட்டில் இருந்த ஊர்களாக அகநானூறு, புறநானூறு, நற்றிணை ஆகிய சங்கநூல்களால் அறியப்படுகிறது. இவ்வூர்கள் வரலாற்றில் இடம்பெற்ற ஊர்களாகும்.

111. புறநானூற்றின் கடையெழு வள்ளல்களின் கொல்லிமலை

மு.விஜயலட்சுமி
முனைவர் பட்டஆய்வாளர்
உருமு தனலட்சுமி கல்லூரி
காட்டூர்

முன்னுரை:

சங்க இலக்கியமான புறநானூற்றின் கொடையெழு வள்ளல்களின் ஒருவரான வல்வில் ஓரி ஆட்சி செய்த கொல்லிமலையின் சிறப்பம்சங்கள் பற்றி சங்கம் முதல் இன்றைய காலக்கட்டம் வரை ஆராய்ந்து கட்டுரையாக வரையப்படுகிறது.

வல்வில் ஓரியின் சிறப்பம்சங்கள்:

வல்வில் ஓரி வீரத்திலும் கொடைச்சிறப்பிலும் மிகவும் சிறப்பு வாய்தவன். அதனால்தான் மாரிக்கு இணையாக வைத்து புலவர்கள் பாடியுள்ளனர். இவன் மாரி போல் வழங்கும் மாபெரும் வள்ளலாகத் திகழ்ந்துள்ளதால் தான். மலர்கள் பூத்துக் குலுங்கும் சுரபுன்னை மரங்களும், சிறிய மலைகளும் நிறைந்தத் தன் நாட்டையே கூத்தாடும் கலைஞர்களுக்குப் பரிசாகக் கொடுத்தவன்.
என்பதனை,

"நறும்போது கஞலிய நாகுமுதிர் நாகத்துக்
குறும்பொறை நன்னாடு கோடியர்க்கு ஈந்த"

என்று பத்துப்பாட்டு சிறப்பித்துக் கூறுகிறது.

"ஓங்கு இருங் கொல்லி பொருநன்
ஓம்பா ஈகை வறில் வெய்யோனே"

என்று தன்னைப் போற்றிக் கூறவந்த புகழுரைகளையும், பாணர்களைச் செல்ல விடாது அவர்களுக்கு ஆவின் நெய்யை உருக்கினார் போன்ற மதுவையும், மலையின் கண் விளைந்த மாசறு பொருள்களையும், பொன்னையும் அள்ளித் தருகின்ற ஒப்பில்லா கொடையாளி எனும் பொருள் கொண்ட ஓரியின் ஈகைத் திறம் பற்றிய செய்தியை புறநானூற்று பாடல் போற்றுவதைக்காண முடிகிறது.

"வேட்டது மொழியவும் விடாஅன் வேட்டத்திற்
தான்உயிர் செருத்த மான் நினைப் புழுக்கோடு
ஆன் உருக்கு அன்ன வேரியை நல்கி
தன் மலைப் பிறந்த தா இல் நன் பொன்
....
....
ஓங்கு இருங் கொல்லிப் பொருநன்
ஓம்பா ஈகை விறல் வெய்யோனே!"

என்ற மற்றொரு பாடலில் வல்வில் ஓரியின் நல்லருங் கொடையைப் பற்றி குறிப்பிடுகிறது. ஓரியின் தடையில்லா நிலையில் கொடையெனப் பெற்ற பெரும் பொருளால் இரவர்கள் மயிலைப் போல தன்குலத் தொழிலையே மறந்தவராய் மகிழ்ந்தனர்.

"மழையணி குன்றத்து கிழவன் நாளும்
இழையணி யானை இரப்போர்க்கியும்
....
....
மாரி வண்கொடை காணிய நன்றும்
சென்றது மன்னெங் கண்ணுளங் கடும்பே"

ஓரியின் ஈகைக் குணத்தைக் கேட்டு புலவர்களும், பாணர்களும், கூத்தர்களும் எப்பொழுதும் வந்து கொண்டு இருந்தனர். ஓரியும் வருபவர்களுக்கு எல்லாம் யானையும், குதிரையும் மற்றைய செல்வமும் அளித்துச் சிறப்பு செய்துள்ளான். வன் பரணர் கொல்லி மலையைச் சார்ந்த சுரத்திடத்தே பாண் சுற்றத்தோடு சென்று கொண்டிருக்கையல் வேட்டங் காரணமாக ஆங்கு வந்திருந்த வல்வில் ஓரியைக் கண்டு பரிசில் பெற்ற திறத்தை இப்பாட்டின் கண் குறித்திருக்கின்றார். ஓரியென்பான் வேட்டம் புரியுங்கால் யானையொன்றை வீழ்த்தற்குப் புலியென்பது அற்றம் நோக்கியிருப்பதை பார்த்துவிட்டான் உடனே அவன் தனது வலிய வில்லில் அம்பு தொடுத்து யானை மேல் எய்தான். அஃது அவ்யானையை வீழ்த்தி அற்றம் நோக்கி நின்ற புலியின் அகன்ற வாயுள் தைத்து ஊடுருவிச் சென்று கொன்று வழியில் நின்ற கலைமானை மடித்து அண்மையிலிருந்த காட்டுப் பன்றியை வீழ்த்தி, அதன் அயலிருந்த புற்றிக் கிடந்த உடம்பின் உடலிற்றைப் புண்டு வீழ்ந்தது. இதனைக் கண்டு பெருவியப்புற்ற வன்பரணர், இத்துணைச் சிறப்பமைந்த வில்லாளனாகிய இவன் ஒரு செல்வத் தோன்றலாம் என எண்ணி தன் பாண் சுற்றத்துடனே அவனை வணங்கித் தலைவன் திருமுன் பாடல் அமைந்த இருப்பதொரு பாடற்றுறையும் பாடி நிற்ப அவன் தானெய்த மானின் தசையையும் மதுவையும் தன் மலையிற் கிடக்கும் பொன்னையும் தந்து சிறப்பித்து அனுப்பினான் புறநானூற்று பாடல்கள் கூறுகின்றன.

தாம் கற்ற கல்வியை வளம்படுத்தற் பொருட்டு நாளும் அதனைப் பயிறல் வேண்டும். அம்முறையே இவர் தம்முடைய புறநானூற்றுப் பாடல்களில் மறந்து ஆடலும் கைவிடப்பட்டிருந்தது வறுமையில்லாத வளமுடையவராயினர்.

கொல்லிமலையின் சிறப்பம்சங்கள்:

கொல்லிமலை சேல மாநாட்டில் நாமக்கல்லைச் சார்ந்த சேந்த மங்கலத்துக்கு அருகில் உள்ளது. கொல்லிமலையின் அருகில் உள்ள நாமக்கல்லில் ஆஞசிநேயா் கோவில் இன்று பெரும்பாலும் சுற்றுலாத்தலமாகவும் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

நீர்வளம்:-

கொல்லிமலையில் அருவிநீராக உள்ளது. அங்கு நல்ல நிலவளம் அமைந்துள்ளதால் பல்வேறு உணவுப் பயிர்கள் பயிரிடுகின்றன.

'நிலவளம்:-

நீர்வளம் நல்ல முறையில் அமைந்துள்ளதால் தான் பல்வேறு உணவுப் பொருட்கள் பயிடப்படுகின்றன. அப்படி பயிரிடப்பட்டப் பொருட்கள் அனைத்தும் சந்தைகளுக்குக் கொண்டு வரப்பட்டு பல பதிகளில் வாழும் மக்களும் இங்கு வந்து தரமான உணவுப் பொருட்கள் என நம்பி வாங்கிச் செல்கின்றனர் என்பது மிகவும் குறிப்பிடத்தக்கது. கொல்லிமலையில் பலாப்பழமும், கொய்யாப்பழமும் சிறப்புடைய பழங்களாக உள்ளது.

கொல்லிமலை கோவில் திருவிழாக்கள்:-

கொல்லிமலையில் குறிப்பிட்ட நாளில் கோவில் திருவிழாக்கள் நடைப்பெறும். அந்த நாளில் பல ஊர்களில் உள்ள மக்கள் பக்தி மயமாக அங்கு வந்து செல்கின்றனர்.

கொல்லிமலையை பகுதியை சுற்றியுள்ள சிறப்பம்சங்கள்:

கொல்லிமலை அருகில் உள்ளப்பகுதியில் கோழி வளர்ப்பு, கோழி முட்டை ஏற்றுமதி செய்தல், கோழிக் கறிக்குப் பயன்படுகிறது.

தீவனப்பயிர்கள்:

கொல்லிமலையில் சுற்று வட்டாரத்தில் கோழிக்குத் தேவையான தீவனப் பயிர்களும் பயிரிடப்படுகின்றன.

எண்ணெய் வித்துக்கள்:-

கொல்லிமலையின் அருகில் உள்ள பகுதிகளில் சூரியகாந்தி மலர்கள் அதிகமாக பயிடப்படுகின்றன. அதனால் எண்ணெய் வித்துக்கள் அதிகமாகக் கிடைக்கப் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

கடையெழு வள்ளல்களான வல்வில் ஓரி வாழ்ந்த கொல்லிமலை அன்று ஆட்சி செய்த போது எவ்வளவு சிறப்பு மிக்க இடமாக இருந்தது என்பதையும், வரியவர்கள் வந்து இரந்து கேட்க்கும் பொழுது இல்லையென்றுச் சொல்லாமல் கொடையாகக் கொடுக்கும் வள்ளமைத் திறம் அந்த மலைக்கும் உண்டு என்பது இக்கால கட்டத்திலும் அனைவராலும் நேரில் பார்க்க முடிகின்றது. மேலும் எடுத்துரைக்கிறது. இன்றைய சூழ்நிலையில் கொல்லிமலையைச் சுற்றியுள்ள பகுதிகளில் கல்வியில் கல்லூரி பொறியியல் கல்லூரி, தொழில் நுட்பக்கல்லூரி மெட்ரிக்குலேசன் என்று கல்வித்துறையின் வளர்ச்சியிடமாக அமைந்துள்ளது என்பது மிகவும் குறிப்பிடத்தக்கது. கொல்லிமலைச் சுற்றியுள்ள பகுதி மிகவும் குறிப்பிடத்தக்கது.

112. சங்க இலக்கியத்தில் குருநிலமன்னர்கள் மற்றும் வள்ளல்களின் ஊர்ப்பெயர்கள்

த. வெற்றிவேல்செல்வன்
முனைவர்பட்ட ஆய்வாளர்,
தமிழியல் துறை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

சங்கப்பாடல்களில் இடம் பெற்றுள்ள ஊர்ப்பெயர்களைக் காணுங்கால் பழந்தமிழரின் இயற்கையோடு இயைந்த இன்பியல் வாழ்வு நினைவுக்கு வருகிறது. பொதுவாக மனிதன் தன் தேவையைப் பூர்த்திசெய்வதற்கேற்ற சூழலை அமைத்துக் கொண்டு வாழ ஆசைப்படுபவன். தான் வாழும் இடம் தனக்கேற்றப் பாதுகாவலை வழங்குமா என்று நன்கு ஆராய்ந்து, அங்கே தன்னைச் சார்ந்தாரின் துணைக்கொண்டு ஊர்களை அமைக்க முயல்வது மனிதரின் இயல்பாகும், தம் இருப்பிடத்தைப் பிறர்க்குச் சுட்டிக்காட்ட ஏதேனும் ஒரு அமைப்பில் ஒரு பெயரிட்டு அழைக்க ஆசைப்படுகிறான். அதனால் எழுகின்ற பெயரே ஊர்ப்பெயராகும். இனி குருநில மன்னர்களும் வள்ளல்களும் வாழ்ந்த ஊர்ப்பெயர்களைப்பற்றி காண்போம்.

நன்னன் சேய் நன்னனின் ஊர்கள்

1. ஏழில்: சங்க கால இலக்கியங்கள் நன்னன் ஏழில் குன்றத்தில் ஆட்சிபுரிந்ததாகக் கூறுகிறது. இப்பொழுது மலையான நாட்டில் 'ஏழுமல' **(Elumala)** என்று வழங்கப்பெறும் இடமே அந்த ஏழிற் குன்றம். தற்காலத்தில் வடமலபாரைச் சேர்ந்த ஏழில் மலை, கொண்கானம், பூமிநாடு ஆகியவை அடங்கிய பகுதியே நன்னன் ஆட்சிக் குட்பட்டிருந்த நாட்டின் பகுதியாகக் கருதப்பெறுகிறது.

"பொன்படு கொண்கான் நன்னன் நல்நாட்டு
ஏழிற்குன்றம் பெறினும், பொருள்வயின்"
(நற்-ச.வே.சு உரை 391: 6-8)

என்ற பாடலின் மூலம் இதனை அறியலாம்.

2. செங்கண்மா

இரணிய முட்டத்துப் 'பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் பல்குன்ற கோட்டத்துச் செங்கண் மாத்துவேள் நன்னன் சேய் நன்னனைப் பாடிய மலைபடுகடாம்' என்ற தொடர், 'செங்கண்மா' என்னும் ஊர் நன்னனுக்கு உரியது என அறியமுடிகிறது. நன்னன் சேய் நன்னனின் தலைநகராகிய இச்செங்கண் மாநகர் தொண்டை நாட்டைச் சார்ந்தது. வடஆர்க்காடு மாவட்டத்திலுள்ள சவ்வாது மலைத்தொடரே நன்னனின் ஆட்சியின் கீழிருந்த மலைநாடு. அம்மலையின் தெற்கில் 'செங்கம்' என்னும் பெயருடன் இன்று விளங்கும் ஊரே நன்னன் காலத்தில் 'செங்கண்மா' என்னும் பெயருடன் பெரிய நகரமாக விளங்கியது.

3. பாரம்

பாரம் என்னும் ஊர் கொண்கானத்து நன்னனுக்குரியதாய் இருந்திருக்கிறது. இவை நன்னனுடைய தலைநகரம் என்றும் கூறப்படுகிறது.

'பாரத்துத் தலைவன் ஆரநன்னன்' (அகம். 152-12)

என்ற அகநானூற்றுப் பாடலின் மூலம் அறியலாம்.

4. வியலூர்

நன்னன் வேண்மான் என்பவனுக்கு இவ்வூர் உரியது என்று சங்க இலக்கியம் விளக்குகிறது.

"நறவு மகிழிருக்கை நன்னன் வேண்மான்

வயலைவேலி வியலூர் அன்ன" (அகம்-97: 12-13)

என்ற அகநானூற்றின் வழி இதனை அறியலாம்.

குழுமூர்

உதயன் என்னும் வள்ளல் வாழ்ந்த ஊர் குழுமூர். இவ்வள்ளல் இரவலர்களுக்கு உணவளிப்பதைத் தலையாயக் கடமையாகக் கொண்டிருந்தான். ஆகையால் அவன் அட்டிலில் இரவலரின் ஆரவாரம் ஓயாமல் ஒலித்துக் கொண்டே இருந்தது என்னும் தெரிகிறது. சிறந்த பசுக்களையுடைய நிலப்பரப்பினையுடைய குழுமூர் என்று சங்க இலக்கியம் கூறுவதால். இவ்வூர் நிலப்பரப்பில் பசுக்கள் குழுமியிருந்தன என்று தெரிகிறது. இவ்வாறு குழுமியிருந்ததால் குழுமூர் என்று பெயராகியது என எண்ண இடமளிக்கிறது.

"பல்லான் குன்றிற் படுநிழல் சேர்ந்த
நல்லான் பரப்பின் குழு மூராங்கண்
கொடைக் கடன் ஏன்ற கோடா நெஞ்சின்" (அகம். 168: 4-7)

என்ற அகநானூற்றுப்பாடலின் மூலம் இச்செய்தியினை அறியலாம்.

குறுக்கை - அன்னி

குறுக்கைப் பறந்தலையில் அன்னி என்னும் மன்னன் திதியனோடு போரிட்டு, அவனுடைய காவல் மரமாகிய புன்னையை வெட்டி வீழ்த்தினான் என்று சங்க இலக்கியம் கூறுகிறது. போர் நடைபெற்ற அந்தப் போர்க்களம் அமைந்த ஊர்ப்பெயராகிய குறுக்கை என்பதோடு இணைந்து குறுக்கைப் பறந்தலை எனப் பெயர் பெற்றது.

"அன்னிக் குறுக்கைப் பரந்தலை திதியன்
தொல்நிலை முழுமுதல் துமியப் பண்ணி,
புன்னை குறைந்த ஞான்றை" (அகம். ச.வே.சு உரை 45: 9-11)

என்ற அகநானூற்றுப் பாடல் மூலம் அறியலாம்.

ஈரந்தை-தோயன்மாறன்

தோயன்மாறன் என்ற வள்ளலுக்குரியது ஈரந்தை எனத் தெரிகிறது. கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனார் இவனைப் பாடியுள்ளார். ஈரம் என்ற சொல் நீர்ப்பற்று என்னும் பொருளுடையது. நீர்ப்பற்று அமைந்த பகுதியில் உள்ளதால் இப்பெயர் பெற்றிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

ஊணூர்-தழும்பம்

சங்கப் பாடல்களிலிருந்து நாம் அறியும் பெயர்களுள் ஊணூர் என்ற பெயரும் ஒன்று. இவை ஊணூர் தழும்பன் என்ற வள்ளலுக்குரியதாக இருந்தது. தழும்பனுக்குரிய ஊர் ஆதலின் தழும்பனூர் என்றும் ஊணூர் கூறப்பெற்றது.

"இரும்பாண் ஒக்கல் தலைவன்! பெரும்புண்
ஏஎர் தழும்பின் ஊணூர் ஆங்கண்" (நற், 300:9-10)

எனவரும் நற்றிணைப் பாடல் மூலம் அறியலாம்.

சிறுகுடி-பண்ணன்

குறிஞ்சி நிலத்து ஊர் சிறுகுடி எனப்பெயர் பெறும். கடற்கரை ஊறும் அப்பெயர் பெறுகின்றது. இவையெல்லாம் ஒரு குறிப்பிட்ட ஊரைக் குறிப்பன அல்ல. பண்ணன் என்ற வள்ளலுக்குரிய ஊர் சிறுகுடி என்று சங்க இலக்கியம் கூறுகிறது. ஆதலால் சிறுகுடி கிழான் பண்ணன் எனப்பட்டான்.

"தனக்கென வாழப் பிறர்க்கு உரியாளன்
பண்ணன் சிறுகுடிப் படப்பை நுண் இலைப்

புன்காழ் நெல்லிப் பைங்காய் தின்றவர்"
(அகம் ச.வே.சு உரை-54:13-15)

என்ற அகநானூற்றுப் பாடல் மூலம் இதனை அறியலாம். மேலும் வல்லார் என்ற ஊரில் வள்ளல் பண்ணன் என்பவன் இருந்தான். இவன் வல்லார் கிழான்பண்ணன் எனப்பெற்றான். வலிமையுடையவர் எனப்பொருள்படும் வல்லார் என்னும் சொல் வலிய வீரர்கள் தங்கியிருந்த குடியிருப்புகளடங்கிய ஊருக்குப் பெயராய் அமைந்திருக்கலாம்.

"பெருங்குறும்புடுத்த வன்புல விருக்கைப்
புலா அலம்பிற் போரருங் கடிமிளை
வலா அரோனே வாய்வாட் பண்ணன்"
(புறம்-ச.வே.சு உரை-181-4:6)

எனவரும் புறநானூற்றுப்பாடலால் அறியலாம்.

பறம்பு-பாரிவள்ளல்

பறம்பு என்ற ஒரு மலையின் பெயர் அம்மலையையுடைய நாட்டிற்கும் பெயராயிற்று. பறம்பு நாடு 300 ஊர்களை உடையது. இது பாரி என்ற மன்னனின் ஆட்சியில் இருந்த நாடு. சங்ககால பறம்புநாடு என்பது ஏறத்தாழ மதுரை மாவட்டத்து மேலூர் வட்டத்தின் கிழக்குப் பகுதியும், இராமநாதபுர மாவட்டத்துத் திருப்பத்தூர், சிவகங்கை, பரமக்குடி வட்டங்களும் அடங்கிய நிலப்பரப்பாய் இருந்திருக்கலாம் என்று கூறுதல் பொருத்தமாகும்.

"ஊருடன் இரவலர்க்கு அருளி, தேருடன்
முல்லைக்கு ஈத்த செல்லா நல்இசை
படுமணி யானை பறம்பின் கோமான்
நெடுமாப்பாரி மகளிர்."
(புறம்-ச.வே-சு-உரை 201: 2-5)

எனவரும் புறநானூற்றுப்பாடலால் அறியலாம்.

கோவல்-திருமுடிக்காரி

இவ்வூரை கோவல் என்றும் கோவலூர் என்றும் சங்க இலக்கியம் சுட்டுகிறது. இது மலையமான் திருமுடிக்காரி ஆண்ட ஊராகும். இது ஒரு காலத்தில் அதியமான் நெடுமான் அஞ்சியால் வெல்லப்பட்ட ஊர். மேலும் முள்ளூரும் மலையமான் காரிக்கு உரியதாகக் குறிப்பிடுகிறது இவ்வூரில் ஆரியருக்கும் மலையனுக்கும் போர் நடந்து அப்போரில் ஆரியப்படை தோற்றோடியது என்பதனை,

"ஆரியர் துவன்றிய பேர் இசை முள்ளூர்
பலருடன் கழித்த ஒள்வாள்மலை யனது
ஒரு வேற்கு ஓடியாங்கு நம்" (நற்-170-6-8)

எனவரும் நற்றிணைப் பாடலால் அறியலாம்.

ஆய்குடி-ஆய் அண்டிரன்

ஆய் என்ற குலத்தில் வந்த ஆய் அண்டிரன் என்னும் வள்ளலின் ஊரே ஆய்குடி என்பது. இவ்வூர் பொதிய மலை நாட்டைச் சார்ந்தது பொதிய மலைச் சாரலில் இன்னும் இவ்வூர் உள்ளது. ஆய் அண்டிரன் காலத்தில் சிறந்திருந்த ஓர் ஊர் ஆய்குடி எனத்தெரிகிறது. அண்டிரன் ஆயர்குடியினன். இவனுடைய குலத்தினராகிய ஆயர்கள் வாழ்ந்த பகுதியாக இது இருந்திருக்கலாம். எனவே ஆயர்குடி என்பது ஆய்குடி என்ற பெயரைப் பெற்றிருக்கலாம்.

'தென்திசை ஆ அய்குடி இன்றாயின்' (புறம்0-132:8)

என்ற பாடலின் மூலம் அறியலாம்.

தகடூர்-அதியமான் நெடுமான் அஞ்சி

அதியமான நெடுமான் அஞ்சி என்ற வள்ளலின் தலை நகரமாய் இருந்த ஊர் தகடூர். இன்றைய தருமபுரி மாவட்டமே அன்றைய தகடூராக இருந்ததை அறிய முடிகிறது.

"வெல்போர் ஆடவர் மறம்புரிந்து காக்கும்
வில் பயில் இறும்பின், தகடூர் நூறி"
(பதிற்று-ச.வே.சு-உரை-78-8:9)

என்ற பதிற்றுப்பத்துப்பாடலின் மூலம் அறியலாம்.

கண்டீரம்-கோட்பெருநள்ளி

பெருநள்ளி என்ற வள்ளல் கண்டீரம் என்ற ஊரின் தலைவன் ஆதலால் கண்டீரக் கோட்பெருநள்ளி எனப்பெயர் பெற்றான். இவன் தோட்டி என்னும் மலைக்கும் அதைச் சார்ந்த மலைநாட்டுக்கும் தலைவன் எனத் தெரிவதால் கண்டீரம் என்பது தோட்டிமலைப்பகுதியைச் சார்ந்ததாக இருக்குமோ என்று எண்ணத் தோன்றுகிறது.

"இரும்பு புனைந்து இயற்றாப் பெரும்பெயர்த் தோட்டி
அம்மலை காக்கும் அணி நெடுங்குன்றின்
பளிங்கு வகுத்தன்ன தீம் நீர்
நளிமலை நாடன் நள்ளி அவன் எனவே"
(புறம்-150-24:28)

எனவரும் பாடலால் அறியலாம்.

கொல்லிமலை-வல்வில் ஓரி

சேலம் மாவட்டத்திலுள்ள கொல்லிமலை வல்வில் ஓரி என்ற வள்ளலுக்குரிய மலையாகும். இம்மலையில் கொல்லிப்பாவை என்ற ஒரு தெய்வப்படிவம் செய்து வைக்கப்பட்டிருக்கிறது. அது ஒரு பூதத்தால் அமைக்கப்பட்ட அழகிய பாவை என்று சங்க நூல்கள் கூறுகின்றன.

"காந்தள் அம்சிலம்பில் சிறுகுடி பசித்தென
கடுங்கண் வேழத்துக் கோடு நொடுத்து உண்ணும்
வல்வில் ஓரிக் கொல்லிக் குடவரை" (குறுந். 100-3:5)

எனவரும் பாடலால் அறியலாம்.

நிறைவாக

சங்க இலக்கியத்தில் குருநில மன்னர்கள் மற்றும் வள்ளல்களின் ஊர்ப்பெயர்கள் என்னும் தலைப்பில் அமைந்த இக்கட்டுரையில் நன்னன் சேய் நன்னன் ஆண்ட பகுதிகளின் பெயர்களும் வாழ்ந்த ஊரின் பெயர்களும் விளக்கப்ட்டுள்ளது. உதயன் என்னும் வள்ளல் வாழ்ந்த குழுமூரில் இரவலரின் ஆரவாரம் ஓயாமல் ஒலித்துக் கொண்டே இருக்கும் என்பதையும், அன்னி என்ற மன்னன் குறுக்கை என்ற ஊரில் வாழ்ந்தான் என்ற செய்தியையும் அறிந்தோம். மேலும் கடையேழு வள்ளல்கள் வாழ்ந்து ஆண்ட பறம்பு, கோவல், ஆய்குடி, தகடூர், கண்டீரம் என்கின்ற தோட்டி, கொல்லிமலை போன்ற ஊரின் பெயர்களைத் தெளிவாக இக்கட்டுரையின் வாயிலாக அறிந்தோம்.

113. பெரியாழ்வார் திருமொழியில் ஊர்ப் பெயர்கள்

முனைவர். பா.வேலம்மாள்,
தமிழ்த் துறைத் தலைவர்,
ஸ்ரீபராசக்தி மகளிர் கல்லூரி,
குற்றாலம்.

திருமலைப்பரம் பொருளாகக் கொண்டு வழிபடும் இந்துமதப் பிரிவு வைணவம் எனப்படும். வேதத்தின் சாரமாக விளங்கும் நாலாயிரத்திவ்வியப்பிரபந்தமே வைணவத்தில் வேதமாகும். வையத்துள் வாழ்வாங்கு வாழ வைணவத்தின் வழி நின்று உணர்த்திக் காட்டிய அருளாளர்கள் ஆழ்வார்கள். ஞான, கரும, பக்தி, பிரபத்தி, குருபத்தி என்றும் ஐவகை நெறியை உணர்த்திய ஆழ்வார்களின் பக்திப் பாசுரங்களில் வைணவர்கள் சென்று வணங்கிய 108 வைணவ திருப்பதிகளைப் பற்றிய செய்திகள் நிரம்பக் கிடைக்கப் பெறுகின்றன. அந்தவகையில் பெரியாழ்வாரின் திருமொழியில் கிடைக்கப் பெறும் வைணவத் திருப்பதிகளைப் பற்றிக் காண்பதே இவண் நோக்கம்.

வைணவ வரலாற்றில் பெருமையுடன் 'பெரிய' என்னும் அடைமொழி பெற்றவர் பெரியாழ்வார். ஸ்ரீவல்லப தேவபாண்டிய மன்னனால் 'பட்டர்பிரான்' என்று பாராட்டப் பெற்றவர். இவர் பிறந்த ஊர் திருவில்லிபுத்தூர். இவரின் இயற்பெயர் 'விட்டுணுசித்தன்', பூமாலை கட்டுவதும், பாமாலை புனைதலும் இளம் பருவத்திலேயே கைவரப் பெற்றவர். நாவாயிரத்திவ்வியப் பிரபந்தத்தால் பெரியாழ்வாரின் திருமொழியில் கண்ணன் அவதாரச் சிறப்பு, பிள்ளைப் பருவ அருளிச் செயல்கள் என்பன விரிவாகநட சமூகக் கண்ணோட்டத்துடன் விளக்கப்பட்டுள்ளன. இத்திருமொழியில் 10 அல்லது 11 பாசுரங்கள் கொண்ட 43 பதிகங்கள் உள்ளன. பெரியாழ்வார் திருமொழியில் 19 வைணவத்திருப்பதிகள் இடம் பெறுகின்றன.

திருக்கோட்டியூர்

பாண்டிய நாட்டிலுள்ள பதினெட்டுத் திருப்பதிகளில் திருக்கோட்டியூரும் ஒன்று.

"வண்ண மாடங்கள் சூழ்திருக்கோட்டியூர்
.....................(முதற்பத்துப் பாடல் 13)
சேம்பொனார் தமில்சூழ், செமுங்கனி
யுடைத்திரு கொட்டியூர்'' (368 பெரியாழ்வார் 4–4–9)

என்று பெரியாழ்வாரால் பாடப்பட்ட இந்த ஊர் பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டத்தில் உள்ளது. திருப்பத்தூரில் இருந்து சிவகங்கை செல்லும் வழியில் உள்ளது. பாவங்களை ஓட்டக் கூடிய ஊர் என்று பொருள்படும்.

திருக்குடந்தை

பெரியாழ்வாரால் பாடப்பட்டத் திருக்குடந்தை என்ற கும்பகோணம் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ளது. குடந்தை என்னும் கும்பகோணம் கோவில்களின் நகரம் என்று அழைக்கப்படுகிறது. ஒரு காலத்தில் சோழ அரசர்களின் தலைநகரமாக விளங்கியது. இவ்வூரில் பெரியாழ்வாரால் பாடப்பட்ட பெருமாள் சாரங்கபாணி.

திருவரங்கம்

திரு உடையாள் மணவாளா! திருவரங்கத்தே கிடந்தாய் (ஏழாம் திருமொழி)
திருவரங்கம் என்னும் ஸ்ரீரங்கம் திருச்சியிலிருந்து 10 கி.மீ தூரத்திலுள்ள ஒரு ஊர், சிலப்பதிகாரத்திலேயே இவ்வூர் பேசப்படுகிறது. கம்பர் இந்த ஊரிலுள்ள பெருமாள் கோவில் மண்டபத்தில் தான் கம்பராமயணத்தை அரங்கேற்றஜயதாகக் கூறப்படுகிறது. மேலும் இந்தியாவிலேயே மிகப் பெரிய கோபுரம் இங்கு தான் உள்ளது.

திருவெள்ளறை

திரவெள்ளறை திருச்சியிலிருந்து 13 மைல் தொலைவில் துறையூர் செல்லும் பாதையில் உள்ளது.

"போது வானவர் ஏத்தும் முனிவர்கள் வெள்ளறை நின்றாய்''
"மாடத்தின் திருவெள்ளறை நின்றாய்''
(இரண்டாம் பத்து, எட்டாம் திருமொழி 192,193,194)

என்று திருவெள்ளறைப் பற்றி பெரியாழ்வார் பலப் பாடல்களில் பாடியுள்ளார், இவ்வூர்க் கோவில் பெருமாள் பெயர் 'புண்டரீகாட்சன்'.

திருக்கண்ணபுரம்

திருக்கண்ணபுரம் திருவாரூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. நன்னிலத்திலிருந்து நாகபட்டினம் செல்லும் வழியில் திப்புகலூர் என்ற ஊரிலிருந்து ஒருமைல் தூரத்தில் உள்ளது. இவ்விடத்தில் அமைந்துள்ள கோவிலிலுள்ள பெருமாள் மும்மூர்த்திகளாகக் காட்சி அருளுகிறார். கிருஷ்ணாரண்யம் என்றும் தண்டகாரண்யம் என்றும் இத்தலம் வழங்கப்படுகிறது.

"சோலை மலைக்கு அரசே! குண்ணபுரத்து அமுதே!
என் அவலம் களைவாய்'' (ஆறாம் திருமொழி – பாடல் 71)

என்று பெரியாழ்வார் இந்த ஊரைப் பற்றிப் பாடியுள்ளார்.

திருவேங்கடம்

திருப்பதி, திருமலை, ஏழுமலை, ஆதிவராக சேத்திரம் என்று பல பெயர்களால் திருவேங்கடம் அழைக்கப்படுகிறது. 'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்' என்று பண்டைத் தமிழ்நாட்டிற்கு எல்லையாகத் திகழ்ந்த திருவேங்கடம் இன்று ஆந்திராவிற்குள் இருக்கிறது. சென்னையில் இருந்து பம்பாய் செல்லும் பாதையில் உள்ள ரெணிகுண்டா இரயில் நிலையத்திலிருந்து 10 கி.மீ. தூரத்தில் உள்ளது. வேங்கடமென்றால் பாவங்களை சுட்டெரிக்கக் கூடியது என்று 9பொருள் கொண்ட இந்த ஊரைப் பற்றி பிரமண்ட புராணம், வராக புராணம், ஸ்காந்த புராணம், பத்ம புராணம் போன்ற புராண நூல்களில் குறிப்புக்கள் கிடைக்கின்றன. தமிழில் சிலப்பதிகாரத்தில் 'வீங்கு நீா் அருவி வேங்கடமென்னும்' என்ற குறிப்பு வேங்கடத்தின் பழமை கூறும்.

வடமதுரை

வடமதுரை என்ற ஊர் வடஇந்தியாவில் 'மதுரா' என்றழைக்கப்படுகிறது. டெல்லியிலிருந்து ஆக்ரா வரும் வரையில் 'மதுரா' இருக்கிறது. இந்த ஊர் பற்றி ஸ்ரீமத்பாகவதம் சிறப்பாகப் பேசுகிறது. இங்குள்ள பிருந்தாவனம், கோவர்த்தனகிரி, கோகுலம் மிகச் சிறந்த கிருஷ்ணத்தலங்களாகும். பேரியாழ்வார், ஆண்டாள் உட்பட 5 ஆழ்வார்களால் 50 பாடல்களில் மங்களாசாசனம் செய்யப்பட்ட ஊர் இது.

"செந்நாள் தோற்றித் திருமதுரையில்''
(முதல் திருமொழி – 10)

என்று பெரியாழ்வார் பாடியுள்ளார்.

திருக்குறுங்குடி

திருநெல்வேலி மாவட்த்திலுள்ள இத்திருத்தலம் நான்குநேரி என்ற ஊரிலிருந்து 25 கி.மீ. தொலைவில் உள்ளது. இத்தலம் பற்றி வராகபுராணம் மிக விரிவாகக் கூறுகின்றது. ஆழ்வார்களில் திருமங்கையாழ்வார் இத்தலத்தில் தான் பரமபதம் பெற்றார். பெரியாழ்வார், நம்மாழ்வார், திருமழிசை ஆழ்வார், திருமங்கை ஆழ்வார் போன்ற நான்கு ஆழ்வார்களால் 40 பாடல்களில் இவ்வூர்பற்றி பேசப்பட்டுள்ளது.

'மன்று குறுங்குடியாய்' (ஆறாம் திருமொழி பா – 71)

என்று பெரியாழ்வாரால் இவ்வூர் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஸ்ரீவில்லிபுத்தூர்

"மின்னனைய நுண்ணி டையார்
விரிகுழல்மேல் நுழைந்தவண்டு
இன்னிசைக்கும் வில்லிபுத்தூர்
இனிதர்ந்தாய் உன்னைக் கண்டார்'' (இரண்டாம் திருமொழிபா – 133)

என்று பெரியாழ்வாரால் காட்டப்பட்ட ஸ்ரீவில்லிபுத்தூர் விருதுநகர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. குற்றாலத்திற்கும் மதுரைக்கும் இடையே இராசபாளையத்திலிருந்து 10 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. வராக புராணத்தில் இவ்வூர் பற்றி பேசப்பட்டுள்ளது. லெட்சுமி தெவி ஆண்டாளாக அவதாரம் செய்த தலம் என்று பாராட்டப்படும் பாண்டிய நாட்டு 18 வைணவ திருப்பதிகளில் இரண்டு ஆழ்வார்கள் அவதாரம் செய்த தலம். பெரியாழ்வாரும் ஆண்டாளும் பாடிய ஊர்.

"சிலை ஒன்று இறுத்தாய்! திருவிக்கிரமா
திரு ஆயர்பாடிப்பிரானே (மூன்றாம் திருமொழி – 145)
"கற்றானிரைப்பின்பேவர்
நீயாய்ப்பாடிளங் கன்னிமார்க்கண(231)''

கண்ணனின் பால் பருவ நிகழ்வுகள் நடந்த இடமே ஆய்ப்பாடி(கோகுலம்) என்று எண்ணற்ற நூல்களில் கூறப்பட்டுள்ளன. இந்தக் கோகுலம் என்னும் ஆயர்பாடி டெல்லியிலிருந்து ஆக்ரா

செல்லும் பாதையில் மதுரா இரயில் நிலையயத்திலிருந்து 8 மைல் தூரத்தில் உள்ளது. பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கைஆழ்வார் ஆகிய மூவராலும் 22 பாடல்களில் பாடபப்பட்டுள்ளது.

திருமாலிருஞ்சோலை

திருமாலிருஞ்சோலை என்னும் அழகர்மலை மதுரைக்கு வடக்கே 12 மைல் தொலைவில் அமைந்துள்ளது. கிழக்கு மேற்காக 10 மையில் தூரமும் 1000 அடி உயரும் உள்ளது. பெரியாழ்வார் உள்ளிட்ட 6 ஆழ்வார்கள் 123 பாடல்களில் இவ்வூரைப் பாடியுள்ளனர். மதுரையில் நடைபெறும் மிகவும் முக்கியத் திருவிழாவான கள்ளழகர் ஆற்றில் இறங்கும் விழா, இவ்வூரில் குடி கொண்டுள்ள கள்ளழகருக்கே நடத்தப்படுகிறது.

"மாலிருஞ் சோலை எம்மாயற்கு அல்லால் (257)
சிலம் பார்க்க வந்துதெய்வ
மகளிர்கள் ஆடும் சீர்
சிலம்பாறு பாயும் தென்
திருமாலிருஞ்சோலை (338)

என்று பெரியாழ்வார் வியற்றுப் பாடியுள்ளார்.

அயோத்தி

அடிநிலை ஈந்தனைப் பாடிப்பற! ஆயோத்திக்கு
அரசனைப் பாடிப்பற (314–ஒன்பதாம் திருமொழி)

என்றுபெரியாழ்வாரால் பாடப்டும் அயோத்தி வட இந்தியாவில் உத்திரப்பிரதேச மாநிலத்தில் அமைந்துள்ளது. உத்திரப்பிரதேசத்திலுள்ள பைசலாபாத் எனப்படும் இரயில் நிலையத்திலிருந்து சுமார் மூன்று மைல் தூரத்தில் உள்ளது. இது இராமஜன்பூமி என்றழைக்கப்படுகிறது. இவ்வூர் நம்மாழ்வார், திருமங்கையாழ்வார் உள்பட 5 ஆழ்வார்கள் 13 பாடல்களில் பாடப்பட்டுள்ளது.

திருக்கண்டம்

அழகாவ சோலைகள் நிறைந்த கங்கைக் கரையில் அமைந்துள்ள இந்த ஊரில் ரிஷி கேசத்திலிருந்து பத்திரிநாத் செல்லும் வழியில் 45 வது மைலில் கடல் மட்டத்திலிருந்து 1700 அடி உயரத்தில் அமைந்துள்ளது. பெரியாழ்வாரால் 10 பாடல்களில் புகழப்பட்ட ஊர் இது.

'கங்கையின் கரைமேல் தொழ நின்றகண்டம் என்னும் கடிநகரே" (391)

என்று பாடியுள்ளார்.

திருப்பேர்

திருப்பேர்நகர் 'கோவிலடி' என்றும் அழைக்கப்படுகிறது. இவ்வூர் திருச்சியிலிருந்து 15 மைல் தொலைவில் உள்ளது. இவ்வூர் பற்றி பிரமாண்ட புராணம் சொல்லுகிறது.

"பின்னை மணாளனைப் பேரில் கிடந்தானை (ஐந்தாம் திருமொழி 162)

என்று திருப்பேர்த் தலத்லைப் பற்றி பேசியுள்ளார்

திருமாலுடைய குணங்களில் ஆழ்ந்தவர்களி ஆழ்வார்கள். இவர்கள் மக்களுக்குப் பரம் பொருள் பற்றியும் அப்பரம் பொருளை அடையும் வழி பற்றியும் கூறிய பாடல்களே நாலாயிரத்திவ்வியபிரபந்தமாகும். இப்பிரபந்தத்திலுள்ள பெரியாழ்வார் திருமொழியில் இடம் பெற்ற முக்கிய வைணவத் திரப்பதிகள் பற்றி செய்திகள் இக்கட்டுரையில் பேசப்பட்டுள்ளன.

114. அகநானூற்றில் சேரரின் ஊர்கள்

பா. வைடூரியம்மாள்
ஆய்வாளர்
ஸ்ரீபராசக்தி மகளிர் கல்லூரி
குற்றாலம்.

முன்னுரை

குறிப்பிட்டதொரு இடத்தை உணர்த்தியும் அந்த இடத்தைப் பிற இடத்தினின்று தனிப்படுத்தியும் மக்கட்கு அவ்விடம் பற்றிய உணர்வை அளிப்பன இடப்பெயர்கள். இடங்கள் பெயர் பெற்ற விதம் பல எனினும் இவற்றுள் மக்கள் வாழும் பகுதிகள் ஊர், பாடி, சேரி என்ற பல பெயர்களாலும், இப்பல பகுதிகளின் இணைப்பு, நகர், நாடு என்ற பெயர்களாலும் சுட்டப்பட்டுள்ளன. "ஆதி மனிதன் ஒரே இடத்தில் கூட்டமாக வாழ்ந்தபோது இப்பெயர் தோற்றம் பெற்றிருக்க வாய்ப்பில்லை என்று இடம்விட்டு பெயரத் தொடங்கினானோ அப்போதே இடப் பெயர் தோற்றம் பெற்றது". இப்பெயர்கள் மக்களுக்கு ஏற்ப வாழும் நிலங்கட்கு ஏற்ப சூழலுக்கு ஏற்ப சிந்தனைக்கு ஏற்ப வேறுபடுகின்றன.

பண்டைத் தமிழரின் இவ்வரலாற்றையுணர்ந்து கொள்ள மிகுதியான மூலங்கள் இல்லை. எனவே ஊர்ப்பெயரினையும் அறிந்து கொள்ள இயலவில்லை. எனினும் தொல்காப்பியம், சங்க இலக்கியம் பதினெண்கீழ்க்கணக்கு, சிலப்பதிகாரம், மணிமேகலை போன்றவை இவற்றை ஓரளவு தெளிவுபடுத்துகின்றன. இவற்றில் சங்க இலக்கியங்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டில் அகத்திணைப் பாடல்களே மிகுதி. அகத்திணைப் பாடல்களைக் கொண்ட இலக்கியத்தில் அகநானூறு சிறப்பிடம் பெறுகிறது. இது பதின்மூன்றடிச் சிறுமையும், முப்பத்தோரடிப் பெருமையும் உடைய பாடல்களைக் கொண்டது. இந்நூலில் மிகுதியான ஊர்ப்பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றில் சேரர் ஆண்ட பகுதிகளின் ஊர்ச்சிறப்பு மட்டும் இக்கட்டுரையில் எடுத்தியம்பப்பட்டுள்ளது.

சேரர்களின் சிறப்பு

சங்க காலத் தமிழகத்தை ஆண்டவர்களில் காலத்தால் முந்தியவர்கள் சேரர்கள். புறநானூறு, அகநானூறு, நற்றிணை, பதிற்றுப்பத்து ஆகிய சங்க கால நூல்கள் சேரர்களைப் பற்றி அறிய உதவுகின்றன. சிலப்பதிகாரத்திலுள்ள வஞ்சிக் காண்டமும் சேர மன்னர்களைப் பற்றிய செய்திகளைத் தருகிறது. சேர நாடு, மேற்கு கடற்கரையில் வடக்கில் கொங்கணத்திலிருந்து தெற்கில் கொல்லம் வரையில் பரவியிருந்தது. முசிறியும் தொண்டியும் சேரர் காலத்தில் சிறந்த துறைமுகப்பட்டினங்களாக விளங்கின. இச்சிறப்புகள் அகநானூற்றில் பேசப்பட்டுள்ளன. அகநானூற்றில்,

- முசிறி
- தொண்டி
- ஆமூர்
- கழாஅர்
- கருவூர்
- பூழிநாடு
- கொல்லி மலை
- மரந்தை
- அழும்பில்
- சேரரின் ஊர்களின் சிறப்புக்கள் பேசப்பட்டுள்ளன.

முசிறி

முசிரி, முசுறி என்றெல்லாம் இவ்வூரினை இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. சேர அரசரது சுள்ளி என்னும் பழைய பெயர் கொண்ட பேரியாறு கடலுடன் கலக்குமிடத்து அமைந்திருந்ததாகக் கூறப்படும் ஓர் ஊராகும். சேர நாட்டின் சிறந்த துறைமுகப்பட்டினமாகவும் விளங்கியிருக்கிறது. எகிப்து, கிரேக்க நாட்டினரான யவனர்கள் மரக்கலங்களில் வந்து பொன்னை, விலையாகக் கொடுத்து மிளகை ஏற்றிச் செல்லும் வணிகத்தைச் செய்து வந்துள்ளனர். இவ்வூர்ப் பெயரினை "முசிறி" என்றும் வழங்குவர் என்பதை 'முழங்கு கடல் முழவின் முசுறியன்ன' (புறம் 343:10) என்னும் புறநானூற்றுத் தொடர் கொண்டு அறியலாம். முரசீபத்தனம் என்பது மேல் கடற்கரையிலுள்ள முசுரி என்னும் பட்டினமாகக் கருதப்படுகிறது என்பது

மு. இராகவையங்கார் கருத்தாகும். எனவே முசிறி சேரர்களின் சிறந்த துறைமுகப்பட்டினமாக அமைந்திருக்கிறது என்பது உறுதியாகிறது.

தொண்டி

மலைநாட்டு நகர்களுள் ஒன்று. கடற்கரை நகர். இவ்வூர் சேரர்க்கு உரியது என்பதைச் 'செங்கோற் குட்டுவன் தொண்டியன்ன' (ஐங்.178) என்னும் ஐங்குறுநூற்றுச் செய்யுள் பகுதியால் அறியலாம். இதைத்தான் அகநானூறும் குறிப்பிடுகிறது.

ஆமூர்

வானத்திடத்து இடி முழங்கும் உயர்ந்த உச்சியை உடையதும் மணங்கமழும் மலைச் சாரலை உடையதுமாகிய குறும்பொறை என்னும் மலைக்குக் கிழக்கே உள்ளது ஆமூர். இது சிறந்த நிறம் தீட்டப்பெற்ற பெரிய மதில்களையும் சிறிது எல்லைபோய் நின்று காண்பார்க்கும் புகழான உயர்வாக விளங்கும் சிறப்பினை உடையது சேர மன்னர்க்குரியது.

பெண்ணையாற்று வளம் பெருகிய திருமுனைப்பாடி நாட்டுள் உள்ள ஊர்களுள் ஒன்று ஆமூர் என்பது என்று பெரியபுராணம் காட்டுகிறது. இவ்வூர் திருநாவுக்கரசர் பிறந்த சிறப்பினையுடையது. பண்டு தொட்டே இருந்து வந்த இவ்வூர் இடைக்காலத்தில் சைவ சமயம் மலர்ச்சி பெற்றதொரு ஊராகவும் இருந்தது என்பது தெரிய வருகிறது.

கழாஅர்

கழாஅர் எனவும் வழங்கப்படுகிறது. காவிரிக் கரையில் உள்ள ஒரு துறையின் பெயராகும். இத்துறை உறையூருக்குக் கிழக்கேயிருந்தது. இங்கு நீராடிய போது தான் ஆட்டனத்தி என்பவனைக் காவிரி நீர்ப்பெருக்கு இழுத்துக் கொண்டு சென்றது என்பது வரலாறு. அகநானூற்றில் இவ்வூர் பாகனால் பழக்கப்படுத்தப்படாத யானையானது காவலையுடைய நீரில் இறங்கி விளையாடும் தன்மையுடையதும் அதனால் அலைபாய்ந்து மேலெழுந்த மிகுந்த நீர் மோதிய மருத மரங்கள் உயர்ந்து வளர்ந்த தோட்டத்தினையும், தழைந்த கதிர்கள் கொண்ட வயல்களையும் உடையது கழாஅர் என்னும் ஊர் என்று சிறப்பிக்கப்படுகிறது.

கருவூர்

"கருவூர்" எனச் சுட்டப்படும் இவ்வூர் திருச்சி மாவட்டத்தில் உள்ளது. எறிபத்தர், புகழ்ச்சோழர், கருவூர்த் தேவரின் பிறப்பிடமாய் அமைகிறது. இக்கருவூர் ஞானசம்பந்தர் பாடல் பெற்ற தலம் சோழர்கள் முடிசூட்டிக் கொள்ளும் ஐந்து தலங்கள் ஒன்றாக இது திகழ்ந்திருக்கிறது. இக்கருவூர் அரசியல் நிலையிலும் முக்கியத்துவம் பெற்றிருந்தது எனத் தெரிகிறது. 'கற்பம் தோறும் தவம் செய்த பிரமன் படைப்புத் தொழில் செய்யக் கரு உற்பத்தி செய்த இடம் ஆதலின் ஊர் கருவூர் எனப்பெயர் பெற்றிருக்கிறது என்பர்' அறிஞர் ஒருவர்.

பூழிநாடு

செந்தமிழ் நாட்டைச் சேர்ந்த பன்னிரெண்டு நாட்டில் ஒன்று. இதனைக் கொடுந்தமிழ் நாடென்று இலக்கண உரையாசிரியர்கள் கூறுவர். இது சேரநாட்டின் ஒரு பகுதியாக அகத்தில் குறிப்பிடப்படுகிறது.

கொல்லி மலை

இம்மலை வல்வில் ஓரிக்கு உரியது. அவ்வோரியைப் போரில் வென்ற காரி அம்மலையைச் சேரனுக்குக் கொடுத்ததினால் அ∴து சேரனுக்கு உரியதாயிற்று. தமிழ்நாட்டில் சேலம் மாவட்டத்தில் நாமக்கல், ஆத்தூர் தாலுக்காக்களிலுள்ள குன்றுத் தொடர் பதினேழுகல் நீளமுடையது. இடையிடையே ஆழமான பள்ளத் தாக்குகள் இருக்கின்றன. இங்கே 'கொல்லிமலையர்' என்ற மலைச்சாதியினர் வாழ்கின்றனர். கொல்லிமலை தேனுக்குப் பெயர் பெற்ற இடம் என்று சங்கப் பாடல்கள் கூறுகின்றன.

மரந்தை

சேற்றிலுள்ள அழகிய துளையையுடைய வள்ளைக் கொடி பின்னுமாறும், வளைந்த நெற்கதிர் விரியுமாறும் இறால் மீன் பாய்ந்து திரிதற்கு இடனான அழகிய வளைந்த பிடரியினைக் கொண்ட குதிரையுயையுடைய குட்டுவனது ஊர் மரந்தையாகும் என்று இவ்வூர் சிறப்பிக்கப்படுகிறது.

அழும்பில்

தலைவிக்கு உவமை கூறும்போது பல்வகை வளங்களும் நிறைந்த ஒரு நகரத்தை உவமைப்படுத்துவது சங்கப்புலவர் இயல்புகளுள் ஒன்று அகத்தில் குடவாயில் கீரத்தனார் தமது ஊரினைத் தலைவிக்கு உவமையாக்கியுள்ளார். குடவாயிலின் வளத்திற்கு அழும்பில் என்னும் ஊரின் யாணரை உவமை காட்டியுள்ளார். அழும்பில் என்னுமூர் மானவிறல்வேள் என்னும் குறுநில மன்னனுக்குரிய வளமான நகரம் என்பதனை மதுரைக் காஞ்சியால் அறியலாம். இது பாண்டி நாட்டிலுள்ளதென அறிஞர் கருதுவர். அங்ஙனமாயின் ஆசிரியர் இப்பாடலில் சேர, சோழ, பாண்டிய நாடுகளின் ஒவ்வோரூரினைக் குறிப்பிட்டுள்ளார் எனக் கருதலாம். சேரன் செங்குட்டுவன் அமைச்சர்களுள் ஒருவன் அழும்பில் வேள் என்ற சிலப்பதிகாரம் கூறுவது நினைக்கத்தக்கது. எனவே இது சேர நாட்டின் ஒரு பகுதியே என்பது குறிப்பிடத்தக்கது.

முடிவுரை

இடப்பெயர்கள் மூலம் அக்கால மக்களின் வாழ்க்கை முறைகளை அறிந்து கொள்ள இயலுகிறது. இடப்பெயர்கள் மன்னர் பலரின் வரலாறு -களையும் சிறப்புக்களையும் தெளிவுபடுத்துகின்றன. பழங்கால மக்களின் மொழியியல் சிந்தனையை, மொழி வளர்ச்சியை இடப்பெயர்கள் உணர்த்தி நிற்கின்றன.

115. சங்க இலக்கியத்தில் ஊர்ப் பெயர்கள்

க.ஜமுனாதேவி,
ஆய்வு மாணவர்,
இராணிமேரி கல்லூரி,
சென்னை – 41

முன்னுரை

மனிதன் நிலையாகக்கூடி வாழும் இடமே ஊர் என்று பொதுவாக அழைக்கப்படுகிறது. ஒருவன் சிறப்பாக வாழ்ந்தாலே அந்த மாமனிதன் பிறந்த இடத்தை புண்ணியத் தலமாக கருதுகின்றனர். இறைவன், மனிதன் வாழும் தலமே புண்ணியத்தலமாக வணங்கி போற்றப்படுகிறது. நீர்நிலை, தாவரங்கள், விலங்குகள், பறவைகள், கோவில்கள் ஆகியவற்றின் சிறப்பைக் கருதியும் ஊர்களுக்கு சிறப்புப் பெயர்கள் வைத்து போற்றி அழைக்கப்படுகிறது என்பது கண்கூடு.

தொடக்கக் காலத்தில் மனிதன் மலைகளிலும், காடுகளிலும், குகைகளிலும் நாடோடியாகவே வாழ்ந்துள்ளான். பிறகு காடு வெட்டி நாடு ஆக்கியப் பிறகு, அதாவது மருதநிலம் வகுக்கப்பட்டப்பிறகு அங்கேயே குடில் அமைத்து வாழ்ந்தான். அந்த நிலைத்த இடமே, ஊர் ஆனது. முதலில் மருதப் பகுதியே ஊர் எனப்பட்டுள்ளது. குமரிக் கண்டத்தின் தொடக்கமே உலகில் மெல்ல மெல்ல மனிதன் பரந்து ஆங்காங்கே நிலைத்து வாழும் பகுதியே ஊர் ஆனது. மக்களின் நாகரிக வளர்ச்சியே மண்ணின் மணம் பேசுதாகியது. அந்நிலத்தின் வளம், சூழல் ஆகியவைகள் மனவுணர்களுக்கு வேறுபட்ட வித்தாய் அமைந்தது எனில் அது மிகையில்லை.

வரலாற்று அடிப்படையில் உறுப்பான ஊர்ப்பெயர் மற்றையதைப் போல எளிதில் மாறுவதில்லை. அவ்வாறு மாறினால் அது வளர்ச்சி/வீழ்ச்சி எனலாம். மக்கள் வாழும் இடமே, ஐந்திணை ஆனது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை யாவுமே இடம் சார்ந்த ஊர்களாகும். அம்மக்களின் வாழ்க்கை முறை, உண்ணும் உணவு, ஆட்டம் பாட்டம் இசைக்கும் இசை, யாவற்றிலும் ஊரும் நாடும் அதன் பெயர்களும், அம்மக்களின் பெயர்களும் வாழும் மண்ணை அடிப்படையாகக் கொண்டதே. சங்க இலக்கியங்களில் ஊர், பாடி, சேரி கரை வாக்கம் என்றெல்லாம் அழைக்கப்பட்டுள்ளது. அவற்றை இன்றும் காணலாம். திருவான்மியூர், பாடி, அமிந்தகரை, கொட்டிவாக்கம், பாலவாக்கம், பட்டினப்பாக்கம் .... இன்றும் பல ஊர்கள் உள்ளன. மனிதன் நீர்நிலைகளின் அருகிலே இருந்துள்ளான். அப்பகுதி செழிப்புடன், மீன், இறைச்சிகள்,காய், கனிகள் என யாவும் கிடைக்கப் பெறுவதாகவே இருந்துள்ளன.

அழுந்தூர்

"கடுந்தேர் திதியன் அழுந்தை" (அகம்.196) நோழநாட்டைச் சேர்ந்த இத்தேரழுந்தூர் என்றதே சங்ககால இலக்கியங்கள் சுட்டும் அழுந்தூர், அழுந்தையா என்பது ஆய்வுக்கு குரியதாகிறது.

"தொய்யா அழுந்தூர் ஆர்ப்பினும் பெரிதே" (அனம்.246)

ஆக்கூர்

இன்றும் ஆக்கூர் என்று வழங்குப்படுகிறது. இத்தலம் தஞ்சாவூர் மாவட்டத்தைச் சார்ந்தது.

இந்தளம்

இந்தளம் என்ற ஊர் தாவரத்தைக் குறிக்கும் பெயராகும்.

இடைமருதூர்

இடைமருதூர் என்பது ஊர்ப்பெயராகும். இன்று மருதூர் என்று அழைக்கப்படுகிறது.

ஈக்காடு

ஈக்காட்டுத்தாங்கல் என்ற ஊர் உண்டு. பண்டைக் காலங்களிலும் இன்றும் கூட மக்கள் வாழும் பகுதியைக்காடு என அழைப்பதுண்டு.

ஈங்கோய்

முட்டுக்காடு (இன்று), ஈக்காட்டுத்தாங்கள். இது தாவரத்தின் பெயரையும் இயற்கை அமைப்பால் ஆனது.

உடுப்பூர்

உடுப்பூர் என்ற ஊர் இருந்துள்ளது. இதன் பெயரிலேயே இறுதியில் ஊர் என முடிவதைக் காணலாம்.

உறையூர்

உறையூர் என்பது பழங்கால ஊர் என்பதையும் அறிவோம்.

ஊற்றத்தூர்

இதன் இறுதியல் ஊர்ப் பெயர் கொண்டிருப்பதைக் காணலாம்.

எருக்கு

"எருக்கு" என்ற ஊர் தாவரத்தின் சிறப்புக்காரணமாகக் கூறப்பட்டுள்ளது. எருக்கக்காடு இருந்ததால் அப்பெயர் சிறப்புக்கருதி பெற்றுள்ளது.

எவ்வுளூர்

எவ்வுளூர் என்பதும் ஊர்ப்பெயராகும்.

எயில்

எயில் என்ற ஊர் சங்ககாலத்தில் இருந்துள்ளது.

ஏமப்பேரூர்

ஏமப்பேரூர் என்பதில் ஊர் இறுதில் இடம் பெற்றுள்ளது.

ஐயங்கார்குளம்

ஐயங்கார் குளம் என்ற ஒரு ஊர் உண்டு. இன்றும் இப்பெயராலேயே திருவண்ணாமலை பகுதியான செய்யாறைச் சுற்றியுள்ள கிராமங்கள் ஒரு ஊர் உள்ளது. குளத்தின் சிறப்பால் இது இவ்வாறு அழைக்கப்படுகிறது.

ஒற்றியூர்

ஒற்றியூர் என்பது ஊர்ப் பெயரிலேயே முடியும் ஊராகும்.

ஓமந்தூர்

ஓமந்தூர் என்ற பகுதியில் ஊர் என வந்துள்ளதை நோக்கலாம். இது இன்று உண்டு. சங்க காலத்தில் கச்சூர், கஞ்சநூர், கஞ்சாவூர், கடவூர், காரூர், கானூர், குண்டையூர், குருகாவூர், கூடலூர், கொட்டையூர், கொடும்பாளூர் செங்குன்றூர், சேய்ஞலூர், சேலூர், என்ற ஊர்களெல்லாம் இருந்துள்ளது.

இலக்கியங்கள் காட்டும் ஊர்ப்பெயர்கள்

இரண்டாயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு முன் ஆண்ட அதியமான் நெடுமான் அஞ்சி வாழ்ந்த ஊரே தகடூர் என்பதாகும். புறநானூற்றிலும் இக்குறிப்பினைக் காணலாம். பதிற்றுப்பத்தின் பாடலைக் கீழேக் காண்போம்.

"வெல்போ ராடவர் மறம்புரிந்து காக்கும்
வில்பயி லிறும்பில் தகடூர் நூறி" (பதிபத்.78)

கருவூர், உறையூர், மதுரை போல தகடூரும் இன்று வரை ஏதேனும் ஒரு வகையில் தலைநகர் என்ற பெருமையோடு இருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது. தகட்டூர் என்பது தகடு என்ற பொருளைத்தருவதாகும்.

"தகட்டு" (நற்றிணை–52), "பொன்" (கலித்தொகை–94) "பூவின் புறவிதம்" என்ற சொல் (புறம் –202) (முருகு –27) (அகம் –215) ஆகிய சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை நோக்கலாம். தட்டையான நிலமே தகட்டு தகட்டூர், தகடு எனப்பெயர் பெற்றிருக்கலாம். பூவின் புறஇதழ் பூவினை பாதுகாப்பதுபோல மதில்களால் ஊர் காக்கப்படுவதால் அதியமான் தன்னூர்க்கு தகட்டூர் எனப்பெயர் சூட்டியிருக்கலாம் என்பதும் மேலும் மேட்டுக்குக்கீழ் தட்டையான நிலப்பரப்பாக இருக்கலாம்.

வளமான முல்லை நிலப்பகுதி கோடைக்காலங்களில் பெருவறட்சியால் பாலை நில அமைப்பாக வருவதால் இப்பாலை நிலக்காடுகள் சுரம் என ஆனது.

"என்றூழ் நின்ற புன்றலை வைப்பு" (அகம் –27)

இது வெம்மை நிறைந்த புல்லிய இடமே ஊராகக் குறிப்பிடப்பட்டுள்ளது. சுரத்தில் உள்ள ஊர்களே, "சுரத்தூர்" எனக்காரணப் பெயர்ப்பெற்றது.

முட்டம்

முட்டம் என்பது சங்க காலத்து ஊர்ப்பெயராகும்.

"ஒடுங்கில் குட்டத்தருஞ்சுழி வழங்கும்
கொடுந்தாள் முதலையும் இடங்கருங் கராமும்
நூழிலு மிழுக்கரு மூழடி முட்டமும்" (குறிஞ்சி 256–8)

முட்டம் என்ற ஊர் அமைவிடங்கள் பெரும்பாலும் ஆறு, கடல், மலை, மேடு, காடு போன்ற இயற்கையை ஒட்டிய வளமானப் பகுதியாகும். முட்டுக்காடு (இன்றும் உண்டு), முட்டத்தூர், முட்டறாம்பட்டு, குரங்கணில், திருமுட்டம் ஆகியவற்றை குறிப்பிடுதல்.

பட்டினம்

முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும் (பட்டினப்பாலை –218) இதில் முட்டம் என்பதும் பட்டினம் என்பதும் நோக்குக.

ஆமையூர்

ஆற்றங்கரையில் தோன்றிய பண்டைய ஊரே பாலாற்றின் தென்கரையில் அமைந்த ஆம்பூர் ஆகும். இது ஆமையூர் என்று பழைய காலத்தில் அழைக்கப்பட்டுள்ளது. பாலாற்று அன்று தூய்மையாகவும் சிறப்பாக உள்ளதால் அங்கு அமைந்த ஊரே ஆமையூராகும். பெங்களூரின் பெருவழியில் வேலூருக்கு மேற்கே ஐம்பது கி.மீ தொலைவில் இன்று உள்ளது. நீர் நிறைந்த பகுதியில் ஆமைகள் நிறைந்திருக்கும் அதனால் இது வளமானப் பகுதியாகும்.

ஆமைக்கறி, ஆமை முட்டை போன்றவற்றை சங்கத்தமிழர் உண்டுள்ளனர். பழந்தமிழர் ஆமைப்புழுக்கையும், ஆமை முட்டைப் பொறியலையும் விரும்பி உண்டுள்ளனர் என்பதை பட்டினப்பாலை காட்டுகிறது.

"வயலாமை புழுக்குண்டும்" (ப.பாலை–62)
"யாமை புழுக்கிற் காமம் வீடவரா" (புறம் 212)

புகார்

புகார் என்பது பழமையானப்பெயர். இது சோழநாட்டின் துறைமுகமாகவும், தலைநகராகவும் விளங்கியுள்ளது. "பொவுறு சிறப்பின் புகாரே" (சிலம்பு–16) பொதுமையின்றி தனிச்சிறப்புடைய புகார் எனப்போற்றப்பட்டுள்ளது.

"நீள் புகழ்மன்னும் புகார்நகர்" (சிலம்பு –20)
"பூவிரி படப்பைப் புகார்" (சிலம்பு –32)

புகார் என்பது காவிரிப்பூம்பட்டினம் ஆகும். "புத்தே ளுலகம் புகாஅர்" (மணி–118). இவை நீர் நிறைந்தச் செழிப்பான ஊராகும்.

காவிரிப்பூம்பட்டினம்

தமிழரின் பழம்பெருமை துூறும் பட்டினம் காவிரிப்பூம்பட்டினம் ஆகும். இது காவிரிக் கரையோரப்பகுதியாகும். மேலும் "கா" என்பது பல பூக்கள் நிறைந்த சோலையைக் குறிப்பதாகும். இந்தக் காரணங்களால் காவிரிப்பூம்பட்டினம் எனப்பெயர் பெற்றிருக்கலாம். சோழர் தலைநகரங்களின் சிறந்தவைகளாக காவிரிப்பூட்டினமும் உறையூரும் என்பதை தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன. பரணரின் அகநானூற்றுப்பாடல்,

மகர நெற்றி வான் தோய் புரிசைச்
சிகரந் தோன்றாச் சேணுயர் நல்லில்
புகார்அர் நன்னாடு" (அகம் – 181)

காவிரி ஆறு கடலில் கூடுமாதலால் பூம்புகார் என்றும் புகார் என்றும் அழைக்கப்பட்டுள்ளது.

"தேறுநீர்ப் புணரியொரு யாறுதலை மணக்கும்
மலியோதத்து ஒலிகூடல்" (பட்டினப்பாலை – 97–98)

தலைச்சங்காடு

சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் அடைக்கலக்காதையில் மாடலன் பற்றிக்குறிப்பிடுகையில் தலைச்செங்கானத்து என்று குறிப்பிடுகின்றார். இது கல்வெட்டில் தலைச்செங்காடு என்று! வழக்கில் தலைச்சங்காடு என நீடிக்கிறது.

"தாழ்நீர் வேலித் தலைச் செங்கானத்து
நான் மறை முற்றிய நலம்புரிக் கொள்கை
மாமறை முதல்வன் மாடலன் என்போன்" (சிலம்பு – அடைக்லக்காதை.ப.398)

எர்ணவாக்கம்

இது இகணைப்பாக்கம் எனவும் அழைக்கப்படுகிறது. இது திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி வட்டத்தில் உள்ள மிகப்பழமையான ஊராகும். மேற்கில் சிறு குன்றுத் தொடர்களும் தெற்கில் குறல்தலை

ஆறும், வடக்கில் ஆரணி ஆறும் அணி செய்யும் ஊர், வற்றாத ஊற்று நீர்ப்பெருக்கம் மிகுந்து வளம் கண்றிகைப்பேற் நாட்டின் ஊர்களுள் ஒன்றானது இகணைப்பாக்கம். இது கண்றிகைப்பேடு என்றும் எர்ணவர்க்கம் எனவும் அழைக்கப்படுகிறது.

தீலதைப்பதி

தஞ்சாவூர் மாவட்டத்தைச் சார்ந்த இவ்வூர் இன்று திலதர்ப்பணபுரி என்றும் மதிமுத்தம் எனவும் வழங்கப்படுகிறது. ஞானசம்பந்தார் இங்குள்ள சிறப்புப்பெற்ற கோயிலைபாடியுள்ளார்.

திலதைப்பதி இது இயற்கை செழிப்புள்ள பகுதியாகவும் மரவகையால் பெயர்பெற்ற பகுதியாகவோ அதாவது "திலகம்", "திலதம்" என்ற இரண்டு சொற்களாலும் குறிக்கப்பட்ட மஞ்சாடி மரத்தைப்பற்றியது என்று தெளிவாகிறது.

கலித்தொகையிலும், சிலம்பிலும் இவ்வூர் பற்றிய குறிப்பு உண்டு.

"தெரிமுத்தம் சேர்ந்த திலகம்" (கலித்தொகை – 92)
"மரவமும் நாகமும் திலகமும் மருதமும்" – சிலம்பு (13–152)

நெல்வேலி

திருநெல்வேலி என்பது தற்பொழுது திருநெல்வேலி மாவட்டத்தின் தலைநகராகவும் அமைகிறது. இது பாண்டிய நாட்டைச் சார்ந்ததாக இருந்துள்ளது.

"சீர் சான்ற உயர் – நெல்லின்
ஊர் கொண்ட உயர் கொற்றவ" – மதுரைக்காஞ்சிப்பாடல் (87–88)

சாலி

சாலி என்பது சங்க காலத்தில் சிறப்பான நெல்வகையாகக் கருதப்பட்டுள்ளது.

"கருந்தெற்று மூடையின் இடம் கெடக்கிடக்கும்
சாலி நெல்லின் சிறை கொள் வேலி
ஆயிரம் விளையுட்டு ஆக
காவிரி புரக்கும் நாடு கிழவோனே" (பொறுநர்: ஆற்று 242–48)

வில்வேலி கடற்றானையை நெல்வேலி செருவென்ற பெருவீரன் எனச்சிறப்பிக்கிறது என்ற எண்ணத்தையும் காண்கின்றோம் (பொருநைநாடு ப.63)

சங்ககாலத்து ஊர்ப்பெயர்களுள் சில

சங்க காலத்தில் "ஊர்" என்றே பொதுவாக அனைத்து ஊர்களையும் அழைத்துள்ளனர். 120 இடங்களில் "ஊர்" என்றப் பகுதிகள் சங்க இலக்கியத்தில் உள்ளன. 29–குடி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மற்றவை பொதுவாக அழைக்கப்படுகின்றன. அவைகள், துறை, மங்கலம், பள்ளி, சுரம், காடு, பாடி, வாயில், குன்றம், புரம், ஆறு, நகர், மலை, இல், இலி, கரை, கா, களம், தானம், எயில், குழி, சேரி, பட்டினம், பதி, வனம், அகம், அனை, அறல், குன்று, கூடல், கோட்டம், கோடு, கோயில், சுழி, தாள், திட்டை, நகரம், நியமம், நிலம், பாக்கம்,பாலை, பூளை, பூண்டி, பொழில், பேர், மாகாளம், மிழலை, முட்டம், முடி, விளை, வாய், வேலி, ஆச்சிராமம், பாழி மேலும் பல உள்ளன.

தற்காலத்தில் பாக்கம், பாலவாக்கம், கொட்டிவாக்கம், பட்டினைப்பாக்கம், காவிரிப்பாக்கம் கோவளம் உள்ளதை நோக்கலாம். சங்க இலக்கியம் சூட்டும் பொதுக்கூறுகளாக, அமைவனவற்றுள் அகம், ஆறு, இல், ஊர், காடு, குடி, குன்றம், குன்று, கூடல், கூற்றம், கோட்டம், கோடு, சேரி, துறை, மலை, முற்றம், வாய், வாயில், ஆகியவைகளை இன்றும் காண்கிறோம்.

ஊர்ப்பெயர் அமைப்பு முறையும் தோற்ற காரணியும்:

இயற்கை அமைப்பும் தாவரம்

அரசு, அரதை, அரிசில், ஆர், ஆல், மருது, இந்தளம், ஈங்கோய், எருக்கு, காஞ்சி, கடம்பு, கரும்பு, காரை, சண்பை, குருந்து, குன்றி, கொட்டை, கொடி, கோள், சந்தனம், சோறு, தினை, திலதை, தென்னை, நாவல், நெல், பயறு, பழு, பனை, பாதிரி, புளி, புல், புங்கு, புன்னை, பூ, முல்லை, வஞ்சி, வீழி, வேல்.

நீர்நிலையில் ஊர்ப்பெயர்கள்

ஊற்று, கூடல், கூடலையாறு, துறை, ஆறு, நீர், கடுவாய்க்கரை.

விலங்கின ஊர்ப்பெயர்கள்

ஆமா, ஆனை, உடும்பு, குரங்கு, பறவைப் பெயரால் அமைந்த ஊர்ப்பெயர்கள்.

பறவைப் பெயரால் அமைந்த ஊர்ப்பெயர்கள்

கழுகு, நாரை, புள், மயில்

கோயில்

அகத்தீச்சுரம், மேச்சுரம், திருவாவடுதுறை, காளையார்கோயில்.

ஊர் என்று முடியும் ஊர்ப்பெயர்கள்

நாவாளூர், கானத்தூர், குன்றத்தூர் (இன்றும்) அரிசிற்கரை புத்தூர், அவளி வணல்லூர், அழுந்தூர், அளப்பூர், அரகண்ட நல்லூர், அன்னியூர், ஆக்கூர், ஆதனூர், ஆப்பனூர், ஆமாத்தூர், ஆரூர், இடை மருதூர், இந்தளூர், இலம்பையங்கோட்டூர், உடுப்பூர், ஊற்றத்தூர், எவ்வுளூர், ஏமப்பேறூர், ஒற்றியூர், ஒத்தூர், கச்சூர், கஞ்சனூர், கஞ்சாறூர், கடவூர், காரூர், கானூர், குண்டையூர், குருகாவூர், குன்றியூர், கூடலூர், கூரூர், கொட்டையூர், கொடும்பாளூர், கோட்டியூர், கோட்டூர், கோவலூர், சண்டியூர், சாந்தம்புத்தூர், செங்குன்றூர், சேய்ஞலூர், சேலூர், சேற்றூர் ருவான்மியூர், திருவான்மியூர் (இன்று).

குடி

இளையான்குடி, கடையக்குடி, குருந்தங்குடி, சாத்தங்குடி, சிறுகுடி, நல்லக்குடி, நீலக்குடி, புளிங்குடி, மாகுடி, விற்குடி, வேதிகுடி.

துறை

திருவாவடுதுறை, கடம்பந்துறை, குரங்காடுதுறை, சோற்றுத்துறை, தவத்துறை.

பள்ளி

அகத்தியான் பள்ளி, அரன்பள்ளி, காட்டுப்பள்ளி, சக்கரப்பள்ளி.

மங்கலம்

மங்கை என்று அழைக்கப்பட்டதே மங்கலம் என்று அழைக்கப்படுகிறது. அதியரைய மங்கை, உத்தரகோச மங்கை, கணமங்கலம், சங்க மங்கை, விசய மங்கை,

சுரம்

சுரம் என்பது காட்டுப்பகுதியைக் குறிப்பதாகும். அக்கீச்சுரம், அகத்தீச்சுரம், அயனீச்சுரம், இடைச்சுரம், ஆலங்காடு.

பாடி

முல்லை சார்ந்தப் பகுதி பாடி. ஆடிப்பாடி, ஆய்ப்பாடி, நந்நம்பாடி, மழபாடி, மாறன்பாடி.

வாயில்

வாயிலாக இருந்த இடமே வாயில் என்ற ஊர்ப்பெயரானது. குடவாயில், நெடுவாயில், நெய்தல் வாயில், நெல்வாயில், புன்னைவாயில், முல்லைவாயில்.

புரம்

சிவபுரம், கோபுரம், தருமபுரம், யாம்புரம், வலம்புரம்.

குன்றம்

கழுக்குன்றம், கொடுங்குன்றம், நற்குன்றம், நெற்குன்றம். மலை என்பதைக் கொண்டு, நீர்மலை, ஈங்கோய்மலை, எறும்பியூர் மலை ஆகும்.

களம்

களம் என்பது இடம். போர்க்களம், தோட்டம் என்பதாயும் கொள்ளலாம். நெடுங்களம், குழிக்களம், வஞ்சைக்களம், வேட்களம்.

நகர்

திணைநகர், பாம்பணி மாநகர், பேர்நகர், விளநகர்.

ஆறு

ஆற்றின் அருகில் இருக்கும் ஊர்கள். ஐயாறு, கோட்டாறு, தென்னாறு, நள்ளாறு.

கா

சோலைப்பகுதியையும் அதனை ஒட்டியப் பகுதியையும் குறிப்பதாகும். ஆனைக்கா, குரங்குக்கா, கோடிகா, கோலக்கா, நெல்லிக்கா.

தானம்

தானம் என்பதற்கு இடம் என்பது பொருளாகும். கடித்தானம், நெய்த்தானம் என்னும் ஊர்ப்பெயர்கள்.

இலி

அரசிலி, கருவிலி, கோளிலி. இங்கு இறையிருப்பிடத்தைக் குறிக்கிறது.

பட்டினம்: நெய்தல் நிலத்திற்கு அருகில் குடியிருக்கும் பகுதியே பட்டினம். காவிரிப்பூம்பட்டினம்.

இல்: அன்பில், கள்ளில் என்பது இல் குடியிருக்கும் பகுதி.

பதி: திலதைப்பதி என்ற இடம்.

குழி: குழிந்தப் பகுதியான இடம். புட்குழி, மாணிகுழி.

எயில்: மதில்களைக் கொண்டுள்ள பகுதி எயில் என்பதாகும். காரெயில், பேரெயில்.

சேரி: குடியிருப்புப்பகுதி மணஞ்சேரி தெளிச்சேரி

நிலம்: இடம் என்ற பொருளில் வருவது நன்னிலம்.

பூண்டி: பூண்டி என்பது முருகன் குடிக்கொண்ட ஊர்.

வேலி: காவலைக் குறிப்பதாகும். வேலியாக நெல்லையுடையதால் திருநெல்வேலி என்றாயிற்று.
பூளை: தாவரப்பெயரால் அமைந்தது. பூளைச் செடியால் பெயர் அமைந்த ஊர் இரும்பூளை, இரும்புதலை.

முடி: கடைமுடி என்ற பெயரில் அமைந்தபகுதி. கோடி இடம் என்ற பொருள் தருவது. "பாண்டிக் கொடுமுடி"

மிழலை: மிழலைக் கூற்றம்பற்றிய உணர்வு என சங்க இலக்கியத்தில் உண்டு. இதன் பொருள் விளங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. வீழி மிழலை.

நியமம்: பாதி என்பது நியமம் என்ற ஊர்ப்பெயரில் அமையும். கோயில் என்பது நியமமாகும். சங்க இலக்கியத்தில் நகரம் அல்லது இடம் என்பது நியமம் என்ற பொருளாகும். சூரியன் கோயில்.

விளை: பொருட்கள் விளையுமிடம் விளையாகும். ஊர்ப்பெயர் வாரின்விளை.

திட்டை: மணல்மேடு என்ற பொருள் அமைந்த ஊர்ப்பெயர் தென்குடித்திட்டை.

கோயில்: கோயில் இருந்த பகுதி கண்ணார்கோயில், சக்கரக்கோட்டம் – இங்கு கோட்டம் என்பது கோயிலாகும்.

பாக்கம்: அச்சிறுப்பாக்கம் என்ற ஊர்ப்பெயர்களில் அமைகின்றது. (தற்காலம் பட்டினப்பாக்கம்)

அகம்: இடம் என்ற பொருளில் அமைகிறது. "ஒடகம்"

முட்டம்: "குரங்கணில் முட்டம்" என்ற பொருளில் அமைந்தது. "முட்டம்".

பேர்: கானப்பேரெயில் என்ற சங்க இலக்கியம் சுட்டியப்பெயராகும். எயிலைவிட்டு, கானப்பேராக அமைகிறது.

ஆச்சிரமம்: பாச்சிலாச்சிரமம் என்ற பெயராகிறது.

பாழி: அரதைப் பெரும் பாழியில் இடம்பெறும் பொதுக்கூறு.

மாகாளம்: அம்பர் மாகாளம், இடும்பை மாகாளம் எனவும் பெருமணம் என்பது நல்லூர் பெருமணம் என்பது கோயில் தொடர்பாக அமைந்த பொதுக்கூறாகும்.

தமிழகத்தின் எல்லையைக் குறிப்பிடும் ஊர்: தொல்காப்பியம், புறநானூறு, மதுரைக்காஞ்சி (70–71) லெமூரியாக்கண்டமே கடற்கோளால் பிறகு இவ்வாறு சுருங்கியது. "வடவேங்கடம் தென்குமரி ஆயிடை தமிழ்கூறு நல்லுலகம்" என்று தொல்காப்பியப்பாயிரம் கூறுகிறது.
பண்டைய தமிழகத்தில் தற்போதுள்ள இலங்கைத் தமிழகத்தின் யாழ்ப்பாணமும் வடகேரளமும் சேர்ந்து இருந்ததாகவும் ஐயப்பாடு ஒன்றுண்டு.

தமிழகத்தின் மலைத்தொடர்களும் சமவெளிகளுமே பாண்டிய நாடு, சேர, சோழ, கொங்கு, தொண்டை, நாடாக அமைந்திருந்தன. பிற சிறு நாடுகளாக, காட்டுநாடு, பாரிநாடு, கோணாடு முக்காவல்நாடு, வேங்கடநாடு என பல குறுநாடுகள் இருந்தாலும் மக்கள் ஐந்திணை நிலப்பாடுகள் தனித்தனி வாழ்வியல் முறைகளோடு வாழந்துள்ளனர்.

"வாடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்
தெனாஅது உரு கெழு குமரியின் தெற்கும்
குணாஅது கரைபொரு தொடு கடற் குணக்கும்
குடாஅது தொன்று முதிர் பௌவத்தின் குடக்கும்"
(புறநூறு –6)

"பொன்னோடு வந்த கறியோடு பெயரும்
வளங்கெழு முசிறி" (அகம் – 149.7–11)

அகநானூற்றுப் பாடற்பகுதி யவனரோடு தமிழர் செய்த மிளகு வாணிபம் பற்றி குறிப்போடு முசிறியின் சிறப்பும் கூறப்பட்டுள்ளது.

பெயர்கள் வைப்புமுறை: ஊரின் பெயர்கள் பல வகைகளில் சிறப்புக் கருதியும், காரணம் கருதியும் வைக்கப்படுகிறது. அரசர்கள், விலங்குகள், பறவைகளும், கோவில்கள் அதில் உறையும் தெய்வங்கள், நீர்நிலைகள், மலைகள், காடுகள், மரங்கள் பூக்கள் என அவைகள் பலவாகும். இவற்றுள் பல மரபுத் தொடராகவும் ஊர் பெயர்கள் தொடர்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

அவற்றுள் சில ஊர்ப்பெயர்கள் – அன்றும் இன்றும்: வேடந்தாங்கல் (பறவை), முட்டுக்காடு (காடு), பட்டினப்பாக்கம் (கடற்கரை), கோவளம் (வளம்), மயிலாடுதுறை (மயில்), ஐயங்கார்குள் (நீர்), திருநெல்வேலி (நெல்), கூடல்நகர் (மதுரை கோவில்), காகனம் (சோலை), கீழ்நெல்லி (நெல்), பாலவாக்கம், கொட்டிவாக்கம், இகணைப்பாக்கம் (எர்ணவாக்கம்) வளம் வெம்பாக்கம் (நீர்பகுதி), புளியந்தோப்பு (புளியமரம்), சிதம்பரம் (இறைவன்), நாகேசுவரம் (நாகம்), காஞ்சிபுரம் (காஞ்சித்தலைவன் – அரசன்)

முடிவுரை:
சங்க காலத்து ஊர்ப்பெயர்களுள் பல இன்றும் மரபுப்பெயர்களாகத் தொடர்வதைக் காணலாம். சில, "மரூவுப் பெறவும்" செய்துள்ளன. அரசர்களின் பெயர்களும் புகழுடைகளும் ஊர்ப்பெயர்களாக அமைந்துள்ளதுப் போல் இன்றும் நாட்டிற்காக தியாகம் செய்த நல்லோர்களின் பெயர்கள் ஊருக்கு சூட்டுவது கண்கூடு. சங்க காலத்து ஊர்ப்பெயர்கள் வரலாற்றோடும், இயற்கையோடும் தொடர்புடையதாக அமைந்துள்ளது சிறப்புக்குரியது.

116. தேவாரத்தில் திருக்குற்றாலம்

வ. ஜெயபார்வதி,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி,
குற்றாலம்.

தமிழகத்தில் தொன்மையான சமயங்களில் ஒன்று சைவம். இதன் முழுமுதற் கடவுள் சிவபெருமான். இந்த சிவபெருமானைத் துதித்தது பாடப்பெற்ற பக்தி இலக்கியங்கள் பலவற்றில் தேவாரமும் ஒன்று. தே-தெய்வம், வா-இசைப்பாடல் வகை. எனவே தேவாரம் என்ற சொல் தெய்வத்தைக் குறித்த இசைப்பாடல்கள் என்ற பொருளைத் தருகிறது. தேவாரம் பாடிய சமய குரவர் நால்வரில் முதன்மையானவர் திருஞானசம்பந்தர். இவர் மக்களின் சிந்தனை செம்மையுறுவதற்காகவும் சைவ சமயத்திற்கு உயிர் ஊட்டுவதற்காகவும், விடிவெள்ளியாகத் தோன்றியவர். சிவஞானம் பெற்றமையால் "ஆளுடையப்பிள்ளை" என்ற சிறப்புப் பெயர் பெற்றவர். இவர் பல தலங்களுக்கு சென்று அத்தலத்தின் சிறப்பயையும் அத்தலத்திலுள்ள இறைவனின் சிறப்பையும் பாடியவர். அவர் பாடிய சிவதலங்களுள் ஒன்று குற்றலாம். அத்தலத்தின் சிறப்பை அறிவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

அமைந்துள்ள இடம்

திருஞானசம்பந்தரால் பாண்டிய நாட்டில் பாடப்பெற்ற சிவத்தலங்கள் பதினான்கு. அதில் ஒன்றான குற்றலாம் திருநெல்வேலி மாவட்டத்தில் மேற்கு தொடர்ச்சி மலையில் அமைந்துள்ளது. இந்த ஊர் "தென்பகுதியின் வாரணாசி" என்று அழைக்கப்படும் தென்காசியிலிருந்து 5 கி.மீ. தொலைவிலும், செங்கோட்டையிலிருந்து 8 கி.மீ. தொலைவிலும், திருநெல்வேலியிலிருந்து 62 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது.

தலபுராணம்

திருக்குற்றாலநாதர் கோயில், திருமுற்றம் என்ற பெயரில் வைணவக் கோயிலாக இருந்ததாகவும், அகத்தியர் திருமால் உருவைக் குறுகச் செய்து சிவலிங்கமாக மாற்றினார் என்றும் திருக்குற்றாலத் தலபுராணம் கூறுகிறது. இதற்கு சாட்சியாக இக்கோயில் சங்கு வடிவத்தில் காணப்படுகிறது. கோயிலின் சிகரத்தில் சக்கரம் காணப்படுகிறது.

குற்றால மலையின் சிறப்பு

இம்மலையில் பேரருவி, சிற்றருவி, செண்பகா தேவி அருவி, தேனருவி, ஐந்தருவி, பழத்தோட்ட அருவி, புலி அருவி, பழைய குற்றால அருவி, பாலருவி என ஒன்பது அருவிகள் காணப்படுகின்றன. வெள்ளியை உருக்கிவார்த்தாற் போன்று விழும் இவ்வருவிகள் மலைப்பகுதியில் இருக்கும் மூலிகைச் செடிகளில் பட்டு வீழ்வதால், விழும் அருவி நீர் மருத்துவக் குணம் கொண்டதாக உள்ளது. அருவியில் நீராடும் மக்களின் பல நோய்களைத் தீர்ப்பதற்கு இந்த அருவிநீர் பயன்படுகிறது.

பெயர்ச் சிறப்பு

திருமாலை குறுகச் செய்து சிவனாக்கியதால் குற்றாலம் எனவும், பலாமரம் தலவிருட்சமாதலால் குறும்பலா எனவும் தலப்பெயர் ஏற்பட்டது.

வேறுபெயர்கள்

ஒரு ஊரின் பல பெயர்களே அவ்விடத்தின் பெரும் சிறப்புக்குச் சான்றாக இருக்கின்றன. இங்கு குற்றாலம் பற்றிய 21 பெயர்கள் குற்றலாத்தின் சிறப்புக்குச் சான்றாக அமைகின்றன. இதன் 21 பெயர்களாக, மது உண்டான் உயிர் மீட்டபுரம், பிதுர் கண்டன் தீர்த்தபுரம், பவர்க்க மீட்டபுரம், வேழம் பூசித்தபுரம், வேடன் வலம் செய்தபுரம், சிவத் துரோகம் தீர்த்தபுரம், வசந்தப் பேரூர், கங்கை வந்த புரம், நதி மூன்றில் மாநகரம், முனிக்குருகும் பேரூர், குறும்பலா வேத முக்தி பீடபுரம், ஞானப்பாக்கம், நன்னகரம், திருநகரம், விசேடபுரம், சிவ முகுந்தபுரம், முத்துவேலி, புடார்ச்சுவம், தேவகூடபுரம் என்பவற்றைத் திருக்குற்றாலத் தலவரலாறு தருவதாகக் காண்கிறோம். (திருக்குற்றால தலவரலாறு பக்.41,42).

மூன்று சிகரங்களையுடைய மலை ஆதலால் "திரிகூட மலை" என்றும், செண்பக மரங்கள் மலையில் மிகுதியாக காணப்படுவதால் "செண்பகக்கா" என்றும், இறைவன் குற்றலாம், கோவிதாரம், சமருகம் என்ற பெயருடைய ஆத்தி மர நிழலிலே எழுந்தருளி இருந்தலால் "குற்றாலம்" என்றும், குறும்பலாவின் அடியின் ஈசன் கோவில் அமைந்துள்ளதால் குறும்பலா

என்றும் இந்த ஊர் பல பெயர்களால் அழைக்கப்படுகிறது. (வேங்கடம் முதல் குமரி வரை IV பக். 154-155).

"வம்பார் குன்றம்" என்று திருஞான சம்பந்தரால் (பாடல் எண். 1069). குறிப்பிடப்படுகிறது. வம்பார் குன்றம் என்பது பலமுறை கண்டார்க்கும் புதுமையையே பொருத்தும் மலை எனப் பொருள்படும்.

கோயில் சிறப்பும், வழிபாட்டு முறைகளும்

கோயிலின் இறைவன் - குற்றால நாதர் இறைவி - குழல்வாய் மொழியம்மன் தலவிருட்சம் - பலா. ஆதலால் திருக்குறும்பலா என்ற தலைப்பின் கீழ் ஞானசம்பந்தர் தேவாரம் பாடியுள்ளார். தலவிருட்சமே இறைவனுக்கு பெயராக குறும்பலா நாதர் என்றே அழைக்கப்படுகிறார். பராசக்தி கோயில் என்ற பெயரில் தரணி பீடத்தையே மூலவராகக் கொண்டு தனிக்கோயில் குற்றாலநாதர் கோயிலுள் அமைந்துள்ளது. குறிஞ்சி மண்டபம், காசிலிங்க சுவாமி கோயில் மண்டபம் போன்ற படித்துறை மண்டபங்கள் அமைந்துள்ளன.

குற்றால நாதருக்குத் தீராத தலைவலி என்று ஒரு கதை சொல்லப்பட்டு தினமும் தைல அபிஷேகமும் கசாய பிரசாதமும் படைக்கப்படுகிறது. இக்கோயிலுள்ள நடராசப் பெருமானுக்கு தனியாக தாண்டவ தீபராதனை நடைபெறுகிறது. இவ்வழிப் பாட்டுக்கென்று தனியாக இசைக் கருவிகள், ராகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இறைவனுக்கு ஆண்டுதோறும் சங்காபிஷேகம், அன்னை பராசக்திக்குப் பௌர்ணமி தோறும் விளக்குப் பூசை வழிபாடு, முருகனுக்கு கார்த்திகைதோறும் சந்தன முழுக்காப்பு என்று பல வகையான சிறப்பு வழிபாடு நடத்தப்படுகிறது.

திருவிழாக்கள்

தெப்ப உற்சவம், வசந்த உற்சவம், முப்பெரும் விழாக்கள் ஆகிய விழாக்கள் நடத்தப்படுகின்றன. சித்திரை விசு, ஐப்பசி விசு, தெப்ப உற்சவம் ஆகிய திருவிழாக்களில் இறைவனுடன் திரு இலஞ்சிக் குமரரும் (இலஞ்சிக் கோவிலைச் சார்ந்த முருகன்) கலந்து கொள்கிறார். விழாக்களின் போது கொடி ஏற்றப்பட்டு, கொடிதான் முதலில் வீதியுலா செல்லும் விபூதியணிந்து, கைகளில் கொடியேற்றி தொண்டர் பின் செல்ல இறைவன் தனிக் கொடியோடு வீதியுலா சென்றான் என்பதனை,

"பொடிகள் பூசித் தொண்டர் பின் செல்லப் புகழ்விம்மக்
கொடிகளோடு நாள் விழமல்கு குற்றாலம்

அடிகள் மேய நன்னகர் போலும் மடியீர்காள்"
(தேவாரப் பாடல் எண். 1070)

என்ற ஞானசம்பந்தர் அடிகள் மூலம் அறியலாம்.

சித்திர சபை

இறைவன் வீற்றிருக்கும் ஐந்து சபைகளுள் ஒன்றான சித்திர சபை குற்றாலத்தில் உள்ளது. ஆடலில் வல்லவான சிவனுக்கென்றே கலை வேலைப்பாட்டுடன் கூடிய ஓவியங்களால் ஆனது இந்த சபை இங்கு நடராசப் பெருமான் ஓவிய வடிவில் காட்சி தருகிறார்.

"பால்வெண் மதிசூடிப் பாகத்தோர்
பெண்கலந்து பாடி யாடிக்"
(தேவாரப் பாடல் எண். 768)

என்ற ஞானசம்பந்தர் அடிகள் மூலம் இறைவன் பாடியாடிய சித்திர சபை குற்றலாத்தில் உள்ளது என்பதை அறியலாம். இங்கு வரையப்பட்ட ஓவியங்கள் மூலிகை சாறால் ஆனது. அதன் காரணமாக இன்று அழியாமல் வர்ணம் கெடாமல் காட்சி தருகிறது.

சுற்றுலா தலம்

திருஞானசம்பந்தரால் பாடப் பெற்ற இத்தலம் தமிழகத்தின் தென்பகுதியின் சிறப்புமிக்க சுற்றுலா தலமாக உள்ளது. இங்குள்ள மழைச்சாரல், அருவி முதலியவற்றை அனுபவிக்க சூன், சூலை, ஆகஸ்டு மாதங்களில் மக்கள் திரண்டு வருகின்றனர். மேலும் இத்தலத்தில் இயற்கை வனப்பு காண்போர் மனத்தை கவரும் வகையில் அமைந்துள்ளது. இதனை

"வம்மார் குன்றம் நீடுயர்சாரல் வளர்வேங்கைக்
கொம்பார் சோலைக் கோல வண்டு யாழ் செய் குற்றலம்"
(பாடல் எண். 1069)

"செல்வமல்கு செண்பகவேங்கை சென்றுஏறிக்
கொல்லை முல்லை மெல்லரும்பு ஈனும் குற்றலாம்"
(பாடல் எண். 1071)

"பக்கம் வாழைப் பாய்கனியோடு பலவின்தேன்
கொக்கின் கோட்டுப் பைங்கனிதூங்கும் குற்றாலம்"

(பாடல் எண். 1072)

என்ற ஞானசம்பந்தரின் வரிகள் மூலம் அறியலாம். இவ்வாறு சுற்றுலா தலத்திற்குரிய சிறப்புகளான கோயில், அருவி. இயற்கை எழில் என அனைத்தும் அமைந்துள்ள ஊராக குற்றாலம் திகழ்கிறது.

முடிவுரை:

திருஞானசம்பந்தர், திருக்குற்றால நாதர் மீது பாடியருளிய இந்த பாடல்களைப் பாடும் அடியவர்களின் பாவம் நீங்கும், அவர்கள் இறையருள் பெற்று வாழ்வில் இன்பமாய் வாழ்வார்கள். குற்றால அமைந்துள்ள இடம், தலபுராணம், பெயர்ச் சிறப்பு, வேறு பெயர்கள் மக்களிடம் காணப்படும் சமய ஒற்றுமை, பக்தி நெறி, குற்றால மலையின் இயற்கை ஆகியவற்றை ஒன்று சேர இக்கட்டுரையின் மூலம் அறிய முடிகிறது.

117. ஊர்ப் பெயாக்கான காரணங்கள்

த.ஜெயராமு,
கா.சகுந்தலா,
ஆய்வியல் நிறைஞாக்ள்,
அழகப்பா .பல்கலைக் கழகம்,
காரைக்குடி – 3.

யாதும் ஊரே! யாவரும் கேளீர்! என்றார் கணியன் பூங்குன்றனார்.

இங்கிலாந்து வீதி எந்த அளவிற்கு அகலமாக இருக்கிறதோ அந்த அளவிற்கு நீதியும் ஆழமாக இருக்கும். இந்த நூற்றாண்டையும் அடுத்த நூற்றாண்டையும் புதுமைக் காலம் அல்லது ஐரோப்பியர் காலம் எனக் கூறுவர். பழைய மரபுகளைப் பேணிக்காக்கும் பண்பும், புதிய மரபுகளைப் போற்றி வளர்க்கும் பாங்கும் இரண்டுறக் கலந்து இருப்பதை நாம் காண்கிறோம். மேலும் பெயருக்கான காரணங்களை அறிந்து கொள்ளுவதால் அந்நாட்டின் சிறப்புக்கள் தொன்மைகள், தோற்றங்கள் அவை பற்றி தொடர்புடைய வரலாற்றுச் செய்திகளை அறிவிப்பதால் சிறப்பான செய்தியை நாம் அறிய முடிகிறது. இவ்வாறாக ஊர்ப் பெயர்கள் மற்றும் பெயர்கள் எவ்வாறு உருவாகியது என்பதை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

காரணங்கள்

தஞ்சை மாவட்டத்தில் அமைந்துள்ள ஒரு சிற்றூர் வீரராகவபுரம் இப்பெயர் இவ்வூர்க்கு ஏற்படக் காரணம் என்னவென அறிய முற்பட்டோர் அவ்வூரில் வடக்கு பகுதியில் பெருமாள் ஆலயம் அமைந்துள்ளது. பெருமாளுக்கு பெயர் 'வீரராகவன்' என்ற புராணணப் பெயர் உண்டு. எனவே வீரராகவன் புரம் என்பதே நாளடைவில் மருவி வீரராகபுரம் என்று அழைக்கப்படலாயிற்று. இதே மாவட்டத்தில் பேராவூரணி என்ற பெயரில் தாலுகா ஒன்று உள்ளது. ஏன் பேராவூரணி என்று பெயர் வந்த காரணத்தை அறிய முற்படும் போது அவ்வூரின் மேற்குப் பகுதியில் இன்றளவும் காணப்படுகின்ற பெரிய ஊரணியை மையமாக வைத்து மருவியதால் நாளடைவில் பெரிய ஊரணி என்ற ஊரானது பேராவூரணியாக மாறியது. சோழநாடு சோறுடைத்து என்பார்கள் வரலாற்று ஆசிரியர்கள். காரணம் ஆறுகள், குளங்கள், ஏரிகள் என முறையே பாசன வசதி பெற்றுள்ளதால் முப்போகமும் நெல் விளையும் வாய்ப்பைப் பெற்றதால் மேற்கண்ட பெயர் இன்றளவும் வழங்கப்பட்டு வருவது ஒரு உண்மையான காரணம் ஆகும்.

பொதுவாகத் தமிழகத்தில் இடப்பெயர்கள் மற்றும் மனிதகுலப் பெயர்கள் யாவும் தொடர்புடைய செய்தியைத் தொடர்ந்து தெரிவிப்பதற்காகவும் காரணப் பெயர்களான அமைந்துள்ளன. ஐரோப்பியர்கள் மும்பைக்கு அருகில் எண்ணைக் கிணறை அமைப்பதற்கு ஆங்கில மொழியில் 'டிக்' என்றால் தோன்று 'பாய்' என்றால் பையன் என்ற பொருளில் அவனுக்குக் கட்டளை இடப்பட்டது. இன்று அவ்விடம் 'டிக் பாய்' என்பது மறுவி திக்பாய் என அழைக்கப்படுகிறது.

ஐரோப்பாவில் இருந்து இந்தியதவிற்கு வாணிகம் செய்ய வந்தவர்களை உடலின் நிறத்தைக் கொண்டு வெள்ளையர்கள் என அழைத்தனர். இதுவே, காரணப் பெயராக விளங்கி வருகிறது. மேலும், இதுபோன்ற பல பெயர் காரணங்களைக் கீழே காண்போமாக.

ஊர்ப்பெயருக்கான காரணங்கள்

சீனா

கி.மு. 246 ல் சீனாவை சீன்-ஹி.கிராம்சி என்னும் மன்னன் ஆண்டார். இவர் பெயராலேயே அத்தேசம் சீனா எனப்படுகிறது.

மாஸ்கோ

இரஷ்யாவில் மாஸ்கோவா என்ற நதிக்கரையில் அமைந்த நகரமாதலால் 'மாஸ்கோ' என்ற பெயர் ஏற்பட்டது.

ஹாலந்து

டச்சு மக்கள் சதுப்பு நிலம் எனப் பொருள்படும் ஹலண்ட என அந்நாட்டை வழங்கினார். இது ஆங்கிலத்தில் ஹாலிண்ட் ஆனது தமிழில் ஹாலந்து ஆனது.

பிரான்ஸ்

கி.பி. 401 ல் பிரான்ஸ் இன மக்கள் கால் இன மக்களை வென்றனர். அதன்பின் கால் தேசம் பிராங்ஸ் பிரான்ஸ்ஸாக மாறியது.

ஐரோப்பா

ஊலக வரைபடத்தில் முகம் போல் ஐரோப்பா காட்சி அளித்ததால் அக்கண்டம் 'யுரோப்' என்ற பெயரைப் பெற்றது. 'ஐரோப்' என்றால் பூமியின் படந்த முகம் என்று அர்த்தம்.

பழம் நீ பழனி

திருவிளையாடல் புராணத்தின் படி விநாயகருக்கும் முருகனுக்கும் பழத்தின் மேல் ஏற்பட்ட தகராறினால் முருகன் கோபம் கொண்டு குடும்பத்தைப் பிரிந்து பழத்திற்காக வந்ததினால் இவ்விடத்திற்கு பழம் நீ என்று ஔவையார் அழைத்துப் பெருமைப்படுத்தினார். அது நாளடைவில் மருவி பழனி எனப் பெயர் பெற்றது.

சாரப் பள்ளம்

தஞ்சை மாவட்டத்தில் அருகில் உள்ள சாரப் பள்ளம் என்ற ஊர் உள்ளது. அதற்கு அப்பெயர் வந்ததிற்கான காரணம் தஞ்சை பெரிய கோயில் உச்சியில் அமைந்துள்ள ஒரே கல்லை ஏற்றுவதற்காக சாரம் அமைத்ததனால் அவ்வூருக்கு சாரப் பள்ளம் எனப் பெயரிடப்பட்டது.

கைகாட்டி

வழிப்போக்கர்களுக்கும் வாகன ஓட்டிகளுக்கும் வழி காட்டுவதற்காக அமைக்கப்பட்ட வழிகாட்டு பலகைகள் ஒவ்வொரு திசையை நோக்கி கையை நீட்டிச் சொல்லுவது போல் அமைந்து அது கை காட்டி என்று பெயர் வந்தது.

முடிவுரை

ஆய்வாளர்கள் ஊருக்கான பெயர் காரணங்களையும் மற்றும் பொதுக்காரணங்களையும் நடைமுறையில் உள்ள பொருள்கள் புழக்கத்தில் உள்ள மற்றும் நடைமுறையில் உள்ள பெயர் காரணங்களையும் இதில் சிறப்பாக விளக்கியுள்ளனர்.

ஊர்ப் பெயர்களில் காணப்படும் தொடர்புகள்: (இந்தியா இலங்கை இரு நாடுகளை மையப்படுத்திய ஆய்வு)

முனைவர் திருமதி ஜெயலக்சுமி இராசநாயகம்
கல்வியற்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி
இலங்கை.

பழம் தமிழ் இலக்கியங்கள் மக்களின் வாழ்க்கையில் இருந்து தோற்றம் பெற்றதனால் அவை மக்களுடைய வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களையும், வரலாற்றுச் செய்திகளையும் அறிவு நுட்பங்களையும் எடுத்துரைக்கும் வகையில் அமைகின்றன. மக்களுடைய வாழ்க்கை, தொழில் சார்ந்த அம்சங்கள், அவர் தம் பண்பாடு, கலாசாரம், பொருளாதார நிலமைகள் போன்றவற்றோடு தமிழ் நாட்டின் புவியியல் இடப்பரப்புக்கள், நில அமைப்புகள், இயற்கையின் அம்சங்கள் போன்ற பல செய்திகளையும், மக்களின் பண்பட்ட வாழ்க்கை முறையையும் அழகுபட விரித்துரைக்கின்றன. அவ்வாறு கூறுகின்ற நிலையில் மக்கள் வாழ்ந்த பகுதிகளைக் குறிப்பிடும் போது அதன் ஊர்ப்பெயரைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. அவ்வகையில் பல ஊர்ப்பெயர்கள் தமிழ் இலக்கியங்களில் குறிப்பிடப்படுகின்றன.

ஊர்ப்பெயர்களும் தோன்றுவதற்கு அதற்கான காரணங்களும் உண்டு. அவை காரணப் பெயர்களாகும். தமிழ் நாட்டில் சில ஊர்களின் பெயர்கள் இலக்கியச் செய்திகளில் இடம் பெறுகின்றன. அத்தகைய பெயர்களோடு சரியாக ஒத்துவருகின்ற பெயர்களில் சில இலங்கை நாட்டின் பெயர்களில் காணப்படுகின்றன. சில பெயர்கள் ஒரே மாதிரியானதாகவும், வேறு சில பெயர்கள் சில எழுத்துக்களில் வேறுபாடு உடையனவாகவும், சில பெயர்களில் ஒற்றுமை இருக்கின்ற போதும் அப் பெயர்கள் தோன்றியதற்கான காரணங்களில் வேறுபாட்டையும் கொண்டுள்ளதனை அறிய முடிகின்றது.

இந்தியாவின் தமிழ் நாட்டை பொறுத்தவரையில் தமிழர்கள் அதிகமாக வாழ்கின்றார்கள். இதே போன்று இலங்கையில் பல்வேறு இன மக்கள் வாழ்கின்ற போதும் இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகள் தமிழர் பிரதேசம் என்று கொள்ளப்படுகின்றது. இப் பிரதேசத்தின் ஊர்ப் பெயர்கள் தமிழில் அமைந்தனவாதலால் அவற்றில் சில இந்திய நாட்டின் பெயர்களோடு நெருங்கிய தொடர்பு கொ்ண்டவை. சில பெயர்கள் பிற் காலத்தில் மருவிக் காணப்பட்டன.

இரு நாட்டிலும் பொதுவாக அமைந்த ஊர்ப் பெயர்கள்

இலங்கையின் வடக்கே யாழ்ப்பாணத்தில் உள்ள பெயர்கள் சிலவற்றை எடுத்து நோக்கும் போது யாழ்ப்பாண நகரத்துக்கு அண்மையாக உள்ள சில ஊர்ப்பெயர்கள் இந்திய நாட்டின் தமிழ் நாட்டுப் பெயர்களோடு தொடர்புபடுவதை அவதானிக்கலாம். உதாரணமாக :- “திருநெல்வேலி” என்பது இரு நாடுகளிலும் காணப்படுகின்ற பிரசித்தமான பெயர்களாகும். இந்தியாவில் திருநெல்வேலிப் பிரதேசம் இலக்கியங்களில் ஓரளவு குறிப்பிடப்படுகின்றது. அதன் இடவமைவு சிறப்பானது. வயல்களும், களனிகளும், சிறப்பான நீரின் தன்மையையும் கொண்டு இயற்கையின் அழகில் கட்டுண்டு கிடக்கின்றது. இதே போன்று இலங்கையின் யாழ்ப்பாணத்தில் நகரை அண்டிய பகுதியில் திருநெல்வேலி என்னும் ஊர் அமைந்துள்ளது. இங்கு யாழ்ப்பாணக் குடா நாட்டில் உள்ள ஒரே ஒரு பல்கலைக்கழகம் அரச திணைக்களங்கள், பிரசித்தி பெற்ற பல ஆலயங்கள், பல அரச தேசிய பாடசாலைகள், அரச மருத்துவமனைகள், தனியாள் மருத்துவமனைகள் என்பன காணப்படுகின்றன. பல்கலைக்கழகம் பல பீடங்களைக் கொண்டமைந்துள்ளது. கலைப்பீடம், விஞ்ஞானப்பீடம், மருத்துவ பீடம், விவசாய பீடம், முகாமைத்துவ பீடம் என்ற பல பிரிவுகளைக் கொண்டமைந்ததனால் மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாகும் இதனால் இவ்வூர் மிகவும் பிரசித்தமானதாக அமைந்துள்ளது.

திரு என்பது செல்வம், இலக்குமி என்று பொருள்படுவதனால் திருமகள் உறைகின்ற நல்லிடம் என்பது தான் பொருளாக அமைகின்றது. திருநல்வேலி என்பது திருநெல்வேலியாக மாற்றமடைந்தும் இருக்கலாம். யாழ்ப்பாணத்து சரித்திரம், யாழ்ப்பாண வைபவமாலை போன்றவைகளிலும் வேறு பல ஆவணங்களிலும் இது தொடர்பான விடயங்கள் பேசப்பட்டுள்ளன.

இதே போன்று “நல்லூர்” என்பது இந்திய நாட்டின் தமிழ் நாட்டில் உள்ள ஒரு ஊர்ப் பெயராகும். இலங்கையில் யாழ்ப்பாண நகரத்தையொட்டி அமைந்துள்ள ஒரு சிற்றூர் இங்கு நல்லூர் முருகன் ஆலயம் மிகவும் பிரசித்தி பெற்றது. இக்கோயிலுக்கு வரும் உல்லாசப் பயணிகளும் அதிகம். இன்று புலம்பெயர் தமிழர்கள் கூட நல்லூர் கந்தனின் மகோற்சவங்களில் இங்கு வந்து வழிபாடு செய்கின்றார்கள். நல்லூரை அருளாட்சி செய்யும் கந்தனின் மகிமை இவ்வூருக்கும் பெருமை சேர்கின்றது. நல்லூர் என்பது நல்ல ஊர் என்றும் நல்லவர்களைக் கொண்டுள்ள ஊர் என்றும் பொருள்படுவதாக அமரர். பேராசிரியர் மதிப்புக்குரிய கைசாலநாதக் குருக்கள் அடிக்கடி தனது விரிவுரையில் மாணவர்களுக்குக் கூறுவது இங்கு நினைவு கூரத்தக்கது.

இதே போன்று "வட்டுக் கோட்டை" என்பது இன்னொரு ஊராகும். இந்தியாவில் பட்டுக் கோட்டை என்பது ஒரு ஊர். இலங்கையிலும் வட்டுக் கோட்டை வரலாற்றுப் புகழ் மிக்கது. யாழ்ப்பாணச் சரித்திரத்தில் இடம்பெறுகின்றது. அரசியலில் நமது நாட்டுப் பாராளுமன்றம் தொட்டு உள்ளுராட்சி வரை பல அரசியலாளர்களை உள்ளடக்கியுள்ள ஒரு ஊராகும். உண்மையில் இவ்வூரும் பட்டுக் கோட்டை என்பதாக இருந்து வட்டுக் கோட்டையாக மாறியிருக்கலாம் என்பது ஒரு ஊகமாகும். "பூம்புகார்" என்பது சிலப்பதிகாரத்தில் இடம் பெறும் ஊர்ப் பெயர்களில் ஒன்றாகும். இந்தியாவில் தமிழ் நாட்டில் பூம்புகார் பட்டினம் பிரசித்தி பெற்றதாகும். கோவலன், கண்ணகி, மாதவி வரலாற்றோடு தொடர்பு பட்டது. இலங்கையில் பூம்புகார் என்பது ஒரு சிறிய நிலப் பிரதேசத்துக்கு வழங்கப்படும் ஒரு ஊர்ப் பெயராகும். இவ்வூர் குறைந்தளவு சனத்தொகையைக் கொண்டது. ஊரின் வளங்களும் மிகக் குறைவாகும். நீர் வளம் ஓரளவு இருக்கின்ற போதிலும் அந் நீரின் தன்மை உவர்ப்பானதாகவுள்ளது. இதனால் விவசாயமும் சரிவர அமைவதில்லை. உவர் நிலத்திற்கேற்ப அதில் விளையும் சிறு பயிர்வகைகளே உற்பத்தி செய்யப்படுகின்றன. இதனால் மக்களின் வாழ்க்கை வசதிகள் குறைவானதாகும். தமது வாழ்வியல் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் தொழில் வாய்ப்புகளுக்கும் அயற் கிராமங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளது.

இலங்கையின் யாழ்ப்பாணக் குடா நாட்டின் ஒரு பகுதியான வடமராட்சி பிரதேசத்தின் ஊர்ப் பெயர்கள்

வடமராட்சிப் பிரதேசம் வளமான பிரதேசமாகும். வரலாற்றுப் புகழ் மிக்க கல்வியலாளர்கள் பலர்' வாழ்ந்த பிரதேசமாகும். கல்விச் சாதனைகளை இன்றும் மாணவர்கள் நிகழ்த்திக் கொண்டு வருகின்றார்கள். இப் பிரதேசத்தின் பண்பாடு போற்றுதற்குரியது. தமிழர் பண்பாட்டுக்கு ஏற்ப மக்களின் வாழ்க்கை முறை அமைந்துள்ளது. விவசாயம், வர்த்தகம் என்பனவும் முக்கியமான தொழில்களாகும். கடல்வளம் அதிகமானதாகையால் மீன் பிடியும் அதிகமானதாகும். பாடசாலைகள், ஆலயங்கள் அரச நிறுவனங்கள் வர்த்தக மையங்கள் என்ற பல வளங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

நாட்டின் தமிழ் அரசியல் தலைவர்கள் வாழ்ந்த பிரதேசமாகும். இதனால் இது பேரும் புகழும் கொண்டது. சுதந்திர தாகம் கொண்ட பலர் வாழ்ந்தார்கள் இங்கு கரையோரப் பிரதேசத்திலே "ஊறணி" என்பது ஒரு ஊர்ப்பெயர். தமிழ் நாட்டின் ஊர்ப்பெயரோடு தொடர்புடையதாகப் பெற்ற ஒரு சொல்லாகும். இவ்வூர் ஊறல் என்ற நீர் சுரக்கும் கடற்பாங்கான இடத்தில் அமைந்துள்ளமையால் இப் பெயர் பெற்றதுஎன்பது ஐதிகமாகும். இங்குள்ள மக்களின் வாழ்வாதாரத் தேவைகளைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் கடல் வளம் அமைந்துள்ளது. கடற் படுக்கையைக் கொண்ட அழகிய ஊர் இதுவாகும்.

திருநாவலூர் இந்தியாவில் திருமுனைப்பாடி நாட்டில் அமைந்துள்ளது. சுந்தரமூர்த்தி நாயனார் வாழ்ந்த ஊர் இலங்கையில் யாழ்ப்பாணத்தில் வடமராட்சிப் பிரதேசத்தில் ஒரு சிறிய ஊர் திருநாவலூராகும். இவ்வூர் ஆரம்பத்தில் வண்ணான்துறை என்றே அழைக்கப்பட்டது. இது ஒரு சாதியொடு தொடர்புடைய பெயரைக் கொண்டு அமைந்ததனால் தற்போதைய சீர்திருத்த வாதிகள் அப்பெயரை மாற்றித் திருநாவலூர் என அழைத்து வரகின்றார்கள். இன்று திருநாவலூர் என்றே கருதப்படுகின்றது. இங்குள்ள மக்கள் பலவகைப்பட்ட தொழில்களை மேற்கொண்டு வந்துள்ள போதிலும் பிரதான தொழிலாக விவசாயம் அமைந்து காணப்படுகின்றது. இதே போன்று செட்டி நாடு என்ற ஒரு பரந்த பிரதேசத்துக்கு அமையப் பெறும் இப்பெயர் இலங்கையைப் பொறுத்தவரையிலும் பிரசித்தமான ஒரு பெயராகும். செட்டிமார்கள் வாழ்ந்த ஊரை செட்டிநாடு என்றும், அவர்கள் வாழ்ந்த தெருவைச் செட்டித்தெரு என்றும் கூறுவார்கள். இது இலங்கையில் தென்பகுதியில் சிங்களவர்கள் வாழ்கின்ற பிரதேசத்திலும் ஒரு பகுதியைச் செட்டித்தெரு என அழைக்கிகின்றார்கள். அப்பகுதியில் ஆரம்ப காலத்தில் செட்டிமார்கள் வாணிபம் செய்தார்கள். இன்றும் அவர்கள் பல வித வாணிபத்தில் உயர்ந்தவர்களாக விளங்குகின்றார்கள். அவர்களின் வாழ்க்கை வசதி நிறைந்ததாக இன்றும்அமைந்தள்ளது. இங்குள்ள ஒவ்வொரு ஊரிலும் அவர்கள் வாழ்ந்த தெருக்கள் செட்டித்தெரு என அழைக்கப்படுகின்றது. இதே போன்று சில இடப்பகுதிகளைக் "குறிச்சி" என அழைப்பர். வல்லிபுரக் குறிச்சி இடைக் குறிச்சி, அம்மன் குறிச்சி என்பவை சிலவாகும். இக் குறிச்சி என்பது ஒரு சில இடத்தைக் குறிப்பாகச் சொல்வதற்கும் பயன்பட்டது. இவையும் இந்திய நாட்டில் சில இடங்களில் பாவிக்கப்படுவது தெரிய வருகின்றது.

இவ்வகையில் தமிழர் வாழ்ந்த பிரதேசங்களில் பரம்பரை பரம்பரையாக வழங்கி வந்த சில ஊர்ப்பெயர்கள் இந்தியா, இலங்கை இரு நாடுகளைப் பொறுத்தவரையிலும் சில தொடர்புகளைக் கொண்டிருந்தமையை அறிய முடிகின்றது.

119. ஐங்குறுநூற்றில் ஊர்ப்பெயர்கள்

முனைவர்.அ.ஜெஸிந்தாராணி
தமிழாய்வுத்துறை
புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி
திருச்சி – 2

தமிழ்மொழி உயர்தனிச் செம்மொழியாக உயர்வதற்குக் காரணமாக இருப்பது சங்க நூல்கள். சங்க நூல்களில் எட்டுத்தொகையுள் மூன்றாவதாக, அடியளவாள் குறுநூறு எனப்பெயர் கொண்டதாயும், சுருங்கச் சொல்லி விளங்க வைப்பதாக அமைந்த நூல் ஐங்குறுநூறு. இத்தகைய சிறப்புடைய நூல் கற்பவர்களின் நெஞ்சம் மகிழ்வடையச் செய்கின்றது. இத்தகைய நூலுள் விளங்குகின்ற ஊர்களின் பெயரை ஆய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

ஐங்குறுநூற்றில் ஆறு ஊர்களின் பெயர்கள் இடம்பெறுகின்றன. தேனூர், ஆமூர், இருப்பை, கழாஅர் என்று குறிப்பிடப்படும் ஊர்களை ஓரம் போகியார் பாடியுள்ளார். அம்மூவனார் தொண்டி, கொற்கை என்னும் ஊர்களை தமது பாடல்களில் குறிப்பிட்டுள்ளார்.

தேனூர்:

தோழி கூற்றுப்பத்தில் 54, 55, 57 ஆகிய செய்யுட்களில் இவ்வூர் இடம் பெற்றுள்ளது. மதுரை மாவட்டத்தில் இருக்கும் ஊராக கல்வெட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன. தோழி, தலைவனிடம் வலிமை மிக்க தேரினை உடைய பாண்டியனுடைய குளிர்ந்த நீர் ஒழுகுவதற்கு இடனான தேனூர் போன்று நலம்மிக்க தலைவி என்று புகழ்வதை,

திண்டேர்த் தென்வை னன்னாட் டுள்ளதை
வேனி லாயினுந் தண்புன லொழுகுந்
தேனூ ரன்னவிவ டெரிவளை நெகிழ (54)

என்பதாலும், கரும்பினை ஆட்டும் ஆலைப்பொறி ஆண் யானையின் பிளிற்றொலிக்கு மாறாக ஒலிக்கும் தேர்வழங்கும் வள்ளல் தன்மையுடைய பாண்டியனுடைய தேனூரை நிகர்த்த தலைவி என்பதை

கரும்பி னெந்திரங் களிற்றெதிர் பிளிற்றுந்
தேர்வண் கோமான் தேனூ ரன்னவிவசீர

என்னும் அடிகளாலும் ஞாயிற்றுமண்டிலம் போன்று தோன்றா நின்ற பலவாகிய சுடர்களையுடைய வேள்வித் தீயினையும் ஆம்பல் மலராலே அழகுபெற்ற கழனிகளையும் உடைய தேனூரை ஒத்த இப்பெருமகள் என்பதை,

பகலிற் தோன்றும் பல்கதிர்த் தூய
னாம் பலஞ் செறுவறி றேனூரன்ன
விவணலம்

என்பதாலும் அறிய முடிகின்றது.

ஆமூர்:

பாண்டிய நாட்டில் தற்போது மதுரை மாவட்டத்தில் மேலூர் வட்டத்தில் உள்ள ஆமூர் இதுவாக இருக்கலாம் என்பது அறிஞர்களின் கூற்று. ஓரம்போகியார் இயற்றிய 56வது பாடலில் இவ்வூர் இடம் பெறுகின்றது.

பகல்கொள் விளக்கோடு இறாநூள் அறியா
வெல்போர்ச் சோழர், ஆமூர் அன்ன இவள்
நலம் பெறு சுடர்நுதல் தேம்ப
எவன் பயன் செய்யும் நீ தோற்றிய மொழியே

நண்பகல் போன்ற விளக்குகளின் ஒளிமிகுதியால் இராக்காலத்தினை அறிய இயலாத போர் வெற்றியால் புகழ் பெற்ற சோழரின் ஆமூர் போலும் அழகுடைய இவள் நலம் மிகுந்த ஒளியையுடைய நுதல் ஒளி மழுங்குமாறு நீ முன்பு செய்த சூளுரை யாவும் பொய்த்தன வாதலால் நீ இன்று செய்யும் ஆள் என்ன பயனைச் செய்ய இயலும்? இது சோழ நாட்டு ஆமூர் ஆகும்.

இருப்பை:

இருப்பை என்னும் ஊர் ஐங்குறு நூற்றில் 58 ஆவது பாடலில் 2 வது வரியில் இடம் பெற்றுள்ளது.

விண்கு அன்ன வெண்ணெற் போர்வின்
கைவண் விரா அன் இருப்பை அன்ன
இவள் அணங்குற்றனை போறி
பிறர்க்கும் அனையை யால் வாழி நீயே

எனத் தலைவியின் குணத்திற்கும் இருப்பையூரை ஒப்புமைப் படுத்தினார். மலைபோல் உயர்ந்த வெண்மையான நெற்போர்களை அதிகமாகக் கொண்ட விராண் என்னும் வன்னக வாய்ந்த தலைவனுக்குரிய இருப்பை என்னும் ஊரை நிகர்த்த நலம் கொண்ட என் தோழியால் நீ பெரிதும் துன்பமுற்றாய் போலும், நீ மணந்து கொண்ட இவளால் மட்டுமல்லாமல் நீ உறவு கொண்ட பொருள் மகளிர் பலராலும் இங்ஙனமே வருத்தமுறுவாய் போலும். நீ வாழி என் வரும் பாடலில் இருப்பை என்னும் உலா இடம்பெறுகிறது.

கொற்கை:

கொற்கை என்னும் ஊர் ஐங்குறு நூற்றில் 185 ஆவது பாடலில் கொற்கை என்னும் ஊர் பற்றிய செய்தி குறிப்பிடப்படுகின்றது.

"அலக்கிதழ் நெய்தல் கொற்கை முன்னுறை இலங்கு முத்து உறைக்கும் எயிறுகெழு துவர்வாய் அரம்போழ் அவ்வளைக் குறுமகள் நரம்பு ஆர்த்தன்ன தங்கிள வியளே"

தோழியே என்னால் காதலிக்கப்பட்ட இளமகள் அசையும் இதழிகளைக் கொண்ட நெய்தல் பூக்கள் பொருந்திய கொற்கைத் துறைமுகத்தின் விளக்கமுடைய முத்துப் போன்ற பற்களைக் கொணடவள் பவழம் போல் சிவந்த வாயை உடையவள். அறத்தால் அறுத்து அமைக்கப்பட்ட வயையல்களை அணிந்தவள், யாழ் நரம்பில் இருந்து வரும் இனிய இசைபோல் இனிய சொற்களைக் கொண்டவள் ஆவாள்.

தொண்டி:

தொண்டியின் சிறப்பைத் தலைவிக்குக் கூறுவதாக அமைந்த பாடல்

திரையிமி ழின்னிசை யளை இ யயலது
முழவிமி ழின்னிசை மறுகுதொ றிசைக்குத்
தொண்டி யன்ன பணைத்தோள்
வண்டிமிர் பனித்துறைத் தொண்டி ஆங்கண்
உரவுக் கடல் ஒலித்திரை போல
இரவினானும் இன்றுயிலறியாது
அரவுறு துயரம் எய்துப் தொண்டி (தொண்டிப்பத்து)

பாண்டியர்க்குக் கொற்கையும், சோழர்க்குப் புகாரும் போன்று சேரர்க்குரிய புகழ் பெற்ற கடற்கரைப் பேரூராக அந்நாளிலே விளங்கியது. தொண்டிப்பட்டினமாகும் அம்மூவனார் பத்துச் செய்யுள்களிலும் தொண்டியின் சிறப்பைப் பற்றி எடுத்துக் கூறி தொண்டிப்பத்துப் பாடியுள்ளார்.

இத்தொண்டியை இந்நாளைய 'அகலப்புழை' (Alleppy) என்னும் மலைநாட்டு நகராக இருக்கலாம் என்பர். இராமநாதபுர மாவட்டத்தில் ஒரு தொண்டிப்பட்டினம் உள்ளது என்று புலியூர் சேசிகன் வரையில் தன் உரையில் குறிப்பிட்டுள்ளார்.

முடிவுரை:

இங்ஙனம் ஐங்குறுநூற்றில் ஊர்களைப் பற்றிய செய்தியும், ஊரோடு பெண்ணை ஒப்புமைப்படுத்திய சிறப்பினையும் இதன் முலம் தெறிந்து உணரலாம்.

120. திருமுருகாற்றுப்படையில் ஊர்ப்பெயர்கள்

கி.ஜோஸ்பின் பிரதீனா,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
தெ.தி.இந்துக் கல்லூரி,
நாகர்கோவில்.

முன்னுரை

மனிதன் கூடி வாழ்கின்ற ஒரு சமூக விலங்கு. அவ்வாறு அவன் கூடி, நிலைத்து வாழத் தொடங்கிய காலத்திலிருந்து இடப்பெயர்களும், ஊர்ப்பெயர்களும் தோன்றியிருக்கக் கூடும். தான் தேர்ந்தெடுத்து வாழும் இடத்தை பிறர்க்குச் சுட்டவும், பிறர் தன் இருப்பிடத்தைக் கண்டறிந்து தன்னை நாடி வருவதற்கும் அடையாளமாக ஊர்ப்பெயர்களை மனிதன் அமைத்துக் கொண்டான் இவ்வாறு தன் இருப்பிடத்திற்குப் பெயர் சுட்டுவதற்கு அந்நிலத்தின் தன்மை, அங்கு காணப்படும் தாவரங்கள், இயற்கை நிலை, நில வளம், புராணச் செய்தி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டான். இக்கட்டுரையில் பத்துப்பாட்டு நூல்களில் முதலாவதாக வைத்துப் போற்றப்படும் திருமுருகாற்றுப்படையில் சுட்டப்பெறும் ஊர்ப்பெயர்கள் ஆராயப்பட்டுள்ளது.

திருப்பரங்குன்றம்

குன்றம் என்பது மலை என்னும் பொருளை உடையது. இக்குன்றமானது திருமுருகாற்றுப்படையில்,

"மாடம்மலி மறுகின் கூடற் குடவயின்
இருஞ்சேற்று அகல்வயல் விரிந்துவாய் அவிழ்ந்த
முள்தாட் தாமரைத் துஞ்சி, வைகறைக்
கள்கமழ் நெய்தல் ஊதி, எல்படக்
கண்போல் மலர்ந்த காமரு சுனைமலர்,
அஞ்சிறை வண்டின் - அரிக்கணம் ஒலிக்கும்
குன்று அமர்ந்து உறைதலும் உரியன்"

(திருமுருகு : 71-77)

எனப் புகழப்படுகிறது. மாட மாளிகைகள் நிறைந்த மதுரையின் அருகே அமைந்துள்ளது திருப்பரங்குன்றம் கரிய சேற்றினையுடைய அகன்ற வயலில் முட்களையுடைய தாமரை மலரில் இரவெல்லாம் உறங்கி, வைகறைப் பொழுதில் நெய்தல் மலரில் தேனை உண்டு, சூரியன் தோன்றய பின்னர் மகளிரின் கண்கள் போல் மலர்ந்த அழகிய சுனைப்பூக்களை நாடும் வண்டுக் கூட்டம் நிறைந்த வளமுடையதாக திருப்பரங்குன்றம் சுட்டப்படுகிறது.

இருபது நூற்றாண்டுகளுக்கு முன்னர் சமண முனிவர்கள் தங்கியிருந்த இடமாகவும் உள்ளது.

திருச்செந்தூர்

முருகனின் அறுபடை வீடுகள் மலைகளிலும், குன்றுகளிலும் காட்சியளிக்க திருச்செந்தூர் மட்டும் கடற்கரையினில் அமைந்துள்ளது. இதனால் இவ்வூர் 'நெல்லை நாட்டு நெய்தல் பதி' எனவும் அழைக்கப்படுகிறது.

"திருமணி விளக்கின் அலைவாய்ச்
செருமிகு சேயொடு உற்ற சூளே"

(அகம் 266 : 20 – 21)

வெண்டலைப் புணரி யலைக்குஞ் செந்தில்
நெடுவேள் நிலைஇய காமர் வியன்துறை:

(புறம் . 55 : 18-19)

என இலக்கியங்களில் திருச்செந்தூரானது 'அலைவாய்' என்றும் செந்தில் என்றும் அழைக்கப்படுகிறது. 'அலைவாய்' 'சீரலைவாய்' என்றும் பின்னர் 'திரு' என்ற அடைமொழி

சேர்த்து 'திருச்சீரலைவாய்' என்றும் அழைக்கப்படுகிறது. 'செந்தில்' என்பது செந்தூர் என ஆகிப் பின் 'திரு' அடைமொழி சேர்த்து திருச்செந்தூர் என ஆனது.

"உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீர்
அலைவாய்ச் சேறலும் நிலைஇய பண்பே"

(திருமுருகு : 124 – 125)

உலகத்தில் உள்ள சான்றோர்களாலே புகழப்பட்ட மிகுந்த புகழினை உடையது 'அலைவாய' என்று திருமுருகாற்றுப்படை திருச்செந்தூரின் புகழினை எடுத்துரைக்கிறது.

திருஆவினன்குடி

ஆவிக் கோமானின் குடியினர் வாழ்ந்த ஊர் 'ஆவிக்குடி' என வழங்கப்பெற்று நாளடைவில் 'ஆவினன்குடி' என்றானது. இவ்வூர் 'பொதினி' எனவும் சங்க இலக்கியப் பாடல்களில் சுட்டப்படுகிறது

"முருகன் நற்போர் நெடுவேள் ஆவி
அறுகோட்டு யானைப் பொதினி ஆங்கண்"

(அகம் : 3-4)

இப்பொதினியே காலப்போக்கில் 'பழனி' என்றானது. இதனை 'வையாவிநாடு:' என்று கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. பிற்கால புராண வரலாறானது திரு, ஆ, இனன், குடி, டி, எனப் பிரித்து திருமகளும், காமதேனுவும், ஞாயிறும், நில மகளும், தீக்கடவுளும் வழிபட்ட இடம் என்கிறது.

"தாவில் கொள்கை மடந்தையொடு சில நாள்
ஆவினன்குடி அசைதலும் உரியன்"

(திருமுருகு : 175-176).

எனத் திருமுருகாற்றுப்படை ஆவினன்குடியைச் சிறப்பிக்கிறது.

திருஏரகம்

திருஏரகத்தை 'மலைநாட்டகத்தொரு திருப்பதி' என்று குறிப்பிடுவார் நச்சினார்க்கினியர். தற்போதைய 'சுவாமிமலை' என்னும் தலமே திருஏரகம் எனப்பட்டது. 'ஏர்' என்றால் அழகு. 'அகம்' என்பது இடத்தைக் குறிக்கும். அழகிய சோலைகள் நிறைந்த அழகு மிகுந்த் இடம் என்பது பொருள். வடமொழியில் 'ஏரகம்' என்பதற்கு 'கோரைப்புல்' என்பது பொருள். எனவே ஏரகம் என்றால் கோரைபுற்கள் நிறைந்த பகுதியானதால் இப்பெயர் பெற்றிருக்கவும் வாய்ப்புண்டு என்பர்

"இருமூன்று எய்திய இயல்பினின் வழாஅது
இருவர்ச் சுட்டியப பல்வேறு தொலகுடி
அறுநான்கு இரட்டி, அளமைநல் யாண்டு
ஆறினில் கழிப்பிய, அறன்நவில் கொள்கை
மூன்றுவகைக் குறித்த முத்தீச் செல்வத்து
இருபிறப்பாளர், பொழுது அறிந்து நுவல
ஒன்பது கொண்ட மூன்றுபுரி நுண்ஞாண்
புலராக் காழகம் புலர உடீஇ,
உச்சிக் கூப்பிய கையினர், தற்புகழ்ந்து,
ஆறுஎழுத்து அடக்கிய அருமறைக் கேள்வி
நாஇயல் மருங்கில் நவிலப் பாடி,
விரைஉறு நறுமலர் ஏற்றி – பெரிதுவந்து
ஏரகத்து உறைதலும் உரியன்"

(திருமுருகு : 177-179)

எனத் திருமுருகாற்றுப்படை ஏரகத்தின் தன்மையைச் சுட்டுகிறது.

குன்றுதொறுஆடல்

குன்றுதொறுஆடல் என்பது தற்போது திருத்தணியைக் குறிப்பதாக இருந்தாலும் திருமுருகாற்றுப் படையில்,

"முழவு உறழ் தடக்கையின் இயல ஏந்தி
மென்தோள் பல்பிணை தழீஇ, தலைத்தந்து,
குன்றுதொறு ஆடலும் நின்றதன் பண்பே"

(திருமுருகு : 215 – 217)

எனக் குறிப்பது மலைகள் தோறும் சென்று விளையாடுதல் முருகக் கடவுளின் நிலைத்த குணம் என்கிறது. எனவே குன்றுதொறுஆடல் என்பது முருகன் எழுந்திருளியுள்ள அனைத்து குன்றுகளையும் குறிப்பதாக உள்ளது.

பழமுதிர் சோலை

இத்தலம் மதுரைக்கு அருகே வைணவத் தலமாக விளங்கக் கூடிய அழகர் மலையின் அருகே அமைந்துள்ளது. இத்திருமாலிருஞ்சோலை முன்பு முருகன் திருக்கோயிலாக இருந்ததாகவும் கூறுவர். முதிர்ந்த பழங்களை உடைய சோலையாக இருந்தமையால் பழமுதிர்சோலை எனப்பட்டது.

"வேறுபல் துகிலின் நுடங்கி, அகில் சுமந்து
ஆர முழுமுதல் உருட்டி வேரல்
....
....
இழுமென இழிதரும் அருவி
பழமுதிர் சோலை மலைக்கிழவோனே"

(திருமுருகு : 295 – 317)

எனத் திருமுருகாற்றுப்படை, பழமுதிர் சோலையான மிகுந்த இயற்கை வளம் உடையது எனச் சிறப்பிக்கிறது.

நிறைவுரை

திருமுருகாற்றுப்படையில் சுட்டப்படும் அறுபடை வீடுகள் இன்றளவும் புனிதத் தலங்களாகவே விளங்குகின்றன. இவை காரணப் பெயர்களாகவும் இயற்கையை முன்னிறுத்துகின்ற பெயர்களாகவும் அமைந்துள்ளன என்பதை இக்கட்டுரை வாயிலாக அறிய முடிகிறது.

121. திருமுருகாற்றுப்படை காட்டும் திருப்பரங்குன்றம்

நி. ஷண்முகவேலன்
முனைவர் பட்ட ஆய்வாளர்
காஞ்சி மாமுனிவர் பட்ட மேற்படிப்பு மையம்
புதுச்சேரி – 8.

முன்னுரை:

சங்க இலக்கியமாக விளங்கும் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகிய தொகை நூல்களில் பத்துப்பாட்டில் முதன்மையான நூலாக இருப்பது திருமுருகாற்றுப்படை ஆகும். இதனை இயற்றியவர் மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர் ஆவார். பத்துப்பாட்டு நூல்களுக்குக் கடவுள் வாழ்த்து நூலாகத் திருமுருகாற்றுப்படை அமைந்திருப்பது சிறப்பிற்குரியது. 317 அடிகளைக் கொண்ட திருமுருகாற்றுப்படையைப் 'புலவராற்றுப் படை' என்றும் வழங்குவர். முருகப்பெருமானின் ஆன்மீக அருள்பெறுவதற்கு வழிகாட்டியாக இந்நூல் விளங்குகின்றது. பிற ஆற்றுப்படை நூல்களான பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை (மலைபடுகடாம்) போன்ற நூல்கள் பொருள் பெறச் செல்வோன் பெயரால் அமைந்திருக்கும். ஆனால் திருமுருகாற்றுப்படை பொருள் தருவோன் பெயரால் அமைந்துள்ள திறம் சிறப்பிற்குரியது. திருமுருகாற்றுப்படையில் முருகப்பெருமானின் அருள் தரும் வீடுகளான திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோராடல், பழமுதிர்சோலை ஆகிய ஆறனுள் திருப்பரங்குன்றம் என்ற ஊர்ப் பெயரைமட்டும் எடுத்துக் கொண்டு ஆராய்வது இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

திருப்பரங்குன்றம் அறிமுகம்:

மதுரைக்கு அருகில் உள்ள திருப்பரங்குன்றத்து மலையில் வடக்கு நோக்கி குடைவரை கோவில் ஒன்று உள்ளது. இக்குடைவரை கோவில் கி.பி. 773-ல் பாண்டியன் பராந்தக நெடுஞ்செழியனின் தளபதியான சாத்தன் கணபதியால் வெட்டப்பட்டது என்ற வரலாற்றுச் செய்தி இங்கு கிடைக்கிறது. இவ்வூர் முதலில் 'பரங்குன்று' என்றே அழைக்கப்பட்டு வந்தது. இதற்குச் சான்று பகரும் வகையில் அகநானூறும் அமைந்துள்ளது. இதனை,

"சூர்மருங்கு அறுத்த சுடர்இலை நெடுவேல்
சினம்மிகு முருகன் தண்பரம் குன்றம்" (அகம். 59:10-11, பக்: 190)

எனவரும் பாடல்அடி உணர்த்துகின்றது. சூரனை வீறுகொண்டு சினத்துடன் அழித்த நெடியதோர் வேலினைத் தன் கையிலே ஏந்தியபடி முருகக்கடவுள் பரங்குன்று என அழைக்கப்படும் திருப்பரங்குன்றத்தில் வீற்றிருக்கிறான் என இப்பாடல் அடிகள் புலப்படுத்துகின்றது.

திருப்பரங்குன்றம் ஊர்ப்பற்றியும், அங்கு உறைந்துள்ள கடவுளின் நிலை குறித்தும் பின்னாளில் வந்த திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் போன்றோர்கள் தாங்கள் பாடிய தேவாரப் பாடல்களில் குறிப்பிட்டுள்ளனர்.
இதனை,

"பண்ணார் மொழி மங்கையோர் பங்குடையான்
பரங்குன்றம்" (திருஞா. 175:2, பக்: 190)

என்று வரும் தேவாரப்பாடல் அடிகள் உணர்த்துகின்றன.

இனிமையான பண்ணின் இசையைப் போன்று மொழிபேசும் உமையம்மையைத் தன் உடலில் ஒரு பாகமாகக் கொண்ட சிவபெருமான் அழகுமிக்க திருப்பரங்குன்றத்தில் உறைந்து அன்பர்களுக்கு அருள் பாலிக்கின்றான் எனத் திருஞானசம்பத்தர் அப்பாடல்களின் வழி புலப்படுத்துகிறார். மேலும்,

"பரங்குன்று மேயான் தன்னை" (திருநாவு. 248: 3.பக்: 190)

என்ற பாடல் அடியில் திருநாவுக்கரசரும் பரங்குன்றின்மேல் அமைந்துள்ள கோவிலின் உள்ளே சிவபெருமான் துயில் கொள்கிறான் எனப்புகழ்ந்து பாடியுள்ளார். மேலும்,

"பரங்குன்று மேயபரமன்" (சுந்த. 2:11. பக்: 190)

எனவரும் பாடல் அடியில் சிவபெருமானின் உற்ற நண்பரும் சிவன் மீது அளவில்லாத பற்று கொண்டவருமான சுந்தரர், சிவபெருமான் திருப்பரங்குன்றத்திலே குடிகொண்டிருக்கின்றான் என்பதை வலியுறுத்திச் செல்கின்றார்.
மேலும்,

"வளர் பூங்கோங்க மாதவியொடு மல்லிகைக்
குளிர் பூஞ்சாரல் வண்டறை சோலைப் பரங்குன்றம்
தளிர் பொன் மேனித் தைய னல்லா ளொடெ ாருபாகம்
ஒளிர் பூங்கொன்றை சூடினள் மேயநகர் தானே"

(திருஞான. 100:4.பக்:190)

கொக்கு, நாரை, அன்றில் போன்ற பல வகையான பறவைகளும், மனம் மயக்கும் மல்லிகை மலர்களும், தேன் குடிக்கும் வண்டினங்களின் இனிய இசையும், மிகுந்த குளிர்ச்சி பொருந்திய பூஞ்சோலை திருப்பரங்குன்றத்திலே அமைந்துள்ளது. அத்தகைய நகரிலே தளிர்போன்ற மேனிகொண்ட உமையம்மையைத் தன் ஒரு பாகமாய்த் தழுவிக் கொண்டும், தன் தலையிலே கொன்றை மலர்களை அணிந்து கொண்டும் உள்ள சிவபெருமான் காட்சியளிக்கிறான் எனத் திருஞானசம்பந்தர் திருப்பரங்குன்றத்தினை மிகச் சிறப்பாக வர்ணித்துச் செல்கின்றார்.

பரங்குன்று 'திருப்பரங்குன்று' எனவும் வழங்கப்படும் இவ்வூர் முதலில் சூரபன்மனை அழித்த முருகக்கடவுளின் அருள்மிக்க வாசத்தலமாக முன்னாளில் கூறப்பட்டது. மேலும் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர் பாடிய தேவாரப் பாடல்கள் காலத்தில் அப்பரங்குன்றம் உமையொரு பாகனாகிய சிவபெருமானுக்கு உரியதாகவே சுட்டப்பெறுகின்றது.

இவற்றுள் 'திருப்பரங்குன்றம்' என்பது யாருக்கு மிகவும் அனுக்கமானது எனக் கூறமுற்படும்போது, முருகப்பெருமானுக்கு உகந்தது எனலாம். சான்றாக முருகப்பெருமானுக்கு உரிய அறுபடைவீடுகளும் குன்றுகளின் பொருட்டு உருவானதாகும் என்பது நிதர்சன உண்மை. ஆயினும் ஒரு கடவுளின் தலத்தில் அவருடைய தாய், தந்தை, சகோதரர் மற்றும் நண்பர், உற்றார், உறவினர் போன்றோரின் உறையுளும் அமைக்கப்பட்டே ஆலயங்கள் அனைத்தும் இக்காலம்வரை எழுப்பப்பட்டு வருகின்றன. இந்த நோக்கினை அவ்விதத்தில் பொருத்திப் பார்க்கும் போது சரியானதொரு புரிதலை அனைவராலும் உணரஇயலும் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் திருப்பரங்குன்றத்தின் ஆலயத்திலே முருகக்கடவுளையும், சிவபெருமானையும் நெஞ்சில் நினைத்து போற்றி வணங்கியுள்ள தன்மையும் அப்பாடல்களின் வழியே அறிய முடிகின்றது.

திருமுருகாற்றுப்படையில் திருப்பரங்குன்றம்:

திருமுருகாற்றுப் படையில் சுட்டப்படும் அறுபடை வீடுகளுள் முதன்மையானது திருப்பரங்குன்றம் ஆகும். இதன் தனிச்சிறப்பு யாதெனில் அதர்மத்தை அழித்து அன்பையும் பண்பையும் நிலை நிறுத்திய இடமாகத் திகழ்வது. திருமுருகாற்றுப்படையில் உள்ள திருப்பரங்குன்றத்தில் முதலில் முருகப்பெருமானின் தோற்றமும், அவனது பெருமையும் சுட்டப்பெறுகின்றது. பின் முருகன் கடம்புமாலை அணிந்த திறமும், சூரர மகளிரின் இயல்பும், காந்தளங்கண்ணி சூடிய சென்னி பற்றியும், சூரனை வென்ற வேலன் பற்றியும், பேய்மகளின் துணங்கைக் கூத்தும், மாமரத்தை வெட்டிய செவ்வேள் பற்றியும், வழிபடுத்தல் பற்றியும், திருப்பரங்குன்றத்தில் நிகழ்ந்த இயற்கை நிகழ்வுகளும் முழுமையாக விளக்கப்படுகின்றது. இதனை,

கார்கோள் முகந்த காமம்சூல் மாமழை,
வாள்போல் விசும்பில் வள்உறை சிதறித்,
தலைப்பெயல் தலைஇய தண் நறுங் கானத்து,
இருள்படப் பொதுளிய பராரை மராஅத்து
உருள்பூந் தண்தார் புரளும் மார்பினன்" (திருமு:7-11. பக்: 558)

எனவரும் பாடல் அடிகள் உணர்த்தும்.

திருப்பரங்குன்றத்தில் உறைந்துள்ள முருகப்பெருமான் தன் மார்பில் அணியப்பெற்ற மலர்மாலை பற்றிக் கூறும் போது நக்கீரர், கார்காலத்தினைப் போன்று சூல்கொண்ட கருமேகங்கள் மழை பெய்யும்படியான வானத்தில் மின்னல் ஒளிகள் சிதறி, அதன் பொருட்டு உருவாகும் பளீரென்ற வெள்ளொளி போல, இருள் சூழ்ந்த காலத்தில் (வேளையில்) கானத்துச் சோலையிலே கடம்ப மரத்தின் பூக்கள் ஒளிவீசும்; அத்தகைய பூக்களால் தொடுக்கப்பட்ட கடப்பமாலையைச் செவ்வேள் தன் மார்பின்மீது அணிந்திருக்கிறான் என வர்ணனை செய்துள்ளமை சிறப்பிற்குரியது.

"மால்வரை நிவந்த சேன் உயர் வெற்பில்
கிண்கிணி கவைஇய ஒண்செஞ் சீறடிக்
கணைக்கால், வாங்கிய நுசுப்பின் பணைத்தோள்
கோபத்து அன்ன தோயாப் பூந்துகில்
பல்காசு நிரைத்த சில்காழ் அல்குல்,
கைபுனைந்து இயற்றாக் கவின்பெறு வனப்பின்"

(திருமு: 12-17.பக்:559)

எனக் கூறும் பாடல் அடிகளால் நக்கீரர் சூரரமகளிரின் இயல்பு பற்றிக் கூறுகின்றார். மூங்கில் நீண்டு வளர்ந்தும், வானத்தை அளாவியதுமான மலை உள்ளது. அம்மலையில் சிறிய சதங்கை அணியப்பெற்ற அடியையும், திரண்ட காலையும், வளர்ந்த நுட்பமான இடையையும், பெரிய தோளையும் கொண்டும், இந்திர கோபப் பூச்சியைப் போன்ற நிறம் ஊட்டப்படாத ஆடையையும், பல மணிகளால் கோற்கப்பட்ட அழகிய மணிமேகலை அணிந்த அல்குலையும், கையால் சிறப்பித்து பிறப்பறியா தனக்கே உரிய இயல்பான அழகைக் கொண்டும், மேலும் அழகிற்கு அழகு சேர்க்கும் பொன்னால் செய்யப்பட்ட அணிகளை அணிந்தும், குற்றமற்ற தூயநிறத்தினையும் உடைய சூரர மகளிர் காணப்பட்டனர் எனக் குன்றின் வர்ணனையுடன், சூரரமகளிரையும் உருவகப்படுத்தியுள்ளமை மூலம் மலையின் குளிர்ச்சித் தன்மையும் மக்களின் நிலையும் நக்கீரரால் புலப்படுத்தப்படுகின்றது.

மேலும்,

"பார்முதிர் பனிக்கடல் கலங்க உள் புக்குச்
சூர்முதல் தடித்த சுடர்இலை நெடுவேல்" (திருமு:45-46.பக்: 559)

என்ற பாடல் அடிகளால் முருகனின் வேலின் சிறப்புக் கூறப்படுகின்றது. உலகில் உள்ள குளிர்ச்சி மிக்க கடல் அனைத்தும் நிலை குலையும் விதத்தில் உள்ளே சென்று அசுரர்களின் தலைவனான சூரபன்மனை ஒளிபொருந்திய இலையையுடைய நீண்ட வேல் கொன்றது எனக்கூறும் நக்கீரர், முருகனின் வேலின் திறத்தைக் கூற 'நெடியவேல்' என வர்ணனை செய்துள்ளமை தெரியவருகின்றது.

தீய செயல்களின் தலைவனான சூரபன்மனை முருகப்பெருமான் தண்டித்தாலும், அவன் பால் கொண்ட கருணையினால் அவனை நல்வழிப்படுத்தியதையும் நக்கீரர் தெளிவுபடுத்தியுள்ளார்.

"சேவடி படரும் செம்மல் உள்ளமொடு,
நலம்புரி கொள்கைப் புலம்பிரிந்து உறையும்,
செலவுநீ நயந்தனை ஆயின், பலவுடன்
நன்னீர் நெஞ்சத்து இன்னிசை வாய்ப்ப
இன்னே பெறுதிநீ முன்னிய வினையே"
(திருமு: 62-66. பக்:559)

முருகப்பெருமானின் செம்மையான திருவடியே வீடுபேற்றை அளிக்கவல்லது என உணர்ந்து தலைமையாக உள்ள உன் உள்ளம் மெய்யறிவினை மேன்மேலும் பெற்று நன்மையையே உலகில் செய்வாயாக! உன் உயிர் பல பிறவிகளிலும் தொடர்ந்து முதிர்ந்தமையால் வீடுபேற்றினை அடைவாயாக! எனக் கூறிச்செல்கின்றார்.

நக்கீரரின் திருமுருகாற்றுப்படையில் உள்ள திருப்பரங்குன்றத்தில் வீடுபேறு பற்றிச் சிறப்பாகக் கூறப்படுகின்றது. அதில் முருகன் சேவடியின்கீழ் ஆட்படுவோர் பலபிறவிகளிலும் இறைப்பணியில் நின்று அறம் நிரம்பிய மனத்தை உடையவர்களாய் வாழ்வர் என்கின்றார். மேலும் நல்ல செவ்வி வாய்த்தபோது, இறைவனே நல்லாசிரியன் வடிவு கொண்டு வந்து அவனது அருளால் அவர்களின் முன் தோன்றி அவர்கள் வீடுபேறு அடைவதற்குரிய வழியைச் சொல்லி ஆற்றுப்படுத்துகிறான் என விளக்கிச் செல்கின்றார்.

திருப்பரங்குன்றத்தின் வரலாற்றுச்சிறப்பு:

திருப்பரங்குன்றம் பற்றிக் கூறும்போது நக்கீரர் அதன் தோற்றம், புகழ், வரலாற்றுச்சிறப்பு ஆகியவற்றையும் புலப்படுத்திச் செல்கின்றார். இதனை,

"மாடம்மலி மறுகின் கூடல் குடவாயின்
இருஞ்சேற்று அகல்வயல் விரிந்துவாய் அவிழ்ந்த
முன்தாள் தாமரைத் துஞ்சி, வைகறைக்
கள்கமழ் நெய்தல் ஊதி, எல்படக்
கண்போல் மலர்ந்த காமரு சுனைமலர்
அஞ்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும்
குன்று அமர்ந்து உறைதலும் உரியன்"
(திருமு: 71-77. பக்: 559)

எனவரும் பாடல் அடிகள் மூலம் விளக்குகின்றார்.

பண்டைக் காலத்தில் மன்னர்கள் போரின் வெற்றித் திறத்தைக் குறிக்கத் தங்கள் அரண்மனை வாயிலில் பந்தும் பாவையையும் கட்டிவைத்தனர். அவ்வாறு கட்டப்பட்ட பந்தும் பாவையும் அறுப்பார் யாருமின்றி தூங்கியே கிடக்கும். அதனால் போர் செய்வார் இன்றி, யாரும் இல்லையாகும்படி செய்ததால் எக்காலமும் போர்த்தொழில் அரிதாகிய வாயிலும், செல்வங்களுக்குத் தலைவியான திருமகள் எந்நாளும் வீற்றிருக்கும் குற்றமற்ற அங்காடித் தெருவும், மாட மாளிகைகள் மிக்க ஏனைய தெருக்களும் உடையது மதுரை மாநகர்.

அம்மதுரையின் மேற்குத் திசையில் கரிய சேற்றையுடைய வயல்வெளிகளும், அதில் மலர்ந்த தாமரை மலரும், அதில் இரவில் உறங்கிக் காலையில் தேன் மணம் கமழும் நெய்தல் மலரை தேன் ஊதியும், கதிரவன் தோன்றிய பின்னர் கண்ணைப் போன்று மலர்ந்த சுனை மலரில் போய் அமரும் அழகிய வண்டினக் கூட்டம் எந்நாளும் ஆரவாரிக்கும் திருப்பரங்குன்றத்தில் மனமகிழ்ந்து உறைபவன் முருகன் எனத் திருப்பரங்குன்றத்தின் புகழினை நக்கீரர் சிறப்பிக்கின்றார்.

திருப்பரங்குன்றம் சங்க காலம் தொடங்கி, பக்திக்காலம் வரை சிறப்புடன் விளங்கியதும், இன்றும் மக்களிடம் சிறப்பான இடத்தைப் பெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது. எனவே திருப்பரங்குன்றம் ஒரு வரலாற்றுச் சிறப்பு பெற்ற ஊர்களில் ஒன்று என்பதும், முருகன் வழிபாட்டுத் தலங்களில் ஒன்றாகவும் இருப்பது யாவரும் உணரத்தக்கது.

முடிவுரை:

திருமுருகாற்றுப்படை காட்டும் திருப்பரங்குன்றம் என்ற ஆய்வுக்கட்டுரை வழி பெறப்பட்ட முடிவுகள் பின்வருமாறு தொகுத்துத் தரப்படுகின்றது.

1. திருப்பரங்குன்றத்து மலையில் அமைந்துள்ள கோவிலில் சிவபெருமான் துயில் கொண்டிருக்கின்ற செய்தி திருநாவுக்கரசரால் புகழப்படுகின்றது.
2. இக்கோவில் பாண்டியன் பராந்தகன் நெடுஞ்செழியனின் காலத்தில் கட்டப்பெற்ற குடைவரை கோவில் என்ற வரலாற்றுச் செய்தியும் கூறப்படுகின்றது.
3. நக்கீரரின் திருமுருகாற்றுப்படையில் உள்ள திருப்பரங்குன்றத்து மலையில் உறையும் முருகப்பெருமான் அனைவரின் வினைகளையும் நீக்கி வீடுபேற்றினை அடைவதற்குரிய அருளினை புரியக்கூடியவன் என்ற சிறப்புச் செய்தியும் பெறப்படுகின்றது.
4. பரங்குன்று, பரங்குன்றம் எனப்பல நிலைகளில் அழைக்கப்பெற்ற திருப்பரங்குன்றம், இன்று திருப்பரங்குன்றம் என்றே வழங்கப்பட்டு வருவது பெறப்படுகின்றது.
5. திருப்பரங்குன்றம் முருகக்கடவுளின் அறுபடை வீடுகளில் ஒன்றாக இன்று வரையிலும் புகழ் குன்றாத தலமாகத் திகழ்வதும் அறிதற்குரியது.

பார்வை நூல்கள்:

1. ‘இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள்’ (தொகுதி இரண்டு), கே. பகவதி-உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1984.
2. ‘சங்க இலக்கியம் - பத்துப்பாட்டு’ (தொகுதி ஒன்று), அ. மாணிக்கனார் - வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, 1999.
3. ‘பன்முக நோக்கில் தமிழ்’, ஆய்வுக்கோவை இரண்டு, சென்னை கிறித்துவக் கல்லூரி, சென்னை, 2011.

122. சிறுபாணாற்றுப்படையில் ஊர்ப்பெயர்கள்

முனைவர்.ஆ.ஷர்மி

தமிழாய்வுத்துறை விரிவுரையாளர்

புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி

திருச்சிராப்பள்ளி.

முன்னுரை:

உலக மொழிகளில் தலைசிறந்த மொழியாக தமிழ்மொழி திகழ்கின்றது. இலக்கியம் என்பது வாழ்க்கையை எடுத்துக்காட்டும் காலக்கண்ணாடியாகும். ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய இவ்விலக்கியம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்த தமிழகத்தை நமக்கு விளக்கிக்காட்டும் ஒரு சொற்சித்திரமாகும்.

சிறுபாணாற்றுப்படை

சிறுபாணாற்றுப்படை 269 வரிகளைக் கொண்டது. பரிசு பெற்ற பாணன் வறுமையில் வாடும் பாணன் ஒருவனை ஓய்மாநாட்டு நல்லியக்கோடன் என்ற மன்னனிடம் ஆற்றுப்படுத்துவதாக இந்நூல் அமைந்துள்ளது.

ஓய்மாநாட்டு அரசன் நல்லியக்கோடன் ஆட்சிக்கு உட்பட்ட நகரங்களான மாவிலங்கை, எயிற்பட்டினம் வேலூர், ஆமூர், கிடங்கில் போன்றவற்றின் சிறப்புகளை இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் என்ற புலவர் மிகவும் அழககாக எடுத்துக் காட்டியுள்ளார்.

ஓய்மாநாடு:

மாவிலங்கை என்னும் தலை நகரத்தில் இருந்து ஓய்மாநாட்டை ஆண்டு வந்தான் என்று புறநானூற்று பாடல் வரிகள் சிறப்பிக்கின்றன

"ஓய்மான் நல்லியக் குளடன்" என்றும்

ஓவியப் பெருமகான் என்றும்

சிறுபாணாற்றுப்படை சிறப்பிக்கிறது. ஓய்மாநாட்டிலுள்ள பல்வேறு ஊர்களை சிறப்பிக்கும் வகையில் இந்நூல் அமைந்துள்ளது.

எயிற்பட்டினம்:

நல்லியக் கோடன் ஆட்சி செய்த ஓய்மாநாட்டின் கண் எயிற்பட்டினம் என்னும் ஊர் உள்ளது. இவ்வூர் காலத்தால் மிகவும் சிறப்புற்று விளங்குகிறது. 'எயில்' என்பது மதிலைக் குறிப்பதாகும் 'பட்டினம்' என்பது கடற்கரையில் உள்ள நகரத்தினைக் குறிப்பதாகும்.

வேறுபெயர்கள்:

மதிற்பட்டினம், அல்லது சேர்ப்பட்டினம் அல்லது எயிற்பட்டினம் என்ற பெயர்களைப் பெற்றிருக்கலாம் என்றும் அறியப்படுகின்றது. விக்கிரம சோழச் சதுர்வேதி மங்கலம்" என்னும் பெயர் பெற்றதாக இரண்டாம் குலோத்துங்கன் காலச் கல்வெட்டுக் கூறுகிறது.

சிறுபாணாற்றுப்படை

"கழி சூழ்ந்த ஊர்களையுடைய

பட்டினம்" என்று எயிற்பட்டினத்தைக் குறிப்பிடுகிறது.

"மணிநீர் வைப்பு மதிலொடு பெயரிய

பணிநீர்ப் பருவிற் பட்டினம்"

என்றும் பரதவர் மகள் அடுப்பெறிக்கக் கடல் வழியே வந்த மணம் மிகுந்த அகிலாகிய விறகு கட்டைகளைப் பயன்படுத்துவாள் என்பதை

"ஓங்கு நிலை ஒட்டகம் துயில் மடித்தன்ன

வீங்குதிரை கொணர்ந்த விரைமாவிற்கு

என்ற பாடல் வரிகளின் மூலம் எடுத்துக் கூறுகிறது.

வேலூர்:

வேலூர் என்பது சிறுபாணன் குறித்த இரண்டாம் ஊராகும் அ∴து எயிற்பட்டினத்திலிருந்து கிடங்கிலுக்குச் செல்லும் வழியால் முல்லை நிலத்திற்கு அப்பால் அமைந்துள்ளதாகவும் சிறுபாணாற்றுப்படை கூறுகிறது. நல்லியக் கோடன் இவ்வூரில் உள்ள அகழியில் பூத்திருந்த பூவினை எடுத்து தன் பகைவர்களை எதிர்த்து வெற்றியடைய வேண்டும் என முருகனை வழிபட்டான். அப்பூவானது வேலாக மாறியது. ஆவ்வேலினைக் கொண்டு

வெற்றி பெற்றான் என்ற செய்தியை

“திறல் வேல் நுதியிற் பூத்த கேணி

விறல் வேல் வென்றி, வேலூர்”

என்று சிறுபாணாற்றுப் பாடல் வரிகள் வழி அறிய முடிகின்றது.

இங்கு வேட்டுவர்களும் வாழ்ந்தனர் என்பதை இலக்கியங்களின் வாயிலாக அறிய முடிகிறது. மேலும்,

-------------------------- வேலூர் எய்தின்

உறுவெயிற்கு உலைஇய உருப்பு

அவிர் எயிற்றியர் அட்ட இன்புளி வெஞ்சோறு குரம்பை தேமா மேனிச் சில்வளை ஆயமொடு ஆமான் சூட்டின் அமைவரப் பெறுகுவீர்

என்ற பாடல் வரிகளின் மூலம் வேலூரைச் சென்று அடைந்தால் அங்கு வருந்துவதற்குக் காரணமான வெப்பம் மிக்க குடிலின் கண் எயினர் குலத்தில் பிறந்த மகளிர் உறைந்திருப்பார்கள் அவர்கள் அமைந்த இனிய புளிங்கறி இட்ட வேற்றினை ஆமானினது சூட்டிறைச்சியுடன் உம்பசி தணியுமாறு உபசரிப்பார்கள் என்று பாணன் வறுமையில் வாடும் மற்றொரு பாணனிடம் கூறுவதாக உள்ளது.

கிடங்கில்:

கிடங்கில் கி.பி.மூன்றாம் நூற்றாண்டினான நல்லியக் கோடனது தலைநகரமாகும் இன்று! கிடங்கில் என்று பெயர் பெற்றுள்ளது. இது நல்லியக் கோடன் அரண்மனை இருந்த பகுதியாயிருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. “மூதூர்” என்ற நகரமே கிடங்கில் என்று வழங்கப்படுவதாக அறிஞர்கள் கருதுகின்றனர்.

மிகப் பழமையான நகரமாக இது திகழ்கிறது. தெருக்களில் இருந்த புழுதியை யானைகளின் மத அருவி அடங்கியது அவ்வூரிலுள்ள வாயில் புலவர், பரணர், கூத்தர், அந்தணர் ஆகியோருக்கு மட்டும் எப்போதும் திறந்திருந்தது என்பதை சிறுபாணாற்றுப்படை,

“நீறடங்கு தெரு வினவன் சாறயர் மூதூர்

சேய்த்தும் அன்று சிறிது நணி யதுவே

பொருநர்க் காயினும் புலவர்க் காயினும்

அருமறை நாவின் அந்தணர்க் காயினும்

கடவுள் மால்வரை கண்விடுத் தன்ன

அடையா வாயிலவன் அருங்கடையா”

என்பதன் மூலம் உணர்ந்துகொள்ள முடிகின்றது.

ஆதிராசேந்திரன் காலத்தில் அவ்வூர் இடக்கை நாட்டுக் கிடங்கிலான “மும்முடிச் சோழ நல்லூர்” எனப்பெயர் பெற்றது. இராச நாராயண சம்புவராயர் காலத்தில் கிடங்கிலான “இராசேந்திர சோழ நல்லூர்” எனப்பட்டது.

ஆமூர்:

வேலூரிலிருந்து கிடங்கிலை நோக்கிச் செல்லும் வழியில் ஆமூர் இருப்பதாகச் சிறுபாணன் குறித்துள்ளான். ஆயினும் ஆமூர் என்னும் பெயருடைய ஊர் சிறுபாணன் கூறியுள்ளபடி “நல்லாமூர்” என்பதாகும். கிடங்கிலுக்கு அண்மையில் இருப்பதால் மருதவளம் காணப்படுதலாலும் இந்த நல்லாமூரே சங்ககால ஆமூராய் இருந்திருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

அகன்ற வீடுகளையும், அரிய காவலையும், சிறந்த சான்றோர்களையும் சிறந்த அகழியையும் உடையனவாக சிறப்பிக்கப்படுகிறது.

சிறுபாணாற்றுப்படையில் உள்ள ஆமூர் எய்தின்.

"வலம்பட நடக்கும் வலிபுணர் எருத்தின்
உரன்கெழு நோன்பகட்டு உழவர் தங்கை
பிடிக்கை அன்ன பின்னுவீழ் சிறுபுறத்து
தொடிக்கை மகடூஉ மகமுறை தடுப்ப
இருங்காழ் உலக்கை இரும்பு முகம் தேய்த்த
அவைப்பு மாண் அரிசி அமலை வெண்சோறு
கவைத்தாள் அலவன் கலவையொடு பெறுவீர்"

என்ற வரிகளில் வலம்பட நடக்கும் உரண் உடைய எருதுகளை உடைய உழவரின் தங்கையானவள் பிடியினது கையை ஒத்த பின்னல் கிடக்கும் சிறிய முதுகினையும் தொடியணிந்த கையினையும் உடையவள். தன் மக்களால் உம்மை முறையாகத் தடுத்து அமலை வெண் சோற்றினையும், நண்டினது கலவையொடு சேர்த்து விருந்து உபசரிப்பாள். அதனை நீங்கள் உண்டு மகிழ்வீர்களாக என்று பாணன் பரிசில் பெறவிருக்கும் பாணனுக்கு எடுத்துரைக்கின்றான்.

மாவிலங்கை:

புகழ்பெற்ற பண்டைய இலங்கையின் பெயரைக்கொண்டது மாவிலங்கை இதனைச் சுற்றிலும் நீர் உள்ளது ஓய்மாநாட்டு நல்லியக் கோடனுக்குப்பின்பு அல்லது முன்பு, ஓய்மாநாட்டை ஆண்ட ஓய்மான் நல்லியாதன் என்ற ஒருவனும் அரசாண்டான் புறத்திணை நன்னாகனார் என்ற புலவர் இம்மூவரையும் நேரில் புறநானூற்றில் பாடியுள்ளார்.

நறிய பூக்களையும், அகிலையும் சுரப்புன்னையும், சந்தனத்தையும் குளிக்கும் துறையிலே பெற்ற பெரிய நீர் நிலையை உடையது. என்பதை

நறுவீ நாகமும் அகிலும் ஆரமும்

துறையாடு மகளிர்க்குத் தோட்புணையாகிய
பொருபுனல் தருஉம்
போக்கரு மரபின
தொண்மா இலங்கைக் கருவொடு பெயரிய

நன்மா இலங்கை ...." என்ற பாடல் வழிகளின் வழி அறிய முடிகிறது.

நெல் அறுக்கும் அரிவாள் நெல் அறுக்கும் பொழுது கூர் மழுங்கி விடுகிறது. பின் சேற்றில் படிந்திருக்கும் வயல் ஆமையின் முதுகு ஓட்டில் அவ்அரிவாளைத் தீட்டிக் கூர் ஆக்குவது மாவிலங்கை உழவர் வழக்கம் என்பதை புறநானூற்றில் 379% விளங்குகிறது. மருதவளம் நிறைந்த பகுதியில் இருந்த நகரம் மாவிலங்கை புறநானூறு ஆகும் என்பதை பாடல் வழி தெரிகின்றது.

நல்லியக் கோடனுக்கு முன்னர் வாழ்ந்த மன்னர் காலத்திலும் சிறப்புற்று இவ்வூர் இருந்துள்ளது என்பதை

"*நன்மா விலங்கை மன்னருள்ளும*
நல்லியக் கோடன் மறுவன்றி

விளங்கிய வடுவில் .... என்று சிறுபாணாற்றுப்படை கூறுகிறது.

முடிவுரை:

ஓய்மாநாட்டை ஆட்சிசெய்த நல்லியக் கோடனிடம் பரிசு பெற்ற பாணன் பரிசில் பெற விழையும் மற்றொரு பாணனை ஆற்றுப்படுத்தும் வகையில் அம்மன்னனின் சிறப்பையும் அரசாண்ட ஊர்கள் அடையும் வழியினையும், அவ்வூரின் சிறப்பினையும் எடுத்துக்கூறி தாரம் பெற்ற மகிழ்ச்சியனை தன் சமூகத்தாரும் பெறவேண்டும் என்ற உயர்ந்த சிந்தனையை இந்நூல் எடுத்துக்கூறும் வகையில் இக்கட்டுரை அமைந்துள்ளது.

123. தி.ஜானகிராமன் புதினங்களில் தஞ்சை

சௌ. ஸ்டெல்லா புஷ்பா,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி,
சிவகாசி.

முன்னுரை:

"எனது ஊரையும் என் மக்களையும் நான் மிகவும் நேசிக்கிறேன். நான் பிறந்து விழுந்தது இந்த மண்ணின் மேல் தான். நான் தவழ்ந்து விளையாடி மகிழ்ந்ததும், விழுந்து புரண்டு அழுததும், இந்த மண்ணின் மடியில் தான். இந்தப் புழுதியை நான் தலையில் வாரி இறைத்து ஆனந்தம் பட்டிருக்கிறேன். இந்தக் கரிசல் மண்ணை நான் ருசித்துத் தின்றதற்கு எத்தனை முறை என் பெற்றோரிடம் அடி வாங்கியிருக்கேன். இன்றைக்கும் தெவிட்டவில்லை இந்த மண்" (கதைகளும் கதைப்பாடல்களும், மணிமாறன் , பாரதி புத்தகாலயம், சென்னை – 18, பக்.21-22) என்கிறார் எழுத்தாளர் கி.ராஜ நாராயணன். எந்த ஒரு படைப்பாளரும், அவர் ஊர் தாண்டி, நகரம் தாண்டி, மொழி, இனம் தாண்டி, நாடு தாண்டி புலம் பெயர்ந்திருந்தாலும், அவருக்குத் தன் சொந்த ஊரின் மணமும், குணமும் மறைந்து போகாது. சொல்லப் போனால், அவர்களின் மனத்தின் அடியாழத்தில் புதைந்திருக்கும் அவர்களுடைய சொந்த ஊர் பற்றிய நினைவுகள் தாம் படைப்புகளிலும் வெளிப்படும். அந்த வகையில், தி.ஜானகிராமனின் புதினங்களில் காணப்படும் தஞ்சை மாவட்ட ஊர்ப் பெயர்களையும், அவற்றின் சிறப்புகளையும் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஜானகிராமனின் ஊர்ப்பற்று:

தியாகராஜ சாஸ்திரி ஜானகிராமன் என்கிற தி.ஜானகிராமன் தஞ்சை மாவட்டம், மன்னார் குடி அருகிலுள்ள தேவங்குடியில் 1921 – ஆம் ஆண்டு சூன் மாதம் 28 ஆம் நாள் பிறந்தார். தி.ஜா., பிறந்தது தேவங்குடி என்றாலும், அங்கு அவருடைய வாழ்க்கை ஆறு மாதங்கள் மட்டுமே நீடித்தது. பின்னர் அவரது இளம் வயது வாழ்க்கை அங்குமிங்குமாக மாறி இறுதியாக, கீழாவிடங்கலில் நிலை பெற்றது. இதனைத் தி.ஜா., சொற்களாலேயே அறிய முடிகின்றது.

"என்னோட கிராமம் தான் நான் பிறந்த ஊர். மன்னார்குடிக்குப் பக்கம் தேவங்குடின்னு ஒரு ஊர். ஆனால் ஆறு மாசம் தான் அங்கே இருந்தேன்..... அதுக்கப்புறம் கும்பகோணம் வந்தோம். அப்புறம் அங்கிருந்து தஞ்சாவூர் போனோம். கும்பகோணத்துக்குப் பக்கத்துல இன்னொரு கிராமம் - குடவாசல் கிட்டக்க. வலங்கைமானுக்கும் அதுக்கும் நடுவில, அங்கே தான் எங்களுக்குப் பிற்பாடு குடியேறும் படியா ஆச்சு" (சொல்வனம் இதழ்,24.5.2011)

என்று தி.ஜா குறிப்பிடுவதினின்று தஞ்சை மாவட்டக் கிராமம் பகுதிகளிலேயே அவருடைய இளம் வயது வாழ்க்கை தொடங்கியதனை அறிந்து கொள்ள முடிகின்றது. தி.ஜாவின் தொடக்கக் கல்வி அவரது குடும்பம் தஞ்சைக்கு வந்த போது தொடங்கியது. உயர்நிலைப் பள்ளிப் படிப்பு தஞ்சாவூரிலும், கீழாவிடங்கலிலும் நீடித்தது. இளம்பருவ வாழ்க்கைச் சூழலும், இடச் சூழலும் மனிதர்க்ள மனத்தில் ஆழ்ந்த தாக்கத்தை ஏற்படுத்துமென்ற காரணத்தால் தன்னுடைய புதினங்களில் பெரும்பான்மையும் தஞ்சை மாவட்டக் கிராமப் பகுதிகளையே பின்னணியாக அமைத்திருக்கின்றார். "உயிர்த்தேன்" புதினத்தில் ஓரிடத்தில் அதன் கதை மாந்தரான பூவராவன்,

"எனக்கு இப்ப குளம், வயல்,மரம், புல்லு, மண்ணு - இதெல்லாம் தான் ஊராப் படுது. எங்க அப்பாவும் அம்மாவும் வளர்ந்த ஊரு இது.... ஒரு நாளைக்காவது இந்த ஊரைப் பத்தி சொல்லாம இருக்க மாட்டாங்க அப்பா..... இந்தக் குளம், ஆத்தங்கரை, ஓங்காளி சத்திரம், உறவுக்காரங்க – எல்லாத்தையும் பத்தி ஒரு பத்து நிமிஷம் பேசாத போனா அவருக்குத் தூக்கம் வராதோ – சபதம் தான் எடுத்துக்கிட்டாரோ – வாய் ஓயாம சொல்லியிருக்காங்க" (உயிர்த் தேன்,ப.39) என்று கூறுகின்றார்.

கதை மாந்தர் கூற்றாக இது அமைந்துள்ள போதிலும், தி.ஜா.,வின் ஊர்ப் பற்றும், மன ஏக்கமுமே இங்கு வார்த்தைகளாக வடிவமைந்திருப்பதை அறிந்து கொள்ள முடிகின்றது.

தஞ்சாவூர் – பெயர்க்காரணம்:

தஞ்சாறை (ஆறை – அரண்) தஞ்சம் அடைந்தவர்களுக்கு அரணாக விளங்குவது என்னும் பொருளில் அமைந்துள்ளது. தஞ்சை மாவட்டப் பகுதி நீர் வளமும் நில வளமும் மிகுந்து எப்பொழுதும் குளிர்ச்சியான பகுதியாகக் காணப்பட்ட காரணத்தால் தண் + செய் = தஞ்சை என மருவி வந்திருக்கலாம் என்றும் கூற முடிகின்றது.

தஞ்சையும் தி.ஜாவும்:

தஞ்சை மாவட்டம் சங்க காலத்தில் வளங்கொழிக்கும் மருத நிலமாக மட்டுமே இருந்து வந்தது. சங்க காலச் சோழ மன்னர்களிடையே அரசியல் ரீதியான சிறப்பைத் தஞ்சை பெறவில்லை. அவர்களனைவரும் உறையூரையே தலைநகராகக் கொண்டு சோழ மண்டலத்தை ஆண்டு வந்தனர். இந்த முற்காலச் சோழர்களின் பேரரசாட்சி முத்தரையர்களின் வரவால் முடிவுக்கு வந்தது. முத்தரையர்களின் கீழ் சோழர்கள் சிற்றரசர்களாக இருந்த காலத்தில், தஞ்சையின் வளம் கண்டு அதனைத தலைநகராகக் கொண்டு முத்தரையர்கள் ஆளத் தொடங்கினர். முத்தரையர்களை வென்று பிற்காலச் சோழராட்சி விஜயலயனால் தலையெடுத்த பொழுத சோழ மண்டலத்திற்கான மாபெரும் தலைநகராகத் தஞ்சை மாறியது. அதன் பிறகு நானூறு ஆண்டுகட்கும் மேலாகத் தஞ்சை சோழத் தலைமையிடமாக விளங்கிச் சிறப்புற்றது. சோழர்களுக்குப் பின்னர் பாண்டியர்கள், பின்னர் நாயக்கர்கள், மராட்டியர்கள் என்று கி.பி.1600 வரை தஞ்சை கைமாறியது. சரபோஜி காலத்தில் ஆங்கிலேயர் கைகளுக்குள் தஞ்சை சிறை கொண்டது. தி.ஜா., அங்கு வாழ்ந்து 1920 – க்கும், 50 களுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் அங்கு வெள்ளையராட்சி தான் நடைபெற்றது. ஆனாலும், வளமிக்க மருத நிலமாக, பழைய சோறுடைந்த சோழ மண்டலமாக அப்படியே தான் இருந்து வந்தது. தஞ்சையென்றாலே தி.ஜாவுக்கு அங்கு ஓடுகிற காவிரியும், அதன் பற்பல ஆற்றங்கரைகளும், ஆற்றங்கரையிலமைந்த கோயில்களுமே நினைவிற்கு வந்தன.

புதினங்கள்	ஊர்	ஆற்றங்கரைகள்	கோயில்கள்
செம்பருத்தி	செம்பனூர்	-	சணபகவனேசர் கோயில், அம்மையப்பன் கோயில்.
மோகமுள்	பாபநாசம் (கிளி மங்கலம்)	குடமுருட்டி யாற்றங்கரை அரசிலாற்றங்கரை	ஆற்றங்கரைச் சிவன் கோயில், இராமசாமி கோயில், கும்பேச்சுரன் கோயில், நாகேச்வரன் கோயில்.
அம்மா வந்தாள்	சித்தன் குளம்	காவேரி யாற்றங்கரை	காவேரிக் கரைக் கோயில், பெருமாள் கோயில், சிவன் கோயில்.
மலர் மஞ்சம்	ராஜங்காடு தஞ்சாவூர்	-	வைத்தீஸ்வரன் கோயில், பெருவுடையார் கோயில்.
உயிர்த் தேன்	ஆறுகட்டி	காவேரியாற்றங்கரை	பெருமாள் கோயில், பிடாரி கோயில்.
நளபாகம்	நல்லூர்	அரசிலாற்றங்கரை காவிரியாற்றங்கரை	தாராசுரம், சிவன் கோயில், பெருமாள் கோயில்.
மரப்பசு	அன்னவாசல்	-	மாரியம்மன் கோயில், சிவன் கோயில்

இவை தவிர வேதக்குடி, மாயவரம், நந்த மங்கலம், முனியங்காடு, மன்னார் குடி, நரசிங்கபுரம், இக்காடி, மஞ்சக்குடி, கொரடாச்சேரி, குத்தாலம், நன்னிலம், மாத்தூர், கடம்பங்குடி, மதுக்குடி ஆகிய ஊர்களும், கொள்ளிடம் ஆற்றுப்பகுதியும், விச்வநாதர் கோயிலும் புதினங்களில் பெயரளவில் ஆங்காங்கு வந்து போகின்றன.

ஊர்களும் தெருப் பெயர்களும்:

ஜானகிராமன் புதினங்களில் பின்னணியாக ஊர்கள் மட்டுமல்லாது அவ்வூர்களிலுள்ள தெருக்கள், கடைவீதிகள், அவற்றின் அமைப்பு ஆகியனவும் விதந்துரைக்கப்படுகின்றன. கும்பகோணம் பெரிய தெரு, துக்காம்பாளையத் தெரு, கடலங்குடித் தெரு, திருமஞ்சன வீதி, சித்திரக்குளம், மகாமகக் குளம், பச்சையப்பன் குளம், காந்தி பார்க் ஆகிய இடங்கள் கும்பகோணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

கும்பகோணம் பெரிய தெரு, கலகலப்பானதாக, பரபரப்பானதாகக் காணப்படுகின்ற நிலையில் (மோகமுள்,ப.11) அதற்கு எதிர்மாறாகத் துக்காம்பாளையத் தெருவோ, வெறிச்சோடிக் கிடப்பதாகத் தி.ஜா., கூறுகின்றார். (மோகமுள்,ப.45)

கும்பகோணம் பச்சையப்பன் குளத்தருகே வியாழக் கிழமைகளில் கருட தரிசனம் செய்ய மக்கள் கூடுகின்ற செய்தி மோகமுள்ளில் பதிவு செய்யப்பட்டுள்ளது. (மோகமுள், ப.122). கும்பகோணம், தஞ்சாவூர் தவிர்த்த, சிறுசிறு கிராமங்களில் சாதிப் பெயர்களே தெருப் பெயர்களாக இருந்த பாங்கு புதினங்களில் கூறப்பெற்றுள்ளது.

வேளாளத் தெரு, கள்ளத் தெரு, வலையர் தெரு, சேரி, அக்ரகாரம், சாலியத் தெரு, கைக்கால் தெரு, கொடிக்கால் தெரு, பால ஜோஸ்யர் தெரு, எனத் தெருப் பெயர்கள் சுட்டப்பெற்றுள்ளன. (மரப்பசு,ப.17) மேலும் வாணக்காரத் தெரு, வண்டிக்காரத் தெரு, துலுக்கத் தெரு என சாதிப் பெயர்களும், மட விளாகத் தெரு, ஆற்றுப் போக்குத் தெரு, மேட்டுத் தெரு எனச் சில காரணப் பெயர்களும் (நளபாகம்,177,270) இடம் பெற்றுள்ளன.

"செம்பருத்தி" புதினத்தில் செம்மானூரின் வீதியமைப்பு தி.ஜானகிராமனால் திறம்பட வருணிக்கப்பட்டுள்ளது.

"அந்தத் தெருதான் கடைவீதி.....அந்த வீதியின் நீளம் கிட்டதட்ட ஒன்றரை மைல்.......... அகலமாக இருந்தது. தெரு...... இடது சாரி வீட்டிலிருந்து எதிர்ச்சாரி வீட்டுத் திண்ணையில் இருப்பவரைக் கூப்பிடக் கழுத்துப் புடைக்கக் கத்த வேண்டும்..... இந்த அகலம் வீதியின் ஒன்றரை மைல் நீளம் முடிகின்ற வரையில் குறையாமல் கொள்ளாமல் இருந்தது...... அந்த அரை மைல் தூரத்தையும் அத்தனை அகலத்தையும் அடைத்துக் கடைக்காரர்கள் உயரமாகப் பந்தல் போட்டிருப்பார்கள்..........." (செம்பருத்தி, பக்.120-121)

இதே புதினத்தில் பெரிய கோயில் எனப்படுகின்ற சண்பகவனேசர் கோயில் அமைப்பும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

"கோயில் பெரிய கோயில் தான். ஆசார வாசல் வேறாவென்று அகலமும் விசாலமுமாக. சர்வேச்வரனின் திருவாயே திறந்தாற் போல நிற்கின்றது. இரண்டு பக்கமும் கருங்கல்லால் ஆன விசாலமான பாரிசங்கள்"

மேலும் உயிர்த் தேன், நளபாகம், அம்மா வந்தாள், மரப்பசு, மலர் மஞ்சம் ஆகிய புதினங்களில் பெயர் சுட்டப் பெறாத, சிவன் கோயில்கள் பெருமாள் கோயில்கள் இடம் பெறுகின்றன. மொத்தத்தில் கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டா என்னும் பழமொழிக்கேற்ப, தி.ஜா., வின் படைப்புகளில், கோயிலில்லாப் புதினங்களே இல்லையெனலாம்.

கும்பகோணக் கோயில்கள்:

சம்பந்தர், நாவுக்கரசர் ஆகிய நாயன்மார்களால் பாடப்பெற்ற பழமையான நகரம் கும்பகோணம் ஆகும். இவ்வூரை தேவாரம், குடமுக்கு, குடந்தை, கீழ்க்கோட்டம் என்றெல்லாம் அழைக்கின்றது. மோகமுள், நளபாகம், மரப்பசு ஆகிய புதினங்களில் இவ்வூர் குறிப்பிடப்பட்டுள்ளது. என்ற போதிலும், மோகமுள் தான் கும்பகோணக் காவிரியின் வளமையையும், புழுதியின் மணத்தையும் ஒருங்குறப் பதிவு செய்திருக்கின்றது. கும்பகோணத்திலுள்ள புகழ்பெற்றக் கோயில்களான கும்பேச்சுரன் கோயில் (மோகமுள்,ப.70) இராமசாமிக் கோயில் (மோகமுள்,ப.7) ஆகிய கோயில்கள் இடம் பெற்றுள்ளன. நாகேச்சுரன் கோயில் உற்சவ நாட்களில் கூட ஏழை வீட்டுக் கல்யாணம் போல வெறிச்சோடிக் கிடப்பதாகத் தி.ஜா. கூறுகின்றார். கும்பகோணத்திலுள்ள கோயில்களில் இக்கோயிலே மிகவும் தொன்மையானதாகும்

குடமுருட்டியாறு, காவிரியாறு, அரசலாறு ஆகிய ஆற்றுப் பாசனங்கள் தஞ்சை வேளாண்மைக்குக் கை கொடுப்பதாகத் தி.ஜா., மோகமுள்(ப.60) புதினத்தில் குறிப்பிடுகின்றார். அவற்றுள் அரசலாற்றங்கரையில் பாடல் பெற்ற திருப்பெருந்துறை அமைந்துள்ளது. கும்பகோணத்தில் இப்பொழுது திருப்பந்துறையென வழங்கும் பதியே திருப்பெருந்துறையாகும். இத்துறையில் அமைந்துள்ளது தஞ்சை மாவட்டத்தின் கலைக் கூடமாக விளங்குகின்ற தாராசுரம் ஆகும். இது கும்பகோணத்திலிருந்து 5கி.மீ. தொலைவில் உள்ளது. "நளபாகம்" புதினத்தில் காமேச்சுவரன் கும்பகோணத்திலிருந்து நல்லூர் செல்கிற வழியில் பேருந்தில் இருந்தவாறே அரசிலாற்றங்கரையில் அமைந்த தாராசுரத்தைக் காணும் நிகழ்வு (நளபாகம்,ப.150) இதனை உறுதி செய்கின்றது. தாராசுரம் சோழர் கால மரச் சிற்பங்கள் நிறைந்த பகுதியாகும். தாரசுரத்தை "சிற்பக் கலைகளின் கூடம்" என்றழைக்கிறார்கள்.

வரலாற்றுக் குறிப்புகள்:

தி.ஜா., வரலாற்றாசிரியராக இருந்த போதிலும் ஊர்ப் பெயர்கள், இடங்கள் ஆகியவை பற்றிய வரலாற்று ரீதியான குறிப்புகளைத் தம் புதினங்களில் இடம் பெறச் செய்யவில்லை. ஊர், தல வரலாறு குறித்த சந்தேகங்களைச் சில சமயம் வாசகர்களிடையே விட்டு விடுகின்றார். "

நளபாகம்'' புதினத்தில் வருகின்ற மகாதான அக்ரகாரத்ததை தானமாக அளித்தது சோழரா, நாயக்கரா, மராட்டியரா என்றும், தானம் பெற்றுக் கொண்டது வேத் ஓதுவோரா, வேதாநதிகளா, அரச உத்தியோகஸ்தர்களோ என்று கேள்வி எழுப்புகின்றார்,(நளபாகம்.ப.177)

மேலும் "மலர் மஞ்சம்'' புதினத்தில் சோழர் காலத்தில் தஞ்சை வெருவுடையார் கோயிலுக்குத் தெற்கே இருந்திருக்க வேண்டும் (மலர் மஞ்சம்,ப.583) என்கிறார். ஊருக்குத் தெற்குப் புறத்தில் கோயில் கட்டுகின்ற வழக்கம் இல்லை. தஞ்சைக் கோயல் ஊருக்குத் தெற்குப் புறத்தில் இருப்பதானால், சோழர் காலத்துத் தஞ்சாவூர் கோயிலுக்குத் தெற்கே இருந்திருக்க வேண்டும் என்கிறார். இவ்வாறெல்லாம் கூறும் அவர் அதற்கான ஆதாரங்கனையோ, வரலாற்றுச் சான்றுகளையோ சுட்டிச் சொல்லவில்லை.

"உயிர்த்தேன்'' புதினத்தில் "ஆறுகட்டி'' என்ற ஊரின் பெயர்க் காரணம் தி.ஜா., வால் விளக்கப் பெற்றுள்ளது. "ஆறுகட்டி'' தற்போதைய சிவகங்கை மாவட்டத்தில் உள்ளது. ஆனால், தி.ஜா., காலத்தில் இது தஞ்சை மாவட்டக் கிராமங்களில் ஒன்று.

காமம், கோபம், லோபம், பொய், களவு, கொலை என்னும் ஆறு பெரிய பாவங்கள் மனிதனிடம் உண்டு. இந்த ஆறையும் அடக்கிக் கட்டின ஊர் என்பதால் அப்பெயர் அமைந்ததாகத் தி.ஜா., கூறுகின்றார். (உயிர்த்தேன்,ப.188)

நிறைவுரை:

"ஜானகிராமனின் உலகம் நீரினால் ஆனது. நீர்மையைத் தேடி அவர்தம் எழுத்துப் பயணத்தைத் தொடர்ந்தார். அகத்திலும், புறத்திலும் அவர் சதா நீரைத் தேடியபடி இருந்தார்'' என்கிறார் பிரபஞ்சன். தஞ்சை மருத நில ஆற்றுச் சமவெளிகளின் மோனமும், அழகும் மனிதர் மனத்தில் சுழித்து ஓடிக் கொண்டிருக்கிற நிம்மதியின்மையையும் குழப்பங்களையும் தீர்த்து வைப்பதாக அவர் கருதினார். அதனையே அவர் தம் படைப்புகளிலும் பதிவு செய்தார்.

124. அகநானூற்றில் ஊர்ப்பெயர்கள்

பா. திருப்பதிகுமாரி என்ற காயத்ரி
உதவிப்பேராசிரியர்
சரஸ்வதி நாடார்
மகளிர் கல்லூரி

முன்னுரை:

காலத்தின் பழைமையில் சங்க இலக்கியம் மிகவும் பழமையானது.தமிழ் இலக்கிய வரலாற்றை முழுமையாக ஆராயின் அந்த வரலாற்றிற்கே மணிமுடியாகத் திகழ்வது சங்கஇலக்கியம். அவ்இலக்கியத்தில் ஒன்றான அகநானூற்றில் இடம்பெற்றுள்ள ஊர் பெயர் குறித்து ஆய்வதாக இக் கட்டுரை அமைந்துள்ளது.

அள்ளூர்:

அகநானூற்றில் புலவர் அள்ளூர் நன்முல்லையார், தலைவனின் பரத்தமை ஒழுக்கம் காரணமாய் வருந்திய தலைவியை வர்ணிக்கும் பொழுது போரில் பகைவர்கள் சிதறும்படி, அழிக்கவல்ல ஒளிவீசும் வாட்படையினையுடைய வெற்றி பொருந்திய செழியனது நெற்குவியலையுடைய அள்ளூர் என்னும் ஊரை ஒத்தவள்.

"ஒளிறு வாட் தானைக் கொற்றச் செழியன்
பிண்ட நெல்லின் அள்ளூர் அன்ன" (அக: 46)

என்று அள்ளூருடன் ஒப்பிட்டுக் கூறியுள்ளார். இவ் ஊர் பாண்டிய நாட்டில் சிவகங்கைக்கு அருகில் உள்ளதோர் ஊர். இவ் ஊரினை பழைய உரையாசிரியர்கள் அள்ளியூர் என்பர். இப்பாடலாசிரியர் ஊர் அள்ளூர் ஆதலால் தம் ஊரையே தலைவிக்கு உவமையாகக் கூறியுள்ளார்.

வியலூர்:

கார்காலத் தொடக்கத்தில் வருவேன் எனக் கூறிச்சென்ற தலைவன் கார்காலம் வந்தும் அவன் வராததால் தலைவி ஆற்றாது வருந்தினாள். புலவர் மாமூலனார், ஆற்றாமையில் இருந்த தலைவியின் முலையை, நன்னன்வேண்மானது வயலைக் கொடி படர்ந்த வேலிகளையுடைய வியலூரினை ஒத்த நினது பரந்த முலையையுடைய மார்பகம் தனித்து வருந்தியது.

"..............நன்னன் வேண்மான்
வயலை வேலி வியலூர் அன்ன, நின்
அலர்முலை ஆகம் புலம்" (அக: 97)

என வியலூருடன் ஒப்பிட்டுக் கூறியுள்ளார். இவ்வூர் நன்னன்வேன்மானுடையது. தலைவியின் அலர்முலை ஆக்கத்திற்கு இவ்வூர் உவமையாகச் சுட்டப்படுதலின் இதன் வளஞ்சான்ற சிறப்பினை அறிந்து கொள்ளலாம். இவ்வூர் "சிறுகுரல் நெய்தல் வியலூர்" (பதிற். பதிகம் 5:11) என பதிற்றுப்பத்திலும், 'களிவளர் சிலம்பிற்றுஞ்சும் யானையின் சிறு குரல் நெய்தல் வியலூர்" (சிலம்பு: 28:111-15) என சிலப்பதிகாரத்திலும் சுட்டப்பட்டுள்ளது.

கழாஅர்:

அகநானூற்றில் பரணர் பாடிய பாடலில் பரத்தையை பிரிந்து வந்த தலைமகளிடம் தலைவி தன் இளமையைக் கூறுங்கால், வள்ளையினது மெல்லிய கொடிகளை உழக்கி வாளை மீன்களைத் தின்ற கூரிய பற்களையுடைய நீர்நாய், முட்கள் பொருந்திய அடிப்பகுதி கொண்ட பிரப்பங் கொடியினது பழைய சிறு தூறுகளில் தங்குதற்கு இடமான பல வேற்படைகளையுடைய மத்தி என்பானது கழாஅர் என்னும் ஊரினை ஒத்த எம் இளமை கழிந்து மிகப் பழைமையாயிற்று.

"வாளை மேய்ந்த வள் எயிற்று நீர் நாய்,
முள் அரை பிரம்பின் மூதரில் செறியும்
பல்வேல் மத்தி, கழாஅர் அன்ன எம்
இளமை சென்று தவத் தொல்ல.'.தே" (அக:6)

என்று தன் இளமையை கழாஅர் என்னும் ஊருடன் ஒப்பிட்டுக் கூறியுள்ளார். இதன் வழி காழஅர் எனும் ஊர் வளங்கள் மிகுந்து செழிப்புடன் இருந்ததை அறிய முடிகிறது.

கொல்லிமலை:

தலைவியைப் பிரிந்து பொருள் ஈட்டச் சென்ற தலைவன் இடைச்சுரத்தே தன் மனதிடம், வெல்லும் போரைச் செய்யும் சேரனது கொல்லி மலை மிகப்பழமை வாய்ந்தது அதன் உச்சியில் உள்ள சிறிய மூங்கிலைப் போன்ற வளைந்த முன் கையினையுடைய பெரிய தோளினை உடையவள்.

"......................வெல்போர் வானவன் கொல்லி மீமிசை
நுணங்கு அமை புரையும் வணங்கு இறைப் பணைத் தோள்"(அக: 33)

என தன் தலைவியின் தோள்களை கொல்லி மலை மூங்கிலுடன் ஒப்பிட்டுள்ளார். இக்கொல்லி மலை சேர பரம்பரையினர்க்கு உரித்தான மலை"

"முள்ளூர் மன்னன் கழல் தொடிக் காரி
செல்லா நல்லிசை நிறுத்த வல்வில்,
ஓரிக்கொன்று சேரலற்கு ஈந்த
செவ்வோர்ப் பலவின் பயங்கெழு கொல்லி" (அகம்: 209)
"கொல்லி யாண்ட குடவர் கோவே" (அகம்: 24)

என்பவற்றால் கொல்லிமலை சேர பரம்பரையினர்க்கு உரித்தாதல் காண்க.

தலையாலங்கானம்:

மதுரை நக்கிரனார், பாண்டியன் நெடுஞ்செழியன் புகழைப் பாடும் பொழுது, அவன் தலையாலங்கானம் என்னும் ஊரின் பரந்துபட்ட இடமெல்லாம் சிவக்குமாறு சேரன், சோழன், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோவேண்மான், பொருநன் ஆகிய இருபெரும் வேந்தரும் ஐம்பெரும் வேளிருமாகிய ஏழ் அரசுருடைய நல்வலம் அடங்கக்களத்தின்கண் தான் ஒருவனாய் நின்று ஒரு நாள் ஒரு பகலிலே அவருடன் பொருது வென்றவன்.

"..........................செழியன்
ஆலங்கானத்து அகன் தலை சிவப்ப
....
வென்றி கொள் வீரர் ஆர்ப்பினும் பெரிதே" (அக: 36)

என வரும் பாடற்பகுதி கொண்டு இதனை அறிந்து கொள்ளலாம். இவ்வூர் தலையாலங்காடு என்று வழங்கும். தொண்டை நாட்டில் உள்ள தேவாரப்பாடல் பெற்ற தலம்.

சிற்றூர்:

அகநானூற்றில் மாமூலனார், தலைவன் பொருள் தேடச் சென்ற வழியினை கற்களையுடைய சிற்றூரில் உள்ள மறவர்கள் வில்லில் அம்பு தொடுத்து எய்தலால் பொலிவிழந்த வழிகள் தோறும் செவ்வலரி மாலை அணியப் பெற்றுக் கிடந்தாள்.

"கல்லூடைக் குறும்பின் வாயவர் வில் இட
நிண வரிக் குறைந்த திறத்த அதர்தொறம்" (அக: 31)

என வர்ணித்துள்ளாதிலிருந்து சிற்றூரினைச் சுற்றி கற்களை அடுக்கி அவற்றை காவல் அரண்களாகப் பெற்றிருந்ததை அறிய முடிகிறது. காடுகளிலும் குன்றுகளிலும் அமைந்திருந்த சிற்றூர்களும் கூட முள் வேலிக் காப்புடன் இருந்ததாக குறிப்புள்ளது. சிற்றூர்களைச் சுற்றிலும் உடை, விடத்தேர் முதலிய முள் மரங்களைக் காவலுக்காக வளர்த்து வந்துள்ளனர்.

பேரூர்:

சிற்றூர் போன்ற அமைப்பு பேரூர்களிலும் மதில் சூழ்ந்த அகதியைச் சுற்றி அமைக்கப்பட்டிருந்தது. ஆகழியில் இது "மிளை" என அழைக்கப்படும்

குறுங்காடாகும். பேரூர்களில் ஊரைச் சுற்றிலும் பெரிய மதில் அமைப்பும், அதைச் சுற்றிலும் குறுங்காடும் இருந்தன. ஆகழியில் முதலைகள் வளர்க்கப்பட்டன.

'நிலவரை இறந்த குண்டு கண் அகழி
வான் தோய்வு அன்ன புரிசை, விசும்பின்
மீன் பூத்தன்ன உருவ நாயில்
கதிர் நுழை கல்லா மரம்பயில் கடி மிறை
அருங்குறும்பு உடுத்த கானப்பேர் எயில்" (புறம்:21, 2-7)

என வரும் கானப்போர் எயிலின் வருணனையிலிருந்து பேரூர்களின் மதில், அரண் முதலியவைகளை நன்கு உணரலாம். மதில், அரண் சூழ்ந்த பேரூர்களுக்கு உட்செல்லக்கூடிய வாயில் மிகப்பெரிதாக அமைந்துள்ளது.

முடிவுரை:

சங்ககாலத்தில் ஊர்கள் இயற்கை வளங்கள் நிறைந்து செழிப்புடன் காணப்பட்டுள்ளதால் புலவர்கள் அவற்றை பெண்களின் உடல் உறுப்புகளுடன் ஒப்பிட்டுப் பாடியுள்ளனர்.புலவர்கள் தான் வாழ்ந்த ஊருக்கும் தனக்குப் பிடித்தமான மன்னனின் ஊருக்கும் சிறப்பு சேர்க்கும் நோக்குடன் பெண்களின் அழகு செழிப்பிற்கு ஊர் செழிப்பை உவமையாகக் கூறியுள்ளனர். இதன் வழி தமிழ் நாட்டு வரலாற்றை அறியமுடிவதை இக்கட்டுரை வழி அறியலாம்.

125. கொற்கையும் செந்திலும்- ஊர்ப்பெயராய்வு

முனைவர் இரா. ருக்மணி,
உதவிப் பேராசிரியர்(தமிழ்த்துறை),
இராணிமேரி கல்லூரி(தன்னாட்சி),
சென்னை-600004

முகவுரை

தமிழரின் பண்பட்ட வாழ்க்கை முறையைத் தாங்கி நிற்பன சங்க இலக்கியங்கள்.இவ்விலக்கியங்களில் காணப்படும் ஊர்ப்பெயர்கள், தமிழரின் அடையாளத்தை, வரலாற்றைத் தெரிந்து கொள்ள உதவும் காரணிகளாகும் தகுதியுடையன. பண்டைத் தமிழகத்து ஊர்ப்பெயர்கள், காரண காரியத் தொடர்போடுகூடிய தமிழரின் பெயர் வைப்பு முறையினையும் அறியத் தருகின்றன. அவ்வகையில் பழம் பாண்டியர்களின் தலைநகராக விளங்கிய கொற்கையும், கொற்கைப்பதிக்கு அருகிலுள்ள முருகனின் உறைவிடமாகிய செந்திலும்(இன்றைய திருச்செந்தூர்) ஆய்வுக்குரிய ஊர்ப்பெயர்களாக இக்கட்டுரையில் எடுத்துக் கொள்ளப் பெற்றுள்ளன.

கொற்கை

கொற்கைப்பதியின் பெருமையினைச் சங்க இலக்கியம் முழுமையும் பரக்கக் காணலாம்.கொற்கையும் கொற்கைக் கோமானும் 11 இடங்களில் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளமையும் காணமுடிகிறது.

மகாஅர் அன்ன மந்தி மடவார்
நகாஅர் அன்ன நளிநீர் முத்தம்
வாள்வாய் எருந்தின் வயிற்றகத் தடக்கி[1](சிறுபா.56-58)
தத்துநீர் வரைப்பின் கொற்கை[2](சிறுபா.62)
------------------------மீண்டுநீர்
முத்துப்படு பரப்பிற் கொற்கை முன்றுறை[3] (நற்.23; 6)
புகழ்மலி சிறப்பின் கொற்கை முன்துறை
அவிர்கதிர் முத்தமொடு வலம்புரி சொரிந்து
தழையணி பொலிந்த கோடுஏந்து அல்குல்
பழையர் மகளிர் பனித்துறைப் பரவ[4] (அகம்.201;4-7)

கொற்கைக் கடற்கரையும் அங்கு விளைந்த முத்தும் முத்தைக் கிளிஞ்சலில் இட்டு விளையாடியமையும் கொற்கைக் கடற்கரையில் பழையர் மகளிர் வழிபாடு செய்தமையும் பரதவர் சுறாமீனை விலக்கி வலம்புரி சங்கினை மூழ்கி எடுத்தமையும் சங்கப் பாடல்கள்வழி கவினுறக் காட்டப்பட்டுள்ளன. அழிவில்லா பெருமையினை இலக்கியத்தில் தக்க வைத்துக் கொண்டுள்ள கொற்கையை மதுரோதயநல்லூர் என்றும் கல்வெட்டுகள் கூறுகின்றன(சோமலே, திருநெல்வேலி மாவட்டம்,1965). (மது+ஓதை+நல்+ஊர்= இனிய அலைகள் வீசும் நல்ல ஊர் என்ற பொருளையுடையது).

கொற்கையின் பெயர், செப்பேட்டுப் பிரதியில் பொற்கை என்றும் இடம்பெற்றுள்ளது.கடைச்சங்க காலத்தில் வாழ்ந்த பாண்டிய மன்னர்களுள் ஒருவர் பொற்கைப் பாண்டியன். கண்ணகி முன் தோன்றிய மதுராபுரித் தெய்வம், பாண்டியர்களின் செங்கோல் பெருமையினைக் கூறும்போது பொற்கைப் பாண்டியன் பெருமையினை (சிலம்பு.23;49-53) எடுத்துரைத்துள்ளது.இப்பாண்டியன் ஆட்சிபுரிந்த காலகட்டத்தில கொற்கையே பாண்டியர்களின் தலைநகராக இருந்துள்ளது.கி.பி.130 வரை கொற்கைப் பாண்டியரின் தலைநகராக இருந்த செய்தியை தாலமி என்ற அயல்நாட்டுப் பயணி குறிப்பிட்டுள்ளார். கொற்கைப்பாண்டியர்களின் தலைநகராக இருந்தபோது கொற்கையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த பொற்கைப் பாண்டியனின் செங்கோல் திறத்தைப் பாராட்டுமுகமாக பாண்டியரின் தலைநகர் பொற்கை என்று அழைக்கப்பட்டிருக்கலாம் என்று கருத இடமேற்படுகிறது. அதுவன்றியும், கண்ணகிக்கு விழா எடுத்து பாண்டியன் சிறப்புச் செய்தான் என்ற செய்தியை , கங்கையாடச் சென்ற மாடலமறையோன் செங்குட்டுவனிடம் கூறுவதாக அமைந்துள்ள பகுதியில்,

கொற்கையில் இருந்த வெற்றிவேற் செழியன்
பொன் தொழில் கொல்லர் ஈரைஞ் நூற்றுவர்
ஒருமுலை குறைத்த திருமா பத்தினிக்கு
ஒருபகல் எல்லை உயிர்ப்பலி ஊட்டி (சிலம்பு.27;127-130)

என்றவிடத்தும், கொற்கையில் ஆயிரம் பொற்கொல்லர்களை வெட்டி விழ்த்திய செய்தி, கொற்கையில் பொற்கொல்லர்கள் ஆயிரம் பேருக்கு மேலாக இருந்து பொன் தொழில் செய்தமை அங்கு பொன்னின் பயன்பாட்டுத்தன்மை அதிகமாக இருந்தமையினையே காட்டுகிறது. இதன்வழியும் பாண்டிய மன்னன் பொற்கை அமைத்திருந்தமைக்கான சூழ்நிலை கொற்கையில் இருந்துள்ளமையும் அதனாலே அம்மன்னன் பொற்கைப் பாண்டியன் என்று அழைக்கப்பட்டான் என்பதும் அறம்திறம்பா அம்மன்னனின் செயலைப் போற்றும்விதமாகவே கொற்கைப்பதியும் பொற்கை என்று வழங்கப்பட்டிருக்கவேண்டும் என்பதும் பெறப்படுகிறது.இன்றும் ஊரில் காணப்படுகின்ற விளம்பரச் சுவரொட்டிகளில் பொற்கை என்று குறிப்பிட்டிருத்தலைப் பார்க்க முடிந்தது.(ஆய்வாளர் நேரில் பார்த்தது)

இன்று அனைவராலும் கொற்கை என்று அறியப்படுகின்ற இவ்வூர், பொற்கை என்று செப்பேட்டுப்பிரதியில் குறிப்பிடப்பட்டிருப்பதும் அவ்வாறு அழைத்தலுக்காக காரணமாக அமைகின்ற வரலாறும் இலக்கியச்சான்றும் இப்பெயரை உறுதிப்படுத்துவதற்கான காரணிகளாக அமைந்துள்ளன.

செந்தில்(திருச்செந்தூர்)

வெண்டலை புணரி அலைக்கும் செந்தில் (புறநா.55;18)

என்று கடல் சார்ந்து விளங்கும் முருகனின் இருப்பிடமாக திருச்செந்தூர் குறிப்பிடப்பட்டுள்ளது. என்றாலும் முருகனின் குறிஞ்சி நிலம் மலை சார்ந்த பகுதி என்பதற்குச் சாட்சியாக இன்றும் இவ்வூரில் வள்ளிகுகை விளங்குகிறது.

கடல் வயிறு கிழித்து மலை நெஞ்சு பிளந்து,ஆங்கு
அவுணரைக் கடந்த சுடரிலை நெடுவேல் (சிலம்பு.23;188-189)

என்று முருகன் அவுணரை வென்ற இடம், மலையும் கடலும் இணைந்து கூறப்பட்டிருத்தலும் ஈண்டு நினையத்தக்கது.

'செந்தில்' என்பது தற்போது 'செந்தூர்' என்று மாறியுள்ளது. செம்மையும் இளமையுமுடைய முருகன் வாழுமிடம் என்ற நிலையில் செந்+இல் என்றும், முருகன் கோயில் கொண்டுள்ள ஊர் என்ற வகையில் செந்தூர் என்றும் அழைக்கப்பட்டிருத்தல் வெளிப்படையான செய்தி. இல்லிற்குத் தலைவனாக இருந்தவன் இன்று ஊருக்கு இறைவனாக மாறியுள்ளான்.

முருகனும் செம்மையும்

'செந்' என்ற சொல் முருகனின் செம்மைப் பண்பினையும் இளமையினையும் உணர்த்துவதாக உள்ளது. குறுந்தொகை கடவுள் வாழ்த்தில் முருகனின் திருவடிக்குத் தாமரையையும் மேனிக்குப் பவளத்தையும் ஆடைக்குக் குன்றிமணியையும் உவமையாகக் கூறியமையால் செம்மை, முருகனின் பண்பெனலாம்.

குறுந்தொகையின் முதல் பாடலான குறிஞ்சித்திணைப் பாடலிலும் போர்க்களம், அம்பு, யானையின் கோடு, காந்தள் ஆகிய யாவும் செந்நிறம் உடையனவாகக் கூறப்பட்டுள்ளன. முருகனும் செந்நிறம் உடையவன் என்பதால் சேஎய் எனப்பட்டான்.

செங்களம் படக்கொன்று அவுணர்த் தேய்த்த
செங்கோல் அம்பின் செங்கோட்டு யானை
கழல் தொடி, சேஎய் குன்றம்
குருதிப் பூவின் குலைக் காந்தட்டே' (குறுந்தொகை.1)

எனவே, முருகன் செந்நிறத்தால் அடையாளப்படுத்தப்படுகிறான் என்பது வெளிப்படை.

செந்நிறம்-புணர்தல்-முருகன்-செந்தில்

செந்நிறமுடைய சேயோனின் நிலம் குறிஞ்சி. இந்நிலத்திற்கான உரிப்பொருள் புணர்தல்.

பூப்பின் புறப்பா டீராறு நாளும்
நீத்தகன் துறையார் என்மனார் புலவர்
பரத்தையர் பிரிந்த காலை யான[10] (தொல்.கற்பு. 46)

பூப்பின் நான்காம் நாள் தொடங்கி பன்னிரண்டு நாள் வரை புணர்தலுக்குரிய சிறந்த காலமாகக் கொள்ளப்படுகிறது. இக்காலத்து தலைவன், பரத்தையிற் பிரிந்திருப்பின் அவனை இல்லிற்கு அழைத்து வர, தோழி செவ்வணி அணிந்து அவன் இருக்கு.ம் பரத்தையர் வீதி வழியே செல்லுதல் என்பது மரபு போலும். ஐங்குறுநூற்றில்(54) தோழி ஒருத்தி, நீ தலைவியைப் பிரிந்து பரத்தையரிடத்துச் செல்வாயானால், நான் தலைவியின் பூப்புக்காலத்தை உனக்குத் தெரிவிக்கும்விதமாக (அம்முறை என்று உலகறி செய்தியாகக் கூறப்பட்டுள்ளது)செவ்வணி அணிந்து வரமாட்டேன் என்கிறாள்.ஆனால் காலத்தால் பிற்பட்ட பரிபாடலில், தலைவிக்காக தோழி செவ்வணி அணிந்து பரத்தையர் வீதி வழி சென்றாள் என்பது வெளிப்படையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தோள்புதிது உண்ட பரத்தைஇல் சிவப்புற
நாள்அணிந்து உவக்கும்[11] (பரிபாடல்.9;19-20)

இவ்விலக்கியச் சான்றுகள், செந்நிறம் புணர்தலின் அடையாளமாக இருந்தமையினைத் தெரிவிக்கின்றன.

செந்நிறம் புணர்தலுக்கு அடையாளமாகி, பின்னர் அப்புணர்தலை உரிப்பொருளாக உடைய நிலத்துத் தலைவனை அடையாளப்படுத்தவும் (சேயோன்), அதுவே அவன் குடியிருக்கும் இடத்திற்கும்(செந்தில்) முதற்சொல்லாக அமைந்துள்ளமையும் அறிய முடிகிறது.

முடிபு

- இயற்கைச் சிறப்பினால் மதுரோதயநல்லூர் என்று வழங்கப்பட்ட கொற்கை, கொற்கையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த பாண்டியனின் அறம்திறம்பா செயலினால் பொற்கை என்று வழங்கப்பட்டிருக்கலாம் என்று கொள்ளுதற்கு இலக்கியச் சான்றுகளும் வரலாற்றுச் சான்றுகளும் இடனளிக்கின்றன.

குறிஞ்சியின் உரிப்பொருளாகிய புணர்தலுக்குச் செந்நிறம் அடையாளமாகி, குறிஞ்சித் தலைவனும் அச்செந்நிறத்தால் அடையாளப்படுத்தப்பட்டு அவன் உறைந்த இடமும் செம்மையினைக் குறித்து, செந்தில் என்று வழங்கப்பட்டமை அறியப்பட்டது.



ஊர்ப் பெயர் ஆராய்ச்சியால் தமிழ்ச் சமுதாயத்தின் வாழ்க்கை தெளிவாகப் புலப்படும். இச்செயலை ஊக்கத்தோடும் ஆக்கத்தோடும் செய்து வருகின்ற நண்பர் முத்தமிழ்ச் செல்வனை மிகவும் பாராட்டி மகிழ்கிறேன்.

- ச.வே.சு.

தமிழ்நாட்டைப் போல ஊர்ப்பெயர்கள் சுவரொட்டியை மாற்றி மாற்றி ஒட்டிக் கொள்ளும் சுவர்களைப் போல மாற்றிக் கொண்ட நாடு இருக்க முடியாது. தம்மை ஆளுகின்ற அரசியல் வல்லாண்மைக்கு ஏற்பவும் கட்சி அரசியலுக்கு ஏற்பவும் சமய ஆதிக்கத்திற்கு ஏற்பவும் தமிழக ஊர்களின் பெயர்கள் காலந்தோறும் மாற்றப்பட்டு வந்துள்ளன.

- க.ப.அறவாணன்

யாரும் அணுகத் தயங்கிய ஊர்ப் பெயராய்வைக் கருதிய முனைவர் கு.ராசரத்தினம் தலைமையிலான தேசியக் கல்லூரித் தமிழியல் துறையினர் பாராட்டுக்குரியவர்கள், நன்றிக்குரியவர்கள்.

- அ. அறிவுநம்பி

ISBN No.
978-81-920060-0-0